OFFICE OF THE REGISTRAR OF BOOKS,
REGISTERED
14 JUN 1902
MADRAS.

# VILLAGE SERMONS

ON

THE GOSPEL TEXTS AND PASSION HISTORY.

# கிராமப் பிரசங்க புத்தகம்

திருநாட்களுக்குரிய

சுவிசேஷ வாக்கியங்களின்பேரிலும், இரட்சகர் பாடுபட்ட
சரித்திரத்தின் பேரிலும்

தரங்கை

ஞா. சாமுவேல் ஐயர்

எழுதிய பிரசங்கங்கள் அடங்கியது.

Tranquebar,

PRINTED AT THE EV. LUTH. MISSION PRESS.

1902.

Q6
N02

118934


| | பக்கம். |
|---|---|
| ...தவ இருதயத்தின் பெருநாள் ... ... ... ... | 259 |
| ...த்தெழுந்த பண்டிகைக்குப் பிந்தின ச-ம் ஞாயிறு ... | 265 |
| ,, ,, ரு-ம் ஞாயிறு ... | 273 |
| ...ண்டு பரத்துக்கேறின பண்டிகை ... ... ... ... | 279 |
| ...யிர்த்தெழுந்த பண்டிகைக்குப் பிந்தின சு-ம் ஞாயிறு... ... | 286 |
| பெந்தெக்கொஸ்தே பண்டிகை முதலாம் நாள் ... ... | 294 |
| ,, ,, உ-ம் நாள் ... ... | 301 |
| பரிசுத்த திரித்துவப் பண்டிகை ... ... ... ... | 307 |
| திரித்துவப் பண்டிகைக்குப் பிந்தின க-ம் ஞாயிறு ... ... | 315 |
| ,, ,, உ-ம் ஞாயிறு ... ... | 322 |
| ,, ,, ங-ம் ஞாயிறு ... ... | 329 |
| ,, ,, ச-ம் ஞாயிறு ... ... | 337 |
| ,, ,, ரு-ம் ஞாயிறு ... ... | 346 |
| ,, ,, சு-ம் ஞாயிறு ... ... | 354 |
| ,, ,, எ-ம் ஞாயிறு ... ... | 362 |
| ,, ,, அ-ம் ஞாயிறு ... ... | 369 |
| ,, ,, கூ-ம் ஞாயிறு ... ... | 376 |
| ,, ,, ௰-ம் ஞாயிறு ... ... | 384 |
| ,, ,, ௰க-ம் ஞாயிறு ... ... | 391 |
| ,, ,, ௰உ-ம் ஞாயிறு ... ... | 399 |
| ,, ,, ௰ங-ம் ஞாயிறு ... ... | 406 |
| ,, ,, ௰ச-ம் ஞாயிறு ... ... | 413 |
| ,, ,, ௰ரு-ம் ஞாயிறு ... ... | 421 |
| ,, ,, ௰சு-ம் ஞாயிறு ... ... | 429 |
| ,, ,, ௰எ-ம் ஞாயிறு ... ... | 435 |
| ,, ,, ௰அ-ம் ஞாயிறு ... ... | 443 |
| ,, ,, ௰கூ-ம் ஞாயிறு ... ... | 449 |
| ,, ,, உ௰-ம் ஞாயிறு ... ... | 456 |
| ,, ,, உக-ம் ஞாயிறு ... ... | 463 |
| ,, ,, உஉ-ம் ஞாயிறு ... ... | 471 |
| ,, ,, உங-ம் ஞாயிறு ... ... | 479 |
| ,, ,, உச-ம் ஞாயிறு ... ... | 485 |
| ,, ,, உரு-ம் ஞாயிறு ... ... | 492 |
| ,, ,, உசு-ம் ஞாயிறு ... ... | 499 |
| ,, ,, உஎ-ம் ஞாயிறு ... ... | 508 |
| ...ஙியோன் ஸ்தோத்திரப் பண்டிகை ... ... ... ... | 514 |
| திருச்சபை சீர்திருத்தப்பட்டதை நினைவுகூருந் திருநாள் ... | 520 |

# கிராமப் பிரசங்க புத்தகம்.

---

## கிறிஸ்து வருகை முதலாம் ஞாயிறு.

மத். 21, 1—9.

பிரியமானவர்களே,

இன்றைக்குத் திருச்சபை வருஷம் தொடங்குகிறது. உலக வருஷத்துக்குச் சூரிய ஓட்டம் ஆதாரம். திருச்சபை வருஷத்துக்கு இயேசுநாதர் சரித்திரம் ஆதாரம். அவருடைய சரித்திரமும் போதனைகளுமே நாம் இந்தத் திருச்சபை வருஷத்தில் தியானிக்கும் தியானிப்பாயிருக்கும். கர்த்தர் பிறந்த பண்டிகை நாம் கொண்டாடுகிற முதலாம் பெரிய பண்டிகை. இந்தப் பெரிய பண்டிகைக்கு நம்மை ஆயத்தப்படுத்த அதற்கு முன் நாலு ஞாயிற்றுக்கிழமைகளை ஆசரிக்கிறோம். இந்த நாலுக்கும் வருகை ஞாயிற்றுக்கிழமைகள் என்று பெயர். இன்றைக்கு நாம் ஆசரிப்பது கிறிஸ்து வருகை முதலாம் ஞாயிறு. இதிலே இயேசுநாதர் ஒரு கழுதைமேல் ஏறி, எருசலேமுக்குள் தாழ்மையாய் வந்த வருகையைப்பற்றிய சுவிசேஷவாக்கியத்தைக் கேட்கிறோம். அதிலே: இதோ, உன் இராசா உன்னண்டைக்கு வருகிறார் என்ற தீர்க்கதரிசனம் நமக்கு நினைப்பூட்டப்படுகிறது. சீயோன் என்ற பழைய ஏற்பாட்டுச்சபைக்குச் சகரியா தீர்க்கதரிசி சொல்லிய அந்த வாக்கியத்தைக் கர்த்தர் இப்பொழுது நம்மை நோக்கியும் சொல்லுகிறார். இந்த இனிப்பான முக்கிய வாக்கியம் இன்றைக்குத் திருச்சபையெங்கும் முழங்குகிறது. இதைக்குறித்து நாம் இப்பொழுது சிந்திப்போமாக.

### இதோ, உன் இராசா உன்னண்டைக்கு வருகிறார்.

1. உன் இராசா வருகிறார்.
2. உன்னண்டைக்கு வருகிறார்.
3. வருகிறவரை நீ எப்படி ஏற்றுக்கொள்ளவேண்டும்.

## 1.

இதோ, வருகிறவர் உன் இராசா என்னப்படுகிறார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே அந்த இராசா. அவர் வானராச்சியமாகிய திருச்சபையின் இராசா. ஒரு இராசா தன் குடிசனங்களைச் சத்துருக்கள் கையிலிருந்து இரட்சிப்பான், அவர்களை ஆண்டு நடத்திக் காப்பாற்றுவான், அவர்கள் சுகமும் சீருமாய் வாழ்வதற்கு வேண்டிய சகல காரியங்களையும் செய்வான். திருச்சபையின் இராசாவாகிய கிறிஸ்துவுக்கும் அதுவே வேலை. அவர் நம்மையும் எல்லா மனிதரையும் பிசாசின் வல்லமையிலிருந்து மீட்டு இரட்சிக்க வருவார் என்று ஏற்கனவே பராபரன் வாக்குக்கொடுத்திருந்தார். ஸ்திரியின் வித்தானவர் சர்ப்பத்தின் தலையை நசுக்குவார் என்ற வாக்கை ஆதாமும் ஏவாளும் கேட்டு, அவருக்குக் காத்திருந்தார்கள். வரப்போகிற அவரை நோவா நினைத்து: சேமுடைய பராபரனாகிய கர்த்தர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று சொன்னார். ஆபிரகாம் முதலிய முற்பிதாக்களும் எசாயா முதலிய தீர்க்கதரிசிகளும் வரப்போகிற அவரைத் தங்கள் இராசாவென்று விசுவாசித்து, அவருக்குக் காத்திருந்தார்கள். யாக்கோபு என்ற கோத்திரப் பிதா அவரைச் சமாதானக் கர்த்தர் என்று சொன்னார்; ஏனெனில், இயேசுநாதராகிய இந்த இராசா சகல மனிதருக்கும் சமாதானத்தைக் கொண்டுவருவாரென்று யாக்கோபும் மற்ற விசுவாசிகளும் நம்பினார்கள். பாவத்தினால் கலங்கடிக்கப்பட்ட பாவிகளுக்கு இது அவசியமாயிருந்தது. இந்த அவசியத்தை உணர்ந்து: ஆண்டவரே, எங்கள் பாவத்தைப் போக்கி, எங்களுக்குச் சமாதானத்தைத் தருகிற இராசாவை எங்களுக்கு அனுப்பும் என்று விசுவாசிகளெல்லாரும் வேண்டிக்கொண்டேயிருந்தார்கள். அவர்கள் வேண்டினபடியே இயேசுநாதர் சமாதானத்தைக் கொண்டுவந்தார். அவர் பிறந்தபொழுதே பூமியில் சமாதானம் வந்ததென்று சொல்லி, தேவதூதர்கள் சந்தோஷப்பட்டுப் பாடினார்கள். அவர் எருசலேமுக்குள் பிரவேசித்தபொழுது பட்டயம், ஈட்டி முதலிய ஆயுதங்களைப் பிடித்துச் சண்டைபோடுகிறவராய் வராமல், அந்தப் பட்டணத்தாருக்கும் மற்றெல்லாப் பாவிகளுக்கும் பரிதபிக்கிற மனதோடு சமாதானப் பிரபுவாய் ஒரு கழுதையின்மேல் ஏறிவந்தார்.

அந்த இயேசு இராசா இந்த உலகத்திலே தம்முடைய இராச்சியத்தை, பாடுபட்டு இரத்தம் சிந்தி ஸ்தாபிக்க மனமுள்ளவராய் இருந்ததால், அவர் மெத்தனவோடு வந்தார். மெத்தனமென்றால் சாந்தத்தைக் குறிக்கும். சாந்தமுள்ள நம்முடைய இராசாவைக் குறித்து எசாயா தீர்க்கதரிசி: அவர் சண்டைபண்ணாமலும் கூப்பிடாமலும் இருப்பார். அவருடைய சத்தத்தை வீதிகளில் ஒருவனுங் கேளான். அவர் நியாயத்தை ஜெயத்துக்குக் கொண்டுபோகுமட்டும் நெரிந்த நாணலை முறிக்காமலும், மங்கி எரிகிற திரியை அவிக்காமலும் இருப்பார் என்று எழுதியிருக்கிறார். (மத். 3, 17; எசா. 42, 2. 3).



அவர் உன் இராசா என்று சொல்லப்படுகிறார். அவர் சீயோன் குமாரத்தியாகிய இஸ்ரவேல் சனத்தின் இராசா. அவர் ஞான இஸ்ரவேலாகிய திருச்சபையின் இராசா. அவர் ஒவ்வொரு விசுவாசிக்கும் இராசா. ஆகையால் இங்கே கூடிவந்திருக்கிற நம்மில் ஒவ்வொருவருக்கும் அவர் இராசாவாயிருக்கிறார். அவர் நம்முடைய இராசாவாய் இருக்கும்படிக்கே இவ்வுலகத்தில் வந்தார். நம்மைத் தாழ்விலிருந்து தூக்கி உயர்த்தும்படிக்கே நம்முடைய தாழ்மையான ரூபத்தை எடுத்துக்கொண்டார், தாழ்மையாய்ப் பிறந்து தாழ்மையாய் வளர்ந்தார், தாழ்மையுள்ள சீஷர்களைத் தெரிந்துகொண்டார், தாழ்மையான வாகனத்தில் ஏறினார். அவர் பராபரனுடைய குமாரனும் இராசாதி இராசாவும் கர்த்தாதி கர்த்தருமாய் இருந்தும், தம்மைத் தாழ்த்தினது எவ்வளவு பெரிய அதிசயம், எவ்வளவு பெரிய சிநேகம்.

அவர் நம்முடைய இராசாவாகி, நம்மை இரட்சிக்க வந்திராவிட்டால், நாம் பிசாசுக்குச் சொந்தமானவர்களாயிருப்போம். அது நம்மை ஆண்டு நரகத்துக்கே நடத்திக் கொண்டுபோகும். இயேசுநாதரோ நம்மைப் பிசாசுக்கும் நரகத்துக்கும் ஒப்புவித்துவிடாமல், நம்மை மோட்சத்துக்குக் கொண்டுபோகும்படி, நமக்காகப் பாடுபட்டு மரிக்க மனமுள்ளவரானார். இதற்காகவே அவர் கழுதைமேல் ஏறி, எருசலேமுக்குள் பிரவேசித்தார். இந்தப் பெரிய சிநேகத்தால் நம்மைச் சிநேகித்த இந்த இராசா ஒவ்வொரு பாவியையும் பார்த்து: பாவியே, நான் உன்னுடைய இராசா, நான் உன்னை இரட்சிக்க என் மகிமை எல்லாம் விட்டுத் தாழ்மையானேன், உனக்காக உன் உருவம் எடுத்தேன், உன் பாவத்தைச் சுமந்தேன், என் இரத்தத்தை எல்லாம் சிந்தினேன், என் உயிரையும் விட்டேன். நான் உன் இராசா ஆனதுபோல் நீ என் ...னாகவேண்டும் என்று கூப்பிடுகிறார். அவர் நம்முடைய இராசா. நம்முடைய உட்சீர் புறச்சீர் யாவும் அறிந்தவர். பெத்பகே என்ற கிராமத்தில் இருந்த கழுதையையும், அதன் குட்டியையும், அவைகளின் எசமானையும், அவைகளுக்கடுத்த எல்லாச் சங்கதிகளையும் திட்டமாய் அவர் அறிந்திருந்தார். தம ...ல் இரட்சிக்கப்பட்டவர்களாகிய நம்மை அவர் அறியாதிருப் ...ரா. அவர் நம்மை நன்றாயறிந்தவராய் நம்மண்டை வருகிறார்.

வியாகுலம் அடைந்த
சனத்தின் கூட்டமே,
இக்கட்டினால் நிறைந்த
ஆதாமின் சாதியே,

இதோ, சகாயர் வாறார்;
கர்த்தர் கெட்டோருக்கு
இரட்சகராத் தாறார்;
அத்தால் மகிழ்ந்திரு.

மோட்சத்தில் பிரவேசிப்போம் என்கிற திடமான நம்பிக்கை நமக்கு உண்டாகிறது.

ஒரு கழுதையின்மேல் ஏறிவந்த இரட்சகரை அவிசுவாசமுள்ள யூதர்கள் தங்கள் இராசாவாக மதிக்காமல், அவரைத் தள்ளினதுபோல், வசனத்தின் வழியாகவும் ஞானஸ்நானத்தின் வழியாகவும் திரு இராப்போசனத்தின் வழியாகவும் வருகிற இரட்சகரை அநேகர் தங்கள் இராசாவாக மதிக்காமலும் நம்பாமலும் போகிறார்கள். அப்படி நாம் செய்யாதிருப்போமாக. அவரை நாம் ஏற்றுக்கொண்டு அவருக்கு நம்மைக் கீழ்ப்படுத்துவது நம்முடைய கடமை. ஆகையால்,

3.

வருகிறவரை நாம் எப்படி ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று பார்ப்போம். சீஷர்கள் தங்கள் வஸ்திரங்களைக் கழுதையின்மேல் போட்டு, அவரை அதின்மேல் ஏற்றினார்கள். திரள்கூட்டம் தங்களுடைய வஸ்திரங்களை வழியிலே விரித்துப் போட்டார்கள் என்று சொல்லியிருக்கிறது. அவர் நம்முடைய கண்காண ஊருக்குள் வருவாராகில், நாமும் அந்தச் சீஷரைப்போலும் அந்த சனங்களைப்போலும் செய்யலாம். அவரோ நம்முடைய கண்ணுக்குத் தெரியாமல் நம்முடைய இருதயத்தில் வருகிறபடியால், நம்முடைய இருதயத்தை நாம் அவருக்கு ஆயத்தம் பண்ணவேண்டும். எப்படியென்றால், நாம் நம்மைக் கர்த்தருக்கு முன்பாக வெறுமையாக்கி, நம்முடைய பாவங்களை எல்லாம் அவருக்கு அறிக்கையிட்டு, அவர் பாதங்களில் எறிந்துவிட வேண்டும். நம்முடைய சொந்த செய்கை, புண்ணியம் எல்லாம் ஒன்றுக்கும் உதவாது. இவைகளைக் குறித்து மேன்மைபாராட்டுகிறவர்களிடத்தில் கர்த்தர் தம்முடைய ஆசீர்வாதங்களோடு வரமாட்டார். இயேசுநாதர் ஒருவர் நமக்கு இருந்தால் போதுமென்று சொல்லி, வேண்டுமானால் நம்முடைய சாதிசனம், பணம் காசு, வீடுவாசல் எல்லாவற்றையும் அவர் நிமித்தம் விட்டுத் தொலைக்க நாம் மனதுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

ஜனங்கள் குருத்தோலைகளை வழியிலே தெளித்தார்கள். குருத்தோலை தெளிக்குதல் சந்தோஷத்துக்கு அடையாளம். சத்துருக்களை ஜெயித்து, பட்டணப்பிரவேசம் செய்கிற வீரர்களை இந்த விதமாய் மரியாதை செய்வது பழையகாலத்து வழக்கம். நம்மண்டை வருகிற நம்முடைய இரட்சகர் நம்முடைய ஆத்தும சத்துருக்களையெல்லாம் மேற்கொண்டவர். இ[illegible]னம் நமக்கு இருக்கிற எல்லாத் தொல்லைகளுக்கும் துன்பங்களுக்கும் [illegible] நம்மை நீங்கலாக்க அவர் சித்தமாய் இருக்கிறார். ஆகையால், அவரை நாம் சந்தோஷத்தோடும் கெம்பீரத்தோடும் ஏற்றுக்கொள்வோமாக.



மேலும், முன்பின் போகிற வருகிற கூட்டங்களோவெனில்: தாவீதின் குமாரனுக்கு ஓசியன்னா, கர்த்தரின் நாமத்திலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர், உன்னதமானவைகளில் ஓசியன்னா என்று கூப்பிட்டார்கள். நம்முடைய இரட்சகர் தம்முடைய பிதாவின் சித்தத்தை நிறைவேற்றி நமக்குச் செய்த தான எல்லா நன்மைகளுக்காகவும் நாம் அவரை முழு மனதினாலும் ஸ்தோத்திரித்து, அவருக்குப் புகழ்ச்சியாகப் பாடவேண்டும். அந்த ஜனங்களைப்போல் நாமும் ஓசியன்னா என்று கூப்பிடவேண்டும். ஓசியன்னா என்பதற்குக் கர்த்தாவே இரட்சியும் என்று அர்த்தம். தாவீது இராசாவுக்குப் பராபரன் கொடுத்த வாக்கின்படியே அவருடைய இராச்சியத்தை நிலைநிறுத்த அவருடைய வம்சத்தில் பிறந்த குமாரன் இயேசுநாதர்தான். இவர் ஒருவர் மாத்திரம் நம்மை இரட்சிக்க வல்லவர். இரட்சிக்க வல்லவராகிய அவருக்கு நாம் நம்முடைய எல்லா வருத்தங்களையும் சொல்லலாம். நமக்குத் தேவையானவைகளையெல்லாம் அவருக்குத் தெரிவிக்கலாம். இயேசுவே, இரட்சியும் இரட்சியும் என்று கூப்பிடுகிற ஒரு பாவியையும் அவர் இரட்சிக்காமல் விடுகிறதில்லை. ஆகையினால், நம்முடைய இரட்சகரை நோக்கி, மெய்விசுவாசத்தோடு கெஞ்சிக் கூப்பிடுகிறதே நாம் அவரை ஏற்றுக்கொள்ளத்தக்க வழி. அவரை முழு இருதயத்தினாலும் நம்புகிற விசுவாசமில்லாமல் நாம் அவருக்குப் பிரியமாயிருக்கக் கூடாது. நாங்கள் ஏழைகளாச்சுதே, அவர் எங்களண்டை வருவாரா என்று நம்மில் ஒருவரும் சந்தேகப்பட வேண்டியதில்லை. அவர் ஏழைக்காகவே ஏழையாக வந்தவராகையால், அவரை நாமெல்லாரும் பூரணமாய் நம்பலாம்.

எங்கள் பரம இராசாவே, எங்களண்டை வருகிற தேவரீர் எங்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுத்து, உம்மைச் சரியாய் ஏற்றுக்கொள்ள மனதையும் பலத்தையும் எங்களுக்குத் தந்தருளும், சுவாமி. ஆமேன்.

---

## கிறிஸ்து வருகை உ-ம் ஞாயிறு.

லூக். 21, 25—36.

பிரியமானவர்களே,

இயேசுநாதர் நம்மை இரட்சிக்க இந்த உலகத்திலே தாழ்மையாய் வந்து பிறந்தார். அவர் நமக்காகப் பாடுபட்டு, இரத்தம் சிந்தி, மரித்து, உயிர்த்தெழுந்து, நமது இரட்சிப்பை முடித்தபின், அவர் பரத்துக்கேறி, பராபரனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்தார். அவர் ஜீவனுள்ளோரையும் மரித்தோரையும்

நடுத்தீர்க்கத் திரும்பவும் இந்த உலகத்துக்கு வருவார். இந்த அவருடைய வருகைக்கு இரண்டாம் வருகை என்று பெயர். இது மகிமையான வருகையாயிருக்கும். முந்தின வருகையில் பெத்லகேம் ஊர் முன்னணையிலே சிறு குழந்தையாய்ப் படுத்திருந்த அவர் தம்முடைய இரண்டாம் வருகையில் வானத்தின் மேகங்கள் மேலே தேவதூதர் கூட்டத்தோடே பலத்த இராசாவாக வருவார். முன்னே அவர் பாவிகளை இரட்சிக்க வந்தார்; தம்முடைய இரண்டாம் வருகையிலோ இரட்சிப்பை ஏற்றுக் கொள்ளாத பாவிகளைத் தண்டிக்கவும், ஏற்றுக்கொண்டவர்களைச் சேர்த்துக்கொள்ளவும் வருவார். முன்னே அவர் வந்தபோது தேவதூதரின் இனிமையான பாடல் கேட்டது; அவருடைய இரண்டாம் வருகையிலோ தேவதூதரின் எக்காள சத்தம் பயங்கரமாய் முழங்கும். நமது சுவிசேஷ வாக்கியத்தில் சொல்லியிருக்கிற இந்த

இரண்டாம் வருகையைக் குறித்து, மூன்று காரியங்களைப் பார்ப்போம்.

1. கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன் நடக்கும் பயங்கர அடையாளங்கள் எவை.
2. அவருடைய இரண்டாம் வருகையில் நமக்குள்ள ஆறுதல் என்ன.
3. அவருடைய இரண்டாம் வருகைக்கு நாம் செய்யவேண்டிய ஆயத்தம் என்ன.

## 1.

முந்த இயேசுநாதருடைய இரண்டாம் வருகைக்குமுன் நடக்கும் பயங்கரமான அடையாளங்களைப் பற்றிக் கேட்போம்.

சூரியனிலுஞ் சந்திரனிலும் நட்சத்திரங்களிலும் அடையாளங்களும் பூமியின்மேல் இருக்கிற சாதிகளுக்குள்ளே கலக்கமான மன இடுக்கமும் உண்டாகும். சமுத்திரமும் அலைகளும் முழக்கமாயிருக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார். — ஒரு இராசா ஒரு ஊருக்கு வருகிறதாயிருந்தால், அவன் வருகிறதுக்கு முன்னாலே எவ்வளவு ஆரவாரம் நடக்கும். அதுபோல் வானத்துக்கும் பூமிக்கும் இராசாவாகிய இயேசுநாதர் வருகிறதற்கு முன் வெகுவான அதிசயங்கள் நடக்கும். வானத்திலே சூரியனிலும் சந்திரனிலும் நட்சத்திரங்களிலும் விசேஷித்த அடையாளங்கள் காணப்படும். நமது கண்ணைக் கூசப்பண்ணுகிற பிரகாசமுள்ள சூரியன் இருண்டுபோம். குளிர்ந்த முகமுள்ள சந்திரனும் பிரகாசிக்காது. நட்சத்திரங்கள் அத்திக்காய்போல் உதிரும். இப்பொழுது அசையாமல் பலமாய் நிற்கிற வானம் அப்பொழுது பெலன் தளர்ந்து அசையும். பூமியிலே சமுத்திரம் பொங்கி வந்து, அலைகள் முழங்கிச் சத்தம் பண்ணும்.



மேலும், பூச்சக்கரத்தின் மீதில் வருங்காரியங்களுக்குப் பயந்து எதிர்பார்த்திருக்கிறதினால், மனுஷர் சோர்ந்துபோவார்கள்; ஏனெனில் வானங்களின் பெலன்கள் அசையும் என்று சொல்லியிருக்கிறது. — வானத்திலும் பூமியிலும் உண்டாகிற பயங்கரமான அடையாளங்களைப் பார்க்கிற மனுஷரும் கலக்கமடைவார்கள். இங்கே என்ன நடக்குமோ, அங்கே என்ன நடக்குமோ, இப்பொழுது என்ன வருமோ, நாளைக்கு என்ன வருமோ என்று கலங்கித் தவிப்பார்கள்; பயந்து நடுங்கி அங்கும் இங்கும் ஓடிப் பார்த்துக் களைத்துப் போவார்கள். பூலோக இராசாக்களின் வல்லமையும், பலசாலிகளின் சமர்த்தும், புத்திமான்களின் யோசனையும், படிப்பாளிகளின் படிப்பும் அந்தச் சமயத்தில் ஒன்றுக்கும் உதவாமற்போகும்.

இந்த வானம் அசையுமா, பூமி நிலைமாறுமா, சூரியன் இருண்டுபோகுமா என்று சந்தேகப்பட்டு, கிறிஸ்து வரமாட்டார் என்று இப்பொழுது பிதற்றுகிற எல்லாத் துஷ்டர்களும் அவர் வருவதை நிச்சயமாய்க் காண்பார்கள். ஏனெனில் வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லையென்று நம்முடைய இரட்சகர் சொல்லுகிறார். அவர் சொன்னதெல்லாம் தவறாமல் நிறைவேறும். அவர் தம்முடைய முதலாம் வருகையைக் குறித்துச் சொல்லியிருந்ததெல்லாம் எப்படிச் சரிவர நிறைவேறிற்றோ, அப்படியே அவருடைய இரண்டாம் வருகையைக் குறித்துச் சொன்னதெல்லாம் பூரணமாய் நிறைவேறும். மனுஷசாதியைக் கலங்கடிக்கிற பயங்கரமான யுத்தசெய்திகளையும், கொள்ளைநோய்ச் செய்திகளையும் நாம் இந்தக் காலத்தில் அடிக்கடி கேட்கிறோம். யூதசாதி உலகமெங்கும் சிதறி, பல சாதிகள் நடுவே வாசம்பண்ணினாலும், அவர்களோடு கலந்து ஒழிந்துபோகாமல் யூதசாதியாகவே நிற்கிறது. எல்லாம் சம்பவிக்குமட்டும் இந்தச் சந்ததி ஒழிந்துபோகாது என்று அவர் சொன்னபடி இது இருக்கிறது. அவர் சொன்ன மற்ற அடையாளங்களும் மெய்யாகவே நிறைவேறும் என்பதற்கு இது ஒரு பெரிய சாட்சி.

அவர் குறித்த அடையாளங்கள் கொஞ்சங் கொஞ்சமாய் நிறைவேறியிருக்கிறது. எல்லா அடையாளங்களும் நிறைவேறி முடிகையில், மனுஷகுமாரனை மேகத்திலே வல்லமையோடும் மிகு மகிமையோடும் வரக்காண்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். — அவர் பரத்துக்கு ஏறின சமயத்தில் தேவதூதர்கள் சீஷரை நோக்கி: கலிலேய மனுஷரே; நீங்கள் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்பானேன்; உங்களை விட்டு வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவை வானத்துக்கு எந்தப் பிரகாரமாய்ப் போகக் கண்டீர்களோ, அந்தப் பிரகார

[illegible] வருவார் என்றார்கள் (அப். 1, 11). இயேசுநாதர் சொல்லியிருந்த வார்த்தையைத் தேவதூதர்களுடைய வார்த்தை உறுதிப்படுத்துகிறதென்று நாம் பார்க்கிறோம். முன்னமே பல [illegible] போல் [illegible] அந்த மனுஷ குமாரனே கடைசிகாலத்தில் மகிமையுள்ள ஆண்டவராய் வருவார். முன்னமே [illegible] பாவிகளையும் ஏற்றுக்கொண்டு, அவர்களோடு பந்தியிருந்து, அவர்களுக்குக் கிருபையைப் பிரசங்கித்த அவர் சீவனுள்ளோரையும் மரித்தோரையும் நடுத்தீர்க்கவருவார். இந்த வருகை சிலருக்கு ஆறுதலும், அனேகருக்குப் பயங்கரமுமாயிருக்கும்.

2.

அவருடைய இரண்டாம் வருகையில் நமக்குள்ள ஆறுதலைப்பற்றிக் கேட்போம். கிறிஸ்துவினுடைய இரண்டாம் வருகையைப் பற்றிக்கேட்கிறது அவிசுவாசிகளுக்குப் பிரியமல்ல. அது அவர்களுக்குப் பயங்கரம். பேலிக்ஸ் என்றொரு அதிபதியிருந்தான். அவன் கர்த்தருக்குப் பயப்படாத உலக மனுஷன். அவனுக்கு முன்பாகப் பவுல் அப்போஸ்தலன் [illegible] ஒரு சமயத்திலே: துரையே, நீர் நீதியாய் [illegible] பெண் ஆசை பொன்னாசை உதவாது. இயேசுநாத சுவாமி உலகத்தை நியாயந்தீர்க்க வருவார், அப்பொழுது சகல மனிதரைப்போல் நீரும் கணக்குக் கொடுக்க வேண்டும் என்பதாகப் பிரசங்கித்தார். அப்பொழுது அந்தத் துரை பயமடைந்து, அப்போஸ்தலனைப் போகச் சொன்னான். [illegible] பொல்லாதவர்கள் எப்பொழுதும் செய்வார்கள். [illegible] இயேசு கிறிஸ்து உலகத்தை நியாயந்தீர்க்க வருகிறார்; [illegible], அவர் சொன்ன அடையாளங்கள் நிறைவேறிவிட் [illegible] பார்க்கும்பொழுது அவர்கள் பயந்து கலங்கி, பருவ [illegible] மேல் விழுங்களென்றும், குன்றுகளுடனே: [illegible] மூடுங்களென்றும் கூப்பிட்டு அலறுவார்கள். [illegible] இயேசுநாதரைத் தங்கள் இரட்சகரென்று நம்பி விசுவா [illegible] அவர் வருகிறார் என்று அறிந்த உடனே [illegible] சந்தோஷிப்பார்கள். மரங்கள் துளிர்விடும் [illegible] சமீபித்திருக்கிறதென்று கண்டு, மனுஷர் [illegible] தூரதேசம் போயிருந்த [illegible] திரும்ப வருகிறான் என்று [illegible] போலவும், இயேசுநாதர் வரும் [illegible] செய்வோம். இவைகள் சம்ப [illegible], உங்கள் தலைகளை ஏறெடுங்கள்; [illegible] சமீபிக்கிறது என்று நம்மு



நம்முடைய இரட்சகர் இப்பொழுது நமக்கு மறைவாய் இருந்து நம்மை ஆளுவதால், உலகம் நம்மைப் பரிகாசம்பண்ணி நிந்திக்கிறது. உங்கள் இயேசுநாதர் எங்கே, அவரைக் காட்டுங்கள் என்று அஞ்ஞானிகள் அடிக்கடி சொல்லி, கிறிஸ்துவையும் நம்மையும் தூஷித்துப் பேசுகிறதை நாம் கேட்டிருக்கிறோம். நாமும் அடிக்கடி பாவத்துக்கும் பொல்லாப்புக்கும் உள்ளாகிறோம். இந்தப் பாவ உலகத்தில் நமக்கு ஆசீர்வாதமுண்டாகக் கர்த்தர் சிலுவை என்ற துன்பங்களை அடிக்கடி நமக்கு அனுப்புகிறார். இந்த முகாந்திரங்களால் நாம் தலை குனிந்து கண்ணீர்விட நமக்கு நியாயம் இருக்கிறது. கர்த்தர் வரும்போதோ நம்மைப் பரிகாசம் பண்ணி நிந்தித்தவர்களுடைய கண்ணெல்லாம் அவரைக் காணும். அப்பொழுது நம்முடைய மீட்பு பூரணமாய் நிறைவேறும். நம்மைச் சங்கடப்படுத்தும் சகல தொல்லைகளும் நீங்கிப் போம். கர்த்தர் நம்முடைய தோள்மேல் வைத்த சிலுவை நம்மை விட்டு எடுபடும். பிசாசு நம்மண்டைக்கு வரவே வராது. நாம் பாவத்துக்குத் தூரமாவோம். பொல்லாத மனிதர் நம்மைக் கிட்டிச் சேரமாட்டார்கள். பசி தாகம், வியாதி மரணம் என்கிற பேச்சே இருக்காது. நம்முடைய கண்ணிலுள்ள கண்ணீர் எல்லாம் துடைபட்டுப்போகும்.

கர்த்தர் தம்மை விசுவாசியாத உலகமக்களை நோக்கி: சபிக்கப்பட்டவர்களே, என்னை விட்டு அகன்றுபோங்கள் என்று சொல்லுவார். தம்மை நம்பின விசுவாசிகளை நோக்கியோ: வாருங்கள், என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே என்று சொல்லி, அவர்களைத் தம்முடைய மோட்சபாக்கியத்துக்கு உள்ளாக்குவார். அவர்கள் மனதில் நித்திய சந்தோஷம் உண்டாகும். அவர்கள் தலையில் ஜீவகிரீடம் வைக்கப்படும். அவர்கள் கையில் ஜெய குருத்தோலை இருக்கும். பராபரன் தம்மைச் சிநேகிக்கிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் கண்டதும் இல்லை, காது கேட்டதும் இல்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்துக்குள் ஏறினதுமில்லை என்று அப்போஸ்தலன் சொல்லுகிறார் (1 கொரி. 2, 9). இப்பொழுது நாம் அவைகளை விசுவாசித்துக்கொண்டிருக்கிறோம். அப்பொழுதோ கண்ணாரக்கண்டு அனுபவிப்போம்.

ஆகையால், கிறிஸ்துவினுடைய இரண்டாம் வருகை அவரை நம்பினபேர்களுக்கு எவ்வளவு ஆறுதலானது. கிறிஸ்து வரும்போது அவருடையவர்கள் நிமிர்ந்து தங்கள் தலைகளை ஏறெடுக்கலாம் அல்லவா. நாம் நம்முடைய தலைகளை ஏறெடுக்கையில், நம்முடைய அருமை இரட்சகரை நம்முடைய கண்கள் பார்க்கும். அவிசுவாசிகளுக்குப் பயங்கரமான அவர் முகப்பார்வை விசுவாசிகளுக்குச் சொல்லிமுடியாத ஆறுதலையும் சந்தோ

ஷத்தையும் கொடுக்கும். இந்த அவருடைய இரண்டாம் வருகை நமக்கும் ஆறுதலாய் இருக்கவேண்டுமானால், இப்பொழுதே நாம் நம்மை அதற்கு ஆயத்தப்படுத்துவது மிகவும் அவசியம்.

3.

கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு நாம் செய்யவேண்டிய ஆயத்தத்தைக் குறித்து நாம் கடைசியாகக் கேட்போம். உங்கள் இருதயங்களோவெனில் பெருந்தீனியினாலும் வெறியினாலும் பாரஞ் சுமத்தப்பட்டு, அசுப்பிலே அந்த நாள் உங்கள்மேல் வராதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். அதேனெனில் பூமியின் மீதெல்லாங் குடியிருக்கிற அனைவர்மேலும் அது ஒரு கண்ணியைப்போலே வரும் என்று இரட்சகர் சொல்லுகிறார்.—நாம் பரம காரியங்களை நினைக்காதபடிக்கும், நம்முடைய இரட்சிப்பைப் பயத்தோடும் நடுக்கத்தோடும் நடப்பிக்காதபடிக்கும், நம்முடைய இரட்சகருடைய வருகைக்கு நாம் ஆயத்தமாய் இருக்காதபடிக்கும் நம்மைத் தடுக்கிற பல காரியங்கள் உண்டு. பெருந்தீனி, குடிவெறி, பிழைப்பின் கவலை விசேஷித்த தடைகளாம். நம்முடைய பட்டணச் சபைகளிலும், கிராமச் சபைகளிலும் பெருந்தீனிக்காரரும், முக்கியமாய்க் குடிகாரரும் அதிகப்பட்டு வருகிறது எவ்வளவு விசனமான காரியம். புத்தி தடுமாறி மதிமயங்கிக் கிடக்கிறவர்கள் கர்த்தருடைய வருகையை நினைக்கவும் அதற்குத் தங்களை ஆயத்தப்படுத்தவும் முடியுமா. மேலும், உடலுக்கு இன்பத்தையும், நாவுக்கு ருசியையும், மனசுக்கு உல்லாசத்தையுமே எப்பொழுதும் நாடிக்கொண்டிருக்கிறவன் தன் பாவத்தை நினைப்பதெங்கே, குணப்படுவதெங்கே, இரட்சிப்பைத் தேடுவதெங்கே. பொழுதுவிடிந்தால், அந்திபட்டால்: என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்னத்தை உடுப்போம் என்று சொல்லி, இரவும் பகலும் சோற்றுக்கும் துணிக்குமே கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறவன் தன் ஆத்துமத்துக்காகக் கவலைப்படுவதெங்கே. இந்தக் காரியங்கள் நம்முடைய இருதயத்தைப் பாரம் சுமத்துகிறதபடியால், இவைகளுக்கு நாம் விலகியிருக்கவேண்டும். செல்விக்கையான வாழ்வுக்கும் வீணான கவலைக்கும் உள்ளானவர்கள், கண்ணியில் குருவி அகப்படுகிறது போலத் திடீரென்று கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்குள்ளாவார்கள். ஏனெனில் அவர் அசுப்பிலே வருவார். அவர் வருகிற நாளும் நாழிகையும் ஒருவருக்கும் தெரியாது.

ஆனபடியால், சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்புவித்துக்கொண்டு, மனுஷனுடைய குமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு எல்லாக் காலத்திலும் ஜெபம்பண்ணி விழித்திருங்களென்று



கர்த்தர் சொல்லுகிறார்.—நாம் விழிக்கிறாமல், ஏனோதானோவென்று காலத்தைப் போக்கி, பாவநித்திரை செய்வோமேயானால், பிசாசு உலகம் மாமிசம் என்ற சத்துருக்கள் நம்மை மோசம்பண்ணிவிடும். இந்தச் சத்துருக்களுடைய மோசத்துக்குள் அகப்பட்டுக் கெட்டுப்போனவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்தில் நிற்க முடியாது. சலப்பிரளயத்துக்கு முன்னான நாட்களில் நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாளமட்டும் அவர்கள் உண்டு குடித்து, பெண்கொண்டு கொடுத்து, சலப்பிரளயம் வந்து அனைவரையுங் கொண்டுபோகும் மட்டும் உணராதிருந்ததுபோலே மனுஷனுடைய குமாரனின் வருகையும் இருக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார் (மத். 24, 38. 39). நம்முடைய இரட்சகர் திரும்ப வரும்போது நாமும் உணர்ச்சியற்று, பாவநித்திரையில் தூங்குவோமோ. அது எவ்வளவு பரிதாபமாயிருக்கும். அப்படி நாம் செய்யாமல் அவருக்காகக் காத்து விழித்திருக்க நம்மைக் காண்பாரானால், அவர் நம்மைத் தம்முடைய சந்தோஷத்துக்குள் ஏற்றுக்கொள்ளுவார்.

கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள் ஜெபம்பண்ணுவதும் அவசியம். ஜெபம் விசுவாசிகளின் மூச்சு. ஜெபஞ்செய்யாத கிறிஸ்தவன் உயிருள்ள கிறிஸ்தவனல்ல. அல்லாமலும், நம்மைக் கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தம்பண்ண நம்மாலே தானே முடியாது. அதற்கு வேண்டிய பெலன் உயரவிருந்துதான் வரவேண்டும். ஜெபத்தினாலே இதைக் கர்த்தரிடத்தில் கேட்டு வாங்கவேண்டும். ஜெபம்பண்ணுகிறவன் கர்த்தரிடத்திலிருந்து அநேக நன்மைகளையும் ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ளுவான். பிசாசோடு சண்டை செய்வதற்கான திடன்; சோதனையை மேற்கொள்வதற்கான பெலன், விசுவாச உறுதி, ஆவியின் வரம், இவைகளையெல்லாம் நாம் ஜெபத்தினாலே கேட்டு வாங்கலாம்.

நாம் ஒரு நாள் இரண்டு நாள் அல்லது சில மாதங்கள் சில வருஷங்கள் மாத்திரம் விழித்திருந்து ஜெபம்பண்ணுவது போராது. எல்லாக் காலத்திலும் நாம் அப்படிச் செய்யவேண்டும். இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள் என்பது கர்த்தருடைய கட்டளை. எப்பொழுதும் ஜெபம்பண்ணுகிறவர்கள், எப்பொழுதும் கர்த்தருக்கு ஆயத்தமாயிருக்கிறார்கள். கர்த்தர் எந்த நேரத்தில் வந்தாலும், அவர்களைத் தம்முடையவர்களாகக் கண்டு, தம்முடைய பாக்கியத்தில் ஏற்றுக்கொள்வார்.

அப்படியானால் இங்கே வந்திருக்கிற கிறிஸ்தவர்களாகிய நாம் எப்பொழுதும் விழித்திருக்கிறோமா, எப்பொழுதும் ஜெபம்பண்ணுகிறோமா என்று நம்மைச் சோதித்துப் பார்க்கக் கடவோம். நமக்குள் இருக்கிற குடியரும் வெறியரும், ஜெபத்தை

அசட்டைபண்ணுகிறவர்களும், பாவத்தைச் சிநேகிக்கிற துஷ்டர்களும் வெட்கமடைந்து, இப்பொழுதே குணப்பட்டு, கர்த்தரிடத்தில் மன்னிப்பைத் தேடுவார்களாக. இப்பொழுது பாவமன்னிப்பைத் தேடாதவர்கள் கர்த்தருடைய இரண்டாம் வருகையில் நித்திய இகழ்ச்சிக்கு உள்ளாவார்கள்.

எங்கள் அருமை இரட்சகரே, உம்முடைய இரண்டாம் வருகைக்கு நாங்கள் ஆயத்தமாயிருக்கும்படி ஆத்தும விழிப்பையும் உக்கிர செபம்பண்ணும் ஆவியையும் எங்களுக்குத் தந்தருளும், சுவாமி. ஆமேன்.

---

## கிறிஸ்து வருகை ௩-ம் ஞாயிறு.

மத். 11, 12—10.

பிரியமானவர்களே,

ஒரு இராசா வருகிறதற்குமுன் அவனுடைய கட்டியக்காரன் வருவதுபோல, இயேசுநாதருக்குமுன் யோவான்ஸ்நானகன் வந்தார். அவர்: குணப்படுங்கள், வானராச்சியம் சமீபமாயிருக்கிறது என்று பிரசங்கம்பண்ணினார். அவர் ஏரோதே ராசாவுக்கும் புத்திசொல்லி, அவன் பாவத்துக்காக அவனைக் கடிந்துகொண்டார். இதனால் அந்த இராசா கோபமடைந்து, கர்த்தருடைய அந்த நல்ல ஊழியக்காரனைக் காவலில் வைத்தான். யோவான்ஸ்நானகன் காவலில் இருந்த காலத்தில், ஒரு நாள் தன் சீஷரில் இரண்டுபேரை இயேசுநாதரிடம் அனுப்பி: வருகிறவர் நீர்தானோ அல்லது வேறொருவருக்குக் காத்திருப்போமோ என்று அவரைக் கேட்கச்சொன்னார். வருகிறவர் என்றால், மனிதரை இரட்சித்துப் பிசாசின் இராச்சியத்தை அழிக்கிறதற்காக ஒருவர் பிறப்பார் என்று பராபரன் ஏற்கனவே சொல்லியிருந்தாரே, அந்த இரட்சகர் தான். இரட்சகர் வருவார் என்று பழைய ஏற்பாட்டின் விசுவாசிகளெல்லாரும் காத்திருந்தார்கள். வருகிறவர் நீர்தானோ என்கிற கேள்வியை யோவான்ஸ்நானகன் இரட்சகரிடத்தில் கேட்டு அவருடைய உத்தரவைப் பெற்றதினால், அவருடைய விசுவாசமும் அவர் சீஷருடைய விசுவாசமும் பலப்பட்டது. அவர்கள் இதனால் உறுதிப்பட்டு இரட்சிப்பை அனுபவித்து, கிறிஸ்துவினிடத்தில் மரணபரியந்தம் தரித்திருந்தார்கள். உலகத்தை மீட்கப்போகிற இரட்சகர் இயேசுநாதர் தானோ அல்லவோ என்று நிச்சயமாக யோவானும் அவருடைய சீஷரும் அறியவேண்டியிருந்ததுபோல, நாமும் அறியவேண்டியதே. பெத்லகேம் ஊரில் கன்னிமரியாளிடத்தில் பிறந்த இயேசுநாதர் உலகத்தை இரட்சிக்க வந்தவராய் இராதே



போனால், அவரை நம்பியிருந்த யோவானின் விசுவாசம் வீண், அவருடைய சீஷர் விசுவாசம் வீண், அப்போஸ்தலர் விசுவாசம் வீண், நம்முடைய விசுவாசமும் வீண். ஆகையால், இயேசுநாதர் தான் உலகத்தை இரட்சிக்க வந்தவர், அவரைத் தவிர வேறே இரட்சகர் இல்லை என்கிற நிச்சயம் நமக்கு அவசியம். ஆகையால் நாம் இப்பொழுது தியானிக்கப்போகிற சங்கதி:

இயேசுவே மெய்யான உலக இரட்சகர் என்பது

1. இதை நாம் அறிந்துகொள்வது எப்படி.
2. இதை அறிந்த நாம் செய்யவேண்டியது என்ன.

### 1.

இயேசுவே மெய்யான உலக இரட்சகர் என்பதை நாம் நிச்சயமாய் அறிந்துகொள்ளும்படி அவரையே கேட்கவேண்டும். யோவான்ஸ்நானகன் இயேசுநாதரைக் குறித்து நற்சாட்சி கொடுத்தவர். இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற பராபரனுடைய ஆட்டுக்குட்டி என்று தம்முடைய சொந்த விரலால் இயேசுவைச் சுட்டிக்காட்டினவர். ஆகையால் அவர் இயேசுநாதரை வரப்போகிற மேசியாவென்று விசுவாசித்திருந்தார் என்பது நிச்சயம். ஆகிலும், அவர் காவலில் இருந்த காலத்தில் ஒருவித கலக்கம் அடைந்ததாகத் தோன்றுகிறது. இந்தக் கலக்கம் துன்பத்தைச் சகிக்கமாட்டாமையால் உண்டான சந்தேகமென்று நினைக்கக் கூடாது. ஏனெனில், அவர் காற்றினால் அசையுண்ட நாணல் அல்ல என்று நம்முடைய இரட்சகரே சாட்சிகொடுத்தார். பின் என்ன கலக்கமுண்டாயிருக்கலாம். பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகள் கிறிஸ்துவின் முதல் வருகையையும் இரண்டாம் வருகையையும் அடிக்கடி ஒரே வருகைபோல் சேர்த்துப் பேசினார்கள். அவர்களைப்போல் யோவான்ஸ்நானகனும் பேசிப் பிரசங்கித்தார். அவருடைய தூற்றுக்கூடை அவர் கையிலே இருக்கிறது; அவர் தம்முடைய களத்தை அறவிளக்கி, கோதுமையைத் தம்முடைய களஞ்சியத்திலே சேர்த்து, பதரையோ அவியாத அக்கினியால் சுட்டுப்போடுவார் (லூக். 3, 17) என்று இயேசுவைக் குறித்துச் சொன்னார். ஆகிலும், யோவான் காவலில் இருந்தபொழுது கிறிஸ்து செய்த கிரியைகளைக் கேள்விப்பட்டதில், அவர் பொல்லாரை நியாயந்தீர்க்கிறவராகக் காணப்பட்டதில்லை. அவர் வேலை இரட்சிக்கிற வேலையாக மாத்திரம் காணப்பட்டது. இதனால் யோவானுக்குக் கலக்கம் உண்டாயிருக்கலாம், அவருடைய சீஷரும் இடறல் அடைந்திருக்கலாம். இதன் நிமித்தம் அவர்: வருகிறவர் நீர்தானோ அல்லது வேறொருவருக்குக் காத்திருப்போமோ என்று கேட்டனுப்பியிருக்கலாம்.

இந்தப்படியே எந்தக் காலத்திலும் விசுவாசிகளுக்குக் கலக்கம் வருவதுண்டு. விசுவாசிகள் கலக்கமடைகிறது ஆச்சரியமல்ல. கலக்கமடைந்தாலும், அவர்கள் சந்தேகத்திலும் அவநம்பிக்கையிலும் விழுந்துபோகாமல், இயேசுநாதரிடமே ஓடி, தங்களுக்கு வேண்டிய விசுவாச பலத்தைக் கேட்கிறார்கள், கேட்டதையும் அடைகிறார்கள். அப்படியே, நமக்கும் பல முகாந்திரங்களால் கலக்கம் உண்டாகலாம். சந்தேகத்தில் விழுகிற சமயங்களும் உண்டு. பொல்லார் வாழ்ந்திருப்பதையும், நல்லார் தாழ்ந்திருப்பதையும் பார்த்து நாம் இடறல் அடைவோம், அல்லது நாம் நினைத்ததுபோல் காரியம் முடியாமல் வேறுவிதமாய் நடக்கும்பொழுது கலங்கிவிடுவோம். அல்லது நமக்காவது நம்மைச் சேர்ந்தவர்களுக்காவது இந்த உலகத்திலே பலவிதமான துன்பங்களும் சங்கடங்களும் உண்டாகும்போது பிசாசும், பொல்லாத மனுஷர்களும், நம்முடைய சொந்த இருதயமும், பலவிதமான சந்தேகங்களை நமக்கு உண்டாக்கும். நீ கிறிஸ்தவனாய் இருக்கிறாயே, இயேசுநாதரை உன் இரட்சகரென்றும் உன் இராசாவென்றும் சொல்லுகிறாயே; உனக்குத் துன்பம் வரலாமா, உனக்குத் துன்பம் வராதபடி இயேசுநாதர் தடுக்கப்படாதா, உன்னைத் துன்பப்படுத்துகிறவர்களையெல்லாம் அவர் அழித்துப்போடக்கூடாதா என்கிற பலவிதமான கேள்விகள் நம்முடைய மனதிலே எழும்பும். அப்பொழுது நாம் என்ன செய்யவேண்டும். யோவான்ஸ்நானகன் செய்ததுபோல இயேசுநாதரையே கேட்கவேண்டும். என் இயேசுநாதரே, நீர் என் ஆண்டவரும் என் கர்த்தரும் என் இராசாவும் என் இரட்சகருமாய் இருக்கிறீர் என்பதை எனக்குத் தெரியக்கொடும் என்று செபம்பண்ணவேண்டும். நமக்கிருக்கிற எந்தச் சந்தேகத்தையும் கலக்கத்தையும் அவரிடத்திலே தாராளமாய்ச் சொல்லலாம். அவரே நமது கலக்கத்தைத் தீர்க்கிறவர், விசுவாசத்தை வளர்க்கிறவர், அவர் நெரிந்த நாணலை முறிக்காதவர், மங்கி எரிகிற திரியை அவிக்காதவர். இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவும் மனுஷனுடைய குமாரன் வந்தார் என்று அவரே சொல்லியிருக்கிறார். நல்ல மேய்ப்பராகிய அவர் தம்முடைய ஆடுகள் விசுவாசத்திலும் தெய்வபக்தியிலும் பலப்படவும் வளரவும் வேண்டுமென்கிற ஆசையுடையவராயிருக்கிறார். ஆகையால் அவர் நமது செபத்தைக் கேட்டு, நமது கலக்கத்தைத் தீர்ப்பார் என்பதற்குச் சந்தேகமே இல்லை.

நமக்கு வரும் சந்தேகங்களைக் கர்த்தர் தம்முடைய வசனத்தினாலே தீர்க்கிறார். அவருடைய வசனத்திலே நாம் அவரைத் தேடவேண்டும். அதுவே நம்முடைய சந்தேகங்களைத் தீர்க்கும் எத்தனம். செபம்பண்ணி, வேதபுத்தகத்தை ஆராய்ந்து



பார்க்கிறவர்களுக்கு இயேசுநாதர் நிச்சயமான உத்தரவு கொடுப்பார், அவர்களுடைய விசுவாசத்தைப் பலப்படுத்துவார். செபத்தினால் இயேசுவண்டை சேராமலும், அவருடைய வசனத்தைக் கேட்காமலும் படிக்காமலும் போகிற கிறிஸ்தவர்கள் விசுவாசத்திலும் அறிவிலும் வளரமாட்டார்கள். இயேசுவே நம்முடைய இரட்சகர் என்கிற நிச்சயம் அவர்களுக்குள் வளராது. ஒருகாலத்தில் அவர்களுக்கிருந்த கொஞ்ச நஞ்ச விசுவாசமும் தேய்பிறைபோல் வரவரக் குறைந்து, கடைசியில் அற்றுப்போம். ஆகையால், நாம் நம்முடைய விசுவாசத்தை இழந்து போகாமல், அதில் பலப்படும்படிக்குத் தினந்தோறும் அவருடைய வசனத்தை வாசிக்கவேண்டும். வாசிக்கத் தெரியாதவர்கள், வாசிக்கத் தெரிந்தவர்களிடத்தில் கேட்டுப் படிக்கவேண்டும்.

வருகிறவர் நீர்தானோ என்று கேட்ட சீஷருக்குக் கர்த்தர்: குருடர் பார்வையடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் எழுந்திருக்கிறார்கள், தரித்திரருக்குச் சுவிசேஷம் அறிவிக்கப்படுகிறது என்று உத்தரவு சொன்னார். அவர் தான் வருகிறவர் என்பதற்கு இதுவே போதுமான சாட்சி. ஏனென்றால், உலகத்தை இரட்சிக்கப் போகிறவர் என்னென்ன செய்வாரென்று ஏற்கனவே எசாயா தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறார். அவர் வந்து உங்களை இரட்சிப்பார்; அப்போது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோகும், அப்போது சப்பாணி மானைப்போல் குதிப்பான்; ஊமையன் நாவும் கெம்பீரிக்கும் என்றும் (எசா. 35, 4—6), கர்த்தராகிய பராபரனுடைய ஆவி என்மேல் இருக்கிறார்; சிறுமையானவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் காயங்கட்டவும், சிறுமைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் காவல் நீங்குதலையுங் கூறவும், அவர் என்னை அனுப்பினார் என்றும் (எசா. 61, 1—3) எழுதியிருக்கிறது. இந்தத் தீர்க்கதரிசனங்கள் சொன்னபடியே இயேசுநாதர் கணக்கில்லாத அற்புதங்களைச் செய்து, இரட்சிப்பின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். ஆகிலும், பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகள் அற்புதஞ் செய்ததில்லையா, புதிய ஏற்பாட்டு அப்போஸ்தலர்கள் அற்புதஞ் செய்ததில்லையா, சுவிசேஷம் பிரசங்கித்ததில்லையா என்று சிலர் கேட்பார்கள். அது மெய்தான்; என்றாலும், அவர்களெல்லாரும் கர்த்தருடைய உத்தரவின்படியேயும் கர்த்தர் கொடுத்த பலத்தினாலும் செய்தார்கள். இயேசுநாதரோ தம்முடைய சுய பலத்தினால் சொந்த மனதின்படி செய்தார். எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்று இயேசு ஒருவர் மாத்திரம் சொல்லக்கூடிய

வராயிருந்தார். இதை அக்காலத்தில் இருந்தவர்களுடைய கண் கண்டது, காது கேட்டது. ஆகையால் அவர்தான் வரவேண்டிய உலக இரட்சகரென்பது நிச்சயம்.

இரட்சகராகிய அவர் உலக இராசாக்களைப்போலே மகிமையுடையவராய் இருந்ததில்லை. அவர் தம்மையாவது தம்முடைய சீஷர்களையாவது துன்பப்படுத்தின சத்துருக்களை உடனே அழித்துப்போடாமல், நீண்டசாந்தமும் மிகுந்த பொறுமையும் உள்ளவராய் இருந்தார். அவர் இப்படி இருந்தது யோவானுக்கும், அவருடைய சீஷருக்கும் இடறலை உண்டாக்கத்தக்கதாய் இருந்தது. இதினிமித்தம் இயேசுநாதர்: ஆர் என்னிடத்தில் இடறல்படாதிருக்கிறானோ, அவன் பாக்கியவான் என்றார். நாமும் அவருடைய தாழ்மைக்காகவும் அவருடைய பொறுமைக்காகவும் வருத்தப்படாமலும், முறுமுறுக்காமலும், அவரை விசுவாசிக்கவேண்டும். காலம் நிறைவேறினபோது அவர் எப்படி இரட்சிப்பை முடித்து வைத்தாரோ, அப்படியே அவர் தாம் குறித்த வேளையில் உலகத்தை நியாயந்தீர்ப்பார். அவிசுவாசிகளுக்கு ஆக்கினைத் தீர்ப்பிடுவார். அதுவரைக்கும் அவர் தரித்திரருக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கிறவர். நம்மைப்போல் கையிலே காசுபணமில்லாத ஏழைகளுக்கு மாத்திரமல்ல, இருதயத்திலே யாதொரு புண்ணியமும் நன்மையுமில்லாத சகல ஏழைகளுக்கும் அவருடைய சுவிசேஷத்தினால் ஆசீர்வாதம் வரும். ஆண்டவரே, நான் உம்மைப் பார்க்கிறதற்கான கண் இல்லாத கபோதி, எனக்குக் கண் தாரும்; நான் உமது சத்தியங்களைக் கேட்கிறதற்கான காதில்லாதவன், என் காதைத் திறவும்; நான் மோட்ச வழியில் நடக்கமாட்டாத சப்பாணி, என்னைச் சரிப்படுத்தும்; நான் பாவக்குஷ்டம் பிடித்த நோயாளி, என்னைச் சுகமாக்கும்; நான் பாவத்திலும் அக்கிரமத்திலும் செத்துப்போனவன், எனக்கு உயிர் தாரும்; எனக்குப் புண்ணியம் இல்லை, நீதி இல்லை, உமக்குப் பிரியமான எதுவுமில்லை என்று அழுது புலம்பிக் கூப்பிடுகிற ஏழைகளுக்கே அவருடைய சுவிசேஷத்தினால் சகல நன்மையும் உண்டாம். அவர் நம்முடைய பாவங்களை மன்னிப்பார், நமக்குச் சுத்த இருதயத்தைக் கொடுப்பார், நீதியின் பாதையிலே நம்மைக் கைபிடித்து நடத்துவார், கடைசியாக நம்மை மோட்சத்தில் கொண்டுபோய்ச் சேர்ப்பார். இந்த நன்மைகளை நமக்குக் கொடுக்கக் கூடிய வேறே இரட்சகர் இந்த உலகத்தில் இல்லை. இதை அவருடைய சொந்த வாயால் நாம் கேட்டறிந்திருக்கிறோம்.

2.

இயேசுவே மெய்யான உலக இரட்சகர் என்பதை அறிந்திருக்கிற நாம் செய்யவேண்டியதென்ன.



அவரை முழுமனதினாலும் விசுவாசிக்கவேண்டும். இப்படி யோவானும் அவருடைய சீஷரும் செய்தார்கள். இதை நாம் இயேசுநாதர் சொன்ன வார்த்தைகளால் அறியலாம்.

சீஷர்கள் போனபின் இயேசு யோவானைக் குறித்துப் புகழ்ந்து பேசினார். வனாந்தரத்தில் எதைப்பார்க்கப் புறப்பட்டீர்கள்; காற்றினால் அசையுண்ட நாணலையோ. அல்லது எதைப் பார்க்கப் புறப்பட்டீர்கள்; மெல்லிய வஸ்திரங்களைத் தரித்த மனுஷனையோ. இதோ, மெல்லிய வஸ்திரங்களை உடுக்கிறவர்கள் அரசர் மாளிகைகளில் இருக்கிறார்கள் என்றார். — யோவானிடத்திலே விளங்கின குணங்கள் நம்மிடத்திலும் விளங்கவேண்டும். அவர் காற்றினால் அசையுண்ட நாணலைப்போல் இருக்கவில்லை. நாணலானது கீழ்காற்று அடித்தால் மேற்புறமாய்ச் சாயும். மேல்காற்று அடித்தால் கீழ்புறமாய்ச் சாயும். தென்றல் அடித்தால் வடக்கே சாயும். வாடை அடித்தால் தெற்கே சாயும். அதுபோல் பொய்க் கிறிஸ்தவர்கள் வாழ்வுகாலத்தில் ஒரு மாதிரியும், தாழ்வு காலத்தில் ஒரு மாதிரியும், சுகமாய் இருக்கும்போது ஒரு மாதிரியும், வியாதியாய் இருக்கும்போது ஒரு மாதிரியும் நடந்து கொள்வார்கள். யோவானோ வனாந்தரத்தில் பிரசங்கம் பண்ணி ஞானஸ்நானம் கொடுத்த பொழுது இயேசுநாதரை எப்படி விசுவாசித்திருந்தாரோ, அந்தப்படியே அவர் காவல் கிடங்கில் அடைபட்டிருந்தபொழுதும் ஒரே உறுதியாய் விசுவாசித்திருந்தார். அவரை விசுவாசியாதவராயிருந்தால், தம்முடைய சீஷரை அவரண்டை அனுப்பியிருக்கவும் மாட்டார்; அவருடைய உத்தரவுக்குக் காத்திருக்கவும் மாட்டார். நாமும் அவரைப்போல் எல்லாக்காலத்திலும் இயேசுநாதரை நம்பியிருக்கவேண்டும்.

யோவான் அரசர் மாளிகைகளிலிருந்து, உலக மக்களைப்போல் செல்விக்கையாய் வாழப் பிரியப்படவில்லை. பிரியப்பட்டிருப்பாராகில், ஏரோதே இராசாவைக் கடிந்துகொள்ளாமல், அவனுக்கு இச்சகமாய்ப் பேசியிருப்பார். அவரோ கர்த்தருக்கு ஊழியஞ் செய்வதற்காக எல்லாவற்றையும் வெறுத்தார். அவருக்கு உயர்ந்த வஸ்திரம் இல்லை. அவர் ஒட்டகமயிர் உடையும் வார்க்கச்சையும் கட்டிக்கொண்டு வெளிப்பட்டார். மெய்க் கிறிஸ்தவர்களும் அவசியமானால் கர்த்தருக்கென்று சகல சந்தோஷங்களையும் வெறுத்து, சகல சங்கடங்களையும் சகித்து வருவார்கள்.

அல்லது எதைப் பார்க்கப் புறப்பட்டீர்கள்; தீர்க்கதரிசியையோ. ஆம் தீர்க்கதரிசியிலும் அதிகப்பட்டவனை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். அதேதென்றால்: இதோ, நாம் நம்முடைய தூதனை உம்முடைய முகத்துக்கு முன்பாக அனுப்புகிறோம்; அவன் உமக்குமுன்னே உமது வழியை ஆயத்தம் பண்

னுவானென்று எழுதிக் குறிக்கப்பட்டவன் இவன்தானே என்றார்.—யோவான் கர்த்தருடைய தீர்க்கதரிசியும் அவருடைய முன் தூதனுமாய் இருந்து: குணப்படுங்கள் என்று பிரசங்கம் பண்ணி, எல்லா ஜனங்களையும் இயேசுநாதரண்டைக்கு வழிநடத்தினார். அப்படியே நாம் குணப்பட்டு, இயேசுநாதரை முழுமனதினாலும் விசுவாசித்து, அவரிடத்திலே நிலைத்திருப்பதுமல்லாமல், நம்மைச் சேர்ந்த யாவரும் நம்மைச் சூழ இருக்கிற அஞ்ஞானிகளும் குணப்படவும், இயேசுநாதரண்டை ஓடிவரவும் நாம் பிரயாசப்படவேண்டும். இதுவே இயேசுநாதரை விசுவாசிக்கிறவர்களுடைய அடையாளம். ஒரு நல்ல மருந்தைச் சாப்பிட்டுச் சுகமடைந்தவன் அந்த மருந்தை மற்றவர்களுக்கும் சொல்லி, அவர்களையும் சுகமடையப் பண்ணுவான். தண்ணீரில்லாக் காட்டிலே ஒரு நல்ல நீரூற்றைக் கண்டவன், அந்தக் காட்டில் தண்ணீரில்லாமல் அலைகிறவர்களுக்கு அதைக் காட்டுவான். இரட்சகரைக் கண்டுபிடித்த நாமும் அப்படிச் செய்யவேண்டும்.

யோவான் இயேசுவைத் தன் இரட்சகரென்று சிலகால மாத்திரமல்ல, மரணபரியந்தம் நம்பி, இந்த நம்பிக்கையில் முடிவுமட்டும் நிலைத்திருந்தார். ஏரோதே இராசா அவரைத் தன் வைப்பாட்டி சொல்லைக் கேட்டுச் சிரசாக்கினை செய்தபொழுது அவர் கிறிஸ்துவின் நிமித்தம் தம்முடைய இரத்தத்தைச் சிந்தி, தம்முடைய உயிரையும் விட்டார். இப்படியே கர்த்தரை விசுவாசித்து, அவர் சொல்லை நம்புகிறவர்கள் மரணபரியந்தம் அவரிடத்தில் நிலைத்திருக்கிறார்கள். அவரிடத்தில் நிலைத்திருக்கிறவர்கள் ஆரோ, அவர்கள் அவரை அதிகமதிகமாக அறிந்து, அவருடைய இரட்சிப்பின் சந்தோஷத்தை அதிகமதிகமாய் அனுபவிப்பார்கள். கர்த்தருக்குச் சித்தமாயிருந்தால் அவர் நிமித்தம் தங்கள் உயிரையுங் கொடுப்பார்கள்.

எங்கள் அருமை இரட்சகரே, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கிறிஸ்து நீர்தானென்று நாங்கள் எல்லாக்காலத்திலும் உறுதியும் திடமுமாக நம்பி, உம்மிடத்தில் முடிவுமட்டும் நிலைத்திருக்கும்படி எங்கள் விசுவாசத்தை வளர்த்து விர்த்திக்கப்பண்ணும் சுவாமி, ஆமென்.

---

## கிறிஸ்து வருகை ௪-ம் ஞாயிறு.

யோவா. 1, 19—28.

பிரியமானவர்களே,

கர்த்தர் பிறந்த பண்டிகை நெருங்கி வருகிறது. அதை மெய்யான சந்தோஷத்தோடு கொண்டாட விரும்புகிறோம். அந்



தப் பண்டிகை நமக்கு ஆசீர்வாதமாய்ப் பலிக்கவேண்டுமென்பது நம்முடைய ஆசை. நாம் அஞ்ஞானிகளைப்போல் வெளிக்குச் சிறப்பாய்ப் பண்டிகை கொண்டாடுவது போதாது. உடுப்புக்கு நல்ல துணியும், நாக்குக்கு ருசியான பண்டங்களும், கண்ணுக்குச் சிறப்பான கோயிலும், அலங்காரமான வீடும் தெருக்களும், காதுக்கு இன்பமான வாத்திய முழக்கமும் இருந்தால், அதையே திருவிழாவென்று அஞ்ஞானிகள் நினைக்கிறார்கள். அப்படிக் கிறிஸ்தவர்கள் நினைக்கவே கூடாது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நம்முடைய இருதயத்திலே வரவும், மேலான ஆசீர்வாதங்களை நமக்குக் கொடுக்கவும் மனதாயிருக்கிறார். ஆகையால் நாம் வெளிப்படையான ஆயத்தங்களைச் செய்யுமுன் நம்முடைய இருதயத்தை ஆயத்தம் பண்ணவேண்டும். தங்கள் இருதயத்தை ஆயத்தம் பண்ணாத யூதர் தங்கள் நடுவில் வந்திருந்த இரட்சகரை அறிந்துகொள்ளாதே போனார்கள். ஆகையால், யோவான்ஸ்நானகன் தன்னிடத்தில் வந்த யூதர்களைப் பார்த்து: நீங்கள் அறியாதிருக்கிறவர் உங்கள் நடுவிலே நிற்கிறாரென்று சொன்னார். நமது நடுவில் வருகிற இரட்சகரை நாம் நம்முடைய இரட்சகரென்று அறிந்துகொள்ளாதேபோனால், நாம் பண்டிகை கொண்டாடுவதில் பிரயோசனமில்லை.

**நமது நடுவில் வருகிற இரட்சகரை நாம் அறிந்து ஏற்றுக்கொள்ள நமக்குத் தேவையானது என்ன.**

1. நம்மைக் கர்த்தருக்குக் கீழ்ப்படுத்துகிற தாழ்மை.
2. கர்த்தரை உயர்த்தி அறிக்கையிடுகிற விசுவாசம்.

### 1.

நம்முடைய நடுவில் வருகிற இரட்சகரை நாம் அறிந்து ஏற்றுக்கொள்ளும்படி நம்மைக் கர்த்தருக்குக் கீழ்ப்படுத்துகிற தாழ்மை நமக்குத் தேவை.

யோவான்ஸ்நானகன் நமக்கு நல்ல முன்மாதிரியாயிருக்கிறார். அவர் கர்த்தருடைய உத்தரவுப்படியே வனாந்தரத்தில் பிரசங்கம்பண்ணி, ஞானஸ்நானம் கொடுத்தார். ஏராளமான ஜனங்கள் அவரிடத்திலே கும்பல் கும்பலாய்ப்போய், பிரசங்கங் கேட்டு, ஞானஸ்நானம் பெற்றார்கள். இது செய்தியை எருசலேமிலிருந்த பெரிய மனுஷர்கள் கேள்விப்பட்டார்கள். அப்பொழுது அவரிடம் சில ஆசாரியர்களையும் லேவியரையும் அனுப்பி: நீர் ஆரென்று கேட்டார்கள். அவர் ஒருவேளை உலகத்தை இரட்சிக்கப்போகிற கிறிஸ்துவாயிருக்கலாம் என்று அவர்கள் நினைத்தபடியினாலே, யோவான் அந்த நினைப்புக்கு இடங்கொடுக்காமல் நான் கிறிஸ்து அல்லவென்று அறிக்கையிட்டார்.

நாம் உங்களுக்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறோம் என்று மல்கியா தீர்க்கதரிசி (4, 5) சொன்னாரே, அந்த எலியா நீர்தானோ என்று கேட்டார்கள். அதற்கு அவர்: நான் அவனல்ல என்றார். ஆகாபு இராசாவின் காலத்தில் இருந்த எலியா தீர்க்கதரிசியைப்போல் யோவான்ஸ்நானகனும், அதிக வைராக்கியத்தோடு சனங்களின் பாவத்தைக் கண்டித்துப் பிரசங்கம் பண்ணினதினால் அவரை எலியா என்று சொல்லலாம். அப்படியே இயேசுநாதரும் சீஷருக்குச் சொன்னார் (மத். 17, 12 13). யூதர்களோ பரதுக்கேறின பழைய எலியாவே திரும்பவும் வருவாரென்று நினைத்ததால், தான் அந்த எலியா அல்லவென்று யோவான் சொன்னார்.

நாம் உன்னைப்போல் ஒரு தீர்க்கதரிசியை அவர்களுக்கு அவர்கள் சகோதரர் நடுவிலே எழும்பப்பண்ணி, நம்முடைய வார்த்தைகளை அவர் வாயிலே கொடுப்போம்; நாம் அவருக்குக் கற்பித்ததையெல்லாம் அவர்களோடு சொல்லுவாரென்று மோசேக்குப் பராபரன் சொன்னாரே (5 மோ. 18, 18), அந்தத் தீர்க்கதரிசி நீர்தானோ என்று கேட்டார்கள். அதற்கு: அல்லவென்றே சொன்னார். ஏனென்றால் மோசே முன்னறிவித்த தீர்க்கதரிசி இயேசுநாதர் என்று யோவானுக்குத் தெரியும்.

நீர் உம்மைக் கிறிஸ்துவுமல்ல, எலியாவும் அல்ல, தீர்க்கதரிசியாரும் அல்ல என்று சொன்னால், பின்னை நீர் ஆரென்று கேட்டார்கள். அதற்கு யோவான்: வனாந்தரத்திலே கர்த்தருடைய வழியை ஆயத்தப்படுத்துங்கள், நம்முடைய பராபரனுக்கு அந்தர வெளியிலே பாதையைச் செவ்வைபண்ணுங்கள் என்றும், பள்ளமெல்லாம் உயர்த்தப்பட்டு, கோணலானது செவ்வையாகி, கரடுமுரடானவைகள் சமனாகக் கடவது என்றும், கர்த்தரின் மகிமை வெளியரங்கமாகும், அதை எல்லா மாமிசமும் ஏகமாய்க் காணும்; ஏனெனில் கர்த்தரின் வாக்கு அதை உரைத்தது என்றுங் கூப்பிடுகிற சத்தம் உண்டாம் (எசா. 40, 3-5) என்ற வேதவாக்கியத்தை அவர்களுக்கு நினைப்பூட்டி, அந்த விதமாய்க் கூப்பிடுகிறவர் கர்த்தரென்றும், தாம் அவருடைய சத்தமென்றும் சொன்னார். ஆ, இது எவ்வளவு பெரிய தாழ்மை; அவர் தம்மை ஒரு பொருட்டாக எண்ணவேயில்லை. தம்மை ஒரு ஆள் என்றாவது, ஒரு வேலைக்காரன் என்றாவது சொல்ல அவருக்கு மனமில்லை. சத்தமானது கேட்டவுடனே இல்லாமல் போவதுபோலே தாமும் அதிசீக்கிரத்தில் மறைந்து ஒழிந்து போகிறவரென்று தம்மைக் குறித்துச் சொன்னார். இப்படியிருக்க, நாம் நம்மை ஒரு பொருட்டாக எண்ணலாமா. நாம் கர்த்தருக்கு முன்பாக எம்மாத்திரம்.



கூப்பிடுகிறவருடைய சத்தமாகிய யோவானிடத்தில் நாம் கேட்கிற வார்த்தைகளின்படி நாம் நம்மைச் செவ்வைபண்ணுவது அவசியம். நமது இராசா வருகிறார், நம்மண்டைக்கு வருகிறார். நம்முடைய இருதயத்துக்குள் வரவேண்டுமென்பது அவருடைய ஆசை. அவருக்கு வழி ஆயத்தமாயிருக்கிறதா. நம்முடைய இருதயத்தில் எவ்வளவு பள்ளம்; பள்ளம் படுகுழிகளில் நாற்றமெடுக்கும் சேறு சகதி கிடப்பதுபோலே நமக்குள் எத்தனை அசுத்தமான பாவங்கள் உண்டு. நம்முடைய இருதயத்தில் எத்தனை மலை; பெருமை, அகந்தை, நான் என்கிற எண்ணம் நமக்குள் இல்லையா. நம்முடைய இருதயத்தில் எத்தனை கோணல்; பராபரனுடைய நீதியும் நியாயமுமான கற்பனைகளுக்கு அடாத பாவமெல்லாம் கோணலல்லவா. ஆகையால் நாம் நம்மை எந்த விதத்திலும் உயர்த்துகிறதற்கு நியாயமில்லை. நம்மைக் கர்த்தருக்கு முன்பாகத் தாழ்த்துகிறதற்கே போதுமான நியாயமுண்டு.

மேலும், நீர் கிறிஸ்து அல்லாமலும் எலியா அல்லாமலும் தீர்க்கதரிசியாரல்லாமலும் இருந்தால், பின்னை ஏன் ஞானஸ்நானம் கொடுக்கிறீரென்று கேட்டார்கள். அவரோ அந்தக் காரியத்திலும் தம்மை உயர்த்தாமல்: நான் தண்ணீரினால் ஞானஸ்நானம் கொடுக்கிறேன்; ஆனால் நீங்கள் அறியாதிருக்கிறவர் உங்கள் நடுவில் நிற்கிறார். அவர் எனக்குப் பிந்தி வந்தும் எனக்கு முந்தினவரானவர். அவருடைய பாதரட்சையின் வாரை அவிழ்க்க நான் பாத்திரவானல்ல என்றார். — யோவான் கொடுத்த ஞானஸ்நானம் அடையாளமானது, இயேசுநாதருடைய வருகைக்குச் சனங்களை ஆயத்தம் பண்ணுகிறதாயிருந்தது. நாம் பெறுகிற கிறிஸ்தவ ஞானஸ்நானமோ இயேசுநாதர் சம்பாதித்த இரட்சிப்பை நமக்குக் கொடுக்கிறது. யோவான் கொடுத்த ஞானஸ்நானம் தண்ணீரால் கொடுக்கும் ஞானஸ்நானமாயிருந்தது. இயேசுநாதர் ஏற்படுத்தின ஞானஸ்நானமோ தண்ணீராலும் பரிசுத்த ஆவியாலும் கொடுக்கிற ஞானஸ்நானமாயிருக்கிறது. ஆகையால், இது யோவானுடைய ஞானஸ்நானத்திற்கு மேற்பட்டது. இதை யோவான் ஒப்புக்கொண்டு, தம்மைத் தாழ்த்தினார். மேலும், ஒருவருடைய பாதத்தில் போட்டிருக்கிற செருப்பைக் கழற்றுவது அடிமையின் வேலை, அது ஒரு நீச வேலை. என்றாலும், அதைச் செய்கிறதற்கு முதலாய்த் தான் பாத்திரவானல்ல என்று யோவான் எண்ணினார். மெய்யான விசுவாசிகள் யாவரும் இப்படியே தங்களைக் குறித்து நினைக்கிறார்கள். விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாம்: அடியேன் தூளும் சாம்பலுமாயிருக்கிறேனென்று சொன்னார். நாமோ நம்மை ஒரு பொருட்டாகவும், நம்முடைய செபம், ஆராதனை, நடக்கை, தர்மதானம் இவைகளைப் பெரிதாகவும் எண்ணிக் கெட்டுப்போகிறோம்.

பிரியமானவர்களே, நாம் நம்மைத் தாழ்த்துவோமாக. நாம் பெருமை பாராட்ட நம்மிடத்தில் என்ன இருக்கிறது. நம்மை வெட்கப்படுத்தும் பாவமே அல்லாமல், நமக்குச் சொந்தமானது ஒன்றுமில்லை. மரியாளைப்போல: இதோ, ஆண்டவருடைய அடிமையாயிருக்கிறேன் என்று நம்மில் ஒவ்வொருவனும் சொல்வானாக. நம்முடைய பாவங்களையும் அக்கிரமங்களையும் நினைத்துத் துக்கப்பட்டு, வெட்கப்பட்டு, அழுது, நம்மைத் தாழ்த்தக்கடவோம். அகந்தையுள்ளவர்களுக்குப் பராபரன் விரோதமாயிருக்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கே அவர் கிருபை செய்கிறார். அவர்களுடைய இருதயத்திலே அவர் பிரவேசித்து அவர்களை ஆசீர்வதிக்கச் சித்தமாயிருக்கிறார்.

2.

நம்முடைய நடுவில் வருகிற இரட்சகரை நாம் அறிந்து ஏற்றுக்கொள்ளும்படி கர்த்தரை உயர்த்தி அறிக்கையிடுகிற விசுவாசம் நமக்குத் தேவை. யோவான்ஸ்நானகன் இயேசுவைத் தமது இரட்சகரென்றும், ஆண்டவரென்றும், விசுவாசித்தார். தமது விசுவாசத்துக்கு ஒத்தபடியே பேசினார். இப்படிப்பட்ட விசுவாசம் யாருக்கு இருக்கிறதோ, அவர்களே இரட்சகரை அறிந்துகொண்டவர்கள். அவர்களிடத்திலே இரட்சகரின் ஆசீர்வாதங்கள் தங்கும்.

விசுவாசித்தேன், ஆகையினாலே பேசுகிறேன் என்று சங்கீதக்காரன் சொல்லுகிறார் (116. 10). இருதயத்தில் உள்ளது வாயில் வெளிப்படுவது நல்லது. விசுவாசிகள் எல்லா நேரத்திலும் கிறிஸ்துவை அறிக்கையிடுவார்கள். விசுவாசம் கிறிஸ்துவை அறிகிறது, வாய் அவரை அறிக்கையிடுகிறது. கிறிஸ்துவை அறிகிறது நமக்குச் சந்தோஷம், அவரை அறிக்கையிடுகிறது மற்றவர்களுக்கும் சந்தோஷத்தை உண்டாக்கும். கிறிஸ்துவை அறிந்துகொள்ளுவது நமக்கு ஆறுதல், அவரை அறிக்கையிடுகிறதோ அநேகரை ஆறுதல்படுத்தும். ஒருவன் என்னை மனிதர் முன்பாக அறிக்கைபண்ணினால், அவனை நான் என் பிதாவின் முன்பாக அறிக்கைபண்ணுவேன் என்றும், ஒருவன் என்னை மனிதர் முன்பாக மறுதலித்தால், அவனை நான் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன் என்றும் இயேசுநாதர் சொன்னார். யோவான் விசுவாசத்தினால் கிறிஸ்துவை அறிந்தார்; வாயினால் அவரை எல்லாருக்கு முன்னும் அறிக்கையிட்டார். அவருடைய அறிக்கை அவரைத் தாழ்த்தி, கிறிஸ்துவை உயர்த்தினது. அவர் ஒரு சமயத்தில்: அவர் பெருகவும் நானோ சிறுகவும் வேண்டியது என்று தம்முடைய சீஷர்களுக்குச் சொன்னார். ஐயோ, நாம் எத்தனை சமயங்களில் கிறிஸ்துவைத் தாழ்த்தி, நம்மை உயர்த்தினோம். மனித பெருமைக்கு ஆசைப்பட்டு, அஞ்ஞானிகளுக்கு முன் கிறிஸ்துவை மறுதலித்தவர்கள் இல்லையா. இவர்கள் யோவான்ஸ்நானகனைப் பார்த்து, வெட்கமடைவார்களாக.



அந்தப் பெரிய மனிதன் யூதர்களுக்கு முன்பாகக் கிறிஸ்துவை உயர்த்திப் பேசி: அவர் எனக்குப் பின்பு வந்தும், எனக்கு முந்தினவரானவர் என்று சொன்னார். இயேசுநாதர் யோவானுக்குப் பிந்தினவரென்பது மெய். யோவான் பிறந்து ஆறுமாதமானபின் இயேசு பிறந்தார். இயேசுவினுடைய மனுஷ பிறப்பைக் கவனித்தால், யோவான் மூத்தவரும் இயேசு இளையவருமென்று சொல்லவேண்டும். ஆனாலும், யோவான் அவரை முந்தினவரென்று சொல்லுகிறார். ஏனெனில், அவர் யோவானைப்போல் வெறும் மனுஷனுமாத்திரம் இருக்கிறதில்லை, அவர் பராபரனுடைய குமாரன், தேவாதி தேவன். அவர் யோவானுக்கு முந்தி மாத்திரம் அல்ல, உலகம் உண்டாகிறதற்கு முந்தியே இருக்கிறார். அவருக்குத் துவக்கமும் இல்லை, முடிவும் இல்லை. பிந்தினவராகிய அவர் முந்தினவராயிருக்கிறார் என்கிறது நம்முடைய புத்திக்கு மேற்பட்ட சங்கதியாயிருந்தும், அதை நாம் விசுவாசிக்கவேண்டும். நாம் விசுவாசிக்கிறதை யோவானைப்போல மற்றவர்களுக்கு முன் உண்மையாய்ச் சொல்லவேண்டும். நாம் விசுவாசிக்கிறதை இப்பொழுது முழுவதும் அறிந்துகொள்ளாவிட்டாலும், பின்னாலே அறிந்துகொள்ளுவோம்.

நாம் விசுவாசிக்கிற சத்திய வேதத்தின்படியே, கிறிஸ்து எல்லாவற்றிற்கும் மேலான பராபரன். அவர் யாவிலும் உயர்ந்தவர். அவரை நாம் எல்லாக் காலத்திலும் உயர்த்தவேண்டும், எல்லா இடத்திலும் உயர்த்தவேண்டும். அவரை எல்லாவிதத்திலும் உயர்த்துவது நம்முடைய கடமை. அவர் சகல மகிமைக்கும் கனத்துக்கும் பாத்திரராயிருக்கிறார். மெய் விசுவாசிகள் வேறே எந்தப் பொருளையும் அவருக்கு மேலாக மதிக்கமாட்டார்கள். அவர்கள்:

என் இயேசு என் கதி, என் ஜீவன் அவரே,
என் இயேசு என் களிப்பு, என் மோட்சம் அவரே,
என் இயேசு என் கனம், நீ சாரமற்றது,
என் இயேசு என் இரட்சிப்பு, சீர் கெட்ட லோகமே

என்று பாடுகிறார்கள்.

தங்களைத் தாழ்த்தி அவரை உயர்த்துகிற மெய்விசுவாசிகள் அவருக்குப் பிரியமானவர்கள். அவர்களுக்கு அவர் தம்மை அறியக்கொடுப்பார். அவர்களுக்கே கர்த்தர் பிறந்த பண்டிகை ஆசீர்வாதமுள்ள பண்டிகையாகும்.

எங்கள் அன்புள்ள இரட்சகரே, நீர் எங்கள் நடுவே வந்து, எங்கள் இருதயத்தில் தாழ்மையையும் மெய் விசுவாசத்தையும் தந்து, உம்மைச் சரியாய் அறிந்துகொள்ளப் பண்ணும், சுவாமி. ஆமென்.

# கர்த்தர் பிறந்த பரிசுத்த இராத்திரி.

எசா. 9, 6.

பிரியமானவர்களே,

நாம் கூடிவந்திருக்கிற இந்த இராத்திரி உலகம் முழுவதுக்கும் முக்கியமான இராத்திரி. இதில் நமது பெரிய பண்டிகை ஆரம்பிக்கிறது. இதில் கிறிஸ்தவர்களுடைய கோயில்களெல்லாம் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. அவைகளில் ஆராதனைகள் முழங்குகிறது. பிள்ளைகளும் பெரியவர்களும் மிகுந்த சந்தோஷம் கொண்டாடுகிறார்கள். இதற்கு என்ன காரணம். உலகமானது இம்மட்டும் காணாத ஒரு பெரும் பொருளை இந்த இராத்திரியில் கண்டது. பாவிகளாகிய மனுஷர்களுக்கு முன் கிடைக்காத ஒரு பெரிய ஆஸ்தி இந்த இரவில் கிடைத்தது. அதென்னவென்றால், நமக்கொரு பாலகன் பிறந்தார், நமக்கொரு குமாரன் கொடுக்கப்பட்டார். இவரை எசாயா தீர்க்கதரிசி தன் விசுவாசக் கண்களால் கண்டு சந்தோஷப்பட்டார். அந்தத் தீர்க்கதரிசன வாக்கியத்தைக் கேட்டுத் தியானித்துப் படிப்பதினால், நாமும் சந்தோஷப்படலாம். அதனால் நாம் கொண்டாடுகிற இந்தப் பண்டிகை நமக்கு ஆசீர்வாதம் ஆகும். இந்த வாக்கியத்தைக் கொண்டு நாம் இப்பொழுது தியானிக்கப்போகிற சங்கதி என்னவென்றால்,

**கர்த்தர் பிறந்த இராத்திரி நமக்குச் சந்தோஷமாயிருப்பது ஏன்.**

1. அதில் நமக்குக் கிடைத்த மகாப்பெரிய வெகுமதியினாலும்,
2. அந்த வெகுமதியோடு நமக்கு வரும் சொல்லி முடியாத நன்மைகளினாலும் தானே.

## 1.

இதில் நமக்குக் கிடைத்த மகாப்பெரிய வெகுமதியைக் குறித்துச் சிந்திப்போம்.

இந்தப் பண்டிகை யிரவிலே ஒருவருக்கொருவர் வெகுமதி கொடுத்துக்கொள்வது கிறிஸ்தவ தேசங்களில் வழக்கம். தாய் தகப்பன்மார் பிள்ளைகளுக்கும், பிள்ளைகள் தாய் தகப்பன்மாருக்கும், சகோதரர் சகோதரர்களுக்கும், சிநேகிதர் சிநேகிதருக்கும் வெகுமதி கொடுத்துக்கொள்வார்கள். இந்த நல்ல வழக்கம் நம்முடைய தேசத்திலும் கொஞ்சம் கொஞ்சமாய்ப் புகுந்து வருகிறது. நம்முடைய பிள்ளைகளுக்கும் சபையிலுள்ள ஏழைகளுக்கும் புது வஸ்திரம் முதலியவைகளைக் கொடுத்துச் சந்தோஷப்படுத்துகிறோம். இப்படி நாம் செய்வது என்னத்திற்கு. மோட்சத்திலிருந்து பிதாவாகிய பராபரன் நமக்கு அனுப்பின



பெரிய வெகுமதியை நினைப்பூட்டுவதற்காகத் தான். இதைக் குறித்தே தீர்க்கதரிசி: நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார் என்று சொன்னார்.

இது மெய்யே. பெத்லெகேம் ஊரில் கன்னிமரியாளிடத்தில் ஒரு பாலகன் பிறந்திருக்கிறார். — அவர் பராபரனுடைய குமாரன். அவர் பிதாவைப்போல் ஆதியந்தம் இல்லாதவர், சர்வத்துக்கும் வல்லவர், எல்லாவற்றையும் அறிந்தவர், எங்கும் நிறைந்தவர், தேவாதி தேவன், கர்த்தாதி கர்த்தர். என்றாலும், அவர் நம்முடைய மாம்சத்தையும் நம்முடைய இரத்தத்தையும் எடுத்துக்கொண்டு, ஒரு சிறு மனுஷக் குழந்தையாய்ப் பிறந்தார். இவரே இந்தப் பண்டிகையின் சந்தோஷத்திற்கு ஆதாரம்.

மெய்யான தேவனும் மெய்யான மனிதனுமாகிய இந்தப் பாலகன் நமக்காகப் பிறந்தவர், பிதாவினால் நமக்குக் கொடுக்கப்பட்டவர். யூதரும் புறச்சாதியாருமாகிய எல்லாப் பாவிகளும் இரட்சிப்படைவதற்காக இவர் பிறந்தவர். ஆகையால், இவர் பிறந்த செய்தியை மேய்ப்பர்களுக்குத் தெரிவித்த தேவதூதன்: இதோ, எல்லா ஜனத்துக்கும் வரப்போகிற பெரிய சந்தோஷத்தை உங்களுக்குச் சுவிசேஷமாக அறிவிக்கிறேன். அதாவது, உங்களுக்கு இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்கிற இரட்சகர் தாவீதின் ஊரிலே பிறந்தார் என்று சொன்னான். ஆகையால் தமிழ்நாட்டுக் கிறிஸ்தவர்களாகிய நமக்காகவும் அவர் பிறந்தார். நம்மை எல்லாப் பாவத்தினின்றும் பிசாசின் வல்லமையினின்றும் இரட்சிக்கப் பிறந்தார். நம்மில் ஒவ்வொருவனும் அவரைத் தன்னுடைய இரட்சகராக அறிந்து ஏற்றுக்கொள்ளுவது அவசியம்.

இயேசு பாலகன் நமக்குக் கொடுக்கப்பட்டவர். சுத்த சிநேகத்தினால் பிதா அவரை நமக்குச் சொந்தமாய்க் கொடுத்தார். பராபரன் தம்முடைய ஒரே பேறான குமாரனை, அவர் பேரில் விசுவாசிக்கிறவன் எவனும் கெட்டுப்போகாமல், நித்திய ஜீவனை அடைவதற்காக, தந்த, அத்தன்மையாய் உலகத்தைச் சிநேகித்தார் (யோவான் 3, 16). சுத்த சிநேகத்தினால் நமக்குக் கொடுக்கப்பட்ட இயேசு பிள்ளை எவ்வளவு பெரிய வெகுமதி. அவருக்குச் சமமான பொருள் எங்காவது அகப்படுமா. வானத்திலும் அகப்படாது, பூமியிலும் அகப்படாது. இதின் நிமித்தமே இந்த இரவில் விசுவாசிகள் எல்லாரும் சந்தோஷப்படுகிறார்கள், நாமும் சந்தோஷப்படுகிறோம்.

சொல்லிமுடியாத ஈவாகிய இயேசு பாலகனைப் பிதா நமக்குச் சொந்தமாகக் கொடுத்தாரே, அவரை நாம் உண்மையாய் விசுவாசித்துச் சொந்தமாக்கிக்கொண்டோமா. நமக்குச்

சொந்தமான ஒரு நல்ல பொருளைப் பெட்டியில் வைத்துப் பத்திரப்படுத்திக் கொள்வோமல்லவா. இயேசு இரட்சகரை நம்முடைய இருதயப் பெட்டியில் வைக்கவேண்டாமா. ஐயோ, எத்தனை கிறிஸ்தவர்கள் கிறிஸ்து பிறந்த பண்டிகையைப் பார்வைக்குக் கொண்டாடினாலும், உண்மையிலே கிறிஸ்துவுக்குத் தூரமாய் இருக்கிறார்கள். அவர்களிடத்தில் கிறிஸ்து வாசமாயிருக்கிறதில்லை என்று பார்க்கிறோம். அவர்களிடத்தில் மெய்விசுவாசம் இல்லாதபடியால், அவர்கள் வார்த்தையும் அவர்கள் நடக்கையும் கிறிஸ்துவுக்கு விரோதமாய் இருக்கிறது.

இதோ, இந்தக் கோயிலில் விளக்கு எரிகிறது வெளியே இருக்கிற எல்லாருக்கும் தெரியும் அல்லவா. அப்படியே நமக்குள்ளே மெய் வெளிச்சமாகிய கிறிஸ்து பிறந்திருந்தால், அது நம்மைச் சுற்றிலும் இருக்கிறவர்களுக்குத் தெரியவரும். கிறிஸ்து மார்க்கத்துக்கு ஒத்த நடக்கையை நம்மிடத்தில் பார்க்கிறவர்கள் கிறிஸ்துவை அறிந்து மகிமைப்படுத்துவார்கள்.

நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார் என்று நாம் வாய்ப் பாடமாய் அல்லது மனப்பாடமாய்ச் சொல்லுவதில் காரியமில்லை. விசுவாசத்தினால் கிறிஸ்துவை நமக்குச் சொந்தமாக்கி, இந்த வாக்கியத்தை விசுவாசத்தோடு அறிக்கையிடவேண்டும். நமக்காகப் பிறந்த இயேசுபாலகன் நமக்குள்ளே பிரவேசிக்கவேண்டும். இருளடைந்த நம்முடைய இருதயம் அவரால் வெளிச்சமடைந்து புதிதாகவேண்டும். அவருக்குப் பயப்படுகிற பயம், அவரைச் சிநேகிக்கிற சிநேகம், அவர் பேரில் வைக்கிற திடநம்பிக்கை நம்மை ஆளவேண்டும்.

இந்த உலகத்திலே நமக்கு உள்ளதும் உரியதுமான எல்லாவற்றையும் நாம் இழந்துபோனாலும் பாதகமில்லை. நமக்குப் பிதாவினால் சொந்தமாய்க் கொடுக்கப்பட்ட இயேசு என்ற இந்த ஆஸ்தியை மாத்திரம் நாம் இழக்காதிருப்போமாக. இவர் இருக்கும் வீட்டிலும் இருதயத்திலும் எல்லா நன்மைகளும் ஆசீர்வாதங்களும் இருக்கும். அதேதென்றால், பராபரன் தம்முடைய சொந்தக் குமாரனையும் பாராமல் அவரை நம்மெல்லாருக்காகவும் ஒப்புக்கொடுத்தாரே; அவர் இவரோடேகூட யாவையும் நமக்கு அருளாதிருப்பது எப்படி என்று அப்போஸ்தலன் சொல்லுகிறார் (ரோ. 8, 32). இயேசுநாதர் இல்லாத வீட்டிலும் இருதயத்திலும் ஒரு நன்மையும் இராது, ஒரு ஆசீர்வாதமும் தங்காது.

2.

இயேசுநாதரைத் தங்கள் இருதயத்தில் விசுவாசித்துத் தாங்கிக்கொள்ளுகிறவர்களுக்குச் சொல்லிமுடியாத நன்மைக



ளும் ஆசீர்வாதங்களும் உண்டென்பது அவருக்கு ஏசாயா தீர்க்கதரிசி இடும் பேர்களினால் தெரியவரும்.

நமக்காகப் பிறந்த பாலகனின் பெயர் அதிசயமானவர் என்பது. பராபரனுடைய குமாரன் கன்னிமரியாளின் குழந்தையானதும், வானமும் பூமியும் கொள்ளாத தேவன் ஒரு ஏழைத் தாயின் கைப்பாலகனானதும் அதிசயந்தான். இந்தப் பாலகனின் உற்பத்தி, பிறப்பு, வளர்ப்பு யாவும் அதிசயமானதே. முக்கியமாய் அவர் பாவிகளாகிய நமக்காகச் செய்து நிறைவேற்றின இரட்சிப்பின் வேலை சொல்லிமுடியாத அதிசயம். அவர் முப்பத்து மூன்று வருஷம் இந்தப் பூமியில் எளிய மனுஷனாய் நடமாடின காலத்தில் அவர் பேசின பேச்செல்லாம் அதிசயம். இவரைப்போல் ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை என்று அவைகளைக் கேட்டவர்கள் சாட்சிகொடுத்தார்கள். அவர் செய்த செய்கைகளும் அதிசயமாய் இருந்தன. குருடருக்குப் பார்வைக் கொடுத்ததும், செவிடரைக் கேட்கப்பண்ணினதும், ஊமையைப் பேசப்பண்ணினதும், சப்பாணிகளை நடக்கப்பண்ணினதும், செத்தவர்களுக்கு உயிர் கொடுத்ததும் அதிசயமல்லவா. காற்றும் கடலும் கூட அவருக்குப் பயந்தது. தண்ணீரிலுள்ள மீனும், தரையில் நிற்கும் மரமும் அவர் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தது. இவைகளில் எல்லாம் பெரிய அதிசயம் அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்து, சிலுவை மரத்தில் தொங்கி, தமது இரத்தத்தைச் சிந்தி, உயிரை விட்டதே. சீவனின் அதிபதி என்ற கர்த்தர் சீவனைவிட்டது பெரிய அதிசயமல்லவா. மரித்துப்போன அவர் மறுபடியும் உயிர்த்தெழுந்தது மகாப் பெரிய அதிசயமே. இதினால் அவர் அதிசயமானவர் என்பது தெளிவு. இரட்சிப்பை அவர் சம்பாதித்ததுபோலவே, அதை அவர் பாவிகளாகிய நமக்குக் கொடுத்து நம்மை இரட்சித்ததும் அதிசயமே. அதிசயமாய் நம்மை இரட்சித்தவர் இன்னம் நம்மை அதிசயமாய்க் காத்துவரவும், அதிசயமாய்ப் பரலோகம் சேர்க்கவும் சித்தமாயிருக்கிறார்.

அவருடைய மற்றொரு பெயர் ஆலோசனைக்காரர் என்பது. பாவிகளாகிய நம்முடைய இரட்சிப்பைக்குறித்துப் பிதாவோடும் பரிசுத்த ஆவியோடும் கூடி ஆலோசனை பண்ணித் தீர்மானித்தவர் இவர். குமாரனாகிய இவர் தம்முடைய ஞானமுள்ள ஆலோசனையின்படி சகலத்தையும் தாங்கி நடத்திவருகிறார். பாவிகளுக்கு இரட்சிப்பின் காரியத்தில் ஆலோசனை கொடுப்பதில் இவருக்கு மிஞ்சினவர்கள் இல்லை.

நான் எங்கே ஓடுவேன்,
மாபாதகனானேன்;
மீட்பெங்கும் என்னைமூடும்.

ஆர் ஆதரிக்கக் கூடும்.
எல்லா உலகத்தார்கள்
என் இதிலே நீக்கார்கள்

என்று அழுது புலம்புகிற பாவிக்கு ஆறுதல் சொல்லி, அவனுக்குவேண்டிய ஆலோசனை கொடுப்பவர் பாவிகளின் நேசராகிய இயேசுநாதர்தான். பிரயாசப்பட்டு பாரஞ்சுமந்தவர்களாகிய நீங்கள் எல்லாரும் என்னண்டைக்கு வாருங்கள், நான் உங்களை இளைப்பாறுவேன் என்று அவர் சொல்லுகிறார் (மத். 11, 28). இயேசுபாலகனைத் தன்னுடைய இருதயத்தில் உடையவன் எவனோ, அவனுக்கு வாழ்விலும் தாழ்விலும் நல்ல ஆலோசனைக்குக் குறைவில்லை.

வல்லமையுள்ள பராபரன் என்றும் அவருக்குப் பெயர். இயேசுநாதர் பராபரனுடைய குமாரன். அவர் சர்வத்துக்கும் வல்லவர். அவர் சொல்ல ஆகும்; அவர் கட்டளையிட நிற்கும். அவர் வல்லமையுள்ள பராபரனாயிருந்ததினால் அல்லவா தண்ணீரும் தரையும்; காற்றும் கடலும், வியாதியும் மரணமும், மனிதரும் பிசாசுகளும் அவர் சொல்லுக்கு அடங்கவேண்டியதாயிற்று. அவர் மனுஷகுழந்தையாய்ப் பிறந்ததினால் மனுஷராகிய நமக்குச் சொந்தக்காரர் ஆனார்; அவர் வல்லமையுள்ள பராபரனாயிருப்பதினால் அல்லவோ நம்மைப் பராபரனுக்குச் சொந்தக்காரராக்குகிறார். இயேசு பாலகனை விசுவாசத்தால் பற்றிக்கொண்டவன் எவனோ, அவனை எந்தச் சத்துருவும் மேற்கொள்ள முடியாது. ஏனெனில் அவன் விசுவாசிக்கிற இயேசுநாதர் வல்லமையுள்ள பராபரன்.

எசாயா தீர்க்கதரிசி நமக்காகப் பிறந்த பாலகனுக்கு நித்திய பிதா வென்றும் பெயரிடுகிறார். இயேசுநாதர் துவக்கமும் முடிவும் இல்லாதவர். உலகம் உண்டாகாததற்கு முன் அவர் எப்படி இருந்தாரோ, அப்படியே உலகம் அழிந்த பின்னும் இருப்பார். நம்மைப் பெற்று வளர்த்த பிதாக்கள் இறந்துபோகிறவர்கள். நித்திய பிதாவாகிய இவரோ ஒருபோதும் செத்துப்போகிறவர் அல்ல. இதுவரைக்கும் அவர் நம்மோடு இருந்தார். அதுபோலவே இனியும் நம்மோடு இருந்து, நம்மை ஆசீர்வதிப்பார். இது நமக்கு எவ்வளவு ஆறுதலான சங்கதி.

இந்தப் பாலகன் சமாதானப் பிரபு என்றும் பெயர் பெற்றவர். பாவத்தினாலே நம்முடைய இருதயம் கலங்குகிறது, மனம் சஞ்சலப்படுகிறது. இயேசுநாதரோ நம்முடைய பாவங்களை மன்னிக்கிறார். அதினால் அவர் நம்முடைய மனக் கலக்கத்தையும் குழப்பத்தையும் நீக்கி, சமாதானத்தைக் கொடுக்கிறார். அவர் இதைக்குறித்துத் தம்முடைய சீஷருக்குச் சொன்னது: சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன், என்னுடைய சமாதானத்தை உங்களுக்குத் தருகிறேன்; உலகம் தருகிறதுபோல நான் உங்களுக்குத் தரேன். உங்கள் இருதயம் கலங்கவும் வேண்டாம், பயமாயிருக்கவும் வேண்டாம் என்றார் (யோவான்



14, 27). இதுவோ எல்லாப் புத்திக்கும் மேலான தெய்வ சமாதானம். இதைப் பெற்றுக்கொண்டவன் எவ்வளவு துன்பம் வந்தாலும் மரணம் அடைய வேண்டியதாயிருந்தாலும், கொஞ்சமும் கலங்காமல் அமர்ந்திருக்கிறான். இப்படிப்பட்ட அமைதியை உலகம் கொடாது. இதைக் கொடுக்கிறவர் கிறிஸ்து ஒருவரே. அவரே அதைச் சம்பாதித்தவர்; ஆகையால் அவருக்குச் சமாதானப் பிரபு என்று பெயர்.

இப்படியே இயேசுபாலகனால் நமக்கு வருகிற மேலான நன்மைகள் சொல்லிமுடியாதவைகள். இதை அறிந்திருக்கிற நாம் எல்லாக் காலத்திலும் அவர் பேரில் விசுவாசம் உள்ளவர்களாய்ப் பிழைத்திருப்பது நியாயமல்லவா.

பிரியமானவர்களே, இயேசுபாலகனை விசுவாசிக்கிறவர்களுக்கு இந்த நாளில் மாத்திரம் அல்ல, அவர்கள் ஆயுசுகாலமெல்லாம் பண்டிகையும் கொண்டாட்டமுமாய் இருக்கும்.

எங்களுக்காகப் பிறந்த பாலகனே, எங்களுக்குக் கொடுக்கப்பட்ட குமாரனே, நீர் உம்மோடு எங்களுக்கு கொண்டுவந்த சகல ஆசீர்வாதங்களையும் நாங்கள் அடைந்து அநுபவிக்கும்படி எங்களுக்கு விசுவாசத்தைக் கொடுத்தருளும், சுவாமி. ஆமென்.

---

## கர்த்தர் பிறந்த பண்டிகை முதலாம் நாள்.

லூக்: 2, 1—14.

பிரியமானவர்களே,

இப்பொழுது நாம் வாசிக்கக் கேட்ட வாக்கியம் மகா சந்தோஷமான செய்தியைத் தெரிவிக்கிறது. பாவிகளாகிய நமக்கு இரட்சகர் பிறந்தார். அவர் பரலோகத்தை விட்டுப் பூலோகத்துக்கு வந்ததினால் பரதீசின் கதவு திறந்தது. அவரோடு தேவதூதர்கள் இறங்குகிறார்கள். அவர்கள் பாட்டு ஆகாயமெங்கும் முழங்குகிறது. அந்தப் பாட்டின் முழக்கத்தால் நம்முடைய இருதயம் பூரிக்கிறது. மெய்விசுவாசிகளெல்லாரும் இன்றைக்குத் தேவதூதர்களோடு கூடிக்கொண்டு: உன்னதங்களிலிருக்கிற பராபரனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனிதர்பேரிலே பிரியமும் உண்டாவதாக என்று பாடுகிறார்கள். வானமும் பூமியும் தூதரும் மனுஷரும் ஒன்றுகூடி மகிழும்படி செய்கிற பெரிய சங்கதி இயேசுகிறிஸ்துவின் பிறப்புதான். இதுவே நாம் இன்று தியானிக்க வேண்டிய சங்கதி. இப்பொழுது நாம்:

இயேசு கிறிஸ்துவின் பிறப்பு எப்படிப்பட்டது

என்று கேட்போமாக.

1. அது தாழ்மையானதாயிருந்தும், ஆச்சரியமானது.
2. அது ஆச்சரியமானதாயிருந்தும், ஆறுதலானது.

1.

*இயேசுவின் பிறப்பு தாழ்மையானதாயிருந்தும், ஆச்சரியமானது.*

இயேசுநாதர் பிறந்த ஊர் பெத்லகேம். அது யூதாவின் ஆயிரங்களுக்குள் சிறியதென்று மீகா தீர்க்கதரிசி சொல்லுகிறார் (மீகா 5, 1). அந்த ஊரிலே கைம்பெண்சாதியாகிய நகோமி தன் மருமகள் ரூத்தோடு குடியிருந்தாள். ஆடுமேய்த்த தாவீதுக்கும் அவருடைய முற்பிதாக்களுக்கும் அது சொந்த ஊர். அதைக்குறித்துப் பழைய ஏற்பாட்டில் பெரிய சங்கதி ஒன்றும் சொல்லியிருக்கிறதில்லை. வானலோகத்தை விட்டவர் பூலோகத்தில் இந்த சிற்றூரைத் தமக்குப் பிறந்தகமாகத் தெரிந்து கொண்டது தாழ்மையே. ஆகிலும், இதிலே ஒரு பெரிய ஆச்சரியமும் இருக்கிறது. கிறிஸ்து பெத்லகேம் ஊரில் பிறப்பாரென்று மீகா சொன்ன தீர்க்கதரிசனம் இயேசுவினால் நிறைவேறிற்று. இது நிறைவேறுவதற்கு ரோம இராச்சியத்தின் பெரிய இராயன் வேலை செய்கிறான். அவனுடைய மந்திரிமார்களும் உத்தியோகஸ்தர்களும் வேலைசெய்கிறார்கள். இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறுவதற்கே குடிமதிப்பு எழுத உத்தாரம் பிறந்தது. இந்த உத்தரவு பிறந்திராவிட்டால், யோசேப்பும் மரியாளும் பெத்லகேமுக்கு வந்திருக்கமாட்டார்கள். இயேசுநாதர் நாசரேத்தூரிலே பிறக்கவேண்டியதாயிருக்கும். யோசேப்பு தாவீதின் வீட்டானும் வமிசத்தானுமானபடியினாலே, தனக்கு நியமிக்கப்பட்ட கெர்ப்பவதியாகிய பெண்சாதி மரியாளுடனே கூடக் குடிமதிப்பு எழுதுவிக்க, பெத்லகேம் என்னப்பட்ட தாவீதின் ஊருக்குப்போய் ஏறினார் என்று எழுதியிருக்கிறது (லூக்கா 2, 4. 5). பெத்லகேம் ஊரிலே அவர் ஒரு சத்திரம் சாவடியிலாவது ஒரு பெரிய வீட்டிலாவது பிறக்கவில்லை. யோசேப்பும் மரியாளும் ஏழைகளாயிருந்ததினால், தகுந்த வாடகை கொடுத்து வீடு பிடிக்கவில்லை. அச்சமயத்தில் அகப்பட்ட மாட்டுக்கொட்டிலே இயேசுநாதர் பிறப்பதற்கு இடமாயிற்று. ஆ, இது எவ்வளவான தாழ்மை அவரைப் பெற்ற தாயும், இவளுக்கு நியமிக்கப்பட்டிருந்த புருஷனும் தரித்திரராயிருந்ததால், இயேசு பாலகனுக்குச் சுகமான ஒரு படுக்கையைக் கொடுக்கக் கூடாமற்போயிற்று. ஒரு ராஜன் வீட்டில் அவர் பிறந்திருப்பாராகில், ஒரு தங்கக் கட்டிலும் பட்டு மெத்தையும் உயர்ந்த வஸ்திரங்களும் அவருக்குக் கிடைத்திருக்கும். அப்படிக்கு இல்லாமையால், மரியாள் அந்தப் பிள்ளையைச் சாதாரணப் புடவைகளில் சுற்றி, மாட்டுக்குப் புல்போடும் முன்னணையிலே படுக்க வைத்தாள்:



மேலும், பரிசுத்த திரித்துவத்தின் இரண்டாம் ஆளாகிய தேவாதி தேவன் ஒரு ஏழைத் தாயினிடத்தில் பலவீனமான ஏழைப் பிள்ளையாய்ப் பிறந்தது தாழ்மையே. அவர் நம்மைப் போல் மாமிசமும் இரத்தமும் உள்ளவரானார். பாவந்தவிர எல்லாவற்றிலும் நம்மைப் போலும் நம்முடைய குழந்தைகளைப்போலும் ஆனார். அவர் தாய்மடியில் படுத்து, தாய்ப்பாலுக்கு அழும் பாலகன் ஆனார். இது சொல்லிமுடியாத தாழ்மையாயிருந்தாலும், இதிலே பெரிய ஆச்சரியமும் இருக்கிறது. அளவில் அடங்காத தேவன் அளவுக்குள்ளான சிறு குழந்தையானதும், புருஷனை அறியாத ஒரு கன்னியாஸ்திரி பிள்ளையைப் பெற்ற தாயானதும் பெரிய ஆச்சரியமல்லவா.

இயேசுநாதர் மகா தாழ்மையில் பிறந்தும், அவருடைய பிறப்பு அதிசயமும் ஆச்சரியமுமானதாயிருந்ததால், அதைக் குறித்து முதல் பிரசங்கம் செய்யப் பராபரன் ஒரு மனிதனையல்ல, ஒரு தெய்வதூதனை நியமித்து அனுப்பினார். அந்தத் தூதன் மேய்ப்பரிடத்திலே வந்தபொழுது கர்த்தருடைய மகிமை அவர்களைச் சுற்றிப் பிரகாசித்தது. அப்போது மகா பயமாய்ப் பயந்தார்கள்.

இயேசுநாதர் மகா தாழ்மையில் பிறந்தும், அவருடைய பிறப்பு மகா ஆச்சரியமானதென்பது இன்னொரு விஷயத்தினாலும் விளங்கும். அவர் பிறந்த இரவிலே அவருடைய பிறப்பைக் குறித்து எந்த மனுஷனும் பாடக்கூடாதே போயிற்று. அவருடைய ஆச்சரியமான பிறப்புக்கு ஆச்சரியமான பாடகர்களைக் கர்த்தர் நியமித்தார். பரம சேனையின் திரள் பராபரனைத் துதித்துப் பாடினார்கள்.

இப்படியே நம்முடைய அருமை இரட்சகரின் பிறப்பு தாழ்மையானதாயிருந்தும், ஆச்சரியமானதென்று நமக்குத் தெரியவருகிறது. அவருடைய தாழ்மையைப் பார்க்கிற நாம் நம்முடைய பாவங்களை உணர்ந்து, எவ்வளவாய் நம்மைத் தாழ்த்தவேண்டும். தம்முடைய ஆச்சரியமான பிறப்பினால் நம்மை மீட்டுக்கொண்ட அவரை நாம் எவ்வளவாய் மகிமைப்படுத்தவேண்டும்.

2.

கிறிஸ்துவின் ஆச்சரியமான பிறப்பு மகா ஆறுதலுள்ளதென்பதை இப்பொழுது பார்ப்போம்.

அதைத் தேவதூதன் மேய்ப்பருக்குச் செய்த பிரசங்கத்தினால் முந்த அறிந்து கொள்ளலாம். அவன் மேய்ப்பரைப்பார்த்து: பயப்படாதிருங்கள் என்கிறான். மனிதர்கள் பாவிகளாயிருப்பதினாலே பராபரனைப் பார்க்கப் பயப்படுகிறதுமல்லாமல், அவருடைய ஊழியக்காரர்களாகிய பரிசுத்த தூதர்களையும் பார்க்

கப் பயப்படுகிறார்கள். பாவத்தை நீக்கி இரட்சிக்கப்போகிறவர் பிறந்ததினால், பாவிக்குரிய பயம் நீங்கும் வேளைவந்தது. அவன்: இதோ, எல்லாச் சனத்துக்கும் வரப்போகிற பெரிய சந்தோஷத்தை உங்களுக்குச் சுவிசேஷமாக அறிவிக்கிறேன் என்றான். இயேசுநாதர் பிறந்த செய்தி சந்தோஷமான செய்தி. நம்முடைய துக்கத்தை எல்லாம்போக்கி, இம்மையிலும் மறுமையிலும் நம்முடைய ஆத்துமத்துக்குச் சந்தோஷம் கொடுக்கவே அவர் பிறந்தார். பணமகாசினாலும், உண்பனை தின்பனையினாலும் உண்டாகிற சந்தோஷம் சந்தோஷமல்ல. இரட்சகரால் உண்டாகிற சந்தோஷமே மெய்யான சந்தோஷம். அவர் எப்படிப் பெரியவராயிருக்கிறாரோ, அப்படியே அவர் கொடுக்கிற சந்தோஷமும் பெரிது. அது ஒழியாத சந்தோஷம், நிலைவரமான சந்தோஷம். அது எல்லாச் சனத்துக்கும் வருவது. யூதர்களுக்கும் புறச்சாதியாருக்கும், சீமையிலுள்ள வெள்ளை மனிதருக்கும் இங்கேயிருக்கிற கறுப்பு மனிதருக்கும் வருகிற சந்தோஷம். ஆ, தமிழ் நாட்டாராகிய நமக்கும் சந்தோஷம் கொடுக்க இரட்சகர் பிறந்தாரென்பது நமக்கு எத்தனை பெரிய ஆறுதல். இந்தச் செய்தியைத் தேவதூதன் சுவிசேஷம் என்கிறான். சுவிசேஷம் என்பதற்கு நல்ல செய்தி என்று அர்த்தம். இயேசுநாதர் பிறந்த செய்தி மகா நல்ல செய்தியே. இது இன்றைக்கு நமக்கும் சொல்லப்படுகிறது. இதைக் கவனிப்பது நம்முடைய கடமை.

உங்களுக்கு இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்கிற இரட்சகர் தாவீதின் ஊரிலே பிறந்தார் என்கிறான். பிறந்திருக்கிறவர் நம்முடைய இரட்சகர். அவர் நம்மைப் பாவம், சாபம், மரணம், நரகம், பிசாசு என்ற சத்துருக்களுக்குநீங்கலாக்கி இரட்சிக்கிறவர். அவர் பரலோகம் பூலோகம் பாதாளலோகம் என்ற மூன்று லோகத்துக்கும் கர்த்தர். எல்லாம் அவருடைய ஆளுகைக்குட்பட்டது. அவர் முற்பிதாக்கள் யாவரும் தீர்க்கதரிசிகளும் சொல்லி ஆசைப்பட்ட கிறிஸ்து. அவர் கிறிஸ்துதான் என்பதற்கு அவர் தாவீதின் ஊராகிய பெத்லகேமில் பிறந்தது ஒரு சாட்சி. அவர் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கிறிஸ்து என்பதை வருகை மூன்றாம் ஞாயிற்றுக் கிழமைப் பிரசங்கத்தில் கேட்டிருக்கிறோம்.

மேலும், பிள்ளையைப் புடவைகளில் சுற்றி, முன்னணையிலே படுக்கவைத்திருக்க நீங்கள் காண்பதே உங்களுக்கு அடையாளம் என்று தேவதூதன் சொன்னான். இயேசுநாதர் ஒரு பெரிய இராசாவின் அரண்மனையில் உயர்ந்த மெத்தையில் பிறந்து, ஒரு தங்கக்கட்டிலில் படுத்து, பட்டு மெத்தையில் தூங்குகிறார் என்று அறிவிக்கப்பட்டால், அந்த ஏழை மேய்ப்பர்களுக்குச் சந்தோஷமாயிருக்குமா. அவர்கள் அரண்மனைக்குள் நுழையவும், இயேசுபாலகனைப் பார்க்கவும் கூடுமா. கூடாதல்லவா.



ஆகையால், நம்முடைய இரட்சகர் ஏழைக்காக ஏழையாக வந்து பிறந்தார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினால் ஐசுவரியவான்களாகும்படிக்கு உங்கள் நிமித்தமாகத் தரித்திரரானார் என்று எழுதியிருக்கிறது (௨. கொரி. ௮,9). ஏழைகளாகிய நாம் இதினால் ஆறுதல் அடைந்து, அவரை அண்டிக்கொள்ள இடமுண்டு.

தேவதூதன் அறிவித்த செய்தியைப் போலவே தேவதூதரின் சேனை பாடின பாட்டும் கிறிஸ்து பிறப்பின் ஆறுதலை நமக்குக் காண்பிக்கும். அந்தப் பாட்டில் மூன்று அடிகள் உண்டு.

உன்னதங்களிலிருக்கிற பராபரனுக்கு மகிமை என்பது முந்தினது. பராபரனுடைய சொல்லிமுடியாத மகிமையை மனுஷர்களுக்குத் தெரியாமல் இருக்கப்பண்ணினது பாவமே. இந்தப் பாவத்தை விட்டு நம்மை இரட்சிக்கக் கிறிஸ்து பிறந்ததினால், பராபரனுடைய சிநேகத்தின் மகிமை வெளிப்பட்டது. தம்முடைய சத்துருக்களாகிய நம்மை இரட்சிக்க அவர் தம்முடைய குமாரனை அனுப்பினார். இவரால் வியாதிக்கு மருந்து வந்தது, அடிமைகளுக்கு விடுதலை வந்தது; வழிதப்பினவர்களுக்கு வழியாக கிறிஸ்து வெளிப்பட்டார். அவர் பாவிகளுக்குப் பாவமன்னிப்பைக் கொண்டுவந்தார். அவர் ஊழியம் செய்வித்துக்கொள்ள வராமல், ஊழியம் செய்யவந்தார். பராபரன் தேவதூதர்களை நமக்கு ஊழியக்காரராகக் கொடுத்ததே சிநேகம். அப்படியானால், தூதர்களின் அதிபதியை நமக்கு ஊழியம் செய்ய அனுப்பினது எவ்வளவு பெரிய சிநேகம். கிறிஸ்துவின் பிறப்பிலே பராபரனுடைய ஞானத்தின் மகிமை வெளிப்பட்டது. பாவிகளாகிய நாம் இரட்சிப்பைச் சம்பாதிப்பதற்கான வழியைக் கண்டு பிடிக்கவில்லை. நாம் வழிதெரியாத குருடர். பராபரனே அந்த வழியை ஏற்படுத்தி, தம்முடைய குமாரனை மத்தியஸ்தராக அனுப்பினார். பராபரன் உலகத்தை உண்டாக்கினதில் விளங்குகிற ஞானம் பெரிது. கெட்டுப்போன மனிதரை இரட்சிப்பதில் விளங்குகிற ஞானமோ மகாப்பெரிது. மனிதராகிய நாம் தெய்வசாயலை இழந்துபோனதால், தேவனாகிய இயேசு மனிதனாகப் பிறந்து நமக்குத் தேவசாயலைத் திரும்பவும் கொடுக்கச் சித்தமானார்.

தெய்வீக சுபாவம் நம்மிலே
உண்டாகச் சுவாமியார்
நரரின் சுபாவமாய் இங்கே
பிறந்திருக்கிறார்.

மேலும், பராபரனுடைய உண்மையின் மகிமையும் கிறிஸ்துவின் பிறப்பிலே வெளிப்பட்டது. அவர் ஆதிமனிதருக்கும் முற்பிதாக்களுக்கும் மற்ற விசுவாசிகளுக்கும் கொடுத்த வாக்

குத்தத்தத்தைச் சரியாய் நிறைவேற்றினார். அவர் தாவீது ராசாவின் வமிசத்தில், பெத்லகேம் என்ற ஊரில், ஒரு கன்னியாஸ்திரியினிடத்தில் பிறப்பார் என்று சொல்லியிருந்ததைச் சரிவர முழுவதும் நிறைவேற்றினார். நாம் அவருடைய சிநேகத்தையும் ஞானத்தையும் உண்மையையும் கிறிஸ்துவினுடைய பிறப்பிலே கண்டு, அவரை மகிமைப்படுத்துவோமாக.

பூமியிலே சமாதானம் என்பது தேவதூதருடைய பாட்டின் இரண்டாம் அடி. பாவத்தினாலே வானத்துக்கும் பூமிக்கும் விரோதம் உண்டாயிற்று. பராபரன் பரதீசின் வாசற்படியில் சுடர் ஒளியுள்ள பட்டயத்தோடே கேருபீன்களை நிறுத்தினார். பட்டயம் சண்டைக்கு அடையாளம். கிறிஸ்துவோ சண்டையை நீக்கிச் சமாதானத்தை உண்டுபண்ணப் பிறந்தார். வானத்துக்கும் பூமிக்கும் கிறிஸ்து சமாதானப் பிரபுவும் சமாதானக் கர்த்தருமாய்ப் பிறந்ததினாலே,

திரும்பப் பரதீசுக்கு    கேருபீன் காவல் வாங்கிற்று,
வழி திறந்துபோம்;    மகிழ்ந்து பாடுவோம்.

நமக்காகப் பிறந்த இயேசுநாதர் பாவமன்னிப்பைச் சம்பாதித்ததினாலே சமாதானம் இந்தப்பூமிக்கு வந்தது. சாலொமோன் என்ற பெரிய இராசாவின் காலத்தில் இருந்த சமாதானம் அவரோடு ஒழிந்துபோயிற்று. இயேசுநாதர் கொடுக்கும் சமாதானமோ ஒழியாதது. ஆகையால் இவர் சாலொமோனைப் பார்க்கிலும் பெரியவர். இவரே தாவீதின் குமாரன் என்ற பெயருக்குப் பாத்திரர். அவரை விசுவாசிக்கிறவர்கள் சமாதானத்தோடு பிழைப்பார்கள், சமாதானத்தோடு மரிப்பார்கள்.

மனிதர் பேரிலே பிரியம் என்பது தேவதூதர் பாட்டின் மூன்றாம் அடி. பாவத்தினால் மனிதர் எல்லாரும் கெட்டுப்போனார்கள். நல்லவன் ஒருவனாகிலும் இல்லை. நன்மை செய்யாத மனிதர் பேரில் பராபரனுக்குப் பிரியம் இருப்பதெப்படி. அவருக்கு மனிதர் பேரில் கோபம் இருப்பதற்கு மாத்திரம் நியாயம் உண்டு. ஆகிலும், பெத்லகேம் ஊரில் கிறிஸ்து மனிதனாகப் பிறந்த பின் ஒரு மாறுதல் உண்டாயிற்று. பராபரன் பாவம் நிறைந்த மனிதர் கூட்டத்தைக் கண்ணோக்கிப் பார்க்கும்பொழுது ஒரு மனிதபிள்ளை அவருக்குப் பிரியமான பிள்ளையாய் விளங்குகிறது. அது இயேசு பிள்ளைதான். இவரைக்குறித்தே: இவர் நாம் பிரியமாயிருக்கிற நம்முடைய நேச குமாரன் என்று பிதா சொல்லுகிறார். பிரியமான இந்தப் பிள்ளை மனிதர் நடுவே இருப்பதால் பராபரனுக்கு மனிதர் பேரிலே பிரியம் உண்டாயிற்று.

பிரியமானவர்களே, இவ்வுலகத்தில் அநேக ஆச்சரியமான சங்கதிகள் மனிதருக்கு ஆறுதலாயிராமல், பயங்கரமாயிருக்கும். கிறிஸ்துவின் பிறப்போ, பரலோகமும் பூலோகமும் ஆச்சரியப்படுகிற பெரிய அதிசயமாயிருந்தாலும், அது நமக்கு எவ்வளவு ஆறுதலாயிருக்கிறது என்று நாம் பார்க்கிறோம். அவர் கொண்டு வந்த ஆறுதல் அவர் பெத்லகேமில் பிறந்த அன்றோடு ஒழிந்துபோனதல்ல. இன்றைக்கும் அது உள்ளது. இன்றைக்கும் நம்முடைய இருதயத்தில் வந்து, நம்மை ஆறுதலினாலும் சந்தோஷத்தினாலும் நிரப்பச் சித்தமாயிருக்கிறார். அவரை நாம் விசுவாசத்தினால் பற்றிக்கொள்வோமாக.



எங்களுக்காகப் பிறந்த இயேசு பாலகனே, உம்முடைய பிறப்புக்காக உம்மைத் துதிக்கிறோம். நீர் எங்கள் இருதயத்திலும் வந்து, அதை உம்முடைய மகிமையினால் நிரப்பும், சுவாமி. ஆமேன்.

## கர்த்தர் பிறந்த பண்டிகை உ-ம் நாள்.

லூக்கா 2, 15—20.

பிரியமானவர்களே,

கர்த்தர் பிறந்த சந்தோஷ செய்தியைக் கேட்ட நாம் அவருடைய பிறப்பினாலுண்டாகு ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளவும் வேண்டுமென்பது பராபரனுடைய பிரிய சித்தம். இயேசுநாதர் பிறந்த செய்தி தேவதூதன் சொன்னதுபோல் எல்லாச் சனத்துக்கும் வரப்போகிற பெரிய சந்தோஷ செய்தியாயிருந்தும், அவர் பிறந்த காலத்தில் இருந்த எல்லாரும் அதன் பலனைப் பெற இல்லை. கன்னிமரியாள், யோசேப்பு, மேய்ப்பர்கள், சிமெயோன், அன்னாள் முதலிய சிலர் மாத்திரம் அதனால் பிரயோசனப்பட்டார்கள். நாமும் அந்த விசுவாசிகளைப் பின்பற்றினால், இந்தப் பண்டிகையின் பிரயோசனத்தைப் பெற்று அனுபவிப்போம். நம்முடைய சுவிசேஷ வாக்கியத்திலே முக்கியமாய் மேய்ப்பரையும் மரியாளையும் குறித்துப் பேசியிருக்கிறது. இந்த மேய்ப்பர்களே கர்த்தர் பிறந்த பண்டிகையைக் கொண்டாடின முதற் சபையார். அவர்கள் முன்மாதிரியை நாம் பின்பற்றுவோமாக. ஆகையால் நாம் இப்பொழுது

**கர்த்தர் பிறந்த பண்டிகையைக் கொண்டாடின முதற் சபையாராகிய மேய்ப்பர்களைக் கவனிப்போமாக.**

1. **அவர்கள் கர்த்தரைத் தேடிவந்தார்கள்.**
2. **வந்து கண்டார்கள்.**
3. **கண்டு மகிழ்ந்தார்கள்.**

1.

மேய்ப்பர்கள் இயேசுநாதரைத் தேடிவந்தார்கள். கிறிஸ்து பிறந்த செய்தியை அறிவித்த தேவதூதனும், அவனோடு கூடிக்கொண்டு பாட்டுப்பாடின மற்றத் தூதர்களும் வானத்துக்

குப் போன பிற்பாடு, மேய்ப்பரான மனுஷர்: அது என்னமோ ஏதோ என்று அசமந்தமாயாவது சோம்பலாயாவது இருக்கவில்லை. அவர்கள்: நாம் பெத்லகேம் மட்டும் போய்க் கர்த்தர் நமக்கு அறிவித்ததான நடந்த இந்தக் காரியத்தைப் பார்ப்போம், வாருங்களென்று சொல்லிக்கொண்டார்கள். தேவதூதன் தங்களுக்குச் சொன்ன வார்த்தைகளைக் குறித்து அவர்கள் கொஞ்சமாவது சந்தேகப்படவில்லை. இந்தக் காரியம் நடந்ததோ இல்லையோ என்பதைப் பார்ப்போம் என்று அவர்கள் சொல்லவில்லை. நடந்த இந்தக் காரியத்தைப் பார்ப்போம் என்று சொன்னார்கள். இதனால் தாங்கள் கேட்ட செய்தி நிச்சயமாய் நடந்த சங்கதி என்று நம்பினார்கள். இதுவே பிள்ளைப் பத்தியான விசுவாசம். நாமும் நமக்குப் பிரசங்கிக்கப்படுகிற தேவ வசனத்தைக் கவனமாகக் கேட்டு, சந்தேகம் இல்லாத திடநம்பிக்கையோடு ஏற்றுக்கொள்ளவேண்டும். இப்படிப்பட்ட திடநம்பிக்கை அப்போஸ்தலமாருக்கு இருந்ததினால், அவர்கள்: ஆதிமுதலாயிருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப் பார்த்ததும், எங்கள் கைகள் தொட்டதுமான ஜீவனுடைய வார்த்தையின் செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறோம் என்றார்கள் (1 யோவா. 1, 1).

மேலும், அந்த மேய்ப்பர் தேவதூதன் தங்களுக்குச் சொன்ன செய்தியை அந்தத் தூதனின் நிமித்தம் அல்ல, அவனை அனுப்பின கர்த்தர் நிமித்தமே விசுவாசித்தார்கள். ஆகையால், அவர்கள்: கர்த்தர் நமக்கு அறிவித்ததான காரியமென்று அதைக் குறித்துச் சொன்னார்கள். பிரசங்கிக்கிறவனின் நிமித்தமாக ஒரு சத்தியத்தை ஏற்றுக்கொள்ளுகிறவன் நெடுநாளைக்கு அதில் நிலைநிற்கமாட்டான். நமக்குப் பராபரனுடைய வசனத்தைச் சொல்லுகிறவர்கள் யாராயிருந்தாலும், குருவாயிருந்தாலும் சரி, உபதேசிமார் உபாத்திமாராயிருந்தாலும் சரி, அவர்கள் யார் என்பதைக் கவனியாமல், அவர்கள் சொல்லுகிறது கர்த்தருடைய வசனமாயிருப்பதின் நிமித்தமே அதைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ளவேண்டும், அதை உண்மையாய் விசுவாசிக்கவேண்டும். மேய்ப்பருடைய விசுவாசம் அவர்களைச் சும்மா இருக்கவொட்டவில்லை. இயேசு பிள்ளையைக் காண அவர்கள் ஆசைப்பட்டார்கள். இந்தக் காரியத்தைப் பார்ப்போம், வாருங்களென்று சொல்லி, ஒருவருக்கொருவர் ஆசை மூட்டி, ஒருவரை ஒருவர் தூண்டிவிட்டார்கள். நாமும் ஆராதனைக்குப் போகும்பொழுது நம்முடைய வீட்டிலுள்ளவர்களையும் அண்டை வீட்டுக்காரர் அடுத்த வீட்டுக்காரரையும் கூட்டி வரவேண்டும். தாமதித்து நின்றால் ஏதாகிலும் தடை நேரிடுமென்று மேய்ப்பர் பயந்து, தீவிரித்து வந்ததுபோல் நாமும் செய்யவேண்டும்.



அந்த மேய்ப்பருக்கு இருந்த விசுவாசமும் வாஞ்சையும் தீவிரமும் நம்முடைய கிறிஸ்தவர்களுக்குள் எவ்வளவு குறைவுபடுகிறது. கோயிலுக்கு வரவேண்டுமென்கிற வாஞ்சையும், கர்த்தருடைய வசனத்தைக் கேட்டுப் படிக்கவேண்டுமென்கிற ஆசையும், ஆராதனைக்குச் சரியான நேரத்தில் போகவேண்டுமென்கிற தீவிரமும் உள்ள கிறிஸ்தவர்கள் வெகு சிலர். இது விசனமான காரியம்.

அப்படியே, ஜெபத்தினாலே கர்த்தரண்டை சேர்ந்து, அவரைப் பார்க்க விரும்புகிற அநேகர் நமக்குள் இல்லை. நாம் இந்த விஷயத்தில் வெட்கப்பட்டு, கர்த்தருடைய ஒத்தாசையினால் அந்த மேய்ப்பரைப்போல் ஆகும்படி பிரயாசப்படுவோமாக. அவர்களுடைய விசுவாசம் அவர்களை ஓட்டினதால், அவர்கள் தீவிரமாய்ப் பயணப்பட்டுப் பெத்லகேம் ஊருக்கு ஓடிவந்தார்கள்.

களிப்பாய் நாமும் மேய்ப்பரின்
பிறகாலே சென்று சுவாமியின்
ஈவானதை நாம் கேட்ட சொல்
படியே பார்ப்போம், வாருங்கள்.

## 2.

அந்த மேய்ப்பர்கள் பெத்லகேமுக்கு வந்து, இயேசு பிள்ளையைக் கண்டார்கள். அவர்களுடைய பிரயாணம் வீணாய்ப் போகவில்லை. அவர்களுக்குள்ளே ஆசை வாஞ்சையை உண்டுபண்ணின கர்த்தர் அந்த ஆசையும் வாஞ்சையும் நிறைவேறும்படி கிருபை செய்தார். அவர்களுக்கு இயேசு பிள்ளையைப் பார்க்கும் பாக்கியம் கிடைத்ததினால், சகல நன்மையும் ஆசீர்வாதமும் அவர்களுக்கு வந்தது என்று சொல்லலாம். அவர்கள் தங்களை ஒன்றும் அற்றவர்களாய் எண்ணி, கர்த்தர் நடத்தினபடியே நடந்ததினால், பசித்திருந்த அவர்களைக் கர்த்தர் நன்மைகளினாலே நிரப்பினார். தேடுகிறவனெவனும் கண்டுபிடிக்கிறான் என்றபடி அவர்கள் தேடிவந்த பொருளைக் கண்டுபிடித்தார்கள். இந்தப் பொருளாகிய கிறிஸ்துவோ எங்கும் காணக்கிடையாத கனத்த பொக்கிஷம்.

தூதன் தங்களுக்கு அறிவித்த செய்தியின் ஒவ்வொரு வார்த்தையும் மெய் என்று அவர்கள் கண்டறிந்துகொண்டார்கள். புடவைகளிலே சுற்றி முன்னணையிலே படுக்க வைத்திருக்கிற ஒரு குழந்தையை அவர்களுடைய கண் கண்டது. அந்தக் குழந்தை கர்த்தராகிய கிறிஸ்து என்கிற இரட்சகரென்று அவர்கள் கண் காணாவிட்டாலும், அவர்கள் விசுவாசம் அதைக் கண்டது. இதனால் அவர்கள் பெற்றனுபவித்த பாக்கியமே பாக்கியம். இதனால் அவர்கள் இரட்சிப்பையும் ஆறுதலையும் அடைந்தார்கள்.

நாமும் கிறிஸ்துமார்க்கத்தின் எளிய கோலத்தையும், திருச்சபையின் பரிதாப நிலைமையையும் காணும்பொழுது, அதனால் இடறல் அடையாமல், விசுவாசத்தினால் அதன் உள்ளான மகிமையைக் கண்டு ஆறுதலடைவோமாக. நாம் கண்ணால் காணும் வெளிக்காட்சியால் தளர்ந்து போகாமல், கர்த்தருடைய வார்த்தையை விசுவாசத்தால் பிடித்துப் பலப்படுவோமாக. நாம் இம்மையிலே விசுவாசிக்கிறதை மறுமையிலே கண்ணாரக் காணவும் கர்த்தர் கிருபை செய்வார்.

மேய்ப்பர் கிறிஸ்துவைக் கண்டவுடனே அவரண்டையிருந்த மரியாளுக்கும் யோசேப்புக்கும் தாங்கள் தேவதூதனால் கேட்டறிந்த செய்தியின் வார்த்தைகளைச் சொல்லியிருக்கலாம். மரியாளோ இந்த வார்த்தைகளை எல்லாம் தன் இருதயத்திலே வைத்துத் தியானித்துக்கொண்டிருந்தாள். இயேசுநாதரைப் பற்றிய வார்த்தை மறக்கத்தக்கதல்ல. நம்முடைய மனசிலே எத்தனை வீண் காரியங்களை வைக்கிறோம்; எத்தனை பாவமான காரியங்கள் நம்முடைய மனசில் இருக்கிறது. இவைகளுக்குப் பதிலாக கர்த்தருடைய வார்த்தையை வைத்திருப்பது எவ்வளவு நல்லது. இயேசுநாதர் தங்கச் சுரங்கம், அவரைக் குறித்து நினைக்க நினைக்க நமக்குத் தங்கமே வரும். இயேசுநாதர் ஜீவ விருட்சம், அவரைத் தியானித்துத் தட்டத் தட்டப் புதுப் பழங்கள் விழுந்துகொண்டே இருக்கும். அவரால் வரும் சந்தோஷமே விலையேறப்பெற்ற தங்கம், அவரால் வரும் ஆறுதலே மதுரமான பழம். இயேசுநாதர் நீரூற்றுக்கு ஒப்பாயிருக்கிறார். அவரை விசுவாசித்து, அவர் பேரில இரவும் பகலும் தியானிப்பாயிருக்கிறவன் எவனோ, அவனிடத்திலிருந்து தெளிவான நீர் வாய்க்கால் புறப்படும். அவனால் அநேகர் ஆறுதலடைவார்கள். ஆ, நாமெல்லாரும் இயேசுவின் தாயாகிய மரியாளைப் போல் அவருடைய வார்த்தையை நம்முடைய மனசிலே எப்பொழுதும் வைத்துத் தியானிப்போமாக.

3.

மேய்ப்பர்கள் முன்னணையில் கிடந்த இயேசு பாலகனைக் கண்டு மகிழ்ந்தார்கள்.

அவர்கள் மகிழ்ந்ததாக நம்முடைய வாக்கியத்திலே நேரே சொல்லியிருக்கிறதில்லை. என்றாலும், அவர்கள் செய்த பல காரியங்கள் அவர்களடைந்த சந்தோஷத்திற்கும் மகிழ்ச்சிக்கும் அடையாளங்களாயிருந்தன.

அவர்கள் இந்தப் பிள்ளையைக் குறித்துத் தங்களோடே சொல்லப்பட்ட வார்த்தையின் செய்தியைப் பிரசித்தம் பண்ணினார்கள் என்று சொல்லியிருக்கிறது. மேய்ப்பர்கள் தாங்கள் இயேசு பிள்ளையைப் பார்த்ததினால் அடைந்த சந்தோஷத்



தைத் தங்களுக்குள் அடக்கிவைத்துக் கொள்ளவில்லை. தாங்கள் கண்டதையும் கேட்டதையும் மற்றவர்களுக்கும் சொல்ல ஆசைப்பட்டார்கள். ஆகையால் அவர்கள் தங்கள் இனத்தார் சனத்தார் வீட்டிற்கும், சிநேகிதர்கள் வீட்டிற்கும் போய்: கிறிஸ்து பிறந்திருக்கிறாரென்று கர்த்தர் ஒரு தேவ தூதனைக்கொண்டு எங்களுக்கு அறிவித்தார், அந்தத் தூதனோடு அநேக தேவதூதர்கள் கூட்டமாய்க் கூடிக்கொண்டு பாட்டுப் பாடினார்கள்; அந்தத் தூதர்கள் போன பிறகு நாங்கள் பெத்லகேமுக்குப் போய்ப் பிறந்திருக்கிற பிள்ளையைக் கண்ணாலே கண்டோம். தூதன் சொன்ன அடையாளம் சரியாயிருந்தது. அவரே நம்மை இரட்சிக்கப்போகிறவரென்று நாங்கள் நம்புகிறோம். நீங்களும் நம்புங்கள். அப்பொழுது எங்களைப்போல் நீங்களும் இரட்சிப்பை அடைவீர்கள் என்பதாக அவர்களுக்குச் சொன்னார்கள்.

மேய்ப்பர் சொன்னதைக் கேட்ட சனங்கள் தங்களுக்குச் சொல்லப்பட்ட விசேஷங்களுக்காக ஆச்சரியப்பட்டார்கள். பிரியமானவர்களே, இயேசுநாதர் பிறந்த செய்தியைக் கேட்கிற நாம் அந்த யேய்ப்பர்களைப் போல் அவரை விசுவாசித்து, அவரைக் குறித்து நம்மைச் சேர்ந்த யாவருக்கும் சொல்லி, யாவரையும் அவரண்டைக்குக் கொண்டுவருகிறது நம்முடைய கடமை. அதுவே பண்டிகைச் சந்தோஷத்துக்கு அடையாளம். மேய்ப்பர் சொன்னதைக் கேட்டவர்கள் செய்ததுபோல் ஆச்சரியப்படுவது போதாது. ஆச்சரியம் நம்மை இரட்சிக்காது. ஆச்சரியப்பட்ட அந்த மனிதர் தாங்கள் கேட்ட செய்தியைச் சீக்கிரமாய் மறந்துபோனார்களென்று தோன்றுகிறது. மரியாள் மாத்திரம் இந்த வார்த்தைகளை எல்லாந் தன் இருதயத்திலே வைத்துத் தியானித்துக் கொண்டிருந்தாள்.

மேலும், அந்த மேய்ப்பர்கள் தாங்கள் அடைந்த சந்தோஷத்தை மற்றொரு விதமாய் வெளிப்படுத்தினார்கள். அதாவது, தங்களுடனே சொல்லப்பட்டதின்படியே கேட்டுக் கண்ட யாவுக்காகவும் பராபரனை மகிமைப்படுத்தித் துதித்தார்கள். பராபரன் தம்முடைய நேச குமாரன் பிறந்த செய்தியை ஒரு தேவதூதனைக் கொண்டு தங்களுக்குத் தெரிவித்ததற்காகவும், தங்களுக்குத் தெரிவிக்கப்பட்டபடியே பெத்லகேம் ஊரில் காணும்படி பராபரன் கிருபை செய்ததற்காகவும், அவரால் தங்களுக்குப் பெரிய ஆறுதலைக் கொடுத்ததற்காகவும் அவர்கள் நன்றியறிந்தவர்களாய்ப் பராபரனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தினார்கள். நாமும் அவர்களைப் போல் பராபரனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தி, சங்கீதங்களையும் ஞானப்பாட்டுகளையும் பாடுவோமாக. வாயினாலே மாத்திரம் நாம் பராபரனை மகிமைப்படுத்துகிறது போதாது. நம்முடைய மனமும் வாக்கும் ஒத்திருந்து, பரா

பரனைத் துதிக்கவேண்டும். முக்கியமாய் நம்முடைய நடக்கையினாலே அவரை மகிமைப்படுத்தவேண்டும்.

மேய்ப்பர்கள் அவரைத் துதித்துக்கொண்டே திரும்பினார்கள் என்று எழுதியிருக்கிறது. அவர்கள் தாங்கள் விட்டுவந்த ஊருக்கும் மந்தைக்கும் திரும்பிப்போய், கர்த்தர் தங்களுக்குக் கொடுத்த வேலையை உண்மையும் சுறுசுறுப்புமாய்ப் பார்க்க அவர்கள் விரும்பினார்கள். கிறிஸ்துவைக் கண்டு மகிழ்ந்து, அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்று, தங்கள் வீட்டுக்குத் திரும்பின அந்த மேய்ப்பர்களுடைய வேலையெல்லாம் எவ்வளவு ஆசீர்வாதமாயிருக்கும். அவர்களுடைய மந்தைகள் எவ்வளவாய்ப் பெருகியிருக்கும். அவர்கள் செய்த எல்லா வேலைகளும் எவ்வளவு நன்மையாய் முடிந்திருக்கும். கிறிஸ்தவர்களாகிய நாமெல்லாரும் கர்த்தருடைய வசனத்தைக் கேட்டு, அதை விசுவாசித்து, கர்த்தரை மகிமைப்படுத்தி, நம்முடைய வேலைகளைச் செய்வோமாக. அப்பொழுது நாம் சபையிலே செய்யும் வேலையையும், வயிலிலே செய்யும் வேலையையும், வேறெந்த இடத்தில் செய்யும் வேலையையும் கர்த்தர் ஆசீர்வதிப்பார்.

அன்புள்ள இயேசுவே, உம்மை நாங்கள் மனவாஞ்சையோடே தேடவும், மெய்விசுவாசக் கண்களால் காணவும், உம்மில் மகிழ்ச்சி அடையவும் எங்களுக்குக் கிருபை செய்தருளும், சுவாமி. ஆமேன்.

---

## வருஷ முடிவின் இராத்திரி.

லூக்கா 13, 6—9.

பிரியமானவர்களே,

இந்த வருஷம் இன்றோடு முடிகிறது. நாளைக்குப் புது வருஷம் துவக்கும். ஒரு வருஷத்தை முடிக்கிறவர்கள் வியாபாரிகளாயிருந்தால், அவசியம் தங்கள் கணக்குகளைப் பரிசோதிப்பார்கள். போன வருஷத்திலே வந்த லாபமென்ன, நஷ்டமென்னவென்று விசாரித்து, வரவு செலவுக் கணக்குகளைச் சரியாய்ப் பார்ப்பார்கள். குடித்தனக்காரர்களும் அப்படித்தான் செய்வார்கள். போன வருஷத்திலே கண்டுமுதலான நன்செய் புன்செய் நவதானியங்கள் எவ்வளவு, அதிலே சர்க்கார் தீர்வை, தசுகூலி, மற்ற அழிவு செலவு எவ்வளவென்று திட்டமாய்க் கணக்குப் போட்டுப் பார்ப்பார்கள். கணக்கின்படியே லாபமிருந்தால் சந்தோஷப்படுவார்கள், நஷ்டமிருந்தால் விசனப்படுவார்கள். ஒவ்வொரு கிறிஸ்தவனையும் ஒரு வியாபாரி அல்லது குடித்தனக்காரனென்று சொல்லலாம். ஆண்டவர் கொடுத்த



நாட்கள், சுகம், பெலன், பொருள், முக்கியமாய் நாம் அனுபவித்த தேவவசனம், ஞானதிரவியங்கள் எல்லாம் நமக்கு வந்த வரவு. கடந்த போன வருஷம் திரும்ப வராது, அப்படியே மற்றக் காரியங்களும். இவைகளை நாம் நம்முடைய நன்மைக்குச் செலவிட்டோமா, தீமைக்குச் செலவிட்டோமா. நாம் லாபமடைந்தோமா, நஷ்டமடைந்தோமா என்று கேட்பது ஒவ்வொரு கிறிஸ்தவனின் கடமையாம். இப்படி நம்மைப் பரிசோதித்துப் பார்ப்பதுக்கு உதவியாக நம்முடைய வாக்கியத்திலுள்ள உவமையைத் தியானிப்போம். இதின்படியே,

வருஷ முடிவில் நாம் நம்மைக் கேட்கவேண்டிய கேள்விகள் எவை:

1. நான் இம்மட்டும் பெற்றனுபவித்த கிருபை எவ்வளவு.
2. நான் இம்மட்டும் நடந்த நடக்கை எப்படிப்பட்டது.
3. நான் இம்மட்டும் பிழைத்திருப்பது எதினால்.
4. என் முடிவு எப்படியிருக்கும்.

### 1.

நான் இம்மட்டும் பெற்றனுபவித்த கிருபை எவ்வளவென்று ஒவ்வொரு கிறிஸ்தவனும் இன்றைக்குக் கேட்பது நியாயம்.

இயேசுநாதர் நம்முடைய வாக்கியத்திலே நம்மை ஒரு அத்திமரத்துக்கு ஒப்பிடுகிறார். நாமெல்லாரும் நம்முடைய சுபாவப்படியே காட்டில் முளைத்த அத்திமரங்கள். நாம் துர்க்குணத்தில் உருவானவர்கள், பாவத்தில் கர்ப்பந்தரிக்கப்பட்டவர்கள். ஆகிலும், கர்த்தர் காட்டுமரங்களாகிய நம்மைத் தம்முடைய திராட்சத்தோட்டத்திலே நட்டார். அவருடைய திருச்சபைதான் திராட்சத்தோட்டம். நாம் ஞானஸ்நானம் பெற்ற அன்றைக்கு அவருடைய திருச்சபையில் சேர்ந்தோம். கர்த்தர் நம்மைச் சேர்த்துக்கொண்டதினாலே நம்மைத் திருச்சபையின் சகல நன்மைகளுக்கும் பங்காளிகளாக்கினார். தோட்டத்தில் நட்ட ஒரு மரத்துக்கு எருப்போடுவார்கள், தண்ணீர் பாய்ச்சுவார்கள், இன்னம் பல பக்குவங்களைச் செய்வார்கள். அதுபோலவே, இரக்கமுள்ள கர்த்தர் கிறிஸ்தவர்களாகிய நமக்குப் போன வருஷத்திலே எவ்வளவு கிருபை பாராட்டியிருக்கிறார்.

நாம் பெற்றனுபவித்த கிருபை என்னவென்று கேட்கிறீர்களோ. அபாத்திரப் பாவிகளாகிய நமது வயிற்றுக்குப் போசனம் கிடைக்கவில்லையா, இடுப்புக்குத் துணி கிடைக்கவில்லையா, உடம்புக்குச் சுகம் கிடைக்கவில்லையா. நமக்கு எவ்வளவோ மோசங்கள் வரக்கூடியதாயிருந்தும், எவ்வளவோ வியாதிகளும் துன்பங்களும் வந்தும், கர்த்தர் நம்மைக் கைவிடாமல் அதிசய

மாய்ப் பாதுகாத்தாரே. ஆகையால், என் சரீரத்துக்கும் சிவனுக்கும் வேண்டிய சகல ஆகாரமாகிய அன்னவஸ்திரம், பிழைப்புத் தொழில், பெண்சாதி பிள்ளை, வீடு வாசல், ஆடு மாடு, இவை முதலிய சகல ஆஸ்திகளையும் அவர் எனக்குக் கட்டளையிட்டு, என்னை அனுதினமும் பரிபூரணமாய்ப் பராமரித்து, சகல மோசங்களுக்கும் என்னை மறைத்து, சகல பொல்லாங்குகளுக்கும் தற்காத்து வருகிறாரென்று நாம் அறிக்கையிடவேண்டியதில்லையா. மேலும், கர்த்தர் நம்முடைய ஆத்துமாவுக்குப் போன வருஷத்தில் செய்திருக்கிற நன்மைகள் கொஞ்சமா. பெரியவர்களும் பிள்ளைகளுமான எத்தனை பேரை ஞானஸ்நானத்தின் வழியாய்த் தம்முடைய சபையிலே சேர்த்தார். விலையேறப்பெற்ற தம்முடைய பரிசுத்த வசனத்தை நாம் அடிக்கடி கேட்கிறதற்கு இடம்பண்ணினார். தம்முடைய பரிசுத்த சரீரத்தினாலும் இரத்தத்தினாலும் நம்மைப் போஷித்து, நம்முடைய பாவங்களை மன்னித்து வந்தார். கர்த்தர் நமக்குச் செய்ததான நன்மைகளையெல்லாம் சொல்லுகிறதற்கு நமக்கு ஆயிரம் நாவு இருந்தாலும் போதாது. அவர் நமக்குச் செய்த நன்மைகளை நம்முடைய புண்ணியத்தினிமித்தமாவது நம்முடைய பாத்திரத்தினிமித்தமாவது அவர் செய்யாமல், கிருபையினாலேயே செய்தார். ஆகையால் அவர் இவையெல்லாவற்றையும் பிதாவடைவான கிருபாகடாட்சத்தினாலேயுஞ் சுத்த தயையினாலேயும் யாதொரு புண்ணியமும் பாத்திரமுமில்லாத எனக்குச் செய்துகொண்டு வருகிறாரென்று அறிக்கையிடுகிறோம்.

2.

சொல்லிமுடியாத கிருபைகளைப் பெற்றிருக்கிற நாம் இம்மட்டும் நடந்த நடக்கை எப்படிப்பட்டதென்று கேட்போமாக.

தோட்டத்திலே மரத்தை நட்டு வளர்த்தவன் அதிலே காய் கனி தேடுவது வழக்கம். அப்படித் தேடுவது நியாயம். தென்னைமரம் தேங்காய் காய்ப்பதும், அத்திமரம் அத்திக்காய் காய்ப்பதுமே அதை வைத்த நோக்கம். நம்முடைய வாக்கியத்திலே சொல்லப்பட்ட அத்திமரத்திலே எஜமான் கனியைத் தேடி வந்து, காணாதேபோனானென்று எழுதியிருக்கிறது. நம்மைத் தம்முடைய சபையிலே வைத்துப் பராமரித்துக் காத்து நடத்தி வருகிறவர் நம்மிடத்திலேயும பலன் தேடுகிறார். அவர் தேடுகிற பலன் என்ன. நாம் அவரை முழு இருதயத்தினாலும் விசுவாசித்து, நம்முடைய மனதிலும் வாக்கிலும் நடக்கையிலும் அவருக்கேற்ற பிள்ளைகளாயிருப்பது தான். இந்தப் பலன் நம்மிடத்தில் எவ்வளவாகக் குறைவுபடுகிறது. நமக்குக் கர்த்தர் சுகவாழ்



வைக் கட்டளையிடும்பொழுது அவருக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரத்தைச் செலுத்துவதும், யாக்கோபைப் போல்: தேவரீர் உமது அடியானுக்குச் செய்துவந்த எல்லாக் கிருபைகளுக்கும் எல்லா உண்மைக்கும் நான் எம்மாத்திரமென்றும், தாவீது இராசாவைப் போல் கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் என்னை இந்தமட்டும் கொண்டுவந்ததற்கு நான் எம்மாத்திரம், என் வீடும் எம்மாத்திரம் என்றும் தாழ்மையாய் அறிக்கையிடுவதும் நம்முடைய கடமை. இப்படிப்பட்ட தாழ்மையும் நன்றியறிதலும் நம்மிடத்திலும் எவ்வளவாய்க் குறைகிறது. அப்படியே நமக்குத் துன்பமும் இக்கட்டும் உண்டாகிற காலத்திலே அவைகளைப் பொறுமையாய்ச் சகித்து, கர்த்தர் பேரிலே திடநம்பிக்கையுடையவர்களாயிருப்பதும் நாம் கொடுக்கவேண்டிய கனி. சென்ற வருஷத்தில் நாம் அடிக்கடி பொறுமை தப்பி, நம்பிக்கை கெட்டு நடந்ததில்லையா. மேலும், நமக்குப் பிசாசினாலும் உலகத்தினாலும் மாமிசத்தினாலும் சோதனை உண்டாகும்போது பாவம் செய்யாமல், பரிசுத்தமாகவும் நீதியாகவும் நடந்துகொள்ளுவதும் பராபரன் நம்மிடத்தில் தேடுகிற பலன். அன்றியும், சிநேகம், சந்தோஷம், சமாதானம், நீண்டசாந்தம், தயவு, இச்சை அடக்கம் முதலிய ஆவியின் கனிகளையும் கர்த்தர் நம்மிடத்தில் தேடி வருகிறார். ஒவ்வொரு வருஷத்திலும் இப்படித் தேடினார், கடந்துபோன வருஷத்திலும் தேடினார். சகோதரரே, இந்தக் கனிகளை நாம் கொடுத்தோமா. நாம் சென்ற வருஷத்திலே கர்த்தருடைய கற்பனைகளின்படியே நடந்து, அவருக்கு மகிமையும் நம்முடைய சகோதரர்களுக்கு நன்மையுமான காரியங்களைச் செய்தோமா. இல்லவே யில்லை. அவர் நம்மிடத்திலே தேடி வந்த நல்ல கனிகளுக்குப் பதிலாக நாம் கெட்ட கனி கொடுத்தோமல்லவா. நாம் செய்த பாவங்களும் அக்கிரமங்களும் எவ்வளவு. இப்போதும் கர்த்தர்: இந்த அத்திமரத்தில் கனியைத் தேடிவந்தேன், காணவில்லை என்று நம்மில் ஒவ்வொருவரையும் குறித்துப் புலம்புகிறார். இப்பொழுது நாம் நம்முடைய மார்பில் அடித்து, நம்முடைய பாவங்களுக்காக அழுது புலம்பி: பராபரனே, பாவியாகிய என் பேரில் கிருபையுள்ளவராகுமென்று ஆயக்காரனைப் போல் கெஞ்சிக் கூப்பிடுவோமாக.

3.

கனிகொடாத மரங்களாகிய நாம் வெட்டுண்டு போவதே நியாயமாயிருக்க, இம்மட்டும் பிழைத்திருப்பது எதினால் என்று கேட்போமாக.

தோட்டத்துக்கு எஜமான் தோட்டக்காரனுடனே: இதோ, மூன்று வருஷமாய் இந்த அத்திமரத்தில் கனியைத்

தேடிவருகிறேன், காணவில்லை, அதை வெட்டிப்போடு; அது நிலத்தையும் ஏன் கெடுக்கிறது என்றான். இப்படியே பராபரன் நம்மைக் குறித்தும் சொல்லுவது நியாயம். இந்தச் சபை தன்னுடைய கடமைகளைச் சரியாய் நிறைவேற்றவில்லை, இந்தக் குடும்பம் கிறிஸ்துமார்க்கத்துக்கு அடாத கெட்ட நிலைமையில் இருக்கிறது, இந்தக் கிறிஸ்தவன் கெட்ட நடக்கையாய் நடந்து நம்முடைய நாமத்தைத் தூஷணிக்கிறான், இந்தக் கிறிஸ்தவள் மகா பொல்லாதவள், ஆகையால் இவர்களை இந்த வருஷம் வைக்காமல் அழித்துவிடுகிறது நியாயமென்று பராபரன் நீதியின்படியே கூப்பிடுகிறார். அப்படிக் கூப்பிட்டும், நாம் கெட்டழிந்து போகாமல், பிழைத்திருக்கிறோம். இது எனாலென்று தெரியுமா.

தோட்டக்காரன் எஜமானுக்குப் பிரத்தியுத்தாரமாக: ஐயா, நான் அதைச் சுற்றிலுங் கொத்தி, எருப்போட்டு, கனிகொடுக்குமோ என்று பார்க்குமட்டாக, அது இந்த வருஷமும் இருக்கட்டும். கனி கொடாவிட்டால், இனிமேலைக்கு அதை வெட்டிப் போடுமென்று சொன்னான்.

நம்முடைய தோட்டக்காரர் இயேசுநாதர். நம்மைக் காக்கிறது அவருடைய வேண்டுதல். அவர் நமக்காகப் பட்ட பாடுகளையும், நமக்காகச் சிந்தின இரத்தத்தையும், நமக்காக அடைந்த மரணத்தையும், தம்முடைய ஐந்து காயங்களையும் அவர் பிதாவுக்குக் காண்பித்து, நமக்காக வேண்டுதல் செய்கிறார். அவர் சிலுவை மரத்தில் தொங்கினபொழுது: பிதாவே, இவர்களுக்கு மன்னியும், ஏனெனில் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியார்களென்று வேண்டிக்கொண்டார். அதனால் அந்தப் பெரிய வெள்ளிக்கிழமையில் எருசலேம் பட்டணமும் யூத சாதியும் அழிந்துபோகாமல் காக்கப்பட்டது நிச்சயம். அப்படியே சென்ற வருஷத்திலும் அவர் நம்மெல்லாருக்காகவும் வேண்டுதல் செய்ததினாலே தான் பராபரன் நம்மை நம்முடைய பாவங்களுக்குத் தக்கபடி தண்டியாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கபடி சரிக்கட்டாமலும், இதுவரைக்கும் நம்மைக் காப்பாற்றிக் கொண்டு வந்திருக்கிறார். நமக்காக வேண்டுதல் செய்த நம்முடைய இரட்சகருக்கும், அவர் நிமித்தம் நம்மை நீண்ட பொறுமையோடு காப்பாற்றின பிதாவுக்கும், நம்மைத் தள்ளிவிடாமல் நம்மோடு இருந்து வருகிற பரிசுத்த ஆவிக்கும் என்ன ஈடு செலுத்துவோம்.

அவர் நமக்குக் கொடுக்கிற கிருபையின் காலத்தை வீணாக்காமல், அதிலே நம்முடைய இரட்சிப்பைப் பயத்தோடும் நடுக்கத்தோடும் நாம் நடப்பிக்கவேண்டும். நமக்குப் பிரசங்கிக்கப்படுகிற பராபரனுடைய வசனத்தைக் கருத்தும் கவனமுமாகக் கேட்டு, விசுவாசத்திலும் தெய்வபக்தியிலும் வளர்வோமாக.



நாம் விசுவாசத்திலே வளர்வோமாகில், பராபரனுக்கேற்ற கனிகளைக் கொடுக்கக் கூடியவர்களாவோம்.

4.

இந்தக் கிருபையின் காலத்தை நாம் சரியாய்க் கையாடாதேபோனால் நம்முடைய முடிவு எப்படியிருக்கும்.

நெடுநாளைக்குக் கனிகொடாத மரத்தை விட்டு வைக்கமாட்டார்கள். அது இருக்க இருக்க நிலத்தைக் கெடுத்து, சுற்றிலும் இருக்கிற மரங்களுக்கும் சேதம் உண்டாக்கும்; ஆகையால் அதை வெட்டி விறகாக்குவது தப்பிதமல்ல. அப்படியே பராபரனுடைய கிருபையை அசட்டை செய்து, அவிசுவாசத்திலே நிலைத்திருந்து, அவபத்தியும் துன்மார்க்கமுமாய் நடக்கிற கிறிஸ்தவர்களுக்கும் பராபரன் செய்வார். கெட்ட கிறிஸ்தவர்கள் தங்களைக் கெடுத்துக்கொள்வதுமல்லாமல், தங்களைச் சுற்றிலுமிருக்கிற மற்றக் கிறிஸ்தவர்களையும் கெடுத்துப்போடுகிறார்கள். கெட்ட தாய் தகப்பன்மாரால் கெட்டுப்போகிற பிள்ளைகள் எத்தனை. துன்மார்க்கரான புருஷர்களால் கெட்டுப்போகிற பெண்சாதிகள் எத்தனை. குடிகாரரும் விபசாரக்காரருமான சில கிறிஸ்தவர்களால் கெட்டுப்போகிற அநேக மனிதர்களை நாம் கண்டிருக்கிறதில்லையா. ஆகையால், பராபரனுடைய நீண்ட பொறுமை முடிந்து, நீதி வெளிப்படுகிற ஒரு நாள் வருமென்கிறது நிசம். கனிகொடாவிட்டால், இனிமேலைக்கு அதை வெட்டிப் போடுமென்று தோட்டக்காரன் சொன்னான். கெட்ட கிறிஸ்தவர்களைக் கர்த்தர் நியாயந்தீர்த்து அழித்துப்போடும் வேளை வருவது நிச்சயம்.

நூற்றிருபது வருஷம் நோவா பிரசங்கித்தும் குணப்படாமல் போன உலகத்தின் மேல் பராபரன் ஜலப்பிரளயத்தை அனுப்பினார். அக்கிரமக்காரரையெல்லாம் வெள்ளம் கொண்டுபோயிற்று. லோத் என்பவருடைய புத்திமதிகளைக் கேளாமல் போன சோதோம் கொமோரா பட்டணங்களின் மேல் அக்கினியும் கெந்தகமும் விழுந்து, அந்த ஊரையெல்லாம் அழித்துப் போட்டது.

மேலும், நம்முடைய இரட்சகர் சிலுவை சுமந்து போகையில் எருசலேம் குமாரத்திகளைப் பார்த்து: பச்சை மரத்துக்கு இவைகளைச் செய்தால் பட்ட மரத்துக்கு என்ன செய்யப்படுமென்று சொன்னதை நாம் நினைப்போமாக.

இந்த வருஷமும் இருக்கட்டுமென்று நமக்காக வேண்டுதல் செய்து, நமக்குக் கிருபையின் காலத்தைச் சம்பாதித்த நம்முடைய இரட்சகரை நாம் முழு இருதயத்தினாலும் விசுவாசித்து, பாவமன்னிப்பைத் தேடி, பரிசுத்தத்தை வாஞ்சித்து அவருடைய சித்தத்தின்படி நடக்கவேண்டும். நாம் அவருக்கேற்ற

தேடிவருகிறேன், காணவில்லை, அதை வெட்டிப்போடு; அது நிலத்தையும் ஏன் கெடுக்கிறது என்றான். இப்படியே பராபரன் நம்மைக் குறித்தும் சொல்லுவது நியாயம். இந்தச் சபை தன்னுடைய கடமைகளைச் சரியாய் நிறைவேற்றவில்லை, இந்தக் குடும்பம் கிறிஸ்துமார்க்கத்துக்கு அடாத கெட்ட நிலைமையில் இருக்கிறது, இந்தக் கிறிஸ்தவன் கெட்ட நடக்கையாய் நடந்து நம்முடைய நாமத்தைத் தூஷணிக்கிறான், இந்தக் கிறிஸ்தவள் மகா பொல்லாதவள், ஆகையால் இவர்களை இந்த வருஷம் வைக்காமல் அழித்துவிடுகிறது நியாயமென்று பராபரன் நீதியின்படியே கூப்பிடுகிறார். அப்படிக் கூப்பிட்டும், நாம் கெட்டழிந்துபோகாமல், பிழைத்திருக்கிறோம். இது எதினாலென்று தெரியுமா.

தோட்டக்காரன் எஜமானுக்குப் பிரத்தியுத்தாரமாக: ஐயா, நான் அதைச் சுற்றிலுங் கொத்தி, எருப்போட்டு, கனிகொடுக்குமோ என்று பார்க்குமட்டாக, அது இந்த வருஷமும் இருக்கட்டும். கனி கொடாவிட்டால், இனிமேலைக்கு அதை வெட்டிப்போடுமென்று சொன்னான்.

நம்முடைய தோட்டக்காரர் இயேசுநாதர். நம்மைக் காக்கிறது அவருடைய வேண்டுதல். அவர் நமக்காகப் பட்ட பாடுகளையும், நமக்காகச் சிந்தின இரத்தத்தையும், நமக்காக அடைந்த மரணத்தையும், தம்முடைய ஐந்து காயங்களையும் அவர் பிதாவுக்குக் காண்பித்து, நமக்காக வேண்டுதல் செய்கிறார். அவர் சிலுவை மரத்தில் தொங்கினபொழுது: பிதாவே, இவர்களுக்கு மன்னியும், ஏனெனில் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியார்களென்று வேண்டிக்கொண்டார். அதனால் அந்தப் பெரிய வெள்ளிக்கிழமையில் எருசலேம் பட்டணமும் யூத சாதியும் அழிந்துபோகாமல் காக்கப்பட்டது நிச்சயம். அப்படியே சென்ற வருஷத்திலும் அவர் நம்மெல்லாருக்காகவும் வேண்டுதல் செய்ததினாலே தான் பராபரன் நம்மை நம்முடைய பாவங்களுக்குத் தக்கபடி தண்டியாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கபடி சரிக்கட்டாமலும், இதுவரைக்கும் நம்மைக் காப்பாற்றிக் கொண்டு வந்திருக்கிறார். நமக்காக வேண்டுதல் செய்த நம்முடைய இரட்சகருக்கும், அவர் நிமித்தம் நம்மை நீண்ட பொறுமையோடு காப்பாற்றின பிதாவுக்கும், நம்மைத் தள்ளிவிடாமல் நம்மோடு இருந்து வருகிற பரிசுத்த ஆவிக்கும் என்ன ஈடு செலுத்துவோம்.

அவர் நமக்குக் கொடுக்கிற கிருபையின் காலத்தை வீணாக்காமல், அதிலே நம்முடைய இரட்சிப்பைப் பயத்தோடும் நடுக்கத்தோடும் நாம் நடப்பிக்கவேண்டும். நமக்குப் பிரசங்கிக்கப்படுகிற பராபரனுடைய வசனத்தைக் கருத்தும் கவனமுமாகக் கேட்டு, விசுவாசத்திலும் தெய்வபக்தியிலும் வளர்வோமாக.



நாம் விசுவாசத்திலே வளர்வோமாகில், பராபரனுக்கேற்ற கனிகளைக் கொடுக்கக் கூடியவர்களாவோம்.

## 4.

இந்தக் கிருபையின் காலத்தை நாம் சரியாய்க் கையாடாதேபோனால் நம்முடைய முடிவு எப்படியிருக்கும்.

நெடுநாளைக்குக் கனிகொடாத மரத்தை விட்டு வைக்கமாட்டார்கள். அது இருக்க இருக்க நிலத்தைக் கெடுத்து, சுற்றிலும் இருக்கிற மரங்களுக்கும் சேதம் உண்டாக்கும்; ஆகையால் அதை வெட்டி விறகாக்குவது தப்பிதமல்ல. அப்படியே பராபரனுடைய கிருபையை அசட்டை செய்து, அவிசுவாசத்திலே நிலைத்திருந்து, அவபத்தியும் துன்மார்க்கமுமாய் நடக்கிற கிறிஸ்தவர்களுக்கும் பராபரன் செய்வார். கெட்ட கிறிஸ்தவர்கள் தங்களைக் கெடுத்துக்கொள்வதுமல்லாமல், தங்களைச் சுற்றிலுமிருக்கிற மற்றக் கிறிஸ்தவர்களையும் கெடுத்துப்போடுகிறார்கள். கெட்ட தாய் தகப்பன்மாரால் கெட்டுப்போகிற பிள்ளைகள் எத்தனை. துன்மார்க்கரான புருஷர்களால் கெட்டுப்போகிற பெண்சாதிகள் எத்தனை. குடிகாரருமான விபசாரக்காரருமான சில கிறிஸ்தவர்களால் கெட்டுப்போகிற அநேக மனிதர்களை நாம் கண்டிருக்கிறதில்லையா. ஆகையால், பராபரனுடைய நீண்ட பொறுமை முடிந்து, நீதி வெளிப்படுகிற ஒரு நாள் வருமென்கிறது நிசம். கனிகொடாவிட்டால், இனிமேலைக்கு அதை வெட்டிப் போடுமென்று தோட்டக்காரன் சொன்னான். கெட்ட கிறிஸ்தவர்களைக் கர்த்தர் நியாயந்தீர்த்து அழித்துப்போடும் வேளை வருவது நிச்சயம்.

நூற்றிருபது வருஷம் நோவா பிரசங்கித்தும் குணப்படாமல் போன உலகத்தின் மேல் பராபரன் ஜலப்பிரளயத்தை அனுப்பினார். அக்கிரமக்காரரை யெல்லாம் வெள்ளம் கொண்டு போயிற்று. லோத் என்பவருடைய புத்திமதிகளைக் கேளாமல் போன சோதோம் கொமோரா பட்டணங்களின் மேல் அக்கினியும் கெந்தகமும் விழுந்து, அந்த ஊரை யெல்லாம் அழித்துப் போட்டது.

மேலும், நம்முடைய இரட்சகர் சிலுவை சுமந்து போகையில் எருசலேம் குமாரத்திகளைப் பார்த்து: பச்சை மரத்துக்கு இவைகளைச் செய்தால் பட்ட மரத்துக்கு என்ன செய்யப்படுமென்று சொன்னதை நாம் நினைப்போமாக.

இந்த வருஷமும் இருக்கட்டுமென்று நமக்காக வேண்டுதல் செய்து, நமக்குக் கிருபையின் காலத்தைச் சம்பாதித்த நம்முடைய இரட்சகரை நாம் முழு இருதயத்தோடும் விசுவாசித்து, பாவமன்னிப்பைத் தேடி, பரிசுத்தத்தை வாஞ்சித்து அவருடைய சித்தத்தின்படி நடக்கவேண்டும். நாம் அவருக்கேற்ற

த்தமாயிருந்தார். சமாதானம் ஆருடைய மனசில் இல்லையோ, அவர்கள் சாகப் பயப்படுகிறார்கள். நாமெல்லாரும் உயிரோடிருக்கும் காலத்திலும், சாகப்போகிற வேளையிலும், திடமும் தைரியமுமாயிருக்க வேண்டுமானால், நாம் விசுவாசக் கண்களால் இயேசு பிள்ளையைக் கண்டு, விசுவாசக்கைகளால் இயேசு பிள்ளையை ஏந்தி, அவர் நமக்குச் சம்பாதித்த இரட்சிப்பையும் சமாதானத்தையும் மனசில் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

அந்த சிமெயோன் கர்த்தருடைய பெரிய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டதினால் மற்றவர்களையும் ஆசீர்வதிக்கக் கூடியவர் ஆனார். அவர் யோசேப்பையும் மரியாளையும் ஆசீர்வதித்தார். கிருபையும் சமாதானமும் அவர்களுக்குக் கிடைக்கும்படி கர்த்தருடைய நாமத்தில் அவர்களை வாழ்த்தினார். இப்படியே நாமெல்லாரும் கர்த்தருடைய இரட்சிப்பையும் ஆசீர்வாதத்தையும் பெற்று அநுபவித்தால், நாமும் மற்றவர்களை ஆசீர்வதிக்கவும், அவர்களுக்கு நன்மை செய்யவும் கூடியவர்களாவோம்.

## 2.

சிமெயோனுக்குக் காட்சிதந்த இயேசுபிள்ளையைக் குறித்துப் பார்ப்போம்.

அவரைக்குறித்துச் சிமெயோன் தீர்க்கதரிசனம் சொன்னார். அவர் மரியாளை நோக்கி: இதோ, அநேகம் இருதயங்களுடைய சிந்தனைகள் வெளியரங்கமாகும்படிக்கு, இவர் இஸ்ரவேலில் அநேகருடைய விழுகுதலுக்கும் எழுந்திருக்குதலுக்கும், எதிர்பேசப்படும் அடையாளமாகவும் வைக்கப்பட்டிருக்கிறார். உன்னுடைய ஆத்துமத்தையே ஒரு பட்டயமும் உருவிப்போம் என்று சொன்னார். இந்த வார்த்தைகளை நாம் கவனித்துப் பார்த்தால், காட்சி தந்த இயேசு பிள்ளை மகா அதிசயமான பிள்ளையென்று விளங்கும். ஏனெனில், அவரால் அநேகம் இருதயங்களுடைய சிந்தனைகள் வெளியரங்கமாகுமென்று பார்க்கிறோம். இயேசு பிள்ளையினாலே மேய்ப்பருடைய விசுவாசம் வெளிப்பட்டதுபோல், மற்றவர்களுடைய அவிசுவாசமும் வெளிப்பட்டது. இயேசு பிள்ளையினாலே கிழக்கு சாஸ்திரிகளின் விசுவாசம் வெளிப்பட்டதுபோல், ஏரோதே இராசாவின் கபடும், பகையும், இரத்தப்பிரியமும் வெளிப்பட்டது. இயேசுநாதர் பெரியவராகி, பிரசங்கம்பண்ணி, அற்புதங்களைச் செய்தகாலத்தில் அனேகருடைய சிந்தனைகள் அவரால் வெளிப்பட்டது. வேதபாரகருடைய மாயமும் பகையும், ஏழைச் சீஷரின் பத்தியும் பலவீனமும், சனங்களின் உறுதியில்லாமையும் அவிசுவாசமும் எல்லாம் அவரால் வெளிக்கு வந்தது.



அக்காலத்திலே இஸ்ரவேலருடைய சிந்தனைகள் வெளியானதுபோலே இக்காலத்திலே நம்மைச் சூழ்ந்திருக்கிற அஞ்ஞானிகளின் சிந்தனைகளும் இயேசுபிள்ளையால் வெளியாகிறது. நாம் அவர்களோடே எந்தப் பேச்சுப் பேசினாலும் அமைதலாயிருந்து கேட்பார்கள். எல்லாம் சரிதான் என்று ஒப்புக்கொள்ளுவார்கள். இயேசுநாதரைக் குறித்துப் பேசின உடனே அவர்களுடைய அவிசுவாசம் வெளியாகிப்போம்.

மேலும் அவர் இஸ்ரவேலில் அநேகருடைய விழுகுதலுக்கு வைக்கப்பட்டிருக்கிறார். வேதபாரகரும் பரிசேயரும் பிரதான ஆசாரியர்களும் மூப்பர்களும் இயேசுநாதரின் அருமையான பிரசங்கங்களைக் கேட்டும், அவர் செய்த ஏராளமான அற்புதங்களைக் கண்டும், அவரிடத்தில் இடறலடைந்து அவிசுவாசத்தில் விழுந்தார்கள். இதனால் அவர்கள் இயேசுவைக்கொன்று, கொலைபாதகரானார்கள். இம்மையிலே அவிசுவாசத்தில் விழுகிறவர்கள் மறுமையிலே நரகக்குழியில் விழுவார்களென்பது நிச்சயம். இப்படியே, உலகத்தை இரட்சிக்கவந்த இயேசுநாதர் அநேகருடைய அவிசுவாசத்தினால் அவர்களுடைய விழுகுதலுக்கு அடையாளமானார்.

அல்லாமலும், இயேசுபாலகன் இஸ்ரவேலில் அநேகருடைய எழுந்திருக்குதலுக்கும் அடையாளமாக வைக்கப்பட்டார். அவிசுவாசமுள்ள பரிசேயரும் மற்றவர்களும் இயேசுவை விசுவாசியாமல், கெட்டுப்போனார்கள். அவரை விசுவாசித்த அவருடைய ஏழைச் சீஷர்களும், அநேக ஆயக்காரரும் பாவிகளும் அவரைப்பிடித்து, பாவப்படுகுழியிலிருந்து எழுந்தார்கள். கிறிஸ்து அவர்கள் பாவங்களை மன்னித்து, அவர்களுக்கு ஆறுதல் அளித்து, அவர்களை மோட்சத்துக்குப் பங்காளிகளாக்கினார். நம்முடைய தேசத்திலும் இயேசு என்கிற இந்த அடையாளத்தைக் கண்ட அநேகர் அவரை விட்டுத் தூரமாய்ப் போகிறார்கள். நரகக்குழிக்குச் சமீபமாகிறார்கள். சீக்கிரம் திரும்பாதேபோனால், நரகத்திலும் விழுவார்கள். அப்படியிருக்க, கிறிஸ்தவர்களாகிய நாம் இயேசு என்கிற அதே அடையாளத்தால் பாவக்கேட்டிலிருந்து எழுந்திருக்கலானோம். கிறிஸ்து நம்மைக் கைதூக்கினார். ஞானஸ்நானம் நம்மைக் கழுவிற்று, அவருடைய வசனம் நம்மை ஆறுதல் படுத்துகிறது, அவருடைய சரீரம் நம்மைப் போஷிக்கிறது, அவருடைய இரத்தம் நம்முடைய தாகம் தீர்க்கிறது, அவரால் மோட்சம் நமக்குச் சுதந்தரமாயிற்று.

மேலும், சிமெயோன்: உன்னுடைய ஆத்துமத்தையே ஒரு பட்டயம் உருவிப்போகும் என்று மரியாளுக்குச் சொன்னார். இது இயேசுநாதருடைய பாடுகளைப்பற்றிய தீர்க்கதரிசனம். அவர் சிலுவையிலே தொங்கி, சொல்லிமுடியாத வேதனைகளைச் சகிக்கிறதை அவருடைய தாய் காணும்பொழுது அவருடைய

இருதயத்தை ஒரு பட்டயம் உருவிப்போனதுக்குச் சரியாய் அவளுக்குப் பெரிய சஞ்சலம் உண்டாகுமென்று அறிவித்தார். இந்தத் தீர்க்கதரிசனமும் சரியாய் நிறைவேறிற்றென்று நமக்குத் தெரியும்.

சிமெயோனுக்குக் காட்சி தந்த அந்த இயேசுவை நாமும் இப்பொழுது விசுவாசத்தால் காண்கிறோம். மறுமையிலோ புது எருசலேமில் கண்ணாரக் காண்போம். இப்பொழுது அவரை விசுவாசத்தால் பற்றிக்கொண்டு எழுந்திருக்காதவர்கள் அப்பொழுது அவரைக் காணமாட்டார்கள். அவர்கள் பங்கு நித்திய மோட்சத்தில் அல்ல, நித்திய நரகத்தில் இருக்கும். ஆகையால், காலம் இருக்கும் பொழுதே காட்சிகாணும்படி அவருடைய தெய்வாலயத்துக்கு நாம் போகவேண்டும். பரிசுத்த ஆவியானவர் போதிவிக்கும் அவருடைய வசனத்தைக் கருத்தாய்க் கேட்க வேண்டும். அதிலேதான் இயேசுவின் காட்சி நமக்குக் கிடைக்கும்.

3.

இப்பொழுது நாம் கடைசியாக, காட்சியை அறிவித்த அன்னாளைப் பார்ப்போம்.

அன்னாள் ஒரு தீர்க்கதரிசியாயிருந்தாள். இவள் கன்னியாஸ்திரியாயிருந்து, பிற்பாடு ஏழு வருஷம் புருஷனுடனே வாழ்ந்து, மிகுதியும் வயது சென்று, எண்பத்துநாலு வயதான விதவையாயிருந்தாள். அவள் சகல விதவைகளுக்கும் நல்ல முன்மாதிரியாயிருக்கிறாள். வீணும் பாவமுமான காரியங்களிலே அவள் தன் நேரத்தைப் போக்காமல். அடிக்கடி தெய்வாலயத்துக்கு வந்து, உபவாசம்பண்ணி, ஜெபம் செய்து, இப்படியே தெய்வபத்தியாய்த் தன்னுடைய நேரத்தை எல்லாம் செலவிட்டாள். இந்தத் தெய்வபத்தியுள்ள விதவையும் இயேசு பிள்ளையைக் கண்டாள். சிமெயோனோடு சேர்ந்து, கர்த்தரைப் புகழ்ந்து ஸ்தோத்திரித்தாள். ஏனெனில், அவள் மெய் விசுவாசியாயிருந்தாள். இஸ்ரவேலரையும் புறச்சாதியாரையும் இரட்சிக்கப்போகிற கிறிஸ்துவைத் தான் கண்டு சந்தித்ததால் அவள் மிகுந்த ஆறுதல் அடைந்தாள். இவளைப்போலே எருசலேம் பட்டணத்தில் இன்னும் சில பக்திமான்கள் இருந்தார்கள். அவர்களும் உலக இரட்சகர் எப்பொழுது வருவாரோ என்று மிகுந்த ஆவலாய்க் காத்திருந்தார்கள். இரட்சகர் பிறந்திருக்கிற செய்தி அந்த விசுவாசிகளுக்கும் தெரியவந்தால், அவர்களும் ஆறுதல் அடைந்து சந்தோஷப்படுவார்களே என்று அவள் நினைத்தாள். அவர்களிடத்திலே போய், தான் எருசலேம் தெய்வாலயத்தில் இயேசு பாலகனைக் கண்ட காட்சியையும், அவரால் தனக்குக் கிடைத்த ஆறுதலையும், அங்கே தான் கண்டதும் கேட்டதுமான மற்றச் சங்கதிகளையும் அவர்களுக்கு விவரமாய்த் தெரிவித்தாள்.



பிரியமானவர்களே, நம்முடைய சபையிலுள்ள ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும், முக்கியமாய் விதவைகளும், இந்த அன்னாளைப்போல் இருந்தால், எவ்வளவு நன்மையாயிருக்கும். அவள் தன்னுடைய இரட்சிப்புக்காகக் கவலைப்பட்டாள், மற்றவர்களுடைய இரட்சிப்புக்காகவும் கவலைப்பட்டாள். தான் இயேசுவை விசுவாசித்தாள், மற்றவர்களையும் விசுவாசத்துக்குத் தூண்டிவிட்டாள். நாம் அவளைப்போல் செய்கிறோமா. நம்முடைய விதவைகளில் எத்தனை பேருக்கு இரட்சிப்பைப்பற்றிய கவலையே கிடையாது. வயிற்றுக் கவலையே அவர்கள் முக்கிய கவலை. அவர்கள் ஆராதனைக்கு ஒழுங்காய் வருகிறதில்லை. வீட்டுக்கு வீடு நுழைந்து, வீண்வார்த்தைகளைப்பேசி, வம்புக்கு நின்று, தங்கள் காலத்தைப் பாவத்தில் கழிக்கிறார்கள். இது சரியல்ல. தனித்திருக்கிற உத்தம விதவையோவென்றால் பராபரனை நம்பி, இரவும் பகலும் வேண்டுதல்களிலுஞ் செபங்களிலும் தரித்திருக்கிறாள், மோக விகாரியோ உயிரோடே செத்தவள் (1 தீமோ. 5, 5. 6) என்ற வேதவாக்கியத்தை நம்முடைய விதவைகள் நினைத்து நடப்பார்களாக. அவர்களுடைய நல் நடக்கையும் வார்த்தையும் அவர்களைச் சூழ இருக்கிற மற்றவர்களைத் தெய்வபத்திக்கு ஏவவும், நல்வழிக்குக் கொண்டுவரவும் உதவியாயிருக்கும்.

இப்படியே இயேசுநாதர் சிமெயோனுக்கும், அன்னாளுக்கும், எருசலேமில் இருந்த மற்ற அநேகருக்கும், ஆறுதலையும் சந்தோஷத்தையும் கொடுத்ததும் அல்லாமல், நாசரேத்துக்குத் திரும்பின யோசேப்புக்கும் மரியாளுக்கும் ஆறுதலும் சந்தோஷமுமான பிள்ளையாய் வளர்ந்தார். ஆவியிலே பலங்கொண்டார், ஞானத்தினால் நிறையப்பட்டார், பராபரனுடைய கிருபை அவர் மேல் இருந்தது.

இயேசு இரட்சகரே, தேவரீர் எங்களிலும் வளர்ந்து, எங்கள் விசுவாசத்தைப் பலப்படுத்தி, நாங்கள் சிமெயோனைப் போல மரணத்துக்கு ஆயத்தமாகவும், அன்னாளைப்போல் உம்மைக்குறித்துச் சாட்சிகொடுக்கவும் எங்களுக்குக் கிருபைசெய்தருளும், சுவாமி. ஆமேன்.

## வருஷப் பிறப்பின் பண்டிகை.

லூக். 2, 21.

பிரியமானவர்களே,

நாம் இன்றைக்குப் புதிய வருஷத்தைத் துவக்குகிறோம். இதைத் துவக்கப்பண்ணுகிறவர் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துதான், அவர் சுன்னத்துப் பெற்று, இயேசு என்கிற அருமையான பேரைத் தரித்துக்கொண்ட நாள் இது. இந்த நா

ளோடு நாம் வருஷத்தைத் துவக்குவது பெரிய ஆறுதல். இயேசு என்கிறபெயருக்கு இரட்சகர் என்கிற அர்த்தம். அவருக்கு இயேசு என்கிற பெயரைக் கொடுக்கச் சொன்ன தேவதூதன்: அவர் தமது சனத்தின் பாவங்களை நீக்கி, அவர்களை இரட்சிப்பார் என்றுசொல்லியிருந்தான் (மத். 1, 21). இந்த இரட்சகர் பேரிலே விசுவாசித்து, அவருடைய வார்த்தையை உறுதியாய் நம்பி, அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கத் தீர்மானம்பண்ணி, அவரை நோக்கி உட்கருத்தாய்ச் செபம்செய்து, இந்த வருஷத்தைத் துவக்குகிறவர்கள் ஆரோ, அவர்கள் இயேசுவின் நாமத்திலே வருஷத்தைத் துவக்குகிறார்கள். இயேசுவின் நாமத்திலே செய்கிற எந்தக் காரியமும் நன்மையும் செம்மையுமாய் முடியும். ஆகையால், நாமும் இயேசுவின் நாமத்திலே இந்தப் புதிப் வருஷத்தைத் துவக்குவோமாக. இது இயேசுவின் நாமத்தைத் தரித்த வருஷமாம்.

**இயேசுவின் நாமத்தைத் தரித்த வருஷம் நமக்கு எப்படிப்பட்ட வருஷமாம்.**

1. அது ஆசீர்வாதமுள்ள வருஷமாகும்.
2. நாம் கணக்குக் கொடுக்க வேண்டிய வருஷமுமாகும்.

## 1.

இயேசுவின் நாமத்திலே நாம் துவக்குகிறதும் அந்த நாமத்தைத் தரித்ததுமான வருஷம் நமக்கு ஆசிர்வாதமான வருஷமாயிருக்குமென்பதற்கு எந்தச் சந்தேகமுமில்லை.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து யூத பிள்ளையாய்ப் பிறந்தினால், அவருக்குஎட்டாம் நாளிலே சுன்னத்துப்பண்ணினார்கள். இதினால்அவர் யூதர் கைக்கொள்ளவேண்டிய நியாயப்பிரமாணத்துக்குத் தம்மைக் கீழ்ப்படுத்தினார். அவரால் நாம்நியாயப்பிரமாணத்தின் சாபத்துக்கு நீங்கலாக்கி இரட்சிக்கப்பட்டோம். நியாயப்பிரமாணத்தின் கற்பனைகளை மீறிநடந்தவன் கர்த்தரால் தண்டிக்கப்படுவான். நரகம் அவன் பங்கு. நாமெல்லாரும் கர்த்தருடைய கற்பனைகளை மீறி நடந்த பாவிகள். கடந்துபோன வருஷத்திலும் அதற்கு முந்தியும் நாம் செய்திருக்கிற பாவங்கள் கொஞ்சமா. இவைகளுக்காகப் பராபரன் நம்மைத் தண்டித்து நரகத்திலே தள்ளுவது நியாயமல்லவா. என்றாலும், இயேசுநாதர் நமக்குப் பதிலாக நியாயப்பிரமாணத்தை முழுவதும் கைக்கொண்டு, பராபரனுடைய சித்தத்தின்படி முழுவதும் பரிசுத்தராக நடந்தார், நாம் மீறின நியாயப்பிரமாணத்தின் சாபத்தைச் சுமந்து பாடுபட்டு மரித்தார். இந்த விதமாய் அவர் நமக்குப் பிணையாளியானதால், பராபரன் அவர் முகத்தைப் பார்த்து, நம்மைத் தண்டியாமல் விடுகிறார். நம்முடைய பாவங்களையெல்லாம் கிருபை



யாய் மன்னிக்கிறார். இப்படியே இயேசுநாதர் நம்மை நியாயப்பிரமாணத்தின் சாபத்துக்கும் பராபரனுடைய கோபத்துக்கும் நீங்கலாக்கும் இரட்சகராயிருக்கிறார். ஆகையால் இது நமக்கு ஆசீர்வாதமுள்ள வருஷமே.

அல்லாமலும், அவரை முன்னிட்டுப் பராபரன் நம்மைத் தம்முடைய பிள்ளைகளாக்கி, அப்பா பிதாவே யென்று கூப்பிடுகிற தம்முடைய குமாரனின் ஆவியை நமக்குக் கொடுக்கிறார். இந்தப் புதுவருஷத்திலும் நாம் நம்முடைய பரமதகப்பனிடம் சந்தோஷமாகச் சேர்ந்து இயேசுவை முன்னிட்டு நம்பிக்கையோடு செபம்பண்ணலாம். இதனால் இந்த வருஷம் நமக்கு ஆசீர்வாதமுள்ள வருஷமாகும்.

இயேசுநாதர் நம்முடைய ஆத்துமத்துக்குப் பாவமன்னிப்பையும் பிள்ளைத்தனத்தின் ஆவியையும் கொடுக்கிற இரட்சகராயிருப்பதுமல்லாமல், நம்முடைய சரீரத்துக்குவேண்டிய எல்லா நன்மையையும் கொடுக்கிற இரட்சகராகவும் இருக்கிறார். இந்தப் புதிய வருஷத்திலே என்னென்ன துன்பம் என்னென்ன சங்கடம் நமக்கு வருமென்று தெரியாது. தேசத்தில் பஞ்சம் வருமோ, கொள்ளைநோய் வருமோ, யுத்தம் வருமோ, வெள்ளம் வருமோ, யாருக்குத் தெரியும். நம்முடைய குடும்பங்களிலே எத்தனை வியாதியோ, என்னென்ன தொல்லையோ, யார் சொல்லக்கூடும். இவைகளை நினைக்கும்போது நமக்குப் பயமும் திகிலும் உண்டாகிறது. ஆனாலும், இயேசுநாதர் நம்முடைய இரட்சகராயிருக்கையில், நாம் பயப்படவேண்டியதில்லை. அவர் தம்மை நம்பியிருக்கிற யாவரையும் எல்லாத் துன்பங்களுக்கும் நீங்கலாக்கிக் காப்பாற்றுவார். சூரியனும் சந்திரனும் நட்சத்திரங்களும் அவர் சொன்னதுபோல் நடக்கும், மேகங்கள் அவர் கட்டளையின்படி மழை பொழியும். விளை நிலங்கள் விளைச்சலையும், விருட்சங்கள் கனிவர்க்கங்களையும் அவர் மனம்போல்நமக்குக் கொடுக்கும்.

அவர் ஏழை ஊழியக்காரன் ரூபெடுத்து இந்த உலகத்தில் நடந்து திரிந்த காலத்திலே அவர் எத்தனை வியாதிக்காரருக்குச் சுகம் கொடுத்தார். இப்பொழுதும் நமக்கு வரும் வியாதிகளும் துன்பங்களும் அவருடைய சொல்லுக்குக் கீழ்ப்படியாமல் போகுமா. அவர் தம்மை நம்பியிருக்கும் பேர்களை எல்லாவித சங்கடங்களுக்கும் நீங்கலாக்கி, சரீரத்திற்கும் சீவனுக்கும் வேண்டிய சகல நன்மைகளையும் அவர்களுக்கு அளித்து, அவர்களை ஆசீர்வதிக்கும் இரட்சகராயிருக்கிறார். நாமும் அவரை நம்பியிருப்போமாகில், நமக்கும் இந்த வருஷம் ஆசீர்வாதமுள்ள வருஷமாயிருக்கும். இயேசுநாதர் நம்முடைய இரட்சகர் என்பதைப் போன வருஷத்தில் எப்படிப் பார்த்தோமோ, அப்படியே இந்த வருஷத்திலும் பார்ப்போம். இயேசு கிறிஸ்து நேற்றும் இன்

றும் என்றென்றைக்கும் அவரே என்று எழுதியிருக்கிறது (எபி. 13, 8). மனிதர் மாறிப்போவார்கள், காலங்கள் மாறிப்போம், கர்த்தர் மாறுகிறவரல்ல. பருவதங்கள் விலகி, குன்றுகள் சாய்ந்தாலும், நம்முடைய கிருபை உன்னை விட்டு விலகாமலும் நம்முடைய சமாதானத்தின் உடன்படிக்கை சாயாமலுமிருக்குமென்று உன் மேல் மனதுருகிற கர்த்தர் சொல்லுகிறார் (எசா. 54, 10).

இந்த வருஷத்தில் நமக்கு ஒருவேளை பாடுகளும், பலவித உபத்திரவங்களும், மரணமும் வந்தாலும் வரலாம். போன வருஷத்தில் எத்தனை பேரோ இறந்துபோனார்கள். இந்த வருஷத்திலும் நம்மில் யாராவது இறந்துபோக நேரிடலாம். இயேசுவை நம்பியிருக்கிறவர்களுக்கோ இவைகளெல்லாம் நன்மையாகவே முடியும். அவர்களுடைய சிறு துன்பங்கள் அவர்களைப் பெருந் துன்பங்களுக்கு விலக்குகிற வழியாகும். அவர்களுக்கு வரும் எல்லா உபத்திரவங்களும் அவர்களுடைய விசுவாசத்தைப் பலப்படுத்த உதவியாகும். அவர்கள் அடையும் மரணம் அவர்களை மோட்சத்துக்குக் கொண்டுபோகும் சிநேகிதனாகும். இப்படியெல்லாம் ஆக்குகிறவர் இயேசு என்கிற நம்முடைய இரட்சகர் தான். ஆகையால் அவரை நம்பி, இந்தப் புது வருஷத்தைத் துவக்குகிறவன் எவ்வளவு பாக்கியவான்.

2.

இயேசுவின் நாமத்தைத் தரித்த இந்த வருஷம் நாம் கணக்குக் கொடுக்கவேண்டிய வருஷமாகவும் இருக்கிறது என்பதை மறவாதிருப்போமாக.

பிரியமானவர்களே, நாம் உத்தரவாதமுள்ள சிருஷ்டிகள்; நாம் புத்தி சித்தம் உணர்ச்சியுள்ள மனிதர்கள். நாம் கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட சரீரத்துக்காகவும் ஜீவனுக்காகவும், கர்த்தர் நமக்குக் கொடுத்த பலவித வரங்களுக்காகவும், நாம் அவரால் அடைந்து அனுபவிக்கும் அன்னம், பானம், வஸ்திரம், வீடு, வாசல், ஆடு, மாடு, நில பலன்களுக்காகவும் அவருக்குக் கணக்குக் கொடுக்க வேண்டியவர்களாயிருப்பதுபோல், இப்பொழுது அவர் நமக்குக் கட்டளையிட்டிருக்கிற இந்தப் புது வருஷத்துக்காகவும் நாம் கணக்குக் கொடுக்கவேண்டும். கர்த்தர் நமக்கு ஒவ்வொரு வருஷத்தையும், ஒவ்வொரு நாளையும், ஒவ்வொரு நிமிஷத்தையும் கூட வீணுக்குக் கொடுக்கவில்லை. அவர் நமக்குக் கொடுத்திருப்பது கிருபையின் காலம். இதை இயேசுவின் நாமத்திலே கையாடுகிறவன் அதினால் பலன் அடைவான். இயேசுவின் நாமம் இந்த வருஷத்தின் வாசற்படியில் எழுதியிருக்கிறது. இதை நாம் இயேசுவின் நாமத்திலே கையாடுவதெப்படி.



இயேசுவைப் பற்றும் விசுவாசத்தோடே நாம் பிழைக்கவேண்டும். விசுவாசியாதவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். நமது ஆயுசு வளர வளர, நம்முடைய விசுவாசமும் வளரவேண்டும். நமக்குக் கிடைத்திருக்கும் நேரத்தையும், நமக்கு உள்ளது உரியது யாவையும் நம்முடைய இரட்சகருக்கு மகிமையாகக் கையாடவேண்டும். இந்த வருஷத்தில் ஒரே நாளையாவது ஒரே நிமிஷத்தையாவது இயேசுநாதருக்குக் கனக்குறைச்சல் உண்டாகும்படிக்குச் செலவழிக்காதிருப்போமாக.

நாம் இந்த வருஷத்தைக் குறித்துக் கணக்குக் கொடுக்கவேண்டியவர்களாயிருப்பதால், இயேசுநாதருடைய சித்தத்தின்படி அவருடைய கற்பனையின் வழியிலேயே நடக்கக் கடவோம். அவர் பகைக்கிற சகல பாவத்தையும் நாமும் பகைத்து, அவர் சிநேகிக்கிற சகல நன்மையையும் நாமும் சிநேகிப்போமாக. இயேசுவைத் தன்னுடைய இரட்சகரென்று விசுவாசிக்கிறவன் அவருடைய சித்தத்தின்படி நடக்காமல், பிசாசுக்கும் உலகத்துக்கும் மாமிசத்துக்கும் ஏற்றபடி நடக்கிறது எவ்வளவு பெரிய அநியாயம்.

இயேசுவின் நாமத்தைத் தரித்த வருஷத்தைப் பிசாசின் சித்தப்படியே பாவத்துக்குக் கையாடுகிறவன் பயங்கரமான நியாயத்தீர்ப்புக்குள்ளாவான். நாம் செய்கிற ஒவ்வொரு பாவத்தையும் நம்முடைய இரட்சகர் பார்ப்பார். பரிசுத்தராகிய அவருக்கு அது எவ்வளவு வேதனையாயிருக்கும். இயேசுநாதர் நம்மை இரட்சித்தது நாம் பாவத்துக்கு அடிமைகளாயிருந்து, பிசாசுக்கு ஊழியஞ் செய்கிறதற்காக அல்லவே. நாம் பாவத்தைப் பகைத்து, இயேசுவைச் சிநேகித்து; அவருக்குப் பணிவிடை செய்ய வேண்டுமென்றல்லவா அவர் நம்மை இரட்சித்தார். அவர் கிருபையாய் மன்னித்த பாவத்துக்குத் திரும்பிப்போய், மறுபடியும் மறுபடியும் பாவஞ் செய்கிறவர்கள், தான் கக்கினதைத் தின்கிற நாய்க்கும் குளிப்பாட்டப்பட்ட பின் சேற்றில் புரளுகிற பன்றிக்கும் ஒப்பாயிருக்கிறார்கள்.

ஆகையால், நாம் எச்சரிக்கையாயிருக்கக் கடவோம். வருஷம் புதிதாயிருந்தாலும், நம்முடைய பழைய சத்துருவாகிய பிசாசு இன்னம் உயிரோடிருக்கிறான். பலவானாகிய நம்முடைய இரட்சகரைப் பற்றும் விசுவாசத்தினால் அவனோடு எதிர்த்து நிற்போமாக. அந்தப் பழைய சத்துருவை வெல்லத்தக்க பழைய ஆயுதம் நமக்கிருக்கிறது. அது அவருடைய வசனந்தான். இதற்கு ஆவியின் பட்டயமென்று பெயர். இந்த வசனத்தைக் கருத்தாய்க் கேட்டுப் படிக்கிறவர்கள் மாத்திரம் பிசாசோடு எதிர்த்து நிற்கக் கூடியவர்கள். ஆகையால், இந்த வருஷத்தில் நாம் அதிகப் பக்திவைராக்கியத்தோடே ஆராதனைக்கு வந்து, கருத்தும்

கவனமுமாகப் பராபரனுடைய வசனத்தைக் கேட்டுப் படிக்கக் கடவோம். மேலும், நம்முடைய தெய்வபத்தி, கோயில்பத்தியாய் மட்டும் இருப்பது போதாது. நம்முடைய வீட்டிலும் தெய்வபத்தி காணப்படவேண்டும். ஒவ்வொரு காலையிலும் நம்முடைய வாயில் பிறக்கவேண்டிய முதற்சொல் இயேசு என்கிற பரிசுத்த நாமம். ஒவ்வொரு மாலையிலும் நம்முடைய வாயில் பிறக்க வேண்டிய கடைசிச் சொல் அதுவே. நம்மில் வாசிக்கக் கூடியவர்கள் தினந்தோறும் பார்க்கவேண்டிய முதற் புத்தகம் வேதபுத்தகமே. அதுவே நாம் படுக்கு முன்னும் வாசிக்க வேண்டியது. அந்தப் புத்தகத்தின் சத்தும் சாரமும் இயேசுநாதர்தான்.

இயேசுவை முன்னிட்டு வருஷத்தைத் துவக்குகிற நாம் நம்முடைய வேலைகளை அவருக்கு மகிமையும் அவருடைய பிள்ளைகளுக்கு நன்மையுமாய்ச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். இதை இயேசு இரட்சகருடைய ஐக்கியத்திலிருந்தாலன்றி நாம் செய்து முடிக்கமாட்டோம். என்னையல்லாமல் நீங்கள் ஒன்றுஞ் செய்யக்கூடாதென்று நம்முடைய இரட்சகர் சொல்லியிருப்பதால், நாம் இந்த வருஷத்தின் ஒவ்வொரு நாளிலும் அவருடைய உதவியையும் ஒத்தாசையையும் தேடக் கடவோம். கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும், தேடுங்கள் அப்பொழுது கண்டுபிடிப்பீர்கள், தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படுமென்று அவர் சொல்லியிருக்கிறபடியால், உட்கருத்தான செபத்திலே தம்மைத் தேடிவருகிறவர்களுக்கு அவர் தென்பட்டு, அவர்களைத் தமக்கு உகந்த நெருக்கமான பாதையிலே நடத்தி, அவர்களைப் பாவத்துக்கு விலக்கிக் காத்து, இந்த வருஷத்தை நன்மையாக முடிக்கப் பண்ணுவார்.

நான் இயேசு நாமத்தில்
தினம் எழுந்திருந்து,
நான் இயேசு நாமத்தில்
என் வேலைக்குட் புகுந்து,

நான் இயேசு நாமத்தில்
எப்போதும் யாவையும்,
துவக்கிக் கொள்ளவும்
முகித்துப் போடவும், ஆமேன்.

---

## வருஷப்பிறப்பின் பண்டிகைக்குப் பிந்தின ஞாயிறு.

மத். 2, 13—23.

பிரியமானவர்களே,

நாம் புது வருஷத்துக்குட்பட்டோம். இதில் நமக்குப் பலவிதமான மோசங்களுண்டு. பிசாசும் அதன் பிள்ளைகளும் பராபரனுடைய பிள்ளைகளைப் பகைப்பதால் அவர்களுக்குப் பலவிதத்திலும் சேதமுண்டுபண்ண பிரயாசப்படுகிறார்கள். ஆகையால், நாம் சிவந்த சமுத்திரத்தை எப்படிக் கடப்போம் என்று கலங்கித் தவித்த இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஒப்பாயிருக்கிறோம். மோசே கர்த்தருடைய கட்டளைப்படி தன் கோலை நீட்டின பொழுது சமுத்திரம் இரண்டாய்ப் பிளந்தது. இஸ்ரவேலர் கால் நனையாமல் சமுத்திரத்தைக் கடந்து அக்கரை சென்றார்கள். பார்வோன் ராசாவோ தன் சேனையோடு சமுத்திரத்தினால் மூடுண்டு அழிந்தான். நாமும் பராபரனுடைய சர்வவல்லமையுள்ள பாதுகாப்பில் இருப்பதினாலே கொஞ்சமும் பயப்படத் தேவையில்லை. உம்முடைய சித்தம் பரமண்டலங்களில் செய்யப்படுகிறதுபோல் பூமியிலேயும் செய்யப்படுவதாக வென்று நாம் செபம் பண்ணுகிறோம். தம்முடைய சித்தத்துக்குக் கீழ்ப்பட்டிருக்கும் பிள்ளைகளைக் கர்த்தர் தம்முடைய சித்தத்தின்படியே நடத்துகிறார். அதினால் பிசாசின் சித்தமாவது அவனுடைய பிள்ளைகளாகிய துஷ்ட சத்துருக்களின் சித்தமாவது நிறைவேறாமல் போகிறது. இந்த ஆறுதலான போதனையை நாம் இப்பொழுது வாசிக்கக் கேட்ட சுவிசேஷ வாக்கியத்தினால் கற்றுக் கொள்ளுகிறோம்.

சத்துருக்களால் உண்டாகும் மோசத்தில் பராபரன் தம்முடைய பிள்ளைகளை எப்படிக் காக்கிறார் என்று இப்பொழுது தியானிப்போம்.

1. பராபரன் தம்முடைய பிள்ளைகளைச் சீவனில் எப்படிக் காக்கிறார்.
2. அவர்களை அவர் சாவில் எப்படிக் காக்கிறார் என்று பார்ப்போம்.

### 1.

சத்துருக்களால் மோசம் உண்டாகும்பொழுது பராபரன் தம்முடைய பிள்ளைகளை சீவனில் எப்படி காக்கிறார் என்று பார்ப்போம்.

கிழக்கு சாஸ்திரிகள் பெத்லேகம் ஊருக்கு வந்து, இயேசு இரட்சகரைக் கண்டு, அவரைப் பணிந்துகொண்டு, தங்கள் சொந்தத் தேசத்துக்குத் திரும்பினார்கள். அவர்கள் ஏரோதே தங்களுக்குச் சொல்லியிருந்தபடி எருசலேமுக்குத் திரும்பி, அவனுக்குப் பிள்ளையின் செய்தியைத் தெரிவிக்கவில்லை. ஏரோதே என்ற துஷ்ட ராசா பிள்ளையைக் கொல்ல மனதாயிருந்தான். அவன் மனதில் இருந்த இந்தக் கொடிய யோசனையைப் பராபரன் அறிந்து, அந்தச் சாஸ்திரிகள் எருசலேமுக்குத் திரும்பாதபடி தடுத்தார். மேலும், அந்தக் கொலைபாதகனுக்கு விலக்கமாய்த் தம்முடைய குமாரனைக் காக்கச் சித்தமாயிருந்த பராபரன் தம்முடைய தூதனை யோசேப்பினிடம் அனுப்பி அவனை எச்சரித்தார். அந்தத் தூதன் சொப்பனத்தில் யோசேப்புக்குக் காணப்பட்டு: நீ எழுந்திருந்து, பிள்ளையையும் அதின் தாயை

யும் கூட்டிக்கொண்டு, எகிப்துக்கு ஓடிப்போய், நான் உனக்குச் சொல்லுமட்டும் அவ்விடத்தில் இரு; ஏனென்றால் ஏரோதே பிள்ளையைக் கொல்வதற்குத் தேடுவான் என்றான்.

இயேசு பிள்ளைக்கு ஏரோதேயினால் பெரிய மோசம் நேரிடப் பார்த்தது. அவன் அவருடைய பிராணனை வாங்கத் தேடினான். இது போலவே அவரை விசுவாசிக்கிற பராபரனுடைய பிள்ளைகளுக்கும் இந்த உலகத்தில் அநேக மோசங்கள் உண்டு. முக்கியமாய்ப் பிசாசு கெர்ச்சிக்கிற சிங்கம்போலே எவனை விழுங்கலாமோ என்று சுற்றித்திரிகிறது. ஆகிலும் பராபரன் தம்முடைய பிள்ளைகளைக் காப்பாற்றுகிறார். இயேசு பிள்ளையை ஏரோதேயின் கைக்கு விலக்கிக் காக்கும்படி யோசேப்பினிடம் தம்முடைய தூதனை அனுப்பினார். அப்படியே எல்லாக் காலத்திலும் தம்முடைய பிள்ளைகளைக் காக்கும்படி கர்த்தர் தம்முடைய தூதர்களை அனுப்புகிறார். தானியேல் தீர்க்கதரிசியைத் துஷ்டர்கள் கூடி, சிங்கக் கெபியில் போட்டபொழுது கர்த்தர் தம்முடைய தூதனை அனுப்பிச் சிங்கங்களின் வாயை அடைத்தார். சாதுராக், மேஷாக், ஆபேத்நேகோ என்ற பத்திமான்களை அக்கினிச் சூளையில் போட்ட பொழுதும் அதேவிதமாகக் காப்பாற்றினார். ஏரோதே இராசா பேதுரு அப்போஸ்தலனை அநியாயமாய்க் காவலில் போட்டபொழுது கர்த்தர் தம்முடைய தூதனை அனுப்பி அவரை விடுவித்தார். நம்மையும் அநேக மோசங்களில் நமக்குத் தெரியாமலே தேவ தூதர்களை அனுப்பி விடுவித்திருக்கிறார்.

வரப்போகிற மோசம் யோசேப்புக்குத் தெரியாதிருந்தும், கர்த்தருக்குத் தெரிந்திருந்தது என்று இதனால் பார்க்கிறோம். இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குகிறதுமில்லை தூங்குகிறதுமில்லை. கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கமாய்க் காப்பாரென்று எழுதியிருக்கிறது (சங். 121, 4. 7).

ஏரோதேயின் மோசக் கருத்து யோசேப்புக்கும் மரியாளுக்கும் தெரிந்தாலும், அவனுடைய கெட்ட யோசனையைத் தடுக்கிறதற்கு அவர்களால் முடியாது. எல்லாவற்றையும் அறிந்தவரும், அளவற்ற ஞானமுள்ளவரும், சர்வத்துக்கும் வல்லவருமாகிய கர்த்தர் ஒருவர் மாத்திரம் சத்துருக்களின் ஆலோசனையை நிர்மூலமாக்கக் கூடியவர். அவரால் ஏரோதே இராசாவின் கெட்ட எண்ணம் நிறைவேறாமல் போயிற்று.

யோசேப்பு கர்த்தர் தனக்குச் சொன்னபடியே இராவிலே பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு, எகிப்துக்குப் புறப்பட்டுப்போய், ஏரோதேயின் மரண பரியந்தம் அவ்விடத்தில் இருந்தான். நம்மை இரட்சிக்க வந்த இயேசு பாலகன் தம்முடைய சத்துருக்களின் நிமித்தம் ஊரை விட்டு ஊருக்கு



ஓடி, பரதேசிபோல் அலையவேண்டியதாயிற்று. அவரை விசுவாசிக்கிற நாமும் இந்த உலகத்தில் பரதேசிகள் தான். நமக்கு இந்த உலகம் அந்நிய தேசம்; இங்கே நாம் நிலைவரமாய்க் குடியிருக்க முடியாது. கர்த்தர் நம்மை நம்முடைய சொந்த தேசமாகிய பரலோகத்துக்குக் கொண்டு போகும் வரைக்கும் நாம் அவருடைய சித்தத்தின்படியே அலைந்து திரியவேண்டியவர்களாயிருப்போம்.

நம்முடைய அலைச்சலில் நமக்கு எவ்வளவு பாடுகளிருந்தாலும், கர்த்தர் நம்மோடு இருக்கிறார். அவருடைய தூதர்கள் நம்மைச் சுற்றிலும் இருந்து நம்மைக் காக்கிறார்கள். இது நமக்கு எவ்வளவு பெரிய ஆறுதல். இயேசுநாதரைக் கொலை செய்யத் தேடின ஏரோதே இராசா உயிரோடிருக்கையிலேயே அவன் சரீரத்தை புழுக்கள் தின்றது, அவன் சதை அழுகிப்போயிற்று. அவன் மகா பயங்கரமாய்ச் செத்தான். அவன் செத்துப்போன பின் கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் யோசேப்புக்கு எகிப்திலே காணப்பட்டு: நீ எழுந்திருந்து, பிள்ளையையும் அதன் தாயையும் கூட்டிக்கொண்டு, இஸ்ரவேல் தேசத்துக்குப் போ; அதேனென்றால் பிள்ளையின் பிராணனை வாங்கத் தேடினவர்கள் சென்றுபோனார்கள் என்றான்.

இந்தச் செய்தியைக் கேட்டவுடனே யோசேப்பும் மரியாளும் யூதேயாவிலுள்ள பெத்லகேமுக்குத் திரும்பி, அங்கே பிள்ளையை வளர்க்க ஆசைப்பட்டார்கள். ஆகிலும், இந்த ஆசை நிறைவேறவில்லை. பெத்லகேம் ஊருக்குச் சமீபமான எருசலேம் பட்டணத்தில், செத்துப்போன ஏரோதே இராசாவுக்குப் பதிலாகப் பட்டத்துக்கு வந்த அர்கெலாவு என்பவன் தன் தகப்பனைப் போலக் கொடுமையான மனுஷனென்று யோசேப்பு கேள்விப்பட்டு, அங்கே போகப் பயந்தான்.

இயேசுபிள்ளையைக் காப்பாற்றச் சித்தமாயிருந்த பராபரன் அவரை நாசரேத்து ஊருக்குக் கொண்டுபோக யோசேப்புக்கு உத்தரவு பண்ணினார். இயேசுநாதர் பெத்லகேம் ஊரில் பிறப்பது தீர்க்கதரிசனம் நிறைவேறுகிறதற்கு எப்படி அவசியமாயிருந்ததோ, அப்படியே நாசரேத் ஊரில் அவர் வளர்வதும் தீர்க்கதரிசனம் நிறைவேற அவசியமாயிருந்தது. கலிலேயா நாட்டிலிருந்த நாசரேத் என்ற கிராமம் யூதர்களால் அற்பசொற்பமாக எண்ணப்பட்டது. இயேசுநாதர் அற்பசொற்பமான ஊரிலே, ஒரு ஏழைக் குடும்பத்திலே, எளிமைத்தனத்திலே, வளரவேண்டுமென்பது சகல தீர்க்கதரிசிகளும் முன்னுரைத்த பராபரனுடைய தீர்மானம். இந்தத் தம்முடைய தீர்மானம் நிறைவேறும்படி பராபரன் இயேசுபிள்ளையைக் காப்பாற்றி, நாசரேத் ஊருக்கு அனுப்பினார்.

தம்முடைய குமாரனாகிய இயேசுபிள்ளைக்கு வந்த பெரிய மோசத்தில் பராபரன் எப்படி அவரைக் காப்பாற்றி, அவரை உயிரோடே வைத்தாரோ, அப்படியே நமக்குஞ் செய்கிறார். பராபரனுக்குத் தெரியாமல் ஒரு மோசமும் நமக்கு வராது. அவர் தடுத்துப்போட முடியாத ஒரு மோசமுமில்லை. ஆகையால்,

விழுங்கவாற பேய்களால்
பூலோகம் ரம்பினும்
பயப்படோம்; கர்த்தாவினால்
எதிர்த்து நிற்கத்தானும்,
இருளின் பிரபு
சீறியும், அந்த
வெல்லப்பட்ட பேய்
தன் ஞண்கத் தீர்ந்தே;
ஓர் சொல்லினால் முறியும்.

2.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளைச் சாவில் எப்படித் தற்காக்கிறார் என்று பார்ப்போமாக.

கிழக்குச் சாஸ்திரிகள் தன் மனம்போல் எருசலேமுக்குத் திரும்பி வராததைக் கண்ட ஏரோதே மிகவும் கோபமடைந்து, பெத்லகேமிலும் அதன் சகல எல்லைகளிலும் இரண்டு வயது முதற்கொண்டு அதற்குக் கீழ்த்தரமாயிருக்கிற சகல ஆண்பிள்ளைகளையுங் கொன்றுபோட ஆட்களை அனுப்பினான். ஏரோதே இயேசுபிள்ளையைக் கொன்றுபோட மனதாயிருந்தும், அவர் இருக்கிற இடம் எதுவென்றும், அவருக்கு இப்பொழுது வயது என்னவென்றும் தெரியாமல் விழித்தான். ஆகிலும், பெத்லகேமிலும் அதன் சகல எல்லைகளிலும் இரண்டு வயதுக்குட்பட்ட ஆண்பிள்ளைகளையெல்லாம் கொன்றுபோட்டால், அதில் இயேசுபிள்ளையும் அகப்பட்டுச் செத்துப்போவாரென்று எண்ணினான். இந்தக் கெட்ட எண்ணத்தால் அநேக அநேக பிள்ளைகள் அநியாயமாய்க் கொலையுண்டார்கள். அவர்கள் அவனுக்கு விரோதமாகவாவது அவனுடைய இராச்சியத்துக்கு விரோதமாகவாவது யாதொரு பொல்லாப்பும் செய்ததில்லை. இயேசுபிள்ளையைப் பகைத்த பகையால் இந்தப் பிள்ளைகளையும் ஏரோதே பகைத்துக் கொடுமையாய்ச் சங்கரித்தான்.

பராபரனுடைய பிள்ளைகள் இந்த உலகத்தாருக்கு ஒரு தீமையையும் செய்யாவிட்டாலும், உலகத்தார் பராபரனைப் பகைக்கிறதினாலே அவர்களையும் பகைத்து அவர்களுக்கு அநியாயஞ் செய்கிறார்கள். உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களுக்கு முன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள். உலகத்தாராயிருந்தீர்களானால், உலகந் தன்னுடையதைச் சிநேகித்திருக்குமாம்; நீங்களோவெனில் உலகத்தாராயிராமல், நான் உங்களை உலகத்துக்கு விலக்கித் தெரிந்துகொண்டபடியினாலே உலகம் உங்களைப் பகைக்கிறதென்று இயேசுநாதர் தம்முடைய சீஷர்களுக்குச் சொன்னார் (யோவா. 15, 18. 19).



இயேசு பிள்ளையைக் காப்பாற்றின பராபரன் பெத்லகேமிலிருந்த மற்றப் பிள்ளைகளையும் ஏரோதேயின் கைக்கு விலக்கிக் காக்கக் கூடியவராயிருந்தும், அவர்களை அவர் காப்பாற்றாமல் கொலையுண்பதற்கு இடம் கொடுத்தாரே, அவர் தம்முடைய பிள்ளைகளைக் காக்கிறவரென்று சொல்லலாமா என்று ஒருவேளை கேட்போம். பிரியமானவர்களே, பராபரன் தம்முடைய ஞானமும் நன்மையுமுள்ள சித்தத்தின்படியே சிலரை உயிரோடே வைத்துக் காக்கிறார். சிலரைச் சாகப்பண்ணிக் காக்கிறார். இயேசு பாலகனை உயிரோடே வைத்துக் காப்பாற்றினார். மற்றப் பிள்ளைகளை சாகப்பண்ணிக் காப்பாற்றினார். சிலருக்குச் சரீரம், ஆத்துமா இரண்டும் சேதமடையாமல் காக்கிறார். சிலருக்கோ சரீரம் சேதமடைந்தும், ஆத்துமா சேதமடையாமல் காக்கிறார். அவர் தம்முடைய வல்லமையைத் தம்முடைய ஞானத்தின்படியே கையாடுகிறார். இயேசு பிள்ளைக்குப் பராபரன் குறித்திருந்த வேலை இன்னம் முடியாதிருந்தபடியால் அது முடியுமட்டும் அவரைக் காப்பாற்றி வைத்தார். மற்றப் பிள்ளைகளுக்கோ அவர் குறித்திருந்த வேலை முடிந்துபோயிற்று. ஆகையால் அவர்கள் சாகிறதற்கு இடங்கொடுத்தார். மேலும், அந்தப் பிள்ளைகள் மற்ற மனிதரைப் போல் வெகுகாலம் பிசாசோடு போராடி ஜெயமடையாமல், சுருக்கப் போராட்டத்துக்குப் பின் ஜெயமடைய வேண்டுமென்று அவர் பிரியப்பட்டார்.

அன்றியும், இந்தப் பாவ உலகத்தில் அவர்களை நெடுநாளைக்கு வைக்காமல், அவர்கள் பிசாசின் கண்ணிகளுக்கு உட்படு முன்னமே தம்முடைய மோட்ச இராச்சியத்தில் பிரவேசிக்க வேண்டுமென்கிற ஆசையினால் அவர்கள் கொலையுண்பதற்குக் கர்த்தர் இடம் கொடுத்தார்.

பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்குத் தடைபண்ணாமல் இடங்கொடுங்கள்; ஏனென்றால், வான இராச்சியம் அப்படிக்கொத்தவர்களுடையதாயிருக்கிறதென்று இயேசுநாதர் சொன்னார். ஆகையால் மகிமையின் இராச்சியமாகிய வான இராச்சியத்தைப் பராபரன் அந்தப் பிள்ளைகளுக்குக் கொடுக்கச் சித்தமானார். பிள்ளைகளைச் சிறுவயதில் சாகக் கொடுப்பது பெற்றாருக்கு வியசனமான காரியமாயிருந்தும், அவர்கள் வான இராச்சியத்துக்குட் பிரவேசித்தார்களென்று விசுவாசிப்பது அவர்களுக்கு எத்தனை பெரிய ஆறுதல்.

சின்னவர்களும் பெரியவர்களுமான தம்முடைய பிள்ளைகளைப் பராபரன் பிசாசுக்கும் பாவத்துக்கும் விலக்கி, மரணத்தின் வழியாய்த் தம்மண்டைக்கு அழைத்துக் கொள்ளுவதற்காக விசுவாசிகள் ஒருபோதும் முறுமுறுக்காமல்; கர்த்தர்

கொடுத்தார், கர்த்தர் எடுத்தார், கர்த்தருடைய நாமம் ஸ்தோத்திரிக்கப்படக் கடவது என்று சொல்லுகிறார்கள்.

நாமும், கர்த்தர் நம்மை உயிரோடே வைக்கும் காலத்தில், அவருடைய பாதுகாப்புக்காக அவரை எப்படி ஸ்தோத்திரிக்கிறோமோ, அப்படியே நம்முடைய மரணத்திலும் அவருடைய பாதுகாப்புக்காக அவரை ஸ்தோத்திரிக்கக் கடவோம். ஸ்தோத்திரம் செலுத்தும் நன்றியுள்ள இருதயம் நமக்கிருப்பது நல்லது. அப்பொழுது: ஸ்தோத்திரத்தைப் பலியிடுகிறவன் நம்மை மகிமைப்படுத்துகிறான்; இப்படி வழியை ஆயத்தப்படுத்துகிறவனுக்குப் பராபரனுடைய இரட்சிப்பைக் காண்பிப்போமென்ற ஆறுதலான வாக்குத்தத்தத்தை இந்த வருஷத்திலும் கர்த்தர் நம்மிடத்தில் நிறைவேற்றுவார்.

பரம தகப்பனே, எங்கள் ஆத்துமத்தையும் சரீரத்தையும் உம்முடைய பாதுகாப்பில் ஏற்றுக்கொண்டு, எவ்வித மோசங்களுக்கும் எங்களை விலக்கிக் காத்தருளும், சுவாமி. ஆமேன்.

---

## மகிமை விளங்கின பண்டிகை.

மத். 2, 1-12.

பிரியமானவர்களே,

இயேசுநாதர் யூதர் நடுவே யூத குடும்பத்தில் யூத பிள்ளையாகப் பிறந்தார். யூதர்களோ அவரைத் தங்கள் மேசியாவாக ஒப்புக்கொள்ளவில்லை. அவரை விசுவாசித்த யூதர்கள் வெகு கொஞ்சம். ஆகிலும், கர்த்தர் தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவைப் புறச்சாதியாருக்கு வெளிப்படுத்தினார். புறச்சாதியாராகிய சாஸ்திரிகளுக்கு இயேசுநாதரை வெளிப்படுத்தின சங்கதி மகிமைவிளங்கின பண்டிகையாகிய இந்த நாளில் நமக்கு நினைப்பூட்டப்படுகிறது. தமிழ் நாட்டாராகிய நாமும் புறச்சாதியார். நமக்கும் கர்த்தர் தம்மை வெளிப்படுத்தித் தம்முடைய இரட்சிப்பில் பங்களித்திருக்கிறார். இதற்காக நாம் இந்த நாளில் மிகுதியும் சந்தோஷப்பட்டுக் கர்த்தரை ஸ்தோத்திரிக்க வேண்டியது. கிழக்கிலிருந்து வந்த சாஸ்திரிகளை நாம் கவனித்துப் பார்க்கையில், புறச்சாதியாராகிய யாவரும் கிறிஸ்துவண்டைக்கு வரலாமென்று நாம் அறிந்துகொள்வதோடு, அவரண்டை எப்படி வருகிறதென்றும், அவரில் எப்படி நிலைத்திருக்கிறதென்றும் அவர்களால் கற்றுக்கொள்ளலாம். இதனால் அவர்கள் நமக்கு நல்ல முன்மாதிரி என்பது விளங்கும்.



**கிழக்குச் சாஸ்திரிகள் புறச்சாதிக் கிறிஸ்தவர்களாகிய நமக்கு எதிலே நல்ல முன்மாதிரியாய் விளங்குகிறார்கள்.**

1. அவர்களுடைய விசுவாசத்திலும்,
2. அவர்களுடைய தெய்வபக்தியிலுந் தானே.

### 1.

கிழக்கிலிருந்து வந்த சாஸ்திரிகள் தங்கள் விசுவாசத்தில் நமக்கு நல்ல முன்மாதிரியாயிருக்கிறார்கள்.

அவர்கள் கர்த்தருடைய நடத்துதலைப் பின்பற்றினதினால் அவர்களுடைய விசுவாசம் நமக்கு விளங்கும். அவர்கள் வானசாஸ்திரிகள். நட்சத்திரங்களைப் பார்த்துப் பல சங்கதிகளை அறிந்துகொள்ளுகிறவர்கள். ஆதலால், பராபரன் தம்முடைய குமாரனாகிய இயேசுநாதரின் பிறப்பை நட்சத்திரத்தின் மூலமாய் அவர்களுக்கு வெளிப்படுத்தினார். பராபரன் தங்களுக்கு வெளிப்படுத்தினதை அவர்கள் முழுவதும் நம்பினார்கள். பூர்வ காலத்தில் மெய்யான பராபரனை விசுவாசித்த சில தீர்க்கதரிசிகளும், மற்றனேக யூதர்களும், இந்தச் சாஸ்திரிகள் குடியிருந்த தேசத்திலே போயிருந்ததினால், அவர்கள் மேசியாவைக்குறித்துச் சொல்லியிருந்த விசேஷங்கள் அந்த அஞ்ஞானிகளுக்குள் பரம்பியிருந்தது. யூதர்கள் காத்திருந்த ஒரு விசேஷித்த இராசாவினால் தங்களுக்கும் நன்மை வருமென்று அந்த அஞ்ஞானிகளும் விசுவாசித்தார்கள். யூதருடைய இராசாவாகிய மேசியா எப்பொழுது வருவாரோ என்று ஆசைப்பட்டுக்கொண்டிருந்த சாஸ்திரிகளாகிய அஞ்ஞானிகள் அந்த இராசாவைக் குறித்துக்காட்டும் ஒரு நட்சத்திரத்தைக் கண்டவுடனே பல தீர்க்கதரிசன வாக்கியங்கள் அவர்கள் ஞாபகத்துக்கு வந்திருக்கும். ஒரு நட்சத்திரம் யாக்கோபிலிருந்து உதித்து, ஒரு செங்கோல் இஸ்ரவேலிலிருந்து எழும்பி, மோவாபின் எல்லைகளை நொறுக்கும் (௪ மோசே 24, 17) என்ற பிலேயாமின் வாக்கியத்தை அவர்கள் ஒருவேளை நினைத்திருக்கலாம். அவர்கள் நட்சத்திரத்தைக் கண்ட காலமானது மேசியா வரப்போகிற காலம் இன்னதென்று தானியேல் தீர்க்கதரிசி (9 அதி.) சொல்லியிருக்கிறதற்குச் சரியாயிருந்ததால், இவர்களுடைய விசுவாசம் பலப்பட்டது. ஆகையால் அவர்கள் உடனே புறப்பட்டுக் கானான் தேசத்தின் தலைநகரமாகிய எருசலேம் பட்டணத்துக்கு வந்தார்கள். அந்தப் பட்டணம் இராசா குடியிருக்கும் பெரிய நகரமாயிருந்ததால் நட்சத்திரத்தால் குறிக்கப்பட்ட இராசபிள்ளை அங்கே பிறந்திருக்கவேண்டுமென்று அவர்கள் நினைத்தார்கள்.

இப்பொழுது புறச்சாதியாராகிய நம்மைக் கர்த்தரண்டைக்கு நடத்தும் நட்சத்திரம் எதுவென்று தெரியுமா. பராபரனு

டைய வசனந்தான் அந்த நட்சத்திரம். மகா திடமான தீர்க்கதரிசன வசனமும் நமக்குஉண்டே. பொழுது விடிந்து, உங்கள் இருதயங்களில் வெள்ளி உதிக்கும் மட்டும் நீங்கள் இருளான ஸ்தலத்தில் பிரகாசிக்கிற வெளிச்சமாகிய அதைக் கவனித்திருக்கிறது நற்செய்கையாயிருக்கிறது என்று எழுதியிருக்கிறது (௨ பேது. 1, 19). நாம் தெய்வவசனத்தைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொள்ளக்கடவோம். அதுவே நமக்குள் விசுவாசத்தை உண்டாக்கி, வளர்த்து, நம்மை ஆறுதல் படுத்துகிற எத்தனம். அந்தச் சாஸ்திரிகளும் உறுதியான விசுவாசத்துக்குவந்தது பராபரனுடைய வசனத்தினாலே தான். ஏனெனில், அவர்கள் யூதருடைய இராசா பிறந்திருக்கிற இடத்தை அறியாமல், ஏரோதேயினிடத்தில் விசாரித்தபொழுது அவன் சகல பிரதான ஆசாரியரையும் சனத்தின் வேதபாரகரையும் கூட்டி: கிறிஸ்து பிறப்பது எங்கே என்று அவர்களைக் கேட்டு விசாரித்தான். அவர்கள் அவனுக்குச் சொன்னதாவது: யூதேயாவின் ஊராகிய பெத்லகேமில்தானே, அதேதெனென்றால், யூதாவின் தேசமாகிய பெத்லகேமே, யூதாவின் பிரபுக்களில் நீ சிறியதல்ல; ஏனெனில் நம்முடைய சனமாகிய, இஸ்ரவேலை ஆளப்போகிற பிரபு உன்னிடத்திலிருந்து புறப்படுவார் என்கிறதாய்த் தீர்க்கதரிசியைக்கொண்டு எழுதப்பட்டிருக்கிறதென்றார்கள். இதனால் அந்தச் சாஸ்திரிகளுடைய விசுவாசமும் அறிவும் அதிகப்பட்டது.

அந்தச் சாஸ்திரிகளுடைய விசுவாசம் கெட்டுப்போகிறதற்கான சோதனை நேரிட்டும், அவர்கள் பின்வாங்காதிருந்தார்கள். எப்படியென்றால், அவர்கள் எருசலேமுக்கு வந்து: பிறந்திருக்கிற யூதருடைய இராசா எங்கே என்று கேட்டவுடனே அந்த இராசாவும் எருசலேம் பட்டணத்தார் அனைவரும் கலங்கினார்கள். தன்னுடைய இராச்சியத்தைப் பிடுங்கிக்கொண்டு, தன்னைத் துரத்திவிட ஒரு புது இராசா பிறந்திருக்கிறாரோ என்று ஏரோதே கலங்கினான். இரத்தப்பழிக்கு அஞ்சாத கொலைபாதகனாயிருந்த ஏரோதேயினால் புது இராசாவின் நிமித்தம் என்ன கெடுதி தங்களுக்கு நேரிடுமோ என்று எருசலேம் பட்டணத்தார் கலங்கினார்கள். அவர்கள் புது இராசாவின் பிறப்புக்காகச் சந்தோஷப்படவில்லை. இதைக் கண்ட அந்நிய சாதியாராகிய சாஸ்திரிகளுக்குச் சந்தேகம் பிறக்கக் கூடியதாயிருந்தும், அவர்கள் அதற்கு இடங்கொடுக்கவில்லை. மேய்ப்பர்களும் சிமெயோனும் அன்னாளும் இயேசுநாதர் பிறந்திருக்கிற செய்தியை எருசலேம் பட்டணத்திலும் அதற்குச் சமீபமான இடங்களிலும் தெரிவித்திருந்தும், அந்தச் சனங்கள் ஆயத்தமில்லாதிருந்தது எவ்வளவு வெட்கமான காரியம். ஏரோதே இராசா, தன்னையும் இரட்சிக்கமேசியா பிறந்திருக்கிறாரென்று சந்தோஷப்படாமல், தன் இராச்சியத்தைப் பிடுங்கிக்கொள்ள ஒரு சத்துரு பிறந்திருக்கிறதாக



நினைத்துக் கலங்கினது எவ்வளவு விசனமான காரியம். மேலும், பெத்லகேயில் பிறந்திருக்கிற இராசாவைப் பார்க்கிறதற்கு எருசலேம் பட்டணத்தாரில் ஒருவனும் புறப்படவில்லை. சொந்த சாதியாரே தங்கள் இராசாவைக் கவனிக்கவில்லையே, நாமேன் பிரயாசப்படவேண்டும், நம்முடைய தேசத்துக்குத் திரும்பிவிடலாமென்று அந்தச் சாஸ்திரிகள் நினைக்காமல், உடனே எருசலேமை விட்டு பெத்லகேம் ஊருக்குப் பயணம் செய்தார்கள்.

கர்த்தர் இதிலும் அவர்கள் விசுவாசத்தைப் பலப்படுத்தி, அவர்கள் பயணத்தை வாய்க்கப்பண்ணினார். இதோ, அவர்கள் கிழக்கிலே கண்ட நட்சத்திரம் பிள்ளையிருந்த ஸ்தலத்தின் மேல் வந்து நிற்கும் மட்டும் அவர்களுக்கு முன் நடந்தது. அவர்கள் எருசலேம் பட்டணத்திற்குள் போயிருக்கையில் அவர்களுடைய கண்ணுக்குத் தெரியாமல் மறைந்திருந்த நட்சத்திரத்தை அவர்கள் மறுபடியும் கண்டபோதோவெனில் மகா சந்தோஷமாக மிகுதியும் சந்தோஷித்தார்கள்.

பெத்லகேம் ஊர் ஒரு சின்ன ஊர். அங்கே பிறந்திருக்கிற பிள்ளையின் நிலைமையோ மகா தரித்திரம். இப்படியிருந்தும், அந்த சாஸ்திரிகளின் விசுவாசம் தளர்ந்துபோகவில்லை. இதனால் அவர்கள் நமக்கு நல்ல முன்மாதிரியாயிருக்கிறார்கள். கிறிஸ்து மார்க்கத்தில் பெரிய மனுஷர்கள் சேரவில்லையே, உயர்ந்த சாதியாரில் அநேகர் கிறிஸ்தவர்களாகவில்லையே, அதிலே அதிகப் பணக்காரரில்லையே என்றும், கிறிஸ்தவர்களுடைய நிலைமை அநேகமாய்த் தரித்திரந்தானே என்றும் இடறல்படாமல் நாம் நம்முடைய விசுவாசத்தில் நிலைத்திருக்கவேண்டும். அவரே நம்மை இரட்சிக்கிற இராசா. அவரை நாம் விட்டுவிட்டால், நமக்கு வேறே கதியில்லை.

## 2.

கிழக்கு சாஸ்திரிகள், அவர்களிடத்தில் விளங்கின தெய்வ பத்தியிலும் நமக்கு நல்ல முன்மாதிரியாயிருக்கிறார்கள்.

அவர்கள் இயேசுபிள்ளையைக் கண்ணாலே காணவேண்டுமென்கிற விருப்பமுள்ளவர்களாய்த் தங்கள் தேசத்தை விட்டுப் புறப்பட்டார்கள். அவர்கள் விருப்பமோ எருசலேம் பட்டணத்தில் நிறைவேறவில்லை. அது நிறைவேறும் மட்டும் அவர்கள் இளைப்பாறாதிருக்கிறார்கள். ஆகையால் அவர்கள் பெத்லகேம் ஊருக்குப்போனார்கள். அங்கே இயேசுபிள்ளையைக் கண்ணாரக் கண்டபொழுதுதான் அவர்களுக்குத் திருப்தி வந்தது. இதுவே அவர்கள் தெய்வ பத்திக்கு அடையாளம். தெய்வ பத்தியுள்ள தாவீது இராசாவுக்கு இதேமாதிரி வாஞ்சை இருந்தது. ஆகையால் அவர்: மான் தண்ணீர் நதிகளின் மேல் வாஞ்சை

யாய்க் கதறுமாப்போலே என் ஆத்துமம் உமது மேல் வாஞ்சையாய்க் கதறுகிறது, பராபரனே; என் ஆத்துமம் சீவனுள்ள தெய்வமாகிய பராபரன் மேல் தாகமாயிருக்கிறது; நான் எப்போது பிரவேசித்து பராபரனுடைய சந்நிதியிலே காணப்படலாம் என்று பாடினார் (சங். 42, 2-3). நாமும் நம்முடைய இரட்சகர் பேரிலே தேட்டமுடையவர்களாய் இருக்கவேண்டும். அவருடைய சிநேகத்தை நாம் நம்முடைய இருதயங்களில் உணர்ந்து, அனுபவிக்கும் மட்டும் இளைப்பாறக் கூடாது.

அந்தச் சாஸ்திரிகள் இயேசுபிள்ளையைக் கண்டபொழுது அவர்கள் அவரை யூதருடைய இராசாவாக மாத்திரம் மதிக்காமல், தங்கள் சொந்த இராசாவும் ஆண்டவருமாக அவரை மகிமைப்படுத்திப் பணிந்து கொண்டார்கள்: மெய்தான், இந்த ஏழைப்பிள்ளை வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், நாவு யாவும் இயேசுகிறிஸ்து கர்த்தரென்று பிதாவாகிய பராபரனுக்கு மகிமையாக அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்துக்கும் மேலான நாமத்தைப் பெற்றுக்கொண்ட இராசாதி இராசா (பிலி. 2,10. 11). அவரை நாமும், நம்முடைய முழுமனதினாலும் சிநேகித்துப் பணிந்துக்கொள்ளக் கடவோம். இப்பொழுதே அவரை உற்சாகமாக சிநேகித்துப் பணிந்துகொள்ளாதவர்கள் அவரைக் கட்டாயத்தினால் பணிந்து, அழுகையோடும் கண்ணீரோடும் அவரை மகிமைப்படுத்தும் வேளைவரும். இதின் நிமித்தமே இரண்டாம் சங்கீதத்தில்: குமாரன் கோபமடையாமலும், நீங்கள் வழியில் அழியாமலும் இருக்கும் படிக்கு, அவரை முத்திசெய்யுங்கள்; ஏனென்றால் கொஞ்சக் காலத்திலே அவருடைய கோபம் பற்றி எரியும்; அவரை அண்டிக்கொள்ளுகிற யாவரும் பாக்கியவான்கள் என்று எழுதியிருக்கிறது.

சாஸ்திரிகள் தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும் தூபவர்க்கத்தையும் வெள்ளைப்போளத்தையும் அவருக்குக் காணிக்கையாக வைத்தார்கள். கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் யாரோ, அவர்கள் அவரைச் சிநேகிப்பார்கள். நாம் அவரைச் சிநேகிக்கக் கடவோம்; ஏனெனில் அவர் நம்மை முந்திச் சிநேகித்தாரென்று யோவான் அப்போஸ்தலன் சொல்லுகிறார். அவரைச் சிநேகிக்கிறவர்கள் யாரோ, அவர்கள் தங்களுக்கு உள்ளது உரியது யாவையும் அவருக்குப் பாதகாணிக்கையாக வைப்பார்கள். இயேசுநாதரைச் சிநேகித்த பக்தியுள்ள ஸ்திரீகள் தங்கள் ஆஸ்தியால் அவருக்குப் பணிவிடை செய்தார்கள், பெத்தானியா ஊரிலிருந்த மரியாள் விலையேறப்பெற்ற தைலத்தை அவர் மேல் ஊற்றித் தன் சிநேகத்தைக் காண்பித்தாள். கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிற அறிவு, பலம், ஆஸ்தி பாஸ்தி, இவைகளால்



அவரை மகிமைப்படுத்துவோமாக. விசுவாசமாகிய பொன்னும், செபமாகிய தூபமும், பொறுமையாகிய வெள்ளைப்போளமும் நாம் கர்த்தருக்கு வைக்கத்தக்க காணிக்கைகள். விசுவாசமாகிய பொன்னைக் கர்த்தருக்கு முன்பாகக் கொண்டுவருகிறவர்கள் தங்கள் கையிலுள்ள பொன்னையும் வெள்ளியையும் அவருக்கு மகிமையாய்ச் செலவழிக்கப் பின்வாங்கமாட்டார்கள். சீமையிலுள்ள கிறிஸ்தவர்கள் மெய் விசுவாசிகளாயிருப்பதினால் இயேசுவின் நாமத்துக்கு மகிமையாக எவ்வளவு பணங்களைச் செலவிடுகிறார்கள். கிறிஸ்துவின் சிநேகம் அவர்களை நெருக்கிறதினால் அவர்கள் இத்தேசத்திலும் மற்றத் தேசங்களிலுமுள்ள அஞ்ஞானிகளைக் கிறிஸ்துவினிடம் கொண்டுவரும்படி மிசியோன் சங்கங்களை ஸ்தாபித்து, தங்கள் சொந்த செலவில் போதகமாரை அனுப்பி, மிசியோன் வேலைக்காக ஏராளமான பணத்தைச் செலவழிக்கிறார்கள். பிரியமானவர்களே, நாம் தெய்வ பக்தியுள்ளவர்களா. நாம் கர்த்தரைச் சிநேகிக்கிறது மெய்யா. அவருடைய மகிமைக்காக நாம் செலவழிக்கிறது என்னவென்று இன்றைக்கு நம்மைச் சோதித்துப் பார்க்கக் கடவோம்.

அஞ்ஞானிகளாயிருந்த நம்மைக் கர்த்தர் தம்மண்டைக்குக்கொண்டுவந்து சேர்த்து, நமக்குத் தம்முடைய இரட்சிப்பை அளித்திருக்கிறபடியால், இந்த இரட்சிப்புக்கு இன்னம் வந்து சேராத அஞ்ஞானிகளுக்காக இன்றைக்கு நாம செபம்செய்வது நம்முடைய கடமை. உம்முடைய இராச்சியம் வருவதாக வென்று செபம் செய்யக் கற்றுக்கொடுத்த கர்த்தர், அஞ்ஞானிகளுக்காக நாம் செய்யும் செபத்தைச் சந்தோஷமாய்க் கேட்பார். தம்முடைய ஊழியக்காரர் அஞ்ஞானிகளுக்குப் பிரசங்கித்து அவர்கள் நடுவே படுகிற பிரயாசைகளை வாய்க்கப்பண்ணுவார். ஏராளமான அஞ்ஞானிகளுடைய மனதைத் திருப்பி, திருச்சபையிலே கொண்டுவந்து சேர்ப்பார். ஆ, நம்முடைய தேசத்தில் கிறிஸ்தவ சபைகள் உண்டாகிப் பெருகிவருகிறது சீமைக் கிறிஸ்தவர்களின் செபங்களினால் அல்லவா. நாமும் அவர்களைப்போல் செபம் செய்வோமாகில், அது வீண்போகவே போகாது.

கிறிஸ்துவின் நிமித்தம் நமக்கு வரும் சகல பாடுகளையும் துன்பங்களையும் நாம் பொறுமையோடு சகித்துக்கொள்ளுவது இயேசுநாதருடைய பிரிய சித்தம். சொற்பதுன்பத்தைக் கண்டவுடனே முறுமுறுத்துப் பின்வாங்குவது தெய்வ பத்தியல்ல. நம்மைச் சிநேகித்து, நமக்காகத் தம்மையே ஒப்புக்கொடுத்த இயேசு இரட்சகர் நம்முடைய முழுச்சிநேகத்துக்கும் பாத்திராயிருக்கிறார். அவருக்கு நாம் நம்மை முழுவதும் ஒப்புக்கொடுப்பது நியாயம். என் மகனே, உன் இருதயத்தை எனக்குக்

தாவென்று சொல்லுகிற அவரை நாம் நம்முடைய முழு இருதயத்தினாலும் சிநேகிப்போமாக. அதுவே மெய்த் தெய்வபத்தியாம்.

இயேசு இரட்சகரே, தேவரீர் எங்களுக்கு உம்மைவெளிப்படுத்தின கிருபைக்காக உமக்கு ஸ்தோத்திரம். உம்மை நாங்கள் விசுவாசித்து, உட்கருத்தாய்ச் சிநேகித்து, எங்களை உமக்கு முழுவதும் ஒப்படைக்க எங்களுக்குத் துணைசெய்தருளும். சுவாமி. ஆமேன்.

---

## கர்த்தர் மகிமை விளங்கின பண்டிகைக்குப் பிந்தின முதலாம் ஞாயிறு.

லூக். 2, 41—52.

பிரியமானவர்களே,

பிதாவிடத்தில் அநாதியாய்ப் பிறந்த மெய்யான தேவனும் கன்னிமரியாளிடத்தில் பிறந்த மெய்யான மனிதனுமாயிருக்கிற இயேசு கிறிஸ்து என் கர்த்தரென்று விசுவாசிக்கிறேன். இப்படி நாம் விசுவாசப் பிரமாணத்தின் இரண்டாம் பிரிவில் அறிக்கையிடுகிறோம். இயேசுநாதர் மகா மகிமையுள்ள தேவனாயிருந்தும், நம்மை இரட்சிப்பதற்காக மனிதனாய்ப் பிறந்து, தம்மைத் தாழ்த்தி இப்பூமியில் சஞ்சரித்த காலத்திலே தமக்குள்ள தெய்வீக மகிமையையெல்லாம் வெறுத்தவராகவும், மறைத்தவராகவும் இருந்தார். மேகங்களால் மூடப்பட்டிருக்கிற சூரியனுடைய கதிர்கள் அந்த மேகங்களில் காணப்படும் இடுக்குகளின் வழியாய்ச் சில சமயங்களில் தெரிகிறது உண்டே. அதுபோல், அவர் தாழ்ந்திருந்த காலத்தில் அவர் சொன்ன வார்த்தைகளினாலும், செய்த சில செய்கைகளினாலும், அவருடைய தெய்வீக மகிமை சமயாசமயங்களில் வெளிப்பட்டது. அவருடைய வார்த்தையில் அவருடைய மகிமை வெளிப்பட்டதை நம்முடைய சுவிசேஷ வாக்கியத்திலும் பார்க்கலாம். நான் என் பிதாவுக் கடுத்தவைகளில் இருக்கவேண்டியதென்று அறியீர்களா என்று இயேசுநாதர் சொன்னார். அதிலே அவர் என் பிதா என்று சொன்ன வார்த்தை அவருடைய தெய்வப் பிறப்பைக் காண்பிக்கும். பராபரன் அவருக்கு மெய்யான தகப்பன். நம்மைப்போல் அவருக்கு மனுஷ தகப்பனில்லை. அவர் தகப்பனில்லாமல் பரிசுத்த ஆவியால் அற்புதமாய் உற்பவித்துப் பிறந்தவர். அவர் பராபரனைத் தம்முடைய சொந்தத் தகப்பனாக அறிந்திருந்தபடியால், அந்தத் தம்முடைய தகப்பனுக்கு அடுத்தவைகளிலே எப்பொழுதும் இருந்தார். அவரை முன்னிட்டே பிதாவாகிய பராபரன் நமக்கும் பிதாவானார். நாமும் அவரைப்போல் நம்முடைய பிதாவுக் கடுத்தவைகளில்



இருப்போமானால், அவருடைய மகிமை நம்மிடத்திலும் விளங்கும். ஆகையால்,

**இயேசுநாதர் எப்படித் தம்முடைய பிதாவுக்கடுத்தவைகளில் இருந்தாரென்று பார்ப்போம்,**

1. அவர் தமது பிதாவின் வீட்டுக்குப் போனார்,
2. தமது பிதாவின் வார்த்தையைப் படித்தார்,
3. தமது பிதாவின் சித்தப்படி நடந்தார்.

### 1.

இயேசுநாதர் தமது பிதாவின் வீட்டுக்குப் போனதினால் தமது பிதாவுக்கடுத்தவைகளில் இருந்தாரென்று பார்க்கலாம்.

அவருடைய தாய் தகப்பன் வருஷந்தோறும் பஸ்காவின் பண்டிகையிலே எருசலேமுக்குப் போவார்கள். பஸ்காப் பண்டிகை, கூடாரப் பண்டிகை, பெந்தெகொஸ்தே பண்டிகை என்ற மூன்று பெரிய பண்டிகைகளில் இஸ்ரவேலரின் ஆண்பிள்ளைகளெல்லாம் எருசலேமுக்குப் போகவேண்டுமென்பது பராபரனுடைய கற்பனை. அதனால் யோசேப்பு பண்டிகைக்குப் போனது அவர் கடமை. மரியாளோ அந்தக் கற்பனை பெறாதிருந்தும், கர்த்தருடைய வீட்டின்பேரில் அவளுக்கிருந்த வாஞ்சையினாலும், இயேசு பிள்ளைக்கு நல்ல முன்மாதிரியாகவும் தன் புருஷனோடு எருசலேமுக்குப் போனாள். தாயும் தகப்பனும் பிள்ளைகளைத் தெய்வ பக்தியில் வளர்க்கக் கடமைப்பட்டவர்கள். இந்த முக்கிய கடமையை நிறைவேற்ற மனசுள்ள தாய் தகப்பன்மார் தங்கள் பிள்ளைகளுக்குப் புத்தி சொல்லுகிறது மாத்திரம் போதாது. தாங்கள் சொல்லுகிற புத்திக் கேற்றபடி தாங்களே நடந்து காட்டவேண்டும். பெற்றோர் நடக்கை பிள்ளைக்குச் சட்டம். தாய் தகப்பன் கோயிலுக்குப் போனால் பிள்ளைகளும் கோயிலுக்குப் போவார்கள். தாய் தகப்பன் செபம் பண்ணினால் பிள்ளைகளும் செபம் பண்ணுவார்கள். தாய் தகப்பன் பொய் சொல்லுகிறவர்களும் திருடுகிறவர்களுமாயிருந்தால், பிள்ளைகளும் அப்படிப்பட்டவர்களாகவே இருப்பார்கள்.

பன்னிரண்டு வயதான இயேசுவும் அவர்கள் பண்டிகை முறையின்படி எருசலேமுக்குப் போய் ஏறினார். இஸ்ரவேலர் பன்னிரண்டு வயதுப் பிள்ளைகளை விவரந்தெரிந்த பிள்ளைகளாக மதித்தார்கள். அவர்களுக்கு நியாயப்பிரமாணத்தின் பிள்ளைகளென்று பெயரிட்டார்கள். அந்தப் பிள்ளைகள் பெரியவர்களோடு சேர்ந்து பஸ்காப் போசனத்தைச் சாப்பிட உத்தரவிருந்தது. தம்முடைய தாய் தகப்பனோடு பஸ்காப் பண்டிகை கொண்டாடவே இயேசுநாதர் எருசலேமுக்குப் போனார். அந்தப் பட்

டணத்திலிருந்த பெரிய தெய்வாலயத்தை அவர் தம்முடைய பிதாவின் வீடாக எண்ணினார். ஏனெனில், அங்கே பராபரன் தம்முடைய சனத்துக்குத் தம்முடைய சித்தத்தை அடிக்கடி வெளிப்படுத்தினார். அங்கே பராபரனுக்குப் பலியிடும் பீடம் இருந்தது. பலியிடவேண்டிய ஆசாரியர் இருந்தார்கள். ஆசாரியருக்கெல்லாம் தலைவனான பிரதான ஆசாரியனும் அங்கே இருந்தான்.

இயேசுநாதர் தம்முடைய பிதாவின் வீடாகிய தெய்வாலயத்துக்குப் போய், பராபரன் தம்முடைய சனத்துக்குச் செய்த நன்மைகளை நினைத்துப் பராபரனை ஸ்தோத்திரித்தார். தம்முடைய சனத்தாரோடு கூடிக் கர்த்தருக்கு காணிக்கை செலுத்தினார். இதனால் தம்முடைய பிதாவின் கற்பனைக்குக் கீழ்ப்படிதலைக் காண்பித்தார்.

கிறிஸ்தவர்களாகிய நமக்குப் பராபரனுடைய வசனம் பிரசங்கிக்கப்படுகிற இடம் பிதாவின் வீடாயிருக்கிறது. அங்கே நாம் பெற்றுக்கொண்ட ஞானஸ்நானத்தினால் நாம் பராபரனுடைய பிள்ளைகளானோம். அங்கே நாம் அடிக்கடி போய், பராபரனுடைய வசனத்தைக் கேட்டு, அவரை ஸ்தோத்திரித்து, அவரை மகிமைப்படுத்துவது மகா இன்பமான கடமை. நாம் நம்முடைய பிதாவின் வீட்டை ஒருபோதும் மறக்கக் கூடாது. எருசலேமே, நான் உன்னை மறந்தால், என் வலது கை என்னை மறப்பதாக என்று யூதர்கள் பாடினார்கள். நாம் கர்த்தருடைய வீட்டுக்குப் போவது நமக்கு விசேஷித்த சந்தோஷமாயிருக்கவேண்டும். கர்த்தருடைய நாளாகிய ஞாயிற்றுக் கிழமையிலும் பண்டிகை நாட்களிலும் நாம் ஏற்கனவே எழுந்திருந்து, உற்சாகமாய்ப் புறப்பட்டு, நம்முடைய பிள்ளை குட்டிகளுடன் கோயிலுக்குப் போகவேண்டும். தம்முடைய வீட்டைச் சிநேகிக்கிறவர்களைக் கர்த்தரும் சிநேகித்து, தம்முடைய மகிமையை அவர்களிடத்தில் விளங்கப் பண்ணுவார்.

## 2.

இயேசுநாதர் தம்முடைய பிதாவின் வார்த்தையைப் படித்ததினால் தம்முடைய பிதாவுக்கடுத்தவைகளில் இருந்தார்.

யூதர் ஏழு நாளாக பஸ்காப் பண்டிகையை ஆசரித்தார்கள். இயேசுநாதர் பஸ்கா ஆடு அடிக்கப்பட்டதைப் பார்த்தார். அதன் இறைச்சியைப் புளிப்பில்லா அப்பங்களோடும் கசப்பான கீரைகளோடும் மற்ற விருந்தாடிகளைப் போல் சாப்பிட்டார். பஸ்காப் பண்டிகை உண்டான வயணத்தை யோசேப்பு அவருக்குச் சொல்லியிருக்கலாம். இஸ்ரவேல் சனங்கள் எகிப்து ராசாவாகிய பார்வோனுடைய அடிமைத்தனத்திலிருந்து விடுதலை



யான சரித்திரத்தை இயேசு பிள்ளை சந்தோஷமாய்க் கேட்டிருப்பார். பஷாவை வீட்டிலே புசித்தாலும், சனங்கள் தினந்தோறும் தெய்வாலயத்துக்குப் போய், அங்கே ஆராதனை செய்து, செபம் பண்ணி, ஆசீர்வாதம் பெற்று வருவார்கள். அதன் சுற்றுப் பிரகாரங்களில் போதகமார் உட்கார்ந்து, பழைய ஏற்பாட்டின் ஆகமங்களை வாசித்து, விஸ்தரிப்பார்கள். தம்முடைய பிதாவின் வீட்டிலே நடந்த இந்தக் காரியம் இயேசுவுக்கு அதிகப் பிரியமாயிருந்தது. ஆகையால் யோசேப்பும் மரியாளும் ஏழு நாளுக்குப் பின் நாசரேத்துக்குத் திரும்பினபோது அவர் திரும்பாமல், எருசலேமில் இருந்துவிட்டார். அங்கே அவர் போகத்தகாத இடங்களுக்குப் போகவில்லை. வேடிக்கை பார்த்துக்கொண்டாவது, விளையாடிக்கொண்டாவது திரியவில்லை: தம்முடைய பிதாவின் வீட்டில் தரித்திருந்து, தம்முடைய பிதாவின் வசனத்தைக் கேட்பதிலே அவர் தமது நேரத்தைச் செலவழித்தார். அவர் போதகர் நடுவே உட்கார்ந்து, அவர்களிடத்தில் அநேக நல்ல காரியங்களைக் கேட்டு, ஆராய்ந்து படித்துக்கொண்டிருந்தார். பலிகளைக் குறித்தும், உலக இரட்சகரைக் குறித்தும், அவர் பல கேள்விகளைக் கேட்டிருக்கலாம். அந்தப் போதகமார் அவரைக் கேட்ட கேள்விகளுக்கும் அவர் நல்ல உத்தரவு சொன்னார். ஆகையினால் அவர் பேசக் கேட்கிற யாவரும் அவருடைய புத்திக்கும் பிரத்தியுத்தரங்களுக்கும் பிரமித்தார்கள் என்று சொல்லியிருக்கிறது.

எருசலேமை விட்டுப் புறப்பட்ட யோசேப்பும் மரியாளும் தங்கள் பிள்ளையாகிய இயேசுவைக் கையோடு அழைத்துக்கொண்டு போகவில்லை. அவர் நாசரேத்தாரிலிருந்து வந்த மற்றப் பிரயாணிகளோடும் அவர்கள் பிள்ளைகளோடும் கூடிக்கொண்டு வருவார் என்று நினைத்தார்கள். ஒருநாள் பயணத்திற்குப் பின், வந்து தங்கின இடத்திலே, உறவின்முறையாரிடத்திலும் அறிமுகமானவர்களிடத்திலும் அவரைத் தேடி, அவரைக் காணாமல் போனார்கள். இப்படிப்பட்ட நல்ல பிள்ளையை இழந்தபோது அவர்களுக்கு எவ்வளவு விசனம் இருந்திருக்கவேணும். அவர்கள் அவரைத் தேடிக்கொண்டே எருசலேமுக்குத் திரும்பினார்கள். எருசலேமுக்குத் திரும்பியும், அவரை ஒரு நாளெல்லாம் பல இடங்களிலும் தேடி, அவரைக் காணாமல், கடைசியாக தெய்வாலயத்திலே போதகர் நடுவே கண்டுபிடித்தார்கள்.

நம்முடைய பிள்ளைகளையும் நாம் இயேசுவைப் போல் பிதாவுக்கடுத்தவைகளில் காண்போமானால், உத்தமமாயிருக்கும். ஐயோ, எத்தனை பிள்ளைகள் கோயிலுக்கு வருகிறதில்லை, வந்தாலும் ஒழுங்காயிருக்கிறதில்லை, போதகர் சொல்லுவதைக் கவனித்துக் கேட்காமல் விளையாடுகிறார்கள். எத்தனை பிள்ளைகள் கோ

யில் நேரத்தில் வெளியே போய், கெட்ட பிள்ளைகளோடு கூடி, கெட்ட வார்த்தைகளைப் பேசி, கெட்ட நடக்கையாய் நடக்கிறார்கள். இவர்களுக்கு இயேசு என்ற உத்தம பிள்ளையின் முன்மாதிரியைக் காண்பித்து, வேதவாக்கியங்களையும் ஞான உபதேசத்தையும் கற்றுக்கொள்ளும்படி ஏவுவது தாய் தகப்பன்மார் கடமை. ஏனெனில், நாமும் நம்முடைய பிள்ளைகளும் மற்றெல்லாக் கல்வியிலும் தேறினாலும், பராபரனுடைய வசனத்தைப் படித்தறியாதே போனால் அவருடைய பிள்ளைகளாய் வளர முடியாது.

இயேசுவினுடைய தாய் அவருடனே: மகனே, ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய்; இதோ, உன் தகப்பனும் நானும் வேதனையுடனே உன்னைத் தேடினோம் என்றாள். அவர் இவர்களுடனே: நீங்கள் என்னைத் தேடினதென்ன; என் பிதாவுக்கடுத்ததுகளில் நான் இருக்கவேண்டியதென்று அறியீர்களோ என்றார். இயேசுவை அழைத்துக்கொண்டு போகாதது அவர்கள் பேரில் குற்றம் தான். இயேசுநாதர் தமது பிதாவின் வீட்டில் தங்கினதோ குற்றமல்ல. இயேசுவின் பிறப்பைக் கன்னிமரியாளுக்கு முன்னறிவித்த தேவ தூதன் அவரை யோசேப்பின் குமாரன் என்று சொல்லாமல, அவரை உன்னதமானவருடைய குமாரன் என்றும், பராபரனுடைய குமாரன் என்றும் சொன்னான் (லூக். 1, 32. 35). இதை இயேசுவின் தாய் நினைத்து, அவர் அங்குமிங்கும் திரியமாட்டார், தம்முடைய பிதாவின் வீடாகிய தெய்வாலயத்திலேதான் இருப்பார் என்று நிச்சயித்திருக்கவேண்டும். ஆகையால், இதை அவர்களுக்கு உணர்த்தும்படி இயேசு அந்த மறு உத்தரவு கொடுத்தார். அவர்களோ அதை உணர்ந்துகொள்ள வில்லை.

3.

இயேசுநாதர் தம்முடைய பிதாவின் சித்தப்படி நடந்ததினாலும் தம்முடைய பிதாவுக்கடுத்ததுகளில் இருந்தார்.

அவர்களுடனே கூட அவர் இறங்கிப்போய், நாசரேத்துக்கு வந்து, அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார் என்று எழுதியிருக்கிறது.

தாம் பராபரனுடைய குமாரனென்றும், வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரென்றும், இயேசுநாதருக்குத் தெரிந்திருந்தும், அவர் சிற்றூராகிய நாசரேத்துக்கு யோசேப்போடும் மரியாளோடும் இறங்கிப் போனார். அவர் அற்ப ஊராகிய நாசரேத்திலே எளிமைத் தனத்திலே வளர்ந்து, ஏழையாய் இவ்வுலகத்தில் பிழைக்க வேண்டுமென்பது பராபரனுடைய சித்தமாயிருந்தது. தம்முடைய பரம பிதாவின் இந்தச் சித்தத்துக்கு அவர் உற்சாகத்தோடு உட்பட்டு நடந்தார். அவர் சிறு பிராயத்



திலும் அப்படி நடந்தார், புருஷ பிராயத்திலும் அப்படி நடந்தார். அவர் தமது பரம பிதாவுக்கு மரண பரியந்தம், சிலுவையின் மரண பரியந்தமே கீழ்ப்படிந்தவர் ஆனார். அவர் இராசாதி இராசாவும் கர்த்தாதி கர்த்தருமாயிருந்தும், சாதாரண மனிதரும் ஏழைகளுமாகிய தம்முடைய தாய் தகப்பன்மாருக்குக் கீழ்ப்படிந்திருந்தார். தச்சவேலை செய்த யோசேப்புக்கு உதவி செய்யவும், அவர் சொல்லுகிற கட்டளைகளை நிறைவேற்றவும், அவர் வெட்கப்பட்டதில்லை. வாச்சி பிடித்து மரம் செதுக்கவும், உளி பிடித்து நறுக்கவும், வாள் பிடித்து அறுக்கவும் அவருடைய கைகள் உற்சாகமாயிருந்தன. அப்படியே தம்முடைய தாயாராகிய மரியாளுக்கு உதவி செய்கிறதும், அவளுடைய சொல் கேட்டு நடப்பதும், அவருக்குச் சந்தோஷமாயிருந்தது. உனக்கு நன்மை வருகிறதற்கும் நீ பூமியிலே நீடித்திருக்கிறதற்கும், உன் தகப்பனையும் உன் தாயையுஞ் சங்கித்திருப்பாயாக என்று நாலாம் கற்பனை சொல்லுகிறது. நம்முடைய தாய் தகப்பன்மார் யாராயிருந்தாலும், நாம் அவர்களுக்கு ஊழியஞ் செய்து, கீழ்ப்படிந்து, பட்சத்தையுஞ் சங்கையையுங் காட்டி வரவேண்டும். தங்கள் தாய் தகப்பன்மாருக்குக் கீழ்ப்படிந்து வேலை செய்வதற்கு மனமில்லாத பிள்ளைகள், தாங்கள் உதவியற்ற குழந்தைகளாயிருந்த காலத்தில் தங்கள் தாய் தகப்பன்மார் தங்களுக்காக எவ்வளவு பாடுபட்டு, தங்களுக்கு எவ்வளவு வேலை செய்தார்கள் என்று யோசித்துப் பார்க்கவேண்டும்.

ஈசாக்கு தன் தகப்பனாகிய ஆபிரகாமுக்குக் கீழ்ப்படிந்ததினாலும், யோசேப்பு தன் தகப்பனாகிய யாக்கோபுக்குப் பட்சத்தையுஞ் சங்கையையுங் காட்டினதினாலும் எவ்வளவு ஆசீர்வாதங்களைப் பெற்றார்களென்று நாம் அவர்கள் சரித்திரங்களினால் அறிவோம். அப்சலோம் என்ற துஷ்டனோ தன் தகப்பனாகிய தாவீதுக்குக் கீழ்ப்படியாமல், அவருக்கு விரோதமாகக் கலகம் பண்ணினதினாலே பராபரனாலும் மனிதராலும் சபிக்கப்பட்டவன் ஆனான். இயேசுவை விசுவாசிக்கிற நாமும் நம்முடைய பிள்ளைகளும் இயேசுவைப் போல் நாலாம் கற்பனையின்படியே நடந்தோமானால், நம்முடைய பரம பிதாவின் ஆசீர்வாதம் நம்முடைய மேல் வரும்.

தம்முடைய பிதாவின் சித்தப்படியே நடந்த இயேசுவின் வர்த்தமானங்களை எல்லாம் அவருடைய தாய் தன்னுடைய இருதயத்திலே வைத்தாள். அவளுக்கு இயேசுவின் வார்த்தைகளும் செய்கைகளும் அப்போதப்போது விளங்காதிருந்தும், அவரைப் பற்றிய பல விசேஷங்களை அவள் உடனே சரியாய் அறிந்துகொள்ளாதிருந்தும், அவைகளை அவள் அசட்டையாய்த் தள்ளிவிடவில்லை. இச்சமயத்தில் அவள் அறிந்துகொள்ளாத சங்கதிகளைப்

பின்னான காலத்தில் அறிந்திருப்பாள். அப்படியே நாமும் இயேசுவுக்கடுத்த விசேஷங்களை அப்போதப்போது சரியாய் அறிந்துகொள்ளாவிட்டாலும், அவைகளை விசுவாசமாய் ஏற்றுக்கொள்ளவேண்டும். கர்த்தர் ஒருவேளை பிற்காலத்தில் அவைகளை நமக்கு விளங்கப் பண்ணுவார்.

இயேசு பிதாவின் சித்தப்படியே நடந்ததினால் ஞானத்திலேயும், வளர்த்தியிலேயும், பராபரனிடத்திலும் மனிதரிடத்திலுங் கிருபையிலேயும் அதிகப்பட்டார். அவர் மெய்யான தேவனாயிருந்ததுபோலவே மெய்யான மனுஷனாகவும் இருந்ததினால் மற்ற மனுஷப் பிள்ளைகளைப் போல் ஞானத்திலும் வளர்த்தியிலும் வருஷா வருஷம் அதிகப்பட்டார். அவர் வளர வளர, பராபரனுடைய கிருபையும் மனுஷருடைய தயவும் அவருக்கு அதிக மதிகமாய்க் கிடைத்தது.

நம்முடைய பிள்ளைகளையும் நாம் கர்த்தருக்கென்று வளர்ப்போமாக. செபத்தினால் அவர்களைக் கர்த்தருடைய கிருபைக்கு ஒப்புக்கொடுப்போமாக. கர்த்தருடைய கிருபை பெருகப் பெருக மனுஷருடைய அன்பும் தயவும் அவர்களுக்குக் குறைவுபடாமல், அதிகரிக்கும்.

அன்புள்ள இயேசுவே, நீர் உம்முடைய பிதாவுக்கடுத்ததுகளில் இருந்ததுபோல நாங்களும் எங்கள் பிள்ளைகளும் இருக்க எங்களுக்குத் துணைசெய்தருளும், சுவாமி. ஆமென்.

---

## கர்த்தர் மகிமை விளங்கின பண்டிகைக்குப் பிந்தின உ-ம் ஞாயிறு.

யோவா. 2, 1-11.

பிரியமானவர்களே,

இயேசுநாதர் பன்னிரண்டு வயதுப் பிள்ளையாயிருக்கபோது: என் பிதாவுக்கடுத்ததுகளில் நான் இருக்கவேண்டியதென்று அறியீர்களோ என்று சொன்னதினால் தம்முடைய தேவமகிமையைக் கொஞ்சமாய் வெளிப்படுத்தினார். அவர் பெரியவரான பிற்பாடு அவர் செய்த வல்லமையான பிரசங்கங்களில் அவருடைய தெய்வீக மகிமை வெளிப்பட்டது. அவர் தம்முடைய வார்த்தையினால் தமது மகிமையை விளங்கப்பண்ணினது போலே, தம்முடைய கிரியையினாலும் அதை விளங்கப்பண்ணினார். நம்முடைய சுவிசேஷ வாக்கியத்திலும் அவர் செய்த ஒரு அதிசயமான கிரியை சொல்லியிருக்கிறது. அவர் கானாவூரில் நடந்த ஒரு கலியாணத்திலே தண்ணீரைத் திராட்சரசமாக்கினார். அடையாளங்



களுடைய இந்தத் துவக்கத்தை இயேசு கலிலேயாவின் ஊரான கானாவிலே செய்து, தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார் என்று எழுதியிருக்கிறது. இயேசுநாதர் தம்முடைய முதலாம் அற்புதத்தை ஒரு கலியாண வீட்டிலே செய்ததினால் கலியாணக்காரராகிய சமுசாரிகளைத் தாம் ஆசீர்வதிக்கிற கர்த்தரென்று தெரியக்கொடுத்தார். இதை அறிந்திருப்பது நமக்குள் இருக்கும் சமுசாரக்காரருக்கும், இனிச் சமுசாரமார்க்கத்தில் பிரவேசிக்கப்போகிறவர்களுக்கும் பெரிய ஆறுதல். ஆகையால், நாம் இப்பொழுது

சமுசார மார்க்கத்தைப்பற்றிச் சிந்திப்போம்.

1. சமுசார மார்க்கத்தின் மேன்மையையும்,
2. சமுசார மார்க்கத்தின் சங்கடத்தையும்,
3. சமுசாரிகளுக்குள்ள ஆறுதலையும் கவனிப்போம்.

### 1.

சமுசார மார்க்கத்தின் மேன்மையைப் பார்ப்போம்.

சமுசார மார்க்கம் மனுஷ ஏற்பாடல்ல; அதைப் பராபரன் தாமே ஏதேன் தோட்டத்திலே மனுஷர் பாவஞ்செய்யாததற்கு முந்தியே ஏற்படுத்தினார். ஆதாமுக்குத் துணையாயிருக்க அவனுடைய விலாவின் ஒரு எலும்பால் பராபரன் ஏவாளை உண்டுபண்ணினார். அவளை அவர் ஆதாமுக்குப் பெண்சாதியாகக் கட்டளையிட்டு, இரண்டு பேரையும் ஆசீர்வதித்தார். இதினால் அவர் சமுசாரமார்க்கத்தை மேன்மைப்படுத்தினாரல்லவா. மேலும், அவர் சமுசாரமார்க்கத்தை வேலியடைத்துக் காபந்துபண்ணுகிறவராய்: விபசாரம் பண்ணாதிருப்பாயாக என்ற கற்பனையைக் கொடுத்தார். இந்தக் கற்பனையின்படியே நடக்கிறவர்களுக்கு ஆசீர்வாதத்தையும், அதை மீறி நடக்கிறவர்களுக்குச் சாபத்தையும் கொடுத்துவருகிறார். இதினால் சமுசார மார்க்கம் பராபரனுடைய பாதுகாப்புக்கு உட்பட்டதென்பதை நாம் பார்க்கிறோம். இதைமுன்னிட்டு: விவாகம் எல்லாரிடத்திலும் கனமுள்ளதாயிருக்கக் கடவது என்று பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறார் (எபி. 13, 4).

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய முதலாம் அற்புதத்தை ஒரு கலியாண வீட்டிலே செய்ததினால் அவர் சமுசார மார்க்கத்தைக் கனப்படுத்தினார். அன்றியும் வேதத்தில் கிறிஸ்துவுக்கும் அவர் சபைக்கும் உள்ள சிநேகத்தையும் ஐக்கியத்தையும் புருஷன் பெண்சாதிக்குள்ள சிநேக ஐக்கியத்திற்கு ஒப்பிட்டுப் பேசியிருக்கிறது (எபே. 5, 25-27).

இவைகளினால் சமுசாரமார்க்கம் மிகவும் மேன்மையுள்ள பரிசுத்தமார்க்கமென்று விளங்கும். ஆகையால் சமுசாரமார்க்கத்துக்குள் பிரவேசிக்கிறவர்கள் கர்த்தருடைய கிருபையையும் ஆசீர்வாதத்தையும் செபத்தினால் தேடவேண்டும். பெண்ணுக்கேற்ற பிள்ளை கிடைப்பதும், பிள்ளைக்கேற்ற பெண் கிடைப்பதும் பராபரனுடைய செயலேயல்லாமல் வேறல்ல. வீடும் ஆஸ்தியும் பிதாக்கள் வைக்கும் சுதந்தரம்; புத்தியுள்ள பெண்சாதியோ கர்த்தரால் கொடுக்கப்படுகிறாள் என்று எழுதியிருக்கிறது (வாக். 19, 14). ஆபிரகாமுடைய வேலைக்காரனாகிய எலியேசர், ஈசாக்கென்ற தன் எஜமானுக்குப் பெண் பார்க்கப் போனபோது பக்தியுள்ள செபத்தினாலே தகுந்த பெண்ணைத் தேடிக் கண்டுபிடித்தான்.

கலியாணக்காரர் கர்த்தருடைய பரிசுத்த ஏற்பாட்டுக்கு உட்படுகிறபடியால் நாம் அவர்களைக் கோயிலுக்குக் கொண்டுபோய், செபஞ் செய்து, தேவவசனத்தைக் கேட்கப்பண்ணி, இவைகளினால் கலியாணத்தைப் பரிசுத்தமாக்குகிறோம். நாம் நம்முடைய கலியாணங்களுக்கு எவரையும் அழைக்கும் முன் நம்முடைய கர்த்தராகிய இயேசுவை அழைப்பது தகுதி. சமுசாரமார்க்கம் மேன்மையான மார்க்கமென்றும் பரிசுத்த மார்க்கமென்றும் அறிந்திருக்கிற சமுசாரிகள் அதன் மேன்மைக்கும் பரிசுத்தத்திற்கும் ஏற்றபடியே நடந்துகொள்ளவேண்டும். பராபரன் இணைத்ததை மனிதன் பிரிக்கவே கூடாது. புருஷனும் பெண்சாதியும் இணைபிரியாமல் வாழவேண்டும். புருஷன் பெண்சாதியைச் சிநேகித்து, அவளுக்குப் பட்சத்தையும் சங்கையையும் காட்டிவரவேண்டும். பெண்சாதியும் புருஷனுக்குக் கீழ்ப்படிந்து, அவனுக்குப் பட்சத்தையும் சங்கையையும் காட்டிவரவேண்டும். வாழ்விலும் தாழ்விலும், துன்பத்திலும் இன்பத்திலும், இரகசியத்திலும் பராசியத்திலும், ஒருவருக்கொருவர் துணையாயிருக்கவேண்டும், ஒருவரை ஒருவர் தாங்கவேண்டும், ஒருவருக்காக ஒருவர் செபஞ் செய்யவேண்டும். இப்படிச் செய்கிற சமுசாரிகள்தான் சமுசாரமார்க்கத்தை மேன்மைப்படுத்துகிறார்கள். ஒருவரோடொருவர் சண்டைபோட்டு, ஒருவருக்கு விரோதமாய் ஒருவர் பேசித்திரிகிற புருஷனும் பெண்சாதியும் சமுசாரமார்க்கத்தை அவமானப்படுத்துகிறார்கள். வேற்றுமுகம் பார்க்கிற புருஷனும் வேற்றுமுகம் பார்க்கிற பெண்சாதியும் பரிசுத்த சமுசார மார்க்கத்தை அசுத்தமாக்குகிறபடியால், கர்த்தர் அவர்களை விட்டு விலகி, அவர்களைத் தண்டிப்பார். இதை நாம் ஒருபோதும் மறவாமல், எச்சரிக்கையாயிருக்கக் கடவோம். கலியாண நாளில் நம்முடைய வீட்டுக்குவருகிற கர்த்தர் நம்முடைய மரண நாள் மட்டும் நம்மை விட்டு விலகாதிருக்கும்படி அவரிலும் அவருடைய வழியிலும் நிலைத்திருப்போமாக.



## 2.

*சமுசார மார்க்கத்தில் பலவிதமான சங்கடங்கள் உண்டென்பதை நாம் மறக்கக்கூடாது.*

கானா ஊர் கலியாணத்துக்கு இயேசுநாதர் வந்திருந்தார், அவருடைய தாய் வந்திருந்தாள், அவருடைய சீஷர்கள் வந்திருந்தார்கள். இதனால் அந்தக் கலியாணக்காரர் தெய்வபக்தியுள்ளவர்களென்று தெரியவருகிறது. என்றாலும், அந்தக் கலியாணக்காரருக்கு கலியாண நாளிலேயே ஒரு பெரிய சங்கடம் நேரிட்டது. விருந்தாடிகளுக்குப் போதுமான திராட்சரசமில்லாமல் குறைவுபட்டது. அந்தக் கலியாணக்காரர் ஏழைகளாயிருந்ததினாலோ, அல்லது அவர்கள் நினைத்ததுக்கு அதிகமான விருந்தாடிகள் வந்துவிட்டதினாலோ, இந்தக் குறைவு நேரிட்டது. எப்படியிருந்தாலும், கலியாணக்காரருக்கு இது வீணமும் வெட்கமுமான காரியந்தான். யூதருக்குள் திராட்சரசம் பரிமாறுதல் நமக்குள் வெற்றிலை பாக்கு பரிமாறுதலுக்குச் சரி யென்று சொல்லலாம். ஒரு கலியாணத்தில் வெற்றிலைபாக்கு குறைவுபட்டால் அது கலியாணக்காரருக்கு எவ்வளவு அவமானம்.

இதுபோலவே சமுசாரிகளுக்குப் பல நேரத்திலும் பல விதத்திலும் சங்கடங்கள் நேரிடுவதுண்டு. ஒரு குடும்பத்தில் தரித்திரம், ஒரு குடும்பத்தில் வியாதி, ஒரு குடும்பத்தில் மரணம், ஒரு குடும்பத்தில் சிநேகிதர்களாலோ சத்துருக்களாலோ ஒரு இடைஞ்சல் நேரிடுகிறதை நாம் ஒவ்வொரு நாளும் பார்க்கிறோம். முக்கியமாய், தெய்வபக்தியுள்ள சமுசாரிகளுக்கு விசேஷித்த துன்பங்கள் வருவதுண்டு. பிசாசானவன் சமுசாரிகளின் நல்வாழ்வை விரும்புகிறவனல்ல. புருஷனுக்கு விரோதமாகப் பெண்சாதியையும், பெண்சாதிக்கு விரோதமாகப் புருஷனையும், மாமிக்கு விரோதமாக மருமகளையும், மருமகளுக்கு விரோதமாக மாமியையும் உசுப்பிவிட்டுச் சமுசாரமார்க்கத்தைக் கசப்புங் கண்ணீருமாக்குவதுண்டு. மேலும், பிள்ளைகள் பிறக்கப் பிறக்க, குடும்பம் பெருகப்பெருக, சம்பாத்தியம் போதாமல் தரித்திரம் அதிகப்படுகிறதுண்டு.

தெய்வபக்தியுள்ளவர்களோ எவ்விதமான துன்பம் நேரிட்டாலும், அதினால் கர்த்தரை விட்டு மனம் விலகிப்போக மாட்டார்கள். சமுசாரமார்க்கத்துக்கு விரோதமான எந்தப் பாவத்தையும் செய்யமாட்டார்கள். பராபரனைச் சிநேகிக்கிறவர்களுக்கு எல்லாக் காரியமும், உபத்திரவங்களுங்கூட நன்மைக்கு உதவி செய்கிறதென்று நம்பியிருக்கிறார்கள். இயேசுவின் தாய் கானா

ஊர் கலியாணக்காரருக்கு நேரிட்ட சங்கடத்தில் செய்ததுபோலே கர்த்தரிடம் சேர்ந்து, அவர்கள் செபத்தினால் தங்களுக்குள்ள குறைவைத் தெரிவிப்பாகள். அவள்: அவர்களுக்குத் திராட்சப்பழ இரசம் இல்லை என்றாள்.' அப்படியே விசுவாசமுள்ள சமுசாரிகள்: ஆண்டவரே, எங்களுக்குப் போசனம் குறைவுபடுகிறது, எங்களுக்கு வஸ்திரம் குறைவுபடுகிறது, எங்களை வியாதி சங்கடப்படுத்துகிறது, எங்களைப் பிசாசு சோதிக்கிறது, அது எங்கள் சிநேகத்தைக் கெடுத்துப் பகையூட்டுகிறது என்று தங்களுக்கு உள்ளதை உள்ளபடி கர்த்தருக்குச் சொல்லி, ஒவ்வொன்றுக்கும் கர்த்தருடைய ஒத்தாசையைத் தேடுவார்கள்.

இயேசு மரியாளுடனே: ஸ்திரீயே, எனக்கும் உனக்கும் என்ன; என் வேளை இன்னம் வந்ததில்லை என்றார். கிறிஸ்தவர்களான சமுசாரிகளும் அவர்களுக்காக மற்றவர்களும் செபம் பண்ணும்பொழுது செபத்தில் கேட்ட காரியம் உடனே கிடைக்குமென்று நினைக்கக் கூடாது. சில சமயங்களில் நாம் கேட்ட காரியம் உடனே கிடைப்பதுண்டு. சில சமயங்களில் அது கிடைப்பதற்குச் சில மாதங்களும், சில வருஷங்களும் செல்லுவதுமுண்டு. சகரியா ஒரு பிள்ளை வேண்டுமென்று செய்த செபம் அநேகம் வருஷங்களுக்குப் பின் அவருடைய விருத்தாப்பிய வயதிலே கேட்கப்பட்டது. ஆபிரகாமுக்கும் அப்படியே நடந்தது.

கர்த்தர் நம்முடைய செபங்களைக் கேட்டு, நாம் விரும்பினதைக் கொடுக்கத் தாமதிக்கிறதற்குப் பல முகாந்தரம் இருக்கலாம். நம்மை அதிக உக்கிரமான செபத்துக்கு ஏவும்படி அவர் தாமதிப்பார். அவர் நம்மைக் கூப்பிட்ட பல சமயங்களில் நாம் அவர் சத்தத்தைக் கேட்காமல் தாமதித்து நின்றதை நமக்கு நினைப்பூட்டும்படி தாமதிப்பார். நமக்குப் பொறுமை என்ற மேலான குணத்தை உண்டாக்கும்படி தாமதிப்பார். அவர் தாமதிக்கும் பொழுது நாம் முறுமுறுக்கலாகாது. கர்த்தருடைய வேளை இன்னம் வரவில்லையென்று நாம் அறிந்து: உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக என்று சொல்லவேண்டும். பொறுமையும் அமைதியும் நம்பிக்கையுமாய் அவருடைய வேளைக்குக் காத்திருந்து, அதிக உட்கருத்தாய்ச் செபம் செய்ய வேண்டும். இதைச் சுட்டியே பவுல் அப்போஸ்தலன்: நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்; உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்; செபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள் என்று சொல்லுகிறார் (ரோமர் 12, 12).

3.

கிறிஸ்தவர்களான சமுசாரிகளுக்குள்ள ஆறுதல் இன்னதென்று கவனிப்போம்.



யூதர் சுத்தம் பண்ணிக்கொள்ளும் முறைமையின்படியே கானாவூர் கலியாணத்தில் ஆறு கற்சாடிகள் வைத்திருந்தது. ஒவ்வொன்று இரண்டு மூன்று குடம் பிடித்தது. இயேசு பணிவிடைக்காரருடனே: சாடிகளிலே தண்ணீரை நிரப்புங்கள் என்றார். அவர்கள் அதுகளை வாய் மட்டாக நிரப்பினார்கள். அப்போது அவர்களுடனே: நீங்கள் இப்போது மொண்டு, பந்திவிசாரிப்புக்காரனண்டை கொண்டுபோங்கள் என்றார். அவர்கள் கொண்டுபோன பொழுது தண்ணீர் திராட்சரசமாக மாறிப்போனதாகத் தெரிய வந்தது.

நம்முடைய இரட்சகர் சமுசாரிகளோடிருந்து, அவர்கள் குறைவை நிறைவாக்கக் கூடியவரென்று இதனால் விளங்குகிறது. அவர் மெய்யான தேவன், அவருக்கு எல்லாச் சிருஷ்டியும் கீழ்ப்படியும்; தண்ணீர் ரசமாகும், மண்ணும் அவரால் பொன்னாகும். சர்வத்துக்கும் வல்லவர் நம்மோடிருக்கிறாரென்றும், நமக்கு நன்மைசெய்ய அவருக்குச் சித்தமிருக்கிறதென்றும் நாம் அறிந்திருக்கிறது நமக்குப் பெரிய ஆறுதலல்லவா. மனிதர் ஒன்றுமாகாது என்று நினைக்கிற சமயத்தில், கர்த்தர் நமக்கு வேண்டிய எல்லாவற்றையும் ஆகப்பண்ணுகிறார். ஆகையால், நாம் எந்தத் துன்பத்திலும் எந்தக் குறைவிலும் எந்தச் சங்கடத்திலும் கலங்கித் தளர்ந்துபோக நியாயமில்லை.

கர்த்தர் தண்ணீரைத் திராட்ச ரசமாக்கினதால், அந்த வீட்டாருடைய துக்கத்தைச் சந்தோஷமாக மாற்றினார். நமக்கும் எல்லாச் சமுசாரிகளுக்கும் இப்படியே செய்கிறார். நாம் அழுது புலம்பியிருந்த பல சமயங்களில் கர்த்தர் நம்மோடிருந்து, நமக்குச் சகாயம் செய்ததினால் சந்தோஷமும் கெம்பீரமும் நம்முடைய வீட்டுக்குள் வரும்படி செய்ததுண்டு.

திவ்விய திராட்சப் பழரசமாய்ப் போன தண்ணீரைப் பந்திவிசாரிப்புக்காரன் உருசி பார்த்து, அது எங்கேயிருந்து வந்ததென்கிறதைத் தண்ணீரை மொண்ட பணிவிடைக்காரர் அறிந்ததேயொழிய தான் அறியாதிருக்கிறபோது; பந்திவிசாரிப்புக்காரன் மணவாளனைக் கூப்பிட்டு, அவனுடனே: எந்த மனுஷனும் முந்தி நல்ல திவ்விய திராட்சப்பழ ரசத்தை வார்த்து, ஜனங்கள் திருப்தியடைந்திருந்தால், அப்போது இளப்பமானதை வார்ப்பான்; நீ நல்ல ரசத்தை இதுவரைக்கும் வைத்து வைத்தாய் என்றான்.

இந்தப் பந்திவிசாரிப்புக்காரன் உலக வழக்கத்தைச் சொல்லிக் காட்டினான். நம்முடைய இரட்சகர் வழக்கம் வேறே. கரும்பின் அடியிலிருந்து துவக்கி நுனியோடு முடிப்பது உலக வழக்கம். நுனியிலிருந்து துவக்கி அடியோடு முடிப்பது கிறிஸ்துவின் வழக்கம். முந்தச் சந்தோஷம், பிறகு துக்கம்; இது உலக

வழக்கம். முந்தத் துக்கம், பிறகு சந்தோஷம்; இது கிறிஸ்துவின் வழக்கம். எது நல்லது, கிறிஸ்துவின் வழக்கமே நல்லதென்று நமக்குத் தெரியும். உலகம் கொடுக்கிற பாவ சந்தோஷத்தைப் பாருங்கள். அது தொடங்கும் காலத்தில், இன்பமாய்க் காணப்படும். முடிவிலோ பயங்கரமான துன்பத்தைக் கொண்டுவரும். கிறிஸ்து கொடுக்கிற இரட்சிப்பின் சந்தோஷத்தைப் பாருங்கள். முதலில் பாவத்திற்காகத் துக்கப்பட்டு அழுது புலம்பும்படி பண்ணுகிறார். கடைசியிலோ முடிவில்லாத பாக்கியத்தையும் ஆறுதலையும் அளிக்கிறார். ஆகையால் நமக்கு எவ்வளவு துன்பம் நேரிட்டாலும், அதைக் கர்த்தர் கடைசியிலே சந்தோஷமாக மாற்றுவார், எல்லாம் நன்மையாகவே முடியும் என்று நம்பி ஆறுதல் அடைகிறோம்.

கர்த்தர் கானாவூரில் செய்த அற்புதத்தினால் அந்தக் கலியாணத்தில் வேண்டியதை மாத்திரமல்ல,* அந்த வீட்டாருக்கு நெடு நாளைக்கு வேண்டிய ரசத்தைக் கொடுத்தார். ஒவ்வொன்று இரண்டு மூன்று குடம் பிடிக்கக் கூடிய ஆறு கற்சாடி நிறைந்த ரசம் அநேக நாளுக்குப் போதுமானது. இப்படியே நாம் நம்முடைய செபத்தில் கேட்கும் நன்மை கொஞ்சமாயிருந்தாலும், கர்த்தர் நமக்குக் கொடுக்கும் நன்மை அதிகமாயிருக்கிறதென்று பார்க்கிறோம். கர்த்தர் நாம் வேண்டிக்கொள்வதையும் நினைக்கிறதையும் பார்க்க அதிகம் கொடுக்க வல்லவரென்று வேதம் நமக்குச் சொல்லுகிறது (எபே. 3, 20).

ஆகையால் பிரியமானவர்களே, சமுசாரிகளுக்கு இன்று சுவிசேஷ வாக்கியம் எவ்வளவு ஆறுதலைக் கொடுக்கிறது. இந்த ஆறுதல் நமக்குச் சொந்தமும் நிலைவரமுமாயிருக்க வேண்டுமானால், கர்த்தருடைய சீஷப் பிள்ளைகளைப் போல் நாமும் செய்ய வேண்டும். அவருடைய சீஷர்கள் அவர் பேரில் விசுவாசித்தார்களென்று எழுதியிருக்கிறது. அவர்கள் அவரை விசுவாசித்ததினால் இந்த முதலாம் அடையாளத்தை மாத்திரம் அல்ல, இன்னும் அநேக அடையாளங்களைக் காணவும், கிறிஸ்துவினால் அநேக நன்மைகளை அடைந்து அனுபவிக்கவும் கூடியவர்களாயிருந்தார்கள். அவர்களைப் போலவே நாமும் இயேசுநாதரை நம்முடைய குல தெய்வமென்றும், நம்முடைய இரட்சகரென்றும் நம்முடைய முழு இருதயத்தினாலும் நம்பவேண்டும். இந்த நம்பிக்கையுள்ள சமுசாரிகளின் வீட்டிலே குடும்பாராதனை தவறாமல் நடக்கும். பராபரனுடைய வசனத்தைத் தினந்தோறும் அவர்கள் கேட்டு ஆறுதல் அடைவார்கள். அவர்கள் வீட்டில் மெய்வாழ்வு குடியிருக்கும். அவர்கள் கர்த்தருடைய அநேக அற்புதங்களையும் அதிசயங்களையும் கண்டு களிகூருவார்கள்.



எங்கள் அருமை இரட்சகரே, தேவரீர் எங்களுக்கும் மெய் விசுவாசத்தைத் தந்து, எங்களுக்குள்ளிருக்கும் சமுசாரிகளிடத்திலும் உம்முடைய மகிமையை வெளிப்படுத்தியருளும், சுவாமி. ஆமேன்.

## மகிமை விளங்கின பண்டிகைக்குப் பிந்தின ௩-ம் ஞாயிறு.

மத். 8, 1—13.

பிரியமானவர்களே,

போன ஞாயிற்றுக் கிழமைச் சுவிசேஷ வாக்கியத்தின்படி கர்த்தர் கானாவூர் கலியாணத்தில் தண்ணீரை ரசமாக்கித் தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார். இந்த அற்புதத்தால் இயேசுநாதர் நம்முடைய குறைவை நிறைவாக்குகிறவரென்று விளங்குகிறது. இந்த ஞாயிற்றுக் கிழமைச் சுவிசேஷ வாக்கியத்தில் அவர் ஒரு குஷ்டரோகியையும், நூற்றுக்குச் சேர்வைக்காரனுடைய வேலைக்காரனையும் சுத்தமாக்கித் தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார். இதனால் அவர் எல்லாவித வியாதிகளையும் தீர்க்கிறவரென்று வெளிப்பட்டது. விசுவாசிகள் எல்லாக் காலத்திலும் அவரை நோக்கிச் செபம் செய்து, அநேக வியாதிகளுக்கும் துன்பங்களுக்கும் நீங்கலாகிறார்கள். நாமும் அப்படியே செய்யலாம். அப்படி நாம் செய்கிறதற்கு நம்மை ஏவிவிடும் காரணங்களை இந்தச் சுவிசேஷ வாக்கியத்தில் பார்க்கிறோம். இதின்படியே

**நாம் ஏன் இயேசு கிறிஸ்துவை நோக்கி விசுவாசத்தோடு செபம் பண்ணலாம் என்று கேட்போம். ஏனெனில்,**

1. **நம்முடைய செபத்தைக் கேட்க அவருக்கு மனதுண்டு.**
2. **நாம் கேட்டதைக் கொடுக்க அவருக்குப் பெலனுண்டு.**

### 1.

இயேசுநாதருக்கு நம்மைச் சுகமாக்க மனதிருக்கிறபடியால், நாம் அவரை நோக்கி விசுவாசத்தோடே செபம் பண்ணலாம்.

அவர் பர்வதத்திலிருந்து இறங்கினபோது திரள் கூட்டங்கள் அவரைப் பின் சென்றது. இயேசுநாதர் ஒரு பர்வதத்தின் மேல் உட்கார்ந்து, திரளான சனங்களுக்கு ஒரு அருமையான பிரசங்கம் பண்ணினார். அந்தப் பிரசங்கத்துக்கு மலைப் பிரசங்கமென்று பெயர். இதனால் அவர் வார்த்தையில் வல்லமையுள்ள தீர்க்கதரிசியென்று தெரிய வந்தது. அவருடைய பிரசங்கத்தைக் கேட்டவர்கள் அவருடைய போதகத்திற்காக பிரமித்தார்கள்

அதேதென்னில், வேதபாரகரைப் போல் அல்ல, அதிகாரமுள்ளவரைப் போல் அவர்களைப் போதிக்கிறவராயிருந்தார். அவர் வார்த்தையில் வல்லமையுள்ளவராயிருந்தது போலே, செய்கையிலும் வல்லமையுள்ளவராயிருந்தார். இதற்கு அவர் செய்த ஏராளமான அற்புதங்கள் சாட்சி. மலையிலே அவர் பிரசங்கத்தைக் கேட்டவர்கள் அதின் அடிவாரத்தில் அவருடைய அற்புதங்களையும் காணச் சமயம் கிடைத்தது.

இதோ, ஒரு குஷ்டரோகி வந்து, அவரைப் பணிந்துகொண்டான். குஷ்டரோகம் மகா வேதனையுள்ள ஒரு வியாதி. அந்த வியாதியுள்ளவர்களின் அவயவங்கள் புண்ணாகி, நாற்றமெடுத்து, வர வரக் குறுகிப்போம். அந்த வியாதியுள்ள மனுஷனிடத்தில் நெருங்கிச் சகவாசம் பண்ணுகிறவர்களுக்கும் அந்த வியாதி வரும். ஆகையால் அப்படிப்பட்டவர்களை ஊருக்கு வெளியே அனுப்பிவிட வேண்டும் என்பது இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்ட கட்டளை. இந்தக் குஷ்டரோகியும் தன்னுடைய வியாதியின் நிமித்தம் சனங்களோடு சேர்ந்து பர்வதத்தின் மேல் போகக் கூடாமல், அதின் அடிவாரத்தில் தனியே காத்திருந்தான். அவன் இயேசுநாதர் எவ்வளவு நல்லவரென்று சனங்களால் கேள்விப்பட்டு, அவரண்டை வந்தான். அவன் தாழ்மையுள்ள மனுஷனாயிருந்ததால், நம்முடைய இரட்சகருக்கு முன்பாக விழுந்து, அவரைப் பணிந்துகொண்டான். செபம் செய்கிறவர்களுக்குத் தாழ்மை அவசியம். அகந்தையுள்ளவர்களோடே பராபரன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ அவர் கிருபை அளிக்கிறார். குஷ்டரோகி இயேசுவை நோக்கி: ஆண்டவரே, உமக்கு மனதுண்டானால், என்னைச் சுத்தமாக்க உம்மாலே ஆம் என்று வேண்டிக்கொண்டான். இது எவ்வளவு நேர்த்தியான செபம். அவன் மகா நிர்ப்பாக்கியமான நிலைமையிலிருந்தும், தன்னை இந்த நிர்ப்பாக்கியத்துக்கு நீங்கலாக்கத்தான் வேணுமென்று இயேசுவைக் கட்டாயப்படுத்திக் கேட்கவில்லை. தான் சுகப்படுவது கர்த்தருடைய சித்தத்திற்கு ஒத்திருந்தால் மாத்திரம் தனக்குச் சுகம் கொடுக்க வேணுமென்று கர்த்தரைக் கேட்டான். செபம் பண்ணுகிறவர்கள் இதைக் கவனிக்கவேண்டும். நமக்கு வியாதியிருப்பது நன்மையோ, சுகமிருப்பது நன்மையோ என்று கர்த்தர் ஒருவருக்கு மாத்திரம் தெரியும். ஆகையால், அவர் ஒருவருடைய சித்தத்திற்கு நம்மை முழுவதும் கீழ்ப்படுத்துவது நன்மை. உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக என்று செபம் செய்ய இயேசுநாதர் நமக்குக் கற்றுக்கொடுத்தார். அவர் தாமே கெத்சேமனே தோட்டத்தில் பாவிகளாகிய நமக்காகச் சொல்லிமுடியாத அவஸ்தைப்பட வேண்டியதாயிருந்தபொழுது: பிதாவே, உமக்குச் சித்தமானால், இந்தப் பாத்திரத்தை என



னை விட்டு நீங்கப் பண்ணும்; எனக்கோ அல்ல, உமக்கே சித்தமாயிருக்கிறபடி ஆவதாக என்று செபம் பண்ணினார்.

இந்த விதமாகத் தம்முடைய சித்தத்திற்குக் கீழ்ப்பட்டவனாய் அந்தக் குஷ்டரோகி செய்த செபத்தைக் கர்த்தர் தள்ளிப்போடவில்லை. அப்பொழுது இயேசு கையை நீட்டி, அவனைத் தொட்டு: எனக்கு மனதுண்டு, சுத்தமாகு என்றார். இப்படியே இயேசு தம்முடைய வாக்கினாலும் செய்கையினாலும் அந்த ஏழை மனுஷனை ஆற்றித் தேற்றினார். குஷ்டரோகியை ஒருவரும் தொடமாட்டார்கள். அவனைக் கண்டவர்களெல்லாரும்: எட்டிப்போ, எட்டிப்போ என்று சொல்லுவார்கள். அப்படியிருக்க, இயேசுநாதர் அவனைத் தொட்டார். அவர் அவனைத் தொட்டது அவனுக்கு எவ்வளவு ஆறுதலாயிருந்திருக்கும். மேலும்: எனக்கு மனதுண்டு சுத்தமாகு என்று அவர் சொன்னது, எல்லாவற்றிலும் அதிகமான சந்தோஷத்தைக் கொடுத்திருக்கும். நம்முடைய இரட்சகர் நம்முடைய செபத்தைக் கேட்கவும், நாம் கேட்டதை நமக்குக் கொடுக்கவும் மனதுள்ளவராயிருக்கிறார். அவர் நமக்காகப் பரிதபிக்கும் பிரதான ஆசாரியரென்று சொல்லியிருக்கிறது. நம்முடைய வியாதியில் சுகத்தையும், பசியில் ஆகாரத்தையும், துக்கத்தில் ஆறுதலையும் நமக்குக் கொடுக்க அவர் எப்பொழுதும் சித்தமுள்ளவராயிருக்கிறார். நம்முடைய இக்கட்டில் அவர் ஏனோ தானோவென்று இருக்கிறதில்லை. நமக்கு நன்மை செய்ய அவருக்கு மனதுண்டு. நாம் செபம் பண்ணும்பொழுதெல்லாம் அவர் நம்முடைய பக்கத்தில் நின்று, நம்மைத் தம்முடைய பட்சமுள்ள கையினால் தொட்டு: எனக்கு மனதுண்டு, எனக்கு மனதுண்டு என்று சொல்லிக்கொண்டே இருக்கிறார். ஆகையால் கிறிஸ்தவர்களாகிய நாம் விசுவாசத்தோடே இயேசுவை நோக்கிச் செபம்பண்ணலாம்.

அந்தக் குஷ்டரோகியைச் சொஸ்தமாக்க இயேசுநாதருக்கு மனதிருந்தது என்பது அவன் சுகமானதினாலே வெளியாயிற்று. உடனே அவன் குஷ்டரோகஞ் சுத்தமாயிற்று என்று எழுதியிருக்கிறது. இரட்சகருக்கு மனதிருந்ததினால் ஒருவராலும் சுகமாகக் கூடாத அவன் வியாதியெல்லாம் பறந்துபோயிற்று, தீராத நோய் தீர்ந்துபோயிற்று பூரண சுகம் அவனுக்கு வந்துவிட்டது. அவன் சுகமடைந்ததற்குச் சாட்சியாக ஆசாரியனுக்குக் காண்பித்து, மோசே கற்பித்த காணிக்கையைச் செலுத்தும்படி கர்த்தர் அவனுக்குக் கற்பித்தார். இதனால் அவனைப் பரிசோதித்துப் பார்த்த ஆசாரியனும், அவனுடைய உறமுறையாரும் கர்த்தருடைய அற்புதச் செயலைக் கண்டுகொள்ள இடமாயிற்று. நாமும் தாழ்ந்து பணிந்து விசுவாசமாய்ச் செபம்பண்ணினால் கர்த்தருடைய அற்புதச் செயலைக் கண்ணாரக் காண

போம். விசுவாசமுள்ள செபம் ஒருபோதும் வீண் போகாது. ஏனெனில் சுகமளிக்கவும், நமக்கு வேண்டிய எந்த நன்மையையும் செய்யவும் கர்த்தருக்கு மனதுண்டு. நாம் கேட்டது கேட்டபடி நமக்குக் கிடைக்காவிட்டாலும், நம்முடைய செபத்தைக் கேட்க அவருக்கு மனதில்லையென்று நாம் சொல்லக் கூடாது. ஏனெனில், கர்த்தர் நம்முடைய செபத்தை நம்முடைய நோக்கத்தின்படியல்ல, நமக்கு நன்மையாயிருக்கிறபடி கேட்க மனதுள்ளவராயிருக்கிறார்.

2.

நம்முடைய இரட்சகருக்கு சுகமாக்கப் பெலனிருப்பதால், நாம் அவரை நோக்கி விசுவாசத்தோடு செபம்பண்ணலாம்.

இயேசு கப்பர்நகூமுக்குள் பிரவேசிக்கையில், நூற்றுக்குச் சேர்வைக்காரன் அவரண்டை வந்து, அவரை வேண்டிக்கொண்டு: ஆண்டவரே, என் வேலைக்காரன் மிகவும் உபாதிப்பட்டு, வீட்டிலே திமிர்வாதமாய்க் கிடக்கிறான் என்றான். இந்தச் சேர்வைக்காரன் ஒரு பெரிய சர்க்கார் உத்தியோகஸ்தன். ரோம ராச்சியத்தின் நூறு சேவகருக்குத் தலைவன். அவன் புறச்சாதியானாயிருந்தும், யூத சாதியைச் சிநேகித்து, அவர்களுக்கு ஒரு ஆலயமும் கட்டிக்கொடுத்தான். அவன் இஸ்ரவேலின் பராபரனை விசுவாசித்ததற்கு இது ஒரு சாட்சி. அவன் இயேசுநாதரண்டைக்கு நேரே வரத் தன்னைப் பாத்திரவானாக எண்ணினதில்லை. அவன் சில மூப்பரை அவரண்டைக்கு அனுப்பி, வேண்டிக்கொண்டானென்று லூக்கா சுவிசேஷத்தில் (7, 2-10) வாசிக்கிறோம். அவன் தன் வேலைக்காரனுக்காக அவ்வளவு கவலைப்பட்டதினால் அவன் ஒரு நல்ல எசமான் என்று பார்க்கலாம். இப்படியே அவன் தெய்வபக்தியுள்ளவனும் சிநேகமுள்ளவனுமாயிருந்தது மல்லாமல், தாழ்மையுள்ள மனுஷனாகவும் இருந்தான். ஏனெனில், நான் வந்து அவனைக் குணமாக்குவேனென்று இயேசுநாதர் சொன்னபொழுது அவன்: ஆண்டவரே, நீர் என் தலை வாசலுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரவானல்ல; ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும், அப்போது என் வேலைக்காரன் ஆரோக்கியமாவான். அதேதென்றால் நான் அதிகாரத்துக்குக் கீழான மனுஷனாயிருந்தும், எனக்குக் கீழாயிருக்கிற சேவகர் எனக்குண்டு. நான் ஒருவனைப் போ என்க, போகிறான்; மற்றொருவனை வா என்க வருகிறான், என் பணிவிடைக்காரனுக்கு: இன்னதைச் செய்யென்று சொல்ல, செய்கிறான் என்றான்.

அவன் சொன்ன இந்த வார்த்தைகளில் தாழ்மையோடு கூடிய அவனுடைய விசுவாசம் வெளியாகிறது. இயேசுநாதர்



மகா பரிசுத்தரும் தான் பாவியுமாயிருப்பதால், அவரைத் தன் வீட்டுக்கு அழைப்பிக்கத் தான் தகுதியுள்ளவனல்ல என்று அவன் நினைத்தான். அதுவுமல்லாமல் தான் சொல்லுகிற ஒரு வார்த்தைக்குத் தன் வேலைக்காரரெல்லாம் கீழ்ப்படிகிறதுபோலே இயேசுநாதருடைய வார்த்தைக்குச் சகல காரியங்களும், வியாதிகளுங்கூடக் கீழ்ப்படியுமென்று நம்பினான். ஆதியிலே பராபரன்: வெளிச்சமுண்டாகக் கடவது என்று சொன்னவுடனே எப்படி வெளிச்சமுண்டாயிற்றோ, புல் பூண்டு மரங்கள் முளைக்கக்கடவது என்று சொன்னவுடனே எப்படி அவைகள் முளைத்ததோ, அப்படியே சொன்னது சொன்னதுபோல் நடப்பிக்க இயேசுநாதருக்கும் தெய்வ வல்லமை உண்டென்று அவன் விசுவாசித்தான். இவனுடைய விசுவாசம் வீண்போகவில்லை. கர்த்தர் அவன் வார்த்தையைக் கேட்டு ஆச்சரியப்பட்டு, பின் செல்லுகிறவர்களுடனே சொன்னதாவது: மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், இஸ்ரவேலிலே முதலாய் நான் இப்படிக்கொத்த விசுவாசத்தைக் கண்டதில்லை. ஆனால் உங்களுக்குச் சொல்லுகிறேன், அநேகம்பேர் கிழக்கிலும் மேற்கிலும் இருந்து வந்து, வான இராச்சியத்தில் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்றவர்களுடனே கூடப் பந்தியிருப்பார்கள். இராச்சியத்தின் புத்திரரோ எல்லாவற்றிற்கும் புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள். அங்கே அழுகையும் பல்கடிப்பும் உண்டாயிருக்கும் என்றார்.

இஸ்ரவேலராகிய யூதர் பராபரனுடைய சனமாயிருந்தார்கள்; அவருடைய வசனத்தைப் படித்திருந்தார்கள். தங்கள் நடுவே பிறந்து வளர்ந்த இயேசுநாதருடைய பிரசங்கங்களைக் கேட்டார்கள். அவர் செய்த அநேக அற்புதங்களைக் கண்டார்கள். என்றாலும், அவர்களிடத்தில் மெய் விசுவாசத்தைக் காண்பது அருமையாயிருந்தது. இது நம்முடைய இரட்சகருக்கு மகா விசனம். தோட்டத்தில் நாட்டி வளர்த்த ஒரு மரத்திலே காய் கனியைக் காணாதவர்களுக்கு எவ்வளவு வருத்தம் இருக்குமோ, அதிலும் அதிகமான வருத்தம் இயேசுநாதருக்கு இருந்தது. புறச்சாதியானாகிய இந்தச் சேர்வைக்காரனோ தன் விசுவாசத்தினால் இஸ்ரவேலரை வெட்கப்படுத்துகிறவனாயிருந்தான். இவனைப்போல் அநேகம் புறச்சாதியார் கர்த்தரை விசுவாசித்து, திருச்சபையில் சேர்ந்து, அதின் நன்மைகளை அனுபவித்து, மோட்சத்தில் ஆபிரகாம் முதலிய பரிசுத்தவான்களோடு பந்தியிருப்பார்களென்றும், விசுவாசியாத யூதர்கள் இந்த நன்மைகளை அனுபவியாமல் நரகத்தில் தள்ளப்படுவார்களென்றும் இயேசுநாதர் சொல்லி, அவன் விசுவாசத்தைப் புகழ்ந்தார். இந்த வார்த்தைகள் நமக்குப் பெரிய ஆறுதலே. புறச்சாதியாராகிய நம்மையும் கர்த்தர் விசுவாசத்துக்கு அழைத்தார். நமக்கும் விசுவாசத்தைக்

கொடுக்கிறார். நாமும் இந்த உலகத்தில் அவருடைய திருச்சபையில் ஏராளமான நன்மைகளை அனுபவிக்கப் பண்ணியிருக்கிறார். பரலோகத்திலே ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்றவர்களோடு நாமும் பந்தியிருக்க அவர் சித்தமாயிருக்கிறார். இது எவ்வளவு பெரிய பாக்கியம், எவ்வளவு பெரிய கிருபை.

சேர்வைக்காரனின் விசுவாசத்தைப் புகழ்ந்து பேசின இயேசுநாதர்: போ, நீ விசுவாசித்தபடி உனக்கு ஆகக்கடவதென்று அவனுக்குச் சொன்னார். அந்த நாழிகையிலே அவன் வேலைக்காரன் ஆரோக்கியமானான். சுத்தமாகு என்று சொன்ன ஒரே வார்த்தையினால் குஷ்டரோகி சொஸ்தமானான். நீ விசுவாசித்தபடி உனக்கு ஆகக்கடவதென்ற வார்த்தையினால் வேலைக்காரன் ஆரோக்கியமானான். திமிர்வாதம் அவனை விட்டது. அவன் சுகமாகு முன் அவன் அசைக்கமாட்டாதிருந்த அவயவங்களை அவன் சுகப்பட்ட பின் நன்றாய் உபயோகித்து, நல்ல வேலை செய்யக் கூடியவனானான்.

இப்படியே இயேசுநாதர் வியாதிகளைச் சுகமாக்க வல்லமையுள்ளவரென்று இதினால் வெளியாயிற்று. அவரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிடக் நிற்கும். நமக்கு வியாதியானால் சுகங்கொடுப்பார், நமக்கு எவ்விதச் சகாயமும் செய்ய அவருக்குக் கூடும். ஆகையால், நாம் அவரை விசுவாசித்து அவரை நோக்கிக் கருத்தாய் செபம் பண்ணினோமாகில், நாம் வெட்கப்பட மாட்டோம். அவரை விசுவாசிக்கிற நீதிமானுடைய கருத்துள்ள வேண்டுதல் வெகு பெலனுள்ளதாயிருக்கிறதென்று யாக்கோபு அப்போஸ்தலன் சொல்லுகிறார் (5, 16). நமக்கு நன்மை செய்ய வேண்டுமென்கிற மனதும் அதைச் செய்வதற்கான பெலனும் நம்முடைய இரட்சகருக்கு இருக்கிறது. அதை நாம் பெற்றனுபவிக்க நமக்கு விசுவாசம் மாத்திரம் தேவை.

விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாகிய இயேசுவே, நீர் எங்களுக்கும் மெய் விசுவாசத்தைத் தந்து, கருத்தாய்ச் செபஞ்செய்ய எங்களைப் போதித்தருளும், சுவாமி. ஆமேன்.

---

## மகிமை விளங்கின பண்டிகைக்குப் பிந்தின ௩-ம் ஞாயிறு.

மத். 8, 23 - 37.

பிரியமானவர்களே,

போன ஞாயிற்றுக் கிழமைச் சுவிசேஷ வாக்கியத்தின்படி இயேசுநாதர் இரண்டு வியாதிக்காரரைச் சுகமாக்கினார். இதி



னால் தாம் சகல வியாதிகளின் மேலும் அதிகாரமுள்ளவரென்று காட்டி, தம்முடைய மகிமையை விளங்கப்பண்ணினார். அவருக்கு எல்லாம் கீழ்ப்படியும். தண்ணீர் அவர் மனம்போல் திராட்சரசமாகும். வியாதிகள் அவர் சொல்லுக்குப் பயந்து ஓடிப்போம். மரணங்கூட அவருக்கு முன் நிற்காது. உயிருள்ள சிருஷ்டிகளும் உயிரில்லாத சிருஷ்டிகளும் அவருடைய சித்தத்தின்படியே நடக்கும். இன்றைக்குக் குறிக்கப்பட்ட சுவிசேஷ வாக்கியத்தின்படி காற்றும் கடலும் அவருக்குக் கீழ்ப்படிந்தது. இதினாலும் அவருடைய தெய்வீக மகிமை அவருடைய சீஷருக்கு வெளியாயிற்று. கெனேசரேத்தென்ற கடலில் உண்டான புசல் காற்று நமக்கு உண்டாகும் உபத்திரவங்களுக்கு ஒரு அடையாளம். இயேசுநாதர் நம்முடைய உபத்திரவங்களிலும் நமக்கு உதவிசெய்து, நம்மை இரட்சிக்கிறார் என்று இதினால் நாம் படித்துக்கொள்ளலாம். ஆதலால் நாம் இன்றைக்குத் தியானிக்கப்போகிற சங்கதி:

### கிறிஸ்து உபத்திரவப் புசலில் பெரிய சகாயர் என்பது.

1. கர்த்தரைப் பின்செல்லுகிறவர்களுக்கு உபத்திரவமுண்டு,
2. அவரை நோக்கிக் கூப்பிடுகிறவர்களுக்கு அவர் பெரிய சகாயர்.

### 1.

கிறிஸ்துவைப் பின்செல்லுகிறவர்களுக்கு உபத்திரவம் உண்டு.

இயேசுநாதர் படவில் ஏறுகிறபோது, அவர் சீஷர்கள் அவர் பிறகே சென்றார்கள். இதோ, படவு அலைகளினால் மூடப்படத்தக்கதாய்க் கடலில் பெருங் கொந்தளிப்பு எடுத்தது. இயேசுநாதர் கப்பர்நகூம் என்ற ஊரிலே பேதுருவின் மாமியையும், அநேகம் வியாதிக்காரரையும் குணமாக்கினார். இப்பொழுது அவர் கெனேசரேத் கடலின் அக்கரைக்குப்போய், அங்கே பிசாசுக்களைத் துரத்தி, அநேக நன்மைகளைச் செய்யச் சித்தமாயிருந்தார். அந்த நோக்கமாகவே அவர் ஒரு படவில் ஏறினார். அவருடைய சீஷர்களும் அவரோடு கூடப்போனார்கள். அப்பொழுது அவர்கள் பயணத்துக்குத் தடையாக அந்தச் சிறு கடலில் பெரிய கொந்தளிப்பு எடுத்தது. காற்று பலமாய் அடித்தது. அலைகள் உயரமாயெழும்பிப் படவைத் தண்ணீருக்குள் அமிழ்த்தத் தொடங்கிற்று. படவும், அதில் இருந்த எல்லாரும் தண்ணீருக்குள் அமிழ்ந்துபோகும் படிக்கான பெரிய மோசம் இருந்தது.

நாமும் இந்த உலகத்திலே கர்த்தரைப் பின்சென்று, அவருடைய வழிகளில் நடக்கப்போனால், அதற்குப் பலவிதமான தடைகள் நேரிடும். நம்முடைய சத்துருவாகிய பிசாசும் அதனுடைய

பிள்ளைகளாகிய உலகத்தாரும் நமக்கு விரோதமாகத் துன்பம் எழுப்புவார்கள். கிறிஸ்துவைப் பின்செல்லும் விசுவாசிகளுக்குத் துன்பம் அடிக்கடி வரும். அது உலகத்தில் அவர்களுக்குக் கிடைக்கும் பங்கு. கிறிஸ்து இயேசுவுக்குள் தெய்வபக்தியாய்ச் ஜீவனம்பண்ண மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்களென்று பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறார் (உ தீமோ. 3, 12).

துன்பம் பலவிதமாயிருக்கும். நாம் இயேசுநாதரை விசுவாசிக்கிறதற்காக நம்முடைய சொந்த இனத்தார் ஜனத்தார் நம்மை இகழ்ந்து பேசி, நம்மைப் பகைத்து, ஜாதிக்குப் புறம்பாக்குவார்கள். நம்முடைய சொத்து சுதந்தரங்களைப் பிடுங்கிக்கொள்ளுவார்கள்; நமது மேல் இல்லாததும் பொல்லாததுமான குற்றங்களை யேற்படுத்தி, கச்சேரிக்கு இழுத்து, அநேக சங்கடங்களை உண்டுபண்ணுவார்கள். அப்பொழுது பிசாசு நமக்குள்ளே பலவிதமான சந்தேகங்களை உண்டுபண்ணும். நீ, கிறிஸ்துவை விசுவாசித்து அவருடைய சீஷனானதினாலல்லவா உனக்கு இவ்வளவு துன்பம், இனி அவரை விசுவாசிக்காதே, அவரை விட்டு விடு என்று நமக்குச் சொல்லும். இப்படித்தான் முற்காலத்திலே யோபு என்ற பரிசுத்தவானுக்குத் துன்பம் வந்தபோது அவன் பெண்சாதி, அவனைப்பார்த்து: இன்னம் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ, பராபரனை அரோசித்துச் செத்துப்போம் என்றாள்.

துன்பத்தில் நாம் பிசாசினுடைய சோதனைக்கும், பொல்லாதவர்களுடைய யோசனைக்கும் இடங்கொடுக்கக்கூடாது. நமக்கு உபத்திரவமும் துன்பமும் வருகிறது நல்லது. ஏனென்றால் துன்பத்திலேதான் நம்முடைய பலவீனம் நமக்குத் தெரியவரும். கெனேசரேத் கடலில் புசல் அடித்தபோதுதான் சீஷரின் மாலுமித்தனம் எவ்வளவென்று வெளிப்பட்டது. அவர்கள் சிறுவந்தொட்டுப் படவேறினவர்கள், படவு நடத்தினவர்கள். அந்தக் கெனேசரேத் கடலிலே அடிக்கடிப் பயணம் பண்ணிப் பழக்கப்பட்டவர்கள். இந்தக்கொந்தளிப்பில் அவர்கள் தங்களால் கூடிய சாமர்த்தியமெல்லாம் செய்தும், படவை மோசத்திலிருந்து காக்கக்கூடாமல், கலங்கிக் கதறினார்கள். துன்பநேரத்தில் நம்முடைய சுயபுத்தி போதாது, நமது ஆஸ்தி பாஸ்தி உதவி செய்யாது என்று நாம் காண்போம். ஆகையால், ஞானி தன் ஞானத்தைத் தொட்டு மேன்மை பாராட்டவேண்டாம்; பராக்கிரமன் தன் பராக்கிரமத்தைத் தொட்டு மேன்மை பாராட்டவேண்டாம்; ஐசுவரியவான் தன் ஐசுவரியத்தைதொட்டு மேன்மை பாராட்டவேண்டாம் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே. 9, 22). துன்பங்களால் நம்முடைய பலவீனம் நமக்குத் தெரியவருகிறதுமல்லாமல், மற்றொரு முக்கிய பிரயோசனம் உண்டாகிறது. நமக்கு வரும் துன்பங்கள்



நாம்செய்த அநேக பாவங்களை நமக்கு நினைப்பூட்டும். யோனா தீர்க்கதரிசி ஏறியிருந்த கப்பல் கடல் கொந்தளிப்பில் அகப்பட்டு மோசமான நிலைமையில் இருக்கும்பொழுது அவர்: தான் கர்த்தருடைய முகத்துக்கு விலகி ஓடிப்போவதை நினைவுகூர்ந்து அறிக்கையிட்டார் (யோனா 1, 10). துன்பம் நமக்கு நல்லதென்பதற்கு மற்றொரு முகாந்திரமும் உண்டு. அது கிறிஸ்துவண்டைக்கு நம்மை ஓட்டுகிறது. நாலாப்புறத்திலும் ஓடிப்பார்த்தும், சகாயம் கிடைக்காதபொழுது கிறிஸ்துவினிடமே ஓடவேண்டும் என்கிற ஞாபகம் வருகிறது. ஏனெனில்: பிரயாசப்பட்டுப் பாரஞ்சுமந்தவர்களாகிய நீங்களெல்லாரும் என்னண்டைக்கு வாருங்கள், நான் உங்களை முசிப்பாற்றுவேன் என்று அவர்தான் சொன்னார். அப்படியே கொந்தளிப்பு எடுத்தபோது சீஷர்கள் இயேசுநாதரிடம் ஓடி: ஆண்டவரே, எங்களை இரட்சியும், மடிந்துபோகிறோம் என்றார்கள். நமக்கு வரும் துன்பங்களும் பாடுகளும் நமக்குச் செபம் கற்றுக்கொடுக்கும் நல்ல உபாத்திமார். செபம் பண்ணிப் பழக்கப்படாதவன் துன்பநேரத்தில் எப்படியாவது செபம் பண்ணுவான். ஆகையால், எங்களுக்குப் பாடுகள் வேண்டாம், உபத்திரவம் வேண்டாம், நாங்கள் எப்பொழுதும் சுகத்தில் இருக்கவேண்டும் என்று விரும்புகிறது சரியல்ல. கிறிஸ்து தம்மைப் பின்செல்லுகிறவர்களுக்கு இந்த உலகத்தில் கொடுக்கும் வெகுமதி சிலுவைதான்; சிலுவை என்பதற்குத் துன்பம் என்று அர்த்தம்.

வாழ, சிலுவையே வாழ, வாற உன்னை மனதார
பார மற்ற பாரமே, தோள்மேல் ஏற்றுக் கொள்வேனே,

என்று துன்பச் சிலுவையை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும். கர்த்தருடைய சீஷராகிய அப்போஸ்தலமார் அவரை எல்லாருக்கு முன்பாக அறிக்கையிட்டுச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததற்காக உலகம் அவர்களைப் புகழ் இல்லை, அவர்களை வெகுபாடு படுத்திற்று. அவர்கள் தங்களுக்கு வந்த பாடுகளைக் கிறிஸ்துவினிமித்தம் உற்சாகமாய்ப் பட்டு அநுபவித்தார்கள். அவர்களைப்போல் நாமும் உபத்திரவம் நேரிடும்பொழுது விசுவாசத்தில் நிலைத்திருந்து, கர்த்தரை நோக்கி, உக்கிரமாய்ச் செபம் செய்வோமாக.

## 2.

உபத்திரவப் புசலில் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறவர்களுக்கு அவர் பெரிய சகாயராயிருக்கிறார்.

கடலில் பெரிய கொந்தளிப்பு எடுத்தபொழுது இயேசுநாதர் நித்திரை பண்ணினார். மெய்தான், அவர் கப்பற்கூடம்

ஊரிலே இளைப்பாற்றியில்லாமல் அதிக வேலை செய்ததினால் அவர் மிகவும் களைத்திருந்தார். அவருக்கு நித்திரை அவசியமாயிருந்தது. அவர் நித்திரை செய்த அதே நேரத்தில் விழித்தும் இருந்தாரென்று சொல்லலாம். ஏனெனில், அவர்மெய்யான தேவன். இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குகிறதுமில்லை, தூங்குகிறதுமில்லை என்று எழுதியிருக்கிறது. ஆகையால் சீஷப்பிள்ளைகளுக்கு நேரிட்ட துன்பம் நித்திரை செய்த இயேசுநாதருக்குத் தெரியாததல்ல. அவருக்கு அது நன்றாய்த்தெரியும். நமக்கும் பாடுகள் நேரிடும்பொழுது இயேசுநாதர் நம்மைப் பார்க்காமல், நம்முடைய துன்பத்தைக் கவனிக்காமல், தூங்குகிறதுபோல நமக்குத் தோன்றுகிறது உண்டு. இப்படிப்பட்ட தோற்றத்துக்கு நாம் இடம் கொடுக்கக்கூடாது. அவருடைய கண் எப்பொழுதும் விழித்திருந்து, நம்மையும் நமக்கு நேரிடும் சகல காரியங்களையும் பார்த்துக் கொண்டிருக்கிறது.

அவர் தூங்கினவராய்த் தோன்றினாலும் சரி, விழித்திருக்கிறவராய்த் தோன்றினாலும் சரி, அவர் நம்மோடு இருக்கிறதே நமக்குப் போதுமானது. இதோ, உலகத்தின் முடிவுமட்டாகச் சகல நாட்களிலும் உங்களுடனே கூட இருக்கிறேன் என்று சொன்னவர் பொய் சொல்லுகிறவரல்ல. விசேஷமாய் உபத்திர நேரத்தில் அவர் நம்மோடு இருக்கிறார். விசுவாசக்கண் உடையவர்கள் அவரைப் பார்க்கலாம். முதலாம் இரத்தச் சாக்ஷியாகிய ஸ்தேவான் தன் துன்பநேரத்தில்: இதோ, வானங்கள் திறந்திருக்கிறதையும் மனுஷனுடைய குமாரன் பராபரனுடைய வலது பாரிசத்தில் நிற்கிறதையுங் காண்கிறேன் என்றார். இஷ்டர் எட்டி நிற்கையில கர்த்தர் கிட்டிநிற்பார். துக்கப்படும் இருதயம் கர்த்தர் தங்கும் வீடு. சிலுவையும் கிறிஸ்துவும் பிரிந்திருப்பதில்லை. இயேசுநாதர், நாம் அவரை எழுப்பும் படிக்கே தூங்குகிறார்.

தம்முடைய பிள்ளைகள் தம்மை நோக்கிக் கூப்பிடும்பொழுது அவர்கள் கூப்பிடுதலை அவர் அசட்டைசெய்கிறதில்லை. நாம் போன ஞாயிற்றுக்கிழமை கேட்டபடி. நமக்குச் சகாயம் செய்ய அவருக்கு மனமும் உண்டு, பலமும் உண்டு. தம்மை நோக்கிக் கூப்பிட்ட சீஷர்களுக்கு அவர் முந்த ஆத்தும சகாயம் செய்தார். அற்பவிசுவாசிகளே, ஏன் பயமடைந்திருக்கிறீர்களென்று அவர் சொன்னது சீஷருக்குச் செய்த ஆத்தும சகாயம். இந்த வார்த்தைகளினால் அவர்களுடைய மனக்கொந்தளிப்பை அமர்த்துகிறார். நமக்கு வரும் சரீர உபத்திரவங்களையும் துன்பங்களையும் நமக்கு அதிகப் பாரமாக்குவது நம்முடைய அற்பவிசுவாசமே. கர்த்தரை நாம் முழுவதும் நம்பவேண்டியவர்களாயிருக்க, அப்படிச் செய்யாமல் சந்தேகத்தோடு அவரைக் கூப்பிடுவதே அற்பவிசுவாசம். அற்பவிசுவாசத்தைக் கர்த்தர் கடி-



ந்துகொண்டு, அதைப் பலப்படுத்துவாரே அல்லாமல், அதைத் தள்ளி அழித்துப்போடுகிறதில்லை. கிறிஸ்து தம்முடைய வார்த்தைகளினால் அவர்களைப் பலப்படுத்தினார். தாம் அவர்களோடு இருக்கும் வரையில் அவர்களுக்குப் பயம் உண்டாக நியாயம் இல்லை என்றும், தமக்கு எல்லாம் பயப்படும் என்றும் அவர்களுக்கு உணர்த்தச் சித்தமாயிருந்தார். நாமும் நமக்கு உபத்திரவம உண்டாகும்பொழுது முந்த நம்முடைய ஆத்துமத்துக்காகக் கவலைப்பட்டு, நம்முடைய விசுவாசத்தைப் பலப்படுத்தும்படி கர்த்தரை நோக்கிக் கெஞ்சவேண்டும். இயேசுநாதரிடம் சந்திரரோகியான தன்னுடைய மகனை அழைத்து வந்த ஒரு மனுஷனைப்போல் நாம் செபம்பண்ணவேண்டும். விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசத்துக்கு உதவி செய்யும் என்பது அவன் செய்த நல்ல செபம். விசுவாச பலமிருந்தால் நாம் சகல துன்பங்களையும் மேற்கொள்ளலாம். எந்தத்துன்பமும் நமக்குத் துன்பமாய்த் தோன்றாது.

இயேசுநாதர் சீஷர்களின் மனப்புசலை அமர்த்தி, அவர்களுக்கு விசுவாசத்தைக் கொடுத்தபின், அவர் கடல் புசலையும் அமர்த்தினார். அவர் எழுந்திருந்து, காற்றுகளையும் கடலையும் அதட்டினார். அப்பொழுது, மகா அமைதல் உண்டாயிற்று என்று எழுதியிருக்கிறது. கிறிஸ்துவின் வார்த்தைக்குக் காற்றும் கடலும் கீழ்ப்படிந்தது. ஏனெனில், அதெல்லாம் அவரால் உண்டாக்கப்பட்ட சிருஷ்டிகள். எஜமானுக்கு வேலைக்காரன் கீழ்ப்படிகிறதுபோல், சிருஷ்டிகருக்குச் சிருஷ்டிகள் கீழ்ப்படியும். காற்றும் கடலும் அமர்ந்ததினால் மகா அமைதல் உண்டாயிற்று. அப்பொழுது படவு முன்போல் அங்குமிங்கும் அல்லாடவில்லை. கெனேசரேத் கடல் ஒரு சிறு குளம்போல் அலையில்லாதிருந்தது. இப்படித்தான் விசுவாசிகளுக்கு வரும் உபத்திரவங்களும் முடியும். எப்பொழுதும் மழை காலமா. மழை நின்றுபோய் வெயில் எறிக்கிறது இல்லையா. பராபரனுடைய பிள்ளைகளுக்கும் எப்பொழுதும் உபத்திரவமா. அப்படியல்ல. அவர்கள் உபத்திரவம் ஒழிந்து அமர்ந்திருக்கும் வேளையும் வரும். ஆண்டவரே, எங்களை இரட்சியும் என்ற நேரம்போய், என் ஆத்துமாவே கர்த்தரையும், என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தையும் இஸ்தோத்திரி என்று சொல்லும் வேளையும் வரும். தன் சகோதரராலும் போத்திப்பாரின் மனைவியாலும் வெகுபாடுபட்ட யோசேப்புக்கு அவன் சந்தோஷப்படும் நாள் வந்தது அல்லவா. சவுலால் துன்பப்பட்ட தாவீது சிங்காசனம் ஏறி, செங்கோல் பிடிக்கும் வேளை வந்ததில்லையா. அதுபோலவே கர்த்தர் நம்முடைய கூக்குரலையும் விண்ணப்பங்களையும் கேட்டு, நம்மை எல்லாத் துன்பங்களுக்கும் நீங்கலாக்கி, நம்மைச் சந்தோஷத்தினாலும் மனமகிழ்ச்சியினாலும் நிரப்புவார்.

மனுஷர் ஆச்சரியப்பட்டு: இவர் எப்படிப்பட்டவரோ, காற்றுகளுங் கடலும் அவருக்குக் கீழ்ப்படிகிறதே என்றார்கள். அவருக்கு ஏசாயா தீர்க்கதரிசி கொடுக்கும் பல பெயர்களில் அதிசயமானவர் என்பதும் ஒன்று. அவர் சுவாபம் அதிசயமானது. அவர் வாக்கு அதிசயமானது. அவர் செய்கை அதிசயமானது. நாமும் அவருடைய வல்லமையால் நம்முடைய உபத்திரவங்களுக்கு நீங்கலாய்ப்போவது கண்டு, ஆச்சரியப்படுவோம். ஆச்சரியத்தினால் சங்கீதம் பாடுவோம். நம்மிடத்தில் கர்த்தர் நடப்பிக்கும் அதிசயத்தைக் கண்டு, மற்றவர்களும் ஆச்சரியப்படுவார்கள்.

ஆச்சரியமானவராகிய எங்கள் அருமை இரட்சகரே, எங்களுக்கு வரும் உபத்திரவங்களில் நாங்கள் தளர்ந்து போகாமல், உம்முடைய சகாயத்தையும் ஒத்தாசையையும் தேடி அடைவதற்கான விசுவாசத்தை எங்களுக்குத் தந்தருளும், சுவாமி. ஆமென்.

---

## மகிமை விளங்கின பண்டிகைக்குப் பின் வரும் ரு-ம் ஞாயிறு.

மத். 13, 24-30.

பிரியமானவர்களே,

இயேசுநாதர் தண்ணீரை இரசமாக்கி, ஏழைக் கலியாணக்காரருக்குக் கொடுத்ததினால் அவருடைய தயவின் மகிமையைக் காண்பித்தார். அவர் குஷ்டரோகியைச் சொஸ்தமாக்கினதினாலும், திமிர்வாதமுள்ள வேலைக்காரனைச் சுகமாக்கினதினாலும் தம்முடைய இரக்கத்தின் மகிமையைக் காண்பித்தார். அவர் கடல் கொந்தளிப்பை அமர்த்தினதினாலே அவருடைய வல்லமையின் மகிமையைக் காண்பித்தார். அவருடைய மகிமை இவ்வளவுதானா, அல்ல அல்ல. நாம் வாசிக்கக்கேட்ட சுவிசேஷ வாக்கியத்திலே திருச்சபையில் விளங்கும் அவருடைய வேறுவித மகிமைகள் சொல்லியிருக்கிறது. அதை நாம் கவனித்துப் பார்ப்பது நமக்கு ஆறுதலும் எச்சரிப்புமாயிருக்கும். ஆகையால்:

**விசுவாசிகளும் அவிசுவாசிகளும் கலந்திருக்கிற திருச்சபையிலே விளங்கும் கிறிஸ்துவினுடைய மகிமை என்னவென்று பார்ப்போம்.**

1. மனிதரை விசுவாசிகளாக்குவதில் அவருடைய கிருபையின் மகிமை விளங்கும்.
2. அவிசுவாசிகளைச் சகித்திருப்பதில் அவருடைய பொறுமையின் மகிமை விளங்கும்.



3. கடைசி நாளிலே அவர் விசுவாசிகளுக்கும் அவிசுவாசிகளுக்கும் செய்யப்போகிற தீர்ப்பிலே அவருடைய நீதியின் மகிமை விளங்கும்.

### 1.

இயேசுநாதர் மனிதரை விசுவாசிகளாக்குவதில் அவருடைய கிருபையின் மகிமை விளங்கும்.

வானராச்சியம் தன் வயலில் நல்ல விதையை விதைக்கிற மனுஷக்கு ஒப்பாயிருக்கிறது. இந்த உவமைக்கு அர்த்தமென்னவென்று இயேசுநாதரைக் கேட்டபொழுது அவர் சொன்ன அர்த்தத்தின்படியே, நல்ல விதையை விதைக்கிறவர் மனுஷனுடைய குமாரன்; வயலோ உலகம்; நல்ல விதையோ இராச்சியத்தின் புத்திரர்.

உலகத்திலுள்ள மனிதரெல்லாரும் கர்த்தருடைய வயல், விதைப்பில்லாமல் விளைச்சலில்லை. நல்ல விதை விதைத்தால் தான் நல்ல விளைச்சலைக் காணலாம். விதைக்கிறவன் இல்லாமல் விதைப்பும் இல்லை. மனிதராகிய நாம் பொல்லாத பாழ் நிலம். நாமாய் யாதொரு நன்மையை நினைக்கக்கூடியவர்களுமல்ல, செய்யக்கூடியவர்களுமல்ல. நாம் நினைப்பதெல்லாம் பாவம், பேசுவதெல்லாம் பாவம், செய்வதெல்லாம் பாவம். நாம் நன்மை செய்யவேணுமென்றால், அது இயேசுநாதர் ஒருவராலே தான் ஆகும். என்னை அல்லாமல் நீங்கள் ஒன்றும் செய்யக்கூடாதென்று அவர் சொன்னார் (யோவா. 15, 5).

நம்முடைய இரட்சகர் பாழ் நிலங்களாகிய நம்மை நோக்கிப்பார்ப்பது கிருபை. அவர் கிருபையினால் நம்மை விசுவாசிகளாக்கவும், விசுவாசத்தினால் நம்மைத் தமக்கு ஏற்றவர்களாக்கவும் சித்தமுள்ளவராயிருக்கிறார். நமக்குள் விசுவாசத்தை உண்டாக்கும்படி அவர் ஒரு விதை விதைக்கிறார். அந்த விதைக்குப் பராபரனுடைய வசனம் என்று பெயர். அது பதரல்ல, நல்ல மணி. அதுக்கு ஜீவனுள்ள வித்து என்று பெயர். பராபரனுடைய வசனத்தை யார் நமக்குப் பிரசங்கித்தாலும், அதை நமக்குள் விதைக்கிறவர் கிறிஸ்து என்றே சொல்லவேண்டும். நமக்குப் பிரசங்கம் செய்யும்படி, அவர் சீமைக் குருமாரையும், நாட்டுக் குருமாரையும், உபதேசிமார் உபாத்திமாரையும் நம்மிடம் அனுப்பியிருக்கிறார். அவர்கள் சொல்லுகிற வசனத்தைக் கொண்டு அவர் நமக்குள் விசுவாசத்தை உண்டுபண்ணுகிறார். நாம் இரட்சிப்படைவதற்கு அறிய வேண்டிய சத்தியமெல்லாம் அந்த வசனத்தினாலே நமக்குத் தெரியவருகிறது. நாம் எப்படிப்பட்டவர்களென்றும், இயேசுநாதர் ஆரென்றும், அவர் நமக்காக என்ன செய்தாரென்றும், தேவவசனத்தினாலே நாம் அறிந்துகொள்

ளுகிறோம். நாம் இப்படி அறிந்துகொள்ளுகிற சத்தியத்தை நாம் ஒப்புக்கொள்ளும்படிக்கும் அந்த வசனமே நம்மை ஏவுகிறது. நாம் ஒப்புக்கொண்டபடியே இயேசுநாதரை நம்முடைய இரட்சகரென்று நம்பவும், செத்தாலும் பிழைத்தாலும் அவரைக் கெட்டிப்பிடியாய்ப் பிடித்துக்கொள்ளவும் அந்த வசனமே நமக்குப் பலம் கொடுக்கிறது. இப்படியே இயேசுநாதர் நமக்குள் விசுவாசத்தை உண்டுபண்ணுகிறார். விசுவாசிகள் கர்த்தருடைய கிருபையால் உண்டானவர்கள். அவர்கள் இரத்தங்களினாலாகிலும் மாமிசத்தின் சித்தத்தினாலாகிலும் புருஷனுடைய சித்தத்தினாலாகிலும் பிறவாமல், பராபரனாலே பிறந்தார்களென்று எழுதியிருக்கிறது. (யோவா. 1, 13).

இயேசுநாதரை விசுவாசிக்கிற அவர்களுக்குப் பராபரன் பாவங்களை எல்லாம் மன்னிக்கிறார். பாவமன்னிப்புப் பெற்றுக்கொண்ட அவர்களைப் பராபரன் பாவிகளென்று சொல்லாமல், அவர்களை நீதிமான்களென்றும், பரிசுத்தர்களென்றும் நல்லவர்களென்றும் சொல்லுகிறார். அவர்களுக்கு இருக்கிற நீதி, பரிசுத்தம், நன்மை எல்லாம் கிறிஸ்துவினுடையது. கிறிஸ்துவினாலே அவர்களுக்கு வந்த நன்மையை முன்னிட்டு அவர்களையும் நல்ல விதை என்று சொல்லலாம்.

நல்ல விதை நல்ல பயிராகும். நல்ல பயிர் நல்ல விளைச்சலைக் கொடுக்கும். அதுபோல் விசுவாசிகளும் கிறிஸ்துவினுடைய பலத்தினால் நன்மை செய்கிறார்கள். அவர்களிடத்திலே சிநேகம், சந்தோஷம், சமாதானம், நீண்டசாந்தம், பொறுமை, மெத்தனவு, மனத்தாழ்மை, கற்பு, இச்சையடக்கம் முதலிய அநேக நற்குணங்களும், அதற்கேற்ற நல்நடக்கையும் காணப்படும்.

பவுல் அப்போஸ்தலன் இப்படிப்பட்ட ஒரு நல்ல விதை. அவரால் சபையிலே விளைந்த நன்மைகள் ஏராளம். அவரும் அவரைப்போலொத்த எல்லா விசுவாசிகளும் கர்த்தருடைய கிருபையால் உண்டானவர்கள். ஆகையால் திருச்சபையிலுள்ள விசுவாசிகள் எல்லாரும் கர்த்தருடைய சொல்லிமுடியாத கிருபையின் மகிமையைக் காண்பிக்கும் கண்ணாடிகளாயிருக்கிறார்கள். நம்முடைய சபையிலே இருக்கிற விசுவாசிகளும் கர்த்தருடைய கிருபையால் உண்டானவர்களே. கர்த்தர் நம்மைக் கிருபையாய்க் கண்ணோக்கி, கிருபையாய் அழைத்து, கிருபையாய் ஏற்று, கிருபையாய் இரட்சிக்கிராதே போனால் நாம் கெட்டழிந்தேபோவோம். இரட்சிக்கப்பட்ட நாமோ கர்த்தருடைய கிருபையைத் துதித்து, அவரை ஸ்தோத்திரிப்போமாக.

2.

அவிசுவாசிகளைச் சகித்திருப்பதில் கிறிஸ்துவினுடைய பொறுமையின் மகிமை விளங்கும்.



மனுஷர் நித்திரை பண்ணுகையில், அவன் சத்துராதி வந்து, கோதுமைக்குள் களைகளை விதைத்துப்போட்டுப்போனான். பயிரானது வளர்ந்து, கனியைப் பிறப்பிக்கிறபோது களைகளுங் காணப்பட்டது. வீட்டெசமானுடைய பணிவிடைக்காரர் சேர்ந்துவந்து, அவனுடனே: ஆண்டவனே, நீர் உமது வயலில் நல்ல விதையை விதைத்ததில்லையோ; பின்னை களைகள் அதுக்கு எங்கேயிருந்துவந்ததென்றார்கள். அவன் இவர்களுக்கு: சத்துராதி மனுஷன் அதைச் செய்தான் என்றான்.

வயலில் நெற்பயிரோடே களைகளும் முளைத்திருக்கும். திருச்சபையில் விசுவாசிகள் நடுவே அவிசுவாசிகளும் இருக்கிறார்கள். களைகளால் பயிருக்குச் சங்கடம் இருப்பதுபோலே அவிசுவாசிகளால் பராபரனுடைய பிள்ளைகளுக்கு அநேக சங்கடங்கள் உண்டு. அவிசுவாசிகள் பொய்ப் போதகம் பண்ணவும், பகை மூட்டவும், சண்டை போடவும், விபசாரம் செய்யவும், மோசம் போக்கவும், பொய் பேசவும் மற்ற அநியாயங்களை நடப்பிக்கவும் துணிகிறார்கள். அவர்களைப் பொல்லாங்கனின் புத்திரர் என்று இயேசுநாதர் சொல்லுகிறார். ஏனெனில் அவர்களை அவிசுவாசிகளாக்கினவர் இயேசுநாதரல்ல. பொல்லாத சத்துருவாகிய பிசாசுதான் அவர்களைக் கெடுத்தவன். மனுஷர் தங்கள் ஆத்துமங்களுக்காகக் கவலைப்படாமல், அசமந்தமாயிருக்கும்பொழுது பிசாசு அவர்களைச் சோதிக்கிறது, அவர்களை மோசப்படுத்துகிறது, அவர்களைப் பொல்லாப்புக்குள்ளாக்குகிறது. ஆகையால் அது மனுஷ சாதியின் சத்துராதி, அது ஆதிமுதலாய் மனுஷ சாதியைக் கெடுத்துவருகிற கொலைபாதகன். ஆகையால் ஒவ்வொரு கிறிஸ்தவனும் அதற்கு எச்சரிக்கையாய் விழித்திருக்க வேண்டும்.

திருச்சபையில் விசுவாசிகளும் அவிசுவாசிகளும் எப்பொழுதும் இருப்பார்கள் என்று நம்முடைய வாக்கியத்தினால் அறிகிறோம். இப்படி இருப்பது தெய்வபத்தியுள்ளவர்களுக்கு அடிக்கடி வருத்தத்தை உண்டாக்குகிறது. குணப்படாதவர்களாலே உண்டாகும் இடறலையும் இடைஞ்சலையும் பார்க்கும்பொழுது விசுவாசிகள் விசனம் அடைந்து, கண்ணீர் விடுகிறார்கள். விசேஷமாய்த் திருச்சபையில் ஊழியஞ்செய்யும் கர்த்தருடைய பணிவிடைக்காரர் பெருமூச்சு விட்டுப் புலம்புவதை நாம் அடிக்கடி பார்க்கலாம். அவிசுவாசிகளையும் பொல்லாதவர்களையும் அடியோடே தொலைத்துப் போட்டால் நல்லது என்று நினைக்கிறவர்களும் உண்டு. அப்படியே நம்முடைய வாக்கியத்திலும் வாசிக்கிறோம். பணிவிடைக்காரர் அவனுடனே: நாங்கள் போய் அதுகளைப் பிடுங்கிப்போடச் சித்தமாயிருக்கிறீரோ என்றார்கள். அதற்கு அவன்: இல்லை, களைகளைப் பிடுங்குகையில் நீங்கள் கோ

துமையைக் கூட வேரோடே பிடுங்காதபடிக்கு, இரண்டையும் அறுப்பு மட்டும் வளர விடுங்கள் என்றான்.

முழுவதும் பரிசுத்தவான்களும் நல்லவர்களும் மாத்திரம் இருக்கிற ஒரு சபையை இந்த உலகத்தில் பார்க்கவேணுமென்று விரும்பினால், அது ஒருபோதும் முடியாது. வெளியரங்கமான பாவங்களிலும் குணப்படாமையிலும் தரித்திருக்கிற பாவிகளை நாம் ஒருவேளை கண்டுபிடித்துச் சபைக்குப் புறம்பாக்கலாம். இரகசியமான பாவங்களில் நிலைத்திருக்கிறவர்கள் அநேகர் உண்டு. அவர்களைக் கண்டு பிடிக்க நம்மால் முடியுமா. மேலும் நல்லவர்களைப் போல் தோன்றுகிற பொல்லாதவர்களும், பொல்லாதவர்களைப் போல் தோன்றுகிற நல்லவர்களும் சபையில் உண்டு. இவர்களைப் பகுத்து அறிவது இலேசான காரியமல்லவே. இதின் நிமித்தம் இயேசுநாதர்: இரண்டையும் அறுப்பு மட்டும் வளர விடுங்கள் என்கிறார்.

ஆ, அவருடைய பொறுமையே பொறுமை. அவர் சபையில் உள்ள அவிசுவாசிகளின் கேட்டையும் பொல்லாப்பையும் எவ்வளவாய்ச் சகித்து வருகிறார். விசுவாசிகளுக்குள்ள சிலாக்கியங்களை அவர்களும் அனுபவிக்க இடங்கொடுக்கிறார். அவர்களைக் குணப்படுத்துதற்கு ஏவும்படி தம்முடைய ஊழியரைக் கொண்டு எச்சரிக்கிறார், புத்தி சொல்லுகிறார், கடிந்துகொள்ளுகிறார். ஏனெனில் அவர் ஆகாதவனுடைய மரணத்தை விரும்பாமல், ஆகாதவன் தன் வழியை விட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறார். ஒருவன் அவிசுவாசத்தில் நிலைத்திருந்து கெட்டுப்போவானானால் அவன் கெட்டுப்போவதற்கு அவனே காரணன். கர்த்தரோ அந்தப் பொல்லாதவனைச் சகித்துக்கொண்டு, அவன் வயிற்றுக்குப் போசனமும் அவன் இடுப்புக்குத் துணியும் கொடுத்து, அவனைத் தம்முடைய வசனத்தினால் எச்சரித்துச் சகித்து வருகிறார். கிறிஸ்துவினுடைய பொறுமையைத் துதிப்போமாக.

3.

கடைசி நாளிலே அவர் விசுவாசிகளுக்கும் அவிசுவாசிகளுக்கும் செய்யப்போகிற தீர்ப்பிலே அவருடைய நீதியின் மகிமை விளங்கும்.

அறுப்பு நாளில் நான் அறுக்கிறவர்களுடனே: முந்தக் களைகளைப் பிடுங்கி, அதுகளைச் சுட்டெரிக்கிறதற்குக் கட்டுகளாகக் கட்டுங்கள்; கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேருங்களென்பேனென்று சொன்னேனென்றார்.

கர்த்தர் இப்பொழுது பொல்லாதவர்களைச் சகித்து வருகிறார். அவர்கள் கிறிஸ்தவர்கள் என்ற பெயருக்கு அபாத்திரராயிருந்தும், அந்தப் பெயரைத் தரித்திருக்க இடங்கொடுக்கி-



றார். அவர்கள் அவிசுவாசிகளாயிருந்தும், விசுவாசிகளோடு சேர்ந்திருக்கவும், ஒரே வசனத்தைக் கேட்டு, ஒரே அப்பத்தில் புசித்து, ஒரே பாத்திரத்தில் குடிக்கவும் சம்மதித்திருக்கிறார். சில வேளை பேர்க்கிறிஸ்தவர்களாகிய அவிசுவாசிகள், விசுவாசிகளாகிய பராபரனுடைய பிள்ளைகளுக்கு இடைஞ்சல் உண்டாக்குவதையும், அவர்களுக்கு அநியாயம் செய்வதையும் கூடச் சகித்திருக்கிறார். இந்த அக்கிரமக்காரரை அவர் ஒரே வார்த்தையால் அழித்துப் போடக் கூடியதாயிருந்தும், அவர் அழித்துப்போடாமல் பொறுத்திருக்கிறார். அவர் இப்பொழுது காண்பிக்கிற பொறுமையும் நீண்டசாந்தமும் பெரிது. என்றாலும், அவர் என்றென்றைக்கும் பொறுமையாயிருக்கமாட்டார். அவர் நீதி நியாயம் செய்கிற வேளைவரும். ஒரு வயலுக்கு விதைப்பு நாள் இருப்பதுபோல் அறுப்பு நாளும் இருக்கும். திருச்சபைக்கு அறுப்பு நாள் இந்த உலகத்தின் முடிவு நாள்தான். அறுக்கிறவர்கள் தேவதூதர். வயல் அறுப்பில் மணி வேறும் பதர் வேறுமாகப் பிரிக்கப்படுவது போல, கடைசி நாளில் விசுவாசிகளும் அவிசுவாசிகளும் வெவ்வேறாகப் பிரிக்கப்படுவார்கள். துஷ்டனும் மாயக்காரனும் தேவதூதர் கைக்குத் தப்பமாட்டான். அந்த நாள் பயங்கரமான நாளாயிருக்கும். அது முக்கியமாய்ப் பொல்லாதவர்களுக்குப் பயங்கர நாளாய் இருக்கும். அவர்களெல்லாரையும் தூதர்கள் ஒன்றாய்ச் சேர்ப்பார்கள். அப்பொழுது கர்த்தர் அவர்கள் செய்த அநியாயங்களை எல்லாம் அவர்களுக்குச் சொல்லிக் காட்டுவார். அவர்கள் போட்டிருந்த மாய முக்காட்டை அவர் வாங்கிப் போடுவார். இப்பொழுது அவர்கள் தங்கள் மாய்மாலத்தினாலும் வேஷத்தினாலும் குருமாரையும் சபையாரையும் ஏமாற்றிவருகிறதுபோல், அப்பொழுது ஏமாற்ற முடியாது. இப்பொழுது அவர்கள் வாய் மதம் பேசி, தங்கள் அக்கிரமத்தை மறைக்கிறதுபோல், அப்பொழுது செய்ய இயலாது. அந்தச் சமயத்தில் கர்த்தருடைய நீதி வெளிப்படும், கோபம் பற்றி எரியும். அவருடைய கோபத்துக்கு அவர்கள் தப்பமுடியாது. இந்த உலகத்தில் அவர்கள் விசுவாசிகள் நடுவே இருந்தாலும், மறு உலகத்தில் அவர்கள் விசுவாசிகளோடு இருக்கமாட்டார்கள். தம்முடைய சித்தத்துக்குக் கீழ்ப்படியாதவர்களைக் கிறிஸ்து நீதியாய்த் தண்டித்து, பிசாசோடு அவர்களுக்குப் பங்கு கொடுப்பார். தேவதூதர் அவர்களை அக்கினிச் சூளையில் போடுவார்கள். அங்கே அழுகையும் பல் கடிப்பும் உண்டாயிருக்கும், அவர்கள் பூச்சி சாகாது, அவர்கள் அக்கினி அவியாது. அங்கே அவர்கள் சாகாமல் செத்து, வேகாமல் வெந்து, புலம்புவார்கள்.

அவர்களால் இந்த உலகத்திலே துன்பப்பட்ட விசுவாசிகளுடைய நிலைமையோ வித்தியாசமாயிருக்கும். அவர்கள் கிறிஸ்-

துவை விசுவாசித்தபடியினாலே அவர்கள் கிறிஸ்துவோடு இருப்பார்கள். கிறிஸ்துவும் அவர்களோடு இருப்பார். அவர்களைக் குறித்து நீதிமான்கள் தங்கள் பிதாவின் இராச்சியத்திலே சூரியனைப் போல் பிரகாசிப்பார்கள் என்று எழுதியிருக்கிறது. இப்படியாக கிறிஸ்துவினுடைய நீதியின் மகிமையை எல்லாக் கண்களும் காணும்.

பிரியமானவர்களே, நாம் நம்மைச் சோதித்துப் பார்ப்போமாக. நம்முடைய சபையிலே விசுவாசிகளும் உண்டு, அவிசுவாசிகளும் உண்டு. நல்லவர்களும் உண்டு, பொல்லாதவர்களும் உண்டு. இராச்சியத்தின் புத்திரரும் உண்டு, பொல்லாங்கனின் புத்திரரும் உண்டு. கோதுமைகளும் உண்டு, களைகளும் உண்டு. நாம் எதைச் சேர்ந்தவர்கள். இது உலகத்தின் கடைசி நாளாகுமானால் நம்மைத் தேவதூதர்கள் எந்தக் கட்சியில் சேர்ப்பார்கள்.

நாம் அவிசுவாசிகளென்று அறிவோமாகில் இப்பொழுதே குணப்படக்கடவோம். கிறிஸ்துவினுடைய நல்ல விதையாகிய தெய்வ வசனத்தை ஏற்றுக்கொள்ளக்கடவோம். அப்பொழுது நாமும் நல்ல விதையாவோம். கர்த்தருடைய கிருபைக்கு நம்மை இப்பொழுதே ஒப்புக்கொடாவிட்டால் அவருடைய நீதிக்கு நாம் இரையாகும் வேளை வரும்.

ஆ இயேசுவே, விசுவாசிகள் நடுவில் அவிசுவாசிகளைச் சகித்துவருகிற உமது பொறுமைக்கு ஸ்தோத்திரம். இப்பொழுதே நாங்கள் உம்முடைய கிருபையைப் பற்றிக்கொள்ளவும் உம்முடைய நீதியுள்ள கோபாக்கினைக்குத் தப்பவும் எங்களுக்குத் துணை செய்தருளும், சுவாமி. ஆமென்.

---

## மகிமை விளங்கின பண்டிகைக்குப் பின்வரும் ௬-ம் ஞாயிறு.

மத். 17, 1—9.

பிரியமானவர்களே,

மகிமை விளங்கின பண்டிகைக்குப் பின் வரும் முந்தின ஐந்து ஞாயிற்றுக் கிழமை வாக்கியங்களிலே நம்முடைய இரட்சகரின் மகிமை அவருடைய வார்த்தைகளிலும் செய்கைகளிலும் விளங்கினதைப் பார்த்தோம். இந்த ஆறும் ஞாயிற்றுக் கிழமையின் சுவிசேஷ வாக்கியத்திலோ அவருடைய மகிமைக்கெல்லாம் மகிமையான பெரிய மகிமையைப் பார்க்கிறோம். இங்கே அவருடைய வார்த்தையில் விளங்கின மகிமையை அல்ல, அவருடைய



செய்கையில் விளங்கின மகிமையையும் அல்ல, அவரிலே தானே, அவருடைய சுய சரீரத்திலே தானே, விளங்கின ஒப்பில்லாத தெய்வீக மகிமையைப் பார்க்கிறோம். அவர் இந்தப் பெரிய மகிமையைத் தம்முடைய சீஷருக்கு வெளிப்படுத்தும்படி ஒரு மலைமேல் ஏறினார். தெய்வ மகிமைக்குரிய பல விசேஷங்கள் மலைமேல் நடந்ததாக நாம் வேத சரித்திரத்தில் படித்திருக்கிறோம். பராபரன் பத்துக் கற்பனை கொடுத்தது சீனாய் மலையில். புது உடன்படிக்கை நிறைவேறினது, கல்வாரி மலையில். நமது இரட்சகர் மறுரூபமானது எந்த மலையில் என்று நிச்சயமாய் சொல்ல முடியாது. அது தாபோர் மலை என்று சிலர் சொல்லுவார்கள். அது எந்த மலையாய் இருந்தாலும், நமக்குப் பெரிதல்ல. அதில் நடந்த சங்கதியே பெரிது. அந்தச் சங்கதி இயேசுவின் மறுரூபமாகுதல் என்று சொல்லப்படும். அதில் நமக்குப் புத்தி போதனையான அநேக விசேஷங்களை நாம் படிக்கலாம். ஆகையால் இப்பொழுது நாம்:

இயேசு மறுரூபமான சரித்திரம் நமக்குப் போதிக்கிறது என்ன என்று கேட்போம்.

1. அது கிறிஸ்துவைக் குறித்து நமக்கு என்ன போதிக்கிறது.
2. அது மனிதரைக் குறித்து நமக்கு என்ன போதிக்கிறது.

### 1.

இயேசுநாதர் மறுரூபமான சரித்திரம் அவரைக் குறித்து நமக்கு என்ன போதிக்கிறது என்று கேட்போம்.

அவர் மகா மகிமையுள்ளவர் என்று அந்தச் சரித்திரத்தால் நாம் அறிகிறோம். இயேசுநாதர் தமக்கு வரப்போகிற பாடுகளையும், தாம் அடையப்போகிற மரணத்தையுங் குறித்துத் தமது சீஷரோடு பேசியிருந்த ஆறு நாளைக்குப் பிற்பாடு, அவர் பேதுருவையும் யாக்கோபையும், தம்பி யோவானையுங் கூட்டிக்கொண்டு, தனிப்புற ஒரு உயர்ந்த பருவதத்தின் மேல் அழைத்துப் போய், அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார். அவர் முகம் சூரியனைப் போலே பிரகாசித்தது; அவர் வஸ்திரங்களோ வெளிச்சத்தைப் போல் வெண்மையாயிற்று. இந்த மகிமையான ரூபம் அடைந்தவர் இயேசுநாதர்தான், வேறே ஆள் அல்ல. மறுரூபமானது வேறு சரீரமல்ல, அவருடைய சொந்த சரீரமே. கன்னிமரியாளுடைய கர்ப்பத்தில் உற்பவித்துப் பிறந்த அதே சரீரம் இப்படி மகிமைப்பட்டது. இந்த மகிமை அவருக்கு எப்பொழுதும் உள்ளதுதான். அது மனித கண்ணுக்கு மாத்திரம் தெரியாதிருந்தது. அதை மனிதர் கண்ணுக்குத் தெரியப் பண்ணினதே இப்பொழுது நடந்த சங்கதி.

அப்போஸ்தலமார் ஏற்கனவே இரட்சகருடைய மகிமையை அவருடைய வார்த்தையில் கண்டார்கள், அவர் செய்த அற்புதங்களில் கண்டார்கள். ஆகிலும், இப்பொழுது அவர்கள் கண்ட காட்சி. கிறிஸ்துவினுடைய தெய்வீக மகிமையை முன்னிலும் அதிகத் தெளிவாய்க் காட்டிற்று. ஆகையால் இந்தக் காட்சியைக் கண்ட ஒருவராகிய யோவான் அப்போஸ்தலன்: பிதாவுக்கு ஒரே பேறானவரின் மகிமையாக அவருடைய மகிமையைக் கண்டோம் என்கிறார் (1, 14). இதைக் கண்டவர்களில் மற்றொருவராகிய பேதுரு அப்போஸ்தலன்: அவர் பிதாவாகிய பராபரனாலே கனமும் மகிமையும் பெற்று, இவர் நாம் பிரியமாயிருக்கிற நம்முடைய நேச குமாரனாயிருக்கிறார் என்கிற சத்தம் அவருக்கு மகா மேன்மையான மகிமையிலிருந்து வருகிறபோது, அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக் கண்டவர்களாய் அதை உங்களுக்கு அறிவித்தோம் என்கிறார் (2 பேதுரு 1, 17). இப்பொழுது அவரிடத்தில் வெளிப்பட்ட மகிமை அவருக்கு அநாதியாய் உள்ளது. ஏனெனில் அவர் அநாதியாய்ப் பிதாவினிடத்திலிருந்து பிறக்கிறவர். கன்னிமரியாளின் கைப்பாலகனாயிருந்த பொழுதும் அவருக்கு இந்த மகிமை இருந்தது. ஏனெனில், அவர் அப்பொழுதும் பராபரனுடைய குமாரனாயிருந்தார், அப்பொழுதும் அவர் மெய்யான தேவனே. அவர் சிலுவை மரத்தில் தொங்கினபொழுதும் அவருக்கு அந்த மகிமை உண்டு. ஏனெனில், அப்பொழுதும் அவர் மெய்யான தேவனே.

அவர் நமக்காகத் தம்மைத் தாழ்மைப்படுத்தினதிலே மாத்திரம் அதை வெளிக்கு விடாமல் மறைத்து வைத்திருந்தார். தாழ்மைப்பட்டிருந்த அவருக்கு எவ்வளவு மகிமை உண்டு என்பதை இச்சமயத்தில் நாம் பார்க்கிறோம். அவர் மறுரூபமான போது அவருடைய முகம் சூரியனைப் போல் பிரகாசித்தது. நம்முடைய கண்ணுக்கு சூரியனை விடப் பிரகாசமானது வேறொன்றும் இல்லை. அப்படி வேறொன்று இருக்குமாகில், சுவிசேஷகன் அதையே ஒப்பிட்டுப் பேசியிருப்பார். அவருடைய சரீரத்தில் இருந்த மகிமை அவருடைய வஸ்திரத்திலும் வெளிப்பட்டது. அது வெளிச்சத்தைப் போல் வெண்மையாயிற்று என்று மத்தேயு சொல்லுகிறார். மாற்கு சுவிசேஷகனோ: அவருடைய வஸ்திரங்கள் காந்தியுள்ளதுகளும் உறைந்த மழையைப் போல் மிகுந்த வெண்மையுமாயிற்று. பூமியின் மேல் வண்ணான் அத்தனை வெண்மையாக்கக் கூடாது என்கிறார் (9, 3). லூக்கா சுவிசேஷகன்: அவருடைய உடை வெண்மையாகி, மின்னிக் கொண்டிருந்தது என்கிறார் (9, 29). இந்த வார்த்தைகளெல்லாம் அவருடைய மனுஷ சரீரத்தில் வெளிப்பட்ட தெய்வ மகிமைக்கு அத்தாட்சி. ஆகையால், மெய்யான தேவனும் மெய்



யான மனுஷனுமாகிய நம்முடைய இரட்சகர் மகிமையின் ஆண்டவர் என்பதை நாம் கண்டறியலாம்.

மேலும், இதோ, ஒளியுள்ள மேகம் அவர்கள் மேல் நிழலிட்டது. இதோ, மேகத்திலிருந்து: இவர் நாம் பிரியமாயிருக்கிற நம்முடைய நேச குமாரனாயிருக்கிறார்; இவர் சொல் கேளுங்கள் என்கிற ஒரு சத்தம் பிறந்தது. இதனால் கிறிஸ்து பராபரனுடைய சுதனென்றும், யாவரும் பணிந்து போற்றவேண்டிய தெய்வீக அதிகாரமுடையவர் என்றும் வெளியாயிற்று. இயேசுநாதர் மற்றச் சிருஷ்டிகளைப் போல் உண்டாக்கப்பட்டவர் அல்ல. அவர் பிதாவினின்று பிறந்த அவருடைய நேச குமாரன். இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும் அவருடைய தற்சுபாவத்தின் அச்சுமானவர் (எபி. 1, 3). பிதாவுக்கு உள்ளதெல்லாம் இவருக்கு உண்டு. பிதாவின் இலட்சணங்கள், பிதாவின் மகிமை, பிதாவுக்குரிய கனம், பிதாவுக்குரிய அதிகாரம், எல்லாம் குமாரனுக்கும் உண்டு. இவர் பிதாவுக்குப் பிரியமானவர். அவருடைய சுபாவத்தால் பிரியமானவர், அவருடைய செய்கையால் பிரியமானவர், அவருடைய பாடுகளாலும் மரணத்தினாலும் பிரியமானவர். இந்தப் பிரியமான நேச குமாரனை நமக்குக் கொடுத்த பிதாவுக்கு நாம் என்ன ஈடு செலுத்துவோம். பிதாவுக்குப் பிரியமான இந்த நேசகுமாரனால் நாமும் பிதாவுக்குப் பிரியமாகலாம்.

பிதா தமது குமாரனை மகிமைப்படுத்தி: இவர் சொல் கேளுங்கள் என்கிறார். ஆகையால், இயேசுநாதர் நம்முடைய போதகர்; நம்முடைய இரட்சிப்புக்கு வேண்டியவைகளைப் போதிக்கிற உத்தம தீர்க்கதரிசி அவரே. பூர்வத்திலே பராபரன் அநேக தரமும் பற்பல வகையினாலும் தீர்க்கதரிசிகளைக் கொண்டு பிதாக்களுக்கு விளம்பின பின், இந்தக் கடைசி நாட்களில் குமாரனைக் கொண்டு நமக்கு விளம்பினார் (எபி. 1, 1). அவருடைய போதனையைக் கேளாதவன் பிதாவை அசட்டைபண்ணுகிறான். அவருடைய போதனையைக் கேளாதவன் வழியையும் சத்தியத்தையும் ஜீவனையும் அறியான். ஏனெனில் அவரே மோட்சத்துக்குப் போகும் வழி, அவரே சத்தியம், அவரே செத்தோருக்கு ஜீவன், அவரே தவறாத போதகர், அவரே உத்தம போதகர்.

இயேசுநாதர் சொல்லுவதைப் படிப்பது போதாது. கேளுங்கள் என்று பிதா சொல்லுவதற்கு அர்த்தமென்ன, உங்கள் முழு இருதயத்தினாலும் விசுவாசியுங்கள், அவர் சொல்லுகிறபடி நீங்கள் முழுவதும் நடவுங்கள் என்பதாம். இயேசுநாதருடைய சொல்லைக் கேட்கிறவனுக்கு விசுவாச பலமும் சன்மார்க்க பலமும் கிடைக்கும் என்பது நிச்சயம். ஏனெனில், அவர் சொல்லுவது ஆவியும் ஜீவனுமாய் இருக்கிறது.

அவர் இப்பொழுது நம்மோடு நேர் நேரே பேசாமல், தம்முடைய ஊழியரைக் கொண்டு பேசுகிறார். தேவ ஊழியர் பிரசங்கிக்கிற வசனம் கிறிஸ்துவினுடைய வசனம். ஆகையால், இந்த வசனத்தைக் கேட்கிறவன் கிறிஸ்துவின் சொல்லைக் கேட்கிறான். இங்கே பிரசங்கிக்கப்படுகிற வசனத்தை அசட்டை பண்ணுகிறவன் கிறிஸ்துவின் சொல்லை அசட்டைபண்ணுகிறான். அவருடைய வசனத்தைக் கேட்டு, அதைக் காத்துக்கொள்ளுகிறவர்களே பாக்கியவான்கள்.

2.

இயேசுவின் மறுரூபமாகுதலைப் பற்றிய சரித்திரம் மனிதரைக் குறித்து நமக்குப் போதிக்கிறது என்ன என்பதைப் பார்ப்போம்.

அது இம்மையில் மனிதரின் நிலைமை இன்னது என்றும், மறுமையில் அவர்கள் நிலைமை இன்னது என்றும் நமக்குக் காண்பிக்கிறது.

சீஷர்கள் இதைக்கேட்டு முகங்குப்புற விழுந்து, மிகவும் பயந்தார்கள். அப்பொழுது இயேசு சேர்ந்துவந்து, அவர்களைத் தொட்டு: எழுந்திருங்கள், பயப்படாதேயுங்கள் என்றார். இதனால் இந்த உலகத்தில் உள்ள மனிதருக்குப் பரம காட்சியும் பரம வார்த்தையும் பயம் உண்டாக்குகிறது என்று பார்க்கிறோம். இந்தச் சமயத்தில் மாத்திரம் அல்ல, மற்றும் பல சமயங்களிலும் இப்படி நடந்தது. நம்முடைய இரட்சகரின் பிறப்பைக்குறித்துத் தேவதூதன் மேய்ப்பருக்குச் சொல்லப்போனபொழுது, அவர்கள் மிகவும் பயந்தார்கள். இரட்சகர் உயிர்த்தெழுந்த சமயத்திலும் அப்படித்தான். இதோ, மகா பூமியதிர்தல் உண்டாயிற்று; ஏனென்றால், பராபரனுடைய தூதன் வானத்திலிருந்து இறங்கி, சேரவந்து, கல்லை வாசலிலிருந்து புரட்டித்தள்ளி, அதின் மீதில் உட்கார்ந்தான். அவனுடைய ரூபம் மின்னல் போலவும் அவனுடைய உடை உறைந்த மழையின் வெண்மையாகவும் இருந்தது. காவல் காத்திருந்தவர்களோவெனில் அவனுக்குப் பயந்ததினால் அதிர்ந்து, செத்தவர்களைப்போல் ஆனார்கள் என்று எழுதியிருக்கிறது (மத். 28,2-4). பரம தூதன் காட்சி மாத்திரம் அல்ல, மனுஷவல்லமைக்கு மேல்பட்ட எது நடந்தாலும் மனுஷருக்குப் பயம் உண்டாகிறது. இயேசுநாதர் கடல் கொந்தளிப்பை அமர்த்தினபொழுது, அவர்கள் மகாபயமாய்ப் பயந்து: இவர் ஆரோ, காற்றுங் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே என்று ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டார்கள். இரட்சகர் சொல்லின்படி அபரிமிதமான மீன் கிடைத்தபொழுது பேதுரு மிகவும் பயந்து: ஆண்டவரே, என்னைவிட்டுப் புறப்படும். ஏனெனில், பாவியான மனுஷனாயிருக்கிறேன்



என்றான். இப்படியே மனுஷருக்கு உண்டாகிற பயம் அவர்களின் பாவ நிலைமையைக் காண்பிக்கிற கண்ணாடியாம்.

மேலும், இந்தச்சரித்திரத்தில் மனிதருக்குத் துன்பம் கசப்பும் இன்பம் இனிப்புமாயிருக்கிறது என்று பார்க்கிறோம். எப்படியென்றால்: இதோ, மோசேயும் எலியாவும் அவர்களுக்குத் தரிசனையாகி, அவரோடே பேசிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது பேதுரு பிரத்தியுத்தரமாக இயேசுவுடனே: ஆண்டவரே, நாம் இங்கே இருக்கிறது நல்லது, உமக்குச் சித்தமானால் இங்கே மூன்று கூடாரங்களைப் போடுவோம், உமக்கு ஒன்றும் மோசேக்கு ஒன்றும் எலியாவுக்கு ஒன்றும் என்றார்.

இயேசுநாதர் மறுரூபமாகி, மகிமை அடைந்திருந்தார். இதைப் பேதுருவும் யாக்கோபும் யோவானும் கண்ணாரக்கண்டார்கள். உலகத்தின் சங்கடங்கள் இல்லாமல், இரட்சகரோடு தனியே பிரிந்திருக்குதல் அவர்களுக்கு மகாப் பிரியமாயிருந்தது. ஆகையால், அவர்களில் ஒருவராகிய பேதுரு எப்பொழுதும் இந்தப்படிக்கே இருக்கவேண்டுமென்று விரும்பினார். இதுவே அவர் சொன்ன வார்த்தைகளின் கருத்து. இரட்சகரோடே தனித்திருக்குதல் நல்லதுதான். ஆகிலும், அவருடைய தாழ்மையும் பாடுகளும் அல்ல, அவருடைய மகிமையும் சந்தோஷமுமே வேண்டும் என்பது சரியல்ல. மகிமைக்கு முன்வரும் தாழ்மையும், பலனுக்கு முன் வரும் பாடுகளும், ஜெயத்துக்கு முன்வரும் போராட்டமும் மனுஷருக்குப் பிடிக்கிறதில்லை. இங்கே இருக்கிறது நல்லதென்று இப்பொழுது சொன்ன பேதுரு ஆறு நாளைக்கு முன் இயேசுநாதர் பாடுகளைக் குறித்துப் பேசின பொழுது வேறுவிதமாய்ச் சொன்னார். அப்பொழுது பேதுரு அவரைத் தனியே அழைத்து, அவரை உதப்பத்துவக்கி: ஆண்டவரே, உம்முடையமேல் இரக்கமாயிரும்; அப்படி உமக்கு வரவேண்டாமென்றார். இது மனுஷருடைய சாதாரண குணத்தைக் காண்பிக்கிறது. நல்ல கிறிஸ்தவர்கள் கூட பாவமன்னிப்பின் நிச்சயமும் மோட்சமடைவோம் என்கிற நம்பிக்கையும் தங்களுக்கு இருந்தால் போதுமென்று நினைப்பார்கள். நாம் எதிர்க்கவேண்டிய சத்துருக்கள் உண்டு, நாம் செய்யவேண்டிய போர் உண்டு, நாம் சுமக்கவேண்டிய சிலுவை உண்டு என்பதை அடிக்கடி நினைக்கிறதில்லை. நாம் மகிமையில் கிறிஸ்துவோடு இருப்பது போதாது தாழ்மையிலும், அவரோடு இருக்கவேண்டும். நாம் மோட்ச மகிமைக்குள் பிரவேசித்து, அங்கே அமர்ந்திருக்கும் மட்டும் கர்த்தர் இந்த அழுகையின் பள்ளத்தாக்கிலே நம்மை எந்த நிலைமையில் வைத்தாலும், இங்கே இருக்கிறது நல்லதென்றே சொல்வோமாக.

இந்தச் சரித்திரம் மோட்சவாசிகளின் நிலைமையையும் காண்பிக்கிறது. நம்மை விட்டுப் பிரிந்துபோனவர்கள்

இன்னம் உயிரோடிருக்கிறார்கள் என்றும், மரித்தோர் எழுந்திருப்பார்கள் என்றும் இதில் பார்க்கிறோம். இயேசுநாதர் பிறக்கிறதற்கு 1500 வருஷங்களுக்கு முன்னே மோசே இறந்துபோனார். அவருக்கு 600 வருஷங்களுக்குப் பின் எலியா தீர்க்கதரிசி பரத்துக்கு எழினார். இந்த இரண்டு மனுஷரும் மனிதரை விட்டுப் பிரிந்துபோனது நிச்சயம். ஆகிலும், இயேசுநாதர் மறுரூபமான நேரத்தில் அவர்களும் வந்து, அவரோடே பேசிக்கொண்டிருந்தார்கள். அவர் எருசலேமிலே நிறைவேற்றப்போகிற அவருடைய முடிவைச் சொன்னார்கள் என்று லூக்கா சொல்லுகிறார். ஆகையால் மோட்சவாசிகள் கர்த்தருக்குள் பிழைத்திருக்கிறார்கள். இரட்சிப்பின் சங்கதி அவர்களுக்கு முக்கிய சந்தோஷம்.

மோட்சவாசிகள் ஒருவரை ஒருவர் அறிந்துகொள்ளுவார்கள் என்பதும் இந்தச் சரித்திரத்தினால் தெளிவாம். நாமும் மோட்சத்துக்குப் போவோம், அங்கே கிறிஸ்துவை மகிமையுள்ளவராய்த் தரிசிப்போம், அவரை விசுவாசித்தவர்களைக் காண்போம். அவர்கள் இன்னின்னார் என்று அறிந்து சந்தோஷப்படுவோம்.

இயேசுவே, உம்மை நாங்கள் மகிமையில் தரிசிக்கும்படிக்கு உம்முடைய சிலுவையிலே உம்மைக் கண்ணோக்கிப் பார்க்கவும் உம்மை முழு இருதயத்தினாலும் விசுவாசிக்கவும் எங்களுக்குப் பெலன் தந்தருளும், சுவாமி. ஆமேன்.

---

## எழுபதாம் நாள் என்கிற ஞாயிறு.

மத். 20, 1 - 16.

பிரியமானவர்களே,

இன்னம் எழுபது நாளுக்குப் பின் கர்த்தர் உயிர்த்தெழுந்த பண்டிகையைக் கொண்டாடுவோம். ஆகையால் இந்த ஞாயிற்றுக்கிழமைக்கு எழுபதாம் நாள் என்று பெயர். கிறிஸ்தவர்கள் ஆசரிக்கிற பண்டிகைகளில் முதலாம் பெரிய பண்டிகை கர்த்தர் பிறந்த பண்டிகை. இரண்டாம் பெரிய பண்டிகை கர்த்தர் உயிர்த்தெழுந்த பண்டிகை. இந்தப் பண்டிகைக்கு இது முதல் நம்மை ஆயத்தம்பண்ணுகிறோம். நம்முடைய இரட்சகர் பாடுபட்டு, இரத்தஞ் சிந்தி மரித்து, உயிர்த்தெழுந்ததினால் சம்பாதித்த இரட்சிப்பு யாருக்குக் கிடைக்கும். அது சகல மனிதருக்காகவும் சம்பாதிக்கப்பட்டும், சகல மனிதருக்கும் அது சொந்தமாகிறதில்லை. தன்னையும் தன் புண்ணியத்தையும் நம்பாமல் பராபரனுடைய கிருபையை மாத்திரம் நம்பி அவருடைய பாதத்



தில் விழுகிறானே, அந்தப் பாவிக்குத்தான் இரட்சிப்பு சொந்தமாகும். அவனைக் கடைகெட்டவன் என்று உலகம் வசைபேசினாலும், பராபரன் அவனுக்கே தம்முடைய கிருபையின் பொக்கிஷங்களையெல்லாம் கொடுக்கிறார். எவன் தன்னைப் புண்ணியவானென்றும், மற்றவர்களைப் பார்க்கிலும் நல்லவனென்றும், தானே மோட்சத்திற்குப் பாத்திரவானென்றும் நினைக்கிறானோ, அவனைப் பராபரன் தம்முடைய கிருபைக்குப் புறம்பாக்குகிறார், கடைகெட்டவனாய்த் தள்ளுகிறார். இதுவே இன்று சுவிசேஷ வாக்கியத்தின் கருத்து. இதிலே இயேசுநாதர் பிந்தினோர் முந்தினோரும் முந்தினோர் பிந்தினோருமாயிருப்பார்கள் என்று சொல்லுகிறார், பிந்தினோரை முந்தினோராக்குவது பராபரனுடைய கிருபை, முந்தினோரைப் பிந்தினோராக்குவது மனிதரின் அகந்தையும், நான் என்கிற எண்ணமும். இதை நம்முடைய இரட்சகர் திராட்சத்தோட்டத்தில் வேலைசெய்த வேலையாட்களைப் பற்றிய உவமையால் இன்று நமக்குப் போதிக்கிறார். இதின்படியே:

**கர்த்தருடைய திராட்சத்தோட்டமாகிய பராபரனுடைய ராச்சியத்தில் செல்லும் பிரமாணம் கிருபை.**

1. நம்மை அதற்கு அழைப்பது கிருபை.
2. நம்மை அதில் வேலைசெய்யப் பண்ணுவது கிருபை.
3. நமக்குப் பலன் அளிப்பதும் கிருபை.

### 1.

நம்மைக் கர்த்தருடைய திராட்சத்தோட்டமாகிய வானராச்சியத்திற்கு அழைப்பது கிருபையே.

வீட்டெசமானாகிய ஒரு மனுஷன் தன் திராட்சத்தோட்டத்திற்கு வேலையாட்களைக் கூலி பொருத்தியமைக்க அதிகாலமே புறப்பட்டான் என்று வாசிக்கிறோம். அந்த வீட்டெசமான் கர்த்தர் தான். அவருக்கு இந்தப் பூமியிலே ஒரு திராட்சத்தோட்டம் இருக்கிறது. இதைக குறித்து எசாயா தீர்க்கதரிசி ஒரு பாட்டுப்பாடினார். அந்தப்பாட்டின் முதற் கவி: என் நேசருடைய திராட்சத்தோட்டத்தின் பேரிலே எனக்குப் பிரியமாயிருக்கிற அவருக்காக அவருடைய பாட்டைப் பாடுவேனாக. என் பிரியருக்கு மகா செழிப்பான மேட்டிலே ஒரு திராட்சத்தோட்டம் இருக்கிறது (5, 1) என்பதே. அந்தத் திராட்சத்தோட்டத்திற்குப் பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் சனம் என்றும், புதிய ஏற்பாட்டில் திருச்சபை யென்றும் பெயர். அது அடிக்கடி புதிய ஏற்பாட்டில் வானராச்சியம் என்றும் சொல்லப்படும். யாவரும் இந்தத் திராட்சத்தோட்டத்திற்கு வந்து, இதில் வேலைசெய்ய வேண்டுமென்று கர்த்தர் பிரியப்படுகிறார். நமது வாக்கியத்தில் சொன்ன எசமான் நாள் முழுவதும் வேலைக்காரரை அழைத்த மனி

யமாயிருந்தான். அதிகாலமே அழைக்கப்போனான். மூன்றாம் மணியில் அதாவது ஒன்பது மணிக்குப்போனான். பிறகு ஆறாம் மணியில், அதாவது, பன்னிரண்டு மணிக்குப் போனான். அப்புறம் ஒன்பதாம் மணிவேளையில், அதாவது பகல் மூன்று மணிக்குப் போனான். கடைசியாகப் பதினோராம் மணிவேளையிலும், அதாவது பொழுது போகிறதற்கு ஒரு மணி நேரம் இருக்கையிலும் போய் ஆட்களைக் கூப்பிட்டான். இது போலவே பராபரன் நாளெல்லாம் பாவிகளைக் கூப்பிட்டுக்கொண்டேயிருக்கிறார்.

வேலையாட்களை அந்த நல்ல எசமான்தான் போய்க் கூப்பிட்டானேயல்லாமல், அந்த வேலையாட்கள் தாங்களாய் வந்து வேலை கேட்கவில்லை. இது அந்த எசமானின் தயவைக் காண்பிக்கிறது. பரம எசமானாகிய நம்முடைய கர்த்தரும் மகா கிருபையுள்ளவர். நாம் அவரைத் தேடாதிருக்க, அவர் நம்மைத் தேடி வருகிறார்.

நான் உம்மைத் தேட வாஞ்சையற்று, பிரபஞ்சத்தை நேசித்தேன்;
கண் கெட்டோனாய்த் திரிந்தேன், இப்போ நான் உம்மைச்
நான் உம்மை விட்டுத் தூரப்பட்டு, சேர்ந்தது நீர் செய்த தயவு

என்று நாம் பாடுவது நியாயம். பாவத்தில் விழுந்த ஆதாமைக் கர்த்தரே தேடிவந்தார். ஆபிரகாமைக் கர்த்தர்தான் அழைத்தார். மோசேயைக் கூப்பிட்டவரும் அவரே. இஸ்ரவேலரைத் தம்முடைய சொந்த சனமாக்கிக்கொண்டவர் அவர்தான். புதிய ஏற்பாட்டில் பார்த்தாலும் அப்படித்தான். அப்போஸ்தலரைத் தேடி அழைத்தவர் இயேசுநாதரே. பவுல் அப்போஸ்தலனைத் தமஸ்குப் பட்டணத்திற்குப் போகும் வழியிலே மறித்துப் பிடித்தவர் கர்த்தரல்லவா. இத்தேசத்துக் கிறிஸ்தவர்களாகிய நம்மைக் குறித்தும் அப்படியே சொல்லவேண்டும். நாமல்ல, அவரே நம்மைத் தம்முடைய சனமும் தம்முடைய மேய்ச்சலின் ஆடுகளுமாக்கினார் (சங். 100).

மேலும், அந்த வேலைக்காரரைக்குறித்து என்ன சொல்லியிருக்கிறது. அவர்களில் அநேகர் கடைத்தெருவிலே வேடிக்கை பார்த்துக்கொண்டு வீண் காலம் போக்கின வீணர், வேலைக்கு உதவாத சோம்பேறிகள். எங்களை ஆரும் வேலை கொண்டதில்லை என்று அவர்களில் சிலர் சொன்னார்கள். கர்த்தருடைய இராச்சியத்திற்கு அழைக்கப்படும் ஒவ்வொரு பாவியும் இப்படிப்பட்டவனே. நம்மை நாம் வீணர்களென்றே சொல்லலாம். நம்முடைய நேரம், சுகம், பலம், வரம், பணம் முதலியவைகளைக் கர்த்தருக்கு மகிமையாக அல்ல, வீணிலேயும் விருதாவிலேயும், முக்கியமாய்ப் பாவத்திலேயும் செலவழிப்பது நம்முடைய சுபாவகுணம். நம்மில் அநேகர் விக்கிரகங்களுக்கும் பேய் பிசாசுகளுக்



கும் தொண்டூழியம் செய்தவர்கள் அல்லவா. என்றாலும், இப்படிப்பட்ட பாவிகளைத் தள்ளிவிடாமல் தேடி அழைத்த கிருபைக்கு என்ன ஈடுசெலுத்துவோம்.

கர்த்தர் பலவித வயதுள்ளவர்களைத் தம்முடைய திராட்சத்தோட்டத்திற்கு அழைக்கிறார். சாமுவேல், எரேமியா என்ற தீர்க்கதரிசிகளை இளவயதில் அழைத்தார். யோவான் அப்போஸ்தலனையும் தீமோத்தேயுவையும் வாலிபத்தில் அழைத்தார். பேதுரு, பவுல் என்ற அப்போஸ்தலரைப் புருஷ பிராயத்தில் அழைத்தார். வலது பாரிசக்கள்ளனை அவன் சாகப்போகையில் அழைத்தார். அன்றியும் பலவித நிலைமையிலுள்ளவர்களையும், அவர்கள் அந்தஸ்தைப் பாராமல், தம்முடைய கிருபையுள்ள சித்தத்தின்படி அழைக்கிறார். ஆடோட்டியாகிய தாவீது, மாடோட்டியாகிய சம்கார், ஏரோட்டியாகிய எலிசா, மீன் பிடிக்கும் பேதுரு, ஆயக்கார மத்தேயு, தையல்கார தபீத்தாள், இரத்தாம்பரம் விற்கும் லீதியாள், தோல்பதனிடுகிற சீமோன், சேர்வைக்கார கொர்நேலியு, இவர்கள் பலவிதத் தொழிலாளிகளாயிருந்தாலும், அவர் ஏற்றத்தாழ்வு பாராமல் தம்முடைய இராச்சியத்திற்கு அழைத்தார். இங்கே கூடிவந்திருக்கிற நாம் என்ன அந்தஸ்துள்ளவர்கள். நாம் நம்மைக் கவனித்துப் பார்ப்போமாகில், நாம் இங்கே வரப்பாத்திரவான்களா. கர்த்தர் நம்மை நோக்கிப் பார்க்கவும், நம்மோடு பேசவும், நம்மை தம்முடைய திராட்சத்தோட்டத்திற்குள் சேர்த்துக்கொள்ளவும் நியாயமுண்டா. நம்மில் அநேகரை வீட்டுவாசலில் நிற்கவும், தெருவில் நடந்துபோகவும் முதலாய்ச் சில அஞ்ஞானிகள் சம்மதிக்க மாட்டார்களே. இப்படியிருக்க, கர்த்தர் நம்மைத் தம்மிடம், தம்முடைய தோட்டத்திற்குள் அழைத்தது எவ்வளவு பெரிய கிருபை. இந்தக் கிருபைக்காக நாம் அவரைத் துதித்து: தேவரீர் உம்முடைய அடியாருக்குப் பாராட்டின கிருபைக்கு நாங்கள் எம்மாத்திரமென்று தாழ்மையாய் அறிக்கையிடுவோமாக.

## 2.

நம்மைக் கர்த்தருடைய திராட்சத்தோட்டத்தில் வேலை செய்யப்பண்ணுகிறதும் அவருடைய கிருபை என்றே சொல்லவேண்டும்.

எசமான் தோட்டத்துக்கு ஆட்களை அழைத்தது விருதுக்கல்ல, வேலை செய்கிறதற்குத்தான். திராட்சத்தோட்டத்தில் வேலை அதிகம். அங்கே பலவிதமான வேலை இருக்கும். தோட்டம் கொத்தவேண்டும், கல் பொறுக்கவேண்டும், திராட்சச் செடிகளை நடவேண்டும், பெரிய செடிகளைக் கிளை நறுக்கவேண்டும்,

காலம் பார்த்து எருப்போடவேண்டும், போதுமானபடி தண்ணீர் இறைக்கவேண்டும். காட்டு மிருகங்களும் பூச்சிகளும் திராட்சச் செடிகளைச் சேதப்படுத்தாமல் பத்திரமாய்ப் பார்க்கவேண்டும். சிலருக்கு வேலை கடுமையாயிருக்கும், பகலின் வெயிலையும் பாரத்தையும் அவர்கள் சுமக்கவேண்டியதே. சிலருக்கோ லேசான வேலையிருக்கும். அவரவருக்கு வேலை குறிப்பது எசமானைப் பொறுத்தது.

இப்படியே வானராச்சியத்திலும் கர்த்தர் ஒவ்வொருவனையும் வெவ்வேறு வேலைக்கு அழைக்கிறார். ஒருவனுக்குப் பள்ளிக்கூடவேலை, ஒருவனுக்குச் சபை வேலை, ஒருவனுக்குக் குடித்தன வேலை, ஒருவனுக்குத் துரைத்தன வேலை. பெற்றோருக்குப்பிள்ளை வளர்ப்பு. லோயிசாள், ஐனிக்கேயாள் என்ற ஸ்திரீகள் தீமோத்தேயுவைக் கர்த்தருக்கென்று வளர்க்கவேண்டியவர்களாயிருந்தார்கள். ஏழைகளுக்காகக் கவலைப்படுவதும், அவர்களைப் பராமரிப்பதும் சிலருக்குக் குறிக்கப்பட்டவேலை. ஸ்தேவான் முதலிய ஏழு உதவிக்காரர் ஏழைகளைப் பராமரிக்கும் வேலையைப் பெற்றார்கள். வசனத்தின் ஊழியம் சிலருக்குக் குறிக்கப்பட்டது. இவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஞானஸ்நானங் கொடுத்து, கர்த்தருடைய இராப்போசனம் பரிமாறவேண்டும். படிப்பாளிகளுக்குத்தான் வானராச்சியத்தில் வேலை, படிப்பில்லாதவர்களுக்கு வேலையில்லை, தொழிலாளிகளுக்குத் திருச்சபையில் வேலையில்லையென்று நினைக்காதேயுங்கள். தபீத்தாள் என்ற ஒருதெய்வபத்தியுள்ள ஸ்திரீ தன் தையல் வேலையால் ஏழைகளுக்கு உதவிசெய்தாள். ஒவ்வொரு தச்சனும், ஒவ்வொரு கொல்லனும், ஒவ்வொரு பண்ணையாளும், தோட்டி முதல் தொண்டமான் வரையிலுமுள்ள ஒவ்வொரு தொழிலாளியும் கர்த்தருடைய இராச்சியத்தில் தன் தன் தொழிலால் உதவி செய்யலாம். சிறு பிள்ளைகள் கூட செபஞ்செய்கிறதும், பெரியோருக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறதும், பாடங்களை ஒழுங்காய்ப் படிக்கிறதும் கர்த்தருடைய ராச்சியத்திற்கேற்ற வேலையாம்.

கர்த்தருடைய திராட்சத் தோட்டத்தில் வேலை செய்கிறவனையும், குறித்த வேலைக்குத் தகுந்தவனென்றாவது சமர்த்தன் என்றாவது சொல்ல நியாயமில்லை. உண்மையைப் பேசும் ஒவ்வொருவனும் தன்னை அதற்கு அபாத்திரன் என்றே சொல்லுவான். மோசே தன்னைப் பேசத் தெரியாத திக்குவாயன் என்றார். பரிசுத்த எசாயா தீர்க்கதரிசி: எனக்கு ஐயோ, ஏனென்றால் நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷனும், அசுத்த உதடுகளுள்ள சனத்தின் நடுவில் வாசமாயிருக்கிறவனுமாகையால், அதமாவேனே என்றார் (6, 5). நாங்களாய் யாதொன்றைச் சிந்திக்க எங்களாலேதான் சமர்த்தராயிருக்கிறோம் என்கிறதில்லை என்று அப்போஸ்தலமார் சொன்னார்கள் (2 கொரி. 3, 5). இப்படித் தகு-



தியற்றவர்களும் கர்த்தருடைய இராச்சியத்தில் வேலை செய்வது கர்த்தருடைய கிருபைப் பலத்தினாலேதான். நான் இருக்கிறதோவெனில் பராபரனுடைய கிருபையினாலே இருக்கிறேன். அவர் என் மீதில் வைத்த கிருபை விருதாவுமாயிராமல், நான் அவர்கள் எல்லாரையும் பார்க்க அதிகமாய் உழைத்தேன்; நானே அல்ல, என்னுடனே இருக்கும் பராபரனுடைய கிருபைதானே என்று பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறார் (1 கொரி. 15, 10). பிசாசு ஒரு பக்கம், பொல்லாத உலக மக்கள் ஒரு பக்கம், நம்முடைய கெட்ட இருதயம் ஒரு பக்கம் நம்முடைய வேலையை நமக்குப் பாரமாக்கினாலும், கர்த்தர் கூட இருந்து பலப்படுத்தி, ஆதரிக்கிறார். பிசாசினால் வாதிக்கப்பட்ட பவுல் அப்போஸ்தலனைப் பார்த்து: நம்முடைய கிருபை உனக்குப் போதும், பலவீனத்தில் நம்முடைய பெலன் நிறைவேறுகிறது என்று சொன்னார். பெத்லெகேம் ஊரில் போவாஸ் என்ற ஒரு பெரிய மிராசுதார் இருந்தார். அவருடைய வயலில் அநேக வேலைக்காரர் வேலை செய்தார்கள். அவர்கள் கடுமையாய் வேலை செய்கிற நேரத்தில் அவர் அங்கே வந்து: கர்த்தர் உங்களோடிருப்பாராக என்று சொல்லி, அவர்களை ஆசீர்வதித்தார், அவர்களுக்குக் கஞ்சி வார்த்துக் களைப்பாற்றினார். திராட்சத் தோட்டத்துக்கு எசமானாகிய கர்த்தரும் இப்படிச் செய்வதினால் நம்முடைய வேலையை லேசாக்குகிறார். முக்கியமாய் அவருடைய கிருபையின் வசனமும், அதிலுள்ள வாக்குத்தத்தங்களும் நம்மைப் பலப்படுத்துகிறது. இப்படி அவருடைய கிருபை நம்மைத் தாங்கி, வேலைக்கு நம்மைச் சமர்த்தராக்காவிட்டால், நம்மில் ஒருவனும் தன் வேலையை நிறைவேற்ற முடியாது. நாம் ஒவ்வொரு நாளிலும், ஒவ்வொரு நிமிஷத்திலும் அவருடைய கிருபைக்காகச் செபம் செய்து, கிருபையை ருசித்து, கிருபையைத் துதித்து வருவோமாக.

3.

திராட்சத் தோட்டமாகிய வானராச்சியத்தில் வேலை செய்கிறவர்களுக்குப் பலனளிப்பதும் கிருபையே.

அஸ்தமனமானபோதோவெனில், திராட்சத் தோட்டத்துக்கு எசமான் தன் காரியக்காரனுடனே: நீ வேலையாட்களை அழைத்து, பிந்தினோர் துவக்கி முந்தினோர் மட்டுக்கும் அவர்களுக்குக் கூலியைக் கொடு என்றான். கர்த்தருடைய இராச்சியத்தில் வேலை செய்கிறது வீண் போகாது. கர்த்தர் யாவருக்கும் பலனளிப்பார். ஒவ்வொரு நாளிலும் பலனளிக்கிறார், கடைசி நாளிலும் பலன் அளிப்பார். இங்கே சொல்லியிருப்பது தினபலன். அவர் பலனளிப்பதோ கிருபையின்படி. அதுவே அவருடைய இராச்சியத்தில் செல்லுகிற நியாயம். இந்த நியாயப்படி பிந்தி

னோர்க்கு முதற் கூலி. உலகத்தார் கண்ணுக்கு முந்தினோராயிருப்போர் கர்த்தருடைய கண்ணுக்கு பிந்தினோரும், உலகத்தார் கண்ணுக்குப் பிந்தினோராயிருப்போர் கர்த்தருடைய கண்ணுக்கு முந்தினோராயிருக்கிறார்கள். ஆகையால் பதினோராம் மணிவேளையில் வேலை கொள்ளப்பட்டவர்கள் வந்து, ஒவ்வொரு பணத்தை வாங்கினார்கள் என்று எழுதியிருக்கிறது. இவர்கள் தங்களைக் கூலிக்குப் பாத்திரர் என்று எண்ணியிருக்கமாட்டார்கள். இவர்கள் பெற்ற கூலி கிருபைப் பலனே யன்றி வேறல்ல. இதைச் சில வேத திருஷ்டாந்தங்களால் தெளிவாய் அறிந்துகொள்ளலாம்.

பரிசேயனாகிய சீமோன் வீட்டில் இயேசுநாதர் விருந்துண்டார். அங்கே பாவியான ஒரு ஸ்திரீ இயேசுவின் பாதத்தண்டை உட்கார்ந்து, அவர் பாதத்தைக் கண்ணீரால் நனைத்துத் தைலம் பூசி முத்தி செய்தாள். அவள் தன் பாவத்துக்காகக் கசந்தழுது, இயேசுவை விசுவாசித்ததனால் பாவ மன்னிப்பைப் பெற்றுக் கிருபைப் பலனை அடைந்தாள். அவளைப் பாவியென்று அவமதித்து, தங்களை நீதிமான்களென்று எண்ணிக்கொண்ட பரிசேயருக்கோ அது கிடைக்கவில்லை. நூற்றுக்குச் சேர்வைக்காரன் புறச்சாதியான். அவன் தன்னை அபாத்திரப் பாவியாக எண்ணிக்கொண்டதுமல்லாமல், இயேசுநாதருடைய ஒரே வார்த்தையால் தன்னுடைய வேலைக்காரன் சுகமாவானென்று நம்பினான். இப்படி நம்பின அவனுடைய விசுவாசத்தைக் கர்த்தர் புகழ்ந்து பேசி: அநேகம் பேர் கிழக்கிலும் மேற்கிலும் இருந்து வந்து, வான ராச்சியத்திலே ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்றவர்களுடனே கூடப் பந்தியிருப்பார்கள். இராச்சியத்தின் புத்திரரோ எல்லாவற்றிற்கும் புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள்; அங்கே அழுகையும் பல்கடிப்பும் உண்டாயிருக்கும் என்றார் (மத். 8, 11-12). இதனால் இந்தப் புறச்சாதியான் மனுஷ பார்வையில் பிந்தினவனாயிருந்தும், கிருபைப் பலனைப் பெற்று முந்தினவன் ஆனான். யூதர்களோ இராச்சியத்தின் புத்திரரென்று மேன்மை பாராட்டியும், பிந்தினவர்களாய்ப் போனார்கள்.

கர்த்தருடைய திராட்சத் தோட்டத்தில் வேலை செய்த வேலைக்காரருக்குக் கூலி கொடுத்த சங்கதியில் கிருபைப் பலனை மதிக்காத சிலரைக் குறித்து வாசிக்கிறோம். பிறகு முந்தினோர் வந்து, தங்களுக்கு அதிகம் வருமென்று எண்ணியிருந்து, அவர்களும் ஒவ்வொரு பணத்தை வாங்கினார்கள். வாங்கி, வீட்டெசமானுக்கு விரோதமாய் முறுமுறுத்து, இந்தப் பிந்தினவர்கள் ஒரே மணி நேரம் வேலை செய்தார்கள்; நீரோ அவர்களைப் பகலின் பாரத்தையும் வெயிலையுஞ் சகித்த எங்களுக்குச் சரியாக்கினீர் என்றார்கள். இவர்கள் தங்கள் வேலையைக் குறித்துப் பெ



ருமை பாராட்டின அகந்தைக்காரர், தங்கள் எசமானுக்கு அநியாயப் பட்டங்கட்டின துஷ்டர், பிறத்தியாருக்கு நன்மை கிடைப்பதைப் பார்க்கச் சகிக்காத பொறாமைக்காரர். இவர்களுக்குங் கூலி கிடைத்தது, மற்றவர்களுக்குங் கூலி கிடைத்தது, என்ன வித்தியாசம் என்று கேட்போம். கர்த்தருடைய ராச்சியத்தில் எல்லாருக்கும் கிருபை அளிக்கப்படுகிறது. திருச்சபையிலுள்ள சகல சிலாக்கியங்களும், சமாதானம், ஞான சந்தோஷம் முதலிய நன்மைகளும் யாவருக்கும் கொடுக்கப்படுகிறது. அதில் வித்தியாசமில்லை. தங்களை அபாத்திரப் பாவிகளென்றறிந்து தங்களைத் தாழ்த்துகிற விசுவாசிகள் இந்த நன்மைகளை நன்றியறிதலோடு ஏற்றுக்கொண்டு, கர்த்தருடைய கிருபையில் நிலைத்திருக்கிறார்கள். தங்களை மகா புண்ணியசாலிகளென்று எண்ணி, கர்த்தர் கிருபையாய்க் கொடுக்கும் நன்மைகளை அவமதித்து, அதுக்கு மேலான பலனைத் தேடுகிறவர்களோ, அவருடைய கோபத்துக்குள்ளாகி, அவருடைய கிருபையை இழந்துபோவார்கள். உன்னுடையதை நீ வாங்கிக்கொண்டு போ என்று சொல்லி, கர்த்தர் அப்படிப்பட்டவர்களைத் துரத்துவார். அவர்கள் கிருபையின் இராச்சியத்தில் நிலைத்திருக்க இடமில்லை. நான் கர்த்தருடைய வீட்டில் நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன் என்று அவர்கள் சங்கீதக்காரனைப் போல் பாட முடியாது (சங். 23).

கர்த்தர் கிருபையின்படி பலனளிக்காமல், அவனவன் கிரியைப்படி பலனளிப்பாராகில், ஒவ்வொருவனும் அவருடைய கோபத்திற்கும் ஆக்கினைக்குமே ஆளாவான். ஆகையால் கர்த்தர் தம்முடைய இராச்சியத்தில் ஒருவன் எவ்வளவு வேலை செய்தான் என்று பார்க்காமல், எந்த மனதோடு வேலை செய்தான் என்று மாத்திரம் பார்க்கிறார். அவர் அகந்தையுள்ளவர்களோடு எதிர்த்து நின்று; தாழ்மையுள்ளவர்களுக்குக் கிருபையளிக்கிறார். அநேகர் அவருடைய திராட்சத் தோட்டத்திற்கு அழைக்கப்படும், அவருக்குப் பிரியமானவர்கள் வெகு கொஞ்சம். அதினால்: அழைக்கப்பட்டவர்கள் அநேகம், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ கொஞ்சம் என்று சொல்லியிருக்கிறது. கர்த்தருடைய கிருபையை யேற்றுக்கொண்டு, அதில் நிலைத்திருக்கிறவர்களே தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்.

திராட்சத் தோட்டத்திற்கு எசமானாகிய கர்த்தாவே, அபாத்திரராகிய எங்களைக் கிருபையாய் நீர் வேலைக்கு அழைத்திருப்பதற்காக உமக்கு ஸ்தோத்திரம். உம்முடைய கிருபையால் நீர் எங்களைத் தாங்கி, உம்முடைய கிருபையின்படியே எங்களுக்குப் பலனளித்தருளும், சுவாமி. ஆமென்.

## அறுபதாம் நாள் என்கிற ஞாயிறு.

லூக். 8, 4—15.

பிரியமானவர்களே,

போன ஞாயிற்றுக்கிழமைச் சுவிசேஷ வாக்கியம் ஒரு எச்சரிப்பான வார்த்தையோடு முடிந்தது. அழைக்கப்பட்டவர்கள் அநேகம் தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ கொஞ்சம் என்பதே அந்த எச்சரிப்பு. இந்த வார்த்தையை நாம் கவனிக்க வேண்டியது. நம்மைப் பராபரன் தம்முடைய இராச்சியத்துக்கு அழைத்தார், அதிலே நம்மைச் சேர்த்தார். நாம் கோயிலுக்கு வருகிறோம். வெளிப்பார்வைக்கு எல்லாரும் கிறிஸ்தவர்களாயிருக்கிறோம். என்றாலும், நமக்குள் எத்தனை பெயர் மெய்விசுவாசிகள் என்று நமக்குத் தெரியாது. நாம் வெளிப்புறத்தைப் பார்க்கிறோம், பராபரனோ உட்புறத்தைப் பார்க்கிறார். நமக்குள் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் ஆர் என்று அவருக்குத் தெரியும். அவர் மாயக்காரரையும் வேஷக் கிறிஸ்தவர்களையும் தம்முடைய பிள்ளைகளென்று ஒப்புக்கொள்ளமாட்டார். சிலர் சபையில் பிரவேசிக்கும்பொழுது நல்லவர்களாகக் காணப்படுகிறார்கள். வர வர உறுதி கெட்டு, மாறிப்போகிறார்கள். குற்றம் ஆர் பேரில். பராபரன் பேரில் சொல்லுகிறதற்கு இடமில்லை. அவர் எல்லாருக்கும் தம்முடைய வசனத்தைக் கொடுத்திருக்கிறார். அதைக் கேட்கிறவர்களோ பலவிதமாயிருக்கிறார்கள். ஆகையால், அவர்கள் முடிவும் பலவிதமாயிருக்கிறது. ஆனபடியினாலே எப்படிக் கேட்கிறீர்களென்று பாருங்கள் என்பது கர்த்தர் சொல்[illegible] எச்சரிப்பு (லூக். 8, 18) நாம் சரியானபடி கேட்[illegible]படிக்கு,

பரனுடைய வசனத்தைக் கேட்கும் பலவகைப்பட்ட மனிதரைக் குறித்துச் சிந்திப்போம்.

1. அழுத்த நெஞ்சர்கள்.
2. மேற்பூச்சுக்காரர்.
3. உலக சிந்தையுள்ளோர்.
4. சற்குணமானவர்கள்.

### I.

பராபரனுடைய வசனத்தைக் கேட்கிற ஒரு வகுப்பார் அழுத்த நெஞ்சுடையவர்கள்.

விதைக்கிறவன் தன் விதையை விதைக்கப் புறப்பட்டான். அவன் விதைக்கையில், சிலது வழியருகே விழுந்து மிதியுண்டது. ஆகாசத்தின் பறவைகளும் வந்து, அதைப் பட்சித்



துப் போட்டது என்று நம்முடைய சுவிசேஷ வாக்கியம் சொல்லுகிறது. இதற்கு இரட்சகர் தாமே சொல்லுகிற அர்த்தத்தைக் கேட்போம். விதை பராபரனுடைய வசனமாயிருக்கிறது. வழியருகே விதைக்கப்பட்டவர்களோ கேட்கிறவர்களாயிருக்கிறார்கள். பிற்பாடு, அவர்கள் விசுவாசித்து இரட்சிக்கப்படாதபடிக்கு, பிசாசு வந்து, வசனத்தை அவர்கள் இருதயத்திலிருந்து எடுத்துப்போடுகிறது என்கிறார். — விதை நல்லது தான். விதைக்கிறவரும் நல்லவரே. நிலந்தான் உதவாதது. மனிதர்கள் அடிக்கடி நடந்து அழுத்தமாய்ப் போன நிலத்திலே விதை பதியாது. இதைப் போலொத்த மனிதர்கள் அநேகர் இருக்கிறார்கள். அவர்களில் சிலருக்கு வசனத்தைக் கேட்கப் பிரியமே கிடையாது. அவர்கள் வசனத்தை விரோதிக்கிறார்கள், சுவிசேஷத்தை நிந்திக்கிறார்கள். அவர்கள் அவிசுவாசிகள். அவர்கள் வசனத்தை விரோதித்து விரோதித்து, எதிர்த்து எதிர்த்து, தள்ளி வந்ததினால் அவர்களுடைய மனசு கடினமாய்ப் போய்விட்டது. இவர்களுக்குப் பராபரனுடைய வசனத்தை எவ்வளவாய்ச் சொன்னாலும், அது அவர்கள் மனதில் ஏறுகிறதில்லை.

வேறுவிதமான அழுத்த நெஞ்சர்களும் உண்டு. முன் சொன்னவர்களைப்போல இவர்கள் பராபரனுடைய வசனத்தை நேர் விரோதமாய் விரோதிக்கிறவர்கள் அல்ல. அவர்கள் கோயிலுக்கு வருவார்கள். வந்தாலும், அங்கே பிரசங்கிக்கிற வசனத்தைக் கவனிக்கிறதில்லை. அவர்கள் வசனத்தைக் கேட்கிறதற்கென்று கோயிலுக்கு வந்தவர்கள் அல்ல. அவர்களில் சிலர் காசு பண உபகாரம் பெறுகிறதற்கென்று வருகிறவர்கள். சிலர் தங்கள் நல்ல வஸ்திரங்களைக் காட்டுகிறதற்கென்றும், மற்றவர்களுடைய வஸ்திரங்களையும் நகைகளையும் பார்க்கிறதற்கென்றும் வருகிறார்கள். இன்னும் சிலர், யாதொரு மனுஷரைக் கண்டு பேச வேணுமென்கிறதற்காக வருகிறார்கள். இவர்கள் உடல் கோயிலில் இருக்கிறது. மனமோ ஊரெங்கும் சுற்றித்திரிகிறது. ஆகையால் அவர்கள் பிரசங்கத்தைக் கேட்கிறதில்லை. கேட்டாலும் கவனிக்கிறதில்லை. அதனால் அது அவர்கள் மனதில் பதிகிறதில்லை. நாம் இந்த வகுப்பைச் சேர்ந்தவர்களோ என்று சோதித்துப் பார்க்கக் கடவோம். நாம் வழக்கத்துக்குக் கோயிலுக்குப் போய், வழக்கத்துக்கு அங்கே உட்கார்ந்து வீடுகத் திரும்புகிறது பரிதாபம்.

நம்முடைய நெஞ்சம் அழுத்தமாய்ப் போகிறதற்கு இடமுண்டு. பராபரன் தம்முடைய வசனத்தினால் கொடுக்கிற ஏதுவை நாமும் அடிக்கடி அசட்டைபண்ணித் தள்ளுவோமானால், அப்படியாகும். நாம் அப்படித் தள்ளினாலும், பராபரனுடைய ஆவியானவர் நம்மை விட்டுவிடாமல் திரும்பத் திரும்ப

நம்மைக் கூப்பிடுகிறார், இன்றைக்கும் கூப்பிடுகிறார். அவருடைய கூப்பிடுதலை நாம் கவனிக்காமல் எதிர்த்து நிற்போமாகில், நாம் அதிகமாய்க் கடினப்பட்டுப் போவோம். மனிதர் கடினப்பட்டுப் போவது பிசாசுக்குப் பிரியம். மனிதர் தங்கள் பாவங்களைப் பாராமலும், இரட்சகரை அறியாமலும் போகிறது பிசாசுக்குச் சந்தோஷம். ஆகையால், அவன் நமது மனதில் விழுகிற வார்த்தையை நம்முடைய ஞாபகத்தில் வைக்காதபடிக்கு எடுத்துக்கொண்டு போகிறான். பராபரனுடைய வார்த்தையில்லாமல், விசுவாசமில்லை, விசுவாசம் இல்லாமல் இரட்சிப்பு இல்லை.

பேலிக்ஸ் என்ற துரைக்குப் பவுல் அப்போஸ்தலன் புத்திமதி சொன்னார். அவனோ அழுந்த நெஞ்சு உடையவனாயிருந்ததால்: இப்போது நீ போ, எனக்குச் சமயமானபோது உன்னை வரவழைப்பேன் என்று சொன்னான் (அப். 24; 25). இப்படியே அவனுக்குச் செய்த பிரசங்கம் வீணாய்ப்போயிற்று.

2.

பராபரனுடைய வசனத்தைக் கேட்கிற மற்றொரு வகுப்பார் மேற்பூச்சுக்காரர். அவர்கள் நம்முடைய வாக்கியத்தில் கற்பாறை நிலத்துக்கு ஒப்பிடப்படுகிறார்கள். வேறே சிலது கற்பாறையின்மேல் விழுந்தது, அது முளைத்தபின், அதற்கு ஈரமில்லாததினால் உலர்ந்துபோயிற்று என்றும், கற்பாறையின்மேல் விதைக்கப்பட்டவர்களோவெனில், கேட்கும்போது சந்தோஷத்துடனே வசனத்தை ஏற்றுக்கொள்ளுகிறார்கள்; ஆனால், இவர்களுக்கு வேர் இல்லை, சிலகாலம் விசுவாசித்து, சோதனையின் காலத்திலே பின்வாங்குகிறார்கள் என்றும் இரட்சகர் சொல்லுகிறார்.

மேற்பூச்சுக்காரக் கிறிஸ்தவர்கள் அநேகர். ஒரு கற்பாறையின்மேல் நாளளவில் காற்றடித்து விழுந்த கொஞ்ச மண் படிந்திருக்கும்; அதிலே விழுந்த விதை லேசாய் முளைக்கும். அதுபோல, இந்த மேற்பூச்சுக்காரக் கிறிஸ்தவர்கள் முன் சொல்லப்பட்ட அழுந்த நெஞ்சுள்ளவர்களைப் பார்க்கிலும் நல்லவர்களே. இவர்களுக்குக் கோயில் பிரியம், ஆராதனை பிரியம், பிரசங்கம் பிரியம். கூடியமட்டும் யோக்கியராகவே யிருப்பார்கள். என்றாலும், அவர்களுக்குள்ளே வசனம் ஆழமாய்ப் பதிந்திருக்கிறதில்லை. ஆகையால், அவர்கள் கிறிஸ்து மார்க்கம் ஆழமல்ல, மேற்பூச்சும் மாயமுமான கிறிஸ்து மார்க்கம் அவர்களிடத்தில் இருக்கிறது. அவர்கள் பக்தியும் விசுவாசமும் எவ்வளவென்று சோதனை காலத்தில் தெரிந்துபோம். பிசாசு அவர்களிடத்தில் வந்து, அவர்களுக்கு நயத்தைக் காண்பித்தால், பாவத்துக்கு உட்பட்டுப் போவார்கள். அல்லது, பயத்தைக் காண்பித்தால், தங்கள் விசு



வாசத்தை மறுதலிப்பார்கள். அவர்களுக்குக் கிறிஸ்து மார்க்கத்தின் இன்பம் பிரியமே அல்லாமல் துன்பம் பிரியம் அல்ல. கிறிஸ்தவர்களாயிருப்பதினால் ஊரார் பகை, உறமுறையார் விரோதம் நேரிடுகிறது என்று காணும்பொழுது அவர்கள் கிறிஸ்து மார்க்கத்தை விட்டு ஓடிப்போவார்கள். பஞ்சகாலத்தில் பசியாற்றினதால், கிறிஸ்து மார்க்கம் அவர்களுக்குப் பிரியம். செழித்த காலத்தில் கர்த்தருடைய மகிமைக்காகவும் ஏழைகளின் நன்மைக்காகவும் உங்கள் கையையும் பையையும் திறவுங்கள் என்று சொன்னால், அவர்களுக்குக் கோபம்.

இப்படி நடப்பதற்குக் காரணமென்ன. அவர்கள் படித்த உபதேசம் எல்லாம் அவர்கள் இருதயத்துக்குள் பதியவில்லை. அது காதிலே விழுந்து, சிலகாலம் ஞாபகத்தில் பதிந்திருக்கிறது. அந்த உபதேசங்கள் அவர்களுடைய பாவத்தைக் கண்டிக்கவும், அவர்கள் மனதை நொறுக்கவும், அதுக்குள் பிரவேசிக்கவும் அவர்கள் சம்மதப்படாமையால், அது அவர்களுக்குக் கேடாய் முடிகிறது.

நமக்குள் இப்படிப்பட்டவர்கள் இல்லையா. நாம் கற்றுக்கொண்ட கிறிஸ்து மார்க்கத்தின் உபதேசங்கள் நமக்குள் நன்றாய்ப் பதிந்து வேரூன்றியிருக்கிறதா. வேரூன்றாத விதை முளைத்தும் காய்ந்துபோவது போல, மேற்பூச்சான தெய்வபக்தி ஒன்றுமில்லாமல் போம். ஆகையால், நாம் எச்சரிப்படைவோமாக. கர்த்தர் கல்லான இருதயத்தை நம்மிலிருந்து எடுத்துப்போட்டுச் சதையான இருதயத்தை நமக்குக் கொடுக்கும்படி ஜெபம் செய்வோமாக.

3.

பராபரனுடைய வசனத்தைக் கேட்கிறவர்களில் ஒரு வகுப்பார் உலக சிந்தையுள்ளவர்கள். வேறே சிலது முள்ளுக்கள் நடுவே விழுந்தது; முள்ளுக்கள் கூட முளைத்து, அதை நெருக்கிப்போட்டது என்றும், முள்ளுக்களில் விழுந்ததோவெனில், இவர்கள் கேட்கிறவர்களாய் இருக்கிறார்கள்; ஆனால் போய், கவலைகளினாலும் ஐசுவரியத்தினாலும் ஜீவனத்தின் செல்விக்கையினாலும் நெருக்கிப்போடப்பட்டு, பலனுக்கு வராதிருக்கிறார்கள் என்றும் எழுதியிருக்கிறது.

இவ்வகைக் கிறிஸ்தவர்கள் அவிசுவாசிகள் அல்ல, மேற்பூச்சுக்காரருமல்ல. என்றாலும், இவர்களிடத்திலும் வசனம் வீணாய்ப்போகிறது. நல்ல மண்ணில் நல்ல விதை முளைத்துச் செழிப்பாய் வளர்வதுபோல், களைகளும் முட்பூண்டுகளும் கூட முளைத்து செழிப்பாய் வளரும். அப்படிப்போல இந்த மூன்றும் வகுப்பாரிடத்தில் பராபரனுடைய வசனத்தினால் நன்மை உண்டாகிறதுபோல, உலக நேசத்தினால் தீமையும் உண்டாகிறது.

முட்பூண்டுகள் நல்ல பயிரை நெருக்கும், உலக நேசம் தெய்வ பக்தியைக் கெடுக்கும். ஏழைகளுக்கும் உலக நேசம் உண்டு, பணக்காரருக்கும் உலக நேசம உண்டு. ஏழைகள் எங்களுக்குப் பணமில்லையே, காசில்லையே, சோறில்லையே, துணியில்லையே என்று நாளெல்லாம் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் ஆத்துமக் கவலையை மறந்து சரீரக் கவலைக்கே இடங்கொடுக்கிறதினால், அவர்கள் விசுவாசத்துக்கு மோசம் வருகிறது. உலக நேசரான பணக்காரரோ பணத்தோடு பணஞ் சேர்க்கவும், பெருந்தீனியிலும் குடியிலும் அதிகரிக்கவும், பிசாசு அவர்களை ஏவுகிறதினால் அவர்களிடத்தில் இருந்த தெய்வபத்தி நாளளவில் அற்றுப்போகிறது. நமக்குள்ளிருக்கிற ஒவ்வொரு பொல்லாத ஆசை இச்சையும் ஒரு முள் என்று சொல்லவேண்டும். மாமிச இச்சை ஒரு முள், கண்களின் இச்சை ஒரு முள், ஜீவனத்தின் பெருமை ஒரு முள், பண ஆசை ஒரு முள்.

யூதாஸ்காரியோத்தைப் பாருங்கள். அவன் நம்முடைய இரட்சகரின் அப்போஸ்தலன். அவருடைய உபதேசத்தைக் கேட்டவன். அதையும் வெளியே போய்ப் பிரசங்கித்தவன். என்றாலும், அவன் தன்னுடைய இருதயத்திலே பொருளாசை என்கிற பொல்லாத முள்ளுக்கு இடங்கொடுத்ததினால், அவனுக்கு எவ்வளவு பெரிய மோசம் வந்தது. அவன் நாளாவர்த்தியில் திருடனானான். அப்புறம் குருத்துரோகி ஆகி, தன் இரட்சகரை முப்பது வெள்ளிக்காசுக்கு விற்றான், அவரைக் காட்டிக்கொடுத்தான். கடைசியாக, அவன் விசுவாசமெல்லாம் அவனை விட்டு ஒழிந்தது. நம்பிக்கை அற்றவனாய் நான்றுகொண்டு செத்தான்.

நான் இவனைப்போலொத்த கிறிஸ்தவனல்லவோ என்று நம்மில் ஒவ்வொருவனும் தன்னைச் சோதித்துப் பார்ப்பானாக. பராபரனே, என்னை ஆராய்ந்து என் இருதயத்தை அறிந்துகொள்ளும்; நீர் என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொண்டு, என்னில் வேதனை உண்டாக்கும் வழி உண்டோ என்று பார்த்து, என்னை நித்திய வழியிலே நடத்தும் என்று அடிக்கடி கர்த்தரை நோக்கிக் கெஞ்சுவோமாக (சங். 139, 23. 24). நம்மில் ஆசை இச்சைகள் உண்டாகும்பொழுது பரிசுத்த ஆவியின் ஒத்தாசையால் அதை உடனே பிடுங்கி எறிந்து விடுவோமாக.

4.

இப்பொழுது நாம் பராபரனுடைய வசனத்தைக் கேட்கிற சற்குணசாலிகளான நாலாம் வகுப்பாரைக் குறித்துக் கேட்போம். இவர்களைக் குறித்து: வேறே சிலது நல்ல நிலத்தில் விழுந்தது; அது முளைத்து, ஒன்று நூறாய்ப் பலன் தந்தது என்றும், நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டதோவெனில், இவர்கள்



வசனத்தைக் கேட்டு, நன்றுஞ் சற்குணமுமான இருதயத்திலே காத்து, பொறுமையுடனே கனிகொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள் என்றும் சொல்லியிருக்கிறது.

இந்த நாலாம் வகுப்பார் பராபரனுடைய வசனத்தைச் சரியாய்க் கேட்கிறார்கள். அவர்கள் தெய்வ வசனத்தைக் கேட்கும்பொழுது தங்கள் மனதை அங்கும் இங்கும் அவர்கள் சிதறவிடுகிறதில்லை. அவர்கள் கவனமெல்லாம் தாங்கள் கேட்கிற வசனத்தின்மேல் இருக்கிறது. பெத்தானியா ஊர் மரியாளைப்போல் அவர்கள் இயேசுவின் பாதத்தண்டை உட்கார்ந்து, கவனமாய்க் கேட்கிறார்கள். அந்த மரியாளின் சகோதரியாகிய மார்த்தாளோ அநேகக் காரியங்களுக்காகக் கவலைப்பட்டுக் கலங்கிறதினால், கர்த்தருடைய வசனத்தைக் கேட்கக் கூடாமல் போயிற்று. பிலிப்பிப் பட்டணத்தில் லீதியாளென்று பேர்கொண்ட தெய்வபக்தியுள்ள ஒரு ஸ்திரி இருந்தாள். அவள் பவுல் அப்போஸ்தலன் சொன்னவைகளைக் கவனமாய் கேட்டாள். சரியாய்க் கேட்கிறவர்கள் சாமுவேல் என்ற வாலிபனைப்போல் ஜாக்கிரதையாய்க் கேட்கிறார்கள். சாமுவேலே சாமுவேலே என்று கர்த்தர் அவனைக் கூப்பிட்டபொழுது, அவன் அசமந்தமாய் இராமல்: சொல்லும் ஆண்டவரே, அடியான் கேட்கிறான் என்றான். பராபரனுடைய வசனத்தைச் சரியாய்க் கேட்கிறவர்கள் ஆவலாகக் கேட்கிறார்கள். கொர்நேலியு என்ற சேர்வைக்காரன் அப்படிச் செய்தான். பேதுரு அப்போஸ்தலன் அவனுக்குப் பராபரனுடைய வசனத்தை அறிவிக்கப் போகிறபொழுது, அவன் காத்திருந்து: நீர் வந்தது நல்ல காரியம், இப்பொழுது பராபரனால் உமக்குக் கற்பிக்கப்பட்டதுகளை எல்லாங் கேட்க, நாங்கள் அனைவரும் இங்கே பராபரனுக்கு முன்பாக இருக்கிறோம் என்றான். இதனால் அவனுக்கு சுவிசேஷத்தின் பேரிலிருந்த ஆவல் எவ்வளவு என்று பார்க்கிறோம். இவ்விதமாய்க் கேட்கிறவர்கள் பராபரனுடைய வசனத்தினால் பலன் அடைவார்கள் என்பதற்குச் சந்தேகமே இல்லை. ஆகையால் கேட்கக் காதுள்ளவன் கேட்கக் கடவான் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இந்த நாலாம் வகுப்பார் தாங்கள் கேட்ட வசனத்தை நன்றும் சற்குணமுமான இருதயத்திலே காத்துக்கொண்டார்கள். பராபரனுடைய வசனம் எல்லாப் பொக்கிஷத்திலும் பெரிய பொக்கிஷம். அதைப் பத்திரமாய்க் காப்பாற்றவேண்டும். இல்லாவிட்டால், பிசாசு அதை எடுத்துக்கொண்டுபோய் விடும். இந்தப் பொக்கிஷத்தை வைக்கவேண்டிய இடம் இருதயம் தான். சிலர் செய்கிறதுபோல் வேத புஸ்தகத்தை அழகான கட்டடமாய்க் கட்டி, பெட்டியிலும் மேசையிலும் அல்லது பத்திரமான மற்றொரு இடத்திலும் வைக்கிறது போதாது. அதை

வாசித்து, இருதயத்திலே வைக்கிறதே நியாயம். இதில் இயேசுவின் தாயாகிய மரியாள் நமக்கு நல்ல முன்மாதிரி. அவள் தான் மேய்ப்பரால் கேட்ட விசேஷங்களையும், சிமெயோன் என்ற பெரியவர் சொன்ன வார்த்தைகளையும் தன்னுடைய இருதயத்திலே வைத்துத் தியானம் பண்ணினாள். நாமும் கேட்கிற வசனத்தை மறந்துபோகாமல், நம்முடைய இருதயத்தில் பத்திரம் பண்ணித் தியானிப்போமாகில், அதனால் நாம் பாக்கியவான்களாவோம். ஏனெனில்: இயேசுநாதர் பராபரனுடைய வசனத்தைக் கேட்டு, அதைக் காத்துக்கொள்ளுகிறவர்களே பாக்கியவான்கள் என்று சொன்னார். அப்படியே சங்கீதக்காரனும்: கர்த்தருடைய வேதத்தின்மேல் பிரியமாயிருந்து, அவருடைய வேதத்தில் இரவும் பகலும் தியானிப்பாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் நீர் வாய்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்திலே தன் கனியைத் தந்து, இலை உதிராதிருக்கிற மரத்தைப்போல் இருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும் என்று சொல்லுகிறார் (சங். 1, 2. 3). நம்மில் அநேகர் கோயிலில் கேட்ட வசனத்தைக் கோயிலை விட்டு வருமுன் மறந்துபோகிறார்கள். அதைப் பத்திரமாய்க் காத்துக்கொள்ள வேண்டும் என்கிற கவலை அவர்களுக்கு இல்லை. கொஞ்சம் அரிசி அல்லது சில காசுகளைக் கொடுத்தால், அதைப் பத்திரமாய் வீட்டுக்குக் கொண்டுபோய்ச் சேர்த்து, அதைப் பிரயோசனப்படுத்தக் கவலையாயிருக்கிறவர்கள், ஞான போசனமாகிய தேவ வசனத்தைக் குறித்துக் கவலையற்றவர்களாயிருப்பது எவ்வளவு விசனமான காரியம்.

இந்த நாலாம் வகுப்பார் அதை நன்றும் சற்குணமுமான இருதயத்திலே காத்துக்கொண்டார்கள் என்று வாசிக்கிறோம். எந்த மனுஷனுடைய இருதயமும் நன்றுமல்ல, சற்குணமுள்ளதுமல்ல. எந்த இருதயத்தில் பராபரனுடைய வசனம் பதிகிறதோ, அந்த இருதயமே நன்றாகும், சற்குணமுமாகும். ஏனென்றால், அந்த வசனம் ஆவியும் ஜீவனுமாயிருக்கிறது. நாமும் நம்முடைய இருதயங்களில் தேவ வசனத்தைப் பத்திரமாய்க் காத்துக்கொண்டால், நம்முடைய இருதயம் சுத்தமாகும். நல்மனச்சாட்சி நமக்குக் கிடைக்கும், மெய்விசுவாசம் நம்மில் வளரும். மேலும், பராபரனுடைய வசனத்தைக் கேட்டு, அதைக் காத்துக்கொண்டவர்கள் பொறுமையோடு கனி கொடுக்கிறார்கள். நாம் விதை விதைக்கிறது வேடிக்கைக்கு அல்ல. அறுப்பு அறுக்கலாம் என்கிற ஆசையினாலே தான் விதைக்கிறோம். நம்முடைய இருதயமாகிய நிலத்திலே தம்முடைய வசனமாகிய விதையை விதைத்த கர்த்தர், நம்மிலே நல்ல விளைச்சலைக் காண ஆசையாய் இருக்கிறார். நாம் நம்முடைய அருமை இரட்சகரை நம்முடைய முழு இருதயத்தினாலும் விசுவாசித்து, நம்முடைய முழு மனதினாலும் சிநேகிக்கவேண்டுமென்பது அவருடைய ஆசை. நாம் கிறிஸ்துவில் நிலைத்திருந்து, பாவமும் அசுத்தமுமான எல்லாவற்றையும் வெறுத்து, பரிசுத்தமும் நீதியுமான யாவையும் செய்யவேண்டுமென்பது அவருடைய ஆசை. பராபரனுடைய வசனத்தினாலே பரிசுத்தமானவர்கள் பரிசுத்தமானவைகளை நினைக்கிறார்கள், பரிசுத்தமானவைகளைப் பேசுகிறார்கள், பரிசுத்தமானவைகளைச் செய்கிறார்கள். அவர்கள் விசுவாசத்தில் நிலைத்திருக்காதபடிக்கும் நல் நடக்கையாய் நடக்காதபடிக்கும் பிசாசும் அதன் பிள்ளைகளும் அவர்களை எவ்வளவு துன்பப்படுத்தினாலும், அதினால் இளக்கரியாமல் பொறுமையுடனே கனி கொடுக்கிறார்கள்.

ஒன்று நூறாய்ப் பலன் தந்தது என்று சொல்லியிருக்கிறது. மனுஷ இருதயத்தில் விழுந்து பதிகிறது ஒரே ஒரு வார்த்தையாயிருந்தாலும், அதினால் உண்டாகும் நன்மை நூறு காரியங்களிலும் ஆயிரங் காரியங்களிலும், இன்னம் சரியாய்ச் சொன்னால் நாம் ஆயுசுகாலமெல்லாம் நடப்பிக்கும் எல்லாக் காரியங்களிலும் வெளிப்படும். நாமெல்லாரும் வீண் கேள்விக்காரராயிராமல், வசனத்திற்கொத்த செய்கைக்காரராய் விளங்கும்படிக்குப் பராபரனுடைய வசனத்தைக் கேட்கவேண்டியபடி கேட்கக்கடவோம், வைக்கவேண்டிய தானத்தில் வைக்கக்கடவோம், காக்கவேண்டியபடி காக்கக்கடவோம்.

நல்ல விதை விதைக்கிற எங்கள் அருமை இரட்சகரே, இன்றைக்கு நீர் விதைத்த உம்முடைய வசனமாகிய ஜீவ விதை எங்களுடைய இருதயத்தில் நன்றாய்ப் பதியவும் ஒன்று நூறாய்ப் பலன் தரவும் எங்களுக்குத் துணைசெய்தருளும், சுவாமி. ஆமேன்.

---

## ஐம்பதாம் நாள் என்கிற ஞாயிறு.

மத். 3, 13—17

பிரியமானவர்களே,

நம்முடைய இரட்சகருக்கு மூன்று முக்கிய பெயர்கள் உண்டு: இயேசு, கிறிஸ்து, குமாரன் என்பவைகளே. இயேசு என்பதற்கு இரட்சகரென்று அர்த்தம். அவர் நமக்காக நீதியை எல்லாம் நிறைவேற்றி, நம்முடைய இரட்சகரானார். கிறிஸ்து என்பதற்கு அபிஷேகம் பெற்றவர் என்று அர்த்தம். அவர் நம்முடைய தீர்க்கதரிசியும் பிரதான ஆசாரியரும் இராசாவுமாகப் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டார். குமாரன்

என்பதற்கு மகன் என்று அர்த்தம். அவர் பிதாவிடத்திலிருந்து அநாதியாய்ப் பிறக்கிற அவருடைய நேச மகன். இந்த மூன்று முக்கிய பெயர்களுக்கும் நம்முடைய இரட்சகர் சரியான சொந்தக்காரர் என்று நம்முடைய சுவிசேஷ வாக்கியத்தினால் திட்டமாய் அறிந்துகொள்ளலாம். இந்த வாக்கியத்திலே கிறிஸ்துவின் ஞானஸ்நானத்தைக் குறித்துப் பேசியிருக்கிறது. அவர் பெற்ற ஞானஸ்நானம் நமக்கு விசேஷித்த ஆறுதலும், நம்முடைய ஞானஸ்நானத்தை மகிமைப்படுத்துகிறதுமாய் இருக்கிறது.

### கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்ற சரித்திரம் நமக்குப் போதிக்கிறது என்ன.

1. அவர் நீதியை நிறைவேற்றின நமது பிணையாளியென்று நமக்குக் காட்டுகிறது.
2. நாம் பெற்றுக்கொண்ட ஞானஸ்நானத்தின் மேன்மையை நமக்கு நினைப்பூட்டுகிறது.

### 1.

கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்ற சரித்திரத்தில் அவர் நீதியை நிறைவேற்றின நம்முடைய பிணையாளியாக வெளிப்படுகிறார்.

அப்போது இயேசு கலிலேயாவிலிருந்து யோர்தான் அருகே யோவானண்டைக்கு அவனால் ஞானஸ்நானம் பெற வந்தார். ஆனால் யோவான் அவருக்குத் தடைபண்ணி: நான் உம்மால் ஞானஸ்நானம் பெறத் தேவையாமே; நீர் என்னண்டைக்கு வருகிறீரோ என்றான். இயேசுவோவென்றால் அவனுடனே: இப்போது இடங்கொடு; ஏனெனில் இப்படி நீதியை எல்லாம் நிறைவேற்ற நமக்கு அடுத்ததாயிருக்கிறது என்று மறுமொழி சொன்னார். அப்பொழுது அவருக்கு இடங்கொடுத்தானென்று வாசிக்கிறோம்.

மனிதர் எல்லாரும் பாவிகள். நாம் பாவத்திலே பிறந்தோம், பாவத்திலே வளர்ந்தோம்; நாம் நினைப்பது பாவம், பேசுவது பாவம், செய்வது பாவம். பராபரனோ பரிசுத்தமுள்ளவர், நீதியுள்ளவர்; ஆகையால், அவர் தம்முடைய சித்தத்திற்கு விரோதமாகப் பாவஞ்செய்த மனுஷ ஜாதியை நரக ஆக்கினைக்கு ஒப்புவிப்பது நியாயம். ஆகிலும், நம்மை நரக ஆக்கினைக்குத் தப்புவித்து இரட்சிக்க இயேசுநாதர் பிணையாளியாக ஏற்பட்டார். ஒருவன் செய்யவேண்டியதை அவனுக்குப் பதிலாகச் செய்து நிறைவேற்றவும், ஒருவன் படவேண்டியதை அவனுக்குப் பதிலாகப் பட்டு உத்தரிக்கவும் எவன் ஒப்புக்கொள்ளுகிறானோ அவனுக்குப் பிணையாளி என்று பெயர். இயேசுநாதர் நாம் கைக்கொள்ள வேண்டிய கற்பனைகளைத் தாம் கைக்கொள்ளவும், நாம் நம்மு-



டைய பாவங்களுக்காகப் படவேண்டிய தண்டனையைப் படவும் ஒப்புக்கொண்டார். இதனால் அவர் நம்முடைய பிணையாளியானார். அவர் மனிதராகிய நமக்குப் பிணையாளியானதால், நம்மைப் போல் மனிதன் ஆனார். அவர் மனிதனாகியும், நம்மைப் போல் பாவி அல்ல; அவரை எந்த விதத்திலும் பழுது சொல்ல ஆராலும் முடியாது. தம்முடைய முப்பதாம் வயது மட்டும் நாசரேத்தூரில் தங்கி, தம்முடைய தாய்க்கும் தம்மை வளர்த்த தகப்பனுக்கும் கீழ்ப்படிந்திருந்த அவர் இப்பொழுது யோர்தானுக்கு வந்தார். யோர்தான் அருகே யோவான் ஸ்நானகன் தன்னண்டை வந்த ஜனங்களுக்குப் பிரசங்கம் பண்ணி, ஞானஸ்நானம் கொடுத்தார். யோவானிடம் வந்த ஜனங்கள் பாவிகளாயிருந்ததினால், அவர்: குணப்படுங்களென்று சொல்லி, அவர்களைக் குணப்படுதலுக்கு ஏவினார். அவருடைய பிரசங்கத்தைக் கேட்டவர்கள் பாவிகளாயிருந்ததால், அவர்களுக்குக் குணப்படுதலின் ஞானஸ்நானத்தைக் கொடுத்தார். இயேசுநாதரோ குணப்படத் தேவையுள்ளவர் அல்ல, அவர் பாவம் அறியாத பரிசுத்தர், மாசுமறு இல்லாத நீதிமான். அவர் யோவானிடம் வந்து தம்மை ஞானஸ்நானம் செய்விக்கும்படி கேட்டபொழுது யோவான் அவருக்கு ஞானஸ்நானம் கொடுக்கச் சம்மதிக்கவில்லை. பாவிகள் பெறவேண்டிய குணப்படுதலின் ஞானஸ்நானத்தைப் பாவம் அறியாத பரிசுத்தருக்கு எப்படிக் கொடுக்கிறது என்று ஸ்நானகன் திகைத்தார். இயேசுநாதரோ: இப்படி நீதியை எல்லாம் நிறைவேற்ற நமக்கு அடுத்ததாயிருக்கிறதென்று சொன்னார். நீதி என்பது பிதாவின் சித்தப்படி செய்கிறதுதான். பாவிகளின் நிலைமையிலிருக்கவும், பாவிகளின் பாவத்தைச் சுமந்துகொள்ளவும், பாவிகளுக்கு வரவேண்டிய ஆக்கினையை எல்லாம் படவும், பராபரன் அவருக்குக் கற்பித்தார். அவர் கற்பித்தபடி செய்வதே நீதி. இயேசுநாதரை ஞானஸ்நானம் செய்விப்பது யோவான் நிறைவேற்றவேண்டிய நீதி. அவரால் ஞானஸ்நானம் பெறுவது இயேசுநாதர் நிறைவேற்றவேண்டிய நீதி. அவர் குணப்படத் தேவையில்லாதிருந்தும், குணப்படுதலின் ஸ்நானத்தைப் பெற்றுக்கொண்டார். ஏனெனில் அவர் முழு மனிதசாதிக்கும் தலையாகவும், பதிலாளியாகவும் ஏற்பட்டு வந்தார்.

பாவிகளின் பிணையாளியாக அவர் யோர்தான் நதியில் முழுகின முழுக்கு அவர் கொல்கதா மலையிலே பெறப்போகிற இரத்த முழுக்குக்கு அடையாளமாகவும் இருந்தது. அவர் யோர்தானிலே முழுகினதினால் துவக்கின அவருடைய வேலை கொல்கதா மலையிலே முடிந்தது. யோர்தான் நதியில் யோவானால் ஞானஸ்நானம் பெற்றவர்தான் உலகத்துக்கு இரட்சகராக ஏற்பட்டவரென்று யோவானும் மற்றவர்களும் அறிந்துகொள்

ளும்படி, இரண்டு பெரிய சங்கதிகள் அந்தச் சமயத்திலே நடந்தது. அவர் ஞானஸ்நானம் பெற்றுத் தண்ணீரில் நின்று ஏறின போது, இதோ பரமண்டலங்கள் அவருக்குத் திறக்கப்பட்டது; பராபரனுடைய ஆவி புறாப்போல் இறங்கி, அவர் மேல் வருகிறதைக் கண்டான் என்று எழுதியிருக்கிறது. பாவத்தினாலே சாத்தப்பட்ட பரமண்டலம் இயேசுவினாலே திறக்கப்பட்டது. இயேசுநாதர் நம்முடைய பிணையாளியாகும்படி அபிஷேகம் பெற்றார். ஆரோன் பிரதான ஆசாரியனாகும்படி தைலத்தினால் அபிஷேகம் பெற்றார். எலீசா என்பவர் தீர்க்கதரிசியாகும்படி தைலத்தினால் அபிஷேகம் பண்ணப்பட்டார். தாவீது இராசாவாகும்படி தைலத்தினால் அபிஷேகம் பெற்றார். இயேசுநாதரோ தம்முடைய ஞானஸ்நானத்தில் இந்த மூன்று உத்தியோகங்களையும் ஏற்றுக்கொண்டபடியால், பரம தைலமாகிய பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பெற்றார். இதனால் இவர் மேலே கர்த்தருடைய ஆவியாகிய ஞானம் உணர்வு என்றவைகளின் ஆவியும், ஆலோசனை பெலன் என்றவைகளின் ஆவியும், அறிவு கர்த்தருக்குப் பயப்படுதல் என்றவைகளின் ஆவியுமானவர் தங்கியிருப்பார் என்று எசாயா தீர்க்கதரிசி (11, 2) முன்னுரைத்தது நிறைவேறிற்று. கபடற்ற பறவையாகிய புறாவின் ரூபமாய்ப் பரிசுத்த ஆவியானவர் இயேசுவின் பேரில் இறங்கினதினாலே, யோவான் ஸ்நானகன் அவரைப் பராபரனுடை குமாரனென்று அறிந்துகொண்டார். ஆகையால் யோவான் சாட்சிகொடுத்துச் சொன்னதாவது: ஆவி புறாவைப் போல் வானத்திலிருந்து இறங்கி, அவர் மீதில் இருந்ததென்று கண்டேன். நானும் அவரை அறியாதிருந்தேன்; ஆனால் தண்ணீரினால் ஞானஸ்நானம் கொடுக்க என்னை அனுப்பினவர் என்னுடனே: நீ ஆர் மீதில் ஆவி இறங்கியிருக்கிறதைக் காண்பாயோ அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானங் கொடுக்கிறவர் என்றார். அதை நான் கண்டு, இவர் பராபரனுடைய குமாரன் என்று சாட்சி கொடுத்தேன் என்றார் (யோவா. 1, 32-34).

மேலும், இதோ, ஒரு சத்தமும் பரமண்டலங்களில் இருந்துண்டாகி: இவர் நாம் பிரியமாயிருக்கிற நம்முடைய நேச குமாரனாயிருக்கிறாரென்று உரைத்தது என்று வாசிக்கிறோம். அது பிதாவாகிய பராபரனுடைய சத்தம். மனுஷ சாதிக்குப் பிணையாளியாக ஏற்பட்டு, பாவி போல் குணப்படுதலின் ஞானஸ்நானத்தைப் பெற்றவர் ஆரென்று பிதாவின் சாட்சியினால் அறிந்துகொள்ளலாம். அவர் நம்மைப் போல் வெறும் மனிதனல்ல. அவர் பராபரனுடைய குமாரன் அவருடைய மகிமையின் பிரகாசம், அவருடைய தற்சுபாவத்தின் அச்சு (எபி. 1, 3); ஆகையால், அவர் மெய்யான தேவன். பிதாவுக்குள்ள இலட்சணம்



எல்லாம் குமாரனுக்கும் உண்டு. இவர் பிதாவின் நேச குமாரன், அவருடைய நெஞ்சின் நேசக் கிரீடம்.

இப்படியே கிறிஸ்துவினுடைய ஞானஸ்நானம் அவரை நமது பிணையாளி என்றும், அவர் நமது பிணையாளியாக ஆவியின் அபிஷேகம் பெற்றவரென்றும், அவர் பிதாவின் நேசக் குமாரனென்றும், இவர் நமக்காக நீதியை எல்லாம் நிறைவேற்றினார் என்றும் நமக்குக் காண்பிக்கிறது. இது எவ்வளவு பெரிய ஆறுதல். இவரை நாம் நம்முடைய அருமை இரட்சகராக அறிந்து பற்றிக்கொள்வோமாக.

## 2.

இயேசுநாதருடைய ஞானஸ்நானம் நாம் பெற்றுக்கொண்ட ஞானஸ்நானத்தின் மேன்மையை நமக்கு நினைப்பூட்டுகிறது.

கிறிஸ்துவினுடைய ஞானஸ்நானத்தைக் குறித்துத் தியானித்த நாம் நம்முடைய ஞானஸ்நானத்தையும் இன்றைக்கு நினைவுகூர வேண்டும். இயேசுநாதர் ஞானஸ்நானம் பெற்று, நீதியை எல்லாம் நிறைவேற்றி முடித்த பின், தம்முடைய சீஷப்பிள்ளைகளை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சகல சாதிகளையும் சீஷராக்கி, அவர்களுக்குப் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுங்கள் என்று கட்டளையிட்டார். இயேசுநாதர் பெற்ற ஞானஸ்நானம் நம்முடைய ஞானஸ்நானத்தின் ஒரு படம் என்று சொல்லலாம்.

இயேசுநாதருடைய ஞானஸ்நானத்திலே பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய திரியேக பராபரன் தம்மை வெளிப்படுத்தினார். நாம் பெறுகிற ஞானஸ்நானத்திலும் அப்படித்தான். அதில் நமது மேல் ஊற்றுண்ட தண்ணீர் வெறுந்தண்ணீரல்ல; அது பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் பரிசுத்த நாமத்தோடு கூடிய தண்ணீர். அதிலே நாம் பராபரனுடைய நாமத்திற்கு உட்படுகிறோம். அதிலே பிதாவாகிய பராபரன் நம்மைக் கைதூக்கி எடுத்து: நீ நம்முடைய குமாரன், நாம் உன் தகப்பன் என்று சொல்லுகிறார். குமாரனாகிய பராபரன் நம்மைத் தம்மோடு சேர்த்துக்கொண்டு: நாம் உன் இரட்சகர், நீ நம்முடைய ஆள் என்று சொல்லுகிறார். பரிசுத்த ஆவியாகிய பராபரன்: நாம் உன் தேற்றரவாளன், நீ நம்மால் சுத்திகரிக்கப்பட்டவன் என்கிறார்.

இயேசுநாதர் ஞானஸ்நானத்திலே: இவர் நம்முடைய நேச குமாரன் என்கிற சாட்சியைப் பெற்றார். நாமும் நம்முடைய ஞானஸ்நானத்திலே பராபரனுடைய பிள்ளைகள் என்கிற சாட்சியைப் பெறுகிறோம். அது முதல் நாம் பராபரனை,

அப்பா பிதாவே என்று கூப்பிடக் கூடியவர்கள் ஆகிறோம். இஸ்ரவேலர் எகிப்து தேசத்தில் அடிமைப்பட்டிருந்த காலத்திலே பிறந்த மோசே என்ற குழந்தைக்கு நடந்த சங்கதி நமக்குத் தெரியும். பிறக்கிற ஆண் குழந்தைகளையெல்லாம் தண்ணீரில் எறிந்துபோட வேண்டுமென்பது இராஜகட்டளை. இந்தக் கட்டளைக்குப் பயந்து அம்ராம், யோகெபேத் என்ற இஸ்ரவேலர் மோசேயை ஒரு நாணற் பெட்டியில் வைத்து, தண்ணீரில் மிதக்கவிட்டார்கள். தண்ணீரில் கிடக்கையிலே மோசே அடிமைப்பிள்ளையாகவே யிருந்தார். ஆனாலும், அந்த நதியிலே நீராடவந்த பார்வோன் குமாரத்தி அவனைத் தூக்கினபொழுது அவர் இராஜபிள்ளையானார். இதுபோலவே பிசாசு, பாவம், சாபம், மரணம், நரகம் என்றவைகளுக்கு அடிமைகளான நாம் ஞானஸ்நானத்திலே பராபரனுக்குப் பிள்ளைகளாகிறது எவ்வளவு பெரிய சிலாக்கியம். நாம் நம்முடைய தாய் தகப்பன்மாரிடத்தில் பிறந்த பிறப்பு பாவப் பிறப்பு. ஞானஸ்நானத்தில் நாம் பிறக்கிற பிறப்போ மறுபிறப்பு. ஏனெனில், இதிலே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகிறது. சிவந்தசமுத்திரத்தில் பார்வோனும் அவனுடைய எல்லாச் சேனைகளும் அமிழ்ந்துபோனது போல் கிறிஸ்துவினுடைய இரத்தத்தில் நம்முடைய பாவமெல்லாம் அமிழ்ந்துபோகிறது. நாம் புது மனிதர் ஆகிறோம். பாவத்தினால் நிர்வாணிகளாய்ப்போன நமக்கு ஞானஸ்நானத்திலே கிறிஸ்துவினுடைய நீதி என்கிற வஸ்திரம் கொடுக்கப்படுகிறது. அதேனென்றால், கிறிஸ்துவுக்குள்ளாக எத்தனை பேர் ஞானஸ்நானம் பெற்றீர்களோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்கள் என்று அப்போஸ்தலன் சொல்லுகிறார் (கலா. 3, 27).

இயேசுநாதர் ஞானஸ்நானம் பெற்றபொழுது பரிசுத்த ஆவியானவர் அவர் பேரில் இறங்கினார். நம்முடைய ஞானஸ்நானத்திலும் நாம் பரிசுத்த ஆவியைப் பெறுகிறோம். ஞானஸ்நானம் பரிசுத்த ஆவியோடு கூடிய முழுக்காய் இருக்கிறது. ஞானஸ்நானம் பெறுதலை, இயேசுநாதர் தண்ணீரினாலும் ஆவியினாலும் பிறத்தல் என்று சொல்லுகிறார். மேலும், பேதுரு அப்போஸ்தலன்: நீங்கள் குணப்பட்டு, அவனவன் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவினுடைய நாமத்தின் பேரில் ஞானஸ்நானம் பெறக்கடவான்; அப்போது பரிசுத்த ஆவியின் ஈவைப் பெறுவீர்களென்று சொன்னார் (அப். 2, 38).

கிறிஸ்துவின் ஞானஸ்நானத்திலே பரமண்டலம் திறக்கப்பட்டது. நம்முடைய ஞானஸ்நானத்திலும் நமக்குப் பரமண்டலம் திறக்கப்படுகிறது. ஞானஸ்நானம் பெற்ற ஒவ்வொருவனும் மோட்சத்தின் திட நம்பிக்கையுடையவனாயிருக்க இடமுண்டு. ஏனெனில், பாவமன்னிப்பு எங்கேயோ, அங்கே



ஜீவனும் மோட்சமும் உண்டு என்று படித்திருக்கிறோம். இந்த நம்பிக்கையே இந்த உலகத்தில் நமக்கு உண்டாகும் பல சங்கடங்களிலும் துன்பங்களிலும் நம்மை ஆற்றித் தேற்றத் தக்கது.

இந்த நன்மைகளெல்லாம் ஞானஸ்நானத்தில் நமக்குக் கொடுக்கப்பட்டும், அவைகள் நமக்குச் சொந்தமானவைகளாயிருந்தும், ஞானஸ்நானம் பெற்ற எல்லாக் கிறிஸ்தவர்களும் இவைகளை அனுபவிக்கிறார்களா. யாவரும் அனுபவிக்கிறதாய்ச் சொல்ல முடியாது. விசுவாசமுள்ளவர்கள் மாத்திரம் இவைகளை அனுபவிப்பார்கள். விசுவாசமுள்ளவனாய் ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவானென்று கர்த்தர் சொன்னார். இதற்கு ஒத்தபடியே,

நம்முடைய ஞானஸ்நானத்தில் நாம் கொடுத்த வாக்குத்தத்தம் என்ன: நான் பிசாசை விட்டு விடுகிறேன், அதன் எல்லாக் கிரியைகளையும் விட்டு விடுகிறேன், அதன் எல்லா ஆடம்பரத்தையும் விட்டு விடுகிறேன், பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவரை விசுவாசிக்கிறேன் என்று நாம் சொன்னவர்கள் அல்லவா. தாங்கள் சொன்னதற்கு நேர் விரோதமாகப் பிசாசுக்கும் அதன் ஆடம்பரத்துக்கும் அதன் கிரியைக்கும் இடங்கொடுக்கிற எத்தனை கிறிஸ்தவர்கள் நமக்குள் உண்டு. விசுவாசப் பிரமாணத்தைத் தினந்தோறும் வாயினாலே சொல்லியும், அதை இருதயத்தில் கொஞ்சமேனும் வைத்திராத எத்தனை கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் தங்கள் ஞானஸ்நானத்தைக் குறித்து மேன்மை பாராட்டுவதற்கு இடமில்லை. முழு இருதயத்தினாலும் விசுவாசித்து, விசுவாசத்தில் மரணபரியந்தம் நிலைத்திருக்கிறவர்கள் மாத்திரம் மோட்ச சுதந்தரத்திற்குப் பங்காளிகளாவார்கள். அவர்களுக்கு மாத்திரமே ஞானஸ்நானத்தின் ஆசீர்வாதங்கள் பரிபூரணமாய்க் கிடைக்கும்.

ஞானஸ்நானத்தில் இன்னொரு காரியம் கவனிக்கவேண்டும். தண்ணீரில் முழுகுகிறவன் அதற்குள் அமிழ்ந்துகிறான். பிறகு எழுந்திருக்கிறான். ஞானஸ்நானமென்ற முழுக்கிலும் அமிழ்ந்தவேண்டிய ஒன்றுண்டு, எழுந்திருக்கவேண்டிய ஒன்று உண்டு. அமிழ்ந்த வேண்டியது நம்முடைய பழைய துர்க்குணம். எழுந்திருக்கவேண்டியது இயேசுநாதருக்கேற்ற புதுக்குணம். நாம் ஞானஸ்நானம் பெற்ற அன்றைக்கு இது நடந்தது. தினந்தோறும் இது நடக்கவேண்டும். நாம் பாவத்துக்காக மனஸ்தாபப்பட்டு அழவேண்டும், புதிய சிராய் கிறிஸ்துவின் சித்தப்படி நடக்கவேண்டும். இதுவே நாம் ஞானஸ்நானத்தை ஒவ்வொரு நாளும் நினைக்கவேண்டிய விதம்.

எங்களுக்காக ஞானஸ்நானம் பெற்ற இயேசுநாதரே, நாங்கள் எங்கள் ஞானஸ்நான உடன்படிக்கையை மீறின எங்கள் பாவத்தை எங்களுக்கு மன்னியும். நாங்கள் உம்மிடத்தில் மரணபரியந்தம் நிலைத்திருக்க உம்முடைய பரிசுத்த ஆவியினாலே எங்களுக்குத் துணைசெய்தருளும், சுவாமி. ஆமேன்.

---

# ஒருசந்தி நாற்பது நாட்களில் முதலாம் நாளாகிய புதன் கிழமை.

லூக். 18, 31—43.

பிரியமானவர்களே,

இது ஒரு விசேஷித்த தபசு நாள். இன்றைக்கு ஒருசந்தி காலம் துவக்குகிறது. இதிலே நாம் மெய்க் குணப்படுதலோடு பிரவேசிக்கவேண்டும். இந்தக் காலத்தில் இயேசுநாதருடைய திருப்பாடுகளைக் குறித்துத் தியானிக்கவேண்டுமென்பது திருச்சபையின் ஏற்பாடு. இந்தத் தியானிப்போடு கூட சரீரத்தை ஒடுக்கி, ஒருசந்தியிருப்பதும், உபவாசம் செய்வதும் பூர்வீககாலம் தொட்டு சபையிலே வழக்கம். இயேசுநாதர் உபவாசம் பண்ணினார். அப்போஸ்தலமார் உபவாசம் பண்ணினார்கள். அநேக பக்திமான்கள் உபவாசம் பண்ணினார்கள். நம்முடைய இரட்சகர் மலைப்பிரசங்கத்தில் சொன்னபடி உபவாசம் பண்ணுகிறது புறம்பான நல்லொழுக்கந்தான். என்றாலும், பரிசேயர்களைப் போல் உபவாசம்பண்ணி, தங்கள் உபவாசத்தைக் குறித்துப் பெருமை பாராட்டி, அதைப் பெரிய புண்ணியமாக நினைத்துக் கொள்ளுகிறவர்களைக் கர்த்தர் அருவருக்கிறார். இந்த ஒருசந்தி நாட்களில், விசேஷமாய் வெள்ளிக் கிழமைகளில், நாம் ஒருவேளை அல்லது இரண்டு வேளை சாப்பாட்டை விலக்குவது முக்கியமல்ல. நாம் செய்யவேண்டிய முக்கிய காரியங்கள் வேறே. சிலுவையில் அறையுண்ட இயேசுவை நம்முடைய மனக்கண்ணால் நோக்கிப் பார்க்கவேண்டும். அவருடைய பாடுகளுக்கும் மரணத்துக்கும் காரணமாயிருந்த நம்முடைய பாவங்களை நினைத்து அதற்காகத் துக்கப்பட்டு அழவேண்டும். நம்முடைய இரட்சகரிடத்திலே பாவமன்னிப்பைத் தேடவேண்டும். அவருடைய உதவியால் நம்முடைய ஆசை இச்சைகளை ஒடுக்கவேண்டும். இதுவே மெய்த் தபசு. இதற்கு நம்மை ஏவும்படி தேவ வசனத்தின் சத்தம் நம்முடைய இருதயங்களில் எப்பொழுதும் தொனித்துக் கொண்டிருக்க வேண்டும். நம்முடைய சுவிசேஷ வாக்கியத்தில் தொனிக்கிற இந்தச் சத்தத்தை இன்றைக்கு நாம் கவனமாய்க்



கேட்கக் கடவோம். இதுவே இந்த ஒருசந்தி நாட்களில் எல்லாம் நமது இருதயங்களில் தொனிக்கத் தக்கது.

## இந்த ஒருசந்தி நாட்களில் நமது இருதயங்களில் தொனிக்கவேண்டிய சத்தம் என்ன.

1. அருமை இரட்சகரின் அன்புள்ள சத்தம்.
2. ஏழைப் பாவியின் இக்கட்டுச் சத்தம்.

### 1.

இந்த ஒருசந்திகாலத்தில் நமது இருதயங்களில் தொனிக்க வேண்டிய முக்கிய சத்தம் அருமை இரட்சகரின் அன்புள்ள சத்தமே.

அவர் பன்னிருவரைச் சேர்த்துக்கொண்டு, அவர்களுடனே சொன்னதாவது: இதோ, எருசலேமுக்குப் போய் ஏறுகிறோம்; அங்கே மனுஷனுடைய குமாரனைக் குறித்துத் தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்டதெல்லாம் நிறைவேறும். அதென்னெனில் புறஜாதிகளுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு, பரிகாசமும் நிந்தையும் அடைந்து துப்பப்படுவார். அவரை வாரினால் அடித்து, கொன்றுபோடுவார்கள்; மூன்றாம் நாளிலோ திரும்ப எழுந்திருப்பார் என்றார்.

இந்த வார்த்தைகளால் நம்முடைய அருமை இரட்சகர் தாம் உற்சாகமாய்ப் பாடுபடப்போகிறதைக் காண்பிக்கிறார். எருசலேம் பட்டணத்துக்கு அவர் போகும்படி அவரை ஒருவரும் கட்டாயப்படுத்தவில்லை. அவரே வேணுமென்று போகிறார். அங்கே தம்மை அறையப்போகிற சிலுவை ஒரு தச்சன் வீட்டில் கடாவப்படுகிறது அவருக்குத் தெரியும். அவருடைய கைகளையும் கால்களையும் சிலுவையோடு சேர்த்து அடிக்கப்போகிற ஆணிகள் கொல்லன் பட்டடையில் ஆயத்தமாகிறது அவருக்குத் தெரியும். அந்த எருசலேம் பட்டணத்தில் அவருக்கு நடக்கப்போகிற அட்டூழியங்களில் ஒன்றாகிலும் அவருக்கு மறைவானதல்ல. இப்படியிருந்தும், அவர்: இதோ எருசலேமுக்குப் போய் ஏறுகிறோம் என்று உற்சாகமாய்ச் சொல்லுகிறார். பாடுபட்ட சரித்திரம் முழுமையிலும் இந்த உற்சாகத்தை நாம் காணலாம். அவர் தம்மைப் பிடிக்க வந்தவர்களுக்கு எதிர்கொண்டுபோய்: நீங்கள் ஆரைத் தேடுகிறீர்களென்று கேட்க, அவர்கள்: இயேசு நசரேத்தானையே என்று சொன்னார்கள். அவரோ: நான்தான் என்று சொல்லி, தம்மையே ஒப்புக்கொடுத்தார். தம்மைப் பிடித்தவர்களோடு சண்டைபோடத் துவக்கின பேதுரு அப்போஸ்தலனைத் தடுத்தார்.

அவர் தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றுகிற மேசியாவாகப் பாடுபடப்போகிறதை அவருடைய வார்த்தைகள் காண்

பிக்கிறது. தீர்க்கதரிசிகள் அவரைக் குறித்து மகா ஆச்சரியமான விசேஷங்களை முன்னறிவித்தார்கள். அவருடைய பிறப்பைக் குறித்து அவர்கள் முன்னறிவித்தவைகளை அவர் நிறைவேற்றிவிட்டார். அவருடைய பிரசங்கங்களைக் குறித்து முன்னறிவித்தவைகளை நிறைவேற்றிவிட்டார். அவருடைய அற்புதக் கிரியைகளைப் பற்றிய தீர்க்கதரிசனங்களெல்லாம அவரால் நிறைவேறிவிட்டன. அவருடைய பாடுகளையும் மரணத்தையும் பற்றிய தீர்க்கதரிசனங்கள் இன்னம் நிறைவேற வேண்டியதாயிருந்தது. அவர் முப்பது வெள்ளிக்காசுக்கு விற்கப்படுவதாக சகரியா தீர்க்கதரிசி முன்னுரைத்தார். உங்கள் பார்வைக்கு நன்றாய்க் கண்டால் நம்முடைய கூலியைத் தாருங்கள்; இல்லாவிட்டால் இருக்கட்டுமென்று அவர்களோடே சொன்னேன். அப்போது நம்முடைய கூலியாக முப்பது வெள்ளிக்காசை நிறுத்தார்கள் என்பது அவருடைய தீர்க்கதரிசனம் (சக. 11, 12). விசேஷமாக எசாயா தீர்க்கதரிசி அவருடைய பாடுகளைக் குறித்து முன்னறிவித்தார். அவருக்கு ரூபமும் இல்லை, மகத்துவமும் இல்லை; நாம் அவரைப் பார்த்தபோது, நாம் அவரை இச்சிக்கத்தக்க ரூபு அவருக்கு இல்லாதிருந்தது. அவர் அசட்டை பண்ணப்பட்டவரும், மனுஷரில் ஈனமானவரும், வேதனைகளுள்ளவரும், பலவீனத்தை அறிந்தவருமாயிருந்தார்; அவரை விட்டு முகங்களை மறைத்துக்கொள்ளலாயிற்று; அவர் அசட்டை பண்ணப்பட்டிருந்தார், அவரை எண்ணாதே போனோம் என்று முன்னுரைத்தார் (எசாயா 53, 2. 3). அவருடைய கைகளையும் கால்களையும் உருவக் குத்துவார்களென்றும், அவருடைய வஸ்திரங்களின் பேரில் சீட்டுப்போடுவார்களென்றும், அவரைப் பரிகாசம் பண்ணி உதட்டைப் பிதுக்கித் தலையைத் துலுக்குவார்களென்றும் தாவீது இராசா முன்னறிவித்தார் (சங். 22) இந்தத் தீர்க்கதரிசனங்களை எல்லாம் இயேசுநாதர் நிறைவேற்ற மனங்கொண்டார். இவைகளை நிறைவேற்றுவதினால் தாமே மேசியாவென்று காண்பிக்கப் பிரியங்கொண்டார்.

மேலும், நம்முடைய அருமை இரட்சகர் கொடுமையாய்ப் பாடுபடப்போகிறதாகத் தெரிவிக்கிறார். அவர் யூதருடைய இராச குலமாகிய தாவீதின் குமாரனாயிருந்தும், அவரைப் புறசாதிகளுக்கு ஒப்புக்கொடுக்கப் போகிறார்களென்று அவருக்குத் தெரிந்தது. அவர் யூதர்களுக்கு நன்மை செய்ய யூதனாய்ப் பிறந்தார். அவர் யூதருடைய தேசம் எங்கும் சுற்றித் திரிந்து, யூதருக்கு அநேக நன்மைகளைச் செய்தார். ஆகிலும், அவர்கள் அவரைப் புறசாதியாராகிய ரோமர்களுக்கு ஒப்புவித்தார்கள். அவருடைய அப்பத்தைப் புசித்த அவருடைய சொந்தச் சீஷன் அவருக்குத் துரோகியானான். பேதுரு அப்போஸ்தலன் அவரை மறுதலித்தார். மற்றச் சீஷர் எல்லாரும் அவரை அந்நியர் கை



யில் விட்டு, ஓடிப்போனார்கள். ஆ, இது எவ்வளவு துக்கமான காரியம். துஷ்டர்கள் அவரைப் பிரதான ஆசாரியன் வீட்டிலே முக்காடிட்டு, முகத்தில் அறைந்து, குட்டி நிந்தித்தார்கள். பிலாத்துவின் வீட்டிலும், எரோதேயின் வீட்டிலும் அவருக்கு நடந்த நிந்தை பரிகாசம் கொஞ்சமல்ல. வாரடியின் கொடுமையும், முள்முடியின் கொடூரமும் சின்ன காரியங்களா. சிலுவையில் அறையுண்டதோ கொடுமையிலெல்லாம் கொடுமை, சிலுவை மரணம் அடிமை மரணம், பாடுபட்ட சரித்திரத்தைக் கவனித்து வாசிக்கும்பொழுது அவருடைய பாடுகள் எவ்வளவு கொடுமையானவை என்று காணலாம். பாவியே, உனக்காக நான் இவ்வளவு கொடுமையாய்ப் பாடுபடுகிறேன் என்று இயேசு இரட்சகர் இந்த ஒருசந்தி நாட்களில் நம்மில் ஒவ்வொருவனுக்கும் சொல்லிச் சத்தமிடுகிறார். இந்தச் சத்தத்தை நாம் கவனிக்கவேண்டியது.

இயேசுநாதர் யாதொரு குற்றமும் இல்லாமல் தாம் பாடுபடுகிறதாகக் காண்பிக்கிறார். நம்முடைய இரட்சகர் பாவம் செய்ததில்லை. அவர் வாயிலே வஞ்சனை காணப்பட்டதும் இல்லை (1 பேது. 2, 22). அவருக்கு அநியாயத் தீர்ப்பிட்ட பொந்தியுபிலாத்து அவரிடத்தில் ஒரு குற்றமும் கண்டதில்லை. அவர் குற்றமில்லாமைக்கு வானமும் பூமியும் சாட்சி கொடுத்தன. இயேசுநாதர் குற்றமில்லாமல் பட்ட பாடுகள் குற்றமுள்ள நமக்கு இரட்சிப்பாயிற்று.

நமது அருமை இரட்சகர் ஜெய நம்பிக்கையோடு பாடுபடுகிறதாகக் காண்பிக்கிறார். மூன்றாம் நாளிலே திரும்ப எழுந்திருப்பாரென்று அவர் சொல்லுவதால், அது விளங்கும். அவர் பட்ட பாடுகளும் அவர் அடைந்த மரணமும் வீணாய் முடிந்ததில்லை. அவருடைய சத்துராதிகள் அவரைப் புதைத்து அவரைத் தொலைத்துப்போட்டதாக நினைத்திருந்தும், அவர் மரணத்தை ஜெயித்து வெற்றிவேந்தராக எழுந்திருந்தார். இதுவும் அவருக்கு ஏற்கனவே தெரியும். நமக்காகப் பாடுபடுகிறவர் நம்முடைய சத்துருக்களை எல்லாம் ஜெயித்த வெற்றிவேந்தரென்று அறிந்து பாடுபட்ட சரித்திரத்தை நமக்கு எவ்வளவு மதுரமாக்குகிறது. ஆகையால், இந்த நாட்களில் நம்முடைய இரட்சகருடைய அன்பான சத்தம் எப்பொழுதும் நம்முடைய இருதயங்களில் தொனித்துக்கொண்டிருப்பதாக. இந்த அவருடைய சத்தத்தைக் கேட்பதும் தியானிப்பதும் நம்முடைய விசேஷித்த கவலையும் வேலையுமாயிருப்பதாக.

2.

இந்த ஒருசந்தி நாட்களில் நமது இருதயங்களில் தொனிக்கவேண்டிய மற்றொரு சத்தம் ஏழைப்பாவியினுடைய இக்கட்டுச் சத்தமே.

இக்கட்டடைந்த ஏழைப்பாவிக்கு நம்முடைய வாக்கியத்திலுள்ள குருடன் ஒரு அடையாளமாயிருக்கிறான். அவன் நம்முடைய பாவ நிர்ப்பந்தத்தைக் காண்பிக்கிற படம். அவன் கண் தெரியாத கபோதி; அவனுக்குத் தன்னைப் பார்க்கவும் முடியாது, மற்றவர்களைப் பார்க்கவும் முடியாது. ஆகையால், அவன் பார்வை அடைய விரும்புகிறவனாய்: இயேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்குமென்று கூப்பிட்டான். நாமும் இவனைப் போல் கூப்பிடுகிறதற்கு அவசியம் உண்டு. ஏனென்றால், நமது மனக்கண் குருடாயிருக்கிறது.

நமக்கு நம்முடைய பாவ நிலைமையைச் சரியாய்ப் பார்க்கக் கண் இல்லை. நம்மை நாம் குற்றமற்றவர்களாக அடிக்கடி நினைக்கிறோம். இயேசுநாதருக்குச் சொல்லிமுடியாத பாடுகளை உண்டுபண்ணினது நம்முடைய பாவங்கள் என்று மெய்யாய் நினைக்கிறவர்கள் எத்தனை சிலர். பாடுபட்ட சரித்திரத்தை வாசிக்கிறவர்களும் கேட்கிறவர்களும் தங்களையே குற்றம் சாட்டிக்கொள்ள வேண்டியதாயிருக்க, காட்டிக்கொடுத்த யூதாசையும், மறுதலித்த பேதுருவையும், அநியாயத்தீர்ப்பிட்ட பிலாத்துவையும், கொடுமைப்படுத்தின சேவகரையும் குற்றப்படுத்திப் பேசுவார்கள். ஏனென்றால், அவர்களுக்குத் தங்களைப் பார்க்கக் கண்ணில்லை. க[illegible]மோ, இந்த ஒருசந்தி நாட்களை நமக்கு ஆசீர்வாதமுள்ள நாட்களாக ஆசரிக்க மனதாயிருந்தால்: இயேசுவே, தாவீதின் குமாரனே, உம்மை வதைத்த என் பாவங்களை நான் கண்டுணரக்கூடும்படி என் கண்களைத் திறந்தருளும் என்று கெஞ்சுவோமாக. அவர் நம்முடைய கண்களைத் திறந்தால், பாடுபட்ட சரித்திரத்தில் நம்முடைய சொல்லிமுடியாத பாவங்களைக் காண்போம். அப்பொழுது நாம் மெய்மனஸ்தாபப்பட்டு:

ஆ, இதைச் செய்தோன் நானும்
என் அக்கிரமங்கள் தானும்;
கடற்கரை மணல்
அத்தன்மையாய்க் குவிந்த
என் பாதகங்கள் இந்த
வதைப்புக்காதிமூலங்கள்

என்று உண்மையாய்ப் பாடுவோம். மெய்யாகவே, நம்முடைய பாவங்கள் கொடிதானவைகளே. நாம் இவைகளுக்காக மனஸ்தாபப்பட்டுக் கண்ணீர் விட்டுப் புலம்புவது நியாயம்.

நம்முடைய இரட்சகரைச் சரியாய் நோக்கிப் பார்க்கவும் நமக்குக் கண்ணில்லை. அந்த ஏழைக் குருடன் இயேசுநாதரைப் பார்க்கமாட்டாமல், கும்பு நடக்கிறதைக் கேட்டு, இதேதென்று விசாரித்தான். அவனுக்கு: இயேசு நசரேயன் போகிறார் என்று அறிவித்தார்கள். நாமும் அவனைப்போல்: தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும் என்று கூப்பிட்டு, நம்முடைய கண்களைத் திறக்கும்படி கெஞ்சுவோமாக. இயேசுநாதருடைய சீஷர்



களுக்கு இன்னும் கண் திறவாதிருந்தபடியினாலே, அவர் முன்னறிவித்த பாடுகளின் சரித்திரம் அவர்களுக்கு விளங்காமல் போயிற்று. அவர்கள் இதுகளில் ஒன்றையும் உணர்ந்ததில்லை. இந்த வார்த்தை அவர்களுக்கு மறைபொருளாயிருந்தது; சொல்லப்பட்டதுகளை அறியாதேபோனார்களென்று எழுதியிருக்கிறது.

பாடுபடுகிறவர் தாவீதின் குமாரனாகிய மேசியா என்று காண நமக்குக் கண்கள் அவசியம். அவர் தாவீதின் குமாரனும் மெய்யான மேசியாவுமாய் இராதேபோனால், அவர் நம்முடைய இரட்சகராயிருக்கக் கூடாது. யூதர்கள் அவரைத் தாவீதின் குமாரனாகிய மேசியாவென்று காணாதபடிக்கு அவிசுவாசம் அவர்கள் கண்களைக் குருடாக்கிற்று.

ஆண்டவரே, நீர் இரக்கமுள்ளவர் என்பதைக் காண என் கண்களைத் திறவும் என்று நாம் கெஞ்சுவோமாக. இரட்சகர் சுத்த சிநேகத்தினாலும் நிர்ப்பந்த பாவிகளுக்கு இரங்கின இரக்கத்தினாலும் மாத்திரமே பாடுபட்டு மரித்தார். மற்றப்படி அவர் நமக்காக இரத்தம் சிந்த எந்த நியாயமும் இல்லை. இயேசுவினுடைய ஒப்பில்லாத சிநேகத்தையும் இரக்கத்தையும் அறிந்தவன் மாத்திரம் அவரிடத்திலே மன்னிப்பைத் தேடுவான், சகாயந்தேடுவான், ஆறுதல் அடைவான். பாடுபட்ட சரித்திரத்தை அன்பின் சரித்திரமாகக் கண்டு, அதினால் ஆறுதல் அடைவதற்குப் பரிசுத்த ஆவியின் வெளிச்சம் நமக்குத் தேவை.

முன்போகிறவர்கள் அவனை அமர்ந்திருக்க அதட்டினார்கள்; ஆனால் அவன் வெகு அதிகமாய்: தாவீதின் குமாரனே, எனக்கு இரங்குமென்று சத்தமிட்டான். இப்படியே நாமும் இயேசுவை நோக்கி ஜெபம் பண்ணும்பொழுது நம்மைப் பிசாசும் உலகத்தாரும் வெகுவாய்த் தடுப்பார்கள். நாம் அவர்களுக்கு இடம் கொடுத்து அமர்ந்திருக்கக்கூடாது. அப்பொழுதுதான் நாம் அதிக உக்கிரமாக ஜெபம் செய்யவேண்டும். அந்த ஏழைக் குருடன் சத்தம் வீணாய்ப் போகவில்லை. யோசுவாவின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டுச் சூரியனும் சந்திரனும் நின்றதுபோலே, இந்த ஏழைக் குருடனின் வார்த்தைக்கு இயேசுநாதர் இரங்கி நின்றார். அவனைத் தம்மண்டைக்குக் கூட்டிவரச் சொன்னார். பார்வை அடை என்று அவனுக்கு உரைத்தார். நம்முடைய ஜெபத்துக்கும் அவர் கட்டுப்படுவார். நம்மிடத்திலும் அவர் வந்து நிற்பார், நம்முடைய கண்களையும் திறப்பார். அப்பொழுது நாம் பாடுபட்ட சரித்திரத்தில் சொல்லப்பட்ட பரம இரகசியங்களை, விசேஷமாக நம்முடைய அன்புள்ள இரட்சகரின் அன்பைக் கண்டு களிகூருவோம். நம்முடைய இரட்சகரை நாம் இந்த ஒருசந்திகாலத்தில் மாத்திரமல்ல, நமது ஆயுசுகாலமெல்லாம் நம்முடைய பலமுள்ள இரட்சகராகக் காண்போம். முக்தி

யமாய் நம்முடைய மரண நேரத்தில் அவரைக் கண்டு, அணைத்து, முத்திசெய்து, அவருக்குள் நித்திரை அடைவோம்.

அந்தக் குருடனுக்குப் பார்வை கிடைத்ததைப் பார்க்கிலும் இரட்சிப்பு கிடைத்தது பெரிய சந்தோஷம். இயேசு அவனை நோக்கி: உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். மெய் விசுவாசத்தோடே கெஞ்சுகிற ஒவ்வொரு பாவிக்கும் இரட்சிப்பு உண்டு. பாடுபட்ட இரட்சகரிடத்தில் கண்ணீரோடும் அழுகையோடும் சேர்ந்து வருகிற ஒவ்வொருவனுடைய பாவத்தையும் அவர் மன்னித்து, அவனுக்கு இரட்சிப்பு அளிப்பார்.

பார்வை அடைந்த குருடன் பராபரனை மகிமைப்படுத்திக்கொண்டே அவரைப் பின்சென்றான். இயேசுவைக் கண்டு அவருடைய இரட்சிப்பை அனுபவித்தவர்கள் அவரை விட்டுப் பிரிந்திருக்கமாட்டார்கள். அவரோடே விசுவாசத்தினால் ஐக்கியமானவர்கள் அவருடைய காலடிகளைத் தொடர்ந்து நடப்பார்கள். அவர் தம்முடைய பாடுகளிலே காண்பித்த நல்மாதிரியை அவர்கள் பின்பற்றி, தாழ்மையையும், மெத்தனவும், பொறுமை, சிநேகத்தையும் மற்றவர்களுக்குக் காண்பிப்பார்கள். விசுவாசிகளுடைய எல்லா வார்த்தையும் நடக்கையும் பராபரனுடைய மகிமைக்கென்றே இருக்கும். சகோதரரே, கர்த்தர் நமக்கு எவ்வளவு இரக்கம் பாராட்டினார். தமது இரத்தத்தைச் சிந்தி உயிரையும் கொடுத்தார். இப்படி நம்மைச் சிநேகித்த அவரை நாம் சிநேகிக்கிறோமா, அவருக்கு நாம் இம்மட்டும் கொடுத்திருப்பது என்ன என்று நம்மைச் சோதித்துப் பார்ப்போமாக. இதுவே நம்மை மெய்த்தவசுக்கு ஏவக்கூடியது.

அன்புள்ள இயேசு இரட்சகரே, உம்முடைய பாடுகள் மரணத்திற்காக உமக்கு ஸ்தோத்திரம். நாங்கள் எங்கள் பாவங்களுக்காக மெய்மனஸ்தாபப்படவும், உம்முடைய ஒப்பில்லாத சிநேகத்தை நம்பி உமக்கு மகிமையாய்ப் பிழைக்கவும் எங்களுக்கு ஒத்தாசை செய்தருளும், சுவாமி. ஆமென்.

---

## ஒருசந்தி காலத்து முதல் வெள்ளிக்கிழமை.

### பாடுபட்ட சரித்திரம் 39—47.

அப்போது இயேசு அவர்களோடு கெத்சேமனே என்னப்பட்ட இடத்துக்கு வந்தார். அங்கே ஒரு தோட்டம் இருந்தது. அதிலே அவரும் அவருடைய சீஷரும் பிரவேசித்தார்கள். ஆனால் அவரைக் காட்டிக்கொடுத்த யூதாவும் அந்த இடத்தை அறிந்திருந்தான். ஏனெனில் அநேகம் விசை இயேசு அங்கே தம்முடைய சீஷருடனே கூடப் போயிருப்பார். அவர் அவ்விடத்துக்கு வந்தபோது அவர்களுடனே: நான் போய் அங்கே



ஜெபம் பண்ணுமளவும் இவ்விடத்தில் உட்கார்ந்திருங்கள். நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்குச் ஜெபம் பண்ணுங்கள் என்றார். பிற்பாடு அவர் பேதுருவையும் யாக்கோபும் யோவானுமாகிய செபெதேயுவின் இரண்டு குமாரரையும் கூட்டிக்கொண்டு, துக்கமடையவும் மிகவும் வியாகுலப்படவும் துவக்கினார். அப்போது அவர்களுடனே: என் ஆத்துமா மரணபரியந்தம் துக்கமாயிருக்கிறது. நீங்கள் இங்கே தரித்து, என்னோடே கூட விழித்திருங்கள் என்று சொன்னார். அவர் இவர்களை விட்டுக் கல்லெறிதூரம் அப்புறப்பட்டு, முழங்கால்படியிட்டு, முகங்குப்புற விழுந்து, கூடுமானால் அந்தவேளை தம்மைவிட்டுப் போக வேண்டிக்கொண்டு: அப்பா பிதாவே, எல்லாம் உமக்குக் கூடும்; உமக்குச் சித்தமானால், இந்தப் பாத்திரத்தை என்னை விட்டு நீங்கப்பண்ணும். எனக்கோ அல்ல, உமக்கே சித்தமாயிருக்கிறபடி ஆவதாக என்றார். அவர் சீஷர்களிடத்தில் வந்து அவர்களை நித்திரைபண்ணக் கண்டு, பேதுருவுடனே: சீமோனே, நித்திரை பண்ணுகிறாயோ, இப்படி நீங்கள் ஒருமணி வேளையாகிலும் என்னோடே கூட விழித்திருக்கக் கூடாதிருந்ததோ, நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு, விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள். ஆவி மனதுள்ளதுதான், மாமிசமோ பெலனற்றிருக்கிறது என்றார். திரும்பவும் இரண்டாம் விசை போய்ச் ஜெபம்பண்ணி: என் பிதாவே, இந்தப் பாத்திரத்தை நான் குடித்தாலொழிய, அது என்னை விட்டு நீங்கக் கூடாதாகில், உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது என்றார். அவர் திரும்பி வந்தபோது அவர்களை மறுபடியும் நித்திரைபண்ணக் கண்டார். ஏனெனில் அவர்களுடைய கண்கள் பாரம் நித்திரையடைந்திருந்தது. தாங்கள் பிரத்தியுத்தாரமாக அவருக்குச் சொல்வதென்ன என்று அவர்கள் அறிந்ததில்லை. அவர்களை விட்டுத் திரும்பவும் போய், மூன்றாம் விசை ஜெபம்பண்ணி, அந்த வார்த்தையைத் தானே சொன்னார். ஆனால் வானத்திலிருந்து ஒரு தூதன் வந்து, அவருக்குக் காணப்பட்டு, அவரைப் பலப்படுத்தினான். அவர் மரண அவஸ்தையாகி, அதிக உக்கிரத்துடனே ஜெபம் பண்ணினார். ஆனால் அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந் துளிகளாய்த் தரையிலே விழுந்தது. அவர் மூன்றாம் விசை வந்து அவர்களுக்குச் சொன்னதாவது: இன்னும் நித்திரை பண்ணி இளைப்பாறுகிறீர்களோ; ஆயிற்று, வேளை வந்தது; இதோ, மனுஷகுமாரன் பாவிகளுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுகிறார். எழுந்திருங்கள், போவோம்; இதோ, என்னைக் காட்டிக் கொடுக்கிறவன் சமீபித்து வந்தான் என்றார்.

பிரியமானவர்களே,

இது நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பாடுகளை விபரமாய்த் தியானிக்கிற காலம். இயேசுநாதர் நமக்காக மரணமடைந்த நாள் வெள்ளிக்கிழமையானதால் வருஷத்தின் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் நாம் அவருடைய பாடுகளை நினைக்காமலிருக்க முடியாது. ஒருசந்தி காலத்து வெள்ளிக்கிழமைகளோ, அவருடைய பாடுகளை நமக்கு அதிகமாய் நினைப்பூட்டி, அவைகளை விசேஷித்த விதமாய்த் தியானிக்க நம்மை ஏவுகிறது. முதல் வெள்ளிக்கிழமையாகிய இன்றைக்கு நாம்

## இயேசுநாதர் கெத்செமனே தோட்டத்தில் சகித்த ஆத்துமப் பாடுகளைக் குறித்துத் தியானிப்போம்.

1. அவருடைய ஆத்துமப் பாட்டின் கொடுமையையும்,
2. அதில் அவர் செய்த உக்கிரமான செபத்தையுங் குறித்துச் சிந்திப்போம்.

### 1.

கிறிஸ்து சகித்த ஆத்துமப் பாட்டின் கொடுமையைக் கவனிப்போமாக.

இயேசுநாதர் எருசலேம் பட்டணத்தில் தம்முடைய சீஷர்களோடு பஸ்காப் போசனத்தைப் புசித்து, பரிசுத்த இராப்போசனத்தை ஏற்படுத்தி, ஸ்தோத்திரம் பாடின பின் அவர்களோடு வெளியே புறப்பட்டார். அவர் நிலா வெளிச்சத்தில் எருசலேம் பட்டணத்து வீதிகள் வழியாய் நடந்து, அதின் வாசலை விட்டு வெளியே வந்து, கீதரோன் பள்ளத்தாக்கில் இறங்கினார். அந்தப் பள்ளத்தாக்கில் ஓடின கீதரோன் ஆற்றை அவர் கடந்து, ஒலிவ மலைச் சார்பிலிருந்த கெத்செமனே தோட்டத்திற்குப் போனார். இந்தத் தோட்டத்திற்கு அவர் போனது இது முதல் தடவையல்ல. அவர் இதற்கு முன் அநேக தடவை தம்முடைய சீஷரோடு அங்கே போய்ச் செபம் பண்ணினதுண்டு. அவருடைய பன்னிரண்டு அப்போஸ்தலரில் ஒருவனாகிய யூதா இஸ்காரியோத்து அவர் பந்தியில் இருக்கும்பொழுதே வெளியே போய் விட்டதினால், பதினொரு பேர் மாத்திரம் அவரோடு வந்தார்கள். அவர்களில் எட்டுப்பேரைத் தோட்டத்தின் வாசலில் விட்டு: நான் போய் அங்கே செபம்பண்ணுமளவும் இவ்விடத்தில் உட்கார்ந்திருங்கள்; நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்குச் செபம் பண்ணுங்கள் என்று சொல்லி, மற்ற மூன்று பேரோடு தோட்டத்துக்குள் போனார். பேதுரு, யாக்கோபு, யோவான் என்ற இந்த மூன்று பேரும் முன்னமே அவருடைய மகிமையைக் கண்டவர்கள். சிறு பெண்ணை எழுந்திரு என்று சொல்லி, யவீருவின் குமாரத்திக்கு உயிர் கொடுத்து எழுப்பினதை இவர்கள் பார்த்தவர்கள். அவர் பரிசுத்த மலையில் மகா மகிமையாய் மறுரூபப்பட்டதைக் கண்ணாரக் கண்ட சாட்சிகள். அவருடைய பெரிய மகிமைக்குச் சாட்சியாயிருந்த இவர்கள் அவருடைய மகா தாழ்மைக்கும் சாட்சிகளாகும்படி கர்த்தர் அவர்களை அழைத்து வந்தார். அங்கே அவருக்குச் சொல்லிமுடியாத துக்கமும் வியாகுலமும் உண்டாயிற்று. அப்பொழுது அவர்: என் ஆத்துமா மரண பரியந்தம் கன துக்கமாயிருக்கிறது; நீங்கள் இங்கே தரித்து என்னோடே கூட விழித்திருங்கள் என்று சொல்லி, அவர்களை விட்டுக் கல்லெறி தூரம் அப்புறப்பட்டு, செபம்பண்ணினார்.



ஒரு தோட்டத்தில் பாவம் துவக்கிற்று. அதைப் போக்குவதற்கு ஒரு தோட்டத்திலே கர்த்தர் பாடுபடச் சித்தமானார். இயேசுநாதர் ஆத்துமப் பாடுபட்ட தோட்டத்துக்கு கெத்செமனே என்று பேர். கெத்செமனே என்பதற்குச் செக்கு என்று அர்த்தம். ஒலிவ எண்ணெய் ஆட்டும் செக்குகள் அந்தத் தோட்டத்தில் இருந்ததால், அதற்கு அந்தப் பெயர். இயேசுநாதர் தேவகோபம் என்கிற செக்கிலே நசுக்குண்டு நமது பாவப் புண்ணை ஆற்றும் எண்ணெயாவதற்கு இது தகுந்த இடந்தான்.

பாவமானது சரீரத்தில் துவக்குமுன் ஆத்துமாவில் துவக்குகிறது. ஆத்துமா பாவம் செய்த பிறகுதான் சரீரம் பாவம் செய்கிறது. ஆகையால், கர்த்தர் முந்த ஆத்துமத்தில் பாடுபடச் சித்தமானார். அவருடைய ஆத்துமப்பாட்டின் கொடுமையைக் காட்டும் பல வார்த்தைகள் நம்முடைய வாக்கியத்தில் உண்டு. அவர் துக்கமடையவும் மிகவும் வியாகுலப்படவும் துவக்கினாரென்றும், அவர் மரண அவஸ்தையானாரென்றும் வேதம் சொல்லுகிறது. என் ஆத்துமா மரணபரியந்தம் கன துக்கமாயிருக்கிறதென்று அவரே தம்முடைய சீஷருக்குச் சொன்னார். இந்த வார்த்தைகள் அவருடைய கொடிய வேதனைகளைக் காண்பிக்கும் குறிப்புகளாம். இங்கே துக்கம் வியாகுலம் என்பது சொல்லி முடியாத கஸ்தியையும் பெரிய ஆபத்திலுள்ளவர்கள் அடையும் திகிலையும் குறிக்கும். வானத்திலும் பூமியிலுமுள்ள சகல சந்தோஷங்களுக்கும் ஊற்றானவர், சகல துக்கங்களையும் ஆற்றுகிறவர், இங்கே மகா பெரிய சஞ்சலத்தில் விழுந்து, மகா பெரிய ஆபத்தை எதிர்பார்த்து, சொல்லி முடியாத கலக்கத்துக்கு உள்ளானார். அவருடைய மனசு அப்பொழுது இருந்த நிலைமை இன்னதென்று அவர் ஒருவருக்குத் தெரியுமே அல்லாமல், வேறே யாருக்கும் தெரியக்கூடியதல்ல. அது ஒருவேளை நரகவேதனை அநுபவிக்கும் ஆத்துமாக்களுக்குத் தெரியலாம்.

அவருக்கு அந்த வேதனை உண்டானது எதினால். நமது பாவமெல்லாம் அவர் மேல் விழுந்தது. ஆதாம் முதற்கொண்டு கடைசிநாள் மட்டும் இவ்வுலகத்தில் பிழைக்கும் எல்லா மனிதருடைய எல்லாப் பாவங்களையும் அவர் தாமே செய்த பாவம்போல் ஒப்புக்கொண்டார். இங்கே வந்திருக்கிற நம்முடைய பாவங்களும் அவர் மேல் விழுந்ததென்பதற்குச் சந்தேகமில்லை. பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறபடி பராபரன் பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார். புண்ணியச் சுரூபியாகிய அவர் பாவச் சுரூபியாய் நின்றார். அவரைப் பார்க்கிற இச்சமயத்தில் பாவமே உருவெடுத்து அங்கே வந்ததுபோல் இருந்தது. மனிதர் செய்த பாவத்தையெல்லாம் இயேசுநாதரே செய்ததுபோல், பராபரன் அவரை நியாயந்தீர்த்தார். பாவத்

தைப் பகைத்து நியாயந்தீர்க்கிற பராபரனுடைய கோபம் அவர் மேல் பற்றி எரிந்தது. நியாயப்பிரமாணம் பாவிகள் மேல் கூறுகிற சகல சாபமும் அவர் மேல் கூறப்பட்டது. பராபரனுடைய சந்நிதானம் அவருக்கு மறைக்கப்பட்டது.

பாவத்தின் அதிபதியாகிய பிசாசு தன் சகல சேனைகளோடும் வந்து அவரைத் தாக்கி, தன்னுடைய நெருப்பான அம்புகளை அவர் மேல் எறிந்தான். அவர் மனுஷ சாதியை இரட்சிக்க வந்தது அவனுக்குச் சம்மதமல்ல. அவர் இரட்சிப்பை நிறைவேற்றுதபடிக்கு ஏற்கனவே அவன் பல முயற்சியும் செய்திருந்தான். வனாந்தரத்தில் ஒரு சிநேகிதனைப்போல அவரிடம் வந்து, அவரைச் சோதித்தான். அவரோ அவனுடைய கபடமான வார்த்தைகளுக்கு இடங்கொடாமல் அவனைத் துரத்தினார். இப்பொழுதோ அவன் அவரிடத்திலே கொடுமையோடு வந்து, அவருடைய வேலையைத் தடுப்பதற்கு அவரை வதைக்கத் துவக்கினான். நரக வேதனை அவரைச் சூழ்ந்துகொண்டது. மரணம் அவரை அச்சணமே விழுங்கிவிடப் பார்த்து, அவரோடே போராடிற்று. இந்தப் போராட்டத்தில் அவர் மரண அவஸ்தையானார். அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந் துளிகளாய்க் கீழே விழுந்தது. அவர் மனதிலிருந்த சொல்லிமுடியாத வேதனை அவருடைய இரத்த வேர்வையினால் வெளியரங்கமாயிற்று. அவர் தீயில் விழுந்த புழுப்போல் அவஸ்தைப்பட்டார்.

நம்முடைய பாவக்கொடுமை எவ்வளவு பெரிதென்று இதனால் பார்க்கிறோம். நாம் பாவத்தை விளையாட்டாகவும், அக்கிரமத்தைச் சந்தோஷமாகவும் நடப்பிக்கிறோமே. அது இரட்சகருக்கு எவ்வளவான வேதனையை உண்டாக்கிற்று என்று பார்த்து, எச்சரிப்படைவோமாக. நம்முடைய ஒவ்வொரு பாவமும் இரட்சகருக்குத் துக்கத்தை உண்டாக்கிற்று என்று அறிந்து, நம்முடைய பாவங்களுக்காகத் துக்கமடைவோமாக. பிசாசு நம்மைப் பாவத்துக்குத் தூண்டிவிட்டுச் சோதிக்கும்பொழுது கிறிஸ்து கெத்சேமனே தோட்டத்தில் பட்ட பாடுகளை நினைத்து, அவன் சோதனையை மேற்கொள்வோமாக. நாம் செய்த நம்முடைய பாவங்கள் எல்லாம் நம்மைப் பாரப்படுத்தும்பொழுது, நாம் நம்பிக்கை இழந்துபோகாமல், கிறிஸ்துவின் ஆத்துமப் பாட்டினால் ஆறுதலடைவோமாக. நம்முடைய ஆத்தும வேதனையில் முக்கியமாய் அவருடைய உக்கிர செபம் நமக்கு ஆறுதலும் முன்மாதிரியுமாயிருப்பதாக.

௨.

நம்முடைய இரட்சகர் செய்த உக்கிரமான செபத்தைக் குறித்து இப்பொழுது தியானிப்போம்.



இயேசுநாதர் தாம் செய்த போராட்டத்தில் தனித்தவராய் நின்றார். ஏனெனில், பிதா அவரைக் கைவிட்டார். சீஷரிடத்தில் அவர் ஆறுதல் பெற்றுக்கொள்ளவில்லை. காவலிலும் சாவிலும் உம்மோடு கூட இருப்பேன் என்று சொன்ன பேதுரு அப்போஸ்தலன் கர்த்தருடைய வியாகுலத்தில் செபம் பண்ணுவதினால் அவருக்கு யாதொரு உதவியும் செய்யாமல் தூங்கினார். நீர் குடிக்கிற பாத்திரத்தைக் குடிக்கவும், நீர் பெறுகிற ஸ்நானத்தைப் பெறவும் மனதாயிருக்கிறோம் என்று சொன்ன யாக்கோபும் யோவானும் அவருக்கு எந்தவித ஒத்தாசையும் செய்யவில்லை. அவர்களும் தூங்கிவிட்டார்கள். அவர்களுடைய ஆவி மனதுள்ளதாயிருந்தும், மாம்சம் பெலனற்றிருந்தது. இரட்சகருடைய எச்சரிப்பையும் கற்பனையையும் அவர்கள் மறந்துபோனார்கள். ஆகையால் இயேசு ஒருவராய்ப் பாடுத்தரித்தார். நாம் ஒருவராய் ஆலையை மிதித்தோம்; சனசதளங்களில் ஒருவரும் நம்மோடு இருந்ததில்லை; நாம் பார்த்தோம், ஆனால் ஒத்தாசை செய்கிறவனில்லை, தாங்குகிறவனில்லை என்று ஆச்சரியப்பட்டோம் என்கிற தீர்க்கதரிசன வாக்கியம் (எசா. 63, 3. 5) அப்பொழுது நிறைவேறிற்று.

அவர் தாம் ஒருவராய்ப் பாடுபட்டதுபோல் ஒருவராகவும் செபம் செய்தார். அவர் செய்த செபத்தில் அவர் நம்முடைய பிணையாளியாக விளங்குகிறார். நாம் செய்யவேண்டியதை அவர் செய்தார். நாம் படவேண்டியதை அவர் பட்டார். நாம் குடிக்கவேண்டிய பாத்திரத்தை அவர் குடித்தார். தேவகோபம் அடங்கின பாத்திரத்தை வாங்கி, அதைக் குடிக்கும் முன்னும் குடிக்கும்பொழுதும் செபம்பண்ணினார். அவர் முழங்காற்படியிட்டார், முகங்குப்புற விழுந்தார். அவருடைய பரிசுத்தமான முழங்கால்களும், மகிமை பொருந்திய முகமும் தரையில் விழுந்தது, நாம் பரம மகிமையை இழந்த பாவிகளென்பதை நமக்குக் காண்பிக்கிறது. நாம் செபஞ்செய்ய அபாத்திரர். நம்முடைய செபம் மோட்ச லோகத்தில் பிரவேசிக்காதபடிக்கு அதன் வாசலை நம்முடைய பாவம் அடைத்துப்போட்டது. அந்த வாசலைத் திறக்கும்படி இயேசுநாதர் ஒரு புழுப்போல் நெளிந்து, ஒரு அடிமையைப்போல் பணிந்து, செபம்பண்ணினார். ஆகையால் நாம் அவரை நம்முடைய பிணையாளியாக விசுவாசத்தோடு நோக்கிப் பார்க்கக்கடவோம்.

இப்பொழுது இயேசுநாதர் செய்த செபம் முதலாம் செபமல்ல; இதற்கு முன் அவர் அநேகம் விசை செபம் பண்ணியிருக்கிறார். இது அவர் இந்த உலகத்தில் செய்த கடைசி செபமுமல்ல; பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்பது அவர் செய்த கடைசி செபம். இது உயர்ந்த

செபமல்ல; யோவான் சுவிசேஷம் பதினேழாம் அதிகாரத்தில் அடங்கிய பிரதான ஆசாரிய செபமே உயர்ந்த செபம். அதிலே அவர் தமக்கும் தம்முடைய விசுவாசிகளுக்கும் வரப்போகிற பெரிய மகிமையைக் குறித்துப் பேசியிருக்கிறார். அவர் கெத்செமனே தோட்டத்தில் செய்த செபம் மகா தாழ்வான செபம். அதிலே பெரிய கடன்காரன் கடன் கொடுத்தவனுக்கு முன் கெஞ்சுவது போலவும், கொலைத்தீர்ப்புப் பெற்ற கைதி இராசாவுக்கு முன் கெஞ்சி மன்றாடுவது போலவும், அவர் தாழ்ந்து மன்றாடுகிறார். உரத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் வேண்டுதல்களையும் விண்ணப்பங்களையும் செலுத்தினார் என்று பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறார் (எபி. 5, 7).

அவர் மூன்று விசை செபம் பண்ணினார். முதலாம் விசை: அப்பா பிதாவே, எல்லாம் உமக்குக் கூடும்; உமக்குச் சித்தமானால், இந்தப் பாத்திரத்தை என்னை விட்டு நீங்கப்பண்ணும். எனக்கோ அல்ல, உமக்கே சித்தமாயிருக்கிறபடி ஆவதாக என்றார். அவர் பிதாவுக்குச் சமதையான தேவ குமாரனாயிருந்தும், தம்முடைய தெய்வ மகிமையை எல்லாம் அவர் வெறுத்திருந்ததினால், தம்முடைய சித்தத்தைப் பிதாவின் சித்தத்துக்குக் கீழ்ப்படுத்தி வேண்டிக்கொண்டார். தாம் சகிக்கவேண்டிய பாடுகள் மகா கொடுமையாயிருப்பதனாலே அவைகளை விலக்கி, வேறு வழியாய் மனுஷசாதிக்கு இரட்சிப்பை உண்டுபண்ணப் பிதாவுக்குக் கூடுமானால், அப்படிச் செய்ய அவரை வேண்டிக்கொண்டார். கூடாதென்றால், அதைத் தாமே பட்டு உத்தரிக்கச் சம்மதித்தார். எப்படியாவது பாவிகளுக்கு இரட்சிப்புக் கிடைக்க வேண்டுமென்பது அவர் ஆவலாயிருந்தது. இதனால் நம்முடைய பாவத்துக்காக நம்முடைய பிணையாளி படவேண்டிய பாடு எவ்வளவு கொடுமையானதென்று நாம் பார்ப்பதோடு நம்முடைய பிணையாளி எவ்வளவு அன்புள்ளவரென்றும் நாம் பார்க்கலாம். உமக்குச் சித்தமானால் என்று அவர் தம்முடைய செபத்தில் சொன்னது வெறும் வார்த்தையாயிருக்கவில்லை இது இரண்டாம் மூன்றாம் விசை அவர் செய்த செபத்தினால் நமக்குத் தெரியவரும். அதில் அவர்: என் பிதாவே, இந்தப் பாத்திரத்தை நான் குடித்தாலொழிய, அது என்னை விட்டு நீங்கக் கூடாததாகில், உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது என்றார். அவருடைய முதலாம் செபத்துக்கு உத்தரவாகப் பிதாவானவர்: மகனே, நீர் இந்தப் பாத்திரத்தைக் குடித்தாலொழிய, அது உம்மை விட்டு நீங்கக்கூடாது என்று சொன்னதாக இந்த இரண்டாம் செபத்தினால் நமக்குத் தெரியவருகிறது. பிதாவின் இந்த உத்தரவுக்குக் குமாரன் தம்மை முழுவதும் கீழ்ப்படுத்துகிறார். பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய சித்தம் செய்யப்படு



வதாக என்று செபம்பண்ண நமக்குக் கற்றுக்கொடுத்த இரட்சகர்: பிதாவே, உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவதென்று சொல்லுகிறார். இதற்கு அர்த்தமென்ன. தகப்பனே, பாவிகளை இரட்சிக்கிறதற்கு என்னுடைய பாடுகளும் மரணமுமே அல்லாமல் வேறே வழியில்லையென்று நீர் சொல்லுகிறபடியால், உம்முடைய நேசகுமாரனாகிய நான் அதற்கு எதிர் பேசமாட்டேன்; நீர் சொல்லுகிறபடியே நான் பாடுபடுவேன், மரணமடைவேன் என்பது தானே. இதேபிரகாரம் அவர் மறுபடியும் செபம்பண்ணினார். இப்படியே நம்முடைய பிணையாளியானவர் நமக்காக உற்சாகமாய்ப் பாடுபடச் சித்தமானார். தாம் உற்சாகமாக ஒப்புக்கொண்ட பாடுகளைப் பட்டார் என்பதற்குக் கெத்செமனே தோட்டத்தில் வேர்த்த அவருடைய இரத்த வேர்வையின் துளிகள் முதலாம் சாட்சி. பிதா தம்மை நோக்கி உக்கிரமாய்ச் செபம்பண்ணின குமாரனை விட்டுப் பாத்திரத்தை எடுத்துக்கொள்ளாதிருந்தும், அவரைச் சகல பாடுகளுக்கும் உள்ளாக்கியும், அவரைப் பலப்படுத்தித் தேற்றுவதற்கு ஒரு தூதனை அனுப்பினார். அந்தத் தூதனோ அவர் தேவகோபத்தைச் சுமந்து தீர்க்கும்படி அவருக்குத் தேற்றரவு சொன்னானே அல்லாமல், அவன் நம்முடைய பிணையாளியானதில்லை. நம்முடைய பிணையாளி இயேசுநாதர் ஒருவரே. இந்த நம்முடைய பிணையாளிக்கு முன் நாமெல்லாரும் விழுந்து, அவரை முழு மனதோடும் விசுவாசித்து, அவரைத் துதித்துத் தோத்திரிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். அவரை யார் விசுவாசிக்கிறானோ, அவனுடைய இருதயத்தில் அவர் தங்கி அவனையும் உக்கிர செபத்துக்கு ஏவுவார்.

கெத்செமனே தோட்டத்துக்குப் போய் ஆத்தும வேதனைப்பட்ட அருமை இரட்சகரைப் பார்த்த நாம், அவரை நம்முடைய ஒன்றான இரட்சகரென்று விசுவாசிக்கிற நாம், அவருடைய நல்மாதிரிப்படி செய்யாதிருக்கக் கூடுமா. முக்கியமாய், நம்முடைய இரட்சகர் செபம் செய்வதில் நமக்குச் சிறந்த மாதிரி. நமக்கு வரும் எல்லா இக்கட்டிலும் நாம் உக்கிரமாய் செபம்பண்ண வேண்டியது. நாம் எட்டுப்பேரோடும் செபிக்கலாம், மூன்று பேரோடும் செபிக்கலாம், தனித்திருந்தும் செபிக்கலாம். தனிச் செபம் மிகவும் நல்லது. அதிலே நம்முடைய மனக்குறைகளை எல்லாம் நம்முடைய பரமபிதாவுக்குத் தாராளமாய்த் தெரிவிக்கலாம். இயேசுநாதர் ஒருவிசை மாத்திரம் அல்ல, மூன்றுவிசை செபம்பண்ணினார். நாமும் செபத்தில் உறுதியாய்த் தரித்திருப்போமாக. பரம தகப்பன் தம்முடைய பிள்ளைகளுக்கு நலமானதையெல்லாம் கொடுப்பார் என்கிற நம்பிக்கையோடு செபம் செய்யவேண்டும். அவர் நம்முடைய மனம் போலல்ல, தம்முடைய மனம்போல் எல்லாவற்றையும் நமக்குக் கொ

டுத்தருளவேண்டுமென்று விரும்பி, நம்மை அவருடைய சித்தத்துக்கு முற்றிலும் தாழ்மையோடு கீழ்ப்படுத்தவேண்டும். இப்படிக்கொத்த செபம் வீண்போகாது. இந்த செபத்தினால் ஒருவேளை நம்முடைய பாடுகள் நீங்காவிட்டாலும், அவைகளை சகித்துக்கொள்வதற்கு வேண்டிய பலம் நமக்கு வரும். இயேசுநாதர் செபஞ்செய்த பின் தைரியமும் உற்சாகமுமாய் எழுந்து, தம்முடைய பாடுகளுக்கு எதிர்கொண்டு போனார். சீஷரோ கர்த்தர் சொல்லியிருந்தபடி விழித்திருந்து செபம்பண்ணாமையால், அவரை விட்டு ஓடிப்போகவும், அவர்களில் பேதுரு அப்போஸ்தலன் அவரை மறுதலிக்கவும் ஏதுவாயிற்று.

எங்கள் அருமை இரட்சகரே, உம்முடைய ஆத்துமப் பாடுகளுக்காக உம்மை ஸ்தோத்திரிக்கிறோம். அந்தப் பாடுகளின் நிமித்தம் தேவரீர் எங்கள் பாவங்களை மன்னித்தருளும். நாங்கள் உயிரோடிருக்கும்பொழுதும், விசேஷமாய் எங்கள் மரண அவஸ்தையிலும், நீர் உம்முடைய பாடுகளால் எங்களை ஆற்றித் தேற்றிப் பலப்படுத்தியருளும், சுவாமி. ஆமேன்.

---

## ஒருசந்தி காலத்து முதலாம் ஞாயிறு.

மத். 4, 1—11.

பிரியமானவர்களே,

பிசாசின் கிரியைகளைக் குலைக்கவே பராபரனுடைய குமாரன் வெளிப்பட்டார். ஏனெனில், பிசாசு மனுஷ சாதியின் சத்துராதி. அது நம்முடைய ஆதித்தாய் தகப்பன்மாரைப் பாவத்தில் விழப்பண்ணிற்று. ஆதாம் பாவத்திலே விழுந்ததால், முழு மனுஷசாதியும் பாவத்துக்கு உட்படவேண்டியதாயிற்று. ஆகையால், ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினால் மரணமும் உலகத்துக்குள் பட்டு, இந்தப் பிரகாரமாக மரணம் எல்லா மனுஷர் மேலும், எல்லாரும் பாவஞ்செய்தபடியினாலே, வந்தது என்று எழுதியிருக்கிறது (ரோ. 5, 12). இப்படி மனுஷ சாதியைக் கெடுத்த சத்துருவை மேற்கொண்டு, நமக்கு இரட்சிப்புண்டாக்க இயேசுநாதர் வந்தார். இவரால் மனுஷசாதி இரட்சிப்பு அடையுமென்று கண்டு, பிசாசு இவருக்கு இலேசாய் இடங்கொடுக்கவில்லை. அது அவரோடே எதிர்த்து நின்று, அவர் கொண்ட கருத்தை நிறைவேற்றாதபடி பல விதத்திலும் தடுக்கப் பார்த்தது. நம்முடைய சுவிசேஷ வாக்கியத்திலே பிசாசு நம்முடைய இரட்சகரிடத்திலே வந்து, அவரைச் சோதித்த சரித்திரம் எழுதியிருக்கிறது. அவருக்கு வந்த இந்தச் சோதனை மகா



பெரியதுதான். இரட்சகரோ சோதனைக்காரனை மேற்கொண்டு அவனுடைய கெட்ட நோக்கம் வாய்க்காமல் போகப்பண்ணினார். ஆதித்தகப்பனாகிய முதலாம் ஆதாம் பாவச் சோதனையில் விழுந்தான். நமது அருமை இரட்சகராகிய இரண்டாம் ஆதாமோ பாவச் சோதனையை மேற்கொண்டார். முதல் ஆதாமால் நமக்குப் பாவம் வந்தது. இரண்டாம் ஆதாமால் நமக்கு ஜெயம் வந்தது. ஆகையால், நம்முடைய இரட்சகருக்கு வந்த சோதனையும் அவர் அடைந்த ஜெயமும் நமக்கு மகா முக்கியம். மேலும், இயேசுநாதரைச் சோதித்த சாத்தான் விசுவாசிகளையும் சோதிக்க ஓயாதிருக்கிறான். விசுவாசிகளோ இயேசுநாதரைப்போல் அவருடைய பலத்தைக் கொண்டு சோதனையில் ஜெயமடைகிறார்கள். இப்பொழுது நாம்

இயேசுநாதர் பிசாசினால் சோதிக்கப்பட்ட சரித்திரத்தைக் கொண்டு என்ன கற்றுக்கொள்ளலாம்.

1. அவர் பிசாசின் சோதனையை எப்படி மேற்கொண்டார்.
2. விசுவாசிகள் பிசாசின் சோதனையை எப்படி மேற்கொள்ளுகிறார்கள்.

### I.

இயேசுநாதர் பிசாசின் சோதனையை எப்படி மேற்கொண்டாரென்று கற்றுக்கொள்ளலாம்.

இயேசுநாதர் யோர்தானில் யோவானால் ஞானஸ்நானம் பெற்றார். அப்பொழுது: இவர் நாம் பிரியமாயிருக்கிற நம்முடைய நேச குமாரனென்று பிதா சாட்சி கொடுத்தார். இந்தச் சாட்சியைப் பெற்றவர் பிசாசினால் சோதிக்கப்பட்டு, அதை மேற்கொள்ளவேண்டுமென்பது பராபரனுடைய சித்தம். ஆகையால், அவர் ஆவியினாலே வனாந்தரத்துக்குக் கொண்டுபோகப்பட்டார். நம்முடைய ஆதித்தாய் தகப்பன்மார் ஏதேனென்ற செல்வம் பொழியும் சிங்கார வனத்திலே இருக்கையில், பிசாசு அவர்களைச் சோதித்து ஜெயித்தது. இந்த இரண்டாம் ஆதாமோ பயங்கரமான வனாந்தரத்திலே துஷ்ட மிருகங்கள் நடுவே இருக்கையில், அவருக்குச் சோதனை வந்தது. அங்கே அவருக்குச் சாப்பிடப் போசனம் இல்லை. அவர் இரவும் பகலும் நாற்பது நாளாய் அன்னபானமில்லாமல் உபவாசமாயிருந்தார். அவர் சகல பாக்கியமும் சகல செல்வமும் உடையவராயிருந்தும், நமது நிமித்தமாகவே அவர் பட்டினி கிடந்தார். புசியாயாக என்று பராபரன் கற்பித்திருந்தும், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை ஆதாமும் ஏவாளும் புசித்தார்கள். நம்முடைய இரட்சகர் வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவராயிருந்தும்; பூமியின் விளைச்சலும் மிருகங்களும் அவருக்குச் சொந்தமா

யிருந்தும்; அவர் யாதொன்றும் புசிக்காமல் உபவாசமாயிருந்தது நம்மைச் சிநேகித்த சிநேகத்தினால் அல்லவா.

அவர் தேவாதி தேவனாயிருந்தும், நமக்காகத் தம்மைத் தாமே வெறுத்து, நம்முடைய பலவீனங்களை எடுத்துக்கொண்டபடியினாலே நாற்பது நாள் உபவாசத்திற்குப் பின் அவருக்குப் பசித்தது. அப்போது சோதனைக்காரன் அவரண்டைக்கு வந்து: நீ பராபரனுடைய குமாரனானால், இந்தக் கல்லுகளை அப்பமாகச் சொல்லென்றது. இது அவருக்குண்டான முதலாம் சோதனை. இதிலே பிசாசு அவருடைய ஞானஸ்நானத்தையும் அதிலே அவருக்குக் கிடைத்த பிதாவின் சாட்சியையும் அவருக்கு நினைப்பூட்டிற்று. உன்னைப் பராபரன் தம்முடைய நேசகுமாரனென்று சொன்னாரே, அது நிசமா, நீ பராபரனுடைய மகனா, அப்படி எனக்குத் தோன்றவில்லை, பராபரன் உனக்குப் பிதாவாயிருந்தால், அவர் உன்னைப் பசித்திருக்கவொட்டார். நீ பராபரனுடைய குமாரனாயிருந்தால், நீ பசித்திருக்க நியாயமில்லை. நீ தெய்வ வல்லமையால் ஒரு கல்லை அப்பமாக மாற்றலாம். அந்த அப்பத்தைத் தின்று பசியாறலாமே. நீ அப்படிப் பசி ஆற்றிக்கொண்டால்தான் நீ பராபரனுடைய பிள்ளை என்கிறது நிசமாகும் என்பதாகப் பிசாசு அவருக்குச் சொன்னது. இப்படியே, பராபரனுடைய பராமரிப்பைக் குறித்து அவருக்குச் சந்தேகமுண்டாக்கவும், பராபரனுடைய சித்தத்திற்கு விரோதமாகச் செய்யும்படி ஏவவும் பிசாசு முயற்சிபண்ணிற்று. அவரோ அதற்குச் சம்மதியாமல்: மனுஷன் அப்பத்தினாலே மாத்திரம் அல்ல, பராபரனுடைய வாயிலிருந்து புறப்படுகிற சகல வார்த்தையினாலேயும் பிழைப்பானென்று எழுதியிருக்கிறதென்றார். தாழ்மையின் வழியாய் மகிமையில் பிரவேசிக்க வேண்டுமென்பதும், பாடுகளின் வழியாய் மனுஷரை இரட்சிக்கவேண்டுமென்பதும் பிதாவின் சித்தம். இந்தச் சித்தத்திற்கு விரோதமாய் அற்புதம் செய்ய இயேசுநாதர் உடன்படவில்லை. அவர் தம்முடைய அற்புத வல்லமையைத் தமக்காக அல்ல, ஏழை மனிதருக்காகவே கையாடினார். அன்றியும், தாம் பசித்திருக்கச் சம்மதித்த பிதா அப்பத்தினாலே மாத்திரமல்ல, தம்முடைய திருவசனத்தினாலேயும் பசியாற்ற வல்லவர் என்று நம்பி, 5 மோசே 8, 3 ல் உள்ள வேத வாக்கியத்தை எடுத்துச் சொன்னார். அதாவது, மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, பராபரனுடைய வாயிலிருந்து புறப்படுகிற சகல வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதென்று சொன்னார். மோசே சீனாய் மலையில் பராபரனுடைய சந்நிதானத்திலே நாற்பது நாள் தங்கியிருந்தபொழுது புசிக்கவுமில்லை, குடிக்கவுமில்லை. என்றாலும், அவருக்குப் பசிக்கவுமில்லை, அவர் பலவீனமாய்ப் போகவும்



இல்லை. இதற்குக் காரணம் என்ன. பராபரன் தம்முடைய வல்லமையுள்ள வாக்கினாலே அவரைத் தாங்கி ஆதரித்ததுதான். எலியா தீர்க்கதரிசி நாற்பது நாள் போசனபானமில்லாமல் வழி நடந்ததாக நாம் வாசிக்கிறோம். இப்படியே இயேசுநாதர் பராபரனுடைய வசனத்தைக்கொண்டு பிசாசை மேற்கொண்டார்.

அப்போது பிசாசு அவரைப் பரிசுத்த பட்டணத்துக்குக் கொண்டுபோய், அவரைத் தெய்வாலயத்து உப்பரிகையின்மேல் நிறுத்தி: நீ பராபரனுடைய குமாரனானால், தாழக்குதி; ஏனெனில் தம்முடைய தூதர்களுக்கு உனக்காகக் கற்பிப்பார்; உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உன்னைக் கைகளிலே ஏந்திக்கொண்டு போவார்களென்று எழுதியிருக்கிறதென்று அவருக்குச் சொல்லிற்று. இது அவருக்கு உண்டான இரண்டாம் சோதனை. பரிசுத்த பட்டணம் என்பது எருசலேம். அங்கே கர்த்தருடைய தெய்வாலயம் இருந்தது. அதன் மேல்மெத்தையிலிருந்து தாழக் குதிக்கிறது மகா மோசமான காரியம். தாழக் குதிக்கிறவன் செத்தேபோவான். பிசாசோ இயேசுநாதரைப் பார்த்து: நீ பராபரனுடைய குமாரனென்று சாட்சி பெற்றாயே, அது நிசமாயிருந்தால் இந்த மெத்தையிலிருந்து கீழே குதித்துவிடு. பராபரன் தம்முடைய பிள்ளைகளுக்குச் சேதம் வராமல் காப்பாற்றுகிறவரல்லவா. அப்படித் தம்முடைய தேவதூதர்களைக்கொண்டு காப்பாற்றுவதாக 91-ம் சங்கீதத்தில் சொல்லியிருக்கிறாரே. பராபரன் உன் தகப்பனானால் அவர் உன்னைக் காப்பாற்றுவார். நீ அவர் மகனானால் அவர் வார்த்தையை நம்பிக் குதிக்கவேண்டும். நீ குதித்துச் சேதமடையாமலிருக்கிறதை இந்தக் கோயிலுக்கு வந்த ஜனங்களெல்லாரும் பார்த்து, ஆச்சரியம் அடைந்து, உன்னை மகிமைப்படுத்துவார்களே என்பதாகப் பிசாசு சொல்லிற்று. இது அவரை அகந்தைக்கும் பெருமைக்கும் ஏவுகிற சோதனையாயிருந்தது. இயேசுவோ இந்தச் சோதனைக்கும் இடங்கொடுக்கவில்லை. அவர் பிசாசை மறுபடியும் ஒரு வேதவசனத்தினாலே மேற்கொண்டார். இயேசு அதனுடனே: உன் பராபரனாகிய கர்த்தரைப் பரீட்சைபாராயாக என்று பின்னையும் எழுதியிருக்கிறதென்றார் (5 மோ. 6, 16). தெய்வாலயத்தின் உப்பரிகையிலிருந்து கீழே இறங்குகிறதற்குப் படிக்கட்டுகள் இருக்கையில், அவைகளின் வழியாய் இறங்காமல் தாழக் குதிக்கிறது கர்த்தரைப் பரீட்சைபார்க்கிறதாயிருக்கும். இப்படிப் பரீட்சைபார்க்கிறவர்களைப் பாதுகாப்பேனென்று கர்த்தர் 91-ம் சங்கீதத்தில் வாக்குக்கொடுக்கவில்லை. அந்தச் சங்கீதத்திலே பராபரன் தம்மை நம்பித் தாம் காண்பிக்கும் வழியில் நடக்கிறவர்களை மாத்திரம் பாதுகாப்பேனென்று வாக்குக்கொடுத்திருக்கிறார். இப்படியே, இந்தச் சோதனையிலும் பிசாசு தோற்றுப்போயிற்று.

இதனால் அதிக கோபமான சாத்தான் அவரை மூன்றாம் தடவையும் சோதித்தது. மறுபடியும் பிசாசு அவரை மகா உயர்ந்த பருவதத்தின்மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல இராச்சியங்களையும் அதுகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து: நீ தாழ விழுந்து என்னைப் பணிந்தால், இதுகளெல்லாம் உனக்குத் தருவேன் என்று அவருக்குச் சொல்லிற்று. இந்த மூன்றாம் சோதனை உலக மகிமையை இச்சிக்கிறதற்கான சோதனையாம். இந்தச் சோதனையிலே தான் பிசாசினுடைய உட்கருத்து சரியாய் விளங்கிற்று. மனிதரெல்லாரும் பராபரனை மறுதலித்துத் தன்னைப் பணிந்துகொள்ளவேணுமென்பதே அதினுடைய நோக்கம். அப்படிச் செய்கிறவர்களுக்கு உலகத்தின் சகல இராச்சியங்களையும் அவைகளின் மகிமைகளையும் கொடுப்பதாக அது கொடுத்த வாக்கு பொய்யே. உலக இராச்சியங்கள் எல்லாம் பராபரனுக்குச் சொந்தம். அவைகளை ஒருவனுக்குக் கொடுக்கப் பிசாசுக்கு அதிகாரமில்லை. அப்படி அது கொடுத்தாலும் அது தமக்குத் தேவையில்லை என்று இயேசுநாதர் உலக மகிமையைத் தள்ளி, பராபரனுடைய வசனத்தினால் பிசாசை மறுபடியும் மேற்கொண்டார். அப்போது இயேசு அதனுடனே: போ, சாத்தானே, அதேனென்றால் பராபரனாகிய கர்த்தரைப் பணிந்து அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதென்றார். இதனால் இயேசுநாதர் தம்மைப் பரமபிதாவுக்குக் கீழ்ப்படுத்தி, அவருடைய கற்பனையின் வழியிலே நடந்து, தம்முடைய இராச்சியத்தை ஸ்தாபிக்கத் தமக்குச் சித்தமுண்டு என்று காண்பித்து, இந்தச் சித்தத்தை விரோதிக்கச் சோதனைக்காரனைத் துரத்தினார். இப்படியே மூன்று சோதனையிலும் அவர் பிசாசை மேற்கொண்டார். பிசாசோ தோல்வியடைந்து ஓடிப்போயிற்று. இதோ, தேவதூதர்கள் சேர்ந்து வந்து அவருக்கு ஊழியஞ்செய்தார்கள்.

2.

விசுவாசிகள் பிசாசின் சோதனைகளை எப்படி மேற்கொள்ளுகிறார்களென்று இப்பொழுது பார்ப்போம்.

விசுவாசிகளுக்குச் சோதனை உண்டு. இயேசுநாதர் சோதிக்கப்படுவதற்காகவே ஆவியினால் வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டார். ஆகிலும், சோதிப்பதில் பராபரனுக்குள்ள நோக்கம் வேறே, பிசாசுக்குள்ள நோக்கம் வேறே. பராபரன் விசுவாசிகளை நன்மைக்கென்று சோதிக்கிறார். அவர்கள் விசுவாசத்தில் பலப்படவேண்டுமென்பதும், தெய்வபக்தியில் வளரவேண்டுமென்பதும் அவர் விசுவாசிகளைச் சோதிக்கிற நோக்கம். அவர் ஆபிரகாமைச் சோதித்து, அவருடைய ஒரே மகனைப் பலி



யாய்ச் செலுத்தி விடச் சொன்னார். இது அவருடைய விசுவாசத்தைப் பலப்படுத்த உதவிற்று. இப்படிப்பட்ட சோதனை நமக்கு நல்லது. பிசாசோ பொல்லாப்புக்கென்று சோதிக்கிறது. விசுவாசிகளைப் பாவத்துக்கென்று தூண்டிவிட்டு, அவர்களைப் பராபரனை விட்டுப் பிரித்து, நரகத்துக்குக் கொண்டுபோகவேண்டுமென்பது அதின் ஆசை. பராபரனுடைய குமாரனாகிய இயேசுநாதரையே சோதிக்கத் துணிந்த பிசாசு நம்மை விட்டுவிடுமா.

பிசாசு எல்லா இடத்திலும் எல்லா நிலைமையிலும் பராபரனுடைய பிள்ளைகளைச் சோதிக்கிறது. வீட்டில் குடித்தனம் பார்க்கும் சமுசாரிகளையும், வெளியில் வேலை செய்யும் வேலைக்காரரையும், கோயிலில் வேலை செய்யும் குருமாரையும் அது சோதிக்கிறதுபோல், வனாந்தரத்தில் தனித்திருக்கும் தவசிகளையும் சோதிக்கிறது. வீட்டை விட்டு வாசலை விட்டு சந்நியாசிகளாய்ப் போய்விட்டால், சோதனை இல்லையென்று நினைக்கிறது பிசகு. பிசாசு இயேசுநாதரைப் பெத்லெகேம் முன்னணையிலும் அல்ல, நாசரேத்தூர் குடிசையிலும் அல்ல, வனாந்தரத்திலே சோதித்தது என்று வாசிக்கிறோம். ஆனபடியால், மனத்தெளிவாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிரியாகிய பிசாசு கெர்ச்சிக்கிற சிங்கம்போலே, எவனை விழுங்கலாமென்று வகை தேடி, சுற்றித் திரிகிறது என்று பேதுரு அப்போஸ்தலன் சொல்லுகிறார் (1 யோவா. 5, 8).

பிசாசு தந்திரமுள்ளதாகையால், நேரம் பார்த்து அவனவனைச் சோதிக்கிறது. பசி, தாகம், தரித்திரம், வியாதி இவைகளால் துன்பப்படுகிறவர்களைச் சந்தேகத்துக்கும் அவிசுவாசத்துக்கும் தூண்டிவிடுகிறது. ஆபத்துக்குப் பாவமில்லை என்று சொல்லி, வைக்காத இடத்தில் எடுக்கவும், விதைக்காத இடத்தில் அறுக்கவும், இப்படியே பராபரனுடைய கற்பனையை மீறவும், நம்மை ஏவுகிறது. பண்ணைவேலை செய்கிற எத்தனை கிறிஸ்தவர்கள் பராபரன் தங்களைப் பராமரிப்பாரென்று நம்பாமல், தங்கள் எஜமான்களை மோசம்பண்ணித் திருடித் தங்கள் வயிற்றை நிரப்பப் பார்க்கிறார்கள். இது பிசாசினுடைய பெரிய சோதனை. இது விசேஷமாய் ஏழைகளுக்கு வருகிற சோதனை. ஒருவேளை திருடாமலும் விபசாரம் செய்யாமலும் பொய் சொல்லாமலும் புறம்பான யோக்கியமாய் நடக்கிற கிறிஸ்தவர்களைப் பிசாசு பெருமைக்கென்று சோதிக்கிறது. மற்றவர்களுக்கு மேலாகத் தங்களை உயர்த்தவும், தங்கள் தெய்வபக்திக்காகப் பெருமை பாராட்டவும், பிறத்தியாரை இகழ்ச்சியாய் எண்ணவும், சிலரை ஏவுகிறது. பெருமையினாலும் தங்கள் சுயநீதியை நம்புகிற நம்பிக்கையினாலும் அகங்காரமடைந்து, போகக்கூடாத இடத்

ளுக்குப் போகவும், சேரக்கூடாதவர்களோடு சேரவும், பிசாசு அநேகரைத் தூண்டுகிறது. அடைப்பைப் பிடுங்கினவனை அரவங்கடிக்கும். பாம்புப் புற்றிலே கையை விட்டால் பாம்பு கடிக்கும். அதுபோல துஷ்டரோடு கூடினால், நம்முடைய மனசு கெட்டுப்போகவும் பாவஞ்செய்யவும் இடமுண்டாகும். வேறுமென்று ஆகாதவர்களுடைய ஆலோசனையில் நடக்கிறவர்களும், பாவிகளுடைய வழியில் நிற்கிறவர்களும், பரியாசக்காரர் உட்கார்ந்திருக்கிற இடத்தில் உட்காருகிறவர்களும் பராபரனைப் பரீட்சை பார்க்கிறவர்களாயிருக்கிறார்கள். மேலும், பிசாசு உலகவாழ்வையும் மகிமையையும் பெருக்கிக் காண்பித்து, பராபரனை மறுதலிக்கவும் தன்னைச் சேவிக்கவும் ஏவுகிறது. யூதா இஸ்காரியோத்துக்குப் பணத்தைக் காட்டி, அவனை இயேசுவை விட்டுப் பிரித்தது. கிறிஸ்தவர்களுக்கு இல்லாத மகிமையும் மரியாதையும் அஞ்ஞானிகளுக்கு இருக்கிறதாக பிசாசு காண்பித்து, அநேகக் கிறிஸ்தவர்களை மறுதலிப்பதற்கு ஏவுகிறது.

விசுவாசிகளைச் சோதிக்கிற பொல்லாத சாத்தான் அவர்கள் விசுவாசிகளென்று அறிந்திருக்கிறபடியினாலே, அவர்களை வேதவாக்கியங்களால் ஏமாற்றப் பார்க்கிறது. வேத வாக்கியத்தின் ஒருபங்கை மறைத்துப்போடுகிறதினாலும், ஒரு வேத வாக்கியத்தை முன் பின் சம்பந்தம் விட்டு எடுத்துக் காட்டுகிறதினாலும் நம்மை ஏமாற்றப் பிரயாசப்படுகிறது. முக்கியமாய் அது நம்மைச் சுத்த போதகத்தை விட்டுத் தப்பறைப் போதகத்துக்குக் கொண்டுபோகும்படி வேத வாக்கியங்களால் நம்மை மோசம்பண்ணப் பார்க்கிறது. ஆகையால் நாம் அதிக விழிப்பாயிருந்து இயேசுவை அண்டிக்கொள்ள வேண்டியது.

நமக்கு எவ்வளவு சோதனை வந்தாலும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நம்மோடு இருக்குமட்டும் நமக்குப் பயமில்லை. அவர் ஜெயமடைந்தார். ஞானஸ்நானத்திலே நாம் அவரோடு பொருதவைக்கப்பட்டோம். நம்முடைய பாவமெல்லாம் அவருடைய கிருபையில் அமிழ்ந்துபோயிற்று. அவர் பாவத்தையும் பிசாசையும் ஜெயித்த ஜெயமெல்லாம் நமக்குச் சொந்தமாயிற்று. அவருடைய பெலன் நம்முடைய பெலன். அவருடைய பலத்தால் அவருடைய பிள்ளைகளும் ஜெயமடையலாம். அவர் நம்முடைய சேனைபதி. அவர் தம்மை விசுவாசிக்கிறவர்களுக்கு எப்பொழுதும் துணை நிற்கிறார். இதோ, நான் உலகமுடிவு மட்டாகச் சகல நாட்களிலும் உங்களுடனே கூட இருக்கிறேன் என்று வாக்குக்கொடுத்தார். முக்கியமாய்ச் சோதனை காலத்தில் அவர் நம்மோடு கூட இருப்பார், நம்மைப் பலப்படுத்துவார்.

நாமோ நம்முடைய சுய பலத்தை நம்பாமல், நம்முடைய சேனைபதியாகிய கிறிஸ்துவை நம்பவேண்டும். அவருடைய வச



னமே நாம் பிடிக்கவேண்டிய ஆயுதம். அதற்கு ஆவியின் பட்டயம் என்று பெயர். அதை நாம் இரவும் பகலும் நம்முடைய இருதயத்தில் பத்திரப்படுத்தவேண்டும். ஒவ்வொரு வேதவாக்கியமும் பிசாசை மேற்கொள்ளக் கூடிய ஒரு ஆயுதம். தாவீது தன்னுடைய கவணில் வைத்துச் சுழற்றியெறிந்த கூழாங்கல் கோலியாத்தைக் கீழே தள்ளினது போல ஒவ்வொரு வேதவாக்கியமும் பிசாசை மேற்கொள்ளும்.

நாம் வேத வசனத்தைக் கையாடுவதோடு ஜெபத்தையும் மறக்கக்கூடாது. பிசாசு நம்மை எந்தப் பாவத்துக்காவது தூண்டிவிடுகிறதைக் காண்கிறபொழுது நாம் அசமந்தமாயிருக்கக் கூடாது. எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப் பண்ணாதேயுமென்று ஜெபம்செய்ய இயேசுநாதர் நமக்குக் கற்பித்தாரே. பெரிய வியாழன் இரவிலே பேதுரு இரட்சகருடைய உத்தரவுப்படி விழித்து ஜெபம்பண்ணியிருந்தால், தன் இரட்சகரை மறுதலித்திருக்கமாட்டார்.

| | |
|---|---|
| வாங்க மனதுண்டானால் | நாம் நிலைத்திருந்து, |
| கேட்கத் தேவையுண்டு, | போரிலே வெல்லவே |
| கர்த்தரின் ஜெயத்தால் | ஏற்றனத்தனங்கள் |

உக்கிர செபங்கள்.

மெய்விசுவாசத்தோடே ஜெபித்து, பராபரனுடைய வசனத்தைக் கையாடி, பிசாசோடு எதிர்த்து நின்றால், அது நம்மை விட்டு ஓடிப்போம். ஜெயம் நம்முடையதாகும் என்பதற்குச் சந்தேகமில்லை.

பிசாசை ஜெயித்த வெற்றிவேந்தரே, எங்களுக்கு வரும் சோதனைகளில் நாங்கள் விழுந்துபோகாமல், விசுவாசத்தில் உறுதியாய்த் தரித்து நின்று பிசாசை மேற்கொள்ள, நீர் எங்களுக்குப் பக்கத்துணையாய் நின்று எங்களைப் பலப்படுத்தி ஜெயம் தந்தருளும், சுவாமி. ஆமென்.

---

## ஒருசந்தி காலத்து இரண்டாம் வெள்ளிக்கிழமை.

பாடுபட்ட சரித்திரம். 62 - 70.

அன்று அவரைப் பிரதான ஆசாரியனான காய்பாவண்டைக்குக் கட்டுண்டவராக அனுப்பினான். அங்கே பிரதான ஆசாரியர்கள் மூப்பரானவர்கள் வேதபாரகர் அனைவருங் கூடினார்கள். பிரதான ஆசாரியரும் ஆலோசனைச் சங்கம் அனைத்தும் இயேசுவைக் கொலை செய்யும்படிக்கு, அவருக்கு விரோதமாகச் சாட்சி தேடினார்கள். ஆனால் அவர்களுக்கு அகப்படவில்லை, ஏனெனில் அநேகர் அவருக்கு விரோதமாய்ப் பொய்ச் சாட்சி

சொல்லியும், சாட்சிகள் சரிப்பட்டதில்லை. கடைசியிலே இரண்டு பொய்ச் சாட்சிகள் சேர்ந்துவந்து: கைவேலையான இந்தத் தேவாலயத்தை நான் இடித்துப்போட்டு, கைவேலையல்லாத வேறொன்றை மூன்று நாளைக்குள் கட்டுவேனென்று இவன் சொன்னதை நாங்கள் கேட்டோம் என்று பொய்ச்சாட்சி சொன்னார்கள். இப்படியும் அவர்கள் சாட்சி சரிப்படவில்லை. அப்போது பிரதான ஆசாரியன் எழுந்து மத்தியிலே நின்று, இயேசுவை: நீ உத்தரமொன்றுஞ் சொல்லாயோ, இவர்கள் உன்மேல் என்ன சாட்சி சொல்லுகிறார்கள் என்று கேட்டான். அவரோவெனில் உத்தரமொன்றுஞ் சொல்லாமல், மவுனமாயிருந்தார். அப்போது பிரதான ஆசாரியன் மறுவுத்தரமாக அவருடனே: நீ பராபரனுடைய குமாரனாகிய கிறிஸ்துவாயிருக்கிறாயோ என்று எங்களுக்குச் சொல்லச் சீவனுள்ள பராபரன் பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன் என்றான். இயேசு அவனுடனே: நீர் சொன்னபடியே நான் அவர்தான். பின்னையும் உங்களுக்குச் சொல்லுகிறேன், இதுமுதற்கொண்டு மனுஷனுடைய குமாரனை வல்லமையின் வலது பாரிசத்திலே உட்கார்ந்திருக்கவும், வானத்தின் மேகங்கள் மேல் வரவுங் காண்பீர்கள் என்றார். அப்போது பிரதான ஆசாரியன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு: இவன் தெய்வதூஷணஞ் சொன்னான், இனி சாட்சிகள் நமக்குத் தேவையாயிருக்கிறதென்ன; இதோ, இவன் தூஷணிப்பை இப்போது கேட்டீர்களே, உங்களுக்கு என்னமாய்க் காணுகிறதென்றான். அதற்கு அவர்கள்: மரணத்துக்கு ஏதுவாயிருக்கிறானென்று பிரதியுத்தரஞ் சொன்னார்கள். அப்போது சிலர் அவருடைய முகத்தில் துப்பி, அவரைக் குட்டினார்கள். அவரைப் பிடித்துக்கொண்ட மனிதர் அவரைப் பரிகாசம் பண்ணி, அடித்து, அவரை முக்காடிட்டு, அவருடைய முகத்தில் அறைந்து: கிறிஸ்துவே, உம்மை அடித்தவன் ஆர் என்கிறதை ஞானதிருஷ்டியாலே எங்களுக்குச் சொல்லும் என்று அவரைக் கேட்டு, வேறே அநேகங்களை அவருக்குத் தூஷணமாகச் சொன்னார்கள்.

பிரியமானவர்களே,

இயேசுநாதர் கெத்சேமனே தோட்டத்தில் ஆத்துமப் பாடுபட்டபின் தமது சீஷரை எழுப்பிக்கொண்டு புறப்படும்பொழுது, யூதா இஸ்காரியோத்து சத்துருக்களின் கூட்டத்தோடு வந்து, அவரை முத்தத்தினால் காட்டிக்கொடுத்தான். சத்துருக்கள் அவரைக் கட்டி, முந்தி அன்னாவண்டைக்குக் கொண்டுபோனார்கள், ஏனெனில், அவன் அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனாகிய காய்பாவுக்கு மாமனாயிருந்தான். அவன் இயேசுவை அவர் சீஷரையும் அவர் போதகத்தையும் குறித்துக் கேட்டான். அவர் உத்தரவு சொன்னபோது வேலைக்காரரில் ஒருவன் அவரைக் கொடுமையாய் அறைந்தான். அந்த துஷ்டனுக்கு இயேசுநாதர் தகுந்த புத்தி புகட்டினபின் அன்னா அவரைக் காய்பாவண்டைக்கு அனுப்பினான். அங்கே யூத சங்கத்தார் கூடிவந்திருந்தார்கள். அந்தக் கோயிலதிகாரிகளுக்கு முன் நடந்த விசாரணையும் அநியாயங்களும் நம்முடைய வாக்கியத்திலே சொல்லியிருக்கிறது. அதைக்குறித்து இப்பொழுது சிந்திப்போம்.



கோயிலதிகாரிகளுக்கு முன் பாடுபட்ட இயேசுவினிடத்தில் நாம் காணும் முக்கிய விஷயங்களாவன.

1. அவருடைய ஆச்சரியமான மௌனம்.
2. அவருடைய அதிசயமான அறிக்கை.

1.

காய்பாவின் வீட்டில் நம்முடைய இரட்சகரிடத்தில் காணப்பட்ட ஆச்சரியமான மௌனத்தைக் குறித்து சிந்திப்போம்.

யூதருடைய கோயிலதிகாரிகளாகிய பிரதான ஆசாரியரும் ஆலோசனைக் கூட்டத்தாரும் வெகுநாளாய் நம்முடைய இரட்சகரிடத்தில் குற்றம்பிடிக்கப் பிரயாசப்பட்டார்கள். முக்கியமாய் பரிசுத்த வாரத்தின் செவ்வாய்க் கிழமையிலே அவர்களைச் சேர்ந்த மனுஷரும் மற்ற விரோதிகளும் இரட்சகரிடத்தில் கூட்டம்கூட்டமாய் வந்து, பலகேள்விகளை அவருக்குப் போட்டு அவருடைய வாயைப்பிடிக்கப் பார்த்தார்கள். வேதபாரகர், பரிசேயர், சதுசேயர், ஏரோதேயின் மனுஷர் முதலிய பலரும் அவரைக் கேட்ட கேள்விகளுக்கு அவர் தகுந்த உத்தரவு சொன்னதினால், அவரிடத்தில் ஒரு குற்றமும் கண்டுபிடிக்கக் கூடாதே போயிற்று. அவரை எப்படியாவது, கொன்றுபோடவேண்டுமென்று அவர்கள் ஏற்கனவே தீர்மானித்திருந்தும், குற்றம் சொல்லாமல் கொல்லுவது முறையாயிருக்காது என்று பயந்து, இந்தச் சமயத்தில் ஏதாவது ஒரு குற்றத்தை அவர்மேல் சுமத்தப் பார்த்தார்கள். அவருக்கு விரோதமாகச் சாட்சிதேடினார்கள். அவர்மேல் மெய்யான குற்றம் சுமத்த ஒரு சாட்சியும் அகப்படவில்லை. என்னில் ஒரு பாவமுண்டென்று உங்களில் ஆர் என்னைக் குற்றம்பிடிப்பான் என்று அவர் தம்முடைய சத்துருக்களைக் கேட்டபொழுது அவர்மேல் ஒரு குற்றமும் சொல்லக்கூடாத அவர்கள் இப்பொழுது எப்படிச் சொல்லுவார்கள். ஆகையால் பொய்ச்சாட்சிகளினால் அவரைக் குற்றப்படுத்தலாமென்று முயற்சிசெய்தார்கள். அப்படியும் சரிப்படவில்லை. ஒருவன் போனவழி மற்றொருவன் போகாமல், ஒன்றுக்கொன்று ஒவ்வாத பொய்களைச் சொன்னதினால் அவர்கள் நோக்கம் வாய்க்காதே போயிற்று. பிறத்தியானுக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக என்று படித்தவர்களும் போதகர்களுமாகிய அவர்கள் பொய்ச்சாட்சிகளைத் தேடினது எவ்வளவு அக்கிரமம். இதனால் அவர்கள் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாகிய பிசாசின் மக்களென்று ரூபித்தார்கள். நாமும் பாவத்தைச் சிநேகித்து கிறிஸ்துவுக்கு விரோதமானவற்றைப் பேசும்பொழுதும் செய்யும்பொழுதும் நம்மைப் பிசாசின் பிள்ளைகளாக்கிக் கொள்ளுகிறோம். கடைசியிலே, இரண்டுபொய்ச்சாட்சிகள் சேர்ந்துவந்து: கைவேலையான

இந்தத் தெய்வாலயத்தை நான் இடித்துப்போட்டு, கைவேலைபல்லாத வேறொன்றை மூன்று நாளைக்குள் கட்டுவேனென்று அவன் சொன்னதைக் கேட்டோமென்று பொய்ச்சாட்சி சொன்னார்கள். இதுவோ மெய்யோடு கலந்த பொய், மூன்று வருஷத்துக்கு முன்னே இயேசுநாதர் தம்மிடத்தில் அடையாளங் கேட்ட யூதருக்கு: இந்த தெய்வாலயத்தை யிடியுங்கள் மூன்று நாளில் அதை எழுப்புவேனென்று சொன்னது மெய். அப்பொழுது அவர் கைவேலையான தெய்வாலயத்தைப்பற்றி அல்ல, தம்முடைய சரீரம் என்ற தெய்வாலயத்தைப்பற்றிச் சொன்னார். இதை அவர்கள் புரட்டி, அவர்தாமே எருசலேமிலுள்ள தெய்வாலயத்தை இடித்து, அதை மூன்று நாளில் கட்டுவதாய்ச் சொன்னாரென்று பொய் சொன்னார்கள். இதிலும், ஒருவன் சொன்னதுபோல மற்றவன் சொல்லாமையால், அவர்கள் நினைத்த காரியம் முடியவில்லை. அப்பொது பிரதான ஆசாரியன் எழுந்து நடுவே நின்று இயேசுவை: நீ உத்தரமொன்றும் சொல்லாயோ, இவர்கள் உன்மேல் என்ன சாட்சி சொல்லுகிறார்கள் என்று கேட்டான். அவரோவெனில் உத்தரமொன்றுஞ் சொல்லாமல் மௌனமாயிருந்தார்.

பிரியமானவர்களே, இந்த மௌனம் மகா ஆச்சரியமான மௌனம். தமக்கு விரோதமாகச் சத்துருக்கள் வெகுவான பொய்களைப் பேசியும், அன்றிரவெல்லாம் அவரைக் கோட்டிகொண்டு, குட்டி அறைந்து வாதனைசெய்தும், அவர் ஒன்றும் பேசாமல் மௌனம் சாதித்தது நாம் கவனிக்கத்தக்க காரியம். அவர் இப்படிப் பேசாதிருந்ததினால், தம்மைக்குறித்து ஏசாயா தீர்க்கதரிசி முன் உரைத்ததை நிறைவேற்றினார். கடுங் கேட்கப்பட்டபோது அவரே ஒடுக்கப்பட்டார்; ஆனால் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை. அவர் ஒரு ஆட்டுக்குட்டியைப்போல் அடிக்கப்படக் கொண்டுபோகப்பட்டு, தன்னை மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமற்றிருக்கிற ஆட்டைப்போலே தம்முடைய வாயைத் திறவாதிருந்தார் (ஏசா. 53, 7) என்று தீர்க்கதரிசி சொன்னது. இயேசுவின் மௌனத்தால் நிறைவேறிற்று. இப்படியே தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றின இந்தச் சிங்காரமௌனம் பாவிக்கு ஆறுதலான பரிசுத்த மௌனமுமாயிருந்தது. இயேசுநாதர் பிரதான ஆசாரியனுக்கு முன் பேசாதிருந்ததால், பாவியானவன் பராபரனுடைய சந்நிதானத்தில் பேச்சில்லாதிருக்கும் நிலைமையைக் காண்பித்தார். பாவி தனக்கு விரோதமாய்ச் சொல்லப்படும் பதினாயிரம் குற்றங்களில் ஒன்றுக்குப் பதில் சொல்லக்கூடுமோ. பராபரனோடே பேசும் சலாக்கியம் நமக்குக் கிடைக்க நம்முடைய இரட்சகர் பேச்சற்றிருந்தார், இந்த மௌனம் பாவிகளுக்காகப் பாடுபடும் அவருடைய உற்சாகத்தைக் காண்பிப்பதினால் நமக்கு ஆறுதலானதே. அவர் அநியாய



மாய்த் தம்முடைய பேரில் வரும் பாடுகளை நம்முடைய நிமித்தம் சகித்துக்கொள்ளச் சித்தமாயிருந்ததால் அவர் நியாயம் பேசித் தப்பித்துக்கொள்ள மனதில்லாதிருந்தார். பாவிக்கு ஆறுதலான இந்தப் பரிசுத்த மௌனம் நமக்கு நாவடக்கம் போதிக்கும் ஞானமுள்ள மௌனமாகவும் இருந்தது. நாமும் அநியாயமாய்க் குற்றஞ்சாட்டப்பட்டு வாதிக்கப்படும் சமயங்கள் உண்டு. அப்பொழுது நியாயம் பேசுவதிலும் மௌனமாயிருப்பது உத்தமம். அப்படிப்பட்ட சமயங்களில் நாம் நம்முடைய அருமை இரட்சகரை நினைத்துக்கொள்வது நல்லது.

2.

நம்முடைய இரட்சகர் கோயிலதிகாரிகளுக்கு முன் செய்த அதிசயமான அறிக்கையைக் குறித்துச் சிந்திப்போம்.

இரட்சகரிடத்தில் ஒரு குற்றமும் பிடிக்க முடியாமல், எல்லாரும் கலங்கித்தவித்து கூட்டத்தலைவனாகிய காய்பாவை நோக்கிப்பார்த்தார்கள். தந்திரமுள்ள அவன் சத்திய வாசகராகிய இயேசு ஆணைக்குக் கட்டுப்படுவாரென்று அறிந்து, அவரை நோக்கி: நீ பராபரனுடைய சுதனாகிய கிறிஸ்துவாயிருக்கிறாயோ என்று எங்களுக்குச் சொல்லச் ஜீவனுள்ள பராபரன் பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன் என்றான். அவசியமில்லாமல் ஆணையிடுவது சரியல்லவென்று இரட்சகர் போதித்தும், நீ உன் பராபரனாகிய கர்த்தருக்குப் பயந்து, அவருக்கு ஆராதனைசெய்து, அவர் நாமத்தைக்கொண்டு ஆணையிடுவாயாக என்று நியாயப்பிரமாணத்தில் (5 மோசே 6, 13) சொல்லியிருப்பதினால், அவர் பிரதான ஆசாரியனுடைய ஆணைக்குக் கட்டுப்படவேண்டியதாயிற்று. அவர் சத்தியத்துக்குக் கட்டுப்பட்டவராய்த் தம்முடைய வாயைத் திறந்து மறுமொழி சொன்னார். நீர் சொன்னபடியே நான் அவர்தான், பின்னையும் உங்களுக்குச் சொல்லுகிறேன், இதுமுதற்கொண்டு மனுஷனுடைய குமாரனை வல்லமையின் வலதுபாரிசத்தில் உட்கார்ந்திருக்கவும், வானத்தின் மேகங்கள்மேல் வரவுங் காண்பீர்கள் என்பதே அவர் செய்த அறிக்கை.

அவர் காய்பாவுக்கு முன் செய்த இந்த அறிக்கை சந்தேகத்தைப் பறக்கடிக்கும் தவறாத அறிக்கையாயிருக்கிறது. இந்த அறிக்கை செய்தவர் எந்தக் காலத்திலும் பொய் சொன்னவரல்ல. இப்பொழுதும் அவர் பொய் சொல்லவில்லை. அவர் மெய்யாகவே கிறிஸ்துவும், பராபரனுடைய சுதனும், மனுஷனுடைய குமாரனும், வல்லமையுள்ள நியாயாதிபதியுமாயிருக்கிறார். காய்பாவுக்கு முன்னும், யூத சங்கத்தாருக்கு முன்னும் கட்டுண்டு நிற்கிறவர் பராபரனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கிறிஸ்து. நாம் நம்முடைய பரிசுத்த பருவதமாகிய சீயோனில் நம்முடைய இராசாவை அபிஷேகம் பண்ணினோம் என்

று பராபரன் சொன்ன (சங். 2, 6) இராசா இவர்தான். இவரே யூதர்கள் எதிர்பார்த்த மேசியா. இவரையல்லாமல் வேறொரு மேசியா வருவாரென்று யூதர்கள் காத்திருந்தால், அவர்கள் இலவு காத்த கிளிபோல் ஏமாந்துபோக வேண்டியதே.

அவர் பராபரனுடைய குமாரனும் மனுஷனுடைய குமாரனுமானவர். அவர் பிதாவிடத்தில் அநாதியாய்ப் பிறந்த மெய்யான தேவனும், கன்னிமரியாளிடத்தில் பிறந்த மெய்யான மனிதனுமாயிருக்கிறார். ஆதாம் பராபரனைப்போல ஆக விரும்பி, தெய்வீகத்தைக் கொள்ளையடிக்கப் பார்த்தான். இயேசுநாதரோ, மெய்யான தேவ குமாரனாயிருந்தும், தம்முடைய தெய்வ மகிமையை எல்லாம் வெறுத்துக் காய்பாவுக்கு முன் கட்டுண்டு நின்றார். அவர் பராபரனையும் மனிதரையும் இணைக்கக்கூடிய தேவ குமாரனும் மனுஷ குமாரனுமாயிருப்பது, நமக்கு எவ்வளவு பெரிய ஆறுதல். நாமெல்லாரும் பராபரனுக்கு விரோதமாகப் பாவம் செய்ததினால், அளவில்லாத தண்டனைக்குப் பாத்திரராயிருக்கிறோம். நமக்காகப் பாடுபட்டவரோ பராபரனாயிருப்பதால், அவர் நமக்காக அளவில்லாத புண்ணியத்தைச் சம்பாதித்தார். பராபரனுக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்த நாம் மனிதராயிருக்கிறோம். மெய்யான மனிதனாகிய கிறிஸ்து உத்தரவாதம் பண்ணினது நாமே உத்தரவாதம் பண்ணினதுபோல் ஆயிற்று. ஆகையால் சந்தேகத்தைப் பறக்கடிக்கும் அவருடைய தவறாத அறிக்கை, நம்முடைய விசுவாசத்தைப் பலப்படுத்தும் மேன்மையான அறிக்கையாகவும் இருக்கிறது. அவருடைய இந்த நல்ல அறிக்கையை நாம் நம்முடைய முழு இருதயத்தினாலும் விசுவாசிப்போமாக. அப்பொழுது மெய்யான தேவனும் மெய்யான மனுஷனுமாகிய அவர் சம்பாதித்த இரட்சிப்பு நமக்குப் பூரண ஆறுதலைக் கொடுக்கும். கோயிலதிகாரிகளுக்குமுன் தாழ்மைப்பட்டவராய் நின்ற கிறிஸ்து பராபரனுடைய வல்லமையின் வலது பாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறபடியால் நாமும் உயர்வுக்கு வர இடமாயிற்று. முதல் இரத்த சாட்சியாகிய ஸ்தேவான் தான் சாகப்போகையில்: இதோ வானங்கள் திறந்திருக்கிறதையும் மனுஷனுடைய குமாரன் பராபரனுடைய வலது பாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன் என்று சொல்லி, ஆறுதல் அடைந்தார்.

இப்படியே விசுவாசிகளைப் பலப்படுத்தும் இயேசுவின் மேன்மையான அறிக்கை விரோதிகளை நடுங்கப்பண்ணும் வீரமான அறிக்கையாகவும் இருந்தது. இரட்சகர் தம்முடைய சத்துருக்களுக்கு முன் கைதிபோல் கட்டுண்டு, அலங்கோலமாய் நின்றும், அவர் சொன்ன மறுமொழி அவர்களைக் கலங்கடிக்கக் கூடியதாயிருந்தது. காய்பாவே, இங்கே கூடி வந்திருக்கும்



யூதர்களே, இதோ உங்களுக்கு முன் கட்டுண்டிருக்கிற நான் வெகு சீக்கிரத்தில் மகிமைக்குள் பிரவேசிப்பேன். பராபரனுடைய வலது பாரிசத்தில் உட்காருவேன். பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள சகலத்தையும் ஆண்டு நடத்துகிற வல்லமை எனக்கு இருக்கும். நான் ஒரு நாளில் மேகங்கள் மேலேறி, உலகத்தை நியாயந்தீர்க்க இறங்கிவருவேன். எல்லாக் கண்களும் என்னைப் பார்க்கும், நீங்களும் என்னைப் பார்ப்பீர்கள். உங்களையும் நான் நியாயந்தீர்ப்பேன் என்பது இரட்சகர் சொன்ன அறிக்கையின் அர்த்தம். இயேசு தம்முடைய இந்த அறிக்கையினால் காய்பாவுக்கும் அவனோடிருந்த மற்றவர்களுக்கும் தானியேல் தீர்க்கதரிசனத்தில் சொல்லியிருக்கிற ஒரு முக்கிய சங்கதியை நினைப்பூட்டினார். அதாவது, இதோ, வானத்தின் மேகங்களுடனே மனுஷனுடைய குமாரன் சாயலாகிய ஒருவர் வருகிறவராயிருந்தார். அவரை எல்லாச் சனசதனத்தாரும், சாதியாரும், பாஷைக்காரரும் சேவிக்கும்படிக்கு, அவருக்கே கர்த்தத்துவமும் கனமும் இராசரிகமும் கொடுக்கப்பட்டது. அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும், அவருடைய இராச்சியம் அழியாததுமாயிருக்கும் என்பதே (தானி. 7, 13). இயேசுநாதர் தாம் சொன்ன உத்தரவால் தமக்கு ஆபத்துவருமென்று நன்றாய் அறிந்திருந்தும், அவர் கொஞ்சமும் அஞ்சாமல் வீரதீரமாய்ப் பேசினார். அவருடைய மௌனம் எப்படி ஆச்சரியமானதோ, அப்படியே அவருடைய அறிக்கையும் அதிசயமானதாயிருந்தது.

இந்தச் சத்தியமான அறிக்கையைப் பிரதான ஆசாரியன் கேட்டபொழுது, தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு: இவன் தெய்வதூஷணம் சொன்னான், இனி சாட்சிகள் நமக்கு என்ன தேவையிருக்கிறது; இதோ, அவன் தூஷணிப்பதை இப்போது கேட்டீர்களே, உங்களுக்கு என்னமாய்க் காண்கிறது என்று கூட்டத்தாரைக் கேட்டான். அதற்கு அவர்கள்: மரணத்துக்கு ஏதுவாயிருக்கிறானென்று பிரதியுத்தரஞ் சொன்னார்கள்.

இயேசுநாதர் சொன்ன வார்த்தைகள் விசுவாசிகளுக்கு ஜீவவசனம், காய்பாவைப் போலொத்த அவிசுவாசிகளுக்கோ அது தேவதூஷணம். அந்த அவிசுவாசிகள் இயேசுவின் வார்த்தைகளைத் தேவதூஷணம் என்று நிர்த்தரித்தால், அவருக்குக் கொலைத்தீர்ப்புப் போட்டார்கள். இதனால் அவர்கள் தங்கள் சொந்த ஆத்துமத்திற்கே சேதமுண்டுபண்ணி, தங்களை நரக ஆக்கினைக்குப் பாத்திரராக்கிக்கொண்டார்கள். அவர்களில் அப்போது சிலர் அவருடைய முகத்தில் துப்பினார்கள், சிலர் தலையில் குட்டினார்கள். வேலைக்காரர் அவரை முக்காடிட்டார்கள், முகத்தில் அறைந்தார்கள்; கிறிஸ்துவே உம்மை அடித்தவன் ஆர் என்று ஞான திருஷ்டியால் சொல்லும் என்றார்கள். பரிகாசமும் தூ

ஷணமுமான பலவார்த்தைகளைச் சொல்லி, அவரை நிந்தித்தார்கள். இந்த நிந்தை தூஷணம் பாடுகளெல்லாம் நம்முடைய பாவத்தின் பலனேயல்லாமல் வேறல்ல. நம்மைச் சிநேகித்த சிநேகத்தால் இவைகளைச் சகித்த இரட்சகருக்கு என்ன ஈடு செலுத்துவோம்.

சகோதரரே, காய்பாவுக்கு முன் நல்லறிக்கை செய்த நம்முடைய இரட்சகரை நாம் நம்முடைய முழு இருதயத்தினாலும் ஸ்தோத்திரித்து, அவர் தம்முடைய பாடுகளால் சம்பாதித்த புண்ணியபலனை விசுவாசத்தினால் பற்றிக்கொள்வோமாக. அப்பொழுது அவிசுவாசிகளுக்கு ஆபத்தான கிறிஸ்துவின் இரண்டாம் வருகை நமக்கு ஆறுதலாகும்.

இயேசு இரட்சகரே, நீர் காய்பாவுக்கு முன் அறிக்கையிட்ட அருமையான வார்த்தைகளுக்காகவும், பட்ட பாடுகளுக்காகவும் உமக்கு இஸ்தோத்திரம். தேவரீர் எங்களுக்கு மெய் விசுவாசம் தாரும். நாங்களும் உம்மைக்குறித்து யாவருக்கு முன்னும் நல்லறிக்கைபண்ண எங்களுக்கு ஒத்தாசை செய்தருளும், சுவாமி. ஆமென்.

---

## ஒருசந்தி காலத்து உ-ம் ஞாயிறு.

மத். 15, 21—28.

பிரியமானவர்களே,

போன ஞாயிற்றுக் கிழமைச் சுவிசேஷ வாக்கியத்தில், இயேசுநாதர் பிசாசினால் சோதிக்கப்பட்டு அதை மேற்கொண்டு ஜெயமடைந்த சரித்திரத்தைக் கேட்டோம். இந்த நாளின் சுவிசேஷ வாக்கியத்திலும் ஒரு ஜெயத்தைப் பார்க்கலாம். அது விசுவாசத்தின் ஜெயம். கானான் சாதியான ஒரு இஸ்திரியின் விசுவாசம் கிறிஸ்துவை மேற்கொண்டு ஜெயித்தது. அவருடைய ஒத்தாசையால் பிசாசை ஜெயித்தது. கிறிஸ்து அந்த விசுவாசத்தைப் புகழ்ந்து: இஸ்திரீயே, உன் விசுவாசம் பெரிதென்றார். இகழத்தக்கதை இகழ்ந்து, புகழத்தக்கதைப் புகழ்ந்து பேசுகிற நம்முடைய இரட்சகரால் பெரிது என்று சொல்லப்பட்ட இந்த விசுவாசம் பெரிதுதான். இந்த விசுவாசத்தை நம்முடைய விசுவாசத்துக்கு முன் மாதிரியாக வைத்துப் பார்ப்போம்.

கானான் இஸ்திரீயின் விசுவாசம் ஏன் பெரிது, எனெனில்,

1. அது தேடிப் பிடித்த பொருள் பெரிது.
2. அது நின்ற உறுதி பெரிது.
3. அது பெற்ற பலன் பெரிது.

### 1.

கானான் ஜாதியான இஸ்திரியின் விசுவாசம் தேடிப் பிடித்த பொருள் பெரிது.



இயேசு அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, தீரு சீதோன் பட்டணங்களின் திசைகளுக்கு அகன்று போனார். இதோ, கானான் சாதியான இஸ்திரி அந்த எல்லைகளிலிருந்து புறப்பட்டு வந்து, அவருடனே: ஆண்டவரே, தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும்; என் மகள் பிசாசினால் கடினமாய் வாதிக்கப்படுகிறாளென்று சொல்லிக் கூப்பிட்டாள். யூதர்கள் நடுவே பிரசங்கம் பண்ணி அற்புதங்களைச் செய்துவந்த இயேசுநாதர் சிலகாலம் அவர்களை விட்டு விலகி, தீரு சீதோன் பட்டணங்களின் திசைகளில் தங்கியிருக்கப் போனார். அந்தத் திசைகளில் மிச்சமாய் அஞ்ஞானிகள் வாசமாயிருந்தார்கள். நம்முடைய வாக்கியத்தில் சொல்லப்பட்ட இஸ்திரியும் அஞ்ஞானியாயிருந்தாள். அவள் பராபரனால் சபிக்கப்பட்ட கானான் ஜாதியைச் சேர்ந்தவள். கானான் ஜாதியார் மெய்யான தேவனாகிய இஸ்ரவேலின் பராபரனைக் கும்பிட்டவர்களல்ல. அவர்கள் நம்முடைய தேசத்தாரைப் போல் பேய் பிசாசுகளையும் விக்கிரகங்களையும் கும்பிட்டு வந்தார்கள். இந்த இஸ்திரியும் அப்படிக் கும்பிட்டவள் தான். அவளுக்கு ஒரு பெரிய சங்கடம் நேரிட்டது. அவள் மகளுக்குப் பிசாசு பிடித்து, அவளைக் கடினமாய் வாதித்ததே இவளுக்குண்டான பெரிய சங்கடம். பிசாசு பிடித்தவர்களால் வீட்டிலும் ஊரிலும் எவ்வளவு உபத்திரவமிருக்குமென்பது நமக்குத் தெரியாத காரியமல்ல. அதிலும், ஒரு பெண் பிள்ளைக்குப் பிசாசு பிடித்து, அவள் அலங்கோலமாய்த் திரிகிறதையும், கண்டபடி அலப்புகிறதையும், பயங்கரமாய் அலறுகிறதையும் பார்க்கிறபோது அது சகிக்க முடியாது. இந்த அஞ்ஞான இஸ்திரி தன் மகளைப் பிடித்திருந்த பிசாசைத் துரத்துகிறதற்குச் செய்யவேண்டிய முயற்சியெல்லாம் செய்தாள். வைத்தியர்களைக் கூப்பிட்டுக் காண்பித்தாள், அவர்கள் கேட்ட பணமெல்லாம் கொடுத்தாள், வைத்தியம் பலிக்கவில்லை. பெண்ணைப் பிடித்த பிசாசு மருந்துக்கு அஞ்சாத பிசாசு. பேயோட்டிகளைக் கூப்பிட்டாள். அவர்கள் அவளிடத்தில் பறிக்கக்கூடிய பணமெல்லாம் பறித்துக்கொண்டார்கள். அவர்களுடைய மந்திரங்களுக்கும் அந்தப் பிசாசு பயப்படவில்லை, அந்தப் பெண்ணை விட்டு ஓடவுமில்லை. ஏழை மறுவழி என்ன செய்வாள். தான் வணங்கி வந்த பொய்த் தேவர்களுக்கும் விக்கிரகங்களுக்கும் பூசை புனஸ்காரங்கள் செய்துபார்த்தாள். கோயில் பூசாரிகளுக்கெல்லாம் வெகு செலவு செய்தாள். எல்லாம் வீணாய்ப்போயிற்று. பெண்ணைப் பிடித்த பேய் அவளை விடவில்லை.

தான் செய்ததெல்லாம் பலிக்காமல்போயிற்றென்று கண்டு, கடைசியாக மெய்யான தேவனைத் தேடத் துவக்கினாள். சர்வத்துக்கும் வல்லவரான மெய்த்தேவன் இஸ்ரவேலின் பராப

ரன் ஒருவரே என்று அவள் அறிந்துகொண்டாள். இதை அவள் ஒருவேளை கானான் தேசத்தில் குடியிருந்த யூதர்களால் கேட்டறிந்திருக்கலாம். இஸ்ராயேலின் பாரம்பரையைப்பற்றி அவளுக்குச் சொன்னவர்கள் தாவீதின் குமாரனாகிய உலக இரட்சகரைக் குறித்தும் அவளுக்குச் சொல்லியிருக்கலாம். அவள் இயேசுநாதர் செய்த பிரசங்கங்களைக் குறித்தும், அவர் நடப்பித்த ஏராளமான அற்புதங்களைக் குறித்தும் கேள்விப்பட்டபொழுது இவரே உலகத்தை இரட்சிக்கப்போகிற தாவீதின் குமாரனென்று நினைத்தாள். அவரை நான் எப்பொழுது பார்ப்பேன், என் சஞ்சலத்தை அவருக்கு நான் எப்பொழுது தெரிவிப்பேன், அவர் எப்பொழுது எனக்குச் சகாயம் செய்யப்போகிறாரோ என்று வாஞ்சையோடு தேடிக்கொண்டிருந்தாள். தமக்குக் காத்திருக்கிறவர்களுக்கும் தம்மைத் தேடுகிற ஆத்துமாவுக்கும் கர்த்தர் நல்லவர் (புலம். 3, 25). இந்த நல்ல கர்த்தர் தன் ஊருக்கு வந்திருக்கிறதாக அவள் கேள்விப்பட்டபொழுது அவரைத் தேடிக்கொண்டே ஓடிவந்தாள். தான் காண விரும்பினவரைக் கண்டுபிடித்தாள். அவள் கண்டுபிடித்த பொருள் பெரும் பொருள்தான். அவர் வல்லமையில் பெரியவர், அவரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. அவர் இரக்கத்தில் பெரியவர், அவர் பிரப[illegible]திலிருக்கிற ஒவ்வொரு ஏழைக்கும் பரிதபித்து, நன்மை செய்ய மனமுடையவர். இப்படிப்பட்டவரைத் தேடிப்பிடித்த விசுவாசம் பெரிய விசுவாசம் தான். இதின்றுணை அல்லாமல் விசுவாசத்துக்கு மதிப்பில்லை. கண்ட பொருளுக்கெல்லாம் [illegible]கும்படி ஏவுகிற விசுவாசத்தை விசுவாசமென்று சொல்லக்கூடாது. அது அவிசுவாசம். இயேசுநாதரைப் பிடிக்கும் விசுவாசமே மெய் விசுவாசம், பெரிய விசுவாசம். நம்முடைய இரட்சகர் தம்முடைய ஜனத்தின் நடுவே அநேக காலம் சஞ்சரித்தும், அவருடைய ஜனத்தாரில் மிச்சமானவர்கள் அவரைத் தாவீதின் குமாரனென்றும் உலக இரட்சகரென்றும் கண்டறியாதே போனார்கள். அவிசுவாசம் அவர்களுடைய கண்களைக் குருடாக்கிற்று. ஆகையால், யோவான் ஸ்நானகன் அவர்களைப் பார்த்து: நீங்கள் அறியாதவர் உங்கள் நடுவிலிருக்கிறாரென்று சொன்னார்.

அஞ்ஞான தேசத்தாராகிய நமக்குக் கர்த்தர் இந்தப் பெரிய பொருளை வெளிப்படுத்தியிருக்கிறார். இவரை நாம் விசுவாசத்தால் பிடித்துக்கொள்வோமாகில், நம்முடைய பாக்கியமே பெரும் பாக்கியமாம்.

2.

கானான் ஜாதியான இஸ்திரீயின் விசுவாசம் நின்ற உறுதி பெரிது.



இயேசு அவளுக்கு ஒரு வார்த்தையும் மறு உத்தரமாகச் சொல்லவில்லை. அப்போது அவருடைய சீஷர்கள் சேர்ந்து வந்து: அவளை அனுப்பிவிடும்; ஏனெனில், நம்முடைய பிறகே கூப்பிடுகிறாளென்று அவரை வேண்டிக்கொண்டார்கள்.— அந்த ஏழை மனுஷியின் வருத்தம் அதிகப்பட ஏதுவாயிற்று. அவளுக்குத் துன்பத்தின்மேல் துன்பமாகிறது. அவள் தன் துன்பத்திலே கர்த்தரை நோக்கி உரத்த சத்தமாய்க் கூப்பிட்டும், அவர் ஒரு வார்த்தையும் மறு உத்தரமாகச் சொல்லாமல் போனது அவளுக்கு எவ்வளவு வேதனையாயிருக்கும். என்றாலும், அவள் தன் உறுதியை விட்டாளோ. இஸ்ராயேல் ஜனத்தின் முதல் இராசாவாகிய சவுல் என்பவன் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டபொழுது: கர்த்தர் அவனுக்குச் சொப்பனங்களினாலாகிலும் வெளிச்சங்களினாலாகிலும் தீர்க்கதரிசனங்களைக் கொண்டாகிலும் மறு உத்தரவு அருளினதில்லை. அப்பொழுது அவன் தன் விசுவாசத்தை விட்டுவிட்டவனாய், அஞ்சனம் பார்க்கிற ஒரு இஸ்திரியைத் தேடி, அவளிடத்தில் குறிகேட்டான் (க சாமு. 28, 6 மு.). அஞ்ஞானியாகிய கானான் இஸ்திரீயோ கர்த்தரை விடாமல், உறுதியாய் நின்றாள். அவளுக்காக இயேசுநாதருடைய சீஷர்கள் பரிதபித்துப் பரிந்துபேசியும், கர்த்தர் அவளுக்குச் சகாயம் செய்யவில்லை. அவர் சொன்ன உத்தரவு கடினமானதாய்த் தோன்றுகிறது. ஏனெனில், அவர் பிரத்தியுத்தரமாக: இஸ்ராயேல் வீட்டிலே காணமல்போன ஆடுகளண்டைக்கு அனுப்பப்பட்டேனேயொழிய, மற்றப்படி அல்ல என்றார். இயேசுநாதர் சர்வலோகத்துக்கும் இரட்சகராயிருந்தும், முந்த யூதரிடத்திலே வேலைசெய்து, அவர்களிடத்திலே தமக்கு ஒரு மந்தையைச் சேர்த்து, இந்த மந்தையைக்கொண்டு உலகமெங்கும் இரட்சிப்பைப் பிரசங்கிக்கச் சித்தமாயிருந்தார். இதினிமித்தமே அவர் யூதர் நடுவே யூதனாய்ப் பிறந்தார். இந்தச் சத்தியத்தை அவர் அந்த இஸ்திரிக்குத் தெரியக்கொடுத்தபொழுதும் அவள் தளர்ந்து போகவில்லை. இஸ்ராயேலருக்காக வந்த இவர் கானான் ஜாதியாருக்கு நன்மை செய்யமாட்டாரென்று அவள் நினைக்கவில்லை. அவள் இன்னமும் தன் விசுவாசத்தில் உறுதியாய் நின்று இயேசுவண்டை நெருங்கி வந்து: ஆண்டவரே, எனக்குச் சகாயம் பண்ணுமென்று அவரைப் பணிந்துகொண்டாள். அப்போஸ்தலன் சொன்னதுபோலே (ரோ. 12, 12) உபத்திரவத்தில் பொறுமையாயிருந்து ஜெபத்தில் உறுதியாய்த் தரித்திருந்தவள் இவளே. உறுதியை விட்டுச் சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு மோதுண்ட கடல் அலைக்குச் சமானமானவன். அப்படிக்கொத்த மனுஷன் தான் கர்த்தரிடத்திலே ஏதாகிலும் பெறுவானென்று நினைக்கவேண்டாம் (யாக். 1, 6. 7). அந்த அஞ்ஞான இஸ்திரீ இன்

ளும் கர்த்தரை விடாமல், அவருக்கு முன்பாக விழுந்து பணிந்துகொண்டதினால் அவளுடைய தாழ்மை வெளிப்பட்டது. அவளுடைய தாழ்மையான விண்ணப்பத்திற்கும் இயேசுநாதர் செவிகொடாதவர்போல் மகா கடினமான மறு உத்தரவு அருளிச்செய்தார். அவர் அவளுக்குப் பிரத்தியுத்தாரமாக: பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து, நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நன்றாய் இராது என்றார். யூத ஜனங்களைப் பிள்ளைகளென்றும், அஞ்ஞானிகளை நாய்க்குட்டிகளென்றும், யூதருக்குச் செய்யவேண்டிய நன்மையை அஞ்ஞானிகளுக்குச் செய்யப்படாதென்றும் அவர் சொல்லுகிறது இரக்கமா. இது நெரிந்த நாணலை முறிக்காதவர் வார்த்தையா, இது மங்கி எரிகிற திரியை அவிக்காதவர் சொல்லா என்று நாம் ஒருவேளை கேட்போம். அவர் சொன்னது நியாயந்தான். புறச்சாதியாராகிய நாம் அவருடைய பிள்ளைகளல்ல, நாம் அவருடைய தயவுக்குப் பாத்திரவான்களல்ல, நாம் அவருடைய கோபத்திற்கே பாத்திரவான்கள். அவர் நம்மை அழிப்பது நியாயம். இந்த உணர்த்தியை அந்தக் கானான் ஜாதியான ஸ்திரீயின் மனதிலும் நம்முடைய மனதிலும் பதியப்பண்ணுவது கர்த்தருடைய நோக்கம். இதுவே மெய்விசுவாசத்தின் முக்கிய அடையாளம். கிருபைக்குக் காத்திருக்கிறவன் தன்னை முற்றிலும் தாழ்த்தவேண்டும். இந்த நோக்கமாய்க் கர்த்தர் பேசின கடின வார்த்தை வீண்போகவில்லை. ஊத ஊத நெருப்பு அவியாமல், பற்றி எரியும். புடத்தில் போடப்போடப் பொன் குறைந்து போகாமல், மாற்று உயரும். அதுபோலவே, இந்த ஏழை மனுஷியின் விசுவாசம் வரவர அதிகரித்தது. கோத்திரப் பிதாவாகிய யாக்கோபு கர்த்தரோடே போராடி: நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவொட்டேனென்றதுபோல், இவளும் இயேசுவை விடாப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டு: ஆம் ஆண்டவரே, ஆகிலும் நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேசைப் பலகைகளிலிருந்து விழுகிற துணிக்கைகளில் தின்னுமே யென்றாள். அவள் தன்னை நாய்க்குட்டியென்றே ஒப்புக்கொண்டாள். ஒரு வீட்டிலுள்ள நாய்க்குட்டிக்குக் கிடைக்கிற பாக்கியமே தனக்குக் கிடைத்தால் போதுமென்றாள். ஒரு பெரிய அப்பமல்ல, ஒரு சிறு துணிக்கை போதுமென்றாள். இப்படி அவள் காண்பித்த விசுவாசம் எவ்வளவு பெரிது. பிரியமானவர்களே, இவளைப்போல் நாம் நம்மைத் தாழ்த்துகிறோமா. கர்த்தருக்கு முன்பாக நம்மை அசுத்த நாய்க்குட்டிகளென்று ஒப்புக்கொள்ளுகிறோமா. கர்த்தர் நம்மை நோக்கிப் பார்க்கவும் தம்முடைய இராச்சியத்தில் ஏற்றுக்கொள்ளவும், தம்முடைய பிள்ளைகளோடு பங்கு கொடுக்கவும் நாம் அணுவளவும் பாத்திரவான்களல்லவே. அவர் நம்மை நோக்கிப் பார்த்தது கிருபை, சுத்த கிருபையே.



## 3.

கானான் ஜாதியான ஸ்திரீயின் விசுவாசம் பெற்ற பலன் பெரிதாகையால் அவள் விசுவாசம் பெரிதே.

அவள் விசுவாசத்துக்கு வந்த பலன் என்ன. கர்த்தர் அதைப் புகழ்ந்து பேசி: ஸ்திரீயே, உன் விசுவாசம் பெரியது என்றார். உலகம் நம்மை எவ்வளவு இகழ்ந்தாலும், யார் நம்மைக் குறித்துக் குறை கூறினாலும் கர்த்தர் நம்மை ஏற்றுக்கொண்டால் போதும். மனிதர் நம்முடைய விசுவாசத்தைக் காணக்கூடாது. கர்த்தர் ஒருவரே அதைக் காணக்கூடியவர். அவர்தான் விசுவாசத்தைத் துவக்குகிறவர். அவர்தான் அதை வளர்க்கிறவர். அவர் கானான் ஜாதியான ஸ்திரீயின் விசுவாசத்தைப் பெரியதென்று சொல்லிப் புகழ்ந்த புகழ்ச்சி அவருக்கே சொந்தம். அந்தப் பெரிய விசுவாசத்தை அவளுக்குக் கொடுத்தவர் கிறிஸ்துதான். நமக்குள்ளேயும் கர்த்தர் விசுவாசத்தை உண்டுபண்ணி வளர்க்கச் சித்தமாயிருக்கிறார். அதற்காகவே அவருடைய வசனம் பிரசங்கிக்கப்படுகிறது. அவர் நம்முடைய ஜெபங்களைக் கேட்கத் தாமதிக்கும் பொழுது, அவர் நம்முடைய விசுவாசத்தை அவித்துப்போடுகிறதற்காக அல்ல, அதை வளர்க்கிறதற்காகவே தாமதிக்கிறாரென்று நாம் அறிந்து, அவருடைய வசனத்தையும் வாக்குத்தத்தத்தையும் அதிகக் கெட்டிப்பிடியாய்ப் பிடித்துக்கொள்வோமாக.

எச்சோதனையிலும்
அடியேன் கெட்டியாக
நிலைத்து, ஜெயமாய்ப்
போர் செய்கிறதுக்காக

என் விசுவாசத்தின்
பொறி மென்மேலும்
எரிவதற்காக
நீர் ஊதிக்கொண்டிரும்

என்று மெய்க் கிறிஸ்தவர்கள் ஜெபஞ்செய்கிறார்கள்.

கானான் ஜாதியான ஸ்திரீயின் விசுவாசம் பெற்ற பலன் அவள் கேட்டதை அடைந்ததே, சரியாய்ச் சொன்னால் அவள் கேட்டதிலும் அதிகம் அடைந்ததே. ஏனெனில், இயேசு அவளுக்கு நீ வேண்டுமென்றபடி உனக்கு ஆகக்கடவது என்றார். அவள் கர்த்தரிடத்திலே கேட்டது நாய்க்குட்டிகளுக்குக் கிடைக்கும் துணிக்கை. அவளுக்குக் கர்த்தர் கொடுத்ததோ பிள்ளைகளுக்குக் கிடைக்கும் அப்பம். அவளுடைய நெடுநாள் வாஞ்சையும் விருப்பமும் இன்றைக்குப் பூரணமாய் நிறைவேறிற்று. அவள் மகள் ஆரோக்கியமானாள். இரட்சகர் சொன்ன வார்த்தையின் [illegible]த்தினால் அந்தப் பெண்ணைப் பிடித்திருந்த பேய் ஓடிப்போ[illegible] அவள் சுகமானாள். அவள் மற்றவர்களைப்போல் ஒழுங்காய் உடுத்தி, ஒழுங்காய்ப் பேசி, ஒழுங்காய் நடந்துகொண்டாள். மேலும், தாயும் பிள்ளையும் பிசாசின் அதிகாரத்திற்கு நீங்கலாகிப்

பராபரனுடைய பிள்ளைகள் ஆனார்கள். இதுவே எல்லாவற்றிலும் பெரிய பலன்.

நாமும் இயேசு இரட்சகரை விசுவாசித்து, இந்த விசுவாசத்தில் உறுதியாய்த் தரித்திருந்தால், இதிலும் பெரிதானவைகளைக் காணலாம். இம்மட்டும் நம்மிடத்திலே பெரிய அதிசயங்களைச் செய்துவருகிற கர்த்தர் இதிலும் அதிகமானவைகளைச் செய்வார். முன் அவருக்கிருந்த வல்லமை இப்பொழுது குறைந்துபோனதில்லை. நாமோ அவரைத் தேடவேண்டியபடி தேடுகிறதில்லை. நம்மைத் தாழ்த்தவேண்டியபடி தாழ்த்துகிறதில்லை. அவரை நம்பவேண்டியபடி நம்புகிறதில்லை. நாம் உறுதி தப்பிப்போகின்ற சமயங்கள் அநேகம். இதற்காக நாம் துக்கப்பட்டு அழுவோமாக. நம்முடைய விசுவாசக் குறைவினாலேயே நமக்கு அநேக ஆசீர்வாதம் குறைவுபடுகிறது, பிசாசு நம்மை அடிக்கடி மேற்கொள்ளுகிறது. விசுவாசமுள்ளவர்களே பாக்கியவான்கள்.

விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாகிய இயேசுவே, எங்களுக்கும் மெய் விசுவாசத்தைத் தந்து அதை விர்த்திக்கப்பண்ணும், சுவாமி. ஆமென்.

---

## ஒருசந்தி காலத்து மூன்றாம் வெள்ளிக்கிழமை.

பாடுபட்ட சரித்திரம் 81. 85—92.

அவர்களுடைய கூட்டமெல்லாம் எழுந்திருந்து, அவரைக் கட்டி, காய்பாவண்டையிலிருந்து அதிகார வீட்டுக்குக் கொண்டுபோய், பொந்தியு பிலாத்து என்கிற துரைக்கு ஒப்புக்கொடுத்தார்கள். அப்பொழுது விடியற்காலமாயிருந்தது. யூதர்களோவெனில் தாங்கள் தீட்டுப்படாமல், பஸ்காவைப் புசிக்கத்தக்கதாக அதிகார வீட்டுக்குட் பிரவேசியாதிருந்தார்கள். அப்பொழுது பிலாத்து அவர்களண்டையில் வெளியே வந்து: இந்த மனுஷன் பேரில் என்ன குற்றஞ் சாட்டிக்கொண்டு வருகிறீர்கள் என்றான். அவர்கள் அவனுக்குப் பிரத்தியுத்தரமாக: இவன் பொல்லாங்கு செய்தவனாயிராவிட்டால் அவனை உமக்கு ஒப்புக்கொடோமென்றார்கள். அப்பொழுது பிலாத்து அவர்களுடனே: அவனை நீங்களே கொண்டுபோய், உங்கள் நியாயப்பிரமாணத்தின்படி அவனை நியாயந்தீருங்கள் என்றான். அப்பொழுது யூதர் அவனுடனே: ஒருவனையுங் கொல்ல எங்களுக்கு அதிகாரமில்லை என்றார்கள். இயேசு தாம் எந்த மரணமாக மரிக்கப்போகிறாரென்று குறிப்பாய்ச் சொன்ன வார்த்தை நிறைவேறும்படியாகத்தானே. அவர்களுடைய கூட்டமெல்லாம்: இவன் சாதியை மாறுபாடாக்குகிறவனாகவும், தன்னைத்தானே கிறிஸ்து இராசா என்று சொல்லி, இராயனுக்கு வரிகொடுக்க வேண்டாமென்கிறவனாகவும் இவனைக் கண்டுபிடித்தோமென்று அவரைக் குற்றஞ்சாட்டத் தொடங்கினார்கள். அப்பொழுது பிலாத்து மறுபடியும் அதிகார வீட்டுக்குள் பிரவேசித்து, இயேசுவை அழைத்தான். இயேசுவோ துரைக்கு முன்பாக நின்றார். துரை அவரை நீ



யூதருடைய இராசாவோ என்று கேட்டான். இயேசு அவனுக்குப் பிரத்தியுத்தரமாக: இதை நீராய்ச் சொல்லுகிறீரோ, அல்லது வேறே பேர்கள் என்னைக்குறித்து இதை உமக்குச் சொன்னார்களோ என்றார். பிலாத்து பிரத்தியுத்தரமாக: நான் யூதனோ, உன் சாதியாரும் பிரதான ஆசாரியர்களும் உன்னை எனக்கு ஒப்புக்கொடுத்தார்கள், என்ன செய்தாய் என்றான். இயேசு பிரத்தியுத்தரமாக: என் இராச்சியம் இந்த உலகத்தினுடையதல்ல, என் இராச்சியம் இந்த உலகத்தினுடையதானால், நான் யூதருக்கு ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு; என் பணிவிடைக்காரர் போராடியிருப்பார்களாம்; இப்பொழுதோவெனில் என் இராச்சியம் இவ்விடத்தது அல்ல என்றார். அப்பொழுது பிலாத்து அவருடனே: ஆனால் நீ இராசாவோ என்றான். இயேசு பிரத்தியுத்தரமாக: நீர் சொல்லுகிறபடி நான் இராசாதான். சத்தியத்திற்குச் சாட்சிகொடுக்க நான் பிறந்தேன், இதற்காக இந்த உலகத்திலே வந்தேன்; சத்தியவானெல்லாம் என் சத்தங் கேட்கிறான் என்றார். பிலாத்து அவருடனே: சத்தியம் என்ன என்று சொல்லி, மறுபடியும் யூதரண்டையில் புறப்பட்டுப்போய், அவர்களுடனே: நான் அவனில் ஒரு குற்றமுங்காணேன் என்றான்.

பிரியமானவர்களே,

நம்முடைய அருமை இரட்சகர் கோயில் அதிகாரிகளுக்கு முன் பட்ட பாடுகளைக்குறித்துப் போன வெள்ளிக்கிழமையில் கேட்டோம். காய்பாவின் அரண்மனையிலிருந்த வேலைக்காரரெல்லாரும் அவரைப் பரிகாசம்பண்ணி, குட்டி, அறைந்து, பலவிதமான கோட்டிசெய்தபின், அந்த அதிகாரிகள் மறுபடியும் அவரைக் கூட்டத்தில் நிறுத்தி: நீ கிறிஸ்துவாயிருக்கிறாயோ என்றும், நீ பராபரனுடைய குமாரனோ என்றும் கேட்டார்கள். நீங்கள் சொல்லுகிறபடி நானே என்று அவர் தெளிவாய் உத்தரவு சொன்னபொழுது அவரைக் கொலைசெய்யும்படிக்கு அவருக்கு விரோதமாய் யோசனைபண்ணினார்கள். ஆகிலும் கொலை செய்கிற அதிகாரம் அந்தக்காலத்தில் அவர்களுக்கு இல்லாதபடியால் அவரை உலக அதிகாரியாகிய பொந்தியுபிலாத்துவின் வீட்டுக்குக் கொண்டுபோய் அவனுக்கு ஒப்புவித்தார்கள். அவன் வீட்டில் நடந்த விசாரணையைக்குறித்து இன்றைக்குத் தியானிக்கப்போகிறோம்.

உலக அதிகாரியாகிய பொந்தியு பிலாத்துவின் வீட்டில் இயேசுவுக்கு நடந்த விசாரணையைப்பற்றிக் கேட்போம்.

1. அவர் அங்கே அநியாயமாய்க் குற்றஞ்சாட்டப்பட்டார்.
2. அவர் அங்கே சத்தியத்துக்குச் சாட்சிகொடுத்தார்.

### I.

இயேசுநாதர் பொந்தியு பிலாத்துவின் வீட்டில் அநியாயமாய்க் குற்றஞ்சாட்டப்பட்டதைப் பற்றிக்கேட்போம்.

சர்வலோகத்துக்கும் இராசாவும் நியாயாதிபதியுமாகிய இயேசுநாதர் பொந்தியு பிலாத்து என்ற ரோமதுரைக்கு முன் நிற்கிறார். அவரை அந்தத் துரைக்குமுன் கொண்டுபோன சனங்களெல்லாரும் அவரோடு நிற்கிறார்கள். அவர் கட்டுண்ட கைதியாகவும், அவர்களோ அவர்மேல குற்றஞ்சாட்டும் வாதிகளாகவும் நிற்கிறார்கள். இந்த மனுஷன்மேல் என்ன குற்றஞ் சாட்டிக்கொண்டு வருகிறீர்கள் என்று பிலாத்து கேட்க, அவர்கள்: இவன் பொல்லாங்கு செய்தவனாயிராவிட்டால், இவனை உமக்கு ஒப்புக்கொடோம் என்றார்கள். இயேசுநாதரைப் பொல்லாங்கு செய்தவனென்று அவர்கள் சொன்னது எவ்வளவு பெரிய அநியாயம். அவர் என்ன பொல்லாங்கு செய்தார். அவர் குருடருக்குப் பார்வைகொடுத்தார். செவிடரைக் கேட்கப்பண்ணினார். ஊமையரைப் பேசப்பண்ணினார். சப்பாணிகளை நடக்கச்செய்தார். குஷ்டரோகிகளையும் பலவித வியாதிக்காரரையும் சுகப்படுத்தினார். மரித்தோரை எழுப்பிவிட்டார். இதெல்லாம் பொல்லாங்கா. எல்லாவற்றையும் நன்றாக்கினாரென்ற சாட்சிபெற்றவரைப் பொல்லாங்கு செய்தவரென்று குற்றஞ்சாட்டினது எத்தனை பெரிய அக்கிரமம், எவ்வளவு பெரிய நன்றிகேடு. இந்த சனங்கள் நன்மைக்குத் தீமை சரிக்கட்டினது மகா பரிதாபமல்லவா.

அப்போது பிலாத்து அவர்களுடனே; அவனை நீங்களே கொண்டுபோய் உங்கள் நியாயப்பிரமாணத்தின்படி நியாயந்தீருங்கள் என்று சொன்னான். அப்போது யூதர்: ஒருவனையும் கொலை எங்களுக்கு அடாதே என்றார்கள். இதனால் இயேசுநாதர் கொலைக்குப் பாத்திரமான பெரிய பாதகம் செய்தவரென்றும், கொலைத்தீர்ப்பு செய்வதற்கு அதிகாரமுள்ள துரைதானே விசாரணை செய்யவேண்டுமென்றும் தெரிவித்தார்கள். யூதர் தங்கள் நியாயப்பிரமாணத்தின்படி அவரை நியாயந்தீர்த்திருப்பார்களானால், அவரைக் கல்லெறிந்து கொல்லவேண்டியதாகும்: என்னைச் சிலுவையில் அறைந்து கொன்றுபோடுவார்கள் என்று இயேசு சொல்லியிருந்த வார்த்தை நிறைவேறாமல்போம். ஆகையால் யூதர் அவரை ரோமதுரைக்குப் பகையினால் ஒப்புவித்தும், தெய்வச்செயலால் அவருடைய வார்த்தை நிறைவேறுவதற்கு இது உதவியாயிற்று.

இப்பொழுது யூதர் அவர்மேல் மூன்று பெரிய குற்றங்களை அநியாயமாய்ச் சாட்டினார்கள். இவன் சாதியை மாறுபாடாக்குகிறவன் என்பது அவர்மேல் அவர்கள் சாட்டின முதலாம் குற்றம். தேச ஒழுங்குக்கும் சட்டங்களுக்கும் கீழ்ப்படிந்து சமாதானமாய் வாழுகிற சனங்களைக் கலகத்துக்கு மூட்டிவிட்டுக் கெடுப்பதே மாறுபாடாக்குவதாகும். நம்முடைய இரட்சகர் அப்படிச் செய்தவரா. சீர்கெட்டு நடந்த பாவிகளைக் குணப்படும்படி அவர் ஏவினார். ஒழுங்குதப்பி நடந்தவர்களை அவர் ஒழுங்குக்குக் கொண்டுவந்தார். மனதினால்கூடப் பாவம் செய்யப்படாது என்று அவர் புத்திசொன்னவர். அவரை விசுவாசித்துப் பின்சென்றவர்கள் ஆரோ, அவர்களுடைய துர்க்குணமெல்லாம் மாறி, அவர்கள் சற்குணம் பெற்றதற்குப் போதுமான ஆதாரம் இருந்தது. இப்படியிருக்க, சாதியை மாறுபாடாக்குகிறவர் என்று அவர்கள் சொன்னது எவ்வளவு பயங்கரம். தன்னைத் தானே கிறிஸ்து இராசா என்று இவன் சொன்னான் என்பது அவர்கள் அவர்மேல் சாட்டின மற்றொரு குற்றம். இயேசுநாதர் ஐந்து அப்பங்களைக்கொண்டு ஐயாயிரம் பேருக்கு அற்புதமாய்ச் சாப்பாடு கொடுத்த சமயத்தில்; சனங்கள் அவரை இராசாவாக்க மனதாயிருந்தார்கள். அவரோ அதை விரும்பாமல், அவர்களை விட்டுவிலகி, தாம் ஒருவராய்ப் பர்வதத்திற்குப் போய்விட்டார். இதனால் அவர் உலக ராசரீகத்தை விரும்பாதவரென்று தெளிவாயிற்று. கோயில் அதிகாரிகளுக்கு முன் அவர் தம்மைக் கிறிஸ்து என்று சொன்னது மெய்தான். அதிலும், அவர் தம்மை உலகத்திலுள்ள ஒரு சிங்காசனத்தில் உட்காரும் உலக ராசா என்று ஒப்புக்கொள்ளாமல், பராபரனுடைய வலது பாரிசத்தில் உட்காரும் பரம ராசா என்று தெரியக்கொடுத்தார். ஆகையால் அவர்மேல் அவர்கள் குற்றம் சொன்னதுபோல அவர் தம்மை இராசாவென்று சொன்னவரே அல்ல. இராயனுக்கு வரிகொடுக்கவேண்டாம் என்று அவர் சொன்னதாகவும் குற்றஞ்சாட்டினார்கள். இது பயங்கரமான பொய். இராயனுக்கு வரிகொடுப்பது நியாயமோ அல்லவோ என்று தம்மைச் சோதிக்கக் கேட்டவர்களுக்கு அவர் என்ன சொன்னாரென்று நமக்குத் தெரியும். அவர்கள் கொண்டுவந்த பணத்தில் போட்டிருந்த சொரூபத்தையும் மேலெழுத்தையும் அவர்களுக்குக் காண்பித்து: இராயனுடையதை இராயனுக்கும் பராபரனுடையதைப் பராபரனுக்கும் செலுத்துங்கள் என்று சொன்னாரல்லவா. ஆகையால், சனங்கள் அவர்மேல் சொன்ன இந்த மூன்றுங் குற்றமும் பொய் என்பது தெளிவு.



பாவிகளாகிய நம்முடைய பேரில் நிற்கும் மெய்யான குற்றங்கள் கணக்கில்லாதவை என்று சொல்லலாம். அவைகளில் ஒன்றுக்காகிலும் நாம் நியாயம் சொல்லக்கூடியவர்கள் அல்ல. அந்தக் குற்றங்களுக்கு நம்மை நீங்கலாக்கவே நம்முடைய இரட்சகர் அநியாயமாய்க் குற்றஞ்சாட்டப்பட்டார். நம்முடைய நன்றிகேடு மிகுதி. அந்தப் பாதகத்துக்கும் மன்னிப்புண்டாக இரட்சகர் யூதசனத்தின் நன்றிகேட்டைச் சகிக்கச் சித்தமானார்.

## 2.

இயேசுநாதர் பொந்தியுபிலாத்துக்குமுன் சத்தியத்துக்குச் சாட்சிகொடுத்தாரென்பதைக் குறித்துச் சிந்திப்போம்.

இப்பொழுது பிலாத்து இயேசுவைத் தனியே அழைத்து, அதிகார வீட்டுக்குள் கொண்டுபோனான். இயேசுவும் துரையும் ஒருவருக்கொருவர் எதிர் நின்றார்கள். பிலாத்து இந்தத் தருணத்திலே தன் ஆத்தும இரட்சிப்புக்கானவைகளை இயேசுவினிடத்தில் கேட்டுப் படித்திருக்கலாம். அவனோ அப்படிச் செய்தவனல்ல; அவன் சாதிப்பெருமையிலும் உத்தியோகப் பெருமையிலும் கண் மூடி நின்றான். அவன் இரட்சகரிடத்தில் கேட்ட கேள்விக்கு அவர் சொன்ன மறுமொழி, அவனும் உலகத்திலுள்ள சகல பாவிகளும் அறிந்துகொள்ளவேண்டிய நல்விஷயமாயிருந்தது. ஏனெனில் அவர்: பொந்தியு பிலாத்துவுக்கு முன் நல்ல அறிக்கையைச் சாட்சியாய் விளங்கப்பண்ணினாரென்று பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறார் (க தீமோ. 6, 14). அந்த நல்ல அறிக்கையைப் பிலாத்து கவனியாதபோதிலும், நாம் அதைக் கவனித்து, மனதில் பத்திரம்பண்ணிக்கொள்வோமாக.

பொந்தியு பிலாத்து இயேசுவை: நீ யூதருடைய இராசாவோ என்று கேட்டான். அவர் தம்மை இராசா என்று சொன்னதாக யூதர் குற்றஞ்சாட்டினதால், ரோம ராச்சியத்துக்கு அவரால் கெடுதல் வருமோ என்று அஞ்சி இப்படிக் கேட்டான். இந்தக் கேள்வியை அவன் யூதருடைய பிரியத்தின் நிமித்தமே கேட்டதாக அவன் தெரிவித்தான். இயேசு திட்டமும் தெளிவுமான உத்தரவை அவனுக்குச் சொன்னார். என் இராச்சியம் இந்த உலகத்தினுடையதல்ல, என் இராச்சியம் இந்த உலகத்தினுடையதானால் நான் யூதருக்கு ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு என் பணிவிடைக்காரர் போராடியிருப்பார்களே; இப்போதோவெனில் என் இராச்சியம் இவ்விடத்தது அல்ல என்பதே அவர் சொன்ன உத்தரவு. இதில் நம்முடைய இரட்சகர் தம்முடைய இராச்சியம் எப்படிப்பட்டதென்று காண்பிக்கிறார். அவர் உலக இராசாவுமல்ல, அவருடைய இராச்சியம் உலகத்தினுடையதும் அல்ல, அவர் இந்த உலகத்தில் கோட்டை கொத்தளங்களைக் கட்டி, சனங்களிடத்தில் இறைவாங்கி அவர்கள் மேல் ஆளுகைசெலுத்த வந்தவரல்ல. மனிதனுடைய குமாரன் ஊழியஞ்செய்வித்துக்கொள்ள வராமல், ஊழியஞ்செய்ய வந்தாரென்று அவர் தாமே சொன்னார். அவர் மனித இருதயத்தில் தம்முடைய சிங்காசனத்தை ஏற்படுத்த வந்தவர். பொன் வெள்ளி முதலிய புறம்பான நன்மைகளை அவர் மனிதருக்காகச் சம்பாதித்துக் கொடுக்கவராமல், அவைகளுக்கு மேலான ஆத்தும நன்மைகளைச் சம்பாதித்துக்கொடுக்க வந்தார். அவர் சம்பாதித்த பாவமன்னிப்புக்குப் பொன் ஈடாகுமா, அவர் சம்பாதித்த நீதிக்கு வெள்ளி இணையாகுமா, அவர் கொடுக்கும் சமாதானத்திற்கு இரத்தினங்கள் சமமாகுமா. அவர் கொடுக்கும் நன்மைகள் இவ்வுலகம் தரக்



கூடாத பரம நன்மைகள். உலக இராசாக்கள் அவைகளைச் சம்பாதிக்கக் கூடியவர்கள் அல்ல. அவருடைய இராசாங்கம் சிலகாலமிருந்து சீக்கிரம் ஒழிந்துபோகும் அநித்திய இராசாங்கமல்ல. அது என்றைக்கும் நிற்கும் நித்திய இராசாங்கம். உலக இராசாங்கம் பாவ சம்பந்தமுள்ளது. நம்முடைய கர்த்தரின் பரம இராசாங்கமோ பாவத்தைப் பகைத்து, விரோதித்து, அழிப்பது. இப்படியே நம்முடைய இராசாவின் இராச்சியம் இந்த உலகத்துக்கு அடுத்ததல்ல என்று அறிந்திருக்கிற நாம் உலக இச்சையை வெறுத்தவர்களாய் ஆத்தும நன்மைகளையும் மோட்ச இராச்சியத்தையும் அவரிடத்தில் தேடுவோமாக. மேலும், அவர் உலக இராசாக்களைப்போல் யுத்த சேவகரையும், யுத்த ஆயுதங்களையும் உடையவரல்ல. அவரை மூன்றரை வருஷக்காலமாய் தொடர்ந்து திரிந்தவர்கள் பலவீனமான எளிய கலிலேயர். அவர்களும் கெத்சேமனே தோட்டத்தில் இயேசு பிடிபட்டவுடன் ஓடிவிட்டார்கள். ஆகையினால் இயேசு உலக இராசா அல்ல என்பது தெளிவாயிற்று. இது விஷயமாய்ப் பிலாத்து நிச்சயம் அடையும்படி அவரை நோக்கி: ஆனால் நீ இராசாவோ என்றான். அதற்கு இயேசு: நீர் சொல்லுகிறபடி நான் அவர்தான். சத்தியத்திற்குச் சாட்சிகொடுக்க நான் பிறந்தேன், இதுக்காக இந்த உலகத்திலே வந்தேன்; சத்தியவானெல்லாம் என் சத்தங்கேட்கிறான் என்றார். அவர் தம்மை இராசாவென்றே வற்புறுத்திச் சொல்லுகிறார், அவர் இராசனாகிய தாவீதின் குலத்தில் பிறந்த இராசா. அவருடைய இராசாங்கத்தை நிலைநிறுத்துவோமென்று பராபரன் வாக்குத்தத்தம் கொடுத்த தாவீதின் குமாரன் இவரே. தானியேல் தீர்க்கதரிசி தமது தரிசனத்தில் கண்ட மனுஷ குமாரனாகிய இராசா இவர்தான். ஆகிலும், யூதர் நினைத்ததுபோல் உலக இராச்சியத்தை ஸ்தாபிக்க வந்த உலகராசா அல்ல. அவர் சத்திய இராசா. சத்தியமென்றால் என்ன. நம்பிக்கைக்குரிய பொருள் எதுவோ, மாறாமல் நிற்கும் பொருள் எதுவோ அதுவே சத்தியம். ஆகையால் அவரே சத்தியம், அவர் வசனம் சத்தியம். அவராலே தான் நமது வேதத்திற்குச் சத்திய வேதம் என்று பெயர். உலகத்தார் எல்லாரும் சத்தியத்தைத் தேடித்திரிகிறார்கள். அது சத்தியம், இது சத்தியம் என்று சொல்லிக்கொள்ளுவார்கள். ஆகிலும், சத்திய வேதத்திற் புகுந்து இயேசுவைக் கண்டுபிடித்தவன் மாத்திரமே சத்தியத்தைக் கண்டுபிடித்தவன். அவர் சத்தியமாயிருப்பதால், அவர் சொல்லும் சாட்சி சத்தியமே. அவர் பராபரனைப்பற்றிச் சத்திய சாட்சிகொடுத்தார். விசேஷமாய்ப் பிதா உலகத்துக்குப் பாராட்டிய சொல்லிமுடியாத சிநேகத்தைக்குறித்து அவர் சாட்சிகொடுத்தார். இஸ்ரவேலருக்குப் பராபரன் கொடுத்த நியாயப்பிரமாணம் அவர்கள் கையிலிருந்தும், அதன் உட்

பொருளை அவர்கள் சரியாய் அறிந்தவர்களல்ல. இயேசுவே நியாயப்பிரமாணத்தின் சரியான பொருளைச் சத்தியசாட்சியாய் வெளிப்படுத்தினவர். மனிதருடைய இரட்சிப்புக்கு வேண்டிய மூலாதாரப் பொருட்களை யெல்லாம் அவர் வெளிப்படுத்திச் சாட்சிகொடுத்தார். தாம் கொடுத்த சாட்சியை நிலைப்பூட்டி, எல்லாச் சத்தியத்திற்குள்ளும் சீஷரை நடத்தும்படி சத்திய ஆவியென்ற பரிசுத்த ஆவியை அனுப்ப வாக்குக்கொடுத்தார். ஆகையால்: நான் சத்தியத்திற்குச் சாட்சிகொடுக்கப் பிறந்தேன், இதற்காக இந்த உலகத்திலே வந்தேன் என்று அவர் சொன்னது மெய். சத்தியத்திற்கு அவர் சாட்சிகொடுத்து, தம்மைப் பராபரனுடைய குமாரனென்று சொன்னதினாலே, அவரைத் தேவதூஷணக்காரனென்று யூதர் சொன்னார்கள். சத்திய சாட்சிக்காகவே தாம் உயிர்கொடுத்து, சத்திய சாட்சியினாலேயே தம்முடைய இராசாங்கத்தை இந்த உலகத்தில் ஸ்தாபிக்கவேண்டுமென்பது அவருடைய ஆசை. ஆகையால் இந்த உலகத்தில் பணத்தினாலாவது, ஆயுதங்களினாலாவது, அதிகாரத்தினாலாவது, படையினாலாவது அவருடைய இராசாங்கம் ஏற்படாது. அவருடைய ஊழியக்காரர் எங்கும் அவரைப்போல் சத்தியத்துக்குச் சாட்சிகொடுப்பதினால் மாத்திரம் அவருடைய இராசாங்கம் ஏற்படும், பரம்பும், நிலைநிற்கும். சத்தியம் பிரசின் இடத்தில் அவருடைய இராச்சியம் நிற்கிறது. அவருடைய இராசாங்கம் நிலைநிற்பதற்கு அவர் சொல்லுகிற யோசனை என்ன. சத்தியவானெல்லாம் என் சத்தம் கேட்கிறான் என்கிறார். இயேசுவாகிய சத்தியத்தை ஏற்றுக்கொள்ளுகிறவனே சத்தியவான். சத்தியவான்கள் மாத்திரம் அவருடைய இராச்சியத்தின் சரியான குடிகள். அவர்கள் கேட்கும் ஒரே சத்தம் இயேசுவின் சத்தம். அவருடைய சத்தம் அவருடைய வசனத்தில் இருக்கிறது. அவர்கள் இயேசுவின் சத்தத்துக்கு ஏற்றபடி எந்த நினைவும் நினைக்கிறார்கள், எந்தப்பேச்சும் பேசுகிறார்கள், எந்தக் காரியத்தையும் நடப்பிக்கிறார்கள்.

பிரியமானவர்களே, இயேசுநாதர் சத்தியத்துக்குச் சாட்சிகொடுத்ததினால் பாடுபட்டார், இரத்தம் சிந்தினார், மரித்தார் என்று நாம் அறிந்திருக்கிறோமே. நாம் சத்தியவான்களாயிருக்கிறோமா. சத்தியமாகிய அவர் நம்மை ஆளும்படிக்கு நம்மை அவருக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறோமா. அவருடைய சத்தத்தை நாம் பிரியமாய்க் கேட்கிறோமா. அவருடைய சத்தத்துக்கு ஒத்தபடி நாம் நடக்கிறோமா. இந்தக் கேள்விகளுக்கெல்லாம் நாம்: இல்லை என்று உத்தரவுசொல்ல வேண்டுமானால், அது எவ்வளவு துக்கமான காரியம். இப்பொழுதே நாம் அவருக்கு முன் விழுந்து, அவரிடத்தில் மன்னிப்பைத் தேடி, அவருடைய பாதத்தைப் பிடித்துக்கொள்ளக்கடவோம். இதுமுதல் அவருடைய சத்தத்தைக்கேட்டு,



நம்முடைய வாக்கினாலும் நடக்கையினாலும் சத்தியத்திற்குச் சாட்சிகொடுக்கக் கடவோம்.

அன்புள்ள இயேசுவே, பரம இராசாவே, சத்தியத்திற்குச் சாட்சிகொடுத்த உம்மை நாங்கள் பணிந்து, ஸ்தோத்திரிக்கிறோம். நீர் எங்களிடத்தில் வாசம்பண்ணும். நாங்கள் எப்பொழுதும் உம்முடைய சத்தத்தைக் கேட்டு, சத்தியத்திற்குச் சாட்சிகொடுக்க எங்களுக்கு ஒத்தாசைசெய்தருளும், சுவாமி. ஆமென்.

---

## ஒருசந்தி காலத்து ௩-ம் ஞாயிறு.

லூக். 11, 14—28.

பிரியமானவர்களே,

இயேசுநாதர் சோதனைக்காரனாகிய பிசாசை மேற்கொண்டார். பிசாசினால் கடினமாய் வாதிக்கப்பட்ட காரன் இவ்விரிபின் மகனைச் சுகமாக்கினார். பிசாசு பிடித்திருந்த அநேகரை விட்டு அதைத் துரத்தினார். இப்படியே தாம் பிசாசின் இராச்சியத்தைக் குலைத்து, பராபரனுடைய இராச்சியத்தை மனிதரண்டைக்குக் கொண்டுவருகிற இரட்சகரென்று பலவிதத்திலும் காண்பித்தார். இன்றைக்குக் குறிக்கப்பட்ட சுவிசேஷவாக்கியத்திலும் நாம் இந்தச் சத்தியத்தைப் பார்க்கலாம். அவர் ஒரு பிசாசைத் துரத்திவிட்டதினால், அவருக்கும் யூதருக்கும் தெய்வாலயத்தில் உண்டான தர்க்கத்தினாலே, அவர் பிசாசின் கிரியைகளைக் குலைத்து நம்மை இரட்சிக்க வந்த இரட்சகரென்பதை வெளிப்படுத்தினார்.

**இயேசு கிறிஸ்து பிசாசின் இராச்சியத்திலிருந்து நம்மை இரட்சிக்கிற இரட்சகராயிருக்கிறார்** என்பதைக்குறித்துத் தியானிப்போம்.

1. **அவர் பிசாசின் இராச்சியத்தைக் குலைத்தார்.**
2. **நம்மைப் பராபரனுடைய இராச்சியத்துக்குக் கொண்டுவந்தார்.**
3. **அதில் நம்மை வைத்துக் காப்பாற்றுகிறார்.**

### 1.

இயேசுநாதர் பிசாசின் இராச்சியத்தைக் குலைத்ததினால் நம்முடைய இரட்சகராக விளங்குகிறார். அவர் ஒரு பிசாசைத் துரத்திவிட்டார்; அது ஊமையாயிருந்தது. அப்போது சம்பவித்ததேதென்றால், பிசாசு புறப்பட்ட பின்பு ஊமையன் பேசினான். அதற்குக் கூட்டங்கள் ஆச்சரியப்பட்டார்கள்

என்று வாசிக்கிறோம். — இயேசுநாதர் பிசாசு பிடித்திருந்த ஒரு மனுஷனை விட்டு அதைத் துரத்தினார். அது அந்த மனுஷனுடைய நாவைக் கட்டியிருந்ததினால் அவன் பேசமாட்டாதிருந்தான். அவனை விட்டுப் பிசாசு ஓடினபின் அவன் பேசக் கூடியவனானான். இந்த அற்புதத்தைச் சாதாரண மனுஷர் செய்யக் கூடாது. ஆகையால் இதை இயேசுநாதர் செய்தபொழுது பெரிய ஆச்சரியமும் பெரிய தர்க்கமுமுண்டாயிற்று. சிலர் பிசாசுகளின் தலைவனாகிய பேயெல்செபூலைக்கொண்டு பிசாசுகளைத் துரத்திவிடுகிறான் என்றார்கள். அஞ்ஞானிகள் வணங்கின ஒரு விக்கிரகத்திற்கு பேயெல்செபூல் என்று பெயர். இதற்கு ஈக்களின் தேவன் என்று அர்த்தம். அந்த விக்கிரகத்தை யூதர் நிந்தை பேசி, அதைப் பேயெல்செபூல் என்று சொன்னார்கள். இந்தப் பெயருக்கு நரகலின் தேவன் என்று அர்த்தம். இந்த விக்கிரகத்தை ஒரு பெரிய பிசாசென்றும், மற்றுப் பிசாசுகளெல்லாம் பயப்படக் கூடிய தலைவனென்றும் யூதர்கள் நினைத்தார்கள். இயேசுநாதர் பேயெல்செபூலின் உதவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறாரென்று அவருடைய சத்துராதிகள் சொன்னது பெரிய அநியாயம். இதனால், அவர்கள் அவரைத் தூஷணித்தார்கள். கிறிஸ்துவோ தாம் பேயெல்செபூலைக் கொண்டு பிசாசுகளைத் துரத்தவில்லையென்றும், தாம் பிசாசின் வல்லமையைக் குலைக்க வந்த பராபரனுடைய குமாரனென்றும் தெரிவித்தார். தனக்குத்தானே விரோதமாகப் பிரிந்த எந்த இராசாங்கமும் பாழாகி எந்த வீடும் விழுந்துபோம். சாத்தானுந் தனக்குத் தானே விரோதமாகப் பிரிந்தால் அதின் இராச்சியம் எப்படி நிற்கும், என்றார். பிசாசுக்கும் ஒரு இராச்சியமுண்டு. அதன் இராச்சியம் நிலைநிற்கவேண்டுமானால், பிசாசுகள் ஒன்றோடொன்று சண்டைபோட்டுக்கொள்ளாமல் சமாதானமாயிருந்து, ஒன்றுக்கொன்று உதவிசெய்யவேண்டும். பேயெல்செபூலென்ற பிசாசு மற்றப் பிசாசுகளைத் துரத்துகிறது நிசமானால், பிசாசின் இராச்சியம் நிலைநிற்காது. ஆகையால், பிசாசைப் பிசாசு துரத்துகிறது என்பது பொய். அது துரத்துகிற பாவனையேயல்லாமல், நிசமல்ல. நம்மைச் சூழ இருக்கிற அஞ்ஞானிகளுக்குள் பிசாசுபிடிக்கிறதும், பூசாரிகள் பிசாசின் உதவியால் பிசாசைத் துரத்துகிறதும் நமக்குத் தெரியாத சங்கதியல்ல. இப்படி ஒருவனைவிட்டு ஓடிப்போகிற பிசாசு, அவனுடைய சரீரத்தை விட்டுவிடுகிறதாய்த் தோன்றினாலும், அவனுடைய ஆத்துமத்தை விடுகிறதில்லை. அவன் ஆத்துமா பிசாசுக்கு அடிமைப்பட்டிருக்கிறதை நாம் பார்க்கிறோம்.

வேதபாரகரும் அவர்களுடைய சீஷர்களும் பராபரனுடைய உதவியால் பிசாசுகளைத் துரத்தியும், இயேசுநாதர் அப்படிச் செய்ததில்லையென்று அவர்கள் சொன்னது பெரிய



அநியாயம். தன்னுடைய இராச்சியத்தைப் பலப்படுத்திக் காப்பாற்றப் பார்த்த பிசாசின் இராச்சியத்தைக் குலைக்க வந்தவர் இயேசுநாதர். அதைக் குறித்து அவர் தெளிவாய்ப் பேசுகிறார். ஆயுதந்தரித்த பலவான் தன் அரண்மனையைக் காக்கிறபோது, அவனுக்கு உள்ளது பத்திரப்பட்டிருக்கும். அவனிலும் பலவான் அவன்மேல் வந்து, அவனைச் செயித்தானேயாகில் அவன் நம்பியிருந்த சகல ஆயுதவர்க்கத்தையும் பறித்துக்கொண்டு, அவன் உடைமைகளைப் பங்கிடுகிறான் என்கிறார். — பிசாசு ஆயுதந்தரித்த பலவான். பாவமுள்ள ஆத்துமாக்களெல்லாம் அவனுடைய அரண்மனை. அவன் தன்னுடைய அடாத போதனைகளினாலும், வீண் பத்தியான சடங்காசாரங்களினாலும், ஏராளமான பணங் காசுகளினாலும், உலகத்தின் ஆடம்பரத்தினாலும், தன் அரண்மனையைக் காபந்து பண்ணிவருகிறான். இது நிசந்தான் என்பதை நம்முடைய தேசத்திலேயே பார்க்கலாம். இங்கே பிசாசுக்கு அரண்மனைகளாகிய அஞ்ஞானிகள் லட்சாதி லட்சம். அதற்குக் கோயில்கள் எத்தனை, குருக்கள் எத்தனை. இந்தப் பொய்க் குருக்களைக் காப்பாற்றுகிறதற்காக ஏற்பட்டிருக்கும் மானியங்கள் எத்தனை. அஞ்ஞானமார்க்கத்தின் கட்டுப்பாடுகளும் வீண் சடங்காசாரங்களும் எவ்வளவென்று சொல்லிமுடியாது. நம்முடைய தேசத்தைப்போல் இன்னம் எத்தனையோ அஞ்ஞான தேசங்களுண்டு. உலகமெங்கும் அஞ்ஞானிகள் ஏராளமாயிருக்கிறார்கள். இதனால், பிசாசு மகா பெரிய பலவானென்று விளங்கும். அவனை மேற்கொள்ள மனுஷபலம் போதாது ஆகையால் மனிதர் அதற்கு வெகுவாய்ப் பயப்படுகிறார்கள். இயேசுநாதரோ பிசாசைப் பார்க்கிலும் பலவான். அவர் பிசாசை ஜெயித்தவர். கெத்சேமனே தோட்டத்திலும் கல்வாரிமலையிலும் அவர் பிசாசோடு பயங்கரமான யுத்தஞ் செய்தார். அவர் சகித்த பாடுகள் கொஞ்சமல்ல. அவர் இரத்த வெள்ளத்தில் புரண்டார். அவர் யுத்தக் கொடுமையில் இடோமென்ற பராக்கிரமசாலியைப்போல் களைப்படைந்தவராய்: தாகமாயிருக்கிறேன் என்றார் (யோ. 15, 18). அவர் கடைசியாகப் பிசாசின் தலையை நசுக்கி: முடிந்தது என்று சொன்னார். அவர் பிசாசை ஜெயித்ததோடே அவனுடைய ஆயுதவர்க்கத்தையும் பறித்துக்கொண்டார். நாம் கைக்கொள்ளாத பராபரனுடைய கற்பனைகளைப் பிசாசு நமக்கு விரோதமான ஆயுதமாக்குகிறான். அவன் அதை நமக்குக் காண்பித்து, நமக்குள்ளே அவிசுவாசத்தையும் அவநம்பிக்கையையும் உண்டாக்குகிறான். மனுஷனே, நீ பராபரனைச் சுவாமி சுவாமியென்று கூப்பிடுகிறாயே; அவர் உன்னைச் சேர்த்துக்கொள்வாரா. அவர் கொடுத்த கற்பனைகளின்படி நீ நடக்கவில்லையே. நீ பாவியாயிருக்கிறபடியால் நீ எனக்கே சொந்தம்.

நான் தான் உன் சுவாமி என்று சொல்லி, தன் இராச்சியத்தைப் பலப்படுத்திக்கொள்ளுகிறான். இயேசுநாதரோ, நம்முடைய பிணையாளியாகி, நமக்குப் பதிலாகப் பராபரனுடைய கற்பனைகளைச் சரியாய்க் கைக்கொண்டார். இதனால் பிசாசினுடைய ஆயுதம் போயிற்று. மேலும், மரணமும் பிசாசுக்கு ஒரு ஆயுதம். மரணத்தைப் பயங்கரமாய்க் காட்டினதினால், அநேகரைப் பிசாசு பயமுறுத்திக் கெடுத்துப்போடுகிறது. இயேசுநாதரோ நம்முடைய பாவங்களுக்காக மரணமடைந்ததினாலே மரணத்தின் கொடுக்கை உடைத்துப்போட்டார். அவர் அதன் உடைமைகளைப் பங்கிட்டார். பொல்லாத பிசாசு நம்முடைய பொக்கிஷங்களைத் திருடிக்கொண்ட கொள்ளைக்காரன். அது நம்முடைய சந்தோஷத்தையும் சமாதானத்தையும் பாக்கியத்தையும் பரிசையும் பிடுங்கிக்கொண்டது. இயேசுநாதரோ இவைகளெல்லாவற்றையும் நமக்குத் திரும்பச் சம்பாதித்துக் கொடுத்தார். பிசாசு மேன்மைபாராட்டக் கூடிய ஒரு காரியமும் அதற்கு இல்லை. அதன் வல்லமை போயிற்று, அதன் மகிமை போயிற்று, அதன் இராச்சியமும் போயிற்று. இயேசுநாதர் பிசாசின் இராச்சியத்தைக் குலைத்தார் என்பது முக்கியமாய் அவருடைய உயிர்த்தெழுதலால் தெளிவாம். தலை நசுங்குண்ட ஒரு பாம்பானது தன் உடலை அங்கும் இங்கும் அசைத்து ஆட்டுவதுபோல மாத்திரம் பிசாசு இருக்கிறது. அது வெல்லப்பட்ட பேய் என்று அறிந்து நாம் ஆறுதலடைவோமாக.

## 2.

இயேசுநாதர் பராபரனுடைய இராச்சியத்துக்கு நம்மைக் கொண்டுவந்ததினால், அவர் பிசாசின் இராச்சியத்திலிருந்து நம்மை இரட்சிக்கிறவர் என்பது விளங்கும்.

நான் பராபரனுடைய விரலினால் பிசாசுகளைத் துரத்திவிட்டேனேயாகில், பராபரனுடைய இராச்சியம் அல்லவோ உங்கள் கிட்ட வந்தது என்று கர்த்தர் சொல்லுகிறார். பராபரனுடைய விரல் என்ற வார்த்தைக்குப் பதிலாக மத்தேயு சுவிசேஷத்திலே பராபரனுடைய ஆவியென்று எழுதியிருக்கிறது. இயேசுநாதர் பிசாசினாலே பிசாசைத் துரத்தாமல் வல்லமையுள்ள பராபரனுடைய ஆவியினாலே அவர் பிசாசுகளைத் துரத்தினார். பராபரனுடைய ஆவியானவர் எங்கே வருகிறாரோ, அங்கே பராபரனுடைய இராச்சியம் வருகிறது. எவனுக்குள் பராபரனுடைய ஆவி பிரவேசிக்கிறாரோ, அவன் பிசாசினுடைய இராச்சியத்திலிருந்து பராபரனுடைய இராச்சியத்துக்கு வருகிறான். ஞானஸ்நானத்தில் பரிசுத்த ஆவியானவர் தண்ணீரோடு ஊற்றப்படுவதால், அதிலே பராபரனுடைய விரல் இருக்கிறது.



ஞானஸ்நானம் பெறுகிறவனிடத்திலே பிசாசு துரத்தப்படுகிறது. அப்படியே பராபரனுடைய வசனம் எங்கே பிரசங்கிக்கப்படுகிறதோ, அங்கே பராபரனுடைய விரல், அங்கே பராபரனுடைய ஆவியானவர் வேலை செய்கிறார். நாமெல்லாரும் பிசாசின இராச்சியத்தில் பிறந்தவர்கள். கர்த்தரோ நமது மேல் கிருபைவைத்தார். நம்மை அந்தகாரத்தின் இராச்சியத்திலிருந்து தம்முடைய ஆச்சரியமான வெளிச்சத்துக்கு வரவழைத்தார். நாம் இப்பொழுது பராபரனுடைய இராச்சியத்திலிருப்பது அவருடைய விரலினால் நமக்குக் கிடைத்த சிலாக்கியம். அவர் இன்னமும் நம்முடைய தேசத்திலுள்ள அஞ்ஞானிகளைக் குணப்படுத்தித் தம்முடைய சபையில் சேர்க்கிறதினாலே பிசாசின் இராச்சியத்திலிருந்து யாவரையும் இரட்சிக்கிற இரட்சகரென்று காண்பிக்கிறார். நம்முடைய தேசத்திலுள்ள அஞ்ஞானமார்க்கம் பிசாசின் பலத்த கோட்டை. அது கானான் தேசத்திலிருந்த எரிகோ பட்டணத்துக்கு ஒப்பாயிருக்கிறது. அந்த எரிகோ பட்டணத்தை இடிக்க இஸ்ரவேலர் செய்யவேண்டியதாயிருந்ததென்ன. அவர்கள் தங்கள் கைகளில் பாறைக் குச்சிகளையும் மண்வெட்டிகளையும் குந்தாலிகளையும் பிடித்து மதிலை இடிக்கப் பராபரன் அவர்களுக்கு உத்தரவு கொடுக்கவில்லை. அவர்கள் எக்காளங்களை ஊதும் ஆசாரியரோடு பட்டணத்தைச் சுற்றி வரவேண்டுமென்றும், இப்படி ஏழுநாள் வந்தபின் மதில் தானே இடிந்துவிழுமென்றும் பராபரன் சொன்னார். அவர் சொன்னபடியேயும் நடந்தது. நம்முடைய தேசத்திலுள்ள அஞ்ஞானக் கோட்டை விழும்படி பராபரனுடைய வசனமாகிய எக்காளம் தொனிக்கிறது. இந்தத் தொனியினால், பராபரனுடைய ஆவியானவர் பிசாசின் கோட்டையைத் தகர்க்கிறார், அதன் மதில்கள் இடிகிறது. ஒரு அஞ்ஞானி ஞானஸ்நானம் பெறும் ஒவ்வொரு சமயத்திலும் அந்தக் கோட்டையின் ஒரு கல் இடிந்துவிழுகிறதென்று சொல்லலாம். இவ்விதமாக நம்முடைய அருமை இரட்சகர் நம்மையும் நம்முடைய தேசத்தாரையும் பிசாசின் இராச்சியத்திலிருந்து பராபரனுடைய இராச்சியத்துக்குக் கொண்டுவருகிற அதிசயத்தைப் பார்க்கலாம்.

நாம் பிசாசின் கட்டுகளுக்கு நீங்கலானவர்களென்பதற்கு அடையாளமென்ன. பிசாசு புறப்பட்ட பின்பு ஊமையன் பேசினான். பிசாசின் கட்டுக்கு நீங்கலாகிப் பராபரனுடைய இராச்சியத்துக்குள் வந்தவர்கள் கர்த்தரைக் குறித்துப் பேசுகிறார்கள். அவரை எல்லாருக்கு முன்பாக அறிக்கையிடுகிறார்கள், அவரை மகிமைப்படுத்துகிறார்கள். மேலும், என்னுடனே இராதவன் எனக்கு விரோதமாயிருக்கிறான்; என்னுடனே சேர்க்காதவன் சிதறடிக்கிறானென்று நம்முடைய இரட்சகர் சொல்லுகிறார். இந்த

வார்த்தைகளால் அவர் நமக்குப் போதிக்கிறதென்ன. பிசாசின் இராச்சியத்தை விட்டு வந்தவன் இரண்டு காரியங்கள் செய்யவேண்டும். கிறிஸ்துவோடிருப்பது ஒன்று, கிறிஸ்துவோடு சேர்ப்பது ஒன்று. கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் இராச்சியத்துக்கு வந்தபின் பிசாசோடாவது அதன் சடங்குகள் ஆடம்பரங்களோடாவது அவர்களுக்குச் சம்பந்தமிருக்கக் கூடாது. அவர்கள் நினைவு பேச்சு செய்கை எல்லாம் கிறிஸ்துவோடிருக்கவேண்டும். அஞ்ஞானிகளோடு சேர்ந்துகொண்டு அவர்களுக்கு உடந்தையாயிருக்கிறவர்களும், அஞ்ஞான வழக்கங்களையும் சடங்குகளையும் அநுசரிக்கிறவர்களும் கிறிஸ்துவோடிருக்கிறதில்லை. அவர்கள் அவருக்கு விரோதமாயிருக்கிறார்கள். நமக்குள் அப்படிப்பட்டவர்கள் இல்லையோ என்று சோதித்துப்பார்ப்போமாக. அன்றியும், நாம் கிறிஸ்துவோடே மற்றவர்களையும் சேர்க்கவேண்டியவர்களாயிருக்கிறோம். இயேசுநாதரை மேசியாவென்று கண்டடைந்த அந்திரேயா என்ன செய்தார். தன் சகோதரனாகிய சீமோனைக் கண்டு: மேசியாவைக் கண்டுபிடித்தோம் என்று அவருக்குச் சொன்னார். அதனால் அவர் இயேசுவுக்குச் சீஷன் ஆனார். இயேசுவின் சீஷனாகிய பிலிப்பு என்ன செய்தார். தன் சிநேகிதனாகிய நாத்தான்வேலைக் கண்டு, அவருக்கு இயேசுவைக் குறித்துச் சொன்னார். இதனால் நாத்தான்வேல் ஒரு சீஷன் ஆனார் (யோவான் 1). கிறிஸ்துவண்டைக்கு வந்து அவருடைய இரட்சிப்பின் நன்மைகளை அநுபவிக்கிற நாமெல்லாரும் இப்படி செய்திருக்கிறோமா. நாம் கிறிஸ்துவினுடைய இராச்சியத்திலே எத்தனை பெயரைச் சேர்த்திருக்கிறோம். அவரோடு அநேக ஆத்துமாக்களைச் சேர்க்கிறதற்குக் கவலைப்படாதவர்களும் அதற்காக ஜெபம் பண்ணாதவர்களும், சிதறடிக்கிறவர்களாயிருக்கிறார்கள். இது நம்மை இரட்சித்த ஆண்டவருக்கு எவ்வளவு வீசனம். இம்மட்டும் கிறிஸ்துவோடு உண்மையாய்த் தரித்திராதவர்களும் கிறிஸ்துவோடு ஆத்துமாக்களைச் சேர்க்காதவர்களும் இப்பொழுது வெட்கப்படுவார்களாக. அவர்கள் தங்கள் பாவங்களுக்காக அழுது, கர்த்தரிடத்திலே மன்னிப்புக் கேட்பார்களாக.

3.

இயேசுநாதர் பராபரனுடைய இராச்சியத்தில் நம்மை வைத்துக் காப்பாற்றுவதினால் நம்மைப் பிசாசின் இராச்சியத்திலிருந்து இரட்சித்த இரட்சகரென்று தெரியக் கொடுக்கிறார்.

அசுத்த ஆவி மனுஷனை விட்டுப் புறப்படும்போது, அது தண்ணீரற்ற இடங்களில் இளைப்பாறுதலைத் தேடித்திரிந்து, கிடையாமல் போய்: நான் விட்டுப் புறப்பட்டு வந்த என் வீட்



டுக்குத் திரும்புவேனென்று சொல்லி, வரும்போது அதைப் பெருக்கிச் சிங்காரிக்கப்பட்டதாகக் கண்டுபிடிக்கும். அப்போது அது போய் தன்னிலும் பொல்லாத வேறே ஏழு ஆவிகளைக் கூட்டிக்கொண்டு, உட்பிரவேசித்து, அங்கே குடியிருக்கும்; அப்போது அந்த மனுஷனுடைய பிற்காரியங்கள் முற்காரியங்களைப் பார்க்கிலும் கேடாம் என்றார். — எந்த மனுஷனை விட்டுப் பிசாசு துரத்தப்படுகிறதோ, எவன் பிசாசின் கட்டுகளுக்கு நீங்கலானானோ, அவன் மகா எச்சரிக்கையாயிருக்கவேண்டும். ஏனென்றால், பிசாசு அங்குமிங்கும் அலைந்து திரிந்து, மறுபடியும் அவனண்டைக்கே வர ஆசைப்படுகிறது. அது தான்மாத்திரமல்ல, தன்னோடு வேறே ஏழு பிசாசுகளைக் கூட்டிக்கொண்டு வருகிறது. இதற்கு விலக்கமாய்க் கர்த்தர் நம்மைக் காக்க விரும்புகிறார். அவர் நம்மைக் காக்காதேபோனால் நாம் அநேக பிசாசுக்களுக்கு அடிமைகளாவோம். அப்படி நாம் ஆகாதபடிக்கு கர்த்தர் தம்முடைய வார்த்தையினால் நம்மை எச்சரிக்கிறார். நிற்கிறவனாகத் தன்னை எண்ணுகிறவன் விழாதபடிக்குப் பார்க்கக் கடவான் என்பது அவருடைய எச்சரிப்பு வார்த்தைகளில் ஒன்று. இந்த எச்சரிப்புக்குக் கீழ்ப்படிந்து நாம் என்னசெய்யவேண்டும். விழித்து ஜெபம்பண்ணவேண்டும். பேதுரு அப்போஸ்தலன் இரட்சகருடைய எச்சரிப்பைக் கவனியாமலும், விழித்திருந்து ஜெபம்பண்ணாமலும் போனபடியால், அவரை மறுதலித்தார். ஜெபம்பண்ணுவதோடு கூடப் பராபரனுடைய வசனத்தைக் கையாடுவதும் அவசியம். எவன் ஜெபத்தை அசட்டைபண்ணுகிறானோ, எவன் பராபரனுடைய வசனத்தை அசட்டைபண்ணுகிறானோ, அவன் தன் இருதயத்தைப் பிசாசுக்குச் சிங்காரிக்கிறான். இருளின் பிரபுவாகிய பிசாசுக்கு ஏற்றபடி அவனுடைய இருதயம் இருளடைந்திருக்கும். இருண்ட மண்டபத்தில் வௌவால் வந்து அடைவதுபோல், இருண்ட இருதயத்தில் பிசாசு வந்து குடிகொள்ளும். அப்படிப்பட்ட இருதயத்திலே பிசாசு தனக்கு ஒரு பெரிய சிம்மாசனம் போட்டு, அங்கே அநேகம் பிசாசுகளோடு வாசம்பண்ணும். எந்த இருதயத்துக்குள் பிசாசு வாசம்பண்ணுகிறதோ, அந்த மனுஷனுக்கு ஐயோ. அவன் பாவத்தோடு பாவத்தைக் கூட்டுகிறான், அவன் பேரில் சாபத்தின்மேல் சாபம் வரும். அவன் புறம்பான ஆசீர்வாதங்களையும் உள்ளான ஆசீர்வாதங்களையும் இழந்துபோவான். அவன் பரிதாபமாய் மரித்து, பயங்கரமான நரகத்துக்குள் பிரவேசிப்பான்.

இயேசுநாதர் நம்மை எச்சரிப்பதும் காப்பதுமான வார்த்தைகளைச் சொல்லும்பொழுது ஒரு ஸ்திரீ சத்தமிட்டு, அவருடனே: உம்மைச் சுமந்த கெர்ப்பமும் நீர் பாலுண்ட முலைகளும் பாக்கியமுள்ளதென்றாள். அவரோவெனில்: பராபரனுடைய

வார்த்தையைக் கேட்டு, அதைக் காத்துக்கொள்ளுகிறவர்களே பாக்கியவான்கள் என்றார். — இயேசுநாதரைப் பெற்ற தாய் பாக்கியவதிதான். அவள்: இதுமுதல் எல்லாச் சந்ததிகளும் என்னைப் பாக்கியவதி என்பார்கள் என்று அறிக்கையிட்டாள். விசுவாசித்த அவள் பாக்கியவதி என்று எலிசபேத்து மரியாளைக் குறித்துச் சொன்னாள். ஆகிலும், பராபரனுடைய வசனத்தைக் கேட்டு அதைக் காத்துக்கொள்ளுகிறதினாலேதான் யாவருக்கும், இயேசுவின் தாயாகிய மரியாளுக்குங்கூட மெய்யான பாக்கியம் கிடைக்கும். பராபரனுடைய வசனத்தைத் தங்கள் மனதிலே வைத்துக் கொள்ளுகிறவர்கள் விசுவாசத்தில் வளருவார்கள். விசுவாசத்தில் வளருகிறவர்கள், தெய்வபத்தியில் அதிகரிப்பார்கள். தெய்வபத்தியோ இச்சீவனுக்கும் வருஞ்சீவனுக்கும் வாக்குத்தத்தம் பெற்றிருக்கிறது. தெய்வபத்தியுள்ளவர்களிடத்தில் பிசாசு வாசஞ்செய்யாமல் ஓடிப்போம். தேவதூதர்கள் அவர்களைச் சூழ்ந்திருந்து அவர்களைக் காப்பாற்றி அவர்களுக்குப் பணிவிடை செய்வார்கள். பராபரனுடைய வசனம் ஆவியின் பட்டயமாயிருப்பதால் அதற்குப் பிசாசு பயப்படும். அதைத் தங்கள் இருதயத்திலும் நாவிலும் விசுவாசத்தினால் காத்துக்கொள்ளுகிறவர்களுக்குப் பிசாசு பயந்து அவர்களை விட்டு ஓடிப்போம். அவர்கள் பாவத்திற்கு விலகுவது லேசாயிருக்கும்.

அன்புள்ள இயேசுநாதரே, நீர் பிசாசின் இராச்சியத்தை நிர்மூலமாக்கி, அதன் வல்லமையிலிருந்து எங்களை மீட்டுக்கொண்டதற்காக உமக்கு ஸ்தோத்திரம். எங்களை உம்முடைய இராச்சியத்தில் மரணபரியந்தம் வைத்துக் காப்பாற்றியருளும், சுவாமி, ஆமேன்.

---

## ஒருசந்தி காலத்து நாலாம் வெள்ளிக்கிழமை.

பாடுபட்ட சரித்திரம் 98, 101, 104—107 a

ஆனால் பண்டிகைதோறும் காவல் பண்ணப்பட்டவர்களில் சனம் வேண்டுமென்று கேட்கிற ஒருவனை அவர்களுக்கு விடுதலையாக்கத் துரைக்குப் பழக்கமாயிருந்தது. அப்போதோவெனில் காவல்பண்ணப்பட்டவர்களில் பரபா என்னப்பட்ட பேர்போன ஒருவன் அவர்களுக்குள் இருந்தான். பரபாவோவெனில் கள்ளனாயிருந்து, பட்டணத்தில் நடந்த ஒரு கலாதியிலே கொலைசெய்து, கலாதிக்காரருடனே கூடக் கட்டிக் காவலில் வைக்கப்பட்டிருந்தான். அவர்கள் கூடியிருக்கையில் கும்பு சத்தமிட்டு, எப்போதுந் தங்களுக்குச் செய்ததின்படியே அவன் செய்யவேண்டுமென்று கேட்கத்துவக்கினார்கள். பிரதான ஆசாரியரும் மூப்பருமோவென்றால், பரபாவை விடக் கேட்பதற்கும், இயேசுவையோ கொல்வதற்குங் கும்புகளைச் சம்மதப்படுத்தினார்கள். துரை மறுவுத்தரமாக அவர்களுடனே: இந்த இருவரில் எவனை நான் உங்களுக்கு விடுதலைபண்ணவேண்டுமென்றான். அவர்கள்: பரபாவை என்றார்கள். திரள் கூட்டமெல்லாம் இவனைப் போக்கிவிட்டு, பரபாவை விடுதலையாக்கும் என்று கூக்குரலிட்டார்கள். பிலாத்து ஒன்றும் ஆகாமல், கலகம் அதிகப்படுகிறதென்று கண்டு, தண்ணீரை அள்ளி, கும்புக்கு முன்பாகக் கைகளைக் கழுவி: இந்த நீதிமானுடைய இரத்தத்துக்கு நான் குற்றமற்றவன், நீங்களே பாருங்களென்றான். சனமெல்லாம் பிரத்தியுத்தாரமாக: அவனுடைய இரத்தம் எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக என்றார்கள். அப்போது பிலாத்து இயேசுவைப் பிடித்து, வாரினால் அடிப்பித்தான். அப்போது துரையின் சேவகர் இயேசுவை அதிகாரச் சாலையிலே கொண்டுபோய், சேனையையெல்லாம் அவர்மேல் கூட்டி, அவர் வஸ்திரங்களைக் களைந்து, சிவப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தி, முள்ளுக்களால் ஒரு முடியைப் பின்னி, அவர் சிரசின்மேல் வைத்து, அவர் வலது கையில் ஒரு கோலைக் கொடுத்து, அவருக்கு முன்பாக முழங்காற்படியிட்டு, அவரை மினவத் துவக்கி: யூதருடைய இராசாவே, வாழ்க என்று அவரைப் பரிகாசம்பண்ணி, அவர்மேல் துப்பி, கோலை எடுத்து அவர் சிரசில் அடித்து, அவரை அறைகளால் அறைந்தார்கள். அப்போது மறுபடியும் பிலாத்து வெளியே வந்து அவர்களுடனே: இதோ, நான் அவனில் ஒரு குற்றத்தையுங் காணேனென்று நீங்கள் அறியும்படிக்கு, உங்களுக்கு அவனை வெளியே கொண்டுவருகிறேன் என்றான். இயேசுவோவெனில் முண்முடியுஞ் சிவப்புச் சட்டையுந் தரிக்கப்பட்டவராக வெளியே வந்தார். அப்போது அவர்களுடனே: இதோ, இந்த மனுஷன் என்றான். பிரதான ஆசாரியர்களும் வேலைக்காரரும் அவரைக் கண்டபோதோவெனில்: சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும் என்று கூப்பிட்டார்கள்.



பிரியமானவர்களே,

இயேசுநாதரிடத்தில் பிலாத்து ஒரு குற்றமும் கண்டதில்லை. நான் அவனில் ஒரு குற்றமுங் காணேன் என்று அவனே யூதருக்குச் சொன்னான். ஆகையால் அவரை விடுதலைசெய்ய அவன் மனச்சாட்சி திட்டமாய் அவனுக்குச் சொன்னது. அவனோ ஜனங்களுக்குப் பயந்து, நியாயத்தின்படி செய்யாமல், உபாயதந்திரத்தினால் அவரை விடுதலைபண்ணப் பிரயாசப்பட்டான். விசாரணையில் இயேசு கலிலேயன் என்று அறிந்து, அவரை ஏரோதேயண்டைக்கு அனுப்பினான். ஏரோதே அவரிடத்தில் ஒரு குற்றமுங் காணாமல், அவரை அற்பமாக எண்ணி, பரிகாசம்பண்ணி, மினுக்குள்ள வஸ்திரத்தை அவருக்குத் தரிப்பித்து, அவரைத் திரும்பப் பிலாத்துவண்டைக்கு அனுப்பினான். இந்தத் துரையின் வீட்டில் கர்த்தர் அநேக பாடுகளைப் பட்டார்.

### பொந்தியுபிலாத்துவின் கீழ்ப் பாடுபட்ட இயேசுவைப் பற்றி நாம் அறிந்துகொள்வதென்ன.

1. அவர் தமது சனத்தினால் தள்ளப்பட்டார்.
2. நம்முடைய பாவத்தினால் வாதைப்பட்டார்.

1.

இயேசுநாதர் பொந்தியுபிலாத்துவுக்கு முன் தமது சனத்தினால் தள்ளப்பட்டார்.

பண்டிகைதோறும் யூதர்கள் கேட்டுக்கொள்ளும் ஒரு கைதியை விடுதலைபண்ணுவது துரைக்கு வழக்கம். இந்த வழக்கத்தை அனுசரித்து, இயேசுவை விடுதலைபண்ணலாம் என்று எண்ணங்கொண்ட பிலாத்து சனங்களுக்கு முன் இயேசுவையும், மற்றொரு கைதியையும் நிறுத்தினான். அந்தக் கைதியின் பேர் பரபா. அவன் பேர்போன கள்ளன், கலாதிக்காரன், கொலைபாதகன். இவனையும் இயேசுநாதரையும் சமமாய் நிறுத்தினான். பிசாசின் மகனும், பராபரனுடைய சுதனும் ஒன்றாய் நின்றார்கள். பிலாத்து: நான் எவனை உங்களுக்கு விடுதலையாக்கவேண்டும்; பரபாவையோ, இயேசுவையோ என்று கேட்டான். பிரதான ஆசாரியரும் மூப்பரும் இயேசுவைக் கொன்று பரபாவை விடுதலைபண்ணும்படி கேட்பதற்குச் சனங்களைச் சம்மதிப்படுத்தினார்கள். ஆகையால் சனங்களெல்லாரும் இயேசுவைப் போக்கிவிட்டுப் பரபாவை விடுதலையாக்குமென்று கூக்குரலிட்டார்கள். பெரியவர்கள் போனவழியே மற்ற சனங்களும் போனார்கள். பிசாசு அவர்கள் கண்களைக் குருடாக்கிற்று. இயேசு இரட்சகர் தங்களுக்குச் செய்த நன்மைகளையெல்லாம் மறந்தார்கள். பரபா என்ற கள்ளனால் வந்த கேடுகளை யூதர் கண்டார்கள், வெகுபேர் சொல்லக்கேட்டார்கள், தாங்கள் தாமே பட்டார்கள். என்றாலும், அவனையே விடுதலைபண்ணக் கேட்கிறார்கள். சில தினங்களுக்கு முன்னே: தாவீதின் குமாரனுக்கு ஓசியன்னா என்று பாடினவர்கள் இன்று அவரைத் தள்ளி, பரபாவை விடுவித்து, இயேசுவைச் சிலுவையில் அறையும்படி கேட்கிறார்கள். இயேசுவினால் நலம் பெற்ற மனிதர் எத்தனைபேரோ அந்தக் கூட்டத்திலிருந்தும், அவர்களும் மற்றவர்களோடு கூடிக்கொண்டு, இயேசுவைத் தள்ளிவிட்டார்கள். இது மகா விசனமான காரியம்.

அந்த நாளில் நாங்கள் இருந்திருப்போமானால் இப்படி செய்திருக்கமாட்டோமென்று நம்மில் சிலர் சொன்னாலும் சொல்லுவார்கள். நீங்கள் யாரைத் தெரிந்துகொள்ளுவீர்கள், பரபாவையோ இயேசுவையோ என்கிற கேள்வி பெரிய வெள்ளிக்கிழமையோடே தீர்ந்ததல்ல. இன்றைக்கும் அது நமக்குப் போடப்படுகிற கேள்வி. நம்முடைய ஒவ்வொரு செய்கையும் நாம் அதற்குச் சொல்லும் மறுமொழியாகும். நாம் செய்கிற ஒவ்வொரு பாவமும் பரபாவை விடுதலைபண்ணி, இயேசுவைச் சிலுவையிலறையும் என்று சொல்லுவதற்குச் சரியாம். ஒவ்வொரு பாவ இச்சையும், பொருளாசை, பெருமை, கோபம்



முதலிய துர்க்குணங்களுக்கு இடங்கொடுக்கும் ஒவ்வொரு சமயமும், பரபாவை விடுதலைபண்ணுவதற்குச் சரி. கர்த்தருடைய நாளில் வேலைக்குப் போகிறதா, கோயிலுக்குப் போகிறதா. வேலைக்குப் போ என்று வயிறு சொல்லும், கோயிலுக்கு வா என்று கர்த்தர் சொல்லுகிறார். கோயிலுக்குப் போகாமல், வேலைக்குப் போகிறவன் இயேசு எனக்கு வேண்டாம், பரபா எனக்கு வேண்டும் என்று சொல்லுகிறவனாயிருப்பான். கொஞ்சம் பணத்தை அல்லது காசை அல்லது நெல்லை அல்லது வேறொரு காரியத்தைத் திருட ஒரு சமயம் வாய்க்கிறது. இயேசுவைச் சிநேகிக்கிறவன் திருட்டுக்கு இடங்கொடுக்க மாட்டான். திருட்டுக்கு இடங்கொடுக்கிறவன் எவனோ, அவன் பரபாவைத் தெரிந்துகொள்ளுகிறான். நமக்குப் பாவம் செய்யச் சமயம் நேரிடும்பொழுதெல்லாம் நாம் எச்சரிக்கையாயிருந்து, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு விசனம் உண்டாகாதபடி நடந்துகொள்வோமாக.

நான் யாரை விடுதலைபண்ணுவேன், பரபாவையோ இயேசுவையோ என்று பிலாத்து கேட்டபொழுது பாவிகள்மேல் இரக்கமுள்ள பராபரன் பரபாவை விடுதலைபண்ணி, இயேசுவைச் சிலுவையில் அறையச் சித்தமானார். பரபா ஆகாமுக்கும் அவன் சந்ததியாருக்கும் படம். இயேசு பராபரனுடைய நேசகுமாரன். பாவியை விடுதலையாக்கப் பராபரன் தம்முடைய குமாரனைப் பாவமாக்கினார். அவரை மரணத்துக்கு ஒப்புவித்தார். இயேசு விடுதலையாகியிருந்தால், பாவிகளுக்கு விடுதலையில்லை. இயேசு சிலுவையில் அறையப்பட்டதனால்; பாவி தேவ கோபத்துக்கும் சாபத்துக்கும் நீங்கலானான்.

நான் யாரை விடுதலைபண்ணுவேன், பரபாவையோ இயேசுவையோ என்று பிலாத்து கேட்டபொழுது நம்முடைய அருமை இரட்சகர்: பிலாத்துவே, பரபாவை விடுதலைசெய், என்னைச் சிலுவையில் அறைந்துபோடு என்று சொல்லுகிறவர்போல் தம்முடைய வாயைத் திறவாமல், தமக்குரிய நியாயங்களைச் சொல்லாமல், மௌனமாயிருந்தார். நமக்காகத் தம்மையே மரணத்துக்கு ஒப்புவித்த இயேசுவுக்கு நாம் என்ன சுதி செலுத்துவோம்.

எனக்கும்மைத் தந்தீரே, ஏற்றதை நான் செய்து வாறேன்;
உமக்கென்னை நானுந்தாறேன், எதிரானதைப் பகைப்பேன்,
உம்மைபற்றி உமக்கே இயேசுவே, உம்மில் நிலைப்பேன்

என்று சொல்லி நம்மை அவருக்கு ஒப்படைப்பதே தகுதி.

2.

இயேசுநாதர் பொந்தியு பிலாத்துவின் வீட்டில் நம்முடைய பாவத்தினால் வாதைப்பட்டார்.

சனங்கள் பரபாவை விடுதலைபண்ணாமல் இயேசுவை விடுதலைசெய்வார்கள் என்று நினைத்திருந்த பிலாத்து, காரியம் வேறுவிதமாய் முடிந்ததைப் பார்த்தபொழுது தண்ணீரை அள்ளிக் கைகழுவி: இந்த நீதிமானுடைய இரத்தத்துக்கு நான் குற்றமற்றவன், நீங்களே பாருங்கள் என்றான். சனமெல்லாம் பிரத்தியுத்தாரமாக: அவனுடைய இரத்தம் எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக என்றார்கள். இரட்சகருக்கு அநீத தீர்ப்பைப் போடும் பழி தன்மேல் சுமருகிறதென்று அறிந்துகொண்ட பிலாத்து, தண்ணீரால் கைகழுவிப் பழிக்கு நீங்கலாகப் பார்த்தான். இதனால் பழி அவனை விடுமா. சனங்களும் அந்தப் பழியைத் தங்கள்மேல் சுமத்திக்கொண்டார்கள். எருசலேம் பட்டணம் அழிந்த சரித்திரமும், யூதசாதியின் பின் சரித்திர முழுவதும் இந்த இரத்தப் பழியின் சரித்திரமென்று சொல்லலாம்.

யூத சனங்களின் மனதை ஒருவிதமாய் இளகப்பண்ண யோசனை கொண்ட பிலாத்து அவரை வாரினால் அடிப்பதற்கு அநியாயமாய் உத்தரவு செய்தான். யூதர்கள் தாமே அவரை அடித்திருந்தால், நாற்பது அடிக்குமேல் அவருக்கு விழுந்திராது (5 மோ. 25, 2. 3). இயேசுவோ ரோம சேவகரால் அடிபட்டதனால், அவர் பட்ட அடிகளுக்குக் கணக்கில்லை. மூடரின் முதுகுக்கு அடிகள் ஆயத்தமாயிருக்கும் (வாக். 19, 29). நம்முடைய இரட்சகரோ அளவற்ற ஞானமுள்ள ஆலோசனைக்காரராயிருந்தும், நம்மை ஞானிகளாக்கும்படி ஒரு மூடனைப்போல் அடியுண்டார். எசமானின் சித்தத்தை அறிந்தும் அதின்படி செய்யாத வேலைக்காரன் அநேக அடிகளால் அடிக்கப்படுவது நியாயம் (லூக். 12, 47). இயேசுநாதரோ பராபரனுடைய கற்பனைகளைச் சரிவர நிறைவேற்றின நீதியுள்ள ஊழியக்காரர். அவர் நம்முடைய மீறுதல்களினிமித்தம் காயப்பட்டு, நமது அக்கிரமங்களினிமித்தம் நொறுக்கப்பட்டார். நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் இறங்கிற்று. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம் (எசா. 53, 5). நாம் நம்முடைய முதுகை அடிக்கிறவர்களுக்கு மறைபோமென்று (எசா. 50, 6) அவர் கொடுத்த வார்த்தைப்பாட்டை நம்முடைய நிமித்தம் நிறைவேற்றி, மகா வேதனையாய் வாரடியுண்டார்.

சேவகர் இயேசுவை வாரால் அடித்தபின் அவர் வஸ்திரங்களைக் களைந்து, சிவப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தி, முள்ளுகளால் ஒரு முடியைப் பின்னி, அவர் சிரசின்மேல் வைத்து, அவர் வலது கையில் ஒரு கோலைக் கொடுத்து, அவரைப் பரிகாசம்பண்ணினார்கள். அப்பொழுது அவருக்கு உருவமும் இல்லை, மகத்துவமுமில்லை; நாம் அவரைப் பார்த்த



போது நாம் அவரை இச்சிக்கத்தக்க உருவம் அவருக்கு இல்லாதிருந்தது; அவர் அசட்டைபண்ணப்பட்டவரும், மனுஷரில் ஈனமானவரும், வேதனைகளுள்ளவரும், பெலஈனத்தை அறிந்தவருமாய் இருந்தார். அவரை விட்டு முகங்களை மறைத்துக்கொள்ளலாயிற்று. அவர் அசட்டைபண்ணப்பட்டிருந்தார். அவரை எண்ணாதே போனோம் (எசா. 53, 2. 3) என்ற தீர்க்கதரிசனம் சரிவர நிறைவேறிற்று.

இயேசு தம்மை இராசா என்று சொன்னதனால், அவருக்குச் சேவகர் ராஜவேஷம் போட்டார்கள். அவர்கள் பரிகாசம் அவருக்கு வேதனையாயிற்று. அவருடைய வேதனையோ, நமக்கு மகா ஆறுதலைக் கொண்டுவந்தது. அவர் தலையில் வைத்த முண்முடி நம்முடைய தலையின் பாவங்களை நமக்கு நினைப்பூட்டுவதாக. எத்தனை கெட்ட எண்ணங்களும் யோசனைகளும் நமது தலையில் எழும்புகின்றன. அவைகளே நம்முடைய இரட்சகருக்கு முண்முடியாயிற்று. முண்முடி தரித்த அவரை விசுவாசிக்கிறவனுக்குச் சீவ கிரீடம் என்ற மகிமையான விண்முடி காத்திருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளில் எனக்குக் கொடுக்கப்போகிற நீதியினுடைய கிரீடம் எனக்கு வைத்திருக்கிறது; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பின அனைவருக்கும் தானே (2 தீமோ. 4, 8) என்று பவுல் அப்போஸ்தலன் எழுதியிருக்கிற கிரீடமே அது.

நமக்கு நீதியின் வெள்ளை அங்கியைச் சம்பாதிக்க நம்முடைய இரட்சகர் வேதனையோடு சிவப்பங்கி தரித்தார். அவருடைய கிருபையால் நாம் மோட்சலோகத்தில் வெண் வஸ்திரம் தரித்து நடப்போம். அவர் கையில் பிடித்த நாணற்கோல் மரணப் பள்ளத்தாக்கிலும் நாம் பயப்படாதிருக்க நம்மை நடத்தும் அன்பின் கோலாம். சேவகர்கள் அவருடைய சிரசின்மேல் முடியை வைத்து, கோலினால் அவரைத் தலையில் அடித்து, அவரைப் பலவிதமாய் வேதனைப்படுத்தினது நம்மை நரகத்தில் பிசாசும் அதன் தூதரும் வேதனைப்படுத்தாமல், நாம் இரட்சிப்படைவதற்கு வழியாயிற்று.

சேவகர் அவரைப் பார்த்து: வாழ்க யூதருடைய இராசாவே என்று அவரைப் பரிகாசம்பண்ணி, அவர்மேல் துப்பி, அவரை அறைகளால் அறைந்தார்கள். நாமோ அவரை நம்முடைய மெய்யான இராசாவாக ஒப்புக்கொண்டு, அவருடைய திருப்பாதத்தில் விழுந்து, அவரை நமஸ்கரிப்போமாக. ஏனெனில், அவர் நாம ஏற்கனவே பார்த்தபடி பரம இராச்சியத்தை ஸ்தாபிக்க வந்த பரம இராசாவும், சத்தியத்துக்குச் சாட்சிகொடுக்க வந்த சத்திய இராசாவுமாயிருப்பதுமல்லா

மல், நம்மை இரத்தம் சிந்தி மீட்டுக்கொண்ட இரத்த இராசாவுமாயிருக்கிறார்.

சேவகரால் இந்த விதம் அலங்கோலமான இயேசுவைப் பிலாத்து சனங்களுக்கு முன் கொண்டு வந்து நிறுத்தி: இதோ இந்த மனுஷன் என்றான். இயேசுவின்மேல் பரிதபிக்கும் மனதைச் சனங்களுக்குள் உண்டுபண்ணவேண்டுமென்கிற எண்ணமாய், பிலாத்து செய்த இந்தச் செய்கை வீணாயிருந்தது. சனங்கள் இரட்சகரைப் பார்த்தபொழுது அவர்கள் மனசு இளகாமல், மனக்கடினமானார்கள். அவர்கள் இயேசுவைப் பார்த்தபொழுது: சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும் என்று கூப்பிட்டார்கள். கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கேட்கிற நாம் அதற்கு அடிக்கடி எதிர்த்து நின்று கடினப்படுகிறதில்லையா. நம்முடைய கடின இருதயத்தைக் கர்த்தர் நொறுக்கி, நம்மைக் குணப்படுத்துவாராக.

நம்மிலிருக்கும் பலவீன விசுவாசிகளுக்கு வேதனைப்பட்ட இயேசுவைக் காண்பித்து: இதோ, இந்த மனுஷனைப் பாருங்களென்று கர்த்தர் சொல்லுகிறார். அவர் நம்முடைய பலவீனங்களை எடுத்துக்கொண்டு நம்முடைய நோக்காடுகளைச் சுமந்தவராயிருப்பதால், நம்முடைய பலவீனங்களுக்கும் அவர் பரிதபிப்பார். விசுவாசிக்கிறேன், ஆண்டவரே, என் அவிசுவாசத்துக்கு உதவிசெய்யும் என்று கெஞ்சிக் கூப்பிடுகிற ஏழைகளுக்கு அவர் இரங்குகிற மனமுடையவர்.

துன்பப்படுகிற ஆத்துமாக்களுக்குத் துன்பப்பட்ட இரட்சகரைக் காண்பித்து: இதோ, இந்த மனுஷனைப் பாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவரை விசுவாசத்தோடு கண்ணோக்குகிறவர்களுக்குச் சகல துன்பமும் நீங்கும். நம்மைத் துன்பத்துக்கு நீங்கலாக்கவே, அவர் இவ்வளவு வேதனைப்பட்டார். நம்முடைய சகல பாடும், பிரயாசையும் அவருக்குத் தெரிந்திருப்பதினாலே, பிரயாசப்பட்டுப் பாரஞ்சுமந்தவர்களாகிய நீங்களெல்லாரும் என்னண்டைக்கு வாருங்கள். நான் உங்களை இளைப்பாற்றுவேன் என்று சொல்லுகிறார் (மத். 11, 28). அவர் தம்மை அண்டின பேர்களுக்கு இளைப்பாறுதலைத் தருவதுமல்லாமல், இளைப்பாறும் நேரம் வரும் வரைக்கும் துன்பத்தைச் சகிப்பதற்கான பொறுமையைக் கொடுப்பார்.

பிரியமானவர்களே, நாமெல்லாரும் இன்றைக்கு நம்முடைய அருமை இரட்சகரை அவருடைய வேதனைகளில் கண்ணோக்கிப் பார்க்கக் கடவோம். அவரே நமக்காகப் பாடுபட்டவர். அவரே நமக்குப் பாவமன்னிப்பைச் சம்பாதித்தவர். அவராலே மாத்திரம் நாம் மோட்சத்திற் சேரலாம். யூதர்களும் அஞ்ஞானிகளும் பாடுபட்ட கிறிஸ்துவை வேண்டாமென்று தள்ளினாலும், நாம் அவரை முழு மனதினாலும் ஏற்றுக்கொண்டு சிநேகிப்போமாக. நம்மை விசுவாசத்துக்கும் சிநேகத்துக்கும் விலக்கமாக்கி, பாவ வழியில் உட்புகுத்த பிசாசு நம்மைச் சோதிக்கும்பொழுது, இயேசுவை, நமக்காகப் பாடுபட்ட இயேசுவையே நோக்கிப் பார்க்கக் கடவோம். அது நம்மைப் பாவத்துக்கு விலக்கிக் காக்கும். என்னிமித்தம் இத்தனை வேதனைகளைச் சகித்த என் அருமை இரட்சகருக்கு விரோதமாக நான் பாவம் செய்வது எப்படியென்று மெய்விசுவாசி சொல்லுகிறான்.



நமக்காகச் சொல்லிமுடியாத பாடுகளைப் பட்டனுபவித்த இந்த இயேசுவை விசுவாசியாமற் போகிறவன் ஆரோ, அவன் நரகத்தில் விழுவான் என்பது நிச்சயம். அங்கே பிசாசுகள் அவனைப் பார்த்து: இதோ; இந்த மனுஷனைப் பாருங்கள் என்று சொல்லி, அவனை வேதனைப்படுத்தும். பிசாசுகளுக்கு இரட்சகர் இல்லை. அவைகள் கண்ணோக்கிப் பார்ப்பதற்கான இயேசு அவைகளுக்கு இல்லை. பிசாசுகளின் பாவத்தைச் சுமந்து தீர்க்க ஒருவரும பாடுபடவில்லை. ஆகையால், அவைகளுக்கு நரகமே கதி. மனிதராகிய நமக்கோ இரட்சகர் உண்டு. நாம் கெட்டுப்போக நியாயமில்லை. ஆகையால், நாம் நரக நெருப்பில் விழாதபடிக்கு இயேசுவை நோக்கிப் பார்க்கக் கடவோம்.

பொந்தியு பிலாத்துவின் கீழ் பாடுபட்ட அன்புள்ள இயேசுவே, உம்மை யூதர்கள் தள்ளினாலும் நாங்கள் உம்மைத் தள்ளுவதில்லை. நீர் இன்றைக்கும் என்றைக்கும் எங்கள் இராசாவாயிரும். எங்கள் ஆத்துமத்தையும் சரீரத்தையும் நீரே ஒப்புக்கொள்ளும். நாங்கள் பிழைத்தாலும் செத்தாலும் உம்மையே கண்ணோக்கிப் பார்க்கும்படி தேவரீர் எங்களுக்கு உம்முடைய பரிசுத்த ஆவியைக் கொண்டு மெய் விசுவாசம் தந்தருளும், சுவாமி. ஆமென்.

---

## ஒருசந்தி காலத்து ௪-ம் ஞாயிறு.

யோவான் 6, 1—15

பிரியமானவர்களே,

பராபரன் நம்மைச் சிநேகிக்கிறார். அவர் நம்முடைய ஆத்தும இரட்சிப்புக்காகக் கவலைப்படுகிறார். அவர் நம்மை இரட்சிக்கும்படி தம்முடைய ஒரே பேறான குமாரனை இந்தப் பூலோகத்துக்கு அனுப்பினார். அவரைப் பாடுகளுக்கும் மரணத்துக்கும் ஒப்புக்கொடுத்தார். இயேசுநாதரை விசுவாசிக்கிறவர்களுக்குப் பாவமன்னிப்பும் நீதியும் நித்திய ஜீவனுமாகிய ஆத்தும நன்மைகள் கிடைக்கும். இதைக்குறித்து அநேகர் சந்தேகப்படுகிறதில்லை. ஆத்தும விஷயத்தில் பராபரனை நம்புவார்கள். என்றாலும், சரீர

விஷயத்தில் அநேகர் அவரை நம்புகிறதில்லை. பராபரன் நம்முடைய சரீரத்துக்காகவும் கவலைப்படுகிறார், நமக்கு வேண்டிய சாப்பாடு, துணிமணி, காசுபணம் இவைகளை நமக்குக் கொடுப்பார் என்று அநேகர் நினைக்கிறதில்லை. இது பெரிய தப்பிதம். நமக்கு ஆத்துமத்தைக் கொடுத்தவரே சரீரத்தையும் கொடுத்தார். நமக்கு ஆத்ம நன்மைகளைக் கொடுக்கிறவர் சரீர நன்மைகளையும் நிச்சயமாய்க் கொடுப்பார். இந்த நாளின் சுவிசேஷவாக்கியம் இதற்குத் திருஷ்டாந்தம். ஆகையால் இந்த நாளின் வாக்கியப்படியே,

**கர்த்தர் நம்முடைய சரீரத்துக்காகவும் கவலைப்படுகிறார்** என்பதைக் குறித்துப் பார்ப்போம்.

1. **இதை அவர் நமக்கு எப்படி வெளிப்படுத்தினார்.**
2. **இதனால் நமக்கு என்ன படிப்பிக்கிறார்.**

1.

கர்த்தர் நம்முடைய சரீரத்துக்காகக் கவலைப்படுகிறதை அவர் எப்படி வெளிப்படுத்தினார் என்று பார்ப்போம்.

இயேசுநாதர் கலிலேயா கடலின் அக்கரைக்குப் போனார், அங்கே ஏராளமான ஜனங்கள் அவரண்டை வந்தார்கள். வியாதிக்காரரிடத்தில் அவர் செய்த அற்புதங்களை அவர்கள் முன்னமே பார்த்திருந்தபடியால், அவரை விடாமல் தொடர்ந்து வந்தார்கள். அவரண்டைவந்தவர்கள் பெண்டுகளையும் பிள்ளைகளையும் தவிர ஐயாயிரம் புருஷராயிருந்தார்கள். ஒரே சமயத்தில் இவ்வளவு ஏராளமான ஜனங்கள் அவரிடத்தில் வருகிறதற்கு ஒரு முக்கிய காரணம் இருந்தது. அக்காலத்தில் யூதருக்குப் பஸ்கா பண்டிகை சமீபமாயிருந்தது. அதற்காக முக்கியமாய் ஆண்பிள்ளைகள் எருசலேமுக்குப் போகவேண்டியது. கலிலேயாவிலிருந்து போகிற ஜனங்கள் அவரண்டைக்கு வந்து, அவர் பிரசங்கத்தைக் கேட்டு, அவர் செய்கிற அற்புதங்களைப் பார்த்துவிட்டு, எருசலேமுக்குப்போக மனதாயிருந்தார்கள். அதினாலே தான் இவ்வளவு கூட்டம். அப்போது இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து, திரள் கும்பு தம்மண்டை வரக்கண்டு பிலிப்புடனே: இவர்கள் சாப்பிடத்தக்கதாக எங்கே அப்பங்களைக் கொள்வோமென்றார். இப்படி அவர் கேட்டதினாலே அந்த ஜனங்களுடைய சரீரத்துக்காகக் கவலைப்பட்டாரென்கிறது நமக்குத் தெளிவாய்த்தெரிகிறது. அந்த ஜனங்களிடத்திலே அப்பம் குறைவுபட்டது என்கிறது நிச்சயம். இல்லாவிட்டால், கர்த்தர் அப்பத்தைக்குறித்துப் பேசியிருக்கமாட்டார். இந்தக் குறைவை நீக்கி, அவர்களுக்குவேண்டிய ஆகாரம் கொடுக்க மனிதராலே முடியாதென்பதைக் காண்பிக்க அவருக்கு மனதிருந்தது. இதையோவெனில், அவனைச் சோதித்துச் சொன்னார்; ஏனெனில், தாம் செய்யப்போகிறதைத் தாம் அறிந்திருந்தாரென்று



வாசிக்கிறோம். இந்த உலகத்திலே குறைவில்லாமலிருக்க முடியாது. சிலருக்குச் சாப்பாடு குறையும், சிலருக்கு வஸ்திரம் குறையும், சிலருக்கு வீடுவாசல் இருக்காது. சிலருக்குச் சுகம் கெட்டுப்போகும். நம்முடைய தேசத்திலே அடிக்கடி பஞ்சம் வருகிறதைப் பார்க்கிறோம். அப்பொழுது ஏழைகள் படுகிறபாடு எவ்வளவென்று நம்மெல்லாருக்குந் தெரியும். இப்படி நமக்குக் குறைவுகள் நேரிடும்பொழுது கர்த்தர் அவைகளை அறிகிறார், நமக்கு வேண்டியவைகளுக்காக அவர் கவலைப்படுகிறார் என்பதை நாம் நிச்சயமாய் அறியவேண்டும். இது நமக்குப் பெரிய ஆறுதல். ஒரு வீட்டு எஜமான் தன் வீட்டிலிருக்கிறவர்களுக்காகக் கவலைப்படுவான். நாமெல்லாரும் பராபரனுடைய வீட்டார். அவர் நம்முடைய எஜமான், சரியாய்ச் சொன்னால், அவர் நம்முடைய தகப்பன். நாம் கவலைப்படுமுன்னமே அவர் நமக்காகக் கவலைப்படுகிறார். அவர் தம்முடைய பிள்ளைகள் பட்டினிகிடந்து பசித்திருக்கிறதைப் பார்த்திருக்கமாட்டார்.

பிலிப்பு அவருக்குப் பிரத்தியுத்தரமாக: அவர்களில் ஒவ்வொருவன் கொஞ்சம் கொஞ்சமாய் வாங்கிக்கொள்ளவாகிலும், இருநூறுபணம் வேணுமே, நாம் ஏழைகளாச்சுதே, இருநூறு பணத்துக்கு எங்கேபோகிறது; இந்த ஜனங்களுக்குச் சாப்பாடு போட நம்மாலே முடியாது என்பது பிலிப்பு சொன்னவார்த்தையின் கருத்து. இதனால் அந்த அப்போஸ்தலனுக்கு இயேசுநாதர் இந்தச் சமயத்தில் அற்புதம் செய்யக்கூடியவர் என்கிற நம்பிக்கை இல்லையென்று பார்க்கிறோம். சீமோன் பேதுருவின் சகோதரனாகிய அந்திரேயாவுக்கும் அதைப்போலொத்த அபிப்பிராயம் இருந்தது. ஏனெனில், அவன் அவருடனே: இங்கே ஒரு பிள்ளை இருக்கிறது. அதின் கையில் வாற்கோதுமையின் ஐந்தப்பங்களும் இரண்டு மீன்களும் இருக்கிறது; ஆனால் இதுகள் இத்தனை ஜனங்களுக்கு எம்மாத்திரமென்றான். இந்த அப்போஸ்தலமார் நினைத்ததுபோலவே நாமும் அடிக்கடி நினைக்கிறோம். நான் பிள்ளைகுட்டிக்காரனாயிருக்கிறேனே, எனக்குவருகிற சொற்பக் கூலி சொற்ப சம்பளம் இத்தனை பேருக்குப் போதுமா. ஆளுக்கு அரைவயிற்றுச் சாப்பாடு சாப்பிட்டாலும் என் வரும்படியைப் போல் நாலுபங்கு ஐந்துபங்கு செல்லுமே என்று நினைக்கிறோம். அல்லது பஞ்சகாலம் வந்தால், ஊரிலே விளைச்சல் இல்லையா, எனக்கும் கூலி அகப்படாதே, நான் என் பாரிக்குடும்பத்தைக் காப்பாற்ற முடியுமா என்று கலங்குகிறோம். இப்படி நாம் கலங்குகிறது சரியல்ல.

உன் கவலைகளுக்கு
இன்றே விடைகொடு,
இனி விசாரத்துக்கு
இடங் கொடாதிரு.

நீ ஆளுந் தேவனல்ல,
நீ பூச்சி என்றறி,
சருவத்துக்கும் வல்ல
கர்த்தர் அதிபதி.

இயேசுவோவெனில்: ஜனங்களை உளுக்காரப்பண்ணுங்களென்றார். ஆனால் அவ்விடம் வெகு புல்லாயிருந்தது. அப்போது இலக்கத்தின்படியே ஏறக்குறைய ஐயாயிரம் பேராகிய மனுஷர்கள் உளுக்கார்ந்தார்கள். இயேசு அப்பங்களை எடுத்துக்கொண்டு, இஸ்தோத்திரம்பண்ணி, சீஷர் கையிலே கொடுத்தார்; சீஷர் பந்தியிருந்தவர்களுக்குக் கொடுத்தார்கள். அப்படியே மீன்களிலும் அவர்கள் வேண்டுமென்றமாத்திரம் கொடுத்தார். நமக்கு ஒரு யோசனையும் எட்டாமல், நாம் தவிக்கிற நேரத்தில் கர்த்தருடைய ஆலோசனை வெளிப்படும். அவர் சர்வத்துக்கும் வல்லவர். அவர் கையிலே ஒன்று ஆயிரமாகும். நாம் போதாது என்று நினைக்கிறது அவரால் போதுமானதாகி மீந்தும்போகும். அவர் கையில் எடுத்த அப்பத்தை ஜெபம்பண்ணிப் பிட்டு, சீஷர் கையில் கொடுக்கக் கொடுக்க, அது வளர்ந்துகொண்டே வந்தது. சீஷர் அதை ஜனங்களுக்குக் கொடுக்கக் கொடுக்க, அவர்கள் கையில் பெருகிக்கொண்டே வந்தது. ஜனங்கள் அதைப் பிட்டுத் தின்கத் தின்க, அது அவர்கள் கையில் அதிகரித்துக்கொண்டேயிருந்தது. மீந்த துணிக்கை பன்னிரண்டு கூடையாயிற்று. இரண்டு மீன்களும் தின்கத் தின்கப் பெருகி, எல்லாருக்கும் போதுமானதாயிற்று. இப்படியே அந்த ஜனங்களின் வயிறு நிரம்ப அவர்களுக்குச் சாப்பாடு கொடுத்ததினால் கர்த்தர் நம்முடைய சரீரத்துக்காகவும் கவலைப்பட்டு நம்மை அற்புதமாய்ப் பராமரிக்கிறவரென்று வெளிப்பட்டது.

மேலும், கர்த்தர் வேதத்திலுள்ள அநேக வாக்குத்தத்தங்களினாலும் திருஷ்டாந்தங்களினாலும் இதை நமக்கு ரூபித்திருக்கிறார். கர்த்தருடைய பரிசுத்தவான்களே, அவருக்குப் பயந்திருங்கள்; ஏனெனில் அவருக்குப் பயந்தவர்களுக்குக் குறைவில்லை. சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாய் இருக்கும், கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோவென்றால் ஒரு நன்மையுங் குறைவுபடாது (சங். 34, 10 - 11) என்று எழுதியிருக்கிறது. இதற்கொத்த அநேக வாக்குத்தத்தங்களை நாம் வேதத்தில் வாசிக்கலாம். அல்லாமலும், கர்த்தர் பசித்திருந்த அநேகருக்கு அற்புதமாய் ஆகாரம் கொடுத்ததைக்குறித்து வேதத்தில் அநேகமுறை வாசித்திருக்கிறோம். சில உதாரணங்களை இப்பொழுது கேட்போம். கர்த்தர் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலரை நாற்பது வருஷமாக விதைப்பும் அறுப்புமில்லாத வனாந்தரத்திலே மன்னா என்ற வானபோசனத்தினாலே காப்பாற்றிவந்த சரித்திரம் நமக்குத் தெரியும். அவர் ஒரு பெரிய பஞ்சத்திலே எலியா என்ற தம்முடைய ஊழியக்காரனுக்குக் காகங்களைக்கொண்டு ஆகாரம் கொடுத்தார். அதே தீர்க்கதரிசி பஞ்சகாலத்திலே ஒரு ஏழை விதவையினாலே ஆகாரம் பெற்றுக்கொண்டார். அந்தத் தீர்க்கத



தரிசிக்கு ஆகாரம் கொடுக்கும்படி கர்த்தர் அந்த ஏழை விதவையின் பானையிலே மாவு குறையாமலும் கலயத்திலே எண்ணெய் குறையாமலும் வளர்ந்துகொண்டேயிருக்கப்பண்ணினார். நாம் வேதபுஸ்தகத்தை வாசித்துப் பார்த்தால், கர்த்தர் தம்முடைய பிள்ளைகளைப் பராமரிக்கும் அதிசயத்தை அதிலே வெகுவாய்க் காண்போம்.

## 2.

கர்த்தர் இதினால் நமக்கு என்ன படிப்பிக்கிறார் என்று இப்பொழுது பார்ப்போம்.

நாம் நம்முடைய பரம தகப்பனாகிய அவர் பேரிலே பிள்ளைப்பத்தியான நம்பிக்கை வைக்கவேண்டும், ஆகாரம் அகப்படாத வனாந்தரத்திலே ஐயாயிரம் பேரை அற்புதமாய்ப் போஷித்த கர்த்தர் நம்மைக் கைவிடமாட்டார். நாம் எவ்வளவு ஏழைகளாயிருந்தாலும், நாம் எவ்வளவு கேவலமான இடத்திலேயிருந்தாலும், நாம் சந்தேகப்பட வேண்டியதில்லை. உன் வழியைக் கர்த்தருக்குச் சாட்டிவிடு, அவர்மேல் நம்பிக்கையாயிரு, அவரே காரியத்தை நடப்பிப்பாரென்று சங்கீதக்காரர் சொல்லுகிறார் (37,5). நம்முடைய சொந்த சரித்திரத்தை நாம் கவனித்தோமானால், நம்முடைய சிறு பிராயமுதல் இதுவரைக்கும் அவர் நமக்குச் செய்ததான உபகாரங்கள் ஏராளமென்று காண்போம். இப்படியிருந்தும், நாம் அடிக்கடி நம்பிக்கை அற்றுப்போகிறதும் சந்தேகப்படுகிறதும் எவ்வளவு வெட்கமான காரியம். இனிமேல் நாம் இப்படிப்பட்ட சந்தேகங்களுக்கு இடங்கொடாமல், கர்த்தர் என்னைப் பராமரிப்பார், அவர் என் சரீரத்துக்குத் தேவையானதையெல்லாம் கொடுப்பார், அவர் என்னை ஒருபோதும் கைவிடமாட்டார் என்கிற பூரண நிச்சயமுடையவர்களாயிருப்போமாக.

நமக்கு இருக்கிற ஈவுகள் சொற்பமானதாயிருந்தாலும் அவைகளைக் கர்த்தருடைய கையில் கொடுப்பதினாலே அவைகள் அதிகமாய்ப் பெருகும். ஐந்தப்பங்களும் இரண்டு சிறு மீன்களும் இயேசுநாதர் கையில் போனதால் அவைகள் ஐயாயிரம்பேருக்குச் சாப்பாடாயிற்று. நம்முடைய வருமானங்களும் இயேசுநாதருடைய கையிலே போனால் அது நமக்கும் நம்முடைய வீட்டாருக்கும் போதுமானதாகும், சிலவேளை மீந்தும் போகும். அப்படியானால், நாம் நமக்குக் கிடைக்கிற சொற்ப வருமானத்தை எப்படி கர்த்தருடைய கையிலே வைக்கலாம்.

அதை ஜெபத்தினாலே அவருடைய கையில் வைக்கலாம். நமக்கு சம்பளம் வந்தாலும், கூலி கிடைத்தாலும், அதைச் செலவழிக்குமுன் முழங்கால்படியிட்டு ஜெபம்பண்ணவேண்டும். ஆண்டவரே, இந்தச் சம்பளம் என் பெரிய குடும்

பத்துக்குப் போதுமானதாயிருக்கும்படி, நீர்தான் அதை ஆசிர்வதிக்கவேண்டும், உம்முடைய ஆசீர்வாதமிருந்தாலல்லாமல் எனக்கு ஒன்றும் விர்த்தியாகாது, உமமுடைய கையினால் இதைத் தொட்டருளும், அப்பொழுது எனக்கு ஒரு குறைவுமில்லை என்று சொல்லவேண்டும். உலையில் அரிசிபோடுகிற ஒரு பெண்பிள்ளை இந்த விதமாக ஜெபம்பண்ணுகிறது அவசியம். இப்படி ஜெபம்பண்ணிச் சமையல் செய்துவந்த ஒரு ஏழை விதவை தன் ஆயுசு காலமெல்லாம் குறைவில்லாமல் திருப்தியாயிருந்ததுண்டு. நாம் நம்முடைய சாப்பாட்டை நம்முடைய கையில் எடுக்கிறதற்கு முன் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தி, ஜெபம்பண்ணுவது மிகவும் அவசியமான காரியம். சில கிராம கிறிஸ்தவர்களும் பட்டணத்துக் கிறிஸ்தவர்களும் சாப்பாட்டுக்கு முன் ஜெபம்பண்ணாமல் போவதால் அவர்களுக்கு ஆசீர்வாதமில்லை. அவர்களை எப்பொழுதும் தரித்திரம் பிடித்துக்கொண்டிருக்கிறது. ஜெபம்பண்ணாமல் சாப்பிடுகிறவர்கள் கிறிஸ்தவர்களல்ல. அவர்களை மனிதருமல்லவென்று சொல்லலாம். ஆடு, மாடு, கழுதை, குதிரை முதலிய மிருகங்கள் தான் ஜெபம்பண்ணாமல் தீனி தின்னும். மனிதர் அப்படிச் செய்யலாமா, அதிலும் கிறிஸ்தவர்கள் அப்படி செய்யலாமா;

இன்னமும் நம்முடைய சம்பாத்தியத்தைக் கர்த்தருடைய கையிலே எப்படிக் கொடுக்கலாம். அதில் ஒரு பங்கைக் கர்த்தருடைய நாமத்தின் மகிமைக்கென்றும், அவர்களுடைய பிள்ளைகளாகிய ஏழைகளின் நன்மைக்கென்றும் கொடுக்கவேண்டும். கொடுத்தார்க்குக் குறைவில்லை. இறைக்கிற கிணற்றிலே தான் தண்ணீர் ஊறும். கர்த்தர் அப்பங்களைச் சீஷர் கையில் கொடுத்ததினாலும், சீஷர் ஜனங்களுக்குக் கொடுத்ததினாலும், அவைகள் பெருகிற்று. ஆகிலும், எத்தனை கிறிஸ்தவர்கள் வெறுங்கையோடு கோயிலுக்கு வருகிறார்கள். அவர்கள் எந்த விதத்திலாவது சாப்பிடுவார்கள். அதற்குக் காசு எங்கிருந்தாவது வரும். பாக்கு வெற்றிலை புகையிலை இவைகளுக்குக் காசு அவர்களிடத்தில் இருக்கும். உண்டியலிற் போடுவதற்கு மாத்திரம் காசு இருக்காது. இது எவ்வளவு துக்கமான காரியம். இப்படிப்பட்ட கையிறுகல்காரருக்கு ஆசீர்வாதம் எங்கேயிருந்து வரும். கொடுக்க உங்களுக்கு மனம் வருகிறவரைக்கும், உங்கள் பைகளில் எடுக்கக் காசு பெருகாது. சகோதரரே, வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறது பாக்கியமென்று கர்த்தர் சொல்லுகிறார்.

நாம் இன்றைக்குக் கற்றுக்கொள்ளவேண்டிய மற்றொரு முக்கியமான காரியம் உண்டு. அவர் நமக்குக் கொடுக்கும் ஈவுகளைச் சேதமாக்காமல் பத்திரமாய்ச் சேர்த்துக் காக்கவேண்டும்.



ஒன்றுஞ் சேதமாய்ப் போகாதபடிக்கு, மீந்த துணிக்கைகளைச் சேருங்கள் என்பது கர்த்தருடைய கட்டளை. தங்கள் தானிய தவசங்களைச் சிந்தவும் சிதறவும் விடுகிற அழிம்பர்களுக்குத் தரித்திரம் எங்கே என்றிருக்கும். சிந்தின இடத்தில் சேராது என்று பெரியோர் சொல்லுவார்கள்.

அல்லாமலும், கர்த்தர் நமக்குக் கொடுக்கும் சகல ஈவுக்காகவும் அவரை ஸ்தோத்திரித்து மகிமைப்படுத்த வேண்டும். அப்போது இயேசு செய்த அடையாளத்தை மனுஷர் கண்டு: இவர் மெய்யாய் உலகத்தில் வருகிற தீர்க்கதரிசியாயிருக்கிறாரென்றார்கள். ஆனால், அவர்கள் வந்து, தம்மை இராசாவாக்கும்படி பிடிக்கப்போகிறதை இயேசு அறிந்து, விலகி, மறுபடியும் தாம் ஒருவராய்ப் பர்வதத்தின் மேல் ஏறினார் என்று வாசிக்கிறோம். கர்த்தர் நம்முடைய சரீரத்துக்காகக் கவலைப்பட்டு நமக்கு வேண்டிய போசனத்தையும் வஸ்திரத்தையும் நமக்குக் கொடுப்பது ஏன். நாம் நன்றியறிந்த பிள்ளைகளாய் நடந்துகொள்ளும்படிக்குத்தான். நானோவெனில் இவையெல்லாவற்றிற்காகவும் நன்றியறிந்தவனாய் அவரை ஸ்தோத்திரிக்கவும், அவருக்கு ஊழியஞ்செய்து கீழ்ப்படிந்து நடக்கவும் கடனாளியாயிருக்கிறேன் என்று நாம் ஞானோபதேசக் குறிப்பிடத்தில் அறிக்கையிடுகிறோம். ஆகிலும், நாம் அவரிடத்திலே எப்பொழுதும் வயிற்றுக்காரியங்களை மாத்திரம் தேடுவது சரியல்ல. வயிற்றினிமித்தமாக அவரை இராசாவாக்க மனதாயிருந்தவர்களுக்கு அவர் இடங்கொடுக்கவில்லை. அவர் நமக்குச் செய்யும் சரீர நன்மைகள் அவரைப் பற்றிக்கொள்ளும் திடமான விசுவாசத்துக்கு நம்மை ஏவவேண்டும். அவர் நம்முடைய சரீரங்களைக் காப்பாற்றுகிறது நம்முடைய ஆத்துமாவுக்கு அது சுகமான வீடாயிருக்கும்படிக்கே யல்லாமல் வேறொன்றிற்கும் அல்ல. பராபரனுடைய தயவு நம்மைக் குணப்படுதலுக்கு ஏவவேண்டும்.

எங்கள் அருமை இரட்சகராகிய இயேசுவே, நாங்கள் எங்களுடைய கவலைகளையெல்லாம் உம்முடைய பேரில் எறிந்துவிட்டு, உம்முடைய பராமரிப்பில் முழு நம்பிக்கையாயிருக்க எங்களுக்கு ஒத்தாசை செய்தருளும், சுவாமி. ஆமேன்.

## ஒருசந்தி காலத்து ௫-ம் வெள்ளிக்கிழமை.

பாடுபட்ட சரித்திரம் 116, 123—129

குற்றவாளியாகிய வேறே இரண்டுபேரும் அவரோடே கூடக் கொலைசெய்யப்படுவதற்குக் கொண்டுபோகப்பட்டார்கள். அவர்கள் கொல்

கத்தா என்னப்படுகிற ஸ்தலத்துக்கு வந்தபோது, பிச்சுக் கலந்த காடியை அவருக்குக் குடிக்கக் கொடுத்தார்கள். அவர் அதை ருசிபார்த்துக் குடிக்க மனதில்லாதேபோனார். இயேசுவோவென்றால்: பிதாவே, அவர்களுக்கு மன்னியும்; ஏனெனில் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியார்கள் என்றார். சனம் பார்த்துக்கொண்டு நின்றது. அவர்களுடனே கூடத் தலைவரும் மூக்கை நெறித்து: மற்றவர்களை இரட்சித்தானே, இவன் பராபரன் தெரிந்துகொண்ட கிறிஸ்துவானால், தன்னைத் தானே இரட்சிக்கட்டும் என்றார்கள். அந்த வழி நடந்துபோகிறவர்கள் அவரைத் தூஷணித்து, தங்கள் தலைகளைத் துலுக்கி: ஆா, தேவாலயத்தை இடித்து, மூன்று நாட்களில் கட்டுகிறவனே, உன்னை நீதானே இரட்சி; நீ பராபரனுடைய சுதனானால், சிலுவையிலிருந்து இறங்கு என்றார்கள். அப்படியே பிரதான ஆசாரியர்களும் வேதபாரகருடனே கூடப் பரிகாசம்பண்ணி, ஒருவரோடொருவர்: மற்றவர்களை இரட்சித்தான், தன்னைத் தான் இரட்சிக்கமாட்டான்; அவன் இஸ்ரவேலின் இராசாவானால், இப்போது சிலுவையிலிருந்து இறங்கட்டும், அப்போது அவனை விசுவாசிப்போம்; பராபரன் மேல் நம்பிக்கையாயிருந்தானே, அவர் அவன் மேல் பிரியமாயிருந்தால் இப்போது அவனை மீட்டுவிடட்டும்; ஏனெனில் நான் பராபரனுடைய சுதனென்று சொன்னான் என்றார்கள். சேவகரும் அவரைப் பரிகாசம்பண்ணி, அவரண்டை சேர்ந்து, அவருக்குக் காடியைக் கொண்டுவந்து: நீ யூதருடைய இராசாவானால், உன்னை நீயே இரட்சி என்றார்கள். தூக்கிப்போடப்பட்ட குற்றவாளிகளில் ஒருவனும் அவரைத் தூஷணித்து: நீ கிறிஸ்துவானால், உன்னையும் எங்களையும் இரட்சி என்றான். மற்றவனோவென்றால் பிரதியுத்தரமாக: இந்த ஆக்கினைக்கே உள்ளாயிருக்கிற நீயும் பராபரனுக்குப் பயப்படாயோ. நாமோ நியாயமாக அதற்கு உள்ளாயிருக்கிறோம்; ஏனெனில் நாம் நடப்பித்தவைகளுக்குத் தக்கதுகளை அடைகிறோம்; இவரோவென்றால் அவகுணமானதொன்றையும் நடப்பித்ததில்லை என்று, அவனைக் கடிந்துகொண்டு, இயேசுவுடனே: ஆண்டவரே, நீர் உம்முடைய இராச்சியத்திலே வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான். இயேசு அவனுடனே: மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன், இன்றைக்கு என்னுடனே கூடப் பரதீசிலே இருப்பாய் என்றார். ஆனால் இயேசுவின் சிலுவையண்டையிலே அவருடைய தாயும் அவருடைய தாயின் சகோதரி கிலெயோப்பா மரியாளும் மக்தலா ஊர் மரியாளும் நின்றிருந்தார்கள். அப்போது இயேசு தாயையும் அண்டையிலே தாம் சிநேகித்த சீஷனையும் நிற்கக் கண்டு, தம்முடைய தாயுடனே: ஸ்திரீயே, அதோ, உன் மகன் என்றார். பிற்பாடு சீஷனுடனே: அதோ, உன் தாய் என்றார். அந்நேரம் முதல் சீஷன் அவளைத் தன்னிடமாய் ஏற்றுக்கொண்டான்.

பிரியமானவர்களே,

பொந்தியு பிலாத்து கொடிய யூதர்களின் பிரியத்துக்கு இடங்கொடுத்து, இயேசுவைச் சிலுவையில் அறையத் தீர்ப்புச் செய்தான். அப்பொழுது சேவகர் அவருக்குப் போட்டிருந்த சிவப்பான சட்டையைக் கழற்றி, அவருடைய சொந்த வஸ்திரங்களை அவருக்கு உடுத்தி, எருசலேம் பட்டணத்திற்கு வெளியே கொண்டுபோனார்கள். அவர் தம்முடைய சிலுவையைச் சுமந்துகொண்டு,



கொல்கத்தா என்ற கொலைக்களத்துக்குப் போனார். அவரோடு கூட குற்றவாளிகளாகிய வேறே இரண்டுபேரும் கொலைசெய்யப்படுவதற்குக் கொண்டுபோகப்பட்டார்கள். அவர்கள் கொலைக்களத்துக்கு வந்தபொழுது சேவகர் அவருக்கு மயக்கம் வரும்படி பிச்சுக்கலந்த காடியைக் குடிக்கக் கொடுத்தார்கள். அவரோ தெளிந்த புத்தியோடு மரிக்கச் சித்தமாயிருந்ததால், காடியை ருசிபார்த்துக் குடிக்க மனதில்லாதேபோனார். கொல்கத்தா மலையில் அவரை இரண்டு கள்ளர் நடுவே சிலுவையில் அறைந்தார்கள். அவருடைய சிலுவையின் தலைப்பில்: இயேசுநாசரேத்தான் யூதருடைய இராசா என்று எழுதியிருந்தது. சிலுவை மரத்தில் மூன்று ஆணிகளில் தொங்கின நம்முடைய அருமை இரட்சகரை நாம் விசுவாசக் கண்ணால் நோக்கிப் பார்ப்போம், வாருங்கள்.

**சிலுவையில் அறையுண்ட இயேசு தம்மை யாரென்று விளங்கப் பண்ணினார்.**

1. வேண்டிக்கொள்ளும் பிரதான ஆசாரியர்.
2. பந்த கொடுக்கும் பரம இராசா.
3. ஆறுதல் அளிக்கும் அருமை இரட்சகர்.

1.

சிலுவையில் அறையுண்ட இயேசு வேண்டிக்கொள்ளும் பிரதான ஆசாரியராகத் தம்மை விளங்கப் பண்ணினார்.

பழைய ஏற்பாட்டின் பிரதான ஆசாரியர்கள் இயேசுநாதருக்கு முன்னடையாளமாயிருந்தார்கள். அவர்கள் சனங்களுக்காகப் பலியிட்டு, அவர்களுக்காக வேண்டிக்கொண்டு, அவர்களை ஆசீர்வதித்தார்கள். இயேசுநாதர் சிலுவைமரத்தில் அறையுண்டது முதல் பிரதான ஆசாரியர்களின் வேலை ஒழிந்தது. அவரே உத்தம பிரதான ஆசாரியர். ஆரோன் முதலிய பிரதான ஆசாரியர்கள் பாவிகள். இயேசுவோ பாவமில்லாத பரிசுத்தர். அவர் தாமே ஆசாரியரும் பலியுமாயிருந்தார். சிலுவைமரமே அவருக்குப் பலிபீடம். அவர் சர்வலோகத்தின் பாவத்தையும் சுமந்து தீர்க்கிற தெய்வ ஆட்டுக்குட்டியாய் பலியானார். அவர் பாவிகளுக்காக வேண்டிக்கொண்டார். அவர் சிலுவைமரத்தில் மொழிந்த ஏழு திருவார்த்தைகளில், முதலாம் வார்த்தை அவர் செய்த வேண்டுதல். பிதாவே, அவர்களுக்கு மன்னியும்; ஏனெனில் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியார்கள் என்பது அவருடைய முதலாம் வார்த்தை.

அவர் பிதாவை நோக்கி வேண்டிக்கொண்டார். இதனால் தாம் பராபரனுடைய குமாரன் என்பதை யாவருக்கும்

கருணித்தார். பாவிகளைப் பராபரனுடைய பிள்ளைகளாக்கும்படி அவர் சிலுவைமரத்தில் ஏறினார். தம்முடைய வேண்டுதலைப் பராபரன் கேட்கும்படிக்கு அவரைப் பிதாவே, என்று கூப்பிடுகிறார். குமாரன் செபத்தை பிதா அல்லத் தட்டமாட்டார்.

அவர் பிதாவிடத்தில் தமக்காக அல்ல, தம்மைச் சிலுவைமரத்தில் அறைந்த பாவிகளுக்காக வேண்டுதல்செய்கிறார். தம்மைப் பிலாத்துவுக்கு ஒப்புவித்த பிரதான ஆசாரியருக்காகவும் மூப்பருக்காகவும், தமக்கு அநியாயத்தீர்ப்பிட்ட பிலாத்துவுக்காகவும், தம்மைச் சிலுவையில் அறையும்படி கூப்பிட்ட சனங்களுக்காகவும், தம்மைச் சிலுவையில் கொடுமையாய் அறைந்த சேவகருக்காகவும், அவர் வேண்டுதல் செய்தார். நாமும் அவரைச் சிலுவையில் அறைந்தவர்கள் தான். ஏனெனில், அவர் நம்முடைய பாவங்களையும் சுமந்து, சிலுவைமரத்தில் ஏறினார். ஆகையால், அவர் நமக்காகவும் வேண்டிக்கொண்டார்.

அவர் பிதாவிடத்தில் நமக்காகவும், எல்லாப் பாவிகளுக்காகவும் கேட்ட விசேஷித்த நன்மை என்ன. பாவமன்னிப்புத் தான். அவர் பாவிகளுக்கு மன்னிப்பைச் சம்பாதிக்கவே சிலுவையில் அறையுண்டார், இரத்தம் சிந்தினார், மரித்தார். மோசேயை விரோதித்துக் கலகம் செய்தவர்களைப் பூமி விழுங்கிவிட்டது. எலியா தீர்க்கதரிசியை அசட்டைபண்ணினவர்களை அக்கினி பட்சித்துவிட்டது. எலிசா தீர்க்கதரிசியைத் தூஷணித்த பிள்ளைகளைக் கரடிகள் பீறிவிட்டன. இயேசுவைக் கொன்றவர்களுக்கும் அப்படிப்பட்ட பயங்கர முடிவு வருவது நியாயம். அப்படி வராதபடிக்கே, இயேசுநாதர் வேண்டிக்கொள்ளுகிறார். அவரைச் சிலுவையில் அறைந்தவர்கள் உடனே அழிந்துபோகாமல் குணப்படும்படிக்குப் பராபரன் அவர்களுக்குத் தவணைகொடுக்க இயேசு பிதாவை வேண்டிக்கொள்ளுகிறார். மன்னியும் என்று அவர் வேண்டிக்கொண்டதால், குணப்படுதலுக்கான தவணைமாத்திரம் அல்ல, அதற்கான கிருபையையும் பிதாவிடத்தில் கேட்கிறார். பிதாவே, இவர்களுக்கு உம்முடைய பரிசுத்த ஆவியைக் கொடும், இவர்கள் குருட்டுக் கண்களைத் திறவும், இவர்கள் கடின இருதயத்தை நொறுக்கும், இவர்களுக்கு மெய்ப்பத்தியைத் தாரும் என்பது அவர் வேண்டுதலின் உட்பொருள். அவர் மன்னியும் என்றதால் அவர்கள் குற்றத்தை அவர்கள்மேல் சுமத்தாமல், தண்டனைக்கு அவர்களை நீங்கலாக்கக் கேட்கிறார். இந்த செபத்தினால் நம்முடைய இரட்சகர் உத்தமமான பிரதான ஆசாரியர் என்று பார்க்கிறோம். பிதாவே, இவர்களை நீர் அழித்துப்போடும் என்று அவர் கேட்டிருந்தால், அது அநியாயமாயிராது. என்றாலும், அவர் பாவியின் அழிவை விரும்பாத இரட்சகரானதால், மன்னிப்புக்காக வேண்டிக்கொண்டார். உங்கள் சத்துருக்



களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கள்; உங்களைத் துண்டரிக்கம்பண்ணுகிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் செபம்பண்ணுங்கள் (மத். 5, 44) என்று அவர் போதித்தார், போதித்தபடிக்கும் அவர் செய்தார்.

பிதா அவர்களுக்கு மன்னிக்கும்படி ஒரு காரணத்தையும் சொல்லுகிறார். அதாவது, தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியார்கள் என்கிறார். பிலாத்துவும் சேவகரும் அவரை வதைத்த மற்றவர்களும் அஞ்ஞானிகளாயிருந்தார்கள். ஆகையால், அவர்கள் பராபரனுடைய குமாரனைச் சிலுவையில் அறைவதாக அறியாதிருந்தார்கள். அப்படியே பிரதான ஆசாரியர், மூப்பர்களும் அவர்களால் உசுப்பிவிடப்பட்ட சனங்களும், தாங்கள் செய்தது இன்னதென்று அறியாதபடிக்குப் பிசாசு அவர்கள் கண்களை மூடியிருந்தது (அப்போ. 3, 17).

இயேசுநாதர் செய்த இந்த வேண்டுதலைப் பராபரன் கேட்டார். அவர் எருசலேம் பட்டணத்தையும், யூதசனத்தையும் உடனே அழித்துப்போடாமல், அவர்களுக்கு நாற்பது வருஷம் தவணைகொடுத்தார். பெந்தெக்கொஸ்தே பண்டிகையிலும், அதற்குப் பின்னும் அநேக யூதர் குணப்பட்டு ஞானஸ்நானம் பெற்றது இயேசுநாதர் செய்த வேண்டுதலின் பலனே.

நாமும் நம்முடைய பிரதான ஆசாரியராகிய இயேசுவை முன்னிட்டு, மன்னிப்பைத் தேடி அடையலாம். நாமும் இயேசுவின் நிமித்தம் மற்றவர்களுக்கும் மன்னிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

2.

சிலுவையில் அறையுண்ட இயேசு பங்குகொடுக்கும் பரமஇராசாவாகத் தம்மை விளங்கப்பண்ணினார்.

இயேசுநாதர் பாவிகளுக்காகப் பிதாவை நோக்கி வேண்டுதல் செய்தும், அவரைச் சூழ்ந்து நின்று அவர் வார்த்தையைக் கேட்ட துஷ்டர்களின் கல்நெஞ்சு கரையவில்லை. பிரதான ஆசாரியர்களும் வேதபாரகரும், சனங்களும், சேவகரும், அவர் பக்கத்திலே சிலுவையில் தொங்கின ஒரு கள்ளனும், அவரைத் தூஷணித்தார்கள். இந்த தூஷணைக் கூட்டத்தின் நடுவே மற்றொரு கள்ளன் பேசின பேச்சும், செய்த செபமும், அவருக்கு ஆறுதலாயிருந்தது. அவன் இயேசுவைத் தூஷித்த கள்ளனைக் கடிந்துகொண்டு: இந்த ஆக்கினைக்கே உள்ளாயிருக்கிற நீயும் பராபரனுக்குப் பயப்படாயோ; நாமோ நியாயமாக அதற்கு உள்ளாயிருக்கிறோம், ஏனெனில் நாம நடப்பித்தவைகளுக்குத் தக்கதுகளை அடைகிறோம்; இவரோவெனில் அவகுணமானது ஒன்றையும் நடப்பித்ததில்லை என்று சொன்னான். இப்படியே அவன் தன்

பாவத்தையறிந்து அறிக்கையிட்டான், தனக்கு வந்த தண்டனை நீதியென்று துக்கத்தோடு ஒப்புக்கொண்டான். கிறிஸ்துவினிடத்தில் சகாயந்தேடி: ஆண்டவரே, நீர் உம்முடைய இராச்சியத்தில் வரும்போது, அடியேனை நினைத்தருளும் என்று வேண்டிக்கொண்டான். அவனுடைய சுருக்கமான செபம் அவனுடைய விசுவாசத்தைக் காண்பிக்கிறது. சிலுவையில் அறையுண்ட இயேசுவை அவன் தன் ஆண்டவரென்று அறிந்தான். அவருக்கு ஒரு இராச்சியம் இருக்கிறதென்று விசுவாசித்தான். அவர் தம்முடைய இராச்சியத்துக்கு மகிமையாய் வரப்போகிற வேளை இருக்கிறதென்று நம்பினான். என்னை அவர் நினைத்தாலே போதுமென்று அவன் எண்ணிக்கொண்டான். அவன் கர்த்தரிடத்திலே சரீரத்துக்கடுத்த எந்த நன்மையையும் தேடவில்லை. உம்முடைய இராச்சியத்தில் நீர் வரும்போது, என்னை உம்முடைய வலது பக்கத்திலாவது இடதுபக்கத்திலாவது வைத்துக்கொள்ளுமென்று அவன் கேட்கவுமில்லை. தன்னை முழுவதும் அவருடைய சித்தத்துக்கே ஒப்படைத்தான்.

ஆகாதவனுடைய மரணத்தை விரும்பாமல், ஆகாதவன் தன் வழியை விட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிற இயேசு இராசா, இந்த ஏழைப்பாவியின் செபத்தை அல்லைத்தட்டவில்லை. தம்மைச் சுற்றி நின்று தூஷணித்தவர்களுக்கு ஒரு வார்த்தையும் சொல்லாத இயேசு தம்மை நோக்கிக் கூப்பிட்ட இந்தக் கள்ளனுக்கு உடனே உத்தரவு சொல்லுகிறார். இயேசு அவனுடனே: மெய்யாகவே, உனக்குச் சொல்லுகிறேன், இன்றைக்கு என்னுடனே கூடப் பரதீசில் இருப்பாய் என்றார். இரட்சகர் அவனுக்குச் சொன்னது எவ்வளவு கிருபையான உத்தரவு. அவர் அக்கினியிலிருந்து ஒரு கொள்ளியைத் தப்புவிப்பதுபோலவும், ஓநாயின் வாயிலிருந்து ஒரு ஆட்டுக்குட்டியைத் தப்புவிப்பதுபோலவும் இந்தக் கள்ளனை நரகத்திலிருந்தும் பிசாசின் வல்லமையிலிருந்தும் தப்புவித்தார். கள்ளன் அவரை ஆண்டவரென்றும், இராச்சியம் உடையவரென்றும் நினைத்ததற்கு ஏற்றபடியே, அவர் தம்மை இராசாவாகவும் ஆண்டவராகவும் ரூபித்தார். அவர் அவன் கேட்டதை மாத்திரமல்ல, கேட்டதற்கு அதிகமாய்க் கொடுத்ததினால், தம்முடைய இராசரீகதயாளத்தை அவனுக்குக் காண்பித்தார். பராபரன் ஆதாமுக்கு அடைத்துவிட்ட பரதீசை இயேசு இந்தக் கள்ளனுக்குத் திறந்துவிட்டார். அவர் பரதீசுக்கு எசமான். அவர் அங்கேயிருந்து வந்தவர். அதிலே நமக்கு இடம் சம்பாதித்தவர். அதை நமக்குக் கொடுக்கச் சித்தமுள்ளவர். பிதாவே, நான் எங்கேயிருக்கிறேனோ, அங்கே நீர் எனக்குக் கொடுத்தவர்களும் என்னுடனே கூட இருக்கவேண்டுமென்றிருக்கிறேன்



என்று அவர் பெரிய வியாழன் இரவில் செபம்பண்ணினார். பிதா அவருக்கு இந்தக் கள்ளனைக் கொடுத்தார். இந்தக் கள்ளனுக்கு இயேசு பரதீசில் பங்குகொடுத்தார்.—பாவி பரதீசில் போகக்கூடுமோ, ஆதாம் பாவியானதினாலல்லவா பரதீசை இழந்தான் என்று ஒருவேளை யோசிப்போம். கள்ளன் பாவியாயிருந்தாலும், இயேசு அவன் பாவத்தை மன்னித்தார். இலவசமாய் அவனுக்கு அதை மன்னித்தார். தாழ்மையுள்ளவர்களுக்குக் கிருபையளிக்கிறார் என்றபடி இந்தக் கள்ளனுக்கு அவர் கிருபையாய்ப் பங்குகொடுத்தார். அவர் இந்தக் கள்ளனுக்குப் பாராட்டின கிருபையினால் தாம் எல்லாப் பாவிகளுக்கும் வானத்தைத் திறக்க வல்லவர் என்பதை நம்மெல்லாருக்கும் காண்பிக்கிறார்.

இயேசுநாதர் சிலுவையில் மொழிந்த இந்த இரண்டாம் வார்த்தை நம்மைக் குணப்படுதலுக்கு ஏவி, நமக்குள் விசுவாசத்தையுண்டுபண்ணக்கடவது. அந்தக் கள்ளனுக்குப் பரதீசைத் திறந்த இரட்சகர், நமக்கும் அதைத் திறக்கச் சித்தமுள்ளவராயிருக்கிறார். நாமும் அவரை விசுவாசித்து அவருடைய வசனத்தை நம்பினால், நம்முடைய பாவங்களையும் அவர் மன்னிப்பார். நமக்கும் மோட்சத்தைக் கொடுப்பார். என்றாலும், அந்தக் கள்ளனைப்போல் சாகும் நேரத்தில் வேண்டுதல் செய்தால் நமக்கு மோட்சங் கிடைத்துப்போகும் என்று நாம் நினைக்கக்கூடாது. இரட்சகரின் இரண்டு புறத்திலும் இரண்டு கள்ளர்கள் இருந்தும், ஒருவனுக்குத்தானே மோட்சங் கிடைத்தது. ஆகையால், நான் மற்றவனைப்போல் குணப்படாமையில் நிலைத்துக் கெட்டுப்போகக் கூடியதாயிருக்கும் என்று நம்மில் ஒவ்வொருவனும் நினைத்து, இப்பொழுதே குணப்படுவது அவசியம். தம்மை அண்டிக்கொள்ளுகிறவர்களை நம்முடைய பரம இராசா கைவிடாமல், மோட்சகதி சேர்ப்பார்.

3.

சிலுவையில் அறையுண்ட இயேசு ஆறுதல் அளிக்கும் அருமை இரட்சகராகத் தம்மை விளங்கப்பண்ணினார்.

இயேசுவைச் சிநேகித்த விசுவாசிகளின் ஒரு சிறு கூட்டத்தைச் சிலுவையண்டை பார்க்கிறோம். அவர்கள் துக்கம் நிறைந்தவர்களாய்க் கிறிஸ்துவை நோக்கி நின்றார்கள். அவர்களுக்கு ஆறுதல் தேவை என்பதை அவர் அறிந்தார். அந்தக் கூட்டத்தில் இயேசுவின் தாயாகிய மரியாள் நிற்கிறாள். அவள் தன்னுடைய குமாரனைக் குறித்து அநேகம் வாக்குத்தத்தங்களைப் பெற்றவள். இவர் பெரியவராயிருந்து உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; பராபரனாகிய கர்த்தர் அவருக்கு அவருடைய பிதாவாகிய தாவீதின் இராசாசனத்தைக் கொடுப்பார், அவர் யாக்கோபுடைய வீட்டின்மேல் என்றென்றைக்

கும் இராசாவாயிருப்பார், அவருடைய இராசாங்கத்துக்கு முடிவில்லை (லூக். 1; 32. 33) என்ற மகத்துவமான வார்த்தைகளைத் தேவதூதன் அவளுக்குச் சொல்லியிருந்தான். இந்த வாக்குத்தத்தத்துக்குச் சொந்தக்காரராயிருந்த இயேசுநாதர் தம்முடைய வார்த்தையிலும் நடக்கையிலும் எல்லா மனுஷப் பிள்ளைகளைப் பார்க்கிலும் மேலான பிள்ளையாகவே விளங்கினார். தம்மைப் பெற்ற தாய்க்கும், வளர்த்த தகப்பனுக்கும் அவர் கீழ்ப்படிந்திருந்தார். அநேக அதிசயங்களைச் செய்தார். இப்படிக்கெல்லாம் இருந்தும், அவர் சிலுவை மரத்தில் ஒரு கள்ளனைப்போல் மூன்று ஆணியில் தொங்குவதை அந்தத் தாய் பார்க்கவேண்டியதாயிற்று. உன்னுடைய ஆத்துமத்தையே ஒரு பட்டயம் உருவிப்போமென்று சிமெயோன் சொன்ன தீர்க்கதரிசனம் இப்பொழுது நிறைவேறிற்று. மரியாள் சொல்லிமுடியாத துக்கத்தோடு சிலுவையண்டை நின்று, சிலுவையில் தொங்குகிற தன் குமாரனிடத்திலேயே ஆறுதலைத் தேடினாள். அந்த ஆறுதலையும் பெற்றாள். அவளை இயேசுவுக்குப் பின் ஆறுதல்படுத்தவும், அவளுக்காகக் கவலைப்பட்டு அவளைப் பராமரிக்கவும் தகுந்தவர்கள் இல்லை என்பதை இயேசு அறிந்து, தகுந்த ஒருவனை அதற்குத் தெரிந்துகொண்டார். அவர் தம்முடைய தாய்க்குத் தம்முடைய பிரியமுள்ள சீஷனாகிய யோவான் அப்போஸ்தலனைக் காண்பித்து: ஸ்திரீயே, அதோ உன் மகன் என்றார். தமக்குத் தலைசாய்க்க இடமற்ற இரட்சகர் தம்முடைய தாய்க்கு இடம் சம்பாதித்துக் கொடுத்தார். யோவான் அப்போஸ்தலனிடம் தம்முடைய தாயை ஒப்புவித்து: அதோ உன் தாயென்று அவருக்குச் சொன்னதினால், அந்த அருமையான சீஷனுக்கு ஒரு அருமையான பொக்கிஷத்தைக் கொடுத்தாரென்று சொல்லலாம். இப்படியே இந்த இரண்டுபேருக்கும், அவர் ஆறுதல் அளித்தார். அவர் சிலுவையில் தம்முடைய தாயைநோக்கி: ஸ்திரீயே என்று தம்முடைய உத்தியோகத் தன்மையின்படி சொல்லியும், அவளுக்கு ஆதரவைத் தேடிக்கொடுத்ததால், அவர் நாலாம் கற்பனையைப் பூரணமாய்க் கைக்கொண்டு, நியாயப்பிரமாணத்தைச் சரிவர நிறைவேற்றினார்.

இந்த இன்பமான சங்கதியைப் பார்க்கிற நாம் பல காரியங்களையும் கற்றுக்கொள்ளலாம். விசுவாசிகளுக்குத் துன்பமுண்டு. இயேசுவின் தாய்க்கே துன்பமென்றால், நாம் அதற்கு நீங்கலாகக் கூடுமா. விசுவாசிகளுக்கு வரும் துன்பச் சிலுவையோ இன்பச் சிலுவை. ஏனெனில், நமக்காகச் சிலுவையில் அறையுண்ட கிறிஸ்து அதை நமக்கு இன்பமாக்குகிறார். நமக்கு எந்தத் துன்பம் வந்தாலும், யோவானும் இயேசுவின் தாயும் மற்ற ஸ்திரீகளும் செய்ததுபோல் நமக்காகப் பாடுபட்ட இயேசு



வை நோக்கிப் பார்ப்போமாகில், நமக்கு ஆறுதல் கிடைக்குமென்பது நிச்சயம். சிலுவையில் தம்முடைய விசுவாசிகளுக்கு ஆறுதல் அளித்த இந்த அருமை இரட்சகர் இப்பொழுது தம்முடைய மகிமையிலே நம்மை மறப்பாரா. ஒருபோதும் மறக்கமாட்டார். ஏனெனில், அவர் தம்மை விசுவாசித்து, தம்முடைய வசனத்தைக் கேட்கிறவர்களைத் தம்முடைய தாயும் சகோதரருமென்று சொல்லுகிறார்.

மேலும், நாம் அவரைச் சிநேகிக்கிற சிநேகத்தினால் விசுவாசிகளுக்குச் செய்யும் நன்மைகளைத் தமக்குச் செய்கிறதாக ஒப்புக்கொள்ளுவார். ஆகையால், இயேசுவின் தாயைத் தன்னிடமாய் ஏற்றுக்கொண்டு பராமரித்த யோவானைப்போல், நாமும் நன்மை செய்கிறதில் இளக்கரியாதிருக்கக் கடவோம். ஏனெனில், தளர்ந்துபோகாதிருந்தோமானால், ஏற்றகாலத்திலே அறுப்போம். ஆகையால், நமக்குக் காலம் இருக்கக்கொள்ள யாவருக்கும், விசேஷமாக விசுவாசத்தின் வீட்டாருக்கும் நன்மை செய்யக் கடவோம் (கலா. 6, 9. 10).

சிலுவையில் அறையுண்ட இயேசு இரட்சகரே, எங்கள் பாவங்களை மன்னியும். வலபாகக் கள்ளனை நோக்கிப் பார்த்த கிருபைக் கண்ணால் எங்களை நோக்கிப் பாரும். சிலுவையின் கீழ்த் தவிக்கிற விசுவாசிகளுக்கு நீர் இரங்கி, உம்முடைய ஆறுதலைக் கட்டளையிட்டு ஆசீர்வதித்தருளும், சுவாமி. ஆமேன்.

---

## ஒருசந்தி காலத்து ௩-ம் ஞாயிறு.

யோவான் 8, 46-59.

பிரியமானவர்களே,

நம்முடைய பராபரனாகிய கர்த்தர் பரிசுத்தர், மனிதராகிய நாமோ பாவிகள். பாவிகள் பரிசுத்தரிடத்தில் சேரமுடியாது. ஆகையால் இருபக்கத்தையும் சேர்க்கிறதற்கு ஒரு ஆள் அவசியம். இப்படிச் சேர்க்கிறவருக்கு மத்தியஸ்தரென்று பெயர். மத்தியஸ்தரில்லாமல் பராபரனுக்கும் மனிதருக்கும் உறவுண்டாகாது. பழைய ஏற்பாட்டின் காலத்திலிருந்த ஆசாரிமார் ஒருவித மத்தியஸ்தராயிருந்தார்கள். அவர்கள் சனங்களுக்காகப் பலி செலுத்தினார்கள், பராபரனை நோக்கி வேண்டிக்கொண்டார்கள். அப்படியே அவர்கள் பராபரன் சொல்லுகிறதை மனிதருக்குத் தெரிவித்து, அவருடைய ஆசீர்வாதத்தை மனிதருக்குக் கூறினார்கள். அந்த ஆசாரிமாரோ எப்பொழுதும் மத்தியஸ்தராயிருக்

கக் கூடாதிருந்தது. அவர்கள் இயேசுநாதருக்கு முன்னடையாளமாயிருந்தார்கள். அவர்களிடத்திலே பல குறைவிருந்தது. கிறிஸ்து ஒருவர் மாத்திரம் குறைவில்லாத மத்தியஸ்தர். அவரை விசுவாசிக்கிறவர்கள் பராபரனிடத்தில் சேருகிறதற்கும், அவரோடே உறவாகிறதற்கும் தடையில்லை. அவரை விசுவாசியாதவர்கள் பராபரனுக்குச் சத்துருக்கள். அவர்கள் கெட்டழிந்து போவார்கள். இது நம்முடைய சுவிசேஷ வாக்கியத்தினால் தெளிவாம். அதின்படி,

### கிறிஸ்து ஒருவரே நாம் விசுவாசிக்கவேண்டிய மத்தியஸ்தர். ஏனெனில்,

1. அவர் பாவமற்ற பரிசுத்தர்.
2. அவர் வார்த்தை சீவனைக் கொடுக்கும் வார்த்தை.
3. அவர் வெறும் மனுஷனாக மாத்திரமல்ல, மெய்யான தேவனாகவும் இருக்கிறார்.

### 1.

இயேசுநாதர் பாவமில்லாத பரிசுத்தராயிருப்பதால் அவரே நாம் விசுவாசிக்கவேண்டிய மத்தியஸ்தர்.

என்னில் ஒரு பாவம் உண்டென்று உங்களில் ஆர் என்னைக் குற்றம்பிடிப்பான்; நான் சத்தியத்தைச் சொன்னேனேயாகில், நீங்கள் என்னை விசுவாசியாமல் போகிறதென்ன. பராபரனால் உண்டானவன் பராபரனுடைய வார்த்தைகளைக் கேட்கிறான். நீங்கள் பராபரனால் உண்டாயிராதபடியினாலே, கேளாமல்போகிறீர்கள் என்றார். பழைய ஏற்பாட்டின் மத்தியஸ்தர்களில் மோசே என்பவர் முக்கியமானவர். பராபரனிடத்தில் பத்துக்கற்பனைகளை வாங்கி இஸ்ரவேலருக்குக் கொடுத்தார். அப்படியே இஸ்ரவேலருக்காகப் பராபரனிடத்திலே அடிக்கடி பரிந்து பேசி, அவர்களுக்கு அநேக நன்மைகளைக் கேட்டு வாங்கினார். என்றாலும், அவர் பாவியாயிருந்தார். அவர் பராபரனுடைய சித்தத்துக்கு ஏற்க நடவாததினால், பராபரன் அவருக்குக்கானான் தேசத்துக்குள் பிரவேசிக்க உத்தரவு கொடாதிருந்தார். அவருடைய சகோதரனாகிய ஆரோனென்பவர் பிரதான ஆசாரியராயிருந்து, பலி செலுத்தி, வேண்டிக்கொண்டு, ஆசீர்வதித்துவந்தார். ஆகையால், அவரையும் மத்தியஸ்தரென்று சொல்லலாம். ஆனாலும், அவரும் பல சமயங்களில் பராபரனுடைய கற்பனைகளுக்கு விரோதமாய் நடந்தார். எந்த மனுஷனைப் பார்த்தாலும் குறைவில்லாமல் இருக்காது. ஒவ்வொருவனிடத்திலும் ஒரு குற்றமாவது இருக்கும். இயேசுநாதர் ஒருவர் மாத்திரம் யாதொரு குற்றமுமில்லாதவர். அவர் பரிசுத்த ஆவியினால் கர்ப்பமாகி உற்பவித்தார். ஆகையால், பிறப்பிலே அவருக்குப் பாவமில்லை.



அவர் நினைத்த நினைவெல்லாம் பரிசுத்தமாயிருந்தது. அவர் பேசின பேச்செல்லாம் பரிசுத்தமாயிருந்தது. அவருடைய வார்த்தையிலாகிலும் நடக்கையிலாகிலும் பராபரனுடைய கற்பனைக்கு விரோதமானது ஒன்றுமில்லை. ஆகையால், அவர் தம்முடைய சத்துருக்களுக்குமுன்னால் நின்று, தம்முடைய நெஞ்சிலே கையை வைத்து: என்னில் ஒரு பாவமுண்டென்று உங்களில் ஆர் என்னைக் குற்றம்பிடிப்பான் என்று தைரியமாய்ச் சொன்னார். நம்மில் ஒருவன் தன்னைக்குறித்து அப்படிச் சொல்லக்கூடுமா. உலகத்தில் எந்த மனுஷனாவது அந்தப்படி சொல்லக்கூடுமா. இயேசுநாதர் யாதொரு பாவம் செய்தவராயிருப்பாராகில், அவர் கேட்ட கேள்விக்கு அவருடைய விரோதிகள் அவரை இலேசாய் விடுவார்களா. அவர்கள் அவரைத் துஷ்டத்தனமாய் ஏசிப்பேசினார்களே அல்லாமல், நீ இன்ன இடத்திலே இன்னகுற்றம் செய்தாயென்று ஒரேயொரு குற்றத்தையாவது சுட்டிக்காட்டவில்லை. அவர்கள் பிரதான ஆசாரியருக்குமுன்னும், பொந்தியுப்பிலாத்து ஏரோதே என்பவர்களுக்குமுன்னும், அவர்மேல் கொண்டுவந்த ஒரு குற்றமாவது ரூபகாரமாயிற்றா. இல்லவே இல்லை. பொந்தியுப்பிலாத்து: நான் அவனில் ஒரு குற்றமும் காணேன் என்று பத்து விசை சொன்னான். ஏரோதே இராசாவும் அவரிடத்தில் ஒரு குற்றமுங் காணவில்லை. சிலுவை மரத்திலே அவர் பக்கத்தில் தொங்கின கள்ளன்: இவரோவென்றால், அவகுணமானது ஒன்றையும் நடப்பித்ததில்லை என்று சொன்னான். அவருடைய சிலுவையண்டை நின்ற சேர்வைக்காரன் அவரை நீதிபரனென்று சொன்னான். இப்படியாக அவர் பாவமில்லாத பரிசுத்தரென்று தெளிவாய் விளங்கிற்று. ஆகையால் அவர் உத்தமமத்தியஸ்தர்.

மேலும், அவர் சத்தியத்தைச் சொன்னார். மனிதரெல்லாரும் பொய்யர். இயேசுநாதர் ஒருவர் மாத்திரம் சத்தியவாசகர். அவர் பொய்பேசினதேயில்லை. நம்முடைய இரட்சிப்புக்கு என்னென்ன அவசியமோ அதை எல்லாம் அவர் தெரியப்படுத்தினார். அவர் பாவமில்லாதவராயிருந்ததினால் அவர் பாவிகளுக்குப் பிணையாளியாகத் தகுந்தவராயிருந்தார். அவர் சொன்னதெல்லாம் சத்தியமாயிருந்ததினாலே. அவருடைய வார்த்தைகளை மனிதர்கள் ஏற்றுக்கொள்ளவும் அவரை விசுவாசிக்கவும் நியாயமிருந்தது. யூதர்களோ அவரை விசுவாசிக்காமல், கெட்டுப்போனார்கள். அவர்கள் தங்களுடைய இருதயத்தைப் பிசாசுக்கு ஒப்புக்கொடுத்து பராபரனுக்கு விரோதிகளானார்கள். ஆகையால் இயேசுநாதர்: நீங்கள் பராபரனால் உண்டாகாதவர்களென்று அவர்களுக்குச் சொன்னார்.

பாவத்தைச் சிநேகித்து இயேசுநாதரைப் பகைக்கிறவர்கள் யாரோ, அவர்கள் பராபரனுடைய பிள்ளைகளல்ல. அவர்க

ளைப் பராபரன் ஏற்றுக்கொள்ளமாட்டார், நாம் அவர்களைப் போல் செய்யாமல் பரிசுத்தமுள்ள இயேசுவை விசுவாசித்து, அவருடைய பரிசுத்த வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளக்கடவோம். பரிசுத்தமுள்ளவரோடே சம்பந்தப்படுகிறவன் தானும் பரிசுத்தமாவான். நெருப்போடு சேர்ந்த இரும்பும் நெருப்பாகும். நல்ல மாமரத்தோடே ஒட்டப்பட்ட வேறே மாங்கன்றும் நல்ல மாமரமாகும். ஒட்டு மாம்பழம் எவ்வளவு ருசியென்று நமக்குத் தெரியும். நாமும் நல்ல மரங்களாகும்படி பழுதற்ற பரிசுத்தராகிய இயேசுநாதரை நம்முடைய முழு இருதயத்தினாலும் விசுவாசிப்போமாக.

2.

இயேசுநாதருடைய வார்த்தை ஜீவனைக்கொடுக்கும் வார்த்தையாயிருப்பதால் அவரே நாம் விசுவாசிக்கவேண்டிய மத்தியஸ்தர்.

இயேசுநாதர் அவர்களுக்குச் சத்தியத்தைச் சொல்லியும், அவர்கள் அவரை விரோதித்து, சமாரியனென்றும் பிசாசையுடையவனென்றும் சொல்லி, அவரைத் தூஷித்தார்கள். சமாரியனென்றால் யூதரும் அஞ்ஞானிகளும் கலந்து பிறந்த சனத்தில் ஒருவன். அவனைச் சாதிகெட்டவனென்று யூதர்கள் சொல்லித் தள்ளினார்கள். சமாரியரோடு அவர்கள் சாப்பிட மாட்டார்கள். ஆகையினால், இயேசுநாதரையும் தங்களோடு சாப்பிடத்தகாத சாதிகெட்ட மனுஷனென்று திட்டினார்கள். யூதர்கள் தங்களைப் பராபரனுடைய சனமென்று எண்ணினதினால், தங்களுக்கு விரோதமாய்ப் பேசின இயேசுநாதரைப் பிசாசையுடையவனென்று சொன்னார்கள். இப்படியே இயேசுநாதர் நல்லது சொல்லி, தீமையை அனுபவித்தார். யூதர் அவரை இப்படி ஏசிப்பேசியும், அவர் அவர்களைச் சபித்துப்போடாமல், அவர்களுக்கு நல்ல மறுமொழி சொன்னார்.

நான் பிசாசை உடையவனாயிராமல், என் பிதாவைக் கனம்பண்ணுகிறேன்; ஆனால் நீங்கள் என்னைக் கனவீனம் பண்ணுகிறீர்கள். நானோவெனில் என் மகிமையைத் தேடேன்; அதைத்தேடி நியாயந்தீர்க்கிறவர் இருக்கிறார். மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், ஒருவன் என் வார்த்தையைக் கைக்கொண்டால், அவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காணான் என்றார். இயேசுநாதருடைய வார்த்தைக்கும் மற்ற மனுஷர்களுடைய வார்த்தைக்கும் பெரிய வித்தியாசமிருந்தது. சாதாரணமாய் அவருடைய பிரசங்கத்தைக் கேட்டவர்கள் எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள். மலையின்மேல் அவருடைய பிரசங்கத்தைக் கேட்டவர்களைக்குறித்து மத்தேயு சுவிசேஷகன்: கும்புகள் அவருடைய போதகத்திற்காகப் பிரமித்தது; அதேனெ



னில் வேதபாரகரைப்போல் அல்ல, அதிகாரமுள்ளவரைப்போல் அவர்களைப் போதிவிக்கிறவராயிருந்தார் என்று சொல்லுகிறார். ஒரு சமயத்தில் யூதசங்கத்தார் இயேசுநாதரைப் பிடித்து வரும்படி சில வேலைக்காரரை அவரிடம் அனுப்பினார்கள். அந்த வேலைக்காரரோ அவரைப் பார்த்தும், அவரைப் பிடிக்காமல் திரும்பிப்போனார்கள். அவர்களுடைய எசமான்கள்: நீங்கள் அவனைக் கொண்டுவராதே போனதென்ன என்று கேட்டதற்கு அவர்கள் பிரத்தியுத்தரமாக: ஒருக்காலும் ஒரு மனுஷனும் இந்த மனுஷனைப்போலே பேசினதில்லை என்றார்கள். இதினால் அவருடைய வாக்கில் மற்ற மனுஷருக்கு இல்லாத ஒரு பெலனிருந்தது என்று தெரியவருகிறது. கேட்டோருக்குப் பிரமிப்பையும் ஆச்சரியத்தையும் உண்டுபண்ணுகிற வார்த்தைகளை அவர் பேசினார். தம்முடைய வார்த்தையை எவன் கைக்கொள்ளுகிறானோ, அவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காணானென்று இரட்சகர் சொல்லுகிறார். அவருடைய வார்த்தையை எவன் ஏற்றுக்கொண்டானோ, அவனுடைய இருதயத்தில் விசுவாசமுண்டாகும். விசுவாசமுடையவன் கிறிஸ்துவோடே ஐக்கியமாகிறான். விசுவாசிக்கும் கிறிஸ்துவுக்கும் நெருங்கின சம்பந்தம் உண்டாகிறது. கிறிஸ்துவோடு சம்பந்தப்பட்டவனுக்கு உயிர் உண்டாகிறது. அப்படியானால், கிறிஸ்துவை விசுவாசியாதவர்களெல்லாரும் செத்தவர்களா என்று கேட்போம். அவர்கள் செத்தவர்கள்தான். அவர்களுக்கு உயிரில்லை. ஒரு பிணத்துக்குக் கண்ணிருந்தும் காணாது, வாயிருந்தும் பேசாது, மூக்கிருந்தும் முகராது, கையிருந்தும் தொடாது. அப்படியே பாவிக்கு உயிரில்லாததினால் அவன் மெய்யான பராபரனைப் பார்க்கிறதில்லை, அவரை அறிகிறதில்லை, அவர் வசனத்தைக் கேட்கிறதில்லை, அவர் வழிகளில் நடக்கிறதில்லை, அவருக்குப் பிரியமான தொன்றையும் செய்கிறதில்லை. இயேசு இரட்சகரை விசுவாசித்தவனுக்கு மாத்திரம் உயிர் இருக்கிறபடியினாலே அவன் இதை எல்லாம் செய்வான். அவன் ஒரு கல்லைச் சுவாமி என்று சொல்லாமல், பராபரனைச் சுவாமி என்று சொல்லி, அவரண்டை சேர்ந்து அவருடைய வசனத்தைக் கேட்டு, அவருடைய வழியில் நடப்பான். இந்தப்பலன் எதினால் வருகிறது. இயேசுநாதருடைய உயிருள்ள வார்த்தையினால்தான். செத்த உலகத்திற்கு உயிர் வரும்படி தேவ ஊழியர் கிறிஸ்துவின் வார்த்தையைப் பிரசங்கிக்கிறார்கள். நமக்கு உயிர் வரும்படிக்கே சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது. சுவிசேஷ வார்த்தையை ஏற்றுக்கொண்டு அதிலே நிலைத்திருக்கிறவன் மரணத்தைக் காணான் என்பது நிசம். இப்படிச் சொல்லுகிறதினாலே, கிறிஸ்தவர்களெல்லாரும் செத்துப்போகாமல் எப்பொழுதும் இந்த உலகத்திலே உயிரோடிருப்பார்க

ளென்று நாம் நினைக்கக்கூடாது. இயேசுநாதரை விசுவாசிக்கிற கிறிஸ்தவர்களும், அவரை விசுவாசியாத மற்ற மனுஷர்களைப்போலே ஒரு நாளில் செத்து அடக்கம் பண்ணப்படுவார்கள். இதிலே வித்தியாசமில்லாவிட்டாலும், வேறொன்றில் வித்தியாசம் இருக்கும். அவர்களுடைய ஆத்துமா அவர்கள் உடலைவிட்டுப் பிரிந்தாலும், இயேசுநாதரை விட்டுப் பிரியாது, பராபரனை விட்டுப் பிரியாது; மரணமானாலும், ஜீவனானாலும், தூதரானாலும், துரைத்தனங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்த்தியானாலும் தாழ்த்தியானாலும், வேறெந்த சிருஷ்டியென்கிலும் நம்மை நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பராபரனுடைய சிநேகத்தை விட்டுப் பிரிக்கமாட்டாது (ரோ. 8, 38. 39). இதுவே இயேசுவின் வார்த்தையை ஏற்றுக்கொள்ளுகிறவனுக்கும் ஏற்றுக்கொள்ளாதவனுக்கும் உள்ள வித்தியாசம். கிறிஸ்துவை விசுவாசித்தவன் பாவமன்னிப்பைப் பெற்றவனாகையால், அவனுக்கும் பராபரனுக்கும் இனி பிரிவினையில்லை. பாவம் பிரிக்கிறது, பாவமன்னிப்பு சேர்க்கிறது. ஆகையால், பாவம் மரணமாயிருக்கிறது, பாவமன்னிப்போ ஜீவனாயிருக்கிறது. பாவமன்னிப்பைப் பெற்றவன் இந்த உலகத்தில் சரீரத்திலே உயிரோடிருப்பான். பரலோகத்திலே சரீரமில்லாமல் உயிரோடிருப்பான். கடைசிநாள் வரும்பொழுது அவன் திரும்பவும் இந்தச் சரீரத்தைப் பெற்று என்றென்றைக்கும் மரணத்தைக் காணாமல், உயிரோடிருப்பான். ஆகையால் ஒரு கிறிஸ்தவன் இந்த உலகத்தில் மற்ற மனுஷர்களைப்போல் சாகிறபொழுது துக்கத்தோடு சாகாமல், சந்தோஷத்தோடு பிரிந்துபோகிறான்.

என் மனது களிக்கும்,
நான் துக்கமாவேனோ;
இயேசு என்மேல் உதிக்கும்
பகலோன் அல்லவோ.

பரத்தில் வைக்கப்பட்ட
அனந்த பூரிப்பு
என் ஆவிக்குப் பலத்த
திடன் உண்டாக்குது

என்று பாடி மரிக்கிறான். ஆபிரகாம் முதலிய விசுவாசிகளும் இந்த இயேசுநாதரைப் பற்றும் விசுவாசத்தினாலேதான் பிழைத்திருந்தார்கள். ஆபிரகாம் தன் விசுவாசத்தினாலே இயேசுநாதரைக் கண்டு சந்தோஷப்பட்டான். உன் வித்திலே பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படுமென்று பராபரன் அவனுக்குச் சொன்னதை அவன் நம்பியிருந்தான். ஈசாக்கு பிறந்த உடனே இயேசுநாதர் பிறந்ததுபோலே அவனுக்குச் சந்தோஷம் வந்தது. ஏனென்றால், ஈசாக்கைப் பிறக்கப்பண்ணினவர் அவனுடைய சந்ததியிலே இயேசுநாதரையும் பிறக்கப்பண்ணுவார் என்கிற பூரண நிச்சயம் அவனுக்குண்டாயிற்று.



நாமும் கிறிஸ்துவின் வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு அவரிடத்தில் நிலைத்திருப்போமானால், ஆபிரகாமுக்குக் கிடைத்த ஆனந்தமும் பாக்கியமும் நமக்குக் கிடைக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. நாம் இம்மையிலும் பிழைத்திருப்போம், மறுமையிலும் பிழைத்திருப்போம்.

3.

கிறிஸ்து வெறும் மனுஷனாகமாத்திரமல்ல மெய்யான தேவனாகவுமிருப்பதால் அவரே நாம் விசுவாசிக்கவேண்டிய மத்தியஸ்தர்.

அப்பொழுது யூதர் அவருடனே: உனக்கு இன்னம் ஐம்பது வயதில்லாதிருந்தும் ஆபிரகாமைக் கண்டாயோ என்றார்கள். இயேசு அவர்களுடனே: மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், ஆபிரகாம் உண்டாகாததற்கு முன்னே நான் இருக்கிறேன் என்றார்.

யூதர்கள் அவரை வெறும் மனிதனென்று எண்ணினதால், அவர் ஆபிரகாமின் காலத்திலே இருந்திருக்கமாட்டாரென்று நினைத்தார்கள். அவரோ ஆபிரகாமின் காலத்தில் மாத்திரமல்ல, உலகம் உண்டாகாததற்கு முன்னே இருந்தவர். அவரே உலகத்தை உண்டாக்கின வார்த்தை. அவரைக்குறித்து: ஆதியிலே வார்த்தை இருந்தது, அவ்வார்த்தை பராபரனிடத்தில் இருந்தது; அவ்வார்த்தை பராபரனுமாயிருந்தது. இது ஆதியிலே பராபரனிடத்தில் இருந்தது; எல்லாம் அதினால் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அதையல்லாமல் உண்டானதில்லை என்று யோவான் அப்போஸ்தலன் சொல்லுகிறார் (யோவான் 1, 1-3). மனிதரெல்லாருக்கும் துவக்கமுண்டு. எல்லாச் சிருஷ்டிக்கும் துவக்கமுண்டு. இயேசுநாதருக்கோ துவக்கமில்லை, முடிவுமில்லை. ஆகையால் அவர் மெய்யான தேவன். அவர் மெய்யான தேவன் என்பதற்கு அவர் தம்முடைய சொந்தவல்லமையால் செய்த கணக்கில்லாத அற்புதங்கள் சாட்சி. அவர் மெய்யான தேவன் என்பது அவர் மரித்தோரிலிருந்து எழுந்ததினால் நிச்சயமாய்த் தெரிகிறது. அவர் மரித்தோரிலிருந்து எழுந்ததினால் பராபரனுடைய சுதனென்று பலமாய் ரூபிக்கப்பட்டதாக அப்போஸ்தலன் சொல்லுகிறார் (ரோ. 1, 4). பழைய ஏற்பாட்டின் மத்தியஸ்தர்களெல்லாம் வெறுமனுஷராயிருந்ததினாலே அவர்கள் எல்லாக்காலத்துக்கும் எல்லாமனுஷருக்கும் மத்தியஸ்தர்களாயிருக்கக் கூடாமல் போயிற்று. நம்முடைய மத்தியஸ்தராகிய இயேசுநாதரோ மெய்யான தேவனாயிருப்பதால், அவருடைய புண்ணியம் எல்லாக் காலத்துக்கும் போதும், எல்லா மனுஷருக்கும் போதும், எல்லாப் பாவங்களுக்கும் அவரால் மன்னிப்

புண்டு. ஆகையால், அவரை நாம் நம்முடைய பிணையாளியாகவும் மத்தியஸ்தராகவும் நம்பி விசுவாசிக்கத் தடையில்லை.

யூதர்களோ அவரை விசுவாசியாமல், அவரைப் பகைத்து அவர்மேல் எறியக் கல்லுகளை எடுத்துக்கொண்டார்கள். இயேசுநாதர் பஸ்காப் பண்டிகையில் மரிக்கவேண்டியதாயிருந்ததினாலும், அவர் சாபமரமாகிய சிலுவையிலே அறையுண்டு மரிக்கச் சித்தமாயிருந்ததினாலும், அவர்கள் தம்மை இச்சமயத்தில் கொல்லுகிறதற்கு அவர் இடங்கொடுக்கவில்லை. இயேசு மறைந்து, அவர்கள் நடுவே கடந்து, தெய்வாலயத்தை விட்டு, வெளிப்பட்டு, இப்படியாய் அப்புறம்போனார். அவர் தம்முடைய சத்துருக்களால் சூழப்பட்டு அவர்கள் நடுவே நின்றிருந்தும், அவர்கள் அவரைப் பிடிக்கமாட்டாமல் போனார்கள். அவர்களுடைய கண்களை அவர் மறைத்துப்போட்டதால், அவர் எந்த வழியாய்ப் போனாரென்று அவர்களுக்குத் தெரியாமல் போயிற்று. இப்படி அவர்களுடைய கண்களைக் குருடாக்கினதினாலும், அவர்கள் நடுவே மறைந்துபோனதினாலும், அவருடைய தெய்வீகமகிமை தெளிவாயிருக்கிறது. மெய்யான தேவனும் மெய்யான மனுஷனுமாகிய அவரையே நாம் நம்முடைய மத்தியஸ்தராகப் பற்றிக்கொள்ளக் கடவோம்.

இயேசுவே, தேவரீர் உம்முடைய வார்த்தையைக்கொண்டு எங்களுக்கும் உயிர்கொடுத்தருளும். மெய்யான தேவனும் மெய்யான மனுஷனுமாகிய உம்மிடத்திலே நாங்கள் மெய்விசுவாசத்தோடு தரித்திருந்து நித்திய ஜீவனை அடைய எங்களுக்கு ஒத்தாசை பண்ணியருளும், சுவாமி. ஆமென்.

---

## ஒருசந்தி காலத்து ௬-ம் வெள்ளிக்கிழமை.

### பாடுபட்டசரித்திரம் 130—139.

ஆறும் மணிவேளையானபோது ஒன்பதாம் மணி வேளைமட்டுக்கும் பூமியின் மீதெங்கும் அந்தகாரம் உண்டாச்சுது. சூரியன் இருண்டுபோச்சுது. ஒன்பதாம் மணி வேளையிலோ இயேசு மகா சத்தத்தோடே: ஏலி, ஏலி, லாமா அசப்தானி என்று கூப்பிட்டார். இது: என் பராபரனே, என் பராபரனே, நீர் என்னைக் கைவிட்டதேது என்கிற அர்த்தமாயிருக்கிறது. அதை அங்கே நின்றவர்களில் சிலர் கேட்டபோதோவெனில்: இவன் எலியாவைக் கூப்பிடுகிறான் என்றார்கள். இதன் பிறகு இயேசு எல்லாம் முடிந்து தீர்ந்ததென்று அறிந்து, வேத எழுத்து நிறைவேறும்படியாய்: தாகமாயிருக்கிறேன் என்றார். அனால் காடி நிறைந்த பாத்திரம் வைக்கப்பட்டிருந்தது. உடனே அவர்களில் ஒருவன் ஓடிக் கடற்காளானை எடுத்து, காடியால் நிரப்பி, அதை ஈசோப்புத்தண்டில் மாட்டி, அவர் வாயண்டைக்குக் கொண்டுபோய், அவருக்குக் குடிக்கக் கொடுத்தான். இயேசு காடியை வாங்கினபோதோவென்றால்: முடிந்தது என்று சொன்னார். அவர் மறுபடியும் மகா சத்தமாய்: பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று கூப்பிட்டார். இயேசு இதுகளைச் சொல்லி, தலையைச் சாய்த்து, ஆவியை ஒப்புவித்தார். அப்போது, இதோ, தெய்வாலயத்தின் திரை மேலே துவக்கிக் கீழேமட்டும் இரண்டாகக் கிழிந்தது; பூமியும் அதிர்ந்தது; கன்மலைகளும் பிளந்தது; கல்லறைகளுந் திறந்துபோய், நித்திரையடைந்திருந்த பரிசுத்தவான்களுடைய அநேகஞ் சரீரங்கள் எழுந்திருந்தது. அவர் எழுந்த பிறகு இவர்கள் கல்லறைகளை விட்டுப் புறப்பட்டு, பரிசுத்த பட்டணத்துக்குள் பிரவேசித்து, அநேகருக்குக் காணப்பட்டார்கள். அவருக்கு எதிராய் அண்டையிலே நின்ற சேர்வைக்காரனோவெனில், அவர் இப்படி கூப்பிட்டுச் சீவனை விட்டதைக் கண்டபோது: மெய்யாகவே இந்த மனுஷன் நீதிபரனும் பராபரனுடைய குமாரனுமாயிருந்தாரென்று பராபரனை மகிமைப்படுத்தினான். அவனோடே கூட இயேசுவைக் காத்திருந்தவர்களும் பூமியதிர்ச்சியையுஞ் சம்பவித்த காரியங்களையுங் காண்கையில், மிகவும் பயந்து: மெய்யாய் இவர் பராபரனுடைய சுதனாயிருந்தாரென்றார்கள். இந்த வேடிக்கைக்குக் கூடியிருந்த கும்புகளெல்லாஞ் சம்பவித்ததைக் காண்கிறபோது, தங்கள் மார்பிலே அடித்துக்கொண்டு திரும்பினார்கள்.



௧

பிரியமானவர்களே,

நம்முடைய இரட்சகர் சிலுவையில் அறையுண்டது காலமே ஒன்பதுமணி. அவர் சிலுவையில் அறையுண்டபின் பாவிகளுக்காக வேண்டுதல் செய்து, குணப்பட்ட கள்ளனுக்கு வாக்களித்து, தம்முடையவர்களுக்கு ஆறுதல் சொன்னார். யோவான் இயேசுவின் தாயைத் தன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனார். மனிதரோடே இயேசு இரட்சகர் பேசவேண்டிய பேச்சு இத்தோடு தீர்ந்தது. அவரும் பிதாவும் தனித்துப் பேசவேண்டிய நேரம் வந்தது. முன்னே கெத்சேமனே தோட்டத்தில் தனித்துச் செபம்பண்ணி, பிதாவின் கையிலிருந்து தேவகோபம் அடங்கின பாத்திரத்தை வாங்கினவர் அதை முழுவதும் குடித்து, பராபரனுடைய நீதிக்குத் திருப்திசெய்யச் சித்தமானார். இதற்காகப் பகல் பன்னிரண்டு மணி முதல் மூன்று மணி மட்டும் (பகல் 15 நாழிகை முதல் $22\frac{1}{2}$ நாழிகைவரையில) பூமியெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று. சூரியன் இருண்டுபோயிற்று. நம்முடைய இரட்சகர் பிறந்தபொழுது இரவு பகலாயிற்று. அவர் பாடுபடும்பொழுதோ பகல் இரவாயிற்று. ஒருவரும் சேரக்கூடாத வெளிச்சத்தில் வாசமாயிருக்கிறவருக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்தவனுக்கு நரக இருளில் பங்கிருக்கும். இயேசுநாதர் நம்முடைய பிணையாளியானதால் நரக இருள் அவரைச் சூழ்ந்துகொண்டது. இப்பொழுது அவர் சொன்ன

வார்த்தைகளைக் கேட்டு, அவருக்கு நடந்தவைகளைக் கவனிப்போம், வாருங்கள்.

சிலுவையில் அறையுண்ட இயேசுவைப் பார்ப்போம்.
1. அவர் பட்ட பாடுகளையும்,
2. அவர் அடைந்த மரணத்தையும் தானே.

## 1.

சிலுவையில் அறையுண்ட இயேசு பட்ட பாடுகளைக் குறித்துச் சிந்திப்போம்.

அவர் சிலுவையில் சொன்ன நாலாம் வார்த்தை அவருடைய ஆத்துமப் பாட்டின் கொடுமையையும் அவர் அனுபவித்த நரக வேதனையையும் நமக்குக் காண்பிக்கும். என் பராபரனே, என் பராபரனே, நீர் என்னைக் கைவிட்டது ஏது என்பது அவர் சொன்ன நாலாம் வார்த்தை. அவர்: பராபரனே என்று கூப்பிட்டதால், சர்வத்துக்கும் வல்லவராகிய பராபரனுடைய கை தம்மைக் கொடுமையாய் வெட்டினாலும், அந்த வல்லவரையே உதவிக்குக் கூப்பிடுகிறார். அவர் என்னைக் கொன்றுபோட்டாலும் அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன் என்று யோபு சொன்னதுபோல் (யோபு 13, 15) அவர் பேரில் நம்பிக்கைவைத்திருந்ததால்: என் பராபரனே என்று கூப்பிட்டார். அவர்: என் பராபரனே, என் பராபரனே என்று இரண்டுதரம் கூப்பிட்டதனால், அவருடைய வேதனை எவ்வளவு பெரிதாயிருந்ததென்று அறிந்துகொள்ளலாம்.

நீர் கைவிட்டது ஏது என்று இரட்சகர் கூப்பிட்டதால், பிதா அவரைக் கைவிட்டார் என்கிறது நமக்குத் தெரிகிறது. யூதா பொருளாசையால் கைவிட்டான். பேதுரு பலவீனத்தால் கைவிட்டார். சீஷர் பயத்தினால் கைவிட்டார்கள். யார் கைவிட்டாலும், பராபரன் கைவிடாதிருந்தால் போதுமானது. நம்முடைய கர்த்தருக்கோ இந்த ஆறுதலும் இல்லாமல், பிதாவும் அவரைக் கைவிட்டார். காரணம் நம்முடைய பாவமே.

என்னைக் கைவிட்டீர் என்று கர்த்தர் கூவுகிறார். பாவிகளைப் பராபரன் கைவிடுவது நியாயம். கிறிஸ்துவோ பாவமற்ற பரிசுத்தர். அவர் நம்முடைய பாவத்தைச் சுமந்ததனால், பராபரன் அவரைக் கைவிட்டார்.

கைவிட்டீர் என்பது எவ்வளவு பயங்கரமான வார்த்தை. நம்முடைய இரட்சகர் பராபரனுடைய ஐக்கியத்துக்குப் புறம்பானார். அவருடைய திருமுகம் இயேசுவை விட்டு விலகிற்று, அதனால் இயேசு சகல சந்தோஷத்திற்கும் ஆறுதலுக்கும் தூரமானார். பசாசின் கொடிய தூஷணங்களும், நரகத்தின் அக்கினியும் அவருடைய ஆத்துமத்தை வாதித்தது.



கைவிட்டது ஏது என்று இரட்சகர் சொன்னது முறுமுறுப்பினால் அல்ல; அந்த வார்த்தை அவருடைய பாடுகளின் கொடுமையையும், அவர் சிநேகத்தின் ஆழத்தையும் காண்பிக்கும். அவர் கைவிடப்பட்டதனால், அவரை விசுவாசிக்கிறவர்கள் கைவிடப்படமாட்டார்கள். நாம அவரை முன்னிட்டு எல்லாக் காலத்திலும் நம்பிக்கையாய்ச் செபஞ்செய்யலாம்.

இப்படியே அவருடைய நாலாம் வார்த்தை அவருடைய ஆத்துமா அனுபவித்த கொடிய வேதனையைக் காண்பிப்பதுபோல், அவருடைய ஐந்தாம் வார்த்தை அவருடைய சரீர வேதனையைக் காண்பிக்கும். தாகமாயிருக்கிறேன் என்பது அவருடைய ஐந்தாம் வார்த்தை.

சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கின கர்த்தர், தம்முடைய சனமாகிய இஸ்ரவேலுக்குக் கன்மலையிலிருந்து அற்புதமாய்த் தண்ணீர் வரப்பண்ணின கர்த்தர்: தாகமாயிருக்கிறேன் என்கிறார். இதனால் அவருக்கு எவ்வளவு அவஸ்தையிருந்ததென்று நாம் பார்க்கலாம். சங்கீதக்காரன் சொல்லுகிறபடி அவருடைய பெலன் ஓட்டைப்போல் காய்ந்துபோய், அவருடைய நாவு மேல்வாயோடே ஒட்டிக்கொண்டது (சங். 22, 16). நம்முடைய இரட்சகர் பாவம் தவிர எல்லாவற்றிலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டவராயிருப்பதால், நம்முடைய பசியும் நம்முடைய தாகமும் அவருக்கு நன்றாய்த் தெரியும். பெரிய வியாழக்கிழமை இரவிலே அவர் கெத்செமனே தோட்டத்திலும், அன்னாவின் வீட்டிலும் காய்பாவின் வீட்டிலும், பட்டபாடுகள் அவருக்குத் தாகத்தை உண்டாக்கக் கூடியவைகளே. முக்கியமாய்ப் பொந்தியுபிலாத்துவின் வீட்டிலே வாரடியினாலும், முள்முடியினாலும், சிலுவைமரத்திலே ஆணிகடாவுதலினாலும், அவருடைய இரத்தம் வெகுவாய்ச் சிந்துண்டதால், அவருக்குத் தாகம வரத்தக்கதே. நரகத்துக்குப் போன ஐசுவரியவானுக்குவந்ததுபோல், நமக்குத் தாகம் வராதபடிக்குக் கர்த்தர் நமது நிமித்தம் நரக வேதனையை அனுபவித்து, சொல்லிமுடியாத தாகத்தைச் சகிக்கச் சித்தமானார்.

பிரியமானவர்களே, நமக்காகத் தாகமடைந்த நம்முடைய அருமை இரட்சகரை நாம் முழு இருதயத்தினாலும் விசுவாசிப்போமாக. மான் தண்ணீர் நதிகளின்மேல் வாஞ்சையாய்க் கதறுகிறதுபோலே நம்முடைய ஆத்துமா அவர்மேல் வாஞ்சையாய்க் கதறுவதாக. அவர் தம்மண்டை வாஞ்சையாய் வருகிற எல்லாருக்கும் ஜீவ தண்ணீரை இலவசமாகக் கொடுப்பார் (அறி. 22, 17).

வேத எழுத்து நிறைவேறும்படியாக இயேசுநாதர்: தாகமாயிருக்கிறேன் என்றார். எனக்குப் பிச்சுண்கத் தந்து, என்

தாகத்தில் எனக்குக் காடி குடிக்கக் கொடுக்கிறார்கள் (சங். 62, 25) என்கிற தீர்க்கதரிசன வாக்கியம் நிறைவேறுகிறதற்கு அது சமயமாயிற்று. ஏனெனில், சேவகரில் ஒருவன் ஓடி, கடற்காளானை எடுத்து, காடியால் நிரப்பி, அதை ஈசோப்புத்தண்டில் மாட்டி, அவர் வாயண்டைக்குக் கொண்டுபோய், அவருக்குக் குடிக்கக் கொடுத்தான்.

இயேசு காடியை வாங்கினபோதோவென்றால்: முடிந்தது என்று சொன்னார். இதுவே அவர் சிலுவையில் சொன்ன ஆறும் வார்த்தை. இது அவருடைய பாடுகளின் பூர்த்தியையும், அவர் சம்பாதித்த இரட்சிப்பின் பூரணத்தையும் நமக்குக் காண்பிக்கும். இதோ, எருசலேமுக்குப் போய் ஏறுகிறோம். அங்கே மனுஷனுடைய குமாரனைக் குறித்து, தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்டதெல்லாம் நிறைவேறும் என்று (லூக். 18, 31) அவர் சொல்லியிருந்தபடி, யாவும் நிறைவேறி முடிந்தது. பஸ்கா ஆடு அவரில் அடிபட்டுத் தீர்ந்தது. அவரில் வெண்கலச் சர்ப்பத்தை உயர்த்தியாயிற்று. தாவீது முன்னறிவித்தபடி அவர் கைகளையும் கால்களையும் உருவக் குத்தி, அவர் வஸ்திரங்களின் மேல் சீட்டுப்போட்டு ஆயிற்று (சங். 22, 19). எசாயா தீர்க்கதரிசி சொன்னபடி அவர் நம்முடைய பலவீனங்களை எடுத்துக்கொண்டு நம்முடைய நோக்காடுகளைச் சுமந்து தீர்த்தார். நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் இறங்கியாயிற்று (எசா. 53, 4. 5). அவர் பாவிகளுக்காகப் பட்டு உத்தரிக்க வேண்டிய பாடுகளையும் இகழ்ச்சிகளையுமெல்லாம் உத்தரித்து முடித்தார். இனி பாவியானவன் தான் பாவத்திற்காகச் சகித்துப் பட்டு உத்தரிக்கவேண்டிய பாடு ஒன்றுமில்லை. அவரால் இரட்சிப்பு நிறைவேறி முடிந்தது. நோவாவைப்போல் நம்முடைய அருமை இரட்சகர் நமக்கு ஒரு பேழையைச் செப்பனிட்டு முடித்தார். பராபரனுடைய கோபத்துக்குத் தப்பிப் பிழைக்கும்படி, இந்தப் பேழையில் நாம் புகுந்துகொள்ளலாம். ஆகையால் அவர் நம்மைப் பார்த்து: வாருங்கள், எல்லாம் ஆயத்தமாயிற்று என்று கூப்பிடுகிறார். அவர் முடித்த இரட்சிப்பை நாம் மெய்விசுவாசத்தினால் பிடித்துக்கொள்ளுவோமாக.

## 2.

சிலுவையில் அறையுண்ட இயேசு அடைந்த மரணத்தைக் குறித்து இப்பொழுது சிந்திப்போம்.

விலக்கப்பட்ட மரத்தின் கனியில் நீ புசிக்கிற நாளிலே சாகவே சாவாய் என்பது கர்த்தர் ஆதாமுக்குச் சொன்ன வார்த்தை. அந்த தண்டனைக்கு நம்மை நீங்கலாக்க இயேசுநாதர் பிணை



யாளியாக ஏற்பட்டதால், பராபரன் அவருடைய ஜீவனைக் கேட்கிறார். இயேசு அதற்கு முழுவதும் சம்மதித்து: பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று கூப்பிட்டார். இது அவர் சிலுவையில் சொன்ன கடைசி வார்த்தை. கெத்சேமனே தோட்டத்தில் பிதாவை நோக்கிச் செபம்பண்ணி, பாடுகளைத் துவக்கினவர் கொல்கதா மலையில் பிதாவை நோக்கியே கூப்பிட்டு, தம்முடைய பாடுகளை முடித்து மரிக்கலானார். அவர் மரணத்துக்குக் காத்திராமல், மரணத்தைத் தாமே கூப்பிட்டார். ஏனெனில் அவர் தம்முடைய ஜீவனைக் கட்டாயத்தினாலல்ல, உற்சாகமாய்க் கொடுக்கச் சித்தமாயிருந்தார். அவர் மகா சத்தமாய்க் கூப்பிட்டதால், இன்னம் உயிரோடிருக்கப் பெலன் அவருக்கு இருந்தது என்பது தெளிவாயிற்று. ஆகிலும், அவர் நம்முடைய நிமித்தம் மனதாரத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கிறார்.

ஜீவனுள்ள பராபரனுடைய கைகளில் விழுவது பயங்கரமென்று எழுதியிருக்கிறது (எபி. 10, 31). நம்முடைய இரட்சகரோ ஜீவனுள்ள பராபரனுடைய கைகளில் தம்முடைய ஆவியை ஒப்புவித்ததால், அந்தக் கைகள் இனி நமக்குப் பயங்கரமல்ல. இயேசுவின் மரணம் நம்முடைய மரணத்தை இனிப்பாக்குகிறது. இயேசுவை விசுவாசிக்கிறவன் சாகிறதற்குப் பயப்படவேண்டியதில்லை. பரிசுத்த ஸ்தேவான் யூதர்களால் பயங்கரமாய்க் கல்லெறியப்பட்டும், தம்முடைய ஜீவனை இயேசுவின் கைகளில் ஒப்புவித்து, சந்தோஷமாய் மரித்தார். நாம் சாகும்பொழுதும், நம்முடைய பரமபிதாவின் கையில் நம்முடைய ஜீவனைக் கலக்கமில்லாமல் ஒப்புவிக்க ஆயத்தப்படுவோமாக. நம்முடைய இரட்சகர் சிலுவை மரத்தில் கொடுமையாய்க் கொலையுண்டும், அவர் தலையைச் சாய்த்து ஜீவனைவிட்டுவிட்டதனால், அவர் அமைதலாய் மரித்தாரென்று பார்க்கிறோம். களைத்தவன் படுத்து நித்திரை செய்யத் தன் தலையைச் சாய்ப்பதுபோலே, நம்முடைய இரட்சகர் தம்முடைய தலையைச் சாய்த்து, பிறகு ஜீவனைவிட்டார். அவரால் மரணம் நமக்கு நித்திரையே; மரித்தவர்களை நித்திரை செய்கிறவர்களென்று நாம் சொல்லுவோம். நல்ல மேய்ப்பர் தம்முடைய ஜீவனை ஆடுகளுக்காகக் கொடுக்கிறார் என்றபடி நம்முடைய அருமை இரட்சகர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்து, துஷ்ட ஓநாயாகிய பசாசின் கையினின்று நம்மை மீட்டுக்கொண்டார். நாம் பிழைக்க அவர் மரித்தார். நமக்கு உயிர்கொடுக்க அவர் உயிரைவிட்டார். நித்திய பிதாவாகிய அவர் (எசா. 9, 6) மரணம் அடைந்ததால், நாம் நித்திய மரணத்துக்குத் தப்ப இடம் பெற்றோம். நித்திய ஜீவன் நமக்கு ஆயத்தமாயிற்று. ஆகையால் நாம் அவருடைய பாதத்

தில் விழுந்து, அவருடைய பரிசுத்த மரணத்திற்காக அவரை ஸ்தோத்திரிக்கக் கடவோம்.

அவருடைய மரணம் மகா ஆச்சரியமான மரணமாயிருந்ததால், தெய்வாலயத்தின் திரை கிழிந்தது, பூமி அதிர்ந்தது, கன்மலைகள் பிளந்தது, கல்லறைகள் திறந்தது, அநேகம் சரீரங்கள் எழுந்தன. இவ்வளவு அதிசயங்களும், அடையாளங்களும், மனிதருடைய மனதை அசைக்காதிருக்குமோ. அசைத்ததால் அண்டையிலே நின்ற சேர்வைக்காரன்: மெய்யாகவே இந்த மனுஷன் நீதிபரனென்றும், பராபரனுடைய சுதனென்றும் சொல்லி, பராபரனை மகிமைப்படுத்தினான். மற்ற சேவகரும் பயந்து: இவர் பராபரனுடைய சுதனென்று சாட்சிகொடுத்தார்கள். கூடியிருந்த கும்புகள் திகிலடைந்து, தங்கள் மார்பிலே அடித்துக்கொண்டு திரும்பினார்கள்.

பிரியமானவர்களே, நாம் இப்பொழுது இயேசுவின் மரணத்தைக் குறித்துக் கேட்டோமே. நம்முடைய மனது அசைந்ததா. நம்முடைய இருதயம் பிளந்ததா. இப்பொழுது நாமெல்லாரும் நம்முடைய மார்பிலே அடித்துக்கொண்டு, நம்முடைய பாவங்களுக்காகத் துக்கப்படுவது நியாயம். நமக்காக மரித்த இயேசு இரட்சகரை நாம் விசுவாசித்தால், அவர் நம்முடைய பாவங்களை மன்னித்து, நமக்கு நித்திய ஜீவனையும் மோட்சத்தையும் கொடுப்பார்.

எங்களுக்காகப் பாடுபட்டு மரித்த எங்கள் இயேசு இரட்சகரே, உமக்கு நாங்கள் என்ன ஈடு செலுத்துவோம். நாங்கள் சாகும்நேரத்தில் நீர் எங்களண்டைக்கு வந்து, எங்களை ஆற்றித் தேற்றியருளும். நாங்கள் எங்களுடைய ஆவியை உம்மைப்போல் பிதாவின் கைகளில் ஒப்படைக்க எங்களுக்கு உம்முடைய பரிசுத்த ஆவியைக்கொண்டு பெலன் தந்தருளும், சுவாமி. ஆமேன்.

---

## ஒருசந்தி காலத்து ௬-ம் ஞாயிறு.

மத்தேயு 21, 1—9.

பிரியமானவர்களே,

இந்த ஞாயிற்றுக்கிழமையில் நமக்கு ஒரு மகா முக்கியமான வாரம் துவக்குகிறது. இதற்குப் பெரிய வாரம் என்றும் பரிசுத்த வாரம் என்றும் பேர். இந்த வாரத்திலே நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நம்முடைய பாவமாகிய பெரிய பாரத்தைச் சுமந்து, பெரிதான பாடுகளைப் பட்டு, பெரிய இரட்சிப்பை உண்டுபண்ணினதால் இதற்குப் பெரியவாரமென்



று பெயர். இந்த வாரத்தில் நடந்த சரித்திரம் மகா பரிசுத்தமானது. இதில் நாம் பரிசுத்த சிந்தையோடும், பரிசுத்த தியானிப்போடும் பிரவேசித்து, இந்த வாரத்தில் நடந்த பரிசுத்த சங்கதிகளை நம்முடைய மனதிலே பத்திரம் பண்ணிக்கொள்ளவேண்டும். இந்த ஞாயிற்றுக்கிழமையிலே இயேசுநாதர் எருசலேம் பட்டணத்திற்குள் இராஜகோலமாய்ப் பிரவேசித்ததால் அதைப் பற்றிய சுவிசேஷவாக்கியத்தை நாம் இன்றைக்குத் தியானிப்போம். இப்பொழுது நாம்

எருசலேம்பட்டணத்தில் பிரவேசித்த நம்முடைய இரட்சகரைப் பார்ப்போம்.

1. அவர் இதில் எப்படிப் பட்டவராய் விளங்குகிறார் என்றும்,
2. அவரை நாம் எப்படி மகிமைப்படுத்தவேண்டும் என்றும் சிந்திப்போம்.

### 1.

எருசலேம்பட்டணப் பிரவேசத்தில் நம்முடைய இரட்சகர் எப்படிப்பட்டவராய் விளங்குகிறார் என்று பார்ப்போம்.

அவர் எருசலேமுக்குச் சமீபமாக, ஒலிவமலைக்கு அருகான பெத்பகேக்கு வந்தபோது, இயேசு இரண்டு சீஷர்களை அனுப்பி அவர்களுக்குச் சொன்னதாவது: உங்களுக்கு எதிராக இருக்கிற கிராமத்திலே போங்கள்; அங்கே கட்டியிருக்கிற ஒரு கழுதையையும் அதோடே கூட ஒரு குட்டியையுங் காண்பீர்கள். அதுகளை அவிழ்த்து எனக்குக் கொண்டுவாருங்கள். ஒருவன் உங்களுக்கு ஏதாகிலும் சொன்னால், அப்போது: அதுகள் ஆண்டவருக்குத் தேவையென்று சொல்லுங்கள்; உடனே அதுகளை அனுப்புவான் என்றார். சீஷர்கள் போய் இயேசு தங்களுக்குக் கற்பித்தபடி செய்து, கழுதையையுங் குட்டியையுங் கொண்டுவந்து, அதுகள்மேல் தங்கள் வஸ்திரங்களைப் போட்டு, அவரை அதுகள் மேல் ஏற்றினார்கள்.

யாதொரு வீண் வர்ணிப்பும் இல்லாத இந்தச் சரித்திரத்தை நாம் உற்றுப் பார்க்கும்பொழுது இதில் இயேசுநாதர் தெய்வமகிமையுடையவராய் விளங்குகிறார். பரிசுத்த மலையில் அவர் மறுரூபமானபோது கண்டோர் நடுங்கத்தக்கதாக அவர் மகிமை வெளிப்பட்டதுபோல் இந்தச் சமயத்தில் வெளிப்படவில்லை. மேகம் மூடிய சூரியனின் பிரகாசம்போல் அவர் மகிமை மறைந்து விளங்குகிறது. அவர் தூரத்திலிருந்தும், தாம் எருசலேமில் பிரவேசிப்பதற்கு வேண்டிய வாகனம் இருக்கிற இடத்தையும் அதற்குச் சொந்தக்காரனையும் அதற்கடுத்த மற்றச் சங்கதிகளையும் அவர் திட்டமாய் அறிந்திருந்தார். நம்மு

டைய கர்த்தர் எல்லாவற்றையும் அறிந்தவர். நம்முடைய வீடு அவருக்குத் தெரியும். நம்முடைய இருதயம் எப்படிப்பட்டதென்று அவர் நன்றாக அறிவார். அவருக்கு நாம் மறைத்துவைக்கக்கூடியது ஒன்றுமில்லை. அவர் எல்லாம் அறிந்தவராக மாத்திரமல்ல, தம்முடைய சித்தத்துக்கு மனிதரையும் மிருகங்களையும் கீழ்ப்படியப்பண்ணுகிறவராயும் இருக்கிறார். சீஷப்பிள்ளைகள் அவர் சொல்லுக்கு எதிர்பேசாமல், ஊருக்குள் போகிறார்கள். கழுதைகளுக்குச் சொந்தக்காரன் இரட்சகரின் அதிகாரத்துக்குக் கீழ்ப்படிகிறான். ஆண்டவருக்குத் தேவையென்று சொன்னவுடனே அவைகளை அனுப்புகிறான். இதனால் அவரை அந்த மனுஷன் தன் ஆண்டவராக ஒப்புக்கொண்டு, தன் மிருகங்களை அவர் மனம்போல் உபயோகிக்க ஒப்படைக்கிறான். அந்த மிருகங்களும் இரட்சகர் மனம்போல் நடக்கிறது. இயேசுநாதர் ஏறின கழுதை மனுஷர் ஆரும் ஏறியிராத ஒரு கழுதைக்குட்டியென்று மாற்கு சுவிசேஷத்திலும் (மாற். 11, 2), மனுஷரில் ஒருவனும் ஒருக்காலும் ஏறியிராத கழுதைமறியென்று லூக்கா சுவிசேஷத்திலும் (19, 30) எழுதியிருக்கிறது. இப்படியிருந்தும், அவர் சவாரிபண்ணும்பொழுது அது அவருக்குக் கீழ்ப்படிந்து செல்லுகிறது. இதனாலும் அவருடைய தெய்வமகிமையை நாம் அறிந்துகொள்ளலாம். அன்றியும், சனங்களெல்லாரும் ஏகமனதாய் ஆர்ப்பரித்து: கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, வழியில் குருத்தோலைகளைத் தெளித்து: தாவீதின் குமாரனுக்கு ஓசியன்னா, கர்த்தரின் நாமத்திலே வருகிறவர் இஸ்தோத்திரிக்கப்பட்டவர், உன்னதமானதுகளில் ஓசியன்னா என்று கூப்பிட்டதும் அவருடைய தேவ வல்லமையினால் உண்டான பலனே.

இப்படிப்பட்ட தெய்வ மகிமையுள்ளவராயிருந்தும், அவர் தாழ்மையையே பூண்டுகொள்ளுகிறார். அவர் ஏறிவருவது நீசவாகனமாகிய கழுதை. அந்தக் கழுதைக்குச் சேணமில்லை. சீஷருடைய வஸ்திரங்களே அவர் வாகனத்துக்குச் சேணம். அவர் தாவீதின் குமாரன் என்கிற இராசபட்டம் தரித்திருந்தும், அவருக்குச் சேனையில்லை. தங்கள் மேல்வஸ்திரங்களை விரித்துப்போட்ட எளிய சீஷர்களே அவருடைய சேனை. இப்படி அவர் தாழ்மையுள்ளவராய் எருசலேமுக்குள் பிரவேசித்ததினால், அவருடைய இராச்சியம் இந்த உலகத்தினுடையதல்ல என்று அவர் தெளிவாய் நமக்குக் காட்டுகிறார். அவருடைய இராசரீகம் மறுமையிலே மகா மகிமையுள்ளதாய்க் காணப்படும். என்றாலும், அது பூலோகத்தில் இருக்குமளவும் தன் இராசாவைப்போல் தாழ்ந்த கோலமாகவேயிருக்கும்.

நம்முடைய கர்த்தர் எருசலேமுக்குள் பிரவேசித்ததில் உண்மையுள்ளவராய் விளங்குகிறார். அதைக் குறித்து நம்மு



டைய வாக்கியத்திலே: தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறுகிறதற்கு இதெல்லாம் சம்பவித்தது. அவன் உரைத்ததாவது: சீயோன் குமாரத்தியுடனே, இதோ உன் இராசா மெத்தனவருமாய், கழுதையின் மேலும், நுகத்தடிக்குக் கீழ்ப்பட்ட கழுதையினுடைய குட்டியின் மேலும் ஏறியிருக்கிறவருமாய் உன் அண்டைக்கு வருகிறார் என்று சொல்லுங்கள் என்றான் என்று எழுதியிருக்கிறது. இந்த தீர்க்கதரிசனத்தை சகரியாவைக்கொண்டு (9, 9) எழுதிவைத்த கர்த்தர் இவரே. இது எழுதப்பட்டபடி நிறைவேறுமென்று எவன் நினைத்திருப்பான். சீயோன் குமாரத்தி என்னப்படும் எருசலேம் பட்டணத்துக்கு இராசாவாய் வரப்போகிறவர் ஒரு கழுதையின் மேல் ஏறிவருவார் என்று சாதாரண மனிதர்கள் நினைக்கக் கூடியதல்ல. இந்த வாக்கியத்தில் அப்படி எழுதியிருந்தாலும், அதற்கு வேறேஅர்த்தமிருக்கலாம் என்று எண்ணக்கூடியதும் உண்டு. நம்முடைய இரட்சகரோ தீர்க்கதரிசியைக்கொண்டு முன்னுரைத்த வார்த்தையை எழுத்துப் பிசகாமல், எள்ளளவுந் தவறாமல், உள்ளது உள்ளபடியே நிறைவேற்றினார். வாக்கை நிறைவேற்றும் இவ்வளவு பெரிய உண்மையை நாம் மனுஷரில் காணக்கூடாது. சங்கீதக்காரன் மனிதரெல்லாரும் பொய்யரென்று சொல்லுகிறார். அது நிசம். நாம் கர்த்தர் ஒருவரையே உண்மையுள்ளவரென்று நம்புவோமாக.

இயேசுநாதர் எருசலேம் பட்டணத்துக்குள் பிரவேசித்ததால் தம்மை மகாப் பெரிய சிநேகமுள்ளவராய் விளங்கப்பண்ணுகிறார். அவர் எருசலேம் பட்டணத்தில் தமக்கு இந்தப் பரிசுத்தவாரத்தில் என்னென்ன நடக்கப்போகிறது என்பதைத் திட்டமாய் அறிந்திருந்தார். தாம் அறிந்திருக்கிறதைத் தம்முடைய சீஷருக்கு ஏற்கனவே தெரிவித்துமிருக்கிறார். இதோ, எருசலேமுக்குப் போய் ஏறுகிறோம்; அங்கே மனுஷனுடைய குமாரனைக் குறித்துத் தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்டதெல்லாம் நிறைவேறும். அதேனெனில் புறச்சாதிகளுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு, பரியாசமும் நிந்தையும் அடைந்து துப்பப்படுவார். அவரை வாரினால் அடித்துக் கொன்றுபோடுவார்கள் என்று சொன்னார் (லூக். 18, 31-33). அவர் தமக்கு நடக்கப்போகிறவைகளை இவ்வளவு திட்டமாய் அறிந்திருந்தும், பின்வாங்காமல், தம்முடைய பாடுகளுக்கு உற்சாகத்தோடு எதிர்கொண்டு போகிறார். முன் பலமுறையும் அவர் எருசலேமுக்குப் போயிருந்தும், ஒருமுறையாவது இவ்வளவு ஆரவாரத்தோடு போனவரல்ல. நமக்காகத் தம்முடைய இரத்தத்தைச் சிந்தி உயிரைக்கொடுக்கப்போகிற இந்தத் தடவையிலே அவர் இராஜகோலம் பூண்டுகொள்ளச் சித்தமானது பெரிய சிநேகமே. அவரே நம்மைச் சிநே

கித்து நமக்காகப் பாடுபட்டு மரிப்பதற்குச் சம்மதியாதேபோனால், ஒருவனும் அவரைக் கொல்லமுடியாது. ஒருவனும் என் ஜீவனை என்னிடத்திலிருந்து வாங்கான், நானாய் அதை ஒப்புக்கொடுக்கிறேன். அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் வாங்கவும் எனக்கு அதிகாரம் உண்டு (யோவா. 10,18) என்று கர்த்தர் சொன்னார்.

மேலும், இயேசுநாதர் எருசலேமுக்குள் பிரவேசித்த இந்தச் சரித்திரத்தில் நாம் கவனிக்கத்தக்க மற்றொரு முக்கிய சங்கதியும் உண்டு. இதில் அவர் மெய்யான பஷா ஆடாக விளங்கினார். நீசான்மாதம் 10-ம் தேதியாகிய இந்த ஞாயிற்றுக்கிழமையிலே பஷா ஆடு பிடிபட்டுக் கர்த்தருக்குப் பரிசுத்தமாக வேண்டியது (2 மோ. 13, 3). அதே தேதியில் இயேசுநாதர் எருசலேமுக்குப் போய்த் தம்மைப் பிதாவுக்குப் பிரியமான பலி ஆடாய் நிறுத்தும்படி தெய்வாலயத்துக்குள் பிரவேசித்தார். இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற பராபரனுடைய ஆட்டுக்குட்டி.

2.

எருசலேமில் பிரவேசித்த இரட்சகரை நாம் எப்படி மகிமைப்படுத்த வேண்டும்.

அவர் மெய்யான தேவனும் மெய்யான மனிதனுமாயிருக்கிறார் என்று நாம் நமது முழு இருதயத்தினாலும் விசுவாசிக்க வேண்டும். அவர் இராசாதி இராசாவும் கர்த்தாதி கர்த்தருமாய் இருப்பதோடு நம்முடைய மாம்சத்தையும் இரத்தத்தையும் எடுத்துக்கொண்ட நம்முடைய சகோதரருமாயிருக்கிறார். ஜனங்கள் எல்லாரும் ஆர்ப்பரித்து: தாவீதின் குமாரனுக்கு ஓசியன்னா, கர்த்தரின் நாமத்தினால் வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர், உன்னதமானதுகளில் ஓசியன்னா என்று பாட்டுப்பாடியும், அது ஒன்றுமில்லை. ஏனெனில் அவர்கள் அதை மெய்விசுவாசத்தோடு செய்தவர்களல்ல. அந்த நேரத்தில் அவர்கள் கூப்பிடாவிட்டால், கல்லுகள் கூப்பிட்டிருக்கும். ஏனெனில், கும்பிலேயிருந்த பரிசேயர் சிலர் அவருடனே: போதகரே, உம்முடைய சீஷரை அதட்டும் என்றார்கள். ஆனால் அவர் இவர்களுக்குப் பிரத்தியுத்தரமாக: இவர்கள் மௌனமாயிருந்தால், கல்லுகள் கூப்பிடுமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் (லூக். 19, 39. 40). இதுவும் பெரிய வெள்ளிக்கிழமையில் நிறைவேறிற்று. கிறிஸ்து உயிர்விட்ட சமயத்தில் உயிருள்ள சீஷர்கள் வாய்மூடியிருக்க, உயிரற்ற கன்மலைகள் பிளந்து சத்தம் போடலாயிற்று. நாம நம்முடைய இரட்சகரைப் பராபரனுடைய குமாரனென்று விசுவாசிக்காமல் போனால், நாம் இரட்சிப்படையமாட்டோம். அப்படியே நாம் விசுவாசிக்கிறோம் என்று



சொல்லியும், அது வெறும் வாய்ச்சொல்லாய் மாத்திரம் இருக்குமானால், நமக்கு எந்தப் பிரயோசனமும் இல்லை. இயேசுநாதர் மெய்யான தேவனும் மெய்யான மனிதனுமாயிருக்கிறதினாலே தான், அவருடைய இரத்தம் எல்லா மனிதரையும் இரட்சிக்கக்கூடியதாயிற்று. பராபரனையும் மனிதரையும் ஒன்றாயிணைத்தது.

நாம் இயேசுநாதரை விசுவாசிக்கிறது மெய்யேயானால் அவரை எல்லா நேரத்திலும் எல்லா இடத்திலும் அறிக்கையிட வேண்டும். அதேனென்றால் எவனாகிலும் விபசாரமும் பாவமுமான இந்தச் சந்ததியிலே எனக்காகவும் என் வார்த்தைகளுக்காகவும் வெட்கப்பட்டால், அவனுக்காக மனுஷனுடைய குமாரனும் தம்முடைய பிதாவின் மகிமையாய்ப் பரிசுத்த தூதர்களோடே கூட வரும்போது வெட்கப்படுவார் என்று இயேசுநாதர் சொல்லுகிறார் (மாற். 8, 38). நமக்காக உயிரைக் கொடுத்த இந்தக் கிருபையுள்ள இரட்சகரை அறிக்கையிட எவன் வெட்கப்படலாம். வெட்கப்படுவது எவ்வளவு பெரிய அநியாயமாயிருக்கும். அப்படியிருந்தும், இயேசு இரட்சகருடைய தாழ்மையினிமித்தமே அவரை மறுதலிக்கிறவர்கள் அநேகர். ஒரு கழுதையின்மேல் ஏறி எருசலேமுக்குள் பிரவேசித்தவர், சிலுவை மரத்திலே மூன்று ஆணிகளில் தொங்கினவர், என் பராபரனே என் பராபரனே நீர் என்னைக் கைவிட்டதேது என்று கூப்பிட்டவர் உலக இரட்சகராயிருக்கலாமா, அவர் என்னை இரட்சிக்கக் கூடுமா, என்று சிலர் யோசித்துக் கிறிஸ்துவை மறுதலிப்பார்கள். இரட்சகர் எருசலேமுக்குள் போன ஞாயிற்றுக்கிழமையில்: ஓசியன்னா, ஓசியன்னா என்று ஆர்ப்பரித்துக் கூப்பிட்ட கும்புகள், பெரிய வெள்ளிக்கிழமையில்: அவனை எடுத்துப்போடும், அவனை எடுத்துப்போடும், அவனைச் சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும் என்று கூப்பிட்டார்கள். இயேசுநாதர் அவர்கள் ஓசியன்னா என்று கூப்பிட்டபொழுது ஒருவித இராஜகோலம் பூண்டு இருந்தார். பெரிய வெள்ளிக்கிழமையிலோ அவர் அலங்கோலம் பூண்டிருந்தார். அவர் தலையிலே முண்முடி, கையிலே நாணல் கோல், முதுகிலே வாரடி. இப்படி அலங்கோலப்பட்டவரைத் தங்கள் இராசாவாய் மதிக்க அவர்களுக்கு மனமில்லை. பிரியமானவர்களே, நாமும் இரட்சகருக்காக வெட்கப்படுவோமோ. கிறிஸ்தவர்களுக்கு முன் அவரை அறிக்கையிட்டு, அஞ்ஞானிகளுக்கு முன் அவரை மறுதலிப்போமோ. அப்படி வராதிருப்பதாக. கிறிஸ்துவை அறிக்கையிடுவது மெய்விசுவாசத்தின் அடையாளம். மெய்யான விசுவாசமுள்ளவன் அறிக்கையிடாதிருக்கக் கூடாது. இருதயத்தின் பரிபூரணத்தினால் வாய் பேசும் (மத். 12, 36). விசுவாசித்தேன், ஆகையினாலே பேசினேனென்று எழுதியிருக்கிறபடி,

அந்த விசுவாசத்தினுடைய ஆவியையே நாங்கள் பெற்றிருந்து, நாங்களும் விசுவாசிக்கிறோம், ஆகையினாலே பேசுகிறோம் (உ கொரி. 4, 13) என்று அப்போஸ்தலன் சொல்லுகிறார். நல்ல அறிக்கையினால் நாம் கர்த்தருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வதுமல்லாமல், மற்றவர்களையும் கர்த்தரண்டைக்கு இழுக்கிறோம்.

நம்முடைய இரட்சகரை நாம் விசுவாசித்து அறிக்கையிடுவதுமல்லாமல், அவருக்கு ஊழியம் செய்வதினாலும் அவரை மகிமைப்படுத்தவேண்டும். இயேசுநாதருடைய சீஷப்பிள்ளைகள் அவருடைய சொல்லுக்குக் கீழ்ப்படிந்து நடந்தார்கள். போங்கள் என்று சொல்ல, அவர்கள் போனார்கள். கொண்டு வாருங்கள் என்று சொல்ல, கழுதைகளைக் கொண்டுவந்தார்கள். நாம் கர்த்தருடைய வசனத்துக்கு எல்லாவற்றிலும் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். அவருடைய வசனத்தில் அவர் நமக்குக் கற்பிப்பது ஒருவேளை நம்முடைய புத்திக்கு விரோதமாயிருந்தாலும், நம்முடைய புத்தியை அதற்குக் கீழ்ப்படுத்தவேண்டுமேயல்லாமல், அதற்கு எந்தவிதத்திலும் எதிர்த்து நிற்கக் கூடாது. நம்முடைய இருதயமும் கைகால் முதலிய அவயவங்களும் கர்த்தருக்கு வேலைசெய்யவேண்டும். நமக்கு உள்ளது என்னென்னமோ அதெல்லாம் கர்த்தர் கொடுத்தது, அது கர்த்தருக்கே சொந்தம். அவைகளை அவருக்கே ஒப்படைக்கவேண்டும். கர்த்தருக்கென்று அவருடைய இராச்சியத்திலே நம்மில் ஒவ்வொருவனும் செய்யவேண்டிய வேலையிருக்கிறது. சபையில் உள்ள பெற்றோர் தங்கள் பிள்ளைகளைக் கர்த்தருக்கு மகிமையாக வளர்க்கவேண்டும். வீட்டெசமான்கள் தங்கள் வீட்டாரைக் கர்த்தர் அண்டைக்கே நடத்தவேண்டும். கையில் சொத்து உடையவர்கள் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு நன்மைசெய்யவேண்டும். எல்லாரும் கர்த்தருடைய நாமத்தின் மகிமைக்காகச் செபம்பண்ண வேண்டும்.

வாழ்வு நாட்களிலும் தாழ்வு நாட்களிலும் நம்முடைய பரம இராசாவுக்கு நாம் கீழ்ப்படிந்து அவர் சித்தத்தின்படி வேலைசெய்யவேண்டும். இயேசுநாதர் நமது நிமித்தம் தம்மைப் பிதாவின் சித்தத்துக்கு முழுவதும் கீழ்ப்படுத்திப் பாடுபட்டாரே, நாம் அவருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிந்து நடவாதிருப்பது எப்படி. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல் பூமியிலேயும் செய்யப்படுவதாக என்று நாம் செபம்பண்ணுகிறோம். பரமண்டலத்திலுள்ள தேவதூதர்கள் கர்த்தர் தங்களுக்குக் கொடுக்கும் வேலை பெரியதானாலும் சின்னதானாலும் அதை உற்சாகமாய்ச் செய்கிறதுபோலே நாமும் கர்த்தர் நமக்குக் கொடுக்கும் ஊழியத்தை உற்சாகமும் சந்தோஷமுமாய்ச் செய்யவேண்டும். உற்சாகமாய் நம்முடைய சீவனைக்



கொடுத்த நம்முடைய இரட்சகருக்கு நாம் உற்சாகமாய்ப் பணிவிடை செய்வதே, அவரை நாம் மகிமைப்படுத்தும் உத்தம வழி. அவருடைய சித்தப்படி நமக்குப் பாடுகள் வந்தாலும், அவைகளைச் சந்தோஷமாய்ப் படவேண்டும்.

இயேசு ஐயரே, தேவரீர் எங்களுக்காகப் பாடுபட்டு மரிக்கும்படி எருசலேமுக்குள் பிரவேசித்ததுக்காக உமக்கு ஸ்தோத்திரம். நாங்கள் உம்மை விசுவாசித்து, அறிக்கையிட்டு உமக்கு ஊழியஞ் செய்யும்படி எங்களுக்கு ஒத்தாசை செய்தருளும், சுவாமி. ஆமென்.

---

## பெரிய வியாழக்கிழமை.

லூக். 22, 14—20.

பிரியமானவர்களே,

இது கிறிஸ்தவர்களாகிய நமக்கு மகா முக்கியமான நாள். இதற்குப் பெரிய வியாழன் என்று பெயர். இன்று நமக்கு நற்கருணைப் பண்டிகை. நற்கருணை என்பது கர்த்தர் நமக்குக் கிருபையாய்க் கொடுத்தருளும் பரிசுத்த இராப்போசனம். இதை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பெரிய வியாழக்கிழமையிரவிலே ஏற்படுத்தினார். இதை அவர் நமக்குப் போசனமும் பானமுமாக ஏற்படுத்தினபடியினால், நாம் அதைப் பக்தி விசுவாசத்தோடு புசித்துக் குடிப்போம். இதனால் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ளுவோம். இதற்காகக் கர்த்தரை ஸ்தோத்திரிப்போம். இதுவே நற்கருணைப் பண்டிகை கொண்டாடும் விதம். இதற்கு ஏற்றாப்போல நம்முடைய சுவிசேஷ வாக்கியத்தில் பரிசுத்த இராப்போசனம் ஏற்பாடான சரித்திரம் சொல்லியிருக்கிறது. இதைத் தியானிப்பதால் நாம் இந்தப் பண்டிகை நாளைச் சரியாய்க் கொண்டாடக் கூடியவர்களாவோம். ஆகையால் நாம் இப்பொழுது

பரிசுத்த இராப்போசனத்தைக் குறித்துச் சிந்தித்து, அதைப் பற்றி நாலுகாரியங்களைக் கேட்போம்.

1. அதைக் கர்த்தர் ஏற்படுத்தின சமயம்.
2. அதில் கர்த்தர் நமக்குக் கொடுக்கும் பொருள்.
3. அதினால் உண்டாகும் பிரயோசனம்.
4. அதை நாம் வாங்கவேண்டிய விதம்.

1.

பரிசுத்த இராப்போசனத்தைக் கர்த்தர் ஏற்படுத்தின சமயத்தைக் குறித்துக் கேட்போம்.

வேளை வந்தபோது அவரும் அவருடனேகூடப் பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியிருந்தார்கள். அப்போது அவ

இவர்களுடனே: நான் பாடுபடுகிறதற்கு முன்னே இந்தப் பஷாவை உங்களுடனே புசிக்க வாஞ்சைப்பட்டேன் என்றார்.

பெரிய வியாழக்கிழமை இராத்திரியிலே யூதருக்குப் பஷாப்பண்டிகை துவக்கம். இயேசுநாதரும் அவருடைய சீஷர்களும் பஷாப் பண்டிகை கொண்டாடுகிறதற்காக எருசலேம் பட்டணத்திற்கு வந்திருந்தார்கள். அன்றுகாலமே அவர் தம்முடைய சீஷர்களாகிய பேதுருவையும் யோவானையும் பட்டணத்துக்குள் அனுப்பி, பஷா விருந்துக்கு வேண்டியவைகளை ஆயத்தம்பண்ணச் சொன்னார். அவர்கள் அவருடைய உத்தரவின்படி எருசலேம் பட்டணத்தில் கர்த்தருக்கு அறிமுகமான ஒருவனுடைய மேல்வீட்டிலே பஷாவை ஆயத்தம்பண்ணினார்கள். சாயங்காலம் இயேசுநாதரும் பன்னிரண்டு அப்போஸ்தலர்களும் பந்தியிருந்தார்கள். இதுவே நம்முடைய கர்த்தர் இந்த உலகத்தில் புசித்த கடைசிப் பஷா. ஆகையினால், அவர் அதை மிகுந்த வாஞ்சையோடு புசித்தார். மோட்ச இராச்சியத்திலே நிறைவேறப்போகிற பெரிய விருந்தை இந்த விருந்தில் அவர் நினைப்பூட்டினார்.

பஷாவிருந்து என்று நாம் சொல்லுவது என்ன. இதை நாம் அறிந்திருக்கவேண்டும். இஸ்ரவேல் சனங்கள் எகிப்துதேசத்திலே பார்வோன் என்ற கொடிய இராசாவின் கீழ் அடிமைகளாயிருந்து, மிகுந்த சஞ்சலப்பட்டுக் கூப்பிட்டபொழுது பராபரன் அவர்களுக்கு இரங்கி, மோசேயைக்கொண்டு அந்த அடிமைத்தனத்திலிருந்து அவர்களை விடுவித்தார். அவர்கள் விடுதலைபெற்ற கடைசி இராத்திரியிலே பஷாப் போசனத்தைச் சாப்பிடும்படி உத்தரவுபண்ணினார். ஒவ்வொரு குடும்பத்தாரும் பழுதில்லாத ஒரு ஆட்டைப் பிடித்து, அதை அறுத்து அதன் இரத்தத்தை வீட்டுவாசல் நிலையிலே பூசவும், அதன் இறைச்சியைப் புளிப்பில்லாத அப்பங்களோடும் கசப்பான கீரைகளோடும் புசிக்கவும் பராபரன் கட்டளை கொடுத்தார். அந்த இராத்திரியிலே கர்த்தருடைய தூதன் எகிப்துதேசத்திலுள்ள தலைச்சன்களையெல்லாம் சங்கரித்தான். நிலைகளில் இரத்தம் பூசியிருந்த இஸ்ரவேலர் வீடுகளில் மாத்திரம் சங்கரிக்கிற தூதன் பிரவேசிக்கவில்லை. அவர்களுடைய தலைச்சன்கள் எல்லாம் தப்பிக்கொண்டார்கள். பஷாவைப் புசித்த அந்த இராத்திரியிலே பார்வோன் இராசா இஸ்ரவேல் சனங்களை விடுதலைபண்ணி, அவர்கள் தன் தேசத்தைவிட்டுப் புறப்பட்டுப்போக உத்தரவு கொடுத்தான். விடுதலைபெற்ற இஸ்ரவேலர் அந்த நாளில் கர்த்தர் தங்களுக்குச் செய்த மகா பெரிய கிருபையை மறவாமல், வருஷந்தோறும் நினைவுகூரும்படி பராபரன் பஷாப் பண்டிகையை ஏற்படுத்தினார்.



பழைய ஏற்பாட்டின் பஷா ஒரு முன்னடையாளமாயிருந்தது. அந்த நாளில் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி நமக்காக அடிக்கப்பட்ட தேவ ஆட்டுக்குட்டியாகிய இயேசுநாதருக்கும், அந்த நாளில் இஸ்ரவேல் சனத்துக்குக் கிடைத்த விடுதலை பிசாசின் வல்லமையிலிருந்து நமக்குக் கிடைத்த விடுதலைக்கும் அடையாளமாயிருந்தது. நமக்குக் கிடைத்த இரட்சிப்பாகிய விடுதலையை நாம் எப்பொழுதும் நினைவுகூர்ந்து அனுபவிக்கும்படி கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பரிசுத்த இராப்போசனத்தைக் கடைசிப் பஷாப் பண்டிகை தினத்தில் ஏற்படுத்தினார். பழைய ஏற்பாட்டின் பஷாப் போசனம் புதிய ஏற்பாட்டின் பரிசுத்த இராப்போசனத்துக்கு முன்னடையாளம். புதிய ஏற்பாட்டின் பரிசுத்த இராப்போசனம் பழைய ஏற்பாட்டின் பஷாப் போசனத்துக்கு நிறைவேறுதல்.

## 2.

பரிசுத்த இராப்போசனத்திலே கர்த்தர் நமக்குக் கொடுக்கும் பொருள் என்னவென்று பார்ப்போம்.

இயேசுநாதர் முந்த அப்பத்தை எடுத்துக்கொண்டு ஸ்தோத்திரம்பண்ணி அதைப் பிட்டுத் தம்முடைய சீஷருக்குக் கொடுத்தார். பிற்பாடு திராட்சரசம் வைத்திருந்த ஒரு பாத்திரத்தை எடுத்து ஸ்தோத்திரம்பண்ணி, அதையும் அவர்களுக்குக் கொடுத்தார். இப்படியே பரிசுத்த இராப்போசனத்தில் அப்பம், இரசம் என்ற இரண்டு பதார்த்தங்கள் கொடுக்கப்படும். இவைகள் கண்ணுக்குத் தெரியும் பதார்த்தங்கள். ஆகிலும், இதிலே கொடுக்கப்படும் அப்பம் வெறும் அப்பம் அல்ல. இதிலே கொடுக்கப்படும் இரசம் வெறும் இரசமும் அல்ல. ஏனென்றால், இயேசுநாதர் அப்பத்தைக் கொடுத்து: இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறதென்று சொன்னார். அப்படியே இரசத்தைக் கொடுத்து: இது உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தில் புது உடன்படிக்கையாயிருக்கிறதென்றார். இதனால் பரிசுத்த இராப்போசனத்தில் கொடுக்கப்படுகிற அப்பம் இயேசுநாதருடைய சரீரமாயிருக்கிறது. இரசம் இயேசுநாதருடைய இரத்தமாயிருக்கிறது. ஆகிலும் அப்பம் சரீரமாய் மாறிப்போகிறதில்லை, இரசம் இரத்தமாய் மாறிப்போகிறதுமில்லையென்று அவைகளின் ரூபத்தினாலும் ருசியினாலும் தெரியும். நாங்கள் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவோ, நாங்கள் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவோ என்று பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறார் (௧ கொரி. 10, 16). ஆகையால், அப்பத்துக்குள் இயேசுநாதருடைய சரீரமும், இரசத்துக்குள்

இயேசுநாதருடைய இரத்தமும் நமக்குக் கொடுக்கப்படும். பரிசுத்த இராப்போசனத்தில் அப்பத்தை வாங்குகிற ஒவ்வொருவனும் அத்தோடே இயேசுநாதருடைய சரீரத்தையும், இரசத்தை வாங்குகிற ஒவ்வொருவனும் அத்தோடே இயேசுநாதருடைய இரத்தத்தையும் வாங்குகிறான். இதைக் குறித்து நமக்கு எந்தச் சந்தேகமும் இருக்கக்கூடாது. பரிசுத்த இராப்போசனத்தில் இயேசுநாதர் கொடுக்கும் சரீரமும் இரத்தமும் அவருடைய மெய்யான சரீரமும் மெய்யான இரத்தமுமாயிருக்கிறது. நமக்காகக் கன்னிமரியாளிடத்தில் பிறந்து, கொல்கத்தாமலையில் மரித்து, மரித்தோரிலிருந்து எழுந்து, பிதாவின் வலதுபாரிசத்தில் உட்கார்ந்திருக்கிற இயேசுநாதருடைய சரீரமும் இரத்தமுமே நமக்குக் கொடுக்கப்படுகிறது. அவருடைய சரீரமும் அவருடைய இரத்தமும் இப்பொழுது நமக்கு இருக்கிற நம்முடைய சரீரத்துக்கும் இரத்தத்துக்கும் ஒப்பானதல்ல. இயேசுநாதர் மகிமைக்குள் பிரவேசித்திருப்பதால் அவருக்கு மகிமையான சரீரமும் இரத்தமும் இருக்கிறது. கதவுகள் பூட்டியிருக்க வீட்டுக்குள் பிரவேசிக்கக் கூடியவராயிருந்த அவர் அப்பத்தின் வழியாகவும் இரசத்தின் வழியாகவும் தம்முடைய மகிமையான சரீரத்தையும் இரத்தத்தையும் நமக்குக் கொடுக்கக் கூடியவராயிருக்கிறார். இது என் சரீரம், இது என் இரத்தம் என்று சொன்னவர் பொய் சொல்லாத சத்தியவாசகரும், சொன்னதைக் கொடுக்க வல்லமையுள்ளவருமாயிருக்கிறார் என்பதை நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது. நம்முடைய அற்பப் புத்திக்குப் பரிசுத்த இராப்போசன இரகசியம் விளங்கக்கூடாததாயிருந்தாலும், அதை இயேசுநாதருடைய வார்த்தையின் நிமித்தம் நம்பவேண்டியது. இதை நம்பாமல் வேறு விதமாய்ப் போதிக்கிறவர்களோடு நாம் பரிசுத்த இராப்போசனத்துக்குச் சேரமாட்டோம். அவர்களை நம்முடைய இராப்போசன விருந்தில் சேர்க்கவும் மாட்டோம். நம்முடைய சபையல்லாத வேறு சபைகளிலே நம்முடைய சபையார் கர்த்தருடைய இராப்போசனத்தை வாங்கக்கூடாது. வாங்குவார்களானால், அவர்களை நம்முடைய சபையை விட்டவர்களாக எண்ணுவோம். நம்மோடு ஒரே விசுவாசமும் ஒரே போதகமும் உள்ளவர்களோடு மாத்திரம் நமக்குத் திரு இராப்போசன ஐக்கியம் உண்டு.

3.

பரிசுத்த இராப்போசனத்தினால் உண்டாகும் பிரயோசனம் என்னவென்று பார்ப்போம்.

இயேசுநாதர் இதை ஏற்படுத்துகையில்: இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமென்றும் இது உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தம் என்றும் சொன்



னார். உங்களுக்காக என்று லூக்கா சுருக்கிச் சொல்வதை மத்தேயு அப்போஸ்தலன் விபரித்து, உங்கள் பாவங்களின் மன்னிப்புக்காக என்று சொல்லுகிறார் (மத். 26, 28). இயேசுநாதர் தம்முடைய சரீரத்தை நம்முடைய பாவங்களினிமித்தம் சிலுவையில் ஏற்றினார். அவருடைய சரீரத்திலே நம்முடைய பாவங்களையெல்லாம் சுமந்தார். நம்முடைய பாவங்களினிமித்தமே தம்முடைய இரத்தத்தையெல்லாம் சிந்தினார். தம்முடைய சரீரத்தையும் இரத்தத்தையும் பராபரனுக்குப் பலியாகச் செலுத்தினார். இந்தப் பலியைப் பிதா ஏற்றுக்கொண்டு, நம்முடைய பாவங்களை மன்னிக்க உடன்பட்டார். ஆகையால் கிறிஸ்துவினுடைய சரீரத்தையும் இரத்தத்தையும் வாங்கி உட்கொள்ளுகிறவன் யாரோ, அவனுக்குப் பாவமன்னிப்பு உண்டு. அவருடைய திருச்சரீரமும் திரு இரத்தமும் பாவமன்னிப்பை உறுதிப்படுத்துகிற முத்திரையாம். வானத்தில் பராபரன் ஏற்படுத்தின வானவில்லைப் பார்க்கும்பொழுது இனி அவர் உலகத்தை சலப்பிரளயத்தினால் அழிக்கப்போகிறதில்லையென்று நாம் நிச்சயமாய் அறிந்துகொள்வதுபோல், கிறிஸ்துவின் திருச்சரீரத்தையும் திரு இரத்தத்தையும் வாங்குகிறவன்: பராபரன் என் பாவங்களை மன்னித்தார், அவர் என்னை அழித்துப்போடமாட்டார் என்று நிச்சயமாய் அறிந்துகொள்ளலாம்.

பாவத்தினால் பிரிவினை உண்டாவதுபோல் பாவமன்னிப்பினால் ஐக்கியம் உண்டாகிறது. பரிசுத்த இராப்போசனத்தில் பாவமன்னிப்பைப் பெற்றவன் கிறிஸ்துவோடே ஐக்கியமாகிறான். கிறிஸ்துவோடு ஐக்கியமானவன் எவனோ அவனுக்குச் ஜீவன் உண்டு. அவனுடைய ஆத்துமா புது உயிர் அடைந்து பராபரனுக்கு ஊழியஞ்செய்யப் புதுப்பெலன் பெற்றுக்கொள்ளுகிறது. அவன் நித்திய ஜீவன் அடைவதற்கான நிச்சயத்தைப் பெறுகிறான். மேலும், பரிசுத்த இராப்போசனம் மோட்ச நம்பிக்கையை நமக்குக் கொடுக்கிறது. பாவமன்னிப்பைப் பெற்றவன் மோட்சத்துக்குச் சுதந்தரவாளி. இங்கே கர்த்தருடைய இராப்போசனத்தில் கிறிஸ்துவின் திருச் சரீரத்தையும் திரு இரத்தத்தையும் வாங்குகிறவன் மோட்சலோகத்தில் நடக்கும் ஆட்டுக்குட்டியின் கலியாண விருந்தில் பங்குபெறப் போகிறவன். உற்றுப்பார்த்தால் திரு இராப்போசன விருந்தைப் பூலோகத்தில் நடக்கும் மோட்ச விருந்து என்று சொல்லலாம். இயேசுநாதரே நம்மோடு இருந்து நமக்குத் தம்முடைய சரீரத்தையும் கொடுக்க, நாம் விசுவாசிகளோடே கூடி அதை வாங்க, நாம் அனுபவிக்கும் சந்தோஷமே மோட்ச சந்தோஷம்.

இந்தச் சந்தோஷம் இராப்போசன விருந்தாடிக்கு இருப்பதால், அவன் மரணத்துக்கு அஞ்சாதிருக்கிறான். அவனுடை

ய சரீரம் மரித்தாலும் அது மகிமையாய் எழுந்திருக்கும். ஏனெனில், என் மாமிசத்தைப் புசித்து என் இரத்தத்தைக் குடிக்கிறவனுக்கு நித்திய சீவன் உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன் (யோவா. 6, 54) என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து திருவுளம்பற்றினார்

இவைகள் எல்லாம் கர்த்தருடைய இராப்போசனத்தினால் நமக்கு உண்டாகும் மேலான நன்மைகள். இவைகளை நமக்குக் கொடுக்கும்படி பரிசுத்த இராப்போசனத்தை ஏற்படுத்தின கர்த்தருக்கு நாம் நம்முடைய முழு இருதயத்தினாலும் ஸ்தோத்திரம் செலுத்தக் கடனாளிகளாயிருக்கிறோம். நாம் அடிக்கடி கர்த்தருடைய பந்திக்குச் சேருவதினால் அவருடைய சொல்லிமுடியாத கிருபையையும் இரக்கத்தையும் நினைத்து, அவர் திரும்ப வருமட்டும் அவருடைய மரணத்தை அறிக்கையிடுகிறவர்களாயிருப்போம். இதை என்னை நினைக்கிறதற்காகச் செய்யுங்கள் என்று கர்த்தர் கட்டளையிட்டார். அந்தக் கட்டளையை நிறைவேற்றுவதினால், நாம் அவரை ஸ்தோத்திரிக்கிறவர்களும் விசுவாசம் சிநேகம் பொறுமை முதலிய சற்குணங்களில் தேறுகிறவர்களுமாயிருப்போம்.

## 4.

பரிசுத்த இராப்போசனத்தை நாம் வாங்கவேண்டிய விதம் என்னவென்று இப்பொழுது பார்ப்போம்.

பரிசுத்த இராப்போசன விருந்து சாதாரணவிருந்தல்ல, அது பரம விருந்து. அதில் பரம இராசா நம்மைப் போஷிக்கிறார். அதில் சேருவதற்கு விசேஷித்த ஆயத்தம் செய்யவேண்டும். அதற்குப் புறம்பான ஆயத்தமும் வேண்டும், உள்ளான ஆயத்தமும் வேண்டும்.

கர்த்தருடைய இராப்போசனத்துக்குச் சேருகிறவர்கள் தலைமுழுகிச் சரீர சுத்தம் பண்ணவேண்டும். பீறல் வஸ்திரமானாலும், கசக்கிச் சுத்தம்பண்ணி உடுத்திக்கொண்டு வரவேண்டும். நல்ல தேகமுள்ளவர்கள் இராப்போசனம் வாங்குமுன் வேறுபோசனம் சாப்பிடாமல், உபவாசமாயிருப்பதும் நல்லவழக்கம். வாயில் தாம்பூலம் போட்டுக்கொண்டு வருவது மகா அவலட்சணம். அப்படிவருகிறவர்கள் பரிசுத்த பாத்திரத்தில் வாய்வைக்கத் தகுதியானவர்கள் அல்ல. மேலும் பரிசுத்த இராப்போசனத்துக்காக ஏற்கனவே காணிக்கைக்காசு சேர்த்துவைத்திருக்கவேண்டும். அப்பமும் இரசமும் வாங்குகிறதற்குச் செலவு இருப்பதால் அந்தச் செலவைக் கொடுப்பது சபையார் கடமை. இம்மட்டும் நாம் பேசினது புறம்பான ஆயத்தம். இந்த ஆயத்தம் இராப்போசனத்தை பாத்திரமாய் வாங்குவதற்குப் போதாது.



உள்ளான ஆயத்தம் முக்கியமானது. இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என் சரீரம் என்றும், இது உங்களுக்காகச் சிந்தப்படுகிற என் இரத்தமென்றும் கிறிஸ்து சொன்னதினால் இதற்குச் சேருகிறவர்கள் தங்களைச் சோதிப்பது அவசியம். எனக்காக இயேசுநாதர் பலியிட்ட சரீரத்தையும் இரத்தத்தையும் எனக்குக் கொடுக்க வருகிறாரே. நான் எப்படிப்பட்டவன் என்று கேட்டு, பத்துக்கற்பனையின்படியே தன்னைச் சோதித்து, தன் பாவத்தை உணர்ந்தவன் மாத்திரம் பாவமன்னிப்பைப்பெறத் தகுதியுள்ளவன். ஒவ்வொருவனும் பாவத்தை உணர்ந்துகொள்ளும்படிக்கே பாவசங்கீர்த்தன ஆராதனை வைக்கிறோம். அதில் நாம் தேவவசனத்தைக் கேட்டு, நம்முடைய பாவத்தை அறிந்துணரவேண்டும். மனஸ்தாபத்தோடும் துக்கத்தோடும் அதை அறிக்கையிடவேண்டும். பாவமன்னிப்பின் பேரில் வாஞ்சையுள்ளவர்களாயிருக்கவேண்டும். முக்கியமாய்க் கர்த்தருடைய இராப்போசனக்கட்டளையில் அவர் சொன்ன வார்த்தைகளை உறுதியாய் நம்புகிற விசுவாசம் நமக்கு வேண்டும். அவர் மெய்யாகவே தம்முடைய சரீரத்தையும் இரத்தத்தையும் கொடுக்கிறாரென்றும், மெய்யாகவே அவர் நம்முடைய பாவங்களை மன்னிக்கிறாரென்றும், பூரணமாய் நம்பவேண்டும். கர்த்தர் பாவசங்கீர்த்தனத்திலும் நற்கருணையிலும் நம்முடைய பாவங்களை மன்னிக்கிறபடியால் நாமும் நம்முடைய சகோதரர்களுக்கு அவர்கள் குற்றங்களை மன்னித்து அவர்களோடு சமாதானப்படவேண்டும். சமாதானப்படாமல் கோபத்தோடும் வர்மத்தோடும் திருப்பந்திக்கு வருகிறவர்கள் அதற்குப் பாத்திரவான்கள் அல்ல.

கர்த்தருடைய இராப்போசனத்துக்குச் சேருகிறவர்கள் பாத்திரராயிருந்தாலும், அபாத்திரராயிருந்தாலும், எல்லாருக்கும் அதிலே கிறிஸ்துவின் மெய்யான திருச்சரீரமும் அவருடைய மெய்யான திரு இரத்தமும் கொடுக்கப்படும். ஆகிலும், மெய் மனஸ்தாபத்தோடும் மெய் விசுவாசத்தோடும் சேருகிறவர்கள் மாத்திரம் பாவமன்னிப்பையும் மற்ற ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ளுவார்கள். மற்றவர்களோ கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் தங்கள் ஆக்கினைக்கென்று புசித்துக்குடிக்கிறார்கள். இப்படிக் குடிப்பதினால் பலவீனமும் வியாதியும் சில வேளைகளில் மரணமும் உண்டாகும் (1 கொரி. 11, 30). ஆகையால் கர்த்தருடைய பந்திக்குப் போகிற வழி சிலருக்கு ஆசீர்வாத வழியும், சிலருக்குச் சாப வழியுமாய் முடியும்.

மேலும், நாம் கர்த்தருடைய இராப்போசனத்தை வாங்கும்பொழுது முழங்கால்படியிட்டு ஒடுக்கவணக்கத்துடன் அதை வாங்கவேண்டும். அப்பொழுது எவனும் தன் வலது பக்கத்திலிருக்கிறவன் ஆர், தன் இடதுபக்கத்தில் இருக்கிறவன் ஆர் என்று

கவனிக்கக்கூடாது. கர்த்தருடைய திருச்சரீரத்தையும் திரு இரத்தத்தையும் வாங்கும்பொழுதும், வாங்கின பிறகும், கர்த்தருடைய ஆசீர்வாதத்துக்காகச் செபம்பண்ணவேண்டும். நம்முடைய கிறிஸ்தவர்கள் இப்படிச்செய்வதினால், கர்த்தருடைய ஆசீர்வாதம் உண்டாம். அவர்களிடத்திலும் அவர்கள் குடும்பங்களிலும் அவர்கள் இருக்கும் சபைகளிலும் மெய்யான நன்மைகள் விளையும்.

எங்கள் அன்புள்ள இரட்சகரே, நீர் எங்களோடு எக்காலத்திலும் இருக்கிறீர் என்கிறதை நாங்கள் திடநிச்சயமாய் அறிந்துகொள்ளும்படி, பரிசுத்த இராப்போசனத்தை ஏற்படுத்தினதற்காக உமக்கு இஸ்தோத்திரம். நாங்கள் அதற்கு அடிக்கடி சேர்ந்து, அதன் நன்மைகளைப் பெற்றனுபவிக்கும்படி எங்களுக்கு மெய்யான விசுவாசத்தைத் தந்து எங்களை ஆசீர்வதித்தருளும், சுவாமி. ஆமென்.

---

## பெரிய வெள்ளிக்கிழமை.

இன்று இயேசுநாதர் பாடுபட்ட சரித்திரம் முழுவதும் பங்குபங்காய் வாசிக்கப்படும்.

---

## கர்த்தர் உயிர்த்தெழுந்த பண்டிகை முதலாம் நாள்.

மாற்கு 16, 1—8.

பிரியமானவர்களே,

**நா**ம் பெரிய வெள்ளிக்கிழமையில் கொல்கத்தா மலைமேல், கல்வாரி மேட்டில் நின்றோம். சிலுவையில் அறையுண்ட இயேசு இரட்சகர் மூன்று ஆணிகளில் தொங்கினவராய்ப் பட்டுத்தரித்த அகோரமான பாடுகளைப் பார்த்தோம். பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று கூப்பிட்டு, அவர் உயிர் விட்டதைக் கேட்டோம். சனிக்கிழமையாகிய நேற்று யோசேப்பின் கல்லறைத் தோட்டத்தில் இயேசுவின் கல்லறையண்டை நின்று அழுதோம். இன்றைக்கோ இயேசுநாதர் உயிர்த்தெழுந்ததையும் கல்லறை திறந்திருக்கிறதையும் பார்த்துச் சந்தோஷப்படுகிறோம். நம்முடைய பாவங்களுக்காக மரித்த இயேசுநாதர் உயிர்த்தெழுவது அவசியம். கிறிஸ்து எழுந்திராமல் போனாரேயாகில், எங்கள் பிரசங்கமும் அவத்தம், உங்கள் விசுவாசமும் அவத்தமாமே (க கொரி. 15, 14). கிறிஸ்து உயிர்த்தெழுந்ததை விசுவாசியாதவர்கள் கிறிஸ்தவர்களல்ல. கிறிஸ்து பரலோகத்திலிருந்து வந்த தேவகுமாரன் என்பதற்கு அவரு



டைய உயிர்த்தெழுதலே முக்கிய அடையாளம். அவருடைய சத்துருக்கள் ஒருநாள் அவரைப் பார்த்து: போதகரே, உம்மாலே ஒரு அடையாளத்தைக் காண வேண்டுமென்றிருக்கிறோம் என்று கேட்டார்கள். அவரோவென்றால் அவர்களுக்குப் பிரதியுத்தரமாகச் சொன்னதாவது: பொல்லாத விபசாரச் சந்ததி அடையாளத்தைக் கேட்கிறது. ஆனால் யோனாத் தீர்க்கதரிசியின் அடையாளமேயன்றி வேறே அடையாளம் அதுக்குக் கொடுக்கப்படுவதில்லை. அதேதென்றால் யோனா திமிங்கலத்தின் வயிற்றில் அல்லும் பகலும் மூன்று நாள் இருந்ததுபோல, மனுஷனுடைய குமாரன் பூமியின் இருதயத்தில் அல்லும் பகலும் மூன்று நாள் இருப்பார் என்றார் (மத். 12, 38-40). நம்முடைய இரட்சகர் தாம் சொன்ன இந்த வார்த்தையைத் தம்முடைய உயிர்த்தெழுதலினால் நிறைவேற்றினார். அப்படியே மற்றொரு சமயத்தில் யூதர்கள் அவரைப் பார்த்து: நீர் இதுகளைச் செய்கிறதற்கு எங்களுக்கு என்ன அடையாளத்தைக் காண்பிக்கிறீர் என்றார்கள். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: இந்தத் தெய்வாலயத்தை இடியுங்கள், மூன்று நாளில் அதை எழுப்புவேன் என்றார் (யோவா. 2, 18. 19). தாம் சொன்ன இந்த அடையாளத்தை இயேசுநாதர் தம்முடைய உயிர்த்தெழுதலிலே காண்பித்தார். ஆகையால், நாம் விசுவாசிக்கிற நம்முடைய இரட்சகர் மெய்யான தேவனென்று ரூபகாரமாயிற்று. இதனிமித்தம் கர்த்தர் உயிர்த்தெழுந்த பண்டிகையில் திருச்சபை மகா சந்தோஷமாய்ச் சந்தோஷித்து: கர்த்தர் எழுந்தார் அல்லேலூயா, அவர் மெய்யாகவே எழுந்தார் அல்லேலூயா என்று ஆனந்த கெம்பீரமாய்ப் பாடுகிறது. நாமும் இன்று களிகூர்ந்து பாடுவோமாக. நாம் இன்றைக்கு மகிழ்ச்சியோடே தியானிக்கப்போகிற சங்கதி:

**கர்த்தர் மரித்தோரிலிருந்து எழுந்தார் என்கிற செய்தியே.**

1. இது முழு நிச்சயமான செய்தி.
2. இது மகா சந்தோஷமான செய்தி.

### 1.

கர்த்தர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தது முழு நிச்சயமான செய்தி என்று பார்ப்போம்.

ஓய்வுநாளான பின்பு மக்தலாவூர் மரியாளும், யாக்கோபின் தாயாகிய மரியாளும், சலோமேயும், தாங்கள் வந்து, அவரைப் பூசவேண்டுமென்று கந்தவர்க்கங்களைக்கொண்டு, வாரத்து முதல் கிழமையில் அதிகாலமே சூரியன் உதிக்கையில் கல்லறையண்டைக்கு வந்தார்கள் என்று சுவிசேஷ வாக்கியம் சொல்லுகிறது. பெரிய வெள்ளிக்கிழமை பகலைக்கு மேல் இயேசுநாதர் அடக்கம்பண்ணப்பட்டதை இந்த பெண்பிள்ளைகள் பார்த்திருந்தார்கள்.

அவர்கள் அன்றையத்தினம் பொழுது போகும் முன்னமே கடைக்குப்போய், இயேசுநாதருடைய உடலுக்கு வாசனை பூச என்னென்ன காரியங்கள் வேணுமோ, அதையெல்லாம் வாங்கி வந்து வைத்தார்கள். தங்களுக்கு அருமையானவர்கள் இறந்து போனால், அவர்களுடைய பிரேதங்களுக்கு வாசனை பூசுவதும், பல நாளாக அப்படிச் செய்வதும் யூதருக்கு வழக்கம். அவர்கள் சனிக்கிழமையிலே வேலைசெய்யக்கூடாது. சனிக்கிழமை போனபின் ஞாயிற்றுக்கிழமையிலே கல்லறைத் தோட்டத்துக்குப் போய், அங்கே இயேசுநாதருடைய சரீரத்துக்கு வாசனைபோட யோசித்திருந்தார்கள். அவர்கள் யோசனைப்படி ஞாயிற்றுக்கிழமை சூரியன் உதிக்கிறதற்கு முன்னாலே எழுந்திருந்து கல்லறைக்குப் போனார்கள்.. இது அந்த ஸ்திரீகளுக்கு நம்முடைய இரட்சகர்பேரில் இருந்த அன்பையும் கரிசனத்தையும் காண்பிக்கிறது.

அவர்கள் போகிறபொழுது: கல்லைக் கல்லறையின் வாசலிலிருந்து நமக்குப் புரட்டித் தள்ளுபவன் ஆர் என்று ஒருத்தியோடொருத்தி சொல்லிக்கொண்டார்கள். இந்த ஸ்திரீகள் இயேசுநாதரை மெய்யான மேசியாவென்று நம்பியிருந்ததினாலே தான் அவர் உடலுக்கு வாசனை பூசவும் அவரைக் கனப்படுத்தவும் விரும்பினார்கள். என்றாலும், அவர்கள் நம்பிக்கை பலமான நம்பிக்கையாயிருந்ததில்லை. ஏனெனில் அவர் தம்முடைய உயிர்த்தெழுதலைக் குறித்துச் சொல்லியிருந்த வார்த்தைகள் இப்பொழுது நிறைவேறியிருக்குமென்று அவர்கள் நினைக்கவில்லை. இயேசுநாதருடைய சரீரம் இன்னம் கல்லறையிலிருக்குமென்றும், அவருடைய கல்லறையை மூடியிருந்த பெரிய கல் அங்கேயே இருக்குமென்றும் அவர்கள் நினைத்தார்கள். ஆகையால், அந்தக் கல்லைப் புரட்டித்தள்ளுவதைக் குறித்து மாத்திரம் ஒருத்தியோடொருத்தி பேசநேரிட்டது. கர்த்தர் உயிர்த்தெழுந்துவிட்டார் என்பதை அவர்கள் அறிந்ததில்லை. கிறிஸ்துவை மரணம் விழுங்கிவிட்டது என்று அவர்கள் நினைத்தார்கள். அவர் மரணத்தை விழுங்கி ஜெயமடைந்தது அவர்களுக்குத் தெரியாமல் போயிற்று. இயேசுநாதர் மரணத்தை மேற்கொண்டு எழுந்திராதேபோனால், நமக்கு உயிர் கிடைப்பது எப்படி. பாவிகளாகிய நமக்காக அவர் தம்முடைய உயிரைக் கொடுத்தாரே, அவர் உயிரோடிராவிட்டால் அவரை நாம் விசுவாசிப்பதெப்படி, அவரைச் சிநேகிப்பதெப்படி. நாம் அவரை விசுவாசிக்கவும் அவரைச் சிநேகிக்கவும் கூடும்படிக்கு அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தருளினார்.

அந்த ஸ்திரீகள் கல்லறையை நோக்கிப் பார்க்கிறபோது, கல் புரட்டித் தள்ளப்பட்டதென்று கண்டார்கள்; ஏனெனில், அது மெத்தப் பெரிதாயிருந்தது. அந்தப் பெரிய கல் இன்னம் கல்லறையின் வாசலிலிருக்கும் பொழுதே இயேசுநாதர்



எழுந்துவிட்டார். பிற்பாடு அதைப் புரட்டித் தள்ளினவன் ஒரு தேவதூதன். ஏனென்றால், பரிசுத்த மத்தேயு சொல்லுகிறபடி பராபரனுடைய தூதன் வானத்திலிருந்து இறங்கி, சேரவந்து, கல்லை வாசலிலிருந்து புரட்டித்தள்ளி அதின் மீதில் உட்கார்ந்தான். அவனுடைய ரூபம் மின்னல் போலவும் அவனுடைய உடை உறைந்த மழையின் வெண்மையாகவும் இருந்தது. காவல் காத்திருந்தவர்களோவெனில் அவனுக்குப் பயந்ததினால் அதிர்ந்து, செத்தவர்களைப்போல் ஆனார்கள் (மத். 28, 2-4). இப்படியே அந்தப் பக்தியுள்ள ஸ்திரீகளுக்கு இருந்த கவலையைக் கர்த்தர் ஏற்கனவே தீர்த்திருந்தார். அவர்கள் கூப்பிடுகிறதற்கு முன்னே நாம் மறுவுத்தரவு கொடுப்போம்,, அவர்கள் இன்னம் பேசக்கொள்ள நாம் கேட்போம் (எசா. 65, 24) என்ற வாக்கியத்தின்படி அவர்களுக்கு ஆயிற்று. கல்லைப் புரட்டித்தள்ளும் வேலை இப்பொழுது அவர்களுக்கில்லை. இயேசுநாதர் உயிர்த்தெழுந்த சந்தோஷ செய்தியைக் கேட்கவேண்டியவர்களாய் மாத்திரமிருந்தார்கள்.

அவர்கள் கல்லறைக்குள் பிரவேசித்து, வெள்ளை அங்கி தரித்த ஒரு வாலிபனை வலதுபாரிசத்தில் உட்கார்ந்திருக்கக் கண்டு திகைத்தார்கள். அவனோவென்றால் அவர்களுக்குச் சொன்னதாவது: திகையாதேயுங்கள்; சிலுவையில் அறையுண்ட நாசரேத்தானாகிய இயேசுவைத் தேடுகிறீர்கள், அவர் எழுந்திருந்தார், அவர் இங்கே இல்லை; இதோ, அவரை வைத்த இடம். ஆனால் நீங்கள் போய், அவருடைய சீஷருக்கும் பேதுருவுக்கும் உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறாரென்றும், அவர் உங்களுக்குச் சொன்னபடி அங்கே அவரைக் காண்பீர்கள் என்றுஞ் சொல்லுங்கள் என்றான். — இயேசுநாதர் பிறந்த சந்தோஷ செய்தியை மனிதருக்கு முதல் முதல் அறிவித்தவன் ஒரு தேவதூதன். அவர் உயிர்த்தெழுந்த மகா பெரிய சந்தோஷ செய்தியை அறிவித்தவனும் ஒரு தேவதூதனே. கர்த்தர் பிறந்த செய்தியைக் கேட்ட மேய்ப்பர் பயந்ததுபோலவே உயிர்த்தெழுந்த செய்தியைக்கேட்ட ஸ்திரீகளும் பயந்தார்கள். தேவதூதன் அவர்கள் பயத்தை நீக்கி, நல்ல செய்தி சொன்னான். அவன் சொன்னதைக் கவனித்தால், இயேசுநாதர் உயிர்த்தெழுந்தது நிச்சயமென்று நாம் அறிந்துகொள்ளலாம். அவன் அந்த ஸ்திரீகளுக்கு வெறும் கல்லறையைச் சுட்டிக் காண்பித்ததினால் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை நிச்சயப் படுத்தினான். கர்த்தர் உயிர்த்தெழுந்தார் என்கிற பேச்சேயிருக்கப்படாது என்கிற எண்ணமாய்ப் பிரதான ஆசாரியர்கள் மூப்பானவர்கள் கல்லறைக்கு முத்திரை போட்டு, சேவகரைக் காவல் வைத்து, அதைக் காபந்துபண்ணினார்கள். இப்பொழுதோ முத்திரை எல்லாம் உதவாமல் போயிற்று. காவல்காரரெல்லாம் கலங்கி ஓட்டம் பிடித்தார்கள். ஏனெனில்,

சங்கீதக்காரன் சொல்லுகிறபடி பரமண்டலங்களில் வாசமாய் இருக்கிறவர் நகைத்தார்; ஆண்டவர் அவர்களைப் பரியாசம்பண்ணினார் (சங். 2, 4). இயேசு எழுந்துவிட்டார். அவர் எழுந்திருக்கவில்லையென்று யூதர்களாவது மற்றயாராவது சொல்லுவார்களானால், அவர்கள் அவருடைய உடலைக் காட்டவேண்டும். சீஷர்கள் திருடிக்கொண்டுபோனார்களென்று சொல்லுவார்களானால், அதை ரூபித்து அந்தச் சீஷர்களைத் தண்டித்திருக்கவேண்டும். அப்படி அவர்கள் செய்யாதபடியால், இயேசுநாதர் உயிர்த்தெழுந்தது நிச்சயம் என்று அவர்களுக்கும் தெரிந்திருந்ததென்று நாம் சொல்லலாம்.

மேலும், அவர் உயிர்த்தெழுந்தாரென்பதற்கு அவருடைய சீஷரும் சாட்சி. அவர்கள் அவரைக் கலிலேயாவிலும் மற்றும் பல இடங்களிலும் நாற்பது நாளாய்க் கண்டார்கள், அவரோடு புசித்தார்கள், அவரைத் தங்கள் கைகளினாலே தொட்டார்கள். சிலுவையில் அறையுண்ட கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்து உயிரோடிருக்கிறார் என்கிற திட நிச்சயம் அவர்களுக்கு உண்டானதால் அவரைக் குறித்து எங்கும் தைரியமாய்ச் சாட்சி சொன்னார்கள். இப்படி சாட்சி சொன்னதினாலே அவர்களுக்கு எத்தனையோ நிந்தனை, எத்தனையோ பாடுகள், எத்தனையோ அடிகள். இதனாலும் அவர்களுடைய விசுவாசம் கலங்கினதில்லை. உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் நிமித்தம் அவர்கள் தங்கள் உயிரையும் கொடுத்தார்கள். உலகத்திலே யாராவது பொய்க்காக உயிரைக் கொடுப்பார்களோ. பொய்யைச் சொல்லி, உயிரைக் காப்பாற்றிக் கொள்ளுகிறவர்களைக் குறித்துக் கேட்டிருக்கிறோம். பொய்யை நிலைநிறுத்த உயிரை விடுகிறவர்கள் இல்லை. ஆகையால்: இயேசுநாதர் உயிர்த்தெழுந்தார் என்பது நிச்சயம்.

அல்லாமலும், இப்பொழுது உலகமெங்கும் பரம்பிவருகிற கிறிஸ்துமார்க்கமும் உயிருள்ள திருச்சபையும் அவருடைய உயிர்த்தெழுதலுக்குச் சாட்சிகள். கிறிஸ்துமார்க்கத்தை ஒழித்துவிடவும், அதைப் பேரில்லாமல் அழித்துவிடவும் எத்தனையோ இராசாக்களும் இராயர்களும் பிரயாசப்பட்டும், அது அழியாதிருப்பது எதினால். கிறிஸ்து உயிர்த்தெழுந்து உயிரோடிருப்பதினால் தான். இந்த உலகத்திலே எத்தனையோ மார்க்கங்கள் பூர்வத்தில் இருந்தன. அவைகளெல்லாம் இப்பொழுது இல்லாமல் போயிற்று. தற்காலத்திலும் எத்தனையோ மார்க்கங்களுண்டு. அவைகளெல்லாம் நாளுக்கு நாள் குறைந்தும் கெட்டும் வருகிறது. கிறிஸ்துமார்க்கமோ நாளுக்கு நாள் பரம்பி வருகிறது. கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களின் தொகை நாளுக்கு நாள் பெருகிவருகிறது. காரணமென்ன. கிறிஸ்து உயிரோடு இருப்பதினால் தான்.



சரியாய்ச் சொன்னால், ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குச் சாட்சி. கிறிஸ்து உயிரோடிருப்பதினால் தான் நம்முடைய ஆத்துமா பிழைத்திருக்கிறது. நாம் சந்தோஷத்தோடு மரணத்துக்குக் காத்திருக்கிறோம். கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய உயிருள்ள விசுவாசத்தினாலும் பரிசுத்த நடக்கையினாலும் கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாய் விளங்கவேண்டும்.

2.

*கர்த்தர் மரித்தோரிலிருந்து எழுந்தார் என்கிறது மகா சந்தோஷமான செய்தி.*

ஏனென்றால், அவர் நமக்காகச் செலுத்தின பலியைப் பிதா ஏற்றுக்கொண்டார் என்பதற்கு அவர் உயிர்த்தெழுதல் சாட்சியாயிற்று. கர்த்தர் நம்முடைய பாவத்துக்கு ஈடு செலுத்தி, நமது பேரிலுள்ள சாபத்தைத் தீர்க்கும்படி தம்மைப் பிதாவுக்குப் பலியிட்டார். அவரிட்ட பலி போதுமான பலியாயிராவிட்டால், பிதா அவரை மரணத்தின் கட்டுக்கு நீங்கலாக்கியிருக்கமாட்டார். யாதொரு குற்றவாளிக்காக பிணைக்கப்பட்டவன் அந்தக் குற்றவாளி செலுத்தவேண்டியதெல்லாம் செலுத்தினபின் தான் விடுதலை பெறுவான். நம்முடைய இரட்சகர் மரணத்திலிருந்து விடுதலையானதால், நம்முடைய இரட்சிப்பு நிச்சயமாயிற்று. அவர் பாவிகளாகிய நமக்காகவும், உலகத்திலுள்ள சகல பாவிகளுக்காகவும் இரட்சிப்பைச் சம்பாதித்தார். நம்முடைய சென்ம பாவத்திற்கும் கரும பாவத்திற்கும் பிதாவிடத்தில் மன்னிப்பைச் சம்பாதித்தார். ஆகையால் நாம் உயிர்த்தெழுந்த இரட்சகரைப் பிடித்துக்கொண்டு, பிதாவை நோக்கி: தகப்பனே, என் பாவத்தைச் சுமந்து பாடுபட்டு மரித்த உம்முடைய குமாரனை விடுதலைபண்ணினீரே, அவரால் நானும் விடுதலையானேனே, என் பாவத்தையும் மன்னியும் என்று பிள்ளைப்பத்தியாய்க் கேட்கலாம். நாம் பராபரனண்டை சேருவதற்கு அவிசுவாசமேயல்லாமல் வேறே தடையில்லை. உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் பலத்தால் நாம் பாவத்தை மேற்கொண்டு பரிசுத்தமாய் நடக்கக் கூடும்.

மேலும் கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததால் மரணத்தை ஜெயித்தார். இப்பொழுது மரணம் தன் கொடுக்கை இழந்த தேள்போலும், விஷப்பல்லை இழந்த பாம்பைப்போலும் இருக்கிறது. பாவந்தான் கொடுக்கு, விஷப்பல். அது கிறிஸ்துவால் தீர்ந்துபோகவே, அவரைப்பற்றிக்கொள்ளும் விசுவாசிகளை இனி மரணம் சேதப்படுத்தாமல், ஒரு நல்ல சிநேகிதனைப்போல் மோட்சத்துக்கு அழைத்துக்கொண்டு போகும். கிறிஸ்து உயிர்த்தெழுந்ததால், நம்முடைய சரீரத்தின்மேல் மர

ணத்துக்கு வல்லமையில்லை என்பது நிச்சயமாயிற்று. நாம் எல்லா மனிதரைப்போலவும் செத்து, சரீரம் மண்ணோடு மண்ணும் தூளோடு தூளும் சாம்பலோடு சாம்பலுமாய்ப் போனாலும், அது கடைசிநாளில் மகிமையாய் எழுந்திருக்கும். ஏனெனில், இயேசுநாதர் நம்முடைய தலை. தலையாகிய அவர் உயிர்த்தெழுந்ததினால் அவருடைய அவயவங்களாகிய நாமும் உயிர்த்தெழுவது நிச்சயம். நாமும் யோபென்பவரைப்போல்: என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்கிறதையும், அவர் ஏறு கடைசியானவராய்த் தூளின்மேல் நிற்பார் என்கிறதையும் நான் அறிந்திருக்கிறேன். இந்த என்னுடைய தோல் முதலானது அழுகிப்போன பிற்பாடு நான் என் மாமிசத்திலிருந்து பராபரனைப் பார்ப்பேன். அவரை எனக்கென்று பார்ப்பேன்; அந்நிய கண் அல்ல, என்னுடைய கண்களே அவரைக் காணும் என்று சந்தோஷமாய்ப் பாடலாம் (யோபு 19, 25-27).

கிறிஸ்து உயிர்த்தெழுந்த செய்தி நமக்கு மகா சந்தோஷமான செய்தியென்று மறுபடியும் சொல்லுகிறோம். ஏனென்றால் துக்கம் நிறைந்த நமக்கு ஆறுதலையும் சந்தோஷத்தையும் கொடுக்கவே, அவர் எழுந்தருளினார். உயிர்த்தெழுதலின் செய்தியைத் தெரிவித்த தெய்வதூதன அச்செய்தியை சீஷருக்கும் பேதுருவுக்கும் தெரிவிக்கச் சொன்னான். ஏனென்றால், பேதுரு அப்போஸ்தலனும் மற்றச் சீஷர்களும் இரட்சகருடைய மரணத்தின் நிமித்தமும், தங்கள் பாவங்கள் நிமித்தமும் அழுது புலம்பி, துக்கித்துக்கொண்டிருந்தார்கள். கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலைப் பற்றிய செய்தியைக்கேட்டபொழுதோ, அவர்கள் துக்கம ஆறத்துவக்கிற்று. அவர்கள் இரட்சகரோடே பேசவும், தங்கள் மனக்குறைகளைச் சொல்லவும், அவரால் ஆறுதல் அடையவும் இப்பொழுது இடமுண்டாயிற்று. நாமும் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவால ஆறுதல் அடையக்கூடும். நாமும் ஜெபத்தினால் அவரோடு பேசலாம். நம்முடைய பாவங்களை அவருக்கு அறிக்கையிடலாம். நமக்கு இருக்கும் சரீரக் குறைவுகளையும் ஆத்துமக் குறைவுகளையும் அவருக்குச் சொல்லலாம். உயிருள்ள அந்த இரட்சகர் நம்முடைய ஜெபத்தைக் கேட்டு, நம்முடைய குறையை எல்லாம் தீர்த்து, நம்மைச் சந்தோஷப்படுத்துவார். மகதலானூர் மரியாளின் கண்ணீர் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவால் தடைப்பட்டது. பேதுரு அப்போஸ்தலன் அழுகை உயிர்த்தெழுந்த கிறிஸ்துவால் தீர்ந்தது. நம்முடைய அழுகையும் அவராலேயே தீரும். நம்முடைய உற்றார் பெற்றோர் உறமுறையார் சிநேகிதர்கள் எல்லாரும் நம்மைவிட்டு மரிப்பார்கள். ஆகையால், அவர்களை நாம் எப்பொழுதும் நம்பியிருக்க முடியாது. இயேசுநாதரோ உயிர்த்தெழுந்தவர். மரித்தோரிலிருந்து



எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லை, மரணம் இனி அவரை ஆண்டுகொள்ளாது என்று எழுதியிருக்கிறது. ஆகையால் உயிருள்ள இரட்சகராகிய அவரை நாம் எப்பொழுதும் நம்பியிருக்கலாம். நாம் உயிரோடிருக்குமளவும் அவர் நம்முடைய நம்பிக்கை, நாம் சாகும்பொழுதும் அவரே நம்முடைய நம்பிக்கை.

கிறிஸ்து உயிர்த்தெழுந்த செய்தி மகா சந்தோஷமான செய்தியென்று இன்னமும் சொல்லலாம். ஏனென்றால் நம்முடைய பலத்த சத்துருவாகிய பிசாசை அவர் தம்முடைய உயிர்த்தெழுதலால் மேற்கொண்டார். முந்த நயத்தினாலும், பிறகு படத்தினாலும் கிறிஸ்துவைச் சோதித்த சாத்தான் அவரை மேற்கொள்ளாமல் தோற்றுப்போயிற்று. கோலியாத்தென்ற ராட்சதனைத் தாவீது மேற்கொண்டதுபோல், கிறிஸ்து அதன் வல்லமையைக் குலைத்து, அதை மேற்கொண்டு அதன் ராச்சியத்திலிருந்து பாவிகளை விடுதலை பண்ணினார். இனி விசுவாசிகள மேல் பிசாசுக்கு வல்லமையில்லை. இப்படியே கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மகா சந்தோஷமான செய்தியென்று பார்க்கிறோம்.

மரணத்தை ஜெயித்து வெற்றிவேந்தராய் எழுந்தருளின இயேசுநாதரே, நாங்கள் உமக்குள் உயிரடைந்தவர்களாய்ப் பிழைக்கவும், உம்முடைய உயிர்த்தெழுதலில் நம்பிக்கை வைத்தவர்களாய் மரிக்கவும் எங்களுக்கு விசுவாசம் தந்தருளும், சுவாமி. ஆமென்.

---

## கர்த்தர் உயிர்த்தெழுந்த பண்டிகை இரண்டாம் நாள்.

லூக்கா 21, 13-35.

பிரியமானவர்களே,

நேற்று நாம் தியானித்த சுவிசேஷவாக்கியம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மெய்யாய் உயிர்த்தெழுந்தாரென்று நமக்குத் தெரியக்கொடுத்தது. இந்த நாளின் சுவிசேஷவாக்கியம் அவர் நமக்காக எழுந்தாரென்று நமக்குக் காண்பிக்கிறது. உயிர்த்தெழுந்த அவர் தம்முடைய சீஷருக்குத் தரிசனைகொடுத்தார், துக்கப்படும் பாவிகளைத் தேற்றரவுபண்ணினார். இன்னமும் அதுவே அவர் மனது. உயிர்த்தெழுந்த அவரை விசுவாசிக்கிற ஒவ்வொருவனும் இந்த நாளின் வாக்கியத்தை வாசிக்கும்பொழுது மிகுந்த ஆறுதலடைந்து: கர்த்தர் என் மீட்பர், என் தோழர், என் சிநேகிதர், என் ஆண்டவர் என்று சந்தோஷமாய்ச் சொல்லலாம். தம்மைத் தேடுகிறவர்களுக்கும், விசுவாசிக்கிறவர்களுக்கும், அவர் இப்படிப்பட்டவராய் விளங்குகிறார். இந்

கென்றே அவர் உயிர்த்தெழுந்தார். அவர் மரித்ததும் நமக்காகவே. அவர் எழுந்ததும் நமக்காகவே. ஆகையால் நாம் இப்பொழுது இந்த வாக்கியத்தின்படியே:

**உயிர்த்தெழுந்த கிறிஸ்து தம்முடைய சீஷராகிய நமக்கு எப்படிப்பட்டவராய் விளங்குகிறார் என்று பார்ப்போம்.**

1. நமது உள்ளத்தைத் திறந்து பார்க்கும் உத்தம சிநேகிதர்.
2. நமது அறிவீனத்தைப் போக்கும் அருமைப் போதகர்.
3. நம்மை மகிழ்ச்சியால் நிரப்பும் மகிமையின் ஆண்டவர்.

1.

*உயிர்த்தெழுந்த கிறிஸ்து நமது உள்ளத்தைத் திறந்து பார்க்கும் நமது உத்தம சிநேகிதராய் விளங்குகிறார்.*

இயேசுநாதர் உயிர்த்தெழுந்த அன்றையத்தினம் அவருடைய எழுபது சீஷர்களில், இரண்டுபேர் எருசலேமிலிருந்து புறப்பட்டு, எம்மவு என்ற கிராமத்துக்குப் போனார்கள். அவர்கள் வழியிலே வீணபேச்சுப் பேசிக்கொண்டு போகவில்லை. தங்கள் பிரியமுள்ள போதகரும் சிநேகிதருமாகிய இயேசுநாதரைக் குறித்தே பேசிக்கொண்டு போனார்கள். அவருடைய பாடுகளையும் மரணத்தையும் அவர்கள் நினைக்கும்பொழுது அவர்களுடைய இருதயம் பெரிய துக்கத்துக்குள்ளாயிற்று. அவர்கள் அடைந்த துக்கமும் விசனமும் அவர்களுடைய பேச்சிலும் முகத்திலும் வெளிப்பட்டது. அவர்கள் மனதின் வியாகுலத்தை அறிந்து, அவர்களை ஆற்றித்தேற்றுவார் ஆருமில்லை. இப்படி நாமும் அடிக்கடி பார்த்திருப்போம். நமக்கும் வருத்தமும் விசனமும் உண்டாகும்பொழுது நமக்கு ஆறுதல் சொல்லுகிறவர்கள் அடிக்கடி அகப்படுகிறதில்லை. அப்படி அகப்பட்டாலும், அவர்கள் நம்முடைய உள்ளத்தைச் சரியாய் அறிந்துகொள்ளக்கூடியவர்களாயிருக்கிறதில்லை. நம்முடைய வாக்கியத்தில் சொல்லப்பட்ட இரண்டு சீஷப்பிள்ளைகளும் பேசிக்கொண்டுபோகையில், இயேசுநாதரும் அவர்களோடு நடந்தார். அவர் இயேசுநாதரென்று அவர்களுக்குத் தெரியாது. அவர்களுக்குத் தெரியாதிருந்தும், அவர்களுடைய நல்ல தோழரும் சிநேகிதருமாய் அவர்களோடு அவர் கூடிக்கொண்டார். நம்மைத் தேடிவருகிற நம்முடைய அருமை இரட்சகர் எவ்வளவு நல்லவர். அதோ, அங்கே அழுதுகொண்டு நிற்கிற மகதலாஊர் மரியாளண்டை அவர் போகிறார். அவளுடைய அழுகையை அவர் தீர்க்கிறார். அதோ, தன் பாவத்துக்காக மனஸ்தாபப்பட்டுக்கொண்டிருக்கிற பேதுருவண்டை போகிறார். அவருடைய கண்ணீரைத் துடைக்கிறார். இதோ, இங்கே விசனத்தோடு நடக்கிற இரண்டு சீஷரண்டை வருகிறார். அவர்களுடைய துக்கத்தையும் ஆற்ற அவருக்கு மனசு,



அதற்காக அவர்களோடே பேசுகிறார். அவர்களுடைய மனதில் இருப்பதை வெளிப்படையாய்ச் சொல்லும்படி அவர்களைத் தூண்டிவிடுகிறார். அவர்களில் ஒருவனாகிய கிலெயோப்பா என்னும் பேருள்ளவன் அவருக்குப் பிரத்தியுத்தரமாக அவருடனே: நீர் மாத்திரம் எருசலேமிலே இந்நாட்களில் சம்பவித்தவைகளை அறியாத பரதேசியாயிருக்கிறீரோ என்றான். இதனால் பெரிய வெள்ளிக்கிழமை நடந்த சங்கதி தூரதேசங்களிலிருந்து எருசலேமுக்கு வந்த எல்லாருக்கும் தெரிந்த சங்கதி என்று பார்க்கிறோம். அது எல்லாருக்கும் தெரியும்படிக்கே இயேசுவின் சிலுவை மீதில் இயேசுநசரேத்தான் யூதருடைய இராசா வென்று எபிரெய, கிரேக்க, லத்தீன் பாஷைகளில் எழுதியிருந்தது. இயேசுநாதர் பெரிய வெள்ளிக்கிழமைச் சங்கதியைத் தம்முடைய வாயினாலே சொல்லாமல், அந்தச் சீஷப்பிள்ளைகளே சொல்லும்படிக்கு: எவைகளை என்று கேட்டார். அவர்கள் அவருக்குச் சொன்ன உத்தரவு நாம் கவனிக்கத்தக்கது; அதிலே அவர்கள் இயேசுவைக்குறித்து நல்ல சாட்சி சொல்லுகிறார்கள். அவர்கள் அவருடனே சொன்னதாவது: பராபரனுக்கும் சகல சனத்துக்கும் முன்பாகச் செய்கையிலும் வார்த்தையிலும் வல்லமையுள்ள தீர்க்கதரிசியாயிருந்த இயேசுநசரேத்தானை நம்முடைய பிரதான ஆசாரியர்களும் தலைவரும் மரண ஆக்கினைக்கு ஒப்புக்கொடுத்து, சிலுவையில் அறைந்தார்கள் என்கிறதுகளைத் தானே என்று சொன்னார்கள். இயேசுநாதரை அவர்கள் தீர்க்கதரிசி என்றார்கள். அவர் தீர்க்கதரிசிதான்; அவர் எல்லாத் தீர்க்கதரிசிகளிலும் பெரிய தீர்க்கதரிசி. ஏனென்றால், அவர் பராபரனுடைய குமாரன். மற்றத் தீர்க்கதரிசிகளுக்குத் தெரியாததெல்லாம் அவருக்குத் தெரியும். அவர் வார்த்தையில் வல்லமையுள்ளவர். அவருடைய பிரசங்கங்கள் அநேகர் மனதை அசைத்தது. அவருடைய வார்த்தை ஆவியும் ஜீவனுமாயிருந்தது. அவர் வார்த்தையில் மாத்திரமல்ல, செய்கையிலும் வல்லவராயிருந்தார். அவர் சொன்னபடி எல்லாம் நடந்தது. காற்றும் கடலும் அவருக்குப் பயந்தது. பேய் பிசாசுகள் நடுங்கிற்று, வியாதிகளெல்லாம் பறந்தது. செத்துப்போனவர்கள் முதலாய் அவருடைய சொல்கேட்டு எழுந்திருந்தார்கள். அவர் தம்முடைய வார்த்தையினாலும் செய்கையினாலும் எல்லாருக்கும் நன்மை செய்கிறவராயிருந்தார், அவர் நன்மை செய்தும், பிரதான ஆசாரியர்களும் தலைவரும் அவரை அநியாயமாய்ச் சிலுவையிலறைந்து, கொலைபாதகரானார்கள். இதை அந்தச் சீஷர்கள் ஒளிக்காமல், மறைக்காமல், தங்களோடுவந்த இயேசுவுக்குச் சொன்னார்கள். மேலும், அவர்கள் தங்களைக்குறித்தும் அவருக்குத் தெரிவித்தார்கள். நாங்களோவெனில்; இஸ்ரவேலை மீட்கப்போகிற

வர் அவர் என்று நம்பினேம். ஆனால் இப்படி எல்லாம் இருந்தும், இதுகள் சம்பவித்து இன்று மூன்று நாளாகிறது. எங்களில் சில ஸ்திரீகளோ எங்களைப் பிரமிக்கவும் பண்ணினார்கள். அவர்கள் அதிகாலமே கல்லறையண்டையிலிருந்து, அவருடைய சரீரத்தைக்காணமல், அவர் உயிரோடிருக்கிறார் என்று சொன்ன தேவதூதருடைய தரிசனையையுங் கண்டோம் என்று வந்தார்கள். அப்போது எங்களுடனே இருக்கிறவர்களில் சிலர் கல்லறையண்டையிலே போய், ஸ்திரீகள் சொன்னதுக்குச் சரியாய்க் கண்டார்கள், அவரையோ காண இல்லை என்றார்கள். இந்த வார்த்தைகளினால் அவர்களுடைய விசுவாசம் கெட்டுப்போயிற்றென்றும், அவர்களிடத்தில் அவநம்பிக்கை அதிகமாயிருந்தது என்றும் தெரியவந்தது. இஸ்ரவேலை மீட்கப்போகிறவர் இயேசு என்று முன்னே நம்பியிருந்தவர்கள் இப்பொழுது அப்படி நம்பவில்லை. அவர் பாடுபட்டுச் சிலுவையில் அறையுண்டது அவர்களுடைய நம்பிக்கையை மாற்றிவிட்டது. அவர் தம்முடைய உயிர்த்தெழுதலைக்குறித்துச் சொல்லியிருந்த வார்த்தைகளை அவர்கள் மறந்துவிட்டார்கள். தேவதூதரைக்கண்ட ஸ்திரீகள் அவர்களுடைய உயிர்த்தெழுதலைக்குறித்துச் சொன்ன வார்த்தைகளையும் அவர்கள் நம்பவில்லை. இப்படியே, அவர்களுடைய விசனத்துக்கும் துக்கத்துக்கும் காரணம் என்னவென்று அவர்களுடைய வார்த்தைகளால் தெரியவருகிறது. இந்தக் காரணத்தை அவர்கள் உள்ளத்திலிருந்து வெளிக்குக்கொண்டுவந்த உத்தம சிநேகிதர் இயேசுநாதர் அல்லவா. பிரிய சகோதரர்களே, உயிர்த்தெழுந்த கிறிஸ்து நாம் இந்த உலகத்தில் செய்யும் பயணத்திலும் நம்மண்டைவந்து நிற்கிறார். நமது இருதயத்தை அவருக்குத் திறந்து காட்டுவோமாக, நமது பாவத்தை அறிக்கையிடுவோமாக, நம்முடைய துக்கத்தை எல்லாம் அவருக்கு வெளிப்படுத்துவோமாக. நம்மைப்போலொத்த மனிதருக்கு நம்முடைய மனவருத்தத்தைத் தெரிவிப்பதைப் பார்க்கிலும், இயேசுவுக்கு அதை தெரிவிப்பது நல்லது.

## 2.

உயிர்த்தெழுந்த கிறிஸ்து நம்முடைய அறிவீனத்தைப் போக்கும் அருமைப் போதகர்.

தங்கள் மனதைத்திறந்த சீஷப்பிள்ளைகளை அவர் விட்டுவிடவில்லை. விசுவாசத்தை விட்டுவிலகித் தூரமாய்ப்போன அந்த ஏழை மனுஷர்களுக்காக அவர் பரிதபித்தார். அவர்களுடைய அறிவீனத்தைப் போக்கி, அவர்களுக்குத் தம்மைப்பற்றி நல்லறிவை உண்டாக்கும்படி அவர் தம்முடைய வாயைத்திறந்தார், அவர் உத்தமபோதகர். அப்போது அவர் இவர்களுடனே: தீர்க்கதரிசிகள் சொன்னயாவையும் விசுவாசிக்கிறதுக்கு அவமதியும்



மந்த இருதயமுமானவர்களே, கிறிஸ்து இப்பாடுகளை உத்தரிக்கவும் தம்முடைய மகிமைக்குள் பிரவேசிக்கவும் வேண்டியதாயிருந்ததில்லையோ என்று சொல்லி, மோசேயையுஞ் சகல தீர்க்கதரிசிகளையுந் துவக்கி, சகலவேத எழுத்துகளிலுந் தமக்கடுத்தவைகளை அவர்களுக்கு விவரித்துக்காட்டினார். அவர்களுடைய அவமதியும் மந்த இருதயமுமே தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளை விசுவாசிக்காதபடி அவர்களைக்கெடுத்தது. இயேசு அதை அவர்களுக்குத் தூண்டிக்காட்டி அவர்களைக் கடிந்துகொண்டார். அவர் நம்மைக் கடிந்துகொள்ளுகிறது நமக்குநல்லது. அதுவே உத்தம போதகரின் அடையாளம். யோவான்ஸ்நானகன் தன்னிடத்தில் வந்த வேதபாரகரையும் பரிசேயரையும் விரியன் பாம்பின் குட்டிகளென்று சொல்லிக்கடிந்துகொண்டான். இயேசுநாதர் இந்தச் சீஷர்களுடைய புத்தியீனத்தை நீக்கி அவர்களுடைய இருதயத்தை வெளிச்சமாக்கும்படி வேதஎழுத்துக்களை அவர்களுக்குத் திறந்துகாட்டினார். வேதபுஸ்தகம் ஒன்றே நம்முடைய சந்தேகத்தைப்போக்கும், நமக்குள் விசுவாசத்தை உண்டாக்கும். வேத புஸ்தகமெல்லாம் கிறிஸ்துவுக்குச் சாட்சிகொடுக்கிறது. ஆகையால், இயேசுநாதர் பழைய ஏற்பாட்டில் தம்மைக்குறித்து எழுதியிருக்கும் வாக்குத்தத்தங்களை அவர்களுக்கு எடுத்துக்காட்டியிருப்பார். ஸ்திரீயின் வித்தானவர் சர்ப்பத்தின் தலையை நசுக்குவாரென்றும், சர்ப்பமோ அவருடைய குதிகாலைக் கொத்துமென்றும் எழுதியிருப்பதை அவர்களுக்குக் காட்டியிருப்பார். பழைய ஏற்பாட்டின் பலிகளும் அவருடைய பாடுகளுக்கு முன்னடையாளமாயிருந்தன. இருபத்திரண்டாம் சங்கீதத்தில் தாவீது இராசாவும், பல இடங்களிலும் தீர்க்கதரிசிகளும் மேசியாவின் பாடுகளைக் குறித்து எழுதியிருக்கிற தீர்க்கதரிசனங்களை அவர்களுக்கு விவரமாய்ச் சொன்னார். பாடுபட்டு மரித்தவர் திரும்பவும் எழுந்திருப்பார் என்று வேதத்தில் சொல்லியிருக்கிற வாக்கியங்களை அவர்களுக்கு விவரித்தார். இதனால், அவர்களுக்குக் கிறிஸ்துவைப்பற்றிச் சரியான அறிவு வந்தது. அவர்களுடைய அவமதி நீங்கிற்று. அவர்களுடைய இருதயத்திலே வெளிச்சமுண்டாயிற்று. அவர் வழியிலே நம்முடனே பேசி, வேத எழுத்துக்களை நமக்குத் திறந்து சொல்லும்போது நம்முடைய இருதயம் நமக்குள் பற்றி எரிகிறதாயிருந்ததில்லையோ என்று அவர்கள் சொல்லிக்கொள்ளும்படியாயிற்று. ஏனெனில், இயேசுவினுடைய வார்த்தை அக்கினியைப்போலும் கன்மலையை நொறுக்கும் சம்மட்டியைப்போலும் இருக்கிறது.

எம்மவு கிராமத்துக்குப் போன இரண்டு சீஷரோடு பேசிக்கொண்டு நடந்த இயேசுநாதர் இன்னம் உயிரோடிருக்கிறார். அவர் நம்மோடும் பேசுகிறார். அவருடைய வசனம் நம்மோடிருக்கிறது. அதிலே நாம் அவருடைய சத்தத்தைக் கேட்

கிறோம். நாம் புத்தி கெட்டுத் திரிவதற்கு இனிமேல் நியாயமேயில்லை. நமக்குள் மெய்யான வெளிச்சமும் அனலும் உண்டாக வேண்டுமானால், இயேசுவினுடைய ஜீவனுள்ள வார்த்தையைக் கேட்கக்கடவோம், படிக்கக்கடவோம். இயேசுநாதர் நமக்கு அறிவைக்கொடுக்கவும், நம்முடைய இருண்ட புத்தியை வெளிச்சமாக்கவும் ஆசையுள்ளவராயிருக்கிறார், அதற்கு வல்லமையுடையவராகவும் இருக்கிறார். அந்த உத்தமபோதகருக்கு நம்மை ஒப்புவித்து, அவருடைய போதனைக்குச் செவிகொடுத்து, அவரால் நம்முடைய இருதயங்களில் மெய் விசுவாசத்தைப் பெற்றுக் கொள்வோமாக.

3.

உயிர்த்தெழுந்த கிறிஸ்து நம்மை மகிழ்ச்சியால் நிரப்பும் மகிமையின் ஆண்டவராயிருக்கிறார்.

அவர்கள் பயணம் பண்ணுங் கிராமத்துக்குச் சேர்ந்தார்கள்; அப்போது அவர் அப்புறம் போகிறவர்போலே காண்பித்தார். ஆனால் அவர்கள்: எங்களுடனே கூட இரும்; அதேனெனில் அந்திநேரமாகப் பொழுது சாய்ந்ததென்று சொல்லி, அவரை வருந்திக்கொண்டு இருக்கிறார்கள். அப்போது அவர்களுடனே கூடத் தங்கியிருக்கிறதுக்கு உட்பிரவேசித்தார். இயேசுநாதர் அவர்களை விட்டு அப்புறம் போகிறவர்போலே காண்பித்தது ஒரு நல்ல நோக்கமாகவே அல்லாமல் வேறல்ல. அப்படி அவர் காண்பித்தது அவர்களை ஒரு மன்றாட்டுக்கு ஏவிற்று. எங்களுடனே கூட இரும் என்று அவர்கள் வேண்டிக்கொண்டார்கள், அவர் தங்களோடு இருப்பது அவர்களுக்குச் சந்தோஷமாயிருந்தது. இன்னமும் அவருடைய வார்த்தையைக் கேட்கவும், இன்னமும் விசுவாசத்தில் பெருகவும் அவர்கள் விரும்பினார்கள். இயேசுவோடு ஐக்கியப்பட்டு அவருடைய வசனத்தைக் கேட்டவன், அவரை விட்டுப் பிரிந்துபோக விரும்பமாட்டான். நாமும் அவரை எப்பொழுதும் வருந்திக்கொண்டு இருக்கிறோமானால், நல்லது. அவர் நம்முடனே இருப்பது நமக்கு அவசியம். அந்திநேரமாகிய பொழுது சாய்ந்தது என்று அவர்கள் சொல்லி, அவரைத் தங்களோடு இருத்தினார்கள். ஒவ்வொரு அந்திநேரத்திலும் அவர் நம்மோடு இருப்பது நமக்கு ஆறுதல். அவரண்டைபடுத்து, அவருடைய சார்பில் இளைப்பாறுகிறவன் பாக்கியவான். ஒவ்வொரு இராவிலுமாத்திரமல்ல, நம்முடைய ஆயுசின் பொழுது சாய்ந்துபோகிற கடைசிநேரத்திலும் அவர் நம்முடனே இருப்பது நல்லது. அவர் இருக்கிற இடத்தில் அந்திப் பொழுது ஆனந்தப்பொழுதாகும்.

இயேசுநாதர் அந்த சீஷர்களின் மன்றாட்டுக்கு இணங்கி, அவர்களிடத்தில் தங்கியிருந்தார். அவர்களோடு பந்தியிருக்கையில், அவர் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்தார். அப்போது அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டு, அவரை அறிந்தார்கள். இதிலே நாம் அவருடைய மகிமையைக் காண்கிறோம். முந்த அவருடைய தயவு எத்தனை பெரியதென்று பார்க்கிறோம். அவர் அந்தச் சீஷர்களின் மன்றாட்டை அல்லத்தட்டாமல், அவர்களோடு தங்கினார். அவர் மகிமையின் ஆண்டவராயிருந்தும், நம்மோடு தங்குவதற்கு அவர் வெட்கப்படுகிறதில்லை. அவர் நம்மண்டையிருக்கவும், நம்மை ஆசீர்வதிக்கவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார். அவர் எம்மாவு கிராமத்தில் அந்தச் சீஷர்களின் பந்தியை ஆசீர்வதித்தார். நம்முடைய பந்தியையும், நமக்கடுத்த எல்லாக் காரியங்களையும் அவர் ஆசீர்வதிக்க மனமுள்ளவராய் இருக்கிறார். நாம் சாப்பிடுமுன் செபம் செய்யும் பொழுது அவர் நம்மண்டை வந்து நம்மோடிருந்து, நம்முடைய சாப்பாட்டை ஆசீர்வதிக்கிறார். செபம்பண்ணாதவர்கள் பந்தியில் அவர் வரமாட்டார், அவர்கள் சாப்பாட்டை ஆசீர்வதிக்கவும் மாட்டார். அவர் பந்தியிலிருக்கும்பொழுது அவர்களுடைய கண்களைத் திறந்தார். அப்பொழுது அவர்கள் அவரை இயேசுநாதரென்றும், பாடுபட்டு மரித்த அவர் உயிர்த்தெழுந்தாரென்றும் நிச்சயமாய் அறிந்துகொண்டார்கள். உயிர்த்தெழுந்த ஆண்டவரின் மகிமை அப்பொழுது அவர்களுக்குத் தெளிவாயிற்று. இதனால், அவர்களுடைய விசுவாசம் பலப்பட்டது. அவர்களுடைய இருதயத்தில் முன்னே இருந்த துக்கமெல்லாம் போய்விட்டது. சந்தோஷமும் மகிழ்ச்சியும் அவர்கள் இருதயத்தை நிரப்பிற்று. இயேசுநாதர் அப்பொழுது அவர்களை விட்டு, மறைந்துபோனார். அவர் மறைந்துபோனாலும், அவர் உண்டுபண்ணின சந்தோஷமும் மகிழ்ச்சியும் அவர்களுக்குள் குறையவில்லை. தங்களுக்கு உண்டான சந்தோஷத்தை அவர்கள் அடக்கிவைத்துக்கொள்ள முடியாமல், உடனே எருசலேமுக்குத் திரும்பினார்கள். அங்கே பதினொருவரும் அவர்களோடிருக்கிறவர்களுங் கூடினவர்களாகவும்: கர்த்தர் மெய்யாய் எழுந்திருந்து, சீமோனுக்குத் தரிசனையானார் என்று சொல்லுகிறவர்களாகவுங் கண்டு, தாங்களும் வழியில் சம்பவித்தவைகளையும் அவர் அப்பத்தைப் பிட்கையில் தங்களுக்கு எப்படி அறியப்பட்டார் என்கிறதையும் விவரித்தார்கள்.

அவர்கள் எருசலேமுக்குப் போனதினால் அவர்களுடைய விசுவாசம் அதிகரிக்க இடமாயிற்று. அங்கே இயேசுவினுடைய தரிசனையைக் கண்ட சீஷருடைய வார்த்தைகள் இவர்களைப் பலப்படுத்திற்று. இவர்களுடைய வார்த்தைகளும் அவர்களைப் பலப்படுத்திற்று. இப்படியே இருபக்கத்திலும் மகிழ்ச்சியும் சந்தோஷமும் பெருகிற்று. உயிர்த்தெழுந்த கர்த்தர் நமக்கும் மகிழ்ச்சியை

அளிக்கும் ஆண்டவராயிருக்கிறார். அவரை விசுவாசத்தினால் பிடித்துக்கொண்டவர்கள் ஆரோ, அவர்கள் தங்கள் ஆயுசுகாலமெல்லாம் அவருக்குள் சந்தோஷப்படுவார்கள். மற்றவர்களையும் சந்தோஷப்படுத்துவார்கள். தங்கள் ஆயுசு முடிந்து மரணம் அடையும் பொழுதும் அவர்கள் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

ஆண்டவரே, தேவரீர் எங்களோடும் தங்கியிருந்து, உம்மை எங்கள் உத்தம சிநேகிதரும், போதகரும் ஆண்டவருமாக எங்களுக்குக் காண்பித்தருளும், சுவாமி. ஆமென்.

---

## கர்த்தர் உயிர்த்தெழுந்த பண்டிகைக்குப் பிந்தின ௧-ம் ஞாயிறு.

யோவான் 20, 19—31.

பிரியமானவர்களே,

இயேசுநாதர் பிறந்த இராத்திரியிலே தேவதூதர் பாடின பாட்டு நமக்குத் தெரியும். உன்னதங்களிலிருக்கிற பராபரனுக்கு மகிமையும் பூமியிலே சமாதானமும், மனிதர் பேரில் பிரியமும் உண்டாவதாக என்றார்கள். அவரால் பூமிக்கு வந்த பெரிய ஆசீர்வாதங்களில் ஒன்று சமாதானம். இதனால் அவரைக் கோத்திரப்பிதாவாகிய யாக்கோபு சமாதானக் கர்த்தரென்றும், எசாயா தீர்க்கதரிசி சமாதானப் பிரபு என்றும் சொன்னார்கள். உயிர்த்தெழுந்த இரட்சகர் தம்முடைய பெயருக்கு ஏற்றபடியே உங்களுக்குச் சமாதானம் என்று சொல்லித் தம்முடைய சீஷரை வாழ்த்தினார். இந்த நாளின் சுவிசேஷ வாக்கியம் இதை நமக்குக் காட்டுகிறது. இதின்படியே நாம் தியானிக்கப்போகிற சங்கதி:

இயேசுநாதர் சமாதானப் பிரபு என்பதாம்.

1. அவரே நமக்குச் சமாதானத்தைச் சம்பாதித்தார்.
2. அவரே நம்மண்டைக்குச் சமாதானத்தை வரப்பண்ணுகிறார்.
3. அவரே நமக்குச் சமாதானத்தைச் சொந்தமாக்குகிறார்.

### 1.

இயேசுநாதர் நமக்குச் சமாதானத்தைச் சம்பாதித்தபடியால் அவரை நாம் சமாதானப் பிரபு என்று சொல்லி, விசுவாசிக்கிறோம்.

வாரத்தின் முதல் கிழமையான அன்றையத்தினம் அந்திமவேளையிலே, சீஷர் கூடியிருந்த இடத்தில் யூதருடைய



பயத்தினால் கதவு பூட்டியிருக்கக்கொள்ள, இயேசு வந்து நடுவே நின்று, அவர்களுடனே: உங்களுக்குச் சமாதானம் என்றார். சீஷர்கள் பயந்திருந்தார்கள் என்று வாசிக்கிறோம். தங்கள் போதகராகிய இயேசுவைப் பிடித்துக் கொன்றுபோட்டதுபோல் தங்களையும் யூதர் பிடித்துக் கொன்றுபோடுவார்கள் என்பதே அவர்கள் பயத்துக்குக் காரணம். அதினாலேயே அவர்கள் கதவைப் பூட்டிக்கொண்டிருந்தார்கள். முன்னே கிறிஸ்து அவர்களோடு இருந்த காலத்தில் அவர்கள் இப்படிப் பயந்ததில்லை. இப்பொழுதும் அவர்கள் இயேசுநாதரை விசுவாசத்தினால் தங்கள் இருதயத்தில் பத்திரம்பண்ணியிருப்பார்களாகில், அவர்கள் பயந்திருக்கமாட்டார்கள். அவர்களிடத்திலே விசுவாசம் குறைவுபட்டதால், பயம் மேலிட்டது. அவர்களுக்கு மனச்சமாதானம் இல்லாமல் போயிற்று. வியாதிப்பட்ட பிள்ளைகளுக்குத் தாய் பரிதபிப்பதுபோல், இயேசுநாதர் அந்த ஏழை மனிதருக்காகப் பரிதபித்து, அவர்கள் நடுவே வந்து நின்றார். கதவு பூட்டியிருக்கையில் ஒரு வீட்டுக்குள் ஒருவனும் பிரவேசிக்கமுடியாது. இயேசுநாதரோ அப்படிச் செய்யக் கூடியவராயிருந்தார். உயிர்த்தெழுந்த அவருடைய சரீரம் காற்று நுழையாத இடத்திற்குள்ளும் நுழையக்கூடியதாயிருந்தது. அதற்கு மகிமையான சரீரமென்றும், ஆவியான சரீரமென்றும் பேர். நாமும் கடைசிநாளில் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கும் பொழுது இப்படிப்பட்ட மகிமையான சரீரத்தைப் பெற்றுக்கொள்வோம். இரட்சகர் திடீரென்று உள்ளே வந்ததால், சீஷருக்குப் பெரிய ஆச்சரியம் உண்டாயிருக்கலாம். கர்த்தர் அவர்களை வாழ்த்தி: உங்களுக்குச் சமாதானம் என்று சொன்னபொழுது அவர்கள் ஆச்சரியம் சந்தோஷமாய் மாறிற்று. அவர் தம்முடைய கைகளையும் விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தபொழுதோ அவர்கள் சந்தோஷம் அதிகப்பட்டது. கர்த்தர் சிலுவையில் ஆணிகளினால் கடாவப்பட்டு மரித்தவராகையால், அவருடைய கைகளிலும் கால்களிலும் தழும்புகள் இருந்தன. அப்படியே அவருடைய விலாவில் ஒரு சேவகன் ஈட்டியினாலே குத்தினபடியால், அதிலும் ஒரு பெரிய தழும்பு இருந்தது. இவைகளைக் கர்த்தர் ஏன் தம்முடைய சீஷப் பிள்ளைகளுக்குக் காண்பித்தார். அதற்கு இரண்டு முகாந்திரமுண்டு.

இப்பொழுது அவர்கள் நடுவே நிற்கிறவர் அவர்களுடைய போதகரும், சிலுவையில் அறையுண்டு மரித்தவருமாகிய இயேசு நாசரேத்தான் என்பதற்குச் சந்தேகமில்லை என்று அவர்களுக்குக் காட்டுவதே முதல் முகாந்திரம். அவருடைய ஐந்து காயங்களும், அவர்களுக்குச் சமாதானத்தைச் சம்பாதித்த அவருடைய பாடுகளுக்குச் சாட்சி என்பது இரண்டாம்

முகாந்திரம். இயேசுநாதரே நமக்குச்சமாதானத்தைச் சம்பாதித்தவரென்று இதனால் நாம் நிச்சயமாய் அறிகிறோம். இதைக் குறித்து ஏசாயா தீர்க்கதரிசி அவர் நம்முடைய மீறுதல்களின் நிமித்தங் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களின் நிமித்தம் நொறுக்கப்பட்டார். நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் இறங்கிற்று; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம் (ஏசாயா 53, 5) என்று சொன்னார். பிதாவாகிய பராபரன் அவருடைய பாடுகளையும் மரணத்தையும ஒப்புக்கொண்டார் என்பதற்கு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் சாட்சி. நமக்காகத் தெய்வ சமாதானத்தைச் சம்பாதித்தவர் இயேசுவென்று நாம் அறிந்திருப்பது நமக்கு எவ்வளவு ஆறுதல். சொல்லிமுடியாத பாடுகளினாலும், சிலுவையில் அறையுண்டு ஐந்து காயப்பட்டு மரித்ததினாலும், நமக்காகச் சமாதானத்தைச் சம்பாதித்த அவருக்கு நாம் என்னத்தைக் கொடுப்போம். அவர் இப்பொழுதும் நமக்குத் தம்முடைய காயங்களைக் காண்பித்து: பாவியே, நான் உனக்காக எவ்வளவு பாடுபட்டேனென்று பார். உன்னை நான் எவ்வளவு சிநேகித்தேன் என்பதற்கு என்னுடைய காயங்கள் சாட்சி சொல்லுகிறதல்லவா. நீ என்னைச் சிநேகிக்கிறாயா. நீ எனக்காக என்ன செய்தாய். உன் சிநேகத்துக்கு அடையாளமென்ன என்று நம்மைக் கேட்கிறார்.

ஆ நான் ஒரு காலமும்
அவர் என் ரட்சிப்புக்காக
பட்ட நோவினைத்துக்கும்
ஏதையாகிலும் ஈடாகச்
செய்ய என்றால் ஆவதில்லை,
நான் ஆதாமின் கெட்டபிள்ளை

என்று நாம் சொல்லித் துக்கப்பட நியாயமுண்டு. நாம் அவருடைய ஒத்தாசையால் பாவத்தை வெறுத்து, அவருக்கு நம்முடைய முழு இருதயத்தையும் ஒப்புக்கொடுப்போமாக.

2.

இயேசுநாதர் ஒருவரே சமாதானத்தை நம்மண்டைக்கு வரப்பண்ணுகிறபடியால் அவரே சமாதானப்பிரபு.

அவர் சம்பாதித்த சமாதானத்தை நமக்குக் கொடுக்க அவருக்கு மிகுதியான ஆசையுண்டு. அவர் தமது சீஷப்பிள்ளைகளைப் பார்த்து: உங்களுக்குச் சமாதானம் என்று அடிக்கடி சொன்னதினால் இதை நாம் நிச்சயமாய் அறிகிறோம். அவர் சம்பாதித்த சமாதானம் நமக்கும் இந்த உலகத்திலுள்ள மற்றப் பாவிகளுக்கும் வருகிற வழி என்ன. இதற்காகக் கர்த்தர் தம்முடைய திருச்சபையிலே தெய்வ ஊழியத்தை ஏற்படுத்தினார். அதைக் குறித்து நம்முடைய வாக்கியத்திலே சொல்லியிருக்கிறதாவது: அப்போது இயேசு மறுபடியும் அவர்களுடனே: உங்களுக்குச் சமாதானம்; பிதா என்னை அனுப்பினதுபோல, நானும் உங்களை



அனுப்புகிறேன் என்று சொல்லி, அவர்கள் மேல் ஊதி, அவர்களுடனே: பரிசுத்த ஆவியை வாங்குங்கள், எவர்கள் பாவங்களை மன்னிக்கிறீர்களோ, அவர்களுக்கு மன்னிக்கப்பட்டிருக்கிறது; எவர்கள் பாவங்களைச் சுமத்திவைக்கிறீர்களோ, அவர்கள் மேல் அதுகள் சுமத்திவைக்கப்பட்டிருக்கிறது என்றார். இதிலே நாம் கவனிக்கத்தக்க அநேக காரியங்களிருக்கிறது. முக்கியமானவைகளை இப்பொழுது கேட்போம்.

தெய்வ ஊழியம் கிறிஸ்துவால் ஏற்பாடானது. தெய்வ ஊழியக்காரரை நம்மண்டைக்கு அனுப்புகிறவர் கிறிஸ்து. தெய்வ ஊழிக்காரரை அசட்டைபண்ணுகிறவன் கிறிஸ்துவை அசட்டைபண்ணுகிறான். ஆகையால் அவர்கள் யாராயிருந்தாலும், அவர்களை நாம் கிறிஸ்துவின் நிமித்தம் கனப்படுத்தவேண்டும். அவர்கள் சொல்லும் புத்திமதிகளைச் சந்தோஷமாய்க் கேட்கவேண்டும். அவர்கள் கொடுக்கும் ஆசிர்வாதங்களை நன்றியறிதலோடு ஏற்றுக்கொள்ளவேண்டும்.

தெய்வ ஊழியரைக்கொண்டு நமக்குக் கொடுக்கப்படுகிற விசேஷித்த ஆசீர்வாதம் பாவமன்னிப்பு. பாவம் இந்த உலகத்தைக் கெடுத்த விசேஷித்த தீமை. பாவமன்னிப்போ இந்த உலகத்துக்கு வந்த விசேஷித்த நன்மை. பாவத்தினாலே நமக்கும் பராபரனுக்கும் பிரிவினை உண்டாயிற்று. பாவமன்னிப்பினாலோ பராபரனுக்கும் நமக்கும் ஐக்கியம் உண்டாகிறது. பாவம் மரணத்தையும் சகல தீமைகளையும் கொண்டுவந்தது. பாவமன்னிப்போ ஜீவனையும் சகல நன்மைகளையும் நமக்குக் கொண்டுவருகிறது. பாவத்தினாலே நம்முடைய இருதயங்களில் பயமும் நடுக்கமும் கலக்கமும் உண்டாகிறது. பாவமன்னிப்பினாலோ சமாதானமும் சந்தோஷமும் நமக்கு வருகிறது. ஆகையால் தெய்வ ஊழியம் பாவமன்னிப்பின்வழியாய் நமக்குச் சமாதானத்தைக் கொடுக்கும் ஊழியமாயிருக்கிறது. ஒரு தெய்வ ஊழியன் நம்முடைய தலையின்மேல் கையை வைத்து: உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்று சொல்லும்பொழுது பரலோகத்தில் பராபரன் நம்முடைய பாவங்களை நிச்சயமாகவே மன்னிக்கிறார். அவருடைய சமாதானம் நிச்சயமாகவே நம்மண்டை வருகிறது. இத்தனை பெரிய பொக்கிஷத்தை நம்மண்டைக்குக் கொண்டுவரக் கர்த்தர் தெய்வ ஊழியத்தை ஏற்படுத்தினதற்காக அவருக்கு ஸ்தோத்திரம்.

தெய்வ ஊழியர் பாவங்களை மன்னிக்கிறதற்கு அதிகாரம் பெற்றிருக்கிறதுபோலவே அதைச் சுமத்திவைக்கவும் அதிகாரம் பெற்றிருக்கிறார்கள். கிறிஸ்து சம்பாதித்த பாவமன்னிப்பை ஏற்றுக்கொள்ளாமல், பாவத்திலும் அவிசுவாசத்திலும் நிலைத்திருக்கிறவர்கள் ஆரோ, அவர்கள் மேல் பராபரனுடைய கோபாக்

கினை வரும். அந்தக் கோபாக்கினையை தெய்வ ஊழியக்காரன் கூறும்பொழுது கிறிஸ்துதாமே அதைக் கூறி அந்தப் பாவியை ஆக்கினைக்கு ஒப்புவிக்கிறார். ஆகாதவனுக்குச் சமாதானமில்லை என்று பராபரன் சொல்லுகிறபடியினால் ஆக்கினை சுமத்தப்பட்ட பாவி மகா நிர்ப்பாக்கியத்துக்கு உட்படுகிறான். ஆகையால் தெய்வ ஊழியக்காரர் நமக்கு அடிக்கடி சொல்லுகிற எச்சரிப்பை அசட்டைபண்ணாமல் கவனித்து நடப்போமாக.

நமக்குச் சமாதானத்தைக் கொண்டுவரும்படி கிறிஸ்து தெய்வ ஊழியத்தை ஏற்படுத்தினார் என்று கேட்டோமே. தெய்வ ஊழியர் இந்தச் சமாதானத்தை எந்த வழியாய் மனிதருக்குக் கொடுக்கிறார்கள். அதைச் சுவிசேஷ பிரசங்கத்தினாலும் ஞானதிரவியங்களினாலும் இந்த உலகத்துக்குக் கொடுத்துவருகிறார்கள். சிலுவையில் அறையுண்டு மரித்து உயிர்த்தெழுந்த இயேசுவைக்குறித்து எங்கெங்கே பிரசங்கம் நடக்கிறதோ, அங்கெல்லாம் பாவமன்னிப்பும் அதன் பலனாகிய சமாதானமும் வருகிறது. ஞானஸ்நானமும பாவமன்னிப்பை அருளும் முழுக்காயிருக்கிறது. விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவானென்று கிறிஸ்து சொன்னார். பாவமன்னிப்போ இரட்சிப்பு. கர்த்தருடைய இராப்போசனம் பாவமன்னிப்பின் விருந்தாயிருக்கிறது. இது பாவமன்னிப்புக்கென்று உங்களுக்காகக் கொடுக்கப்பட்ட சரீரமென்றும், உங்களுக்காகச் சிந்தப்பட்ட இரத்தமென்றும் கிறிஸ்து இராப்போசனக்கட்டளையில் சொல்லியிருக்கிறார். ஆகையால் இந்த ஞானதிரவியங்கள் நம்மண்டைக்குப் "பாவமன்னிப்பைக் கொண்டுவரும் எத்தனங்களாம். சுவிசேஷ பிரசங்கத்தையும் ஞானதிரவியங்களையும் அசட்டைசெய்கிறவர்களுக்குச் சமாதானம் அகப்படாது. ஆகையால் திருச்சபையில் தெய்வ ஊழியரைக்கொண்டு கையாடப்படுகிற இந்த மேலான எத்தனங்களை நாம் கவலையோடும் கவனத்தோடும் பிரயோசனமாக்கிக் கொள்வோமாக.

3.

இயேசுநாதர் ஒருவரே நமக்குச் சமாதானத்தைச் சொந்தமாக்குகிறபடியால் அவர் சமாதானப் பிரபுவாயிருக்கிறார்.

கிறிஸ்து சமாதானத்தைச் சம்பாதித்தார். அதைத் தம்முடைய ஊழியரைக்கொண்டு நம்மிடம் கொண்டுவருகிறார். நம்மண்டைக்குவருகிற சமாதானத்தை நாம் நமக்குச் சொந்தமாக்கிக்கொள்ளவேண்டும். அப்படிச் செய்யாதேபோனால், நமக்குச் சமாதானமிருக்காது. இதைத் தோமாவின் திருஷ்டாந்தத்தினால் பார்க்கிறோம். பன்னிருவரில் ஒருவனாகிய திதிமு என்னப்பட்ட தோமாவோவெனில் இயேசு வரும்போது அவர்களுடனே கூட



இருந்ததில்லை. அவனுடனே மற்றச் சீஷர் கர்த்தரைக் கண்டோமென்றார்கள். அவனோவெனில் அவர்களுடனே: நான் அவருடைய கைகளில் ஆணிகளுடைய அச்சைக் கண்டு, என் விரலை ஆணிகளுடைய அச்சிலே போட்டு, என் கையை அவருடைய விலாவில் போட்டாலொழிய விசுவாசியேன் என்றான். இயேசுநாதர் அப்போஸ்தலருக்கு முதல் விசை தரிசனை கொடுத்தபொழுது தோமா அவர்களோடு இருந்ததில்லை. இயேசுநாதரைக் கண்ட ஸ்திரீகளும், பேதுருவும், மற்ற அப்போஸ்தலரும், எம்மவு கிராமத்துக்குப் போன சீஷரும் கர்த்தர் உயிர்த்தெழுந்த செய்தியை அவனுக்கு எவ்வளவாய்ச் சொல்லியும் அவன் நம்பவேயில்லை. ஆகையினால் மற்றச் சீஷர்களுக்கு இருந்த ஆறுதலும் மனச் சமாதானமும் சந்தோஷமும் தோமாவுக்கு இருந்ததில்லை. ஐயோ, அந்த ஏழைச் சீஷனுக்கு ஏன் சமாதானமில்லை. அவனுக்கு விசுவாசமும நம்பிக்கையும் இல்லாதபடியினாலேதான். விசுவாசம் எங்கே இல்லையோ, அங்கே கிறிஸ்து இல்லை. எங்கே கிறிஸ்து இல்லையோ, அங்கே சமாதானம் இல்லை. நாமும் கிறிஸ்துவை விசுவாசிக்காதேபோனால், அந்த தோமாவின் நிலைமையே நமக்கும் வரும். விசுவாசம் எங்கேயிருக்கிறதோ, அங்கே கிறிஸ்து தமது சகல ஆசீர்வாதங்களோடும் வந்து தங்குவார். அங்கே எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானத்தைக் கட்டளையிடுவார்.

தம்முடைய ஏழைச் சீஷனாகிய தோமாவுக்கு விசுவாசம் குறைவுபட்டது இயேசுவுக்கு நன்றாய்த் தெரிந்தது. அவன் சீஷர்களோடு பேசிக்கொண்டிருந்த வார்த்தைகள் அவருக்குத் தெரிந்தது. அவருக்கு எது மறைவாயிருக்கக் கூடும். தம்முடைய ஆடுகளில் ஒன்றையும் இழந்துபோக அவருக்கு மனதில்லாதபடியால் அவர் தோமாவைத் தேடிவந்தார். எட்டு நாளைக்குப் பிற்பாடு மறுபடியும் அவருடைய சீஷரும் அவர்களுடனே கூடத் தோமாவும் உள்ளே இருந்தார்கள். கதவுகள் பூட்டியிருக்கக்கொள்ள இயேசுவந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார். பிற்பாடு தோமாவுடனே: நீ உன் விரலை இங்கே நீட்டி என் கைகளைப் பார்த்து, உன் கையை நீட்டி என் விலாவிலே போட்டு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார். ஒரு பாவியும் கெட்டுப்போவது இயேசுநாதருக்குப் பிரியமல்ல. அவர் எல்லாரையும் குணப்படுதலுக்கும் விசுவாசத்துக்கும் அழைக்கச் சித்தமாயிருக்கிறார். இன்றைக்கும் இங்கே கூடிவந்திருக்கிற நமக்குள் ஆராருக்கு விசுவாசமில்லையோ, அவர்களை எல்லாம் இயேசுநாதர் இந்தப் பிரசங்கத்தினால் கூப்பிடுகிறார், தொடுகிறார், இழுக்கிறார். அவர்களுக்குத் தம்முடைய காயங்களைக் காட்டுகிறார், விசுவாசியுங்கள் என்று சத்தமிடுகிறார். அவருடைய சத்தத்துக்குச் செவிகொடுத்து நாம் விசுவாசிகளாவதே நல்லது.

தோமா ஆச்சரியமும் பயமும் நிறைந்தவனானதால் அதிகமாய்ப் பேசமாட்டாமல், அவருக்குப் பிரத்தியுத்தரமாக: என் ஆண்டவரே, என் பராபரனே என்றான். இந்தச் சுருக்கமான வார்த்தைகளினால் அவன் சொல்லமனதாயிருந்தது என்னவென்று நமக்குத் தெரிகிறது. ஐயா, நீர் என்னுடைய ஆண்டவரென்றும் நான் உம்முடைய அடியானென்றும் ஒப்புக்கொள்ளுகிறேன். நீர் சிலுவையில் அறையுண்டு மரித்தீர். இப்பொழுதோ நீர் உயிர்த்தெழுந்தீர் என்கிறதை நான் பார்க்கிறேன். ஆகையால் நீர் மற்றவர்களைப்போல் வெறும் மனுஷனல்ல. நீர் மெய்யான பராபரன். மரணத்தை ஜெயிக்க எந்த மனுஷனாலும் முடியாது. நீரோ மரணத்தை மேற்கொண்டதினால் உம்முடைய வல்லமை தெய்வவல்லமை என்று ரூபித்தீர். இனி எனக்கு ஒரு சந்தேகமுமில்லை. உம்மை நான் விசுவாசிக்கிறேன். உம்முடைய உயிர்த்தெழுதலை விசுவாசிக்கிறேன். நீர்தான் என் எசமான், நீர்தான் என் இரட்சகர், நீர்தான் என் சுவாமி என்பது தோமாவின் கருத்து. உயிர்த்தெழுந்த இரட்சகரை அவன் பார்த்ததினால் இந்த விசுவாசம் அவனுக்கு வந்தது. இப்படியே நமக்கும் விசுவாசம் வரவேண்டும் என்று கேட்கக்கூடாது. ஏனெனில் இயேசுநாதர் அவனை நோக்கி: தோமாவே, நீ என்னைக் கண்டபடியினாலே விசுவாசித்தாய்; காணாமல் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார். இப்பொழுது இயேசுநாதர் தம்முடைய வசனத்தைக் கொண்டு மாத்திரம் நமக்குத் தம்மைக் காண்பிக்கிறார். அவர் தம்முடைய சரீரத்தை நமக்குக் காண்பிக்கிறதில்லை. தம்முடைய வசனத்தை நம்புகிற விசுவாசத்தையே நம்மிடத்தில் தேடுகிறார். இப்படித் தம்மை விசுவாசிக்கிறவர்களுக்கு அவர் தம்முடைய சகல நன்மைகளையும் கொடுக்கிறார். அவர்களைப் பாக்கியவான்களாக்குகிறார். அவர்கள் இம்மையிலும் பாக்கியவான்கள், மறுமையிலும் பாக்கியவான்கள்.

நாம் விசுவாசத்தினால் சமாதானத்தையும் மெய்ப்பாக்கியத்தையும் நித்திய ஜீவனையும் அடைவதே சுவிசேஷ பிரசங்கத்தின் நோக்கம். பரிசுத்த யோவான் அப்போஸ்தலன் இந்த நோக்கமாகவே தம்முடைய சுவிசேஷத்தை எழுதினார். இதுகளோவெனில், இயேசு பராபரனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிப்பதற்கும், விசுவாசித்து அவர் நாமத்தினாலே ஜீவனை அடைந்திருப்பதற்குமாக எழுதப்பட்டது என்று நம்முடைய வாக்கியத்தின் முடிவிலே வாசிக்கிறோம். விசுவாசத்தினால் மாத்திரம் கிறிஸ்துவும் அவருடைய சகல நன்மைகளும் நமக்குச் சொந்தமாகும். அந்த விசுவாசத்தையோ இயேசுதான் நமக்குக் கொடுக்கிறவர். தோமாவுக்கு விசுவாசத்தைக் கொடுத்தவர் நமக்கும் அதைக் கொடுக்கிறார் என்பதற்குச் சந்தேகமில்லை.



விசுவாசத்தைக் கொடுக்கிறவராகிய இயேசுநாதரே, எங்கள் அவிசுவாசத்துக்குத் தேவரீர் பரிதபியும். எங்களை நீர் மெய் விசுவாசிகளாக்கி உம்மைப் பற்றும் விசுவாசத்தினால் எங்களை நிரப்பியருளும், சுவாமி. ஆமேன்.

---

## உயிர்த்தெழுந்த பண்டிகைக்குப் பிந்தின உ-ம் ஞாயிறு.

யோவான் 10, 11—16.

பிரியமானவர்களே,

பழைய ஏற்பாட்டில் மேய்ப்பத்தொழில் மேம்பாடான தொழிலாக எண்ணப்பட்டது. ஆபேல் ஆட்டுமேய்ப்பன். ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு முதலிய கோத்திரப்பிதாக்கள் மேய்ப்பத்தொழில் செய்தார்கள். அவர்களுக்கு ஆட்டுமந்தையே ஆஸ்தியாயிருந்தது. மோசே மீதியான் தேசத்தில் ஆட்டுமேய்ப்பனாயிருந்தார். தாவீது இராசாவாகுமுன் செய்தவேலை ஆடுமேய்த்ததே. உலகத்தை இரட்சிக்கப்போகிற மேசியாவின் வேலையைத் தீர்க்கதரிசிகள் ஒரு மேய்ப்பன் வேலைக்கு ஒப்பிட்டுப் பேசினார்கள். மேய்ப்பனைப்போலே அவர் தமது மந்தையை மேய்ப்பார்; ஆட்டுக்குட்டிகளைத் தமது புயத்திலே சேர்த்து, தமது மடியிலே சுமந்து, கறவலாடுகளை மெதுவாய் நடத்துவார் (எசா. 40, 11) என்று எசாயாதீர்க்கதரிசி முன்னறிவித்தார். அப்படியே எசேக்கியேல் தீர்க்கதரிசியும்: அவைகளை மேய்க்கப்போகிற நம்முடைய பணிவிடைக்காரனாகிய தாவீது என்ற ஒரே மேய்ப்பனை நாம் அவைகளின்மேல் விசாரிப்பாயிருக்க எழுப்புவோம், இவர் அவைகளை மேய்த்து, இவரே அவைகளுக்கு மேய்ப்பராக இருப்பார் (எசேக். 34, 23) என்று முன்னறிவித்தார். தீர்க்கதரிசிகள் முன்னறிவித்த உத்தம மேய்ப்பர் தாம்தான் என்று இயேசுநாதர் தம்முடைய வார்த்தைகளினாலும் செய்கைகளினாலும் ரூபித்தார். நம்முடைய சுவிசேஷவாக்கியத்திலே அவர்: நானே நல்ல மேய்ப்பனானவர் என்று சொல்லுகிறார். அவரிடத்தில் குறைவற்ற நன்மை குடியிருப்பதால், அவர் நல்லவரே. அவர் மேய்ப்பனைச் செய்கிற யாவும் நல்லதே. இப்பொழுது நாம்

இயேசுநாதர் நல்ல மேய்ப்பர் என்கிறதைக் குறித்துச் சிந்திப்போமாக.

1. அவர் ஆடுகளுக்காக மரித்தார்.
2. அவர் ஆடுகளை அறிந்திருக்கிறார்.
3. அவர் ஆடுகளை ஒரே மந்தையாக்குகிறார்.

1.

இயேசுநாதர் ஆடுகளுக்காக மரித்த நல்ல மேய்ப்பராயிருக்கிறார்.

நானே நல்ல மேய்ப்பனானவர்; நல்லமேய்ப்பனானவர் தம்முடைய ஜீவனை ஆடுகளுக்காகக் கொடுக்கிறார் என்று கர்த்தர் சொல்லுகிறார். — மனிதரெல்லாரும் கெட்டுப்போன ஆடுகள், தங்கள் மேய்ப்பராகிய பராபரனுடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படியாமல் பாவம் செய்து, அவரை விட்டு ஓடிப்போனார்கள். யூதரும் கெட்டுப்போன ஆடுகள், புறச்சாதியாரும் கெட்டுப்போன ஆடுகள். நாம் எல்லாரும் பிறப்பினாலும் கெட்டவர்கள், செய்கையினாலும் கெட்டவர்கள். பிசாசு என்கிற ஓநாய் நம்மைப் பிடித்துக்கொண்டுபோயிற்று. நாம் அதின் வாயிலே அகப்பட்டுப்போனவர்கள். நம்முடைய நல்ல மேய்ப்பராகிய இயேசுநாதர் நம்மைத் தேடிக்கொண்டுவந்தார். தாவீது இராசா மேய்ப்பனாயிருந்த காலத்திலே ஒருவிசை ஒரு கரடியும் ஒருவிசை சிங்கமும் மந்தையிலிருந்த ஒரு ஆட்டைப் பிடித்துக்கொண்டுபோகவே, தாவீது அதின் பிறகாலே போய், அதன் தாடியைப் பிடித்து, அதை அடித்துக் கொன்றுபோட்டு, ஆட்டைத் தப்புவித்தார். கர்த்தராகிய பராபரன் தாவீதைச் சிங்கத்தின் கைக்கும் கரடியின் கைக்கும் தப்புவித்தார் (1 சாமு. 17, 34-37). இயேசுநாதராகிய நல்லமேய்ப்பரோ தம்முடைய கெட்ட ஆடுகளைப் பிசாசின் வாயிலிருந்து தப்புவிக்கும்படி தம்முடைய ஜீவனைக் கொடுத்தார். தாவீதைக் காப்பாற்றின பராபரன் தம்முடைய குமாரனாகிய இயேசுநாதரைப் பாடுகளுக்கும் மரணத்துக்கும் ஒப்புவித்தார். நம்முடைய நல்ல மேய்ப்பரின் சிநேகத்தையும் அவருடைய பிதாவின் சிநேகத்தையும் நாம் அளவிடக்கூடுமா. உயிரைக் கொடுப்பதைப்பார்க்கிலும் உயர்ந்த சிநேகம் வேறேயில்லையே.

ஆனால், மேய்ப்பனாயிராதவனும் ஆடுகள் தனக்குச் சொந்தமென்றிராதவனுமான கூலியாள் ஓநாய் வரக்கண்டு ஆடுகளை விட்டு ஓடிப்போகிறான்; அப்போது ஓநாய் அவைகளைப் பிடித்து, ஆடுகளைச் சிதறடிக்கும். கூலியாளோவெனில், கூலியாளானபடியினாலே ஓடிப்போகிறான்; ஆடுகளுக்காக அவன் கவலைப்படான் என்று கர்த்தர் சொல்லுகிறார். — யூதஜனத்தை மேய்த்த மேய்ப்பர்களாகிய வேதபாரகரும் பரிசேயரும் பிரதான ஆசாரியர்களும் மூப்பர்களும் கூலிமேய்ப்பர்களாயிருந்தார்கள். பெருமையும் கீர்த்தியும் பொருளும் அவர்களுக்கு முக்கியமாயிருந்தது. ஆடுகளாகிய ஜனங்களின் இரட்சிப்பைக் குறித்து அவர்கள் கவலையாயிருந்ததில்லை. இப்படிப்பட்ட கூலிமேய்ப்பரைக் குறித்துக் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறதேதெ-



னில்: தங்களைத்தானே மேய்க்கிற இஸ்ரவேலின் மேய்ப்பருக்கு ஐயோ, மந்தையை மேய்ப்பர் மேய்க்கவேண்டாமோ. நீங்கள் நெய்யைச் சாப்பிட்டு, ஆட்டுமயிரை உடுப்பாக்கிக்கொள்ளுகிறீர்கள்; கொழுப்பானதை அடிக்கிறீர்கள்; மந்தையை மேய்க்காதே போகிறீர்கள். நீங்கள் பலட்சயமானவைகளைத் திடப்படுத்தாமலும் நசல்கொண்டவைகளைக் குணமாக்காமலும், நசுக்கப்பட்டவைகளைக் காயங்கட்டாமலும், துரத்துண்டவைகளைத் திரும்பி வரப்பண்ணாமலும், காணாமற்போனவைகளைத் தேடாமலும் போய், வலக்காரமுங் கடூரமுமாய் அவைகளை ஆளுகிறீர்கள். மேய்ப்பன் இல்லாததினாலே அவைகள் சிதறுண்டுபோய், வெளியின் மிருகத்துக்கெல்லாம் இரையாகி, சிதறடிக்கப்பட்டது (எசே. 34, 2—5) என்கிறார். இயேசுநாதரோ கூலிக்காரரல்ல. அவர் தம்முடைய ஆடுகளிடத்தில் யாதொரு ஆதாயத்தையும் தேடவில்லை. அவர் தம்முடைய ஆடுகளுக்காகத் தம்மையே கொடுத்தார். இதனால் அவர் ஆட்டுக்குச் சொந்தக்காரரென்றும் தெளிவாயிற்று. நம்மைப் பேயின் அடிமைத்தனத்திலிருந்தும் பாவம் சாபம் மரணத்திலிருந்தும் மீட்டுக்கொள்ளும்படி உயிரைக் கொடுத்த இந்த நல்ல மேய்ப்பருக்கு நாம் செலுத்தத்தக்க பதில் என்ன இருக்கிறது. நல்லமேய்ப்பராகிய அவருக்கு நம்மை நல்ல ஆடுகளாய் ஒப்புக்கொடுக்கவேண்டும். நாம் அவரை மனதினாலும் வாக்கினாலும் நடக்கையினாலும் ஸ்தோத்திரித்து மகிமைப்படுத்துவது நம்முடைய கடமை.

2.

அவர் தம்முடைய ஆடுகளை அறிந்திருக்கிறபடியால் அவர் நல்ல மேய்ப்பராயிருக்கிறார்.

நானே நல்லமேய்ப்பனானவர், என் பிதா என்னை அறிந்து நான் பிதாவை அறிந்திருக்கிறதுபோல, நான் என்னுடையதுகளை அறிந்தவரும் என்னுடையதுகளால் அறியப்பட்டவருமாயிருக்கிறேன் என்றார். — இயேசுநாதர் தம்முடைய ஆடுகளை அறிந்திருக்கிறார். ஞானஸ்நானத்தில் அவருடைய மந்தையில் சேர்ந்து, அவரை விசுவாசிக்கிற ஆடுகளை அவருக்குத் தெரியும். அவர்களுடைய பெயரை அவர் அறிவார். அவர்களுடைய குணம் அவருக்கு நன்றாய்த் தெரிந்த காரியம். இன்ன ஆட்டுக்கு இன்ன விஷயத்தில் பலவீனமுண்டு என்று அறிவார். மந்தையிலிருக்கிற ஆடுகளின் குறைவை மேய்ப்பன் அறிவான். இன்ன ஆட்டுக்குக் காதிலே பழுது; இன்ன ஆட்டுக்குக் கண்ணிலே பழுது, இன்னது நொண்டி ஆடு என்று மேய்ப்பனுக்குத் திட்டமாய்த் தெரியும். அதற்கு ஏற்றபடி அதை நடத்துவான். பலவீன ஆட்டைப் பலமுள்ளதுபோல் நடத்தமாட்டான். நம்முடைய இரட்சக[illegible]ப்படித்தான். அவர் நம்மைத் தமக்குச்

சொந்தமான ஆடுகளென்று அறிந்திருக்கிறார். அவருக்கு நம்முடைய குறைவுகளும், பழுதுகளும் நன்றாய்த் தெரியும். அதற்கு ஏற்றபடியே நம்மை நடத்துகிறார். கபடற்ற உத்தம இஸ்ரவேலனாகிய நாத்தான்வேலையும், பலையப்பனாகிய பேதுருவையும், குமுறலின் குமாரரென்ற யாக்கோபு யோவானையும், இரகசிய சீஷனாகிய நிக்கொதேமுவையும், கண்ணீர் சொரிந்த பாவியையும், சிலுவையில் செபித்த கள்ளனையும் அப்படியே மற்ற மற்றவர்களையும் திட்டமாயறிந்து, அவரவருக்கு ஏற்றபடி நடத்தினார். அவர் தம்முடைய ஆடுகளைப் பட்சமாகவும் பதனமாகவும் நடத்துகிறார்.

அவர் தம்முடைய ஆடுகளை அறிந்துகொள்ளுகிற விதத்தைக் கவனிக்கக்கடவோம். நாம் வழக்கமாய் ஒரு காரியத்தைக் கேள்வியினாலாவது, பார்வையினாலாவது அறிந்துகொள்ளுவோம். அவரோ: என் பிதா என்னை அறிவதுபோல நான் என்னுடையதுகளை அறிகிறேன் என்கிறார். இது என்ன ஆச்சரியமான வார்த்தை. அவருக்கும் பிதாவுக்கும் இருக்கிற சம்பந்தம் ஒப்பில்லாத ஐக்கிய சம்பந்தம். பிதாவும் அவரும் ஒன்றாயிருக்கிறவர்கள். இயேசுநாதருக்கும் நமக்கும் பெரிய வித்தியாசமிருந்தும், அவர் நம்மைத் தம்மோடு ஐக்கியப்படுத்தி, நம்மை அறிந்துகொள்ளுகிறார். அவர் தமக்கும் தம்முடைய விசுவாசிகளுக்கும் உள்ள ஐக்கியத்தைக் குறித்துப் பிரதான ஆசாரிய ஜெபத்திலே என்ன சொல்லுகிறார்: அவர்கள் ஒன்றாகத் தேறினவர்களாயிருப்பதற்கும், நீர் என்னை அனுப்பினதையும் நீர் என்னைச் சிநேகித்ததுபோல் அவர்களைச் சிநேகித்ததையும் லோகம் அறிவதற்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் ஆமே என்கிறார் (யோவான் 17, 23). இப்படிப்பட்ட ஐக்கியத்தினால் உண்டாகிற அவருடைய அறிவு நமக்கு மகா ஆறுதலானது. இந்த ஐக்கியத்துக்குட்படாதவர்களை அவர் கடைசியிலே: நான் உங்களை அறிந்ததில்லை என்று சொல்லித் தள்ளிப்போடுவார். சிநேக ஐக்கியத்தினால் உண்டாகிற அறிவின்படியே அவர் தம்முடைய மந்தையின் ஒவ்வொரு ஆட்டையும் நடத்துவதினால், நாம் சங்கீதக்காரனைப்போல்: கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார், நான் தாழ்ச்சி அடையேன். அவர் என்னைப் புல்லுள்ள ஸ்தலங்களில் மேய்த்து, என்னை அமர்ந்த தண்ணீர்களண்டைக்குக் கொண்டு போய் விடுகிறார். அவர் என் ஆத்துமத்தைக் குளிரப்பண்ணி, என்னைத் தம்முடைய நாமத்தின் நிமித்தமாக நீதியின் பாதைகளில் நடத்துகிறார் (சங். 23, 1-3) என்று பாடுகிறோம். அவருடைய அமிர்தமான வசனமும் நமக்குப் பசும்புல்லும் குளிர்ந்த தண்ணீருமாயிருக்கிறது. அவருடைய திருச்சரீரமும் இரத்தமும் நம்முடைய பசிதாகத்தைத் தீர்க்கிறது.



அவருடைய ஆடுகளும் அவரை அறிந்திருக்கிறது. விசுவாசிகள் இயேசுவைத் தங்களுடைய இரட்சகரென்று அறிந்திருக்கிறார்கள்; அவருடைய சிநேகத்தை அவர்கள் அறிந்திருக்கிறார்கள். அவர் நல்லவரென்று அவர்களுக்குத் தெரியும். ஆகையால்: அவர் என்னைப் பொன்னினாலும் அல்ல, வெள்ளியினாலும் அல்ல, விலைமதிக்கக்கூடாத தமது பரிசுத்த இரத்தத்தினாலும் குற்றமில்லாமல் பட்ட பாடுகள் மரணத்தினாலும், எல்லாப் பாவங்களிலும் மரணத்திலும் பிசாசினுடைய வல்லமையிலுமிருந்து மீட்டிரட்சித்துத் தமக்குச் சம்பாதித்துக்கொண்டார் என்று நன்றியறிதலோடு அறிக்கையிடுகிறார்கள். அவருடைய வசனத்தைக் கேட்டு, அவருடைய பந்திக்கு அடிக்கடி சேர்ந்து, இப்படியே அவரை அறிகிற அறிவில் வளருகிறார்கள். நம்முடைய இரட்சகரை நாம் அறிகிற அறிவு நமக்கு அவசியம். அது நமக்கு மிகவும் பிரயோசனமானது. அவர் இந்த அறிவைக் குறித்துச் சொல்லுகிறதென்னவெனில்: அவர்கள் ஒன்றான மெய்த்தெய்வமாகிய உம்மையும் நீர் அனுப்பின இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்திய சீவனாயிருக்கிறது (யோவான் 17, 3) என்பதே. அவருடைய ஆடுகள் இங்கே அவரை அறிகிறது குறைவு. மறுமையிலோ அறிந்துகொள்ளப்பட்டபடி அறிந்துகொள்ளும். நாம் மரணத்தின் வழியாய் மோட்சத்தில் பிரவேசிக்கும்வரையில் நல்லமேய்ப்பரோடு ஐக்கியமாயிருந்து, அவரை அறிகிற அறிவிலே வளரப் பிரயாசப்படுவோமாக.

3.

அவர் ஆடுகளை ஒரே மந்தையாக்குகிறதினால் நல்ல மேய்ப்பராயிருக்கிறார்.

இந்தத் தொழுத்ததல்லாத வேறே ஆடுகளும் எனக்குண்டு; அதுகளையும் நான் கொண்டுவரவேண்டும், அதுகள் என் சத்தத்தைக் கேட்கும்; ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாம் என்கிறார். — இந்த வார்த்தைகளை நம்முடைய இரட்சகர் சொன்ன காலத்திலே அவர் மந்தை மகா சின்னதாயிருந்தது. யூத ஜனத்தின் நடுவே அவரை விசுவாசித்தவர்கள் வெகு சிலர். அப்போது அவருடைய மந்தையிலிருந்தவர்கள் பன்னிரண்டு அப்போஸ்தலமார், எழுபது சீஷர்கள், சில பக்தியுள்ள ஸ்திரீகள், பலஸ்தீனா தேசத்தில் அங்குமிங்கும் குடியிருந்த சிற்சில விசுவாசிகள். அப்பொழுது அவருடைய மந்தை சின்னதாயிருந்தாலும், அது பெரிதாகும் என்கிறதை இயேசுநாதர் அறிந்து அதைக் குறித்து இங்கே சொல்லுகிறார்.

அவர் சொல்லுகிற தொழும் யூதர் நடுவே அவர் சேர்த்த பராபரனுடைய சபைதான். அந்தத் தொழுத்தது அல்லாத

ஆடுகள் அஞ்ஞானிகள். தமிழ்நாட்டாராகிய நாமும் முந்தி அவருடைய தொழுத்ததல்லாத ஆடுகள்தான். நாம் எல்லாரும் பராபரனுடைய இராச்சியத்துக்குப் புறம்பானவர்கள். அப்படிக்கு இருந்தும், நம்மையும் கர்த்தர் நினைத்தார். நம்மையும் அவருடைய மந்தையில் சேர்க்கவேண்டும் என்கிற ஆசை இரண்டாயிர வருஷங்களுக்கு முன்னமேயே அவருக்கு இருந்தது.

இந்த ஆசையைத் தீர்க்க அவர் தீர்மானமாய்ப் பேசுகிறார். நான் கொண்டுவரவேண்டுமென்கிறார். பாவிகளுடைய இரட்சிப்பில் அவருக்கு எவ்வளவு கரிசனம். கரிசனமுள்ள அந்தத் தீர்மானத்தை அவர் இப்பொழுது நிறைவேற்றிவருகிறார். அஞ்ஞானிகள் சபையிலே சேருகிறது மனுஷ கிரியை அல்ல. அது தெய்வ கிரியை. அவர்களைக் கர்த்தருடைய இராச்சியத்துக்குள் கொண்டுவருகிறவர் கிறிஸ்து. ஏனெனில், நான் கொண்டுவரவேண்டும் என்கிறார். மிசியோன் போதகர்களைக் கொண்டும் ஊழியரைக்கொண்டும் வேலை நடந்தாலும், அது கர்த்தருடைய வேலை, நம்முடைய நல்லமேய்ப்பரின் வேலை; ஆகையால் திருச்சபையார் என்ன பாடுகிறார்கள்: நாம் அல்ல, அவரே நம்மைத் தமக்குச் சனமும் தமது மேய்ச்சலின் ஆடுகளுமாக்கினார் என்று பாடுகிறார்கள் (சங். 100, 3).

அவைகள் என் சத்தத்தைக் கேட்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார். இது ஒரு சிறந்த வாக்குத்தத்தம். புறச்சாதியாரும் அவருடைய சத்தத்துக்குச் செவிகொடுத்து, அவருடைய மந்தையில் சேருவார்கள் என்று இரட்சகர் தெரிவிக்கிறார். சுவிசேஷ பிரசங்கத்தின் சத்தம் கிறிஸ்துவினுடைய சத்தமாயிருக்கிறது. இந்தச் சத்தத்தைக் கேட்டு அதற்குக் கீழ்ப்படியப் பண்ணுகிறவரும் அவரே. பிலிப்பி என்ற பட்டணத்தில் பவுல் அப்போஸ்தலனின் பிரசங்கத்தை லீதியாள் என்று பேர்கொண்ட தெய்வபத்தியுள்ள ஒரு ஸ்திரீ கேட்டுக்கொண்டிருந்தாள். அவள் இருதயத்தைக் கர்த்தர் பவுலினால் சொல்லப்பட்டவைகளைக் கவனிப்பதற்குத் திறந்தார் (அப்போ. 16, 14) என்று எழுதியிருக்கிறது. அவைகள் என் சத்தத்தைக் கேட்குமென்று இயேசுநாதர் சொன்ன வார்த்தையின் பலத்தினாலேதான் நாமும் கிறிஸ்தவர்களானோம், அவருடைய மந்தையில் சேர்ந்திருக்கிறோம், அவருடைய சபையின் சிலாக்கியங்களை அனுபவிக்கிறோம், மோட்சமும் அடைவோம் என்கிற நம்பிக்கை நமக்கு இருக்கிறது.

அவைகள் என் சத்தத்தைக் கேட்கும் என்று அவர் சொன்ன வார்த்தை நம்முடைய கடமையையும் நமக்கு நினைப்பூட்டுகிறது. நாம் ஆரம்பத்தில் அவருடைய சத்தத்தைக் கேட்டு, அவருடைய சபையில் சேர்ந்தது போதாது. முடிவுபரியந்தம் அவருடைய சத்தத்தை நாம் கேட்கவேண்டும். நாம்



நல்ல ஆடுகளாயிருந்தால், நம்முடைய நல்ல மேய்ப்பரின் சத்தத்தை எப்பொழுதும் கேட்போம். அவருடைய கண்டிப்பின் சத்தத்தைக் கேட்டு எச்சரிப்படைவோம். அவருடைய அன்பான சத்தத்தைக் கேட்டு ஆறுதல் அடைவோம். அவர் விலக்கச் சொல்லுவதை விலக்குவோம். அவர் செய்யச் சொல்வதைச் செய்வோம். இன்றைக்கும் இங்கே நாம் கேட்பது நம்முடைய நல்ல மேய்ப்பரின் சத்தம்தான். அவருடைய சத்தம் எவ்வளவு இனிமையானது. நாம் அதைக் கவனித்துக் கேட்போமாக. இந்தச் சத்தத்தை இன்னம் கேட்காத ஆடுகளுக்கும் இதைத் தெரிவிப்போமாக. எங்கள் நல்ல மேய்ப்பர் எங்களைச் சிநேகிக்கிறார், எங்களுக்காகத் தம்முடைய உயிரைக் கொடுத்தார், தம்முடைய மந்தையிலே எங்களைச் சேர்த்தார். அவரால் நாங்கள் இரட்சிப்படைந்தோம், உங்களையும் அவர் சிநேகிக்கிறார், நீங்களும் அவரண்டை வாருங்கள் என்று நாம் நம்மைச் சுற்றிலும் இருக்கிற அஞ்ஞானிகளைக் கூப்பிடுவது நம்முடைய கடமை.

நம்முடைய நல்லமேய்ப்பர் ஒரே மந்தையின் ஒரே மேய்ப்பராயிருக்கிறார். சகல தேசத்திலும், சகல ஜாதியிலும், சகல பாஷையிலும், இருக்கிற விசுவாசிகள் எல்லாரும் அவருடைய மந்தையின் ஆடுகள். இந்த மந்தைக்குப் பொதுவான பரிசுத்த சபை என்றும், பரிசுத்தவான்களின் ஐக்கியமென்றும் பெயர். இந்த ஐக்கியத்தை நாம் கண்ணாரப் பார்க்கிறதில்லை. விசுவாசிகள் ஆரென்றும், அவிசுவாசிகள் ஆரென்றும் நமக்குத் தெரியாது. சபைகளிலுள்ள வித்தியாசங்களும் பிரிவினைகளும் மாத்திரம் நமக்குத் தெரிகிறது. ஆகையினாலே பொதுவான பரிசுத்த சபை உண்டென்று காண்கிறேன் என்று சொல்லாமல், விசுவாசிக்கிறேன் என்று சொல்லுகிறோம். ஒரே மேய்ப்பனாகிய கிறிஸ்துவை விசுவாசிக்கும் மெய்விசுவாசிகளின் கூட்டமே இரட்சகர் சொல்லுகிற ஒரே மந்தை. இந்த மந்தையில் இருக்கிறவர்கள் மாத்திரம் மோட்சம் சேருவார்கள், நித்திய ஜீவனை அடைவார்கள். மெய்விசுவாசமில்லாதவர்கள் இந்த மந்தையைச் சேர்ந்தவர்கள் அல்ல. ஆகையால் நாம் கர்த்தருடைய வசனத்துக்குக் கீழ்ப்படிகிற மெய்விசுவாசிகளாய் இருக்கும்படி பரிசுத்த ஆவியின் ஒத்தாசையைத் தேடுவோமாக.

கர்த்தர் இங்கே சொல்லுகிற ஒரே மந்தை எத்தனை பெரிது என்கிறதை மறுமையில் பார்ப்போம். இதோ, சகல ஜாதியிலும் கோத்திரங்களிலும், சனசதளங்களிலும், பாஷைகளிலுமுள்ள ஒருவனும் எண்ணக்கூடாத திரள்கூட்டம் வெள்ளையங்கிகள் தரிப்பிக்கப்பட்டவர்களும் தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்தவர்களுமாய்; ஆசனத்துக்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டிக்கு முன்பாகவும் நிற்கிறதைக் கண்டேன் என்று

யோவான் அப்போஸ்தலன் சொல்லுகிறார் (அபி. 6, 9). அந்தக் காட்சி எவ்வளவு மகிமையான காட்சியாயிருக்கும்.

நல்லமேய்ப்பராகிய இயேசு ஐயரே, எங்களையும் உம்முடைய மந்தையின் ஆடுகள் ஆக்கினதற்காக உமக்கு ஸ்தோத்திரம். தேவரீர் சேர்க்கிற ஒரே மந்தையின் ஆடுகளாக நாங்களும் இருக்க எங்களை மெய்விசுவாசத்தில் காப்பாற்றியருளும், சுவாமி. ஆமேன்.

---

## உயிர்த்தெழுந்த பண்டிகைக்குப் பிந்தின ௩-ம் ஞாயிறு.

யோவான் 16, 16—22.

பிரியமானவர்களே,

இயேசுநாதர் பெரிய வெள்ளிக்கிழமை சிலுவையில் அறையுண்டு மரித்தார். அதற்கு முந்தின பெரிய வியாழக்கிழமை இரவில் பஸ்காப்போசனம் சாப்பிட்டுப் பரிசுத்த இராப்போசனத்தை ஸ்தாபித்தபின் தம்முடைய சீஷப்பிள்ளைகளோடு பேசிக்கொண்டிருந்தார். அவருடைய சீஷப்பிள்ளைகளுக்கு அவர் சொன்ன வார்த்தைகள் மகா அருமையானவைகள். அதிலே நமக்கு எச்சரிப்பும் புத்திமதியும் ஆறுதலுமான வசனங்கள் அடங்கியிருக்கிறது. நாம் இப்பொழுது வாசிக்கக் கேட்ட சுவிசேஷ வாக்கியம் அந்தச் சம்பாஷணைக்குரியது. இதிலே தங்களை விட்டுப் பிரிந்துபோகிற தங்கள் போதகருக்காகத் துக்கப்படுகிற சீஷர்களுக்கு அவர்: உங்கள் துக்கம் சந்தோஷமாகுமென்று சொல்லுகிறார். இதுவே இந்த வாக்கியத்தில் அடங்கிய முக்கிய கருத்து. அதைக் குறித்தே இப்பொழுது நாம் சிந்திப்போம்.

### உங்கள் துக்கம் சந்தோஷமாகும்.

1. இந்த வார்த்தை அப்போஸ்தலமாரிடத்தில் எப்படி நிறைவேறிற்று.
2. நம்மிடத்தில் அது எப்படி நிறைவேறும் என்று பார்ப்போம்.

### 1.

உங்கள் துக்கம் சந்தோஷமாகும் என்கிற இயேசுவின் வார்த்தை அவருடைய அப்போஸ்தலமாரிடத்தில் எப்படி நிறைவேறிற்று.

கொஞ்சப்போதிலே என்னைக் காணாதிருப்பீர்கள், மறுபடியுங் கொஞ்சப்போதிலே என்னைக் காண்பீர்கள், ஏனெனில் நான் பிதாவண்டைக்குப் போகிறேன் என்றார். பெரிய வியாழக்கிழமை இராத்திரி இயேசுநாதர் தம்முடைய சீஷர்களோடு கெத்செமனே தோட்டத்துக்குப் போனார். அங்கே அவர் ஆத்துமப் பாடுபட்டார். அந்நேரத்தில் சீஷர்கள் தூங்கினார்கள். அவர் ஜெபம்பண்ணி எழுந்திருந்தபின் யூதாஇஸ்காரியோத்து இயேசுவின் சத்துருக்களோடு அங்கே வந்தான். அவன் அவரை முத்தியினால் காட்டிக்கொடுக்க, சத்துருக்கள் அவரைப் பிடித்துக் கட்டிக்கொண்டு போனார்கள். அத்தோடு அப்போஸ்தலமார் இயேசுவைவிட்டுப் பிரிந்தார்கள். பெரிய வெள்ளிக்கிழமை அவர் சிலுவை மரத்தில் தொங்கும்பொழுது அவர்களில் யோவான் அப்போஸ்தலன் மாத்திரம் சிலுவை அண்டை நின்று இயேசுவைப் பார்த்தார். அன்று சாயங்காலம் இரட்சகர் மரித்து அடக்கம் பண்ணப்பட்டார். கொஞ்சப்போதிலே என்னைக் காணாதிருப்பீர்கள் என்று இரட்சகர் சொன்ன வார்த்தை அப்பொழுது நிறைவேறிற்று. வெள்ளிக்கிழமை இரவெல்லாம் அவர்கள் அவரைக் காணவில்லை. சனிக்கிழமை பகலெல்லாம் அவரைக் காணவில்லை. சனிக்கிழமை இரவிலும் அவரைக் காணவில்லை. ஏனெனில் கிறிஸ்து மரித்தார், அவருடைய சரீரம் கல்லறைக்குள் மறைந்துபோயிற்று.



மேலும், மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் அழுது புலம்புவீர்கள்; லோகமோ சந்தோஷப்படும், நீங்களோ துக்கிப்பீர்கள்; ஆனால் உங்கள் துக்கம் சந்தோஷமாகும் என்றார். — இயேசுநாதரைக் காணாமையால், சீஷருக்கு மகா பெரிய துக்கம் வந்தது. ஐயையோ, எங்கள் அருமைப் போதகர் மரித்தாரே, அவருடைய அமிர்த வார்த்தைகளை நாங்கள் இனி எப்பொழுது கேட்கப்போகிறோம், பசித்தவர்களுக்குப் போசனமும் குருடருக்குக் கண்ணும் செவிடருக்குக் காதும் நோயாளிகளுக்குச் சுகமும் செத்தோருக்கு உயிரும் கொடுத்த எங்கள் ஆண்டவரை அநியாயமாய்க் கொன்றார்களே, அவரைப்போலொத்த மகா புருஷனை எங்கேயாவது பார்க்க முடியுமா என்று அழுது புலம்பினார்கள். பேதுரு அப்போஸ்தலன் அழுதுகொண்டேயிருந்தார். மகதலாவூர் மரியாள் அழுதுகொண்டேயிருந்தாள். அவரைச் சிநேகித்த மற்றவர்களும் அழுது புலம்பினார்கள். அவர்களுக்கு இருந்த துக்கம் இவ்வளவென்று நாம் சொல்லமுடியாது. கிறிஸ்துநாதர் தம்முடைய உயிர்த்தெழுதலைக் குறித்துச் சொல்லியிருந்த வார்த்தையை அவர்கள் நம்பாமல்போனதே அவர்கள் துக்கத்துக்கும் புலம்பலுக்கும் முக்கிய காரணம். அப்பொழுது கிறிஸ்துவின் சத்துருக்கள் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்தார்கள். பரிசேயர் தங்கள் பாவங்களைச் சுட்டிக்காட்டித் தங்களுக்கு ஐயோ கூறினவரைத் தாங்கள் நாசம் பண்ணிவிட்டதாக நினைத்தார்கள். அவருடைய கண்டிப்பான புத்திமதிகள் இனிமேல் தங்கள் காதுகளில் விழப்போகிறதில்லை

என்று களிகூர்ந்தார்கள். இயேசு நாசரேத்தான் என்கிற பெயர் இனி தங்கள் தேசத்தில் வழங்கப்போகிறதில்லை என்று பூரித்தார்கள். என்றாலும், சீஷரின் அழுகையும் சத்துருக்களின் சந்தோஷமும் வெகுநேரம் நிற்கவில்லை. கொஞ்சப்போதிலே மாறிவிட்டது. ஏனென்றால், சீஷர்கள் கொஞ்சப்போதிலே கிறிஸ்துவைக் கண்டார்கள். ஞாயிற்றுக்கிழமை அதிகாலமே அவர் உயிர்த்தெழுந்தார். கல்லறை அவரை மறைத்துவைக்கக் கூடாமல் போயிற்று. உயிர்த்தெழுந்தவரைச் சீஷர்கள் கண்டார்கள். இயேசு வந்து அவர்கள் நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்று சொல்லித் தம்முடைய கைகளையும் விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார். அப்போது சீஷர் கர்த்தரைக் கண்டு, சந்தோஷப்பட்டார்கள் என்று எழுதியிருக்கிறது (யோவா. 20, 20). நீங்களும் இப்போது துக்கம் அடைந்திருக்கிறீர்கள்; ஆனால் மறுபடியும் உங்களைக் காண்பேன், அப்போது உங்கள் இருதயம் சந்தோஷப்படும்; உங்கள் சந்தோஷத்தை ஒருவனும் உங்களிடத்திலிருந்து வாங்கான் என்று இயேசுநாதர் சொன்ன வார்த்தை அப்பொழுது சரியாய் நிறைவேறிற்று. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலால் உண்டான சந்தோஷம் சீஷருடைய இருதயத்தை நிரப்பிற்று. கிறிஸ்து பரத்துக்கேறிப் பிதாவண்டைக்குப் போய், பரிசுத்த ஆவியைத் தம்முடைய சீஷர்பேரில் ஊற்றினதால் அவர்கள் சந்தோஷம் பூரணமும் நிலைவரமும் ஆயிற்று. அவர்களை இந்த உலகத்தார் எவ்வளவாய்ப் பகைத்தும், எவ்வளவாய்த் தூஷித்தும், எவ்வளவாய்ப் பாடுபடுத்தியும், அவர்கள் இருதயத்திலிருந்த சந்தோஷத்தை வாங்கக் கூடாமல் போயிற்று. உயிர்த்தெழுந்த இரட்சகர் பரத்துக்கு ஏறியும், அவர்கள் இருதயத்திலே வாசம்பண்ணி, அவர்களை ஆற்றித்தேற்றிப் பலப்படுத்தினதினால் அவர்கள் தங்கள் உயிரையும் சந்தோஷமாக ஒப்புக்கொடுத்தார்கள். இப்படியே அவர்களுடைய துக்கம் இயேசுவினால் ஒழியாச் சந்தோஷமாயிற்று.

2.

உங்கள் துக்கம் சந்தோஷமாகுமென்று இரட்சகர் சொன்ன வார்த்தை கிறிஸ்தவர்களாகிய நம்மிடத்தில் எப்படி நிறைவேறுமென்று பார்ப்போம்.

நாம் பாவத்தைச் செய்யும்பொழுது அதைச் சந்தோஷமாகச் செய்கிறோம். ஆகிலும், அந்தச் சந்தோஷம் நெடுநேரம் நிற்கிறதில்லை. மின்னல்போல் ஒழிந்துபோம். பரதீசில் விலக்கின கனியைத் தின்ற ஏவாளின் சந்தோஷம் எவ்வளவு நேரம் இருந்தது. எரிகோவில் சாபத்தீடானதைத் திருடின ஆகானின் சந்தோஷம் எவ்வளவு நேரமிருந்தது. அது வெகு சீக்கிரத்தில் துக்கமாய் மாறிப்போகவில்லையா. நாமும் சந்தோஷமாகப்



பாவம் செய்தாலும், கர்த்தர் நம்மைத் தம்முடைய வசனத்தினால் கடிந்துகொள்ளும்பொழுது நாம் துக்கம் அடைகிறோம். ஏனென்றால் கர்த்தர் நம்முடைய இருதயத்தை நொறுக்குகிறார். அதில் மனஸ்தாபத்தை உண்டாக்குகிறார். நரகவேதனைக்கொத்த வேதனையை உணரப்பண்ணுகிறார். கண்ணீர்விட்டுப் புலம்பச் செய்கிறார். இப்படி தாவீது இராசாவுக்கு நடந்தது. அவர் உரியா என்ற தன் சேவகனுடைய பெண்சாதியாகிய பத்சேபாளோடு விபசாரப் பாவத்தைச் செய்ததினால் அவருக்கு மகா பெரிய துக்கம் உண்டாகி, சொல்லிமுடியாத அழுகை அழுதார். என் பெருமூச்சுகளால் இளைத்தேன், இராமுழுதும் என் மெத்தையை மிகவும் ஈரிக்கப்பண்ணி, என் கண்ணீரால் என் கட்டிலை நனைக்கிறேன் (சங். 6, 7) என்று அவர் புலம்பினார். கர்த்தருடைய திருமுகம் அவருக்கு மறைவாயிருந்தது. ஆகிலும், இந்தத் துக்கமும் அழுகையும் கொஞ்சப்போதிலே சந்தோஷமாக மாறிற்று. கர்த்தருடைய உத்தரவுபடியே நாத்தான் தீர்க்கதரிசி: நீர் சாகாதபடிக்குக் கர்த்தர் உம்முடைய பாவத்தை நீக்கப் பண்ணினார் (௨ சாமு. 12, 13) என்று சொன்னபொழுது அவருடைய துக்கம் ஆறிற்று, இரட்சிப்பின் சந்தோஷம் அவருக்குக் கிடைத்தது. இந்தப்படியே பாவத்துக்காக மனஸ்தாபப்படும் ஒவ்வொரு பாவியின் துக்கமும் சந்தோஷமாகும். மெய் விசுவாசம் கிறிஸ்துவைப் பார்க்கிறது. கிறிஸ்து துக்கமடைகிற பாவிக்கு அவன் பாவத்தை மன்னிக்கிறார். அவன் கண்ணீரைச் சந்தோஷமாக மாறப்பண்ணுகிறார். ஸ்திரீ பெறுகிறபோது, துக்கம் அடைந்திருக்கிறாள்; ஏனெனில் அவள் வேளை வந்தது. ஆனால் பிள்ளையைப் பெற்றபின்பு, ஒரு மனுஷன் உலகத்தில் பிறந்தானென்கிற சந்தோஷத்தினாலே அப்புறம் உபத்திரவத்தை நினையாள் என்று கர்த்தர் சொல்லுகிறார். மனஸ்தாபம் என்ற வேதனையோடே விசுவாசம் என்ற பிள்ளை பிறக்கிறது. விசுவாசத்தினால் சந்தோஷம் உண்டாகிறது. அன்னாள் என்ற ஸ்திரீ சாமுவேலென்ற மகனைப் பெற்றபொழுது தான் பிள்ளை பெற்ற வேதனையைக் கொஞ்சமேனும் நினைக்காமல் பிள்ளை பிறந்ததற்காக மகா சந்தோஷமாய் சந்தோஷப்பட்டு, ஒரு நேர்த்தியான சங்கீதத்தைப் பாடினாள் அல்லவா. நாமும் நம்முடைய பாவங்களுக்காகத் துக்கப்படும்படி பரிசுத்த ஆவியானவர் ஏவுகிறார். தெய்வ எத்தனமான இந்தத் துக்கம் நமக்கு உண்டானால், தெய்வ கிருபையினாலே நாம் இரட்சிப்பின் சந்தோஷத்தை அடைவோம். இந்தச் சந்தோஷமோ மெய் விசுவாசத்தினால் நமக்குச் சொந்தமாகும். தங்கள் பாவத்தை அறியாமலும் அதற்காக மனஸ்தாபப்படாமலும் இருக்கிறவர்களுக்குப் பாவமன்னிப்பினால் உண்டாகிற சந்தோஷம் எவ்வளவென்று தெரியாது. உங்

கள் துக்கம் சந்தோஷம் ஆகுமென்று கர்த்தர் சொன்ன அருமையான வாக்குத்தத்தம் அவர்களிடத்தில் நிறைவேறுது. பசித்தவனுக்குத்தான் சாப்பாட்டின் ருசி தெரியும். பசிக்காதவனுக்கு மகா ருசிகரமான சாப்பாடும் அருமையாய்த் தோன்றாது. ஆகையால்:

ஆம், என் கல்நெஞ்சை நீர் நன்றாய் உருக்கி முழுதும்
புலம்பலும் கண்ணீருமாய் கரையப்பண்ணவும்

என்று மெய்க்கிறிஸ்தவன் வேண்டிக்கொள்ளுகிறான்.

உங்கள் துக்கம் சந்தோஷமாகும் என்று கர்த்தர் சொன்ன வார்த்தை உபத்திரவப்படுகிற பராபரனுடைய பிள்ளைகளிடத்தில் மெய்யாய் நிறைவேறுகிறது. பராபரனுடைய பிள்ளைகளுக்கு இந்த உலகத்தில் உபத்திரவம் உண்டு. அவர்கள் கர்த்தரை விசுவாசித்து அவரை எல்லா மனுஷர்களுக்கு முன்னும் அறிக்கையிடுவதால், உலகத்தார் அவர்களைப் பகைக்கிறார்கள். கிறிஸ்துவைப் பகைத்த உலகத்தார் கிறிஸ்தவர்களை விட்டுவிடுவார்களா. உபத்திரவ நேரத்திலே: கொஞ்சப்போதிலே என்னைக் காணாதிருப்பீர்கள் என்பதுபோல் கர்த்தருடைய முகம் நமக்கு மறைவாய்த் தோன்றுகிறது. சத்துருக்கள் பலத்துப்போவதுபோலவும் விசுவாசிகள் தோற்றுப்போவதுபோலவும் காணப்படும். கிறிஸ்து பாடுபடுகையில் அவருடைய சத்துருக்கள் சந்தோஷப்பட்டதுபோல கிறிஸ்தவர்கள் பாடுபடும்பொழுதும் உலகத்தார் சந்தோஷப்படுகிறார்கள். ஆகிலும், உலகத்தாருடைய சந்தோஷம் துக்கமாகவும், பராபரனுடைய பிள்ளைகளின் துக்கம் சந்தோஷமாகவும் மாறிப்போவதுண்டு. கர்த்தருடைய திருச்சபையை ரோம இராயர்கள் வெகுவாய்த் துன்பப்படுத்தினார்கள். ஏறக்குறைய முந்நூறு வருஷக்காலம் கிறிஸ்தவர்களுக்கு வெகுபாடு இருந்தது. கர்த்தர் மகா கொன்ஸ்தந்தீன் என்ற இராயன் காலத்திலே திருச்சபையின் துக்கத்தைச் சந்தோஷமாக மாறப்பண்ணினார். லுத்தர் சாஸ்திரியார் பொய்ப்போதகத்தைத் தள்ளி மெய்ப்போதகத்தை அறிக்கையிட்டபொழுதும் அப்படித்தான். சுவிசேஷ சபையின் விரோதிகள் அதைப் பகைத்துத் துன்பப்படுத்தினார்கள். சில வருஷங்களுக்குப் பின் கர்த்தர் தம்முடைய சபைக்குச் சமாதானத்தையும் சந்தோஷத்தையும் கட்டளையிட்டார். கிறிஸ்துவினுடைய நாமத்தின் நிமித்தம் மாத்திரமல்ல, நம்முடைய விசுவாசம் பலப்படும்படிக்கும் கர்த்தர் நமக்குத் துன்பம் வர இடங்கொடுக்கிறார். விசுவாசிகளுக்குப் பசி, தாகம், வியாதி முதலிய பலவிதமான இக்கட்டுகள் வருகிறது. இவைகள் இருக்கும்பொழுது நாம் மிகுந்த துக்கத்துக்குள்ளாகிறோம். அப்படிப்பட்ட துன்பநேரத்தில்: உங்கள் துக்கம் சந்தோஷம் ஆகுமென்று கர்த்தர் சொன்னதை நாம் நினைக்க



வேண்டும். மழைகாலத்துக்குப்பின் கோடைகாலம் வரும். புயல் அடித்தபின் அமைதல் உண்டாகும். துன்பத்துக்குப்பின் இன்பம் வரும். துன்பப்பட்ட தாவீது இஸ்ரவேலின் இராசாவானதிலே அவருடைய துக்கம் சந்தோஷமாக மாறிற்றல்லவா. சகோதரரே, நமக்குத் துன்பம் துக்கம் உண்டாகும்பொழுது, நாம் நம்பிக்கை அற்றுப்போவது நியாயமல்ல. அக்கினிச்சூளையில் போடப்பட்ட மூன்றுபேரோடே கர்த்தர் இருந்து, அவர்களைச் சேதமில்லாமல் வெளிப்படப்பண்ணினாரே. கடல் கொந்தளிப்பில் அகப்பட்டுக் கதறின சீஷர்களோடு கர்த்தர் இருந்து, அவர்கள் சேதமடையாமல் இருக்கப்பண்ணினாரே. நம்மையும் அவர் கைவிடமாட்டார், நமக்கும் ஒத்தாசை செய்வார். இதுவரைக்கும் எத்தனையோ துன்பங்கள் வந்தும், அத்தனை துன்பங்களும் நமக்கு நன்மையாகும்படி அவர் செய்ததில்லையா. இனியும் அவருடைய கிருபையினாலும் பலத்தினாலும் நம்முடைய துக்கம் சந்தோஷமாகும் என்பதற்குச் சந்தேகமில்லை. ஒருவேளை இம்மையில் நடவாவிட்டாலும், மறுமையில் அவசியம் நடக்கும்.

உங்கள் துக்கம் சந்தோஷமாகுமென்று கர்த்தர் சொன்ன வார்த்தை இன்னொருவிதமாகவும் நம்மிடத்தில் நிறைவேறும். நம்முடைய துக்கங்களில் விசேஷித்தது மரணத் துக்கம். நாம் நமக்கு அருமையானவர்களை விட்டுச் சாகும்பொழுது மகா விசனமும் சஞ்சலமும் நமக்கு வரக்கூடியதே. மரணமாகிய ஆற்றைக் கடக்கிறது நமக்குப் பெரிய சங்கடமே. விசுவாசிகளுக்கும் மரணம் வரும். அவர்கள் நாவு வரண்டுபோம், அவர்களுடைய கண் மயங்கும், அவர்கள் புத்தி தடுமாறும், கிறிஸ்துவைக் காணாததுபோல் அவர்கள் மனங்கலங்கும். என்றாலும், இந்தக் கலக்கமும் பயமும் கொஞ்சப்போதுதான். வெகுசீக்கிரத்தில் அவர்கள் பயம் மாறிப்போம். அவர்கள் கலக்கம் தெளிந்துபோம். அவர்கள் விசுவாசிகளாயிருப்பதினால் அவர்கள் நம்பியிருந்த கர்த்தர் அவர்கள் துக்கத்தைச் சந்தோஷமாக மாற்றும்படி அவர்கள் கிட்டவருவார். அப்பொழுது அவர்கள் சங்கீதக்காரனைப்போல்: நான் மரண நிழலின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும், பொல்லாப்புக்குப் பயப்படேன்; ஏனெனில், தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர், உம்முடைய கோலும் உம்முடைய தடியும் என்னைத் தேற்றுகிறது (சங். 23, 4) என்று பாடுகிறார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்துக்குள் போகும்படிக்கு ஆழமான யோர்தான் நதியைக் கடக்கவேண்டியது. கிறிஸ்தவர்களும் மோட்ச கானானுக்குப் போகும்படி மரணமென்ற யோர்தானைக் கடக்கவேண்டியது. இஸ்ரவேலர் யோர்தானை எப்படிக் கடந்தார்கள். அவர்கள் யோர்தானண்டை வந்தபொழுது அது தன் கரைகளின்மேல் எங்கும் புரண்டிருந்தது,

அப்போது சம்பவித்ததேதென்றால், பெட்டியைச் சுமக்கிற ஆசாரியர்களின் கால்கள் தண்ணீரின் ஓரத்தில் வைக்கப்படுகையில், மேலேயிருந்து ஓடிவருகிற தண்ணீர்கள் நின்று, ஒரு குவியலாகக் குவிந்தது. கடலுக்கு ஓடிப்போகிற தண்ணீர்களோவென்றால் பிரிந்து ஓடிப்போயிற்று; அப்போது ஜனம் கடந்தது (யோசு. 3, 15. 16). நம்முடைய மரணத்திலும் இதுபோலவே நடக்கும். நம்முடைய இரட்சகர் நம்மோடு இருப்பதினாலே மரண பயங்கரமும் மரணத் துக்கமும் நம்மைவிட்டு எடுபட்டுப்போம். நாம் கலக்கமில்லாமல் மோட்சத்துக்குள் பிரவேசிப்போம். உங்கள் துக்கம் சந்தோஷம் ஆகுமென்று கர்த்தர் சொன்ன வார்த்தை எவ்வளவு உண்மை என்பதை அங்கே பார்ப்போம்.

அங்கே மெய்ச் சந்தோஷமுண்டு, அதனோடொன்றாய்க் குலாவி:
அங்கே கோடி நீதியர் ஆ, பிதா குமாரன் ஆவி,
வானசேனையால் சூழுண்டு, சுத்த சுத்த சுத்தரே
அப்போதே கொண்டாடுவர். என்று பாடுவார்களே.

நமக்கு மோட்சத்தில் உண்டாயிருக்கும் சந்தோஷம் முடிவில்லாததாயிருக்கும். நீங்களும் இப்போது துக்கம் அடைந்திருக்கிறீர்கள்; ஆனால் மறுபடியும் உங்களைக் காண்பேன், அப்போது உங்கள் இருதயஞ் சந்தோஷப்படும்; உங்கள் சந்தோஷத்தை ஒருவனும் உங்களிடத்திலிருந்து வாங்கான். அந்த நாளிலே நீங்கள் என்னை ஒன்றுங் கேட்பதில்லை என்று கர்த்தர் சொன்ன வார்த்தை நம்மிடத்தில் பூரணமாய் நிறைவேறும். நம்மை மீட்டு இரட்சித்த கர்த்தரை நாம் அங்கே பார்ப்போம். அவரும் நம்மைப் பார்ப்பார். அவர் நம்முடைய கண்களிலுள்ள கண்ணீரை எல்லாம் துடைப்பார். நம்மை மகிழ்ச்சியால் நிரப்புவார். நமக்கு யாதொரு குறைவும் அங்கே இராது. நமக்கு இன்னது தேவை என்று நாம் அங்கே சொல்லமாட்டோம். நமக்குத் தேவையானதெல்லாம் அங்கே நமக்கு இருக்கும். ஆகையால், கர்த்தரை நாம் ஒன்றும் கேட்கமாட்டோம். அவருக்குள் நாம் சந்தோஷமாயிருப்பதே நமக்கு வேலையாயிருக்கும்.

எங்கள் அருமை இரட்சகரே, துக்கப்பட்டுக் கண்ணீர் விட்ட உம்முடைய சீஷர்களை நீர் உம்முடைய தரிசனையினால் ஆற்றித்தேற்றினீரே; உம்முடைய அடியார்களாகிய எங்களையும் எல்லாத் துக்கத்திலும் ஆற்றித்தேற்றி, எங்கள் துக்கத்தையும் சந்தோஷமாக்கியருளும், சுவாமி. ஆமென்.

---



# செபதப ஒருசந்திப் பெருநாள்.

மத். 3, 8—10.

பிரியமானவர்களே,

நாம் சில வாரங்களுக்குமுன் கர்த்தர் உயிர்த்தெழுந்த பண்டிகையைக் கொண்டாடினோம். அந்தப் பண்டிகைச் சந்தோஷம் இன்னம் நம்முடைய இருதயங்களை நிரப்பியிருக்கிறது. இன்னம் மூன்று வாரங்களுக்குப் பின் பரிசுத்த ஆவி ஊற்றப்பட்ட பண்டிகையைக் கொண்டாடுவோம். பரிசுத்த ஆவியினால் உண்டாகிற சந்தோஷம் வான இராச்சியத்தின் பெரிய நன்மைகளில் ஒன்று. ஏனென்றால், பராபரனுடைய இராச்சியம் புசிப்பும் குடிப்பும் அல்ல; அது நீதியுஞ் சமாதானமும் பரிசுத்த ஆவியினால் அடைகிற சந்தோஷமுந் தானே (ரோ. 14, 17). இந்த இரண்டு பண்டிகைச் சந்தோஷங்களுக்கும் நடுவே நாம் நிற்கிறோம்: உயிர்த்தெழுந்த பண்டிகைச் சந்தோஷம் நம்மிடத்தில் நிலைத்திருக்கவும், பரிசுத்த ஆவி ஊற்றப்பட்ட பண்டிகைச் சந்தோஷத்துக்கு நாம் ஆயத்தப்படவுமே இன்றைக்குச் செபதப ஒருசந்திப் பெருநாளை ஆசரிக்கிறோம். கர்த்தர் நமக்குக் கொடுக்கும் சந்தோஷங்கள் நம்மிடத்திலே நிலைநிற்காமல் போகிறதுக்குக் காரணம் நம்முடைய பாவங்களே. நாம் எவ்வளவாக நம்முடைய பாவங்களை நினைத்து, அவைகளுக்காகத் துக்கப்பட்டு, கர்த்தரிடத்திலே மன்னிப்புக் கேட்கிறோமோ, அவ்வளவாக நம்முடைய சந்தோஷங்கள் நம்மிடத்தில் நிலைக்கும், வரவர அதிகரிக்கும். நாம் எவ்வளவாகப் பாவத்தைச் சிந்தித்துக் குணப்படாமல் போகிறோமோ, அவ்வளவாகக் கர்த்தர் கொடுக்கும் சந்தோஷமும் மற்ற ஆசீர்வாதங்களும் நம்மைவிட்டு விலகிப்போம். ஆகையால், இந்தத் தபசுநாளில் நாம் யோவான்ஸ்நானகனுடைய பிரசங்கத்தைக் கேட்டுக் குணப்படுகிறது நல்லது. ஆகையால், நாம் இப்பொழுது நம்முடைய வாக்கியத்தின் உதவியால்

குணப்படுதலைப்பற்றிச் சிந்திப்போம்.

1. குணப்படுதலாவது என்ன.
2. குணப்படுதலைத் தடுக்கும் காரியங்கள் என்ன.
3. குணப்படாதவர்களின் முடிவு என்ன.

## 1.

குணப்படுதலாவது என்ன என்று கேட்போம்.

நம்முடைய வாக்கியத்திலே குணப்படுதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள் என்று யோவான்ஸ்நானகன் சொல்லுகிறார். இது யோவான்ஸ்நானகன் வனாந்தரத்திலே பிரசங்கம்

பண்ணுகையில் தம்மண்டை வந்த ஜனங்களுக்கும் அவர்கள் குருமாருக்கும் சொன்ன வார்த்தை. யூத ஜனங்களுக்குப் பராபரன் நியாயப்பிரமாணத்தைக் கொடுத்திருந்தார். தீர்க்கதரிசிகளைக்கொண்டு அவர்களைப் போதித்து வந்தார். இவைகளினால் அவர்களை இயேசுநாதருடைய வருகைக்கு ஆயத்தம்பண்ணச் சித்தமாயிருந்தார். அந்த ஜனங்களோ கர்த்தருடைய சத்தத்துக்குச் செவிகொடாமல், தங்களுடைய இருதயத்தைக் கடினப்படுத்தினார்கள். தாங்கள் கோயிலுக்குப் போய், பலிசெலுத்தி, புறம்புக்கு யோக்கியமாய் நடப்பதால், தங்களைப் பரிசுத்தவான்கள் என்று எண்ணிக்கொண்டார்கள். அவர்களுடைய இந்த எண்ணம் முழுவதும் பிசகு. இதை அவர்களுக்குத் தெரியக் கொடுத்து அவர்களைப் பாவிகளென்று காண்பித்து, இரட்சகருக்கு அவர்களை ஆயத்தப்படுத்தக் கர்த்தர் யோவான்ஸ்நானகனை அனுப்பினார்.

பாவத்தை அறிந்துகொள்வதே குணப்படுதலுக்கடுத்த முதற்காரியம். இப்பொழுது நாம் பாவிகளோ அல்லவோ என்று நம்மைச் சற்றே சோதித்துப்பார்ப்போம். நாம் கிறிஸ்தவர்கள். யூதரைப் பார்க்கிலும் அதிக நன்மைகளைப் பராபரனிடத்தில் அனுபவிக்கிறவர்கள். இயேசு இரட்சகர் சம்பாதித்த இரட்சிப்பு நமக்குக் கொடுக்கப்பட்டது. நாம் தேவவசனத்தைக் கேட்கிறோம், சுவிசேஷ லுத்தரன் சபையாகிய நம்முடைய சபையிலே கர்த்தருடைய வசனம் சுத்தமாய்ப் போதிக்கப்படுகிறது. அதற்கொத்தபடியே ஞானதிரவியங்கள் பரிமாறப்படுகிறது. என்றாலும், நாம அனுபவிக்கிற இந்த மேலான நன்மைகளுக்கு ஏற்றபடி நடக்கிறோமா. பராபரனுடைய பிள்ளைகளென்கிற பேர் நமக்கு இருந்தும, பிசாசின் பிள்ளைகளுக்கு அடுத்த குணம் அடிக்கடி நம்மிடத்தில் காணப்படுகிறதில்லையா. பத்துக் கற்பனைகளின்படியே நம்மைச் சோதித்துப் பார்த்தால், நாம் மகா பெரிய பாவிகளென்று காண்போம். நாம் நம்முடைய பராபரனாகிய கர்த்தரை நம்முடைய முழு இருதயத்தினாலும் நம்முடைய முழு ஆத்துமத்தினாலும், நம்முடைய முழு வினாவினாலும் சிநேகிக்கவேண்டியவர்களாயிருந்தும, அப்படிச் செய்யவில்லையே. நம்முடைய இருதயத்திலுள்ள மண் ஆசை எவ்வளவு, பெண் ஆசை எவ்வளவு, பொன் ஆசை எவ்வளவு. நாம் பராபரனை நோக்கி ஜெபம் செய்வதில எவ்வளவு அசட்டராயிருந்தோம். ஆராதனை விஷயத்தில் எத்தனை அசமந்தம், எவ்வளவு ஒழுங்கீனம். கோயில் அசட்டை எவ்வளவு. நாம் நமக்கடுத்தவனை நம்மைப்போல் சிநேகிக்கவேண்டியவர்கள் அல்லவா. நாம் அப்படி செய்திருக்கிறோமா. பெரியோரைக் கனம் பண்ணினோமா. சகோதரருக்கு நன்மை செய்தோமா. எத்தனை சண்டை



எத்தனை விபசாரம், எவ்வளவு குடிவெறி. நம்முடைய வாயில் வந்த பொய் எத்தனை, நம்முடைய கை திருடின திருட்டு எத்தனை, நாம் பண்ணின மோசங்கள் எத்தனை. இவைகளை நாம் அறிவது குணப்படுதலுக்கு அவசியம். நாம் அப்படிச் செய்யாமல், நமக்குப் பாவம் இல்லை என்றோமானால், உண்மை நமக்குள் இராமல், நம்மை நாமே மோசம் போக்குகிறோம் (௧ யோவா. 1, 8).

நாம் நம்முடைய பாவங்களை அறிந்துகொள்வது மாத்திரம் போதாது. அவைகளை நாம் துக்கத்தோடும் வெட்கத்தோடும் கர்த்தருக்கு அறிக்கையிடவேண்டும். நாம் படவேண்டிய துக்கம என்ன. நான் திருடினதினால் எனக்கு விலங்கு வந்ததே, என் விபசாரத்தினால் மானம் போயிற்றே, என் பொய்யினால் என் பெயர் கெட்டதே என்று துக்கப்படுகிறது சரியான துக்கமல்ல. ஐயோ, நான் என் பாவத்தினால் என்னை அசுத்தப்படுத்தினேனே, பிசாசைப் பிரியப்படுத்தினேனே, என் பரமதகப்பனை விசனப்படுத்தினேனே என்று மனஸ்தாபப்படவேண்டும். தேவரீர் ஒருவருக்கு விரோதமாக நான் பாவத்தை நடப்பித்து, உம்முடைய கண்களுக்கு முன்பாகப் பொல்லாப்பானதைச் செய்தேனென்கிறதை நீர் உம்முடைய வசனங்களில் நீதி விளங்கவும் உமது நியாயத்தீர்ப்பில் சுத்தம் விளங்கவும் அறிக்கையிடுகிறேன் (சங். 51, 6) என்று தாவீது இராசா சொன்னார். நான் இன்ன பாவத்தை ஒரு அவசரத்தினால் செய்தேன், இன்ன பாவத்தைத் தெரியாத்தனமாய்ச் செய்தேன். அந்தப் பாவம் அத்தனை பெரிதல்ல, இந்தப் பாவம் அத்தனை பொல்லாததல்ல என்று சொல்லுகிறவர்கள் குணப்படுகிறவர்களல்ல. நாம் நம்முடைய பாவங்களுக்கு எந்தச் சாக்குப்போக்கும் சொல்லாமல், அவைகளுக்காக நாம் வெட்கப்பட்டுப் புலம்பி அழுவது நியாயம்.

நம்முடைய துக்கமும் புலம்பலும் அழுகையுமே குணப்படுதலுக்குப் போதுமென்று நாம் நினைக்கக்கூடாது. நாம் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய்ப் பராபரனிடத்தில் மன்னிப்புத்தேடுவது எல்லாவற்றிலும் அவசியம். இயேசுநாதர் பாவிகளுக்காகத்தான் உலகத்தில் வந்தார். பாவிகளை இரட்சிக்கக் கிறிஸ்து இயேசு உலகத்திலே வந்தாரென்கிறது உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமான வார்த்தை (௧ தீமோ. 1, 15). பராபரனே, பாவியாகிய என்பேரில் கிருபையுள்ளவராகும் என்று கெஞ்சிக்கொண்டு, தம்மிடம் வருகிற பாவியை அவர் ஒருபோதும் தள்ளுகிறதில்லை. நீரே என் தஞ்சம், நீரே என் இரட்சகர், எனக்கு வேறே போக்கிடமில்லை என்று தம்மண்டை வருகிற யாவரையும் அவர் ஏற்றுக்கொள்ளுகிறார். அவர்கள் பாவங்களை அவர் மன்னிக்கிறார். பிர

யாசப்பட்டுப் பாரஞ் சுமந்தவர்களாகிய நீங்களெல்லாரும் என்னண்டைக்கு வாருங்கள், நான் உங்களை முசிப்பாற்றுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் (மத். 11, 28).

நம்முடைய குணப்படுதல் மெய்யாயிருந்தால், நாம் அதற்கேற்ற கனிகளைக் கொடுப்போம். நல்ல மரம் நல்ல கனிகளைக் கொடுக்கும். குணப்பட்ட விசுவாசிகள் நல்ல மரங்கள். அவர்கள் கிறிஸ்துவை விசுவாசித்து அவரைச் சிநேகிப்பதால், அவருக்கு விரோதமான எல்லாவற்றையும் பகைக்கிறார்கள். முன் அவர்களுக்குப் பிரியமாயிருந்த பாவம் இப்பொழுது அவர்களுக்குக் கசப்பாயிருக்கிறது. அவர்கள் கிறிஸ்துவைப்போல் பரிசுத்தத்திலும் சிநேகத்திலும் பிழைக்க விரும்புகிறார்கள். கர்த்தருடைய வசனம் அவர்கள் மனமகிழ்ச்சி ஆகிறது. அவருடைய கற்பனையின்படி நடக்கிறது அவர்கள் சந்தோஷம். நாம் அவரைச் சிநேகிக்கக் கடவோம்; ஏனெனில், அவர் நம்மை முந்திச் சிநேகித்தார் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். அவர்கள் பராபரனைச் சிநேகிக்கிறார்கள், அவர் நிமித்தம் சகோதரரையும் சிநேகிக்கிறார்கள், கோயில் கடமைகளைச் சரியாய் நிறைவேற்றுகிறார்கள், யோக்கியமான ஊர்க்குடிகளாய்ப் பிழைக்கிறார்கள். இவர்கள்தான் குணப்படுதலுக்கு ஏற்ற கனிகொடுக்கிறவர்கள். இந்தக் கனிகளை நாம் கொடுக்கிறோமா. இல்லையென்றால் நாம் இன்னம் குணப்பட்டவர்களல்ல.

2.

குணப்படுதலைத் தடுக்கும் காரியங்கள் என்னவென்று கேட்போம்.

ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன் என்று உங்கள் உள்ளத்தில் சொல்ல நினைவு கொள்ளாதேயுங்கள்; ஏனெனில், பராபரன் இந்தக் கல்லுகளில் ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை எழுப்ப வல்லவர் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று யோவான் ஸ்நானகன் யூதருக்குச் சொன்னார். யூதர்கள் ஆபிரகாமின் வம்சத்தார். ஆபிரகாம் பராபரனை விசுவாசித்தார். அதனால் அவர் பராபரனுக்குப் பிரியமாயிருந்தார். ஆபிரகாமின் நிமித்தம் பராபரன் எங்கள் பேரிலும் பிரியமாயிருப்பார்; நாங்கள் குணப்பட வேண்டியதில்லை என்று யூதர் தங்கள் இருதயத்தில் நினைத்துக் கொண்டார்கள். ஆபிரகாமின் விசுவாசம் ஆபிரகாமை மாத்திரம் இரட்சிக்கும், ஆபிரகாமின் வம்சத்தார் பாவத்தில் நிலைத்திருந்தால், அவர்கள் கெட்டுத்தான்போவார்கள். ஆபிரகாமுடைய வம்சத்தில் ஒருவன் பிறந்தபடியால் அவனை ஆபிரகாமின் பிள்ளை என்று பராபரன் சொல்லமாட்டார். ஆபிரகாமைப்போலொத்த விசுவாசமுள்ள பிள்ளைகளைப் பராபரன் எங்கிருந்தும் உண்டாக்கவல்லவர். மலடியும் கிழவியுமாகிய சாராளிடத்தில் ஈசாக்



கைப் பிறக்கப்பண்ணினவர் கல்லுகளிலிருந்தும் ஆபிரகாமுக்குப் பிள்ளை பிறக்கப்பண்ணுவார்.

கிறிஸ்தவர்களுக்குள்ளும் அந்த யூதர்களைப்போல் பெருமைபாராட்டுகிறவர்கள் உண்டு. நான் பூர்வக்கிறிஸ்தவன், நான் பெரிய ஐயரால் ஞானஸ்நானம் பெற்றவன், இன்ன ஐயர் எனக்கு ஞானத்தகப்பன் என்று ஒருவன் பெருமை பாராட்டுவான்; நான் ஒரு குருவின்பிள்ளை, நான் உபதேசியார்பிள்ளை, நான் உபாத்தியார்பிள்ளை, நான் பேர்பெற்ற ஒரு நாட்டாண்மைக்காரன் மகன் என்று சொல்லிப் பெருமை பாராட்டுகிறவர்களுண்டு. இந்தப்பெருமை அவர்கள் மனதை ஆளுவதினால், தங்களுக்குக் குணப்படுதல் அவசியமில்லை என்று நினைப்பார்கள். சகோதரரே, இது வீண்பெருமை. நம்முடைய முன்னோர் எவ்வளவு பெரியவர்களாயிருந்தாலும், எவ்வளவு பேரெடுத்தவர்களாயிருந்தாலும், எவ்வளவு விசுவாசமுள்ளவர்களாயிருந்தாலும், அதினால் நமக்குக் காரியமில்லை. நீ விசுவாசியா, நீ இயேசுநாதரைப் பற்றிக் கொண்டாயா, நீ அவரில் நிலைத்திருக்கிறாயா, நீ அவருடைய வழிகளில் நடக்கிறாயா என்று கர்த்தர் கேட்கிறார். ஆகையால், நாம் நம்மை மோசம்போக்காதிருக்கக் கடவோம்.

வேறே சிலர் யூதர்களைப்போல் தங்கள் வேதமார்க்கத்தில் நம்பிக்கைவைக்கிறார்கள். நான் கோயிலுக்கு ஒழுங்காய்ப் போகிறேன், உண்டியலுக்குக் காசு போடுகிறேன், நான் குடிக்கிறதில்லை வெறிக்கிறதில்லை என்று சொல்லி, தங்கள் பேர்க்கிறிஸ்துமார்க்கத்தில் பெருமைபாராட்டுகிறார்கள். இவைகளைப் பார்த்துக் கர்த்தர் சொல்லுகிறதைக் கேளுங்கள். அப்போது நீங்கள்: உமக்கு முன்பாகப் புசித்தோம், குடித்தோம், நீர் எங்கள் வீதிகளிலும் போதகம் பண்ணினீர் என்று சொல்லத்தொடங்குவீர்கள். ஆனால் அவர்: உங்களை எவ்விடத்தாரென்று அறியேன் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன், அக்கிரமக்காரராகிய நீங்கள் எல்லாரும் என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்பார் (லூக்கா 13, 26. 27).

இதைப்போலொத்த காரணங்களினால் நம்முடைய குணப்படுதலைத் தடுக்காதிருக்கக்கடவோம். நாம் நம்மைக் கர்த்தருடைய வசனத்துக்குக் கீழ்ப்படுத்தினால் கல்லுக்கு ஒப்பான நம்மைக் கர்த்தர் பிள்ளைகளாக்குவார், நம்முடைய இருதயத்தை நொறுக்குவார், அதைக் குணப்படுத்துவார், அதை விசுவாசத்தால் நிரப்புவார். அப்பொழுது நாம் அவருக்குப் பிரியமானவர்களாவோம்.

3.

குணப்படாதவர்களின் முடிவு என்னவென்று இப்பொழுது கேட்போம்.

அப்போதே கோடாலியும் மரங்களின் வேரருகில் வைத்தாயிற்று. ஆனபடியினாலே நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும் என்று யோவான் சொன்னார். யூதர் பராபரனுடைய சித்தத்துக்குக் கீழ்ப்படியாமல் போனார்கள். தங்களுக்கு இஷ்டமான வழியில் நடந்தார்கள், வேஷமார்க்கத்தை நம்பினார்கள், குணப்படாமையில் நிலைத்திருந்தார்கள். இதனால் பராபரன் அவர்கள்மேல் கோபமாகி, ரோமர் என்ற கோடாலிக்கு அவர்களைக் கீழ்ப்படுத்தினார். ரோமர் அவர்களைக் கண்டிப்பாய் நடத்தி, அவர்களைக் கொடுமைப்படுத்தியும், அவர்கள் சீர்படவில்லை. தங்கள் நடுவே பிறந்த தங்கள் மேசியாவை அவர்கள் ஏற்றுக்கொள்ளாமல், அவரைத் தள்ளினார்கள். இது நிமித்தமாக பராபரன் அவர்களை ரோமரைக்கொண்டே அழிக்கச் சித்தமானார். அவர்கள் இயேசுநாதரைக் கொன்ற நாற்பது வருஷங்களுக்குப்பின் ரோமர்கள் எருசலேம் பட்டணத்தை அழித்து, யூத ஜாதியாரைச் சிதறடித்தார்கள். அதனால் யோவானுடைய தீர்க்கதரிசன எச்சரிப்பும் பயமுறுத்துதலும் நிறைவேறிப்போயிற்று.

இந்தச் சங்கதி நம்மை எச்சரிக்கவேண்டும். நாமும் குணப்படாதேபோனால் நமது பேரில் பராபரனுடைய கோபம் பற்றியெரியும். நம்முடைய தேசத்தில் அடிக்கடி பஞ்சமுண்டாகிறது. விஷபேதி, விஷக்காய்ச்சல், அம்மை முதலிய கொள்ளை நோய்கள் உண்டாகிறது என்னத்தினால். நம்முடைய குணப்படாமையினிமித்தமே பராபரன் அவைகளை அனுப்புகிறார் என்று சொல்லவேண்டும். இன்னமும் நாம் குணப்படாதிருந்தால், அவர் நம்மைத் திடீரென்று வெட்டுவார். மரணக் கோடாலி நம்மை வெட்டும். அப்பொழுது நம்முடைய நிலைமை என்னவாகும். கர்த்தர் நம்மிடத்திலே தேடுகிற நல்ல கனிகளை நாம் கொடுத்திருக்கிறோமா. ஆவியின் கனிகளாகிய சிநேகம், சந்தோஷம், சமாதானம், நீண்டசாந்தம் முதலியவைகள் நம்மிடத்தில் உண்டோ (கலா. 5, 22). ஐயோ நம்மிடத்தில் எவ்வளவு குறைவு. இப்படியிருந்தும், நாம் அழிக்கப்படாதிருப்பது நம்முடைய புண்ணியத்தினாலா, அல்லவே அல்ல. நாங்கள் நிர்மூலமாய் அழியாதிருக்கிறது கர்த்தருடைய கிருபைகள்; ஏனெனில், அவருடைய இரக்கங்கள் முடிவடைந்ததில்லை. அவைகள் காலைமாறு புதியவைகள், அவருடைய உண்மை பெருத்திருக்கிறது (புலம். 3, 22. 23) என்று நாம் சொல்லவேண்டியது.

இயேசுநாதர் நமக்காகப் பிதாவின் வலது பாரிசத்தில் உட்கார்ந்து நமக்காக வேண்டிக்கொள்வதினால், நாம் இம்மட்டும் பிழைத்திருக்கிறோம். அவர் நாம் குணப்படுவதற்குத் தவணை கொடுத்திருக்கிறார். இதுவே கிருபையின் காலம், இதுவே இரட்சிப்பின் நாள். இதுவே நாம் வேலைசெய்யக்கூடிய பகல் காலம். இதை நாம் வீணில் கழித்துவிட்டால் நாம் வேலைசெய்யக்கூடாத இராக்காலம் வரும்; அப்பொழுது நாம் குணப்படமுடியாது, நாம் குணப்பட மனமும் வராது, வழியும் இராது. ஆகையால் இப்பொழுதே குணப்படவேண்டும். நாம் குணப்பட்டவர்களாயிருப்போமானால், மரணம் எப்போது வந்தாலும் பயப்படமாட்டோம். நாம் மரித்தால் மோட்சத்தில் பிரவேசிப்போம். குணப்படாமல் சாகிறவர்கள் நரக அக்கினியிலே போடப்படுவார்கள். ஆ, அவர்கள் நிலைமை பயங்கரம். நரகத்தில் அவர்கள் பூச்சி சாகாது, அவர்கள் அக்கினி அவியாது.



இங்கே கூடிவந்திருக்கிற நமக்குள் கவலையற்றவர்களாய்ப் பாவத்தில் நிலைத்திருக்கிறவர்களெல்லாரும்: நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும் என்கிற பயங்கர வார்த்தையைக் கேட்கும்பொழுது நடுநடுங்கி அழுவார்களாக. இன்றைக்கு நாம் கேட்ட வசனம் நம்மைக் குணப்படுத்தி, இந்தத் தபசுநாளின் பிரயோசனத்தை நாம் கண்டடையப் பண்ணுவதாக.

பரிசுத்த ஆவியாகிய பராபரனே, எங்களைக் கண்ணோக்கிப்பாரும். எங்களைத் தட்டி எழுப்பும், எங்கள் பாவங்களை எங்களுக்குத் தூண்டிக்காட்டும், எங்களைக் குணப்படுத்தும், எங்களுக்கு மெய்விசுவாசத்தைத் தந்து எங்களை இரட்சித்தருளும், சுவாமி. ஆமேன்.

---

## கர்த்தர் உயிர்த்தெழுந்த பண்டிகைக்குப் பிந்தின ௪-ம் ஞாயிறு.

யோவான் 16, 5—15.

பிரியமானவர்களே,

நாம் இன்னம் மூன்று வாரங்களுக்குப் பின் பரிசுத்த ஆவி ஊற்றப்பட்ட பண்டிகையைக் கொண்டாடப் போகிறோம். கிறிஸ்து சம்பாதித்த இரட்சிப்பு நமக்குச் சொந்தமாகும்படி பரிசுத்த ஆவியானவர் நம்மிடத்தில் வேலை செய்வது அவசியம். ஏனெனில், நாம் நம்முடைய சுய புத்தியினாலும் பலத்தினாலும் நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கவும் அவரைச் சேர்ந்து அண்டிக்கொள்ளவுங் கூடவே கூடாது. நமக்குப் பரிசுத்த ஆவியானவரை அனுப்பும்படிக்கே இயேசுநாதர் பாடுபட்டு, இரத்தம் சிந்தி, தம்முடைய பிதாவண்டைக்குப் போனார். ஆகையால், நம்முடைய இரட்சகர் தம்முடைய சீஷர்

களை நோக்கி: நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன், நான் போகிறது உங்களுக்குப் பிரயோசனமாயிருக்கிறது; ஏனெனில் நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களண்டைக்கு வரார்; நான் போவேனேயாகில், அவரை உங்களண்டைக்கு அனுப்புவேன் என்று நம்முடைய வாக்கியத்தில் சொல்லுகிறார். பரிசுத்த ஆவியானவர் வரும்பொழுது அவர் செய்யப்போகிற காரியங்கள் என்னவென்று நம்முடைய வாக்கியத்தில் சொல்லியிருக்கிறது. அதைக்குறித்து நாம் இப்பொழுது தியானிப்போம்.

**பரிசுத்த ஆவியானவர் இந்த உலகத்தில் செய்கிற கிரியை என்ன.**

1. அவர் உலகத்தைக் கடிந்து கொள்ளுகிறார்.
2. அவர் விசுவாசிகளை வழி நடத்துகிறார்.

1.

பரிசுத்த ஆவியானவர் உலகத்தைக் கடிந்துகொள்ளுகிறார்.

அவர் வந்து, உலகத்தைப் பாவத்தின் நிமித்தமும் நீதியின் நிமித்தமும் நியாயத்தீர்த்தலின் நிமித்தமும் கடிந்துகொள்ளுவார் என்று இயேசு நாதர் சொல்லுகிறார். — அவர் உலகம் என்று சொல்லுவது என்ன. மனந்திரும்பாமலிருக்கிற மனுஷர்களே உலகம். அப்படிப்பட்டவர்கள் நம்மைச் சூழ இருக்கிறார்கள். அவர்களை அஞ்ஞானிகள் என்று நாம் சொல்லுவோம். அது நிசமே. ஆகிலும், கிறிஸ்தவர்களுக்குள்ளும் உலக மக்கள் இருக்கிறார்கள் என்று நாம் அறியவேண்டும். நம்முடைய சபையிலும், இப்பொழுது இந்தக் கோயிலில் இருக்கிற நமக்குள்ளும, யாரார் குணப்படாதவர்களோ, யாருடைய மனசு இன்னம் கிறிஸ்துவண்டை திரும்பவில்லையோ, அவர்கள் எல்லாரும் உலகத்தாரே. விசுவாசிகளுக்குள்ளும் இன்னம் மாயிசம் இருக்கிறபடியால் அவர்களுக்குள்ளும உலகம் இருக்கிறதென்று சொல்லவேண்டும்.

உலகத்தைக் கடிந்து கொள்ளுவது பரிசுத்த ஆவியின் முதல் வேலை. உலக மக்களுக்கு, அவர்கள் செய்த பாவத்தைத் தூண்டிக் காட்டி; அவர்களுடைய குற்றத்தை அவர்களுக்குத் தெரியக்கொடுப்பது மிகவும் அவசியம். மனிதர் எத்தனை படிப்புப் படித்திருந்தாலும், அவர்களுக்கு அநேக காரியங்கள் தெரிந்திருந்தாலும், தாங்கள் பாவிகள் என்கிறது மாத்திரம் அவர்களுக்குத் தெரிகிறதில்லை. அதை நம்முடைய சொந்த தேசத்தாரிடத்தில் பார்க்கலாம். நம்முடைய தேசத்துக்கு அஞ்ஞானிகள் கொடுத்திருக்கிற ஒரு பெயர் புண்ணிய பூமி என்பது. இது எவ்வளவு பரிதாபம். இது பாவ பூமி என்றும்,



இதில் குடியிருக்கிறவர்கள் பாவிகள் என்றும் அவர்களுக்குத் தெரியாமல் இருக்கிறது எவ்வளவு விசனமான காரியம். ஆகையால், மனிதர்களைப் பரிசுத்த ஆவியானவர் கடிந்துகொள்ளுகிறார். அவருக்குத் தேற்றரவாளன் என்கிற பெயர் இருக்கிறது. அதின்படியே பாவிகளை இரட்சணிய சுவிசேஷத்தினால் ஆற்றித் தேற்றுவது அவருடைய வேலை. அவர் ஆற்றித்தேற்றுகிறவராயிருந்தும், ஒருவனையும் பாவத்திலே வைத்து அவர் ஆற்றித் தேற்றமாட்டார். பாவக்கூத்துக்கு அவர் பாட்டுப்பாடுகிறவரல்ல. அவர் பாவிகளுடைய இருதயத்தைக் குத்திக் காயப்படுத்தின பிறகுதான் ஆற்றுகிறவராயிருக்கிறார். அவர் நம்முடைய தேசத்திலும் நம்முடைய கிறிஸ்தவர்களிடத்திலும் காயம் உண்டாக்கிப் புண்படுத்தும்படியாக நாம் அவரை வேண்டிக்கொள்வோமாக. பரிசுத்த ஆவி பாவத்தைத் தெரியப்படுத்தாதே போனால், பாவத்தை ஒருவரும் அறிந்துகொள்ளமாட்டார்கள். பாவத்திலெல்லாம் பெரிய பாவம் என்ன தெரியுமா.

என் பேரில் விசுவாசியார்களென்கிறபடியினாலே, பாவத்தின் நிமித்தம் கடிந்துகொள்ளுவாரென்று நம்முடைய இரட்சகர் சொல்லுகிறதினாலே அது தெரிய வரும். இயேசுவை விசுவாசிக்காத அவிசுவாசமே எல்லாவற்றிலும் பெரிய பாவம். ஏனெனில், அதுவே சகல பாவங்களுக்கும் காரணம். இதைக் குறித்துப் பவுல் அப்போஸ்தலன்: விசுவாசத்தினால் வராததெல்லாம் பாவம் என்கிறார், ஜீவனின் அதிபதியாகிய இயேசுநாதரைச் சிலுவையில் அறைந்தது என்ன. யூதர்களுடைய அவிசுவாசம் அல்லவா. நாம் எல்லாப் பாவக் குற்றங்களுக்கும் நீங்கலாகாதபடிக்கும், நாம் நரகத்திலே விழும்படிக்கும் செய்வது அவிசுவாசமதானே. ஆகையினாலே இதையே பாவத்தில் எல்லாம் பெரிய பாவமென்று சொல்லுகிறது நியாயம். இதையே பரிசுத்த ஆவியானவர் தூண்டிக்காட்டுகிறார். பெந்தெகொஸ்தே என்ற பெரிய பண்டிகையில் பரிசுத்த ஆவியானவர் பேதுரு அப்போஸ்தலனைக்கொண்டு யூதருக்குச் சுட்டிக்காட்டிக் கடிந்துகொண்டது இந்தப் பாவந்தான். அவர்கள் அதைக் கேட்டபோதோவெனில், இருதயத்தில் குத்துருவினவர்களானார்கள் என்று எழுதியிருக்கிறது.

இன்றைக்குப் பரிசுத்த ஆவியானவர் நம்மையும் கடிந்துகொள்ளுகிறார். நம்மிடத்திலிருக்கும் கீழ்ப்படியாமை கொஞ்சமா, பொருளாசை கொஞ்சமா, காமவிகாரம் கொஞ்சமா, அகந்தை கொஞ்சமா, கோயில் அசட்டை கொஞ்சமா, ஜெபக்குறைவு கொஞ்சமா. இதுக்கெல்லாம் காரணமென்ன. நம்முடைய அவிசுவாசமே அல்லாமல், வேறொன்றும் அல்ல. நாம் நம்முடைய அருமை இரட்சகரை உண்மையாய் விசுவாசித்து, அவரிடத்தி

லே நிலைத்திருப்போமானால், இந்தப் பாவங்களெல்லாம் நமக்கு அருவருப்பாகும்.

பரிசுத்த ஆவியானவர் நீதியின் நிமித்தம் நம்மைக் கடிந்துகொள்ளுகிறார். நீங்கள் இனி என்னைக் காணாமல், நான் என் பிதாவண்டைக்குப் போகிறேன் என்கிறபடியினாலே நீதியின் நிமித்தமும் கடிந்து கொள்ளுவாரென்று கர்த்தர் சொல்லுகிறார். பராபரன் நீதியுள்ளவர். அவருக்கு அநீதி அருவருப்பு. நீதியுள்ளவர்கள் மாத்திரம் அவருக்கு முன்பாக நிற்கலாம். நீதி, புண்ணியம் என்ற காரியத்தைச் சம்பாதிக்க வேண்டுமென்பது உலகத்தார் விருப்பம். இதற்காக அவர்கள் அதிகப் பிரயாசப்படுவார்கள். அதற்குப் பல வழிகளைத் தேடுகிறார்கள். சிலர் தாங்கள் நீதியுள்ளவர்களும் புண்ணியசாலிகளுமாய் விளங்கும்படிக்கு பிறத்தியார் மேல் குற்றம் சொல்லுவார்கள். அவர்களைப் பார்க்கத் தாங்கள் மனிதருக்கு முன் நல்லவர்களாயிருப்பதினால், பராபரனுக்கு முன்னும் தங்களை நீதியுள்ளவர்களென்று நினைக்கிறார்கள். இது என்ன பைத்தியம். வேறு சிலர் தாங்கள் அநீதியர்களாயிருந்தும், தாங்கள் செய்த அநீதத்தை நீதியாக்கப் பார்க்கிறார்கள். நாங்கள் அவசரத்தினால் இந்தத் தப்பிதத்தைச் செய்ய நேரிட்டது, இந்தப் பொய்யினால் ஒருவனுக்கு நன்மை வந்தது, இந்தத் திருட்டினால் ஒரு ஏழைக்கு முடை தீர்ந்தது என்று சொல்லி, தங்கள் அநீதியை நீதி என்று ரூபிக்கப் பார்ப்பார்கள். இன்னும் சிலர் நாங்கள் தர்மதானம் செய்கிறோம், கோயில் கட்டினோம், குளம் வெட்டினோம் என்று சொல்லி, தங்களைக் கர்த்தருக்கு முன் நீதியுள்ளவர்களென்று காண்பிக்கிறார்கள். இதெல்லாம் நீதி ஆகுமா. இருதயத்தின் ஆழங்களையும் பார்க்கிற கர்த்தருக்கு முன் இதெல்லாம் செல்லுமா. செல்லவே செல்லாது. இவைகளெல்லாம் ஆதாமும் ஏவாளும் தைத்துக் கட்டிக்கொண்ட அத்தியிலைகள். அத்தியிலை இருப்பினும், அவர்கள் பராபரனுக்கு முன் நிற்கமுடியாமல் ஓடி ஒளித்துக்கொண்டார்கள் அல்லவா. நாம் அநீதியர்களாயிருந்தாலும், பயமில்லாமல் நிற்கக் கூடும்படிக்கு கிறிஸ்து நீதி சம்பாதித்தார். அவர் குற்றமில்லாதவராய் நடந்து, குற்றமில்லாமல் பாடுபட்டு, இரத்தம் சிந்தி மரித்து, தம்முடைய பிதாவண்டைக்குப் போனார். அவர் பிதாவண்டைக்குப் போன வழி சிலுவை வழி, மரண வழி. இந்த வழியிலே அவர் சம்பாதித்த நீதி ஒன்று மாத்திரம் பராபரனுக்கு முன் செல்லத்தக்கது. இதுவோ உலகத்துக்கு இல்லை. இதைப் பரிசுத்த ஆவியானவர் உலகத்துக்குக் காண்பித்து, அதைக் கடிந்துகொள்ளுகிறார். அவர் கடிந்துகொள்ளுதலை ஏற்றுக் கொள்ளுகிறவர்கள் இரட்சிக்கப்படுவார்கள். அதைத் தள்ளுகிறவர்களோ கெட்டுப் போவார்கள். கிறிஸ்தவர்களாகிய நாம் அடிக்கடி நம்மு



டைய சுயநீதியைப் பெரிது பண்ணுகிறோம். கிறிஸ்து நமக்காகச் சம்பாதித்த நீதியை மறக்கிறோம். இதனிமித்தம் பரிசுத்த ஆவியானவர் நம்மைக் கடிந்துகொண்டு, நமக்கு நல் உணர்ச்சி உண்டாக்குவது அவசியம். அவருடைய கடிந்துகொள்ளுதலுக்குத் தன்னைக் கீழ்ப்படுத்துகிறவன் அவரால் தேற்றரவடைந்து, என்ன சொல்லுவான்:

என் நீதி இயேசுதானே, விழிக்கவுங் கூடாதே;
அவர் இல்லாவிட்டால், என் இயேசுவன்றியே
பிதாவுக்குமுன் நானே ரட்சிப்பு கிடையாதே,
நான் பாவியானதால் என் மீட்பர் அவரே

என்று ஆனந்த கெம்பீரமாய்ப் பாடுவான்.

மேலும், பரிசுத்த ஆவியானவர் நியாயத்தீர்த்தலினிமித்தமும் உலகத்தைக் கடிந்து கொள்ளுவார். அதைக் குறித்து நம்முடைய இரட்சகர்: இந்த உலகத்தின் பிரபு நியாயந்தீர்க்கப்பட்டது என்கிறபடியினாலே, நியாயத்தீர்த்தலின் நிமித்தமும் கடிந்துகொள்ளுவார் என்று சொல்லுகிறார். இந்த உலகத்தின் பிரபு பிசாசு. அவன் அவிசுவாசமுள்ள உலக மக்கள் பேரில் ஆளுகை செலுத்துகிறபடியினாலே, அவனுக்கு அந்தப் பெயர். அவனுக்கும் இயேசுநாதருக்கும் பெரிய சண்டை உண்டாயிற்று. இயேசுநாதர் அநியாயமாய்க் கொலையுண்டு மரித்தார். ஆகிலும் அவர் மரித்தோரிடத்திலிருந்து உயிர்த்தெழுந்ததினால் பிசாசை ஜெயித்தார், அவனை நியாயம் தீர்த்தார். நரகத்தின் சங்கிலிகளுக்கு அவனை ஒப்புவித்தார். அவன் தோற்றுப்போன பிசாசு, அவன் வெல்லப்பட்ட பேய். இனி அவன் விசுவாசிகளைக் குற்றப்படுத்தவும், உலகத்தின்மேல் ஆளுகை செலுத்தவும், அவனுக்கு அதிகாரமில்லை. ஆகையால், இந்த உலகம் அவனுக்குக் கீழ்ப்பட்டிருப்பதற்கு நியாயமே கிடையாது. என்றாலும், உலகமக்கள் மனதாரத் தங்களை அவனுக்குக் கீழ்ப்படுத்துகிறார்கள். நம்முடைய தேசத்தைப் பாருங்கள், எங்கே பார்த்தாலும் பிசாசுக்கு கோயில்களுண்டு, பிசாசின் அடையாளத்தை லட்சாதி லட்சஞ்சனங்களின் நெற்றியிலும் மார்பிலும் பார்க்கிறோம். ஞானஸ்நானம் பெற்ற கிறிஸ்தவர்களிலும் அநேகர் பிசாசின் பிள்ளைகளைப்போல நடக்கிறார்கள், பாவத்தைச் சிநேகிக்கிறார்கள். இப்படியே நம்முடைய தேசத்தாரும், உலகத்திலுள்ள மற்ற அஞ்ஞானிகளும், பேர்க் கிறிஸ்தவர்களும் தங்களை உலகத்தின் பிரபுவுக்குக் கீழ்ப்படுத்துகிறபடியினாலே பரிசுத்த ஆவி கடிந்துகொள்ளுவது அவசியமாயிருக்கிறது. அவருடைய கடிந்துகொள்ளுதலுக்கு இடங்கொடுத்துக் குணப்படாதவன் ஆரோ, அவன் பிசாசோடு நியாயத்தீர்ப்புக்குள்ளாவான்; பிசாசு தள்ளப்படும் நரகத்திலே அவ

னும் தள்ளப்படுவான். எவன் குணப்படுகிறானோ, அவன் இரட்சிப்படைவான். இன்றைக்குப் பரிசுத்த ஆவியானவர் இந்தக் கோயிலில் வந்திருக்கும் ஒவ்வொருவரிடத்திலும் தம்முடைய வேலையைச் செய்து, நம்மைக் குணப்படுத்தி, ஆற்றித்தேற்றுவாராக.

## 2.

பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளை வழி நடத்துகிறார் என்பதைக் குறித்து இப்பொழுது சிந்திப்போம்.

உங்களுக்குச் சொல்ல இன்னம் அநேகங் காரியங்கள் எனக்கு உண்டு; ஆனால் இப்போது அவைகளைச் சுமக்கமாட்டீர்கள், சத்தியத்தினுடைய அந்த ஆவி வருகிறபோதோவெனில் அவர் உங்களை எல்லாச் சத்தியத்துக்குள்ளும் வழி நடத்துவார் என்று கர்த்தர் சொல்லுகிறார்.—பரிசுத்த ஆவியானவர் நம்மை வழி நடத்துவார் என்பது எவ்வளவு ஆறுதலான வார்த்தை. நாமெல்லாரும் குருடர்களாயிருக்கிறோம். பரம காரியங்களை அறிந்துகொள்ள நமக்குச் சக்தியில்லை. நாம் இரட்சிக்கப்படுவதற்கான வழியை நாமாய்க் கண்டுபிடிக்க நம்மாலே முடியாது. இயேசுநாதர் நிக்கொதேமு என்ற பெரிய மனுஷனோடே ஒரு இராத்திரி பேசிக்கொண்டிருந்தார். அவன் மிகுந்த படிப்பாளி, இஸ்ரவேலில் போதகன். அப்படியிருந்தும், இயேசுநாதர் சொன்ன இரட்சிப்பின் வழி அவனுக்கு விளங்கவில்லை. இயேசுநாதருடைய சீஷர்களும் அடிக்கடி தங்கள் குருட்டாட்டத்தைக் காண்பித்தார்கள். இரட்சிப்பின் வழி தெரியாத இந்த உலகத்திலே இரட்சிப்பின் வழியைக் காட்டுகிறோமென்று வெகுபேர் சுயமாய்க் கிளம்புகிறார்கள். அவர்களெல்லாரும் குருடருக்குக் குருட்டு வழிகாட்டிகளாயிருக்கிறார்கள். நமக்குச் சத்தியத்தின் ஆவியாகிய பரிசுத்த ஆவி ஒருவரே சரியான வழி காட்டி. அவருடைய உதவியினாலே மாத்திரம் இரட்சிப்பின் சத்தியங்களெல்லாம் நமக்குத் தெரியவரும்.

அவர் இயேசுநாதருடைய சீஷர்களைச் சத்தியத்துக்குள் வழி நடத்தினார். தங்கள் இரட்சிப்புக்குவேண்டிய சத்தியங்களையும், அவர்கள் உலகத்துக்குத் தெரிவிக்கவேண்டிய சத்தியங்களையுமெல்லாம் சீஷர்கள் பரிசுத்த ஆவியினாலே கற்றுக்கொண்டார்கள். பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுமுன அவர்களுக்கு விளங்காதிருந்த சத்தியங்கள் அவரைப் பெற்றுக்கொண்டபின் அவர்களுக்கு விளங்கிற்று. இனி திருச்சபைக்கும் உலகத்துக்கும் நடக்கப்போகிற சங்கதிகளும் பரிசுத்த ஆவியால் அவர்களுக்குத் தெரியவந்தது. அவர்கள் பரிசுத்த ஆவியினாலே கற்றுக்கொண்ட சத்தியங்களை மற்றவர்களுக்குச் சொல்லும்படிக்கும் அந்த ஆவியானவர் ஒத்தாசை செய்தார். அந்தச்



சத்தியங்கள் அவர்கள் மனதில் தங்கியிருக்கும்படிக்கு அவர் அதைப் பரிசுத்தம் பண்ணினார். அந்தச் சத்தியங்களைச் சரியாய்ச் சொல்லும்படிக்கு அவர்கள் நாக்கைப் பரிசுத்தம் பண்ணினார். முற்காலத்திலே ஏசாயா தீர்க்கதரிசி தன்னை அசுத்த உதடுள்ள மனுஷன் என்று சொல்லிப் பயந்தபொழுது, ஒரு தேவதூதன் ஒரு கட்டை நெருப்பைக் குறட்டால் எடுத்து, தீர்க்கதரிசியின் உதட்டைத் தொட்டு, அவரைச் சுத்தம் பண்ணினான். இப்பொழுது தம்முடைய ஊழியக்காரரின் உதட்டையும் நாவையும் தொடுகிறவர் பரிசுத்த ஆவியே.

தேவ சத்தியங்கள் இந்த உலகத்திலே எல்லாக் காலத்திலும் நிலைத்திருக்கும்படிக்கும் அந்த ஆவியானவரே இடம்பண்ணினார். எப்படியென்றால், அவைகளை எழுதிவைக்கும்படிக்கு பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலமாரை ஏவிவிட்டார். அவர்கள் தேவ சத்தியங்களை பிழையில்லாமல் தெளிவாய் எழுதும்படிக்கு உதவி செய்தவர் அந்த ஆவியானவர் தான். பரிசுத்த ஆவியானவர் பழைய ஏற்பாட்டின் ஆகமங்களைத் தீர்க்கதரிசிகள் எழுதிவைக்க ஏவிவிட்டாரென்று நாம் அறிவோம். ஏனெனில்: தீர்க்கதரிசனம் பூர்வத்தில் மனுஷன் சித்தத்தினால் வராமல், பராபரனுடைய பரிசுத்த மனுஷர் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டுப் பேசினார்கள் (௨ பேதுரு 1, 21) என்று சொல்லியிருக்கிறது. அப்படியே புதிய ஏற்பாட்டின் ஆகமங்களை எழுதுகிறதற்குப் பரிசுத்த ஆவியானவரே அப்போஸ்தலமாரை ஏவினார். அவர்கள் அதைப் பிசகில்லாமல் எழுதி வைத்தார்கள். அதுவே நம்முடைய விசுவாசத்துக்குச் சட்டம், நம்முடைய நடக்கைக்கும் நூல். ஆவியானவர் நமக்கு எழுதிக்கொடுத்த சத்திய வேதத்துக்கு ஒப்பான பொக்கிஷம் இந்த உலகத்தில் என்ன உண்டு. அதில் அடங்கிய தேவ சத்தியங்களை நாம் ஏற்றுக்கொள்வோமானால், நாம் பாக்கியவான்களாவோம். அதிலுள்ள முக்கிய சத்தியம் இயேசுநாதர் தான். அவரை மகிமைப்படுத்துவதே பரிசுத்த ஆவியின் விசேஷித்த வேலை.

அவர் என்னை மகிமைப்படுத்துவார்; ஏனெனில், என்னுடையதில் எடுத்து, உங்களுக்கு அறிவிப்பார் என்று கர்த்தர் சொன்னார். கிறிஸ்துவில் மாத்திரம் இரட்சிப்புண்டு. செத்துக் கிடக்கும இந்த உலகத்துக்கு வேண்டிய உயிர் கிறிஸ்துவினிடத்தில் மாத்திரம் உண்டு. கிறிஸ்துவின் சுவிசேஷமே உயிர் வருகிற வழி. இந்தச் சுவிசேஷத்தை அறிவிப்பது பரிசுத்த ஆவியின் வேலை. பரிசுத்த ஆவியானவர் எல்லாத் தெய்வ ஊழியரையும் கிறிஸ்துவை அறிவிக்கவே ஏவுகிறார். பரிசுத்த பேதுரு அப்போஸ்தலனை அவர் ஏவினதினாலே அந்த அப்போஸ்தலன் யூதசங்கத்தாருக்கு முன் தைரியமாய் நின்று, இயேசு கிறிஸ்து

வை மகிமைப்படுத்துகிறார். வேறொருவரிடத்திலும் இரட்சிப்பு இல்லை; வானத்தின் கீழே மனுஷரில் வேறொரு நாமம், அதினால் நாம் இரட்சிக்கப்படவேண்டுமென்று கட்டளையிடப்பட்டதும் இல்லை என்று தைரியமாய்ச் சொல்லி, இயேசுவின் நாமத்தை யாவருக்கும் கூறினார் (அப். 4, 12).

அப்போஸ்தலமாரை வழி நடத்தின பரிசுத்த ஆவியானவர் இந்த உலகத்தின் முடிவுபரியந்தம் தம்முடைய திருச்சபையோடிருந்து அதை வழி நடத்துகிறார். ஆகிலும், அவர் நமக்குப் புதுச்சத்தியங்களை வெளிப்படுத்துவாரென்றும், புதுக் காரியங்களை நமக்கு அறிவிப்பாரென்றும் நாம் எதிர்பார்க்கக் கூடாது. காலம் புதிதானாலும் சத்தியங்கள் புதிதல்ல. அப்போஸ்தலமாரையும், அவர்களுடைய பிரசங்கம் கேட்டவர்களையும் இரட்சித்த சத்தியங்களே நம்மையும் இரட்சிக்கும். அவர்களை இரட்சித்த இயேசுநாதரே நம்மையும் இரட்சித்தவராயிருக்க, வேறே சத்தியங்கள் எங்கேயிருந்து வரும். நாம் இரட்சிப்புக்கான சத்தியங்களை அறிந்துகொள்ளவும் அதை மற்றவர்களுக்கு அறிவிக்கவும் வேண்டியானால், அதைச் சத்திய வேதத்தைக்கொண்டு மாத்திரம் படித்துக்கொள்ளலாம். பரிசுத்த ஆவியானவர் நம்மைச் சத்தியத்துக்குள் வழி நடத்தும்படிக்கே சத்திய வேதத்தை நமக்குக் கொடுத்திருக்கிறார். ஆகையால், வெளிச்சம் வேண்டியவர்களுக்கு வேதமே வெளிச்சம் கொடுக்கும். வழி வேண்டியவர்களுக்கு வேதமே வழிகாட்டும். உயிர் வேண்டியவர்களுக்கு வேதமே உயிர் தரும். பரிசுத்தம் வேண்டியவர்களுக்கு வேதமே பரிசுத்தம் கொடுக்கும். உலகத்திலுள்ள ஒரு புத்தகத்துக்கும் இல்லாத மகிமை சத்தியவேத புத்தகத்துக்கு இருப்பது எதினால் என்றால், அதிலே பரிசுத்த ஆவியானவர் பேசுவதினாலே தான். அவருடைய சத்தியத்துக்கு நாம் செவி கொடுப்போமாக. அவருடைய சத்தியத்திற்கு நாம் கீழ்ப்படிவோமாக. அப்பொழுது அவர் வேதத்தில் இருக்கிற சகல சத்தியத்துக்குள்ளும் நம்மை வழி நடத்துவார். அவருடைய கிருபையால் நாமும் கிறிஸ்துவை மகிமைப்படுத்துவோம்.

தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவரே, ஏழைப் பாவிகளாகிய எங்களையும் காத்துக்கொள்ளும், போதியும், வழி நடத்தும். எங்களிலே கிறிஸ்துவை மகிமைப்படுத்தும். நாங்கள் கிறிஸ்துவில் பிழைக்கவும், கிறிஸ்துவில் நடக்கவும், கிறிஸ்துவில் மரிக்கவும், எங்களுக்கு ஒத்தாசை செய்தருளும், சுவாமி. ஆமென்.

---



## கர்த்தர் உயிர்த்தெழுந்த பண்டிகைக்குப் பிந்தின ௫-ம் ஞாயிறு.

யோவான் 16, 23-30.

பிரியமானவர்களே,

கிர்மானியா தேசத்தைச்சேர்ந்த ஒரு நாட்டிலே நானூறு வருஷங்களுக்கு முன் பிரதரிக்கு என்றொரு சிற்றரசர் இருந்தார். அவர் நம்மைப்போல் லுத்தரன் சபையைச் சேர்ந்தவர். அவர் நம்முடைய சபையில் இருந்ததின் நிமித்தம் அவரோடு சண்டைபோட்டு அவரை ஊரைவிட்டுத் துரத்த ரோமான் சபையைச் சேர்ந்தவர்கள் யோசனைபண்ணினார்கள். இது அவருக்குத் தெரிந்தபொழுது மிகுந்த விசனப்பட்டு, தம்மைச் சேர்ந்த பெரிய மனுஷர்களோடு அதைக்குறித்துப் பேசிக்கொண்டிருந்தார். அவர் அந்தப் பிரபுக்களைப் பார்த்து: என்னை ஊரைவிட்டுத் துரத்திவிட்டால், நீங்களெல்லாரும் சீவனத்துக்கு என்ன செய்வீர்களென்று கேட்டார். அதற்கு ஒருவர்: எனக்குச் சிலம்பம் பண்ணத் தெரியும், அதைக்கொண்டு பிழைத்துக்கொள்ளுவேன் என்றார். மற்றொருவர்: எனக்கு வலை பின்னத் தெரியும், அந்த வேலை செய்து பிழைத்துக்கொள்ளுவேன் என்றார். பின்னொருவர்: எனக்குத் தச்சவேலை தெரியும், அதைக்கொண்டு பிழைத்துக்கொள்ளுவேன் என்றார். ஒட்டோ என்ற ஒரு துரையோ: எனக்குச் செபம் பண்ணத்தெரியும், அது இன்பமான வேலை; உண்மையுள்ள பராபரனிடத்தில் நான் அந்த வேலையை இப்பொழுதே செய்வேன். நான் செபஞ்செய்தால், நீங்கள் பயப்படுகிற சண்டை நேரிடாது. இந்தத் துரைமாரெல்லாரும் சொன்ன ஒரு தொழிலையும் செய்து பிழைக்க நேரிடாது என்று சொன்னார். அவர் சொன்னபடி செய்தார். யுத்தம் நடக்கவில்லை. — நமக்குச் செபம்பண்ணத்தெரிகிறது எவ்வளவு நல்லது. இயேசுநாதர் நம்முடைய சுவிசேஷ வாக்கியத்தில் நம்மைச் செபம்பண்ணச்சொல்லுகிறார். அவர் சொல்லுகிறபடியே அவருடைய நாமத்தில் செபம்பண்ணுகிறது பராபரனுக்கு அதிகப்பிரியம். ஏனென்றால், இயேசு என்கிற நாமம் பிதாவுக்குப் பிரியமானது. வானத்திலாவது பூமியிலாவது அந்த நாமத்துக்குச் சரியானது கிடையவே கிடையாது. நாமெல்லாரும் இயேசுவின் நாமத்தில் செய்கிற செபம் மெய்யாகவே வாய்க்கும். ஆகையால் இன்றைக்கு நாம்

**இயேசுவின் நாமத்தில் செபம் செய்கிறதைப் பற்றிச் சிந்திப்போம்.**

1. இந்தச் செபத்தைச் சரியாய் செய்கிறவர்கள் ஆர்.
2. இந்தச் செபத்துக்கு வரும் பலன் என்ன.

## 1.

இயேசுவின் நாமத்தில் சரியாய் செபஞ்செய்கிறவர்கள் ஆர் என்று பார்ப்போம்.

மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் என் நாமத்திலே பிதாவைக் கேட்கப்போகிற யாவையும் உங்களுக்குக் கொடுப்பார். இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்திலே ஒன்றுங் கேட்டதில்லை; உங்கள் சந்தோஷம் நிறைந்ததாயிருக்கக் கேளுங்கள், அப்போது வாங்குவீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.— இரட்சகருடைய இந்தக் கட்டளையை அவருடைய சீஷர்களாகிய நாம் நன்றாய்க் கவனிக்கவேண்டும். அதிலே அவர் பிதாவை நோக்கிச் செபம்பண்ணவேண்டுமென்கிறார். உன் தேவனாகிய கர்த்தர் நாமே நமக்குமுன்பாக உனக்கு வேறே தேவன் இல்லாமல் போவதாக என்று சொன்ன பராபரன் இவர்தான். அவரை நோக்கிச் செய்கிற செபமே சரியான செபம். வேறே தேவர்களையாவது, விக்கிரகங்களையாவது, பேய்பிசாசுகளையாவது நோக்கிச் செபம்பண்ணுகிறது பாவம். நம்முடைய தேசத்திலுள்ள அஞ்ஞானிகள் செய்கிற செபங்கள் சரியான செபங்களல்ல. அவைகளினால் பிரயோசனமில்லை. இயேசுவின் பிதாவாகிய பராபரனை நோக்கிச் செய்கிற செபமே நல்ல செபம்.

நாம் இயேசுவின் நாமத்திலே செபஞ்செய்யவேண்டும். பழைய ஏற்பாட்டிலிருந்த விசுவாசிகளும் இயேசுவின் சீஷரும் இயேசுநாதரை விசுவாசித்தும், அவருடைய நாமத்தைத் தங்கள் செபங்களில் உபயோகிக்கவில்லை. இயேசுநாதர் கற்பித்த பிற்பாடு அப்போஸ்தலமார் அந்த நாமத்தைச் சொல்லிச் செபம்பண்ணினார்கள். மற்றக் கிறிஸ்தவர்களும் அப்படியே செய்துவருகிறார்கள். நாமும் அப்படிச் செய்யவேண்டும். இயேசுவின் நாமத்திலே செபம்பண்ணுகிறதென்றால் என்ன.

செபம்பண்ணும்பொழுது இயேசு என்கிற பரிசுத்த பெயரை வாயிலே வைத்துச் சொல்லுகிறதே அவருடைய நாமத்தில் செய்கிற செபமென்று நினைக்கப்படாது. மனசில் இருந்து வராத உதட்டுச் செபத்தைக் கர்த்தர் அருவருக்கிறார். அப்படியே இயேசுநாதரை மனசிலே விசுவாசிக்காமல், அவர் பெயரை உதட்டினாலே மாத்திரம் சொல்லுகிறது அவருக்குப் பிரியம் அல்ல. இயேசுநாதரை மனசிலே கொஞ்சமும் விசுவாசிக்காத சில மந்திரவாதிகள் ஒரு சமயத்திலே அவருடைய நாமத்தைச் சொல்லத் தொடங்கி: பவுல் பிரசங்கிக்கிற இயேசுவின் பேரிலே உங்களை ஆணையிடுகிறோம் என்றார்கள். பொல்லாத ஆவி பிரத்தியுத்தரமாக: இயேசுவை அறிந்திருக்கிறேன், பவுலையும் அறிவேன்; ஆனால் நீங்கள் ஆர் என்று சொல்லி, பொல்லாத ஆவியிருந்த மனுஷன் அவர்கள் மீதில் பாய்ந்து, அவர்களை மேற்கொண்டு, அவர்கள் அம்மணமாகவுங் காயப்பட்டவர்களாகவும் அந்த வீட்டை விட்டு ஓடிப்போகும்படியாய், அவர்கள் பேரில் பெலன் செய்தான் என்று எழுதியிருக்கிறது (அப். 19,13-16). ஆகையால் வாய்ப்பேச்சுக்கு மாத்திரம் இயேசுவின் பெயரைச் சொல்லுகிறவர்களுடைய செபம் பலிக்காது.



இயேசுவை விசுவாசத்தினால் பற்றிக்கொண்டவர்களாய் நாம் செபம்பண்ணவேண்டும். இயேசுவை விசுவாசிக்கிறவர்கள் தங்கள் புண்ணியத்தை நம்பமாட்டார்கள். நான் நல்லவனாகையால் கர்த்தர் என் செபத்தைக் கேட்பார் என்று நினைக்கமாட்டார்கள். இயேசுநாதர் நமக்கு இரட்சிப்பைச் சம்பாதித்தவர். அவர் மாத்திரம் பிதாவுக்குமுன் போகக்கூடியவர். அவரை முன்னிட்டு மாத்திரம் நாமும் பிதாவண்டை சேரலாம். அப்போது பராபரன் நம்மைத் தள்ளமாட்டார். தங்கள் புண்ணியத்தை நம்பிக்கொண்டுபோகிறவர்களை அவர் துரத்துவார், தண்டிப்பார். இதற்கு முன்னடையாளமாகப் பழைய ஏற்பாட்டில் ஒரு சங்கதி நடந்தது. தெய்வாலயத்துக்குள் தூபங்காட்டுகிற இடத்தில் ஆசாரியர் மாத்திரம் போகலாம், மற்றெவரும் போகக்கூடாது; இராசாவாயிருந்தாலும் போகக்கூடாது. இப்படியிருக்க, உசியா என்ற இராசா பெருமைகொண்டு, தூபபீடத்தின்மேலே தூபங்காட்டக் கர்த்தருடைய தெய்வாலயத்துக்குள் பிரவேசித்தான். இராசாவே, கர்த்தருக்குத் தூபங்காட்டுகிறது உமக்கு அடுத்தது அல்ல, அது ஆசாரியருக்கே அடுக்கும்; நீர் பரிசுத்தஸ்தலத்தை விட்டு வெளியேபோம் என்று ஆசாரிமார் தடுத்தார்கள். தடுத்தும், அவன் ஆசாரியரை மனமடிவாய்ப் பேசி, தூபங்காட்டினான். அப்போது கர்த்தர் அவனைத் தண்டித்தார். அவனுடைய நெற்றியிலே எல்லார் கண்களும் பார்க்கக் குஷ்டம் எழும்பிற்று. அவன் தன் மரண நாள் மட்டும் குஷ்டரோகியாகவேயிருந்தான் (௨ நாளா. 26, 16-21). தங்கள் புண்ணியத்தை நம்பிக்கொண்டு, அகந்தையோடு கர்த்தரை நோக்கிச் செபஞ்செய்கிறவர்களுக்கும் இது போலவே நடக்கும். இயேசுவின் நாமமே பிதாவுக்குமுன் செல்லுகிற நாமமாயிருப்பதால், அவரை முன்னிட்டு மாத்திரம் செபம்பண்ணலாம். நான் பராபரனிடத்திலிருந்து வந்ததை நீங்கள் விசுவாசித்தபடியினாலே பிதா உங்களைச் சிநேகிக்கிறார் என்று இரட்சகர் சொன்னார். ஆகையால் அவரை முழு இருதயத்தினாலும் விசுவாசிக்கிறவர்களை மாத்திரம் பிதா ஏற்றுக்கொண்டு சிநேகித்து, அவர்கள் செபத்தை மாத்திரம் கேட்கிறார்.

இயேசுவை விசுவாசித்து, அவர் நாமத்திலே செபஞ்செய்கிறவர்கள் அவரைப்போல் செபஞ்செய்வார்கள். அவர்

சரீரக்காரியங்களுக்கும் ஆத்துமகாரியங்களுக்கும் வித்தியாசம் காட்டி, செபஞ்செய்தார். அவர் கெத்சேமனே தோட்டத்திலே பாடுபடும்பொழுது: பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப்பாத்திரத்தை என்னை விட்டு நீங்கப்பண்ணும் என்று கேட்டார். தம்முடைய சீஷப்பிள்ளைகளுடைய ஆத்தும இரட்சிப்புக்காக வேண்டிக்கொள்ளும்பொழுதோ: உமக்குச் சித்தமானால் என்று சொல்லாமல், பிதாவே உம்முடைய சத்தியத்தில் இவர்களைப் பரிசுத்தமாக்கும் என்று கேட்டார். தம்முடைய சத்துருக்களுக்காகச் செபம்பண்ணும்பொழுது: பிதாவே, இவர்களுக்கு மன்னியும் என்று வேண்டிக்கொண்டார். இப்படியே நாமும் நம்முடைய சரீரவிஷயங்களைக் கட்டாயமாய்க் கேட்கக்கூடாது, ஆத்துமவிஷயங்களை அப்படிக் கேட்கலாம். இயேசுநாதர் பகலிலும் செபம்பண்ணினார், இரவிலும் செபம்பண்ணினார். நாமும் அவரைப்போல் எல்லா சமயத்திலும் செபம்பண்ணவேண்டும், எல்லா நேரத்திலும் செபம்பண்ணவேண்டும். மேலும், அவர் எல்லா இடத்திலும் செபம்பண்ணினார். மலைமேல் செபம்பண்ணினார், வனாந்திரத்தில் செபம்பண்ணினார், பந்தியில் செபம்பண்ணினார், கல்லறைத்தோட்டத்தில் செபம்பண்ணினார். விசுவாசிகள் அப்படித்தான் செய்வார்கள். ஈசாக்கு அந்திநேரத்தில் வயல் வெளியிலே செபம்பண்ணினார். எசேக்கியா இராசா வியாதிப்படுக்கைமேல் செபம்பண்ணினார். பேதுரு அப்போஸ்தலன் மேல்வீட்டில் செபம்பண்ணினார். நாத்தான்வேல் தன் தோட்டத்திலே அத்திமரத்தின் கீழ் செபம்பண்ணுகிறதை இயேசுநாதர் கண்டார். பவுல் அப்போஸ்தலன் காவல் கிடங்கிலே செபம்பண்ணினார். யோனா தீர்க்கதரிசி திமிங்கலத்தின் வயிற்றிலே செபம்பண்ணினார். இந்தப் பரிசுத்தவான்களைப்போல் நாமும் செய்யவேண்டும். கர்த்தர் எல்லா இடத்திலும் இருக்கிறார். நாம் குடியிருக்கும் வீட்டிலும், வேலை செய்யும் இடத்திலும் அவர் இருக்கிறார். ஆகையால், தோட்டம் கொத்துகிறவர்கள் தோட்டத்தில் செபம்பண்ணலாம், வயலில் உழுகிறவன் வயலில் செபம்பண்ணலாம். கச்சேரியில் வேலை செய்கிறவர்கள் அங்கே செபஞ்செய்யலாம். அடுப்பங்கரையில் சமையல் செய்கிறவள் அவ்விடத்தில் செபஞ்செய்யலாம். மேலும், இயேசுநாதர் தாழ்மையாய்ச் செபம்பண்ணினார். அவர் மகாப்பெரிய ஆண்டவராயிருந்தும், முழங்கால்படியிட்டுச் செபம்பண்ணினார் என்று நாம் அறிந்திருக்கிறோம். செபத்திலே நமக்கும் தாழ்மை வேண்டும். அகந்தையுள்ளவர்களுடைய செபத்தைக் கர்த்தர் கேட்கமாட்டார். எத்தனை கிறிஸ்தவர்கள் செபம்பண்ணும்பொழுது மேட்டிமைத்தனமாய் உட்கார்ந்திருப்பார்கள், முழங்காலில் இருப்பதில்லை. மனது தாழ்மையாயிருந்தால் அது வெளிப்ப



டையாகவும் தெரியவரும். மேலும், செபத்தில் உறுதியாய்த் தரித்திருக்கவேண்டும். நம்முடைய செபத்துக்கு உத்தரவு வருமட்டும் செபத்தை நிறுத்தக்கூடாது. இயேசுநாதர் கெத்செமனே தோட்டத்தில் மூன்று விசை செபம்பண்ணினார். ஆபிரகாம் சோதோம் கொமோரா பட்டணங்களுக்காக தொடர்ந்தேற்றியாய் ஐந்து விசை செபம்பண்ணினார். இப்படியே நாமும் இயேசுவின் நாமத்திலே செபஞ்செய்யவேண்டுமானால், இயேசுவைப்போலவும் அவரை நம்பின மற்ற விசுவாசிகளைப்போலவும் செய்யவேண்டும்.

இயேசுவின் நாமத்திலே செபஞ்செய்கிறவர்கள் இயேசுவின் சித்தப்படி செபஞ்செய்கிறார்கள். கேளுங்கள் என்று அவர் சொல்லுகிறார். அவருடைய சித்தத்துக்குக் கீழ்ப்படிந்து அவருடைய கட்டளைப்படி நாம் கேட்கவேண்டும். தேடுங்கள் என்று அவர் சொல்லுகிறார், நாம் தேடவேண்டும். தட்டுங்கள் என்று அவர் சொல்லுகிறார், நாம் தட்டவேண்டும். அவர் கட்டளையிடும்பொழுது நாம் அசட்டையாயிராமல், கீழ்ப்படியத்தான் வேண்டும். அல்லாமலும், இயேசுவின் நாமத்தில் செபஞ்செய்கிறது நமக்குப் பெரிய சிலாக்கியம் என்று அறியவேண்டும். ஒரு பெரிய இராசாவின் அரண்மனைக்குள் போகவும், இராசாவோடே பேசவும், அங்கிருக்கும் பொக்கிஷங்களில் நமக்கு வேண்டியமட்டும் எடுத்துக்கொள்ளவும் நமக்கு உத்தரவு இருந்தால், நாம் எவ்வளவு பெருமை பாராட்டுவோம். இயேசுநாதர் இன்று சுவிசேஷவாக்கியத்தினால் நம்மை இராசாதி இராசாவின் அரண்மனைக்குள் கொண்டுபோகிறார். அங்கேயிருக்கிற பிதாவோடு நம்மைப் பேசப்பண்ணுகிறார். அவரிடத்தில் இருக்கும் சகல ஆசீர்வாதங்களையும் நமக்குத் திறந்துகாட்டுகிறார். இதை நாம் இந்தப் பிரசங்கத்தின் இரண்டாம் பங்கிலே கேட்போம்.

2.

இயேசுவின் நாமத்தில் செய்கிற செபத்துக்கு வரும் பலன் என்ன என்று கேட்போம்.

நீங்கள் என் நாமத்திலே பிதாவைக் கேட்கப்போகிற யாவையும் உங்களுக்குக் கொடுப்பார். ஏனெனில் நீங்கள் என்னைச் சிநேகித்து, நான் பராபரனிடத்திலிருந்து வந்ததை விசுவாசித்தபடியினாலே, பிதாதாமே உங்களைச் சிநேகிக்கிறார் என்று கர்த்தர் சொல்லுகிறார். பிதாவாகிய பராபரன் குமாரனாகிய பராபரனைச் சிநேகிக்கிறார், அவர்மேல் பிரியமாயிருக்கிறார். பிதாவினிடத்திலிருந்து வந்து பிதாவண்டைக்குப் போன நேசகுமாரனை யாரார் விசுவாசிக்கிறார்களோ, அவர்கள் எல்லார்பேரிலும் பிதா பிரியமாயிருக்கிறார். அவர்களுடைய செபமெல்லாம் அவருக்குப் பிரியம். அவர்கள் செபத்தில் கேட்கிற எல்லாவற்

றையும் அவர்களுக்குக் கொடுப்பார். பராபரன் கொடுக்கக்கூடாத எந்த அருமையான பொருள் இருக்கிறது. வானம் அவருடையது, அதிலுள்ளதெல்லாம் அவருடையது. பூமி அவருடையது, அதில் உள்ளதெல்லாம் அவருடையது. ஆகையால், நாம் கேட்கிற எதையும் கொடுக்க அவரால் ஆகும்.

ஆகிலும், நாம் கேட்கிறவைகளை அவர் தம்முடைய சித்தத்தின்படி கொடுக்கிறார். அவர் நல்ல சித்தமுள்ளவர். நமக்கு நன்மையாயிருக்கிறதை மாத்திரம் கொடுப்பார். நமக்குத் தீமையாயிருப்பதைக் கொடுக்கமாட்டார். நாம் கேட்கிற யாவையும் அவர் கொடுக்கக்கூடியவராயிருந்தும், நாம் கேட்டவுடனே கொடுக்கிறதும் இல்லை. அவர் தம்முடைய வேளையிலே கொடுப்பார். நாம் செபம்பண்ணும்பொழுது அவர் அடிக்கடி: இன்னம் என் வேளை வந்ததில்லை என்று சொல்லுகிறதுண்டு. ஆகையால், அவருடைய வேளைவரும்பொழுது நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொள்ளலாம். பிதா யாவையும் உங்களுக்குக் கொடுப்பார் என்கிற வார்த்தையைக் கேட்ட நாம் எவ்வளவு உற்சாகமாய்ச் செபம்பண்ணலாம். என்றாலும், செபம்பண்ணுகிறவர்கள் எத்தனை கொஞ்சம் பேர்.

இன்னமும், உங்கள் சந்தோஷம் நிறைந்ததாயிருக்கக் கேளுங்கள் என்று இரட்சகர் சொல்லுகிறார். ஆகையால், இயேசுவின் நாமத்திலே செபம்பண்ணுகிறவர்களுடைய சந்தோஷம் நிறைந்ததாகும். நம்மைச் சந்தோஷப்படுத்துவதே பிதாவுக்குப் பிரியம். நாம் துக்கத்தோடு அழுகிறதை அவர் பார்த்திருக்கமாட்டார். அவர் கொடுக்கிற சந்தோஷம் குறைவாயிராது. அது நமக்கு ஆரம்பத்தில் கொஞ்சமாய்த்தோன்றினாலும் வரவர அதிகரிக்கும், நிறைவும் ஆகும். பராபரன் நமக்குக் கொடுக்கிற சந்தோஷத்தைக் கரும்புக்கு ஒப்பிடலாம். அவர் முதலில் கரும்பின் நுனியைக் கொடுக்கிறார். நுனியிலிருந்து தின்கத்தின்கத் தித்திப்பு அதிகரித்தே வருமென்று நமக்குத் தெரியும். அப்படிப்போல் பராபரன் கொஞ்சம் கொஞ்சமாய் நம்முடைய சந்தோஷத்தை அதிகரிக்கப்பண்ணி, மோட்சத்திலே அதைப் பூரணமாக்குவார். அங்கே நம்முடைய சந்தோஷம் இந்த உலகத்துக்கடுத்த எந்தக் காரியத்தினாலும் குறைகிறதற்கு இடமில்லை.

பிரியமான சகோதரர்களே, நாம் இயேசுவின் நாமத்திலே செய்கிற செபம் மகாப்பிரயோசனமானது. சவுல் அரசனைப் பிடித்திருந்த பொல்லாத ஆவியை ஓட்டும்படி தாவீது என்ற வாலிபன் கின்னரம் வாசித்தான். இயேசுவின் நாமத்தில் செய்கிற செபம் இந்தக் கின்னரத்துக்கு ஒப்பானது. எங்கே இந்த செபம் நடக்கிறதோ அங்கே பொல்லாத ஆவி நிற்கா



து. நம்முடைய தேசத்திலே பொல்லாத ஆவி உண்டு. ஆகையால், இயேசுவின் நாமத்தில் செய்கிற செபம் நமக்கு அவசியம்.

யாக்கோபு என்ற கோத்திரப்பிதா தன் மாமன் வீட்டுக்குப் போகையிலே ஒரு சொப்பனங்கண்டார். இதோ, ஒரு ஏணி பூமியிலே வைக்கப்பட்டிருந்தது. அதின் தலைப்பு வானத்தை எட்டியிருந்தது. இதோ, அதிலே பராபரனுடைய தூதர் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாயிருந்தார்கள் (௧ மோ. 28, 12). இயேசுவின் நாமத்திலே செய்கிற செபம் இந்த ஏணிக்கு ஒப்பாயிருக்கிறது. இந்த செபம் செய்கிறவர்கள் தினந்தோறும் வானத்துக்கு ஏறி இறங்குகிறார்கள். கர்த்தருடைய ஆசீர்வாதங்கள் அதினால் வந்துகொண்டேயிருக்கிறது. இப்படியிருக்க, நாம் செபம்பண்ணாமலிருக்கலாமா. பராபரனிடத்தில் சகல ஆசீர்வாதங்களும் உண்டு. அவரை நாம் ஒரு பொக்கிஷசாலை என்று சொல்லலாம். பொக்கிஷசாலையைத் திறக்கத்திறவுகோல் வேண்டுமே. நம்முடைய செபமே திறவுகோல். ஆகையால் பரம பொக்கிஷங்களைத் தேடுகிறயாவரும் செபத்தினால் அதைப் பெற்றுக்கொள்ளலாம். பிரியமானவர்களே, இயேசுவின் நாமத்திலே செபம்பண்ண மறவாதிருப்போமாக. நாம் எத்தனை விசை செபத்தை மறந்தோமோ, அத்தனை விசையும் அநேக நன்மைகளை இழந்தோம். நமக்கு வரவேண்டிய நன்மைகள், நம்முடைய பிள்ளைகளுக்கு வரவேண்டிய நன்மைகள், நம்முடைய சபைக்கு வரவேண்டிய நன்மைகள், நம்முடைய தேசத்துக்கு வரவேண்டிய நன்மைகள் அநேகம் வராமல்போகிறதற்கு நம்முடைய அசமந்தமே காரணம். இதுமுதல் நாம் செபத்தில் அசதியாயிராமல், சாக்கிரதையாயிருக்கக் கடவோம்.

எங்களைச் செபஞ்செய்யச் சொன்ன இயேசுநாதரே, எங்களுக்குச் செபத்தின் ஆவியைத் தாரும். நாங்கள் எப்பொழுதும் உம்முடைய நாமத்தில் பிதாவைநோக்கிச் செபஞ்செய்து, சகல ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ள எங்களை ஏவி எழுப்பியருளும், சுவாமி. ஆமேன்.

## கிறிஸ்து பரத்துக்கேறின பண்டிகை.

மாற்கு 16, 14—20.

பிரியமானவர்களே,

இயேசுநாதர் நம்முடைய தீர்க்கதரிசியும், பிரதான ஆசாரியரும், இராசாவுமாயிருக்கிறார். அவர் மனுஷனாகி யூதர் நடுவே முப்பத்து மூன்று வருஷம் சஞ்சரித்தார். அவர் பிதாவின் சித்தத்தை அவர்களுக்கு வெளிப்படுத்திப் பிரசங்கம் பண்

ணினதினல் தீர்க்கதரிசியாய் விளங்கினர். அவர் பாடுபட்டு இரத்தம் சிந்தி மரித்ததால் பிரதான ஆசாரியராய் விளங்கினர். அவர் உயிர்த்தெழுந்து பரத்துக்கேறிப் பராபரனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்ததினல் இராசாவாக விளங்குகிறார். இன்றைக்குக் கர்த்தர் பரத்துக்கேறின திருநாள். நாமெல்லாரும் இன்றைக்கு நம்முடைய இராசாவாகிய அவரை வணங்கிப் புகழ்ந்து ஸ்தோத்திரித்து ஆர்ப்பரிப்போம், வாருங்கள். பிதா அவரை மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டினர். தேவதூதரெல்லாரும் கைகொட்டி ஆர்ப்பரிக்கிறார்கள். கிறிஸ்தவர்களாகிய நாம் மனமகிழ்ச்சியோடும் மெய்பிரதேதோடும் ஆராதனை செய்து, அவரை மகிமைப்படுத்துவது நியாயம். இதற்கு நம்மை ஏவும்படி

பரத்துக்கேறின நம்முடைய இராசாவைக் குறித்துச் சிந்திப்போம்.

1. நம்முடைய இராசா எப்படிப்பட்டவர்.
2. அவருடைய இராச்சியம் எப்படிப்பட்டது.
3. அவருடைய இராச்சியத்தில் நமக்குக் கிடைக்கும் நன்மைகள் என்ன.

## 1.

*பரத்துக்கு ஏறின நம்முடைய இராசா எப்படிப்பட்டவர் என்று பார்ப்போம்.*

பிற்பாடு பந்தியிருக்கிற பதினொருவருக்கு அவர் தம்மை வெளிப்படுத்தி, எழுந்திருந்த தம்மைக் கண்டவர்களை அவர்கள் நம்பாமல் போனதினிமித்தம் அவர்களுடைய அவிசுவாசத்தையும் இருதயக் கடினத்தையும் அதட்டினார் என்று வாசிக்கிறோம்.

இந்த வாக்கியத்தின்படி அவர் நம்முடைய சத்துருக்களை ஜெயித்த பலத்த இராசாவென்று விளங்குகிறது. அவர் நம்முடைய பெரிய சத்துருவாகிய பிசாசை ஜெயித்தவர், மரணத்தை மேற்கொண்டவர், நம்முடைய பாவத்தைப் புதைத்துப் போட்டவர். ஏனெனில் அவர் மரித்தவராயிருந்தும், உயிர்த்தெழுந்து, தம்முடைய அப்போஸ்தலரோடு பந்தியிருந்தார். தாம் உயிர்த்தெழுந்ததைச் சீஷருடைய இருதயங்களில் நிலைவரப்படுத்தினர். இதற்காக நாற்பது நாளாக அவர்களோடு சஞ்சரித்தார். நம்முடைய இந்த மகத்துவமுள்ள இராசாவை நாம் புகழ்ந்து ஸ்தோத்திரிப்பது நியாயமல்லவா. அவரால் நமக்கு மரணபயம் அற்றுப்போயிற்றே. நித்திய ஜீவன் அவரால் நமக்கு உறுதிப்பட்டதே.

இந்த நம்முடைய இராசா எல்லாவற்றையும் அறிந்தவராயிருக்கிறார் என்று பார்க்கிறோம். அவர் தம்முடைய சீஷர்களின் இருதயத்தையும் அறிந்திருந்தார். அவர்



களுடைய அவிசுவாசமும் இருதயக் கடினமும் அவருக்கு நன்றாய்த் தெரிந்தது. அவர் உயிர்த்தெழுந்ததைக் குறித்து மகதலேனா மரியாளும் மற்ற ஸ்திரீகளும் தங்களுக்குச் சொன்னதை அவர்கள் நம்பாமல் போனது அவருக்கு நன்றாய்த் தெரிந்தது. தோமா என்ற அப்போஸ்தலனின் அவிசுவாசத்தை அவர் அறிந்து கடிந்துகொண்டதைக் குறித்து நாம் ஏற்கனவே கேட்டிருக்கிறோம். இந்தச் சமயத்திலும் அவர்களெல்லாருடைய இருதயக் கடினத்தையும் அவர் அதட்டி, அவர்களுக்குத் திடமான விசுவாசத்தைக் கொடுத்தருளினர். இந்தப் பூமியிலுள்ள இராசாக்களுக்குத் தங்கள் தேசங்களில் நடக்கிற வெளிப்படையான காரியங்கள் கூட அடிக்கடி தெரிகிறதில்லை. நம்முடைய பரம இராசாவுக்கோ எல்லாம் தெரியும். இந்தச் சமயத்திலேயும் அவர் நமது நடுவே வந்திருக்கிறார். நம்முடைய இருதயங்களைப் பார்க்கிறார். நம்முடைய நினைவுகள் அவருக்குத் தெரியும். நமக்குள்ள சந்தேகங்களில் ஒன்றும் அவருக்கு மறைவானதல்ல. நம்முடைய கவலைகளும் துக்கங்களும் சங்கடங்களும் அவருக்குத் தெரியுமென்பது நிச்சயம். இப்படிப்பட்ட இராசா நமக்கிருப்பது எவ்வளவு பெரிய சிலாக்கியம்.

நம்முடைய இராசா எங்கும் நிறைந்தவராயிருக்கிறார். கர்த்தரோவென்றால் அவர்களுடனே பேசினதுக்குப் பிற்பாடு, பரமண்டலத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, பராபரனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார் என்று எழுதியிருக்கிறது. பரமண்டலம் என்கிறது நாலு எல்லைக்குள் அடங்கிய ஒரு சிறு இடமல்ல. வலது பாரிசம் என்கிறதும் அப்படிப்பட்ட இடமல்ல. பரத்துக்கேறின நம்முடைய கர்த்தரைக் குறித்துப் பவுல் அப்போஸ்தலன்: இறங்கினவரே எல்லாவற்றையும் நிரப்பத்தக்கதாக எல்லா வானங்களின் மேலும் ஏறினவருந்தான் என்று சொல்லுகிறார் (எபேசியர் 4, 10). மேலும் சங்கீதக்காரன்: நான் விடியற்காலத்தின் செட்டைகளை யெடுத்து, கடலின் ஏறு கடைசியிலே போய்த் தங்கினாலும், அங்கேயும் உம்முடைய கை என்னை நடத்தி, உம்முடைய வலது கரம் என்னைப் பிடிக்கும் (சங்கீதம் 139, 9. 10) என்று சொல்லுகிறதினால், பராபரனுடைய வலது பாரிசம் எங்கும் இருக்கிறதென்று அறியலாம். ஆகையால் பரத்துக்கு ஏறின நம்முடைய இராசா எங்கும் இருக்கிறார் பராபரனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்த நம்முடைய இராசா இங்கும் இருக்கிறார். இயேசுநாதருடைய முக தரிசனை வானத்திலுள்ள பரிசுத்தவான்களுக்கு மாத்திரம் தெரிந்தாலும், இந்தப் பூமியில் அவர் நம்முடைய கண்களுக்கு மறைவாக நம்மோடிருக்கிறார். ஏனெனில்: இதோ, நான் உலக

முடிவுமட்டாகச் சகல நாட்களிலும் உங்களுடனே கூட இருக்கிறேன் என்று அவர் சொன்னார் (மத்தேயு 28, 20).

அவர் பராபரனுடைய வலது பாரிசத்தில் உளுக்கார்ந்தார் என்கிற வார்த்தை அவர் சர்வத்துக்கும் வல்லவர் என்று காண்பிக்கிறது. வலதுகை பலத்தையும் பராக்கிரமத்தையும் குறிக்கிற வார்த்தை. நம்முடைய இரட்சகர் வல்லமையுள்ள இராசாவாயிருப்பதினால், தம்முடைய சத்துருக்களையெல்லாம் தம்முடைய பாதங்களுக்குக் கீழ்ப் போட்டு நசுக்கி வருகிறார். எல்லாச் சத்துருக்களும் அவருடைய பாதத்துக்குக் கீழானபின் இந்த உலகத்துக்கு முடிவு வரும். அதுவரையில் நாம் பயந்திருக்க நியாயமில்லை. நம்முடைய இராசா நமக்காகப் போர் செய்வார், நம்மைக் காப்பாற்றுவார் என்கிற நம்பிக்கை நமக்குண்டு.

இதைக் குறித்துப் பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறதைக் கேட்போமாக: இவரைப் பராபரன் பரமண்டலங்களில் தம்முடைய வலது பாரிசத்திலே, எல்லாத் துரைத்தனத்துக்கும் அதிகாரத்துக்கும் வல்லமைக்குங் கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் பேர் பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மகா மேலாக உளுக்கார்த்தி, எல்லாவற்றையும் அவர் பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகச் சபைக்குக் கொடுத்தார் (எபே. 1, 20-22).

ஆகையால், திருச்சபையின் அவயவங்களாகிய நாம் திருச்சபையின் தலையாகிய இயேசுநாதரை மகிமைப்படுத்தி, அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்.

## 2.

அவருடைய இராச்சியம் எப்படிப்பட்டது என்பதைக் குறித்துக் கேட்போம்.

அவர் இவர்களுக்குச் சொன்னதாவது: நீங்கள் உலகமெங்கும் போய், சிருஷ்டியாயிருக்கிற யாவருக்குஞ் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்; விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் என்று சொன்னார். இயேசுநாதர் தம்முடைய இராச்சியத்தை ஒரு இடத்துக்கும் ஒரு ஜாதிக்கும் மாத்திரம் சொந்தமாக ஸ்தாபிக்கவில்லை. அதிலே சகல ஜாதிகளும் சேரலாம். உயர்ந்த நிலைமையிலுள்ளவர்களும் தாழ்ந்த நிலைமையிலுள்ளவர்களும் நடுத்தர நிலைமையிலுள்ளவர்களும் அதிலே சேரலாம். பரிசேயனாயிருந்த சவுலை அங்கே பார்க்கிறோம். ரோமனாகிய கொர்நேலியுவை அங்கே காணலாம். ஆபிரிக்காவிலுள்ள கந்தாக்கேயின் பிரதானி அந்த இராச்சியத்தில்



சேர்ந்தான். பிரதிதுரையாகிய செர்கியு பவுல் என்பவனுக்கு அங்கே இடமுண்டு. எஜமானாகிய பிலேமோனும், அடிமையாகிய ஒநேசிமுவும் அந்த இராச்சியத்தின் குடிஜனங்களென்று வேதம் சொல்லுகிறது. இப்பொழுது இங்கிலிஷ்காரரும் கர்மானியரும், தமிழரும் பறையரும் ஆகிய எல்லாரும் அந்த இராச்சியத்தின் குடிகளாயிருக்கிறார்கள்.

யூதர்கள் தங்களுக்கு வரப்போகிற மேசியா ஒரு உலக இராச்சியத்தை ஸ்தாபிப்பாரென்றும், அவர் உலக இராசாவாயிருப்பாரென்றும் நம்பினார்கள், இன்னமும் நம்பியிருக்கிறார்கள். அவர்கள் நம்பிக்கை அவத்தம், அப்படி ஒருபோதும் நடக்கப் போகிறதில்லை. இயேசுநாதர் அப்படிப்பட்ட இராச்சியத்தை ஸ்தாபிக்க வரவில்லை. அவர் பிலாத்துவுக்கு முன்பாக நின்றபொழுது: என் இராச்சியம் இந்த உலகத்தினுடையதல்ல (யோவான் 18, 36) என்று சொன்னார். இந்தச் சமயத்திலேயும் அவர் தம்முடைய இராச்சியத்தில் சேருகிறவர்களுக்கு விசுவாசம் தேவை என்று சொல்லுவதினால் அவருடைய இராச்சியம் உலக இராச்சியம் அல்லவென்று காண்பிக்கிறார். விசுவாசம் புறம்பான சரீரக் காரியம் அல்ல, அது ஆவிக்குரியது. கர்த்தருடைய இராச்சியமும் ஆவிக்குரியது. அதைக் கர்த்தர் மனிதருடைய இருதயங்களிலே ஸ்தாபிக்கிறார்.

பரத்துக்கேறின நம்முடைய இராசாவின் இராச்சியம் பட்டயம் ஈட்டி முதலிய புறம்பான ஆயுதங்களினால் ஸ்தாபிக்கப்படுவதல்ல. அதை மனுஷருடைய இருதயங்களில் ஸ்தாபிப்பதற்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவேண்டும். கர்த்தர் பொந்தியு பிலாத்துவுக்குமுன் சொன்னதும் இப்படித்தான். பிலாத்து அவருடனே: ஆனால் நீ இராசாவோ என்றான். இயேசு பிரத்தியுத்தரமாக: நீர் சொல்லுகிறபடி நான் இராசாதான். சத்தியத்துக்குச் சாட்சிகொடுக்க நான் பிறந்தேன், இதற்காக இந்த உலகத்திலே வந்தேன்; சத்தியவானெல்லாம் என் சத்தங் கேட்கிறான் என்றார் (யோவா. 18, 37). சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறதும் சத்தியத்துக்குச் சாட்சிகொடுக்கிறதும் ஒன்றுதான். அப்போஸ்தலமாரும் கர்த்தருடைய மற்ற ஊழியக்காரரும் கிறிஸ்துவைப் பற்றிய சுவிசேஷப் பிரசங்கத்தினாலேயே கர்த்தருடைய இராச்சியத்தை எங்கும் நாட்டிவருகிறார்கள். மேலும் ஞானஸ்நானம் மனிதரைப் புதிதாக்கிக் கர்த்தருடைய இராச்சியத்துக்குள் சேர்க்கிறது. சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறவர்களும் ஞானஸ்நானம் கொடுக்கிறவர்களும் மனுஷராயிருந்தாலும், அவர்கள் செய்யும் வேலையைக் கர்த்தர் கூட இருந்து நடப்பிக்கிறார். ஏனென்றால்: அவர்கள் புறப்பட்டு எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள். கர்த்தரோவெனில் துணையாய்க் கிரி

யை நடப்பித்து, பின்செல்லும் அடையாளங்களினால் வசனத்தைத் திடப்படுத்தினாரென்று வாசிக்கிறோம். இதனால், இந்த உலகத்திலுள்ள திருச்சபையாகிய வான இராச்சியம் மனுஷர் வேலையல்ல, கர்த்தருடைய வேலையாயிருக்கிறதென்று அறியலாம்.

மேலும், விசுவாசிக்கிறவர்களைப் பின்செல்லும் அடையாளங்களாவது, என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்திவிடுவார்கள். நவமானபாஷைகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை நீக்கிவிடுவார்கள்; சாவுக்கினமான யாதொன்றைக்குடித்தாலும் அது அவர்களுக்குச் சேதம்பண்ணாது; ஆரோக்கியமில்லாதவர்களின் மேல் கைகளை வைப்பார்கள், அப்போது சுகமாவார்கள் என்று கர்த்தர் சொன்னார். இந்த அடையாளங்களெல்லாம் ஆதித் திருச்சபையிலே நடந்துவந்தது. பவுல் அப்போஸ்தலன் பிலிப்பிப்பட்டணத்திலே பேய் பிடித்திருந்த ஒரு பெண்பிள்ளையைப் பார்த்து, ஆவியுடனே: நீ அவளை விட்டுப்புறப்பட உனக்கு இயேசுகிறிஸ்துவினுடைய நாமத்தினாலே கற்பிக்கிறேன் என்றார். அந்நேரமே அது புறப்பட்டுப்போயிற்று (அப். 16, 18). அப்போஸ்தலமார் பெந்தெக்கொஸ்தே நாளிலே பரிசுத்த ஆவியைப் பெற்று பற்பல நவமான பாஷைகளைப் பேசினார்கள் (அப்போ. 2, 14). பவுல் அப்போஸ்தலன் மெலித்தா என்ற தீவிலே தன் கையைச் சுற்றிக்கொண்ட ஒரு விஷப்பாம்பைத் தீயிலே உதறிச் சேதம் ஒன்றும் இல்லாதிருந்தார் (அப்போ. 28, 5). இந்த அப்போஸ்தலனும் மற்ற அப்போஸ்தலர்களும் அநேக அற்புதங்களைச் செய்து, அநேக வியாதிக்காரரைச் சுகமாக்கினார்கள். இந்தக் காலத்திலே அந்த மாதிரி அற்புதங்கள் நடக்கவில்லையே என்று நாம் இடறல்படக் கூடாது. இப்பொழுது அவைகள் நடப்பது அவசியமல்ல. திருச்சபை ஸ்தாபிக்கப்பட்ட ஆரம்பகாலத்துக்கு அது அவசியமாயிருந்தும், உலகமெங்கும் சுவிசேஷம் பரம்பியிருக்கிற இந்தக் காலத்தில் அற்புதங்கள் நடக்கத் தேவையில்லை. கிறிஸ்துமார்க்கத்தின் பரம்புதலே பெரிய அதிசயம். ஆகிலும், இக்காலத்தில் கூட கர்த்தர் அவசியமென்று காணும்பொழுது தம்முடைய பிள்ளைகளால் அற்புதம் நடக்கச்செய்கிறார். அற்புத அடையாளங்களின் நிமித்தமல்ல, தேவவசனத்தின் நிமித்தம் கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களே அவருடைய இராச்சியத்தின் சரியான குடிகள்.

3.

பரத்துக்கேறின நம்முடைய இராசாவின் இராச்சியத்திலே நமக்குக் கிடைக்கும் நன்மைகள் என்னவென்று பார்ப்போம்.



விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் என்று சொல்லியிருப்பதினால், இரட்சிப்பு அதில் கிடைக்கும் முக்கிய நன்மை யென்று அறிவோம். இரட்சிப்பு என்றால் என்ன. பாவம் மன்னிக்கப்படுகிறது, மரணம் நீங்கிப்போகிறது, மோட்சம் கொடுக்கப்படுகிறது. இந்த மூன்று காரியங்கள் கூடி இரட்சிப்பு என்று சொல்லப்படும். இயேசு இரட்சகரை விசுவாசிக்கிற அவருடைய குடிகளைக் கர்த்தர் தம்முடைய பரிசுத்த இரத்தத்தினாலே சுத்தம்பண்ணி, அவர்கள் குற்றங்களையெல்லாம் மன்னித்து, மோட்சத்துக்கு அழைத்துக்கொண்டுபோவார். அவர் பரத்துக்கேறி அங்கே நமக்கு வாசஸ்தலத்தை ஆயத்தம் பண்ணியிருக்கிறார். அது விசுவாசிகளுக்குக் கிடைப்பது நிச்சயம். நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படிக்கு நான் மறுபடியும் வந்து உங்களை என்னண்டையில் சேர்த்துக்கொள்ளுவேன் (யோவா. 14, 3) என்று கர்த்தர் சொன்னார். அவர் தம்முடைய பிதாவை நோக்கி: பிதாவே, நான் எங்கேயிருக்கிறேனோ, அங்கே நீர் எனக்குக் கொடுத்தவர்களும் என்னுடனே கூட இருக்கவேண்டுமென்றிருக்கிறேன் என்று செபம்பண்ணினார் (யோவா. 17, 24). இந்த நன்மைகளைப்பார்க்கிலும் பெரிய நன்மைகள் வேறென்ன உண்டு. இந்த நன்மைகளையோ அவர் பணமுமில்லாமல் விலையுமில்லாமல் இலவசமாய்க் கொடுக்கிறார். அவர் கொடுக்கிற நன்மைகளை நாம் பெற்றனுபவிக்கிறதற்கு விசுவாசம் மாத்திரம் தேவை. மெய்யான விசுவாசம் இந்த உலகத்தையும் இந்த உலகத்துக்கடுத்த காரியங்களையும் பெரிது பண்ணாமல், அவைகளைக் குப்பையாக நினைக்கிறது. இயேசுவைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொள்ளுகிறது. விசுவாசமுள்ளவன் ஆசையெல்லாம் இயேசுவின் பேரிலே தான். இப்போதும் நீங்கள் கிறிஸ்துவுடனேகூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து பராபரனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்திருக்கும் இடத்திலுள்ள மேலானதுகளைத் தேடுங்கள். பூமியின் மேல் உள்ளதுகளையல்ல, மேலானதுகளைச் சிந்தியுங்கள் (கொலோ. 3, 1. 2) என்று பவுல் அப்போஸ்தலன் நமக்குப் புத்திசொல்லுகிறார். ஆகையால்:

என் பொன்னும் செல்வமுங் கதியும் — ஆம், அவர் என் மகிழ்ச்சியே.
என் பொக்கிஷமும் அவரே; — பொருளல்லாததை நாடேன்,
என் ஆவி அவர் முன்பணியுங்; — நான் இயேசுவைச் சிநேகிப்பேன்

என்று விசுவாசி பாடுகிறான். நம்முடைய இரட்சகர் பரமண்டலத்திலே இருக்கிறார். அவர் கொடுக்கும் நன்மைகள் பரம நன்மைகள் என்று நாம் அறிந்திருப்பதால், நாம் எப்பொழுதும் பரத்துக்குப்போம் வழியிலே நடக்கவேண்டும், அந்த வழியோ நெருக்கமானது. நெருக்கமான வழியிலே அநேகர் நடக்க விரும்

பாதபடியால், அவிசுவாசிகளாயிருக்கிறார்கள்; அவர்களுக்கு இரட்சிப்பில்லை. அவிசுவாசமுள்ளவர்கள் நம்முடைய பரம இராசாவின் குடிகளல்ல. அவர்கள் பிசாசின் இராச்சியத்துக்குச் சொந்தமானவர்கள். பிசாசு எங்கேயிருக்குமோ, அங்கே அவர்களும் இருப்பார்கள். ஆகையால் இயேசுநாதர்: விசுவாசியாதவனானவெனில் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் என்று சொல்லுகிறார். குமாரனை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவனுண்டு; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை. பராபரனுடைய கோபம் அவன் பேரில் நிலைநிற்குமென்று எழுதியிருக்கிறது.

பிரியமானவர்களே, நாம் விசுவாசிகளோ அல்லவோ என்று சோதித்துப் பார்க்கக்கடவோம். நாம் விசுவாசிகளேயானால், கிறிஸ்து நமக்காக வைத்திருக்கும் மோட்சவாசஸ்தலத்துக்குச் சந்தோஷமாகக் காத்திருக்கலாம். கர்த்தர் நம்மை அழைக்கும்போது, நாம் பாக்கியமாய் மரித்து, பரலோகம் சேரலாம்.

பரத்துக்கேறின எங்கள் இராசாவே, நாங்கள் இந்த அழுகையின் பள்ளத்தாக்கிலிருந்து தவிக்கிறோம். நீர் எங்களைப் பரம ஆறுதலினால் நிரப்பி, பரம வழியிலே நடத்தி, உமக்குச் சித்தமான நேரத்தில் பரம ராச்சியம் கொண்டுபோய்ச் சேர்த்தருளும், சுவாமி. ஆமேன்.

---

## கர்த்தர் உயிர்த்தெழுந்த பண்டிகைக்குப் பிந்தின ௬-ம் ஞாயிறு.

யோவான் 15, 26—16, 4.

பிரியமானவர்களே,

நம்முடைய இரட்சகர் பரலோகத்திலிருந்து பூலோகத்துக்கு வந்தார், பாடுபட்டு, மரித்து, உயிர்த்தெழுந்து, பரத்துக்கேறினார். அங்கே அவர் நமக்காக வேண்டுதல் செய்கிறார், நம்மை ஆசீர்வதித்து நமக்கு அநேக நன்மைகளை அனுப்புகிறார். அவர் பரத்துக்கேறுமுன் பூமியிலுள்ள தம்முடைய அடியாருக்குக் கொடுத்த விசேஷித்த வாக்குத்தத்தம் பரிசுத்த ஆவியை அனுப்புவேன் என்றது. இயேசுநாதர் சம்பாதித்த இரட்சிப்பை மனிதருக்குச் சொந்தமாக்குகிறவர் பரிசுத்த ஆவியானவர்தான். இவரால் நாம் இயேசுவை நம்முடைய இரட்சகராக அறிந்து, விசுவாசித்துச் சந்தோஷப்படுகிறோம். நம்முடைய விசுவாசத்தை நமக்குள்ளே அடக்கிவைத்துக்கொள்ளாமல், அதை மற்றெல்லாருக்கு முன்னும் அறிக்கையிடும்படி அந்த ஆவி



யானவரே நம்மை ஏவிவிடுகிறார். அவருடைய ஏவுதலினாலே இயேசுநாதருடைய சீஷர் உலகமெங்கும் போய், சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, கிறிஸ்துவுக்குச் சாட்சிகளானார்கள். தேற்றரவாளன் எனக்காகச் சாட்சிகொடுப்பார், நீங்களும் சாட்சிகொடுப்பீர்கள் என்று இயேசுநாதர் சொன்ன வார்த்தை இதனால் நிறைவேறிற்று, அநேக விசுவாசிகளிடத்தில் இன்னும் நிறைவேறி வருகிறது. நம்மிடத்திலும் அது நிறைவேறவேண்டியது. இந்த விருப்பமுள்ளவர்களாய் நாம் இன்று சுவிசேஷ வாக்கியத்தைத் தியானிப்போம். அதில் சொல்லியிருக்கிற முக்கிய சங்கதி:

கிறிஸ்துவுக்குச் சாட்சிகொடுப்பதைப்பற்றி.

1. பரிசுத்த ஆவி கிறிஸ்துவுக்காகச் சாட்சிகொடுக்கிறார்.
2. விசுவாசிகளைக் கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாக்குகிறார்.

### 1.

பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவுக்காகச் சாட்சிகொடுக்கிறார் என்பதைக் குறித்துச் சற்றே சிந்திப்போம்.

பரிசுத்த திரித்துவத்தில் மூன்று ஆட்கள் உண்டு: பிதா, குமாரன், பரிசுத்த ஆவி. இந்த மூன்றாவது ஆளைக்குறித்தே நம்முடைய வாக்கியத்தில் இயேசுநாதர் பேசுகிறார். பரிசுத்த ஆவியைக் குறித்து நமது இரட்சகர் நம்முடைய வாக்கியத்தில்: பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்தியத்தினுடைய ஆவி என்ற தேற்றரவாளன் என்று சொல்லுகிறார்.

இதின்படியே பரிசுத்த ஆவி பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவர். அவர் குமாரனிடத்திலிருந்தும் புறப்படுகிறவரென்று வேறே வாக்கியங்களால் நமக்குத் தெரியும். ஆகிலும், அவர் பிதாவிடத்திலிருந்தும் குமாரனிடத்திலிருந்தும் எப்படிப் புறப்படுகிறாரென்று நமக்குத் தெரியாது. அவர் பிதாவிடத்திலிருந்தும் குமாரனிடத்திலிருந்தும் புறப்படுவதால், பிதாவைப்போலும் குமாரனைப்போலும் மெய்யான தேவனாயிருக்கிறார் என்று நாம் விசுவாசிக்கிறோம். அவர் உலகம் உண்டாக்கப்பட்டபொழுது தண்ணீர்களின் மேல் அசைவாடிக்கொண்டிருந்தார். உண்டான எல்லாப் பொருளுக்கும் அவர் உயிர் கொடுத்தார். மேலும், அவர் பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகளுக்கு வேதாகமங்களை எழுதப் பலங் கொடுத்தார். அவர்கள் சொல்லவேண்டிய காரியங்களையும் எழுதவேண்டிய காரியங்களையும் அவரே அவர்களுக்குச் சொல்லிக்கொடுத்தார் (௨ பேதுரு 1, 21). கர்த்தருடைய ஜனமாகிய இஸ்ரவேலருக்கு அவர்கள் பாவங்களைத்

தூண்டிக்காட்டி, சரியான வழிக்குக் கொண்டுவரப் பிரயாசப்பட்டார். அவர்களோ அவரை எதிர்த்து நின்றார்கள் (அப். 7, 51). நம்முடைய இரட்சகர் சகல பாவிகளுக்காகவும் மரித்து, சகலருக்கும் இரட்சிப்பைச் சம்பாதித்ததினால் பரிசுத்த ஆவியைச் சகல சாதிகள் பேரிலும் ஊற்றச் சித்தமானார். முந்த முந்த அப்போஸ்தலர்கள் மேல் ஊற்றினார். பிறகு மற்றவர்களுக்கும் அவரை அனுப்பினார்.

நம்முடைய வாக்கியத்தில் அவருக்கு இரண்டு பேர் சொல்லியிருக்கிறது. சத்தியத்தின் ஆவி என்பது ஒரு பெயர். அவர் சொல்லுவதெல்லாம் சத்தியம். அசுத்த ஆவியாகிய பிசாசு பொய்யும் மோசமுமான சங்கதிகளைப் பேசும். பரிசுத்த ஆவி ஒருபோதும் பொய் பேசமாட்டார். நமது இரட்சிப்புக்கு வேண்டிய சகல சத்தியங்களையும் அவரே நமக்குத் தெரியக் கொடுக்கிறார். இரட்சிப்புக்கான சகல சத்தியங்களுக்கும் வேர் கிறிஸ்து. சத்தியமாகிய கிறிஸ்துவைப் பரிசுத்த ஆவி உலகத்துக்கு வெளிப்படுத்துவதால், அவருக்கு சத்தியத்தின் ஆவி என்ற பெயர் தகுதியான பெயரே.

பரிசுத்த ஆவிக்குத் தேற்றரவாளன் என்ற மற்றொரு பெயருமுண்டு. அவர் உலகத்தாரை அவர்கள் பாவத்திற்காகக் கடிந்துகொள்ளுகிறாரென்று நாம் படித்திருக்கிறோம். அவர் கடிந்துகொள்ளுவதினால் யாரார் தங்கள் பாவத்தை யறிந்து, துக்கப்பட்டு அழுகிறார்களோ, அவர்களை அவர் தேற்றரவுபண்ணுகிறார். இயேசுவையும் அவர் சம்பாதித்த பெரிய இரட்சிப்பையுங் காண்பித்து, அவர்களைத் தேற்றரவு பண்ணுகிறார். இதனால் அவர்கள் துக்கம் மாறிப்போகிறது, ஆறுதலும் சந்தோஷமும் அவர்களுக்கு உண்டாகிறது.

அவர் எனக்காகச் சாட்சிகொடுப்பார், நீங்களும் சாட்சி கொடுப்பீர்கள்; ஏனெனில் ஆதிமுதலாய் என்னோடுகூட இருந்தீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர் என்ன சாட்சி கொடுக்கிறார் என்றால்:

இயேசுநாதர் மெய்யான மனிதனாகமாத்திரமல்ல, அவர் மெய்யான தேவனாகவும் இருக்கிறார் என்று சாட்சிகொடுக்கிறார். இந்தச் சத்தியம் மனுஷபுத்திக்குத் தானாய் விளங்கக்கூடிய சத்தியமல்ல. ஏனென்றால்: நீர் ஜீவனுள்ள பராபரனுடைய குமாரனென்று பேதுரு அப்போஸ்தலன் அறிக்கையிட்டபொழுது, மாமிசமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை என்று கர்த்தர் சொன்னார் (மத். 16, 17).

இயேசுநாதரே பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகள் முன்னறிவித்த மேசியா, அவரே பாவிகளை இரட்சிக்கவந்த ஒன்றான இரட்சகர், அவரை விசுவாசிக்கிறவர்கள் மாத்திரம் இரட்சிப்ப



டைவார்கள் என்பதற்குச் சாட்சிகொடுக்கிறார். வேதபுத்தகத்தை எவ்வளவாய் வாசித்தாலும், பரிசுத்த ஆவி வெளிப்படுத்தினால் அல்லாமல் ஒருவனும் அதில் கிறிஸ்துவைக் கண்டுபிடிக்க முடியாது. எத்தியோப்பியருடைய இராசாத்தியாகிய கந்தாக்கே என்பவளுடைய பிரதானி ஒருவன் தான் சவாரிபோகையில், எசாயாதீர்க்கதரிசனத்தைப் பிரியமாய் வாசித்துக்கொண்டிருந்தான். அவன் வாசித்தது கிறிஸ்துவின் பாடுகளைப் பற்றிய ஒரு தீர்க்கதரிசனம். அவனுக்கு அது கொஞ்சமாவது விளங்கவில்லை. அப்பொழுது பரிசுத்த ஆவியைப் பெற்ற புருஷனாகிய பிலிப்பு என்பவர் போய், அதை விவரித்து, இயேசுநாதரைக்குறித்துச் சொல்லிக்காட்டின பிறகு மாத்திரம் அவனுக்கு அதன் பொருள் தெரியவந்தது. உடனே அவன் கிறிஸ்துவை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றான்.

மேலும், நம்முடைய இரட்சகர் இந்த உலகத்தில் போதித்த போதனைகளுக்கும், செய்த செய்கைகளுக்கும், அடைந்த மரணத்திற்கும், உயிர்த்தெழுந்து பரத்துக்கு ஏறினதுக்கும், பரிசுத்த ஆவி சாட்சிகொடுக்கிறார். அப்போஸ்தலமார் இவைகளைக் கண்ணாரக் கண்ட சாட்சிகள் என்பது மெய்யே. ஆகிலும், இவைகளில் அநேக காரியங்கள் அவர்களுக்கு விளங்காத மறைபொருளாயிருந்தன. ஆகையால் பரிசுத்த ஆவியானவர் இவைகளுக்குச் சாட்சிகொடுத்துத் தெளிவாக்கவேண்டியதாயிருந்தது. பரிசுத்த ஆவியின் சாட்சியைப் பெற்ற பிறகுதான் அவர்கள் இவைகளைச் சரியாய் அறிந்துகொள்ளக் கூடியதாயிற்று. அறிந்தபின்தான் அவர்கள் இயேசுவின் சரித்திரத்தையும், அவர் போதனைகளையும் மற்றோருக்குச் சொல்லவும், அவைகளை வேதபுத்தகத்தில் எழுதிவைக்கவும் கூடியவர்களானார்கள்.

அப்போஸ்தலமார் எழுதிவைத்த சாட்சி பரிசுத்த ஆவியின் சாட்சி. ஆகையால் நாம் வேதபுத்தகத்தை வாசிக்கும்பொழுதும், வேதவசனத்தைக் கேட்கும்பொழுதும், பரிசுத்த ஆவி நம்மிடத்தில் சாட்சிகொடுக்கிறார். அவர் கிறிஸ்துவுக்காகவே சாட்சிகொடுக்கிறார். வேதபுத்தகம் முழுவதும் கிறிஸ்துவுக்காகவே சாட்சிகொடுக்கிறது. கிறிஸ்துவுக்காகப் பரிசுத்த ஆவி கொடுக்கிற சாட்சியை ஏற்றுக்கொள்ளுகிறவன் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளுகிறான். அவன் பராபரனுடைய பிள்ளை ஆகிறான். நாம் பராபரனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று அந்த ஆவியே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார் என்று எழுதியிருக்கிறது (ரோமர் 8, 16). சகோதரரே, இதோ, இன்றைக்கும் இப்பொழுதும் பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவுக்காகச் சாட்சிகொடுக்கிறார். அவருடைய சாட்சியை விசுவாசத்தினால் ஏற்றுக்கொள்ளுவது நமது கடமை. அவர் அடிக்

கடி சாட்சிகொடுத்தும், அதை ஏற்றுக்கொள்ளாமலே போகிறவர்கள் யாரோ, அவர்களோடு அவர் சிலகாலம் போராடிக்கொண்டிருந்தபின் விசனத்தோடு அவர்களைவிட்டுப் போய்விடுவார். அப்படிப்பட்டவர்கள் நிலைமை பரிதாபம். அவர்கள் முடிவு பயங்கரமாயிருக்கும். பரிசுத்த ஆவியினுடைய சாட்சியை ஏற்றுக்கொண்டவர்களையோ அவர் கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாக்குவார்.

2.

பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளைக் கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாக்குகிறார் என்பதைக்குறித்து இப்போது கேட்போம்.

மனிதர் கிறிஸ்துவையும் அவர் சம்பாதித்த இரட்சிப்பையும் சரியாய் அறிந்துகொள்ளக் கூடாதவர்களாயிருப்பதால், பரிசுத்த ஆவியானவர் அவர்கள் புத்தியைத் தெளிவாக்குகிறார். அப்போஸ்தலருக்கு அப்படிச்செய்தார். அதினால் நடந்ததென்ன. பெந்தெக்கொஸ்தே பண்டிகையில் சனங்களெல்லாரும் ஆச்சரியப்படத்தக்க விதமாய், அவர்கள் கிறிஸ்துவுக்காகச் சாட்சிகொடுத்துப் பராபரனுடைய மகத்துவங்களைப் பேசினார்கள். அதற்குப் பின்னும் தங்கள் மரண நாள்மட்டும் அப்படியே செய்தார்கள். ஆண்டவர் நம்மையும் பிரகாசிப்பித்திருக்கிறதில்லையா. நம்முடைய முன்னோர்களும் நம்மில் அநேகரும்கூட முன்னே கர்த்தரை அறியாமல் கல்லையும், மண்ணையும், புல்லையும், மிருகங்களையும் தேவர்களென்று வணங்கின அஞ்ஞானிகளாயிருந்திருக்க, நாம் இப்பொழுது ஒன்றான மெய்த்தெய்வமாகிய பராபரனையும் அவர் அனுப்பின இயேசு கிறிஸ்துவையும் அறிந்துகொள்ளும்படிச் செய்திருக்கிறாரல்லவா. மனிதர் கிறிஸ்துவுக்காகச் சாட்சிகொடுக்கும்படி, அவர்களுக்குத் திடச்சித்தத்தைக் கொடுக்கிறார். ஏனெனில் கிறிஸ்து பிதாவினிடத்தில் திடமும் நிலைவரமுமாய் இருக்கிற மனசு நமக்குச் சுயமாயில்லை. அது பரிசுத்த ஆவியினால் மாத்திரம் கிடைக்கும். பேதுரு அப்போஸ்தலனைப் பாருங்கள். அவர் இயேசுநாதரை நன்றாய் அறிந்திருந்தார். மனதார அவரை விசுவாசித்து அவருடைய சீஷனானார். நீர் சீவனுள்ள பராபரனுடைய குமாரனென்று அவரை அறிக்கையிட்டார். இப்படிக்கெல்லாம் இருந்தும், பெரிய வியாழன் இராத்திரி என்ன நடந்தது. இயேசுநாதர் பிரதான ஆசாரியன் வீட்டில் பாடுபடுகையில் ஒரு பெண்பிள்ளை பேதுருவைக் கண்டு: இவனும் அவனோடிருந்தான்; நீயும் அவருடைய சீஷரில் ஒருவனென்று சொன்ன உடனே, அந்த அப்போஸ்தலன்: நான் அவரை அறியேன் என்று சொல்லி இயேசுவை மறுதலித்தார் அல்லவா. தன்னைச் சபித்துக்கொள்ளவும் ஆணையிடவும் துவக்கினார் அல்லவா.



என்றாலும் அவர் பரிசுத்த ஆவியைப் பெற்றபின் எவ்வளவு உறுதியுள்ள மனிதனானார். அவர் திடமும் தைரியமுமாய் சனங்களுக்குமுன் நின்று கிறிஸ்துவுக்குச் சாட்சிகொடுத்தார். நம்மிடத்திலும் அவர் இப்படிச் செய்கிறார். நம்முடைய தேசத்தாரில் எவ்வளவு பேரை அவர் விசுவாசிகளாக்கியிருக்கிறார். எவ்வளவு பேர் கிறிஸ்துவுக்குச் சாட்சிகொடுக்கிறார்கள் என்பதை நம்முடைய கண் பார்க்கிறது, காது கேட்கிறது.

பரிசுத்த ஆவி யாரைச் சாட்சிகளாக்குகிறாரோ, அவர்கள் கிறிஸ்துவுக்காகச் சாட்சி கொடுக்கிறார்கள். இது கிறிஸ்தவர்கள் செய்யவேண்டிய முக்கிய வேலை. நீங்கள் உங்களை அந்தகாரத்தைவிட்டுத் தம்முடைய ஆச்சரியமான வெளிச்சத்துக்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்கு, தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியும், இராசரீகமான ஆசாரியக்கூட்டமும், பரிசுத்த சாதியும், அவருக்குச் சொந்தமான சனமுமாயிருக்கிறீர்கள் என்று எழுதியிருக்கிறது (க பேதுரு 2, 9). இதின்படியே தங்கள் கடமையை அவர்கள் எவ்வகையாய் நிறைவேற்றுகிறார்கள் என்று கேட்போம். முதலாவது, தங்கள் வாக்கினால் நிறைவேற்றுகிறார்கள். அப்போஸ்தலமார் அப்படிச் செய்ய உத்தரவு பெற்றார்கள். அப்படியும் செய்தார்கள். சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்களென்று கர்த்தர் சொன்னார். அப்போஸ்தலர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள். அவர்கள் தங்கள் வாயை மூடிக்கொண்டிருக்கவில்லை. வாயை மூடிப் பேசாதிருங்கள் என்று சொன்னாலும், அவர்கள் பேசாமல் இருக்கவில்லை. நாங்கள் கண்டதுகளையுங் கேட்டதுகளையும் சொல்லாதிருக்கக்கூடாதே யென்றார்கள் (அப். 4, 20). நாமெல்லாரும் இந்த அப்போஸ்தலமாரைப்போல் வெளியரங்கமாய்ச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க முடியாது. அது நம்மெல்லாருக்கும் அழைப்பல்ல. அதற்கேற்ற வரமும் பலமும் ஒவ்வொருவருக்கும் இருக்காது. ஆகிலும், நம்முடைய சக்திக்கேற்றபடி வாயைத் திறந்து, நமக்கடுத்தவர்களிடத்தில் கிறிஸ்துவுக்குச் சாட்சிகொடுக்கத்தான்வேண்டும். நாம் மெய் விசுவாசிகளானால், அப்படிச்செய்யாதிருக்க மாட்டோம். விசுவாசித்தேன், ஆகையால் பேசினேன் என்று விசுவாசி சொல்லுகிறான் (சங். 116, 10). இயேசுநாதரோடு ஒருவிசைமாத்திரம் பேசிக்கொண்டிருந்த ஒரு சமாரிய ஸ்திரி, அவரை மேசியா வென்று கண்டபொழுது என்னசெய்தாள், தெரியுமா. தன் தண்ணீர்க் குடத்தைக் கிணற்றடியில் வைத்துவிட்டு, ஊருக்குள் போய், சனங்களுடனே: வாருங்கள், நான் செய்த தெல்லாவற்றையும் எனக்குச் சொன்ன ஒரு மனுஷனை அவர் கிறிஸ்து அல்லவோ என்று பாருங்கள் என்று கூவினாள் (யோவா. 4. 28-30). இப்படி நாம் செய்யத்

தடையில்லை. இப்படிச் செய்வது நமது கடமை. இப்படிச் செய்வதற்குநாம் வெட்கப்படுவோமாகில், அது மகா விசனமான காரியம். ஏனென்றால் எவன் எனக்காகவும் என் வார்த்தைகளுக்காகவும் வெட்கப்படுகிறானோ, அவனுக்காக மனுஷனுடைய குமாரன் தமக்கும் பிதாவுக்கும் பரிசுத்த தூதருக்கும் இருக்கிற மகிமையோடே வரும்போது வெட்கப்படுவாரென்று நம்முடைய இரட்சகர் சொல்லுகிறார் (லூக். 9, 26).

விசுவாசிகள் தங்கள் வார்த்தையினாலே மாத்திரமல்ல, தங்கள் நடக்கையினாலும் கிறிஸ்துவுக்காகச் சாட்சிகொடுக்கிறார்கள். ஏனென்றால், எவர்கள் பராபரனுடைய ஆவியினால் ஏவப்பட்டு நடக்கிறார்களோ, அவர்கள் பராபரனுடைய புத்திரராயிருக்கிறார்கள் (ரோமர் 8, 14) என்று எழுதியிருக்கிறது. பரிசுத்த ஆவியால் ஏவப்படுகிறவர்கள் பரிசுத்தமாய் நடப்பார்கள். கிறிஸ்துவை விசுவாசியாத காலத்தில் அவர்களுக்குப் பிரியமாயிருந்த பாவமான யாவும் இப்பொழுது அவர்களுக்கு அருவருப்பு; பரிசுத்தமான யாவும் அவர்களுக்குப் பிரியம். பொய், திருட்டு, விபசாரம் முதலிய பாவங்களுக்கும் அவர்களுக்கும் சம்பந்தமில்லை. மெய் பேசுவதும் தர்மஞ் செய்வதும் கற்பாய் நடப்பதும் அவர்களுக்குச் சந்தோஷம். அவர்கள் ஏன் பாவத்தைப் பகைக்கிறார்கள், ஏன் பரிசுத்தமாய் நடக்க விரும்புகிறார்கள். பாவத்தினால் நஷ்டமும், பரிசுத்தத்தினால் லாபமும் வருகிறதென்றா. அப்படியல்ல. பாவத்தினால் லாபம் வந்தால் கூட அவர்கள் அதைச் செய்யமாட்டார்கள். பரிசுத்தத்தினால் நஷ்டம் வருகிறதாயிருந்தாலும், பரிசுத்தமாகவே நடப்பார்கள். ஒரு முக்கிய சமயத்தில் பொய்சொல்லுவதினாலே லாபமும், மெய்சொல்லுவதினாலே நஷ்டமும் வருகிறதாயிருந்தாலும், பொய்யைப் பேசாமல் மெய்யைத்தான் பேசுவார்கள். காரணமென்ன. கிறிஸ்துவின் நிமித்தமே அவர்கள் அப்படிச் செய்கிறார்கள். பாவமே கிறிஸ்துவைக் கொன்றது, பாவம் அவருக்கு அருவருப்பு, நான் பாவஞ்செய்கிறது அவருக்கு மகா விசனம், மகா துக்கமென்று அவர்கள் தங்கள் மனதில் நினைத்துப் பாவத்தை விலகி ஓடுகிறார்கள். என் இரட்சகர் பரிசுத்தர், பரிசுத்தம் அவருக்குப் பிரியம், நான் பரிசுத்தமாய் நடக்கும்படிக்கே பரிசுத்த ஆவி என்னை அழைத்தார், பரிசுத்த ஆவி என் இருதயத்தில் குடியிருந்து என்னைப் பரிசுத்தமாய் நடக்கக் கற்பிக்கிறார் என்று சொல்லிச் சன்மார்க்கமாய் நடக்கிறார்கள். கிறிஸ்தவர்களின் நல் நடக்கையைப் பார்க்கிற அஞ்ஞானிகளும் அவிசுவாசிகளும் கிறிஸ்துவையும் கிறிஸ்து மார்க்கத்தையும் மிகவும் மதிக்க இடம் உண்டாகிறது. கெட்டவர்களை நல்லவர்களாக்குகிற இந்த மார்க்கத்தை நாமும் சேருவோமென்று அவர்கள் சொல்லக் கூடியதாகும். வார்த்தைப்



பிரசங்கத்தால் ஒரு பங்கு நன்மையுண்டானால், அதற்கொத்த நடக்கைப் பிரசங்கத்தால் இருபங்கு நன்மையுண்டாகும்.

மூன்றாவது, விசுவாசிகள் தங்கள் பாடுகளினாலும் கிறிஸ்துவுக்குச் சாட்சி கொடுக்கிறார்கள். உங்களை ஆலயத்துக்குப் புறம்பாக்குவார்கள் என்கிறதும் தவிர, வேளை வரும், அப்போது உங்களைக் கொல்லுகிறவனெல்லாம் தான் பராபரனுக்கு ஆராதனை செலுத்துகிறவனென்று நினைப்பான் என்று கர்த்தர் நம்முடைய வாக்கியத்தில் சொல்லுகிறார். கிறிஸ்துவை விசுவாசித்து அவரை அறிக்கையிட்ட அப்போஸ்தலமாரிடத்தில் இந்த வார்த்தைகள் முந்த முந்த நிறைவேறிற்று. இயேசுநாதரைப் பகைத்து அவரைக்கொலைசெய்த யூதர்கள் அவருடைய சீஷரையும் பகைத்தார்கள். இயேசுவின் நாமத்தைக்குறித்துப் பிரசங்கிக்கப்படாதென்று கட்டளை கொடுத்தார்கள். இந்தக் கட்டளையை மீறிப் பிரசங்கித்த பொழுதோ அவர்களைத் துன்பப்படுத்தினார்கள். ஒரு சமயத்தில் பேதுருவையும் யோவானையும் வாரால் அடித்தார்கள். ஏழு உதவிக்காரரில் ஒருவராகிய ஸ்தேவானைக் கல்லெறிந்து கொன்றார்கள். ஏரோதே இராசா யாக்கோபைக் கொன்றுபோட்டான். யூதர் மாத்திரமல்ல, புறச்சாதியாரும் விசுவாசிகளைத் துன்பப்படுத்தினார்கள். கிறிஸ்துமார்க்கம் ஆரம்பித்துப் பரம்பத் துவக்கினதினால் அஞ்ஞான தேவர்களுக்கு ஆபத்து வந்துவிட்டது. அவர்களை அநேகர் ஆராதிக்காமல்; அவர்கள் கோயில்களைப் பூட்ட நேரிட்டது. இதனால் ஆசாரிகளும் பூசாரிகளும் அதிகாரிகளை ஏவிவிட்டுக் கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்தினார்கள். அவர்களைச் சாதிக்குப் புறம்பாக்கினார்கள். சொத்து சுதந்தரங்களைப் பிடுங்கிக்கொண்டார்கள். அநேகரைப் பட்டயத்தினாலே போக்கிவிட்டார்கள். அநேகரை அக்கினிக்கு இரையாக்கினார்கள். பவுல் அப்போஸ்தலன் சிரச்சேதம் பண்ணப்பட்டார். பேதுரு அப்போஸ்தலன் சிலுவையில் அறையுண்டார். மற்ற அப்போஸ்தலரும் பட்ட பாடுகள் கொஞ்சமல்ல. இவ்வளவு பாடுகளிலும் மரணத்திலும் அவர்கள் இயேசுவையே அறிக்கையிட்டு அவரிடத்தில் உறுதியாயிருந்தார்கள். நான் கிறிஸ்தவன், நான் கிறிஸ்தவன் என்று சொல்லி ஆயிரம் ஆயிரங்களான இரத்த சாட்சிகள் தங்கள் உயிரைக் கொடுத்தார்கள்.

பிரியமானவர்களே, தமிழ் நாட்டுக் கிறிஸ்தவர்களாகிய நம்முடைய காரியம் எப்படியிருக்கிறது. நாம் கிறிஸ்துவுக்காகப் பாடுபட இன்னம் காலம் வரவில்லை. நம்முடைய தேசம் கிறிஸ்தவர்களாகிய இங்கிலீஷ்காரருக்குக் கீழ் இருப்பதினால் கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்துவார் இல்லை. ஆகிலும் துன்பம் வந்தால், நாம் உற்சாகமாய்த் துன்பப் படுவோமோ. கிறிஸ்துவின்

நிமித்தம் வருகிற பாடுகளை நமக்கு மகிமையாக நினைப்போமோ. அப்போஸ்தலமாரை யூத சங்கத்தார் வரவழைத்து அடித்து விட்டு விட்ட ஒரு சமயத்தில் அடிபட்டவர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா. அவர்கள் அவருடைய நாமத்திற்காகக் கனவீனம் அடையத் தாங்கள் பாத்திரவான்களாக எண்ணப்பட்டதுக்குச் சந்தோஷமாய் ஆலோசனைச் சங்கத்தை விட்டுப் புறப்பட்டுப் போய், தினம் தினம் தெய்வாலயத்திலும் வீடுகளிலும் போதகம் பண்ணவும் இயேசுகிறிஸ்துவைச் சுவிசேஷமாய் அறிவிக்கவும் ஓயாதிருந்தார்கள் என்று வாசிக்கிறோம் (அப். 5, 41. 42). நமக்கு இப்படிப்பட்ட உறுதியிருக்கிறதா. நம்முடைய சபையாரில் எத்தனையோ பேர் கிறிஸ்துவினிமித்தம் ஒரு சிறு பேச்சைக் கேட்கமாட்டாதிருக்கிறார்கள். ஒரு சிறு நஷ்டப்பட சம்மதிக்காதிருக்கிறார்கள். இவன் வேதங் கெட்டவன், இவள் வேதங் கெட்டவள் என்று அஞ்ஞானிகள் சொல்வதைப் பொறுக்கமாட்டாத கிறிஸ்தவர்கள் இல்லையா. கொள்ளினை கொடுப்பினைக்குச் சங்கடம் வருகிறதென்று பின்வாங்குகிற கிறிஸ்தவர்கள் இல்லையா. இப்படிப்பட்டவர்களா கிறிஸ்துவுக்காக உயிரைக் கொடுக்க நினைக்கிறார்கள். நம்முடைய விசுவாச பலவீனத்தை அறிந்த கர்த்தர் நமக்குப் பெரிய துன்பங்கள் வராமல் காத்துவருகிறார். அவருடைய நாமத்தை ஸ்தோத்திரிப்போமாக. பரிசுத்த ஆவியானவர் நம்முடைய இருதயங்களில் கொடுக்கும் சாட்சிக்கு நாம் அதிகமாய் இடங்கொடுத்தோமானால்—நம்முடைய விசுவாசம் பலப்படும். நாம் பாடுகளாலும் மரணத்தினாலும் கிறிஸ்துவுக்காகச் சாட்சிகொடுப்போம்.

பரிசுத்த ஆவியாகிய பராபரனே, தேவரீர் எங்கள் விசுவாசத்தைப் பலப்படுத்தும். நாங்கள் கிறிஸ்துவை அறிக்கையிட எங்கள் நாவைத் திறந்தருளும், எங்களைச் சன்மார்க்க வழியிலே நடத்தும். உம்முடைய சா[illegible]பலத்தால் நாங்கள் துன்பங்களைச் சகிக்கவும் பாக்கியமாய் மரிக்கவும் எங்களுக்கு ஒத்தாசை செய்தருளும், சுவாமி. ஆமென்.

## பெந்தெக்கொஸ்தே பண்டிகை முதலாம் நாள்.

யோவான் 14, 23—31.

பிரியமானவர்களே,

இன்றைக்குப் பரிசுத்த ஆவி ஊற்றப்பட்ட பண்டிகை. கர்த்தர் பரத்துக்கேறின பத்தாம் நாளாகிய இன்றைக்கு அவர் தம்முடைய வாக்கின்படியே பரிசுத்த ஆவியானவரை அப்போஸ்தலர் மேல் ஊற்றினார். அவர்கள் மேல் பரிசுத்த ஆவியானவர்



அக்கினி நாக்குகள் ரூபமாய் இறங்கினார். அவர்கள் எல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு மறுபாஷைகளிலே பேசினார்கள். அவர்கள் இந்த நாளிலே செய்த பிரசங்கத்தினால் மூவாயிரம் பேர் இயேசுநாதரை விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்றார்கள். ஆகையினால், இது திருச்சபையின் பிறப்பு நாளென்று சொல்லலாம். பரிசுத்த ஆவியானவர் முதல் முதல் ஊற்றப்பட்ட அந்தப் பெரிய நாள் முதற்கொண்டு நாளதுவரையிலே ஆவியானவர் தமது திருச்சபையிலே தங்கியிருக்கிறார். அவர் தினந்தோறும் அதிலே ஏராளமான பேரைச் சேர்த்துக்கொண்டு வருகிறார். தமிழ் நாட்டுக் கிறிஸ்தவர்களாகிய நாமும் திருச்சபையில் சேர்ந்திருப்பது பரிசுத்த ஆவியானவருடைய கிருபை. அவர் நம்மைத் திருப்பாவிட்டால், நாம் திரும்பமாட்டோம். அவர் நம்மைச் சுத்திகரியாவிட்டால், நாம் அசுத்தராகவேயிருப்போம். அவர் நம்மைக் கிறிஸ்தவர்களாக்கியிராவிட்டால், அஞ்ஞானிகளாகவேயிருப்போம். அஞ்ஞானிகளுக்குரிய நிர்ப்பாக்கியத்திலிருந்து அவரே நம்மை இரட்சித்து, திருச்சபையிலே சேர்த்து, இயேசு கிறிஸ்துவினிடத்தில் நம்மைக் காப்பாற்றி வருகிறார். பரிசுத்த ஆவியானவருக்கு இப்பொழுதும் எப்பொழுதுமான சதாகாலங்களிலும் ஸ்தோத்திரம் உண்டாவதாக. நாம் இப்பொழுது வாசிக்கக்கேட்ட சுவிசேஷ வாக்கியத்தில் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்டதைப்பற்றிச் சொல்லியிருக்கிறதில்லை. பரிசுத்த ஆவியை அனுப்புவதைக் குறித்துக் கிறிஸ்து அதில் தம்முடைய சீஷருக்கு வாக்குக் கொடுக்கிறார். நாம் அதைக் கவனித்துப் பார்த்தால், பரிசுத்த ஆவியினால் நமக்குள் உண்டாகும் பலன்களைப் பற்றி அறிந்துகொள்ளலாம். ஆகையால், நாம் இப்பொழுது தியானிக்கப்போகிற சங்கதி:

**பரிசுத்த ஆவி மனிதரிடத்தில் செய்யும் வேலையினால் அவர்களில் உண்டாகும் பலன்:**

1. சிநேகம்.
2. சமாதானம்.
3. சந்தோஷம்.

### 1.

பரிசுத்த ஆவி நமக்குள் செய்யும் வேலையினால் உண்டாகும் ஒரு பலன் சிநேகம்.

ஒருவன் என்னைச் சிநேகித்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனை என் பிதா சிநேகிப்பார்; அவனண்டைக்கு நாங்கள் வந்து, அவனிடத்தில் வாசம்பண்ணுவோம் என்று இயேசுநாதர் சொன்னார்.

ஒரு பிள்ளையைப் பெற்றெடுத்து வளர்த்த தாயானவள் அந்தப் பிள்ளை தன்னைச் சிநேகிக்கவேண்டுமென்று விரும்புவாள்.

ஒரு பெண்ணைச் சிநேகித்து அவளை விவாகஞ்செய்துகொண்ட புருஷன் அவள் தன்னைச் சிநேகிக்கவேண்டுமென்று விரும்புவான். நம்முடைய இரட்சகரோ, நம்மைத் தாயைப்பார்க்கிலும் அதிகமாய்ச் சிநேகித்தவர். ஒரு புருஷன் தன் பெண்சாதியைச் சிநேகிக்கிறதைப் பார்க்கிலும் மகா அதிகமாக இயேசுநாதர் நம்மைச் சிநேகிக்கிறார். ஆகையால், நாம் அவரைச் சிநேகிப்பது நியாயம். நாம் அவரைச் சிநேகிக்கக் கடவோம். ஏனெனில், அவர் நம்மை முந்திச் சிநேகித்தார் என்று யோவான் அப்போஸ்தலன் சொல்லுகிறார் (௧ யோவா. 4, 19). இயேசுநாதரும் தம்மை நாம் சிநேகிக்கவேண்டுமென்று விரும்புகிறார். அவர் உயிர்த்தெழுந்தபின் ஒருநாள் பேதுரு அப்போஸ்தலனைப் பார்த்து: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னைச் சிநேகிக்கிறாயா, என்று கேட்டார். ஒருவிசை மாத்திரமல்ல, மூன்றுவிசை அப்படிக்கேட்டார். அதினால், அவர் நம்மிடத்தில் சிநேகத்தையே தேடுகிறாரென்று பார்க்கிறோம். பேதுரு அப்போஸ்தலன்: ஆண்டவரே, நான் உம்மைச் சிநேகிக்கிறேன் என்கிறதை நீர் அறிவீர் என்று உத்தரவு சொன்னார் (யோவான் 21, 15). இன்றைக்கு இயேசுநாதர் நம்மில் ஒவ்வொருவரையும் பார்த்து: சாமுவேலே, சாலொமோனே, மரியாளே, மார்த்தாளே நீ என்னைச் சிநேகிக்கிறாயோ என்று கேட்டால், நாம் பேதுரு அப்போஸ்தலனைப் போல் சொல்லக் கூடுமா. நாம் அவரைச் சிநேகிக்கிறோமென்றால், அதற்கான அடையாளங்கள் இருக்கவேண்டுமே.

இயேசுநாதர் தம்மைச் சிநேகிக்கிறவர்களுக்கு ஒரு அடையாளம் சொல்லுகிறார். அதென்னவென்றால், அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுவதுதான். வெறும் வாய்ப்பேச்சு கர்த்தருக்குப் பிரியமல்ல. என்னுடனே: ஆண்டவரே, ஆண்டவரே என்று சொல்லுகிற எவனும் அல்ல, பரமண்டலங்களிலிருக்கிற என் பிதாவின் சித்தத்தைச் செய்கிறவனே வானராச்சியத்திற்குள் பிரவேசிப்பான் என்று கர்த்தர் மலைப்பிரசங்கத்தில் சொன்னார் (மத். 7, 21). பிதாவின் சித்தப்படி செய்கிறதும், கிறிஸ்துவின் வசனத்தைக் கைக்கொள்ளுகிறதும் ஒன்றுதான். அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுவதே அவரைச் சிநேகிக்கிற சிநேகம். பாவத்தைப் பகைத்து, பரிசுத்தத்தைச் சிநேகித்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு நடக்கிற விசுவாசியைப் பிதா சிநேகிப்பார். அவருடைய ஆசீர்வாதங்களெல்லாம் அவனிடத்தில் வந்து தங்கும். அவன் வீட்டிலும் அவன் இருதயத்திலும் நாங்கள் வந்து வாசம்பண்ணுவோம் என்று இரட்சகர் சொல்லுகிறார். நாங்கள் என்றால் ஆர், பிதா, குமாரன், பரிசுத்த ஆவி. கிறிஸ்துவைச் சிநேகிக்கிறவனிடத்திலே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், பிதாவாகிய பராபரனுடைய சிநேகமும், பரிசுத்த ஆவியின் ஐக்கியமும் தங்கியிருக்கிறது என்பது நிச்சயம். இயேசுவைச் சிநேகிக்கிறவன் எவ்வளவு பாக்கியவான். நம்முடைய வாக்கியத்தின்படியே அவன் கர்த்தருடைய ஆலயமாயிருக்கிறான். அவனிடத்தில் பராபரனுடைய வசனம் ஆளுகிறது, ஸ்தோத்திரப்பாட்டு முழங்குகிறது. என்னைச் சிநேகியாதவன் என் வசனங்களைக் கைக்கொள்ளான்; நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல், என்னை அனுப்பின பிதாவினுடையதாயிருக்கிறது என்று கர்த்தர் சொல்லுகிறார். யாதொருவன் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைச் சிநேகியாதேபோனால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக் கடவன் என்று பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறார் (௧ கொரி. 16, 22). கிறிஸ்துவைச் சிநேகியாதவன் யார், அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளாதவனே. நம்முடைய கால்களுக்குத் தீபமும் பாதைக்கு வெளிச்சமுமான பராபரனுடைய வசனத்தைக் கைக்கொண்டு நடக்காதவன் பாவமான வழியிலே நடக்கிறான். அந்த வழி அழிவின் வழி. அதில் நடக்கிறவர்கள் மகா நிர்ப்பாக்கியர். உலகத்தார் அந்த வழியிலே நடந்து நரகத்துக்கு நேரே போகிறார்கள். அவர்களுக்குப் பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் ஆசீர்வாதமில்லை. கர்த்தர் ஆசீர்வதிக்காதவனை ஆர் ஆசீர்வதிக்கக்கூடும். ஆகையால், இயேசுநாதர் நம்மை நிர்ப்பாக்கியத்துக்கு நீங்கலாக்கி, மெய்ப்பாக்கியத்திலே காப்பாற்றும்படித் தம்மைச் சிநேகிக்கச் சொல்லுகிறார்.



நமக்கோ கிறிஸ்துவைச் சிநேகிக்கிற குணம் சுபாவ குணமல்ல. பராபரனையும் அவர் அனுப்பின கிறிஸ்துவையும் அவருடைய பரிசுத்த வசனத்தையும் பகைக்கிறதுதான் நம்மோடு பிறந்த குணம். இந்தக் குணம் மாறினாலொழிய நாம் கிறிஸ்துவைச் சிநேகிக்கமாட்டோம். ஆகையால், நமக்காகப் பரிதபிக்கிற பிதா நமக்கு உதவிசெய்யச் சித்தமாயிருக்கிறார். இதைக் குறித்து நம்முடைய இரட்சகர்: பிதா என் நாமத்திலே அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே உங்களுக்கு எல்லாவற்றையும் போதிவித்து நான் உங்களுக்குச் சொன்னவெல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார் என்று சொல்லுகிறார். பரிசுத்த ஆவியானவர் சிநேகமாகிய இயேசுநாதரை நமக்குச் சுட்டிக்காட்டுகிறார், அவருடைய வார்த்தைகளிலும் பாடுகள் மரணத்திலும் விளங்குகிற அவருடைய சிநேகத்தை நமக்கு நினைப்பூட்டுகிறார். மனுஷனே, உன் இரட்சகர் உன்னை எவ்வளவாய்ச் சிநேகித்தார், உனக்காகப் பாடுபட்டு மரித்தாரே. நீ அவரைச் சிநேகிக்க வேண்டாமா, நீ பாவத்தை விட்டுவிட்டு உன் இரட்சகரைச் சிநேகி என்று அடிக்கடி நமக்குச் சொல்லுகிறார். தம்முடைய வசனத்தினால் மெய்ச்சிநேகத்தை நம்மில் மூட்டி

விடுகிறார். ஏனெனில் அவர் சிநேகத்தின் ஆவி. நெருப்புள்ள இடத்திலே அனல் இருக்கும். பரிசுத்த ஆவி தங்கும் இடத்திலே சிநேகம் உண்டாகும். அவருடைய வேலையினால் மாத்திரம் நாம் ஆறுதலடைவோம், அவருடைய பலத்தால் மாத்திரம் நாம் கிறிஸ்துவைச் சிநேகிப்போம், அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுவோம், அவருடைய கற்பனை வழியிலே நடப்போம். அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றதினால் கிறிஸ்துவைச் சிநேகித்தார்கள். அவர் நிமித்தம் மனிதரையும் சிநேகித்தார்கள். கிறிஸ்துவைச் சிநேகிக்கிற சிநேகத்தினால் தங்கள் சுகம், பலம், உயிரையும் பொருட்டாயெண்ணாதே போனார்கள். நமக்குள்ளும் இப்படிப்பட்ட சிநேகத்தைப் பரிசுத்த ஆவி உண்டாக்குவாராக.

## 2.

பரிசுத்த ஆவியானவர் நம்மிடத்தில் செய்யும் வேலையினால் உண்டாகும் மற்றொரு பலன் சமாதானம்.

சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன், என்னுடைய சமாதானத்தை உங்களுக்குத் தருகிறேன்; உலகந் தருகிறதுபோல நான் உங்களுக்குத் தரேன், உங்கள் இருதயங் கலங்கவும் வேண்டாம், பயமாயிருக்கவும் வேண்டாம் என்று இரட்சகர் சொல்லுகிறார்.

ஆகாதவர்களுக்குச் சமாதானமில்லை என்று வேதம் சொல்லுகிறது. பாவியைத் துன்மனச்சாட்சி வேதனைப்படுத்துகிறது. அவிசுவாசமும் அவநம்பிக்கையும் அவனைக் கலங்கடிக்கிறது. ஆகையால், அவன் நிலைமை பரிதாபம். அவன் மனச்சாட்சியின் வேதனையை அமர்த்தி, கிருபையின் நிச்சயத்தை அவனுக்குள் பராபரன் உண்டாக்கினாலன்றி, அவன் மகா நிர்ப்பந்த மனுஷன். நல் மனச்சாட்சியும அமர்ந்த மனதும் சமாதானம் என்னப்படும். இதை இயேசுநாதர் நமக்குச் சம்பாதித்தார். அவருடைய காயங்கள் சமாதானத்தின் அடையாளங்கள். ஏனென்றால், நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் இறங்கிற்று, அவருடைய தழும்புகளால் குணமாகிறோமென்று எசாயா தீர்க்கதரிசி சொல்லுகிறார். கிறிஸ்து நமக்காகச் சம்பாதித்த சமாதானத்தை நமக்கு வாக்களித்தார், அதை நமக்குத் தருகிறார். அவர் தருகிறதைப் பெற்றுக்கொள்ளவோ, சொந்தமாக்கிக்கொள்ளவோ நமக்குப் பெலனில்லை. ஆகையால், இதிலும் பரிசுத்த ஆவியானவர் நமக்குத் தேவை. அவர் நம்முடைய இருதயங்களில் பாவமன்னிப்பின் நிச்சயத்தை உண்டாக்குவதினால் நமக்குள் சமாதானம் வருகிறது. கர்த்தர் கொடுக்கும் சமாதானம் மெய்யான சமாதானம். உலகமும் பிசாசும் கொடுக்கிற சமாதானம் புறம்பானது, பொய்யானது. எப்படியென்றால், ஒரு



வன் பொய் சொல்லுகிறான், திருடுகிறான் என்று வைத்துக்கொள்ளுவோம். இதற்காக அவன் மனச்சாட்சி அவனை வாதிக்கையில் பிசாசு அவனுக்கு ஆறுதலாய்ச் சொல்லுகிறதென்ன: மனுஷனே, நீ ஏன் கலங்குகிறாய், நீ பொய் சொன்னதினால் ஒரு பெரிய நஷ்டத்தைத் தடுத்தாய், நீ திருடினதால் உன் வீட்டாரின் உயிரை இந்தப் பஞ்சகாலத்தில் காப்பாற்றினாய், ஆபத்துக்குப் பாவமில்லை, இதற்காக வருத்தப்படாதே, இதனால் ஒரு கெடுதியும் உனக்கு வராது, பயப்படாதிரு என்று சொல்லுகிறது. இது பேருக்குச் சமாதானம். பாவத்தின் பலன் வந்தே தீரும். கிறிஸ்து நமக்குச் சம்பாதித்ததோ நிலைவரமான சமாதானம், பாவத்தை மன்னித்து, பாவக்குற்றத்துக்கு நம்மை நீங்கலாக்குவதால் வருகிற சமாதானம். பரிசுத்த ஆவியைக்கொண்டு, இருதயத்தில் சமாதானம் பெற்றவன் எவனோ, அவன் யாவரோடும் சமாதானமாய்ப் பிழைக்கிறான்.

பிரியமானவர்களே, நம்மிடத்திலே மெய்ச் சமாதானம் ஆளுகிறதா, அல்லது கலக்கமும் பயமும் இருக்கிறதா. நாம் இயேசுவின் வார்த்தைகளை நம்பி அவர் சம்பாதித்த பாவ மன்னிப்பை விசுவாசத்தினால் பற்றிக்கொள்வோமானால், நம்முடைய இருதயம் கலங்க வேண்டியதுமில்லை, பயமாயிருக்க வேண்டியதுமில்லை. நமக்கு எவ்வளவு துன்பம் வந்தாலும், நாம் பஞ்சணை மெத்தையில் படுத்து நித்திரை செய்கிறவனைப்போல் அமர்ந்திருக்கலாம்.

## 3.

பரிசுத்த ஆவியின் கிரியையினால் உண்டாகிற மற்றொரு பலன் சந்தோஷம்.

போய் உங்களண்டைக்கு வருகிறேனென்று நான் உங்களுடனே சொன்னதைக் கேட்டீர்கள், என்னைச் சிநேகித்தீர்களானால், பிதாவண்டைக்குப்போகிறேனென்று நான் சொன்னதற்காகச் சந்தோஷப்படுவீர்கள்; ஏனெனில் பிதா என்னிலும் பெரியவர் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இயேசுநாதர் பிதாவினிடத்திலிருந்து வந்தார். பிதாவண்டைக்குப் போகிறார். அவர் போன வழி பாடுகளின் வழி, உபத்திரவத்தின் வழி, மரண வழி. அவர் தங்களை விட்டுப் பிரிகிறது அவருடைய சீஷப்பிள்ளைகளுக்கு மகா துக்கமாயிருந்தது. அவர்கள் துக்கப்படுகிறதற்குச் சரியான நியாயமிருந்ததில்லை. இயேசுநாதர் மறுபடியும் எழுந்திருப்பாரென்றும், அவர் தங்களை மறுபடியும் பார்ப்பாரென்றும் அவர்கள் நம்பியிருந்தால், துக்கப்பட்டிருக்கமாட்டார்கள்.

உலகம் சந்தோஷமாய்த் துவக்குவது துக்கமாய் முடியும். பாவத்தைப் பாருங்கள். பாவத்தைச் செய்கிறபோது அது நமக்குச் சந்தோஷமாயிருக்கிறது. முடிவிலோ இந்தச் சந்தோஷ

மெல்லாம் துக்கமாய் மாறும். கிறிஸ்து நம்மிடத்தில் உண்டாக்கும் துக்கமோ சந்தோஷமாக முடியும். எப்படி வெள்ளிக்கிழமையின் பாடு ஞாயிற்றுக்கிழமையின் உயிர்த்தெழுதலாக இயேசுவினிடத்தில் முடிந்ததோ, அப்படியே விசுவாசிகளிடத்திலும் முடியும். கர்த்தர் தம்முடையவர்களுக்குச் சந்தோஷத்தை அருளச் சித்தமுள்ளவராயிருக்கிறார். இதை நமக்குள் உண்டாக்குகிறவர் பரிசுத்த ஆவி. அவர் பாவத்தினால் துக்கத்துக்குள்ளான பாவிக்குப் பாடுபட்ட இரட்சகரைக் காட்டிச் சந்தோஷமுண்டாக்குகிறார். பாவியே, உன் பாவம் கிறிஸ்துவுக்குத் துக்கத்தை உண்டாக்கிற்று, மரணத்தை உண்டாக்கிற்று. நீ அவரை விசுவாசித்தால் உனக்குத் துக்கமுமில்லை, மரணமுமில்லை. ஆகையால், நீ உனக்காகப் பாடுபட்ட உன் இரட்சகரைப் பார், அவருக்குள் சந்தோஷப்படு என்று சொல்லிக்கொண்டேயிருக்கிறார். அவர் தங்குகிற இடத்திலே சந்தோஷத்துக்குக் குறைவில்லை. விசுவாசி பராபரனுடைய ஐக்கியத்தில் நிலைப்பதினால், எப்போதும் சந்தோஷமாகவேயிருப்பான். ஏனெனில், அவர் சந்தோஷங்களின் ஊற்று. உம்முடைய சமுகத்திலே சந்தோஷங்களின் பரிபூரணமும், உமது வலது பாரிசத்திலே செல்வ பாக்கியங்களும் என்றைக்கும் இருக்கும் என்று எழுதியிருக்கிறது (சங். 16, 11). விசுவாசி பராபரனுடைய சமுகத்தை எந்நேரமும் பார்த்துக்கொண்டிருப்பதினால், அவனுக்கு எவ்வளவு பாடுகள் வந்தாலும், எவ்வளவு சோதனைகள் நேரிட்டாலும், சந்தோஷமாகவேயிருக்கிறான். பிலிப்பிப்பட்டணத்தில் பவுல், சீலா என்றவர்களைக் காவலில் போட்டார்கள். அவர்கள் கால்களைச் சிறைச்சாலைக்காரன் தொழுவடித்து வைத்தான். அந்த நல்ல மனிதரின் முதுகிலே சவுக்கடியால் இரத்தம் வடிந்துகொண்டிருந்தது. இப்படியிருந்தும், அந்த விசுவாசிகள் அழுதார்களா, புலம்பினார்களா. இல்லை, இல்லை. நடுச்சாமத்திலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, பராபரனைத் துதித்துப்பாடினார்கள், கட்டுண்டு கிடக்கிறவர்கள் கேட்டுக்கொண்டிருந்தார்கள் என்று எழுதியிருக்கிறது (அப். 16, 25).

பரிசுத்த ஆவியானவர் நமக்குள் உண்டாக்கும் சந்தோஷம் ஒழியாத சந்தோஷம். புசிப்பு, குடிப்பு முதலிய உலகக்காரியங்களால் சந்தோஷப்படுகிறவர்கள் உண்டு. புசிக்கிறவர்கள் சந்தோஷம், புசிப்பு நின்றவுடனே முடிந்துபோம். குடிக்கிறவர்கள் சந்தோஷமும் அப்படித்தான். கிறிஸ்துவினால் உண்டாகும் சந்தோஷமோ முடியவே முடியாது. ஏனென்றால், விடாமல் புசிக்கவும், விடாமல் குடிக்கவும் மனுஷருக்குக்கூடாது. விடாமல் இயேசுவைக் கண்ணோக்கவும் அவரிடத்திலே தரித்திருக்கவும் பரிசுத்த ஆவி உதவி செய்வதால் கிறிஸ்துவுக்குள்ளான சந்



தோஷத்துக்கு முடிவிராது. நாம் இம்மையிலும் சந்தோஷப்படுவோம், மறுமையிலும் சந்தோஷப்படுவோம். நம்முடைய சந்தோஷத்தை ஒருவனும் நம்மிடத்திலிருந்து வாங்கான்.

தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியே, நாங்கள் மெய்யான சிநேகத்திலும், எல்லாப் புத்திக்கும் மேலான தெய்வ சமாதானத்திலும், கிறிஸ்துவுக்குள்ளான சந்தோஷத்திலும் எப்பொழுதும் தரித்திருக்க எங்களுக்கு ஒத்தாசைபண்ணியருளும், சுவாமி. ஆமென்.

---

## பெந்தெக்கொஸ்தே பண்டிகை உ-ம் நாள்.

யோவான் 3, 16—21.

பிரியமானவர்களே,

நாம் நேற்றும் இன்றைக்கும் பரிசுத்த ஆவியிறங்கின பண்டிகையைக் கொண்டாடுகிறோம். பரிசுத்த ஆவியானவர் முதல்முதல் ஊற்றப்பட்ட நாள் யூதர்களுக்குப் பெந்தெக்கொஸ்தே என்ற பெரிய பண்டிகை நாளாயிருக்கிறது. பெந்தெக்கொஸ்தே என்ற வார்த்தைக்கு ஐம்பதாம் நாளென்று அர்த்தம். இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தின் அடிமைத்தனத்தைவிட்டுப் புறப்பட்டதினத்தில் பஸ்காப்பண்டிகையைக் கொண்டாடினார்கள். பஸ்காவுக்கு ஐம்பதாம் நாளில் அவர்கள் சீனாய்மலையில் நியாயப்பிரமாணத்தைப் பெற்றுக்கொண்டார்கள். இதை அவர்கள் வருஷாவருஷம் நினைத்துப் பண்டிகை கொண்டாடினார்கள். சீனாய்மலையில் பெற்றுக்கொண்ட நியாயப்பிரமாணத்தை இஸ்ரவேலர் மீறிநடந்தார்கள். அவர்கள் சீனாய்மலையண்டையில், பராபரனோடு செய்த உடன்படிக்கையை முறித்துப்போட்டார்கள். புதிய ஏற்பாட்டின் பெந்தெக்கொஸ்தே பண்டிகையாகிய பரிசுத்த ஆவியின் பண்டிகையில் திருச்சபையானது பராபரனுடைய கிருபையின் உடன்படிக்கைக்கு உட்பட்டது. அன்றைக்குப் பராபரன் பரிசுத்த ஆவியைத் தம்முடைய சீஷர் மேல் ஊற்றினதினாலும், அநேக சனங்களைத் தம்முடைய சபையிலே சேர்த்ததினாலும், பாவமுள்ள மனுஷ ஜாதியின்மேல் தாம் வைத்த கிருபையை வெளிப்படுத்தினார். ஆகையினால் யூதர் கொண்டாடின பெந்தெக்கொஸ்தே பண்டிகையைப்பார்க்கிலும், கிறிஸ்தவர்கள் கொண்டாடுகிற பெந்தெக்கொஸ்தே பண்டிகை அதிக மகிமையானது. இதில் நம்மை ஆக்கினைக்குள்ளாக்கும் நியாயப்பிரமாணம் கூறப்படவில்லை. பாவமன்னிப்பை நமக்குக் கொடுக்கும் மகா இன்பமான சுவிசேஷம் கூறப்பட்டது. இந்தச் சுவிசேஷத்தின் சாரத்தை இன்றைக்கும் கேட்கிறோம். உலகமெங்கும் இதே சுவிசேஷம் பிரசங்கிக்கப்

பட்டு வருகிறது. ஆகிலும் எல்லாரும் இரட்சிக்கப்படுகிறதில்லை. சிலர் இரட்சிப்பு அடைகிறார்கள். அநேகரோ ஆக்கினைக்குள்ளாகிறார்கள். இதற்குக் காரணம் என்னவென்று நம்முடைய சுவிசேஷவாக்கியத்தினால் அறிந்துகொள்ளலாம்.

**மனிதரின் இரட்சிப்புக்கும் ஆக்கினைத் தீர்ப்புக்கும் காரணம் என்ன.**

1. இரட்சிப்புக்குக் காரணம் பராபரனுடைய சிநேகம்.
2. ஆக்கினைத் தீர்ப்புக்குக் காரணம் மனிதருடைய அவிசுவாசம்.

## 1.

மனிதருடைய இரட்சிப்புக்குக் காரணம் பராபரனுடைய சிநேகம் என்று பார்க்கலாம்.

பராபரன் தம்முடைய ஒரே பேறான குமாரனை, அவர் பேரில் விசுவாசிக்கிறவனெல்லாம் கெட்டுப்போகாமல், நித்திய ஜீவனை அடைவதற்காக, தந்து அத்தன்மையாய் உலகத்தைச் சிநேகித்தார். இந்த அருமையான வாக்கியத்திலே பராபரனுடைய ஒப்பற்ற சிநேகத்தின் சுவிசேஷம் எல்லாம் திரட்டிச் சொல்லியிருக்கிறது.

இதிலே நாம் முந்த முந்தப் பிதாவின் சிநேகத்தைப் பார்க்கிறோம். பிதாவாகிய பராபரன் நம்மைத் தம்முடைய சாயலாகச் சிருஷ்டித்ததே பெரிய சிநேகம். இரட்சிப்பில் விளங்கும் சிநேகமோ இதிலும் பெரியது. ஏனென்றால் பராபரன் யாரைச் சிநேகித்தார். பரிசுத்தத்தில் நிலைத்திருந்து, இரவும் பகலும் தமக்குப் பணிவிடை செய்கிற பரிசுத்த தெய்வதூதர்களைச் சிநேகிக்கிற சிநேகத்தைக் குறித்து நாம் இங்கே வாசிக்கிறதில்லை. அவர் உலகத்தைச் சிநேகித்தாரென்று வாசிக்கிறோம். உலகம் என்பது பாவ மனுஷ ஜாதியைக் குறிக்கும். பராபரன் பாவிகளைச் சிநேகித்தார். அவர்களில் அவர் விரும்பத் தக்கது ஒன்றுமில்லை. அவர்கள் இருதயம் அசுத்தத்தினாலே நிறைந்தது. அவர்கள் சகல அநியாயத்தினாலும் வேசித்தனத்தினாலும் பொல்லாங்கினாலும் பொருளாசையினாலும் ஆகாமியத்தினாலும் நிறைந்தவர்கள்; பொருமை கொலைபாதகம் சண்டை சர்ப்பனை துர்க்குணமும் அவர்களைச் சூழ்ந்திருக்கிறது. அவர்கள் அவதூறுக்காரர், பின்புறணிக்காரர், தெய்வபகைஞர், உதாசனர், பெருமைக்காரர், வீம்புக்காரர், பொல்லாப்புகளுக்கு ஆதிகாரணர், பெற்றோருக்குக் கீழ்ப்படியாதவர்கள், புத்தியில்லாதவர்கள், உடன்படிக்கையில் நில்லாதவர்கள், சுபாவ அன்பில்லாதவர்கள், ஒப்புரவாகாதவர்கள், இரக்கமில்லாதவர்களுமாயிருக்கிறார்கள் (ரோமர் 1, 29-31). இதுவே மனுஷ ஜாதியின் அழகு. இந்த அவலட்சண உலகத்தைப் பராபரன் சிநேகித்தார். உலகத்தைச் சிநேகிப்பதில்



அவருக்கு லாபம் ஒன்றும் இல்லை. இது நன்றிகெட்ட உலகம். இதைச் சிநேகிப்பது அவர் கடமையுமல்ல. இந்தப் பொல்லாத உலகத்தை, அசுத்த மனித ஜாதியை அவர் ஆக்கினைக்குள்ளாக்குவது நியாயமாயிருக்கும், அழித்துப்போடுவது நீதியாயிருக்கும். அவரோ அப்படிச் செய்யாமல், பாவிகள் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவர்களைச் சிநேகிக்கிறார். பாவிகள் உயிரடைய அவர் ஏற்படுத்தின வழியென்ன. தம்முடைய ஒரே பேறான நேசகுமாரனைக் கொடுத்தருளினார்.

இந்த நேசகுமாரனுடைய சிநேகமே சிநேகம், இதற்கு ஒப்புமில்லை, உவமையுமில்லை. அவர் தம்முடைய பிதாவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து பாவ உலகத்திற்கு வந்தார். பாவியின் உருவை எடுத்துக்கொண்டார். பாவத்தையெல்லாஞ் சுமந்தார். பாவிகள் எல்லாருக்கும் வரவேண்டிய சகல ஆக்கினையையும் தமதுமேல் ஏற்றுக்கொண்டார். அவர் உள்ளும் புறம்பும் பட்ட பாடுகளுக்குக் கணக்கில்லை. பராபரனுடைய நீதிக்குச் சரிசெலுத்தி, மனிதரை இரட்சிக்க என்னென்ன தேவையோ, அதையெல்லாம் அவர் செய்தார். அவர் தாம் செய்ததைக் கொஞ்சமும் குறையுமாய் விட்டவரல்ல. யாவையும் முற்றும் முடிய நிறைவேற்றினார். ஆகையால், அவர் சிலுவை மரத்திலே சொல்லிமுடியாத வேதனைப்பட்டு, உயிர்விடுமுன் முடிந்தது என்று சொன்னார். நாம் அவரைப் பார்த்து: பரிசுத்தமுள்ள இயேசுவே, உமக்கு ஏன் இந்தப் பாடு, உமக்கு ஏன் இத்தனை காயங்கள், உம்முடைய இரத்தமெல்லாம் சிந்துண்டது ஏன், நீர் ஏன் மரிக்கவேண்டும் என்று அவரைக் கேட்டால், அவர் என்ன சொல்லுவார். பாவியே, நான் உன்னைச் சிநேகித்த சிநேகமேயல்லாமல், உன்னை இரட்சிக்க வேண்டுமென்கிற ஆசையே அல்லாமல், இதற்கு வேறே காரணமில்லையென்று சொல்லுகிறார். இயேசுநாதர் நமக்காகப் பாடுபட்டு மரித்திராதே போனால், நாம் இரட்சிக்கப்படுவதில்லை. நமக்காகப் புண்ணியம் சம்பாதித்த அவருடைய சிநேகமே நம்முடைய இரட்சிப்புக்கு முக்கிய காரணம்.

இந்தச் சிநேகத்தை நமக்கு வெளிப்படுத்துகிறவர் பரிசுத்த ஆவி. இவரையல்லாமல் தேவ சிநேகத்தின் இரகசியம் நமக்குத் தெரிய வராது. அவருடைய சிநேகத்தை நாம் பற்றிக்கொள்ள முடியாது. தேவ சிநேகம நமக்கு இரட்சிப்பைச் சம்பாதித்தும், அந்த இரட்சிப்பு நமக்குச் சொந்தமாகாதே போனால், என்ன பிரயோசனம். விசுவாசத்தினால் மாத்திரம் அது நமக்குச் சொந்தமாகும். அவர் பேரில் விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படமாட்டான். அவர் பேரில் விசுவாசிக்கிறவனெல்லாம் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடைவான் என்று

சொல்லியிருக்கிறது. விசுவாசிக்கவோ நமக்குப் பெலனில்லை. விசுவாசத்தை உண்டாக்குகிறவர் பரிசுத்த ஆவி. பராபரனுடைய சிநேகத்தை அறிந்துகொள்ளவும், அதன்பேரிலே நம்முடைய முழு நம்பிக்கையையும் வைக்கவும் பண்ணுகிறவர் பரிசுத்த ஆவியானவர்தான். அவர் நம்முடைய இருதயத்தில் வேலை செய்வதற்கு அவரை ஏவுவதும் சிநேகமேயல்லாமல் வேறல்ல. பரிசுத்த ஆவியானவர் சுத்த சிநேகத்தினால் நம்மண்டை வந்து, நமக்கு வெளிச்சம் தந்து, இயேசுவாகிய வெளிச்சத்தண்டை நம்மைக் கொண்டுவருகிறார். இயேசுநாதர் சம்பாதித்த பாவமன்னிப்பை நமக்குக் கூறுகிறார். இயேசுவாகிய வெளிச்சத்தோடு நம்மை ஐக்கியப்படுத்துகிறார். இயேசுவோடு ஐக்கியமானவன் பாவத்தை அருவருத்து நீதியைச் சிநேகிக்கிறான். அவனைக் குறித்து: உண்மையைச் செய்கிறவன் தன் கிரியைகள் வெளியாகும்படிக்கு வெளிச்சத்தண்டை வருகிறான். ஏனெனில் அவைகள் பராபரனுக்குள் செய்யப்பட்டிருக்கிறதென்று கர்த்தர் சொல்லுகிறார்.

சகோதரரே, நம்முடைய இரட்சிப்புக்குப் பிதாவின் சிநேகமும் குமாரனின் சிநேகமும் பரிசுத்த ஆவியின் சிநேகமுமே காரணம் என்பதை அறிந்திருக்கிற நாம் என்ன செய்யவேண்டும். நம்முடைய பராபரனாகிய கர்த்தரை நம்முடைய முழு இருதயத்தினாலும் ஸ்தோத்திரிக்கவேண்டும், அவரை மகிமைப்படுத்தவேண்டும், அவரை முழு மனதினாலும் சிநேகிக்கவேண்டும். இம்மையில் அவரை மகிமைப்படுத்துகிறவர்கள் மறுமையிலும் நித்திய ஜீவனில் அவரை மகிமைப்படுத்துவார்கள். ஆனால் தேவ சிநேகத்தை விசுவாசிக்காமல் போகிறவர்கள் யாரோ, அவர்கள் ஆக்கினைக்குள்ளாகி, பராபரனுடைய நித்திய கோபாக்கினையில் பங்கு பெறுவார்கள். இதைக்குறித்து நாம் இரண்டாவதாகச் சிந்திப்போம்.

## 2.

மனிதர் இரட்சிக்கப்படாமல் ஆக்கினைத் தீர்ப்படைவதற்குக் காரணம் அவர்களுடைய அவிசுவாசமே.

விசுவாசியாதவனெவனோ, பராபரனுடைய ஒரே பேறான குமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாசியாமல் போனபடியினாலே, அப்பொழுதே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டிருக்கிறான். பராபரன் மனிதரை மகா சிநேகமாய்ச் சிநேகித்தும், அநேகர் அவருடைய சிநேகத்தை ஏற்றுக்கொள்ளுகிறதில்லை, இயேசுநாதரை விசுவாசிக்கிறதில்லை, நித்திய ஜீவனை அடைகிறதுமில்லை. இதற்கு என்ன காரணம். பராபரனிடத்தில் இதற்குக் காரணமில்லை. அவர் எல்லா மனிதரும் இரட்சிக்கப்படுவதற்குச் சித்தமுள்ளவராயிருக்கிறார். எல்லாருக்காகவும் பராபரன் தம்முடைய குமாரனைக் கொடுத்தார். எல்லாருக்காகவும் இயேசுகிறிஸ்து பாடுபட்டு மரித்தார். எல்லாருக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்படுகிறது. பிரயாசப்பட்டுப் பாரஞ் சுமந்தவர்களாகிய நீங்கள் எல்லாரும் என்னண்டைக்கு வாருங்கள் என்று கர்த்தர் கூப்பிடுகிறார். ஆகிலும், அநேகர் வருகிறதில்லை.



பராபரனாகிய கர்த்தர் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலர் எல்லாருக்கும் பாலுந் தேனும் ஓடுகிற கானான் தேசத்தைக் கொடுக்கப் பிரியசித்தமாயிருந்தார். அந்தத் தேசத்துக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கவே அவர்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்தார். என்றாலும், அவர்களில் இரண்டேபேர் கானான் தேசத்துக்குள் போனார்கள். மற்றவர்களெல்லாரும் வனாந்தரத்திலே மடிந்தார்கள். இதற்குக் காரணம் அவர்களுடைய அவிசுவாசமே. இப்படியே பராபரன் நித்திய ஜீவனை எல்லாருக்குங் கொடுக்கச் சித்தமாயிருந்தும், அநேகர் அவிசுவாசத்தினால் நித்திய ஜீவனையிழந்து ஆக்கினைக்குள்ளாகிறார்கள். அவர்களுடைய அவிசுவாசம் அவர்கள் கண்களைக் குருடாக்குகிறது. அவர்கள் குருட்டுக் கண் நரகத்தின் பயங்கரத்தையும் மோட்சத்தின் மகிமையையும் பார்க்காமல் போகிறது.

இதைக் குறித்து நம்முடைய இரட்சகர் சொல்லுகிறதைக் கேட்போமாக. வெளிச்சம் உலகத்திலே வந்திருந்தும், மனுஷர் வெளிச்சத்தைப் பார்க்க இருளைச் சிநேகித்ததே ஆக்கினைக்குள்ளாக்குதலாயிருக்கிறது. அதெனென்றால் பொல்லாங்கு செய்கிறவனெல்லாம் வெளிச்சத்தைப் பகைத்து, தன் கிரியைகள் அதட்டப்படாதபடிக்கு, வெளிச்சத்தண்டை வராதிருக்கிறான் என்று எழுதியிருக்கிறது. இயேசுநாதர் மெய்யான வெளிச்சம். நானே உலகத்தின் வெளிச்சமாயிருக்கிறேனென்று அவர் சொன்னார். பிசாசோ இருளின் பிரபு. அதற்கு அந்தகாரலோகாதிபதியென்னும் பெயர். மனிதருக்கு வெளிச்சமாகிய இயேசுநாதர்பேரில் பிரியம் இல்லை. அவர்கள் இருளின் பிரபுவாகிய பிசாசைச் சிநேகிக்கிறார்கள். பிசாசின் கிரியையாகிய பாவமே அவர்களுக்குச் சந்தோஷம். யூதர்களைச் சற்றே பார்ப்போம். பொந்தியுபிலாத்துவுக்கு முன்னாலே இரண்டுபேர் நிற்கிறார்கள், இயேசுநாதரும், பரபாவும். இயேசுநாதர் யூதர்களுக்குச் சொல்லிமுடியாத நன்மைகளைச் செய்தவர். அவர்களுக்கு அருமையான பிரசங்கங்களைப் பண்ணினவர், வியாதியஸ்தருக்குச் சுகமும் செத்தோருக்கு உயிருங் கொடுத்த உபகாரி. பரபாவோ யூதருக்கு அநேகந் தீமைகளைச் செய்தவன், அவர்களுடைய சொத்துக்களைக் கொள்ளையடித்தவன், அநேகரைக் கொன்ற கொலைபாதகன். இந்த இரண்டுபேரில் உங்களுக்கு யாரை விடுதலைபண்ணவேண்டுமென்று, பிலாத்து யூதரைக் கேட்டபோது, அவர்

கள் பரபாவையே தெரிந்துகொண்டார்கள். இப்படியே இன்றைக்கும் அவிசுவாசமுள்ள உலகம் செய்கிறது. நம்முடைய தேசத்தாரைப் பாருங்கள். உயிர் இல்லாத கல்லைக் கும்பிடுவார்கள், தன்னை அசைக்கமாட்டாத ஒரு சிலையை வணங்குவார்கள், எனக்கு ஆடுவேணும் கோழிவேணும் என்று அலறுகிற துஷ்டப் பேய்களை ஆராதிப்பார்கள். பொய் சொன்னவர்களும் திருடினவர்களும், விபசாரம் பண்ணினவர்களும் அவர்களுக்குத் தேவர்கள். அவர்கள் ஜீவனுள்ள தெய்வமாகிய பராபரனை வேண்டாமென்று தள்ளுகிறார்கள். பாவிகளுக்காக உயிரைக் கொடுத்த இரட்சகருடைய நாமம் அவர்களுக்குக் கசப்பு. பொய் பேசும் பிராமணக் குருக்களுக்கு மரியாதை காண்பிக்கிற அவர்கள் சத்தியத்துக்குச் சாட்சி கொடுக்கிற போதகமாரைப் பகைத்து, தூஷித்துத் துன்பப்படுத்துவார்கள். இதற்குக் காரணம் அவிசுவாசம்தான். அவர்கள் வெளிச்சமாகிய இயேசுநாதரண்டைவந்தால் தங்கள் பாவங்கள் வெளிப்படும், அவைகளை விட்டுவிடவேண்டுமென்று பயப்படுகிறார்கள். கிறிஸ்துவைப்பார்க்கிலும் பாவத்தை அவர்கள் சிநேகிக்கிறது எத்தனை பரிதாபம். வெளிச்சத்தைப் பார்க்க இருளைச் சிநேகித்தல் ஆக்கினைக்குள்ளாக்குதலாயிருக்கிறது. பாவத்தைச் சிநேகிக்கிறவர்களுக்குப் பயங்கரமான ஆக்கினை வருமென்பது மெய். வேறே ஆக்கினைகள் அவர்களுக்கு வராதே போனாலும், அவர்கள் பாவமும் அவர்கள் அவிசுவாசமுமே அவர்களுக்குப் பெரிய ஆக்கினை என்பதை மறக்கக்கூடாது. பாவம் பராபரனை விட்டு நம்மைப் பிரிக்கிறது. பாவியை நன்மைக்கெல்லாம் தூரமாக்குகிறது. ஐயையோ, இதைவிட பயங்கரம் வேறென்ன வேண்டும். இதையல்லாமல், பாவம் இம்மையிலும், மறுமையிலும் தன் பலனையடைவது நிச்சயம். பாவத்தின் பலன் என்ன என்பதை நம்முடைய சிறைச்சாலைகளில் பார்க்கலாம். பாவத்தின் பலனை நம்முடைய வைத்தியசாலைகளில் பார்க்கலாம். பாவத்தின் பலனை நம்முடைய வீடுகளிலும், நம்முடைய தேசமெங்கும் பார்க்கலாம்; உலகமெங்கும் பார்க்கலாம். நமக்கும், நம்மைச் சேர்ந்தவர்களுக்கும், நம்முடைய தேசத்திற்கும் வருகிற சகல தீங்குக்கும் பாவமே காரணம். பாவத்தினால் வரும் ஆக்கினையை மனிதர் இம்மையில் மாத்திரமல்ல, மறுமையிலும் அனுபவிப்பார்கள். பராபரன் அவிசுவாசிகளை நரகத்திலே தள்ளுவார். அங்கே பிசாசுகளோடு வேதனையை அனுபவிப்பார்கள். நரகம் அக்கினிக்கடல், முடிவில்லாத வேதனை. ஐயோ, அந்த வேதனை இவ்வளவென்று சொல்ல நம்மால் இல்லை.

இதைப் பொல்லாத உலகம் அறியாமல், அவிசுவாசத்தில் அமிழ்ந்து கிடப்பதற்காக நாம் விசனப்படுவது நியாயம்



அவிசுவாசிகளுக்காக நாம் இடைவிடாமல் ஜெபம் செய்வோமாக. நம்முடைய ஜெபங்களில் விசேஷமாய் நம்முடைய தேசத்திலுள்ள அஞ்ஞானிகளையும் அவிசுவாசிகளையும் நினைத்து, அவர்களைக் கர்த்தர் எப்படியாவது குணப்படுத்தும்படி வேண்டிக்கொள்வோமாக.

பரிசுத்த ஆவியே, தேவரீர் எங்களுக்குத் தேவ சிநேகத்தை வெளிப்படுத்தின கிருபைக்காக உமக்கு ஸ்தோத்திரம். நாங்கள் மெய் விசுவாசத்தில் நிலைத்திருக்க எங்களுக்குத் துணை செய்யும். அவிசுவாசத்தில் அமிழ்ந்து கிடக்கும் உலகத்தாருக்குத் தேவரீர் இரங்கி, அவர்களையும் மெய்விசுவாசத்திற்குக் கொண்டுவந்து சேர்த்தருளும், சுவாமி. ஆமென்.

---

## * பரிசுத்த திரித்துவப் பண்டிகை.

யோவான் 3, 1—15.

பிரியமானவர்களே,

கர்த்தர் பிறந்த பண்டிகையை நாம் கொண்டாடினபொழுது, நமக்காகத் தம்முடைய குமாரனைக் கொடுத்த பிதாவாகிய பராபரனை மகிமைப்படுத்தினோம். கர்த்தர் உயிர்த்தெழுந்த பண்டிகையை நாம் கொண்டாடினபொழுது நமக்காக மரித்து, பேய், பாவம், சாவு, நரகம் என்ற சத்துருக்களை ஜெயித்து எழுந்தருளின குமாரனாகிய பராபரனை மகிமைப்படுத்தினோம். பெந்தெகொஸ்தே பண்டிகையிலே அப்போஸ்தலமார்மேல் இறங்கி இந்த உலகத்தில் திருச்சபையை ஸ்தாபித்த பரிசுத்த ஆவியாகிய பராபரனை மகிமைப்படுத்தினோம். பிதா, குமாரன், பரிசுத்த ஆவி மூன்று தேவர்களல்ல, ஒரே தேவன். நம்முடைய தேவனாகிய பராபரன் திரியேக பராபரனாயிருக்கிறதால், இன்றைக்கு நாம் திரித்துவப் பண்டிகையைக் கொண்டாடுகிறோம். ஒரே பராபரன் மூன்று ஆட்களாயிருக்கிறார், மூன்று ஆளும் ஒரே பராபரனாயிருக்கிறார் என்பது நம்முடைய புத்திக்கு எட்டாத பரம ரகசியம். இது நமக்கு விளங்காதே போனாலும், பராபரன் தம்முடைய வசனத்தில் இப்படிச் சொல்லியிருக்கிறதால், அதை நாம் விசுவாசிக்கிறோம். இப்பொழுது நாம் விசுவாசிக்கிறதை மகிமையின் இராச்சியத்தில் கண்ணாரக் காண்போம். அந்த இராச்சியத்துக்குள் எல்லாரும் போகமாட்டார்கள். மறுபடியும் பிறந்தவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள். ஆகையினால் இன்றைக்குக் குறிக்கப்பட்ட சுவிசேஷ வாக்கியத்தில் மறுபிறப்

யைக் குறித்துப் பேசியிருக்கிறது. ஆகையால் நாம் இப்போது தியானிக்கப்போகிற சங்கதி

### மனிதன் மறுபடியும் பிறக்கிறதைப் பற்றியது.

1. மனிதன் ஏன் மறுபடியும் பிறக்கவேண்டும்.
2. அவன் மறுபடியும் பிறப்பது எப்படி.

### 1.

மனிதன் ஏன் மறுபடியும் பிறக்கவேண்டுமென்கிற கேள்வியை முந்தக் கேட்போம்.

யூதரில் தலைவனாகிய நீக்கொதேமு என்று பேர்கொண்ட ஒரு மனுஷன் பரிசேயரில் இருந்தான். இவன் இராத்திரியிலே இயேசுவண்டை வந்து, அவருடனே: ரபீ, நீர் பராபரனாலே வந்த போதகரென்று அறிவோம்; ஏனெனில் ஒருவனும் தன்னுடனே பராபரன் இருந்தாலொழிய, நீர் செய்கிற இந்த அடையாளங்களைச் செய்யக்கூடாது என்றான். — நீக்கொதேமு என்பவன் யூதரில் தலைவனான ஒரு பெரிய மனுஷன். தங்களை நீதிமான்கள் என்று எண்ணி, மற்றவர்களை அற்பமாய் நினைத்த பரிசேய கொள்கையை அநுசரித்தவன். இயேசுநாதர் பரிசேயரிடத்தில் வேதம் படிக்காதவரும், நாசரேத்தென்ற நாட்டுப் புறத்தில் வளர்ந்தவருமாயிருந்ததால் பரிசேயர் அவரை அசட்டைபண்ணினார்கள். ஆகிலும், அவர்களில் இரண்டொருவர் அவரைப் பராபரனாலே வந்த போதகரென்று மதித்ததாக நம்முடைய வாக்கியத்தால் அறிகிறோம். அவர்கள் மதித்ததற்கு இயேசுநாதர் செய்த அற்புத அடையாளங்கள் காரணமாயிருந்தன. அவர்களில் ஒருவன் நீக்கொதேமு. இயேசுநாதரை அவமதித்த யூதர்கள் தன்னையும் அவமதிப்பார்களென்று நீக்கொதேமு பயந்ததினால் அவன் அவர்களுக்குத் தெரியாமல், இராப்பட்ட நேரத்தில் இயேசுவண்டை வந்தான். அவரைப் பற்றித் தனக்கிருந்த அபிப்பிராயத்தை அவருக்குத் தெரிவித்தான். அவன் அவரைப் பராபரனால் வந்த ஒரு பெரிய போதகராக எண்ணினானே ஒழிய அவரை மேசியாவென்று விசுவாசிக்கவில்லை. அவன் இயேசுவை ஒரு போதகரென்று எண்ணினதால், அவரிடத்திலே பராபரனுடைய ராச்சியத்துக்கடுத்த காரியங்களைக் கேட்டுப்படிக்கலாமென்று வந்ததாகத் தோன்றுகிறது. இயேசுவோ அவன் கேள்வி கேட்குமுன் தாமே இரட்சிப்புக்குரிய முக்கிய போதனையை அவனுக்குச் சொன்னார்.

இயேசு அவனுக்குப் பிரத்தியுத்தரமாக: மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன், ஒருவன் மறுபடியும் பிறந்தாலே ஒழிய, பராபரனுடைய இராச்சியத்தைக் காணக்கூடாது என்றார் (யோவான் 3, 3). இது நாமெல்லாரும் கவ-



னிக்கவேண்டிய விசேஷித்த போதனை. வானராச்சியத்திற்கு இம்மையிலே திருச்சபையென்றும் மறுமையிலே மோட்சமென்றும் பெயர். நம்மெல்லாருக்கும் மோட்சம் போகவேண்டுமென்கிற ஆசை உண்டு. எந்த மனிதனும் இங்கே திருச்சபையில் பிரவேசித்து அதன் நன்மைகளைக் கண்டனுபவிக்கவும், அங்கே மோட்சத்தில் பிரவேசித்து அதன் நன்மைகளைக் கண்டனுபவிக்கவும் தகுந்தவனல்ல. வான இராச்சியத்தில் பிரவேசிக்க விரும்புகிற ஒவ்வொருவனும் மறுபடியும் பிறந்து, புது மனிதனாக வேண்டியது. அப்படிப் புது மனிதனாகாதவன் வான இராச்சியத்தைக் கண்ணாலே பார்க்கக் கூட முடியாது என்பது இயேசுநாதர் சொன்ன வார்த்தையின் கருத்து. மறுபடியும் பிறக்கிறதாவது என்னவென்று நீக்கொதேமுக்குத் தெரியவில்லை. ஆகையால் அவன்: மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறக்கலாம், அவன் இரண்டாந்தரந் தன் தாயின் கர்ப்பத்துக்குள் பிரவேசித்துப் பிறக்கக் கூடுமோ என்றான். பரிசேயர் இருதயம் மாறவேண்டுமென்கிற முக்கிய போதனையைப் போதித்தவர்களல்ல. ஆகையால் அவர்களைச் சேர்ந்த நீக்கொதேமுவும் அதை அறியாமல், மனுஷனுடைய சரீரப் பிறப்பைக் குறித்துப் பேசுகிறான். இரட்சகர் பேசினதோ சரீரப் பிறப்பல்ல. அவர் சொல்லுகிறது ஆத்துமாவில் உண்டாகும் மாறுதல். இது அவசியம் என்பதை உணர்த்தும்படி இயேசுநாதர்: மாமிசத்தினால் பிறந்தது மாமிசமாயிருக்கிறது. ஆவியினால் பிறந்தது ஆவியாய் இருக்கிறது என்கிறார். வேப்பமரத்திலிருந்து வேப்பங்கன்றுதான் உண்டாகும், கரும்பு உண்டாகாது. அப்படியே பாவமுள்ள மனுஷனிடத்திலிருந்து பாவமுள்ள மனுஷனே பிறப்பான். பாவக்குணம் இங்கே மாமிசம் என்று சொல்லப்படுகிறது. ஆதாம் பாவத்தில் விழுந்தது முதல் தாயின் கர்ப்பத்தில் பிறக்கிற எல்லா மனிதரும் பாவிகளாகவே பிறக்கிறார்கள், நாமும் பாவிகளே, நம்மையும் மாமிசம் என்றே சொல்லவேண்டும். நம்முடைய சுபாவம் முழுவதும் கெட்டுப்போயிருக்கிறது. நமக்குச் சரியான புத்தியில்லை. தெய்வ நியாயங்களை அறிந்துகொள்ள நமக்குச் சரியான புத்தியில்லை. ஜென்ம சுபாவமான மனுஷன் பராபரனுடைய ஆவியின் நியாயங்களை ஏற்றுக்கொள்ளான்; ஏனெனில் அதுகள் அவனுக்குப் பைத்தியமாயிருக்கிறது. அதுகள் ஞானப்பிரகாரமாக ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறபடியினாலே அவன் அதுகளை அறியமாட்டான் (க கொரி. 2, 14) என்று பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறார். இஸ்ரவேலில் போதகனாயிருந்த நீக்கொதேமு கூட இயேசுநாதருடைய போதனையை அறியமாட்டாதிருந்தான். இயேசுநாதருடைய சீஷப்பிள்ளைகளும் ஞானகாரியங்களில் தங்களுக்குப் புத்தியில்லை என்பதை அடிக்-

கடிக் காண்பித்தார்கள். மேலும், மனிதருடைய சித்தமுங் கெட்டுப்போயிருக்கிறது. அது எப்போதும் நன்மையைத் தள்ளித் தீமையைத் தெரிந்துகொள்ளுகிற சித்தமாயிருக்கிறது. அது பாவத்துக்கு அடிமைப்பட்ட சித்தம். கர்த்தருடைய சனமாகிய இஸ்ரவேலருடைய சரித்திரத்தைப் பார்த்தால், இது தெளிவாகும். அவர்கள் எப்போதும் பராபரனோடு எதிர்த்து நின்று, பாவத்தையே தெரிந்துகொண்டு, பொல்லாத வழியிலே நடந்தார்கள். நம்மைச் சோதித்துப் பார்த்தாலும் இது நன்றாய்த் தெரியும். நம்முடைய மனசும் பொல்லாப்புக்கே சார்புள்ளது. மேலும், மனுஷனுக்குச் சரியான உணர்ச்சியுமில்லை. தித்திப்பைக் கசப்பென்றும் கசப்பைத் தித்திப்பென்றும் நாம் அடிக்கடி நினைக்கிறோம். குடி, விபசாரம், திருட்டு மற்றுமுண்டான பாவங்கள் கசப்பாயிருக்கவேண்டியது. ஏனெனில், அவைகளால் கெடுதியேயல்லாமல் நன்மையில்லை. என்றாலும், மனிதர் எப்போதும் இந்தப் பாவங்களைத் தித்திப்பாக எண்ணிச் சந்தோஷத்தோடு செய்கிறார்கள். ஆகையால், நாம் நம்மை மாமிசத்தினால் பிறந்த மாமிசமென்றே சொல்லவேண்டும். இதனால் நமக்கு மறுபிறப்பு அவசியம் என்று தெரியவரும்.

நாம் மறுபடியும் பிறப்பதற்கு அவசியத்தைக் காண்பிக்கும் மற்றொரு காரியமென்னவென்றால், பராபரனுடைய ராச்சியத்தின் நிலைமை. அது பரிசுத்த இராச்சியம். ஏனெனில் அதற்குச் சொந்தக்காரராகிய பராபரன் பரிசுத்தர். அவருக்குப் பாவம் அருவருப்பு. அவருடைய இராச்சியத்திலே பிழைக்கிறவர்கள் மாமிசக்குணம் படைக்கக் கூடாது. எல்லாவற்றைப் பார்க்கிலும் அவருக்குப் பயந்து, அவரைச் சிநேகித்துக்கொண்டு, அவர் பேரில் நம்பிக்கையாயிருக்கிறவர்கள் மாத்திரம் அவருடைய இராச்சியத்திலே குடியிருக்கலாம். நாமோ அப்படிப்பட்டவர்கள் அல்ல. ஆதாமிலிருந்து பிறந்த எந்த மனுஷனும் அப்படிப்பட்டவனல்ல. எல்லாரும் வழிவிலகி ஏகமாய்க் கெட்டுப்போனார்கள். நன்று செய்கிறவன் இல்லை. அப்படிக்கொத்த ஒருவனாகிலும் இல்லையென்று எழுதியிருக்கிறது (சங். 14, 3). ஆகையால் ஒருவனும் வானராச்சியத்தைக் காணக் கூடாது, அதில் பிரவேசிக்கக் கூடாது. வான இராச்சியத்தில் பிரவேசிக்க விரும்புகிற ஒவ்வொருவனும், உயர்ந்த ஜாதியானாயிருந்தாலும் சரி, தாழ்ந்த ஜாதியானாயிருந்தாலும் சரி, அவன் படிப்பாளியாயிருந்தாலுஞ் சரி, படிப்பில்லாதவனாயிருந்தாலுஞ் சரி, அவன் பணக்காரனாயிருந்தாலுஞ் சரி ஏழையாயிருந்தாலுஞ் சரி, மறுபடியும் பிறந்தாலொழிய வான இராச்சியத்தில் பிரவேசிக்கக் கூடாது.



மறுபடியும் பிறக்கிறதற்கு நம்மாலேதான் முடியுமா. நம்முடைய தலையின் ஒரே மயிரை வெண்மையாக்கவாவது கறுப்பாக்கவாவது நம்மால் கூடாதே (மத். 5, 36), நாம் இருதயத்தை எப்படி மாற்றிக்கொள்ளக்கூடும். ஆகையால், நாம் மறுபடியும் பிறப்பதற்கான வழியென்ன என்று கேட்பது நியாயம். இதைக் குறித்து நாம் இப்பொழுது தியானிப்போம்.

2.

ஒருவன் மறுபடியும் பிறப்பது எப்படி என்று கேட்போம்.

இயேசு பிரத்தியுத்தரமாகச் சொன்னதாவது: மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன், ஒருவன் தண்ணீரினாலும் ஆவியினாலும் பிறந்தாலே ஒழிய, பராபரனுடைய இராச்சியத்துக்குள் பிரவேசிக்கக்கூடாது. மாமிசத்தினால் பிறந்தது மாமிசமாயிருக்கிறது, ஆவியினாலே பிறந்தது ஆவியாயிருக்கிறது என்றார்.

இந்த வார்த்தைகளில் கர்த்தர் ஞானஸ்நானத்தைக் குறித்துப் பேசுகிறார் என்பது தெளிவு. தண்ணீரும் ஆவியும் சேர்ந்திருப்பது ஞானஸ்நானத்திலேதான். யோவான் ஸ்நானகன் தண்ணீரால் ஞானஸ்நானங்கொடுத்தது நிக்கொதேமுக்குத் தெரியும். யோவான் தன் பிரசங்கத்திலே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானங் கொடுக்கப்போகிற ஒருவரைக்குறித்துப் பேசியிருந்தார். இயேசுநாதரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானங்கொடுக்கிறவர். அவர் ஏற்படுத்தின ஞானஸ்நானமே தண்ணீரும் ஆவியும் சேர்ந்த முழுக்கு. அதுவே மறு பிறப்புக்கான முழுக்கு (தீத்து 3, 6).

இயேசுவை விசுவாசித்து ஞானஸ்நானம் பெறுகிறவன் மறுபடியும் பிறக்கிறான். விசுவாசித்து ஞானஸ்நானம்பெற்றவன் இரட்சிக்கப்படுவானென்று ஞானஸ்நானக் கட்டளையில் படித்திருக்கிறோம். இதில் இரட்சிப்பு என்பது முக்கியமாய் பாவமன்னிப்பைக் குறிக்கும். அவனவன் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறக்கடவான் என்று பேதுரு அப்போஸ்தலன் சொன்னார் (அப். 2, 38) ஆகையால் ஞானஸ்நானத்தில் பாவங்கள் மன்னிக்கப்படுகிறது நிச்சயம். பாவம் எங்கேயோ அங்கே மரணம், பாவமன்னிப்பு எங்கேயோ அங்கே ஜீவன். புதிதாய் ஜீவனைப்பெற்றவன், புதிதாய்ப் பிறக்கிறான், அல்லது மறுபடியும் பிறக்கிறான் என்று சொல்லலாம். அவனுடைய நிலைமை முழுவதும் மாறிப்போகிறது. பாவத்தினால் அவன் பிசாசின் பிள்ளை, மறுபிறப்பினால் அவன் பராபரனுடைய பிள்ளை. பரிசுத்த ஆவி அவனுடைய உள்ளத்திலே தங்கி, அப்பா பிதாவே என்று கூப்பிடும்படிக்கு அவனை ஏவுகிறார். பாவத்தினாலே அவன் நிரு

வாணி, மறுபிறப்பிலோ அவன் கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுகிறான். பாவம் அவனுடைய நினைவு பேச்சு நடக்கையையெல்லாம் கெடுத்திருந்தது; மறுபிறப்பினாலோ, அவன் பரிசுத்தமானவைகளை நினைக்கவும், பரிசுத்தமானவைகளைப் பேசவும், பரிசுத்தமானவைகளைச் செய்யவும் ஏவப்படுகிறான். இவைகள் ஆவியின் கனிகள் என்று பெயர் பெறும். ஆவியினால் பிறந்தது ஆவியாயிருக்கிறபடியால், ஆவியினால் பிறந்தவன் ஆவியின் கனிகளைக் கொடுக்கிறான். மேலும், பாவத்தின் முடிவு நித்திய மரணமாகிய நரகம், மறுபிறப்பின் முடிவோ நித்திய ஜீவனாகிய மோட்சம்.

மறுபிறப்பு கண்ணால் காணக்கூடிய காரியமல்ல. இதைக் குறித்து இயேசுநாதர்: நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டுமென்று நான் உனக்குச் சொன்னதற்காக அதிசயப்படாதே. காற்றானது தனக்குச் சரிபோன இடத்திலே வீசுகிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய். ஆகிலும், எங்கேயிருந்து வருகிறதென்றும் எங்கே போகிறதென்றும் அறியாய். ஆவியினாலே பிறந்தவனெல்லாம் அந்தப்படியே இருக்கிறான் என்றார் (யோவான் 3, 7. 8). மனிதர் காற்றைப் பாராவிட்டாலும், காற்று செய்யும் வேலையைப் பார்க்கிறார்கள். அதினால் காற்று இருக்கிறதென்று அறிந்துகொள்ளுகிறார்கள். அப்படியே ஒருவனில் உண்டாகும் நல் மாறுதலைப் பார்த்து, அவன் மறுபடியும் பிறந்தவனென்று அறிந்துகொள்ளலாம். மறுபடியும் பிறந்தவனுடைய நடக்கை யாவருக்கும் ஆச்சரியத்தை உண்டாக்குமென்பது மெய். பவுல் அப்போஸ்தலன் மறுபடியும் பிறக்குமுன், இயேசுவின் நாமத்தைப் பகைத்து, கிறிஸ்துமார்க்கத்தை விரோதித்து, கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்தினார். மறுபடியும் பிறந்த பின்னோ சீஷருடனே சேர்ந்துகொண்டு, ஆலயங்களில் கிறிஸ்துவைப் பராபரனுடைய குமாரனென்று பிரசங்கித்தார். அப்போது எல்லாரும் பிரமித்து: இவனே எருசலேமில் இந்நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவர்களைப் பாழாக்கி இங்கேயும் அவர்களைக் கட்டுண்டவர்களாகப் பிரதான ஆசாரியர்களண்டைக்குக் கொண்டுபோவதற்கு வந்தவன் அல்லவோ என்றார்கள் (அப். 9, 20. 21). அப்படியே முன் பாவத்தைச் சிநேகித்த பாவியான ஸ்திரி மறுபடியும் பிறந்து பாவமன்னிப்பைப் பெற்றபின் முழுவதும் மாறி இரட்சகரைச் சிநேகிக்கக் கூடியவள் ஆனாள்.

நிக்கொதேமு இன்னம் மறுபடியும் பிறவாதிருந்ததால் அவனுக்கு இரட்சகரின் போதனை விளங்காமல்: இதுகள் சம்பவிக்கக்கூடுகிறது எப்படி என்று கேட்டான். பரமகாரியங்களை அறிந்துகொள்ளும் சக்தி மனிதருக்கு இயல்பாய்க் கிடையாது. இயேசுநாதர் மாத்திரம் எல்லாவற்றையும் அறிந்தவர். அவரை விசுவா



சிக்கிறவன் மாத்திரமே மறுபடியும் பிறப்பான். பரிசுத்த ஆவி ஒருவனுக்குள் விசுவாசத்தை உண்டாக்குகிறபொழுதுதான் அவன் மறுபடியும் பிறக்கிறான். அவன் மாத்திரம் இரட்சிப்பின் சத்தியங்களை அறிந்து பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்ளுவான். இதைக்குறித்து நம்முடைய இரட்சகர்: பரமண்டலத்திலிருந்து இறங்கின பரமண்டலத்திலுள்ள மனுஷ குமாரனே ஒழிய, ஒருவனும் பரமண்டலத்துக்கு ஏறினதில்லை என்றார். இயேசுநாதர் கன்னிமரியாளிடத்தில் பிறந்த மெய்யான மனிதகுமாரன் என்பது உண்மை. ஆகிலும் அவர் மெய்யான தெய்வ குமாரனாகவும் இருக்கிறார். அவர் பரலோகத்திலிருந்து பூலோகத்திற்கு வந்து, பூலோகத்தில் ஏழை மனிதனாகச் சஞ்சரித்தார். அவர் பூலோகத்தில் சஞ்சாரம் பண்ணின அதே நேரத்தில் பரலோகத்திலும் இருந்தார். மெய்யான தேவனும் மெய்யான மனிதனுமாகிய அவர் இப்பொழுது பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருந்தும், இங்கே நம்முடைய நடுவிலும் நம்முடைய கண்ணுக்கு மறைவாய் வாசம்பண்ணுகிறார். பரமண்டலத்திலிருந்து இறங்கின அவர் அதேகாலத்தில் பரமண்டலத்தில் இருந்ததுபோலே, பரமண்டலத்திற்கு ஏறிப்போன அவர் அதேகாலத்தில் பூமண்டலத்திலும் இருக்கிறார். இவருக்குள்ள இந்த மகிமை வேறெவனுக்கும் இல்லை. எலியா தீர்க்கதரிசி பரமண்டலத்துக்கு ஏறினார். அவர் அங்கே மாத்திரம் இருக்கிறார். பூமியில் அவர் இல்லை. அவர் பூமியில் இருக்கவேண்டுமானால் பூமிக்கு வரவேண்டும். நம்முடைய இரட்சகர் எங்கும் நிறைந்தவரும் எல்லாவற்றையும் அறிந்தவருமாயிருக்கிறார். இவ்வளவு மகத்துவமுள்ள கர்த்தர் நம்மை இரட்சிக்கும்படி தம்மைத் தாழ்த்தினார்.

மோசே வனாந்தரத்தில் சர்ப்பத்தை உயர்த்தினவண்ணமாய் மனுஷனுடைய குமாரனும், அவர் பேரில் விசுவாசிக்கிறவனெல்லாம் கெட்டுப்போகாமல், நித்திய ஜீவனை அடைவதற்காக உயர்த்தப்படவேண்டியது என்றார் (14. 15). இஸ்ரவேலர் வனாந்தரத்தில் பயணம் செய்த காலத்தில் நடந்த ஒரு சங்கதியை இங்கே கர்த்தர் நிக்கொதேமுக்கு நினைப்பூட்டுகிறார். அவர்கள் கர்த்தருக்கும் மோசேக்கும் விரோதமாய்ப் பேசி முறுமுறுத்த ஒரு சமயத்திலே கர்த்தர் கொள்ளிவாய்ச் சர்ப்பங்களை அவர்கள் நடுவே வரவிட்டார். அந்தச் சர்ப்பங்கள் அவர்களைக் கடித்ததினால் வெகுபேர் செத்துப்போனார்கள். சனமெல்லாம் மடிந்துபோகுமென்று பயந்த மோசே அவர்களுக்காக வேண்டிக்கொண்டார். அப்பொழுது கர்த்தர் மோசேயுடனே: நீ ஒரு கொள்ளிவாய்ச் சர்ப்பத்தின் ரூபத்தை உனக்கு உண்டாக்கி அதை ஒரு கம்பத்தின்மேலே தூக்கிவை; அப்போது சம்பவிப்பதேதெனில், கடிக்கப்பட்டு, அதை நோக்கிப் பார்க்கிறவனெல்லாம்

பிழைப்பான் என்றார் (௪ மோசே 21, 8). கர்த்தர் சொன்னபடியே மோசே வெண்கலத்தால் ஒரு சர்ப்ப ரூபத்தை வார்த்து அதை ஒரு கம்பத்தின்மேல் தூக்கிவைத்தார். கொள்ளிவாய்ச் சர்ப்பத்தால் கடியுண்டவர்களில் யாரார் மோசேயின் வார்த்தையை நம்பினார்களோ, அவர்களெல்லாரும் வெண்கலச் சர்ப்பத்தை நோக்கிப்பார்த்தார்கள். யாரார் நோக்கிப்பார்த்தார்களோ, அவர்கள் எல்லாரும் பிழைத்துக் கொண்டார்கள். யாரார் மோசேயின் வார்த்தையை நம்பவில்லையோ, வெண்கலச் சர்ப்பத்தை நோக்கிப் பார்க்கவில்லையோ, அவர்கள் எல்லாரும் செத்தார்கள். இஸ்ரவேலருக்கு நடந்த இந்தச் சங்கதி பின்னால் நடக்கப்போகிற ஒரு முக்கிய சங்கதிக்கு முன்னடையாளமாயிருந்தது. கொள்ளிவாய்ச் சர்ப்பத்தினால் கடியுண்டவர்கள் பிசாசினால் கெட்டுப்போன எல்லாமனிதருக்கும் அடையாளமாய் இருந்தார்கள். கம்பத்தின்மேல் உயர்த்தப்பட்ட வெண்கலச்சர்ப்பம், நமக்காகக்கொடிய பாவிபோல் சிலுவை மரத்தில் தொங்கின இயேசுநாதருக்கு அடையாளம். பாவிகளில் யாரார் அவரை விசுவாசித்து நோக்கிப்பார்க்கிறார்களோ, அவர்கள் தான் மறுபடியும் பிறந்தவர்கள். அவர்கள் எல்லாரும் நித்திய ஜீவனை அடைவார்கள். யாரார் அவரை விசுவாசிக்காமல் போகிறார்களோ, அவர்கள் எல்லாரும் நித்திய நரகத்தில் விழுந்து கெட்டுப்போவார்கள். பாவிகள் கெட்டழிந்துபோகாமல், மோட்சம் சேரும்படி இயேசுநாதர் சிலுவை மரத்தில் பாடுபடுவது அவசியமென்று கர்த்தர் நிக்கொதேமுக்குத் தெரிவித்தார். இந்த வார்த்தைகளைக் கர்த்தர் சொன்ன சமயத்தில் அவனுக்கு விளங்காதிருந்திருக்கலாம். ஆகிலும், இயேசுநாதர் சிலுவைமரத்தில் தொங்கி மரித்ததை அவன் கண்ணால் கண்டபோது, அவனுக்கு இரட்சிப்பின் வழி வெட்டவெளிச்சமாயிற்று. அவன் இயேசுநாதரை விசுவாசித்து, யோசேப்போடு கூடி அவருடைய சரீரத்தை அடக்கம்பண்ணி, அவரை வெளியரங்கமாய் அறிக்கையிட்டான். அவன் அது முதல் பழைய பயங்காளியாயிருந்ததில்லை. புதிய மனிதன் ஆனான். மறுபடியும் பிறந்து புதிய மனிதராக வேண்டுமென்கிற மனிதரெல்லாரும், சிலுவையில் அறையுண்ட இயேசுநாதரை விசுவாசிக்கவேண்டும். கிறிஸ்தவர்களே, நாமெல்லாரும் தண்ணீரினாலும் ஆவியினாலும் ஸ்நானம் பண்ணுவிக்கப்பட்டவர்களாயிருந்தும், இயேசு சுவாமியை விசுவாசிக்கிறவர்களாயிராதேபோனால், நாம் மறுபடியும் பிறந்தவர்களல்ல. ஆகையால் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவானென்று கர்த்தர் சொன்னார்.

எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே, நாங்கள் பேர்க்கிறிஸ்தவர்களாயிராமல், மறுபடியும் பிறந்த மெய்க்கிறிஸ்தவர்களாயிருக்கும்படி தேவரீர் எங்களுக்கு மெய்விசுவாசத்தைத் தந்து, ஜீவனிலும் சாவிலும் நாங்கள் உம்மை நோக்கிப்பார்க்க எங்களுக்குத்துணை செய்தருளும், சுவாமி. ஆமேன்.



---

## திரித்துவப் பண்டிகைக்குப் பிந்தின முதலாம் ஞாயிறு.

லூக்கா 16, 19—31.

பிரியமானவர்களே,

இவ்வுலகத்தில் மனிதருக்கு இருக்கிற நிலைமைகளைப் பார்த்தால், பராபரன் பாரபட்சமுள்ளவர் போல் தோன்றுகிறார். சில சமயங்களில் அநியாயமுள்ளவர்போல் காணப்படுகிறதுமுண்டு. துன்மார்க்கர் வாழ்ந்திருப்பதையும் சன்மார்க்கர் தாழ்ந்திருப்பதையும் நாம் அடிக்கடி பார்க்கிறோம். ஆகிலும், நாம் பார்க்கிறபடியே காரியம் இராது. பராபரன் நீதியுள்ளவர். அவனவன் கிரியைக்குத் தக்கபடி பலன் அளிக்கிறவர். அவராலே நன்மை தீமைக்குப் பலன் பின்னால் வரும். பாவம் அழிவைக் கொண்டுவரும். மனிதர் தங்கள் பாவத்தின் பலனை இம்மையிலே அனுபவிப்பதுண்டு. அப்படி அநுபவியாவிட்டாலும், மறுமையில் அது வெளிப்படுவது நிச்சயம். பொல்லாதவர்கள் மேல் எரிச்சலாகாதே, அநியாயக்கேடு செய்கிறவர்கள் மேல் பொறாமையாகாதே. ஏனென்றால் புல்லைப்போல் சீக்கிரமாய் அறுப்புண்டு பச்சையான முளையைப்போல் உலருவார்கள் என்று எழுதியிருக்கிறது (சங். 37, 1. 2). நாம் ஐசுவரியவான்களுடைய ஐசுவரியத்துக்காகப் பொறாமைப்பட நியாயமில்லை. பணமுங் காசுமே பாக்கியமென்று நினைக்கக்கூடாது. அநேகம் ஆகாதவர்களுக்குள்ள திரட்சியைப்பார்க்கிலும் நீதிமானுக்குள்ள கொஞ்சமானது நல்லது. ஏனெனில் ஆகாதவர்களுடைய புயங்கள் முறியும்; ஆனால் நீதிமான்களைக் கர்த்தர் தாங்குகிறார் என்று வாசிக்கிறோம் (சங். 37, 16. 17). பராபரன் அநியாயம் செய்கிறவரல்ல. தாம் நீதியுள்ளவரென்பதை அவர் காண்பிக்கும் வேளை வரும். இதை நம்முடைய சுவிசேஷ வாக்கியத்தில் பார்க்கலாம். அதிலே ஐசுவரியவான் லாசரு என்றவர்களின் சரித்திரம் சொல்லியிருக்கிறது.

**இந்தச் சரித்திரத்தால் நாம் கற்றுக்கொள்ளக் கூடிய படிப்பினை என்ன.**

1. ஐசுவரியவான் சரித்திரத்தால் நமக்குப் பெரிய எச்சரிப்பும்
2. லாசருவின் சரித்திரத்தால் நமக்கு மிகுந்த ஆறுதலுமுண்டு.

## 1.

**ஐசுவரியவான் சரித்திரத்தால் நமக்குப் பெரிய எச்சரிப்பு உண்டு.**

ஐசுவரியமுள்ள ஒரு மனுஷன் இருந்தான்; அவன் இரத்தாம்பரமும் விலையேறப்பெற்ற புடவையுந் தரித்துக்கொண்டு அனுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்துகொண்டிருந்தான் என்று கர்த்தர் சொல்லுகிறார். இந்த ஐசுவரியவான் பெயர் நமக்குத் தெரியாது. அது தெரிவது நமக்கு அவசியமுமல்ல. அவன் பணக்காரன். அவனுக்கு ஐந்து சகோதரர்களிருந்தார்கள். அவன் குடியிருந்தது பெரிய மாளிகை. இராஜாக்களும் பிரபுக்களும் உடுத்துக்கொள்ளுகிற உடுப்பை அவன் உடுத்தினான். அவன் சாப்பிட்ட போசனம் உயர்த்தியானது. தூரத்திலிருந்தும் சமீபத்திலிருந்தும் தன் நாவுக்கு ருசிகரமான போசன பானங்களை அவன் அழைப்பித்தான். அவனோடொத்த பணக்காரர் அவன் பந்தியிலே எப்போதும் சாப்பிட்டார்கள். அவன் உயர்ந்த போசனத்தைச் சாப்பிட்டு, உயர்த்தியான பானங்களைக் குடித்து, விலையேறப்பெற்ற வஸ்திரங்களை உடுத்தி இருந்தாலும், அவனுக்கும் முடிவு வந்தது. அவன் வியாதியாய்ப் படுத்தான். சிலநாள் படுக்கையில் கிடந்தான். கடைசியாய்ச் செத்தான். ஐசுவரியவானும் மரித்து அடக்கம் பண்ணப்பட்டானென்று கர்த்தர் சொல்லுகிறார். அவனுடைய அடக்கம் வெகு சிறப்பாய் நடந்தது. அவன் பிரேதத்தையும், அவனைக் கொண்டுபோன பாடையையும் மிகவும் அழகாய் அலங்கரித்தார்கள். திரளான ஜனங்கள் அவன் இழவுக்கு வந்தார்கள். நேர்த்தியான வாத்தியங்களும் ஒருவேளை வாசித்திருக்கலாம். அநேக பெண்கள் ஒப்பாரி சொல்லி அழுதார்கள். அவனுடைய சரீரம் ஒரு குழியிலே வைக்கப்பட்டது. அவனுடைய சரீரத்துக்கு இவ்வளவு சிறப்பெல்லாம் நடந்தும், அவனுடைய ஆத்துமாவைக் குறித்து நாம் என்ன வாசிக்கிறோம். அது நரகத்திலே வேதனைகளில் இருந்தது. நரக வேதனை பெரிய வேதனை. அங்கே அவனுக்குச் சொல்லிமுடியாத தாகம். அவன் எவ்வளவோ மதுபானங்களை இந்த உலகத்தில் சாப்பிட்டவனாயிருந்தும், நரகத்திலே ஒரு துளி தண்ணீர் கிடைக்கவில்லை. அவன்: தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் என்மேல் இரங்கி, லாசருவை தன் விரலின் நுனியைத் தண்ணீரிலே தோய்த்து என நாவைக் குளிரப்பண்ண அனுப்பும்; அதேனென்றால் இந்தச் சுவாலையிலே வேதனைப்படுகிறேன் என்று கூப்பிட்டான் என்று வாசிக்கிறோம். இது மகா பரிதாபமே. ஐயோ, நரகவேதனை நித்திய வேதனை. நரக தாகம் தீராத தாகம்.



இந்த ஐசுவரியவான் நரகத்துக்குப்போனது ஏன். அவன் பணக்காரனாயிருந்ததினாலோ. அப்படி நினைக்கக்கூடாது. விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாம் பணக்காரராயிருந்தார். தெய்வ பக்தியுள்ள யோபு பெரிய ஐசுவரியவானாயிருந்தார். பணந் தன்னிலேதானே கெடுதியான காரியமல்ல. பணம் கெட்ட காரியமாயிருந்தால் கர்த்தர் அதைப் பக்தியுள்ளவர்களுக்குக் கொடுக்கவேமாட்டார். சாலொமோன் இராசா தெய்வபக்தியாய்க் கர்த்தரை நோக்கிச் செபம்பண்ணி அவரிடத்தில் ஞானத்தைக் கேட்டபொழுது அவர் அந்த இராசாவுக்கு ஞானத்தை மாத்திரமல்ல, ஐசுவரியத்தையுங் கொடுத்தார். ஆகையால், ஐசுவரியவானாயிருக்கிறது பாவமல்ல. ஐசுவரியத்தைச் சரியாய்க் கையாடாமலிருப்பதே பாவம். ஐசுவரியத்தைக் கொடுத்த பராபரனை மறந்து, ஐசுவரியத்தையே சிநேகிக்கிறது பயங்கரமான பாவம். நம்முடைய வாக்கியத்திலுள்ள ஐசுவரியவான் இந்தப் பாவத்தைச் செய்தான். அவன் கர்த்தரை மறந்தானென்று நமக்கு எப்படித் தெரியும். நரகத்திலிருந்த ஐசுவரியவானுக்கும் மோட்சத்திலிருந்த ஆபிரகாமுக்கும் நடந்த சம்பாஷணையினாலே நாம் அதை அறிந்துகொள்ளலாம். இன்னம் சாகாதிருந்த தன்னுடைய ஐந்து சகோதரர் நரகத்துக்கு வராதபடி தடுக்க அவன் விரும்பினபொழுது ஆபிரகாம் அவனுடனே: அவர்களுக்கு மோசேயுந் தீர்க்கதரிசிகளும் உண்டு; அவர்களை அவர்கள் கேட்கட்டும் என்றார். அவனோவெனில்: அப்படியல்ல, தகப்பனாகிய ஆபிரகாமே, மரித்தோரிலிருந்து ஒருவன் அவர்களண்டைக்குப் போனால், குணப்படுவார்கள் என்றான். அவன் நரகத்தில் பேசின பேச்சினால் பூமியில் அவனுக்கிருந்த குணமென்னவென்று அறியலாம். மனிதருக்கும் பூமியிலே என்னென்ன கெட்ட குணங்களிருந்ததோ, அதெல்லாம் நரகத்திலேயும் இருக்கும். பூமியிலே பொய்யின் மேல் ஆசையாயிருந்தவன் நரகத்திலும் அப்படியே இருப்பான். பூமியிலே குடிவெறியில் பிரியப்பட்டவன் நரகத்திலும் அந்தப் பிரியமுள்ளவனாகவே யிருப்பான். இந்த ஐசுவரியவான் பூமியிலே பராபரனுடைய வசனத்தைச் சிநேகிக்காதவனாயிருந்தானென்பது நிச்சயம். நம்முடைய வாக்கியத்திலே ஆபிரகாம், மோசேயும் தீர்க்கதரிசிகளுமென்று சொன்னது மோசேயும் தீர்க்கதரிசிகளும் எழுதின வேதாகமங்களைக் குறிக்கும். இந்த ஐசுவரியவான் வேதம் வாசித்தவனல்ல. நரகமேது, மோட்சமேது, சுவாமி ஏது, பிசாசு ஏது, மோட்சமிருந்தால் அங்கிருந்து ஒருவன் வந்து சொல்லட்டும், நரகமிருந்தால் அங்கிருந்து ஒருவன் வந்து பேசட்டும், சுவாமி இருந்தால் அவர் கண்ணுக்கு முன்னே வரட்டும், பிசாசு இருந்தால் அது எனக்குத் தெரியட்டும் என்று சொல்லிக்கொள்ளுகிற உலகமக்களில் ஒருவனாய் அவனிருந்தான்.

பராபரன் உண்டென்றும், அவர் பாவிகளை நரகத்திலே தள்ளுவாரென்றும், தம்மை விசுவாசித்துத் தமக்குப் பயந்து நடக்கிறவர்களை மோட்சத்தில் சேர்த்துக்கொள்ளுவாரென்றும் நாம் வேதத்தினால் அறிந்துகொள்ளுகிறோம். ஆகையால், நாம் தினந்தோறும் வேதபுஸ்தகத்தை வாசிக்க வேண்டும். அதைக்குறித்துத் தியானிக்கவேண்டும். அது சொல்லுகிறபடி நடக்கவேண்டும். கர்த்தருடைய வேதத்தின்மேல் பிரியமாயிருந்து, அவருடைய வேதத்தில் இரவும் பகலும் தியானிப்பாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் என்றும், ஆகாதவர்கள் அப்படியிராமல் காற்று பறக்கடிக்கும் பதரைப்போலிருக்கிறார்களென்றும் எழுதியிருக்கிறது (சங். 1, 2. 4). தேவ வசனத்தை அசட்டைபண்ணுகிறவர்களுக்கு மறு உலகத்திலிருந்து ஒருவன் வந்து செய்தி சொன்னாலும் விசுவாசம் வராது. அவர்கள் மோசேயையும் தீர்க்கதரிசிகளையும் கேளாவிட்டால், மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்தாலும் ஒப்பார்கள் என்று ஆபிரகாம் சொன்னார். அப்படிக்கும் நடந்தது. மரித்து நாலு நாளாகி நாறிக்கிடந்த லாசரு என்ற பெத்தானியா கிராமத்தானைக் கர்த்தர் உயிரோடு எழுப்பினார். அவனை யூதர் கண்ணாரக் கண்டும், அவன் பேசுவதைக் காதாரக் கேட்டும் அவர்கள் விசுவாசிக்கவில்லை. ஆகையால் யாதொரு தரிசனைக்கும் காத்திராமல், கர்த்தருடைய வசனத்தை வாசித்துப் படித்து, அது சொல்வதையே நாம் நம்பவேண்டும். பராபரனுடைய வசனத்தைப் பாராத கண் கண்ணல்ல. அதைக் கேட்காத காது காதல்ல, அதை வாசிக்காத நாவு நாவுமல்ல. தேவ வசனத்தை அசட்டைபண்ணுகிறவன் யாரோ அவனுக்கு விசுவாசமிராது. விசுவாசமில்லாதவனுக்கு இரக்கம், தயவு முதலிய சற்குணங்களும் இராது. வாக்கியத்தில் சொல்லப்பட்ட ஐசுவரியவான் விசுவாசமற்றவனாயிருந்ததால், அவனிடத்தில் சிநேகமுமில்லை. தன் வாசற்படியிலே தன் எச்சிலுக்குக் காத்திருந்த ஏழை லாசருவை அவன் கண் பார்த்தது. அவன் பட்ட அவஸ்தையெல்லாம் அவனுக்குத் தெரிந்தது. என்றாலும், அவனுக்கு ஒரு விசேஷித்த தயவு பாராட்டினவனல்ல, இரக்கம் காண்பித்தவனுமல்ல. ஆகையால், இரக்கமற்றவர்கள் கிடக்கும் நரகத்திலே அவனுக்குப் பங்கிருந்தது.

சகோதரரே, இந்த ஐசுவரியவானால் நாம் எச்சரிப்படைவோமாக. நாம் அவனைப்போல் பராபரனுடைய வசனத்தை அசட்டைபண்ணுவது சரியல்ல. பணக்காரனாயிருந்தாலும், ஏழையாயிருந்தாலும், ஒவ்வொருவனுக்கும் ஆத்துமா உண்டு. ஆத்துமா பிழைக்கவேண்டுமானால், ஆத்தும போசனமாகிய வேதவசனம் அதற்கு அவசியந்தேவை. பராபரனுடைய வசனத்தைக் கேட்கிறதற்கும் படிக்கிறதற்கும் காலம் இதுதான். செத்த



பின் நமக்குக் காலம் அகப்படாது. பராபரனுடைய வசனத்தைக் கேட்கவும் குணப்படவும் மரணத்திற்குப்பின் சமயம் இராது. நாம் எப்படிப் பிழைக்கிறோமோ அப்படித்தான் சாவோம். எப்படிச் சாகிறோமோ, அப்படித்தான் மறுமையில் நம்முடைய ஆத்தும நிலைமை இருக்கும். ஐசுவரியவான் ஆபிரகாமைத் தன் தகப்பனென்று சொல்லக்கூடிய இஸ்ரவேலனாயிருந்தும், ஆபிரகாமைப்போல் விசுவாசமுள்ளவனாயிராதபடியால் ஆபிரகாம் இருந்த இடத்திலே அவன் சேரவில்லை. நாமும் கிறிஸ்தவர்களாயிருந்தும், கிறிஸ்துவின் வசனத்தை அசட்டைபண்ணினோமாகில், நமக்குக் கிறிஸ்துவோடு பங்கிராது. நரகமே நமக்குப் பங்காகும். ஆகையால், நாம் எச்சரிப்படைந்து கொள்வோமாக.

2.

லாசருவின் சரித்திரத்தால் நமக்கு ஆறுதல் உண்டு.

லாசரு என்ற நாமமுள்ள தரித்திரன் ஒருவன் இருந்தான். அவன் பருக்கள் நிறைந்தவனாய் அவன் வாசலண்டையிலே கிடந்து, ஐசுவரியவானுடைய பந்தியிலிருந்து விழுந் துணிக்கைகளால் தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான், நாய்களும் அவன் பருக்களை நக்கிற்று என்று கர்த்தர் சொல்லுகிறார். அந்த ஐசுவரியவானுடைய பெயர் நமக்குத் தெரியாவிட்டாலும், இந்த ஏழையின் பெயர் நமக்குத் தெரிகிறது சந்தோஷம். லாசரு என்ற அவனுடைய பெயரை வெகுபேர் விரும்பித் தங்கள் பிள்ளைகளுக்கு வைக்கிறதுண்டு. அது நல்ல பெயர். அதற்குத் தெய்வ சகாயம் என்று அர்த்தம். அந்த லாசரு மகா தரித்திரனாயிருந்தான். அவனுக்குக் குடியிருக்க வீடில்லை. அவன் ஐசுவரியவானின் வீட்டுக்கு எதிரே தெருவில் படுத்துக்கிடந்தான். அவனுக்குச் சாப்பிடப்போசனமில்லை. ஐசுவரியவானுடைய வீட்டிலிருந்து வெளியே விழுந்த எச்சில் இலைக்குக் காத்திருந்தான். அதிலும் அவனுக்குப் போதுமான ஆகாரம் கிடைத்ததோ என்பது சந்தேகம். ஏனென்றால் தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான் என்று சொல்லியிருக்கிறது. அந்த ஆசை தீர்ந்ததோ, இல்லையோ, நமக்குத் தெரியாது. அவனுக்கு உடுக்க வஸ்திரமும் இல்லை. வஸ்திரமிருந்தால் நாய்கள் அவனை நக்காது. அவனைக் கவனித்துப் பார்க்க உற்றார் உறமுறையார் அவனுக்கு இருந்ததில்லை. தரித்திரமிருந்தாலும், சுகமிருந்தால் எப்படியாவது பிழைத்துக்கொள்ளலாம். லாசருவுக்கோ, சுகமுமில்லை. அவன் உடம்பெல்லாம் பரு. தேகமெல்லாம் புண்ணாளி என்ன வேலை செய்யலாம். அவனுக்கு வைத்தியம் பண்ண மனுஷரில்லை. நாய்கள்தான் அவனுக்கு வைத்தியர் என்று சொல்லவேண்டும். இந்த

ஏழை மனுஷன் எவ்வளவு நிர்ப்பந்தமானவன். அவனுடைய நிர்ப்பந்தத்தை நினைக்கையில் உடம்பெல்லாம் சிலிர்க்கிறது.

ஆகிலும், அவனுடைய தரித்திரமும் வியாதியும் ஒரு முடிவுக்கு வந்தது. தரித்திரன் மரித்து, தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டுபோய்விடப்பட்டானென்று நம்முடைய வாக்கியம் சொல்லுகிறது. மரணம் ஐசுவரியவானுடைய வாழ்வுக்கு முடிவுண்டாக்கினதுபோல, ஏழை லாசருவின் துன்பத்துக்கும் முடிவு உண்டாக்கிற்று. மரணத்தோடு ஐசுவரியவானுக்குத் துன்பமும் வேதனையும் துவக்கினதுபோல, ஏழை லாசருவுக்குச் சந்தோஷமும் ஆறுதலும் துவக்கிற்று. நாம் லாசருவினுடைய அடக்கத்தைக் குறித்து வாசிக்கிறதில்லை. அவன் அடக்கம் பண்ணப்பட்டானோ என்பதும் சந்தேகம். அவனுடைய உடலைக் குறித்து நமக்கு ஒன்றும் தெரியாவிட்டாலும், அவனுடைய ஆத்துமத்தைக் குறித்து நமக்குத் தெரியும். அது தேவதூதரால் மோட்சத்துக்குக் கொண்டுபோகப்பட்டது. அவன் உயிரோடிருக்கும்போது அவனைச் சூழ்ந்துகொண்டிருந்த சம்மனசுகள் அவன் செத்தபிற்பாடும் அவனை விட்டுவிடவில்லை. ஏழை லாசரு மோட்சத்துக்குப் போனது எதினால். அவன் ஏழையாயிருந்ததினாலே மோட்சத்துக்குப் போனானென்று சொல்லலாமோ. அப்படிச் சொல்ல ஏதுவில்லை. ஏழைகளிலும் பொல்லாதவர்கள் உண்டு. எளிமைத்தனம் பாவத்துக்கு ஏதுகரமான ஒரு நிலைமைதான். தரித்திரத்தை எனக்குக் கொடாராக; தரித்திரப்படுகிறதினாலே திருடி, என் பராபரனுடைய நாமத்தை அவமானமாக்காதபடிக்கு, என் படியை எனக்கு அளந்து, என்னைப் போஷியும் என்று ஆகூர் என்கிற பக்திமான் செபம்பண்ணினார் (வாக். 30, 8. 9). தரித்திரத்தினாலே மோட்சத்துக்குப் போகிறதாயிருந்தால், எனக்குத் தரித்திரத்தைக் கொடாராக என்று ஒருவரும் ஜெபம்பண்ணமாட்டார்கள். பின்னை, லாசரு மோட்சத்துக்குப் போனது எதினால். அவன் பராபரனை நம்பின விசுவாசியாயிருந்தான். அவன் விசுவாசியாயிராதேபோனால் விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாமுடைய மடிக்கு அவன் போயிருக்கமாட்டான். அவன் விசுவாசியாயிராதே போனால், தேவதூதர் அவனுக்குத் தோழராயிருக்கமாட்டார்கள். அவன் விசுவாசியாயிருந்ததால் தன்னுடைய நிலைமையில் போதுமென்கிற மனமுடையவனாயிருந்தான். ஏனெனில், அநேக ஏழைகளைப்போல் அவன் ஐசுவரியவானைப் பார்த்துப் பொறாமைப்படவுமில்லை, தன்னுடைய நிலைமையைப் பார்த்து முறுமுறுக்கவுமில்லை. அவன் தன்னுடைய பெயருக்கு ஏற்றபடி கர்த்தரே சகாயரென்று நம்பி, அவருடைய வேளைக்குப் பொறுமையாய்க் காத்திருந்தான். ஆகையால் கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்குக்



கிருபையாய் ஆயத்தம்பண்ணியிருக்கும் மோட்சத்தில் அவனுக்கு இடங்கொடுத்தார். அங்கே அவன் தேற்றப்பட்டான். ஆகையால் ஆபிரகாம் நரகத்தில் வேதனைப்பட்ட ஐசுவரியவானைப் பார்த்து: மகனே, உயிரோடிருக்கக்கொள்ள நீ உன் நன்மைகளையும் லாசரு அப்படியே தீமைகளையும் அநுபவித்துத் தீர்ந்ததென்று நினைத்துக்கொள்; இப்போது இவனோ தேற்றப்படுகிறான், நீயோ வேதனைப்படுகிறாய் என்று சொன்னார். ஐசுவரியவான் விரும்பின உலக நன்மையெல்லாம் அவனுக்கு உலகத்தில் கிடைத்ததுபோல, லாசரு பொறுமையோடு எதிர்பார்த்த பரம நன்மையெல்லாம் அவனுக்கு மோட்சத்தில் கிடைத்தது. அங்கே கண்ணீரில்லை, வியாதியில்லை, பசியில்லை, தாகமில்லை. அங்கே போய்ச்சேருகிற விசுவாசிகளைப் பராபரன் தேற்றுகிறார், பரிசுத்தவான்கள் தேற்றுகிறார்கள், தேவதூதர் தேற்றுகிறார்கள். ஆகையால், இக்காலத்துப்பாடுகள் நம்மில் வெளிப்படப்போகிற மகிமைக்குப் பாத்திரமானவை அல்லவென்று எண்ணுகிறேன் என்று அப்போஸ்தலன் சொல்லுகிறார் (ரோ. 8, 18).

சகோதரரே, லாசருவின் சரித்திரம் நமக்கு எவ்வளவு ஆறுதலானது. நாம் இந்த உலகத்திலே எவ்வளவு வேதனைப்பட்டாலும், எவ்வளவு சங்கடப்பட்டாலும், அதற்கு ஒரு நாளில் முடிவுவருமென்பது நிச்சயம். ஆகையால், நமக்கு இந்த உலகத்திலே வருந் துன்பங்களைப் பொறுமையாய்ச் சகிக்கவேண்டும். கர்த்தரை நம்புகிற விசுவாசிகளுக்கு மாத்திரம் இந்தப் பொறுமையிருக்கும். நாம் கிறிஸ்தவர்கள், இயேசுநாதரை விசுவாசிக்கிறவர்கள். அவரைப் பற்றும் விசுவாசத்தில் நாம் முடிவுபரியந்தம் நிலைத்திருந்தால், அவர் நமக்குப் பாக்கியமான மரணத்தைக் கொடுப்பார். நம்மை இந்த அழுகைப் பள்ளத்தாக்கிலிருந்து எடுத்து, தம்மண்டை மோட்சத்தில் ஏற்றுக்கொள்ளுவார். அங்கே நாம் சந்தோஷத்தையும் பாக்கியத்தையும் அநுபவிப்போம். நம்முடைய பாக்கியத்துக்கு முடிவிராது. இவ்விடத்திலிருந்து உங்களண்டைக்குக் கடந்துபோகவும், அல்லது அவ்விடத்திலிருந்து எங்களண்டைக்குக் கடந்துவரவும் மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடி உங்களுக்கும் எங்களுக்கும் நடுவே பெரும்பிளப்பு உறுதிபண்ணப்பட்டிருக்கிறது என்று ஆபிரகாம் ஐசுவரியவானுக்குச் சொன்னார். நரகத்திலிருந்த ஐசுவரியவான் மோட்சத்துக்குப்போக இடமிராததுபோல், மோட்சத்திலிருந்த லாசருவும் நரகத்துக்குவர இடமில்லை. மோட்சமும் நித்தியம், நரகமும் நித்தியம். இரண்டுக்கும் முடிவில்லை. நாம் நித்திய மோட்சத்தில் சேர்ந்து நித்திய ஆறுதலடைய நித்திய இரட்சிப்பைச் சம்பாதித்த இயேசுவைப் பிடித்துக்கொள்வோமாக.

அன்புள்ள இயேசுவே, தேவரீர் எங்களை எந்த நிலைமையில் வைத்தாலும் நாங்கள் உம்முடைய பிள்ளைகளாயிருக்கவும், பாக்கியமான மரணத்தின்வழியாய் உம்முடைய திருப்பாதகதி அடையவும் எங்களுக்கு ஒத்தாசைசெய்தருளும், சுவாமி. ஆமேன்.

---

## திரித்துவப் பண்டிகைக்குப் பிந்தின உ-ம் ஞாயிறு.

லூக். 14, 16—24.

பிரியமானவர்களே,

இயேசுநாதர் பரிசேயரில் தலைவனாகிய ஒருவன் வீட்டிலே பந்தியிருக்கையில் சில முக்கிய புத்திமதிகளை அங்கே வந்திருந்தவர்களுக்குச் சொன்னார். அவர் கடைசியாக: நீ விருந்து பண்ணும்போதோவெனில், ஏழைகளையும் ஊனர்களையும் சப்பாணிகளையுங் குருடரையும் அழை. அப்போது பாக்கியவானாயிருப்பாய். ஏனெனில் உனக்குப் பதில்செய்ய அவர்களுக்கு இல்லை, நீதிமான்களுடைய உயிர்த்தெழுதலிலோ உனக்குப் பதில் செய்யப்படும் என்றார். இந்த வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்த ஒருவன் அவரைப் பார்த்து: பராபரனுடைய இராச்சியத்தில் அப்பம் புசிக்கிறவன் பாக்கியவானென்று சொன்னான். இப்படிச் சொன்னவன் ஒரு பரிசேயன். மேசியா ஏற்படுத்தப்போகிற பராபரனுடைய இராச்சியத்தைக் குறித்துப் பரிசேயருக்குப் பிசகான அபிப்பிராயம் இருந்தது. மேசியா வரும்போது அவர் ஒரு இராச்சியத்தை ஸ்தாபிப்பார், அதிலே யூதர்கள் எல்லாரும் பிரபுக்களாயிருப்பார்கள், உலக மகிமையெல்லாம் அவர்களுக்கு இருக்கும், புறச்சாதியார் அதிலே பங்குபெறமாட்டார்கள் என்பதாக அவர்கள் நினைத்தார்கள். இயேசுநாதரோ இது சரியல்லவென்று காண்பிக்கப் பெரிய விருந்தைப்பற்றிய உவமையைச் சொன்னார். அதுதான் நம்முடைய சுவிசேஷ வாக்கியத்தில் உள்ளது. இந்த உவமையினால் பராபரனுடைய இராச்சியமாகிய விருந்து சகல ஜாதிக்கும் பொதுவென்றும், யூதர்களில் மிச்சமானவர்கள் அதை அசட்டைபண்ணுவார்கள் என்றும், யூதர்களால் அசட்டைபண்ணப்பட்ட மற்றவர்கள் அந்த விருந்தை அனுபவிப்பார்கள் என்றும் காண்பிக்கிறார். இந்த உவமையிலே ஆறுதலும் எச்சரிப்புமாக நாம் கற்றுக்கொள்ளக்கூடிய அநேக பாடங்கள் உண்டு. ஆகையால்,

பெரிய விருந்தைக் குறித்துச் சிந்திப்போம்.

1. பெரிய விருந்தின் மகத்துவம்.
௨. அந்த விருந்துக்கு அழைக்கப்படுகிறவர்கள்.
3. அதற்கு வராதவர்களின் அசட்டை.
4. அசட்டையின் பலன்.



### 1.

பெரிய விருந்தின் மகத்துவத்தைப் பார்ப்போம். ஒரு மனுஷன் பெரிய விருந்துபண்ணி, அநேகரை அழைத்து, விருந்துவேளையில்: வாருங்கள், எல்லாம் ஆயத்தமாயிற்று என்று அழைக்கப்பட்டவர்களுக்குச் சொல்லத் தன் ஊழியக்காரனை அனுப்பினான் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பெரிய விருந்து பராபரனுடைய இராச்சியத்தைக் குறிக்கும். பெரிய விருந்து என்றபெயரே இதன் மகிமைக்குச் சாட்சி. இதை ஆயத்தம் பண்ணினவர் மகாப் பெரியவர். அவர் நம்முடைய கர்த்தராகிய பராபரனே. அதை ஆயத்தம்பண்ணுவதில் சென்ற செலவு பெரிது. இந்த உலகத்திலுள்ள பெரிய இராசாக்களின் சகல பொக்கிஷத்தையும் சேர்த்தாலும், இந்த விருந்தின் செலவுக்குச் சரிக்கட்டாது. இதற்குச் சென்ற செலவு பொன்னுமல்ல, வெள்ளியுமல்ல. மெய்யான தேவனும் மெய்யான மனுஷனுமாகிய இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த இரத்தமும் அருமையான ஜீவனும் இதற்குச் சென்ற செலவு. இந்த விருந்தில் நமக்குக் கொடுக்கப்படும் போசன பதார்த்தம் பெரிது. அதில் நாம் உண்ணும் போசனம் கிறிஸ்துதாமே. நானே வானத்திலிருந்து இறங்கின சீவனுள்ள அப்பம், ஒருவன் இந்த அப்பத்திலே புசித்தால் என்றென்றைக்கும் பிழைத்திருப்பான். நான் கொடுக்கப்போகிற அப்பமோவெனில், நான் உலகத்தின் சீவனுக்காகக் கொடுக்கப்போகிற என்னுடைய மாமிசமாயிருக்கிறது என்று சொன்னார் (யோவா. 6, 51). இந்த விருந்துக்கு ஒத்த விருந்து எங்கேயாவது கிடைக்குமா. இதில் கிறிஸ்து தாமே தம்முடைய எல்லாப் புண்ணியங்களோடும் நமக்குச் சொந்தமாகிறார். இந்த விருந்தில் புசிக்கிறவர்களுக்கு வரும் பலன் பெரிது. எல்லாம் ஆயத்தமாயிற்றென்று சொல்லியிருப்பதால், இதில் ஆத்துமத்துக்கு வேண்டிய சகல காரியங்களும் அகப்படும். பாவமன்னிப்பு, ஞான சீவன், நித்திய இரட்சிப்பு இதில் கிடைக்கும். இயேசு இரட்சகரை விசுவாசத்தினால் உட்கொண்டவர்களுக்கு என்ன குறைவுண்டு. அவரால் நமது பசி தீரும். நமது மனக்கலக்கமெல்லாம் பறக்கும். நமது இருதயம் சந்தோஷத்தினால் நிரம்பும். மோட்சத்தின் திடமான நம்பிக்கை நம்மை ஆளும்.

இந்த விருந்தின் பலன் நாம் சாகும் நாள் வரைக்கும் அனுபவிக்கிற ஆத்தும நன்மைகள் மாத்திரமல்ல; நாம் செத்த பின்னும் இந்த விருந்தின் பலன் நமக்கு இருக்கிறது. இங்கே கிறிஸ்துவின் இராச்சியத்தில் கிறிஸ்துவை விசுவாசித்து, அவருடைய இரட்சிப்பை அனுபவித்தவர்கள் அங்கே மோட்சத்திலும் நித்திய பாக்கியத்தை அனுபவிப்பார்கள். நாம் வெளிச்சத்திலுள்ள பரிசுத்தவான்களின் சுதந்தரப்பங்குக்கு அழைக்கப்பட்ட

வர்கள். நமக்கு மறுமையில் வைத்திருக்கும் பாக்கியம் இன்னம் நமக்குப் பூரணமாய் வெளியாகவில்லை. அது வெளிப்படும்போதோ நம்முடைய ஆச்சரியம் பெரிதாயிருக்கும். என் சத்துருக்களுக்கு எதிரே நீர் எனக்குமுன்பாக ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர், என் பாத்திரம் நிரம்பியிருக்கிறது, என் சீவனுள்ள நாள் எல்லாம் நன்மையுங் கிருபையும் என்னைத் தொடரும், நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன் (சங். 23, 5-6) என்று இங்கே விசுவாசமாய்ச் சொல்லுகிறதை அங்கே அனுபவமாய்ச் சொல்லுவோம். இவைகளினால் பெரிய விருந்தின் மகத்துவம் இன்னதென்று நாம் சுருக்கமாய்ப் பார்த்தோம்.

2.

இப்பொழுது இந்த மகத்துவமான விருந்துக்கு அழைக்கப்படுகிறவர்களைக் குறித்துக் கேட்போம்.

இதற்கு எல்லாரும் அழைக்கப்படுகிறார்கள். முந்தி அழைக்கப்பட்டவர்கள் யூதர்கள். அவர்களை நம்முடைய இரட்சகர் அழைக்கப்பட்டவர்கள் என்று பெயரிடுகிறார். இஸ்ரவேல் ஜனத்தைப் பராபரன் தம்முடைய ஜனமாகத் தெரிந்துகொண்டார். தம்முடைய ஜனமாயிருக்கும்படி அவர்களை அழைத்தார். தம்முடைய ஜனமாயிருக்க அவர்களோடு உடன்படிக்கை பண்ணினார். நியாயப்பிரமாணத்தினால் அவர்களை மற்ற ஜாதியாரை விட்டுப் பிரித்தார். தம்முடைய தீர்க்கதரிசிகளைக்கொண்டு அவர்களைச் சிறந்த விதமாய்ப் போதித்தார். இரட்சிப்புக்கு அவர்களை ஆயத்தம்பண்ணினார். இரட்சகர் உலகத்துக்கு வந்தபோது அவர்கள் நடுவே அவர்களில் ஒருவராய்ப் பிறந்தார். தம்முடைய அப்போஸ்தலர்களை முந்த முந்த அவர்களிடமே அனுப்பினார். நீங்கள் புறச்சாதிகளுடைய வழிக்குப் போகாமலும், சமாரியர் பட்டணத்தில் பிரவேசியாமலும், இஸ்ரவேல் வீட்டில் காணாமல் போன ஆடுகளண்டைக்குப் போங்கள் என்று கட்டளை கொடுத்து அனுப்பினார் (மத். 10, 5-6). யூதர்களில் முக்கியமானவர்கள் அழைப்புக்குக் கீழ்ப்படியாமல், விருந்தை அசட்டைபண்ணினார்கள். அகந்தையும் பெருமையும் அவர்களை ஆண்டது. அப்பொழுது வீட்டுக்கு எஜமான் தன் ஊழியக்காரனுடனே: நீ சீக்கிரமாய்ப் பட்டணத்தின் தெருக்களிலும், வீதிகளிலும் புறப்பட்டுப்போய், தரித்திரரையும் ஊனரையும் சப்பாணிகளையும் குருடரையும் இங்கே உள்ளே அழைத்துவா என்று சொன்னார் என்று நம்முடைய வாக்கியம் சொல்லுகிறது. அழைக்கப்பட்ட பெரியவர்கள் விருந்திற்கு வராவிட்டாலும் யூதரில் தரித்திரராயிருந்த ஆயக்காரரும் பாவிக



ளும் வரும்படி கர்த்தர் அவர்களை அழைத்தார். இவர்களைப் பரிசேயரும் வேதபாரகரும், பிரதான ஆசாரியர்களும் மூப்பர்களும் அசட்டைபண்ணினாலும், நம்முடைய அருமை இரட்சகர் அசட்டைபண்ணவில்லை. பாவியான ஸ்திரீ, ஆயக்கார சகேயு முதலியவர்கள் அவருடைய விருந்துக்கு வந்தார்கள். அவர்கள் எல்லாரையும் அவர் ஏற்றுக்கொண்டார்.

கர்த்தர் ஆயத்தம் பண்ணின விருந்து யூதர் நடுவிலிருந்த பாவிகளுக்கு மாத்திரமல்ல, உலகமெங்குமுள்ள சகல பாவிகளுக்கும் ஆயத்தமாயிற்று. ஊழியக்காரன்: ஆண்டவரே, நீர் கற்பித்தபடி செய்யப்பட்டது, இன்னம் இடம் உண்டு என்றான். அப்போது எஜமான் ஊழியக்காரனுடனே: நீ வழிகளிலும் வேலிகள் அருகேயும் புறப்பட்டுப்போய் என் வீடு நிறையும்படிக்கு, ஜனங்களை உள்ளே வர வருந்தியழை என்றான். புறச்சாதியாராகிய நாமும் மற்ற அஞ்ஞானிகளும் இஸ்ரவேல் ஜனத்தின் எல்லைக்குப் புறம்பானவர்கள். நாம் கர்த்தருடைய ஜனமல்ல, வழிகளிலும் வேலிகள் அருகிலும் தங்கிக் கிடக்கும் பிச்சைக்காரர். ஆகிலும் கர்த்தர் நம்மைக் கண்ணோக்கிப் பார்த்தார். நம்மையும் தம்முடைய விருந்துக்கு அழைத்தார். அவருடைய கிருபையினால் கிறிஸ்துவின் இரட்சிப்பும் கிறிஸ்துமார்க்கமும் எல்லாருக்கும் பொதுவாயிற்று. திருச்சபை பொதுவான திருச்சபையென்று சொல்லப்படும். பவுல் அப்போஸ்தலன் புறச்சாதியாரின் அப்போஸ்தலனாயிருந்து, சுவிசேஷப் பிரசங்கத்தினால் அநேக புறச்சாதியாரைக் கிறிஸ்துவண்டைக்குக் கொண்டுவந்தார். அவருடைய காலமுதல் இந்நாள்வரைக்கும் உலகத்திலுள்ள அஞ்ஞானிகள் எல்லாரையும் கர்த்தருடைய ஊழியர் அழைத்துக்கொண்டேயிருக்கிறார்கள்.

தெய்வ ஊழியர் நம்மை அழைக்கிற அழைப்பு கர்த்தருடையது. ஏனெனில், அவர்களை அழைக்கச் சொன்னவர் கர்த்தர். இரட்சிப்பாகிய விருந்தை ஆயத்தம் பண்ணினவர் கர்த்தர். அவருடைய விருந்தைப்பற்றி உலகத்துக்குத் தெரிவிக்க வேண்டியவர்கள் கர்த்தருடைய ஊழியர். ஊழியரில்லாமல் பிரசங்கமில்லை. பிரசங்கமில்லாமல் விசுவாசமில்லை. ஆகையால், மெய் விசுவாசிகள் எல்லாக் காலத்திலும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் ஊழியர்களை அனுப்பக் கவலையாயிருந்தார்கள். நம்முடைய தேசத்துக்கும் கர்த்தருடைய ஊழியக்காரர் வந்ததினால், நம்முடைய முன்னோரும் நாமும் இரட்சிப்பைப்பற்றிய சத்தியங்களைக் கேட்டுவருகிறோம். நம்மண்டைக்குத் தம்முடைய ஊழியர்களை அனுப்புகிற கர்த்தருக்கு நாம் கொடுக்கத்தக்க காணிக்கை யென்ன. அவர் நம்மிடத்தில் ஒன்றும் கேட்காமல், தம்முடைய அழைப்புக்கு நாம் கீழ்ப்படியவேண்டுமென்று மாத்தி

ரம் கேட்கிறார். அவருடைய இந்தக் கிருபைக்கு நாம் ஸ்தோத்திரம் செலுத்தி, அவரிடம் நம்முடைய முழு இருதயத்தினாலும் சேருவது நம்முடைய கடமை.

3.

கர்த்தர் ஆயத்தம்பண்ணின பெரிய விருந்துக்கு வாராதவர்களின் அசட்டையைக் குறித்து நாம் இப்போது கேட்போம்.

அவர்கள் எல்லாரும் ஏகமாய் வரக்கூடாதென்று மறுக்கத்தொடங்கினார்கள். முந்தினவன் அவனுடனே: ஒரு வயலைக் கொண்டேன், நான் புறப்பட்டுப்போய் அதைப் பார்க்க எனக்குத் தேவையாயிருக்கிறது, என்னை மன்னிக்க உன்னைவேண்டிக்கொள்ளுகிறேன் என்றான். வேறொருவன்: ஐந்து ஏர்க்குண்டைக் கொண்டேன், அதுகளைச் சோதிக்கப்போகிறேன்; என்னை மன்னிக்க உன்னை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான். வேறொருவன்: பெண்ணை விவாகம் பண்ணினேன், இதின் நிமித்தம் நான் வரக்கூடாது என்றான்.

வயலை வாங்குகிறதும், மாடுகன்று வாங்குகிறதும், கலியாணம் பண்ணுகிறதும் கெட்டதல்ல. இவைகள் மனிதருக்கு அவசியமான காரியங்கள்தான். வயலில்லாதேபோனால் விளைச்சலில்லை, நமக்கு ஆகாரமில்லை. ஏர்மாடு இல்லாமல் பயிர்த்தொழில் நடக்காது. புருஷனுக்குப் பெண்சாதி அவசியமானவள். மனிதன் ஒண்டியாயிருக்கிறது நல்லதல்ல என்று கர்த்தர் தாமே சொன்னார். நாம் இவைகளை நடத்தவேண்டிய எஜமான்கள். நமக்கு மேலான எஜமானே பராபரன். அவர் கூப்பிடுவதை நாம் கேட்காதபடிக்கு உலககாரியங்கள், உலக கடமைகள், நம்மைத் தடுக்க நியாயமில்லை. என்றாலும், மனிதர்கள் பராபரனைப் பார்க்கிலும் தங்கள் ஆஸ்திபாஸ்திகளையும், பெண்சாதிபிள்ளைகளையும் சிநேகிக்கிறதினால் கர்த்தருடைய இராச்சியத்துக்குத் தூரமாய்ப் போகிறார்கள். ஒரு நாள் வாலிபன் ஒருவன் இயேசுநாதரிடத்தில் வந்து: நித்திய சீவனை அடைவதற்கு நான் செய்யவேண்டியதென்னவென்று கேட்டான். அவர் அவனைப் பார்த்து: உனக்குண்டானதுகளை விற்று, ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டு என்னைப் பின்செல் என்று சொன்னார். இந்த வார்த்தையை அந்த வாலிபன் கேட்டபோது துக்கமடைந்து போய்விட்டான். ஏனெனில் அவன் இயேசுநாதரைப் பார்க்கிலும் தன் ஆஸ்திபாஸ்திகளைச் சிநேகித்தான். நாளது வரையில் யூதர் இப்படிச்செய்கிறார்கள். அவர்கள் இரட்சிக்கிற சுவிசேஷத்தைத் தள்ளி, பணத்தை அதிகமாய்ச் சிநேகித்து, பண ஆசையில் அமிழ்ந்திக்கிடக்கிறார்கள்.



நம்முடைய தேசத்திலும் அநேகர் உலக முகாந்தரங்களால் இரட்சிப்பை அசட்டை பண்ணுகிறதை நாம் பார்க்கிறோம். அநேக அஞ்ஞானிகள் ஏன் கிறிஸ்து மார்க்கத்துக்கு வருகிறதில்லை. நாங்கள் கிறிஸ்து மார்க்கத்தைச் சேர்ந்தால், எங்கள் சொத்துச் சுதந்தரம் போய் விடும், எங்கள் ஜாதி ஜனங்கள் எங்களைத் தள்ளி விடுவார்கள், எங்களுக்கு அநேக நஷ்டங்கள் வரும், ஆகையால் நாங்கள் கிறிஸ்தவர்களாக முடியாது என்று சொல்லுவார்கள். இது மகா விசனமான காரியம். மனுஷன் உலகத்தை யெல்லாம் ஆதாயப்படுத்திக்கொண்டு தன் ஆத்துமத்தைச் சேதப்படுத்தினால், அவனுக்கு லாபமென்ன; அல்லது மனுஷன் தன் ஆத்துமத்தை மீட்கிறதற்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான் என்று இரட்சகர் சொல்லுகிறார் (மத். 16, 26). நம்முடைய ஆஸ்திபாஸ்தி, நம்முடைய சொத்து சுதந்தரம் இரட்சிப்புக்குத் தடையாயிருந்தால் அவைகளை விட்டுவிடுவது அவசியம். மேலும், மற்றொரு இடத்திலே கர்த்தர் சொல்லுகிறதாவது: யாதொருவன் என்னண்டைக்கு வந்து, தன் தகப்பனையும் தாயையும், பெண்சாதியையும் பிள்ளைகளையும், சகோதரரையும் சகோதரிகளையும், தன் சுய சீவனையுங்கூடப் பகையாதேபோனால், என் சீஷனாயிருக்கமாட்டான் என்றார் (லூக். 14, 26). ஒருவன் தன் பெண்சாதிபிள்ளையோடு நரகத்துக்குப் போகிறதைப்பார்க்கிலும், அவர்களில்லாமல் மோட்சத்துக்குப்போகிறது அதிக நல்லது. ஆகையால் இந்த அசட்டைக்காரரைப்போல், நாம் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாய் இருப்போமாக. நம்முடைய கிறிஸ்தவர்களிலும் அநேகர் இப்படிப்பட்ட அசட்டைக்காரராயிருக்கிறார்களென்று நாம் விசனத்தோடே சொல்லவேண்டும். ஞாயிற்றுக்கிழமைகளிலும் பண்டிகை நாட்களிலும் அநேக கிறிஸ்தவர்கள் கோயிலுக்கு வருகிறதில்லை. சிலர் வயலுக்குப் போவார்கள். சிலர் மாடு மேய்க்கப் போவார்கள். சிலர் தங்கள் வீட்டுக்காரியமாய் அங்குமிங்கும் போவார்கள். இவர்கள் இப்படித் தங்கள் ஆத்தும இரட்சிப்பைப்பார்க்கிலும், இந்த சரீரக்காரியங்களைப் பெரிது பண்ணினால், கர்த்தருடைய கோபம் மூளும் என்பது நிச்சயம். இவர்கள் முடிவு பயங்கரமாயிருக்கும். இதைக்குறித்து, நாம் கடைசியாகப் பார்ப்போம்.

4.

பெரிய விருந்தை அசட்டை பண்ணுகிறவர்களுக்கு வரும் பலன் இன்னதென்று பார்ப்போம்.

அழைக்கப்பட்ட அந்த மனுஷரில் ஒருவனும் என் விருந்தை ருசிபார்ப்பதில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றான் என்று வாசிக்கிறோம். விருந்தின் நன்மைகளை விருந்துக்கு வந்தவர்கள்தான் அநுபவிப்பார்கள், அதற்கு வரா

தவர்கள் அவைகளை அனுபவிக்க முடியாது. ஒரு விருந்துக்குப் போகாவிட்டால், மற்றொரு விருந்துக்குப் போகலாமே என்று நினைக்கவும் இங்கே இடமில்லை. ஏனெனில், இரட்சிப்பின் விருந்து ஒன்றே ஒன்றுதான். நம்முடைய இரட்சகர் ஒரே ஒருவர். அவரையல்லாமல் வேறே இரட்சகர் இல்லை. அவர் சம்பாதித்த இரட்சிப்பையல்லாமல், வேறே இரட்சிப்பில்லை. எவனொருவன் சுவிசேஷ பிரசங்கத்துக்குச் செவி கொடாமல் போகிறானோ, எவனொருவன் கிறிஸ்துவை விசுவாசித்துத் திருச்சபையில் சேராமல் போகிறானோ, அவனுக்கு வானராச்சியத்தின் நன்மையெல்லாம் இல்லாமல் போகிறது. அவனுக்குப் பாவமன்னிப்பு இல்லை. பாவத்திலே பிறந்த அவன் பாவத்திலே பிழைத்து, பாவத்தோடு சாவான். அவனுக்கு நீதி இல்லை; அவன் பராபரனுடைய சந்நிதானத்தில் நிருவாணியாயிருப்பான். அவனுக்குச் சமாதானமில்லை; அவன் வேதனையுள்ள மனச்சாட்சியோடு தன் கண்களை மூடுவான். அவனுக்குச் சந்தோஷமில்லை; இந்த உலகத்தில் அவன் அனுபவித்த சந்தோஷமெல்லாம் துக்கமாக மாறும்.

தம்முடைய அழைப்புக்குக் கீழ்ப்படியாமல், தம்முடைய விருந்தை அசட்டைபண்ணின எல்லார் பேரிலும் அவருடைய கோபம்பற்றி எரியும். எசமான் கோபமடைந்தான் என்று நாம் வாசிக்கிறோம், பராபரனுடைய கோபம் இம்மையில் வெளிப்படுவதுண்டு. யாதொரு மனுஷன் மேலே அல்லது ஜாதியின் மேலே அவருடைய கோபம்பற்றி எரிகிறதானால் அது பயங்கரமாயிருக்கும். பராபரனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமென்று வேதம் சொல்லுகிறது: அது மெய்தான். நோவாவின் காலத்திலிருந்தவர்கள் அவருடைய வார்த்தையைக் கேளாமல் போனதினாலே அவர்களுக்கு வந்த முடிவு நமக்குத் தெரியும். லோத் என்ற நீதிமானின் வார்த்தையை அசட்டை செய்த சோதோம் கொமோரூப் பட்டணத்தாருக்கும் பயங்கரமான முடிவு வந்தது. நம்முடைய இரட்சகருடைய அன்பான அழைப்புக்குச் செவிகொடாமல்போன எருசலேம் பட்டணத்தின்மேல் தேவகோபம் பற்றி எரிந்ததினால், அது அழிந்துபோயிற்றே. எரேமியாவின் சொல்லைக் கேளாமல்போன சிதேக்கியா இராசாவும், யோவான்ஸ்நானகனின் சொல்லைக் கேளாமல்போன எரோதே இராசாவும் பராபரனுடைய கோபத்துக்குள்ளானார்கள். அவர்களுடைய முடிவு பரிதாபமாயிருந்தது. இப்படியே, பராபரனுடைய கோபம் இம்மையில் பற்றி எரிகிறதுமல்லாமல், மறுமையிலும் பற்றி எரியும். கர்த்தருடைய ஊழியக்காரரின் அழைப்பை அசட்டைபண்ணின அஞ்ஞானிகளும் கிறிஸ்தவர்களும் நரகத்திலே தள்ளப்படுவார்கள். அங்கே எரிகிற பராபரனுடைய கோபத்தின் அக்கினியை அவிக்கக்கூடிய எந்தக் காரியமும் இல்லை.



அசட்டைக்காரருக்கு வரும் பயங்கரமுடிவுக்கு அவர்களே காரணர். ஒரு பெரிய நந்தவனத்தில் தெளிந்த தண்ணீர் உள்ள ஓர் குளம் இருந்தது. அந்தக் குளத்தருகே ஒரு அம்மையார் அழுதுகொண்டிருந்தாள். அவள் அழுகுரலைத் தூரத்திற்கேட்ட பெரியவர் ஒருவர் சமீபித்துப் பார்க்கையில், அந்த அம்மையாரண்டை ஒருவாலிபன் செத்துக்கிடக்கிறதைக் கண்டு பரிதபித்து: அம்மா, இந்த அழகிய வாலிபன் செத்தவயணமென்னவென்று கேட்டார். அதற்கு அவள்: ஐயா, இவனுக்கு நோய்நொடி ஒன்றுமில்லை. தாகத்தினாலே செத்துப்போனான். நான் என்ன சொல்லியும், இந்தத் தண்ணீரைக் குடிக்க மாட்டேனென்று சொல்லிவிட்டான். இதுவே அவன் பரிதாபமான முடிவுக்குக் காரணம் என்று அழுகையோடு சொன்னாள். இது எவ்வளவு பரிதாபம். இரட்சிப்பின் விஷயத்தில் இந்த வாலிபனைப் போல் செய்கிறவர்கள் எத்தனைபேர். பிரியமானவர்களே, நம்முடைய கேட்டுக்கு நாமே காரணராகாமல், இன்றைக்கே கர்த்தருடைய கிருபையின் அழைப்புக்குக் கீழ்ப்படிந்து, இரட்சிப்பை ஏற்றுக்கொள்ளுவோமாக. அதற்குக் கீழ்ப்படியாமல் அசட்டைசெய்கிறவர்களுக்காக நாம் துக்கப்பட்டு, கரிசனத்தோடு ஜெபம் செய்வோமாக.

பரமபிதாவாகிய பராபரனே, உம்முடைய பெரிய விருந்திற்கு எல்லா சாதியாரையும் எங்களையும் அழைத்த உம்முடைய கிருபைக்கு ஸ்தோத்திரம். உம்முடைய அழைப்புக்குக் கீழ்ப்படிகிற இருதயத்தையும், உம்முடைய விருந்தை அனுபவிக்கும் விசுவாசத்தையும் எங்கள் எல்லாருக்கும் தந்தருளும், சுவாமி. ஆமென்.

## திரித்துவப் பண்டிகைக்குப் பிந்தின ௪-ம் ஞாயிறு.

லூக்கா 15, 1—10.

பிரியமானவர்களே,

தாவீது இராசா சவுலினால் துரத்தப்பட்டுத் திரிகையில் அதுல்லாம் என்ற மலைக்கெபியிலே வந்தார். இக்கட்டுப்பட்ட சகலவித மனுஷரும், கடன்பட்ட சகலவித மனுஷரும், மனவிசாரப்பட்டிருக்கிற சகலவித மனுஷரும் அவரோடே கூடிக்கொண்டார்கள். அவர்களுக்கு அவர் தலைவரானார். இந்தப்பிரகாரமாக ஏறக்குறைய நானூறுபேர் அவரோடு இருந்தார்கள். இதில் தாவீது இராசா கிறிஸ்துவுக்கு முன்னடையாளம். இயேசுநாதர் யூதர்நடுவே அவர்களுடைய மேசியாவாய்ப் பிறந்தார். யூதரில் பெரியவர்கள் அவரைச் சேர்த்துக்கொள்ளவில்லை. அவ

ரை விரோதித்தார்கள். அவர்கள் அற்பமாய் எண்ணின ஆயக்கா
ரரும் பாவிகளுமே அவரிடத்திலே வந்து கூடினார்கள். அவர்களை
அவர் ஏற்றுக்கொண்டார். இது பாவிகளுக்கு எவ்வளவு ஆறுத
லான சங்கதி. பரிசுத்தமுள்ள இயேசு பாவிகளைத் தூரத்தில்போ
டாமல், அவர்களைப் பட்சமாய் அரவணைத்து, அவர்களுக்கு
அன்புபாராட்டினதால், அவர் எல்லாக் காலத்திலும் எல்லா
இடத்திலும் உள்ள சகல பாவிகளுக்கும் இரங்குகிற கிருபை
யுள்ள இரட்சகர் என்று தெளிவாய்க் காண்பித்தார். அவர் பாவி
களை ஏற்றுக்கொண்டது பரிசேயருக்குப் பிடிக்கவில்லை. அவர்கள்
தங்களைப் பரிசுத்தவான்களென்று நினைத்து, தங்களைப்போல்
இராதவர்களை விரோதித்தார்கள். அவர்கள் பகைத்துத் தள்ளின
வர்களை இயேசுநாதர் சேர்த்துக்கொண்டதினால் அவர்கள் முறு
முறுத்தார்கள். அவர்கள் முறுமுறுப்பு சரியல்லவென்றும்,
அவர்கள் சந்தோஷப்பட நியாயமிருக்கிறதென்றும் காண்பிப்ப
தற்காக அவர் மூன்று உவமைகளைச் சொன்னார். அவைகளில்
இரண்டு நம்முடைய வாக்கியத்தில் இருக்கிறது. இதை நாம் கவ
னித்துப் பார்த்தால், நாம் ஆறுதலடைந்து: கெட்டோரை
இயேசு சேர்க்கிறார் என்று சொல்லி, பராபரனுடைய கிருபை
யைப் புகழ்ந்து பாடுவோம். ஆகையால் நாம் இப்பொழுது:

**கெட்டோரைச் சேர்க்கும் கிருபையைப் பற்றிச் சிந்திப்போம்.**

1. கெட்டலைந்த பாவியின் கேடு பெரிது.
2. அவனைத் தேடிப்பிடிக்கும் கிருபை பெரிது.
3. கிருபைக்குட்பட்டவனின் பாக்கியம் பெரிது.

1.

கெட்டலைந்த பாவியின் கேடு பெரிது என்ப
தைக் கவனிப்போம். சகல ஆயக்காரரும் பாவிகளும் அவர் வச
னங்களைக் கேட்க அவரண்டைக்குச் சேருகிறவர்களாயிருந்தார்
கள் என்று சுவிசேஷ வாக்கியம் சொல்லுகிறது. ஆயக்காரர்
ரோமரிடத்தில் வேலைபார்த்த யூதர்கள். சனங்கள் ரோமருக்
குச் செலுத்தவேண்டிய வரிகளை இவர்கள் குத்தகைக்கு ஒப்
புக்கொண்டு, சனங்களிடத்தில் வாங்கவேண்டியதற்குமேல் அநி
யாயமாய் வரி வாங்கினார்கள். அவர்கள் அஞ்ஞானிகளாகிய
ரோமருக்குச் சார்பாயிருந்து, தங்களை ஒடுக்கி அநியாயம்பண்
ணினதால், யூதர் அவர்களைப் பகைத்து உண்பனை தின்பனைக்கு
அவர்களை விலக்கி வைத்தார்கள். பாவிகளென்று இங்கே
சொல்லப்படுகிறவர்கள் யாரென்றால், வெளியரங்கமாய் விபசா
ரம் வேசித்தனம் செய்து, குடித்து வெறித்து, அநியாயம் பண்
ணினவர்களேதான். இவர்களையும் மற்ற யூதர் சாதிக்குப் புறம்



பாக்கியிருந்தார்கள். இவர்களை இயேசுநாதர் இரட்சிக்க மனங்
கொண்டதால், அவர்களைத் தம்மிடம் ஏற்றுக்கொண்டார். அவர்
களும் உலகத்திலுள்ள மற்றப் பாவிகளும் இருக்கிற நிலைமை பரி
தாபமானதென்பதை, இரட்சகர் காணாமற்போன ஆட்டைப்பற்
றிய ஒப்பனையால் காண்பிக்கிறார். ஒரு மனுஷனுக்கு நூறு ஆடு
இருந்தது. அவைகளில் ஒன்று மேய்ப்பனுடைய கட்டுக்காவ
லில் அடங்கியிருக்க மனமில்லாமல் அவனை விட்டு ஓடிப்போ
யிற்று. அது மந்தைக்குச் சற்றுத் தூரமானவுடனே மகா சந்
தோஷமாய் சந்தோஷிக்கிறது. நானே பாக்கியசாலி, இப்பொழுது
என் மனம்போன போக்கெல்லாம் போகலாம், என்னைக் கேட்பார்
யாருமில்லை; அதோ, அந்தப் பசுமையான பயிரை நான் மேயலாம்,
அந்தக் காட்டாற்றின் தண்ணீரை நான் குடிக்கலாம் என்று
சொல்லிக்கொண்டு, துள்ளித் துள்ளி ஓடுகிறது. தான் சொல்
லிய வண்ணமே அது கண்ட பயிரையெல்லாம் தின்கிறது,
தண்ணீரை வயிறு புடைக்கக் குடிக்கிறது. ஒரு மர நிழலில்
கொஞ்சநேரம் படுத்து அசைபோட்டு உறங்குகிறது. மறுபடி
யும் எழுந்து, துள்ளிக் குதித்து ஓடுகிறது. வனத்திலுள்ள இலை
களையும் தழைகளையும் தின்று பூரிக்கிறது. பொழுது பட்டு நிலா
எறிக்கத் துவக்குகையில் அதன் மகிழ்ச்சி அதிகரிக்கிறது. அது
நிலா வெளிச்சத்தில் விளையாடி, தன் நிழலைப் பார்த்து: நான்
எவ்வளவு பெரிய ஆடாய்ப் போனேன் என்று சொல்லி ஆனந்
தப்படுகிறது. ஆகிலும், அதன் ஆனந்த சந்தோஷம் வெகுநேரம்
இருக்கிறதில்லை. நிலவில் தனக்கு ஒரு பூஞ்செடிபோல் தோன்
றின ஒரு முட்செடியின் இலைகளைக் கடித்துக்கொண்டே ஒரு
பள்ளத்தில் விழுந்து விடுகிறது. முட்செடியின் கொடிகள்
அதைச் சுற்றிக்கொள்ளவே, அது எழுந்திருக்கமாட்டாமல் கிடக்
கிறது. இந்த ஆபத்து நேரத்தில் அதோ, ஒரு பக்கத்தில் ஒரு
ஆந்தை ஓநாயின் சத்தம் கேட்கிறது. மற்றொரு பக்கம் ஒரு நரி
ஊளையிடுகிறது. இன்னொருபக்கம் ஒரு காடி உறுமுகிறது. இதை
யெல்லாம் கேட்கவே, அந்த ஆடு திகில் அடைகிறது. வரவரப்
பயம் அதிகரித்து அழுது புலம்புகிறது. இதுவே கெட்டலைந்த
பாவியின் கிரமத்த நிலைமை. அவன் பராபரனுக்குத் தூரமாகி,
அவருடைய கற்பனைகளை மறந்து, தன் சொந்த மனம்போல் நடக்
கிறான். பாவத்தைச் சிநேகிக்கிறான், பாவத்தைச் செய்கிறான்.
பொய் பேச அவன் வாய் கூசுகிறதில்லை. திருட அவன் கை பின்
வாங்குகிறதில்லை. விபசாரம் பண்ண அவன் உடல் அஞ்சுகிற
தில்லை. குடித்து வெறித்துப் பன்றிபோல் புரளுகிறான். அவன்
இந்தப் பாவங்களை நடப்பித்ததற்காகப் பெருமை பாராட்டிச் சந்
தோஷப்படுகிறான். ஆகிலும், அவன் சந்தோஷம் நெடுநாளைக்கு
நிற்கிறதில்லை. அவன் மனச்சாட்சி அவனைக் குத்தத் தொடங்கு

கிறது. பிசாசு அவனைக் குற்றஞ்சாட்டி வதைக்கிறது. பராபரனுடைய வசனம் அவனுக்கு விரோதமாய்க் கூக்குரலிடுகிறது. ஐயையோ கெட்டேனே என்று அவன் அழுது புலம்புகிறான். அவன் நிலைமை எவ்வளவு நிர்ப்பாக்கியம்.

ஒரு திருஷ்டாந்தத்தைப் பார்ப்போம். யூத ராச்சியத்தில் மனாசே என்று ஒரு இராசா இருந்தான். அவன் இஸ்கியா என்ற தெய்வபத்தியுள்ள இராசாவின் மகன். அவன் பன்னிரண்டு வயதுள்ள பையனாயிருக்கையில், கர்த்தர் அவனுக்கு இராச மகிமையைக்கொடுத்தார். அவனோ தனக்குச் சொல்லி முடியாத கிருபை பாராட்டின கர்த்தரை மறந்தான், அஞ்ஞானிகளைப்போல நடந்தான். பொய்த் தேவர்களை ஆராதித்தான். கர்த்தருடைய தெய்வாலயத்திலே விக்கிரக பீடங்களைக் கட்டினான். தன் குமாரரைத் தீமிதிக்கப்பண்ணினான். சகுனம் பார்த்தான். தான் கெட்டதுமல்லாமல், தன் குடிசனங்களையும் கெடுத்தான். கர்த்தருடைய ஊழியக்காரர் அவனை எவ்வளவு எச்சரித்தாலும், அதற்குச் செவிகொடாமல், தன் மனம்போன போக்கிலே நடந்தான். பாவப் பெருமையே அவனுக்குப் பெருமையாயிருந்தது. பாவச் சந்தோஷமே அவனுக்குச் சந்தோஷமாயிருந்தது. ஆகிலும், அவன் பெருமையும் சந்தோஷமும் நெடுங்காலம் நிற்கவில்லை. கர்த்தர் அசூரின் இராசாவை அவனிடம் அனுப்பினார். இந்த அசூரான இராசா தன் திரண்ட சேனையோடு எருசலேமுக்குவந்தான். மனாசே ஓட்டம்பிடித்து முட்செடிகளில் மறைந்து கொண்டான. அந்த முட்செடிகளிலே அவனைப் பிடித்து, இரண்டு வெண்கலச் சங்கிலியால் அவனைக் கட்டி, பாபேலுக்குக் கொண்டுபோனார்கள். எருசலேம் பட்டணத்தில் சாலொமோனின் சிங்காசனத்தில் வீற்றிருக்கவேண்டிய மனாசே இராசா பாபிலோன் பட்டணத்தின் காவற்கிடங்கில் கட்டுண்டிருக்க வேண்டியதாயிற்று. அங்கே அவன் கூக்குரலிட்டு, அழுதுகொண்டிருந்தான். இதுவே அவன் பாவத்தின் பலன்.

பிரியமானவர்களே, பாவத்தின் பலன் இவ்வுலகத்திலுள்ள காவற்கிடங்கோடு முடிகிறதில்லை. பாவிகள் நரகமென்ற நித்தியமான காவற்கிடங்கில் பிசாசோடு வேதனையை அனுபவிப்பார்கள். ஏழைப் பாவிகளை இரக்கமுள்ள கர்த்தர் தேடிப்பிடித்து இரட்சித்தாலன்றி அவர்கள் நிலைமை மகாப் பரிதாபமே.

## 2.

பாவியைத் தேடிப் பிடிக்கும் கிருபை பெரிது என்பதைத் தியானிப்போம். இதை இரட்சகர் ஆடுதேடின மேய்ப்பனைப் பற்றிய சில வார்த்தைகளால் தெரிவிக்கிறார். மேய்ப்பன் தன் மந்தையின் ஆடுகளைக் கணக்குப் பார்க்கும்பொ



ழுது ஒரு ஆடு காணாமற் போயிற்று என்று அறிந்து விசனப்பட்டான். ஓடிப்போன ஆடு தன் மேய்ப்பனை மறந்தாலும், மேய்ப்பன் ஆட்டை மறக்கவில்லை. அவனுக்கு இன்னம் தொண்ணூற்றொன்பது ஆடு இருந்தும், காணாமல் போன ஆட்டின்மேலே தான் அவனுக்குக் கவலை. அவன் ஆட்டை நினைத்து நினைத்துப் பரிதபித்து: ஐயோ, அந்த ஏழை ஆடு எங்கே போயிற்றோ, எந்த ஓநாய் வாயில், எந்த நரிவாயில் அகப்பட்டதோ, அல்லது எந்தப் புதரிலாவது அகப்பட்டுக்கொண்டிருக்கிறதோ, அதை நான் கண்டுபிடிக்குமட்டும் இளைப்பாறமாட்டேனென்று சொல்லி, உடனே அதைத்தேடப் புறப்பட்டான். இப்பொழுது இராப்பட்ட நேரமாச்சுதே, இருள் சூழ்ந்திருக்கிறதே மந்தாரம் போடுகிறதே, மழை தூறுகிறதே, காற்றடிக்கிறதே, வெளிப்புறப்பட வேண்டாமென்று எத்தனை பேர் சொன்னாலும் கேளாமல், வீட்டை விட்டுப் புறப்பட்டான். ஊரெல்லாம் ஆட்டைத் தேடினான். வெளியிலே மலைகளிலும் பள்ளத்தாக்குகளிலும் தேடினான். காடுகளில் எங்கும் தேடினான். கல்லாலும் முள்ளாலும் அவனுக்கு உண்டான காயங்கள் அநேகம், அவைகளினின்று ஓடின இரத்தம் அதிகம். என்றாலும், அவன் மனந்தளர்ந்து போகாமல், தேடிக்கொண்டே திரிந்தான். அந்த ஆட்டின் பெயரைச் சொல்லிப் பல தடவையும் கூப்பிட்டான். எதிரொலி கேட்டதேயன்றி, ஆட்டின் பதில் ஒலி கேட்கவில்லை. இன்னமுந் தேடிக்கொண்டே போனான், கூவிக்கொண்டே போனான். மேய்ப்பன் சத்தம் ஆட்டின் காதில் எட்டவே, ஆடும் கத்தத் துவக்கிற்று. ஆட்டின் சத்தம் கேட்கவே, மேய்ப்பன் நெருங்கிச் சென்றான்; விளக்கைப் பிடித்து உற்றுப் பார்க்கிறபொழுது ஆடு ஒரு முட்புதரில் அகப்பட்டு, அவஸ்தைப்படுவதைக் கண்டான். மிகுந்த பிரயாசத்தோடு முள்ளை விலக்கிக்கொண்டு, ஆட்டை வெளியே எடுத்துவிட்டான். ஆட்டைக் கண்டுபிடித்ததனால் அவனுக்குண்டான சந்தோஷம் இவ்வளவென்றில்லை.

கெட்டலைந்த பாவியைக் கிருபையுள்ள மீட்பர் இந்த விதமாகவே தேடுகிறார். பாவியானவன் கர்த்தரை மறந்தாலும், கர்த்தர் பாவியை மறக்கிறதில்லை. பாவி கர்த்தரைத் தேடாதிருக்கையில், கர்த்தர் பாவியைத் தேடுகிறார். ஆதாமும் ஏவாளும் கர்த்தரை விட்டு விலகி ஓடிப்போன பாவிகளாயிருக்கையில் கர்த்தர் தாமே அவர்களைத் தேடிவந்து: ஆதாமே, நீ எங்கே என்று கூப்பிட்டார். நம்முடைய அருமை இரட்சகர் பாவிகளைத் தேடியே பரலோகத்தைவிட்டுப் பூலோகத்துக்கு வந்தார். பிரயாசப்பட்டுப் பாரஞ்சுமந்தவர்களாகிய நீங்கள் எல்லாரும் என்னண்டைக்கு வாருங்கள், நான் உங்களை முசிப்பாற்றுவேன் என்பது அந்த நல்ல மேய்ப்பரின் சத்தம். மத்தேயுவே, உன்னை

ஆயக்காரனென்று பரிசேயர் தள்ளினாலும் நான் உன்னைத் தள்ளுவதில்லை, நீ என்னண்டை வா, உன்னை நான் அப்போஸ்தலனாக்குவேன் என்கிறார். சகேயுவே, நீ காட்டத்திமரத்தின் மேலிருந்தாலும் நீ இருக்கிற இடம் எனக்குத் தெரியும், நீ சீக்கிரம் இறங்கி வா, பரிசேயர் உன்னைத் தள்ளிவைத்தாலும் நான் உன்னோடு பந்தியிருந்து உன்னோடு சாப்பிடுவேன் என்கிறார். பாவியான ஸ்திரீயே, உன்னைப் பாவியென்று யூதரெல்லாரும் விலக்கிவைத்தாலும், நான் உன்னை விலக்கி வைப்பதில்லை, உனக்காகவே நான் பூலோகம் வந்தேன், உன்னை நான் இரட்சிப்பேன், வா என்று கூப்பிடுகிறார். அவர் பாவியைத் தேடி வந்ததால் பட்ட பாடு கொஞ்சமா. பாவியைத் தேடி வந்த பாதங்களில் இருப்பாணிகளாகிய முள் தைத்தது. பாவியைப் பிடித்தணைக்கும் கைகளிலும் அப்படித்தானே முள் தைத்தது. அவருடைய தலையெல்லாம் முள். அவருடைய தேகமெல்லாம் காயம். இப்படிக்கெல்லாம் இருந்தும், அவர் சோர்படையவில்லை. முன்னே அவர் பாவிகளைத் தேடினதுபோலவே இப்பொழுதும் பாவிகளைத் தேடுகிறார்.

இயேசுநாதர் பாவிகளைத் தேடுகிறதை எங்கள் கண் பார்க்கவில்லையே, அதெப்படி என்று ஒருவேளை கேட்போம். அவர் இப்பொழுது நேர்நேரே தேடாமல், தமது திருச்சபையைக் கொண்டு பாவியைத் தேடுகிறார். எந்த ஸ்திரீயாகிலும் பத்துவெள்ளிக்காசை வைத்திருந்து, ஒரு வெள்ளிக்காசை இழந்தால், விளக்கைக் கொளுத்தி, வீட்டைப் பெருக்கி, அதைக் கண்டுபிடிக்கும் மட்டாகத் தேடாளோ என்று கர்த்தர் சொல்லுகிறார். வேதபுஸ்தகத்தில் திருச்சபையானது அடிக்கடி ஒரு ஸ்திரீக்கு ஒப்பிடப்படுகிறது. திருச்சபை மனுஷ ஆத்துமாக்களைப் பணம் காசைப்போல் அருமையாய்ப் பாவிக்கிறது. பத்து ரூபாயில் ஒரு ரூபாய் காணாமல்போனால், அதை விட்டுவிட எந்தப் பெண்பிள்ளைக்குத்தான் மனது வரும். அவள் எப்படியானது அதைக் கண்டுபிடிக்கப் பிரயாசப்படுவாளல்லவா. அப்படியே திருச்சபையானது தன் ஆண்டவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, பாவிகளைத் தேடிக்கொண்டேயிருக்கிறது. சிருஷ்டியாயிருக்கிற யாவருக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள், சகல சாதிகளையும் சீஷராக்குங்கள், ஞானஸ்நானம் கொடுங்கள் என்று இயேசுநாதர் திருச்சபைக்குக் கற்பித்தார். அதுவே பாவிகளைத் தேடிப்பிடிக்கும்படி அவர் கொடுத்த கற்பனை. இந்தக் கற்பனையின்படி பூமியின் எல்லாத் திக்குத் திசைகளிலும் திருச்சபையின் தானாபதிகளாகிய ஊழியர் பாவிகளைத் தேடி அழைக்கிறார்கள். அவர்கள் செய்கிற வேலை கர்த்தர் தாமே செய்கிற வேலையாயிருக்கிறது. நாமெல்லாரும் கெட்டலைந்த பாவிகளாயிருந்தோம், கர்த்-



தர் நம்மைத் தேடிப் பிடித்தார். கிறிஸ்தவர்களாகிச் சபையில் சேர்ந்த பின்னும் பாவஞ்செய்து; பாவத்தில் நிலைத்துக் கெட்டுப்போகிறவர்கள் உண்டு. அவர்களையும் கர்த்தர் கிருபையாய்த் தேடுகிறார், சபை கரிசனமாய்த் தேடுகிறது, தேவ ஊழியர் உண்மையோடு தேடுகிறார்கள். கெட்டுப்போன ஆத்துமாக்களுக்காகக் கர்த்தர் கவலைப்படுவதுபோல நாமும் கவலைப்படுவது நம்முடைய கடமை.

ஏழைப்பாவிகளைக் கிருபையாய்த் தேடிக் கண்டுபிடிக்கிற நம்முடைய அன்புள்ள இரட்சகரை நாம் ஸ்தோத்திரித்து மகிமைப்படுத்துவோமாக.

3.

கர்த்தருடைய கிருபைக்குட்பட்டவனின் பாக்கியம் பெரிது. காணாமல்போன ஆட்டைக் கண்டுபிடித்து, மேய்ப்பன் அதைச் சந்தோஷமாய்த் தன் தோள்கள்மேல் போட்டுக்கொண்டு, வீட்டுக்கு வரும்போது, சிநேகிதரையும் அயலகத்தாரையும் கூட வரவழைத்து, அவர்களுடனே: என்னோடு சந்தோஷமாயிருங்கள்; அதேனெனில் காணாமல்போன என்னுடைய ஆட்டைக் கண்டுபிடித்தேன் என்பான். இப்படியே, குணப்படுதல் தேவையில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைப் பார்க்க, குணப்படுகிற ஒரே பாவியின்பேரிலே பரமண்டலத்தில் சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆடு அகப்பட்டதற்காக மேய்ப்பன் சந்தோஷப்படுகிறான், மேய்ப்பனுடைய சிநேகிதரும் அயலகத்தாரும் சந்தோஷப்படுகிறார்கள், எல்லாவற்றிலும் அதிகமாய் ஆடுதானே சந்தோஷப்படுகிறது. காணாமல்போன வெள்ளிக்காசு அகப்பட்டதற்காக அதைக் கண்டுபிடித்த ஸ்திரீ சந்தோஷப்படுகிறாள், அவளுடைய சிநேகிதிகளும் அயல்வீட்டுக்காரிகளும் சந்தோஷப்படுகிறார்கள்.

அப்படியே ஏழைப்பாவி குணப்பட்டுக் கிருபைக்குள்ளானதற்காகப் பராபரன் சந்தோஷப்படுகிறார். பராபரனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்டவன் பிசாசின் சாயலாகி, கெட்டுப்போய், நரக அக்கினிக்கு விறகாவது அவருக்கு மகா வியசனமாயிருப்பதுபோல, அவன் பிசாசின் அடிமைத்தனத்திற்கு நீங்கலாகித் தம்மண்டை சேருவதற்காகச் சந்தோஷப்படுகிறார். அவர் ஆகாதவனுடைய மரணத்தை விரும்பாமல், ஆகாதவன் தன் வழியை விட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிற கர்த்தர். ஆகையால் பாவியின் மரணம் அவருக்குத் துக்கமும், பாவியின் ஜீவன் அவருக்குச் சந்தோஷமுமாயிருக்கிறது. பராபரன் சந்தோஷப்படுகிறபொழுது, அவருடைய தூதரும் சந்தோ-

ஷப்படுகிறார்கள். குணப்படாதவர்களைப் பார்ப்பதும் அவர்களோடு இருக்கிறதும் அவர்களுக்குப் பெரிய துக்கமாயிருப்பதுபோல, குணப்பட்டவர்களோடு இருப்பதும் அவர்களுக்குப் பணிவிடை செய்வதும் அவர்களுக்குப் பெரிய சந்தோஷம்.

பாவி குணப்பட்டதற்காக திருச்சபை சந்தோஷப்படுகிறது. திருச்சபை பரிசுத்தவான்களின் ஐக்கியம். குணப்படாதவர்கள் பரிசுத்தவான்களின் ஐக்கியத்திற்குத் தூரமாய்ப்போகிறார்கள். குணப்படுகிறவர்கள் பரிசுத்தவான்களின் ஐக்கியத்திற்கு உள்ளாவதினால் திருச்சபை களிகூர்ந்து மகிழுகிறது. எல்லாவற்றிலும் முக்கியமாய்ப் பாவிக்கே பெரிய சந்தோஷம். இதை நாம் விசேஷித்துக் கவனிப்போமாக.

பாவிக்கு என்ன சந்தோஷம். தன்னைப் பராபரன் தண்டித்து நரகத்தில் தள்ளாமல் ஏற்றுக்கொண்டது அவனுக்கு முதற் சந்தோஷம். மேய்ப்பனைக் கவனியுங்கள். அவன் ஆட்டைக் கண்டு பிடித்தவுடனே அந்த ஆட்டை ஒரு மரத்தில் கட்டிவைத்து, மிலாறெடுத்து அடித்திருப்பானாகில் நியாயமாயிருக்கும். அகந்தையுள்ள ஆடே, நன்றிகெட்ட ஆடே, கீழ்ப்படியாத ஆடே, நீ என் மந்தையில் சேரக் கூடாது, உன்னை நான் நாய் நரிகளுக்கு இரையாக்குவது தகுதியென்று சொல்லி, அதைக் கொன்றிருந்தால் அநியாயமாயிராது. அந்த நல்ல மேய்ப்பனோ அப்படிச் செய்யவில்லை. அதைப் பக்குவமாய்ப் பிடித்து, அதன் காயங்களைக் கழுவி, அதைத் தன் தோள்மேல் போட்டு, வீட்டுக்குக் கொண்டுவருகிறான். எவ்வளவு பட்சமுள்ள மேய்ப்பன்.

கெட்டலைந்த பாவியைப் பராபரன் நரகத்தில் தள்ளுவது நியாயமாயிருக்கும். அவரோ அப்படிச் செய்யாமல், அவனுடைய பாவங்களையெல்லாம் அவனுக்குக் கிருபையாய் மன்னிக்கிறார். இனி நீ குற்றவாளியல்லவென்று தீர்க்கிறார். நீ மோட்சசுதந்தரவாளியென்று கூறுகிறார். ஆ, இந்த வார்த்தையைக் கேட்கும்பொழுது அவன் ஆத்துமா எவ்வளவாய் மகிழ்ச்சியாகும், எவ்வளவாய்க் கெம்பீரிக்கும்.

குணப்படுகிற ஒவ்வொரு பாவிக்கும் அவர் பாவமன்னிப்பைக் கொடுக்கிறார். சிலுவை மரத்தில் குணப்பட்ட கள்ளன்: ஆண்டவரே, நீர் உம்முடைய இராச்சியத்தில் வரும்பொழுது அடியேனை நினைத்தருளும் என்று கெஞ்சுகையில் கர்த்தர் அவனைத் தள்ளினாரா. கள்ளனே, நீ என் பிதாவின் கற்பனைகளை மறந்து நடந்தாயே; திருடினாயே, கொலைபாதகம் செய்தாயே, நான் உன்னை நினைக்க நியாயமில்லை, நீ நரகத்துக்குப்போ என்று சொல்லியிருப்பாரானால் அது அநியாயமாயிராது. அவரோ அவனுடைய விண்ணப்பத்துக்குச் செவிகொடுத்தார். அவனுடைய பாவங்களையெல்லாம் மன்னித்துவிட்டார். அவனுடைய அக்கி



ரமங்களையெல்லாம் மறந்துவிட்டார். மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன், நீ இன்றைக்கு என்னோடேகூடப் பரதீசில் இருப்பாயென்று சொன்னார். இது இவ்வளவு பெரிய கிருபை. சொல்லிமுடியாத கிருபை, நினைத்துமுடியாத கிருபை.

இந்தக் கிருபை பெற்றவன் மகா பாக்கியசாலி. அவன் பராபரனுடைய பிள்ளையாகிறான். பூமி அவனுடையது, வானம் அவனுடையது, எல்லாம் அவனுடையது. எல்லாம் அவனுடைய நன்மைக்கு உதவி செய்கிறது. பாவமன்னிப்பின் நிச்சயம் அவனுக்கு இருப்பதால், இவ்வுலகத்தின் துன்பம் அவனுக்குத் துன்பமல்ல. இம்மையில் நல்ல மேய்ப்பராகிய கிறிஸ்து அவனோடிருந்து, அவனை ஆற்றித்தேற்றிப் பலப்படுத்தி வருகிறார். மறுமையில் அவன் தன் நல்ல மேய்ப்பரோடிருந்து, அவரை ஸ்தோத்திரிக்கிறான்.

பிரியமானவர்களே, நம்மை நாம் சோதித்துப் பார்க்கக்கடவோம். நாம் காணாமற்போன ஆட்டைப்போல் அடிக்கடி வழிதப்பிப்போனவர்கள் அல்லவா. நம்மை நம்முடைய அன்புள்ள மேய்ப்பர் எத்தனை முறை தேடிப்பிடித்துக் கொண்டுவந்தார். அவருக்கு நாம் நன்றியறிந்தவர்களாயிருந்தோமா. இப்பொழுது நாம் குணப்பட்ட கிறிஸ்தவர்களாயிருக்கிறோமா. இந்த நேரத்தில் நம்முடைய இருதயம் இருக்கிற நிலைமை என்ன. இப்பொழுது நமக்காகப் பராபரனுடைய தூதருக்குள் துக்கமுண்டாயிருக்கிறதோ, சந்தோஷமுண்டாயிருக்கிறதோ. நாம் இதுவரைக்கும் குணப்படாத பேர்க் கிறிஸ்தவர்களாய் இருந்திருப்போமானால், இப்பொழுதாவது குணப்பட்டுக் கிறிஸ்துவை அண்டிக்கொள்ளுவோமாக.

அன்புள்ள இயேசுவே, தேவரீர் எங்களைக் குணப்படுத்தி, உம்முடைய ஐக்கியத்தில் வைத்துப் பாதுகாத்து, மோட்ச நம்பிக்கையை எங்களுக்குத் தந்தருளும் சுவாமி, ஆமென்.

---

## திரித்துவப் பண்டிகைக்குப் பிந்தின ௪-ம் ஞாயிறு.

லூக். 6, 36-42.

பிரியமானவர்களே,

நாம் போன ஞாயிற்றுக்கிழமையில் கேட்ட சுவிசேஷ வாக்கியத்தின்படி காணாமல்போன ஆடுகளைப்போல் வழிதப்பித் திரிந்த நம்மை நம்முடைய அருமை இரட்சகராகிய நல்ல மேய்ப்பர் தேடிப்பிடித்தார், நம்முடைய பாவங்களை மன்னித்தார், தம்முடைய ஐக்கியத்தில் சேர்த்துக்கொண்டு காப்பாற்றி வருகிறார்.

அவரோடு சேர்ந்தவர்கள் அவருக்கு ஒப்பாகிறார்கள். அவருடைய குணமெல்லாம் அவர்களுக்கும் வரும். இதுவோ அவர்களுடைய சுய பிரயாசையால் ஆவதல்ல. கர்த்தர் தம்முடைய கிருபையினால் விசுவாசிக்குப் புதுக் குணம் கொடுத்து, அவனைத் தம்முடைய வழிகளில் நடத்துகிறார். அதினால் விசுவாசிகள் அவருடைய சாயலை அணிந்து நடக்கிறார்கள். உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல் நீங்களும் பூரண சற்குணராயிருக்கக் கடவீர்கள் (மத். 5, 48) என்ற கர்த்தருடைய கற்பனையின்படி அவர்கள் நடக்கப் பிரயாசப்படுகிறார்கள். பிதாவின் சற்குணங்களில் ஒன்று இரக்கம். நாமும் இரக்கமுள்ளவர்களாயிருக்க இன்று சுவிசேஷ வாக்கியத்தினால் கர்த்தர் நம்மை ஏவுகிறார். நாம் இப்பொழுது தியானிக்கப்போகிறது.

இரக்கம் என்ற சற்குணத்தைப்பற்றி.

1. நாம் இரக்கத்தைப் படிக்கக்கூடிய இடம்.
2. நாம் இரக்கத்தைக் காண்பிக்கவேண்டிய விதம்.
3. இரக்கத்தால் வரும் பலன்.

1.

நாம் இரக்கத்தைப் படிக்கக்கூடிய இடம் எதுவென்று பார்ப்போம்.

உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறதுபோல், நீங்களும் இரக்கமுள்ளவர்களாகுங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். இரக்கம் உலகம் புகழும் சற்குணம். இரக்கமற்றவர்களை உலகத்தாரும் இகழ்ந்து பேசுவார்கள். ஆகிலும், நாம் இரக்கத்தைக் கற்றுக்கொள்ளக்கூடிய உத்தம முன்மாதிரி உலகத்தாருக்குள் அகப்படாது. பரம பிதாவாகிய பராபரன் ஒருவரே இரக்கத்தை உத்தமமாய் உடையவர். அவர் நம்மைப் பராமரிக்கிறதும் காப்பாற்றுகிறதும் இரக்கமே. அவர் ஒருவரே தீயோர் பேரிலும் நல்லோர் பேரிலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியர் பேரிலும் அநீதியர் பேரிலும் வருஷிக்கப்பண்ணுகிறார் (மத். 5, 45). பாவத்திலும் அக்கிரமத்திலும் செத்துக்கிடந்த பாவிகளை இரக்கமாய்க் கண்ணோக்கிப் பார்த்தவர் அவரே. பூர்வத்தில் நினிவே என்றொரு பெரிய பட்டணம் இருந்தது. அந்தப் பட்டணத்தார் கர்த்தருக்கு விரோதமாக வெகுவாய்ப் பாவஞ்செய்ததினால் கர்த்தரைக் கோபமூட்டினார்கள். அவர் யோனா தீர்க்கதரிசியை அவர்களண்டைக்கு அனுப்பி, இன்னம் நாற்பது நாளில் அந்தப்பட்டணத்தை அழித்துப்போடுவதாகத் தெரிவித்தார். அவர்கள் அதைக் கேட்டபொழுது, இராசா முதல் சகல ஜனங்களும் தங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபமடைந்து, குணப்பட்டார்கள். அப்பொழுது கர்த்தர் அவர்களுக்கு இரங்கி,



அவர்களை அழிக்காமல் விட்டார். அவர் நினிவே பட்டணத்தை அழிக்காமல் விட்டது யோனா தீர்க்கதரிசிக்கு வருத்தமாயிருந்தது. அப்பொழுது கர்த்தர்: தங்கள் வலது கைக்கும் தங்கள் இடது கைக்கும் வித்தியாசம் அறியாத நூற்றிருபதினாயிரம் பேருக்கு அதிகமான மனுஷரும் அநேக மிருகஜீவன்களும் இருக்கிற பெரிய பட்டணமாகிய நினிவேக்கு நாம் பரிதபிக்காதிருப்போமோ என்றார் (யோனா 4, 11). இதனால் அவர் தம்மை உருக்கமும் இரக்கமும் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையும் உள்ள தேவன் என்று காண்பித்தார். அவர் நிர்ப்பந்தப் பாவிகளாகிய நம்மை இரட்சிப்பதற்காகத் தம்முடைய ஒரேபேறான குமாரனைப் பாடுகளுக்கும் மரணத்துக்கும் ஒப்புக்கொடுத்தார். ஆகையால், இரக்கத்துக்கு முன்மாதிரி தேடுகிறவர்கள் அதைப் பரமபிதாவினிடத்தில் கண்டுபிடிக்கலாம்.

நமக்கு இரக்கத்தைப் போதிக்கும் ஒரு போதகருமுண்டு, அது யாரென்று தெரியுமா. பரிசேயரும் வேதபாரகரும் அல்ல. அவர்கள் ஜனங்களுக்கு உத்தம வழியைக் காண்பிக்கும் போதகரென்று ஏற்பட்டும், அவர்கள் உத்தம வழிகாட்டிகளாயிருந்ததில்லை. அவர்களைக்குறித்து நம்முடைய இரட்சகர்: குருடனுக்குக் குருடன் வழிகாட்டலாமோ, இருவரும் பள்ளத்தில் விழுவார்கள் அல்லவோ. சீஷன் தன் போதகனுக்கு மேற்பட்டவனாயிராமல், தேறினவனெல்லாம் தன் போதகனைப் போலிருப்பான் என்று சொல்லுகிறார். பரிசேயர் இரக்கமுள்ளவர்களாயிருந்ததில்லை, அவர்கள் விதவைகளின் வீடுகளைப் பட்சித்தார்கள். அவர்கள் எல்லாவற்றிலும் பத்திலொன்றைக் கொடுத்து, வேதத்தில் கனமான காரியங்களாகிய நீதி நியாயத்தையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டார்கள் (மத். 23, 14-23). இரக்கம் இல்லாத அவர்கள் இரக்கத்தைப் போதிப்பது எப்படி. ஆகையால் அவர்களைக் குருட்டு வழிகாட்டிகளென்று சொல்லவேண்டியதே. அவர்களுடைய போதனையும் இரக்கத்திற்கு விரோதம், சாதனையும் இரக்கத்திற்கு விரோதம். அவைகளின்படி செய்கிறவர்கள் கெட்டே போவார்கள். நாம் எந்த உபாத்தியாரிடத்தில் படிக்கிறோமோ, அவரைப்போல் ஆவோம்; பரிசேயரிடத்தில் படிக்கிறவர்கள் பரிசேயரைப்போல் ஆவார்கள். அவர்கள் பரிசேயருக்குக் கர்த்தர் கூறின முடிவை அடைவார்கள். நாம் பின்பற்ற வேண்டிய உத்தம போதகர் இயேசுநாதர். அவர் தம்முடைய வார்த்தையால் இரக்கம் இன்னதென்று சரியாய்ப் போதித்தார். தம்முடைய நடக்கையால் இரக்கத்தை உத்தமமாய்க் காண்பித்தார். அவர்: என்னிடத்திலே கற்றுக்கொள்ளுங்கள் என்கிறார் (மத். 11, 29). அவருடைய இரக்கம் வியாதியஸ்தரைச் சுகப்படுத்திற்று. தரித்திரருக்காகப் பரிதபித்தது. பக்ஷிகளுக்

காக உயிரை விடப்பண்ணிற்று. நாம் அதை அறிந்திருக்கிறோம். ஞானஸ்நானத்திலே பரம பிதாவின் பிள்ளைகளான நாம் பரம பிதாவைப்போல் இரக்கமுள்ளவர்களாகவேண்டும். இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து அவருடைய சீஷராய்ப்போன நாம் அவர் போதகத்தின்படிக்கும் நடக்கையின்படிக்கும் இரக்கமுள்ளவர்களாயிருப்போமாக. கிறிஸ்துவைப்போல் நடக்கிறவர்களே கிறிஸ்துமார்க்கத்தில் தேறினவர்கள். அவர்களே சரியான கிறிஸ்தவர்கள்.

2.

நாம் இரக்கத்தைக் காண்பிக்கவேண்டிய விதம் என்னவென்பதைப் பார்ப்போம்.

குற்றமாய் நிர்ணயியாதேயுங்கள், ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்காதேயுங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். இந்தவார்த்தைகளினால் கிறிஸ்தவர்களில் எவனும் யாதொருவர்பேரிலும் குற்றம் சொல்லக்கூடாதென்றும், குற்றவாளிகளை எந்த மனுஷனும் தண்டிக்கக்கூடாதென்றும் கர்த்தர் சொல்லுகிறதில்லை. ஒரு வீட்டிலே பிள்ளைகள் குற்றம் செய்தால், தாய் தகப்பன்மார் ஏனோ தானோவென்று இருக்கக்கூடாது. பிள்ளைகளுடைய குற்றத்தைக் குற்றம் என்றே சொல்லவேண்டும், அவர்களைக் கண்டிக்கவேண்டும். அவசியமானால், அவர்களைத் தண்டிக்கவும் வேண்டும். பிரம்பைக் கையாடாதவன் தன் புத்திரனைப் பகைக்கிறானென்று வேதம் சொல்லுகிறது. பள்ளிக்கூடத்தில் உபாத்திமார் பிள்ளைகளைக் கண்டிப்பதும், சபையில் குருமார் தங்கள் சபையாரின் குற்றங்களை யெடுத்துக்காட்டிக் கண்டிப்பதும் அவர்கள் கடமை. அப்படியே உலக அதிகாரிகள் குற்றவாளிகளை நியாயம் விசாரித்து, அவர்கள் குற்றத்துக்குத் தகுந்த தண்டனை விதிப்பது நியாயம். இதற்காகவே கர்த்தர் அவர்களை நியமித்திருக்கிறார். அவர்கள் செய்யும் தீர்ப்புக்கு ஒவ்வொருவனும் கீழ்ப்படவேண்டியது. தாய்தகப்பன்மாரும் உபாத்திமாரும் குருமாரும் நியாயாதிபதிகளும் குற்றத்தைக் குற்றமாக நிர்ணயிக்காதேபோனால், எல்லாம் தாறுமாறாய்ப்போம், சகல ஒழுங்கும் கெட்டுப்போம்.

ஆகிலும், கர்த்தர் இங்கே கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் காண்பிக்கவேண்டிய இரக்கத்தைக் குறித்துப் பேசுகிறார். ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன் சகோதரனை நியாயந்தீர்க்கவேண்டிய நியாயாதிபதியல்ல. சிநேகம் இல்லாமல், தன் சகோதரனைப் பற்றிக் குற்றமாய் நிர்ணயிக்கிறதும், குற்றமாய்ப் பேசுகிறதும், அவன்மேல் குற்றவாளிகளுக்குரிய தண்டனை வரவேண்டுமென்று விரும்புகிறதும் பாதகம், நியாயத்தீர்ப்பு கர்த்தருடை-



யது. அவர் தம்முடைய மகிமையை வேறொருவருக்கும் கொடுக்கமாட்டார். குற்றம் பார்ப்பதும் குற்றம் தேடுவதும் மகா ஈனமான குணம், உடம்பிலுள்ள புண்ணைத் தேடுகிற ஈயின் குணம், பிணத்தைத் தேடுகிற காக்கையின் குணம். நாம் ஈக்கும் காக்கைக்கும் ஒப்பாக நடந்துகொள்வது வெட்கமான காரியம். பிறத்தியாரிடத்தில் குற்றந் தேடிக்கொண்டே திரிகிற ஈனகுணத்துக்கு விலக நாம் என்னசெய்யவேண்டும். மற்றவர்கள் நமக்குச் செய்த நன்மைகளையும் உபகாரங்களையும் நினைக்கவேண்டும். மேலும், நம்மை எப்பொழுதும் சோதித்துப் பார்க்கவேண்டும். நம்முடைய சொந்தக் குற்றங்களைப் பெரிதாகவும், நம்முடைய சகோதரர் குற்றங்களைச் சிறிதாகவும் எண்ணவேண்டும். அதைக் குறித்து நம்முடைய இரட்சகர்: நீ உன் சுய கண்ணிலுள்ள உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலுள்ள சிராயைப் பார்க்கிறதென்ன. அல்லது, நீ உன் கண்ணிலுள்ள உத்திரத்தைக் காணாமல், உன் சகோதரனுடனே: சகோதரனே, நான் உன் கண்ணிலுள்ள சிராயை எடுத்துப்போடட்டும் என்று எப்படி சொல்லக்கூடும். மாயக்காரா, முந்த உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு; பிற்பாடு உன் சகோதரன் கண்ணிலுள்ள சிராயையும் எடுத்துப்போட வகைபார்ப்பாயாக என்கிறார். தங்கள் பேரில் குற்றமில்லையென்று சொல்லி, மற்றவர்களைக் குற்றப்படுத்திக்கொண்டேயிருக்கிறவர்கள் மாயக்காரர். மெய்க்கிறிஸ்தவர்கள் அப்படிச் செய்யமாட்டார்கள். பெரிய அப்போஸ்தலனாகிய பவுலைப் பாருங்கள். அவர் தன்னைப் பாவிகளில் பிரதானமானவனென்று சொல்லுகிறார். அவர் தன்னுடைய பாவங்கள் மற்றவர்களுடைய பாவங்களைப் பார்க்கிலும் பெரிதென்றும், கொடுமையானவையென்றும், அதிகமானவை என்றும் எண்ணினதினாலே அப்படிப் பேசினார். நமக்கு நம்முடைய குற்றந்தான் அதிகமாய்த் தெரியவேண்டும். மற்றவர்களுடைய குற்றங்கள் அவ்வளவாய் நமக்குத் தெரிந்திருக்க முடியாது. நாம் நம்மை அறிவதுபோல் மற்றவர்களை அறிவது நமக்குக் கூடிய காரியமல்ல. ஆகையால், நாம் சகோதரரைக் குற்றமாய் நிர்ணயிக்காமலும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்காமலும் அவர்களை இரக்கமாய்க் கண்ணோக்கிப் பார்க்கவேண்டும். நமக்குப் பிரியமில்லாத ஒரு காரியத்தை, அல்லது மனவருத்தமான ஒரு காரியத்தை ஒரு சகோதரன் செய்தாலும், அதை நமக்கு விரோதமான ஒரு குற்றமென்று தீர்த்துப்போடக் கூடாது. அதை அவன் வேணுமென்று செய்யாதிருக்கலாம், அது அவனுடைய நோக்கத்துக்கு விரோதமாய் முடிந்திருக்கலாம், அவன் ஒரு வேளை பலவீனத்தால் செய்திருக்கலாம் என்று நினைக்கவேண்டும். அதுதான் இரக்கம்.

விடுதலை பண்ணுங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். நமக்கு விரோதமாய் மற்றவர்கள் குற்றம் செய்வார்களாகில், அந்தக் குற்றத்தை மன்னிப்பதே அவர்களை விடுதலை பண்ணுவதாம். பிறத்தியாருடைய குற்றங்களை உடனேக்குடனே மறந்துபோகாமல் நம்முடைய மனதிலே வைத்திருப்பதும், பழி வாங்கத் தேடுவதும் சரியல்ல. நம்முடைய இரட்சகரைப்போல் நாம் செய்யவேண்டும். அவர் சிலுவை மரத்திலே தம்முடைய சத்துருக்களுக்கு மன்னிப்பைத் தேடினார். முதலாம் இரத்த சாட்சியாகிய ஸ்தேவானைப் பாருங்கள். அவர்: கர்த்தராகிய இயேசுவே என் ஆவியை ஏற்றுக்கொள்ளுமென்று தொழுது கொண்டு, ஆண்டவரே அவர்கள் மீதில் இந்தப் பாவத்தை நிறுத்தாதேயும் என்று கூப்பிட்டு, தம்முடைய சத்துருக்களுக்கு மன்னிப்பைத் தேடினார். கர்த்தர் நமக்கு மன்னிக்கிறதுபோல் நாமும் பிறருக்கு மன்னிக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். மற்றவர்கள் குற்றங்களை மன்னிக்க மனமில்லாதவன் இரக்கமுள்ளவனல்ல.

கொடுங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். நம்முடைய ஒத்தாசை யாராருக்குத் தேவையோ அவர்களுக்கு நாம் ஒத்தாசை செய்யவேண்டும். அவர்களுக்கு வேண்டியதைக் கொடுக்கவேண்டும். பசித்தவனுக்குப் போசனம், தாகமுள்ளவனுக்குத் தண்ணீர், வஸ்திரமற்றவனுக்கு வஸ்திரம் கொடுக்கலாம். திக்கற்றவனுக்குச் சகாயம் செய்யலாம். பொருளுதவி செய்ய வழியற்றவர்கள் வாக்குதவி செய்யலாம். அதையும் கர்த்தர் கொடையாகவே எண்ணுவார். ஆயிரம் ரூபாயால் முடியாத ஒரு காரியம் சமயத்துக்கேற்ற ஒரு வார்த்தையால் முடியக் கூடும். கர்த்தர் தங்களுக்குக் கொடுத்திருக்கும் வரத்தினாலும் பலத்தினாலும் சகோதரருக்கு உதவி செய்வதையும் கர்த்தர் கொடையாகவே அங்கிகரிப்பார். நாம் கட்டாயத்தினால் அல்ல, உற்சாகமாய்க் கொடுக்கவேண்டும். சந்தோஷமாய்க் கொடுக்கிறவனைப் பராபரன் சிநேகிக்கிறார் என்று வேதம் சொல்லுகிறது (௨ கொரி. 9, 7). எப்பொழுதும் கொடுக்க மனமுள்ளவர்களாயிருக்கவேண்டும். நாம் நமக்கு உள்ளதை பிறத்தியாருக்குக் கொடுத்து உதவ நம்மை ஏவவேண்டியது இரக்கமே. இரக்கமற்றவன் கொடுப்பது லட்சாதி லட்சமாயிருந்தாலும், அது கர்த்தருக்கு அருவருப்பாம். நாம் நன்மை செய்கிறதில் களைத்துப் போகக் கூடாது.

3.

இரக்கத்தினால் உண்டாகும் பலன் என்னவென்று பார்ப்போம்.



குற்றமாய் நிர்ணியாதேயுங்கள், அப்போது குற்றமாய் நிர்ணிக்கப்படாதிருப்பீர்கள், ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்காதேயுங்கள்; அப்போது ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதிருப்பீர்கள்; விடுதலை பண்ணுங்கள், அப்போது விடுதலை பண்ணப்படுவீர்கள்; கொடுங்கள், அப்போது உங்களுக்குக் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும் நல்ல அளவை உங்கள் மடியிலே கொடுப்பார்கள். ஏனெனில், எந்த அளவால் அளக்கிறீர்களோ, அதினால் உங்களுக்குத் திரும்ப அளக்கப்படும் என்றார்.

பிறத்தியாருக்கு நாம் என்ன செய்கிறோமோ, அது நமக்கும் திரும்பச் செய்யப்படும். ஒரு மனுஷன் எதை விதைக்கிறானோ, அதையே அறுப்பான். வினையை விதைக்கிறவன் வினையை அறுப்பான், தினையை விதைக்கிறவன் தினையை அறுப்பான். பார்வோன் என்ற இராசா இஸ்ரவேலரை இரக்கமில்லாமல் மகா கடினமாய் நடத்தினான். அதற்குப் பதில் வந்தது. அவனையும் கர்த்தர் கடினமாய் நியாயந்தீர்த்து, சிவந்த சமுத்திரத்தில் தன் சேனையோடு அமிழ்ந்து சாகப்பண்ணினார். தாவீது இராசா தன் சத்துருவாகிய சவுலுக்கு இரக்கம் பாராட்டினார். சவுல் தாவீதின் கையில் எத்தனை முறையோ அகப்பட்டும், அவனைத் தாவீது கொன்றுபோடாமல் இரக்கமாய் விட்டுவிட்டதினாலே, அவருக்கு ஆபத்து நேரிட்ட பல சமயங்களிலும் கர்த்தர் அவரைத் தற்காத்தார். ஒரு சமயத்தில் சவுல், தாவீதைக் கொன்றுபோடும்படி கட்டிலின்மேல் படுத்திருந்த அவரைத் தூக்கிவரச் சொன்னான். அப்பொழுது தாவீதின் பெண்சாதி, சவுல் தகப்பனாயிருந்தும், அவன் கொலைபாதகத்துக்கு இடங்கொடுக்காமல் தாவீதைத் தப்பவிட்டு அவருக்குப் பதிலாக ஒரு பொம்மையைக் கட்டிலில் கிடத்தி வைத்தாள். இரக்கமுள்ளவர்களுக்கு இரக்கம் கிடைக்கும்.

பிறத்தியாரைக் குற்றமாய் நிர்ணிக்காமல் அவர்களுக்கு இரக்கம் பாராட்டுகிறது வீண் போகாது. இரக்கம் பாராட்டினவர்களை இரக்கம் பெற்றவர்கள் எப்பொழுதும் சிநேகிப்பார்கள். மற்றவர்களும் அவர்களை மதித்துத் தகுந்த சமயத்தில் அவர்களுக்கும் இரக்கம் காட்டுவார்கள். துஷ்ட மிருகமாகிய சிங்கங்கூடத் தனக்கு இரக்கம் காட்டினவர்களுக்கு இரக்கம் காட்டுமாம். எத்தனைக்கதிகமாய் மனிதர் அப்படிச் செய்வார்கள். எரிகோ என்ற பட்டணத்தை வேவுபார்க்கும்படி யோசுவா இரண்டு மனுஷரை இரகசியமாய் அனுப்பினார். அவர்கள் அந்தப் பட்டணத்திற்குள் போய், ராகாப் என்ற ஒரு ஸ்திரீயின் வீட்டில் தங்கினார்கள். எரிகோவின் இராசா அவளிடம் தன் சேவகரை அனுப்பி, அந்த வேவாட்களைக் கொண்டுவர உத்தரவு பண்ணினான். அந்த ஸ்திரீயோ அந்த வேவாட்களை ஒளித்து வைத்து, சேவகரின் கைக்கு அவர்கள் தப்பிப்போகும்படி இடம் பண்ணினாள். அவர்களுக்கு

அவள் காண்பித்த இரக்கம் வீணாய்ப்போகவில்லை. எரிகோபட்டணத்தை இஸ்ரவேலர் பிடித்து அதிலிருந்த ஜனங்களையெல்லாம் சங்காரம் பண்ணினபோது, அவளுக்கும் அவள் வீட்டாருக்கும் இரக்கம் பாராட்டி அவர்களைத் தப்பவிட்டார்கள். இரக்கம் காட்டாமலும், சகோதரனுக்கு அவன் குற்றங்களை மன்னித்து விடுதலைபண்ணாமலும் போகிறவர்கள் யாரோ, அவர்களுக்குக் கர்த்தர் சொல்லுகிறதைக் கேளுங்கள்: நீங்கள் உங்கள் மனப்பூர்வமாய் அவனவன் தன் சகோதரனுக்கு அவன் தப்பிதங்களை மன்னியாதேபோனால், இந்தப் பிரகாரமாக என் பரம பிதா உங்களுக்குஞ் செய்வார் என்கிறார் (மத். 18, 35).

பசியினாலும் தாகத்தினாலும் கஷ்டப்படுகிறவர்களுக்கு இரங்கி, அவர்களுக்கு உபகாரஞ் செய்கிறவர்களுக்கும் பலன் அவசியம் கிடைக்கும். வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தர் சொன்னபடி பிறத்தியாருக்கு நன்மை செய்கிறதினால் உண்டாகும் சந்தோஷமே கர்த்தர் அவர்களுக்குக் கொடுக்கும் முதற் பலன். கொடுத்துப் பழகினவர்களுக்கு இது தெரியுமே யல்லாமல், வாங்கிப் பழகினவர்களுக்கு இது தெரியாது. மனதில் உண்டாகும் சந்தோஷத்தை யல்லாமல், அவர்களுக்கு வேறே பலனுங் கிடைக்கும். இதைக்குறித்துச் சங்கீதக்காரன் சொல்லுகிறதாவது: சிறுமைப் பட்டவன்மேலே கவலைப்பான சிந்தையுள்ளவன் பாக்கியவான். கர்த்தர் அவனைத் தீங்கு நாளிலே விடுவிப்பார். கர்த்தர் அவனைத் தற்காத்து, அவனை உயிரோடே வைப்பார். பூமியின்மேலே பாக்கியவானாயிருப்பான், அவனை அவன் சத்துருக்களின் மனதுக்கு ஒப்புக்கொடீர். கட்டிலின்மேல் பிணியாய்க் கிடக்கிற அவனைக் கர்த்தர் தாங்குவார். அவனுடைய வியாதியிலே அவன் படுக்கையை எல்லாம் மாறப்பண்ணுவீர் என்கிறார் (சங். 41, 2-4). மேலும், ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான்; அவனுடைய உபகாரத்தை இவர் அவனுக்குப் பதில் அளிப்பார் (வாக். 19, 17) என்று சாலொமோன் இராசா சொல்லுகிறார். விசேஷமாய்த் தம்மை விசுவாசிக்கிற ஏழைகளுக்குச் செய்யும் அற்ப உபகாரத்துக்கும் கர்த்தர் பலன் அளிப்பது நிச்சயம். ஏனென்றால் எவனாகிலும் சீஷன் என்ற நாமத்துக்காக இச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலயம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக்கொடுத்தால் தன் பலனை இழந்துபோகான் என்று உங்களுக்கு மெய்யாகவே சொல்லுகிறேன் என்றார் (மத். 10, 42). கர்த்தர் ஈகைக்களிக்கிற பலன் இம்மையில் கிடைப்பதுமுண்டு, மறுமையில் கிடைப்பதுமுண்டு. சரப்தா என்ற ஊரிலிருந்த ஒரு ஏழை விதவை கர்த்தருடைய ஊழியனாகிய எலியா தீர்க்கதரிசியைப் பசியாற்றிப் பராமரித்ததினால், கர்த்தர் அவளுக்கும்



அவள் மகனுக்கும் பஞ்சகாலமெல்லாம் வயிறாரப் போசனம் கொடுத்தார். நம்முடைய காலத்திலும் இப்படி நடக்கிறது. ஐம்பது வருஷங்களுக்கு முன்னே நமது மிஷியோனரான ஐயர்மாரில் இரண்டு பேர் திருச்சினாப்பள்ளி வட்டத்தில் பிரயாணம் செய்துகொண்டுபோனார்கள். ஒரு நாள் அவர்கள் ஒரு முசாபர்பங்களாவில் தங்கினார்கள். அவர்கள் கையிலே கொஞ்சம் ரொட்டியும் சில வாழைப்பழமும் இருந்தது. இதைத் தின்று கொஞ்சம் தண்ணீர் குடித்துப் படுத்து இளைப்பாற மனதாயிருந்தார்கள். அந்நேரத்தில் ஒரு எளிய மனுஷன் கண்ணிருட்ட, கால் தடைக்க, அவர்களிடம் வந்து: துரைகளே, நான் சாப்பிட்டு இரண்டு நாளாகிறது. பசிபொறுக்கக்கூடவில்லை என்று சொல்லி, அதிகம் பேசக்கூடாமல் கீழே விழுந்து விட்டான். ஐயர்மார் பரிதபித்து அவனைத் தூக்கிக் களைப்பாற்றி, தங்கள் கையிலிருந்த ரொட்டியையும் பழத்தையும் அவனுக்குக் கொடுத்துவிட்டுப் பசியோடு படுத்துக்கொண்டார்கள். அந்த ஏழையின் பசியை ஆற்றின சந்தோஷமே அவர்களுக்கு ஆகாரம்போல் இருந்தது. அவர்கள் நித்திரை செய்கையில் ஒரு பெரிய துரை தம்முடைய வேலைக்காரரோடு அந்த பங்களாவின் மற்றொரு பாகத்தில் வந்து தங்கினார். அவருடைய சாப்பாட்டிற்காக ஒரு பெரிய வான்கோழி அடிக்கப்பட்டது. அவர் சாப்பாட்டு மேசையில் உட்கார்ந்தபொழுது, அந்த நல்ல சாப்பாட்டைத் தாம் ஒருவராய்ச் சாப்பிட மனதில்லாமல், அங்கே வேறு துரைமார் ஆராவது தங்கியிருக்கிறார்களோ என்று விசாரித்தார். இரண்டுபேர் வந்திருக்கிறார்கள் என்று சொல்லவே, அவர்களை அழைப்பித்து, தம்மோடே விருந்துண்ணச் செய்தார். ரொட்டியையும் பழத்தையும் ஏழைக்குக் கொடுத்த ஐயர்மாருக்குக் கர்த்தர் உயர்தரமான சாப்பாட்டைக் கொடுத்தருளினார். அழுத்திக் குலுக்கிச் சரிந்துவிழும் நல்ல அளவு அவர்களுக்குக் கிடைத்தது. பிறருக்கு நன்மை செய்யும் விசுவாசிகள் ஒருவேளை இம்மையிலே பலன்பெறாவிட்டாலும் மறுமையிலே பலன் பெறுவது நிச்சயம். கடைசிநாளில் இயேசுநாதர் ஜீவனுள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க வரும்போது ஏழை விசுவாசிகளுக்கு இரக்கம் பாராட்டின தம்முடைய தாசர்களைப் பார்த்து, அவர்கள் தமக்கு இரக்கம் பாராட்டினதாகச் சொல்லி, அவர்களை ஆசீர்வதிப்பார் (மத். 25, 34-36).

பிரியமானவர்களே, விசுவாசிகளாகிய நாம் மற்றவர்களுக்கு இரக்கம் பாராட்டுவது நம்முடைய கடமை என்று அறிந்திருப்பதோடு இரக்கத்தினால் நற்பலன் வருமென்றும் பார்க்கிறோம். ஆகையால் யாவருக்கும் இரக்கம் பாராட்டக் கடவோம். இரக்கம் காட்டுகிறதற்கோ மகத்தானதோ பெலனில்லை. பசித்த ஆவி

யானவர் நம்முடைய கல்லான இருதயத்தை மாற்றிச் சிநேகமுள்ள சதையான இருதயத்தை நமக்குக் கொடுக்கவேண்டும்.

பரம பிதாவாகிய பராபரனே, உம்முடைய பிள்ளைகளாகிய நாங்கள் உம்மைப்போல் இரக்கமுள்ளவர்களாகும்படி எங்களுடைய இருதயத்தில் உம்முடைய ஆவியை ஊற்றி, எங்கள் அன்புள்ள இரட்சகரின் ஐக்கியத்தில் எங்களை வைத்துப் பாதுகாக்கும்படி உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், சுவாமி. ஆமென்.

---

## திரித்துவப் பண்டிகைக்குப் பிந்தின ரு-ம் ஞாயிறு.

லூக். 5, 1—11.

பிரியமானவர்களே,

கர்த்தர் வீட்டைக் கட்டாராகில் அதைக் கட்டுகிறவர்கள் விருதாவாய் அதில் உழைக்கிறார்கள். கர்த்தர் பட்டணத்தைக் காக்காராகில், சாமக்காரன் விருதாவாய் விழித்திருக்கிறான். நீங்கள் இருட்டோடே எழுந்து, நேரப்பட வேலையில் தரித்து, வருத்தங்களுள்ள அப்பத்தைச் சாப்பிடுகிறது விருதா; தமக்குப் பிரியமானவனுக்கு நித்திரையை அளிக்கிறார் (சங்கீதம் 127, 1. 2) என்று சங்கீதக்காரன் சொல்லுகிறார். இந்த அருமையான வார்த்தைகளை அநேகர் நினைக்கிறதில்லை. நினைத்தாலும் அதில் நம்பிக்கை வைக்கிறதில்லை. இந்த வார்த்தைகளோ நம்முடைய வாக்கியத்தில் சொல்லப்பட்ட அதிசய மீன் வேட்டையிலே நன்றாய் நிறைவேறிற்று. மனிதருடைய முயற்சியிருந்தும் கர்த்தருக்குச் சித்தமில்லாவிட்டால், ஒன்றும் வாய்க்காது. கர்த்தருக்குச் சித்தமாகும்பொழுதோ எல்லாம் வாய்க்கும் என்று பார்க்கிறோம். இராமுழுவதும் அகப்படாத மீன் வழக்கத்துக்கு விரோதமாய்ப் பகலில் அகப்பட்டது. தண்ணீர் கொஞ்சமாயிருக்கும் இடத்தில் அகப்படவேண்டிய மீன் ஆழத்திலே அகப்பட்டது. அதிகப் பிரயாசப்பட்டும் அகப்படாத மீன் இலேசாக அகப்பட்டது. ஒன்றும் அகப்படவில்லையென்று சொன்னவர்களுக்கு வலை கிழியும்படிக்கான ஏராளம் அகப்பட்டது. இப்படியே கர்த்தர் தமக்குப் பிரியமானவர்களை ஆசிர்வதித்தார். இப்பொழுது நாம்:

கர்த்தராலே ஆசீர்வதிக்கப்படுகிற பிரியர்களைப் பற்றிச் சிந்திப்போம்.

1. அவர்கள் தங்களில் கர்த்தருக்கு இடங்கொடுக்கிறார்கள்.
2. அவர்கள் அவருடைய சொற்படி செய்து நலமடைகிறார்கள்.
3. அவர்கள் அவருக்கேற்ற கனி கொடுக்கிறார்கள்.



### கர்த்தருக்குப் பிரியமானவர்கள் தங்களில் கர்த்தருக்கு இடங்கொடுக்கிறார்கள்.

கும்பு பராபரனுடைய வசனத்தைக் கேட்க அவரை நெருக்கி நிற்கையில், அவர் கெனேசரேத்தென்ற சிறு கடலண்டையிலே நின்றிருந்து, கடற்கரையிலே இரண்டு படவுகளை நிற்கக் கண்டார். மீன் பிடிக்கிறவர்களோவென்றால் அதுகளை விட்டு இறங்கி வலைகளை அலசிக்கொண்டிருந்தார்கள். அப்போது அந்தப் படவுகளில் ஒன்றுக்குள்ளே ஏறினார்; அது சீமோனுடையதாயிருந்தது. அதைக் கரையிலிருந்து சற்றே தள்ள அவர் அவனை வேண்டிக்கொண்டு அந்தப் படவில் உளுக்கார்ந்திருந்து, கும்புகளைப் போதகம் பண்ணினார்.

இது கெனேசரேத் கடலில் ஒரு விடியற்காலத்திலே நடந்த சங்கதி. இரவெல்லாம் வலை வீசிக்கொண்டிருந்த பேதுருவும் அவருடைய கூட்டாளிகளும் காலை நேரத்திலே தங்கள் வலைகளை அலசிக்கொண்டிருக்கும்பொழுது இயேசுநாதர் அங்கே வந்தார். அவருடைய மதுரமான பிரசங்கத்தைக் கேட்கிறதற்கு ஏராளமான ஜனங்கள் அவரண்டை வந்தார்கள். அவர்கள் அவரை நெருக்கினதினால், அவர் பிரசங்கம் பண்ண முடியாமல் சாவகாசமாய் உளுக்காரவும், ஜனங்கள் கேட்கும்படி பிரசங்கம் பண்ணவும், அவருக்கு ஒரு இடம் தேவையாயிருந்தது. இதற்காக அவர் அங்கே நின்றிருந்த இரண்டு படவுகளில் ஒன்றில் ஏறி, அதைச் சற்றுத் தண்ணீரிலே தள்ளப் பேதுருவைக் கேட்டுக்கொண்டார்.

நாம் ஒவ்வொருவரும் ஒரு தொழிலைச் செய்கிறோம். ஒருவனுக்கு உபாத்திமைத் தொழில், ஒருவனுக்குப் பண்ணைத் தொழில், ஒருவனுக்கு வியாபாரம், ஒருவனுக்குச் சர்க்கார் உத்தியோகம். ஒவ்வொரு தொழிலிலும் நமக்கு ஆசீர்வாதம் கிடைக்கும்படி நாம் விசுவாசத்தினால் கர்த்தருக்குப் பிரியமானவர்களாயிருக்கவேண்டும். அவருக்குப் பிரியமானவர்கள் அவருக்கு இடம் கொடுக்கிறார்கள். பேதுரு தமது படவில் இயேசுநாதருக்கு இடங் கொடுத்தான். நாமும் நம்முடைய வீடுகளில் அவருக்கு இடங் கொடுக்கவேணும். நம்மில் ஒவ்வொருவர் வீட்டுக்கும் அவர் வருகிறார். நாம் வேலை செய்கிற இடத்துக்கு வருகிறார். அவருக்குப் பிரியமானவர்கள் எங்கேயிருக்கிறார்களோ, அங்கெல்லாம் அவர் வருகிறார். நம்மை ஆசீர்வதிக்கவேண்டுமென்கிற நோக்கத்தோடு அவர் வருகிறார்.

இதற்காக அவர் செய்கிற முதல் காரியம் திருவசனப் பிரசங்கம். நம்மில் ஒவ்வொருவரும் இதற்கு இடம் கொடுக்கவேணும், அவருடைய வசனத்தைக் கேட்பதுதான் நாம் ஒவ்

வொரு நாளும் செய்யவேண்டிய முதலாம் வேலை. இயேசுநாதர் தமக்குச் சித்தமாயிருந்தால், பேதுருவண்டை வந்தவுடனே வலை போடச் சொல்லியிருக்கலாம். அப்படி அவர் சொல்லவில்லை. அவர்கள் வலைபோடுமுன் பராபரனுடைய வசனத்தைக் கேட்பது அவருடைய சித்தம். இதை நாம் கவனிக்கவேண்டும். நாம் வேலைக்குப் போகுமுன்னமே பராபரனுடைய வசனத்தைக் கேட்பதும், ஜெபம் செய்வதும் மிகவும் அவசியம். முந்தப் பராபரனுடைய இராச்சியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்போது இவைகள் எல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும் என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார் (மத். 6, 33). வாரத்தின் துவக்கத்தில் ஞாயிற்றுக்கிழமையிலே நாம் செய்யும் ஆராதனை, கேட்கும் வசனம் முழு வாரத்திற்கும் எப்படி அவசியமோ, அப்படியே ஒவ்வொரு காலையிலும் நாம் கேட்கும் வசனம் அந்த நாள் முழுமைக்கும் அவசியம். அவருடைய வசனத்தை நாம் உற்சாகமாய்க் கேட்கவேண்டும், கவனமாய்க் கேட்கவேண்டும், தினந்தோறும் தவறாமல் கேட்கவேண்டும். காலமே பராபரனுடைய வசனத்தை வாசிக்கவும் படிக்கவும் நேரமில்லையென்று சொல்லக்கூடாது. வசனத்தைப் படிக்க நேரமில்லாதவன் உயிரோடிருக்க நேரமில்லாதவன். கர்த்தருடைய வசனம் நம்மைப் பக்தியுள்ளவர்களாக்கும். அது நமக்கு வேண்டிய புத்தியைக் கொடுக்கும், நாம் களைப்பில்லாமல் வேலைசெய்வதற்குப் பலம் தரும். அது நம்மைக் காலைநேரத்தில் உற்சாகப்படுத்தும், மாலைநேரத்தில் களைப்பாற்றும். பராபரனுடைய வசனம் நாளெல்லாம் நம்மை நடத்தவேண்டிய வழிகாட்டி. அதனால் நடத்தப்படுகிறவன் வாழ்வில் மயங்கமாட்டான், தாழ்வில் தளர்ச்சியடையமாட்டான். ஆகையால், இயேசுநாதர் ஒவ்வொரு காலையிலும் நம்மிடத்திலே வந்து, நம்மோடு பேசவும் நம்மை ஆசீர்வதிக்கவும் விரும்புகிறார். ஆகிலும், அவரை நாம் கண்ணாலே பார்க்கிறதில்லை. அவருடைய சத்தத்தை நாம் நேரே கேட்கிறதில்லை. வேதபுஸ்தகந்தான் அவர் பேசுகிற வாய். அதை நாம் தினந்தோறும் அதிகாலையிலே கேட்கிறதற்குத் தவறக்கூடாது. வனாந்தரத்தில் பயணஞ்செய்த இஸ்ரவேல் ஜனங்கள், தங்கள் சாப்பாட்டுக்காகச் செய்ததுபோல் நாமும் செய்ய வேண்டும். அவர்கள் மன்னா என்கிற போசனத்தை அதிகாலையிலே கூட்டிச் சேர்த்தார்கள். காலையில் சேர்க்காதவனுக்கு நாள் முழுவதும் சாப்பாடு இல்லை. நாமும் காலையிலே பராபரனுடைய வசனத்தைக் கேட்காவிட்டால், நாள் முழுவதும் நமக்கு ஆசீர்வாதமில்லை.

இப்படிக் கர்த்தருடைய வசனத்தை எவன் கேட்கிறானோ, அவன் கர்த்தருக்குப் பிரியமானவன். எவன் கர்த்தரு



டைய வசனத்துக்கு இடம் கொடுக்கிறானோ, அவன் கர்த்தருக்கு இடம் கொடுக்கிறான். அவருடைய வசனம் எங்கேயிருக்கிறதோ, அங்கே அவர் இருக்கிறார். அவருக்கு இடங்கொடுக்கிறவன் அவருடைய ஆசீர்வாதத்துக்கு இடங்கொடுக்கிறான். கர்த்தருக்குப் பிரியமாயிருக்கவும் அவருடைய ஆசீர்வாதத்தைப் பெறவும் நம்மில் யாராருக்கு மனதிருக்கிறதோ, அவர்கள் எல்லாரும் காலமே எழுந்திருந்தவுடனே வேதபுஸ்தகத்தை விரித்து: ஆண்டவரே சொல்லும், அடியான் கேட்கிறேன் என்று ஜெபிப்பார்களாக. வாசிக்கத் தெரியாதவர்கள் வாசிக்கத் தெரிந்தவர்களைக் கொண்டு பராபரனுடைய வசனத்தைக் கேட்கலாம். தாங்கள் படித்திருக்கும் ஆதியாயங்களைச் சொல்லி ஞாபகப்படுத்திக் கொள்ளலாம்.

2.

கர்த்தருக்குப் பிரியமானவர்கள் அவருடைய சொற்படி செய்து நலம் அடைகிறார்கள்.

வசனித்து முடித்த பின்பு, அவர் சீமோனுடனே: நீ ஆழத்திலே தள்ளிக்கொண்டுபோய், மீன் வேட்டைக்கு உங்கள் வலைகளைத் தாழ விடுங்கள் என்றார். சீமோன் அவருக்குப் பிரத்தியுத்தரமாக: ஐயரே, இரா முழுவதும் நாங்கள் பிரயாசப்பட்டு, ஒன்றும் பிடிக்கவில்லை; உம்முடைய வார்த்தையின்படியோவென்றால் வலையைத் தாழ விடுவேன் என்றான்.

இரவெல்லாம் வேலைசெய்தும், பலனைக்காணாமல் மனந்தளர்ந்துபோயிருந்த பேதுருவும், யாக்கோபும், யோவானும் இயேசுநாதருடைய பிரசங்கத்தைக் கேட்டவுடனே விசேஷித்த ஊக்கமும் தைரியமும் அடைந்தார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. அப்பொழுது இயேசுநாதர் அவர்களை வேலைக்கு அனுப்புகிறார். கர்த்தருடைய ஆசீர்வாதத்தை நாம் பெற்றுக்கொள்ள வேணுமானால் அவருடைய கட்டளையின்படி வேலைசெய்ய வேண்டும். வேலைசெய்ய மனதில்லாதவன் சாப்பிடவுங்கூடாது. ஆதாம் பாவஞ்செய்கிறதற்கு முன்னேயே கர்த்தர் அவனுக்கு வேலைகொடுத்தார். தோட்டத்தைக் கையாளவும் காக்கவும் வைத்தார் என்று எழுதியிருக்கிறது (க மோ. 2, 15). பாவஞ்செய்தபின்னேயும் கர்த்தர் அவனை வேலைசெய்யச் சொன்னார். நீ பூமிக்குள் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் அப்பம் புசிக்கக் கடவாய் என்றார் (க மோ. 3, 19). நாம் வேலை செய்யாமல் சோம்பேறிகளாயிருக்கையில், கர்த்தர் வானத்திலிருந்து நமக்கு ஆசீர்வாதத்தை அனுப்பவேண்டுமென்று கேட்பது அக்கிரமம். மீன் பிடிக்கிறவர்களுக்கு மீன் வேண்டுமானால், வலைபோட வேண்டும். வலைபோடமாட்டோம் என்று சொல்லுகிற சோம்பேறிகளுக்குக் கர்த்தர் கரையிலே மீன் துள

ளிவிழும்படி உத்தரவு பண்ணமாட்டார். நிலபலமுள்ளவர்களுக்கு நெல் வேண்டுமானால் வயலை உழ வேண்டும், விதைக்க வேண்டும், தண்ணீர் பாய்ச்சவேண்டும், களை பிடுங்கவேண்டும். பாடில்லாமல் பலனில்லை. அப்படித்தான் ஒவ்வொரு வேலையும். ஒரு சேவகனுக்கு அல்லது ஒரு உத்தியோகஸ்தனுக்குச் சம்பளம் கிடைக்கவேண்டுமானால், அவன் குறித்தநேரத்தில் கச்சேரிக்குப் போகவேண்டும்; கொடுத்த வேலையைச் சரியாய்ச் செய்ய வேண்டும். ஒரு உபாத்தியாயர் தன் சீவனத்தைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டுமானால், பள்ளிக்கூடத்துக்கு ஒழுங்காய்ப்போய், பிள்ளைகளுக்குச் சரியாய்ப் படித்துக்கொடுக்கவேண்டும்.

வேலை செய்கிறதில் உண்மை அவசியம். பார்வைக்கு ஊழியம் செய்கிறவர்கள் கர்த்தருக்குப் பிரியமானவர்களல்ல. எஜமான்கள் நம்மைப் பார்த்தாலும், பார்க்காவிட்டாலும், அவர்களுக்கு நஷ்டம் வராமல், நம்முடைய கூலிக்கு நாம் பாத்திரராயிருக்கும்படி பார்க்கவேண்டும். சுறுசுறுப்பாயும் வேலை செய்யவேண்டும். அசமந்தமாயும் ஏனோதானோவென்றும் செய்கிற வேலை கர்த்தருக்குப் பிரியமல்ல.

கர்த்தருடைய சித்தப்படிச் செய்கிற வேலையை அவர் ஆசீர்வதிப்பார். அவர்கள் இப்படிச் செய்து, வெகு ஏராளமான மீன்களைச் சேர்த்துக்கொண்டார்கள், அவர்கள் வலையோவெனில் கிழிந்தது என்று வாசிக்கிறோம். — உலகத்தாரின் புத்திக்கும் அனுபோகத்துக்கும் விரோதமாக இந்தச் சீஷர்களுக்கு மீன் கிடைத்தது. கெனேசரேத் கடலில் இராத்திரி நேரத்தில்தான் மீன் பிடிப்பார்கள். இச்சமயத்திலோ நேர் விரோதமாயிற்று. இரவெல்லாம் மீன் அகப்படாமல் பகல் நேரத்தில் அகப்பட்டது. கர்த்தரை நம்பி அவர் சொற்படியே செய்கிறவர்களுக்கு எல்லாம் நன்மையாகவே முடியும். பேதுரு அப்போஸ்தலன் கர்த்தருடைய வார்த்தையின்படி வலையைத் தாழ விட்டதினால் ஏராளமான மீன் கிடைத்தது. ஆகாசத்தில் பறக்கும் பறவைகளும், தரையில் நடமாடும் மிருகஜீவன்களும், கர்த்தருடைய சொல்லுக்குக் கீழ்ப்படியும். வனாந்தரத்தில் காடைகளுக்கு உத்தரவு பண்ணினார். அவைகள் ஏராளமாய் வந்து விழுந்து, இஸ்ரவேலருக்கு ஆகாரமாயிற்று. இப்போது மீன்களுக்கு உத்தரவு பண்ணினார். அவைகள் வலைக்குள் வந்து ஏராளமாய்ப் புகுந்தது. அதினால் வலை கிழிந்தது. இரண்டு படவுகளை அமிழ்ந்தத்தக்க பாரமாக நிரப்பினார்கள். கர்த்தருடைய ஆசீர்வாதங்கள் வந்து நம்முடைய பேரில் இறங்கும்போது அவைகள் ஏராளமாய் வருகிறது. கர்த்தர் தமக்குப் பிரியமானவர்களை ஆசீர்வதிக்கச் சித்தமாயிருக்கிறபொழுது அதை யார் தடுக்கலாம். திராட்சப்பழ இரசம் குறைவுபட்ட கானா ஊர் கலியாணக்காரருக்குக் கொஞ்சமாகவா இரசம் கொடுத்தார். ஆறு கற்சாடி நிறைய அல்லவோ கொடுத்தார்.



நாமும் நம்முடைய வேலைகளை உண்மையும் சுறுசுறுப்புமாய்க் கர்த்தருடைய கட்டளையின்படி செய்து, அப்படிச்செய்கிற வேலையைக் கர்த்தர் ஆசீர்வதிப்பாரென்று நம்ப வேண்டும். அவரை நம்புகிறவர்கள்தான் அவருக்குப் பிரியமானவர்கள். அவருக்குப் பிரியமானவர்களுக்கு ஆசீர்வாதம் குறைபடாது. அவருடைய ஆசீர்வாதம் கொஞ்சம் கொஞ்சமாக மாத்திரமல்ல, திரளாக நமக்குக் கிடைக்கும்.

3.

கர்த்தருக்குப் பிரியமானவர்கள் அவருக்கேற்ற கனி கொடுக்கிறார்கள்.

சீமோன் பேதுரு இதைக் கண்டு இயேசுவின் முழங்காலண்டை விழுந்து: ஆண்டவரே, என்னைவிட்டுப் புறப்படும்; ஏனென்றால் பாவியான மனுஷனாயிருக்கிறேன் என்றான்.

பேதுரு தனக்கும் தன் கூட்டாளிகளுக்கும் ஏராளமான மீன் கிடைத்தவுடனே, கிடைத்த மீன் எவ்வளவென்றும், அதினால் தனக்கு எவ்வளவு பணம் கிடைக்குமென்றும் கணக்குப் பார்த்துக்கொண்டிருக்கவில்லை. உலக மக்கள் தங்களுக்கு ஏதேனும் கிடைத்தால், கிடைத்த பொருளைக் கவனித்துக் கொண்டிருப்பார்களேயல்லாமல், கிடைக்கப் பண்ணினவரை நினைக்க மாட்டார்கள். கர்த்தருக்குப் பிரியமானவர்களோ, பேதுருவைப் போல் கர்த்தருக்குப் பிரியமான கனிகளைக் கொடுப்பார்கள். பேதுருவின் கூட்டாளிகளான யாக்கோபும் யோவானும் அப்படிப்பட்டவர்களாயிருந்தார்கள்.

அவரிடத்தில் காணப்பட்ட முதற் கனி மெய்யான தாழ்மை. கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட ஒவ்வொரு விசுவாசியும் தன் அபாத்திரத்தனத்தை உணருவான். யாக்கோபு என்ற கோத்திரப்பிதா தன் தகப்பன் வீடுவிட்டு மாமன் வீட்டுக்குப் போய், இருபது வருஷகாலம் சொல்லி முடியாத கஷ்டப்பட்டு, திரண்ட ஆஸ்தியோடே தன் தகப்பன் வீட்டுக்குத் திரும்பினார். அப்போது: கர்த்தாவே, தேவரீர் உமது அடியானுக்குச் செய்து வந்த எல்லாக் கிருபைகளுக்கும் எல்லா உண்மைக்கும் நான் எம்மாத்திரம் என்றார் (க மோசே 32, 10). அவர் தனக்குக் கிடைத்த ஆஸ்திபாஸ்தியெல்லாம் தன்னுடைய பிரயாசையினாலல்ல, கர்த்தருடைய கிருபையினாலே தனக்குக் கிடைத்தது என்றும், தான் அதற்கு முற்றிலும் பாத்திரவானல்லவென்றும் அறிக்கையிட்டார்.

தாவீது இராசா வெகுவாய்க் கஷ்டப்பட்டுச் சிம்மாசனம் ஏறி, அரசாட்சி செய்கிற காலத்திலே கர்த்தரை நோக்கி: கர்த்த

ராகிய ஆண்டவரே, தேவரீர் என்னை இந்தமட்டும் கொண்டு வந்ததற்கு நான் எம்மாத்திரம் என் வீடு எம்மாத்திரம் என்று சொன்னார் (௨ சாமு. 7, 18). அவர் தன்னுடைய உயிரைக் கையிலே பிடித்துக்கொண்டு சண்டை செய்து வெகு கஷ்டப்பட்டதினால், சிம்மாசனத்தைத் தான் சம்பாதித்ததாகக் கொஞ்சமும் நினைக்கவில்லை. பாவியாகிய தன்னை அவ்வளவு உயர்த்தினது கர்த்தருடைய சொல்லி முடியாத கிருபை என்று அவர் அறிக்கையிட்டார். இப்படிச் செய்கிறவர்களே கர்த்தருக்குப் பிரியமானவர்கள்.

பொல்லாதவர்களோ கர்த்தருடைய ஆசீர்வாதத்தைப் பெறும்பொழுது தங்களைத் தாழ்மைப் படுத்தாமல், அகந்தையுள்ளவர்களாகிறார்கள். நேபுகாத்நேச்சார் என்ற பாபிலோன் இராசாவைக் கர்த்தர் வெகுவாய் உயர்த்தினார். தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலையும் அவனுக்குக் கீழாக்கினார். அவனோ பாபேலிலிருக்கிற தன் இராச அரண்மனையின் மீதில் உலாத்திக்கொண்டிருந்து: இது என் வல்லமையினாலும் என் மகத்துவத்தின் பிரஸ்தாபத்துக்கும் நான் இராச அரண்மனையாகக் கட்டின மகா பாபிலோன் அல்லவோ என்று சொன்னான் (தானி. 4, 26-27). இப்படி அவன் கர்த்தரை மகிமைப் படுத்தாமலும், தன் அபாத்திரத்தனத்தை உணராமலும் தன்னை உயர்த்தினபடியினாலே கர்த்தர் அவனை மகா தாழ்வாய்த் தாழ்த்தினார். அவன் மனுஷரை விட்டுத் தள்ளுண்டு, வெளியின் மிருகங்களோடே சஞ்சரித்து, மாடுகளைப்போல் புல் மேய்ந்தான்.

பேதுரு அப்போஸ்தலன் தன்னுடைய அபாத்திரத்தனத்தை உணர்ந்ததுபோலே, இயேசுநாதருடைய மகத்துவத்தையும் உணர்ந்துகொண்டார். ஆகையினால்: ஆண்டவரே என்னை விட்டுப் புறப்படும் என்றார். அவர் கொண்ட கருத்தென்ன. இயேசுநாதரே, நீர் தேவாதி தேவன், மகா பரிசுத்தர், மகா வல்லமையுள்ளவரென்று நான் இப்பொழுது அறிந்துகொண்டேன். நானோ மகா பெரிய பாவி. நெருப்பும் பஞ்சும் நெருங்கியிருந்தால் பஞ்சு பஸ்பமாய்ப் போய்விடுவதைப் போல, நீரும் நானும் சேர்ந்திருந்தால் நான் அழிந்து போவேன். ஆகையால் பாவியாகிய என்னை விட்டுப் பரிசுத்தராகிய நீர் புறப்பட்டுப் போம் என்பது அவர் கருத்து.

பேதுரு தன்னை இந்த விதமாய்த் தாழ்த்தினதினாலே அவர் கர்த்தருக்குப் பிரியமான மனுஷனென்று தெரிய வந்தது. அதினால் கர்த்தர் அவரை உயர்த்தினார். அப்போது இயேசு சீமோனுடனே: பயப்படாதே, இதுமுதல் மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய் என்றார். கர்த்தர் முந்தப் பேதுருவின் பயத்தை நீக்குகிறார். பாவத்தினால் உண்டான திகிலையெல்லாம் [illegible]குகிறார். அவர் பரிசுத்தராயிருந்தும், பாவிகளைப் பயமுறுத்தி



அழிக்க அவர் இந்த உலகத்திற்கு வராமல், பாவிகளுக்கு மன்னிப்பை அருளி அவர்களை இரட்சிக்க வந்தார். பாவிகளை இரட்சிக்கக் கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிறது உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்குப் பாத்திரமுமான வார்த்தை (௧ தீமோ. 1, 15). ஆகையால், இயேசுவைப் பார்க்கும்பொழுது பாவி பயத்தை நீக்கி, தைரியத்தோடு அவரண்டை சேரலாம். கர்த்தர் தம்மண்டை சேருகிறவர்களை ஆற்றித்தேற்றி, அவர்களை அதிக மதிகமாய் உயர்த்துகிறார். முன்னே ஆடுமேய்த்துக்கொண்டிருந்த தாவீதை மனிதரை மேய்க்கிற இராசாவாக்கினார். வயலை உழுது பண்படுத்திக்கொண்டிருந்த எலிசாவை, இஸ்ரவேலருடைய இருதயத்தைப் பண்படுத்துகிற தீர்க்கதரிசியாக்கினார். இப்பொழுது மீன் பிடித்துக்கொண்டிருந்த பேதுருவை மனுஷரைப் பிடிக்கிற அப்போஸ்தலன் ஆக்கினார். இச்சமயத்தில் கர்த்தர் பேதுருவுக்குச் சொன்னவார்த்தை பெந்தெக்கொஸ்தே பண்டிகையில் முதல் முதல் நிறைவேறிற்று. அப்பொழுது பேதுரு செய்த பிரசங்கத்தினால் மூவாயிரம் பேர் இயேசுவை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றார்கள். அது முதல் பேதுரு ஏராளமான மனிதரைக் கர்த்தரண்டைக்கு நடத்தினார். இது அவருக்குக் கிடைத்த பெரிய சலாக்கியமும் மகிமையுமல்லவா. கர்த்தருக்கு முன்பாக நம்மையும் தாழ்த்துவோமானால், தமக்குச் சித்தமான காலத்தில் தமக்குச் சித்தமான விதமாய் உயர்த்துவார்.

கர்த்தருக்குப் பிரியமானவர்கள் கொடுக்கும் மற்றொரு கனி மெய்நன்றி. பேதுருவும், யாக்கோபும், யோவானும் தாங்கள் பெற்றுக்கொண்ட பெரிய ஆசீர்வாதத்திற்காக வாயினால் மாத்திரமல்ல, நடக்கையினாலும் நன்றி செலுத்துகிறார்கள். அவர்கள் படவுகளைக் கரையிலே தட்டவைத்து, எல்லாவற்றையும் விட்டு, அவரைப் பின்சென்றார்கள். அவர்களுக்கு இயேசு என்கிற பெரிய பொக்கிஷம் கிடைத்ததினால், மற்றெல்லாவற்றையும் வெறுத்துப் போட்டார்கள். இதெல்லாம் அவர்களுக்குக் குப்பையும் கூளமும்போல் இருந்தது. அவர்களுடைய படவுகள் அவர்களுக்கு ஒரு பொருட்டாயிருந்ததில்லை. வலைகள் அவர்களுக்கு ஒரு பொருட்டாயிருந்ததில்லை. தாய் தகப்பன், வீடுவாசல், உற்றார் உறவோர் எல்லாம் கிறிஸ்துவுக்கு முன் ஒன்றுமில்லையென்று அவர்கள் விட்டுவிட்டார்கள். அவர்கள் கிறிஸ்துவினிமித்தம் தரித்திரரானார்கள். அவர்கள் மெய்யாலே தரித்திரராயிருந்தார்கள் என்பதைக் காண்பிக்கும் ஒரு சரித்திரமுண்டு. பெந்தெக்கொஸ்தே பண்டிகைக்குப்பின்னான ஒரு நாளிலே பேதுருவும் யோவானும் தேவாலயத்துக்குப் போனார்கள். கோயில் முன்வாசலிலே ஒரு சப்பாணி பிச்சைக்காகக் காத்திருந்தான். அவன் பேதுருவையும் யோவானையும் கண்டு பிச்சைகேட்டான்.

ஏதாகிலும் காசு கிடைக்குமென்று கவனமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தான். பேதுருவோ அவனை நோக்கி: வெள்ளியும் பொன்னும் எனக்கில்லை; எனக்குண்டானதையோ உனக்குத் தருகிறேன்; நாசரேத்தானாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எழுந்து நடவென்று சொல்லி (அப். 3. 6). அவனைப் பிடித்துத் தூக்கி நிறுத்திச் சுகமாக்கினார். பேதுருவும் மற்ற அப்போஸ்தலமாரும் காசு பணமில்லாத பரம ஏழைகளாயிருந்தும், அவர்கள் கிறிஸ்துவைத் தங்கள் ஆஸ்தியாக மதித்து, அவரைப் பின்சென்றார்கள். இதுவே மெய் நன்றி. ஆகிலும், நாம் அப்போஸ்தலரைப் போல் நம்முடைய ஆஸ்திபாஸ்தி, வீடுவாசல், சொத்து சுதந்தரம் எல்லாவற்றையும் விட்டுப் பரதேசிகளாய் வெளிப்படுவது அவசியமல்ல. கிறிஸ்துவை விசுவாசிப்பதின் நிமித்தம் இவைகளை விட்டுவிட அவசியமானால் விட்டுவிடத்தான் வேண்டும். நமக்கு என்ன இருந்தாலும், இல்லாவிட்டாலும், கிறிஸ்து ஒருவரையே எல்லாவற்றிலும் மேலான ஆஸ்தியாக எண்ணி, அவரை நம்முடைய முழு இருதயத்தினாலும் சிநேகிப்பது முக்கியம்.

பேதுருவும் அவர் கூட்டாளிகளும் எல்லாவற்றையும் விட்டுவிட்டதைப்பார்க்கிலும், அவரைப் பின்சென்றது அதிக நேர்த்தி. அவர்கள் எப்பொழுதும் அவரோடிருந்தார்கள், அவருடைய போதனையைக் கேட்டார்கள், அவர் சொன்னபடி நடந்தார்கள், அவரைப்பற்றிப் பிரசங்கித்தார்கள், அவர் நிமித்தம் பாடுபட்டார்கள், அவர் நிமித்தம் மரித்தார்கள். சகோதரர்களே, நாமும் கிறிஸ்துவைப் பின்செல்லக்கடவோம். நம்முடைய இருதயத்தில் அவரை விசுவாசிப்பதும், நம்முடைய வேலையில் அவர் சொற்படி செய்வதும், நம்முடைய நடக்கையில் அவரைப்போல் பரிசுத்தமும் சிநேகமுமாயிருப்பதும் அவசியம். இதுவே கர்த்தருடைய ஆசீர்வாதம் பெற்றவர்கள் கொடுக்கவேண்டிய கனி.

எங்கள் அருமை இரட்சகரே, தேவரீர் எங்களைக் கண்ணோக்கிப்பாரும்; எங்கள் வேலைகளில் எங்களை ஆசீர்வதியும். நாங்கள் உம்முடைய வசனத்தைக் கைக்கொள்ளவும், உம்மைச் சிநேகிக்கவும், உம்முடைய காலடிகளைப் பின்பற்றி நடக்கவும் எங்களுக்கு ஒத்தாசை செய்தருளும், சுவாமி. ஆமென்.

---

## திரித்துவப் பண்டிகைக்குப் பிந்தின ௬-ம் ஞாயிறு.

மத். 5, 20—26.

பிரியமானவர்களே,

உங்கள் நீதி வேதபாரகர் பரிசேயர் என்றவர்களின் நீதியைப் பார்க்க அதிகப்பட்டிருந்தாலொழிய, வான இராச்சி



யத்துக்குள் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று இயேசுநாதர் நம்முடைய வாக்கியத்திலே சொல்லுகிறார். வேதபாரகரும் பரிசேயரும் நீதி அவசியம் என்றும், நீதியில்லாதவர்கள் மோட்சத்துக்குள் பிரவேசிக்கக் கூடாதென்றும் ஒப்புக்கொண்டார்கள். ஆகிலும், அவர்கள் போதித்த நீதி சரியான நீதியல்ல. அவர்கள் கொலை, விபசாரம், திருட்டு முதலிய பரும்படியான பாவங்களை விலக்கினால் போதும் என்று நினைத்தார்கள். ஆண்டவர் புறம்பே மாத்திரமல்ல, உள்ளேயும் பார்க்கிறார் என்பதை அவர்கள் மறந்தார்கள். அவர்கள் நியாயப்பிரமாணத்தில் சொல்லிய வேத பிரமாணங்களை மாத்திரமல்ல, மனிதர் தங்கள் மனம்போல் ஏற்படுத்தின வேறு பல பிரமாணங்களையும் கைக்கொள்ளவேண்டுமென்று சொன்னார்கள். மேலும், அவர்கள் தங்கள் புறம்பான கிரியைகளைக் குறித்துப் பெருமை பாராட்டி, யாவரும் தங்களைப் புகழ்ந்து பேசவேண்டுமென்று விரும்பினார்கள். அதற்காகவே அவர்கள் தர்மம் செய்தார்கள், ஜெபம்பண்ணினார்கள், உபவாசம் பண்ணினார்கள். இதனால் தங்களுக்கு மோட்சம் கிடைக்குமென்றும், தேவகிருபை தங்களுக்கு அவசியமல்ல என்றும் எண்ணினார்கள். இதுவோ, நம்முடைய இரட்சகருக்கு மகா அருவருப்பாயிருந்தது. இப்படிப்பட்ட வேஷக்காரர் பராபரனுடைய இராச்சியத்திற்குத் தகுந்தவர்கள் அல்லவென்று சொன்னார். பராபரனுடைய இராச்சியத்தில் பிரவேசிக்கிறவர்கள், பரிசேயருடைய இந்த வேஷ நீதியைப் பார்க்கிலும் அதிகப்பட்ட நீதியுடையவர்களாயிருக்கவேண்டும் என்று கண்டிப்பாய்ப் போதித்தார். இதற்காக நியாயப்பிரமாணத்திலுள்ள சில கற்பனைகளை விவரித்துக் காட்டினார். அவைகளை அவர் பரிசேயர் விஸ்தரித்ததுபோல் விஸ்தரிக்காமல், அவைகளின் சரியான உட்பொருளுக்கு ஏற்றபடியே விஸ்தரித்துக்காட்டினார். அவர் விஸ்தரித்த கற்பனைகளில் ஒன்று கொலை செய்யாயாக என்பது. இந்தக் கற்பனைக்கு இரட்சகர் சொல்லுகிற விவரத்தை நாம் படித்துக்கொள்வதினால், பராபரனுடைய ராச்சியத்துக்கடுத்த நீதி எப்படிப்பட்டது என்று அறியலாம்.

கொலை செய்யாயாக என்ற கற்பனையைப் பற்றிச் சிந்திப்போம்.

1. இதில் விலக்கப்பட்டிருக்கும் பாவமென்ன.
2. இதில் கற்பிக்கப்படும் கடமை என்ன.

### 1.

கொலை செய்யாயாக என்ற கற்பனையில் விலக்கப்பட்டிருக்கிற பாவமென்ன என்று பார்ப்போம்.

கொலை செய்யாயாகவென்பதும், யாராகிலும் கொலை செய்தால் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் என்பதும், பூர்

வத்தாருக்குச் சொல்லப்பட்டது என்று கேட்டீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். — கொலை செய்யாயாக என்ற கற்பனையில் விலக்கப்பட்டிருக்கிற பாவம் என்னவென்று நமக்குத் தெரியும். கொலைதான் அந்தப் பாவம். அப்படியானால், கொலையாவது என்ன. கொலை என்கிற வார்த்தைக்கு உயிரை வாங்குதல் என்கிறது சாதாரண அர்த்தம். இப்படிப் பரிசேயரும் சொன்னார்கள். ஒருவன் உயிருக்குச் சேதமுண்டாக்கினவர்கள் கொலை செய்தவர்களென்றும், அவர்களை நியாயஸ்தலத்தில் ஒப்புவிக்கவேண்டுமென்றும், ஒருவருடைய உயிரையும் வாங்காதவர்கள் ஐந்தாங் கற்பனையைச் சரியாய்க் கைக்கொண்டவர்கள் என்றும் அவர்கள் நினைத்தார்கள். இதுவே பூர்வந்தொட்டு யூதபோதகர் போதித்ததென்று சொல்லி, அதைப் புத்தகமாக எழுதி வைத்து சனங்கள் காதுகேட்க வாசித்தார்கள். இதின்படியே பார்த்தால், இங்கே வந்திருக்கிற நம்மில் ஒருவனும் கொலைபாதகனல்ல. ஆகிலும், இயேசுநாதர் இந்தக் கற்பனைக்குச் சொல்லுகிற விஸ்தரிப்பைக் கவனித்தால், நம்மில் எவனும் இந்தக் கற்பனையைக் கைக்கொள்ளாதவனென்றும், நம்மில் ஒவ்வொருவனும் கொலைபாதகனென்றும் பார்ப்போம்.

நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக்கொள்பவனெல்லாம் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான், ஆராகிலும் தன் சகோதரனைச் சீயென்றால் எரி நரகத்துக்கு ஏதுவாயிருப்பானென்று கர்த்தர் சொல்லுகிறார். — இங்கே இயேசுநாதர் உயிரை வாங்குவது மாத்திரம் கொலையென்று சொல்லவில்லை. கொலைக்கு வேராயிருக்கிற கோபம் பகை உடையவன் எவனோ, அவன் உயிரை வாங்கினவனுக்குச் சரி என்று இரட்சகர் சொல்லுகிறார். இதின்படியே கோபம் பாவம். காயீன் என்பவனுக்கு ஆபேல் என்ற சகோதரன்மேல் கோபம் வந்ததே, அது பெரிய அநியாயம். காயீனுக்கு ஏன் கோபம் வந்தது. ஆபேல் ஏதாவது தப்பிதம் செய்ததினாலா. இல்லை, இல்லை. ஆபேல் கர்த்தருக்குப் பிரியமான விசுவாசியாயிருந்ததினாலும், அவனுடைய பலியைக் கர்த்தர் ஏற்றுக்கொண்டதினாலுமே காயீனுக்குக் கோபம் வந்தது. அது பொறாமையினால் வந்த கோபம், பகையினால் வந்த கோபம். இந்தக் கோபம் கொலைபாதகத்துக்கு வேராயிருப்பதினால், இதைக் கொலையென்றே சொல்லவேண்டும். அந்தக் கோபம் காயீனிடத்தில் தங்கி, வேர் விட்டு வளர்ந்ததினால், அவன் தன் சகோதரனுடைய இரத்தத்தைச் சிந்திக் கொலைபாதகன் ஆனான். இதன் நிமித்தம்: தன் சகோதரனைப் பகைக்கிறவனெல்லாம் மனுஷகொலைபாதகனாயிருக்கிறான்; மனுஷகொலைபாதகனாகிய ஒருவனுக்குள்ளும் நித்திய ஜீவன் நிலைத்திருக்கிறதில்லை என்று அறி



வீர்கள் என்று பரிசுத்த யோவான் அப்போஸ்தலன் சொல்லுகிறார் (௧ யோவா. 3, 15). ஆகையால், நாம் கோபத்துக்கு எச்சரிக்கையாய் இருக்கவேண்டும். பொதுவாய் எல்லா மனிதருக்கும் கோபம் வரும். கோபம் வராதவர்கள் இல்லை. ஆகிலும், கோபப்படுவதில் வித்தியாசமுண்டு. கோபமானது உத்தமர் மனதிலே எட்டிப்பார்க்கும், மத்திமர் மனதிலே வரத்துப்போக்காயிருக்கும், அதமர் மனதிலே குடிகொண்டிருக்கும். அதமர் என்றால் கடைசித்தரமான மனிதர்கள். இவர்களிடத்திலே கோபம் நிலைத்திருக்கும். கோபம் வளர வளர, கொலைபாதகமாய் முடியும்.

கோபமான வார்த்தையும் கொலைபாதகமாயிருக்கிறது. சகோதரரை இகழ்ந்து பேசுவதும், அவர்களைத் தூஷித்து ஏசுவதும் கொலைபாதகந்தான். துஷ்ட வார்த்தையைக் கேட்கச் சகிக்காமல் உயிர் விட்டவர்கள் அநேகர் உண்டு. நெருப்புச் சுட்ட புண் சீக்கிரம் ஆறும்; ஆறின பின் அதை மறந்தும் போவோம். யாதொருவர் சொன்ன ஒரு கொடுஞ்சொல்லால் உண்டாகும் மனப்புண்ணோ சீக்கிரம் ஆறாது; அதை மறப்பதும் லேசல்ல. காலம் போம் வார்த்தை நிற்கும், கப்பல் போம் துறை கிடக்கும் என்கிற பழமொழியும் உண்டு. கோபம் கொலைக்கு வேராயிருப்பது போல், கோபமான வார்த்தை அதன் பூவாயிருக்கிறது. வார்த்தை முற்றிப் பாதகமாய் முடிகிறதுண்டு. கொலைசெய்யாயாக என்ற கற்பனையைக் கைக்கொள்ள மனமுடையவர்கள் தங்கள் நாவைக் காக்கவேண்டும். நாம் ஒருவரைக் கடிந்துகொண்டாலும் அதைக் கோபத்தினாலும் பகையினாலும் செய்யாமல், சிநேகத்தால் செய்ய வேண்டும்.

இப்படியே, இந்தக் கற்பனையில் விலக்கப்பட்டிருக்கிற பாவமாகிய கொலையாவது என்னவென்று நாம் பார்த்தோம். நம்முடைய மனதிலுண்டாகும் பொறாமை, பகை, கோபம் இவைகள் கொலை. நம்முடைய வாயிலிருந்து புறப்படும் இகழ்வான வார்த்தை, தூஷணமான சொல் எல்லாம் கொலை. இயேசுநாதர் செய்த இந்த விஸ்தரிப்பின்படி இங்கே வந்திருக்கிற நமக்குள் யாரைக் கொலைபாதகனல்ல என்று சொல்லலாம். இங்கே வந்திருக்கிற நமக்குள் கோபம் இல்லையா, பொறாமை யில்லையா, பகை யில்லையா, வற்மம் ஆங்காரம் இல்லையா. சகோதரருக்கு நிந்தனையும் வேதனையுமான வார்த்தைகளைப் பேசினவர்கள் இங்கே யில்லையா. நாமெல்லாரும் அப்படிப்பட்டவர்களென்றே சொல்ல வேண்டும். ஆகையால் நாம் கொலைபாதகரே. நம்மைக் கர்த்தர் நியாயந்தீர்க்க ஆரம்பித்தால், நம்மில் எவன் நியாயத்தீர்ப்புக்கும் எரி நரகத்துக்கும் தப்புவான். ஆகையால், நாம் இந்தக் கற்பனைக்கு விரோதமாக நம்முடைய நினைவிலும் வாக்கிலும்

செய்த பாவங்களுக்காக இப்பொழுதே துக்கப்பட்டு, கர்த்தரிடத்தில் மன்னிப்பைத் தேடுவோமாக.

2.

கொலை செய்யாயாக என்ற கற்பனையினால் கர்த்தர் நமக்குக் கற்பிக்கும் கடமை என்ன என்று பார்ப்போம்.

இந்த விஸ்தரிப்பில் நம்முடைய இரட்சகர் சகோதரன் என்கிற வார்த்தையை நாலு முறை உபயோகித்திருக்கிறார். மற்றொரு இடத்திலும் அவர் இந்த வார்த்தையை அவ்வளவாக உபயோகித்ததில்லை. இதை நாம் கவனிக்க வேண்டும். இதன்படியே இந்தக் கற்பனையினால் நமக்குச் சொல்லப்படும் முதற் கடமை நாமெல்லாரும் ஒருவரையொருவர் சகோதரர்களாக எண்ணுவதுதான். அஞ்ஞானிகள் சகோதர சிநேகம் இன்னதென்று அறியார்கள். ஆகையால், அவர்கள் ஒருவரையொருவர் சிநேகிக்காமல், நானா ஜாதிகளாகப் பிரிந்து, ஒருவரையொருவர் விரோதித்துப் பகைத்து வருகிறார்கள். கிறிஸ்தவர்களாகிய நாமோ ஒருவருக்கொருவர் சகோதரர்கள். நமக்குள்ளே தொழிலின்படியும், அந்தஸ்தின்படியும், பழக்க வழக்கங்களின்படியும் பல வித்தியாசங்களிருந்தாலும், நாமெல்லாரும் ஒருவருக்கொருவர் சகோதரர் என்பதை மறக்க மாட்டோம். நம்முடைய உற்பத்தியைப் பார்த்தால், நாம் சகோதரர், ஒரே தாய் தகப்பனிடத்திலிருந்து உண்டானவர்கள். நம்மெல்லாருக்கும் ஒரே இரத்தமுண்டு. நம்மைச் சிருஷ்டித்துப் பராமரித்துக் காப்பாற்றி வருகிற பரம தகப்பனும் ஒரே ஒருவர். நமக்காக இரத்தம் சிந்தி உயிர்விட்டு, நம்மை இரட்சித்த இரட்சகரும் ஒரே ஒருவர். நம்மைப் பரிசுத்தமாக்கி விசுவாசத்தில் காத்து வருகிற பரிசுத்த ஆவியும் ஒருவரே. ஆகையால் நாம் சகோதரர் அல்லவா. நாமெல்லாரும் பரதேசிகளாயிருந்து மோட்சத்துக்குப் போம் வழியிலே நடக்கிறோம். நாம் போய்ச் சேரவேண்டிய இடம் ஒன்றுதான். வழியிலிருக்கிற நாம் ஒருவரையொருவர் விரோதித்து, பகைத்து நடந்துகொள்வது சகோதர சிநேகத்துக்கு அடாது. யோசேப்பு தன் சகோதரரைக் கானான் தேசத்துக்கு வழிவிட்டனுப்பினபொழுது: வழியிலே சண்டை பண்ணீர்களாக என்று அவர்களுக்குச் சொன்னான் (௧ மோசே 45, 24). இது மோட்ச வழியிலே நடக்கிற சகோதரர்களுக்கு நல்ல புத்திமதி. இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை இன்பமானது என்று சங்கீதக்காரன் சகோதர சிநேகத்தைப் புகழ்ந்து பேசுகிறார் (சங். 133, 1).

நீ பீடத்தண்டை உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன் சகோதரனுக்கு உன்பேரிலே குறையுண்டென்று அங்கே நினைவுகூர்ந்தாயாகில், அவ்விடத்திலே பீடத்தின்முன் உன் காணிக்கையை வைத்து விட்டுப்போய், உன் சகோதரனோடே முந்த



ஒப்பரவாகி, பிற்பாடு வந்து உன் காணிக்கையைச் செலுத்து என்று இரட்சகர் சொல்லுகிறார். — இந்த அவருடைய புத்திமதியின்படியே நடக்கவேண்டுமானால், நம்முடைய சகோதரனுக்கு நமது பேரில் குறையுண்டோ என்று சோதித்துப் பார்ப்பது நமது கடமை. எங்கள் கடன்காரருக்கு நாங்கள் மன்னித்துவிடுகிறதுபோல நீரும் எங்கள் பாவக் கடன்களை எங்களுக்கு மன்னித்துவிடும் என்கிற ஐந்தாம் மன்றாட்டைச் சொல்லிச் செபம் பண்ணும் பொழுதெல்லாம் நம்மைச் சோதித்துப் பார்க்கவேண்டும். நமக்கு விரோதமாய் நம்முடைய சகோதரர்கள் செய்த குற்றங்கள் என்னவென்று மாத்திரமல்ல, சகோதரருக்கு விரோதமாக நாம் செய்திருக்கிற குற்றங்கள் என்னவென்றும் சோதித்துப் பார்க்கவேண்டும். அப்படிச் செய்வதினால் அநேக மனவருத்தங்களையும் சிநேகக் குறைவான பல சங்கதிகளையும் சரிப்படுத்தக் கூடியதாகும். இதனால் ஐந்தாம் கற்பனையைக் கைக்கொள்ளுவது சுலபமாகும்.

நம்முடைய சகோதரரோடே நாம் ஒப்பரவாகி, நல்மனம் பொருந்த ஆயத்தம் உள்ளவர்களாயிருக்கவேண்டும். நாம் கர்த்தருக்கு ஒரு காணிக்கையைச் செலுத்துகிறதற்கு பீடத்தண்டை வரும்போது சகோதரரோடே ஒப்பரவானவர்களாய் வரவேண்டும். யூதர் செலுத்தின காணிக்கைகளும் பலிகளும் நமக்கில்லை. நாம் செபம் என்கிற தூபம் காட்டி, ஸ்தோத்திரம் என்கிற பலிசெலுத்தவேண்டியவர்கள். இதற்கான பீடம் கோயிலிலும் உண்டு, வீட்டிலும் உண்டு; கோயில் தெய்வாராதனையும் வீட்டுக் குடும்ப ஆராதனையும் நாம் காணிக்கை செலுத்தும் முக்கிய சமயங்கள். பகையோடும், கோபத்தோடும் இன்னும் பல துர்க்குணங்களோடும் நாம் செலுத்துகிற காணிக்கை கர்த்தருக்குப் பிரியமல்ல. காயீனுடைய காணிக்கையைக் கர்த்தர் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனெனில், அவன் தன் சகோதரனைப் பகைக்கிற இருதயம் உள்ளவனாயிருந்தான். நாம் ஆராதனை செய்யும் ஒவ்வொரு சமயத்திலும், கர்த்தருடைய இராப்போசனத்துக்குச் சேரும் ஒவ்வொரு சமயத்திலும், சகோதரரோடு நல்மனம் பொருந்தினவர்களாயிருப்பது அவசியம். ஆகையால் காலதாமதமில்லாமல் உடனே ஒப்பரவாகவேண்டும், உடனே நல்மனம் பொருந்தவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார். நல்மனம் பொருந்துகிறவனுக்கு மூன்று முக்கிய இலட்சணங்கள் அவசியம். முதலாவது மன்னிக்கும் குணம். நமக்கு விரோதமாகப் பிறத்தியார் எத்தனை குற்றங்களைச் செய்திருந்தாலும், அந்தக் குற்றங்கள் எவ்வளவு பெரிதாயிருந்தாலும், அவைகளை மன்னித்துவிடுகிற குணந்தான் மேலான குணம். பராபரனுக்கு விரோதமாக நாம் செய்கிற குற்றங்களையெல்லாம் அவர் மன்னிக்கிறாரே.

நாம் நம்முடைய சகோதரர்களுக்கு மன்னிக்காமலிருக்கலாமா. இரண்டாவது, சகோதரரிடத்தில் மன்னிப்புக் கேட்கும் தாழ்மை இருக்கவேண்டும். பிறத்தியாரை நாம் மனவருத்தப்படுத்துவது லேசு. அவர்களிடத்தில் மன்னிப்புக் கேட்பதோ வருத்தம். நம்முடைய பெருமையும் அகந்தையும் மற்றவர்களிடத்தில் மன்னிப்புக் கேட்காதபடிக்கு நம்மைத் தடுக்கிறது. இந்தத் தடைக்கு நாம் இடங்கொடுக்கக்கூடாது. நாம் வருத்தப்படுத்தின சகோதரனிடத்தில் ஓடவேண்டும். அவனுக்கு விரோதமாய்ச் செய்த குற்றங்களை அவனிடத்தில் அறிக்கையிடவேண்டும். நம்முடைய மனஸ்தாபத்தைப் பார்க்கிறது அவனுக்கு ஒரு ஆறுதலாயிருக்கும். மேலும், அவனிடத்தில் மன்னிப்பைக் கேட்கவேண்டும். அவன் நமக்கு மன்னித்தாலும் மன்னிக்காவிட்டாலும், நாம் நல் மனச்சாட்சியுடையவர்களாயிருக்கலாம். மூன்றாவது, நம்முடைய சகோதரருக்கு நன்மை செய்ய மனமுடையவர்களாயிருக்கவேண்டும். பிறத்தியாருக்கு நாம் சந்தோஷத்துடனே நன்மைசெய்தாலல்லாமல் நாம் ஐந்தாம் கற்பனையைக் கைக்கொண்டவர்களல்ல. யோசேப்பு என்பவர் தன்னைப் பகைத்து, தனக்கு வெகுவான தீமைகள் செய்த தன் சகோதரருக்கு அவர்கள் குற்றங்களை மனப்பூர்வமாய் மன்னித்தார். அவர்களுக்கு வெகுவான நன்மைகளைச் செய்தார். அவர்களையும் அவர்கள் பெண்சாதி பிள்ளைகளையும் பஞ்சகாலத்தில் பராமரித்துக் காப்பாற்றினார். இதனால் அவருடைய நல் மனது வெளிப்பட்டது. இதனால் சகோதரரெல்லாரும் ஒருவரோடொருவர் ஒப்பரவாகி நல்மனம் பொருந்தக்கூடியதாயிற்று.

இதைக்குறித்து நம்முடைய இரட்சகர்: எதிரியானவன் உன்னை நியாயாதிபதிக்கு ஒப்புக்கொடாமலும் நியாயாதிபதி உன்னை ஊழியக்காரனுக்கு ஒப்புக்கொடாமலும், நீ சிறைச்சாலையில் வைக்கப்படாமலுமிருக்க, நீ சீக்கிரமாக உன் எதிரியோடே இன்னும் வழியிலிருக்கக்கொள்ள அவனுடனே நல்மனம் பொருந்து. மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன், நீ கடைசிக் காசைக் கொடுத்துத் தீருமட்டாக அவ்விடத்திலிருந்து புறப்படமாட்டாயென்று சொல்லுகிறார். இதினால் ஐந்தாம் கற்பனையின்படி நம்முடைய முக்கிய கடமை சகோதரரோடு நல் மனம் பொருந்துதல் என்பது தெளிவு. நாம் பிழைத்திருக்கிற இந்தக் காலம் கிருபையின் காலம். இப்பொழுது நாம் நியாயாதிபதியிடம் போகிறோம். போகிற வழியோ குறுகின வழி. அவரிடம் போய்ச் சேருகிறதற்கு முன்னமே நல் மனம் பொருந்த வேண்டும். நம்முடைய நியாயாதிபதியாகிய கர்த்தர் நமக்கு வைத்திருக்கும் வாசஸ்தலம் கோபக்காரருக்கு இடமல்ல, பொறுமைக்காரருக்கு



இடமல்ல, பகையுள்ளவர்களுக்கு இடமல்ல. கோபத்தோடும் பகையோடும் தங்கள் ஆயுசுகாலத்தை முடிக்கிறவர்கள் அந்தக் குணத்தோடுதான் மறுலோகம் போவார்கள். அப்படிப்பட்டவர்களைக் கர்த்தர் மோட்சத்தில் ஏற்றுக்கொள்ளாமல், நரகத்திலே தள்ளுவார். நரகம் பயங்கரமான சிறைச்சாலை. அங்கே சாத்தான் குணப்படாதவர்களை மகா வாதையாய் வாதிப்பான். அந்த வாதைக்கு முடிவிராது. அங்கிருந்து தப்புகிறதற்கும் ஏதேனும் செலுத்துகிறதற்கும் யாராலும் முடியாது. ஆகையால், அங்கே பிரவேசித்தவர்கள் நித்தியகாலமாக அங்கே வேதனைப்படுவார்கள்.

இரட்சகர் நமக்குப் போதித்த இந்தப் போதனையின்படியே நம்மைச் சோதித்துப்பார்த்தால், ஐந்தாம் கற்பனையின்படி நாம் நடந்தவர்களல்ல. அதில் நமக்குக் கொடுக்கப்பட்ட கடமையை நாம் நிறைவேற்றவில்லை. சகோதர சிநேகத்தையும் ஒப்பரவாகும் குணத்தையும் கர்த்தர் இந்தக் கற்பனையினால் நம்மிடத்தில் தேடுகிறாரே. இவைகள் நம்மிடத்தில் எவ்வளவு அபூர்வம். ஆகையால் நாம் இப்பொழுது நம்முடைய மார்பில் அடித்துக்கொண்டு, நம்முடைய பாவங்களுக்காகப் புலம்பி அழுவோமாக. உங்கள் நீதி வேதபாரகர் பரிசேயர் என்றவர்களின் நீதியைப்பார்க்க அதிகப்பட்டிருந்தாலொழிய வானராச்சியத்திற்குள் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று இரட்சகர் சொன்னாரே. ஐயோ, வேதபாரகர் பரிசேயருடைய நீதிகூட நமக்கு இல்லையே, கிறிஸ்து தேடுகிற நீதிக்கு எங்கே போவோம். இயேசுவண்டைக்கே ஓடுவோம். அவர் ஒருவரே பராபரனுடைய கற்பனைகளைச் சரியாய்க் கைக்கொண்டு நிறைவேற்றினவர். அவருடைய நீதிமாத்திரம் வானராச்சியத்தில் செல்லத்தக்கது. அவருடைய நீதியை விசுவாசத்தால் பற்றிக்கொண்டவர்கள் யாரோ, அவர்களே வானராச்சியத்தின் சரியான குடிகள். அவர்கள்மாத்திரம் கர்த்தருடைய கற்பனைகளின் வழிகளிலே நடக்கக்கூடியவர்கள். ஏனென்றால், அவர்கள்மாத்திரம் கிறிஸ்துவுக்குள் பிழைத்து, கிறிஸ்துவின் ப[illegible]த்தால் எல்லாவற்றையும் செய்து நிறைவேற்றுவார்கள்.

எங்கள் நீதியாகிய இயேசுவே, நாங்கள் உம்மையல்லால் பாவி[illegible] பாதகருமாயிருக்கிறோம். புறம்பான சன்மார்க்கம்கூட எ[illegible]றைவுபடுகிறது. எங்களுக்காகப் பரதபியும் கர்த்[illegible]டைய நீதியையே நாங்கள் நம்பியிருக்கிறோம். [illegible]ய்விசுவாசத்தில் காப்பாற்றி, உம்முடைய சு[illegible] எங்களை மோட்சராச்சியத்தில் சேர்த்தருளும்,

## திரித்துவப் பண்டிகைக்குப் பிந்தின எ-ம் ஞாயிறு.

மாற். 8, 1—9.

பிரியமானவர்களே,

வனாந்தரத்திலே திரளான சனங்கள் பசியாயிருக்கிறார்கள். இயேசுநாதர் அவர்கள் பேரில் மனதுருகி, அவர்களுக்குப் போந்த சாப்பாடு கொடுத்து, அவர்களைத் திருப்தியாக்குகிறார். இது நமக்கு மிகவும் ஆறுதலான சரித்திரம். இந்த முழு உலகமும் ஒரு வனாந்தரமென்று சொல்லலாம். இதில் இருக்கும் நிர்ப்பந்தம் சொல்லி முடியாது. இந்த உலகத்திலிருக்கும் சந்தோஷங்களைப் பார்க்கிலும் இதிலிருக்கும் சங்கடங்கள் அதிகம். என்றாலும், கிறிஸ்தவர்களாகிய நாம் சந்தோஷமாகவே காலம் தள்ளலாம். நாம் வீண் கவலைப்பட நியாயமில்லை; ஏனென்றால், நமக்காகக் கவலைப்படுகிற ஒருவர் நம்மோடு இருக்கிறார். நம்முடைய நிர்ப்பாக்கியமெல்லாம் அவருக்குப் பூரணமாய்த் தெரியும். அவர் நம்முடைய சுவிசேஷ வாக்கியத்தில் சொல்லியிருக்கும் பெரிய அற்புதத்தைச் செய்ததினால் நம்முடைய கவலைகளுக்கு இடமில்லையென்று நமக்குக் காண்பித்து; தம்முடைய பேரில நாம முழு நம்பிக்கை வைக்கவும், தம்து பேரில் நம்முடைய கவலைகளையெல்லாம் எறிந்துவிடவும் நம்மை ஏவுகிறார். ஆகையால், நாம் ஆறுதலோடு இந்த உலக வனாந்தரத்தில் கர்த்தர் நம்மை வைக்குமட்டும் பிழைத்திருக்கலாம். இப்பொழுது நாம நம்முடைய சுவிசேஷ வாக்கியத்தின்படியே தியானிக்கப்போகிற சங்கதி:

உலகமாகிய வனாந்தரத்தில் பராபரனுடைய பிள்ளைகளுக்கு இருக்கும் ஆறுதல் என்ன என்பதே.

1. கிறிஸ்துவினுடைய உருக்கமுள்ள மனம்.
2. அவருடைய பெருக்கமுள்ள கை.

### 1.

உலகமாகிய வனாந்தரத்தில் பராபரனுடைய பிள்ளைகளுக்கு இருக்கும் ஆறுதல் கிறிஸ்துவினுடைய உருக்கமுள்ள மனம்.

அந்நாட்களிலே திரள் கும்பிருந்து அவர்களுக்குப் புசிக்க ஒன்றும் இல்லாதபோது, இயேசு தம்முடைய சீஷரைச் சேர வரவழைத்து, அவர்களுடனே: கும்பின்மேல் மனதுருகுகிறேன்; ஏனெனில் அவர்கள் இப்போது மூன்று நாளாய் என்னுடனே தரித்து, புசிக்க ஒன்றுமில்லாதிருக்கிறார்கள் என்று சொன்னார்.

தேன், சர்க்கரை, நெய் முதலிய இனிதும் ருசிகரமுமான பதார்த்தங்கள் எங்கேயோ, அங்கே எறும்பு மிகுதியாய்க் கூடி



வரும். நம்முடைய அருமை இரட்சகர் இந்தப் பதார்த்தங்களைப் பார்க்கிலும் அதிக ருசிகரமானவர். அவருடைய திருவசனம் தேனிலும் தேன் கூண்டொழுகலிலும் மதுரமானது. அவருடைய வசனத்தைக் கேட்க ஆசையாய்த் திரளான ஜனங்கள் அவரிடம் கூடிவந்தார்கள். கூடி வந்ததும் ஆச்சரியமல்ல. ஒரு குழந்தைக்குப் பால் கொடுப்பது தாய்க்கு எப்படிப் பிரியமோ, அப்படியே தம்முடைய திருவசனத்தை ஜனங்களுக்குப் பிரசங்கிப்பது கிறிஸ்துவின் முழுவிருப்பம். அவர் இரட்சணிய சுவிசேஷத்தை அவர்களுக்கு மதுரமாய் வசனித்தார். தரித்திரருக்குச் சுவிசேஷத்தை அறிவிப்பது அவர் இந்த உலகத்திற்கு வந்த நோக்கங்களில் ஒன்று. அவர் ஜனங்களுடைய சரீரத்துக்காகக் கவலைப்படுமுன் அவர்களுடைய ஆத்துமத்துக்காக அவர் விசேஷித்துக் கவலைப்பட்டார். ஏனெனில், ஒருவன் உலக முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டும், தன் ஆத்துமத்தை இழந்தால், அவனுக்கு லாபம் என்னவென்று அவரே சொன்னவர். பாவிகளுக்காகப் பரிதபிக்கும் உருக்கமுள்ள மனசு அவருக்கு இருந்ததால், ஆத்துமாக்கள் கெட்டுப்போகாதபடி அவர்களுக்குப் புத்திபோதனை செய்தார்.

அவரண்டை வந்திருந்த ஜனங்களும் தங்கள் வீடு வாசலை மறந்து, வீண் கவலைகளையெல்லாம் ஒழித்து, மூன்று நாள் அவரிடம் தங்கியிருந்து, அவருடைய பிரசங்கத்தைக் கேட்டார்கள். கிறிஸ்துவின் வசனம் ஆவியும் ஜீவனுமாயிருக்கிறது. அது மனுஷருடைய இருதயத்தைக் குணப்படுத்தி, அவர்களுக்கு விசுவாசத்தைக் கொடுத்து, அவர்களை இரட்சிக்கிறது. கர்த்தருடைய வசனம் கேட்கக் கேட்க மதுரமானது. அது தின்னத் தின்னத் தெவிட்டாத தெள்ளமுது. ஆகையால் அந்தச் சனங்கள் கிறிஸ்துவை விட்டுப் போக மனமற்று, அத்தனை நாளாக அவரிடம் தங்கினார்கள். அவர்கள் கையோடு கொண்டுவந்திருந்த கட்டமுதோ, வேறெந்த ஆகாரமோ, ஆகிப்போய், புசிக்க அவர்களுக்கு ஒன்றுமில்லாதிருந்தும், அவர்கள் சோர்ந்துபோகவில்லை. மனிதன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, பராபரனுடைய வாயிலிருந்து புறப்படும் சகல வார்த்தையினாலேயும் பிழைப்பான் என்றபடி அந்த ஜனங்கள் அவருடைய வார்த்தையையே ஆகாரமாக உட்கொண்டு, அங்கே தரித்திருந்தார்கள்.

இந்த ஜனங்களோடு நம்மை ஒப்பிட்டுப் பார்த்தால், நாம் நம்மைக் குறித்து எவ்வளவு வெட்கப்படவேண்டும். உருக்கமனசுள்ள இயேசுநாதர் நம்முடைய ஆத்துமத்துக்கு வேண்டிய ஆகாரமாகிய தம்முடைய திருவசனத்தை நமக்குக் கொடுத்திருக்கிறார். அதைப் பிரசங்கிக்கும் போதகர் நமக்குண்டு; என்றாலும், கர்த்தருடைய வசனத்தைக் கேட்கவும், படிக்கவும் ஆசை

யுள்ளவர்கள் எவ்வளவு கொஞ்சம். நாங்கள் கோயிலுக்கு வந்தால் இன்றைக்கு எங்கள் கூலிபோய் விடுமே என்று சொல்லி, ஆத்தும போசனமாகிய வசனத்தைப் பார்க்கிலும் வயிற்றுப் போசனமாகிய கூலியைப் பெரிதுபண்ணுகிறவர்கள் எத்தனை பேர். இயேசுநாதரண்டை வந்த ஜனங்கள் மூன்று நாள் அவரிடம் தரித்திருந்தார்களே. நாமோ, வசனத்தைக் கேட்க மூன்று மணி நேரம் தரித்திருப்போமா. ஒரே மணி நேரம் கோயிலில் ஒழுங்காயிருந்து, வசனத்தைக் கவனமாய்க் கேட்கிறவர்கள் எத்தனை சிலர். நாம் ஆத்துமக் கவலையற்று, வசனத்தை அசட்டைபண்ணுகிறதினிமித்தமே கர்த்தர் நம்முடைய சரீரத்துக்கும் நஷ்டம் வரப்பண்ணுகிறார். அடிக்கடி நம்முடைய தேசத்தில் பஞ்சம் வருவதற்கும் நம்முடைய ஜனங்கள் பசியால் சாகிறதற்கும் முக்கிய காரணம் நாம் கர்த்தருடைய வசனத்தை அசட்டைபண்ணுகிற அசட்டைதான். உருக்க மனசுள்ள இயேசுவோ, இன்னமும் நம்மைக் கைவிடாமல், நம்முடைய அசட்டையின் நிமித்தம் நம்மைத் தள்ளிப்போடாமல், தம்முடைய ஊழியரைக்கொண்டு நம்மைக் கூப்பிட்டுக்கொண்டேயிருக்கிறார், போதித்துக்கொண்டே வருகிறார்.

அவர் தம்மிடம் வந்த ஜனங்களின் ஆத்துமத்துக்காகக் கவலைப்பட்டதுபோல், அவர்களுடைய சரீரத்துக்காகவும் கவலைப்பட்டார். அவரிடத்தில் தங்கியிருந்த ஜனங்களுக்கு ஆத்தும போசனம் கிடைத்ததுபோல், சரீரப்போசனமும் கிடைத்தது. இரட்சகர் அவர்களுக்காக மிகவும் கவலைப்பட்டு: நான் அவர்களைப் பட்டினியாக அவர்கள் வீட்டுக்கு அனுப்பினால், வழியிலே தொய்ந்துபோவார்கள்; ஏனென்றால் அவர்களில் சிலர் தூரத்திலிருந்து வந்தார்கள் என்றார். இயேசுநாதர் ஆத்தும இரட்சகர், அவர் சரீரத்துக்காகக் கவலைப்படமாட்டார் என்று சொல்லுகிறவர்கள் பொய் பேசுகிறார்கள். ஆத்துமத்தை நமக்குக் கொடுத்த அவரே சரீரத்தையும் நமக்குக் கொடுத்தவர். ஆத்துமத்தைப் போஷிக்கிற அவரே சரீரத்தையும் போஷிக்கிறவர். கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார், நான் தாழ்ச்சியடையேன் என்று சங்கீதக்காரன் பாடுகிறார். நல்ல மேய்ப்பரின் ஆடுகளுக்கு ஆத்தும காரியங்களில் மாத்திரமல்ல, சரீர காரியங்களிலும் தாழ்ச்சி இராது. அன்றன்றுள்ள அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும் என்று ஜெபம்பண்ணச் சொல்லிக்கொடுத்தவர், நமக்கு வேண்டிய அப்பத்தைக் கொடாமலிருப்பாரா. இது விஷயத்தில் சந்தேகம் வேண்டாம். சந்தேகப்படுகிறவர்கள் கர்த்தரைப் பொய்யராக்குகிறார்கள். நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல் எல்லாவற்றிலும் உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரிப்புடனே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் பராபரனுக்கு அறி-



விக்கப்படக் கடவது. அப்போது எல்லாப் புத்திக்கு மேலான தெய்வசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தனைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள் காப்பாற்றும் (பிலி. 4, 6. 7) என்ற சிறந்த வாக்குத்தத்தம் நமக்கு வேதத்தில் உண்டு.

மேலும், இந்த உலகத்தில் நம்முடைய நிர்ப்பந்த நிலைமையைச் சரியாய் அறிந்து, நமக்காகச் சரியான்படி பரிதபிக்கிறவர்கள் இல்லை. கிறிஸ்துவோ, நமக்காக உண்மையாய் மனதுருகுகிற கர்த்தர். ஏனெனில், நம்முடைய பலவீனங்களுக்குப் பரிதபிக்கமாட்டாத பிரதான ஆசாரியர் நமக்கு இராமல், பாவந் தவிர எல்லாவற்றிலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டவர் நமக்கு இருக்கிறார் (எபி. 4, 15) என்று எழுதியிருக்கிறது. அவர் நம்மைப்போல் சோதிக்கப்பட்டவராகையால், அவருக்கு நம்முடைய பசி தெரியும், நம்முடைய தாகம் தெரியும், நம்முடைய களைப்புத் தெரியும், நம்முடைய தொய்வு தெரியும். ஆகையால், அவர் நமக்காக மனதுருகுகிறார். பெத்தானியா கிராமத்தில் லாசருவின் கல்லறையண்டை அவரைப் பாருங்கள். மரித்துப்போன லாசருவுக்காக அவர் கண்ணீர் விட்டார். அவர் எருசலேம் பட்டணத்திற்குக் கடைசி விசை பயணம் போனபொழுது அவர் அந்தப் பட்டணத்திற்காக அழுதார். ஏனெனில், கெட்டழிந்துபோகிற அந்தப் பட்டணத்தாருக்காக அவருடைய மனசு உருகிற்று. இன்றைக்கும், இப்பொழுதும், அவர் இங்கே கூடிவந்திருக்கிற நம்மைப் பார்த்து, நமக்கிருக்கும் பலவித சங்கடங்களைக் கவனித்து, நமக்காகவும் மனதுருகுகிறார். இது நமக்குப் பெரிய ஆறுதலல்லவா. யார் நமக்காகப் பரிதபிக்காவிட்டாலும், கிறிஸ்து நமக்காகப் பரிதபிக்கிறார் என்கிற சத்தியம் இந்த உலகமாகிய வனாந்தரத்தில் நமக்கு இருக்கிற முக்கிய ஆறுதல்.

## 2.

உலகமாகிய வனாந்தரத்தில் பராபரனுடைய பிள்ளைகளுக்கு இருக்கிற மற்றொரு ஆறுதல் இயேசுவின் பெருக்கமுள்ள கை.

அவருடைய சீஷர் அவருக்குப் பிரத்தியுத்தாரமாக: இவர்களை ஒருவன் இங்கே வனாந்தரத்தில் அப்பங்களினாலே திருப்திபண்ண எங்கேயிருந்து வரும் என்றார்கள். சீஷர் கேட்ட கேள்வி இயல்பாய் எல்லா மனிதரும் கேட்கக்கூடியது. கர்த்தருடைய வசனத்தைக் கேட்க ஜனங்கள் கூடிவந்த இடம் வனாந்தரம். அங்கே ரொட்டிக் கிடங்குகள் இல்லை. அங்கே வேறு கடை, கண்ணிகள் கிடையாது. ஆகையால், அங்கே அப்பம் வாங்க முடியாது. அப்பம் அகப்படுகிறதாயிருந்தாலும், நாலாயிரம்பேருக்குப் போதுமான அப்பங்களைக் கொள்வதற்கு அவர்

களிடத்தில் பணம் இல்லை. ஆகையால் கிறிஸ்து மனதுருகுவதினாலே காரியமென்னவென்று நினைக்க ஏதுவுண்டு. இப்படி நம்முடைய அவிசுவாசமுள்ள இருதயம் நமக்குச் சொல்லி, நம்மைக் கவலைகொள்ளப்பண்ணுகிறது. சாப்பாட்டுக்கான வழியைக் கண்ணாரக் காணாதேபோனால், நம்முடைய இருதயம் சந்தேகத்துக்கு உள்ளாகிவிடுகிறது. இது மகா பரிதாபம். கர்த்தரை நம்புகிற நம்பிக்கை நமக்கு அவசியம். நமக்குப் பணமிருந்தாலும் இல்லாவிட்டாலும், சுகம் இருந்தாலும் இல்லாவிட்டாலும், நமது களஞ்சியங்களில் தானியம் இருந்தாலும் இல்லாவிட்டாலும், நம்மைப் போஷிக்க அவருக்கு வழிதெரியும், வகைதெரியும். நாம் அவருடைய வழி வகைகளில் நம்முடைய நம்பிக்கையை வைக்காமல், நம்முடைய சொந்தப் புத்தியின்மேல் சார்ந்து, கணக்குப் பார்ப்பதினால் நாம் மோசம் போகிறோம்; சந்தேகக் குழியில் விழுந்து சங்கடப்படுகிறோம்.

நமக்கு வழக்கமான ஒருவிதமாய் நமக்கு வேண்டியது கிடைக்காமல்போனால், நமக்குத் தெரியாத வேறு விதத்தால் கர்த்தர் அதை நமக்குக் கிடைக்கப்பண்ணுவார். நமக்கு ஒருவழி தெரியாத சங்கடத்தில் அவருக்கு ஆயிரம் வழி தெரியும். விதைப்பும் அறுப்பும் இல்லாத வனாந்தரத்திலே கர்த்தர் தம்முடைய சனமாகிய இஸ்ரவேலை நாற்பது வருஷம் அற்புதமாய் ஆதரிக்கவில்லையா. அவர்களுக்குக் கர்த்தர் வானத்திலிருந்து அப்பத்தையும், கன்மலையிலிருந்து தண்ணீரையும் அற்புதமாய்க் கொடுக்கவில்லையா. எங்கேயிருந்து வருமென்று சீஷர் கேட்டார்கள். இப்படி நம்பிக்கை தப்பி, கேள்விகேட்ட சீஷர்களை நோக்கி இயேசு இரட்சகர்: உங்களுக்கு எத்தனை அப்பங்கள் உண்டென்று கேட்டார், அவர்கள் ஏழு என்றார்கள். அப்போது அவர் சனம் தரையிலே பந்தியிருக்கக் கட்டளையிட்டு ஏழு அப்பங்களை எடுத்து, இஸ்தோத்திரம் பண்ணி, பிட்டு, அவர்கள் முன்னே வைக்கத் தம்முடைய சீஷருக்குக் கொடுத்தார். அவர்கள் சனத்தின் முன்னே வைத்தார்கள். கொஞ்சம் சிறு மீன்கள் அவர்களுக்கு உண்டாயிருந்தது. அவர் இஸ்தோத்திரம்பண்ணி, அவைகளையும் அவர்கள் முன்னே வைக்கச்சொன்னார். ஆனால் அவர்கள் புசித்து, திருப்தியடைந்து, மீந்த துணிக்கைகளை ஏழு கூடை எடுத்தார்கள். புசித்தவர்களோவெனில் ஏறக்குறைய நாலாயிரம்பேராயிருந்தார்கள். அவர் இவர்களை அனுப்பிவிட்டார் என்று வாசிக்கிறோம். இது எவ்வளவு ஆறுதலும் ஆச்சரியமுமான சரித்திரம். பன்னிரண்டு அப்போஸ்தலமார் முடிக்கக்கூடாமல் திகைத்திருந்த சங்கதி இயேசு இரட்சகர் ஒருவரால் எவ்வளவு சுலபமாய் முடிந்தது. மனுஷ சத்திக்கு முடியாத சங்கதி கிறிஸ்துவுக்கு முடியும். மனுஷ புத்திக்கு



எட்டாதது கிறிஸ்துவுக்கு எட்டும். அவர் வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் உள்ளவர். அவருக்கு அப்பம் கீழ்ப்படியும், மீன் கீழ்ப்படியும். அவர் கையில் அப்பமும் பெருகும், மீனும் பெருகும். அவர் கை பெருக்கமுள்ள கை. அது ஒன்றை ஆயிரமாக்கும், ஆயிரத்தை லட்சமாக்கும். சாதாரணமாய் ஏழு அப்பம் எத்தனைபேருக்கு ஆகாரமாகும், பாதிபாதியாய்க் கொடுத்தால் பதினாலுபேருக்கு ஆகும். கால் அப்பம் கால் அப்பமாய்க் கொடுத்தால் இருபத்தெட்டுப்பேருக்கு ஆகும். அதுவோ கர்த்தருடைய கையில் ஏறினதால் நாலாயிரம் பேருக்குச் சாப்பாடாயிற்று. அன்றைக்கு இவ்வளவு பெரிய அற்புதத்தைச் செய்தவர் இன்றைக்கு இல்லாமல் போனாரோ. அவர் இன்னம் உயிரோடிருக்கிறார். அவருக்கு இன்னமும் உருக்கமான மனசு இருக்கிறது. அவருடைய கை இன்னமும் பெருக்கமான கையாயிருக்கிறது. அவருக்குச் சித்தமுண்டானால், இன்றைக்கும் அவர் அற்புதம் செய்வார். இதை நாம் நம்பத்தான் வேண்டும். இதை நாம் நம்பினோமானால், நம்முடைய எளிமைத்தனத்துக்காக வருத்தப்படமாட்டோம், முறுமுறுக்கமாட்டோம். இப்பொழுது நமக்கிருக்கிற சொற்பமான ஈவுகள் நமக்குப் போதுமான ஈவுகளாகும்படி நாம் செய்யவேண்டியதென்ன.

முந்த முந்த ஜெபத்தினாலே நம்முடைய சகல சம்பாத்தியத்தையும் இயேசுநாதருடைய கையிலே வைக்கவேண்டும். அப்பொழுது அவைகள் பெருகும். நம்முடைய ஜெபம் நன்றியறிந்த ஸ்தோத்திரமுள்ளதாயிருக்கவேண்டும். நாம் பெற்றுக்கொண்ட சொற்ப ஈவுகளுக்காக நாம் ஸ்தோத்திரம் செலுத்தாதேபோனால், கர்த்தர் பெரிய ஈவுகளை நமக்கு எப்படிக் கொடுப்பார். நமக்கு உள்ளதெல்லாம் அவர் கொடுத்தது. அவர் கொடுக்காத ஒன்றும் நமக்கில்லை. நாம் சாப்பிடுகிற ஆகாரம் அவருடையது. ஆகையால், தாவீது: எல்லாச் சீவன்களின் கண்களும் உம்மை நோக்கிக்கொண்டிருக்கிறது. தேவரீர் ஏற்றவேளையிலே அவைகளின் போசனத்தை அவைகளுக்குக் கொடுக்கிறீர். உம்முடைய கையைத் திறந்து சீவனுள்ளதெல்லாவற்றையும் இஷ்டமாய்த் திருப்தியடையப்பண்ணுகிறீர் என்கிறார் (சங். 145, 15. 16). இதின்படியே நமக்கு ஆகாரம் கொடுக்கிறவர் கர்த்தராகிய பராபரனென்று நாம் அறிந்திருக்கிறபடியால், அவரை நாம் ஸ்தோத்திரிப்பதும் அவரை நோக்கி ஜெபம்பண்ணுவதும் அவசியம். பராபரனுடைய குமாரனாகிய இயேசுநாதர் தாமே ஏழு அப்பங்களுக்காகப் பராபரனை ஸ்தோத்திரிப்பாரானால், அபாத்திரப் பாவிகளாகிய நாம் எத்தனைக்கு அதிகமாய்ச் செய்யவேண்டும். அப்பொழுது கர்த்தர் நம்மையும் நமக்குள்ளவைகளையும் ஆசிர்வதிப்பார்.

நமக்கிருக்கும் சொற்ப ஈவுகள் அதிகரிக்கவேண்டுமானால், போதுமென்கிற மனசு நமக்கு அவசியம். மற்றவர்களுக்கு அதிகம் இருக்கிறதே என்று பொறாமைப்படுகிறவர்களுக்கும், முறுமுறுக்கிறவர்களுக்கும் ஆசீர்வாதமில்லை; கையில் உள்ளதும் இல்லாமல்போகும். இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தர் தங்களுக்குக் கொடுத்த மன்னா என்ற வானபோசனம் போதுமென்றிராமல் முறுமுறுத்தபடியினாலே கர்த்தர் அவர்களைத் தண்டித்தார். போதுமென்ற மனதுடனே கூடிய தெய்வபத்தியே பெரிய ஆதாயம். ஏனெனில், நாம் உலகத்தில் ஒன்றுங் கொண்டுவந்ததில்லை, அதிலிருந்து எதாகிலும் கொண்டுபோகவுங்கூடாது என்கிறது வெளியரங்கமாயிருக்கிறது. உண்ணவும் உடுக்கவும் நமக்கு இருந்ததேயானால், அதுவே போதுமென்றிருக்கக்கடவோம் (க திமோ. 6, 6—8).

கர்த்தருடைய ஈவுகளை நாம் வீணாய்ச் செலவிடாமல் பத்திரமாய்க் கையாடவும் வேண்டும். இயேசு நாதருக்குக் குறைவில்லை. என்ன வேணுமென்றாலும், எப்பொழுது வேணுமென்றாலும், அவருக்குக் கிடைக்கும். ஆகிலும் அவர் மீந்த துணிக்கைகளைச் சேர்த்து வைக்கச் சித்தமுள்ளவராயிருக்கிறார். இது ஆராதூரித்தனமாய்ச் செலவிடுகிறவர்களுக்கு ஒரு எச்சரிப்பு. கர்த்தர் தம்முடைய ஈவுகளைப் பணக்காரருக்குக் கொடுத்தாலும், ஏழைகளுக்குக் கொடுத்தாலும், அவர்களிடத்தில் கணக்குக் கேட்பார். தம்முடைய ஈவுகளை வீணாக்கிப் போடுகிறவர்களை அவர் விடமாட்டார். மீந்த துணிக்கைகளைப் பத்திரமாய்ச் சேர்த்துவைப்பது பணக்காரராக வேண்டுமென்கிற கருத்தோடு செய்யத்தக்கதல்ல. கர்த்தருடைய மகிமைக்கும் அவருடைய பிள்ளைகளின் நன்மைக்கும் உதவும்படிக்கே சேர்த்து வைக்கவேண்டும். இம்மையிலே ஐசுவரியமுள்ளவர்கள் மேட்டிமைச்சிந்தையற்றிருக்கவும், சதமல்லாத ஐசுவரியத்தையல்ல திரளாய் நமக்கு எல்லாவற்றையும் அனுபவிக்கக் கொடுக்கிற ஜீவனுள்ள பராபரனையே நம்பவும், நன்மை செய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும், கொடுக்க மனப்பூர்வமாயிருக்கவும், அனுசாரிகளாயிருக்கவும், நித்திய ஜீவனைப் பிடிக்கத்தக்கதாக வருங்காலத்துக்குத் தங்களுக்கு நல்ல அஸ்திபாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்குக் கற்பி என்று அப்போஸ்தலன் தீமோத்தேயுவுக்குச் சொல்லுகிறார் (க தீமோ. 6, 17—19). நமக்குள்ளவைகளை நாம் நியாயமாய்ச் செலவிட்டு, மீந்தவைகளைப் பத்திரம்பண்ணி, கர்த்தருடைய சித்தத்துக்கு ஏற்றபடி கையாடுவோமானால், அப்பொழுது கர்த்தருடைய ஆசீர்வாதங்கள் நம்மிடத்தில் பெருகுகிறதற்கு இடமுண்டு.



இரக்கமுள்ள இயேசுவே, வனாந்தரமாகிய இந்த உலகத்தில் தவித்துத் திரிகிற எங்களைக் கண்ணோக்கிப்பாரும். நாங்கள் உம்முடைய உருக்கமான மனதிலும் பெருக்கமான கையிலும் முழு நம்பிக்கை வைக்கவும், எங்கள் கவலைகளையெல்லாம் உமது மேல் எறிந்துவிடவும், எங்களுக்கு உம்முடைய திருவசனத்தினால் பலம் தந்து, எங்களை ஆசீர்வதித்தருளும், சுவாமி. ஆமேன்.

---

## திரித்துவப் பண்டிகைக்குப் பிந்தின அ-ம் ஞாயிறு.

மத்தேயு 7, 15—23.

பிரியமானவர்களே,

கர்த்தருடைய ஜெபத்தில் ஏழு மன்றாட்டுகள் உண்டு. பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக என்பது முதலாம் மன்றாட்டு. அவருடைய நாமம் நம்மிடத்தில் அர்ச்சிக்கப்படுவது எப்படி என்ற கேள்விக்கு லூத்தர் சாஸ்திரியார் சொல்லுகிற உத்தரவு என்னவென்றால்: பராபரனுடைய திருவசனம் தப்பிதமில்லாமல் நம்மிடத்தில் சுத்தமாய்ப் போதிக்கப்பட்டு, நாம் அதின்படி பராபரனுடைய பிள்ளைகளுக்கு ஒத்த ஞான நடத்தையாய் நடந்தால், அவருடைய நாமம் நம்மிடத்தில் அர்ச்சிக்கப்படும் என்றும், பராபரனுடைய திருவசனத்துக்கு ஒத்திராதபடி போதிக்கிறவனும் நடக்கிறவனும் எவனோ, அவன் நமக்குள் பராபரனுடைய நாமத்தை அர்ச்சிக்காமல் தூஷணிக்கிறான் என்றும் சொல்லுகிறார். இதின்படியே சுத்த போதகத்தினாலும் பரிசுத்த நடக்கையினாலும் பராபரனுடைய நாமம் அர்ச்சிக்கப்படும். கள்ளப்போதகத்தினாலும் கெட்ட நடக்கையினாலும் அவருடைய நாமம் தூஷணிக்கப்படும். பராபரனுடைய பிள்ளைகளாகிய நாம் அவருடைய நாமத்தைத் தூஷணிக்காமல், அதை அர்ச்சிக்கும்படிக்குக் கவலையுள்ளவர்களாயிருக்கவேண்டும். இந்தக் கவலைக்கு நம்மை ஏவிவிடும்படி நம்முடைய இரட்சகர்: கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்களென்று நம்முடைய சுவிசேஷ வாக்கியத்திலே நமக்குப் புத்திசொல்லுகிறார். ஆகையால் இந்த அருமையான புத்திமதியைக்குறித்து இன்றைக்கு நாம் தியானிப்போம்.

கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

1. இந்தப் புத்திமதி நம்மெல்லாருக்கும் எவ்வளவு அவசியம்.
2. இதை நாமெல்லாரும் எப்படி நிறைவேற்றலாம்.

1.

கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்ற புத்திமதி நம்மெல்லாருக்கும் எவ்வளவு அவசியம் என்று பார்ப்போம்.

கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள். அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களண்டைக்கு வருகிறார்கள். உள்ளேயோ கவ்வுகிற ஓநாய்களாய் இருக்கிறார்கள் என்று நம்முடைய இரட்சகர் சொல்லுகிறார்.—பராபரனுடைய சித்தத்தைச் சனங்களுக்குத் தெரிவிக்கும்படி வருகிறவர்களை யூதர் தீர்க்கதரிசிகளென்று சொன்னார்கள்., நாம் அவர்களைப் போதகரென்று சொல்லுவோம். பராபரனுடைய சித்தத்தை உள்ளது உள்ளபடியே போதிக்கிறவர்கள் மெய்த்தீர்க்கதரிசிகள் அல்லது மெய்ப்போதகராயிருக்கிறார்கள். பராபரனுடைய பரிசுத்த சித்தத்தைச் சரியாய்த் தெரிவிக்காமல், அவருடைய வசனத்துக்கு விரோதமாய்ப் போதிக்கிறவர்கள் கள்ளத்தீர்க்கதரிசிகள் அல்லது பொய்ப்போதகராயிருக்கிறார்கள். கள்ளப்போதகம் செய்யும் பொய்ப்போதகர்கள் பராபரனுடைய வசனத்தைத் தங்கள் சொந்த மனசின்படி மாற்றுகிறார்கள், தங்கள் சொந்த நினைவுகளைப் பராபரனுடைய வசனத்தோடே சேர்க்கிறார்கள். பராபரனுடைய வசனம் சொல்லுகிறதை முழுவதும் சொல்லாமல், அதில் பல சங்கதிகளை மறைத்துப்போடுகிறார்கள். பராபரன் சொல்லச்சொன்னதைச் சொல்லாமல் போகிறார்கள். இயேசுநாதர் பரிசுத்த இராப்போசனத்திலே, அப்பத்தைக் கொடுத்து: இது என் சரீரம் என்று சொன்னார். ஆகையால் பரிசுத்த இராப்போசனத்தில் நாம் மெய்யாகவே இயேசுநாதருடைய சரீரத்தை வாங்குகிறோம். இதுதான் மெய்ப் போதகம். இப்படிப் போதிக்கிறவர்கள் சத்திய போதகர். பரிசுத்த இராப்போசனத்திலே கொடுக்கப்படுகிற அப்பம், இயேசுநாதருடைய மெய்யான சரீரமல்ல, அது வெறும் அப்பம், அது அவருடைய சரீரத்துக்கு அடையாளமாக மாத்திரம் இருக்கிறது என்று போதிக்கிறது கள்ளப்போதகம். இப்படிப் போதிக்கிறவர்கள் கள்ளப்போதகராயிருக்கிறார்கள். நீங்கள் எவர்கள் பாவங்களை மன்னிக்கிறீர்களோ, அவர்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கிறது. எவர்கள் பாவங்களைச் சுமத்திவைக்கிறீர்களோ அவர்கள்மேல் அவைகள் சுமத்திவைக்கப்பட்டிருக்கிறதென்று கர்த்தர் தம்முடைய ஊழியருக்குச் சொன்னார். இந்தக் கட்டளையின்படி தேவ ஊழியர் செய்யவேண்டும். இப்படிச் செய்கிறது சரியல்ல என்று சொல்லுகிறவர்கள் கள்ளப்போதகராயிருக்கிறார்கள். மேலும், இயேசுநாதர் பரிசுத்த இராப்போசனத்தை இந்த உலகத்திலுள்ள விசுவாசிகள் வாங்கிப் புசிப்ப



தற்காக ஏற்படுத்தினார். இப்படியிருக்க, பரிசுத்த இராப்போசனம் பூமியில் உயிரோடிருக்கிறவர்களுக்காக மாத்திரமல்ல, செத்துப்போனவர்களுக்காகவும் ஏற்படுத்தப்பட்டது என்றும், அது வாங்கிப் புசிக்கிறதற்காக மாத்திரமல்ல, பலி செலுத்துவதற்காகவும் ஏற்பட்டது என்றும் போதிக்கிறது பராபரனுடைய வசனத்துக்கு விரோதமான கள்ளப்போதகம். அதைப் போதிக்கிறவர்கள் கள்ளப்போதகர் தான். ஒரே பராபரனும் பராபரனுக்கும் மனிதருக்கும் ஒரே மத்தியஸ்தரும் உண்டு என்று கர்த்தருடைய வசனம் சொல்லுகிறது. இயேசுகிறிஸ்துவையல்லாமல் வேறே உதவி மத்தியஸ்தர்களும் இருக்கிறார்கள்; தேவமாதா, பரிசுத்தவான்கள், தேவதூதர்கள் நம்முடைய மத்தியஸ்தர்களாயிருக்கிறார்கள் என்று போதிக்கிறவர்கள் கள்ளப்போதகரே. நீங்கள் கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதும் அல்ல; இது பராபரனுடைய ஈவு; யாதொருவன் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளால் உண்டானதல்ல என்று வேதம் தெளிவாய்ச் சொல்லுகிறது (எபே. 2, 8. 9). இதற்கு விரோதமாய் நம்முடைய சொந்தக் கிரியையினாலும், புண்ணியத்தினாலும் இரட்சிப்பு அடையலாம், மோட்சம் போகலாம் என்று சொல்லுகிறவர்கள் கள்ளப்போதகர்கள்.

இவர்களுக்கும், இவர்களைப்போல் தப்பறையாய்ப் போதிக்கும் மற்ற எல்லாக் கள்ளப்போதகருக்கும் நாம் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். கள்ளத்தீர்க்கதரிசிகளுக்குக் குருமார் மாத்திரமல்ல, சபையாரும் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும். ஏனென்றால், குருமார் மாத்திரமல்ல, சபையாரும் தங்கள் விசுவாசத்தைக்குறித்துக் கணக்குக்கொடுக்கவேண்டியவர்கள். கள்ளத்தீர்க்கதரிசிகள் குருமாரிடத்தில் மாத்திரமல்ல, சபையாரிடத்திலும் வருகிறார்கள். அவர்கள் முக்கியமாய்ச் சபையாரிடத்திலேதான் வருகிறார்கள், சபையாரை ஏமாற்றுகிறது லேசென்று அவர்கள் நினைக்கிறபடியினாலே இப்படிச்செய்கிறார்கள். ஆகையால் இந்த எச்சரிப்பு நம்மெல்லாருக்கும் அவசியம்.

நாம் கள்ளப்போதகத்தை விலக்கிச் சுத்தபோதகத்தைக் கைக்கொள்ளுவது மிகவும் அவசியம். அது முந்தப் பராபரனுடைய மகிமையின் நிமித்தம் அவசியம். கள்ளப்போதகர்கள் உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக என்று வாயினால் சொன்னாலும், தாங்கள் பராபரனுடைய மகிமையைத் தேடுகிறவர்களென்று வெளிக்குக் காண்பித்தாலும், அவர்கள் தங்கள் சொந்த மகிமையைத் தேடுகிறார்கள். ரோமான் சபையின் தலைவனாகிய பாப்புவும் அவனைச் சேர்ந்த குருக்களும் தங்களை மற்றக் கிறிஸ்தவர்களுக்கு மேலாக உயர்த்தி, சொந்த மகிமையை

யும் சொந்த லாபத்தையும் தேடிவருகிறார்கள். அப்படியே லுத்தரன் சபையின் போதகத்தை விரோதிக்கும் மற்றப் பிரிவினைக்காரர்கள் தங்கள் சொந்தப் புத்தியைப்பராபரனுடைய வசனத்துக்குமேலாக வைப்பதினாலே அவர்களும் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கத் தங்களுடைய மகிமையைத் தேடுகிறார்கள். பராபரனோ நாம் நம்முடைய மகிமையை வேறொருவனுக்கும் கொடோம் என்கிறார். ஆகையால், பராபரனுடைய பிள்ளைகள் தங்கள் பரம தகப்பனின் மகிமையைத் தேடுவதும், அவருடைய மகிமைக்கு விரோதமான எல்லாவற்றையும் விலக்குவதும் அவசியம். ஆகையால், கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்களென்று ஆண்டவர் சொல்லுகிறார்.

மேலும், நம்முடைய ஆத்தும இரட்சிப்பின் நிமித்தம் இந்த எச்சரிப்பு நமக்கு அவசியம். கள்ளப் போதகத்தால் ஆத்துமாவுக்கு நஷ்டம் வருமென்பது நிச்சயம். ஒரு பாவி பராபரனுடைய கிருபையினாலே இயேசுவின் புண்ணியத்தைப் பற்றிக்கொள்ளும் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்படுகிறான் என்கிற போதகத்தை மாற்றி, நம்முடைய சொந்தக் கிரியையினாலும் இரட்சிக்கப்படலாம் என்கிற போதகம் எவ்வளவு மோசமானது. சாகும் நேரத்திலே ஒரு ஆத்துமா தன்னுடைய சொந்தப் புண்ணியத்தைக் கணக்குப் பார்க்கையில், அது எவ்வளவு குறைவுள்ளதென்று காணும். ஐயோ, எனக்குப் புண்ணியம் இல்லையே என்று அது நினைத்து, அவநம்பிக்கையில் அமிழ்ந்து போகுமல்லவா. இயேசுநாதர் பலி செலுத்தின சரீரத்தையும் இரத்தத்தையும் அல்ல, வெறும் அப்பத்தையும், இரசத்தையுமே பரிசுத்த இராப்போசனத்தில் வாங்குகிறேன் என்று நினைக்கிற ஆத்துமா அதினால் என்ன ஆறுதலை அடையக் கூடும். அது போலவே, ஒவ்வொரு கள்ளப் போதகமும் நம்முடைய ஆத்துமத்தின் ஆறுதலைக் கெடுத்து, அதைக் கொல்லும் நஞ்சாயிருக்கிறது. ஆகையால் கள்ளப் போதகருக்கும் போதகத்துக்கும் நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

கள்ளப் போதகர்கள் தந்திர முள்ளவர்களாயிருப்பதினால் நமக்கு விழிப்பும் எச்சரிப்பும் அவசியம். அவர்கள் போர்த்துக்கொண்டு வருகிறது ஆட்டுத் தோல். அவர்களுக்குள்ளிருக்கிறதோ ஓநாய்க் குணம். வெளியே கிறிஸ்து மார்க்கத்துக்கு ஒத்த வேஷமும், உள்ளேயோ கிறிஸ்து மார்க்கத்துக்கு அடாத குணமும் கள்ளப் போதகருக்கு உண்டு. ஆகையால், வேத புஸ்தகத்தைக் கையிலும், வேத வாக்கியங்களை வாயிலும், தேவபக்தியின் வேஷத்தை நடக்கையிலும் வைத்துக்கொண்டு வருகிற எல்லாரையும் மெய்ப் போதகரென்று நாம் நினைக்க மோசமுண்டு. நாமோ அப்படிப்பட்டவர்களுடைய வார்த்தைகளை



லேசாய் ஏற்றுக் கொள்ளுகிறது சரியல்ல. அவர்களுடைய போதகத்தை ஏற்றுக்கொள்ளுகிறவர்கள் அவர்களோடே நரகத்தில் தள்ளப்படுவார்கள். அவர்களைக் குறித்து நம்முடைய கர்த்தர் சொல்லுகிறதைக் கேளுங்கள். அந்த நாளில் அநேகம்பேர் என்னுடனே: ஆண்டவரே, ஆண்டவரே, உமது நாமத்திலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவோ, உமது நாமத்திலே பிசாசுகளைத் துரத்திவிட்டோம் அல்லவோ, உமது நாமத்திலே அநேகம் அற்புதங்களைச் செய்தோம் அல்லவோ என்பார்கள். அப்போது நான் உங்களை ஒருக்காலும் அறிந்தேன் இல்லை. அக்கிரமஞ் செய்கைக்காரரே, என்னை விட்டுப் போங்கள் என்று அவர்களுக்கு அறிக்கை பண்ணுவேன் என்கிறார்.

கள்ளத் தீர்க்கதரிசிகளும் சில நன்மை செய்திருக்கலாம். அவர்களால் சில அஞ்ஞானிகள் பிசாசின் இராச்சியத்தை விட்டுப் பராபரனுடைய இராச்சியத்தில் வருகிறதுண்டு. அவர்கள் ஜெபங்களினால் பல நன்மைகள் விளைவதும் உண்டு. ஆகிலும், அஞ்ஞானிகளுடைய குணப்படுதலும், வேறு பல நன்மைகளும், இந்தக் கள்ளப் போதகர் போதிக்கும் கள்ளப் போதகத்தால் உண்டாவதல்ல. அவர்கள் கள்ளப் போதகங்களோடு கூட சில சுத்த போதகங்களையும் கலந்து போதிக்கிறார்கள். அவர்கள் இயேசுநாதரையும் அவருடைய இரட்சிப்பையுங் குறித்துப் போதிக்கும் சுத்தப் போதகங்களே ஆத்துமாக்களைக் குணப்படுத்துவது, அவர்களை இரட்சிப்பது, அவர்களுக்கு நன்மை செய்வது. அவர்களுடைய கள்ளப் போதகங்களை முக்கியமாய் நம்பிச் சுத்த போதகங்களை விட்டுவிடுகிறவர்கள் இரட்சிக்கப்படுவதில்லை. ஆத்துமாக்களைக் கெடுத்துப்போடுகிற இந்தக் கள்ளப் போதகரின் பிரசங்கங்களையும், பிரயாசைகளையும், வேலைகளையும் கர்த்தர் புகழாமல், அவைகளை அக்கிரமச் செய்கையென்று தள்ளிப்போடுவார். ஆகையால் கள்ளப் போதகரோடு நாமும் கெட்டுப்போகாமல், தப்பித்துக்கொள்ள அவர்களுக்கு எச்சரிக்கையாயிருப்போமாக.

2.

கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்கிற புத்திமதியை நாம் எப்படி நிறைவேற்றலாம்.

அவர்களுடைய கனிகளினால் அவர்களை அறிவீர்களாக. முள்ளுச் செடிகளில் திராட்சப் பழங்களையும் முள்ளுப் பூண்டுகளில் அத்திப் பழங்களையும் அறுக்கிறார்களோ. அந்தப்படி நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும். ஆகாத மரமோ ஆகாத கனிகளைக் கொடுக்கும். நல்ல மரம் ஆகாத கனிகளைக் கொடுக்கக் கூடாது; ஆகாதமரம் நல்ல கனிகளைக்கொடுக்கவும் கூடாது. நல்லகனி கொடாதமரமெல்லாம் வெட்டப்பட்டு அக்கினியிலே போடப்படும். ஆனது கொண்டு அவர்கள்

கனிகளினாலே அவர்களை அறிவீர்களாக என்று கர்த்தர் சொல்லுகிறவார்த்தையை நாம் கவனிக்கவேண்டும். ஒரு மரத்தை அதன் கனியினால் அறியலாம். பேய்க்குமட்டியில் எலுமிச்சம்பழம் அறுக்கமுடியாது. எட்டிமரத்தில் மாங்காய் அகப்படாது. நாவுக்கு ருசியும் தேகத்துக்குச் சுகமுமான கனிகொடுக்கிற நல்ல மரங்களும் உண்டு. ருசிப்புக்கும் சுகத்துக்கும் உதவாத மரங்களும் உண்டு. அதுபோலவே சுத்தபோதகரும் உண்டு, கள்ளப்போதகரும் உண்டு. அவர்களைப் பகுத்தறியவேண்டும். அவர்களைப் பகுத்தறிவதற்கான முதல் அடையாளம் அவர்களுடைய போதகமே. பராபரனுடைய வசனத்துக்கு ஒத்த போதகம் மெய்ப்போதகம். பராபரனுடைய வசனத்துக்கு விரோதமான போதகம் கள்ளப்போதகம். நாம் கள்ளப்போதகருக்கு எச்சரிக்கையாயிருக்கவேண்டுமானால், பராபரனுடைய வசனத்தைக் கருத்தும் கவனமுமாய்ப் படிக்கவேண்டும். தேவவசனத்தைப் படிக்காதவர்கள் கள்ளப்போதகங்களை ஏற்றுக்கொள்வதும் கள்ளப்போதகரை நம்புவதும் வெகுலேசு. ரோமான் சபையைப் பாருங்கள், அந்தக் குருமார் சபையாருக்கு வேதபுஸ்தகத்தைக் காட்டாமல் மறைத்திருப்பதினாலே அந்தச் சபையில் வெகுவான கள்ளப்போதகங்கள் புகுந்திருக்கிறது. அந்தச் சபையாரும் அந்தப்போதகங்களைக் குருட்டுத்தனமாய் நம்புகிறார்கள். ஆகையால் அவர்களைப்போல் நாமும் மோசம்போகாதபடி, வீட்டில் கர்த்தருடைய வசனத்தை ஒழுங்காய் வாசிக்கவேண்டும். நம்முடைய கோயில் ஆராதனைகளுக்குத் தவறாமல் ஒழுங்காய்ப்போய், தேவவசனப்பிரசங்கத்தைக் கவனமாய்க்கேட்கவேண்டும். இதையல்லாமல், பராபரனுடைய வசனத்துக்கு ஒத்திருக்கிற நம்முடைய அறிக்கைப் புத்தகங்களைப் படிக்கவேண்டும். நம்முடைய அறிக்கைப் புத்தகங்களில் சுருக்கமும் லேசுமானது லுத்தர் ஞானோபதேசக்குறிப்பிடம். இதிலே நம்முடைய இரட்சிப்புக்கு வேண்டிய முக்கிய சத்தியங்களெல்லாம் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறது. இந்தப் புஸ்தகத்தை நாம் மனப்பாடமாய்ப் படித்து, ஞாபகத்தில் வைக்கிறது நல்லது. ஆகிலும், இதுமாத்திரம்போதாது. இந்தப்புஸ்தகத்தை விஸ்தரிக்கும் ஆராதனைகளுக்கு நாம் எப்பொழுதும் வரவேண்டும். நம்முடைய கோயில்களில் ஞாயிற்றுக்கிழமை அந்தி ஆராதனைகளிலே ஞானோபதேசம் விஸ்தரிக்கப்படும். அந்த நேரங்களில் நாம் கோயிலுக்கு வருவது மிகவும் அவசியம். ஞானோபதேச விஸ்தரிப்பினால் நம்முடைய சபையின் சுத்த போதகத்தையும், மற்ற சபைகளின் கள்ளப்போதகங்களையும் பகுத்தறியப்படித்துக் கொள்ளுவோம். ஆகிலும், அநேகர் இந்த அந்தி ஆராதனைகளுக்கு வருகிறதில்லை. இது மகா விசனமான காரியம். இனி நாம் தவறாமல் அந்தி ஆராதனைகளுக்கு வருவோமாக.



மேலும், கெட்ட நடக்கை கள்ளப் போதகரைக் காண்பிக்கும் மற்றொரு அடையாளம். வேப்பமரத்தில் வேப்பங்காய் காய்ப்பதுபோல், கள்ளப்போதகத்திலிருந்து கெட்டநடக்கையே வரும். பாப்பு மார்க்கம் பரம்பியிருக்கிற தேசங்கள் எல்லாம் இதற்குச்சாட்சி. கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்ற கற்பனையை நாம் வைராக்கியத்தோடே நிறைவேற்றவேண்டும். அப்படி நிறைவேற்றுவதற்கு வெறும் உதட்டுப்பேச்சு மாத்திரம் உதவாது. ஏனெனில், நம்முடைய இரட்சகர்: என்னுடனே ஆண்டவரே, ஆண்டவரே என்று சொல்லுகிற எவனும் அல்ல, பரமண்டலங்களிலிருக்கிற என் பிதாவின் சித்தத்தைச் செய்கிறவனே வான இராச்சியத்துக்குள் பிரவேசிப்பான் என்று சொல்லுகிறார். — நாம் இயேசுநாதரை நம்முடைய ஆண்டவர் என்று சொல்லுகிறது சரிதான், அவர் நம்முடைய ஆண்டவரே. ஆகிலும், வாயினாலே மாத்திரம் அப்படிச்சொல்லி, நடக்கையிலே வேறு விதமாய் இருப்பது சரியா. யூதா இஸ்காரியோத்து இயேசுநாதரை ரபீ என்று சொல்லி முத்தமிட்டான். ஆகிலும், அவனுடைய வார்த்தையும் அவனுடைய முத்தமும் மகா பெரிய அக்கிரமமாயிருந்ததல்லவா. அதினால் அவன் இயேசுவைக் காட்டிக்கொடுத்தான். சுத்த போதகத்தைப் போதிக்கிற சுவிசேஷ லுத்தரன் சபையின் அவயவங்களாகிய நாம் உதட்டுக் கிறிஸ்தவர்களாயிருப்பது ஆகாது. வெறும்வாய்ப் பேச்சினால் மனிதரை ஏமாற்றலாம். எல்லாம் அறிந்த பராபரனை ஏமாற்றலாமா. ஆகையால், நாம் வேஷ கிறிஸ்தவர்களாயிராமல், மெய்க் கிறிஸ்தவர்களாயிருக்கவேண்டும். நம்முடைய வார்த்தைகளுக்கும் போதகத்துக்கும் ஏற்றவண்ணம் நடக்கவேண்டும். பரமண்டலங்களிலிருக்கிற பராபரனுடைய சித்தத்தின்படி செய்கிற கிறிஸ்தவர்களே கர்த்தருக்குப் பிரியமானவர்கள். நம்முடைய பரம பிதாவின் சித்தம், நாமெல்லாரும் இயேசுவை விசுவாசித்து இரட்சிப்பு அடைய வேண்டுமென்பது. குமாரனைக் கண்டு அவர் பேரில் விசுவாசிக்கிறவனெல்லாம் நித்திய சீவனை அடைவதே என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது என்று கர்த்தர் சொல்லுகிறார் (யோவா. 6, 40). ஆகையால் நாம் நம்முடைய அருமை இரட்சகரை நம்முடைய முழு இருதயத்தோடும் விசுவாசிக்கவேண்டும். நாம் யாரை மறந்தாலும், இயேசுவை மறக்கக்கூடாது. யாரை விட்டுப்பிரிந்தாலும், இயேசுவை விட்டுப் பிரியக்கூடாது. நாம் உயிரோடிருக்கும் பொழுது அவருக்குள் பிழைக்கவேண்டும். நாம் சாகும் பொழுது அவருக்குள் சாகவேண்டும். மேலும், நாம் பரிசுத்தராக வேண்டும் என்பது நம்முடைய பரம தகப்பனின் சித்தம். நீங்கள் பரிசுத்தமாகிறதே பராபரனுடைய சித்தமாயிருக்கிறதென்று வே

தும் சொல்லுகிறது (க தெச. 4, 6). நம்முடைய பரமபிதா பரிசுத்தர், அவருடைய சித்தம் பரிசுத்தம், அவருடைய கற்பனைகள் பரிசுத்தம். அவருடைய பிள்ளைகளும் பரிசுத்தர்களாயிருக்கவேண்டும். சுத்தபோதகத்தினால் சுத்த விசுவாசம் உண்டாகும். சுத்த விசுவாசத்தினால் சுத்த நடக்கை உண்டாகும். சுத்த போதகத்தைக் கேட்டும், சுத்த போதகத்தைப் படித்தும், சுத்த நடக்கையில்லாதவர்கள் கர்த்தருடைய நாமத்தைத் தூஷணிக்கிறார்கள். அவர்களைக் கர்த்தர் அருவருக்கிறார். இப்பொழுது தங்கள் குருக்களோடு வாதாடி, துன்மார்க்கமாய் நடக்கிற இந்தப் பொய்க் கிறிஸ்தவர்கள் கடைசி நாளிலே கர்த்தரோடும் வாதாடி: ஆண்டவரே, நாங்கள் உம்முடைய நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றோமல்லவோ; உம்முடைய நாமத்தில் சுத்தபோதகத்தைப் போதிக்கும் லுத்தரன் சபையில் சேர்ந்திருந்தோம் அல்லவோ. உம்முடைய வசனத்தின்படியே அந்தச் சபையில் இராப்போசனம் வாங்கினோம்-அல்லவோ என்று சொல்லுவார்கள். சொன்னாலும், அவர்கள் சுத்தபோதகத்தைத் தங்கள் மனதில் விசுவாசியாமலும், அதற்கு ஒத்தபடியே பரிசுத்தமாய் நடக்காமலும் போனபடியினாலே: அக்கிரமச் செய்கைக்காரரே என்னை விட்டு அகன்றுபோங்கள் என்று கர்த்தர் சொல்லுவார். ஆகையால் நாம் நம்முடைய பரிசுத்த நடக்கையினாலே சுத்தபோதகத்திற்குச் சாட்சிகொடுக்கவேண்டும். [illegible] நடக்கை கள்ளப்போதகரைக் காட்டுவதுபோலே கள்ளக் கிறிஸ்தவர்களையும் காட்டுகிற அடையாளமாம். கர்த்தர் நம்மைக் கள்ளப்போதகம் என்ற பெரிய விக்கினத்துக்கும், வேஷ கிறிஸ்துமார்க்கத்திற்கும் விலக்கிக் காப்பாராக.

எங்கள் உத்தம போதகராகிய இயேசு ஐயரே, தேவரீர் எங்களை எல்லா விதக் கள்ளப்போதகத்திற்கும் விலக்கிக்காப்பாற்றிச் சுத்தப்போதகத்திலும் அதற்கேற்ற பரிசுத்த நடக்கையிலும் எங்களை நிலைத்திருக்கப்பண்ணும், சுவாமி, ஆமேன்.

---

## திரித்துவப் பண்டிகைக்குப் பிந்தின கூ-ம் ஞாயிறு.

லூக்கா 16, 1—9.

பிரியமானவர்களே,

வெளிச்சத்தின் பிள்ளைகளைப் பார்க்க இப்பிரபஞ்சத்தின் பிள்ளைகள் தங்களுடைய சந்ததிக்குப் புத்திமான்களாயிருக்கிறார்கள் என்று கர்த்தர் நமது சுவிசேஷ வாக்கியத்தில் சொல்லுகிறார். இயேசுநாதரை விசுவாசிக்கிறவர்கள் வெளிச்சத்தின்



பிள்ளைகள். உலக காரியங்களைத் தேடுவதிலே தங்கள் நேரத்தையும் புத்தியையும் கையாடுகிற அவிசுவாசிகள் இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள். பராபரனுடைய பிள்ளைகளாகிய கிறிஸ்தவர்கள் ஞான காரியங்களில் காண்பிக்கும் கவலையைப் பார்க்கிலும், உலக மக்கள் உலக காரியங்களில் காண்பிக்கிற கவலையும் புத்தியும் அதிகம். நம்முடைய வாக்கியத்தில் சொல்லியிருக்கிற அநீத உக்கிராணக்காரன் ஒரு பிரபஞ்சத்தின் மகன். தேனியானது வாசமும் அழகுமில்லாத பூவிலிருந்தும் தேன் எடுப்பது போல, பராபரனுடைய பிள்ளைகளாகிய நாம் உலகமக்களிடத்திலிருந்தும் பிரயோசனமான பல காரியங்களைக் கற்றுக்கொள்ளலாம். எறும்பினிடத்திலிருந்து சுறுசுறுப்பைக் கற்றுக்கொள்ள சாலொமோன் இராசா சோம்பேறிக்குப் புத்திசொல்லுகிறார். அநீத உக்கிராணக்காரனிடத்திலிருந்து பிரயோசனமான சில பாடங்களைப் படிக்க இயேசுநாதர் நமக்குப் புத்திசொல்லுகிறார்.

### அநீத உக்கிராணக்காரனிடத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ளத்தக்க காரியங்கள் என்ன.

1. நான் என்ன செய்வேன் என்கிற கவலை.
2. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ளும் புத்தி.

### 1.

நான் என்ன செய்வேன் என்கிற கவலை நாம் அநீத உக்கிராணக்காரனிடத்தில் கற்றுக்கொள்ளும் முதல் பாடம்.

ஐசுவரியவானான ஒரு மனுஷனுக்கு ஒரு உக்கிராணக்காரன் இருந்தான்; இவன் அவனுடைய ஆஸ்திகளை அழித்துப் போட்டவனாய் அவனுக்கு அறிவிக்கப்பட்டான் என்று இயேசுநாதர் சொல்லுகிறார்.—உக்கிராணக்காரன் என்றால் ஒரு கணக்கப்பிள்ளை. அவன் தன்னுடைய எஜமானின் வரவு செலவுகளை ஒப்புக்கொண்டு நடத்துகிறவன். தன் எஜமானுடைய நிலபுலங்களைக் குத்தகைக்கு விடவும், குத்தகைச் சீட்டுகளை எழுதவும், குத்தகைப்பணத்தை வாங்கவும் அதிகாரமுள்ளவன். ஆகிலும், அவன் தான் வாங்குகிற சொத்துக்களுக்குக் கணக்குக் கொடுக்க வேண்டியவன். அவன் அந்தச் சொத்துக்களைத் தன் மனம்போலே செலவழிக்காமல், எஜமானுடைய சித்தத்தின்படி செலவழிக்கவேண்டியவன். எஜமான் கேட்கிற எந்தக்காலத்திலும் வரவுக்கும் செலவுக்கும் உண்மையான கணக்குக்கொடுக்க வேண்டியவன். அவன் தன்னுடைய எஜமான் சொத்துக்களை அழிப்பதற்காக வைக்கப்படாமல், அவைகளைக் காப்பதற்கே வைக்கப் பட்டான். இப்படியிருக்க, அவன் தன்னுடைய எஜமான் சொத்துக்களைக் காபந்து பண்ணாமல், அவைகளை அநியாயமாய்ச்

செலவுபண்ணி, அவைகளை அழித்துப்போட்டான் என்று எஜமான் காதில் விழுந்தது. இந்த எஜமானைக்குறித்து நாம் கேட்கும்போது, நாம நமமுடைய பரம எஜமானாகிய பராபரனை நினைக்கவேண்டும். நமமுடைய பராபரனாகிய கர்த்தர் சர்வ பூமிக்கும் நமக்கும் எஜமான். பூமி அனைத்தும் அவருடைய பொருட்களால் நிறைந்திருக்கிறது. நம்மிடத்தில் பராபரன் ஒப்புவித்திருக்கிற பொருட்கள் கொஞ்சமல்ல. நம்முடைய சரீரமும் ஆத்துமாவும் அவர் கொடுத்தது. நமக்கு உள்ளது உரியது எல்லாம் அவர் கொடுத்தது. நமக்குள்ள வரங்கள், பெலன், சுகம், வீடுவாசல், ஆடு மாடு, பணம், வீட்டார் எல்லாம் பராபரன் நம்மிடத்தில் ஒப்புவித்த சொத்துக்கள். இவைகளை நாம் அவருடைய சித்தத்தின்படி கையாடுவது நம்முடைய வேலை. அவர் தம்முடைய வசனத்தில் நமக்கு வெளிப்படுத்தியிருக்கிற சித்தத்தின்படி, அவைகளை நாம் உபயோகிக்கவேண்டும். வேறு விதமாய் அவைகளை நாம் செலவழிக்க நியாயமில்லை. நாமோ பராபரன் நமக்குக் கொடுத்த ஈவுகளை அநியாயமாய்ச் செலவழிக்கும் அநீத உக்கிராணக்காரராயிருக்கிறோம். உக்கிராணக்காரருக்கு அவசியமான உண்மையென்கிற குணம் நம்மிடத்தில் வெகுவாய்க் குறைகிறது. நாம் நம்முடைய வ[illegible]த்தையும், பலத்தையும், நேரத்தையும், சொத்துக்களையும் பராபரனுடைய சித்தத்தின்படி கையாடுகிறதில்லை. அவைகளை நாம் அடிக்கடி பாவத்திலும், பொல்லாப்பிலும் உபயோகித்து அழிக்கிறோம். நாம் செய்கிற ஏராளமான பாவங்களைப் பார்த்தால், நம்மை அழிம்பரென்றே சொல்லவேண்டும். நாம் செய்கிற அநியாயங்கள் பராபரனுக்குத் தெரியும். நம்முடைய பாவங்கள் அவருடைய கண்களுக்கு முன்பாக எப்பொழுதும் இருக்கிறது. நம்முடைய ஒவ்வொரு பாவமும், ஒவ்வொரு அழிம்பும் நமக்கு விரோதமாகப் பராபரனிடத்தில் பேசுகிறது.

அந்த உக்கிராணக்காரனுடைய செய்தியை எஜமான் கேள்விப்பட்டபொழுது அவன் என்ன செய்தான். அவனை அழைத்து அவனுடனே: உன்பேரில் நான் இதைக் கேட்கிறதேது; உன் உக்கிராணக் கணக்கை ஒப்புவி, ஏனெனில் இனி நீ உக்கிராணக்காரனாயிருக்கக் கூடாது என்றான். — தன்னுடைய கணக்கப்பிள்ளை தன் சொத்துக்களை அழித்துப் போட்டானென்று கேள்விப்பட்டதனால் அந்த எஜமானுக்குக் கோபம் பிறந்தது. ஆகிலும், அவனை அந்த நிமிஷமே தள்ளிவிடாமல், அவன் தன் கணக்குகளை ஆயத்தம்பண்ணிக்கொண்டுவர அவனுக்குத் தவணை கொடுத்ததாகத் தோன்றுகிறது. இப்படியே நம்முடைய பரம எசமானும்: உன் உக்கிராணக் கணக்கை ஒப்புவி என்று நமக்குச் சொல்லுகிற சமயங்கள் உண்டு. ஒவ்வொரு நாளும்



பொழுதுபோகிற சமயம் எல்லாம்: உன் உக்கிராணக் கணக்கை ஒப்புவி என்கிற சத்தம் நமக்குப் பிறக்கிறது. ஒவ்வொரு இரவும் நமக்குக் கடைசி இரவாயிருக்கலாம் என்றும், நம்முடைய உக்கிராணக் கணக்கைப் பராபரன் நம்மைவிட்டு வாங்கிப்போகும் சமயம் அதுவாயிருக்கலாம் என்றும் நாம நினைக்கவேண்டும். நம்முடைய சபையிலாவது வீட்டிலாவது ஊரிலாவது உண்டாகிற ஒவ்வொரு வியாதியும் ஒவ்வொரு மரண சம்பவமும்: உன் உக்கிராணக் கணக்கை ஒப்புவி என்று சத்தமிடுகிறதில்லையா. சரியாய்ச் சொன்னால், நம்முடைய காதில் விழுகிற ஒவ்வொரு மணிச் சத்தமும்: உன் உக்கிராணக் கணக்கை ஒப்புவி என்று நமக்கு எச்சரிப்பு கூறுகிறது. பிரியமானவர்களே, இந்த எச்சரிப்பை நாம் கேட்கும்பொழுது நாம் என்னசெய்யவேண்டும். நாம் செய்யவேண்டிய காரியத்தை அநீத உக்கிராணக்காரனிடத்தில் கற்றுக்கொள்ளலாம். உக்கிராணக்காரனோவென்றால் தனக்குள்ளே சொல்லிக்கொண்டதாவது: என்னசெய்வேன், என் எசமான் உக்கிராண விசாரிப்பை என்னை விட்டு வாங்கிப் போடுகிறானே; கொத்துகிறதற்கு எனக்குப் பெலன் இல்லை, இரக்கவும் வெட்கப்படுகிறேன். நான் உக்கிராண விசாரிப்புக்குப் புறம்பாய்த் தள்ளப்படும்போது, என்னைத் தங்கள் வீடுகளில் ஏற்றுக்கொள்வார் உண்டாக, நான் செய்யவேண்டியது இன்னதென்று அறிவேன் என்று சொன்னான். தன்னுடைய உத்தியோகம் போனால், தனக்கு எவ்வளவு அவமானமும் வறுமையும் உண்டாகும் என்று அவனுக்குத் தெரிந்தது. அவன் அதைக் குறித்து ஏனோதானோவென்றிருக்கவில்லை. தனித்து ஒரு இடத்தில் உட்கார்ந்தான். என்னசெய்வேனென்று கவலைப்பட்டான். தனக்கு வரப்போகிற கெடுதியையும் அதற்குத் தப்பிப் பிழைக்கும் வழியையும் யோசித்துப் பார்த்தான். இதிலே அவன் நமக்கு நல்ல முன் மாதிரியானான். கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய பாவங்களை அடிக்கடி நினையாமல் போகிறோம். நம்முடைய பாவங்கள் எவ்வளவு கெடுதியைக்கொண்டு வரும் என்று நாம் யோசிக்கிறதில்லை. மரணத்தையும் வரப்போகிற நியாயத்தீர்ப்பையும் நாம் நினைக்கிறதில்லை. வியாதிப்படும்பொழுதே நம்முடைய சுகம் பெலன் முதலிய பலசொத்துக்களை நம்முடைய பரம எசமான் நம்மை விட்டு எடுத்துப்போடுகிறார். நம்முடைய மரண நேரத்திலோ எல்லாச் சொத்துக்களும் நம்மை விட்டு எடுக்கப்படும். நம்முடைய கண் இருண்டுபோம், நம்முடைய காது அடைபட்டுப்போம், நம்முடைய வாய் பேசாது, நமக்கு ஆறுதலான வேத புஸ்தகம் நம்மைவிட்டுப் பிடுங்கப்படும். நம்முடைய கையிலிருந்த ஆஸ்திபாஸ்தி எல்லாம் நம்மை விட்டுப்போம். நம்முடைய கையினால் ஒன்றும் செய்யமுடியாது. நம்முடைய ஆத்துமா

இந்த உலகத்தில் நடப்பித்த நன்மைக்கும் தீமைக்கும் கணக்கு சொல்லவேண்டும். அழிம்பர்களுக்கு அக்கினிக் கடலிலேதான் பங்கிருக்கும். இந்தப் பயங்கர சங்கதிகளை இப்பொழுதே நாம் நினைக்கிறது தகுதி. சாகும்போது நினைப்பதில் பிரயோசனமில்லை. பிலிப்பிப் பட்டணத்திலிருந்த சிறைச்சாலைக்காரன் பூமி அதிர்ச்சியையும் பல பயங்கர அடையாளங்களையும் கண்டபொழுது பயந்து நடுங்கினான். அவன் பயத்தினால் தன்னைக் கொன்றுகொள்ளப் போனான். ஆகிலும், சுவிசேஷப் பிரசங்கிகளாகிய பவுல் சீலா என்பவர்களின் சத்தத்தைக் கேட்டு, அவர்களைக் கண்டபொழுது: ஆண்டவமாரே, நான் இரட்சிக்கப்படுவதற்குச் செய்யவேண்டியதென்ன என்று கவலையோடு விசாரித்தான் (அப். 16, 30). இந்தக் கவலை முக்கியமான கவலை. சரீரப் பிழைப்புக்கு என்னசெய்வேன் என்று கவலைப்படுவதைப் பார்க்கிலும், என் ஆத்தும இரட்சிப்புக்கு என்னசெய்வேன் என்று கவலைப்படுவது அதிக முக்கியம். ஒருவன் தன் சரீரத்தைக் காப்பாற்றியும் தன் ஆத்துமத்தை இரட்சிக்காமல் கெட்டுப்போவானாகில், அது எவ்வளவு பயங்கரம். ஐசுவரியமுள்ள ஒரு மனுஷன் இருந்தான். அவனுடைய காணி பூமி நன்றாய் விளைந்தது. அவன் விளைச்சலைப் பார்த்தவுடனே விளையப்பண்ணினவரை மறந்தான். சரீரப் போசனத்தை நினைத்தானேயன்றி, தன் ஆத்தும இரட்சிப்பை நினைக்கவில்லை. அவன் தன் களஞ்சியங்களை யிடித்துப் பெரிதாய்க் கட்டவும் தன் தானியங்களை அவைகளில் சேர்த்து வைக்கவும் யோசனை பண்ணினான். அவன்: ஆத்துமமே, உனக்கு அநேகம் வருஷங்களுக்கு வெகு நல்ல வஸ்துக்கள் வைத்திருக்கிறது, இளைப்பாறு, புசி, குடி, பூரிப்பாய் இரு என்பேன் என்று சொன்னான். பராபரனோ அவனுடனே: மதியற்றவனே, இந்த இராத்திரியிலே உன் ஆத்துமம் உன்னிடத்தில் கேட்டு வாங்கப்படும், அப்போது நீ ஆயத்தம்பண்ணினதுகள் ஆருடையதாகும் என்றார் (லூக். 12, 16-20). இந்த ஐசுவரியவான் செய்தது போல நாம் செய்யக்கூடாது. நாம் அவனைப்போல் செய்வது மதியீனம். கர்த்தர் நமக்குக் கொடுக்கும் யாவையும் அவரை மறப்பதற்கு அல்ல, அவரை நினைத்து மகிமைப்படுத்துவதற்கு உபயோகிக்கவேண்டும். நம்முடைய ஆத்துமத்திற்காகக் கவலைப்பட்டு, நம்முடைய இரட்சிப்பைப் பயத்தோடும் நடுக்கத்தோடும் நடப்பிக்கவேண்டும். அப்படிச் செய்யாதவர்களின் முடிவு பயங்கரமாயிருக்கும். இதை நினைத்து, நாம் செய்யவேண்டியதைக் குறித்து இப்பொழுதே கவலைப்படுவோமாக.

2.

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளும் புத்தியை நாம் இந்த அநீத உக்கிராணக்காரனிடத்தில் கற்றுக்கொள்ளலாம்.



அந்த உக்கிராணக்காரன் தன் எசமானுக்குக் கடன்பட்டவர்களில் ஒவ்வொருவனை வரவழைத்து, முந்தினவனுடனே: நீ என் எசமானுக்குப்பட்ட கடன் எத்தனை என்றான். அவன்: நூறு குடம் எண்ணெய் என்றான். அப்போது அவனுடனே: நீ உன் சீட்டைவாங்கி உட்கார்ந்து ஐம்பது என்று சீக்கிரமாய் எழுது என்றான். பிறகு வேறொருவனோடே: நீயோ பட்டகடன் எத்தனை என்றான். அவன் நூறுகலம் கோதுமை என்றான். அப்போது அவனுடனே: நீ உன் சீட்டை வாங்கி, எண்பது என்று எழுது என்றான். அநீத உக்கிராணக்காரன் புத்தியாய்ச் செய்தானென்று எசமான் அவனைப் புகழ்ந்தானென்று கர்த்தர் சொல்லுகிறார்.

அந்த உக்கிராணக்காரன் தன் உத்தியோகம் போகுமுன்னமே, தான் இன்னம் உத்தியோகத்திலிருக்கும் சொற்பகாலத்துக்குள் தனக்கு ஆகவேண்டிய காரியத்தை முடித்துக்கொண்டான், உத்தியோகம் போனபின் அவனுக்குச் செல்வாக்கு இராது. ஆகையால் காற்றுள்ளபோதே தூற்றிக்கொள், கரும்புள்ளபோதே ஆட்டிக்கொள் என்று உலகத்தார் சொல்லுகிறார்கள். இது பராபரனுடைய பிள்ளைகளாகிய நாமும் கற்றுக்கொள்ளவேண்டிய பாடம். மரணம் வரும் முன்னமே நமக்கு ஆகவேண்டியதை முடித்துக்கொள்ளவேண்டும். இந்த நாளே கர்த்தர் நமக்குக் கிருபையாய்க் கொடுத்த நாள். இந்த நிமிஷமே, நமக்குச் சொந்த நிமிஷம். பராபரனுடைய வசனத்தைக் கேட்கிறதற்கான சமயம் இதுவே. குணப்படுகிறதற்கான வேளை இதுவே. சீக்கிரத்தில் நமக்கு முடிவு வரும். ஆகையால் நாம் துரிதப்படவேண்டும். காலத்தைத் தப்பாமல் பிடியுங்கள், ஏனெனில் நாட்கள் பொல்லாததாயிருக்கிறது என்று அப்போஸ்தலன் சொல்லுகிறார் (எபே. 5, 16).

அந்த உக்கிராணக்காரன் தன் எசமான் சொத்தைக் கொள்ளையடித்து, தனக்கும் தன் வீட்டாருக்கும் பிழைப்புக்கு வழி உண்டுபண்ணினான். அவன் போன வழி சரியல்ல. அவன் செய்தது, களவுசெய்யாதிருப்பாயாக என்ற கற்பனைக்கு விரோதம். புத்தியாய்ச் செய்தாலும், புத்தியீனமாய்ச் செய்தாலும், திருட்டு திருட்டுத்தான். ஆகிலும், அவனிடத்தில் பராபரனுடைய பிள்ளைகளாகிய நாம் திருட்டுத்தனத்தைக் கற்றுக்கொள்ளவேண்டியதில்லை. புத்திசாலித்தனத்தைக் கற்றுக்கொள்வோம். கர்த்தர் நம்மிடத்தில் ஒப்புவித்திருக்கும் அவருடைய ஈவுகளால் இப்பொழுதே நாம் செய்யவேண்டியதைச் செய்வோமாக. இப்பொழுதே நாம் குணப்படவேண்டும். இப்பொழுதே நாம் பாவமன்னிப்பைத் தேடவேண்டும். இப்பொழுதே நாம் இயேசுவை விசுவாசிக்கவேண்டும். இப்பொழுதே நாம் இரட்சிப்பைப் பற்

றிக்கொள்ளவேண்டும். நாளையத்தினம் நம்முடையதல்ல. இப்பொழுதே கர்த்தர் நமக்குச் சொல்லுகிற புத்திமதியைக் கவனித்து நடக்கவேண்டும். அவர் நம்முடைய வாக்கியத்தில் நமக்குச் சொல்லுகிற முக்கியமான புத்திமதியென்னவென்றால்: நானும் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் மாளும்போது உங்களை நித்திய கூடாரங்களில ஏற்றுக்கொள்வார் உண்டாக அநீத லோகப்பொருளால் உங்களுக்குச் சிநேகிதரைச் சம்பாதியுங்கள் என்பதே. நம்மிடத்தில் இருக்கும் உலகப் பொருள் எல்லாம் நம்முடையதல்ல. அது கர்த்தருடையது. உலகப்பொருள் கர்த்தர் கொடுத்ததாயிருந்தும், அது அநீத உலகப்பொருள் என்று சொல்லப்படும். ஏனென்றால் அது அடிக்கடி அநீதமானவிதமாய் வந்து சேருகிறது. நல்ல கிறிஸ்தவர்களுடைய சம்பாத்தியத்திலும் கொஞ்சமாவது பாவம் சம்பந்தப்பட்டிருக்கும். பாவ சம்பந்தமில்லாத பொருள் கிடையாது. நம்மோடு பாவம் ஒட்டிக்கொண்டிருக்கையில், நம்முடைய சம்பாத்தியத்தோடு அது ஒட்டாதிருக்குமா. இப்படியே, அது அநீத உலகப்பொருளாயிருந்தாலும், அதை அநீதமாய் நாம் கையாடுவது சரியல்ல. பெருந்தீனியிலும் வெறியிலும், விபசாரத்திலும் பெருமையிலும் தங்கள் பொருளைச் செலவழிக்கிறவர்கள் அநீதக்காரரே. இவ்விதமாய்த் தங்கள் பொருளைச் செலவழிக்காவிட்டாலும் அதை லோபித்தனமாய்ப் பத்திரம் பண்ணுகிறவர்களும் அநீதக்காரர்தான். கர்த்தர் நமக்குக் கொடுக்கும் பொருள் நல்லவழியில் செல்லவேண்டும். அதனால் நமக்குச் சிநேகிதரைச் சம்பாதிக்க வேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தருடைய இந்த வார்த்தையை அனுசரித்தே அப்போஸ்தலனும்: நமக்குக் காலம் இருக்கக்கொள்ள, யாவருக்கும், விசேஷமாக விசுவாசத்தின் வீட்டாருக்கும் நன்மை செய்யக்கடவோம் என்று புத்திசொல்லுகிறார் (கலா. 6, 10). நாம் உலகப்பொருளால் மோட்சத்தைச் சம்பாதிக்க முடியாது. அது பராபரனுடைய கிருபையினால் கிறிஸ்துவின் நிமித்தம் நமக்குக் கொடுக்கப்படும். ஆகிலும், நாம் உலகப்பொருட்களால் சிநேகிதரைச் சம்பாதிக்கலாம். நம்முடைய சபையில் உள்ள ஏழைகளுக்கு நாம் நன்மை செய்வதால், அவர்கள் நமக்குச் சிநேகிதராகிறார்கள். அவர்கள் விசுவாசமுள்ளவர்களாய் மரித்து மோட்சம் போனபின், நாமும் மரித்து அங்கே போய்ச் சேருவோம். அவர்கள் நித்திய கூடாரங்களாகிய மோட்சத்தில் நம்மைச் சந்திக்கும்பொழுது மிகுதியும் சந்தோஷித்து, நம்மைச் சிநேகிதர்களாய் மதித்து, நம்மை ஏற்றுக்கொள்ளுவார்கள். அப்படியே, நாம் வியாதியஸ்தர்களுக்கும் பலவிதமான சங்கடங்களில் அகப்பட்டவர்களுக்கும் உலகப்பொருளால் நன்மை செய்யலாம். இப்படி நன்மை பெற்றவர்களும் நம்மை மோட்ச



லோகத்தில் சிநேகிதராய் அங்கிகரிப்பார்கள். இவர்களுக்கு நாம் செய்த சிநேகக் கிரியைகளை இயேசுநாதர் தமக்குச் செய்ததாகக் கடைசி நாளில் யாவரும் அறியச் சொல்லிக்காட்டுவார். விசுவாசமுள்ள ஏழைகளுக்கு நாம் செய்வது வீண் போகாது.

மேலும், கர்த்தர் நமக்குக் கொடுக்கும் உலகப்பொருளால் நாம் விசுவாசம் இல்லாத உலகத்துக்கு நன்மை செய்து நமக்குச் சிநேகிதரைச் சம்பாதிக்கலாம். நம்முடைய தேசத்திலும் உலகத்தின் பல தேசங்களிலும் எவ்வளவு அஞ்ஞானிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு நம்முடைய செலவில் பிரசங்கிகளை அனுப்பி அவர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தால், எவ்வளவு பிரயோசனமுண்டாகும். ஐரோப்பாவில் உள்ள கிறிஸ்தவர்கள் தங்கள் சொந்தச் செலவிலே ஐயர்மாரை நம்மிடம் அனுப்பி, நம்முடைய முழுமிசியோனையும் தங்கள் செலவிலே ஆதரித்து நடத்திவருகிறார்கள். இதனால் எத்தனை பேர் பராபரனுடைய பிள்ளைகளானார்கள். மோட்சராச்சியத்திலே சகல கிறிஸ்தவர்களும் ஒன்றாய்க்கூடி ஒருவரையொருவர் சந்திக்கும்பொழுது எவ்வளவு ஆநந்தமாயிருக்கும். அநேகர் இப்பொழுது ஒருவரையொருவர் அறியாதிருந்தும், அப்பொழுது ஒருவரையொருவர் அறிந்த சிநேகிதர்களாய் விளங்குவார்கள். மிசியோன் கிரியையினால் குணப்பட்டு விசுவாசிகளான கிறிஸ்தவர்கள் மிசியோன் செலவுக்குப் பணங்கொடுத்த உபகாரிகளை மோட்சத்தில் தங்கள் உத்தம சிநேகிதர்கள் என்று சொல்லி, அவர்களை நித்திய கூடாரங்களில் சந்தித்து மகிழுவார்கள்.

பிரியமானவர்களே, நாம் நம்முடைய உலகப்பொருளால் சிநேகிதரைச் சம்பாதித்திருக்கிறோமா. நாம் யாருக்கு நன்மை செய்திருக்கிறோம். நாம் நம்முடைய பரம பிதாவின் மகிமைக்கென்றும், அவருடைய பிள்ளைகளின் நன்மைக்கென்றும், இம்மட்டும் செலவிட்டிருப்பது எம்மாத்திரம். இப்படி நம்மைச் சோதித்துப்பார்ப்பகினால், நம்முடைய குறைவு நமக்கு விளங்கும். நாம் இப்பொழுதே நம்முடைய குறைவுகளைக் கர்த்தருக்கு அறிக்கையிட்டு, இயேசுவை முன்னிட்டு மன்னிப்புக் கேட்போமாக.

அன்புள்ள இயேசுவே, நாங்கள் வெளிச்சத்தின் பிள்ளைகளாயிருந்து, எங்கள் இரட்சிப்பை இப்பொழுதே பயத்தோடும் நடுக்கத்தோடும் நடப்பிக்கவும், உமக்கு உகந்தபடி யாவருக்கும் நன்மை செய்கிறவர்களாயிருக்கவும் எங்களுக்குத் துணை செய்தருளும், சுவாமி, ஆமென்.

# திரித்துவப் பண்டிகைக்குப் பிந்தின ௰-ம் ஞாயிறு.

லூக்கா 16, 41—48.

பிரியமானவர்களே,

எருசலேம் இசைவிணைப்பான பட்டணமாகக் கட்டப்பட்டிருக்கிறது. அங்கே இஸ்ரவேலுக்குச் சாட்சியாக கர்த்தருடைய கோத்திரங்களாகிற கோத்திரங்கள் கர்த்தரின் நாமத்தை ஸ்தோத்திரிப்பதற்குப் போய் ஏறும் என்று இஸ்ரவேலர் எருசலேமைப்பற்றிப் பாட்டுப்பாடினார்கள் (சங். 122). அந்த மகிமையான பட்டணத்தை இயேசுநாதர் பார்த்து அழுத செய்தி நம்முடைய சுவிசேஷவாக்கியத்தில் சொல்லியிருக்கிறது. இந்தச் சங்கதி இரட்சகர் ஒரு கழுதை மேல் ஏறி எருசலேமுக்குள் பிரவேசித்த சமயத்தில் நடந்தது. அவர் தமக்கு எதிரே நின்ற எருசலேம் தெய்வாலயத்தையும்; அந்தப் பட்டணத்திலிருந்த அலங்காரமான மாடமாளிகைகளையும் கூடகோபுரங்களையும் பார்த்தபொழுது அதற்கு வரப்போகிற அழிவை நினைத்துக் கண்ணீர் விட்டார். அதற்குச் சம்பவிக்கப்போகிற பரிதாபமான முடிவை முன்னறிவித்தார். இரட்சகர் முன்னறிவித்தது கி. பி. 70 ஆறு தவறாமல் நிறைவேறிற்று. அந்த வருஷம் ஆகஸ்டு மீ 10-ம் உ எருசலேம் பட்டணம் ரோமரால் பயங்கரமாய் அழிக்கப்பட்டது. நமக்கும் பயங்கர அழிவும் நியாயத்தீர்ப்பும் வராதபடிக்கு நாம் இன்று சுவிசேஷவாக்கியத்தினால் எச்சரிப்படைந்து குணப்படுவோமாக.

**நாம் குணப்படும்படி இன்று நம்முடைய இரட்சகரிடத்தில் பார்க்கும் மூன்று காரியங்களைக் கவனிப்போம்.**

1. **இயேசுவின் சிநேகக் கண்ணீரையும்,**
2. **அவருடைய எச்சரிப்பு வார்த்தையையும்,**
3. **அவருடைய வைராக்கியச் செய்கையையுந்தானே.**

## 1.

நாம் குணப்பட்டு அழிவுக்குத் தப்பும்படி கிறிஸ்துவினுடைய சிநேகக் கண்ணீரைக் கவனிப்போமாக.

அவர் சமீபித்தபோது பட்டணத்தைப் பார்த்து, அதின்மேல் அழுதார் என்று நம்முடைய வாக்கியம் சொல்லுகிறது. இயேசுநாதர் எருசலேம் பட்டணத்திற்குள் கடைசி விசையாய்ப் பிரவேசிக்கையில் அவர் அழுதார். ஜனங்கள் எல்லாரும் அவரை மேசியாவாய் அங்கீகரித்து: தாவீதின் குமாரனுக்கு ஓசியன்னா, கர்த்தருடைய நாமத்தில் வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவரென்று பாடி அவரை மகிமைப்படுத்துகையில், அவர்



அழுதார். எருசலேம் பட்டணத்தில் தமக்கு வரப்போகிற பாடுகளை நினைத்து, அவைகளைச் சகிக்க மனதில்லாமல் அழுதாரோ. அல்ல, அல்ல. அவர் சகல பாடுகளையும் உற்சாகமாய்ப் படப்போகிறார். சந்தோஷத்தினால் அழுகிறதும் உண்டு. இரட்சகர் இங்கே அழுதது சந்தோஷத்தினாலும் அல்ல. இப்பொழுது ஓசியன்னா பாடின சனங்களில் அநேகர் சில நாட்களுக்குப்பின் அவரைத் தூஷித்து: சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும் என்று பொங்கியுப் பிலாத்துவை நோக்கிக் கூப்பிடப்போகிறது அவருக்கு நன்றாய்த் தெரியும். பின்னை அவர் அழுதது ஏன். எருசலேம் பட்டணத்துக்காகப் பரிதபிக்கும்படி அவரை ஏவின அவருடைய சிநேகமே அதற்குக் காரணம். இரட்சகர் மகா உருக்க இரக்கமுள்ளவர். அவருடைய மனசு மிகுந்த சிநேகத்தினால் நிறைந்தது. ஒருநாள் அவர் லாசருவின் கல்லறையண்டை அழுதார். அவருடைய கண்ணீர், லாசருவை அவர் சிநேகித்த சிநேகத்துக்கு அத்தாட்சியாயிருந்தது. ஏனெனில் அவர் அழுததைப் பார்த்த யூதர்: இதோ, அவர் அவனை எத்தனையாய்ச் சிநேகித்தார் என்றார்கள். அந்தச் சமயத்தில் லாசருவின் சரீர மரணத்துக்காக அழுதார். இந்தச் சமயத்திலோ எருசலேம் பட்டணத்தின் ஆத்தும மரணத்துக்காக அழுகிறார். ஆத்துமாக்கள் பாவத்தில் நிலைத்துப் பராபரனை விட்டுப் பிரிந்திருப்பதே ஆத்தும மரணம். எருசலேம் பட்டணத்தார் தங்களைக் கர்த்தருடைய சனம் என்று சொல்லியும், கர்த்தருடைய தெய்வாலயத்தில் ஆராதனை செய்தும், தங்கள் இருதயத்திலே குணப்படாமலும் பராபரனோடே ஐக்கியமாயிராமலும் போனதால், இரட்சகர் அவர்களுக்காக விசனப்பட்டார். அவர் மூன்று வருஷமாய்த் தம்முடைய சனத்தின் நடுவே தங்கி, அவர்களுக்கும், முக்கியமாய் இந்த எருசலேம் பட்டணத்தாருக்கும் வெகுவான புத்திமதிகளைச் சொன்னார். அவர்களைக் குணப்படுதலுக்கு ஏவினார். அவர்கள் மாயத்தையும் வேஷத்தையும் விட்டுப்போட்டு, பராபரனை ஆவியிலும் உண்மையிலும் ஆராதிக்கப் புத்திசொன்னார். பராபரனுடைய குமாரனாகிய தம்மை விசுவாசிக்கும்படிக்கு அவர்களுக்குத் தெரிவிக்கவேண்டியதையெல்லாம் தெரிவித்தார். அவர்கள் நடுவே தம்மைக் கிறிஸ்துவென்று ரூபிப்பதற்குச் செய்யவேண்டியதையெல்லாம் செய்தார். அவர்களோ அவரை முழுவதும் அசட்டைபண்ணி, அவருடைய அன்பான அழைப்புக்கு இடங்கொடாமல், விலகிப்போனார்கள். ஆகையால் அவர் மகா விசனமாகிச் சொன்னதாவது: தீர்க்கதரிசிகளைக் கொன்று, உன்னண்டைக்கு அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிற எருசலேமே, எருசலேமே, கோழி தன் குஞ்சுகளைக் கூட்டிச் சேர்க்கும் வண்ணமாக நான் எத்தனை தரம் உன் பிள்ளைகளைக் கூட்டிச்

சேர்க்கவேண்டுமென்றிருந்தேன்; ஆனால் மாட்டோம் என்றீர்கள் என்று புலம்பினார் (மத். 23, 37). ஆகையால் எருசலேம் பட்டணத்தார் பாவங்களையும் அக்கிரமங்களையும் நடப்பித்து, குணப்படாமையில் நிலைத்து, பராபரனுடைய கோபத்தைத் தங்கள்மேல் சுமத்திக்கொண்டதினால், இரட்சகர் அவர்கள் நிமித்தம் மகா விசனமானார். செத்துப்போய்க் கிடக்கும் தன் பிள்ளைக்காக ஒரு தாயினுடைய குடல்கள் எவ்வளவாகப் பரிதபிக்கும். அதிலும் அதிகமாய் இரட்சகருடைய குடல்கள் எருசலேம் பட்டணத்தாருக்காகப் பரிதபித்தன.

இப்பொழுது நம்முடைய இரட்சகர் அழவேண்டிய நிலைமையில் இல்லை. அவர் மகிமையடைந்து பராபரனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். ஆகிலும், முன்னிருந்த சிநேகமும் உருக்க இரக்கமும் இப்பொழுது அவருக்குக் குறைந்திருக்கிறதில்லை. நம்மில் யாரார் பாவத்தில் நிலைத்திருக்கிறார்களோ, யாரார் குணப்படாதிருக்கிறார்களோ, யாரார் பராபரனுடைய கோபத்தைத் தங்கள்மேல் சுமத்திக்கொண்டார்களோ, அவர்களுக்காக இரட்சகர் பரிதபிக்கிறார். நம்மில் குணப்படாதவர்களுக்காகக் கர்த்தருடைய ஊழியக்காரர்கள் கண்ணீர் விடுகிறார்கள். நாமெல்லாரும் இதை நினைத்து, நம்முடைய பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, கண்ணீர் விடுவது நியாயம். கர்த்தருடைய ஊழியக்காரரின் கண்ணீரைக் கவனியாமல், அவர்களுடைய புத்திமதியை அசட்டை செய்கிறவர்கள் எருசலேம் பட்டணத்தாரைப் பார்க்கிலும் பயங்கரமான நிலைமைக்கு வருவார்கள். அவர்கள் நரகத்திலே முடிவில்லாமல் அழுது புலம்புவார்கள்.

## 2.

நாம் குணப்பட்டு, வரப்போகிற அழிவுக்குத் தப்பும்படி கிறிஸ்து எருசலேமுக்குச் சொன்ன எச்சரிப்பு வார்த்தைகளைக் கேட்போமாக.

நீயும் இந்த உன்னுடைய நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கானதுகளை அறிந்தால் தாவிளை; இப்போதோவெனில் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது. அதேனென்றால், உன்னைச் சந்திக்கும் காலத்தை நீ அறியாமல்போனபடியினாலே, உன் சத்துருக்கள், உன்னைச் சூழத் தெற்றுப்போட்டு, உன்னை வளைந்துகொண்டு, எங்கும் உன்னை இறுகப்பிடித்து, உன்னையும் உன்னிலிருக்கிற உன் பிள்ளைகளையும் தரையாக்கிப்போட்டு, உன்னில் கல்லின்மேல் கல்லை வைக்காதிருக்கும் நாட்கள் உன்மேல் வரும் என்றார். — எருசலேம் பட்டணத்தார் தங்கள் சமாதானத்துக்கானவைகளை அறிந்து தேடிக்கொள்வதற்குக் கர்த்தர் அவர்களுக்குத் தவணைகொடுத்தார். நம்முடைய இரட்சகர் இந்தப் பூமியில்



சஞ்சரித்து, யூதர்கள் நடுவே போதகம் பண்ணிக்கொண்டிருந்த காலமே அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தவணை. பராபரன் கிருபையாய்க் கொடுத்த அந்தக் காலத்திலே அவர்கள் தங்கள் சமாதானத்துக்கானவைகளைத் தேடியிருக்கவேண்டும். குணப்பட்டுக் கிறிஸ்துவை விசுவாசிப்பதே சமாதானத்துக்கான முக்கிய காரியம். கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் பாவமன்னிப்பைப் பெற்று, பராபரனோடு சமாதானமாகிறார்கள். நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டபடியினாலே, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய்ப் பராபரனிடத்திலே சமாதானம் பெற்றிருக்கிறோம் என்று அப்போஸ்தலன் சொல்லுகிறார் (ரோம. 5, 1). நம்முடைய இரட்சகர் சமாதானப் பிரபு. நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் இறங்கிற்று. அவர் நமக்குச் சமாதானத்தைச் சம்பாதித்தார். அவரை அல்லாமல் பாவிக்குச் சமாதானம் இல்லை. எருசலேம் பட்டணத்தாரோ தங்களை நீதிமான்களென்று நினைத்து, குணப்படாதேபோனார்கள். இயேசுவைத் தங்கள் மேசியாவென்று அவர்கள் நம்பவில்லை. அவரைத் தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டு விசுவாசிக்கப் பிரியமில்லாதிருந்தார்கள். ஆகையினாலே அவர்கள் தங்களை அழிவுக்குப் பக்குவப்படுத்திக்கொண்டார்கள். அவர்களுடைய பெருமையும் அகந்தையும் அவர்களுடைய கண்களைக் குருடாக்கினதினால், அவர்கள் தங்களைச் சரியாய்ப் பார்க்கவில்லை. தங்கள் இரட்சகரையும் அவர்கள் பார்க்கவில்லை. தங்களுக்கு வரப்போகிற அழிவையும் அவர்கள் பாராதேபோனார்கள். கிறிஸ்து அவர்களைக் கிருபையாய்ச் சந்தித்து, அவர்களுக்குச் சொன்ன அருமையான புத்திமதிகளை அவர்கள் கேளாமல் போனபடியினாலே, கர்த்தர் அவர்களை நீதியாகவும் கோபமாகவும் சந்திக்கிற ஒரு காலத்தைக் குறித்தார். அந்தக் காலத்தில் நடக்கப்போகிற பயங்கரமான அழிவை அவர்களுக்கு இங்கே எச்சரிப்பாய்த் தெரிவிக்கிறார். அவர் தெரிவித்தபடியே ஒன்றும் தவறாமல் நாற்பது வருஷங்களுக்குப் பின் நிறைவேறிற்று. அப்பொழுது யூதர்களுடைய சத்துருக்களாகிய ரோமர் எருசலேம் பட்டணத்தைச் சுற்றிலும் அடைப்புகளைக் கட்டி, அவைகளில் பதிவிருந்து அதை முற்றிக்கை போட்டார்கள். அப்பொழுது உள்ளேயிருந்த யூதர் ஏராளம். அது பஸ்காப்பண்டிகைக் காலமாயிருந்ததினால் பல திசைகளிலுமிருந்து வந்த லட்சக்கணக்கான யூதர்கள் பட்டணத்துக்குள் புகுந்துகொண்டிருந்தார்கள். ரோம சேவகர் அந்தப் பட்டணத்தைச் சுற்றிலும் காவல் காத்திருந்தபடியால், பட்டணத்துக்குள்ளிருந்து ஒருவரும் வெளியே போகக்கூடாமலும், வெளியேயிருந்து உள்ளே பட்டணத்துக்குள் போசனபதார்த்தங்கள் வரக்கூடாமலும் போயிற்று.

அதனால் பட்டணத்துக்குள் கொடுமையான பஞ்சம் உண்டாயிற்று. பசியினால் அநேகர் தின்னக்கூடாத பதார்த்தங்களையும் தின்றார்கள். ஒரு தாயானவள் தன் பிள்ளையை அறுத்துச் சமைத்துத் தின்றாள். பஞ்சக் கொடுமையோடு கொள்ளைநோயும் கூடிக்கொண்டது. ஆயிரம் ஆயிரமான ஜனங்கள் செத்துப்போனார்கள். அவர்களை அடக்கம் பண்ண முடியாமையால் எருசலேம் பட்டணத்தின் தெருக்கள் எல்லாம் பிணக்காடாயிருந்தது. தீத்து என்ற ரோம சேனாபதி எருசலேம் பட்டணத்தின் அலங்கத்தை இடித்து, தன் சேனைகளோடே பட்டணத்துக்குள் பிரவேசித்தான். அப்பொழுது அந்தப் பட்டணத்தில் நடந்த உயிர்ச்சேதம் கொஞ்சமல்ல. உயிரோடிருந்த மீதியானவர்களை அவன் சிறைப்படுத்தி, கைகால் விலங்கிட்டுக் கொண்டுபோனான். தேவாலயத்தில் உள்ள பொன், வெள்ளி சாமான்களை எல்லாம் கொள்ளையடித்தான். தெய்வாலயத்தை ரோம சேவகர்கள் அக்கினிக்கு இரையாக்கினார்கள். பட்டணத்தையோ இடித்துக் கலப்பையினாலே உழுது, கல்லின்மேல் கல் இராதபடி செய்தார்கள். அப்பொழுது: உன்னில் கல்லின்மேல் கல்லை வைக்காதிருக்கும் நாட்கள் வரும் என்று கிறிஸ்து சொன்ன வார்த்தை நிறைவேறிற்று.

இரட்சகர் எருசலேம் பட்டணத்தைப் பற்றிச் சொன்ன வார்த்தைகள் நமக்கு எச்சரிப்பாயிருப்பதாக. கிறிஸ்தவர்களாகிய நாம் எருசலேம் பட்டணத்தாரைப் பார்க்கிலும் நல்லவர்கள் அல்லவே. அவர்களுக்குக் கிடைத்த சிலாக்கியங்களைப் பார்க்கிலும் நமக்குள்ள சிலாக்கியங்கள் குறைவா. நம்மிடத்தில் பராபரனுடைய வசனம் எவ்வளவு தாராளமாய்ப் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது. நாம் நம்முடைய சொந்தப் பாஷையில் கர்த்தருடைய சுவிசேஷ வசனத்தைக் கேட்கிறோம். குணப்படுங்கள், இயேசு கிறிஸ்துவை விசுவாசியுங்கள் என்கிற சப்தம் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் ஒவ்வொரு பண்டிகை நாளிலும் இந்தக் கோயிலில் தொனிக்கிறது, நம்முடைய கோயில்களில் எல்லாம் தொனிக்கிறது. கர்த்தருடைய சத்தத்தை நாம் காதாரக் கேட்கிறோம். கேட்டும், நாம் நம்முடைய சமாதானத்துக்கானதுகளை அறியாமலும் தேடாமலுமிருப்பது எவ்வளவு பரிதாபம். கர்த்தர் நம்மைக் கிருபையாய்ச் சந்திக்கும் காலம் இது. இந்தக் காலத்தை நாம் கவனியாமல்போனால், கர்த்தருடைய கோபம் வெளியாகும் காலம் வரும். தேவகிருபையை அசட்டை செய்கிறவர்கள்மேல் தேவகோபம் பற்றி எரியும். அது பயங்கரமாயிருக்கும். சோதோம், கொமோரா என்ற பட்டணங்கள் பாவத்திலும் அக்கிரமத்திலும் நிலைத்திருந்தபடியால், அக்கினியினாலும் கெந்தகத்தினாலும் அழிந்த சரித்திரம் நமக்குத் தெரியுமே. ஆகையால்



இன்றைக்கே நாம் குணப்பட்டு, இயேசு இரட்சகரை உண்மையாய் விசுவாசித்து, நம்முடைய சமாதானத்துக்கானவைகளைத் தேடிக்கொள்ளக்கடவோம்.

## 3.

நாம் குணப்பட்டு அழிவுக்குத் தப்பும்படி கிறிஸ்து எருசலேம் தெய்வாலயத்தில் செய்த வைராக்கிய செய்கையைக் கவனிப்போமாக.

அவர் தெய்வாலயத்துக்குள் பிரவேசித்து, அதிலே விற்கிறவர்களையும் கொள்ளுகிறவர்களையும் புறம்பே துரத்தத்தொடங்கி, அவர்களுடனே: நம்முடைய வீடு செபத்தின் வீடாயிருக்கிறது என்று எழுதியிருக்கிறது; ஆனால் நீங்கள் அதைக் கள்ளர் கெபியாக்கினீர்கள் என்றார்.-தெய்வாலயத்திலே ஆடுமாடுகள் பலியிடப்பட்டன. புறாக்களும் புறாக் குஞ்சுகளும் பலியிடப்பட்டன. பணங்களையும் காசுகளையும் காணிக்கையாய்ச் செலுத்தினார்கள். இதற்காக அநேக வியாபாரிகள் எருசலேம் தெய்வாலயத்துப் பிராகாரங்களிலே கடைவைத்து, ஆடுமாடுகளையும் புறாக்களையும் விற்றார்கள். பணங்களுக்குச் சில்லறைகொடுத்தார்கள். இப்படிப்பட்ட வியாபாரத்தினால் தெய்வாலயத்திற்கும் அதில் வேலைசெய்தவர்களுக்கும் லாபம் வந்தது மெய்தான். என்றாலும், இதற்குத் தெய்வாலயத்தில் இடங்கொடுத்தது சரியல்ல. யூதவியாபாரிகள் தெய்வாலயத்தின் நன்மையையும் லாபத்தையும் நோக்கினவர்கள் அல்ல. அவர்கள் தங்கள் சுய லாபத்தை மாத்திரம் தேடினார்கள். இந்த லாபத்திற்காகப் பொய்சொன்னார்கள். சனங்களை வஞ்சித்தார்கள். சனங்களுடைய காசுகளைத் திருடிக்கொண்டார்கள். இது இரட்சகருக்கு நன்றாய்த் தெரிந்ததால், அதைச் சகிக்கமாட்டாமல், தம்முடைய பக்தி வைராக்கியத்தை இந்தச் சமயத்தில் காண்பித்தார். அவர் முன்னொரு முறை, மூன்று வருஷங்களுக்கு முன்னமே, கயிறுகளால் சவுக்குப் பின்னி வைத்துக்கொண்டு, தெய்வாலயத்தில் விற்கிறவர்களையும் கொள்ளுகிறவர்களையும் துரத்தினார். அப்பொழுது அவர்: இவைகளை இவ்விடம் விட்டு எடுத்துப்போங்கள்; என் பிதாவினுடைய வீட்டை வியாபார வீடாக்காதேயுங்கள் என்று சொன்னார் (யோவா. 2. 16). இந்தச் சமயத்திலோ அவர்களுடைய கேடும் அக்கிரமமும் அதிகரித்துப்போனதால்: நீங்கள் அதைக் கள்ளர் கெபியாக்கினீர்கள் என்றார். இயேசு இரட்சகர் மகா சாந்தமுள்ள ஆட்டுக்குட்டியாயிருந்தும், தம்முடைய பிதாவின் வீட்டுக்கான பக்தி வைராக்கியம் கொள்ளும்பொழுது அவருடைய கோபம் பற்றி எரிகிறது. இயேசு இரட்சகர் பாவிகளைச் சிநேகிக்கிறவராயிருந்தும், பாவத்

தைச் சிநேகிக்கமாட்டார். அவர் தம்முடைய பிதாவின் வீட்டில் செய்யப்படும் அக்கிரமங்களை வைராக்கியத்தோடே கண்டிக்கிறார்.

நம்முடைய காலத்திலும் தெய்வாலயத்தில் வியாபாரம் நடக்கிறதென்று சொல்லவேண்டும். ஒவ்வொரு கிறிஸ்தவனும் தெய்வாலயமாயிருக்கிறான். நீங்கள் பராபரனுடைய தெய்வாலயமாயிருக்கிறீர்கள் என்றும், பராபரனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியீர்களோ என்று அப்போஸ்தலன் கேட்கிறார் (க கொரி. 3, 16). எந்தக் கிறிஸ்தவனுடைய இருதயத்தில் பொருளாசையும் வஞ்சகமும் குடிகொண்டிருக்கிறதோ, அங்கே வியாபாரம் நடக்கிறது, தெய்வாலயம் தீட்டுப்படுகிறது. அப்படித் தெய்வாலயத்தைத் தீட்டுப்படுத்துகிறது கர்த்தருக்கு மகா விசனம். அதைத் தீட்டுப்படுத்துகிறவர்களைக் கர்த்தர் வைராக்கியமாய்க் கடிந்துகொள்ளுகிறார். ஆகையால்: பராபரனே என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும்; நீர் என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொண்டு, என்னில் வேதனை உண்டாக்கும் வழி உண்டோ என்று பார்த்து, என்னை நித்திய வழியிலே நடத்தும் என்று இப்பொழுதே கெஞ்சிக் கேட்போமாக (சங். 139, 23. 24)

நம்முடைய கோயில் தெய்வாலயமாயிருக்கிறது. அது ஜெபம் நடக்கவேண்டிய இடம். அதில் வியாபாரம் நடக்கிறது சரியல்ல. இங்கே யாரார் பரும்பராக்காகவும் அசமந்தமாகவும் இருக்கிறார்களோ, யாரார் இங்கே பராபரனுடைய வசனத்தைக் கவனியாமல் உலக காரியங்களைச் சிந்தித்துக்கொண்டிருக்கிறார்களோ, அவர்கள் எல்லாரும் இந்தப் பரிசுத்த வீட்டை வியாபார வீடும் கள்ளர்கெபியும் ஆக்குகிறார்கள். அப்படிப்பட்டவர்களைக் கர்த்தர் இந்தக் கோயிலைவிட்டுத் துரத்துவாரானால், இங்கே எத்தனைபேர் மீந்திருப்பார்கள். நம்முடைய கோயில் வெறுமையாகுமல்லவா. ஆகையால் நாம் இப்பொழுது கர்த்தருடைய வைராக்கியத்தை அறிந்து, நம்மைக் கர்த்தருடைய சுத்திகரிப்புக்கு ஒப்புக்கொடுப்போமாக.

அவர் அநுதினமும் தெய்வாலயத்தில் உபதேசித்துக்கொண்டிருந்தார். ஆனால் பிரதான ஆசாரியர்களும் வேதபாரகரும் சனத்தின் மூப்பரும் அவரைக் கொன்றுபோட வகைதேடி, அதைத் எப்படிச் செய்வதென்று காணாமல்போனார்கள்; ஏனெனில் சனமெல்லாம் அவரைக் கேட்டு அண்டிக்கொண்டிருந்தது.— இரட்சகர் நன்மை செய்தவராயிருக்க, அவரைச் சிநேகிக்காமல், பிரதான ஆசாரியர்களும் மூப்பர்களும் பகைத்தார்கள். அவரைக் கொன்றுபோடப் பிரயாசப்பட்டார்கள். இரட்சகரோ அதனால் தளர்ச்சி அடையவில்லை. அவர் தினந்தோறும் தெய்



வாலயத்துக்குப் போய் சனங்களுக்குப் போதகம் பண்ணினார். கர்த்தருடைய உண்மையுள்ள ஊழியக்காரர் எல்லாரும் இவரைப்போலவே செய்கிறார்கள். எவ்வளவு துன்பம் வந்தாலும், அவர்கள் தங்கள் வேலையில் தரித்திருந்து, அதை உண்மையுஞ் சுறுசுறுப்புமாய்ச் செய்வார்கள். நாம் பிரதான ஆசாரியர்கள் மூப்பானவர்களைப்போல் கர்த்தருடைய ஊழியக்காரரைப் பகைக்காமல், அவர்களுடைய புத்தி போதனையைக் கவனமாய்க்கேட்டு நடக்கவேண்டும்.

எருசலேம் பட்டணத்திற்காகக் கண்ணீர் விட்ட எங்கள் அருமை இரட்சகராகிய இயேசுநாதரே, தேவரீர் எங்களுக்காகப் பரிதபித்து, எங்களுக்குக் குணப்படுதலையும் விசுவாசத்தையும் தந்து, தேவகோபாக்கினைக்கு எங்களை விலக்கிக் காத்தருளும், சுவாமி. ஆமேன்.

---

## திரித்துவப் பண்டிகைக்குப் பிந்தின ௰௧-ம் ஞாயிறு.

லூக். 18, 9—14.

பிரியமானவர்களே,

காயீன் ஆபேல் என்று இரண்டு சகோதரர் இருந்தார்கள். இவர்கள் இரண்டுபேரும் பராபரனாகிய கர்த்தரைத் தொழுதுகொண்டு, அவருக்குக் காணிக்கை செலுத்தினார்கள். காயீன் தோட்டவேலைசெய்தான். அவன் தன் தோட்டத்தில் இருந்த சில காய்கனிகளைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுபோனான். ஆபேல் ஆடுமேய்க்கிறவனாய் இருந்ததால், ஒரு ஆட்டுக்குட்டியைக் கொண்டுபோனான். காயீன் ஒரு கல்லின்மேல் தன் காய்கனிகளை வைத்து, கர்த்தரை நோக்கிச் செபம்பண்ணி, தன் காணிக்கையை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக்கொண்டான். ஆபேல் தன் ஆட்டுக்குட்டியைக் கொன்று அதன் இரத்தத்தைச் சிந்தி, அதன் உடலை ஒரு மேடைமேல் வைத்து, கர்த்தரை நோக்கிச் செபம்பண்ணி, தன் காணிக்கையை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக்கொண்டான். பராபரனே ஆபேலின் காணிக்கையை ஏற்றுக்கொண்டு, காயீனின் காணிக்கையைத் தள்ளி விட்டார். இதற்குக் காரண[illegible] இரண்டு பேரும் கர்த்தரைத் தொழுதுகொண்டும், இரண்டு பேருக்கும் ஒரே மாதிரி இருதயம் இருந்ததில்லை. ஆபேலுக்கு விசுவாசமிருந்தது. காயீனுக்கோ விசுவாசமில்லை. ஆகையால் காயீனைப் பார்க்கிலும் ஆபேல் மேன்மையான பலியைப் பராபரனுக்குச் செலுத்தினானென்று வேதம் சொல்லுகிறது (எபி. 11, 4).

எல்லாரும் கோயிலுக்குப் போய் எல்லாரும் கர்த்தருக்கு ஆராதனை செய்தாலும், எல்லாரும் செபம்பண்ணினாலும், கர்த்தர் அவர்களுடைய இருதயத்தைப் பார்த்து, நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ள விசுவாசிகளுடைய ஆராதனையையும் செபத்தையும் மாத்திரம் பிரியமாய் ஏற்றுக்கொள்ளுகிறார். நம்முடைய சுவிசேஷவாக்கியத்திலும் செபம்பண்ணும்படி தெய்வாலயத்திற்குப் போன இரண்டு மனிதரைக் குறித்துப் பேசியிருக்கிறது. அவர்களில் ஒருவன் தாழ்த்தப்பட்டான், ஒருவன் உயர்த்தப்பட்டான். அவனவன் தன் தன் இருதயத்தின் நிலைமைக்கு ஏற்றபடி செபித்தான். தன் தன் செபத்துக்கேற்ற பலனையடைந்தான். பராபரன் அகந்தையுள்ளவர்களோடே எதிர்த்துநின்று, தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கிறார் என்கிற தங்கமொழி அவர்களிடத்தில் நிறைவேறிற்று. ஆகையால்,

**பரிசேயன் ஆயக்காரன் செபம்செய்த சரித்திரத்தால் நாம் கற்றுக்கொள்ளும் பாடங்களென்ன.**

1. பராபரன் அகந்தையுள்ளவர்களோடே எதிர்த்துநிற்கிறார்.
2. அவர் தாழ்மையுள்ளவர்களுக்குக் கிருபையளிக்கிறார்.

## 1.

பராபரன் அகந்தையுள்ளவர்களோடே எதிர்த்துநிற்கிறார் என்கிற பாடத்தைப் பரிசேயனால் நாம் கற்றுக்கொள்ளுகிறோம்.

நம்முடைய சுவிசேஷவாக்கியம் தாங்கள் நீதிமான்கள் என்று நம்பி, மற்றவர்களை அற்பமாய் எண்ணுகிற சிலருடனே இயேசுநாதர் சொன்ன உவமையாயிருக்கிறது. — இயேசுநாதருக்கு எல்லாப் பாவங்களும் அருவருப்பு. அதிலும் அகந்தை அவருக்கு மகா அருவருப்பு. எல்லாரும் பாவிகளாயிருக்க, ஒருவன் தன்னை நல்லவனென்றும், மற்றவர்களைக் கெட்டவர்களென்றும் எண்ணுகிறது மகா பெரிய அகந்தை. இந்த அகந்தையைத் தன் வீட்டிலே மாத்திரமல்ல, தான் வேலைசெய்கிற இடத்திலே மாத்திரமல்ல, கடைகண்ணிகளிலே மாத்திரமல்ல, கர்த்தருடைய பரிசுத்த தெய்வாலயத்திலே கொண்டுபோய்க் காட்டுகிறது எவ்வளவு பயங்கரம். அப்படி அதைத் தெய்வாலயத்துக்குக் கொண்டுபோன ஒரு மனுஷனைக் குறித்து நம்முடைய வாக்கியம் பேசுகிறது.

இரண்டு மனுஷர் செபம்பண்ணத் தெய்வாலயத்துக்குப் போயேறினார்கள். ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன். பரிசேயன் நின்று தனக்குள்ளே பண்ணின செபமாவது: பராபரனே, நான் பறிகாரர், அநீதக்காரர், விபசாரருமாகிய மற்ற மனுஷரைப்போலும் அல்ல, இந்த ஆயக்காரனைப்போலும் அல்ல என்கிறதுக்காக உமக்கு இஸ்தோத்திரம் செலுத்துகிறேன் என்றான்.



எருசலேமிலிருந்த தெய்வாலயம் ஜெபவீடாயிருந்தது. நாம் போன ஞாயிற்றுக்கிழமை கேட்ட சுவிசேஷவாக்கியத்திலே இயேசுநாதர் அப்படிச் சொன்னார். அங்கே யூதர்கள் எல்லாரும் ஜெபம்பண்ணப்போனார்கள். கூட்டம் கூட்டமாய்ப் போகிறதும் உண்டு, தனித்தனியே போகிறதும் உண்டு. ஆராதனை வேளையில் போகிறதும் உண்டு, ஆராதனையில்லாத நேரத்தில் போகிறதும் உண்டு. நம்முடைய வாக்கியத்தில் சொல்லிய இரண்டு மனுஷர் ஆராதனை இல்லாத நேரத்தில் போனதாகத் தோன்றுகிறது. போனவர்களில் ஒருவன் பரிசேயன். இயேசுநாதருடைய காலத்தில், பரிசேயர் யாவராலும் மதிக்கப்பட்டவர்களாயிருந்தார்கள். அவர்களுடைய புறம்பான தெய்வபக்தியால் அநேகர் மயங்கி, அவர்களை மிகவும் கனப்படுத்தினார்கள். இதனால் அவர்களுக்கு இருந்த பெருமை கொஞ்சமல்ல. அவர்கள் தங்கள் வீடுகளில் பெருமைகாட்டினார்கள். வீதிகளிலும் சந்தைவெளிகளிலும் அவர்கள் தங்களையெல்லாரும் மரியாதைபண்ணவேண்டும் என்று விரும்பினார்கள். நம்முடைய வாக்கியத்தில் சொல்லப்பட்ட பரிசேயன் ஜெபம்பண்ணுகிறதற்குப்போன தெய்வாலயத்திலும் பெருமையைக் காண்பித்தான். ஜெபம் பண்ணுகிறது நல்லது. ஜெபம்பண்ணாதவன் மனுஷன் அல்ல. ஆகிலும், அகந்தையோடே ஜெபம்பண்ணுவதைப்பார்க்கிலும் ஜெபம்பண்ணாதிருப்பது நல்லது. இந்தப் பரிசேயனே அகந்தையோடே ஜெபம்பண்ணினான். அவன் தன்னைப் பராபரனுடைய சந்நிதானத்தில் தாழ்த்தி சாஷ்டாங்க தண்டனிட்டு விழாமல், தன்னை மிகவும் உயர்த்திக்கொண்டு நின்றான்.

அவன் தன்னை யாரென்று அறிந்துகொள்ளாதபடிக்கு அகந்தை அவன் கண்களை மூடிற்று. அவன் தன் ஜெபத்திலே தன்னைப் பிறர் சொத்தை எடுத்துக்கொள்ளும் பறிகாரன் அல்லவென்றும், யாதொருவருக்கும் அநியாயம் செய்தவனல்லவென்றும், தான் விபசாரம் பண்ணினதில்லையென்றும் சொன்னான். இது ஒருவேளை நிசமாயிருக்கலாம். ஆகிலும், இதனாலே அவன் தன்னை மற்ற மனுஷருக்குமேல் உயர்த்துகிறதற்கு நியாயமில்லை. பாவத்தை விலக்குவது ஒவ்வொரு மனிதனுக்கும் கடமை. ஒரு மனுஷன் தன்னைச் சரியாய்ச் சோதித்துப் பார்ப்பானாகில்: தேவரீர் உமது அடியானோடே நியாயத்தீர்ப்புக்குள் பிரவேசியாதிரும்; ஏனெனில் ஜீவனுள்ள ஒருவனும்

உமக்குமுன்பாக நீதிமான் அல்ல என்று புலம்பவேண்டியவனாவான் (சங். 143, 2). ஒவ்வொரு மனிதனும் தன் பிறப்பினாலும் செய்கையினாலும் பாவி என்பது நிசம். ஏனெனில் எல்லாரும் பாவஞ்செய்து, பராபரனுடைய மகிமையற்றவர்களாய்ப் போனார்கள் என்று எழுதியிருக்கிறது (ரோம. 3, 23). இதுவோ அந்தப் பரிசேயனுக்குத் தெரியவில்லை. அவனுடைய குருட்டுப் புத்திக்கு அவன் யாதொரு குற்றமும் இல்லாத நீதிமானாகக் காணப்பட்டான். பராபரனோ, அவனைக் குருடனென்றும், தரித்திரனென்றும், நிர்வாணியென்றும், மகா நிர்ப்பந்தனென்றும் கண்டார். பரிசேயன் தன்னைத் தானே மோசம்போக்கினதினாலே பராபரனுடைய உதவிக்கும் ஒத்தாசைக்கும் தூரமானான்.

அவன் நான் மற்ற மனுஷரைப்போலும் அல்ல, தனக்குப் பின்னால் நின்ற ஆயக்காரனைப் போலும் அல்ல என்று சொன்னதினாலே அவனுடைய அகந்தை அதிகக் கேடாயிற்று. அவன் தன் ஜெபத்திலே பிறத்தியாரைத் தூஷிக்கிற தூஷணக்காரனானான். அவன் மற்ற மனுஷர்களைப் பாவிகளென்றும், தன்னை நீதிமானென்றும் நினைத்ததினால், பாவிகளுக்குப் பராபரன் பாராட்டுகிற கிருபை தனக்குத் தேவையில்லையென்று சொல்லுகிறவனாயிருந்தான். அவன் எவ்வளவு நிர்ப்பந்த மனுஷன். அவன் மகா பெரிய ரோகஸ்தனாயிருந்தும் வைத்தியன் வேண்டாமென்று சொல்லுகிறவன்போல் இருந்தான். அவன் தன்னுடைய ஜெபத்திலே யாதொன்றையும் பராபரனிடத்திலே கேட்கிறதில்லை. தனக்கு எல்லாம் இருக்கிறதென்று நினைத்து, பராபரனை ஸ்தோத்திரிக்கிறான். அதிலும், பராபரன் தனக்குக் கொடுத்தருளிய நன்மைகளுக்காக அல்ல, தான் செய்திருக்கிற நன்மைகளுக்காக அவரை ஸ்தோத்திரித்ததால் அவன் ஸ்தோத்திரமும் வீணே. இந்தப் பரிசேயனால் நாம் எச்சரிப்பு அடைவோமாக. அவனைப்போல் நாம் நம்மை உயர்த்தி, மற்றவர்களைத் தாழ்த்துகிற அகந்தையுள்ள இருதயத்தோடே ஜெபம் செய்யக்கூடாது. அப்படிப்பட்ட ஜெபம் கர்த்தருக்கு மகா அருவருப்பு.

அந்தப் பரிசேயன் தற்புகழ்ச்சிக்காரனாயிருந்தான். தான் நியாயமாய்ச் செய்யவேண்டியதை மாத்திரமல்ல, அதற்கு மேற்பட்டவைகளையும் செய்திருக்கிறதாக அவன் சொல்லுகிறான். வாரத்துக்கு இரண்டுதரம் உபவாசிக்கிறேன்; எனக்குக் கைவசமானதெல்லாவற்றிலும் பத்தில் ஒன்றைச் செலுத்துகிறேன் என்றான். யூதர்கள் வருஷத்துக்கு ஒருமுறை பாவநிவாரணநாளென்ற பெரிய நாளிலே உபவாசம்பண்ணவேண்டுமென்று நியாயப்பிரமாணம் சொன்னது. அந்தப் பரிசேயனோ தான் வருஷத்தில் ஒருமுறைமாத்திரமல்ல, வாரத்தில்



இரண்டுமுறை உபவாசிப்பதாகப் பெருமைபாராட்டினான். இஸ்ரவேலர் நிலத்தின் கனிகளிலும் ஆடுமாடுகளிலும் பத்தில் ஒன்றைக் காணிக்கையாகக் கொடுக்கவேண்டும் என்பது கர்த்தருடைய கட்டளை. இது கர்த்தருடைய தெய்வாலயத்தில் பணிவிடை செய்த லேவியரின் சுதந்தரம். இந்தப் பரிசேயனோ, நியாயப்பிரமாணத்திற்கு மேற்பட்டு, தனக்குண்டானதெல்லாவற்றிலும் பத்தில் ஒன்றைச் செலுத்தினதாகச் சொல்லுகிறான். இயேசுநாதர் இதைக் குறித்து ஒரு சமயத்தில் கண்டிப்பாய்ப் பேசி: மாயக்காரராகிய வேதபாரகரே, பரிசேயரே, உங்களுக்கு ஐயோ; ஏனென்றால் நீங்கள் ஒற்தலாமிலும், வெந்தயத்திலும், சீரகத்திலும் பத்தில் ஒன்றுகொடுத்து வேதத்தில் கனமான காரியங்களாகிய நீதி நியாயத்தையும் இரக்கத்தையும் விட்டு விட்டீர்கள் என்று சொன்னார் (மத். 23, 23). இரக்கமற்ற அந்தப் பரிசேயன் தன்னை நியாயப்பிரமாணத்துக்கு மேற்பட்ட நீதியுடையவனாக எண்ணினான். நிர்ப்பந்த மனுஷன். நியாயப்பிரமாணமோ அதேநேரத்தில் அவனைப் பொல்லாத பாவியென்று தீர்க்கிறது. ஏனென்றால்: உன் பராபரனாகிய கர்த்தரை உன் முழு இருதயத்தாலும் உன் முழு ஆத்துமத்தாலும் உன் முழு வினாவினாலும் சிநேகிப்பாயாக (மத் 22, 37) என்று நியாயப்பிரமாணம் சொல்லுகிற அந்தச் சிநேகம் அவனிடத்தில் இருந்ததா. உனக்கடுத்தவனை உன்னைப்போல் சிநேகிப்பாயாக என்று அதே நியாயப்பிரமாணம் சொல்லுகிறதே (மத். 22, 39), அந்தச் சிநேகம் அவனிடத்தில் இருந்ததா. இப்படியிருக்க, அவனை நியாயப்பிரமாணம் குற்றமற்றவனென்று தீர்க்குமா. அந்தக் குருட்டுப் பரிசேயன் தன்னுடைய நிர்ப்பந்த நிலைமையை அறியாதிருந்தது எவ்வளவு பரிதாபமான காரியம்.

நாமும் அடிக்கடி இந்தப் பரிசேயனைப்போல் நினைப்பதுண்டு. சரியாய்ப் பார்த்தாலோ, இந்தப் பரிசேயனுக்கு இருந்த நீதி கூட நமக்கு இல்லை என்று அறியலாம். ஏனென்றால் நான் பறிகாரன் அல்ல, நான் அநீதக்காரன் அல்ல, விபசாரக்காரனல்ல; நான் உபவாசம் செய்கிறேன், நான் கோயிலுக்குக் கொடுக்கவேண்டிய காணிக்கையை எல்லாம் கொடுக்கிறேன் என்று சொல்லக்கூடிய கிறிஸ்தவர்கள் எத்தனை பேர் நமக்குள் உண்டு. பெரும்படியான பாவங்களைக் கூட விலக்குகிறவர்கள் எத்தனை சிலர். ஆகையால் நாம் மேன்மைபாராட்டக் கொஞ்சமாவது இடம் இல்லை. நாம் பரிசேயரிலும் கேடுகெட்டவர்கள் என்று வெட்கப்படுவதற்குமாத்திரம் நியாயம் உண்டு.

இந்தப் பரிசேயனுடைய ஜெபத்துக்கு வந்த பலன் என்ன. அவன் எப்படிக் கோயிலுக்கு வந்தானோ, அப்படியே தன் வீட்டுக்குத் திரும்பினான். அவன் அகந்தைக்காரனாய் வந்

தான், அகந்தைக்காரனாய்த் திரும்பினான். தன் பார்வையிலே நீதிமானாய் வந்தான்; தன் பார்வையிலே நீதிமானாய்த் திரும்பினான். பராபரனுடைய சந்நிதானத்திலே அவன் அக்கிரமக்காரனாய் வந்தான், அவன் அவருடைய பார்வையிலே அக்கிரமக்காரனாகவே திரும்பினான். அகந்தையுள்ளவர்களோடே பராபரன் எதிர்த்து நிற்கிறார். தன்னைத்தானே* உயர்த்துகிறவனை யெல்லாம் அவர் தாழ்த்துவார். அவர் இம்மையிலே தாழ்த்துவார், மறுமையிலும் தாழ்த்துவார். அவர் அகந்தைக்காரரை நரகமட்டும் தாழ்த்த வல்லவராயிருக்கிறார்.

பரிசேயனுடைய சங்கதியைப் பார்த்த நாம் அகந்தைக்கு விலக்கமாயிருப்போமாக, தன்னை அறியாத அகந்தை, பிறரைத் தூஷிக்கும் அகந்தை, தற்புகழ்ச்சி செய்யும் அகந்தை, ஜெபத்தை மறக்கும் அகந்தை, இவைகளுக்கு நாம் விலகியிருந்து கர்த்தருடைய கிருபையைத் தேடுவோமாக. அப்படித் தேடி அடைந்தவன் ஆயக்காரன்.

2.

பராபரன் தாழ்மையுள்ளவர்களுக்குக் கிருபை அளிக்கிறார் என்கிற சத்தியத்தை ஆயக்காரனால் நாம் கற்றுக்கொள்ளலாம்.

ஆயக்காரன் தூரநின்று, தன் கண்களை முதலாய் வானத்துக்கு ஏறெடுக்க மனதாயிராமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு: பராபரனே, பாவியாகிய என்பேரில் கிருபையுள்ளவராகும் என்றான். — அவன் தூரநின்றான். ஏனெனில், தான் பாவியானதால் பரிசுத்த ஸ்தலத்தை நெருங்கிநிற்கப் பயந்தான். அவன் தெய்வாலயத்தில் தூரநின்றதினால், கர்த்தர் அவனுக்குத் தூரநின்றார் என்று சொல்லக்கூடாது. ஏனெனில்: இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து, ஆவி நருங்குண்டவர்களை இரட்சிக்கிறார் என்று சங்கீதக்காரன் சொல்லுகிறார் (சங். 34, 18). அவன் தன் கண்களை முதலாய் வானத்துக்கு ஏறெடுக்க மனதில்லாமல் போனதும் அவனுடைய தாழ்மையுள்ள மனதைக் காண்பிக்கிறது. இப்படியே எஸ்றா என்ற பக்திமானும் சொல்லுகிறார். என் பராபரனே, நான் என் முகத்தை என் பராபரனாகிய தேவரீருக்கு முன்பாக ஏறெடுக்க வெட்கிக் கூச்சப்படுகிறேன்; ஏனெனில் எங்கள் அக்கிரமங்கள் எங்கள் தலைக்குமேலாகப் பெருகி எங்கள் குற்றம் வானபரியந்தம் வளர்ந்துபோயிற்று (எஸ்றா 9. 6) என்பது அவர் சொன்ன வார்த்தை. இந்த ஆயக்காரன் தன்னுடைய இருதயத்தை ஆராய்ந்து பார்த்து அது [illegible]கேடுள்ளதென்று கண்டதினால் தன் தலையை நிமிர்த்தி[illegible] குனியாயிருந்தான். அவன் மார்பிலே அடித்துக்கொண்டது அவன்



தன்னைக் குற்றவாளி என்று தீர்த்துக்கொண்டதைக் காண்பித்தது. அவன் செய்த இந்தப் புறம்பான செய்கை எல்லாம் இரட்சிப்புக்கு அவசியம் என்று நாம் சொல்லுகிறதில்லை. பராபரன் இருதயத்தைப் பார்க்கிறார். புறம்பான செய்கைகளை மனுஷர் பார்த்து மோசம் போவார்கள். நாமும் மோசம்போகக்கூடும். ஆகிலும், இந்த ஆயக்காரன் செய்த புறம்பான செய்கைகள் அவனுடைய உள்ளான நிலைமைக்கு அடையாளங்களாயிருந்தன என்று நாம் நம்பலாம். அவன் மெய்யாகவே தாழ்மையுள்ள மனுஷனாயிருந்தான்.

அவன் தன்னைப் பாவியென்று அறிக்கையிட்டான். அவன் அந்தப் பரிசேயனைப்போல் மற்ற மனிதரோடு தன்னை ஒத்துப்பார்க்கவில்லை. கர்த்தருடைய கற்பனையின்படியே தன்னைச் சோதித்துப்பார்த்து, தன்னுடைய நிர்ப்பாக்கியத்தை அறிந்துகொண்டான். தான் பராபரனாகிய கர்த்தரைச் சிநேகிக்கவேண்டியபடி சிநேகிக்காத பாவி என்று உணர்ந்தான். அவன் தன் பிறத்தியானையும் தன்னைப்போல் சிநேகிக்காத பாவியென்று அவனுக்குத் தெரிந்தது. தான் ஆயம் வாங்குவதில் பிறத்தியாருக்குச் செய்த அநியாயத்தை யெல்லாம் அவன் நினைவுகூர்ந்தான். பரிசுத்தமுள்ள பராபரன் தன்னுடைய உட்சீரையும் புறச்சீரையும் பார்க்கும்பொழுது தன்னை நரகத்தில் தள்ளுவது நியாயம் என்று அவன் உணர்ந்து நடுநடுங்கினான். அவன் தன் பாவங்களுக்குச் சாக்குப்போக்குச் சொல்லவில்லை. நாமோ நம்முடைய பாவங்களை அடிக்கடி மறைப்போம். அவைகளைத் தெரியாத்தனமாய்ச் செய்த தப்பிதங்களென்று சொல்லுவோம். நாம் செய்தது சரிதானென்று ரூபிக்க நியாயம் பேசுவோம். அந்த ஆயக்காரனோ தன்னைப் பாவியென்றே ஒப்புக்கொண்டான்.

ஆகையினால் அவன் பராபரனிடத்திலே கிருபையை, கிருபையொன்றையே தேடினான். பராபரன் ஏழைப் பாவிக்குப் பாராட்டும் சிநேகமே கிருபை என்று சொல்லப்படும். அவன் தன்னுடைய பாவத்தை மூடுவதற்குத் தன்னிடத்திலே ஒன்றும் இல்லையென்றும், அதை மூடக்கூடியது பராபரனுடைய கிருபையொன்றுதான் என்றும் அறிந்தான். இஸ்ரவேல் ஜனங்கள் நடுவிலே நியாயப்பிரமாணப் பெட்டியிருந்தது. அதற்குள் பத்துக் கற்பனை யெழுதிய பலகைகள் இருந்தன. இந்தப் பலகைகளை மூடி[illegible] மூடிக்குக் கிருபாசன மூடி என்று பெயர். இப்பொழுது பராபரனுடைய கற்பனைகளுக்கு விரோதமாக நடந்த பாவியை [illegible] காக்கக்கூடிய மூடி பராபரனுடைய கிருபையே, [illegible] நம்முடைய கிருபாசன மூடியாயிருக்கிறார். அவர் நம்மைத் தேவகோபத்துக்கு விலக்கமாக மறைத்துப்

பராபரனோடு ஒப்பரவாக்குகிறவர். கிருபாசன மூடியாகிய இவரை அறிந்தவனும் விசுவாசித்தவனும் பாக்கியவான்.

அந்த ஆயக்காரன் கிருபைக்காகவே கெஞ்சினான். அதைக் கர்த்தர் அவனுக்குக் கட்டளையிட்டார் என்பதற்குச் சந்தேகமில்லை. கேளுங்கள் அப்போது உங்களுக்குக் கொடுக்கப்படும், தேடுங்கள் அப்போது கண்டுபிடிப்பீர்கள், தட்டுங்கள் அப்போது உங்களுக்குத் திறக்கப்படும் என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார் (மத். 7, 7). இதின்படியே அவன் தேடின கிருபை அவனுக்குக் கிடைத்தது. தாழ்மை உள்ளவர்களுக்குப் பராபரன் கிருபை அளிக்கிறாரென்பது நிச்சயம்.

அவன் பெற்ற கிருபை அவன் தேடிவைத்திருந்த சகல ஆஸ்திபாஸ்திக்கும் மேலான பொக்கிஷம். ஏனென்றால் இந்தக் கிருபை அவன் பாவத்தை மன்னித்தது. அவன்மேல் கிருபை வைத்த பராபரன்: நீ இதுமுதல் குற்றவாளி அல்லவென்று தீர்த்தார், அவனைக் கிருபையினால் தம்முடைய பிள்ளையாக ஏற்றுக்கொண்டார். அவன் மோட்சராச்சியத்திற்குச் சுதந்தரவாளியானான். அவன் பெற்றுக்கொண்ட பாக்கியமே பாக்கியம். ஏனெனில்: எவனுடைய மீறுதல்கள் மன்னிக்கப்பட்டு, எவனுடைய பாவம் மூடப்பட்டதோ, அவன் பாக்கியவானென்று எழுதியிருக்கிறது (சங். 32, 1).

அந்தப் பரிசேயனைப் பார்க்க ஆயக்காரனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்கு இறங்கிப்போனான் என்று கர்த்தர் சொல்லுகிறார். பரிசேயன் தன் பார்வையில் நீதிமானாயிருந்தான். ஆயக்காரனோ கர்த்தரால் நீதிமானென்று தீர்க்கப்பட்டான். நாமும் இவனைப்போல் கர்த்தருக்கு முன்பாக நம்மைப் பாவிகளென்று அறிக்கையிடவேண்டும். பாவத்துக்காக மனஸ்தாபப்படவேண்டும். பராபரனுடைய கிருபையைத் தேடவேண்டும். பாவிக்குக் கிருபையைச் சம்பாதித்த கிறிஸ்துவை விசுவாசிக்கவேண்டும். அப்பொழுது கர்த்தர் நம்முடைய பாவங்களை மன்னிப்பார், நம்மை நீதிமான்களென்று தீர்ப்பார். நம்மை நரகத்துக்கு நீங்கலாக்குவார். நாம் உயிரோடிருக்கையில் நமக்கு மனச்சமாதானத்தைத் தருவார். நாம் சாகும் நேரத்தில் நமக்குப் பாக்கியமான மரணத்தைக் கொடுப்பார். பராபரனுடைய கிருபையினால் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொண்ட நாம் அந்நேரத்திலும் சமாதானமாய் நம்முடைய கண்ணை மூடலாம். கர்த்தர் நம்மை நித்திய மோட்சத்தில் கிருபையாய் ஏற்றுக்கொள்வார். அப்பொழுது தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்கிற வார்த்தை நம்மிடத்தில் நிறைவேறும்.

பராபரனே, தேவரீர் எங்கள் அருமை இரட்சகர் நிமித்தம் ஏழைப்பாவிகளாகிய எங்கள்பேரில் கிருபை வையும். எங்கள் பாவங்களை எல்லாம் மன்னியும். உம்முடைய ஐக்கியத்தில் எங்களை ஏற்றுக்கொண்டு, ஆசீர்வதித்தருளும், சுவாமி. ஆமேன்.



---

## திரித்துவப் பண்டிகைக்குப் பிந்தின ௰௨-ம் ஞாயிறு.

மாற்கு 7, 31—37.

பிரியமானவர்களே,

இயேசுநாதர் தீருசீதோன் பட்டணங்களின் எல்லைகளுக்குப் போய், அங்கே கானான் சாதியான ஸ்திரீயின் மகளைச் சொஸ்தமாக்கினார். அவர் அங்கே செய்த அற்புதத்தினால் தாம் யூதருக்காக மாத்திரமல்ல, புறச்சாதியாருக்காகவும் இந்த உலகத்தில் வந்த இரட்சகர் என்று காட்டினார். அவர் அந்த இடத்தை விட்டுப் பத்துப்பட்டணங்களின் எல்லைக்கு வந்தார். கலிலேயாக் கடலுக்கு அக்கரையில் பத்துப் பட்டணங்கள் ஒன்றுக்கொன்று சமீபமாயிருந்தபடியால், அந்த நாட்டுக்குத் தெக்கப்போலி அதாவது பத்துப்பட்டணங்கள் என்ற பெயர் இருந்தது. அங்கே அவர் செவிடும் ஊமையுமான ஒரு மனுஷனைச் சுகமாக்கின சரித்திரம் நம்முடைய சுவிசேஷ வாக்கியத்தில் சொல்லியிருக்கிறது. அந்த ஏழை மனுஷனை இரட்சகர் சுகமாக்கினதினால் அவனும் அவனோடு இருந்தவர்களும் மிகவும் ஆச்சரியப்பட்டு: எல்லாவற்றையும் நன்றாக்கினார் என்று கூவினார்கள். இக்காலத்தில் நாமும் அந்தவிதமாய் ஆச்சரியத்துடன் சொல்லுகிறதற்குப் போதுமான நியாயம் இருக்கிறது. இதை நாம் அறிந்துகொள்ளும்படி:

கர்த்தர் எல்லாவற்றையும் நன்றாக்குகிறவர் என்பதைக் குறித்துச் சிந்திப்போம்.

1. நன்றாக்கப்படவேண்டிய மனுஷன்.
2. நன்றாக்குகிற கர்த்தர்.
3. நன்றாக்கப்பட்டவன் பாக்கியம்.

### 1.

நன்றாக்கப்படவேண்டிய மனுஷனைக் குறித்துச் சிந்திப்போம்.

பத்துப்பட்டணங்களுடைய எல்லைகளின் நடுவாய் கலிலேயாக் கடலண்டை வந்தபொழுது பேசமாட்டாத ஒரு செவிடனை அவரண்டை கொண்டுவந்து அவன்மேல் கை வைக்க அவரை வேண்டிக்கொண்டார்கள். பராபரன் உலகத்தைச் சிருஷ்

டித்தபொழுது அவர்: தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார்; இதோ மெத்தவும் நன்றாயிருந்தது (க மோ. 1, 31) என்று எழுதியிருக்கிறது. ஆகிலும், மனிதர் பாவஞ்செய்ததினால் எல்லாம் கெட்டுப்போயிற்று. அவர் பாவஞ்செய்த மனிதனைப் பார்த்து: பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும் என்று சொன்னார். இப்படியே பாவத்தினால் மனிதருக்கும் பூமி முழு[illegible]த்தும் கெடுதி வந்தது. எல்லாவற்றைப்பார்க்கிலும் மனிதருக்கு வந்த கெடுதியே பயங்கரமானது. அவர்களுடைய சரீரத்துக்குக் கேடு வந்தது, ஆத்துமத்திற்கும் கேடு வந்தது. மனித சரீரம் பலவிதமான பாடுகளுக்கும் அநேகவித வியாதிகளுக்கும் இடமாயிற்று. நம்முடைய வாக்கியத்திலே சொல்லப்பட்ட மனிதனிடத்தில் சரீரக் கெடுதியை நாம் பார்க்கலாம். அவனுக்கு இரண்டு காதுகளிருந்தும், பிரயோசனம் இல்லை. மனிதர் பேசுகிற பேச்சையாவது மிருகங்களும் பறவைகளும் செய்கிற சத்தத்தையாவது அவன் கேட்கக் கூடாதிருந்தது. அவன் செவிடனாயிருந்ததால் ஊமையனாயிருக்கவும் நேரிட்டது. செவிடரில் அநேகர் ஊமையராயிருப்பதை நாம் கண்டிருக்கிறோம். இந்த ஏழை மனுஷன் தன் வாயினால் ஒரே சொல்லையும் சொல்லமாட்டாதிருந்தான். அவன் தன் மனதில் இருக்கிறதை வாயினால் ஒருவருக்கும் வெளியிடக் கூடவில்லை. முக்கியமாய் அவன் பராபரனை வாய்திறந்து துதிக்கவும், அவரைக் குறித்து மற்றவர்களோடே பேசவும் கூடாதிருந்தது மகா பரிதாபம். இந்தக் கெடுதி பாவத்தினால் வந்ததே. ஆகிலும், எல்லா மனிதரும் செவிடூமையராயிருக்கிறதில்லை. சிலர் குருடர், சிலர் முடவர், சிலர் குஷ்டரோகிகள். சிலருக்கு இந்த வியாதி, சிலருக்கு அந்த வியாதி. சரீர வியாதி இல்லாதவர்களும் உண்டு. என்றாலும், பாவத்தினால் உண்டான ஆத்துமக் கெடுதி எல்லாருக்கும் உண்டு. அதுக்குத் தப்பினவர்கள் இல்லவேயில்லை.

ஆதாம் விழுந்ததாலே நாம்
சமூலமாகக் கெட்டோம்;
கதிக்கும் நன்மைக்கும் எல்லாம்
வேரோடேதானே செத்தோம்

என்று நாம் பாடுவது நியாயம். கர்த்தருடைய ஜனமாகிய இஸ்ரவேலைக் குறித்து ஏசாயா தீர்க்கதரிசி சொன்ன வார்த்தையை ஒவ்வொரு மனிதனைக் குறித்தும் சொல்லலாம்: உள்ளங்கால் துவக்கித் தலைமட்டும் அவனில் சீழ்பிதுக்கப்படாமலும்; கட்டப்படாமலும், எண்ணெய்யால் ஆற்றப்படாமலும் இருக்கிற காயமும் வீக்கமும் நொதிக்கிற இரணமுமேயல்லாமல் ஒரு ஆரோக்கியமும் இல்லை (ஏசா. 1, 6). நம்முடைய ஆத்துமா பரம காரி



யங்களைக் காணக்கூடாத குருடாயிற்று. கர்த்தருடைய சத்தம் தண்ணீர்களின் மேலே கேட்கப்படும், மகிமையின் பராபரனாகிய கர்த்தர் திரளான தண்ணீர்களின் மேலே முழங்குகிறார். கர்த்தருடைய சத்தம் வல்லமையும், கர்த்தருடைய சத்தம் மகத்துவமுமாய் முழங்குகிறது (சங். 29, 3. 4). மனிதர் தண்ணீர்களின் சத்தத்தையும் இடிமுழக்கத்தையும் கேட்கிறார்கள். கேட்டாலும் அவைகளிலே தொனிக்கும் பராபரனுடைய சத்தத்தைக் கேட்பாரில்லை. சிருஷ்டிப்பில் பராபரன் பேசுகிற பேச்சை எல்லாரும் கேட்பார்களாகில் எல்லா மனிதரும் மெய்யான பராபரனை அறிந்து வணங்குவார்களே. சிருஷ்டிப்பின் வழியாய் மாத்திரமல்ல, எழுதப்பட்ட வேதத்தின் வழியாகவும் பராபரன் மனிதரோடு பேசுகிறார். என்றாலும், அவருடைய பேச்சைக் கேட்கிறவர்கள் யார். மனிதர் வீண்பேச்சைக் கேட்க, பாவமான பேச்சைக் கேட்க, ஆவலாயிருப்பார்கள். பராபரனுடைய வசனத்தைக் கேட்கவோ அவர்கள் காது செவிடு. அவர்கள் புறம்பான காதுகளிலே கேட்டாலும் இருதயத்தினாலே கேட்கிறதில்லை. ஜென்மசுபாவமான மனுஷன் பராபரனுடைய ஆவியின் நியாயங்களை ஏற்றுக்கொள்ளான். ஏனெனில், அவைகள் அவனுக்குப் பைத்தியமாயிருக்கிறது (க கொரி. 2, 14) என்று அப்போஸ்தலன் சொல்லுகிறது மெய். பாவத்தினால் மனிதனுடைய ஆத்துமா ஞானகாரியங்களைக் கேட்கக்கூடாமல் செவிடுபட்டுப் போயிருக்கிறது.

மனிதர் ஞானகாரியங்களில் ஊமையர்களாயிருக்கிறார்கள் என்றும் சொல்லவேண்டியது. அநேக மனிதர் உல்லாசகாரியங்களையும் உத்தியோக காரியங்களையும் பாவமான காரியங்களையும் தாராளமாய்ப் பேசுவார்கள். இந்த ஊரிலிருக்கிற ஜனங்களுக்கும் இந்தச் சபையில் இருக்கிறவர்களுக்குங்கூட அசுத்தமான பேச்சுகளைப் பேச வாய் இருக்கிறதென்று நம்மெல்லோருக்கும் தெரியும். கர்த்தருக்கடுத்த காரியங்களைப் பேசவும் இரட்சிப்புக்கடுத்த காரியங்களைச் சொல்லவுமோ நமக்கு நாவு இல்லை. நாம் கெட்ட வார்த்தைகளைப் பேசிப்பேசிப் பழகிவிட்டபடியால், நல்ல வார்த்தை பேச நமக்கு நாக்குத் திரும்புகிறதில்லை. சொல்லிக்கொடுத்தாலும், லேசாய் வருகிறதில்லை. இந்த உலகத்திலுள்ள கோடாகோடி மனிதருக்குள் பராபரனோடே பேசவும் பராபரனைக்குறித்து மற்றவர்களுக்குச் சொல்லவும் கூடியவர்கள் வெகுகொஞ்சம் பேர். விசுவாசிகள் மாத்திரமே கர்த்தருடைய சத்தத்தைக் கேட்கிறார்கள். என் ஆடுகள் என் சத்தம் கேட்கிறதென்று விசுவாசிகளின் சிறுமந்தையைக்குறித்து இயேசுநாதர் சொன்னார். பாவத்தினாலே கெட்டுப்போன மனுஷஜாதியின் செவிட்டுக்காது இயேசு ஒருவராலே திறந்துகேட்கும், ஊமை வாய் திறந்துபேசும். ஆகையால், இவரைக்குறித்து நாம் இரண்டாவதாகச் சிந்திப்போம்.

## 2.

நன்றாக்குகிற கர்த்தரைக்குறித்து நாம் சில காரியங்களைக் கேட்போம்.

அவர் அவனைக் கும்பை விட்டுத் தனியே அழைத்துப் போய் தம்முடைய விரல்களை அவன் காதுகளில் வைத்து உமிழ்ந்து அவனுடைய நாவைத் தொட்டு, வானத்தை அண்ணாந்து பார்த்து, பெருமூச்சு விட்டு: எப்பத்தா அதாவது திறவுண்டு போ என்றார். இயேசுநாதர் ஒரே வார்த்தையினாலே அநேக வியாதியஸ்தர்களுக்குச் சுகம் கொடுத்தார். பார்வை அடையென்று சொன்னதினால் ஒரு குருடன் பார்வை அடைந்தான். எனக்கு மனதுண்டு, நீ சுத்தமாகு என்று சொன்னதினால் ஒரு குஷ்டரோகி சுத்தமானான். இந்தச் செவிடூமையனையோ கர்த்தர் ஒரே வார்த்தையினாலே சொஸ்தமாக்கவில்லை. முன் சொன்ன குருடனும் குஷ்டரோகியும் இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டதினால் விசுவாசமுள்ளவர்களாயிருந்தார்கள். இந்தச் செவிடூமையனோ அவருடைய வசனத்தைக் கேட்டவனல்ல. ஆகையால் அவனுக்கு விசுவாசம் இருந்ததில்லை. நம்முடைய இரட்சகர் அவனிடத்தில் ஒரு அற்புதத்தை நடப்பிக்கும்படி முந்த அவனுக்குள் விசுவாசத்தை உண்டாக்கச் சித்தமாயிருந்தார். இதற்காக அவர் அவனிடத்திலே பல அடையாளக்கிரியைகளைச் செய்தார். அவன் வேறொருவரையுங் கவனிக்காமல் தம்மை மாத்திரமே கவனிக்கும்படி அவனைத் தனியே அழைத்துக்கொண்டுபோனார். அவருடைய திருமுகத்தில் விளங்கின அன்பும் தயவும் அவனுக்கு எவ்வளவு ஆறுதலைக் கொடுத்திருக்கும். இதனால் அவன் அவரையே உற்றுப்பார்த்து, தனக்குச் சகாயம் செய்யக்கூடியவர் அவர் ஒருவர்தான் என்று அறிந்துகொள்ளக் கூடியவனானான். இப்படியே அவனுக்குள் விசுவாசம் துவக்கிற்று. இயேசுநாதர் தம்முடைய விரல்களை அவனுடைய காதுகளில் வைத்து உமிழ்ந்து, அவன் நாவைத் தொட்டதினால் அவர் தன் காதிலும் நாவிலும் உள்ளகெடுதியை நீக்கப்போகிறார் என்று அறிந்துகொண்டான். அவர் வானத்தை அண்ணாந்து பார்த்தார். தம்முடைய மார்பெழும்பப் பெருமூச்சுவிட்டார். இதை அந்த ஏழை மனுஷன் பார்த்ததினால் பராபரனிடத்திலிருந்து தனக்குச் சகாயம் வருமென்றறிந்து ஜெபம்பண்ணக்கூடியவனானான். எங்கே விசுவாசம் வருகிறதோ அங்கே ஜெபம் நடக்கும். ஜெபமானது விசுவாசத்தின் வளர்த்திக்கு நல்ல அடையாளம். நாம் எவ்வளவாய் ஜெபம்பண்ணினாலும் கர்த்தருடைய வார்த்தையினால் மாத்திரம் நமக்குச் சகாயம் கிடைக்கும். கர்த்தர் அந்தச் செவிடூமையனிடத்தில் விசுவாசத்தை உண்டாக்கி, தம்முடைய வார்த்தையினால் அவன் காதையும் நாவையும் திறந்தார். அவர் சொன்ன



எப்பத்தா என்ற வார்த்தையினால் அவனிடத்தில் பெரிய அற்புதம் நடந்தது. அதனால் தாம் எல்லாவற்றையும் நன்றாக்குகிற கர்த்தரென்று இயேசுநாதர் வெளிப்படுத்தினார்.

நம்மிடத்திலும் இயேசு இரட்சகர் எல்லாவற்றையும் நன்றாக்கச் சித்தமுள்ளவராயிருக்கிறார். இதை அவர் தம்முடைய வசனத்தைக்கொண்டு செய்கிறார். ஆதியிலே இவ்வுலகமெல்லாம் உண்டானது அவருடைய வார்த்தையினாலேதான்: அவர் வெளிச்சம் உண்டாகக்கடவதென்று சொன்ன உடனே வெளிச்சம் உண்டாயிற்று. அவர் சர்வவல்லவர். அவருக்கு எது சித்தமோ, அது நடக்கும். அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும். அந்தக் கர்த்தரே நம்மோடு இருக்கிறார், அவருடைய வசனம் நம்மோடு இருக்கிறது. நம்முடைய செவியைத் திறக்கவும் நம்முடைய நாவின் கட்டை அவிழ்க்கவும் அவர் பிரியசித்தம் உள்ளவராயிருக்கிறார். நாம் அவருடைய வசனத்துக்குச் செவிகொடுப்போமாக. அவருடைய வசனத்தை ஏற்றுக்கொள்ளுகிறவனிடத்தில் மெய்யாகவே அற்புதம் நடக்கும். அவருடைய வசனத்தை எதிர்த்து நிற்கிறவர்களோ பயங்கரமாய்க் கெட்டுப்போவார்கள். அவர்கள் நன்றாக்கப்படுவதில்லை. ஸ்தேவான் என்ற இரத்தசாட்சியினுடைய பிரசங்கத்தைக் கேட்டவர்களில் அநேகர் இப்படிப்பட்டவர்களாயிருந்தார்கள். அவர்களை நோக்கி ஸ்தேவான்: முரட்டுக் கழுத்துள்ளவர்களே, இருதயத்திலும் செவிகளிலும் சுன்னத்தடையாதவர்களே, உங்கள் பிதாக்களைப்போல் நீங்களும் பரிசுத்த ஆவியோடு எதிர்த்து நிற்கிறீர்கள் (அப். 7, 51) என்று மகா விசனத்தோடு சொன்னார். நன்றாகவேண்டும் என்கிற ஆசை நமக்கும் இருக்கிறது. பாவம் நம்மைக் கெடுத்தபடியால் பாவமன்னிப்பு நமக்குத் தேவை. இது கிறிஸ்துவின் வார்த்தையினாலே மாத்திரம் நமக்குக் கிடைக்கும். மகனே, திடன்கொள் உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்று கிறிஸ்து சொல்லுகிற வார்த்தையே நமக்குப் பாவமன்னிப்பைக் கொடுக்கிறது. அவருடைய வசனமாகிய சத்தியம் மாத்திரம் நம்மைச் சுத்திகரிக்கக்கூடியது. நாம் பாவமன்னிப்பின் நிச்சயத்தையும் மெய்யான பரிசுத்தத்தையும் நம்முடைய பிரயாசையினாலே உண்டாக்கிக்கொள்ளக்கூடாது. நம்முடைய சொந்த உணர்ச்சியினாலே அதை நிலைவரப்படுத்த முடியாது. கர்த்தருடைய வசனத்தினாலே மாத்திரம் நமக்கு எல்லா நிலைவரமும் எல்லா நிச்சயமும் உண்டு. ஆகையால் நாம் நன்றாகும்படி கர்த்தருடைய வசனத்தை விசுவாசமாய்க் கேட்கவும் உறுதியாய்ப் பிடிக்கவும் வேண்டியது.

இதோ, இன்றைக்கும் இங்கே அவருடைய வசனம் பிரசங்கிக்கப்படுகிறது. கர்த்தர் இன்றைக்கு நம்மில் ஒவ்வொருவருக்

கும் எப்பத்தா என்று சொல்லுகிறார். அவருடைய வார்த்தையைக் கேட்கிறவர்களுடைய இருதயம் திறக்கப்படும். ஒரு நாள் பவுல் அப்போஸ்தலன் பிலிப்பிபட்டணத்தில் ஒரு ஆற்றங்கரையில் பிரசங்கம்பண்ணினார். லீதியாள் என்ற ஒரு ஸ்திரீ கேட்டுக்கொண்டிருந்தாள். அதினால் கர்த்தர் அவளுடைய இருதயத்தைத்திறந்தார் என்று வாசிக்கிறோம் (அப். 16, 14). கர்த்தருடைய பரிசுத்த சொல்லை எதிர்த்துத் தள்ளாதவன் பாக்கியவான். அவருடைய வார்த்தையினால் மெய்ப்பாக்கியம் வரும் என்பதை அந்தச் செவிடூமையனால் அறிந்துகொள்ளலாம்.

3.

நன்றாக்கப்பட்டவன் பாக்கியம் இன்னதென்று பார்ப்போம்.

உடனே அவனுடைய செவிகள் திறவுண்டு, அவனுடைய நாவின் கட்டும் அவிழ்ந்துபோய்ச் செவ்வையாய்ப் பேசினான் என்று சுவிசேஷகன் சொல்லுகிறார். செவிடும் ஊமையனுமான அந்த மனுஷன் இதற்குமுந்தி யாதொரு வார்த்தையையும் கேட்டவனல்ல, ஒரு பாஷையைப் படித்தவனல்ல. என்றாலும், அவன் சிறுபிள்ளைமுதல் பேசிவந்ததுபோல் யாதொரு பிசகுமில்லாமல் செவ்வையாய்ப் பேசினான். இது ஒரு பெரிய அதிசயமல்லவா. இது கர்த்தருடைய வல்லமையினால் உண்டான பூரண சுகம்.

கர்த்தருடைய வல்லமை இப்பொழுது குறைந்திருக்கிறதில்லை. அவருடைய வார்த்தையின் வல்லமையை நாம் இன்றைக்கும் பார்க்கலாம். முன்னே பராபரனுடைய வசனத்தைக் கொஞ்சமும் கேளாமல் ஆத்தும செவிடராயிருந்த எத்தனைபேர் இப்பொழுது அவருடைய வசனத்தைக் கேட்கிறார்கள். நம்முடைய தேசத்திலுள்ள கிறிஸ்தவர்களெல்லாரும் இதற்குச் சாட்சி. அநேகம் தீவாந்தரங்களிலும் கர்த்தருடைய வசனத்தைச் சந்தோஷமாய்க் கேட்கிற திரளான கிறிஸ்தவர்கள் உண்டு. மேலும், முன்னமே கிறிஸ்துவின் நாமத்தை நிந்தித்து, கிறிஸ்துமார்க்கத்தைத் தூஷணித்துவந்த எத்தனை பேர் இந்தக்காலத்தில் கிறிஸ்துவை மகிமைப்படுத்தவும், அவரை அறிக்கையிடவும், அவரை நோக்கிச் செபம் செய்யவும் கூடியவர்களாயிருக்கிறார்கள். நம்முடைய தேசத்திலும் மற்றநேக அஞ்ஞான தேசங்களிலும் எத்தனைபேர் தங்கள் வாயைத் திறந்து சந்தோஷமாகவும் தாராளமாகவும் கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறார்கள். இங்கே வந்திருக்கிறவர்களில் எத்தனை பேர் முன்னே இயேசுவை அறியாதவர்கள். இயேசு என்கிற பரிசுத்த நாமத்தைச் சொல்லக்கூடாதவர்கள். இப்பொழுதோ பராபரனைப் பிதா என்று சொல்லவும், இயேசுவைத் தங்கள் இரட்சகர் என்று சொல்லவும், கர்த்தரை நோக்



கிச் செபம் செய்யவும் கூடியவர்கள் ஆனார்கள். இது கர்த்தருடைய அற்புதச் செய்கையே அல்லாமல் வேறல்ல.

இப்படியே, கர்த்தர் நம்மிடத்தில் உள்ள சகல ஆத்துமக் கெடுதியையும் போக்கி, நம்மிடத்தில் எல்லாவற்றையும் நன்றாக்கக் கூடியவராயிருக்கிறார். நாமோ இன்னம் இந்தப் பாவலோகத்தில் இருப்பதினாலும், இன்னம் மாமிச சம்பந்தம் நமக்கு இருப்பதினாலும், நாம் பூரண பரிசுத்தர்களாயிருக்கிறதில்லை. நம்மிடத்தில் இன்னம் குறைவுகள் உண்டு. நமக்குப் பாவமில்லை என்றோமானால் உண்மை நமக்குள் இராமல் நம்மை நாமே மோசம் போக்குகிறோம் (௧ யோ. 1, 8); நான் அப்போதே அதைப் பிடித்தவன் அல்லது அப்போதே முற்றும் தேறினவன் என்று சொல்லேன் (பிலி. 3, 12) என்று பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறார். குறைவில்லாத நிறைவாகரான நீதிமான்கள் பரலோகத்தில் மாத்திரம் உண்டு. இந்தப்பூலோகத்தில் நாம் இன்னம் இருக்குமளவும் பரிசுத்தத்தை நாடித் தேடவேண்டியதே. நமக்குப் பாவத்தினால் பலகுறைவுகள் இருந்தாலும், நாம் அதனால் தளர்ந்துபோகவேண்டியதில்லை. நம்மில் நாம் குறைவுள்ளவர்களாயிருந்தாலும், கிறிஸ்துவுக்குள் நாம் குறைவற்றவர்களாயிருக்கிறோம், முற்றிலும் பரிசுத்தராயிருக்கிறோம்; ஏனெனில், ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான் பழையதுகள் ஒழிந்துபோயிற்று; இதோ எல்லாம் புதிதாயிற்று என்று அப்போஸ்தலன் சொல்லுகிறார் (௨ கொரி. 5, 17).

கிறிஸ்துவினால் குணமாக்கப்பட்ட அந்த மனுஷனும் அவனைச் சேர்ந்தவர்களும்: எல்லாவற்றையும் நன்றாக்கினார், செவிடர் கேட்கவும், ஊமையர் பேசவும் பண்ணுகிறார் என்று மட்டில்லாமல் ஆச்சரியப்பட்டுச் சொன்னார்கள். — இப்படியே அவர்கள் கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள். நாமும் நம்மிடத்தில் கர்த்தர் நடப்பித்திருக்கும் சொல்லிமுடியாத அதிசயங்களின் நிமித்தம் அவரை மகிமைப்படுத்துவது நியாயம். இன்னம் நம்மிடத்திலே எல்லாம் நன்றாகாமல் இருப்பதை நாம் அடிக்கடி விசனத்துடனே பார்த்தாலும், கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே நாமும் களிகூரலாம், கர்த்தர் எல்லாவற்றையும் நன்றாக்கினார் என்று பாடலாம். நாம் இங்கே பாடும் பாட்டும், துதிக்கும் துதியும், நம்முடைய பாவத்தினிமித்தம் குறைவுள்ளவைகளாயிருக்கும். ஆனாலும் நாம் கர்த்தருக்குள் மரித்து, மகிமையில் பிரவேசிக்கும்பொழுது, அங்கே நமக்கு ஒரு குறைவும் இராது. நம்முடைய சரீரமும் நம்முடைய ஆத்துமாவும் சகல தீமைக்கும் நீங்கலாகி, சகல நன்மையும் நிறைந்ததாயிருக்கும். அப்பொழுது: கர்த்தர் எல்லாவற்றையும் நன்றாக்கினார் என்கிற பாட்டைத் தடையின்றிப் பாடுவோம். நாம் மோட்ச இராச்சியமாகிய மகிமையின்

ராச்சியத்தில் இப் பாட்டைப் பாடக்கூடும்படிக்கு இப்பொழுது கிருபையின் ராச்சியத்தில் நம்மை நன்றாக்குகிற கர்த்தருக்கு முழுவதும் நம்மை ஒப்புவிப்போமாக.

இயேசு ஐயரே, தேவரீர் எங்களுக்கு இரங்கி, எங்கள் பாவங்களை மன்னித்து, எங்களில் உள்ள தீமையை எல்லாம் போக்கி, யாவையும் எங்களில் நன்றாக்கி, எங்களை ஆசீர்வதித்தருளும், சுவாமி.' ஆமேன்.

---

## திரித்துவப் பண்டிகைக்குப் பிந்தின ௰௩-ம் ஞாயிறு.

லூக். 10, 23—37.

பிரியமானவர்களே,

நான் என்ன செய்து நித்திய சீவனைச் சுதந்தரித்துக் கொள்வேன் என்கிற ஒரு முக்கியமான கேள்வி நம்முடைய சுவிசேஷ வாக்கியத்தில் இருக்கிறது. ஒவ்வொருவனும் தான் நித்திய சீவனை அடைகிறதற்குக் கவலைப்பட வேண்டியது. இந்தக் கேள்விகேட்ட மனுஷன் நித்திய சீவனுக்காகக் கவலைப்பட்டது நல்ல காரியம். என்றாலும், அவன் இயேசுநாதரைச் சோதிக்கக் கேள்வி கேட்டது சரியல்ல. மேலும், அந்தக் கேள்வியிலே ஒன்றுக்கொன்று விரோதமான இரண்டு சங்கதியிருக்கிறது. நித்திய சீவனைச் சுதந்தரமாகப் பெற்றுக்கொள்ளவேண்டியதானால், அதற்காக நாம் செய்யவேண்டியது ஒன்றுமில்லை. ஒரு சிறு குழந்தைகூடத் தன் தகப்பனுடைய ஆஸ்தியைச் சுதந்தரித்துக் கொள்ளக்கூடும். ஆகிலும், அந்தப் பிள்ளை ஏதாவது செய்யக்கூடுமா, செய்யவேண்டுமா, செய்யுமா. அது அந்தத் தகப்பனின் பிள்ளையானதினால் யாதொரு பிரயாசையுமில்லாமல் இலவசமாய் அதைப் பெற்றுக்கொள்ளுகிறது. ஆகையால் செய்து சுதந்தரிக்கிறது விபரீதமான விஷயம். அன்றியும், ஒருவன் ஒரு வேலையைச் செய்து பெற்றுக்கொள்ளும் பணம் கூலி என்னப்படும், அது சுதந்தரம் அல்ல. அப்படிப் பார்த்தாலும் செய்து சுதந்தரிக்கிறது கூடாத காரியம். யூதர்களோ பராபரனுடைய இராச்சியம் தங்களுக்குச் சுதந்தரமாய்க் கிடைக்கவேண்டுமென்று நினைத்தார்கள். ஆகிலும், அதைத் தங்களுடைய செய்கையினால், சொந்தப் புண்ணியத்தினால், சம்பாதிக்க ஆசைப்பட்டார்கள். ஒன்றுக்கொன்று விரோதமான இந்த எண்ணங்கள் அவர்களுக்குள் இருந்ததால் அவர்களில் ஒருவன்: நான் என்ன செய்து நித்திய சீவனைச் சுதந்தரித்துக்கொள்வேன் என்று அவரைச் சோதித்தான். நாமோ இந்தக் கேள்வியைக் கொஞ்சம் மாற்றி,



நித்திய சீவன் நமக்கு எப்படிக் கிடைக்கும் என்று பார்ப்போம்.

1. நியாயப்பிரமாணம் இதற்குச் சொல்லும் உத்தரவையும்,
2. சுவிசேஷம் இதற்குச் சொல்லுகிற உத்தரவையும் கேட்போம்.

### 1.

நித்திய சீவன் நமக்கு எப்படிக் கிடைக்கும் என்கிற கேள்விக்கு நியாயப்பிரமாணம் சொல்லுகிற உத்தரவு என்னவென்று பார்ப்போம்.

இதோ, நியாயசாஸ்திரி ஒருவன் எழுந்திருந்து: போதகரே, நான் என்ன செய்து நித்திய சீவனைச் சுதந்தரித்துக்கொள்ளுவேன் என்று அவரைச் சோதித்தான். நியாயசாஸ்திரி என்றால் நியாயப்பிரமாணத்தை நன்றாய்க் கற்றறிந்தவன், அதில் கேட்ட கேள்விக்கெல்லாம் உத்தரவு சொல்லக் கூடியவன். நியாயசாஸ்திரியை வேதபாரகன் என்றும் சொல்லுவார்கள். நியாயசாஸ்திரிகள் ஒருவரோடொருவர் சாமர்த்தியமாய்த் தர்க்கம்பண்ணிக்கொள்ளுகிறதும் உண்டு. நம்முடைய வாக்கியத்தில் சொல்லியிருக்கும் நியாயசாஸ்திரி மற்ற வேதபாரகரைப் போல் போதிக்கிறவனாயிருந்தும், அவ்வளவு பொல்லாதவனாகக் காணப்படுகிறதில்லை. ஏனெனில், இயேசுநாதர் அவனைக் கடிந்துகொள்ளாமல், அவனுக்கு உத்தரவு சொல்லுகிறார். அவன் நித்திய சீவனைப் பெற்றுக்கொள்ள ஆசைப்படுகிறான். நித்திய சீவன் என்றால் மோட்சம். நான் எப்படி மோட்சம் சேருவேன் என்று கவலையோடு கேட்பது ஒவ்வொருவனுக்கும் கடமை. மோட்சம் சேராதவன் நரகம் சேருவது நிச்சயம். ஆகையால், இதைக்குறித்துக் கவலையில்லாதிருப்பது சரியல்ல. இந்த நியாயசாஸ்திரி தான் மோட்சம் சேரும்படி, யாதொன்றைச் செய்ய வேண்டும் என்கிற ஆசையுடையவனாய் இரட்சகரைக் கேள்வி கேட்டான். செய்கையினாலே மோட்சம் போகலாமென்றால், அதை நியாயப்பிரமாணத்தின் வழியாய் அறிந்துகொள்ளலாம். ஆகையால், இயேசுநாதர் அவன் படித்திருந்த நியாயப்பிரமாணத்தை அவனுக்கு நினைப்பூட்டி, அவனுடனே: நியாயப்பிரமாணத்தில் என்ன எழுதியிருக்கிறது, எப்படி வாசிக்கிறாய் என்றார். அவன் பிரத்தியுத்தாரமாக: உன் பராபரனாகிய கர்த்தரை உன் முழு இருதயத்தினாலும், உன் முழு ஆத்துமத்தினாலும், உன் முழு பலத்தினாலும், உன் முழு சிந்தையினாலும், உனக்கடுத்தவனை உன்னைப்போலும் சிநேகிப்பாயாக என்கிறதாய்ச் சொன்னான். அவன் நியாயப்பிரமாணத்தை நன்றாய்ப் படித்திருந்தானென்று இதனால் தெரிகிறது. அவன் சொன்ன உத்தரவை முதல் பங்கு ௫ மோசே 6-ம் அதிகாரத்திலும், அதன்

இரண்டாம் [illegible] மோசே 19-ம் அதிகாரத்திலும் எழுதியிருக்கிறது. இந்த [illegible] இரண்டு வாக்கியங்களையும் அவன் ஒன்றாய்ச் சேர்த்துச் சொன்னது [illegible] சாமர்த்தியந்தான். அவன் உத்தரவு கர்த்தருக்குப் பிரியமாயிருந்தது. ஆகையால், அவர் அவனைப் பார்த்து: நிதானமாய் மறு உத்தரஞ் சொன்னாய்; இப்படிச் செய் அப்போது பிழைப்பாய் என்றார்.

ஒருவன் நியாயப்பிரமாணத்தைப் படித்திருக்கிறது போதாது. அதை ஞாபகத்தில் வைத்திருக்கிறது போதாது. அதைக் குறித்துக் கேள்விகேட்டவர்களுக்கு உத்தரவு சொல்லுகிறது போதாது. நியாயப்பிரமாணம் சொல்லுகிறபடி செய்கிறது அவசியம். அதின்படியே பராபரனை முழு மனதினோடும் சிநேகிக்கவேண்டும். எல்லாவற்றைப்பார்க்கிலும் அவரை அதிகமாய்ச் சிநேகிக்கவேண்டும். அவரைச் சிநேகிக்கும் சிநேகத்துக்கு விரோதமான யாதொரு பாவமும், மனதிலாவது, வாக்கிலாவது, நடக்கையிலாவது இருக்கக்கூடாது. இருந்தால், முதலாம் கற்பலகையில் உள்ள மூன்று கற்பனைகளையும் மீறினவன் ஆவான். அப்படியே ஒவ்வொருவனும் தனக்கடுத்தவனைத் தன்னைப்போல் சிநேகிக்கவேண்டும். தனக்கு மற்றவர்கள் என்னென்ன செய்யவேணுமென்று விரும்புகிறானோ அதையெல்லாம் அவன் தனக்கடுத்தவனுக்குச் செய்யவேண்டும். தனக்கு மற்றவர்கள் என்னென்ன செய்யக் கூடாதென்று விரும்புகிறானோ அதையவன் தனக்கடுத்தவனுக்குச் செய்யக்கூடாது. செய்தால், அவன் இரண்டாம் கற்பலகையிலுள்ள ஏழு கற்பனைகளையும் மீறினவன் ஆவான். பராபரனையும் மனிதரையும் சிநேகித்து, நியாயப்பிரமாணம் சொல்லுகிற எல்லாவற்றையும் யாதொரு குறைவுமில்லாமல் செய்கிறவன் மாத்திரமே மோட்சம் சேருவான், அங்கே பராபரனோடு என்றென்றைக்கும் பிழைப்பான். செய்கையால் மோட்சம் சேர விரும்புகிறவன் நியாயப்பிரமாணம் சொல்லுகிறபடி செய்யவேண்டியது. இப்படிச் செய்யாதவனை நியாயப்பிரமாணம் சபிக்கிறது. அவன் கெட்டே போவான்.

ஆகிலும், நியாயப்பிரமாணம் சொல்லுகிறபடியே பராபரனைச் சிநேகிக்கிறவர்களாவது மனிதரைச் சிநேகிக்கிறவர்களாவது இந்த உலகத்தில் இல்லை என்பது நிசம். பராபரனைச் சிநேகிக்காதவர்களைக் கண்டுபிடிக்கிறதும் குறித்துக் காட்டுகிறதும் வருத்தம். மனிதரைச் சிநேகிக்காதவர்களைச் சுலுவாய்க் கண்டுபிடிக்கலாம். ஆகையால் அந்த நியாயசாஸ்திரி தன்மேல் ஒருவனும் குற்றம் சொல்லக் கூடாதபடிக்கு தான் தனக்கடுத்தவனைத் தன்னைப்போல் சிநேகிக்கிறவனென்று காண்பிக்க விரும்பினான். அவன் தன் சாதியாரை மாத்திரம் தனக்கடுத்தவர்களென்றெண்ணி, அவர்களை மாத்திரம் சிநேகிக்கிற குணமுள்ள



வனாயிருந்ததால்: எனக்கடுத்தவன் யார் என்று இயேசுநாதரைக் கேட்டான். யூதன் மாத்திரம் அவனுக்கடுத்தவனாயிருந்தால் அவன் நீதிமானாய்க் காணப்படுவான். அப்படியில்லாவிட்டால் அவன் நீதிமானல்ல, நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டவனல்ல.

இயேசுநாதர் அவன் கேட்ட கேள்விக்கு உத்தரவாக அவனுக்கு ஒரு சரித்திரத்தைச் சொன்னார். ஒரு மனுஷன் எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போனான். வழியிலே கள்ளர் கையில் அவன் அகப்பட்டான். அந்தக் கள்ளர்கள் அவனைப் பிடித்து அவன் அணிமணி எல்லாம் பிடுங்கிக்கொண்டு, அவனைக் காயப்படுத்தி, அவனைக் குற்றுயிராக விட்டுப்போனார்கள். அவன் வழியருகே கிடந்தான். போகிறவர்களும் வருகிறவர்களும் அவனைப் பார்க்கக் கூடியதாயிருந்தது. வெகுநேரம் அந்தப் பக்கம் ஒருவரும் வரவில்லை. அப்பால் ஒரு ஆசாரியன் அந்த வழியே போனான். இவன் கோயில் உத்தியோகஸ்தனாகிய குரு, நியாயப்பிரமாணம் படித்தறிந்தவன், அதைச் சனங்களுக்குச் சொல்லுகிறவன், அதின்படி ஆராதனை செய்கிறவன். நியாயமானபடி அவன் அந்த ஏழை மனுஷனைப் பார்த்து, அவனுக்கு உதவி செய்திருக்கவேண்டியது. அந்த ஆசாரியனோ அவனைப் பார்த்தும்: அவன் என்ன சாதியானோ, நான் அவனை ஏன் தொட்டுத் தீட்டாகவேண்டுமென்று சொல்லி, இரக்கமில்லாமல் அவனை விட்டு விலகிப்போனான். இப்படியே நியாயப்பிரமாணத்தைக் குறித்துப் பெருமை பாராட்டின அந்த ஆசாரியன் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளாமல் போனான். அந்தப்படியே ஒரு லேவியனும் அந்த இடத்துக்கு வந்து, கள்ளர் கையில் அகப்பட்டவனைக் கண்ணாரக் கண்டும், அவனுக்கு யாதொரு உதவியும் செய்யாமல், பக்கமாய் விலகிப்போனான். இந்த லேவியனும் நியாயப்பிரமாணத்தைக் குறித்து மேன்மை பாராட்டினவன், ஆசாரியனைப்போலவே கோயில் உத்தியோகஸ்தன். என்றாலும் அவனும் நியாயப்பிரமாணத்தின்படி செய்யவில்லை. இவன் யாரோ எவனோ, நமக்கென்னவென்று போய்விட்டான். இந்த இரண்டு பேருக்குப் பின் அந்த வழியிலே சமாரியன் ஒருவன் வந்தான். இவன் யூதனல்ல, தப்பறையான கொள்கைக்காரன். அவன், கள்ளர் கையில் அகப்பட்டு அவஸ்தையாய்க் கிடந்த அந்த ஏழை மனுஷனைப் பார்த்தான், மனதுருகினான், அவனண்டை நெருங்கிப்போய், அவனைத் தூக்கி நிமிர்த்தினான். அவனுடைய காயங்களைக் கழுவி மருந்துபோட்டுக் கட்டினான். பிறகு அவனைத் தான் ஏறிவந்த வாகனத்தின்மேல் ஏற்றி, அவனைப் பத்திரமாய்ப் பிடித்துக்கொண்டு நடந்து, ஒரு சத்திரத்திலே கொண்டுவந்து [illegible] அவனைப் பராமரிப்பதற்கு ஏற்பாடு செய்தான். யூத

னால் ஈன சாதியானென்று எண்ணப்பட்ட சமாரியனாகிய இவனே கள்ளர் கையில் அகப்பட்ட ஏழை மனுஷனைத் தனக்கடுத்தவனென்றும், தன்னை அவனுக்கடுத்தவனென்றும் எண்ணி, அதற்கேற்றபடி நடந்துகொண்டான். நியாயத்திற்கு ஆசாரியன் லேவியன் சமாரியன் இந்த மூன்றுபேரும் கள்ளர் கையில் அகப்பட்டவனுக்கு அடுத்தவர்களே. கள்ளர் கையிலகப்பட்டவன் இந்த மூன்றுபேருக்கும் அடுத்தவனே. ஆகிலும், அந்த மூன்றுபேரில் ஒருவன் மாத்திரம் தன்னுடைய கடமைப்படி செய்தான். நம்முடைய இரட்சகர் நியாய சாஸ்திரியின் மனச்சாட்சியைத் தட்டியெழுப்ப மனங்கொண்டு: இப்போதும் கள்ளர் கையில் அகப்பட்டவனுக்கு இந்த மூன்றுபேர்களில் ஆர் அடுத்தவனாக உனக்குக் காணுகிறது என்றார். அவன் இரக்கத்தை அவனிடத்தில் செய்தவனே என்றான். ஆகையால், இயேசு அவனுடனே: நீ போய், நீயும் அந்தப்படிச் செய் என்றார். இப்படியே செய்கையினால் மோட்சம் அடைய விரும்பினவனுக்கு: செய் என்கிற மறு உத்தரவு வந்தது. இந்த உத்தரவை இயேசுநாதர் நியாயப்பிரமாணத்தின்படியே சொன்னார். ஆகையால் நித்திய ஜீவன் நமக்கு எப்படிக் கிடைக்கும் என்கிற கேள்விக்கு நியாயப்பிரமாணம் சொல்லுகிற உத்தரவு: இப்படிச்செய் அப்போது பிழைப்பாய் என்பதே.

இந்த உத்தரவின்படி அந்த நியாயசாஸ்திரியாவது மற்றெந்தமனுஷனாவது செய்யமுடியாது. செய்யமுடியாதவன் நித்திய ஜீவனை அடையவும் முடியாது. ஆகையால், நியாயப்பிரமாண வழியாய் மோட்சம் கிடைக்கமாட்டாது. பாவத்தில் விழாத தேவதூதர்களுக்கும் மனிதருக்கும் நியாயப்பிரமாண வழி மோட்சவழியாயிருந்தும், பாவத்தில் விழுந்த மனிதருக்கு இது வழியல்ல. அப்படியானால், பராபரன்: நியாயப்பிரமாணத்தைப் பாவமுள்ள மனிதருக்கு ஏன் கொடுத்தாரென்று கேட்போம். நாம் எல்லாரும் பாவிகளென்று அதினால் அறிந்துகொள்ளும்படிக்கே பராபரன் அதை நமக்குக் கொடுத்தார். ஆகையால் பத்துக்கற்பனையின்படியே நாம் நம்மைத் தினந்தோறும் சோதித்துப் பார்ப்போமாக. அதினால் நாம் நம்மைப் பாவிகளென்று கண்டு, நம்முடைய இரட்சிப்புக்காகக் கவலைப்படுவோம்.

2.

நாம் நித்திய ஜீவனை அடைவது எப்படியென்கிற கேள்விக்குச் சுவிசேஷம் சொல்லுகிற உத்தரவு என்னவென்று பார்ப்போம். அதைக் குறித்து நம்முடைய இரட்சகர்: நீங்கள் பார்க்கிறதுகளைப் பார்க்குங் கண்கள் பாக்கியமுள்ளதுகள். ஏனெனில், அநேகந் தீர்க்கதரிசிகளும் இராசாக்களும் நீங்



கள் பார்க்கிறதுகளைக் காணவும், நீங்கள் கேட்கிறதுகளைக் கேட்கவும் ஆசையாயிருந்தும், காணாமலும் கேளாமலும் போனார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று தம்முடைய சீஷருக்குச் சொன்னார். சாலொமோன் என்ற பெரிய இராசாவைப் பார்க்கும்படி சேபா என்ற ஒரு இராசாத்தி தூரதேசத்திலிருந்து வந்தாள். அவள் அந்த இராசாவின் ஞானமுள்ள வார்த்தைகளைக் கேட்டு, அவருக்கிருந்த செல்வாக்கையும், வாழ்வையும் கண்டபொழுது: எப்போதும் உமக்கு முன்பாக நின்று உம்முடைய ஞானத்தைக் கேட்கிற இந்த உம்முடைய ஊழியக்காரர் பாக்கியவான்கள் என்று சொன்னாள். இயேசுநாதரோ சாலொமோன் இராசாவைப் பார்க்கிலும் பெரியவர். அவரைப் பார்க்கிற கண்களும் அவர் சொல்லைக் கேட்கிற காதுகளும் பாக்கியமுள்ளவைகளே. பழைய ஏற்பாட்டின் விசுவாசிகள் எல்லாரும் இவரைப் பார்ப்பதற்கு ஆசைப்பட்டார்கள். ஆதாமும் ஏவாளும் காயீன் பிறந்தபொழுது, இரட்சகரே பிறந்துவிட்டதாக நினைத்துச் சந்தோஷப்பட்டார்கள். அவர்கள் சந்தோஷம் வீணாய்ப்போயிற்று, அவர்கள் இரட்சகரைச் சரீரக் கண்களால் காணவில்லை. மோசே, ஏசாயா முதலிய தீர்க்கதரிசிகள் இவரைப் பார்ப்பதற்கு ஆசைப்பட்டார்கள். இவரைக் குறித்து தீர்க்கதரிசனம் சொன்னார்கள். ஆகிலும், அவரைக் கண்ணால் பார்க்காமலே போனார்கள். தாவீது, சாலொமோன், எசேக்கியா, யோசியா முதலிய இராசாக்கள் இரட்சகரைக் காண ஆசைப்பட்டார்கள். அவரைக் காணாமலே மரித்தார்கள். தீர்க்கதரிசிகளும் இராசாக்களும் அவரைச் சரீரக்கண்ணால் காணாவிட்டாலும் விசுவாசக் கண்ணால் கண்டார்கள். ஆதலால் இயேசு இரட்சகர்: ஆபிரகாம் என்னுடைய நாளைக் காண ஆசையாய்க் களிகூர்ந்தான் கண்டும் சந்தோஷப்பட்டான் என்று ஒரு சமயத்தில் சொன்னார் (யோ. 8, 56). இயேசுநாதருடைய சீஷர்களோ அவரைச் சரீரக் கண்ணினாலும் ஞானக்கண்ணினாலும் கண்டார்கள், அவருடைய பிரசங்கத்தைக் காதாரக் கேட்டார்கள், அவர் செய்த அற்புதக் கிரியைகளை நேர் நேரே பார்த்தார்கள், அவர்கள் அவரைக் கர்த்தர் ஆண்டவரென்றும் இரட்சகர் என்றும் விசுவாசித்தார்கள். ஆகையால் அவரை நோக்கி: ஆண்டவரே ஆரண்டைக்குப் போவோம்; உம்மிடம் நித்திய ஜீவனுடைய வசனங்கள் உண்டாயிருக்கிறது. நீர் ஜீவனுள்ள பராபரனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்கிறதை நாங்கள் விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறோம் என்று சொன்னார்கள் (யோவா. 6. 68, 69).

ஆகிலும், அவரைக் கண்ணால் கண்டவர்கள் எல்லாரும் பாக்கியவான்களென்று சொல்லக்கூடாது. யூதர்களில் மிச்சமானவர்கள் அவரைக் கண்ணாலே மாத்திரம் கண்டார்கள்.

அவர்கள் மனக்கண் குருடாயிருந்தது. மனதிலே அவரைப் பகைத்தார்கள். ஆகையால், அவர்கள் அவரைக் கண்டதினால் பிரயோசனம் என்ன. காயிபா என்ற பிரதான ஆசாரியன் இயேசுநாதரை முகமுகமாய்க் கண்டான். ஏரோதே இராசா, பொந்தியுபிலாத்து முதலிய அநேகர் அவரைக் கண்ணாரக் கண்டும், காரியமில்லை. அவரை விசுவாசக் கண்களால் கண்டவர்களே பாக்கியவான்கள். அவர்கள் இம்மையிலும் பாக்கியவான்கள், மறுமையிலும் பாக்கியவான்கள். இதற்குக் காரணம் என்ன.

மனிதர் பராபரனுடைய கற்பனைகளை மீறி நடந்த பாவத்தையெல்லாம் இயேசுநாதர் சுமந்தார். அவர் உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தெய்வ ஆட்டுக்குட்டியானார். பாவிகள் படவேண்டிய ஆக்கினையெல்லாம அவர் பட்டார். பாவிகள் அடையவேண்டிய மரணம் அவருக்கு வந்தது. அவர் பாவிகளுடைய சரீரத்துக்கும் ஆத்துமத்துக்கும் பாவத்தினால் வந்த சாபத்தையெல்லாம் நீக்கினார். அவர் மரணத்தைச் செயித்து வெற்றிவேந்தராக எழுந்தருளினார். ஆகையால், அவர் தம்மை எல்லோரும் விசுவாசித்து இரட்சிப்படையவேண்டுமென்று கூறினார். கண்டு விசுவாசிக்கிறவர்களைப் பார்க்கிலும் காணாமல் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்களென்று அவர் தோமாவுக்குச் சொன்னார். இப்பொழுது நாமெல்லாரும் அவரைக் காணாமல் விசுவாசிக்கிறோம். அவரை விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்களே.

இப்பொழுது நித்திய சீவனை நாம் அடைவதெப்படி என்கிற கேள்விக்குச் சுவிசேஷம் சொல்லுகிற உத்தரவு என்ன. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்போது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்கிறது. இரட்சிப்பு என்றாலும், பாக்கியம் என்றாலும், நித்திய சீவன் என்றாலும், எல்லாம் ஒன்றையே குறிக்கும். இப்படிச் செய் அப்போது பிழைப்பாய் என்று நியாயப்பிரமாணம் சொல்லுகிறதை நிறைவேற்ற நம்மால் இல்லை. நாம் கர்த்தருடைய சித்தத்தின்படி இயேசுவையே விசுவாசிப்போம். இயேசுவை விசுவாசிக்கிறவர்கள் பாவமன்னிப்பைப் பெற்று, நரகத்துக்குத் தப்பி, பிழைப்பார்கள். இந்த விசுவாசத்தை நமக்குக் கொடுக்கிறவர் பரிசுத்த ஆவி. அவர் சுவிசேஷத்தைக் கேட்கிறவர்களுக்குள்ளும் ஞானஸ்நானம் பெற்றுப் பரிசுத்த இராப்போசனத்தை வாங்குகிறவர்களுக்குள்ளும் விசுவாசத்தை உண்டுபண்ணுகிறார். அவரே விசுவாசிகளைப் போதிக்கிறவர், எல்லாச் சத்தியத்துக்குள்ளும் வழிநடத்துகிறவர், எல்லாரையும் பாக்கியவான்களாக்குகிறவர். ஆகையால், அவருடைய கிரியைக்குத் தன்னை முழுவதும் ஒப்புக்கொடுத்தவன் பாக்கியவான். அவன் கண் திறந்து இயேசு-



வைப் பார்க்கிறான், செவி திறந்து அவர் சொல்லைக் கேட்கிறான். எவனொருவன் நித்திய சீவனையடைய விரும்புகிறானோ அவன் சுவிசேஷம் சொல்லுகிறபடி இயேசுவை விசுவாசிக்கக்கடவான்.

சகோதரர்களே, நாம் இயேசுவை நம்முடைய விசுவாசக்கண்களால் காண்கிறோமா. அவருடைய மதுரமான வாக்கை விசுவாசக் காதுகளால் கேட்கிறோமா. இன்றைக்கு நாம் நம்முடைய இரட்சகரைக் காணவும் அவருடைய வசனத்தைக் கேட்கவும் அவரால் பாக்கியம் அடையவும் நமக்கு நல்ல சமயம் இருக்கிறது. இப்பொழுதே நாம் அவரை நோக்கிப் பார்ப்போமாக, அவருடைய வசனத்தைக் கவனமாய்க் கேட்போமாக. அவருக்குள் நமக்கு அருளப்படும் மெய்யான பாக்கியத்தை அடைவோமாக.

இயேசுவே, எங்கள் அருமை இரட்சகரே, நாங்கள் உம்முடைய கற்பனையின்படி நடவாத பெரும் பாவிகள். தேவரீர் எங்கள் பாவங்களை மன்னித்து, உம்முடைய இரட்சிப்பின் சந்தோஷத்தை எங்களுக்குக் கட்டளையிடும். நாங்கள் எந்நேரமும் உம்மையே நோக்கிப்பார்த்து, உம்மிலே மெய்ப்பாக்கியம் கண்டடைய எங்களுக்கு ஒத்தாசை செய்தருளும், சுவாமி, ஆமென்.

---

## திரித்துவப் பண்டிகைக்குப் பிந்தின ௰௪-ம் ஞாயிறு.

லூக். 17, 11—19.

பிரியமானவர்களே,

நெருக்கப்படுகிற நாளிலே நம்மை நோக்கிக் கூப்பிடு; அப்பொழுது உன்னை விடுவிப்போம், அதற்காக நீ நம்மை மகிமைப்படுத்தக்கடவாய் என்று கர்த்தர் சொல்லுகிறார் (சங். 50, 15). ஆகையால் கர்த்தரை நாம் எப்போதும் நோக்கவேண்டும். நெருக்கத்தில் கூப்பிடவும், மற்றநேரத்தில் ஸ்தோத்திரம் செலுத்தவுமே நாம் அவரை நோக்கவேண்டும். மனிதரோ தங்களுக்கு உண்டாகும் நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவார்கள். சகாயம் கிடைத்தபின் அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்துதல் மிகவும் அருமை. நம்முடைய சுவிசேஷவாக்கியத்திலே கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தாத சில மனுஷரைப் பார்க்கிறோம். அவர்களைப் பற்றிக் கர்த்தர் விசனப்பட்டார். நன்றியறிந்த ஸ்தோத்திரம் செலுத்தின ஒருவனைப் புகழ்ந்து, ஆசீர்வதித்தார். மெய்க்கிறிஸ்தவர்கள் கர்த்தரை எப்பொழுதும் ஸ்தோத்திரிக்கிறார்கள். விசேஷமாகத் தங்கள் செபத்தைக் கர்த்தர் கேட்டுத் தங்களுக்குச் சகாயம் செய்தபின்

அவருக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்ய மறக்கவேமாட்டார்கள். நாம் மெய்விசுவாசிகளேயானால், எப்பொழுதும் கர்த்தருடைய நாமத்தை வணங்கி வேண்டிக்கொண்டு புகழ்ந்து ஸ்தோத்திரிப்போம். நாம் இன்று சுவிசேஷ வாக்கியத்தின்படி:

நாம் எப்பொழுதும் இயேசுவை நோக்கக் கடவோம்.

1. நம்முடைய இக்கட்டில் அவரை நோக்கிக் கூப்பிடவும்,
2. நமது சுகத்தில் அவரை ஸ்தோத்திரிக்கவும் கடவோம்.

## 1.

நாம் நம்முடைய இக்கட்டிலே கர்த்தரை நோக்கிக் கூப்பிடக்கடவோம்.

இயேசுநாதர் எருசலேமுக்குப் பயணம் பண்ணுகையில், அவர் சமாரியாவையும் கலிலேயாவையும் உருவ நடந்துவந்தார். அவர் ஒரு கிராமத்துக்குள் பிரவேசித்தபொழுது, குஷ்டரோகமுள்ள பத்து மனுஷர் அவருக்கு எதிரே வந்து, தூரத்திலே நின்று: இயேசு ஐயரே, எங்கள்மேல் இரங்குமென்று சத்தமிட்டார்கள்.

நாம் இங்கே நிர்ப்பந்தமான பத்து மனுஷர்களைப் பார்க்கிறோம். அவர்கள் குஷ்டரோகிகள். குஷ்டம் கொடுமையான வியாதி. அது மனுஷருடைய சரீரத்தைக் கொஞ்சம் கொஞ்சமாய்த் தின்று, அவர்களைக் கொஞ்சம் கொஞ்சமாய்க் கொல்லுகிற வியாதி. பராபரன் இந்த வியாதியைப் பாவத்திற்கு விசேஷித்த தண்டனையாக அனுப்புகிறதுண்டு. கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்தில் துணிகரமாய்ப் பிரவேசித்த உசியா என்ற இராசாவுக்குக் கர்த்தர் குஷ்டரோகத்தை வரவிட்டாரென்று வாசிக்கிறோம். அது மகா அசுத்தமான வியாதி. அந்த வியாதியுள்ளவர்களைக் கண்ணாலே பார்ப்பது மகா வருத்தத்தைக் கொடுக்கும். அவர்களைத் தொட ஒருவருக்கும் மனசு வராது. அது தொத்து வியாதி. குஷ்டரோகிகளோடு நெருங்கிப் பழகுகிறவர்கள் அநேகமாய்க் குஷ்டரோகிகளாவார்கள். ஆகையால் பராபரன் குஷ்டரோகிகளைப் பட்டணத்துக்குப் புறம்பே குடியிருக்கக் கட்டளையிட்டார். குஷ்ட வியாதி சுகமாகக்கூடிய வியாதியல்ல, அது பராபரனுடைய விசேஷித்த அற்புதத்தினால் நீங்கக்கூடியதே ஒழிய மருந்தினால் சுகமாகக்கூடியதல்ல. சீரிய தேசத்து இராசாவினுடைய படைத்தலைவனாகிய நாகமான் என்கிறவன் குஷ்டரோகியாயிருந்தான். அவன் இஸ்ரவேல் தேசத்திலே எலிசா தீர்க்கதரிசியினால் தன் வியாதி தீரும் என்று கேள்விப்பட்டான். அவன் தன் இராசாவினிடத்திலே இஸ்ரவேல் இராசாவுக்கு ஒரு நிருபம் வாங்கிக்கொண்டு இஸ்ரவேல் தேசத்திற்கு வந்தான்.



வந்து, இராசாவுக்குக் கடிதத்தைக் கொடுத்தபொழுது, அவன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு: ஒரு மனுஷனை அவன் குஷ்டரோகத்துக்கு நீங்கலாக்கிவிட அவன் என்னண்டைக்கு நிருபம் அனுப்புகிறதற்கு நான் கொல்லவும் உயிர்ப்பிக்கவும் தக்க தேவனோ (௨ இராசா 5, 7) என்று கூவினதாக வாசிக்கிறோம். குஷ்டரோகம் மனிதரால் சுகமாகக்கூடிய வியாதியல்லவென்று இதனால் அறியலாம். நமது வாக்கியத்தில் சொல்லப்பட்ட குஷ்டரோகிகள் பத்துப்பேரும் கலிலேயாவிலும் சமாரியாவிலுமிருந்து வந்து ஒன்றாய்க் கூடினவர்கள். அவர்கள் சுகமாயிருக்கும் காலத்திலே ஒருவரையொருவர் விரோதிப்பார்கள். அவர்களுக்கு ஒரேவித உபத்திரவம் இருந்ததால், அவர்கள் எல்லா விரோதத்தையும் ஒழித்து, ஒரு இடத்தில் கூடி, ஒருவருக்கொருவர் உதவிசெய்துகொண்டார்கள். அவர்கள் மற்ற மனுஷரோடு நெருங்கிப் பேச உத்தரவு இல்லாமையால் தூர நின்றார்கள்.

இவர்கள் இயேசுநாதர் செய்த அநேக அற்புதங்களைக் குறித்துக் கேள்விப்பட்டதினால், தங்கள் குஷ்டரோகத்தை நீக்கித் தங்களுக்குச் சுகம் கொடுப்பாரென்று நம்பினார்கள். அவர் நிர்ப்பந்தப்பட்டவர்களுக்கு இரங்குகிறவரென்று அறிந்து அவர்கள் அவரிடத்தில் இரக்கத்தைத் தேடினார்கள். இப்படியே அவர்கள் இயேசுவை நோக்கிச் சத்தமிட்டுக் கூப்பிட்டது நல்ல காரியமே. ஒருவனுடைய வியாதியும் துன்பமும் அவனை இயேசுவினிடம் வழிநடத்தினால் அதுவே நல்லது. எத்தனை பேர் இப்படிச் செய்யாமல், பொய்யான தேவர்களையும் பிசாசுக்களையும் நோக்கிக் கூப்பிடுவார்கள். கிறிஸ்தவர்களில் சிலர் பரிசுத்தவான்களையும் தேவதூதர்களையும் நோக்கி வேண்டிக்கொள்ளுவார்கள். இது சரியல்ல. ஏனெனில், பூமியின் எல்லா எல்லைகளே, நம்மை நோக்கிப் பாருங்கள்; நாமே பராபரன் வேறொருவரும் இல்லை என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆகையினால் இக்கட்டு நேரத்தில் அவரை நோக்கிக் கூப்பிடவேண்டும்.

மேலும், அவர்கள் செய்த செபத்தில் சிநேகம் விளங்குகிறது. அவர்களில் ஒவ்வொருவனும் என் மேல் இரங்குமென்று சொல்லித் தனக்காக மாத்திரம் செபம் செய்யவில்லை. எங்கள் மேலிரங்கும் என்று பொதுப்படக் கூப்பிட்டார்கள். இப்படிச் செபம் செய்யக் கர்த்தருடைய செபத்திலே இயேசுநாதர் நமக்குக் கற்றுக்கொடுத்திருக்கிறார். அவர்கள் செபம் தாழ்மையான செபமாயிருந்தது. கர்த்தர் தங்களுக்கு யாதொரு நன்மையும் செய்யத் தங்களிடத்தில் யாதொரு பாத்திரமுமில்லை, அவர் சுத்த இரக்கத்தினால் மாத்திரம் அதைச் செய்யவேண்டுமென்று அவர்கள் கூப்பிட்டார்கள். அவர்கள் செய்த செபம் வீணாய்ப் போக

வில்லை. இயேசு இரட்சகருடைய இரக்கமுள்ள கண் அவர்கள் மேல் பட்டது. அவருடைய இரக்கமுள்ள மனசு அவர்களுக்காகப் பரிதபித்தது. ஆகையால் அவர்களை அவர் கண்டு: நீங்கள் போய் உங்களை ஆசாரியர்களுக்குக் காண்பியுங்கள் என்று சொன்னார். நாமும் நம்முடைய உபத்திரவத்தில் கர்த்தரை நோக்கிக் கூப்பிடும்பொழுது ஒரு தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல் அவர் நமக்கு இரங்குகிறார். ஒரு நல்ல வைத்தியனைப் போல் நம்மைக் கவனத்தோடு பார்க்கிறார். அவருடைய வல்லமையுள்ள வார்த்தையால் நமக்குச் சகாயம் செய்கிறார். இயேசுநாதர்: எனக்குச் சித்தமுண்டு, நீ சுத்தமாகு என்று முன்னொரு குஷ்டரோகிக்குச் சொன்னதினால் அவனுடைய குஷ்டம் நீங்கிற்று. இங்கேயோ அப்படிச் சொல்லவில்லை. இங்கே வேறு விதமாகச் செய்கிறார். அந்தக் குஷ்டரோகிகளுடைய விசுவாசத்தைச் சோதிக்கும்படிக்கு அவர்களை ஆசாரியரிடம் போகச் சொல்லுகிறார். தாங்கள் குஷ்டரோகிகளாயிருக்கும்பொழுது ஆசாரியரிடம் போய்த் தங்களைக் காண்பிக்கிறது சரியல்லவென்று அவர்களுக்குத் தெரியும். குஷ்டரோகம் சுகமான பின் அவர்கள் போயிருக்க வேண்டியது. என்றாலும், இயேசுநாதருடைய வார்த்தை பலத்தால் தங்களுக்குச் சுகம் கிடைக்குமென்றும், தாங்கள் ஆசாரியரண்டைக்குப் போகும் முன் தங்கள் குஷ்டரோகம் முற்றிலும் நீங்கிவிடுமென்று அவர்கள் நம்பவேண்டியிருந்தது. அப்படியே அவர்கள் நம்பினார்கள். கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து ஆசாரியரண்டைக்குப் போனார்கள். அவருடைய வார்த்தை வீணாய்ப் போகவில்லை. அப்போது சம்பவித்ததேதென்றால், அவர்கள் போகையில் சுத்தமானார்கள் என்று வாசிக்கிறோம்.

இயேசுநாதர் இப்பொழுதும் இரக்கமுள்ளவராயிருக்கிறார். அவரை நோக்கிக் கூப்பிடுகிறவர்களுக்கு அவர் இரக்கம் காண்பிப்பார். அவர் இன்னமும் வல்லமையுடையவர். ஏழை அடிமைபோல் இந்த உலகத்தில் சஞ்சரித்தபொழுது அற்புதம் செய்தவர், தமது பிதாவின் வலதுபாரிசத்தில் உட்கார்ந்திருக்கிற இந்தக்காலத்திலே அற்புதம் செய்யக்கூடாதவராயிருப்பாரா. ஆகையால் நாம் அவருடைய வல்லமையை இப்பொழுதும் நம்பி, நமக்கு வரும் சகல இக்கட்டிலும் அவரை நோக்கிக் கூப்பிடலாம். அவர் நமக்குச் சகாயம் செய்வார்.

சரீரநோவைப் பார்க்கிலும் ஆத்தும நோவு பயங்கரமானது. குஷ்டரோகத்தைப் பார்க்கிலும் பொல்லாத வியாதி பாவம். பாவக் குஷ்டம் நம்மைப் பராபரனுடைய ஐக்கியத்திற்குப் புறம்பாக்குகிறது. அது பொல்லாத தொத்து வியாதி. அது ஆதாமிலிருந்து தொத்திக்கொண்டே வந்து நம்மையும் பிடித்திருக்கிறது. நம்மிலிருந்து மற்றவர்களையும் பிடிக்கிறது.



இதைச் சுகமாக்கக் கூடியவர் கர்த்தர் ஒருவரே. பாவக் குஷ்டத்தின் கொடுமையை உணர்ந்த தாவீது இராசா: நான் சுத்தமாவதற்கு நீர் ஈசோப்பால் என்னைப் பாவமறப்பண்ணி, நான் உறைந்த மழையிலும் வெண்மையாவதற்கு என்னைக் கழுவுவீராக என்று செபம்பண்ணினார் (சங். 51, 9). எலிசா தீர்க்கதரிசி தன்னிடத்தில் வந்த குஷ்டரோகியாகிய நாகமானை யோர்தான் ஆற்றுக்கு அனுப்பி, அதில் ஏழுதரம் முழுகச் சொன்னார். முழுகினபோது அவன் குஷ்டரோகம் நீங்கிச் சுத்தமானான். நாம் எந்த ஆற்றண்டை போவோம். எங்கே முழுகுவோம். நமக்காகத் தம்முடைய பரிசுத்த இரத்தத்தைச் சிந்தின இயேசுவண்டைக்கே போவோம். அவருடைய பரிசுத்த இரத்தம் நம்மை எல்லாப் பாவமும் நீங்கச் சுத்திகரிக்கிறது. கிறிஸ்துவின் வார்த்தையினால் சுத்தமாய்ப் போன குஷ்டரோகிகளை ஆசாரியர் பார்த்தபொழுது அவர்களைச் சனத்தின் ஐக்கியத்தில் தடையின்றி ஏற்றுக்கொண்டார்கள். இயேசுநாதர் நம்மைச் சுத்தமாக்கும்பொழுது ஒருவரும் நம்மைக் குற்றம்சாட்ட முடியாது. பராபரன் தெரிந்துகொண்டவர்களைக் குற்றஞ் சுமத்துபவன் ஆர்; பராபரன்தான் நீதிமான்களாக்குகிறவர். ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பவன் ஆர். கிறிஸ்து தான் மரித்தவர், இதிலும் அதிகமாக அவர் எழுந்தவருமாமே, அவர் பராபரனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறாரே, அவர் நமக்காக வேண்டுதலும் செய்கிறாரே (ரோம. 8, 33. 34).

## 2.

### நமது சுகத்தில் நாம் கர்த்தரை நோக்கி ஸ்தோத்திரிக்கவேண்டும்.

அவர்களில் ஒருவன் தான் ஆரோக்கியமானதைக் கண்டு, திரும்பிவந்து, மகா சத்தத்துடனே பராபரனை மகிமைப்படுத்தி, அவருடைய பாதத்தண்டையிலே முகங்குப்புற விழுந்து, அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினான்; அவன் சமாரியனாயிருந்தானென்று வாசிக்கிறோம். பத்துக் குஷ்டரோகிகளுக்கும் ஒரே வித வியாதியிருந்தது. அவர்கள் ஒரேவிதமாய் இயேசுவை நோக்கிக் கூப்பிட்டார்கள். அவர்களுக்கு ஒரேவித உத்தரவை அருளிச்செய்தார். ஒரேவித சகாயம் அவர்களுக்குக் கிடைத்தது. எல்லாரும் சுகமானார்கள். இம்மட்டும் ஒரே விதமாய் யாவையும் அனுபவித்தவர்கள் இது முதல் இரண்டு பங்காய்ப் பிரிந்துபோகிறார்கள். அவர்களில் ஒன்பது பேர் ஒரு பக்கம், ஒருவன் ஒரு பக்கம். பத்துப்பேர் சுகமடைந்தும், ஒன்பதுபேர் தங்கள் உபகாரியை உடனே மறந்துவிட்டார்கள். அவர்கள் ஆசாரியருக்குத் தங்களைக் காண்பித்து, கற்பனைப்படி காணிக்கை

செலுத்தினபின் தங்கள் வீடுகளுக்குப் போய்விட்டார்கள். ஒரே ஒருவன் மாத்திரம் தன் உபகாரியை மறவாதிருந்தான். அவர் செய்த நன்றியை அவன் மறக்கவில்லை. அவன் இயேசுவண்டை திரும்பி வந்து, அவருக்குத் துதி செலுத்தினான். அவன் சகாயம் தேடிக் கூப்பிட்டபொழுது எப்படிச் சத்தம் பண்ணினானோ, அப்படியே கர்த்தரை மகிமைப்படுத்தி ஸ்தோத்திரம் செலுத்தும் பொழுதும் சத்தம் பண்ணினான். அவனுடைய நன்றியறிதல் பெரிதாயிருந்தது. அவன் கர்த்தருடைய பாதத்தண்டை முகங்குப்புற விழுந்ததினால் அவனுடைய தாழ்மை விளங்கிற்று.

மனிதருக்கு நன்றிகேடு சாதாரணம். நன்றிகேட்டைப் பார்ப்பது கர்த்தருக்கு மகா வருத்தம். ஆகையினால், இயேசுநாதர்: பத்துப்பேரும் சுத்தமானதில்லையோ, அந்த ஒன்பதுபேரோ எங்கே; இந்த மறுசாதியானே ஒழிய, மற்றொருவனும் பராபரனுக்கு மகிமைசெலுத்துவதற்குத் திரும்பி வரக் காணோமோ என்று சொல்லி, தம்முடைய விசனத்தை வெளிப்படுத்தினார். நாம் பராபரனை மகிமைப்படுத்துவதற்குப் போர்ந்த நியாயமுண்டு. நம்முடைய இக்கட்டிலே உதவிசெய்யும் அவருடைய வல்லமையை நாம் புகழவேண்டாமா. நாம் அவருக்குக் கொடுத்த வார்த்தைப்பாட்டை மறந்து நடந்தும், அவர் தம்முடைய வார்த்தைப்பாட்டைக் காத்துவருகிற உண்மையைப் புகழவேண்டாமா. அவருடைய ஒப்பில்லாத சிநேகத்தினால் நம்மைச் சிநேகித்தாரே. இது நாம் புகழத்தக்கதல்லவா. நமக்கு வந்த தீமையை எல்லாம் நன்மையாக முடித்த அவருடைய ஞானத்தை மகிமைப்படுத்த வேண்டியதில்லையா. அவரை நாம் மகிமைப்படுத்தி அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தாதிருப்பது மகா பெரிய பாதகம். நன்றியற்ற வீடு பன்றியிருக்கும் கூடு என்று சொல்லப்படும்.

ஒன்பதுபேரில் ஒருவனுடைய நன்றியறிதலைப் பார்த்த கர்த்தர் அவனுடனே: எழுந்திருந்து போ, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். நன்றியில்லாத விசுவாசம் விசுவாசம் அல்ல. ஆகையினால், நன்றியற்ற அந்த ஒன்பது பேருடைய விசுவாசத்தைக் குறித்துக் கர்த்தர் ஒன்றும் பேசுகிறதில்லை. இந்த ஒருவனுடைய விசுவாசத்தைக் குறித்து மாத்திரம் பேசுகிறார். அந்த ஒன்பது பேரும் தெய்வாலயத்திலே கர்த்தருடைய கற்பனையின்படி காணிக்கை செலுத்தியும், அது அவருக்குப் பிரியமல்ல. கையின் காணிக்கையைப் பார்க்கிலும், நன்றியறிந்த இருதயமே அவருக்குப் பிரியம். ஆகையால் நம்முடைய பராபரன் நம்மில் ஒவ்வொருவரையும் நோக்கி: மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா என்று கூப்பிடுகிறார். "நம்முடைய வாயுமல்ல, கையுமல்ல, காசுமல்ல, பணமுமல்ல, நம்முடைய இருதயமே அவருக்குத் தேவை. தன்னுடைய இருதயத்தைக் கர்த்தருக்கு ஒப்புவித்தவன் மற்றவைகளையெல்லாம் உற்சாகமாய் ஒப்புவிப்பான்.



கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினவன் யூதசாதிக்குப் புறம்பான சமாரியன். சமாரியரென்றால் யூதருக்கு அருவருப்பு. இயேசுநாதருக்கோ எந்தச் சாதியானாயிருந்தாலும், அவன் விசுவாசமும் நன்றியறிதலும் உள்ளவனாயிருப்பானானால் போதும். அவன் மேல் அவர் பிரியமாயிருக்கிறார். இந்தச் சமாரியன் கர்த்தருக்குப் பிரியமாயிருந்தான். அவன் மற்ற ஒன்பது பேரும் பெற்றுக்கொள்ளாத பெரிய நன்மையைப் பெற்றுக்கொண்டான். அவர்கள் சரீர சுகத்தை மாத்திரம் பெற்றனுபவித்தார்கள். ஆத்தும சுகம் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. இயேசுநாதர் அவர்களுக்குச் சரீர சுகத்தைக் கொடுத்தது என்னத்துக்கு. ஆத்தும சுகத்தைக் கொடுக்கிற தம்மை அவர்கள் தேடிவரவேண்டும் என்கிற நோக்கத்தினாலே தான். அவர்கள் அவரைத் தேடித் திரும்பாததினால் இந்த நன்மை அவர்களுக்குக் கிடைக்காமல் போயிற்று. இந்தச் சமாரியனோ கர்த்தருக்கு ஸ்தோத்திரத்தைச் செலுத்தினதினால் கர்த்தர் அவனைப் பார்த்து: எழுந்திருந்து போ, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். இஸ்தோத்திரத்தைப் பலியிடுகிறவன் நம்மை மகிமைப்படுத்துகிறான், இப்படி வழியை ஆயத்தப்படுத்துகிறவனுக்குப் பராபரனுடைய இரட்சிப்பைக் காண்பிப்போம் (சங். 50, 23) என்ற வார்த்தையின்படி கர்த்தர் அவனுக்குத் தம்முடைய இரட்சிப்பைக் காண்பித்தார். அவனுக்குச் சரீர சுகம் மாத்திரம் அல்ல, ஆத்தும சுகமும் கிடைத்தது. கர்த்தர் அவனுடைய பாவங்களை எல்லாம் அவனுக்கு மன்னித்து, அவனைத் தம்முடைய சீஷனாக்கிக்கொண்டார். இது முதல் அவன் இயேசுவைக் குஷ்டரோகம் தீர்த்த உபகாரியாக மாத்திரம் அல்ல, தன் பாவரோகம் தீர்த்த இரட்சகராக ஒப்புக்கொண்டான்.

பிரியமானவர்களே, நமக்குக் கர்த்தர் எத்தனை உபகாரங்களைச் செய்திருக்கிறார். அவைகளை நாம் மறக்கலாமா. என் ஆத்துமாவே, கர்த்தருடைய சகல உபகாரங்களையும் மறவாதிரு என்ற சங்கீதக்காரனைப்போல் நாம் யாவையும் நினைவுகூரவேண்டும். இஸ்ரவேல் சனங்கள் நியாயாதிபதிகளின் காலத்திலே செய்ததுபோல் நாம் செய்யக்கூடாது. பெலிஸ்தியர், மீதியானியர் முதலிய சத்துருக்கள் தங்களை நெருக்கித் துன்பப்படுத்துகிற போது அவர்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள். கர்த்தர் அவர்களை அவர்களுடைய சத்துருக்களின் கைக்கு நீங்கலாக்கின பிறகோ அவர்கள் அவரை மறந்தார்கள். பொய்யான தேவர்களை

யும் விக்கிரகங்களையும் வணங்கினார்கள். நாமும் நெருக்கத்தில் அவரைக் கூப்பிட்டு, சுகத்தில் அவரை மறப்பது பெரிய அநியாயமாயிருக்கும். நமக்குக் கிடைக்கும் சரீரசுகமும் நமக்கு ஆசீர்வாதமாயிராது. ஆகையால், நாம் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு நன்மையும் நம்முடைய ஆத்துமத்திற்கு ஆசீர்வாதமாய்ப் பலிக்கும்படி, ஒவ்வொன்றிற்காகவும் நாம் கர்த்தரை ஸ்தோத்திரித்து மகிமைப்படுத்தவேண்டும். நம்முடைய ஊரில் எத்தனை பேரோ பஞ்சத்தில் இயேசுவைத் தேடிவந்தார்கள். இயேசுநாதர் அவர்களுடைய சரீரத்திற்கும் ஆத்துமத்திற்கும் சொல்லிமுடியாத நன்மைகளைச் செய்தார். என்றாலும், அவர்களில் எத்தனைபேர் நன்றியறிந்தவர்கள். அவர்களில் பலருடைய பேச்சும் நடக்கையும் அவர்கள் நன்றிகேட்டைக் காண்பிக்கிறதென்று விசனத்தோடு பார்க்கிறோம்.

நாம் கர்த்தரை எப்படி மகிமைப்படுத்தலாம். எப்படி ஸ்தோத்திரிக்கலாம். முந்த அவருக்கு மகிமையானவைகளைப் பேசுவதினாலே அவரை ஸ்தோத்திரிக்கலாம். இப்படிச் சங்கீதக்காரர் அடிக்கடி செய்தார். முக்கியமாய் நம்முடைய நடக்கையினாலே நம்முடைய நன்றியறிதலைக் காட்டவேண்டும். நம்முடைய நல் நடக்கையைப் பார்க்கிற அஞ்ஞானிகள் இதனால் கர்த்தரை மகிமைப்படுத்தக் கூடியதாயிருக்கும். மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரமண்டலங்களிலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்துகிறதற்காக உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது என்று இயேசுநாதர் நமக்குச் சொல்லுகிறார் (மத். 5, 16). உலகத்தில் மிச்சமானவர்கள் நன்றிகெட்டவர்களாயிருந்தாலும், அவர்களை நாம் பின்பற்றாமல் கர்த்தருடைய சிறுமந்தையோடு கூடி, எல்லாக் காலத்திலும் எல்லா இடத்திலும் கர்த்தரை ஸ்தோத்திரித்து அவரை மகிமைப்படுத்துவோமாக.

எங்கள் அன்புள்ள இரட்சகரே, நீர் எங்கள் ஆத்துமத்திற்கும் சரீரத்துக்கும் செய்துவருகிற உபகாரங்கள் சொல்லிமுடியாதவைகள். நாங்களோ நன்றிகெட்ட பாவிகளாயிருக்கிறோம். தேவரீர் எங்கள் நன்றிகேட்டை எங்களுக்குக் கிருபையாய் மன்னித்து, எங்களை உம்முடைய பரிசுத்த ஆவியினால் நிரப்பி, நாங்கள் எங்கள் வாக்கினாலும், நடக்கையினாலும் உம்மை மகிமைப்படுத்த எங்களுக்கு ஒத்தாசை செய்தருளும், சுவாமி ஆமேன்.



## திரித்துவப் பண்டிகைக்குப் பிந்தின ௰௫-ம் ஞாயிறு.

மத். 6, 24—34.

பிரியமானவர்களே,

இயேசுநாதர் பிறந்து வளர்ந்து சஞ்சரித்த பலஸ்தீனா தேசத்தில் பெத்தானியா என்று ஒரு கிராமம் இருந்தது. அந்தக் கிராமத்துக்கு இயேசுநாதர் அடிக்கடி போகிறதுண்டு. அங்கே அவரை விசுவாசித்த சில பத்தியுள்ள மனிதர் இருந்தார்கள். அவர்களில் மார்த்தாள், மரியாள், லாசரு என்ற மூன்று சகோதரர்களுள்ள ஒரு குடும்பத்தைக் கர்த்தர் முக்கியமாய்ச் சிநேகித்தார். அவர்கள் வீட்டுக்கு இயேசுநாதர் ஒரு விசை போனபொழுது, மரியாள் இயேசுநாதர் பாதத்தண்டை உட்கார்ந்து, அவருடைய வசனத்தைக் கேட்டுக்கொண்டிருந்தாள். மார்த்தாளோ இயேசுநாதருக்கும் அவருடைய சீஷருக்கும் சாப்பாடு செய்கிற வேலையில் மிகுந்த கவலையாயிருந்தாள். அவள் இயேசுநாதரண்டை வந்து: ஆண்டவரே, என் சகோதரி என்னை மாத்திரம் வேலைசெய்ய விட்டிருக்கிறது உமக்குக் கவையில்லையோ; அவள் எனக்கு ஒத்தாசைபண்ண அவளுக்குச் சொல்லும் என்றாள். அப்பொழுது இயேசு அவளுக்குப் பிரத்தியுத்தரமாக: மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேக காரியங்களுக்காகக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய்; ஆனால் ஒன்றே தேவை; மரியாளோவெனில் தன்னைவிட்டு எடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் என்றார் (லூக். 10, 41. 42).

இதனால் நாம் படுகிற எல்லாக் கவலையைப் பார்க்கிலும், நம்முடைய ஆத்துமத்துக்காகக் கவலைப்படுவது முக்கியம் என்று மார்த்தாளுக்குப் போதித்தார், நமக்கும் போதிக்கிறார். மரியாள் மற்றெல்லாக் காரியங்களையும் மறந்து, இயேசுவின் வசனத்தைக் கேட்டதினால், தன் ஆத்துமத்திற்காகக் கவலைப்படுகிறதைக் காண்பித்தாள். ஆத்தும இரட்சிப்பு ஒன்றே நமக்குத் தேவை. அதுவே முக்கியம். அந்த ஒன்று நமக்கு இருந்தால், மற்றதெல்லாம் நமக்குக் கிடைக்கும். இங்கே கூடிவந்திருக்கிற நம்மையும் பல கவலை அரிக்கிறது. பல கவலை நடுவில், முக்கியமான ஒரு கவலையை மறக்கிறோம். இன்று சுவிசேஷ வாக்கியத்தில் இயேசுநாதர் கவலைகளைப்பற்றி நமக்குப் புத்திசொல்லுகிறார். அதை நாம் கவனித்துக் கேட்போமாக.

கவலைகளைப் பற்றி இயேசுநாதர் நமக்குச் சொல்வதென்ன.

1. துர்க்கவலைகளை நாம் விலக்கவேண்டும்.
2. நற்கவலை ஒன்றே நமக்கு இருக்கவேண்டும்.

1.

*துர்க்கவலைகளை நாம் விலக்கவேண்டுமென்று கர்த்தர் நமக்குப் போதிக்கிறார்.*

ஒருவனும் இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்யக் கூடாது. ஏனென்றால் ஒருவனைப் பகைத்து மற்றவனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைச் சார்ந்துகொண்டு மற்றவனை அசட்டைபண்ணுவான் என்று கர்த்தர் சொல்லுகிறார். இங்கே பொருளாசையால் உண்டாகும் கவலையைக் கர்த்தர் விலக்குகிறார். பொருளாசை பொதுவாய் எல்லா மனிதருக்கும் இருந்தாலும், பணக்காரருக்கு இது அதிகம். உள்ளது போதுமென்றிராமல், அதிகம் தங்களுக்கு இருக்கவேண்டுமென்று கவலைப்படுகிறவர்கள் அநேகர். அவர்கள் பொழுது விடிந்தால், அந்திபட்டால், பணம் சேர்க்கவேண்டுமென்கிற கவலையாகவே இருப்பார்கள். இதனால் அவர்கள் இரண்டு எசமான்களுக்கு ஊழியஞ் செய்கிறார்கள். பணம் ஒரு எசமான், பராபரன் ஒரு எசமான். ஒருவருக்கொருவர் விரோதிகளான இரண்டு எசமான்களுக்கு ஒருவனும் ஊழியஞ்செய்ய முடியாது. ஒருவன் கிழக்கே போகச்சொன்னால், மற்றவன் மேற்கே போகச்சொல்லுவான். ஒரே சமயத்தில் கிழக்கிலும் மேற்கிலும் போகக் கூடியதெப்படி. லோகப்பொருளும் பராபரனும் ஒரே மாதிரி எசமான்களல்ல. லோகப்பொருள் அசுத்த எசமான், பராபரனே பரிசுத்த எசமான். லோகப்பொருள் நம்மைக் கெடுக்கும் எசமான், பராபரனே நமக்கு நன்மைசெய்யும் எசமான்.

பராபரன் ஒருவரைமாத்திரம் நாம் எசமானாக எண்ணுவது நியாயம். அவர் நம்மைப் பாதுகாத்துப் பராமரிக்கிறவர், நம்மைத் தம்முடைய குமாரனைக்கொண்டு இரட்சித்தவர், நம்மைத் தமக்குச் சொந்தமாக்கிக்கொண்டவர். நாம் அவருக்குக் கீழாக அவருடைய ராச்சியத்திலே பிழைத்து, நித்திய நீதியிலும் கபடற்ற உண்மையிலும் மோட்ச ஆனந்தத்திலும் அவருக்கு ஊழியம் செய்யவேண்டியது.

லோகப்பொருளோ நமக்கு எசமானாயிருக்கத்தக்கதல்ல. அது நமக்கு அடிமையாயிருக்கவேண்டியது. உலகப்பொருள் நமக்கு அடிமையாயிருந்தால், நமக்கு நல்லவேலைசெய்யும். பொருளைக்கொண்டு அநேகர் பசியை ஆற்றலாம். அநேகர் தாகத்தைத் தீர்க்கலாம். அநேகர் நிர்வாணத்தை மூடலாம். அநேகருக்குக் குடியிருக்க நிழல் கொடுக்கலாம். அநேக வியாதிக்காரருக்கு மருந்து கொடுக்கலாம். இக்கட்டுப்பட்டவர்களுக்குச் சகாயம் செய்யலாம். அநேக சுவிசேஷ ஊழியர்களை நியமிக்கலாம். வெகுவான நன்மைகளைச் செய்யலாம். லோகப்பொருள் நமக்கு



எசமான் ஆனாலோ, அது நம்மைக் கடுமையாய் வேலைகொள்ளும். நமக்கு உள்ளதையெல்லாம் கொள்ளையடிக்கும். பொருளாசைக்காரரைப் பாருங்கள். அவர்களுக்கு என்ன இருந்தும், இல்லை இல்லை என்றே சொல்லுவார்கள். ஏனெனில் போதுமென்கிற மனதை அவர்கள் பொருளாசைக்குக் கொள்ளை கொடுத்தார்கள். உலகப் பொருளுக்கு ஊழியம் செய்கிறவர்கள் சந்தோஷமாயிருக்கமுடியாது. அவர்களுக்குத் தூக்கமில்லை, இளைப்பாற்றி இல்லை. பிறரைக் கெடுக்கும் குணம் அதனால் உண்டாகும். உலகப் பொருள் என்கிற எசமானுக்குத் தன் ஆயுசுகாலம் எல்லாம வேலைசெய்தவன் கடைசியிலே பெறுகிற பலன் என்ன, ஒன்றுமில்லை. அவன் சாகிறபோது, அவன் சம்பாதித்த பொருளில் ஒன்றும் அவனோடு வராது. ஆகையால், பொருளாசைக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்று இயேசுநாதர் சொன்னார். பொருளாசைக்காரன் விக்கிரக ஆராதனைக்காரன் என்று பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறார். ஆகையால், பராபரனுக்கும் உலகப்பொருளுக்கும் ஒரேசமயத்தில் ஊழியஞ்செய்யக்கூடாது. பராபரனுக்கு ஊழியஞ்செய்ய மனதுள்ளவன் உலகப்பொருளுக்கு ஊழியஞ்செய்யக்கூடாது. உலகப்பொருளுக்கு ஊழியஞ்செய்ய மனதுள்ளவன் பராபரனுக்கு ஊழியஞ்செய்யக்கூடாது. பராபரன் நம்மிடத்தில் முழு இருதயத்தையும் கேட்கிறார். பாதி இருதயத்தைத் தமக்கும், பாதி இருதயத்தை உலகப்பொருளுக்கும் கொடுக்க அவர் சம்மதிக்கமாட்டார். பெற்ற தாயானவள் தன் பிள்ளையை இரண்டாய்ப் பிளக்கச் சம்மதிக்கமாட்டாள். அதுபோல், தாயைப்பார்க்கிலும் நம்மை அதிகமாய்ச் சிநேகிக்கிற நம்முடைய பரமபிதா நாம் நம்முடைய இருதயத்தைப் பிரித்துப் பாதியைமாத்திரம் தமக்குக்கொடுக்கச் சம்மதிக்கமாட்டார். அவருடைய குடல்கள் நமக்காகப் பற்றியெரிகிறது. நாம் பராபரனுக்கு ஊழியஞ்செய்ய மனமுள்ளவர்களானால், பொருளாசையை விலக்கி, நம்முடைய முழு இருதயத்தினாலும் அவருக்கு ஊழியஞ்செய்யக்கடவோம். நாம் விலக்கவேண்டிய மற்றொரு கவலை— இல்லாமையால் உண்டாகும் கவலை. இதைக்குறித்து நம்முடைய இரட்சகர்: என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் சீவனுக்காகவும், என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும், கவலைப்படாதேயுங்கள் என்கிறார். இந்த வார்த்தைகளை நாம் தப்பிதமாய் அர்த்தம்பண்ணக்கூடாது. நாம் வேலைசெய்யாமல், கவலை அற்றுச் சோம்பேறிகளாய்த் திரியவேண்டும் என்று இதனால் கர்த்தர் நமக்குக் கற்பிக்கிறதில்லை. ஒரு தகப்பன் தன் வீட்டாருக்கு வேண்டிய சாப்பாட்டுக்காகவும் வஸ்திரத்திற்காகவும் கவலைப்படவேண்டும். அதற்காகச் சுறுசுறுப்பாய் வேலைசெய்யவேண்

டும். அப்படியே தாயும் தன் வீட்டில் உள்ளவர்களுக்காகக் கவலைப்படவேண்டியது. சாப்பாட்டுக்கு வேண்டிய தானிய தவசங்களும், காய்கறிகளும் இருக்கிறதோ இல்லையோ என்று ஏற்கனவே பார்த்து, அதற்காகக் கவலைப்படுவது அவளுடைய கடமை. அப்படியே தேசத்தின் அதிகாரிகளும் குடிசனங்களுக்காகக் கவலைப்படவேண்டியது. சனங்களுக்கு வேண்டிய ஆகாரமும் வஸ்திரமும் குறைவில்லாமல் கிடைக்கும்படிக்கு சாகுபடிக்கான காரியங்களையும் வியாபாரத்துக்கான காரியங்களையும் ஒழுங்குப்படுத்தக் கவலையுள்ளவர்களாயிருக்கவேண்டும். இப்படிப்பட்ட கவலைகள் துர்க்கவலைகள் அல்ல. இவை பராபரன் நமக்குக் கொடுத்த சிநேகக் கவலைகள். இவைகளை ஒழிப்பது சரியல்ல.

பராபரன் நம்மைப் பராமரிக்கிறார் என்கிறதை நம்பாமல் சஞ்சலப்படுகிற வீண் கவலையே நாம் விலக்கவேண்டியது. அது விசுவாசத்துக்கு விரோதமான கவலை. வயிற்றின் துக்கக் கவலையென்று இதற்குப் பெயர். இதற்கு விலகியிருக்கும்படி கர்த்தர் நமக்குப் புத்திசொல்லுகிறார். என்னத்தை உண்போம் என்னத்தைக் குடிப்போம் என்று புலம்பும் வீண் கவலை அடாது என்பதற்குக் கர்த்தர் பல நியாயங்களைச் சொல்லுகிறார்.

ஆகாரத்தைப்பார்க்க சீவனும், உடையைப்பார்க்க சரீரமும் அதிகமாயிருக்கிறதல்லவோ என்பது கர்த்தர் சொல்லும் முதல் நியாயம். நமக்கு உயிரைக்கொடுத்தவர் கர்த்தர். உயிரைக் காப்பதற்கு வேண்டிய ஆகாரம் உயிரைவிட பெரிதல்ல. உயிரோடு ஒத்துப்பார்த்தால், ஆகாரம் மகா சொற்பக் காரியம். அப்படியே சரீரத்தை நமக்குக் கொடுத்தவர் கர்த்தர். ஒரு சரீரத்தை உண்டாக்க எந்த மனுஷனாலும் முடியாது. சரீரத்தை மூட வஸ்திரம் வேண்டியது. இந்த வஸ்திரம் பெரியதோ சரீரம் பெரியதோ. சரீரமே பெரியது என்று யாவரும் ஒத்துக்கொள்ளுவார்கள். உயிராகிய பெரிய காரியத்தைக் கொடுத்தவர் ஆகாரமாகிய சொற்பக்காரியத்தைக் கொடுக்கமாட்டாரா. சரீரமாகிய பெரிய காரியத்தைக் கொடுத்தவர் வஸ்திரமாகிய சின்ன காரியத்தைக் கொடுக்கமாட்டாரா. நூறு ரூபாயை வெகுமதியாய்க் கொடுக்கும் ஒரு பணக்காரன் அந்தப் பணத்தை எடுத்துக்கொண்டுபோக ஒரு பை கொடுப்பது அவனுக்குப் பெரிய காரியமா. ஆகையால், கர்த்தர் நமக்கு வேண்டிய ஆகாரத்தையும் உடுப்பையும் கொடுப்பாரென்று நம்பி, வீண் கவலையை நாம் ஒழிக்கவேண்டியது.

நாம் என்னத்தை உண்போம் என்னத்தைக் குடிப்போம் என்று வீண் கவலைப்படாதபடிக்குக் கர்த்தர் இன்னும் ஒரு நியாயம் சொல்லுகிறார். ஆகாசத்தின் பட்சிகளை நோக்கிப்



பாருங்கள். அதுகள் விதைக்கிறதும் அறுக்கிறதும் களஞ்சியங்களில் கூட்டிவைக்கிறதுமில்லை. இல்லாவிட்டாலும் உங்கள் பரம பிதா அதுகளைப் பிழைப்பூட்டுகிறார். அதுகளைப்பார்க்க நீங்கள் விசேஷித்திருக்கிறீர்கள் அல்லவோ. உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிறது என்ன. வெளியிலே விளைய புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று அதுகளைக் கவனித்துப் பாருங்கள். அதுகள் உழைக்கிறதும் இல்லை, நூற்கிறதுமில்லை. இல்லாவிட்டாலும் சாலொமோன்தானே சர்வ மகிமையிலும் இதுகளில் ஒன்றைப்போலும் உடுத்தியிருந்ததில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். இப்போதும் இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் வெளியின் புல்லைப் பராபரன் இவ்விதமாக உடுத்துவித்தால், வெகு அதிகமாய் உங்களை உடுத்துவிப்பாரல்லவோ அற்ப விசுவாசிகளே என்று சொல்லுகிறார். அற்ப ஜெந்துக்களாகிய பறவைகளுக்கு ஆகாரம் கொடுத்து, அவைகள் சுகமும் சந்தோஷமுமாயிருக்கப்பண்ணுகிற கர்த்தர் தம்முடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட மனுஷருக்கு ஆகாரம் கொடுக்கமாட்டாரா. புல்லுக்கும் பூவுக்கும் அழகு கொடுக்கிற ஆண்டவர் மனுஷருக்கு வஸ்திரம் கொடுக்கமாட்டாரா. சுகமாய்ப் பறந்து அங்கும் இங்கும் உட்கார்ந்து பாடிக்கொண்டிருக்கிற பறவைகளும், காட்டிலும் மேட்டிலும் அழகாய் முளைத்துப் பூத்துக்கொண்டிருக்கிற புஷ்பங்களும் நம்முடைய அற்ப விசுவாசத்தைக் கடிந்துகொள்ளும் பிரசங்கிகளாம். அவைகளைப் பார்க்கும்பொழுதெல்லாம் நாம் நம்முடைய அற்ப விசுவாசத்திற்காக வெட்கப்பட்டு, வீண் கவலையை ஒழிப்பது நியாயம்.

நாம் வீண்கவலைப்படாதபடி கர்த்தர் சொல்லுகிற மற்றொரு நியாயத்தைக் கேளுங்கள். உங்களில் ஆர் கவலைப்படுவதினால் தன் அளவோடு ஒரே முழத்தைக் கூட்டலாம் என்கிறார். — இதினாலே வீண்கவலை எவ்வளவு புத்தியீனமான காரியம் என்று காண்பிக்கிறார். நம்முடைய ஆயுசுகாலம் எவ்வளவு என்று கர்த்தருக்குத் தெரியும். நாம் உயிரோடிருக்கும் மட்டும் நமக்குச் சுகத்தையும் பலத்தையும் அவர் கொடுக்கிறார். அவர் குறித்த காலம் வரும்போது நாம் தளர்ந்துபோவோம், மரித்தும் போவோம். நாம் என்ன பிரயாசப்பட்டாலும் நமது தளர்ச்சியைத் தடுக்கவும், மரணத்தை விலக்கவும் முடியாது. இளமை திரும்பாது, வாலிப அழகு வராது. நம்முடைய கவலையினாலே நம்முடைய அளவோடு கொஞ்சமும் கூட்ட முடியாது. நம்முடைய ஆயுசைக் கொஞ்சமும் நீளமாக்க நமது கவலை உதவி செய்யாது. மனக்கவலை பலக்குறைவே ஒழிய வேறல்ல. ஆகையால் கவலைப்படுவது வீண். கர்த்தர் நம்மை இந்த உலகத்தில் வைக்கும் அளவும் அவரை நம்பி நாம் காலந்தள்ள வேண்டும்.

வீண் கவலை கிறிஸ்தவர்களுக்கு அடாத காரியம். ஆனபடியால்: என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று சொல்லிக் கவலைப்படாதேயுங்கள். ஏனென்றால் இதுகள் எல்லாவற்றையும் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள். உங்கள் பரமபிதாவோவெனில் இதுகளெல்லாம் உங்களுக்குத் தேவையென்று அறிவார் என்று இயேசுநாதர் சொல்லுகிறார். அஞ்ஞானிகளுக்குப் பரமபிதாவைத் தெரியாது. அவர்கள் அவரை நம்பமாட்டார்கள். நாமோ நம்முடைய பரமபிதாவை அறிவோம், அவரை நம்புகிறோம். அவர் பொய் சொல்லாத கர்த்தர் என்று நமக்குத் தெரியும். அன்றன்றுள்ள அப்பத்தை எங்களுக்கு இன்றுதாரும் என்று ஜெபம்பண்ணி, உண்மையும் சுறுசுறுப்புமாய் வேலைசெய்வது மாத்திரம் நம்முடைய கடமை. நம்முடைய பரமபிதா நம்மைக் கிருபையாய்க் கண்ணோக்கிப் பராமரிப்பார். இன்றைக்கு நமக்கு ஆகாரம் கொடுக்கிறவர் நாளைக்கும் அதை நமக்குக்கொடுப்பார். வனாந்தரத்திலே இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஒவ்வொருநாளும் கர்த்தர் ஆகாரம் கொடுத்தார். அப்படியே அவரை நம்புகிற நமக்கும் கொடுப்பார் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆகையால் வீணான துக்கக்கவலையை விலக்குவது மெய் விசுவாசிகளின் கடமை.

2.

நமக்கு ஒரே நற்கவலை இருக்கவேண்டும் என்கிறதை இப்பொழுது பார்ப்போம்.

இதைக்குறித்து நம்முடைய இரட்சகர்: முந்தப் பராபரனுடைய இராச்சியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இதுகளெல்லாம் உங்களுக்குக் கூடக்கொடுக்கப்படும் என்கிறார்.

பராபரனுடைய இராச்சியத்தைத் தேடும் கவலை நமக்கு இருக்கவேண்டும். பராபரனுடைய இராச்சியம் என்பது இயேசுநாதர் நம்முடைய பாடுகள் மரணத்தினாலே சம்பாதித்த இரட்சிப்பு. இதை நமக்குக் கொடுக்கிறவர் பரிசுத்த ஆவி. சரீரத்துக்கு ஆகாரம் அவசியமாயிருப்பதைப்பார்க்கிலும் நம்முடைய ஆத்துமத்திற்கு இரட்சிப்பு அவசியம். சரீரத்துக்கு வஸ்திரம் தேவையாயிருப்பதைப்பார்க்கிலும் ஆத்துமத்திற்குக் கிறிஸ்துவின் நீதி அவசியம். கிறிஸ்துவின் நீதியில்லாதவன் பராபரனுக்குமுன் நிர்வாணி. ஆகையால், பராபரனுடைய இராச்சியத்தையும் அவருடைய நீதியையும் தேடுவது நம்முடைய முந்தின கடமை. சரீரம் சுகமாயிருந்து, ஆத்துமா கெட்டுப்போவது மகா பரிதாபம், எவன் தன்னுடைய ஆத்தும இரட்சிப்புக்காகக் கவலைப்படாமல் போகிறானோ, அவன் தன் ஆத்துமத்தை மாத்திரம் அல்ல, சரீரத்தையும் கெடுக்கிறான். இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளாதவனுடைய சரீரமும் ஆத்துமாவும் நரகத்துக்குப் போகும்.



இயேசுநாதர் இந்த உலகத்தில் நடமாடின காலத்தில் ஜனங்களுடைய சரீரத்துக்காகக் கவலைப்பட்டார் என்பது நிசம். ஆகிலும், அவர்களுடைய ஆத்தும இரட்சிப்பை நோக்கியே அவர்களுக்குச் சரீர நன்மைகளையும் செய்தார். நம்முடைய சரீரம் நம்முடைய ஆத்துமத்திற்கு வீடேயல்லாமல் வேறல்ல. ஒரு வீட்டைப் பழுதுபார்த்து வெள்ளையடித்து அலங்கரிக்கிற எவனும் தன் வீட்டிலுள்ளவர்களைப் பசியும் பட்டினியுமாய்ப் போடுவானா. அப்படிப் போல் சரீரத்துக்காக நாம் கவலைப்பட்டு ஆத்துமத்தைச் சேதப்படுத்துவது நியாயமா. பிரியமானவர்களே, நம்மில் அநேகர் எப்பொழுதும் வயிற்றுக் கவலையே கவலையாயிருந்து, ஆத்துமக் கவலையை மறந்துபோகிறோம். ஆத்துமக் கவலையே நமக்கு இருக்கவேண்டிய முதற் கவலை, ஒன்றான கவலை. இரட்சகர்: முந்தப் பராபரனுடைய இராச்சியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் என்கிறார். காணாமற்போன ஒரு அரும்பொருளைத் தேடுவதுபோலும், ஒரு வியாதிக்குப் பிரயாசையோடு மருந்து தேடுவதுபோலும் நாம் நல் முயற்சியோடு பரம காரியங்களைத் தேடவேண்டும். திரை கடலோடியும் திரவியம் தேடு என்று உலகத்தார் சொல்லி, தூரதேசங்களுக்கும் தீவாந்தரங்களுக்கும் போய், அழிந்துபோகிற பணங்காசைத் தேடுகிறார்களே. நமக்குச் சமீபமாயிருக்கிற இரட்சிப்பைக் கவலையோடு தேடாதிருப்பது சரியா. மேலும், முந்தத் தேடுங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். நாம் எழுந்தவுடனே நாம் கவனிக்கவேண்டிய முதலாம் காரியம் நம்முடைய ஆத்தும இரட்சிப்பு. தனிச்செபம், குடும்பச்செபம், கோயில் ஆராதனை இவைகள் நம்முடைய ஆத்தும இரட்சிப்புக்கு அவசியமானவை. நாம் வேலைக்குப் போகு முன்னும், வேலையில் இருக்கும்போதும், வேலை முடிந்த பின்னும் நம்முடைய ஆத்துமக் கவலை நம்மை ஆளுகிறதாயிருக்கவேண்டும்.

மற்றவர்களுடைய சாப்பாட்டுக்காகவும் அவர்களுடைய வஸ்திரத்துக்காகவும் நாம் கவலைப்படுவதற்கு முந்தி, அவர்களுடைய ஆத்தும இரட்சிப்புக்காகக் கவலைப்படுவது நம்முடைய கடமை. ஐயோ, நம்மில் எத்தனை பேர் தங்கள் ஆத்துமத்திற்காகவும் கவலைப்படுகிறதில்லை, மற்றவர்களுடைய ஆத்துமத்திற்காகவும் கவலைப்படுகிறதில்லை. தன் பிள்ளைக்குச் சோறில்லை, துணியில்லையென்று கவலைப்படுகிற ஒரு தகப்பன், தன் பிள்ளை இயேசுநாதரை அறியாமலும், அவரை நோக்கிச் செபம் பண்ணாமலும் இருக்கிறதற்காகக் கவலைப்படாதிருப்பது எவ்வளவு விசனமான காரியம். இன்றைக்குக் கர்த்தர் இந்த நற்கவலை இல்லாத

பேர்களை எச்சரிக்கிறார். அவருடைய எச்சரிப்பின் சத்தத்துக்குச் செவிகொடுங்கள். பராபரனுடைய இராச்சியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். தேடுகிறவர்கள் கண்டுபிடிப்பார்கள். பராபரனுடைய இராச்சியத்தைத் தேடுகிறவர்கள் அதற்குள் பிரவேசிப்பார்கள். பராபரனுடைய நீதியைத் தேடுகிறவர்கள் அதைப் பெற்றுக்கொள்வார்கள்; அவர்களுடைய ஆத்துமா கிறிஸ்துவுக்குள் சுகமாய் வாழும்.

தங்கள் ஆத்துமத்துக்காகக் கவலைப்பட்டு, ஆத்தும நன்மைகளைத் தேடுகிறவர்களுக்குச் சரீர நன்மைகளும் கூடக் கிடைக்கும். பெரிதான ஆத்தும நன்மைகளைக் கொடுக்கிறவர் சிறிதான சரீர நன்மைகளைக் கொடுக்கமாட்டாரா. அவர் தம்முடைய சொந்தக் குமாரனையும் பாராமல், அவரை நம்மெல்லாருக்காகவும் ஒப்புக்கொடுத்தாரே, அவர் இவரோடும் கூட யாவையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி என்று அப்போஸ்தலன் சொல்லுகிறார் (ரோ. 8, 32). நம்முடைய இரட்சகர் தம்மிடத்தில் வந்து, மூன்று நாளாய்த் தரித்திருந்து, தம்முடைய பிரசங்கம் கேட்ட நாலாயிரம் பேரைப் பட்டினியாய் அனுப்பினாரா. அவர்கள்பேரில் மனதுருகி, அவர்கள் பசியை அவர் ஆற்றி, அவர்களைச் சந்தோஷத்தோடு வீட்டுக்கு அனுப்பினாரென்று நமக்குத் தெரியுமே. தம்முடைய சொல்லுக்கு அடங்கிப் பேழையில் பிரவேசித்த நோவாவையும் அவன் பெண்சாதி பிள்ளைகளையும் ஒரு வருஷக்காலம அவர் பராமரித்தாரே. அவர் தம்மை நம்பியிருந்த யாக்கோபையும் அவன் வீட்டாரையும் பஞ்ச காலத்தில் யோசேப்பைக் கொண்டு பராமரித்தாரே. தமக்கு உண்மையாய் ஊழியஞ்செய்த எலியா தீர்க்கதரிசிக்கு மூன்றரை வருஷம் அவர் அற்புதமாய்ச் சாப்பாடு கொடுத்தவர். ஆகையால் நாமும் அவரை நம்பி, நம்முடைய இரட்சிப்பைப் பயத்தோடும் நடுக்கத்தோடும் நடப்பித்தால், நமக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது. சிங்கக் குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாய் இருக்கும்; கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோவென்றால் ஒரு நன்மையும் குறைவுபடாது என்று எழுதியிருக்கிறது (சங். 34, 11).

எங்கள் பரம தகப்பனே, உம்முடைய பராமரிப்பை நம்பாமல்போகிற அற்ப விசுவாசத்தை எங்களுக்குக் கிருபையாய் மன்னியும். நாங்கள் உம்மை எங்கள் முழு இருதயத்தினாலும் நம்பவும், எங்களுடைய ஆத்தும இரட்சிப்புக்காக முக்கியமாய்க் கவலைப்படவும் எங்களுக்கு ஒத்தாசை செய்தருளும், சுவாமி. ஆமேன்.



# திரித்துவப் பண்டிகைக்குப் பிந்தின ௰௬-ம் ஞாயிறு.

லூக். 7, 11—17.

பிரியமானவர்களே,

காவலிலிருந்த யோவான்ஸ்நானகன் தன் சீஷர்களில் இரண்டுபேரை அனுப்பி: வருகிறவர் நீர்தானோ, வேறொருவருக்குக் காத்திருப்போமோ என்று இயேசுவைக் கேட்டபொழுது அவர் அவர்களுக்குச் சொன்ன உத்தரவு நமக்குத் தெரியும். அவர்: நீங்கள் போய், கேட்கிறதையும் காண்கிறதையும் யோவானுக்கு அறிவியுங்கள். குருடர் பார்வை அடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் எழுந்திருக்கிறார்கள், தரித்திரருக்குச் சுவிசேஷம் அறிவிக்கப்படுகிறது என்று சொன்னார் (மத். 11, 4. 5). அவர் இவைகளினால் தம்மை உலக இரட்சகராகிய மேசியா என்று ரூபித்தார். அவர் செய்த ஒவ்வொரு அற்புதமும் மகா ஆச்சரியமாயிருந்தும், அவர் மரித்தோரை எழுப்பினது எல்லாவற்றிலும் ஆச்சரியமானது. மனிதரைக் கொன்றுபோட ஒவ்வொருவனுக்கும் சக்தி உண்டு. செத்துப்போனவனுக்கு உயிர் கொடுக்கவோ ஒருவனாலும் முடியாது. இயேசுநாதருக்கு உயிர் கொடுக்கும் சக்தியிருந்ததால் பேதுரு அப்போஸ்தலன் அவரைச் சீவனுடைய அதிபதியென்று சொன்னார் (அப். 3, 15). அதிபதி என்பதற்கு இராசா என்று அர்த்தம். ஒரு இராசாவின் சொல்லுக்கு அவனுடைய குடிசனங்கள் கீழ்ப்படிவதுபோல இயேசுநாதருடைய சொல்லுக்கு ஒவ்வொரு உயிரும் கீழ்ப்படியும். இயேசுநாதர் ஒருவனுக்கு இருக்கும் உயிரைப் போ என்று சொன்னால் அது அவனை விட்டுப் போய்விடும். வா என்று சொன்னால் அவனுக்கு உயிர் வந்துவிடும். நம்முடைய வாக்கியத்திலும் அவர் செத்துப்போன ஒரு வாலிபனுக்கு உயிர் கொடுத்த சரித்திரம் சொல்லியிருக்கிறது. இந்தச் சரித்திரத்தினாலும் கிறிஸ்து சீவனுடைய அதிபதி என்று அறியலாம். இதைக்குறித்தே இப்பொழுது நாம் சிந்திப்போம்.

## கிறிஸ்து சீவனுடைய அதிபதி.

1. கிறிஸ்துவை அல்லாமல் மரணமும் அழுகையும்,
2. கிறிஸ்துவினாலே சீவனும் மகிழ்ச்சியும்.

## 1.

கிறிஸ்துவை அல்லாமல் மரணமும் அழுகையுமே இவ்வுலகத்தில் உண்டு.

மறுநாள் சம்பவித்ததேதென்றால், நாயீன் என்று சொல்லப்பட்ட ஒரு ஊருக்குப் போனார். அவருடைய சீஷர் அநேகரும் வெகு கும்பும் அவருடனே கூடப்போனார்கள். அவர் ஊர் வாசலுக்குச் சமீபித்தபோதோவென்றால், இதோ, தன் தாய்க்கு ஒன்றான குமாரனாகிய மரித்த ஒருவன் வெளியே எடுத்துவரப்பட்டான். அவளோவெனில் விதவையானவள்; ஊரார் வெகு கும்பு அவளுடனே கூட வந்திருந்தார்கள் என்று வாசிக்கிறோம்.

இந்தப்பாவ உலகம் அழுகைப் பள்ளத்தாக்கு. இதற்கு ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நிமிஷமும் இவ்வுலகத்தில் நடக்கிற அநேக சம்பவங்கள் சாட்சி. நாயீன் என்ற ஒரு ஊரில் நடந்த துக்க சம்பவமும் இதற்குச் சாட்சி. நாயீன் என்ற பெயருக்கு அழகாபுரி என்று அர்த்தம். அது கண்ணுக்கு அழகும் மனதுக்குச் சந்தோஷமும் தேகத்துக்குச் சுகமுமான ஊராயிருந்தும், அதிலே அழுகை உண்டாகாதிருக்கவில்லை. மனிதரின் அழுகைக்குக் காரணமான துன்பங்களில் விசேஷித்தது மரணம். மனிதன் பிறந்த நாள்முதல் எப்பொழுதும் பயந்துகொண்டிருக்கிறது மரணத்துக்குத்தான். ஒரு வியாதி வந்தால், எங்கே செத்துப்போகிறேமோ என்று பயப்படுவான். ஒருவன் பயந்தாலும், பயப்படாவிட்டாலும், ஒரு நாளில் அவனுக்கு மரணம் வந்தே தீரும்.

நாயீன் ஊரில் மரித்தவன் வாலிபன் என்று சொல்லியிருக்கிறது. மரணம் வயதைப் பார்க்கிறதில்லை. ஆறிலும் சாவு, நூறிலும் சாவு என்கிற பழமொழி நம்மெல்லாருக்கும் தெரியும். இன்னம் முழு பலம் அடையாத குழந்தைமாத்திரம் அல்ல, நரம்பு தளர்ந்து இரத்தம் சுண்டிப் பலவீனமாய்ப் போன கிழவன் மாத்திரம் அல்ல, இரத்த புஷ்டியும் தேக பலமும் உள்ள வாலிபனும் சாகிறதுண்டு. புஷ்டியும் பலமும் மரணத்தைத் தடுக்கும் என்று எண்ணவேண்டாம். சகோதரரே, இங்கே வந்திருக்கிற நாமெல்லாரும் இங்கிருக்கிற வாலிபருங்கூட எந்த நிமிஷத்திலும் சாகக்கூடியவர்கள் என்பதை மறவாதிருப்போமாக.

செத்துப்போன வாலிபன் ஒரு விதவையின் ஒன்றான மகன். மரணமானது நிலைமையைப் பார்க்கிறதும் இல்லை. அது பெரிய இராசாவின் அரண்மனையிலும் ஒரு ஏழை விதவையின குச்சிலும் நுழையக்கூடியது. அது பத்துப் பன்னிரண்டு பிள்ளைகளுள்ள ஒரு குடும்பத்தில் நுழைவதுபோல, ஒரே பிள்ளையுள்ள சிறு குடும்பத்திலும் புகுந்துவிடுகிறது. நம்முடைய வாகியத்தில் சொன்ன வாலிபன் ஒரு விதவையின் மகன். அவள் முன்னமே தன் புருஷனை நம்பியிருந்தாள். அவனோ அவளைக் கைவிட்டுச் செத்துப்போனான். தன் புருஷனுக்குப் பிறகு தன் வயிற்றுப் பிள்ளையை நம்பினாள். தன் முதிர் வயதிலே இந்தப் பையன் தனக்கு ஊன்றுகோலாயிருப்பான், தன்னைப் பராமரிப்பான், தன் கண்ணை மரண நேரத்தில் சமாதானமாய் மூடுவான் என்று நம்பியிருந்தாள். அவளுடைய நம்பிக்கை வீணாய்ப் போயிற்று. அவள் கஷ்டப்பட்டு நம்பிக்கையோடே வளர்த்த இந்த அருமை மகன் வியாதியாய்ப் படுத்தான். அவள் என்ன பாடுபட்டும், எவ்வளவோ வைத்தியம் செய்தும், பிழைக்காமல் செத்துப்போனான்.



அவள் சிறகு ஒடிந்த பறவைபோலானாள். நாமும் மனிதரை நம்புகிறது விருதா. பெற்றோர் பிள்ளைகளைக் கைவிடுவார்கள். பிள்ளைகள் பெற்றோரைக் கைவிடுவார்கள். புருஷன் பெண்சாதியைக் கைவிடுவான். பெண்சாதி புருஷனைக் கைவிடுவாள். கர்த்தரைமாத்திரம் நம்பியிருப்பது நல்லது. அவர் தம்மை நம்பினபேரைக் கைவிடமாட்டார்.

மரித்தவன் வெளியே எடுத்து வரப்பட்டான். நாயீன் ஊராவது, அந்த விதவையைச் சிநேகித்த ஆராவது, அந்த வாலிபனுக்கு உயிர் கொடுக்கவும் அவனைத் தங்களிடமாக வைத்துக்கொள்ளவும் கூடவில்லை. அவன் சரீரத்தை அலங்கரித்து, ஒரு பாடையிலே வைத்து, வெளியே கொண்டுவந்தார்கள். நீ மண்ணுக்குத் திரும்புவாய் என்ற கர்த்தருடைய சொற்படியே, மண்ணான அந்த வாலிபனுடைய உடலை மண்ணிலே வைக்கக் கொண்டுபோனார்கள். இந்த உலகம் நமக்கு நிலவரமான வீடல்ல, நாமும் பிரேதமாகி வெளியே கொண்டுபோகப்படும் வேளைவரும்.

செத்துப்போனவன் நல்ல வாலிபனும் அவனுடைய தாய் விதவையுமாயிருந்ததால், ஊராரெல்லாரும் அவளுக்காகப் பரிதபித்தார்கள். அவள் மிகுதியாய் அழுதாள். ஊராரும் அவளோடு அழுதார்கள். அப்படியே இந்த உலகத்தில் கிறிஸ்துவையல்லாமல் மரணமும் அழுகையுமே ஆளுகிறதென்றும், இது நிர்ப்பந்தமான அழுகைப்பள்ளத்தாக்கென்றும் நாம் பார்க்கலாம்.

## 2.

கிறிஸ்துவினால் ஜீவனும் மகிழ்ச்சியும் நமக்கு உண்டு என்பதையும் இந்தச் சரித்திரத்தினால் பார்க்கலாம். இந்தப் பரிதாபமான துக்கக் கூட்டத்துக்கு எதிரே வேறொரு கூட்டம் வருகிறது. மரணப் பிரபுவுக்கு எதிரே ஜீவனின் அதிபதி வருகிறார். இரட்சகரை நாயீன் ஊரார் தேடினதில்லை. அவரே அவர்களைத் தேடிப் போகிறார். துன்பப்படுகிறவர்களுக்கும் துக்கக்காரருக்கும் சமீபமாயிருக்கக் கர்த்தர் பிரியப்படுகிறார். அவருக்கு நன்மை செய்கிறதே வேலை. நம்முடைய வாக்கியம் மறுநாளில் என்கிற வார்த்தையோடே துவக்குகிறது. முக்

தின நாளில் அவர் நூற்றுக்குச் சேர்வைக்காரனுடைய வேலைக்காரனைச் சுகமாக்கினார். இந்த நாளிலோ அவர் ஏழை விதவையைத் தேடிக்கொண்டு வருகிறார். இது நமக்கு எவ்வளவு ஆறுதலான சங்கதி. நமக்கு மகா பெரிய துக்கம் உண்டாகி நாம் வருத்தப்படும்போது, கர்த்தர் நம்மண்டைக்கு வருவாரென்பது நிச்சயம். அவர் துக்கப்படுகிறவர்கள் நடுவே வந்து: பிரயாசப்பட்டுப் பாரஞ்சுமந்தவர்களாகிய நீங்களெல்லாரும் என்னண்டைக்கு வாருங்கள்; நான் உங்களை முசிப்பாற்றுவேன் (மத். 11, 28) என்று சொல்லுகிறார். அவர் நாயீன் ஊர் வாசலண்டை என்ன செய்தார். அவர் அந்த ஏழை விதவையைப் பார்த்து மனதுருகி, அவளுடனே: அழாதே என்று சொன்னார். அவர் உருக்கமும் இரக்கமும் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ள கர்த்தர். அவரைக் குறித்து அப்போஸ்தலன்: நம்முடைய பலவீனங்களுக்குப் பரிதபிக்கமாட்டாத பிரதான ஆசாரியர் நமக்கு இராமல், பாவந்தவிர எல்லாவற்றிலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டவர் நமக்கு இருக்கிறார் என்று சொல்லுகிறார் (எபி. 4, 15). ஆகையால், அவர் இந்த ஏழை விதவைக்காகவும் மனதுருகுகிறார். விசேஷமாய்த் திக்கற்றவர்களுக்கும் விதவைகளுக்கும் அவர் பரிதபித்து நன்மை செய்கிற கர்த்தர். திக்கற்றிருக்கப்போகிற உன் பிள்ளைகளைத் தளரவிடு; நாம் அவைகளை உயிரோடே காப்பாற்றுவோம்; உன் விதவைகள் நம்மையே நம்புவார்களாக என்று தீர்க்கதரிசியைக்கொண்டு சொன்னவர் (எரே. 49, 11). இப்படிச் சொன்னவர் விதவைகளுக்காகக் கவலைப்படுவார் என்பதற்குச் சந்தேகமில்லை. இயேசு இரட்சகர் மனதுருகினதுமல்லாமல், உருக்கமாகவும் பேசினார். அவருடைய அன்பான வாயிலிருந்து அழாதே என்கிற அமிர்த வார்த்தை புறப்பட்டது. இது அவளுடைய மனப் புண்ணை ஆற்றும் தைலமும் அவளுடைய தளர்ந்த உடலுக்கு ஊன்று கோலுமாயிற்று. அழாதே என்று எத்தனை பேரோ அவளுக்குச் சொல்லியிருப்பார்கள். அவர்களுடைய வாயில் அந்தச் சொல் வெறுஞ்சொல்லே அல்லாமல் வேறல்ல. இரட்சகரின் வாயிலோ அது வெறுஞ்சொல் அல்ல. அந்தச் சொல் அவளை அவநம்பிக்கைக்கு விலக்கி, அவளுக்குள் நம்பிக்கையை உண்டுபண்ணிற்று. ஏழை விதவையே, உன்னுடைய அழுகையின் முகாந்திரம் நீங்குகிற காலம் வந்தது, ஆகையினால் உன் கண்ணீரைத் துடை என்பது அவர் அழாதே என்று சொன்னதின் கருத்து. நாமும் நமக்குக் கண்ணீர் வரும் சமயங்களில் இரட்சகரின் இந்த அன்பான வார்த்தையை நினைத்து, ஆறுதல் அடையலாம்.

குஷ்டரோகியைப் பார்த்து: நீ சுத்தமாகு என்று சொல்லி எப்படி அவனைச் சுத்தமாக்கினாரோ, அப்படியே அழாதே என்



று சொன்ன கர்த்தர் அந்த விதவையை அழாதிருக்கவும் பண்ணினார். அவர் சேர வந்து, பாடையைத் தொட்டார். சுமந்தவர்களோவென்றால் நின்றார்கள். அப்போது அவர்: வாலிபா எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். நம்முடைய இரட்சகர் ஜீவனுடைய அதிபதி என்பது இப்போது வெளியாயிற்று. அவர் மரணம் நரகம் என்றவைகளின் திறவுகோல்களையுடைய கர்த்தரானபடியால், மரித்துப்போன அந்த வாலிபனைப் பார்த்து, உயிருள்ளவனோடு பேசுகிறதுபோல் பேசுகிறார். உயிரோடிருக்கிற ஒருவனை: எழுந்திரு என்று சொன்னால் எழுந்திருப்பான். செத்த ஒருவனை எழுந்திருக்கச் சொன்னால், எழுந்திருப்பானா. செத்தவனுக்குக் காது கேட்குமா, செத்தவனுடைய உடல் அசையுமா, அவன் கைகளை ஊன்ற முடியுமா, முடியாது. இரட்சகரோ செத்த வாலிபனுக்குக் கொடுத்த கட்டளையை நிறைவேற்ற அவனுக்குப் பலம் கொடுத்தார். அவனுடைய உடலுக்குள் அவர் உயிரைப் புகுத்தினதால், அவன் காது கேட்கவும், கைகள் ஊன்றவும், அவன் உட்காரவும் கூடியதாயிற்று. நம்முடைய கர்த்தர் எவ்வளவு பெரிய ஆண்டவரென்பதைப் பாருங்கள். மரணம் அவருக்குப் பயந்து ஓடுகிறது. ஜீவன் அவருக்குப் பயந்து வருகிறது. ஏனெனில்: அப்போது மரித்தவன் எழுந்து உட்கார்ந்து, பேசத் தொடங்கினான். அவர் அவனை அவன் தாய்க்கு ஒப்புவித்தார். எழுந்தான், உட்கார்ந்தான், பேசினான் என்பதினால் அவனுக்கு உயிர் வந்தது ரூபகாரமாயிற்று. அப்பொழுது இரட்சகர் அவனைப் பிடித்து, அவனுடைய தாய்க்கு ஒப்புவிக்கவே, அவள் ஆனந்த பரவசமானாள். சாலொமோன் இராசாவுக்கிருந்த சகல ஆஸ்தியையும் அவளுக்குக் கொடுத்திருந்தாலும், செத்த மகனைக் கைப்பற்றினதினால் உண்டான அவ்வளவு சந்தோஷம் அவளுக்கு உண்டாயிராது.

எல்லாருக்கும் பயம் பிடித்து: மகா தீர்க்கதரிசி நமக்குள்ளே எழுந்திருந்தார் என்றும், பராபரன் தம்முடைய சனத்தைக் கண்டு சந்தித்தார் என்றும், பராபரனை மகிமைப்படுத்தினார்கள். இந்த அவருடைய வர்த்தமானம் யூதேயா முழுவதும் சுற்றுத்தேசமெங்கும் பிரசித்தமாயிற்று என்று நம்முடைய வாக்கியம் சொல்லுகிறது.

இயேசுநாதர் செய்த இந்தப் பெரிய அற்புதம் சனங்களுடைய மனதை அசைத்ததினால், அவர்கள் இயேசுவை மோசே முன்னறிவித்த தீர்க்கதரிசியென்று நினைத்தார்கள். அவர் செய்த அற்புதத்தைப் பராபரனுடைய சந்திப்பு என்று உணர்ந்தார்கள். தங்கள் புலம்பலையெல்லாம் மாற்றி, ஆனந்தமாகக் கூவி, கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தி, அவரை மகிமைப்படுத்தினது நாமெல்லாரும் பின்பற்றத்தக்க சங்கதி. கர்த்தருடைய பெரிய கன்

மைகளை நாம் அனுபவித்தும், அவரை மகிமைப்படுத்துவதில் பின்றியிருப்பது சரியல்ல. கர்த்தர் நம்மிடத்தில் செய்த அதிசயங்களைத் தேசமெங்கும் சொல்லி, எல்லாரையும் விசுவாசத்துக்கு ஏவுவது நம்முடைய கடமை.

கர்த்தர் நம்மிடத்தில் மரித்தோரை உயிர்ப்பித்திருக்கிறார். அப்படி நாம் பார்க்கிறதில்லை. மரணத்துக்குச் சமீபமானவர்கள் கர்த்தருடைய விசேஷித்த கிருபையினால் மரணத்துக்குத் தப்பிப் பிழைத்திருக்கிறதைப் பார்த்திருக்கிறோம். செத்துப்போனவர்கள் திரும்பப் பிழைப்பதைப் பார்த்ததில்லை. ஆகிலும், சரீர மரணத்தைப் பார்க்கப் பயங்கரமானது ஆத்தும மரணம். பாவஞ் செய்தவர்கள் எல்லாரும் பாவத்தினாலே செத்தவர்கள். ஏனெனில், பாவம் பராபரனை விட்டு அவர்களைப் பிரிக்கிறது. பராபரனை விட்டுப் பிரிந்த ஆத்துமா செத்ததுதான். ஆகையால், அப்போஸ்தலன் எபேசியரைப் பார்த்து: நீங்கள் அக்கிரமங்களாலும் பாவங்களாலும் மரித்தவர்களாயிருந்தீர்கள் என்று சொல்லுகிறார் (எபே. 2, 1). ஞான மரணமாகிய இந்த மரணத்தை அடைந்தவர்களுடைய நிலைமை பரிதாபம். சரீர உயிரை இழந்தவர்களுக்காக நாம் அழுவோம், புலம்புவோம், கத்துவோம். என்றாலும், ஞான மரணமடைந்தவர்களுக்காக நாம் புலம்புகிறதில்லை. பராபரனாகிய கர்த்தரைப் பார்ப்பதற்குக் கண் இல்லாமலும், அவருடைய வசனத்தைக் கேட்பதற்குக் காதில்லாமலும், அவரை நோக்கிச் செபம்பண்ண வாயில்லாமலும், அவரைக் கும்பிட்டுத் தொழுவதற்குக் கையில்லாமலும், அவருடைய வழிகளில் நடப்பதற்குக் காலில்லாமலும், பாவத்திலே செத்துக்கிடக்கிறவர்கள் எத்தனைபேர். பிரேதமாய்த் தூக்கிவரப்பட்ட நாயீன் ஊர் வாலிபனுக்காக அழுகிறதைப்பார்க்கிலும், பாவத்தில் மரித்து ஞான மரணமடைந்தவர்களுக்காக நாம் அழுவதற்கு அதிக நியாயம் உண்டு. சரீர மரணமடைந்தவர்கள் பராபரனுக்குத் தூரமாய்ப் போனார்களென்று நிச்சயமாய்ச் சொல்ல இடமில்லை. ஞான மரணமடைந்தவர்களோ பராபரனுக்கு முற்றிலும் தூரமானவர்கள். அவர்களுக்குச் சரீர மரணமும் வருமானால் அவர்கள் நிலைமை பரிதாபம்.

நம்முடைய இரட்சகர் சரீர மரணம் அடைந்தவர்களுக்காக மனதுருகுவதைப் பார்க்கிலும், ஞானமரணம் அடைந்தவர்களுக்காக அதிகமாக உருகுகிறார். அவர்களை உயிர்ப்பிக்கிறதற்காகவே கிறிஸ்து இந்த உலகத்திற்குவந்தார். பாவிகள் அவரைத் தேடாவிட்டாலும், பாவிகளை அவர் தேடி வருகிறார். இதோ, நமது நடுவிலே வருகிறார். அவரை விசுவாசத்தால் பாருங்கள். கிறிஸ்து தொடுகிறார், நம்முடைய பிரேதங்களோடே நாம் அவருக்கு மு... ...போமாக. கிறிஸ்து பேசுகிறார், அவர் சொல்லைக்



கேட்போமாக. அவருடைய வல்லமையான சொல் பாவிகளுடைய இருதயத்தில் தைப்பதாக, செத்துப்போன அவர்களை எழுப்புவதாக. பாவத்தில் மரித்திருக்கிற நம்முடைய இளைஞர்களும் நம்முடைய வாலிபர்களும் நம்முடைய விருத்தாப்பியரும் அவருடைய சொற் கேட்டு எழுந்திருந்தால் எவ்வளவு பெரிய பாக்கியம். கிறிஸ்து சீவன். அவருடைய வசனம் ஆவியும் சீவனுமாயிருக்கிறது. அவருடைய வசனத்தைக் கேட்கிறவர்கள் மரித்தும் பிழைப்பார்கள். பிரசங்கிக்கிற நானும், பிரசங்கத்தைக் கேட்கிற நீங்களும் கிறிஸ்துவினால் உயிரடைந்தவர்கள்.

உயிரடைந்த வாலிபன் பேசத் தொடங்கினான். கிறிஸ்துவை விசுவாசித்து ஞான மரணத்துக்கு நீங்கலாகி ஞான சீவனடைந்தவர்கள் யாரோ, அவர்கள் அமர்ந்திருக்கமாட்டார்கள். விசுவாசித்தேன்; ஆகையாலே பேசுகிறேன் (சங். 116, 10) என்று சொல்லி, ஞான சீவனடைந்த ஒவ்வொருவனும் பேசுகிறான். விசுவாசி பேசுவது என்ன. தன்னை உயிர்ப்பித்த கர்த்தருக்கு மகிமையும், தன்னோடொத்த சகோதரர்களுக்கு நன்மையுமானவைகளையே பேசுகிறான். நாமெல்லாரும் பெற்றுக்கொண்ட ஞான சீவனுக்குச் சாட்சியாகக் கர்த்தரை எப்பொழுதும் மகிமைப்படுத்தக்கடவோம். அவருடைய நாமத்தை எல்லாருக்கும் தெரிவிக்கக் கடவோம்.

எங்களுக்கு உயிரைக் கொடுக்க வந்த சீவனுடைய அதிபதியே, உமக்கு அனந்த ஸ்தோத்திரம். நாங்கள் உம்மை விட்டுப் பிரியாமல் உம்மிலே நிலைத்துப் பிழைத்திருக்கப் பண்ணும். உம்மை விட்டுப் பிரிந்து பாவத்தால் செத்துக் கிடக்கிற யாவர் பேரிலும் நீர் மனதுருகி, அவர்களையும் எழுப்பி, நாங்களும் அவர்களும் உம்மை ஏகோபித்துத் துதிக்கப்பண்ணியருளும், சுவாமி, ஆமேன்.

---

## திரித்துவப் பண்டிகைக்குப் பிந்தின ௰௭-ம் ஞாயிறு.

லூக். 14, 1—11.

பிரியமானவர்களே,

இயேசுநாதர் ஒருநாள் தமது சீஷரை நோக்கி: பரிசேயர் சதுசேயர் என்றவர்களின் புளித்தமாவுக்கு எச்சரிக்கையாயிருக்கப் பாருங்கள் என்று சொன்னார் (மத். 16, 6). அச்சமயத்தில் சீஷர் கையிலே சாப்பாட்டுக்கு வேண்டிய அப்பங்கள் இல்லாமையால், பரிசேயர் சதுசேயரிடத்தில் புளித்தமாவினால் செய்திருக்கும் அப்பங்களை வாங்கிவிடாதேயுங்கள் என்று இரட்சகர் சொன்னதாக நினைத்தார்கள். அப்படியில்லாவிட்டா

னும் அற்புதமாய் அப்பங்கொடுக்கக் கர்த்தரால் கூடும் என்று இரண்டு முக்கிய சமயங்களில் கர்த்தர் காண்பித்திருந்தார். ஒரு சமயத்தில் ஐயாயிரம் பேருக்கும், மற்றொரு சமயத்தில் நாலாயிரம் பேருக்கும் அவர் அற்புதமாய்ப் போசனம் கொடுத்தார். இது சீஷருக்கு நன்றாய்த் தெரிந்திருந்தும், அப்பமில்லாமைக்காக இயேசு கவலைப்பட்டதாக அவர்கள் நினைத்தது பிசகு. இதை இயேசு அவர்களுக்கு உணர்த்தினார். அப்பொழுது அவர் அப்பத்தின் புளித்தமாவுக்கு அல்ல, பரிசேயர் சதுசேயருடைய உபதேசத்துக்கு எச்சரிக்கையாயிருக்கச் சொன்னதாக அறிந்துகொண்டார்கள். பரிசேயர் பராபரனுடைய வசனத்துக்கு விரோதமாய் உபதேசித்த கள்ளப்போதகராயிருந்தார்கள். அவர்களுடைய கள்ளப்போதகங்களுக்குச் சீஷர் எச்சரிக்கையாயிருக்க வேண்டியது. கொஞ்சம் புளித்தமாவானது நல்ல மாவைப் புளிப்பாக்குவதுபோல், அவர்கள் உபதேசத்தைக் கேட்டு அவர்கள் நடக்கையைப் பின்பற்றுகிறவர்கள் தங்கள் விசுவாசத்தைக் கெடுத்துக்கொள்வார்கள்! யூதருக்குள் பரிசேயர் இருந்ததுபோல் கிறிஸ்தவர்களுக்குள்ளும் பரிசேயருண்டு. இவர்களுடைய புளித்தமாவுக்கு நாம் எச்சரிக்கையாயிருக்கவேண்டியது. நம்முடைய சுவிசேஷ வாக்கியத்தினால் பரிசேயருடைய புளித்தமாவை அறிந்து விலக்கலாம்.

### நாம் விலக்கவேண்டிய பரிசேயருடைய புளித்தமா என்ன.

1. இரக்கமற்ற சர்ப்பனைக் குணம்.
2. காரியமில்லாத வெளிவேஷம்.
3. தன்னை உயர்த்திக்கொள்ளும் அகந்தை.

### 1.

இரக்கமற்ற சர்ப்பனைக் குணம் நாம் விலக்கவேண்டிய பரிசேயருடைய புளித்தமா என்பதைப் பார்ப்போம்.

பரிசேயரின் தலைவனாகிய ஒருவன் வீட்டிலே அவர் ஓய்வு நாளிலே அப்பம் புசிக்கையில் அவர்கள் அவரைச் சர்ப்பனையாகக் காத்திருந்தார்கள் என்று வாசிக்கிறோம்.

இயேசுநாதரை விருந்துக்கு அழைத்தவன் ஒரு பரிசேயன். அவன் பரிசேயரில் தலைவன் என்று சொல்லியிருக்கிறது. அவனும் அவனைச் சேர்ந்தவர்களும் இயேசுநாதரைச் சிநேகித்தவர்கள் அல்ல. அவர்மேல் ஏதாகிலும் குற்றம் கண்டுபிடிக்க வேண்டுமென்பது அவர்கள் ஆசை. ஏனெனில், இயேசுநாதர் அவர்களுடைய தப்பறையான போதகங்களையும் மாயமான நடக்கையையும் மிகவும் கண்டித்துப் பேசினார். அதினிமித்தம் அவர்கள் அவரைப் பகைத்தார்கள். அவர்கள் மனதிலே கடும் பகை



யிருந்தும், அந்தப் பரிசேயரில் ஒருவன் தன்னை அவருக்குச் சிநேகிதன்போல் காண்பித்து, அவரை வீட்டுக்கு அழைத்தது பரிசேயரின் மாயமான குணத்துக்கு ஏற்ற செய்கைதான். அவனும் அவனுடைய சிநேகிதரும் கர்த்தரைக் குற்றஞ்சாட்டிக் கெடுக்கவேண்டுமென்கிற நோக்கமாய் அவரை விருந்துக்கு அழைத்தார்கள். இந்த மாதிரிச் செய்கைக்குச் சர்ப்பனை என்று பெயர். சர்ப்பனைக்குணம் பிசாசின் குணம். ஒரு குருவியைப் பிடிக்கக் கண்ணிகுத்தி, அதில் குருவிக்குப் பிரியமான ஒரு பதார்த்தத்தைப்போட்டு வைப்பதுபோல, நீர்க்கோவை வியாதியுள்ள ஒரு மனுஷனை அங்கே வைத்திருந்தார்கள்.

இயேசுநாதருக்கு அவர்களுடைய கெட்ட எண்ணம் எல்லாம் நன்றாய்த் தெரிந்திருந்தும், அந்தச் சர்ப்பனைக்காரர் நடுவே அவர் போனார். ஆகாதவர்களுடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், சாசக்காரர் உளுக்கார்ந்திருக்கிற இடத்தில் உளுக்காராமலும் இருக்கவேண்டுமென்று (சங். 1, 1) வேதத்தில் சொல்லியிருக்க, அந்த ஆகாத கூட்டத்தின் நடுவே இயேசுநாதர் போனது சரியா என்று கேட்போம். அப்படிப்பட்ட இடங்களுக்கு நாம் போகிறது சரியல்ல. நாம் அவர்களால் லேசாய்க் கெட்டுப்போவோம். இயேசுவோ பாவமற்ற பரிசுத்தராயிருந்ததினாலும், பாவிகளைக் குணப்படுத்த அவர் வந்ததினாலும் அவர் அந்த வீட்டுக்குப் போனதில் தப்பிதமேயில்லை.

இயேசுநாதர் இரக்கமுள்ளவரென்றும், அங்கிருந்த வியாதிக்காரனுக்கு அவர் எப்படியும் உதவிசெய்வாரென்றும் அவர்களுக்கு நன்றாய்த் தெரிந்தது. அவர் விருந்துக்குப்போன அந்த நாள் யூதருக்கு ஓய்வு நாளான சனிக்கிழமையாயிருந்ததால், எப்படியும் அவர்மேல் குற்றஞ்சுமத்த முகாந்திரம் அகப்படுமென்று அவர்கள் காத்திருந்தார்கள். இயேசுநாதருக்கு அவர்களுடைய கெட்ட எண்ணம் நன்றாய்த் தெரிந்தது. ஆகையால், அவர் நியாயசாஸ்திரிகளையும் பரிசேயரையும் பார்த்து: ஓய்வு நாளிலே குணமாக்குகிறது நியாயமோ என்று கேட்டார். அவர்களோ பேசாதிருந்தார்கள். ஓய்வு நாளில் இயேசுநாதர் குணமாக்கினால் அவர் ஓய்வு நாளை மீறினாரென்று குற்றம் சொல்லலாம் என்று நினைத்தார்கள். அவர் ஓய்வு நாளில் அவனைக் குணமாக்காவிட்டாலும், அவர்மேல் குற்றம் சுமத்தியிருப்பார்கள். இயேசுநாதர் வியாதியஸ்தரைச் சுகமாக்க வல்லமையுள்ளவராயிருந்தும், இந்த வியாதிக்காரனைச் சுகப்படுத்தாமல் விடுவது அவருடைய இரக்கத்துக்கு விரோதம் என்று சொல்லி அவரைக் குற்றம் சாட்டுவார்கள். என்றாலும், அவர்கள் வைத்த இந்தச் சர்ப்பனையான கண்ணியிலே அவர் அகப்படவில்லை; அவர்களே அகப்பட்டவர்

களென்று சொல்லலாம், ஓய்வு நாளிலே குணமாக்குகிறது நியாயமோ என்ற சுளுவான கேள்விக்கு அவர்கள் உத்தரவு சொல்ல மாட்டாதேபோனார்கள். அவர்கள் வேதமெல்லாம் கற்றவர்கள் என்று தங்களை நினைத்திருந்தும், இயேசுநாதரிடத்தில் குற்றம் பிடிக்க தங்களைச் சமர்த்தராக எண்ணியிருந்தும், இரட்சகருடைய கேள்விக்கு அவர்கள் உத்தரவு சொல்லாமல் போனது அவர்களுடைய கெட்ட இருதயத்தை நமக்குக் காண்பிக்கும். ஓய்வு நாளில் குணமாக்குகிறது நியாயந்தானென்று அவர்கள் சொன்னால், அது அவர்கள் கொள்கைக்கு விரோதமாகும், அவரைக் குற்றப்படுத்த வழியில்லாதேபோம். நியாயம் அல்லவென்று சொன்னால், அவர்கள் இரக்கமற்றவர்களென்று வெளிப்படையாய்த் தெரியவரும். இதனால் அவர்கள் குழப்பமாகி, வாயை மூடி, தலையைக் கவிழ்ந்துகொண்டார்கள். கர்த்தரோ தம்முடைய இரக்கத்தை அந்த வியாதிக்காரனுக்குப் பாராட்டி, அவனைப் பிடித்துக் குணமாக்கிவிட்டார். அந்தப் பரிசேயருடைய சர்ப்பனைக் குணம் அவருடைய இரக்கத்தைத் தடுக்க முடியாமல் போயிற்று.

இவ்வளவு இரக்கமுள்ள இயேசு இரட்சகரை அவர்கள் பகைத்தது எவ்வளவு பெரிய அநியாயம். அவருக்கு அன்பு பாராட்டுவதுபோல் விருந்துக்கு அழைத்து, அவரைக் கெடுப்பதற்குக் கண்ணி வைத்தது எவ்வளவு கெட்ட சிந்தை. நாமோ கிறிஸ்துவை விசுவாசித்து அவருடைய மாதிரியின்படி நடக்கவேண்டியவர்கள். இரக்கமற்ற பரிசேயருடைய குணம் நமக்கு அருவருப்பாயிருக்கவேண்டும். நிர்ப்பந்தப்பட்டவர்களுக்குப் பரிதபித்து, எந்த நாளிலும் அவர்களுக்கு நன்மை செய்யக் கவலையாயிருக்கவேண்டும்.

ஆகிலும், இயேசு நாதருடைய பேரை வைத்துக்கொண்டு தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லுகிற எத்தனை பேர் மெய்யாகவே இரக்கமற்றிருக்கிறார்கள். அவர்கள் மெய் விசுவாசிகளைப் பகைத்து, சுத்த போதகத்தை எதிர்த்து, கர்த்தருடைய ஊழியரைத் துன்பப்படுத்துவார்கள். இப்படி நாம் செய்யாமல் இரக்கத்தையே தரித்துக்கொண்டு நடப்போமாக.

## 2.

காரியம் இல்லாத வெளிவேஷமும் நாம் விலக்கவேண்டிய பரிசேயருடைய புளித்த மா.

ஓய்வு நாளில் குணமாக்குகிறது நியாயமோ என்கிற கேள்விக்கும் நியாயப்பிரமாணத்துக்கடுத்த மற்ற எந்தக் கேள்விக்கும் சரியான உத்தரவு சொல்ல அவர்கள் கவனிக்கவேண்டிய ஒரே ஒரு முக்கிய காரியம் உண்டு. சிநேகம் நியாயப்பிரமாணத்



தின் நிறைவேறுதல். இதின்படியே ஒவ்வொரு கேள்வியையும் நிதானிக்கவேண்டும். இதுவோ பரிசேயருக்குத் தெரியாது. அந்த இரக்கமற்ற பரிசேயர் தமது கேள்விக்கு உத்தரவு சொல்லாததைக் கண்ட இயேசுநாதர் தம்முடைய சிநேகமும் இரக்கமும் சொல்லுகிறபடியே செய்து, அந்த ஏழை வியாதிக்காரனைச் சுகமாக்கிவிட்டார். ஆகிலும், அந்த மனிதரின் சிந்தனைகளைக் கண்டிருக்கிறவராய் அவர்களுடனே: உங்களில் எவனுடைய கழுதையாகிலும் எருதென்கிலும் ஒரு துரவிலே விழுந்தால், அதை அவன் உடனே ஓய்வு நாளில் தூக்கிவிடானோ என்றார். இதற்கு அவர்கள் எதிர் உத்தரஞ் சொல்லமாட்டாதே போனார்கள். அவர்கள் எந்த முகாந்திரம் பற்றியும் ஓய்வுநாளில் அதாவது சனிக்கிழமையில் வேலை செய்யக்கூடாது என்று கண்டிப்பாய்ச் சொல்லியும், தங்கள் பொருளுக்கு நஷ்டம் உண்டாகிற போது வேலை செய்யலாம், தண்ணீரில் அமிழ்ந்திப்போகிற ஒரு கழுதையைத் தூக்கிவிடலாம், ஒரு கிணற்றிலே விழுந்த மாட்டைத் தூக்கிவிடலாம் என்று சொன்னார்கள். ஆகிலும், நிர்ப்பந்தப்பட்ட மனுஷனுக்கு உதவி செய்யலாமோ செய்யப்படாதோ என்று அவர்களுக்குத் தெரியவில்லை. ஏனென்றால், அவர்கள் செய்கையெல்லாம் காரியமில்லாத வெறும் வேஷமும் மாயமுமாகவேயிருந்தது. அவர்களிடத்தில் சிநேகம் என்பது இல்லை. ஆகையால் அவர்களுக்கு மறுமொழி சொல்லவும் வாய் வரவில்லை.

அந்தக் குருட்டுப் பரிசேயர் நியாயப்பிரமாணத்தை வெளிவேஷக் கிரியையினால் நிறைவேற்றலாம் என்று நினைத்தார்கள். ஒவ்வொரு கற்பனையிலும் மனதினால் நிறைவேற்றவேண்டிய ஒரு முக்கிய கடமையுண்டு என்று அவர்கள் அறியவில்லை. அவர்களுக்கு ஒரு மனிதன் தன் சகோதரனைப் பகைத்தாலும் சரி, சிநேகித்தாலும் சரி எல்லாம் ஒன்றுதான்; அவனைக் கொல்லாதிருந்தால் போதும், அவன் ஐந்தாம் கற்பனையை நிறைவேற்றினானென்று சொன்னார்கள். அப்படியே ஒருவன் பராபரனுடைய வாசஸ்தலத்தையும் அதன் ஒழுங்குகளையும் தன் முழு மனதினாலும் சிநேகிக்கிறானோ இல்லையோ என்று அவர்கள் கவனித்ததில்லை. கோயிலுக்குப் பத்திலொன்றையும் பலிகளையும் செலுத்தினால் போதும் என்று அவர்கள் எண்ணினார்கள். வெளிவேஷம் அவர்களுக்குப் போதுமானதாயிருந்தது. இருதயத்தின் பரிசுத்தத்தையும் நீதியையும் அவர்கள் காரியமாக எண்ணவில்லை.

அவர்களுடைய மாயமும் வேஷமும் முக்கியமாய் ஓய்வு நாளைப் பற்றிய அவர்கள் போதகத்தில் வெளியாயிற்று. நீ ஆறு நாள் வேலை செய்து ஏழாம் நாளில் ஓய்ந்திருப்பாயாக

என்ற கற்பனை இந்த மாயக்காரருக்கு அவர்கள் மாயத்தைக் காட்ட இடங்கொடுப்பதாகத் தோன்றிற்று. இந்தக் கற்பனையைக் குறித்து அவர்கள் வெகுவாய்ப் பேசினார்கள். ஓய்வு நாளில் நடக்கலாமா, உலாவலாமா, கோயிலுக்கு நடந்து போகலாமா, ஓய்வு நாளில் சும்மா கை காலை அசைக்கலாமா, மருந்து கொடுக்கும்படி கையை அசைப்பது பாவமா, ஓய்வுநாளில் வியாதிக்காரனுக்கு மருந்து கொடுக்கலாமா என்று பலவிதமாக யோசித்தார்கள். இந்த ஓய்வு நாள் கற்பனையையும் நிறைவேற்ற சிநேகம் அவசியம் என்றும், சிநேகமில்லாமல் ஓய்வுநாளில் ஓய்ந்திருக்குதல் பாவமென்றும் அவர்கள் நினைக்காதே போனார்கள். பராபரன், உதட்டினாலும் கையினாலும் மாத்திரமல்ல, இருதயத்தினாலும் நாம் தம்முடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படியவேண்டுமென்று விரும்புகிறார். பரிசேயருடைய கீழ்ப்படிதல் உதட்டுக் கீழ்ப்படிதல், கைகாலின் கீழ்ப்படிதல், அவர்கள் இருதயமோ பராபரனுக்குக் கீழ்ப்படியாதிருந்தது. அவர்கள் கீழ்ப்படிதலின் ரூபத்தைத் தேடினார்களேயன்றி அதன் உண்மையைத் தேடவில்லை. வெளிவேஷமாகிய பரிசேயருடைய புளித்தமாவுக்கு நாம் எச்சரிக்கையாயிருப்போமாக. நமக்குப் பழைய ஏற்பாட்டின் ஓய்வு நாள் இல்லை. இயேசுநாதர் உயிர்த்தெழுந்ததோடு பழைய ஏற்பாட்டின் ஓய்வு நாளும் அதற்கடுத்த மற்றச் சடங்குகளும் ஒழிந்துபோயிற்று. கிறிஸ்தவர்களாகிய நாம் புறம்பான சடங்கைத் தள்ளி உள்ளான பொருளை நாடுகிறோம். நாம் கர்த்தருடைய நாளாகிய ஞாயிற்றுக் கிழமையைத் திரு நாளாக ஆசரிப்பது இயேசுவையும் அவர் வசனத்தையும் சிநேகிக்கிற சிநேகத்தினாலே ஒழிய வேறல்ல. புறம்பான ஓய்வு நமக்குப் பெரிதல்ல. கர்த்தரைச் சிநேகித்து, அவருடைய வசனத்தை அந்த நாளில் கேட்போம். கர்த்தரைச் சிநேகிப்பதால் அந்த நாளிலும் சகோதரரைச் சிநேகித்து, அவர்களுக்குச் சந்தோஷத்தோடு நன்மை செய்வோம். வியாதிக்காரருக்கும் ஏழைகளுக்கும் உதவி செய்வது அந்த நாளில் நமக்கு விசேஷித்த சந்தோஷத்தைக் கொடுக்கும். திக்கற்றவர்களையும் விதவைகளையும் அவர்களுடைய உபத்திரவத்திலே கண்டு சந்திக்கிறதும் தன்னை லோகத்தால் கறைபடாதவனாகக் காக்கிறதும், பிதாவாகிய பராபரனுக்கு முன்பாக மாசில்லாத சுத்த தெய்வபக்தியாயிருக்கிறது என்று யாக்கோபு அப்போஸ்தலன் சொல்லுகிறார் (யாக். 1, 27).

புறம்பான சடங்கு நம்மை இரட்சிக்கும் என்று நினைப்பது பரிசேயருடைய புளித்தமா. ஞானஸ்நானம் நம்முடைய இரட்சிப்புக்கென்று கர்த்தர் ஏற்படுத்திய ஞானதிரவியம். ஆகிலும், ஞானஸ்நானத் தண்ணீரினாலேயே இரட்சிப்பு வருமென்று சொல்வது சரியல்ல. இந்த நன்மைகள் தண்ணீரா



லல்ல, அத்தோடு கூடிய பராபரனுடைய வசனத்தினாலும் அந்த வசனத்தை நம்புகிற விசுவாசத்தினாலுமே வரும் என்று ஞானோபதேசத்தில் படித்திருக்கிறோம். விசுவாசம் இல்லாதவனுக்கு ஞானஸ்நானத்தினால் பிரயோசனமில்லை. அப்படியே கர்த்தருடைய இராப்போசனத்தையும் புறம்பான வழக்கத்துக்கென்று வாங்குகிறது பாவம். இருதயத்தின் மனஸ்தாபத்தோடும் விசுவாசத்தோடும் வாங்கினால் மாத்திரம் அது நம்முடைய இரட்சிப்புக்கு உதவும். புறம்பாக மாத்திரம் கர்த்தருடைய பந்திக்குச் சேருகிற சேர்த்திக்கை பரிசேயருடைய புளித்த மாவாகும். இதற்கு நாம் எச்சரிக்கையாயிருப்போமாக. வேஷத்தினாலும் மாயத்தினாலும் மனிதரை மோசம் போக்கலாம், கர்த்தரை மோசம்போக்க முடியாது. மனிதர் வெளிரூபத்தைப் பார்க்கிறவர்கள், கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறவர். கர்த்தர் சவுல் இராசாவைப் புறக்கணித்த பின் வேறொருவனை ராசாவாக்கச் சித்தமாயிருந்தார். அதற்காகச் சாமுவேல் தீர்க்கதரிசியைப் பெத்லெகேம் ஊரிலுள்ள ஈசாய் என்பவன் வீட்டுக்கு அனுப்பினார். சாமுவேல் ஈசாயின் மூத்த மகனாகிய எலியாபைப் பார்த்து, அவன் வாகன் என்று கண்டு அவனை அபிஷேகம் பண்ணப் போனார். கர்த்தரோ அவரைத் தடுத்து: நீ அவனுடைய ரூபையும் அவன் தன் வளர்த்தியினாலே நெட்டையன் என்பதையும் நோக்காயாக; ஏனெனில் அவனைப் புறக்கணித்தோம், அதேனென்றால் மனுஷன் பார்க்கிறபடி பாரோம், ஏனெனில் மனுஷன் கண்களுக்கு முன்பாக இருக்கிறதைப் பார்ப்பான்; கர்த்தரோவென்றால் இருதயத்தைப் பார்க்கிறார் என்றார் (க சாமு. 16, 7).

## 3.

தன்னை உயர்த்திக்கொள்ளும் அகந்தை பரிசேயருடைய மற்றொரு புளித்தமா. இதற்கும் நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பந்தியில் முதல் இடங்களை எப்படித் தெரிந்துகொண்டார்களென்கிறதை அவர் கவனித்துப் பார்த்து அவர்களுக்குச் சொன்ன உவமையாவது: நீ ஒருவனால் கலியாணத்துக்கு அழைக்கப்பட்டால், பந்தியில் முதல் இடத்தில் உட்காராதே; ஏனெனில் ஒருவேளை உன்னிலும் கனமுள்ளவன் அவனால் அழைக்கப்பட்டிருக்கக்கொள்ள உன்னையும் அவனையும் அழைத்தவன் வந்து உன்னுடனே: இவனுக்கு இடங்கொடு என்பான். அப்போது நீ வெட்கத்துடனே கடைசி இடம் பிடிக்கத் துவக்குவாய். நீ அழைக்கப்பட்டால் போய்க் கடைசி இடத்தில் உட்காரு; அப்போது உன்னை அழைத்தவன் வந்து: உன்னுடனே; சிநேகிதனே, உயரப்போ

யிரு என்றால், உன்னுடனே கூடப் பந்தியிருக்கிறவர்களுக்கு முன்பாக உனக்குக் கனம் உண்டாகும். அதேனென்றால் தன்னைத்தான் உயர்த்துகிறவனெல்லாம் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்.

பந்தியிலே முதலிடம் தேடின பரிசேயர் தாங்கள் செய்த எல்லாக் காரியத்திலும் அகந்தையும் பெருமையுமுள்ளவர்களாயிருந்தார்கள். அவர்கள் தருமம் செய்தது பெருமைக்கு, அவர்கள் செபம் செய்தது பெருமைக்கு, அவர்கள் உபவாசம் செய்தது பெருமைக்கு. அவர்கள் தங்கள் வீட்டிலும் வெளியிலும் ஆலயங்களிலும் பெருமை காட்டிக்கொண்டு திரிந்தார்கள். இது கர்த்தருக்கு மகா அருவருப்பாயிருந்தது. அவர் இதைத் தம்முடைய பிரசங்கங்களில் கண்டித்தார். கிறிஸ்தவர்களாகிய நாம் பரிசேயரின் புளித்தமாவாகிய பெருமைக்கு எச்சரிக்கையாயிருப்போமாக.

நிர்ப்பந்தப் பாவிகளாகிய நாம் நம்மை உயர்த்துகிறதற்கு என்ன நியாயமிருக்கிறது. நமக்குள்ள படிப்போ, பணமோ, அழகோ, இதெல்லாம் கர்த்தர் நமக்குக் கொடுத்தது. இவைகளுக்காகப் பெருமை பாராட்ட நமக்கு நியாயமேயில்லை. நமக்கு உள்ளது நம்முடைய பாவம்தான். நம்முடைய பாவத்தை நினைக்கும்பொழுது நாம் வெட்கத்தோடும் துக்கத்தோடும் நம்மைத் தாழ்த்திக் கண்ணீர் விடவேண்டியதே அல்லாமல் வேறல்ல. நாமெல்லாரும் பாவிகளாயிருக்கக்கொள்ள ஒருவருக்கு மேலாக ஒருவர் உயர்த்திக்கொள்வது சரியா. முக்கியமாய்க் கர்த்தருடைய நாளிலும் கர்த்தருடைய வீட்டிலும் கர்த்தருடைய பந்தியிலும் நாம் பெருமையும் அகந்தையும் காட்டுகிறது பெரிய அநியாயம்.

தாழ்மையே கர்த்தருடைய பிள்ளைகளின் அடையாளம். நான் மெத்தனவும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேனென்று கர்த்தர் சொல்லுகிறார் (மத். 11, 29). அவரை விசுவாசித்து அவருடைய அடிகளைப் பின்பற்றுகிற நமக்குத் தாழ்மை வேண்டாமா. நாம் சிறு பிள்ளைகளைப் போலாக வேண்டுமென்று கர்த்தர் சொன்னாரே. நாம் நடக்கவேண்டிய வழி நெருக்கமும், நாம் பிரவேசிக்கவேண்டிய வாசல் இடுக்கமுமாயிருக்கையில், நமக்குப் பெருமை உதவுமா. நாமெல்லாரும் தாழ்மையாயிருப்பது அவசியம்.

மேலும், தாழ்மையே உயர்வுக்கு வழி. அகந்தை ஒருவனைத் தாழ்த்திவிடும். நாம் ஒரு விருந்துக்குப் போயிருக்கும்பொழுது வீட்டுக்காரன் நம்மை வைக்காத முதல் இடத்திலே நாமே போய் உட்காருவது புத்தியா. அவன் வேறொருவனை நமக்குமேல் வைத்து, நம்மைத் தாழப் போகச்சொன்னால்,



அது எவ்வளவு பெரிய அவமானம். இதை நம்முடைய இரட்சகர் உவமையாய்க் காண்பித்து நம்மைத் தாழ்மைக்கு ஏவுகிறார். நாம் நம்முடைய பாவத்தை நினைத்து, கர்த்தருக்கு முன்பாக நம்மைத் தாழ்த்துகிறபோது அவர் நமக்கு இரங்கி, நம்முடைய பாவத்தை மன்னிக்கிறார். நம்மைத் தாழ்விலிருந்து தூக்கி உயர்த்துகிறார். தாழ்மையோடு விண்ணப்பம் பண்ணின கள்ளனுக்குத் தம்மோடு பரதீசில் பங்குகொடுத்தார். இப்படியிருக்க, கர்த்தருடைய கிருபையை மறந்து, நம்முடைய புண்ணியங்களுக்காகப் பெருமை பாராட்டுவோமானால், கர்த்தருடைய கோபம் நமதுமேல் வரும். அவர் அகந்தையுள்ளவர்களோடு எதிர்த்து நின்று தாழ்மையுள்ளவர்களுக்குக் கிருபை அளிக்கிறார். ஆகையால், பரிசேயருடைய புளித்தமாவாகிய பெருமை நம்மைக் கெடுக்காதபடி எச்சரிக்கையாயிருப்போமாக.

அன்புள்ள இயேசுவே, தேவரீர் உம்முடைய பரிசுத்த ஆவியினால் எங்களை நிரப்பி, எங்களை இரக்கமில்லாமைக்கும் மாய்மால வேஷத்திற்கும் அகந்தைக்கும் விலக்கிக் காத்தருளும், சுவாமி. ஆமென்.

---

## திரித்துவப் பண்டிகைக்குப் பிந்தின ௧௮-ம் ஞாயிறு.

மத்தேயு 22, 34—46.

பிரியமானவர்களே,

நீங்கள் சகலத்திலும் சகல வசனத்திலும் சகல அறிவிலும் இயேசுகிறிஸ்துவுக்குள் ஐசுவரியவான்களானீர்கள் என்கிற, அவருக்குள் உங்களுக்கு அளிக்கப்பட்ட பராபரனுடைய கிருபைக்காக, எப்போதும் என் பராபரனை உங்கள் நிமித்தம் ஸ்தோத்திரிக்கிறேன் (௧ கொரி. 1, 4) என்று பவுல் அப்போஸ்தலன் நம்முடைய நிருபவாக்கியத்தில் சொல்லுகிறார். கொரிந்தியர் பணம் காசில் ஐசுவரியவான்களாயிருந்ததுக்காக அல்ல, வசனத்திலும் அறிவிலும் ஐசுவரியவான்களாயிருந்ததற்காக அப்போஸ்தலன் சந்தோஷப்பட்டார். இங்கே கூடிவந்திருக்கிற நாம் பணத்தில் ஐசுவரியவான்கள் அல்ல. அறிவிலாவது ஐசுவரியவான்களாயிருக்கிறோமா. நாம் அறிவிலே பெருகியிருக்கத் தடையில்லை. நமக்குப் பராபரனுடைய வசனம் எப்பொழுதும் போதிக்கப்படுகிறது. நமக்குப் பிரியமானபோதெல்லாம் அதைக் கேட்டுப்படிக்க இடமுண்டு. இப்படியிருந்தும், அநேகர் அறிவிலும் தரித்திரராயிருப்பது விசனமான காரியம். ஒவ்வொரு மனிதனுக்கும் இரண்டு அறிவு முக்கியமாய்த் தேவை: தன்னை அறிகிற அறிவு, தன் இரட்சகரை அறிகிற அறிவு. இந்த இரண்

டும் நம்முடைய சுவிசேஷ வாக்கியத்தில் சொல்லியிருக்கிறது. இதை நாம் இன்றைக்குப் படித்துக்கொள்ளுவோம்.

நமக்கு இருக்கவேண்டிய முக்கிய அறிவு என்ன.

1. நியாயப்பிரமாணத்தால் நம்மை அறிகிற அறிவும்,
2. சுவிசேஷத்தால் கிறிஸ்துவை அறிகிற அறிவுந்தானே.

1.

நியாயப்பிரமாணத்தால் நம்மை அறிகிற அறிவு நம்மில் ஒவ்வொருவனுக்கும் அவசியம்.

இயேசுநாதர் சதுசேயருடைய வாயை அடைத்தார் என்று பரிசேயர் கேள்விப்பட்டு ஒன்றாய்க் கூடினார்கள். இந்தச் சங்கதி இயேசுநாதர் பாடுபட்ட பரிசுத்த வாரத்திலே நடந்தது. அந்த வாரத்தின் செவ்வாய்க்கிழமையிலே அவருடைய சத்துருக்கள் எருசலேம் தெய்வாலயத்தில் கூட்டம் கூட்டமாய் அவரிடம் வந்து, அவரைப் பல கேள்விகளும் கேட்டு, அவரிடத்தில் குற்றம் கண்டுபிடிக்கப் பார்த்தார்கள். அவர்களில் சதுசேயருடைய கூட்டம் ஒன்று. சதுசேயர் உயிர்த்தெழுதலுமில்லை, ஆவியுமில்லை, தூதனுமில்லை என்று போதித்தவர்கள் (அப். 23, 8). அவர்கள் இயேசுநாதரிடத்திலே உயிர்த்தெழுதலைப் பற்றிக் கேட்ட கேள்விக்கு அவர் நல்ல மறுமொழி சொல்லி, அவர்கள் வாயை அடைத்தார். அதற்குமேல் அவர்கள் அவரோடு தர்க்கம்பண்ணக் கூடாமல்போயிற்று. இதினால் பரிசேயர் தங்கள் சத்துருக்களாகிய சதுசேயர் தோற்றுப்போனதைக் கண்டு சந்தோஷப்பட்டும், அவர்களைத் தோற்கடித்த இயேசுநாதரைச் சிநேகிக்காமல், அவரை விரோதித்து, தங்கள் கேள்விகளால் அவர் வாயைப் பிடிக்கவும் அவர்மேல் குற்றம் சுமத்தவும் பிரயாசப்பட்டார்கள். இதற்காக அவர்களில நியாயசாஸ்திரி ஒருவன் அவரைச் சோதித்து: போதகரே, நியாயப்பிரமாணத்தில் எந்தக் கற்பனை பெரியதென்று கேட்டான். இஸ்ரவேல் சனங்களுக்குப் பராபரன் சீனாய் மலையிலே கொடுத்த நியாயப்பிரமாணத்தை வேதபாரகரும் பரிசேயரும் படித்துச் சனங்களுக்குப் போதிக்கிறவர்களாயிருந்தும், அதை அவர்கள் சரியானபடி அறிந்திருந்ததில்லை. அவர்கள் நியாயப்பிரமாணத்தில் சொல்லப்பட்டவைகளை அறுநூற்றுப் பதின்மூன்று கற்பனைகளாகப் பிரித்து, அவைகளில் இருநூற்று நாற்பத்தெட்டு நாம் செய்யவேண்டியவைகளைச் சொல்லுகிற கற்பனைகள் என்றும், முந்நூற்று அறுபத்தைந்து நாம் விலக்கவேண்டியவைகளைச் சொல்லுகிற கற்பனைகளென்றும் வித்தியாசப்படுத்தினார்கள். இந்தக் கற்பனைகளில் சிலவற்றைச் சின்ன கற்பனைகள் என்றும், சிலவற்றைப் பெரிய கற்பனைகளென்றும் சொல்லிக்கொண்டார்



கள். சின்னது எது, பெரியது எது என்பதைக் குறித்து அவர்களுக்குள் வெகுவான தர்க்கம் இருந்தது. சிலர் பலிப்பிரமாணத்தைப் பெரிது என்று சொன்னார்கள். சிலர் ஓய்வு நாளைப்பற்றிய கற்பனையே பெரிது என்றார்கள். சிலர் சுன்னத்தைப்பற்றிய கற்பனை பெரிதென்றார்கள். இப்பொழுது இயேசுநாதரைக் கேட்ட கேள்விக்கு அவர் பரிசேயருக்குள் இருந்த ஒரு கட்சியைச் சேர்ந்துகொண்டு அவர்களைப்போல் உத்தரவு சொல்வாரானால், பெரிய வம்பும் தர்க்கமும் உண்டாகும். மேலும், அவர்களில் ஒருவருக்காவது நியாயப்பிரமாணத்தைப் பற்றிச் சரியான அறிவில்லாமையால், அவர்களில் ஒருவரையும் அவர் சேரமுடியாது. அவர் சத்தியத்தையே சொல்லுகிறவர். சத்திய வாசகராகிய அவர் தம்மைக் கேள்வி கேட்டவனுக்கு: உன் பராபரனாகிய கர்த்தரை உன் முழு இருதயத்தினாலும் உன் முழு ஆத்துமத்தாலும் உன் முழு வினாவினாலும் சிநேகிப்பாயாக. இது முதலாம் பெரிய கற்பனையாயிருக்கிறது; அத்தோடொத்த இரண்டாம் கற்பனையோ உனக்கடுத்தவனை உன்னைப்போல் சிநேகிப்பாயாக என்பது; இவ்விரண்டு கற்பனைகளில் எல்லா நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் தொங்குகிறது என்றார். இப்படியே இயேசுநாதர் சிநேகக் கற்பனை பெரிதென்று சொல்லி, அப்படிச் சொல்வதற்கு முகாந்தரத்தையும் காண்பித்தார். அவர் சொன்ன மறுமொழி நியாயப்பிரமாணப் புஸ்தகத்திலே மோசேயினால் எழுதப்பட்டிருந்தது. அது நியாயப்பிரமாணக் கற்பனைகளில் ஒன்றாய் மாத்திரம் அல்ல, நியாயப்பிரமாண முழுமையும் தீர்க்கதரிசனம யாவும் போதித்த சகல போதனையின் தொகையாயிருந்தது. சிநேகம் இல்லாமல் சுன்னத்தடைந்தவனாயிருப்பதில் காரியமில்லை, எவ்வளவு பலிசெலுத்தினாலும் பிரயோசனம் இல்லை. நாம் போன ஞாயிற்றுக்கிழமை கேட்டதின்படி சிநேகமில்லாமல் ஓய்வுநாளை ஆசரித்துக் காரியமென்ன. ஆகையால் சிநேகக் கற்பனை பெரிய கற்பனைதான்.

பராபரனைச் சிநேகிக்கிற சிநேகம் முந்தினது. நம்மை உண்டாக்கினவரும் இரட்சித்தவரும் பராமரித்துக் காப்பாற்றுகிறவருமான பராபரன் எல்லாவற்றிலும் பெரியவர். அவரை எல்லாவற்றிலும் பெரிய நன்மையாகவும் எல்லாப்பொக்கிஷங்களுக்கும் மேலான பொக்கிஷமாகவும் மதிக்கவேண்டியது. இந்த எண்ணத்தினால் தன் முழு இருதயத்தையும் பராபரனுக்கு ஒப்புக்கொடுக்கிறவன் ஆரோ, தன் முழு சீவியத்தினாலும அவரை மகிமைப்படுத்துகிறவன் ஆரோ, அவனே பராபரனைச் சிநேகிக்கிறான். பராபரனைச் சிநேகிக்கிற சிநேகத்தோடு தனக்கடுத்தவனையும் சிநேகிப்பது ஒவ்வொருவன் மேலும் விழுந்த கடமை. நியாயப்பிரமாணம் நம்மிடத்திலே கேட்கிறது சிநேகம. ஆண்ட

வரே, என் சகோதரனுக்கு நான் ஒரு தீமையும் செய்யாதிருந்தேன் என்றால் போதாது. அவனைக் குறித்து நல்ல வார்த்தைகளைப் பேசினேன் என்று சொன்னாலும போதாது. அவனுக்கு இதை அதைக் கொடுத்தேன் என்று சொன்னால் போதாது. எவ்வளவு செய்தும், ஒருவன் சிநேகம இல்லாதிருக்கக் கூடும். நான் எனக்கு உண்டான தெல்லாவற்றையும் ஏழைகளுக்கு அசனத்துக்காகப் பகிர்ந்து கொடுத்து, நான் சுட்டெரிக்கப்பட என் சரீரத்தை ஒப்புக்கொடுத்தாலும், சிநேகம் எனக்கு இல்லாதிருந்தால் எனக்குப் பிரயோசனம ஒன்றுமில்லை (க கொரி. 13, 3) என்று அப்போஸ்தலன் சொல்லுகிறார். உன்னைப்போல் சிநேகிப்பாயாக என்று கர்த்தர் சொல்லுகிறார். உனக்கு நீ என்னென்ன செய்துகொள்ள விரும்புகிறாயோ, மற்றவர்கள் உனக்கு என்ன செய்யவேண்டுமென்று நீ ஆசைப்படுகிறாயோ, அவைகளையெல்லாம் நீ உனக்கு அடுத்தவனுக்குச் செய்யவேண்டும். நீ உன்னை இடைவிடாமல் சிநேகிக்கிறாய். அப்படியே உனக்கடுத்தவனையும் இடைவிடாமல் பொறுமையோடே சிநேகிக்கவேண்டும்.

இதுவே நியாயப்பிரமாணம் சொல்லுகிறது. இதுவே சகல தீர்க்கதரிசிகளும் எழுதிவைத்த போதகம். நாமெல்லாரும் இந்தக் கற்பனையின்படியே நம்மைச் சோதித்துப் பார்க்கவேண்டும். நம்முடைய அவலட்சணத்தை நமக்குக் காட்டக்கூடிய கண்ணாடி இதுதான். மோசேயும் தீர்க்கதரிசிகளும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் இந்தக் கண்ணாடியை நமக்குக் காண்பிக்கிறார்கள். இதிலே நம்மைப் பார்த்தோமானால் நம்மைப் பற்றிய சரியான அறிவு நமக்கு வரும். நம்முடைய மனதும் நம்முடைய வாக்கும் நம்முடைய நடக்கையும எவ்வளவு அசுத்தம் என்று பார்ப்போம். சிநேகமுள்ள மனது நமக்கில்லை. நம்முடைய வாக்கு மெய்யான சிநேகமுள்ளதல்ல. நம்முடைய நடக்கை சிநேகமற்றதென்றே நாம் பார்ப்போம். அப்பொழுது நாம் நம்முடைய மார்பில் அடித்துக்கொண்டு: ஐயையோ, நான் மகாப்பெரிய பாவி, நான் பராபரனுடைய கோபத்துக்கும் ஆக்கினைக்கும் பாத்திரவான்.

நான் எங்கே ஓடுவேன், ஆர் ஆதரிக்கக் கூடும்;
மா பாதகனானேன், எல்லா உலகத்தார்கள்
இட்டெங்கும் என்னை மூடும், என் இழிவே நீக்கார்கள்

என்று அழுது புலம்புவோம். இந்த அறிவுக்கும் புலம்பலுக்கும் நாம் வரவேண்டுமென்பதே பராபரன் நியாயப்பிரமாணத்தை நமக்குக் கொடுத்த நோக்கம். எவன் தன்னை நியாயப்பிரமாணத்தால் பாவியென்று அறிந்துகொள்ளுகிறானோ, அவனுக்குச் சுவிசேஷம் இரட்சகரைப் பற்றிய நல்ல அறிவைக் கொடுக்கும். குருட்டுப் பரிசேயர் நியாயப்பிரமாணத்தின் தொகை சிநேக



மென்று அறியாமையால், தங்களை நீதிமான்களென்று நினைத்து மோசம் போனார்கள். ஆகையால், அவர்கள் இரட்சகருக்கும் இரட்சிப்புக்கும தூரமானார்கள். நாமோ நம்மைப் பாவிகளென்று அறிந்து ஒப்புக்கொள்வோமாக.

2.

சுவிசேஷத்தால் கிறிஸ்துவை அறிகிற அறிவு நமக்கு இருக்கவேண்டிய மற்றொரு அறிவு.

பரிசேயர் கூடியிருக்கையில், இயேசு அவர்களை: கிறிஸ்துவுக்காக உங்களுக்கு என்னமாய்க் காணுகிறது; ஆருடைய குமாரனாயிருக்கிறார் என்று கேட்டார். அவருடனே: தாவீதின் குமாரன் என்றார்கள். பரிசேயர் இயேசுநாதரைக் கேட்ட கேள்வியைப் பார்க்கிலும், இயேசுநாதர் பரிசேயரைக் கேட்ட கேள்வி அதிக முக்கியமானது. நியாயப்பிரமாணத்தின் கற்பனைகளில் எது பெரிது, எது சிறிது என்று கேட்பதிலும், அந்த நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து மீட்டு இரட்சிக்கிற இரட்சகரைக் குறித்துக் கேட்பதும் அறிவதும் மகா முக்கியம். இதை அவர்களுக்கு உணர்த்தும்படி: இயேசுநாதர் கிறிஸ்துவுக்காக உங்களுக்கு என்னமாய்க் காணுகிறது என்று கேட்டார். தாவீதின் குமாரன் என்று அவர்கள் சொன்ன உத்தரவு சரியான உத்தரவுதான். ஏனெனில், கர்த்தர் தாவீதுக்கு: உன்னுடைய நாட்கள் நிறைவேறி, நீ உன் பிதாக்களோடே நித்திரைபண்ணியிருக்கும்போது, நாம் உனக்குப் பிறகு உன் கர்ப்பப் பிறப்பாகிய உன் வித்தை எழும்பப்பண்ணி, அவர் இராச்சியத்தைத் திடப்படுத்துவோம். அவர் இராச்சியபாரத்தின் ஆசனத்தை என்றென்றைக்கும் நிலைக்கப்பண்ணுவோம் (உ சாமு. 7, 12. 13) என்று சொன்னார். ஆகையால் கிறிஸ்து தாவீதின் குமாரனென்பது நிசமே. இது நமக்குப் பெரிய ஆறுதல், அவர் தாவீதின் வமிசத்தில் பிறந்ததால், நம்மைப்போல் மெய்யான மனிதனாயிருக்கிறார். அவர் நம்முடைய சொந்த சகோதரன். நம்முடைய பலவீனங்களையும் நோக்காடுகளையும் நன்றாய் அறிந்தவர். ஆகிலும், பரிசேயர் கிறிஸ்துவைக்குறித்து அறிந்திருந்த அறிவு போதாது. அவர்கள் அவரைத் தாவீதின் வமிசத்திலே வருகிற வெறும் மனுஷனென்று மாத்திரம் நினைத்திருந்தார்கள். அதனால் அவருடைய இராச்சியம் உலக இராச்சியம் என்றே எண்ணினார்கள். ஆதலால், கர்த்தர் பரிசேயருக்குக் கிறிஸ்துவைக் குறித்துச் சரியான அறிவு வரும்படி அவர்களுக்கு மறுபடியும் ஒரு கேள்வி போட்டார். இப்போதும் தாவீது ஆவியினாலே அவரை ஆண்டவரென்று சொல்லுகிறதெப்படி; கர்த்தர் என் ஆண்டவருடனே: நான் உம்முடைய சத்துருக்களை உம்முடைய பாதபடி

யாக்கிப்போடுமட்டும் நம்முடைய வலதுபாரிசத்தில் உளுக்காரும் என்றுரென்று சொன்னானே; தாவீது அவரை ஆண்டவரென்று சொன்னானேயாகில், இவர் அவனுடைய குமாரனாயிருக்கிறது எப்படி என்றார். தாவீது இராசா பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதின நூற்றுப்பத்தாம் சங்கீதத்தின் இந்த வசனத்தைக் கர்த்தர் அவர்களுக்கு நினைப்பூட்டினதினால் ஒரு பெரிய விசேஷத்தை அவர்களுக்குத் தெரியக் கொடுத்தார். கிறிஸ்து மெய்யான மனிதனாக மாத்திரம் அல்ல, மெய்யான தேவனாகவும் இருக்கிறார். அவர் தாவீதின் குமாரனாக மாத்திரம் அல்ல, தாவீதின் ஆண்டவராகவும் இருக்கிறார் என்பதே அந்தச் சத்தியம். இந்தச் சத்தியத்தை அறிவது நமக்கும் முக்கியம். தாவீது இராசா நூற்றுப்பத்தாம் சங்கீதத்தில் கர்த்தர் பரமண்டலங்களுக்கேறிப் பராபரனுடைய வலதுபாரிசத்தில் உளுக்காருகிறதைக் குறித்துப் பேசியிருக்கிறார். அவர் மெய்யான தேவனாயிருந்ததினாலேதான் அவர் பசாசை ஜெயித்துப் பரத்துக்கேறினார், பராபரனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்தார். கிறிஸ்து மெய்யான தேவனாயிருப்பதினால் சர்வலோகத்தின் பாவத்தையும் அவரே தீர்க்கக்கூடியவர். நாம் பராபரனுக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்ததால் நம்மை இரட்சிக்கிறவரும் பராபரனாயிருக்கவேண்டியது. தாவீது தன்னுடைய குமாரனாகிய மேசியா பராபரனுடைய குமாரனாகிய ஆண்டவராயிருப்பார் என்கிறதைப் பரிசுத்த ஆவியால் அறிந்தார். ஆவியினாலே ஒழிய ஒருவனும் அவரை ஆண்டவரென்று அறியவும் கூடாது, அறிக்கையிடவும் கூடாது. நமக்குக் கிறிஸ்துவை ஆண்டவரென்று வெளிப்படுத்தினவர் பரிசுத்த ஆவியே. மெய்யான தேவனும் மெய்யான மனுஷனுமாகிய அவர் இப்பொழுது எல்லா நாமங்களுக்கும் மேலான நாமத்தைப் பெற்றிருக்கிறார். அவர்: வானத்திலும் பூமியிலும் எனக்குச் சகல அதிகாரமும் கொடுத்திருக்கிறது என்று சொன்னவர். இப்பொழுது அவர் தம்முடைய சத்துருக்களையெல்லாம் படிப்படியாய்த் தம்முடைய பாதங்களுக்குக் கீழ்ப்போட்டு வருகிறார். எல்லாச் சத்துருக்களும் அவருக்குக் கீழாவார்கள். எல்லாம் அவருக்குக் கீழானபின் முடிவு வரும்.

அவரை விசுவாசிக்கிறவர்கள் எல்லாரும் கடைசி நாளில் அவரோடு மகிமைக்குள் பிரவேசிப்பார்கள். அவரை விசுவாசிக்காத சத்துருக்களோ அவரால் நித்திய ஆக்கினைக்குள்ளாவார்கள்.

பிரியமானவர்களே, கிறிஸ்துவுக்காக உங்களுக்கு என்னமாய்க் காணுது என்கிற கேள்விக்கு நாம் நல்லறிவோடே உத்தரவு சொல்லக்கூடுமானால் பாக்கியம். நாமெல்லாரும் பராபரனுடைய கற்பனைகளை நிறைவேற்றாத பாவிகள். அவைகளை நிறைவேற்றவும் நம்மால் முடியாது. ஆகையால் நியாயப்பிரமாணத்தி



னால் நாம் மோட்சம் அடையமாட்டோம். நாம் இரட்சிப்படைந்து மோட்சத்துக்குள் பிரவேசிக்கவேண்டுமானால், அது கிறிஸ்து ஒருவரால் மாத்திரமாகும். அவரை நாம் சரியாய் அறிந்திருக்கிறோமா. அவரைக்குறித்துக் கேட்கவும் படிக்கவும் ஆசைப்படுகிறோமா. அவரை உண்மையாய் மதித்து, விசுவாசிக்கிறோமா. அவரை நமமுடைய ஆண்டவரென்று ஒப்புக்கொண்டு, அவருக்குக் கீழ்ப்படிகிறோமா. நம்முடைய கிறிஸ்தவர்களில் எத்தனை பேர் அவரை நினைக்கிறதுமில்லை, அவருக்குக் கீழ்ப்படிகிறதுமில்லை. நாமோ இதுமுதல் தினந்தோறும் அவரை அறிகிற அறிவிலும் திட விசுவாசத்திலும் வளர்ந்து தேறப் பிரயாசப்படுவோமாக. பரிசுத்த ஆவியானவர் நமக்குள் இந்த நல்ல அறிவையும் விசுவாசத்தையும் விர்த்திக்கச் செய்வாராக.

எங்கள் இரட்சகரும் ஆண்டவருமாகிய இயேசுவே, உம்முடைய கற்பனையின்படி எங்களைச் சோதித்துப் பார்த்தால் நாங்கள் பாவிகளாயிருக்கிறோம். நீர் எங்கள்மேல் கிருபை கூர்ந்து எங்கள் பாவங்களை மன்னித்தருளும். நாங்கள் உமக்கு உகந்த பிள்ளைகளாக உமக்குக் கீழ்ப்படிந்து நடக்க எங்களுக்கு உமது ஆவியைத் தந்தருளும், சுவாமி. ஆமென்.

---

## திரித்துவப் பண்டிகைக்குப் பிந்தின ௰௯-ம் ஞாயிறு.

மத். 9, 1—8.

பிரியமானவர்களே,

நம்முடைய வாக்கியத்தில் அடங்கின சங்கதி கப்பர்நகூம் பட்டணத்தில் நடந்தது. அந்தப் பட்டணத்தைக் கர்த்தர் தம்முடைய பட்டணம என்று சொன்னார். அவர் கெனேசரேத் கடலுக்கு அக்கரையிலுள்ள கெர்கெசேனர் நாட்டில் பிசாசு பிடித்திருந்த ஒரு மனிதனைச் சுகமாக்கினபின் கப்பர்நகூமுக்குத் திரும்பி வந்து, பேதுருவின் வீட்டிலே தங்கினார். காந்தம் இரும்பை இழுப்பதுபோல், நம்முடைய இரட்சகர் தம்முடைய அருமையான பிரசங்கங்களினாலும் வல்லமையான கிரியைகளினாலும் அநேக சனங்களைத் தம்மண்டைக்கு இழுத்தார். வீடு கொள்ளாத சனங்களும், அநேக நியாயசாஸ்திரிகளும் மற்றவர்களும் அங்கே வந்து கூடினார்கள். அவர்களுக்கு அவர் புத்திபோதனை செய்துகொண்டிருக்கும் பொழுது ஒரு வியாதிக்காரனை அவரிடத்தில் கொண்டுவரச் சில மனிதர் விரும்பினார்கள். சனநெருக்கத்தினிமித்தம் அவனைத் தெருவாசல் வழியாய் உள்ளே கொண்டுவரக் கூடவில்லை, அப்பொழுது அவர்கள் அவனை வீட்டின்

மேல் தூக்கிக் கொண்டுபோய், தட்டோடுகளைப் பிரித்து, திறப்புண்டாக்கி, அதன் வழியாய் அவனை இறக்கி, கிறிஸ்துவின் பாதத்தண்டை வைத்தார்கள். கர்த்தர் அவனைச் சுகமாக்கினார். அவனுக்குச் சரீர சுகத்தைக் கொடுக்குமுன் அவர் ஆத்தும சுகத்தைக் கொடுக்கச் சித்தமாகி: "மகனே, திடன்கொள் உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்று சொன்னார். இதனால், பாவமன்னிப்பு எல்லாவற்றிற்குமுந்தி மனிதனுக்குத் தேவையென்றும், தாமே அதைக் கொடுக்கக்கூடியவரென்றும் காண்பித்தார். நாமும் இதை ஒப்புக்கொண்டு: பாவமன்னிப்பு உண்டென்று விசுவாசிக்கிறேன் என்று விசுவாசப்பிரமாணத்தில் அறிக்கையிடுகிறோம். இது நமக்குச் சொல்லிமுடியாத ஆறுதலைக் கொடுக்கிறது. இதைக் குறித்தே இப்பொழுது நாம் சிந்திப்போம்.

**பாவமன்னிப்பால் உண்டாகும் ஆறுதலை நாம் பெற்றனுபவிக்கும்படி செய்யவேண்டியதென்ன.**

1. பாவம் எல்லாவற்றிலும் பெரிய தீமை என்று உணரவேண்டும்.
2. பாவமன்னிப்பு எல்லாவற்றிலும் பெரிய நன்மை என்று அறியவேண்டும்.
3. இந்த நன்மையை மெய்விசுவாசத்தினால் பற்றிக்கொள்ளவேண்டும்.

## 1.

பாவம் எல்லாவற்றிலும் பெரிய தீமையென்று உணரவேண்டும்.

இதோ, படுக்கையின்மேல் கிடக்கிற ஒரு திமிர்வாதக்காரனை அவரண்டைக்குக் கொண்டுவந்தார்கள். இயேசு அவர்களுடைய விசுவாசத்தைக் கண்டு, திமிர்வாதக்காரனுடனே: மகனே திடன்கொள், உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டதென்றார்.

திமிர்வாதம் ஒரு கொடிய வியாதி. அந்த வியாதியுள்ளவனுக்குக் கைகாலிருந்தும், அவைகளை உபயோகிக்கமுடியாது. படுத்தது படுத்தாற்போல் இருக்கவேண்டும். தானாய் அசையவும் புரளவும் முடியாது. இந்த நிர்ப்பந்த நோயுள்ள மனுஷனைக் கர்த்தர் கண்டவுடனே அந்த நோயை அவர் தீர்க்காமல், அதிலும் கொடுமையான மற்றொரு நோயைத் தீர்க்கிறார். பாவமே அந்தக் கொடிய நோய். அதைத் தீர்ப்பது சரீர நோயைத் தீர்ப்பதிலும் அதிக அவசியமென்று அவர் அறிந்தார். ஏனெனில், பாவம் எல்லாவற்றிலும் பெரிய தீமையென்பது மெய். பாவத்தை யெல்லாவற்றிலும் பெரிய தீமையென்று அநேகர் நினைக்காமல், அதைச் சந்தோஷமாகச் செய்கிறார்கள். அதிலே பெருமை பாராட்டுகிறார்கள். ஆகிலும் அதைவிடக் கெடுதியான காரியம் வேறொன்றுமில்லை. ஏனெனில், பாவமானது நம்முடைய பாக்கியத்தைக் கெடுக்கிறது. அது நாம் சிருஷ்டிக்கப்பட்ட நோக்கத்திற்கு விரோதம். பராபரன் மனிதனைப் பரிசுத்தனாய்ச் சிருஷ்டித்தார். அவன் பரிசுத்தத்திலே வளர்ந்து தேறவேண்டியவன். அவன் பராபரனுக்குப் பயந்து அவரைச் சிநேகித்து, பரிசுத்தத்தில் நிலைத்திருக்கும் மட்டும் அவனுக்குப் பாக்கியம் உண்டு. அவன் பராபரனை விரோதித்து, பரிசுத்தத்தைவிட்டு விலகிப் பாவஞ் செய்யும்பொழுது, அவனுக்கு நிர்ப்பாக்கியம் துவக்குகிறது. ஒரு மீன் தண்ணீரில் இருக்கும் மட்டும் அதற்குச் சுகம். தண்ணீரை விட்டுத் தரையில் விழுந்ததோ, அதற்குக் கேடு வந்தது. இது பராபரனுடைய ஒழுங்கு. மனிதர் விஷயத்திலும் இப்படியே. ஆதி மனிதன் பரிசுத்தத்தை விட்டுப் பாவத்தில் விழுந்தவுடனே சகல நிர்ப்பாக்கியமும் அவனைப் பிடித்தது. அவன் ஆத்துமத்துக்கும் சரீரத்துக்கும் சகல கெடுதியும் வந்தது. மனிதருக்கு உண்டாகிற சகல வியாதிகளுக்கும் காரணம் பாவமே. இந்தத் திமிர்வாதக்காரனும் அதற்குச் சாட்சி. அவன் சரீர சுகத்தைத் தேடி இயேசுநாதரிடத்தில் வந்தாலும், அவனுடைய ஆத்தும நோயாகிய பாவம் அவனைக் கலங்கடித்ததாகத் தோன்றுகிறது. அதினிமித்தமே இரட்சகர் அவனுக்கு: திடன்கொள் என்று சொன்னார்.



பாவம் பராபரனுடைய பரிசுத்த சித்தத்துக்கு விரோதமானதால் அது பெரிய தீமையே. ஒவ்வொரு பாவமும் கர்த்தருடைய கற்பனையை மீறுவதாயிருக்கிறது. பாவம் செய்கிற ஒவ்வொருவனும் பராபரனை எதிர்த்து நிற்கிறான். அவருக்கு மேலாகத் தன்னை உயர்த்துகிறான். அற்ப சிருஷ்டியாகிய மனுஷன் பராபரனை எதிர்த்து, அவருக்கு விரோதமாய்ச் சண்டை செய்கிறது எத்தனை பயங்கரம். ஆகையால் பாவம் செய்கிறவன்மேல் பராபரனுடைய கோபம், சாபம், மரணம், நரகம் என்ற தண்டனைகள் வருவது நியாயம்.

இப்படியே பாவமானது மனிதனைப் பயங்கரமான முடிவுக்குக் கொண்டுவருகிறது. ஆகையால் அது எல்லாவற்றிலும் பெரிய தீமையென்று சொல்லுகிறோம். அது இன்பமாய்த் துவக்கித் துன்பமாய் முடிகிறது. முந்தி அது தேன்போல் தித்திக்கும், கடைசியிலோ பிச்சைப்போல் கசக்கும். அது முந்திக் குளிருக்கு அனல்போல் பிரியமாயிருக்கும். கடைசியிலோ, அது ஆளைப் பட்சித்துச் சாம்பலாக்கும். சிம்சோன் என்ற ஒரு பெரிய வீரன் இருந்தான். அவன் மகாப் பெரிய பலசாலி. அவன் ஒரு நாள் ஒரு கோட்டையின் வெண்கலக் கதவுகளைத் தன் கையினால் பேர்த்துத் தூக்கிக் கொண்டுபோனான். மற்றொரு சமயத்தில் ஒரு சிங்கத்தைத் தன் கையினால் பிடித்துக் கிழித்துப் போட்டான். ஒரு கழுதையின் தாடை எலும்பைக்கொண்டு

ஆயிரம் பேரைக் கொன்றுபோட்டான். இப்படிக்கொத்த பராக்கிரமசாலி தெலீலாள் என்று பேருள்ள ஒரு ஸ்திரீயைச் சிநேகித்துக்கொண்டிருந்தான். அவளோ அவனை அவமானப்படுத்தி, சத்துருக்கள் கையில் ஒப்புக்கொடுத்தாள். அவர்கள் அவனைப் பிடித்து அவன் கண்களைப் பிடுங்கி அவனை வெண்கல விலங்கு போட்டுக் கட்டினார்கள். நம்முடைய பாவம் அந்தத் தெலீலாளைப்போல் இருக்கிறது. அது நம்மைக் கெடுத்து நித்திய வெட்கத்துக்கும் நரகத்துக்கும் உள்ளாக்கும்.

ஆகவே, பாவமானது எல்லாவற்றிலும் பெரிய தீமையென்று பார்க்கிறோம். அதுவே மற்ற எல்லாத் தீமைக்கும் காரணம். இதை நாம் உணர்ந்து, இதற்காக நாம் துக்கப்பட்டு அழுது புலம்புவோமாக. இதைக் கர்த்தரிடம் அறிக்கையிட்டு மன்னிப்புக்காகக் கெஞ்சிக் கூப்பிடுவோமாக. பாவத்தின் கொடுமையை அறிந்து உணர்ந்தவர்கள் மாத்திரமே பாவமன்னிப்பினால் உண்டாகும் ஆறுதலைத் தேடுவார்கள்.

2.

பாவ மன்னிப்பு எல்லாவற்றிலும் பெரிய நன்மையென்று அறியவேண்டும்.

மனிதர் ஒருவருக்கு விரோதமாக ஒருவர் குற்றஞ் செய்தால் அந்தக் குற்றத்திற்குத் தப்பப் பலவிதமான எத்தனங்களைச் செய்வார்கள். சிலர் அந்தக் குற்றத்தைத் தாங்கள் செய்ததேயில்லை என்று மறுதலிப்பார்கள். சிலர் தங்கள் குற்றத்தால் நேரிட்ட நஷ்டத்துக்கு ஈடு செலுத்தப் பார்ப்பார்கள். வேறு சிலர் தாங்கள் செய்தது குற்றம் அல்லவென்று நியாயம் பேசுவார்கள். வேறு சிலர் தங்கள் குற்றத்துக்காக மன்னிப்புக் கேட்பார்கள்.

நாம் பராபரனுக்கு விரோதமாகப் பாவஞ்செய்த குற்றவாளிகள். நாம் குற்றஞ்செய்யவேயில்லையென்று பராபரனுக்கு முன்பாக மறுதலிக்கமுடியாது. அவர் எல்லாவற்றையும் அறிந்தவர். அவருடைய கண்ணுக்கு மறைவானது ஒன்றுமில்லை. திமிர்வாதக்காரனுடைய பாவமெல்லாம் கர்த்தருக்கு நன்றாய்த் தெரிந்தது. நம்முடைய பாவம் அவருக்குத் தெரியாமல் போகுமா. நாம் செய்தது குற்றமல்ல, நியாயந்தானென்று ரூபிக்கவும் நம்மாலாகாது. பாவம் நியாயமேயல்ல. அது எல்லா விதத்திலும் அநியாயந்தான். பாவத்துக்கு ஈடு செலுத்தவும் நம்மாலாகாது. அளவில்லாத பராபரனுக்கு விரோதமாய்ச் செய்த அளவில்லாத பாவத்துக்கு அளவில்லாத தண்டனை வரும். இதற்கு அளவில்லாத ஈடு செலுத்த நாமெங்கே போவோம். நம்முடைய பணத்தினாலாவது புண்ணியத்தினாலாவது பாவம் நிவிர்த்தியாக வழியில்லை. ஆகையால் மன்னிப்பு வழியே ஒன்றான வழி.



இதின் நிமித்தமே இயேசுநாதர் திமிர்வாதக்காரனைப் பார்த்து: நீ இதை அதைச் செய்யென்று சொல்லாமல், உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டதென்று சொன்னார். மன்னிப்பு வழியே உத்தம வழி.

பாவமன்னிப்பு எல்லாவற்றிலும் பெரிய நன்மை. அதினால் எல்லாத் தீமைக்கும் நீங்கலாகலாம், எல்லாச் சந்தோஷத்தையும் பெற்றுக்கொள்ளலாம். இயேசு இரட்சகர் திமிர்வாதக்காரனுக்கு அவனுடைய பாவங்களை மன்னித்ததினால் அவன் சரீர நோவுக்கும் நீங்கலாக இடம்பண்ணினார். பாவமன்னிப்பு பெற்றவனுக்குச் சரீர நோவு இருந்தாலும் பாதகமல்ல. சரீர நோவு அவனுடைய ஆத்துமத்துக்கு ஒரு தீமையும் செய்யாது. பாவமன்னிப்பு பெற்றவன் சகல நன்மைக்கும் ஊற்றாகிய பராபரனோடு ஐக்கியமாகிறான். அவருடைய ஐக்கியத்திலிருந்து சகல நன்மைகளும் சுரந்து வருகிறது. மனச்சமாதானம் பாவமன்னிப்பினால் உண்டாகும் ஒரு பெரிய நன்மை. இப்போதும் நாம் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டபடியினாலே நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய்ப் பராபரனிடத்திலே சமாதானம் பெற்றிருக்கிறோம் என்று எழுதியிருக்கிறது (ரோ. 5, 1). சமாதானம் ஒருவன் மனதிலே ஆளும்பொழுது அவனுக்கு எவ்வளவு துன்பம் வந்தாலும், அவன் சாகிறதாயிருந்தாலும், கலக்கமடையமாட்டான். இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்தில் பிரயாணம் செய்யும்பொழுது மாரா என்ற ஒரு இடத்திற்கு வந்தார்கள். அங்கேயிருந்து ஒரு நீரூற்றின் தண்ணீரைக் குடித்தபொழுது அது கசப்பாயிருந்தது. அப்போது கர்த்தர் மோசேக்கு ஒரு மரத்தைக் காண்பித்தார். அதை அவன் தண்ணீரிலே போட்டபொழுது தண்ணீர் தித்திப்பாயிற்று. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நமக்குக் கொடுத்தருளும் பாவமன்னிப்பே நமது ஜீவகாலத்தில் நமக்கு உண்டாகும் சகல கசப்பையும் தித்திப்பாக்குகிற மரம்.

பாவமன்னிப்பினால் நித்திய ஜீவன் உண்டு. மோட்ச பாக்கியத்தை அதினால் அடைகிறோம். நம்மில் அநேகர் புகைவண்டித் தொடரில் ஏறியிருப்போம். வண்டிக்குள் போய், பயமில்லாமல் சுகமாய் உட்கார்ந்திருக்கவேண்டுமானால் கையில் சீட்டு இருக்கவேண்டும். நாம் மோட்சத்துக்குப் பயமில்லாமல் பிரயாணஞ்செய்யவும், மோட்சத்துக்குள் தவறாமல் சேரவும், கர்த்தர் அருளும் பாவமன்னிப்பே சீட்டாகும். பாவமன்னிப்பைப் பெற்றவன் கர்த்தருக்குப் பயந்து சந்தோஷமாக அவருடைய வழிகளில் நடக்கிறான். ஏனெனில், உமக்குப் பயப்படும்படிக்கு மன்னிப்பு தேவரீரிடத்தில் இருக்கிறது (சங். 130, 4) என்று அவன் சொல்லுகிறான். திமிர்வாதக்காரன் சுகமான

வுடனே தன் படுக்கையை எடுத்துக்கொண்டு, தன் வீட்டுக்குத் தாராளமாய் நடந்துபோனதுபோலே பாவமன்னிப்பைப் பெற்றவனும், உற்சாகமும் சந்தோஷமுமாய்க் கர்த்தருடைய வழிகளில் நடக்கிறான்.

பாவ மன்னிப்பை அடைந்தவன் மகா பெரிய பாக்கியவான். அவனை ஒருவரும் குற்றஞ்சொல்ல முடியாது. குற்றமில்லாதவனென்று கர்த்தரால் தீர்ப்புப் பெற்ற அவனை ஆர் குற்றஞ்சாட்டலாம். ஒருவேளை நம்முடைய சொந்த இருதயம் நம்மைக் குற்றவாளிகளென்று தீர்த்தாலும் தீர்க்கும். அதற்கும் நாம் பயப்படமாட்டோம். இருதயம் நம்மை நோஸ்தராகத் தீர்த்தால், நம்முடைய இருதயத்தைப் பார்க்கப் பராபரன் பெரியவராயிருந்து, எல்லாவற்றையும் அறிகிறாரென்று நம்முடைய இருதயங்களை அவருக்கு முன்பாக நிச்சயப்படுத்திக்கொள்ளலாம் (௧ யோவா. 3, 20). நம்முடைய இருதயத்தைப்பார்க்கிலும் கர்த்தர் பெரியவர். அவருடைய வாக்குத்தத்தம் பெரியது. அவருடைய உண்மை பெரியது. ஆகையால் கர்த்தருடைய வார்த்தையை நம்புகிற பாவிக்கு பாவமன்னிப்பு நிச்சயம்.

### 3.

பாவமன்னிப்பை நாம் விசுவாசத்தினால் பற்றிக்கொள்ளவேண்டும்.

எது விசுவாசம். இயேசு இரட்சகர் ஒருவரே என் இரட்சகர், அவரே என் பாவத்தை மன்னிக்கிறவரென்று நம்புகிற நம்பிக்கையே விசுவாசம். இயேசுநாதர் பாவத்தை மன்னிக்கக் கூடியவரென்று வேதபாரகர் நம்பவில்லை. ஆதலால், அவர்களில் சிலர் தங்கள் உள்ளத்திலே: இவன் தேவதூஷணஞ் சொல்லுகிறான் என்றார்கள். இயேசுவோ அவர்கள் நினைவுகளைக் கண்டு சொன்னதாவது: நீங்கள் உங்கள் இருதயங்களில் பொல்லாததுகளை நினைக்கிறதேது, ஏனெனில் எது எளிதாயிருக்கிறது. பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டதென்று சொல்வது எளிதோ, எழுந்திருந்து நடவென்று சொல்வது எளிதோ என்று சொன்னார். கிறிஸ்து பாவங்களை மன்னிக்கக்கூடியவர். ஏனெனில், அவர் மெய்யான தேவன். திமிர்வாதத்தைத் தம்முடைய சுயவல்லமையால் தீர்க்கக்கூடிய அவருக்குப் பாவத்தை மன்னிக்க அதிகாரம் இல்லையென்று நினைப்பது எவ்வளவு பெரிய குருட்டாட்டம். மெய்யான பராபரனுடைய குமாரனும் மெய்யான மனுஷனுடைய குமாரனுமாகிய அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்த்தார். அவரையன்றிப் பாவமன்னிப்பு இல்லை. வேதபாரகர் கிறிஸ்துவை அல்லாமல் பாவமன்னிப்பைத் தேடினதினால் அது அவர்களுக்கு அகப்படாமல் போயிற்று.



கிறிஸ்து ஒருவரே பாவங்களை மன்னிக்கக்கூடியவர். அவர் எப்படித் திமிர்வாதக்காரனின் உள்ளத்தைப் பார்த்து: மகனே, திடன்கொள் என்று சொன்னாரோ, அப்படியே அவர் வேதபாரகரின் நினைவுகளைக் கண்டு அவர்களைக் கடிந்துகொண்டார். ஆகையால் நம்முடைய இருதயத்தின் நிலைமையையும் அவர் பார்த்து, நம்முடைய பாவங்களை மன்னிக்கக்கூடியவராயிருக்கிறார். மேலும், அவர் பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷனுடைய குமாரனுக்கு அதிகாரம் உண்டென்கிறதை நீங்கள் அறியவேண்டுமென்று சொல்லி, திமிர்வாதக்காரனுடனே: நீ எழுந்திருந்து, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வளவுக்குப்போ என்றார். இதினால் பாவங்களை மன்னிக்கத் தமக்கு அதிகாரம் உண்டென்று அவர் காண்பித்தார். இன்னமும் அவருக்கு அந்த அதிகாரம் உண்டு. அவர் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும் அவர்கள் பாவங்களை மன்னிக்கச் சித்தமுள்ளவராயிருக்கிறார். வெளிப்படையாய் அவருடைய மன்னிப்பின் சத்தத்தைக் கேட்க மனமுடையவர்களுக்கு அவர் தம்முடைய ஊழியரைக்கொண்டு மன்னிப்புக் கூறுகிறார். ஏனெனில் எவர்கள் பாவங்களை மன்னிக்கிறீர்களோ அவர்களுக்கு மன்னிக்கப்பட்டிருக்கிறது; எவர்கள் பாவங்களைச் சுமத்திவைக்கிறீர்களோ, அவர்கள் மேல் அதுகள் சுமத்திவைக்கப்பட்டிருக்கிறது (யோவா. 20, 23) என்று இயேசுநாதர் சொல்லி, தெய்வ ஊழியத்தை ஏற்படுத்தினார். தெய்வ ஊழியர் வாய்மொழியாகவும், எத்தனங்களைக்கொண்டும், *நம்முடைய பாவங்களை மன்னிக்கிறார்கள். அவர்கள் கூறுகிற மன்னிப்பு கர்த்தர் கூறுகிற மன்னிப்பாம். இந்தப் பூமியிலே நமக்கு மன்னிப்புக் கிடைப்பது நிச்சயம். அது பூமியிலே மாத்திரந்தான் கிடைக்கும். இந்தப் பூமியிலே நாம் மரித்து, அதை விட்டுப்போன பின் நமக்கு மன்னிப்பில்லை. ஆகையால் இந்தப் பூமியிலேயே நாம் விசுவாசிக்கவேண்டும்.

கர்த்தருடைய பரிசுத்த வார்த்தையையும் வாக்குத்தத்தத்தையும் நம்புகிற திடமான விசுவாசம் பாவமன்னிப்பைத் தனக்குச் சொந்தமாக்கும். இயேசு திமிர்வாதக்காரனுடைய விசுவாசத்தையும் அவனைக் கொண்டுவந்தவர்களுடைய விசுவாசத்தையும் கண்டு அவனைச் சுகமாக்கினார். நாமும் இயேசு இரட்சகரையும் அவருடைய வாக்குத்தத்தத்தையும் சந்தேகமில்லாமல் விசுவாசிக்கவேண்டும். இங்கே வந்திருக்கிற நாமெல்லாரும் இயேசுவை விசுவாசிக்கிறோமா. அவரிடத்தில் பாவமன்னிப்பைத் தேடுகிறோமா. அவர் நமக்குக் கூறும் பாவமன்னிப்பை நம்புகிறோமா. நம்பினோமானால், நாம் எல்லாத் தீமைக்கும் நீங்கலாகி, எல்லா நன்மையையும் அனுபவித்து, மரணத்தில் அமைதலாய் நம்முடைய கண்ணை மூடலாம்.

இயேசுவே, தேவரீர் எங்களுக்குப் பாவமன்னிப்பென்ற பெரிய பொக்கிஷத்தைச் சம்பாதித்ததற்காக உமக்கு ஸ்தோத்திரம். நாங்கள் இந்த மேலான பொக்கிஷத்தை எங்கள் மரணநாள் மட்டும் அடைந்து அனுபவிக்கும்படி எங்களுக்குள் மெய்யான குணப்படுதலையும் மெய்விசுவாசத்தையும் உண்டுபண்ணியருளும், சுவாமி. ஆமேன்.

---

## திரித்துவப் பண்டிகைக்குப் பிந்தின உ௰-ம் ஞாயிறு.

மத். 22, 1—14.

பிரியமானவர்களே,

பராபரன் தம்முடைய ஒரே பேறான குமாரனை அவர் பேரில் விசுவாசிக்கிறவன் எல்லாம் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடைவதற்காகத் தந்து அத்தன்மையாய் உலகத்தைச் சிநேகித்தார் (யோவான் 3, 16). இது சத்தியவாக்கு, தவறாத வாக்கு. பராபரன் உலகத்தைச் சிநேகித்தார். அதென்ன. உலகத்திலுள்ள சகல பாவிகளையும் சிநேகித்தார். எல்லாருக்காகவும தம்முடைய ஒரே பேறான குமாரனைக் கொடுத்தார். குமாரனாகிய இயேசுகிறிஸ்து உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தெய்வ ஆட்டுக்குட்டியாக வெளிப்பட்டார். எல்லாருடைய பாவத்தையும் சுமந்துதீர்த்தார். எல்லாருக்கும் இரட்சிப்பைச் சம்பாதித்தார். உலகமெங்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கக் கட்டளையிட்டார். இப்படிக்கெல்லாம இருந்தும்: அழைக்கப்பட்டவர்கள் அனேகம், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ கொஞ்சம் என்று நம்முடைய சுவிசேஷவாக்கியத்தின் கடைசியில் கர்த்தர் சொல்லுகிறார். இதற்குக் காரணமென்ன. இதை நாம் நம்முடைய வாக்கியத்தைக் கொண்டு அறிந்துகொள்ளுவோம்.

**அழைக்கப்பட்டவர்கள் அநேகமாயிருந்தும், தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் கொஞ்சமாயிருப்பது ஏன்.**

1. அழைக்கப்பட்டும், அழைப்புக்குக் கீழ்ப்படிகிறவர்கள் கொஞ்சம்.
2. அழைப்புக்குக் கீழ்ப்படிந்தும், விசுவாசத்தில் நிலைத்திருக்கிறவர்கள் கொஞ்சம்.

### 1.

அநேகர் அழைக்கப்பட்டும், அழைப்புக்குக் கீழ்ப்படிகிறவர்கள் கொஞ்சம் என்று நம்முடைய வாக்கியத்தால் பார்க்கிறோம்.



வானராச்சியம் தன் குமாரனுக்குக் கலியாணஞ் செய்த இராசாவாகிய மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது என்று இரட்சகர் சொல்லுகிறார். கர்த்தராகிய பராபரன்தான் இங்கே சொல்லியிருக்கிற இராசாவாகிய மனுஷன். நம்முடைய அருமை இரட்சகரே அவருடைய குமாரன். இவர் அநாதியாய்ப் பிதாவினிடத்திலிருந்து பிறக்கிறவர். நம்மை இரட்சிக்கும்படி அவர் மனிதனாய்க் கன்னிமரியாளிடத்தில் பிறந்தார். அவர் பிறந்த ஊர் பெத்லகேம், வளர்ந்த ஊர் நாசரேத். அவர் முப்பதாம் வயதில் யோவான்ஸ்நானகனால் ஞானஸ்நானம் பெற்று, எல்லாருக்கும் நன்மைசெய்கிறவராய்த் திரிந்தார். அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்துதீர்க்கிற தெய்வாட்டுக்குட்டியாய்ப் பொந்தியுபிலாத்துவின் கீழ்ப் பாடுபட்டு மரித்தார். அவர் மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தருளினார். நாற்பதாம் நாள் பரத்துக்கேறிப் பராபரனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். அவருக்கு வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும முடங்கும்படிக்கான மகிமையுண்டு. இந்த மகிமையுள்ள குமாரனுக்குக் கலியாணமென்று நம்முடைய வாக்கியத்தில் சொல்லியிருக்கிறது. திருச்சபையே அவருக்குக் குறிக்கப்பட்ட பெண். ஆதாம் நித்திரைசெய்கையில் அவனுடைய விலாவெலும்பினின்று ஏவாளைப் பராபரன் உண்டாக்கி, அவனுக்குப் பெண்சாதியாகக் கொடுத்தார். நம்முடைய இரட்சகரும் மரணநித்திரை அடைந்து திருச்சபை என்கிற மணவாளியைப் பெற்றுக்கொண்டார். கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் கொல்கதாமலையில் பரிச உடன்படிக்கையாயிற்று. கலியாணம் மோட்சராச்சியத்தில் நிறைவேறும்.

அழைக்கப்பட்டவர்களைக் கலியாணத்துக்கு வரச் சொல்ல, இராசா தன் ஊழியக்காரரை அனுப்பினான்; அவர்களோ வரமாட்டோம் என்றார்கள். மறுதரம் வேறே ஊழியக்காரரை அனுப்பி, அழைக்கப்பட்டவர்களுக்கு: இதோ என் விருந்தை ஆயத்தம்பண்ணினேன், என் எருதுகளும் கொழுத்த செந்துக்களும் அடிக்கப்பட்டு, எல்லாம் ஆயத்தமாயிற்று, வாருங்கள் என்று சொல்லுங்கள் என்றான். இந்தக் கலியாணத்துக்காகப் பரம இராசா ஒரு பெரிய விருந்தை ஆயத்தம்பண்ணியிருக்கிறார். சுவிசேஷம் கூறும் இரட்சிப்பே அந்த விருந்து. திருச்சபையில் இந்த விருந்தின் சகல பதார்த்தங்களையும் பார்க்கலாம். ஆத்துமத்துக்கு உயிர்தரும் அப்பம் அதில் உண்டு. களைத்தவர்களை முசிப்பாற்றும் பானம் அதில் உண்டு. சிறுவர்களுக்குச் சந்தோஷமும், வாலிபர்களுக்கு மகிழ்ச்சியும், புருஷருக்கு ஆனந்தமும், விருத்தாப்பியருக்கு ஆறுதலுமான சகலமும் அதில் அகப்படும். அந்த விருந்தின் மகத்துவம் விசேஷமாய்

மோட்சராச்சியத்தில் வெளிப்படும். அந்த விருந்தைக் குறித்து இயேசுநாதர் மற்றொரு இடத்திலே பேசி: அநேகம்பேர் கிழக்கிலும் மேற்கிலும் இருந்து வந்து, வானராச்சியத்திலே ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்றவர்களுடனே கூடப் பந்தியிருப்பார்கள் என்கிறார் (மத். 8, 11). அந்த விருந்து இந்த உலகத்தில் தொடங்கி, மறுமையில் பூர்த்தியாகும். இந்த விருந்து ஒரு விசேஷித்த சனத்துக்காக ஆயத்தமானது. அந்த சனத்துக்கு அழைக்கப்பட்டவர்கள் என்ற பெயர் நம்முடைய வாக்கியத்தில் சொல்லியிருக்கிறது. அது யூதசனந்தான். இவர்களைப் பராபரன் முந்தத் தம்முடைய ஊழியர்களாகிய தீர்க்கதரிசிகளைக்கொண்டு அழைத்தார். பிறகு கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் அவருடைய அப்போஸ்தலமாரும் அழைத்தார்கள். யூதர்களோ வரமாட்டோம் என்றார்கள். தங்கள் மேசியாவும் இரட்சகருமானவரை அசட்டைபண்ணித் தள்ளினார்கள். நம்முடைய வாக்கியத்தில் சொல்லியபடி: ஒருவன் தன் வயலுக்கும், பின்னொருவன் தன் வியாபாரத்துக்கும் போய்விட்டார்கள். மற்றவர்களோ அவன் ஊழியக்காரரைப் பிடித்து, நிந்தித்து, கொன்றுபோட்டார்கள். யூதசாதியார் பொன்னையும் பொருளையும் அதிகமாய்ச் சிநேகித்தார்கள். சீனாய் மலையின் அடிவாரத்திலே அவர்கள் தங்கியிருந்தபொழுது பொன்னாலே ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்து, அதைக் கும்பிட்டு, அதைச் சுற்றிக் கூத்தாடினார்கள் என்கிற சரித்திரம் நமக்குத் தெரியும். எல்லாக்காலத்திலும் யூதசனங்கள் உலகப்பொருள்மேல் வைக்கும் ஆசைக்கு அது ஒரு முன்னடையாளமாயிருந்தது. இந்தக் காலம் வரையில் யூதசனங்கள் மிகுந்த ஆசையோடு தேடுவது பொன்தான். உலகத்தில் விசேஷித்த பணக்காரர் யூதர்களே. யூதர்கள் கிறிஸ்துவையும் அவருடைய சுவிசேஷத்தையும் அசட்டைபண்ணித் தள்ளினதுமல்லாமல் கர்த்தருடைய கட்டளையின்படி தங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்த ஊழியக்காரரைப் படுத்தாத பாடுபடுத்திக் கொன்றுபோட்டார்கள். அவர்கள் ஸ்தேவான் என்ற பக்திமானைக் கல்லெறிந்து கொன்றார்கள். யாக்கோபென்ற நீதிமானைப் பட்டயத்தினாலே போக்கினார்கள். பவுல் அப்போஸ்தலனை அநேகவிதமாய்த் துன்பப்படுத்தினார்கள்; அவர் கடைசியாக ரோமாபுரியிலே சிரச்சேதமானார்.

இந்தவிதமாகத் தம்மையும் தம்முடைய அன்பான அழைப்பையும் அசட்டை செய்த யூதரின் அசட்டை பரம இராசாவின் கோபத்தை மூளப்பண்ணிற்று. இராசா அதைக் கேட்டபோதோவெனில் கோபம் அடைந்து, தன் சேனைகளை அனுப்பி, அந்தக் கொலைபாதகரை அழித்து, அவர்கள் பட்டணத்தைச் சுட்டுப்போட்டான் என்று நம்முடைய வாக்கியத்திலே வாசிக்கி



றோம். சுவிசேஷத்தை அசட்டைபண்ணின யூதர்களைப் பராபரன் சிதறப்பண்ணினார். அவர்களில் அநேகம்பேரை ரோமர்களின் பட்டயத்துக்கு இரையாக்கினார். யூதரின் பெரியபட்டணமாகிய எருசலேம் பயங்கரமான வண்ணம் அழித்துப்போடப்பட்டது.

அப்போது தன் ஊழியக்காரருடனே: கலியாணமோ ஆயத்தமாயிருக்கிறது, அழைக்கப்பட்டவர்களோவென்றால் அதற்குப் பாத்திரவான்களாயிருந்ததில்லை. ஆனபடியால் நீங்கள் வழிப்பிரிவுகளிலே போய், அகப்பட்ட யாவரையும் கலியாணத்துக்கு அழையுங்கள் என்றான். அந்த ஊழியக்காரர் வழிகளில் புறப்பட்டுப் போய், அகப்பட்ட பொல்லார் நல்லார் யாவரையும் கூட்டிவந்தார்கள். கலியாணம் பந்தியிருக்கிறவர்களால் நிறைந்தது.—யூதர் கர்த்தருடைய அழைப்புக்குக் கீழ்ப்படியாமல் போனபொழுது அவர் புறச்சாதியாரை அழைக்கச் சித்தமானார். இஸ்ரவேல் சனங்களைத் தவிர மற்றெல்லாச் சனங்களும் புறச்சாதியார். நம்முடைய தேசத்திலும் மற்றத் தேசங்களிலும் உள்ள அஞ்ஞானிகளெல்லாரும் புறச்சாதியார்தான். புறச்சாதியார் பராபரனுடைய காணியாட்சிக்கு உட்பட்டவர்களல்ல. அவர்கள் காணியாட்சிக்குப் புறம்பே வழிப்பிரிவுகளில் நிற்கிறவர்கள். முன்னே எருசலேம் பட்டணத்தில சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்கள் உலகமெங்கும் சிதறிப் போய் சமாரியாவிலும், அந்தியோகியாவிலும், கொரிந்துவிலும், அத்தேனே பட்டணத்திலும், ரோமாபுரியிலும், உலகத்தின் மற்றப் பட்டணங்களிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள். அவர்கள் பின்னடியாரான கர்த்தருடைய ஊழியக்காரர் எல்லாரும் நாளதுவரையில் நானா தேசங்களிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார்கள். நம்முடைய தேசத்திலும் மற்ற அஞ்ஞான தேசங்களிலும் கர்த்தருடைய ஊழியரின் சத்தம் கேட்கிறது. விருந்துக்கு வாருங்கள் வாருங்கள் என்று பலமாய்க் கூப்பிடுகிறார்கள். இந்தச் சத்தத்துக்குக் கீழ்ப்படிந்து அநேகர் வருகிறார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆகிலும், வருகிறவர்களைப் பார்க்கிலும் வராதவர்கள் அநேகம். கர்த்தருடைய அழைப்புக்குக் கீழ்ப்படிகிறவர்கள் வெகு சிலர். நம்முடைய தேசத்திலே ஏறக்குறைய இருநூறு வருஷங்களாக சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டுவருகிறது. என்றாலும், கிறிஸ்தவர்களானவர்கள் எத்தனைபேர். இப்பொழுது தென் இந்தியாவில் இருபது பேருக்கு ஒருவன் மாத்திரம் கிறிஸ்தவன். மற்றப் பத்தொன்பது பேரும் அஞ்ஞானிகள். ஆகையால் அநேகர் அழைக்கப்பட்டும், அழைப்புக்குக் கீழ்ப்படிகிறவர்கள் கொஞ்சம் பேரென்று பார்க்கிறோம்.

## 2.

*அழைப்புக்குக் கீழ்ப்படிந்தும், விசுவாசத்தில் நிலைத்திருக்கிறவர்கள் கொஞ்சம்.*

சுவிசேஷத்தின் சத்தத்துக்குக் கீழ்ப்படிந்து வருகிறவர்களில் நல்லாரும் பொல்லாரும் கலந்திருக்கிறார்கள். காணப்படுகிற சபையாகிய கிறிஸ்தவர்களின் கூட்டத்தை நம்முடைய இரட்சகர் கோதுமையும் களைகளும் கலந்த வயல் நிலத்துக்கு ஒப்பிடுகிறார். கிறிஸ்தவனென்ற பெயரைத் தரித்தவனெல்லாம் கிறிஸ்தவனல்ல. பன்னிரண்டு அப்போஸ்தலமாரில் ஒரு யூதாஸ் இருந்தானல்லவா. நாம் இருதயத்தை அறியக்கூடியவர்களல்ல. நாம களைகளைப் பிடுங்கிப்போட ஆசைப்பட்டால், ஒருவேளை கோதுமையையும் பிடுங்கிப்போடுவோம். ஆகையால், இயேசுநாதரை விசுவாசிக்கிறேன் என்று சொல்லுகிறவனை எல்லாம் அவன் வெளியரங்கமாய்ப் பாவத்தில் நிலைக்கிருந்தாலன்றி, நாம் சபையில் சேர்த்துக் கொள்ளவேண்டியதாயிருக்கிறது. பொல்லாதவர்கள் சபைக்கு வெளியேயிருக்கிறதைப்பார்க்கிலும் சபைக்குள்ளேயிருக்கிறது அவர்களுக்கு நல்லது. இதனால் அவர்கள் குணப்படுகிறதற்கு இடமுண்டு. மோட்சராச்சியத்தில் நிறைவேறப்போகிற விருந்துக்குப் போய்ச் சேருகிறவரையில் நல்லார் பொல்லார் யாவரும் கலந்துதானிருப்பார்கள்.

ஆகிலும, நமமாலானமட்டும் எல்லாரையும் இந்த விருந்துக்குக்கொண்டுவருவோம். அவர்களைப் பரம ராச்சியத்திற்கு ஆயத்தம் பண்ணக் கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கும் எத்தனத்தையெல்லாம் கையாடுவோம். ஞானஸ்நானத்தை விரும்புகிறவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்போம். அவர்களுக்குப் பராபரனுடைய வசனத்தை இடைவிடாமல் போதிப்போம். கர்த்தருடைய இராப்போசனத்தை அவர்களுக்குப் பரிமாறுவோம். அவர்களுக்காக செபம்பண்ணுவோம். கலியாணம் பந்தியிருக்கிறவர்களால் நிறைந்தது என்று சொல்லுகிற வேளைமட்டும் கர்த்தருடைய ஊழியக்காரர் ஜனங்களை அழைத்துக்கொண்டேயிருக்கவேண்டும். எப்படியும் அந்தவேளை ஒரு நாளில் வரும். அதுதான் உலகத்தின் கடைசி நாள்.

அப்போது பந்தியிருக்கிறவர்களைப் பார்க்கிறதற்கு இராசா உட்பிரவேசிப்பார். அது ஒரு முக்கியமான சமயமே. அச்சமயத்தில் ஒரு பெரிய சோதனையிருக்கும். அந்தச் சோதனையின் முடிவு பயங்கரமாயிருக்கும். பரம இராசா விருந்தாடிகள் நடுவே வந்து, கலியாணத்தில் இருக்கத்தக்கவர்கள் ஆர், இருக்கத்தகாதவர்கள் ஆர் என்று தீர்ப்புச் செய்வார். அவருடைய பார்வைக்கு மறைந்துபோவார் யாருமில்லை. அவர் எல்லாம் அறிந்த



இராசா. ஒவ்வொருவனுடைய நினைப்பும், உணர்ச்சியும், ஒவ்வொருவனுடைய இரகசியமும் அவருக்கு நன்றாய்த் தெரியும். அவர் எல்லாவற்றையும் வெட்டவெளிச்சமாக்குவார். சகோதரரே, இங்கே வந்திருக்கிறவர்களில் ஒருவனும் அவருடைய சோதனைக்குத் தப்பப்போகிறதில்லை.

அப்பொழுது இராசா அங்கே வந்திருக்கும் பேர்க் கிறிஸ்தவர்களைப் பார்த்துப் பேசத் தொடங்குவார். பந்தியிருக்கிறவர்களைப் பார்க்கிறதற்கு இராசா உட்பிரவேசித்தபொழுது கலியாண வஸ்திரம் தரித்திராத ஒரு மனுஷனை அங்கே கண்டு, அவனுடனே: சிநேகிதனே, கலியாண வஸ்திரமில்லாதவனாய் இங்கே எப்படி உட்பிரவேசித்தாய் என்றான்.—இராசவிருந்துக்குப் போகிறவர்கள் அதற்கேற்ற உடையோடே போகவேண்டும். ஏற்ற உடை சம்பாதிக்க எல்லாருக்கும் முடியுமா. அது முடியாதாகையால் கிருபையாய் விருந்தை ஆயத்தம் பண்ணிக் கிருபையாய் விருந்துக்கு அழைக்கிறவரே கிருபையாய்க் கலியாண வஸ்திரத்தையும் கொடுக்கிறார். அந்த வஸ்திரம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நீதியே அவரை விசுவாசத்தினால் பற்றிக்கொள்ளுகிறவர்களுக்கு இந்த வஸ்திரம் கொடுக்கப்படும். இது கிறிஸ்தவர்களில் ஒவ்வொருவனுக்கும ஞானஸ்நானத்தில் கொடுக்கப்பட்டது. அதன் விலை சொல்லமுடியாதது. அது தேவ குமாரனின் புண்ணியத்தினாலும பாடுகளினாலும மரணத்தினாலும சம்பாதிக்கப்பட்டது. அது ஒவ்வொருவனுக்கும் தகுதியான வஸ்திரம். இந்த வஸ்திரமில்லாமல் கலியாண விருந்தில் பிரவேசிக்க எவனுக்கும் நியாயமில்லை. இந்தக் கலியாண வஸ்திரம் இல்லாதேபோனால், அதற்கு அவிசுவாசமே அல்லாமல் வேறு காரணமில்லை. நீ கலியாண வஸ்திரமில்லாதவனாய் எப்படி உட்பிரவேசித்தாய் என்கிற கேள்விக்குப் பதில் சொல்ல ஒருவராலும் முடியாது. அவனுக்கோவெனில் வார்த்தை அற்றுப்போயிற்று என்று நம்முடைய வாக்கியத்தில் சொல்லியிருக்கிறது. எந்த விதம் பார்த்தாலும் அந்த மனுஷனுக்கு நியாயம் சொல்ல வழியில்லை. ஒருவேளை அவனுடைய சொந்த உடுப்பை அவன் அழகென்று எண்ணியிருக்கலாம. அப்படியெண்ணுவது அகந்தை. இராசா, நீ இன்ன வஸ்திரத்தோடு வரவேண்டுமென்று சொல்லி, அந்த வஸ்திரத்தையும் கொடுக்கும்போது அதைத் தள்ளிவிடுவது அக்கிரமமல்லவா. தங்கள் சொந்தப் புண்ணியத்தினாலே மோட்சம் சேரலாம் என்று நம்புகிறவர்கள் இப்படிப்பட்டவர்கள். அவன் ஒருவேளை இராசாவுக்கு வஸ்திரச் செலவு தேவையில்லை என்று எண்ணினான். அது அவன் காரியமல்ல. கலியாண வஸ்திரம் வாங்க எனக்கு காசில்லை, பணமில்லை, நேரமில்லை என்று சொல்லவும் காரணம் காணோம். இராசாவே

அதைக் கிருபையாய்க் கொடுத்தார். கலியாண வஸ்திரத்தை அசட்டை செய்து அதில்லாமல் வருவது மகிமையுள்ள இராசாவையும் அவருடைய விருந்தாடிகளையும் அவமானப்படுத்துகிற செய்கை. இதனால் குற்றவாளியாய்த் தீர்க்கப்படும் அந்த மனுஷன் எவ்வளவு நிர்ப்பாக்கியன்.

பிரியமானவர்களே, நம்மில் இப்படிப்பட்டவர்கள் இல்லையா. கிறிஸ்தவர்களாயிருந்தும், உலக காரியங்களில் அதிகமாய்ச் சார்ந்து, இரட்சிப்பைக்குறித்து ஏனோதானோவென்று இப்பொழுது காலம் தள்ளுகிற மனிதர் பயந்து நடுங்கும் வேளை வருகிறது. எப்படியாவது நாங்கள் மோட்சம் போய்ச் சேருவோமென்று அவர்கள் நினைக்கவேண்டாம். பராபரன் தம்மைப் பரிகாசம் பண்ணவொட்டார்.

அப்படிப்பட்டவர்களுக்குப் பயங்கரமான தீர்ப்புச் சொல்லப்படும். அப்போது இராசா பணிவிடைக்காரருடனே: அவன் கால்களையும் கைகளையும் கட்டி, அவனை எடுத்துப்போய், எல்லாவற்றிற்கும் புறம்பான இருளிலே போடுங்கள்; அங்கே அழுகையும் பல்கடிப்பும் உண்டாயிருக்கும் என்றான். — இந்த விருந்தையும் அதைச் செய்வித்த இராசாவையும் அந்த விருந்துக்கடுத்த பிரமாணங்களையும் மதிக்காமல்போன அந்த மனுஷன் எடுத்துப் போடப்படுவது நியாயந்தான். கோதுமையோடு கலந்திருந்த களை இனி அப்படிக் கலந்திருக்க முடியாது. பிரிவினை வேளை வந்துவிட்டது. விசுவாசத்தை மறுதலித்தவன், மாயமும் வேஷமுமுள்ள பேர்க் கிறிஸ்தவன், மெய்விசுவாசிகளோடே சேர்ந்திருக்கக் கர்த்தர் இடங்கொடுக்கமாட்டார். அவன் பணக்காரனாயிருந்தாலும் ஏழையாயிருந்தாலும், படிப்பாளியாயிருந்தாலும் மூடனாயிருந்தாலும், கலியாண வஸ்திரம் இல்லாதவன் எவனோ, கிறிஸ்துவின் நீதியைப் போக்கடித்தவன் எவனோ, அவன் மோட்சராச்சியத்திற்குப் புறம்பாவான். இந்த உலகத்தில் வாயாடிகளாயிருந்து பெரியோரை எதிர்த்து நின்றவர்கள் அங்கே புறம்பாகும்போது வாய் மூடியிருக்கவேண்டியதாகும். அவனை எடுத்துப் போடுங்கள் என்கிற தீர்ப்புக்கு எதிர்த்தீர்ப்பு இல்லை.

மோட்சராச்சியத்திற்குப் புறம்பானவர்கள் எல்லாவற்றிற்கும் புறம்பான இருளிலே போகவேண்டும். மோட்சம் இல்லை, நரகம் இல்லை என்று சொல்லுகிறவர்கள் மோட்சத்தைப் பார்க்காவிட்டாலும், நரகத்தையாவது நிச்சயமாய்ப் பார்ப்பார்கள். நரக இருளை விபரிக்க ஒருவராலுமில்லை. மோட்சம் எப்படித் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் வாசஸ்தலமோ, அப்படியே நரகம் தெரிந்துகொள்ளப்படாதவர்களின் வாசஸ்தலம். அங்கே அழுகையும் பல் கடிப்பும் உண்டாயிருக்கும். அங்கே அழுகிறவர்களுக்காகப் பரிதபிப்பார் யாருமில்லை. அங்கே அழும் அழுகைக்கு



முடிவு வருமென்கிற நம்பிக்கையில்லை. அங்கே குணப்படுவதற்கு இடமில்லை. அங்கே விசுவாசம் உண்டாகிறதற்குப் பிரசங்கமில்லை. மோட்சத்தின் மகிமையும் சந்தோஷமும் மனதுக்கும் வாக்குக்கும் எட்டாததாயிருப்பதுபோல், நரகத்தின் பயங்கரமும் துக்கமும் மனதுக்கும் வாக்குக்கும் எட்டாததாயிருக்கும்.

பிரியமானவர்களே, இனி என்னசொல்லப்போகிறோம். கர்த்தருடைய கிருபையின் சத்தம் கேட்கிற இப்பொழுதே அதற்குக் கீழ்ப்படியுங்கள். இப்பொழுதே கிறிஸ்துவை விசுவாசியுங்கள். இப்பொழுதே அவருடைய நீதியாகிய கலியாண வஸ்திரத்தைப் போர்த்துக்கொள்ளுங்கள். விசுவாசத்தால் கிறிஸ்துவில் நிலைத்திருங்கள்: முடிவுபரியந்தம் விசுவாசத்தில் நிலைத்திருக்கிறவர்களே தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். இவர்கள் கொஞ்சம்பேராயிருந்தாலும், இவர்களே ஆட்டுக்குட்டியின் கலியாண விருந்துக்கு வந்து சேருவார்கள். வந்து சேரும்படிக்கே பராபரன் அவர்களைக் கிருபையாய்த் தெரிந்துகொண்டார். நாமெல்லாரும் அதற்கு வந்து சேரக் கர்த்தர் நமக்குக் கிருபை செய்வாராக.

எங்களுக்குக் கலியாண விருந்தை ஆயத்தம்பண்ணியிருக்கும் பரம இராசாவே, உம்முடைய கிருபைக்கு நாங்கள் எம்மாத்திரம். நாங்கள் எங்கள் அருமை இரட்சகரை உண்மையாய் விசுவாசித்து, இந்த விசுவாசத்தில் முடிவு பரியந்தம் நிலைத்திருந்து, மகிமைக்குள் பிரவேசிக்க எங்களுக்கு ஒத்தாசை செய்தருளும், சுவாமி. ஆமேன்.

---

## திரித்துவப் பண்டிகைக்குப் பிந்தின உக-ம் ஞாயிறு.

யோவான் 4, 47—54.

பிரியமானவர்களே,

நமக்குப் பிசாசோடு போராட்டம் இருக்கிறது. ஒரு நாள் இரண்டுநாளைக்கு மாத்திரம் அல்ல, நம்முடைய ஆயுசுகாலமெல்லாம் நமக்குப் போர் உண்டு. போராடவேண்டியவர்கள் ஆயுதம் தரித்திருக்கவேண்டும். நம்முடைய திருவாக்கியத்திலே கிறிஸ்தவன் எப்பொழுதும் தரித்திருக்கவேண்டிய ஆயுதங்கள் இவையென்று விபரமாய்ச் சொல்லியிருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசம் என்கிற கேடகத்தைப் பிடிக்கவேண்டுமென்று அதில் வாசிக்கிறோம். அதுவே பிசாசின் நெருப்பான அம்புகளை அவித்துப்போடுவதற்கான ஆயுதம். விசுவாசம் இல்லாமல் நாம் கர்த்தருக்குப் பிரியமாயிருக்கக்

கூடாது. இந்த விசுவாசமோ நம்முடைய சொந்த பலத்தால் உண்டாகக் கூடியதல்ல. அதை நமக்குள் உண்டுபண்ணுகிறவர் கர்த்தர், அதை வளர்க்கிறவர் கர்த்தர், அதைப் பலன் தரப்பண்ணுகிறவர் கர்த்தர். இதை நாம் நம்முடைய சுவிசேஷ வாக்கியத்தில் பார்க்கிறோம் அதில் சொல்லிய இராசமனுஷனுடைய விசுவாசத்தால் நாம் விசுவாசத்தைப் பற்றிய பல நல்ல பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம். இன்றைக்கு நாம்:

**கர்த்தர் உண்டுபண்ணுகிற விசுவாசத்தின் பல படிகளைக் குறித்துச் சிந்திப்போம்:**

1. விசுவாசத்தின் துவக்கம்.
2. விசுவாசத்தின் வளர்த்தி.
3. விசுவாசத்தின் பூர்த்தி.

## 1.

விசுவாசத்தின் துவக்கத்தைப் பற்றிப் பார்ப்போம்.

இராசாவின் மனுஷன் ஒருவன் இருந்தான். அவன் குமாரன் கப்பர்நகூமிலே வியாதியாயிருந்தான். இயேசு யூதேயாவிலிருந்து கலிலேயாவிலே வந்ததை இவன் கேட்டபொழுது, அவரண்டைக்குப் போய், அவர் இறங்கி வந்து, தன் மகனைக் குணமாக்க அவரை வேண்டிக்கொண்டான்; ஏனெனில் சாகச் சமீபமாயிருந்தான் என்று வாசிக்கிறோம்.

இந்த இராசாவின் மனுஷன் ஏரோதே இராசாவின் அரண்மனையில் வேலைசெய்த பெரிய உத்தியோகஸ்தரில் ஒருவன். அவன் ஊர் கலிலேயாநாட்டிலுள்ள கப்பர்நகூம். பிற்காலத்தில் கப்பர்நகூமை இயேசுநாதர் தம்முடைய ஊரென்று சொன்னதுண்டு. அந்த ஊரில் அவர் அடிக்கடி தங்கியிருந்து பிரசங்கம்பண்ணினார். அங்கே அநேகம் அற்புதங்களையும் செய்தார். ஆகிலும், நம்முடைய வாக்கியத்தில் சொல்லியிருக்கிற சரித்திரம் நடந்த காலமட்டும், அவர் கலிலேயா நாட்டில் செய்தது ஒரே ஒரு அற்புதந்தான். கானாஊர் கலியாணத்தில் தண்ணீரைத் திராட்சரசமாக்கினதே அந்த அற்புதம். என்றாலும், முன்னே எருசலேமிலே பண்டிகைக்கு வந்திருந்த கலிலேயர் அவர் அங்கே செய்த அற்புதங்களைப் பார்த்திருந்தார்கள். இராசாவின் மனுஷன் அவைகளைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கலாம். அவனோ கிறிஸ்துவண்டை வராமல் தூரவே நின்றான். அவன் அற்புதங்களையும் அடையாளங்களையும் தன் கண்ணால் காணாமையால் தூர நின்றானோ என்னமோ தெரியவில்லை. ஒருவேளை அவனுடைய உத்தியோகப் பெருமை அவனைத் தடுத்தி-



ருக்கலாம். அரண்மனை உத்தியோகஸ்தனாகிய நான் நாசரேத்தூர் தச்சனண்டை போகிறதா, அது என் அந்தஸ்துக்குப் பொருந்துமா என்று நினைத்திருக்கலாம். அல்லது தன்னுடைய போதகமாராகிய வேதபாரகரும் பரிசேயரும் விரோதிக்கிற இந்த இயேசுவண்டைபோவது தன்னுடைய மதத்துக்கு ஈனம் என்று நினைத்திருக்கலாம். அல்லது இந்த இயேசுநாசரேத்தான், ஊரில் கெட்டபேர் வாங்கியிருக்கும் ஆயக்காரரோடும் பாவிகளோடும் சேர்ந்துகொண்டிருக்கிறார், அப்படிப்பட்ட துர்ப்பெயரில்லாத சன்மார்க்கனாகிய நான் அவரண்டை சேருவது எனக்குக் குறைவு என்று எண்ணியிருக்கலாம். எப்படியிருந்தாலும் இருக்கட்டும். அவன் இதுவரையில் இயேசுவண்டை நெருங்கிவராதது நிசம். பராபரனுடைய கிருபையுள்ள கரமோ அவனை விட்டு விடவில்லை. காணாமற்போன ஆட்டைத் தேடிப்பிடிக்கும் நல்ல மேய்ப்பருடைய கை அவன் மேல்பட்டது.

எப்படியென்றால், அவன் பிரியமான மகனுக்கு வியாதி வந்தது. கடுமையான சுரத்தினால் அந்தப் பையன் மிகவும் வருத்தப்பட்டான். எவ்வளவோ வைத்தியம் பார்த்தும், சுரம் நாளுக்கு நாள் குறையாமல் அதிகப்பட்டே வந்தது. பையன் எலும்பும் தோலுமானான். வைத்தியர்கள் கைவிட்டார்கள். மரணம் சமீபித்தது. அதைப் பார்க்கத் தகப்பனுக்குச் சகிக்கவில்லை. நமக்கு வியாதி வந்தாலும் பட்டுக்கொள்ளலாம். பிள்ளைகளுக்கு வியாதி வந்து, அவர்கள் சங்கடப்படுவதை நாம் பார்த்திருப்பது வருத்தம். மகனுடைய பரிதாப நிலைமையைப் பார்க்கச் சகிக்காத இந்த இராச மனுஷனுடைய மனசு நொந்துபோயிற்று. அவன் தன் செல்வ மகனுக்காக பராபரனை நோக்கிக் கூப்பிட்டான். இரக்கமுள்ள பராபரன் அவன்பேரில் கிருபை கூர்ந்து, அவனுக்கு வெளிச்சம் கட்டளையிட்டதினால், சரியான வைத்தியமும் சகாயமும் எங்கே கிடைக்குமென்று அவனுக்குத் தெரியவந்தது. யாவருக்கும் இரக்கம் காண்பித்து வரும் இயேசுநாதர் கானாவூரில் வந்திருக்கிறதாக அவன் கேள்விப்பட்டான். அவரைப்பற்றித் தான் கேட்டதும் அறிந்ததுமான சங்கதியெல்லாம் அவன் ஞாபகத்துக்கு வந்தது. அப்பொழுது அவனுடைய நம்பிக்கை முளைக்கத் தொடங்கிற்று. அவன் இயேசுவண்டை போகத் தீர்மானித்துப் புறப்பட்டான்.

இயேசுவண்டைக்கு வருவது மெய்விசுவாசத்தின் துவக்கம். இந்த இராச மனிதன் இரண்டு நினைவுகளினால் குந்திக்குந்தி நடந்தவன் அல்ல. இயேசு ஒருவராலே தனக்குச் சகாயம் கிடைக்கும் என்று நம்பினதினால் அவன் அவரண்டை வந்தான். அப்படி நம்பியிராவிட்டால், அவரண்டை வந்திருக்கமாட்டான். அவனிடத்தில் துவக்கமான விசுவாசமோ அப்-

போது பிறந்த குழந்தையைப்போல் பலவீனமாயிருந்தது. அவன் இயேசுநாதருடைய வார்த்தையால் காரியமாகுமென்று நம்பவில்லை. தன் மகனைச் சுகமாக்கும்படி அவர் தன் வீட்டுக்கு வரவேண்டும், தன் மகனைத் தொடவேண்டும் என்று நினைத்தான். ஒரே வார்த்தை சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சுகமாவான் என்று சொன்ன நூற்றுக்குச் சேர்வைக்காரனுடைய விசுவாசத்துக்கும் இந்த இராச மனுஷனுடைய விசுவாசத்துக்கும் பெரிய வித்தியாசமிருந்தது. இராச மனுஷனுடைய விசுவாசம் பலவீனமாயிருந்தும், கர்த்தர் அவனைத் தள்ளிவிடவில்லை. வியாதியுள்ள பிள்ளையைத் தாய் கவனித்துத் தூக்கியெடுப்பதுபோல், இரட்சகரும் இந்தப் பலவீன விசுவாசத்தைத் தாங்குகிறார். தாம் நெறிந்த நாணலை முறியாதவர், மங்கி எரிகிற திரியை அவியாதவர் என்று அவர் இந்தச் சமயத்திலும் ரூபித்தார். பலவீனமாய்த் தொடங்கின அந்த விசுவாசத்தைப் பலப்படுத்தி வளர்க்கச் சித்தமானார்.

2.

விசுவாசத்தின் வளர்த்தியைக் குறித்து இப்பொழுது சிந்திப்போம்.

இயேசுநாதர் அந்த மனுஷனுடைய விசுவாசத்தின் குறைவை அறிந்து, அவனுக்கு அதை எடுத்துக் காண்பிக்கிறார். அப்போது இயேசு அவனுடனே: நீங்கள் அடையாளங்களையும் அற்புதங்களையும் காணாதிருந்தால், விசுவாசியீர்கள் என்றார்.—இதில் அவர் இராசாவின் மனுஷனைக் குறித்து மாத்திரம் அல்ல, முழு சனத்தைக் குறித்தும் பேசுகிறார். அவனும மற்ற யூதர்களும இரட்சகர் செய்த புறம்பான அடையாளங்களையும கண்ணுக்குத் தெரிந்த அற்புதங்களையும் தேடி, அவைகளில் மாத்திரம தங்கள் நம்பிக்கையை வைத்தார்கள். உள்ளான பலமுள்ளதும் ஆவிக்கடுத்ததுமான அவருடைய வார்த்தையைக் கவனியாமலும், அதன் பேரில் ஆசை வைக்காமலும் இருந்தார்கள். இது விசுவாசத்தின் குறைவைக் காண்பிக்கிறது.

எக்காலத்திலும் விசுவாசிகள் அடிக்கடி தவறிப்போவது இப்படிப்பட்ட எண்ணங்களினாலேதான். அவர்கள் அடிக்கடி இரட்சகரை அற்புத மூர்த்தியாக நம்பித் தாழ்மையாய் அவரிடம் வருவார்கள். அவருடைய கிருபையின் பேரிலும் வல்லமையின் பேரிலும் மிகுந்த நம்பிக்கை வைப்பார்கள். ஆகிலும, தாங்கள் விரும்பும் அடையாளங்களை அவர்கள் பார்க்காதபொழுது பலவீனப்பட்டுப் பின்னிடைந்து போவதுமுண்டு. தங்கள் வியாதிக்காரப்பிள்ளைகளுக்குத் தாங்கள் கேட்டதுபோல் சுகம்வரவேண்டும். தங்களுக்கு இருக்கும் இந்த அந்தச் சங்கடம் தாங்கள் கேட்



டதுபோல் நீங்கிவிடவேண்டுமென்பது அவர்கள் கோரிக்கை. தங்கள் பிள்ளை சுகமாகாதேபோனால், தாங்கள் கேட்டதுபோல் தடைகள் நீங்காதேபோனால், அவர்கள் விசுவாசம் தளர்ந்துபோம். அவர்கள் கர்த்தரைத் தங்கள் ஆத்ம இரட்சகராக நம்புமுன் அவர்கள் சரீர விஷயங்களில் அடையாளம் தேடி நிற்கிறார்கள். அது சரியல்ல. கர்த்தர் யாவையும் அவருடைய நேரத்திலும் அவருக்குச் சித்தமான விதத்திலும் செய்யும்படி நாம் இடங்கொடுத்து, அவரைப் பூர்த்தியாய் நம்பவேண்டும். நம்முடைய மனம்போல் காரியம் நடந்தாலும் சரி, நடவாவிட்டாலும் சரி, அவரைப் பூர்த்தியாய் நம்பவேண்டும். ஏனென்றால் நம்பிக்கையிலே இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். ஆனால் காணப்படுகிறதின் நம்பிக்கை நம்பிக்கை அல்ல; ஏனெனில் ஒருவன் தான் காண்கிறதை நம்புகிறதும் ஏது. நாம் காணாததை நம்பினோமேயாகில், பொறுமையாய் அதற்குக் காத்திருக்கிறோம் என்று அப்போஸ்தலன் சொல்லுகிறார் (ரோம. 8, 24. 25). நாமும் அடிக்கடி நம்முடைய விசுவாசத்தில் தளர்ச்சி அடைந்து, கர்த்தரிடத்தில் அடையாளங்களைத் தேடினதற்காக விசனப்பட்டு, அவரிடத்திலே மன்னிப்பைத் தேடுவோமாக. சகோதரரே, நம்முடைய நம்பிக்கை பொறுமையோடே அமர்ந்திருக்கவேண்டும். கர்த்தருடைய வேளை வரும்மட்டும் பொறுமை அவசியம். பொறுமை தப்பி, உடனேக்குடனே நம்முடைய ஆசை நிறைவேற விரும்புவது விசுவாசக் குறைவு.

இராசாவின் மனுஷன் இரட்சகர் சொன்ன கடினமான உத்தரவால் கலக்கமடைந்தும், அவன் ஓடிப்போகவில்லை. இரட்சகருடைய வல்லமையை இன்னம் நம்பியேயிருந்தான். ஆகையால் அவன்: ஆண்டவரே, என் பிள்ளை சாகிறதற்கு முன்னே இறங்கிவாரும் என்றான்.—நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவொட்டேன் என்று கர்த்தரோடே போராடிச் செபம் பண்ணின யாக்கோபைப் போல் இவனும் செய்தான். அவனுடைய விசுவாசம் பலவீன விசுவாசமாயிருந்தாலும், இரட்சகரை விடாத விசுவாசமாயிருந்தது. அவனுடைய விசுவாசத்தைப் பலவீன விசுவாசமென்று சொல்லுகிறோம். ஏனென்றால் பிள்ளை சாகுமுன்னமேதான் அவர் சுகமாக்கக் கூடியவரென்றும், பிள்ளை செத்த பின் அவர் அதை எழுப்பக் கூடாதவரென்றும் நினைக்கிறவன் போல் பேசுகிறான். மேலும், இருந்த இடத்திலிருந்துகொண்டே பிள்ளையைச் சுகமாக்க அவரால் கூடாதது போலும், அவர் கப்பர்நகூம் பட்டணத்துக்குப் போனால் மாத்திரம் அந்த பிள்ளையைச் சுகமாக்கக் கூடியதுபோலும் அவன் பேசுகிறான். என்றாலும், ஆண்டவரையே அவன் நம்பியிருக்கிறான். அவனுடைய நம்பிக்கையை முழுவதும் வெட்கப்படுத்த இரட்ச

கருக்குப் பிரியமில்லை. அவனுடைய விசுவாசத்தை வளர்த்துப் பலப்படுத்தவே அவருக்கு ஆசை. அடையாளங்களைக் காணுமலே தம்மை அவன் நம்பவேண்டுமென்று அவர் விரும்பினார். அந்த நம்பிக்கையையும் அவனிடத்தில் அவர் உண்டுபண்ணினார்.

எப்படியென்றால், அவர் அவனுடனே: போ, உன் குமாரன் பிழைத்திருக்கிறான் என்றார். அவன் கேட்டுக்கொண்டபடியே கப்பர்நகூமுக்கு இறங்கிப்போக அவர் சம்மதிக்கவில்லை. தம்முடைய சித்தத்தின்படி அவனுக்கு உத்தரவு அருளினார். அவனும் தன்னுடைய மனதை மாற்றி, தன் சித்தத்தை அவருடைய சித்தத்துக்குக் கீழ்ப்படுத்தி, அவர் தனக்குச் சொன்ன வார்த்தையை நம்பிப் போனான். அவன் இயேசுவண்டை வந்தபொழுது, அவனுடைய விசுவாசம் இருந்த நிலைமைக்கும், அவன் அவரை விட்டுப் போகும்பொழுது அது இருந்த நிலைமைக்கும் பெரிய வித்தியாசத்தைப் பார்க்கிறோம். இந்த விசுவாசத்தை உண்டாக்கினது இரட்சகருடைய வேலை. ஆ, நம்முடைய ஆத்தும வைத்தியர் எவ்வளவு நல்லவர். அவர் நம்முடைய குறைவுகளை எடுத்துக் காட்டுகிறார். நமது உடம்பிலே உண்டாகும் ஒரு பருவைச் சுகமாக்க இரண வைத்தியன் அதை அறுத்து, அதில் உள்ள சீழை வெளிப்படுத்துவதுபோல், இரட்சகர் நம்முடைய விசுவாசத்திலிருக்கும் குறைவுகளை வெளிப்படுத்துவது எவ்வளவு நல்லது. அது நமக்கு வேதனையாயிருந்தாலும், அது நமக்கு நல்லதே. அவர் நோவுண்டாக்கித் திரும்பக் காயங்கட்டுகிறார்; அவர் காயப்படுத்துகிறவர், அவருடைய கை திரும்ப ஆற்றுகிறது என்று எலிப்பாஸ் என்பவன் சொன்னது (யோபு 5, 18) சரியான வார்த்தை. இந்த விதமே அவர் தம்முடைய பிள்ளைகளின் அற்ப விசுவாசத்தையும் அவிசுவாசத்தையும் அடிக்கடி கடிந்துகொண்டு, சரியான விசுவாசத்துக்கு அவர்களைக் கொண்டுவந்தார். ஆண்டவரே, எங்கள் விசுவாசத்தையும் சரிப்படுத்தும், பலப்படுத்தும் என்று நாம் கெஞ்சுவோமாக.

சரீர நன்மைகளுக்காக நாம் செய்யும் செபங்களைக் கர்த்தர் கேட்கத் தாமதிப்பாராகில், அதினால் நாம் தளர்ந்துபோகக் கூடாது. நாம் கேட்டதை நாம் கேட்டபடியே அவர் கொடுக்காவிட்டாலும், நாம் நம்பிக்கையற்றுப்போகக் கூடாது. நாம் செபத்திலே உறுதியாய்த் தரித்திருக்கவேண்டும். நம்முடைய விசுவாசத்தை வளர்ப்பதே அவர் தாமதிப்பின் நோக்கம் என்றறிந்து, தளரா முயற்சியோடே செபம் செய்வோமாக. கடைசியிலே நம்முடைய செபத்துக்கு நல்ல உத்தரவு வரும் என்பதற்குச் சந்தேகமில்லை.



3.

விசுவாசத்தின் பூர்த்தியைக் குறித்து நாம் கடைசியாய்ப் பார்ப்போம்.

அவன் இறங்கிப் போகையில் அவனுடைய ஊழியக்காரர் அவனுக்கு எதிர்கொண்டு வந்து: உம்முடைய குமாரன் பிழைத்திருக்கிறானென்று அறிவித்தார்கள். அப்போது எந்த மணிவேளையிலே அவனுக்குக் குணமாயிற்று என்று அவர்களிடத்திலே விசாரித்தான். அவர்கள் அவனுடனே: நேற்று ஏழாம் மணிவேளையிலே சுரம் அவனை விட்டது என்றார்கள்.

இராசமனுஷனுடைய விசுவாசம் பலவீனமாய்த் துவக்கினாலும் கர்த்தருடைய கிருபையால் பலத்துக்கு வந்தது. அது தேடின பலனை அடைந்தது. அவன் போகிற வழியிலே அவனுடைய வேலைக்காரர் அவனுக்கு எதிர்ப்படவும் அவன் விசுவாசத்தைப் பூர்த்தியாக்கவும் கர்த்தர் இடம் பண்ணினார். கர்த்தர் தன்னோடு பேசின அதே நேரத்தில் சுரம் பிள்ளையாண்டானை விட்டது என்று அவன் கேள்விப்பட்டபொழுது அவன் எவ்வளவாய்ச் சந்தோஷப்பட்டிருப்பான். இரட்சகர் தன்னோடு பேசின கசப்பான வார்த்தைகள் தித்திப்பான பலனைக் கொடுத்தது என்று அவன் அறிந்தான். அவருடைய ஒரே வார்த்தைக்கு எவ்வளவு பலமிருக்கிறதென்று அவன் கண்டறிந்தான். தான் விசுவாசித்தபடியே தனக்குப் பலித்தது என்று அவனுக்குத் தெரியவந்தது. சகோதரரே, இரட்சகருடைய வார்த்தை ஒருபோதும் தவறாது. அவருக்கு வியாதி பயப்படும், மரணம் நடுங்கும். அவர் சொல்லால் இந்த இராச மனுஷனுடைய மகன் சுகமானான். இரட்சகருடைய வல்லமையும் மகிமையும் அவன் வீட்டில் வெளிப்பட்டது. அந்த வீட்டாரின் பெருமூச்சுகளும் கலக்கங்களும் முடிவடைந்து, சந்தோஷமும் மகிழ்ச்சியும் அங்கே வந்து புகுந்தன.

இப்படியிருக்க, நாம் கலங்குவானேன். நமது வீட்டிலோ, நமது சபையிலோ, நமது தேசத்திலோ, ஒரு துன்பம் வந்தால், நமது மனம் குழம்பித் திகைக்க அவசியமில்லை. நமக்குச் சகாயம் செய்ய ஒருவர் இருக்கிறார். அவரை அண்டிக்கொள்ளும் விசுவாசம் நமக்குத் தேவை. அவரை நோக்கிக் கூப்பிடுகிற விசுவாசம் நமக்குத் தேவை. பொறுமையோடே அவருக்குக் காத்திருக்கிற விசுவாசம் நமக்குத் தேவை. அவருடைய வார்த்தையை நம்பும் விசுவாசம் நமக்குத் தேவை. எல்லாவற்றிலும் அதிகமாய், அவரையே உத்தமபொருள் என்று பிடித்துக்கொள்ளுகிற விசுவாசம் நமக்குத் தேவை.

இப்பொழுது இங்கே கூடிவந்திருக்கிற நம்மில் ஒவ்வொருவனுக்கும் எவ்வளவோ கவலையுண்டு. நம்மைச் சேர்ந்தவர்கள்

வியாதியாயிருக்கலாம். நமக்குப் பணக்குறைவு இருக்கலாம். நமக்கு விசனமான ஏதாகிலும் ஒரு காரியம் நடந்திருக்கலாம். நமக்குள்ள நெருக்கத்தில் கர்த்தர் நமக்குச் சகாயம் செய்யவேண்டுமென்று செபம் செய்கிறவர்களாய் நாம் இங்கேவந்திருக்கலாம். இப்பொழுது கர்த்தர் நம்முடைய செபங்களுக்குச் சொல்லுகிற உத்தரவு என்ன. போ, உன் குமாரன் பிழைத்திருக்கிறான் என்கிறார். கர்த்தருடைய வார்த்தையை நம்பி நாம் போவோம். உறுதியாய் நம்பிப்போவோம். ஒருவேளை வழியிலேயே நமக்கு நல்ல செய்தி கிடைக்கும். அல்லது நாம் வீட்டுக்குப்போய்ச் சேரும்போது, நல்ல செய்திகளைக் கேட்போம். நம்முடைய ஆராதனையில் நாம் செய்த செபத்தை, நாம் கேட்டுக்கொண்ட விண்ணப்பத்தை, கர்த்தர் கட்டளையிட்டாரென்று காண்போம். — அல்லது நாம் செய்யவேண்டிய ஒரு வேலையைச் செய்யத்தொடங்குமுன் விசுவாச பலவீனத்தால் கலங்கியிருக்கலாம். ஆகிலும் செபம் செய்தபின், போ என்று கர்த்தர் சொன்ன வார்த்தையை நம்பிப்போவோம். நம்பிக்கையோடு நம்முடைய வேலையைச் செய்வோம். கர்த்தர் தம்முடைய வார்த்தையை நம்மிடத்தில் நிறைவேறப்பண்ணி, நம்முடைய வேலையை முடித்துக்கொடுப்பார். அவருடைய வார்த்தையை நம்பின விசுவாசத்துக்குப் பலன் வராமல் போகாது.

உன் குமாரன் பிழைத்திருக்கிறான் என்கிறதை இயேசு தன்னுடனே சொன்ன மணிவேளை அதுவே என்று தகப்பன் அறிந்து, அவனும் அவன் வீட்டாரனைவரும் விசுவாசித்தார்கள். இதோ, நாம் விசுவாசத்தின் பூர்த்தியைப் பார்க்கிறோம். கிறிஸ்துவின் வார்த்தையை நம்பிப்போன அந்த மனிதன் இப்போது கிறிஸ்துவையே தன் மேசியாவும் தன் ஒன்றான இரட்சகருமாக விசுவாசித்தான். அவரைத் தன் இருதயத்தில் ஏற்றுக்கொண்டான். மெய் விசுவாசம் சோம்பலாயிராது. விசுவாசியானவன் வாய் மூடிக்கொண்டிருக்கமாட்டான். நல்ல அறிக்கை விசுவாசத்தின் நற்பலன். கனப்புச் சட்டியண்டை உருக்கார்ந்திருக்கிறவர்கள் அனலாவதுபோல விசுவாசியைச் சூழ்ந்திருக்கிறவர்கள் விசுவாசமடைவதற்கு இடமுண்டு. இந்த இராச மனுஷன் விசுவாசம் உள்ளவனாயிருந்ததால், இயேசுநாதரிடம் தான் போனது முதல் நடந்த சகல விசேஷங்களையும் வகை விபரமாய்த் தன் வீட்டாருக்குச் சொன்னான். அவர்களும் இயேசுவை விசுவாசித்தார்கள். முழுக்குடும்பமும் விசுவாசமுள்ள குடும்பமாயிற்று. நானும் என் வீட்டாரும் கர்த்தரைச் சேவிப்போம் என்று யோசுவா சொன்னதுபோல் (யோசுவா 24, 15) இந்த இராச மனுஷனும் அவன் வீட்டாரும் கர்த்தரைச் சேவிக்கத்தொடங்கினார்கள். இப்படியே அவனுடைய விசுவாசம் பூர்த்தியாகி, நற்பலனுக்குவந்ததை நாம் பார்க்கிறோம்.



நம்முடைய விசுவாசம் எப்படி. நாம் இயேசுநாதரை நம்முடைய முழு இருதயத்தினாலும் விசுவாசிக்கிறோமா. அதை யாவருக்கும அறிக்கையிடுகிறோமா. நம்முடைய குடும்பமுழுவதும விசுவாசிகளின் குடும்பமாயிருக்கவேண்டும் என்கிற ஆசை நமக்கிருக்கிறதா. அவர்களை விசுவாசிகளாக்குகிறதற்கு நாம பிரயாசப்படுகிறோமா. முக்கியமாய் வீட்டெசமான் தன் பெண்சாதிபிள்ளைகள் தெய்வபத்தியில் வளரும்படி பிரயாசப்படவேண்டியது. அப்படிச் செய்யாத எசமான் மெய்விசுவாசியல்ல. நாமெல்லாரும் விசுவாசிகளாயிருக்கவும், விசுவாசத்தில் வளரவும், விசுவாசத்தின் பலனைக்காணவும கர்த்தர் கிருபை செய்வாராக.

விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாகிய இயேசுவே, எங்களைத் தேவரீர் கிருபையாய்க் கண்ணோக்கிப்பாரும். உம்முடைய வாக்குத்தத்தங்களைத் திடமாய் நம்பிப் பிழைக்க எங்களுக்குத் துணைசெய்யும். நாங்கள் தனித்தனியே மாத்திரம் அல்ல, குடும்பம் குடும்பமாய் உம்மை மகிமைப்படுத்த எங்களுக்கு ஒத்தாசை செய்தருளும், சுவாமி. ஆமேன்.

---

## திரித்துவப் பண்டிகைக்குப் பிந்தின உஉ-ம் ஞாயிறு.

மத். 18, 23—35.

பிரியமானவர்களே,

நீங்கள் ஒருவருக்கொருவர் அன்பும் மன உருக்கமுமாகி, பராபரன் கிறிஸ்துவுக்குள் உங்களுக்கு மன்னித்தது போல் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் (எபே. 4, 32) என்று அப்போஸ்தலன் நமக்குப் புத்தி சொல்லுகிறார். பாவஞ்செய்வது மனுஷகுணம், அதை மன்னிப்பது தெய்வ குணம். விசுவாசிகள் கிறிஸ்துவோடு ஐக்கியமானவர்கள். கிறிஸ்து தலையானவர், விசுவாசிகள் அவயவங்கள். ஒரு மாங்கன்றானது எந்த மரத்தில் ஒட்டப்பட்டதோ, அந்த மரத்தின் சாரத்தைப் பெற்று, அதைப்போல் கனி கொடுக்கும். அப்படியே கிறிஸ்துவோடு ஐக்கியமானவன் கிறிஸ்துவின் குணத்தைப் பெற்று, அவரைப்போல் நடந்து கொள்ளுகிறான். கிறிஸ்து எனக்கு மன்னித்தார், நானும் சகோதரருக்கு மன்னிப்பேன் என்று அவன் சொல்லுகிறான். மன்னிப்பைப் பெற்றவன் கிறிஸ்தவனாகிறான், மற்றவர்களுக்கு மன்னிக்கிறவன் தன்னைக் கிறிஸ்தவனென்று ரூபிக்கிறான். மன்னிக்கும் குணம் இல்லாதவன் கிறிஸ்தவன் அல்ல. அவன் முடிவு பயங்கரம். இதைக் கர்த்தர் நம்முடைய வாக்கியத்திலே தெளிவாய் நமக்குப் போதிக்கிறார். அவர் போதனைப் பிரகாரம்:

நாம் நம்முடைய சகோதரர் குற்றத்தை மன்னிப்போமாக. இதற்காக

1. நாம் பெற்றுக்கொண்ட கிருபையையும்,

2. கிருபை பெற்றவர்கள் கடமையையும்,

3. கடமையை நிறைவேற்றாதவர்களின் முடிவையும் நாம் நினைவுகூர வேண்டும்.

I.

நாம் நம்முடைய சகோதரர் குற்றத்தை மன்னிக்கும்படி நாம் பெற்றுக்கொண்ட கிருபையை நினைக்கவேண்டும்.

வானராச்சியம் தன் பணிவிடைக்காரரோடு கணக்குப் பார்க்க வேண்டுமென்றிருந்த இராசாவாகிய மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் கணக்குப் பார்க்கத் துவக்கினபோது, பதினாயிரம் தாலந்து கடன்பட்ட ஒருவன் அவனுக்கு முன்பாகக் கொண்டுவந்து விடப்பட்டான். — இங்கே சொல்லிய இராசாவாகிய மனுஷன் நம்முடைய பராபரனாகிய கர்த்தரே. அவருக்கு நாமெல்லாரும் பணிவிடைக்காரர். நம்முடைய சீவநாளெல்லாம் நாம் அவர் தயவிலே பிழைக்கிறோம். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிஷமும், நமக்கு அவரிடத்திலிருந்து வருகிற வரவு அதிகரித்துக்கொண்டேயிருக்கிறது. அவரோ உடனுக்குடனே கணக்குக் கேட்கிறதில்லை. பத்து, இருபது, முப்பது, நாற்பது, ஐம்பது வருஷங்களாக நம்முடைய கணக்கைக் கேட்காமல் விட்டுவைத்துக்கொண்டிருக்கிறார். அவர் கணக்குக் கேட்கிற ஒரு சமயம் வரும். ஒரு பிரசங்கத்தினாலே ஒருவன் மனதைத் தட்டி, அவன் பாவத்தை நினைப்பூட்டுகிற வேளை அவர் கணக்குப் பார்க்கிற சமயமாம். ஒரு விசேஷித்த துன்பம் உண்டாகி, வருத்தப்படும் நேரம் கணக்குப் பார்க்கும் சமயமாம். முக்கியமாய் மரண நேரம் கணக்குப் பார்க்கிற நேரம். உன் உக்கிராணக் கணக்கை ஒப்புவி, இனி நீ உக்கிராணக்காரனாயிருக்கக் கூடாதென்கிற சத்தம் அப்பொழுது பலமாய்த் தொனிக்கும். எந்தச் சமயத்தில் நம்முடைய கணக்கைப் பார்த்தாலும், நம்முடைய கடன் பெரிதாயிருக்கும். நாம் ஒவ்வொரு நாளும் பராபரனிடத்தில் பெற்றுக்கொண்ட தயவுகளெத்தனை. அவைகள் கடனல்லவா. அவைகளை நாம் அவரிடத்தில் கொடுக்காவைத்தோம். அவர் நமக்குச் செய்த தயவுகளை நாம் சரியாய்க் கையாடாமையினால் உண்டான கடன் எவ்வளவு. கர்த்தர் நமக்குக் கொடுத்த நேரத்தையும் வரத்தையும், மற்ற சவுகரியங்களையும், வீணுக்கினதினால் உண்டான கடன் எவ்வளவு. செய்யவேண்டியதைச் செய்யாமல் விட்ட கடன் எவ்வளவு. செய்யத் தகாததைச் செய்த கடன் எவ்வளவு. நம்முடைய வேலைத் துறையிலும், நமது வீட்டுக் கட-



மைகளிலும், தேசக் கடமைகளிலும், சபைக் கடமைகளிலும் நமதுமேல் சுமருகிற கடன் எவ்வளவு. அவைகள் எண்ணி முடியாது. நம்முடைய வாக்கியத்திலே அது பதினாயிரம் தாலந்தென்று சொல்லியிருக்கிறது. ஒரு தாலந்து இரண்டாயிரம் ரூபாய்; பதினாயிரம் தாலந்து இரண்டு கோடி ரூபாயாகும். இத்தனை பெரிய கடனைச் செலுத்தித் தீர்க்க ஒரு வேலைக்காரனால் முடியுமா.

கொடுத்துத் தீர்க்க அவனுக்கு இல்லாமையால், அவன் எசமான் அவனை பெண்சாதி பிள்ளைகளையும் அவனுக்கு உண்டான தெல்லாவற்றையும் விற்று, கடனைத் தீர்க்கக் கட்டளையிட்டான். இத்தனை பெரிய கடன்பட்ட மனிதன் நிலைமை பரிதாபமே. இதைத் தீர்ப்பது எப்படி. நாம் நம்முடைய கடனைத்தீர்க்கவே முடியாது. எதைக் கொடுத்துக் கடன் தீர்ப்போம். நமக்குள்ள யாதொன்றும் நம்முடையதல்லவே. நம்முடைய தாயிராததைக் கடனுக்குச் செலுத்தமுடியுமா. எப்படியிருந்தாலும், பராபரன் நம்மிடத்தில், கணக்குப்பார்த்து, நாம் பட்டிருக்கும் கடனைக் கேட்பது நியாயம். அவருடைய நியாயத்துக்கும் நீதிக்கும் நாம் தப்பிப்போக முடியாது. நம்மை அவர் காவலில் போடுவது சரி. நம்முடைய பெண்சாதி பிள்ளைகள் எல்லாரையும், நமக்கு உள்ளது உரியதுயாவையும், நம்முடைய பாவத்தினிமித்தமாக நம்மை விட்டு எடுத்துப்போடுவது நியாயம்.

இந்த நிர்ப்பாக்கியத்துக்குத் தப்பிப்போக வழியில்லையா. கடன்பட்ட பணிவிடைக்காரன் என்ன செய்தான் என்று பாருங்கள். அந்தப் பணிவிடைக்காரன் தாழ விழுந்து: ஆண்டவனே, எனக்காக மனம்பொறும்; உமக்கு எல்லாவற்றையும் கொடுத்துத் தீர்ப்பேனென்று அவனைப் பணிந்துகொண்டான். அவன் தன் எசமானிடத்தில் பொறுமை கேட்டான். அவனுக்கு முன் தன்னைத் தாழ்த்திப் பணிந்துகொண்டான். அவன்செய்தது சரிதான். ஆகிலும், நான் கடனையெல்லாம் செலுத்தித்தீர்ப்பேனென்று அவன் சொன்னது சரியல்ல. எத்தனை வருஷமானாலும் அவன் செலுத்தப்போகிறதேயில்லை. இப்படியே அந்தப்பணிவிடைக்காரன் விண்ணப்பத்திலே குறையிருந்தாலும், இராசாவுடைய இரக்கத்திலே குறையில்லை. எனெனில் அந்தப் பணிவிடைக்காரன்பேரில் மனதுருகி, அவனை விடுதலைபண்ணி, கடனையும் அவனுக்கு மன்னித்துவிட்டான். கர்த்தர் ஏழைப்பாவியின் நிர்ப்பந்தத்துக்கு இரங்குகிறார். அவர் கர்த்தர், அவர் கர்த்தர், அவர் மன உருக்கமும் இரக்கமும் நீடியசாந்தமும் மகா கிருபையும் உண்மையுமுள்ள பராபரன். அவர் ஆயிரந்தலைமுறைகளுக்கும் கிருபையைக் காக்கிறவர், அவர் அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர் (உ மோசே 34, 6. 7).

ஒரு உலக இராசா ஒரு குற்றவாளிக்கு மன்னிப்புக்கொ
டுக்காமல் தடைப்படுவதற்கு மூன்று காரணங்கள் இருக்கலாம்.
அவன் கடின நெஞ்சனுயிருந்தால் மன்னிக்கமாட்டான்; அல்லது
தன்னுடைய ராஜாங்கத்தின் ஒழுங்குக்கும நீதிக்கும அது கெடு
தியாயிருந்தால் மன்னிப்புக்கொடுக்கமாட்டான்; அல்லது குற்
றவாளியின் குணம் மன்னிப்பை ஏற்றுக்கொள்ளத் தகுதியாயி
ராவிட்டால் மன்னிப்பைக் கொடுக்கமாட்டான். நம்முடைய இரா
சாவாகிய பராபரனை இரக்கமற்றவரென்று சொல்லக் கூடாது.
அவர் இரக்க உருக்கமுள்ளவரென்று நமக்கு நன்றாய்த் தெரியும்.
பராபரன் சிநேகந் தானே என்று வேதம் சொல்லுகிறது. அவ
ருடைய இராச்சியபாரத்தின் நீதிக்கும் ஒழுங்குக்கும் குறைவு
வராதபடி பராபரன் ஏற்பாடு செய்திருக்கிறார். அவர் நம்மெல்லா
ருடைய பாவத்துக்காகவும் தம்முடைய ஒரேபேறான குமாரனை
மரணத்துக்கு ஒப்புக்கொடுத்து, நீதிக்குக் குறைவில்லாமல் பா
வங்களை மன்னிக்க வழி உண்டுபண்ணினார். ஆகையால் மன்
னிப்புக் கொடுக்க இப்படியும் தடையில்லை. ஒரு பாவிக்கு மன்
னிப்புக் கிடைக்காதிருக்குமாகில், அதற்குக் காரணம் அவனிடத்
தில் தான் இருக்கவேண்டும். அவன் தன் நிர்ப்பந்தத்தை உணரா
மலும், கர்த்தருக்குமுன்பாகத் தன்னைத் தாழ்த்தாமலும், அவரு
டைய கிருபையின்மேல் நம்பிக்கை வைக்காமலும் போகிறதே
அவன் கேட்டுக்குக் காரணம். பாவியே, நீ உன் பரம இராசா
வுக்கு முன்விழு, விழுந்து அழு. அவருடைய கிருபையை நம்பு.
அப்பொழுது அவர் இரங்குவார். மகனே, திடன்கொள், உன்
பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்று சொல்லுவார்.
தாவீது இராசா தன் சேவகன் பெண்சாதியாகிய பத்சேபாள்
என்றவளோடு விபசாரம் பண்ணி, அவள் புருஷனையும் கொன்று
போட்டார். அவர் செய்தது மகா பயங்கரமான பாவம். என்
றாலும், அவர் அதற்காக மனஸ்தாபப்பட்டு: நான் கர்த்தருக்கு
விரோதமாகப் பாவஞ்செய்தேன் என்று அழுது செபித்தபொ
ழுது கர்த்தர் அவருடைய பாவத்தை மன்னித்தார். நீர் சாகாத
படிக்குக் கர்த்தர் உம்முடைய பாவத்தை நீங்கவும் பண்ணினா
ரென்று நாத்தான் தீர்க்கதரிசி அவருக்குச் சொன்னார் (உ சாமு.
12, 13).

இதுபோலவே நம்மெல்லாருக்கும் கர்த்தர் கிருபையாய்
நம்முடைய பாவங்களையெல்லாம் மன்னித்தார், இன்னமும் மன்
னிக்கிறார். நாம் இப்பொழுது பிழைத்திருப்பது அவருடைய
சொல்லிமுடியாத கிருபை. இதை நாம ஒருபோதும் மறவாதிருப்
போமாக. இது நம்முடைய மனதில் எப்பொழுதும் இருக்கு
மாகில், நாம் நம்முடைய சகோதரருக்கு இரங்காதிருக்கமாட்
டோம். பராபரன் நமக்குச் செய்த கிருபையை நாம் மறந்து



போவதினாலேயே நம்முடைய சகோதரருக்கு மன்னிக்கவும் அவர்
களைச் சிநேகிக்கவும் கூடாமல தவறிப்போகிறோம்.

2.

பராபரனிடத்தில் கிருபை பெற்றவன் கட
மையென்னவென்று நாம அறிந்தால், நாம நம்முடைய சகோ
தரருக்கு அவர்கள் குற்றங்களை மன்னிப்போம.

அநேகர் கர்த்தருடைய கிருபையினால் பாவமன்னிப்பைப்
பெற்றுக்கொண்டும, அந்த மன்னிப்பின் பலனை அனுபவியாமல்
போகிறார்கள். இதற்குக் காரணம என்ன. அவர்கள் பொல்லாத
பணிவிடைக்காரராயிருந்து, தங்கள் கடமை இன்னதென்று
அறியாமல் போகிறதுதான். இதைக் குறித்து நம்முடைய வாக்
கியத்தில் சொல்லியிருக்கிறதாவது: அந்தப் பணிவிடைக்காரன்
புறப்பட்டு, தன் பணிவிடைத் தோழரில் தனக்கு நூறு வெள்
ளிக்காசு கடன்பட்டிருந்த ஒருவனைக் கண்டு, அவனைப் பிடித்து,
தொண்டையை நெரித்து: நீ பட்ட கடனை எனக்குக் கொடுத்
துத் தீர் என்றான். ஆகையால் அவனுடைய பணிவிடைத்
தோழன் அவன் காலில் விழுந்து: எனக்காக மனம் பொறு,
உனக்கு எல்லாவற்றையும் கொடுத்துத் தீர்ப்பேனென்று அவனை
வேண்டிக்கொண்டான். அவனோ மாட்டேனென்று போய்,
அவன் பட்ட கடனைக் கொடுத்துத் தீர்க்குமளவும், அவனைச்
சிறைச்சாலையில் போடுவித்தான் என்று வாசிக்கிறோம்.—எச
மான் அவனுக்கு மன்னித்துவிட்டான். மன்னிப்புப் பெற்ற
அவனோ, மன்னிப்பைப் பெற்றவன்போல் நடக்கவில்லை. மன்
னிப்பின் மேன்மையை அவன் உணர்ந்துகொண்டவனாய்க் கா
ணப்படுகிறதில்லை. அப்படி உணர்ந்திருப்பானாகில் அதைப்
போல் தானும் செய்திருப்பான். அவன் தனக்கு மன்னிப்புக்
கிடைத்தது சரியல்லவென்பதுபோல் நடந்துகொள்ளுகிறான்
ஆகையினாலே; தன் சகோதரனுக்குத் தான் மன்னிக்கிறது சரி
யல்ல என்று காண்பிக்கிறான். இப்படிச் செய்வதினால் அவன்
ஒரு புதுக்கணக்கை யேற்படுத்தி, அதில் முன்னிலும் பெரிய
கடன்காரனாகிறான். அவனுடைய பணிவிடைத் தோழன் அவ
னுக்குப் பட்ட கடன் சொற்பம், நூறு வெள்ளிக்காசு. இது பதி
னெட்டு ரூபாய்க்குச் சரி. இந்தப் பொல்லாத பணிவிடைக்காரன்
தன் பணிவிடைத் தோழனுக்குக் கடன்கொடுக்கக் கூடிய நிலை
மைக்கு வந்தது தன் எசமானுடைய தயவினாலேதான், அவரிடத்
தில் செய்த சம்பாத்தியத்தினாலேதான் என்பதை அவன் சுத்த
மாய் மறந்துவிட்டான், தன் சகோதரன் பட்ட சொற்பக் கடனுக்
காக அவனை மிகவும் கொடுமைப்படுத்தினான். அவனுடைய
கெஞ்சுதலுக்கும் அழுகைக்கும் சொற்பமாகிலும் இரங்காதே

போனான். இது பெரிய நன்றிகேடு. பதினாயிரம் தாலந்து கடன் பட்டு, அத்தனை பெரிய கடனை மன்னிக்கப்பெற்றவன் சொற்பக் கடன்காரனுக்கு மன்னிக்காமல்போனது பெரிய அநியாயம்.

சகோதரரே, நாமெல்லாரும் கர்த்தரிடத்திலே பாவ மன்னிப்பென்ற பெரிய ஆசீர்வாதத்தைப் பெற்றிருந்தும், நம்முடைய சகோதரருக்கு அவர்கள் குற்றங்களை மன்னிக்காதேபோனால், நாம் கிறிஸ்தவர்களாயிருக்கப் பாத்திரவான்கள் அல்லவென்று காண்பிக்கிறோம். நமக்குக் கர்த்தர் கற்றுக்கொடுத்த செபத்திலே: எங்கள் கடன்காரருக்கு நாங்கள் மன்னித்துவிடுகிறதுபோல நீரும் எங்கள் பாவக் கடன்களை எங்களுக்கு மன்னித்துவிடும் என்று சொல்லப் படித்திருக்கிறோம். இதின்படியே, நாமும் நமக்குப் பொல்லாங்கு செய்கிறவர்களுக்கு முழுமனதோடே மன்னித்துக்கொண்டு, சந்தோஷத்துடனே அவர்களுக்கு நன்மை செய்யக் கடனாளிகளாயிருக்கிறோம். இந்தக் கடமையை நாம் அடிக்கடி மறந்துபோகிறோம். அப்படி செய்வதினால், மற்றவர்கள் நமக்குச் செய்த பொல்லாப்பை நம்முடைய ஞாபகத்தில் வைத்து, அவர்கள் நமக்குச் செய்த நன்மையை மறந்துபோகிறோம். கிறிஸ்தவர்கள் அப்படிச் செய்யக் கூடாது. பிறத்தியார் செய்த நன்மையையெல்லாம் ஞாபகத்தில் வைப்பதும், அவர்கள் செய்த தீமையை எல்லாம் மறப்பதுமே கிறிஸ்தவர்களுக்கு அழகு. அநேக கிறிஸ்தவர்கள் பழிவாங்கும் கல்நெஞ்சராயிருக்கிறார்கள். இன்னான் செய்ததை நான் செத்தாலும் மறக்கமாட்டேன், பழிவாங்கும்வரையில் என் கோபம் தீராது, பதில் செய்யுமுன் இளைப்பாறமாட்டேனென்று அவர்கள் வற்மம் சாதிப்பார்கள். தம்மைக்கொன்ற கொலைபாதகருக்காக: பிதாவே, இவர்களுக்கு மன்னியும் என்று செபம்பண்ணினவரை விசுவாசிக்கிறவர்களுக்குப் பழிவாங்கும் குணம் அடுக்குமா. நாம் கர்த்தருக்கு விரோதமாகச் செய்த பாவங்கள் பெரிதோ, நம்முடைய சகோதரர் நமக்கு விரோதமாகச் செய்த குற்றங்கள் பெரிதோ என்று சோதித்துப் பார்ப்போமாகில், பெரிய குற்றங்களுக்கு மன்னிப்படைந்த நாம் நம்முடைய சகோதரருக்குச் செய்யவேண்டிய கடமை இன்னதென்று அறிந்துகொள்ளலாம். தீமைக்குத் தீமைசெய்வது மிருக குணம். நாய்க்கு நாய் தீமைக்குச் சரிக்கட்டும், மாட்டுக்கு மாடு தீமைக்குச் சரிக்கட்டும். நாம் மிருகங்கள் அல்ல. நன்மைக்கு நன்மை செய்கிறது மனுஷ குணம். இது எல்லா மனுஷருக்கும் தெரியும். அஞ்ஞானிகளும் இது தெரிந்து, வழக்கத்துக்கு வழக்கமென்று சொல்லி, பதிலுக்குப் பதில் நன்மை செய்வார்கள். நாம் மனிதராயிருந்தும், அஞ்ஞானிகளல்ல. தீமைக்கு நன்மை செய்கிற தெய்வ குணத்தைப் பெற்றவர்கள். இந்தக் குணத்துக்கு ஏற்றபடி நடம்



நடப்போமாக. நாம் மன்னிப்பைப் பெற்றோம், மன்னிக்கவும் கடவோம். கர்த்தர் சத்துருக்களாகிய நம்மைச் சிநேகித்தார். நாமும் நம்முடைய சத்துருக்களையும் சிநேகித்து, அவர்களுக்கு நன்மை செய்வோமாக. ஸ்தேவான் என்ற தெய்வபக்தியுள்ள மனுஷனைத் துஷ்ட யூதர்கள் கல்லெறிந்து கொன்றார்கள். அவரோ: ஆண்டவரே, அவர்கள் மீதில் இந்தப் பாவத்தை நிறுத்தாதேயும் என்று கூப்பிட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து மரணமடைந்தார் (அப். 7, 60). இதுவே நம்முடைய கடமை.

3.

இந்தக் கடமையை மறந்து நடப்பவர்களின் முடிவைக் கவனிப்பது நாம் நம்முடைய சகோதரர் குற்றத்தை மன்னிப்பதற்கு நம்மையேவும்.

பணிவிடைத் தோழரோவென்றால் சம்பவித்ததைக் கண்டு, மிகுந்த துக்கம் அடைந்து, வந்து, சம்பவித்ததெல்லாவற்றையும் எசமானுக்கு அறிக்கை பண்ணினார்கள். பழிவாங்கும் குணத்தைப் பார்க்கும்பொழுது மெய்விசுவாசிகளுக்கும் பரிசுத்த தேவதூதருக்கும் விசனமும் துக்கமும் உண்டாகிறது. அவர்கள் பெருமூச்சு விட்டுக் கர்த்தருக்கு அதை அறிவிக்கிறார்கள். கிறிஸ்தவர்களின் தேவபக்தியும் சிநேகமும் சன்மார்க்கமும் அவர்களுக்கு எப்படிச் சந்தோஷத்தை உண்டாக்குகிறதோ, அப்படியே நம்முடைய சிநேகமற்ற நடக்கை அவர்களுக்கு வருத்தத்தை உண்டாக்குகிறது. அவர்களுக்கு மாத்திரம் அல்ல, நம்முடைய பராபரனுக்கும் அது துக்கத்தை உண்டாக்கி, அவருடைய கோபத்தை மூட்டும். அப்போது அவன் எசமான் அவனை அழைப்பித்து, அவனுக்குச் சொன்னதாவது: பொல்லாத பணிவிடைக்காரா, நீ என்னை வேண்டிக்கொண்டதினால் அந்தக் கடன்யாவையும் உனக்கு மன்னித்துவிட்டேனே, நான் உனக்கு இரங்கினதுபோல நீயும் உன் பணிவிடைத்தோழனுக்கு இரங்கவேண்டியதாய் இருந்ததில்லையோ என்று, அவனுடைய எசமான் கோபமடைந்து, அவன் தனக்குப் பட்டகடனையெல்லாம் கொடுத்துத் தீர்க்குமளவும், அவனை வாதிக்கிறவர்களுக்கு ஒப்புக்கொடுத்தான். — பதினாயிரம் தாலந்து கடன் பட்ட பணிவிடைக்காரன் முன்னே மன்னிப்புப் பெற்றவனாயிருந்தும், அவனுடைய கொடுமையான நடத்தையின் நிமித்தம் இராசநியாயாசனத்திற்கு முன் திரும்பவும் நிற்கவேண்டியதாயிற்று. நாமும் கர்த்தரிடத்தில் பாவமன்னிப்பைப் பெற்று, முசிப்பாறுதி அடைந்தவர்களாயிருந்தும், நாம் பெற்ற கிருபையையும் அதனால் நமக்கு உண்டான கடமையையும் மறந்து நடந்தால், நாம் மறுபடியும் தேவகோபத்திற்கு உள்ளாவோம். ஆனபடியினாலே நிற்கிறவ

ளுகத் தன்னை எண்ணுகிறவன் விழாதபடிக்குப் பார்க்கக்கடவான் (க கொரி. 10, 12). நமக்கு நம்முடைய பாவங்களை மன்னித்த பரம தகப்பனை விட்டு நாம் மனம் விலகி, பிசாசின் குணத்தைப் படைத்து, நம்முடைய உடன்தோழருக்குக் கொடுமை செய்யப் பார்ப்போமாகில், பராபரன் நம்மை லேசாய் விடமாட்டார். நம்மை அவர் நியாயந் தீர்த்து, வாதிக்கிறவர்களுக்கு ஒப்புக்கொடுப்பார். அவருடைய கோபத்துக்கு நம்மை ஒன்றும் தப்புவிக்காது. கிருபையை அசட்டைசெய்தவன் நீதியின்படி பலன் அடைவான். ஆகையால், பராபரனுடைய தயவையும் கண்டிப்பையும் பார்; விழுந்தவர்கள் பேரிலே இருக்கிற கண்டிப்பையும், உன் பேரிலோ நீ தயவிலே நிலைத்திருந்தால், இருக்கிற தயவையுந் தானே; நிலைத்திராதேபோனால், நீயும் வெட்டுண்டுபோவாய் (ரோம. 11, 22). இரக்கமில்லாதவர்களுக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்பு கிடைக்கும். உபாதிக்கிற பிசாசுகள் அவர்களை நரகத்திலே எப்பொழுதும் வேதனைப்படுத்தும். அங்கே அவர்கள் கடன் தீரப்போகிறதுமில்லை, அவர்கள் வேதனை ஒழியப்போகிறதுமில்லை. இதுவே மன்னிக்கும் குணமில்லாதவர்களுக்கு வரப்போகிற முடிவு. ஆகையால், நீங்கள் உங்கள் மனப்பூர்வமாய் அவனவன் தன் சகோதரனுக்கு அவன் தப்பிதங்களை மன்னியாதேபோனால், இந்தப்பிரகாரமாக என் பரம பிதா உங்களுக்குஞ் செய்வார் என்றார்.

இதிலே நாம் கவனிக்கவேண்டிய மற்றொரு முக்கிய சங்கதி உண்டு. நாம் நம்முடைய சகோதரருக்கு மன்னிக்கிற மன்னிப்பு பராபரன் நமக்கு மன்னிப்பதற்குக் காரணம் என்று நாம் ஒருபோதும் நினைக்கக்கூடாது. கர்த்தர் நமக்குக் கிருபையாய்க் கொடுக்கும் மன்னிப்பே, நாம் சகோதரருக்கு மன்னிக்கும்படி நம்மை ஏவவேண்டும். நாம் மற்றவர்கள் குற்றங்களை மன்னித்தாலும், கர்த்தர் நம்முடைய குற்றங்களை மன்னிக்காதிருக்க நியாயமுண்டு. நம்முடைய மன்னிப்பு குறைவுள்ளது. அது நாம் செய்த பாவத்துக்கு ஈடாகாது. நம்முடைய குற்றங்களைக் கர்த்தர் நமக்கு மன்னிக்கும் பொழுதோ, நாம் மற்றவர்களுக்கு மன்னியாதிருக்கக் கூடாது. ஆகையால் கர்த்தரிடத்திலே இரக்கமும் கிருபையும் சகாயமும் பெற்றனுபவிக்கிற நாம் மற்றவர்களுக்கும் இரக்கம் பாராட்டி, அவர்களுக்கு நன்மை செய்வோமாக.

கிருபையுள்ள பரம பிதாவே, எங்கள் பாவங்களையெல்லாம் கிருபையாய் மன்னிக்கிற உமக்கு நாங்கள் என்ன ஈடு செலுத்துவோம். நாங்களும் எங்கள் சகோதரர்களுக்கு அவர்கள் குற்றங்களை மன்னித்து, அவர்களுக்கு நன்மை செய்ய உம்முடைய ஆவியானவரைக்கொண்டு எங்களுக்கு ஒத்தாசை செய்தருளும், சுவாமி. ஆமேன்.

---



# திரித்துவப் பண்டிகைக்குப் பிந்தின ௨௩-ம் ஞாயிறு.

மத்தேயு 22, 15—22.

பிரியமானவர்களே,

இயேசுநாதர் தேவாலயத்தில் தமக்கு முன் நின்ற பரிசேயருக்கும் மற்ற ஜனங்களுக்கும் இராஜ குமாரனின் கலியாண விருந்தைப்பற்றிய உவமையைச் சொல்லி: அழைக்கப்பட்டவர்கள் அநேகம், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ கொஞ்சம் என்ற வார்த்தைகளோடு முடித்தார். இந்த வார்த்தைகள், இதற்கு முந்தி அவர்களுக்குச் சொன்ன பல வார்த்தைகளைப் போலவே அவருடைய சத்துருக்களுக்கு வருத்தத்தை உண்டாக்கிற்று. ஆகையால் அவர்கள் அவரை முன்னிலும் அதிகமாய்ப் பகைத்து, அவரைத் துன்பப்படுத்தி, கொல்ல வகைதேடினார்கள். பலவிதமாக யோசனைபண்ணினார்கள். பல சங்கடமான கேள்விகளைக் கேட்டார்கள். அவருடைய வார்த்தையிலே குற்றங் கண்டுபிடிக்கப் பார்த்தார்கள். அவரோ ஒன்றிலும் அகப்பட்டுக்கொள்ளவில்லை. யோசனையை யோசியுங்கள், அது அபத்தமாகும்; வார்த்தையை வசனியுங்கள், அது நிற்காது (எசா. 8, 10) என்று தீர்க்கதரிசி சொன்னபடி ஆயிற்று. சத்துருக்களின் சதியோசனையால் வந்த கேள்வி ஒன்று நம்முடைய வாக்கியத்தில் சொல்லியிருக்கிறது. அது உலக இராச்சியத்திற்கடுத்த கேள்வி. இதற்கும் கர்த்தர் ஞானமான மறுமொழி கொடுத்தார். அவர் சொன்ன மறுமொழி சத்துருக்கள் வாயை அடைக்கிற மறுமொழியாயிருந்தும், உலக ராச்சியத்தில் பிழைக்கிற விசுவாசிகளின் கண்ணைத் திறக்கிற மறுமொழியாயிருக்கிறது. அதனால் நாம் உலக ராச்சியத்தில் யோக்கியமான குடிகளாயிருப்பது எப்படியென்று கற்றுக்கொள்ளலாம்.

**கிறிஸ்தவர்கள் உலக இராச்சியத்தின் யோக்கியமான குடிகளாய்ச் செய்யவேண்டியதென்ன.**

**1. அவர்கள் இராயனுடையதை இராயனுக்குச் செலுத்தவேண்டும்**
**2. பராபரனுடையதைப் பராபரனுக்குச் செலுத்தவேண்டும்.**

## 1.

நாம் உலக இராச்சியத்தின் யோக்கியமான குடிகளாயிருக்கும்படி இராயனுடையதை இராயனுக்குச் செலுத்தவேண்டும்.

அப்போது பரிசேயர் போய், வசனத்திலே அவரைச் சிக்கப்பண்ண யோசனைபண்ணி, தங்கள் சீஷர்களை ஏரோதேயின் மனுஷரோடே கூட அவரண்டைக்கு அனுப்பினார்கள்.

பரிசேயர் ஆரென்று நமக்குத் தெரியும். அவர்கள் யூதமார்க்கத்துக்காகப் பெருமை பாராட்டி, அதை விரோதிக்க ரோமர்களைப் பகைத்தவர்கள். ஏரோதேயின மனுஷர்களோ ஏரோதே என்பவனுக்கு இராச அதிகாரம் கொடுத்து நடத்தின ரோமருக்குச் சார்பாயிருந்தவர்கள். இந்த இரண்டு கட்சியாரும் ஒருவருக்கொருவர் விரோதமானவர்கள், ஒருவரையொருவர் பகைத்தவர்கள். என்றாலும், இயேசுநாதரை விரோதித்து, அவரைச் சிக்கப்பண்ணும்படி ஒன்று கூடினார்கள். இவர்கள் இயேசுவை முழுப்பகையாய்ப் பகைத்தும், அவரை முகத்துக்கு முன்னே புகழ்ந்து பேசினார்கள். போதகரே, நீர் சத்தியமுள்ளவராயிருந்து, பராபரனுடைய வழியைச் சத்தியமாய்ப் போதிக்கிறீரென்றும், எவனென்றும் உமக்குக் கவை இல்லை என்றும் அறிவோம்; அதேனெனில் நீர் மனுஷமுகமாட்டம் பார்க்கிறதில்லை. ஆகையால் உமக்கு எப்படிக் காணுகிறது, இராயனுக்கு வரி கொடுக்கிறது நியாயமோ, அல்லவோ என்று எங்களுக்குச் சொல்லும் என்றார்கள். — இந்த மனுஷர்கள் மகா மோசக்காரர். பிசாசின் குணமுள்ளவர்கள். அவர்கள் வாக்கிலே ஒன்றும் மனதிலே ஒன்றும் இருந்தது. அவர்கள் இயேசுவைப் பாதகராக்க முயன்றும், போதகரே என்று சொன்னார்கள். அவர்கள் அசத்தியத்தைச் சிநேகித்தும், சத்தியத்தைச் சிநேகிக்கிறவர்கள்போல் நீர் சத்தியமுள்ளவரென்று சொல்லுகிறார்கள். அவர் முகமாட்டமாய்ப் பேசவேண்டுமென்று அவர்கள் ஆசைப்பட்டும், நீர் முகமாட்டம் பார்க்கிறதில்லை என்று சொன்னார்கள். இது உலகத்தார் கையாடுகிற மோச வலை. இச்சகம் பேசுதல் பிசாசின் பிள்ளைகளுக்கு முக்கிய அடையாளம். பராபரனுடைய பிள்ளைகள் எல்லாக் காலத்திலும் மனமும் வாக்கும் ஒத்துப்பேசுவார்கள். மனம் வேறும் வாக்குவேறுமாயிருக்கிற மோசக்காரனைக் குறித்துச் சங்கீதப் புஸ்தகத்திலே: அவன் வாயின் சொற்கள் வெண்ணெயைப்போல் மிருதுவானவைகள், அவன் இருதயமோ யுத்தம். அவன் வார்த்தைகள் எண்ணெயிலும் மிருதுவானவைகள், ஆனால் அவைகளோ உருவின பட்டயங்கள் (சங். 55, 22) என்று சொல்லியிருக்கிறது. அவர்களுடைய இச்சக வார்த்தைகள் மோசமாயிருந்ததுபோல், அவர்கள் கேட்ட கேள்வியும் மோசமாயிருந்தது. இராயனுக்கு வரி கொடுக்கிறது நியாயமோ அல்லவோ என்ற கேள்விக்கு இயேசுநாதர்: நியாயம் என்று சொல்வாராகில், அதனால் ரோமருடைய அதிகாரத்தை வெறுத்த சனங்கள் அவரைப் பகைக்கவும் அவரைக் கொல்லவும் ஏதுவாகும். நியாயம் அல்ல என்று சொல்வாராகில், இராயனுக்குச் சார்பாயிருந்த ஏரோதேயின் மனுஷர் அவரை இராசதுரோகி என்று குற்றஞ்சாட்டி அவரைத் தண்டனைக்குக்



கொண்டுபோகக் கூடியதாகும். ஆகையால் அது மோசமான கேள்வியே.

அவர்கள் மோசதந்திரத்தை இயேசுநாதர் அறிந்து: மாயக்காரரே, நீங்கள் என்னைச் சோதிக்கிறதென்ன; வரிக்காசைக் காட்டுங்கள் என்றார். அவர்கள் ஒரு பணத்தை அவருக்குக் கொண்டுவந்தார்கள். அப்பொழுது அவர்களுடனே: இந்தச் சுரூபமும் மேலெழுத்தும் ஆருடையதென்றார். அவர்கள் இராயனுடையதென்றார்கள். அவர்கள் காட்டின பணத்திலே திபேரியு என்ற ரோம இராயனின் சுரூபமும் பேரும் போட்டிருந்தது. இதனால் அவர்கள் எல்லாரும் ரோம இராயர்களுக்குக் கீழ்ப்பட்டவர்களென்று தெரியவந்தது. இதைக்கொண்டு கர்த்தர் அவர்களுக்கு ஞானமுள்ள உத்தரவு கொடுத்தார். அதென்னவெனில்: இராயனுடையதை இராயனுக்கும் பராபரனுடையதைப் பராபரனுக்கும் செலுத்துங்கள் என்றார். கர்த்தர் கொடுத்த இந்த உத்தரவினால் அந்த மோசக்காரரின் சிக்கை அறுத்தார். அவர்கள் நினைத்ததுபோல் அவருடைய வார்த்தையில் அவரைச் சிக்கப்பண்ணக்கூடாமல்போயிற்று. இரட்சகர் சொன்ன இந்தத் தங்கமறுமொழி பரிசேயருக்கும் ஏரோதேயின் மனுஷருக்கும் மாத்திரம் அல்ல, எல்லாக் காலத்திலும் எந்த இராஜாங்கத்திலும் இருக்கிற ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் புத்திமதியாயிருக்கிறது. நாம் கிறிஸ்துமார்க்கத்துக்கேற்ற யோக்கியமான பிரசைகளாயிருக்கவேண்டுமானால், இந்தப் புத்திமதிப்படி எப்பொழுதும் செய்யவேண்டும்.

அவர் சொன்னதின்படியே இராயனுடையதை இராயனுக்குச் செலுத்துவது நம்முடைய கடமை. உலக அதிகாரம் பராபரனால் உண்டானது. இராசாக்களையும் துரைகளையும் மற்ற அதிகாரிகளையும் நமக்குமேல் இருக்கப்பண்ணினவர் பராபரன். இதைக் கிறிஸ்தவன் மறக்கவே கூடாது. எந்த ஆத்துமாவும் மேல்பட்ட அதிகாரங்களுக்குக் கீழ்ப்படிந்திருக்கக் கடவது. ஏனெனில் பராபரனால் உண்டாகாத அதிகாரம் இல்லை, உண்டான அதிகாரங்கள் பராபரனாலே கட்டளையிடப்பட்டவைகள் என்று வேதவசனம் தெளிவாய்ச் சொல்லுகிறது (ரோம. 13, 1). உலக அதிகாரிகள் பராபரனுடைய ஊழியக்காரர். அவர்கள் நம்மைப்போல மனிதர்களாயிருந்தும், உலகத்தில் நீதிநியாயத்தை நடப்பிக்கவும் அக்கிரமத்தைத் தண்டிக்கவும் பராபரன் அவர்களை வைத்திருக்கிறார். அதிகாரிகள் இருப்பது நமக்குப் பெரிய நன்மை. அவர்கள் இல்லாவிட்டால், நம்முடைய வீடு நம்முடையதல்ல, நம்முடைய பெண்சாதி பிள்ளை நம்முடையவர்களல்ல, நம்முடைய உயிருக்கே மோசம் வரும். அதிகாரிகள் நமக்கும் நம்முடைய சொத்துக்கும் நம்மைச் சேர்ந்தவர்

களுக்கும் மோசம் வராமல் பாதுகாக்கும்படி பராபரன் நியமித்த காவலாளிகள் என்பதைக் கிறிஸ்தவர்கள் மறக்கக் கூடாது.

ஆகையால், ஒவ்வொரு கிறிஸ்தவனும் எந்த இராஜாங்கத்திலிருக்கிறானோ, அந்த இராஜாங்கத்தின் சட்டத்துக்கு மனதாரக் கீழ்ப்படிந்திருக்கவேண்டும். இங்கிலீஷ் இராஜாங்கத்தில் குடியிருந்தால் அதன் சட்டத்துக்கும், பிரானசு குடியரசுக்குக் கீழிருந்தால் அதன் சட்டத்துக்கும், மைசூர் அல்லது புதுக்கோட்டை இராஜாங்கத்திற்குக் கீழிருந்தால் அவைகளின் சட்டத்திற்கும் நாம் கீழ்ப்படியவேண்டும். ஒரு இராஜாங்கத்தின் பிரமாணம் நமக்குப் பிடிக்காவிட்டால், நமக்குப் பிடித்தமான வேறொரு இராஜாங்கத்துக்குப் போய்விடலாமே தவிர கீழ்ப்படியாமையைக் காட்ட நியாயமில்லை. யூதர்கள் ரோம இராயனுக்குக் கீழிருந்தும், அவன் சுரூபம் போட்ட காசு பணத்தை வாங்கியும், அவனுடைய சட்டத்துக்குக் கீழடங்கியிருக்க மனதில்லாதிருந்தார்கள். ஆகையால், அடிக்கடிக் கலகம்பண்ணினார்கள். அப்படி நாம் செய்யவே கூடாது. ஆகையால், எல்லாருக்கும் செலுத்தவேண்டியதைச் செலுத்துங்கள்; இறையைச் செலுத்தவேண்டியவனுக்கு இறையையும், தீர்வையைச் செலுத்தவேண்டியவனுக்குத் தீர்வையையும், பயத்தைச் செலுத்தவேண்டியவனுக்குப் பயத்தையும், கனத்தைச் செலுத்தவேண்டியவனுக்குக் கனத்தையும் செலுத்துங்கள் (ரோம. 13, 7) என்று கர்த்தருடைய வசனம் சொல்லுகிறபடியே நாம் செய்யவேண்டும். நாம் அதிகாரிகளுக்கு முன் நிற்கும் பொழுது மட்டுமரியாதையாய் நடந்துகொள்ளவேண்டும். அதிகாரிகள் நமக்கு விதிக்கிற வரிகளையும் தீர்வைகளையும் சரியாய்ச் செலுத்தவேண்டும். நிலவரியோ, வீட்டுவரியோ, வருமானவரியோ, தண்ணீர்த் தீர்வையோ, சரக்குத் தீர்வையோ எதையும் சட்டப்படி செலுத்தவேண்டும். அவர்களை எந்த விதத்திலாவது மோசம் பண்ணப்பார்ப்பதும், தேசசட்டத்துக்கு விரோதமாய் நடப்பதும் கர்த்தருக்கு ஏற்காத பாவம். ஆகையால்: அதிகாரத்துக்கு எதிர்க்கிறவன் பராபரனுடைய கட்டளைக்கு எதிர்க்கிறான். எதிர்க்கிறவர்களோவென்றால் தங்களுக்குத் தாமே ஆக்கினையைச் சம்பாதிக்கிறார்கள் (ரோம. 13, 2).

இப்படிக்கெல்லாமிருந்தும், நமக்கும் நம்முடைய அதிகாரிகளுக்கும் மேற்பட்டவர் பராபரன் என்பதை நாம் மறக்கக்கூடாது. பராபரனுடைய கட்டளைக்கும் வசனத்துக்கும் விரோதமாக நாம் நடக்கும்படி அதிகாரிகள் நமக்கு உத்தரவு பண்ணினால், அதற்கு நாம் ஒருபொழுதும் கீழ்ப்படியக் கூடாது. விக்கிரகங்களை வணங்கச் சொன்னால், வணங்கக்கூடாது. அஞ்ஞானத் திருவிழாக்களில் தேரிழுக்கச் சொன்னால், இழுக்கக்



கூடாது. அஞ்ஞானக் கோயில்களுக்கு எந்தவிதப் பணிவிடையும் செய்யச்சொன்னால் செய்யக்கூடாது. ஏனென்றால், இவைகளெல்லாம் பராபரனுடைய கற்பனைக்கு விரோதம். நம்முடைய விசுவாசத்துக்கும் தெய்வபத்திக்கும் விரோதமான எந்தக் காரியத்திலும் நாம் அவர்களுக்குக் கீழ்ப்படியவே கூடாது. மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கப் பராபரனுக்குக் கீழ்ப்படியவேண்டும் (அப். 5, 29). ஆகிலும், இதினிமித்தம் நாம் கலகம் செய்யாமல், அவர்களுக்காக உட்கருத்தாய் செபஞ்செய்து, அவர்கள் அநியாயமாய் விதிக்கும் தண்டனைகளைச்சகித்துக்கொள்ளவேண்டும். விசுவாசத்தினிமித்தம் பாடுபடுகிறது நமக்கு மேன்மை. ஏனெனில்: நீங்கள் பாவஞ்செய்து அறையப்பட்டுச் சகித்தால், அது என்ன கீர்த்தி; நீங்கள் நன்மை செய்து பாடுபட்டுச் சகித்தீர்களேயானால், அதுவே பராபரனிடத்தில் கிருபை என்று சொல்லியிருக்கிறது (க பேது. 2, 20).

## 2.

பராபரனுடையதைப் பராபரனுக்குச் செலுத்துவதும் யோக்கியமான குடிகளின் கடமை.

நாமெல்லாரும் எந்த இராஜாங்கத்தின் குடிகளாயிருந்தாலும், நமக்கும் பராபரனுக்கும் உள்ள சம்பந்தத்தை மறக்கக் கூடாது. அவர் நம்மைச் சிருஷ்டித்தவர், நம்மை இரட்சித்தவர். நாம் அவரை மகிமைப்படுத்தும்படிக்கே அவர் நம்மை உண்டாக்கினார். ஆண்டவரே, மகிமையையுங் கனத்தையும் வல்லமையையும் ஏற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறீர்; ஏனெனில் தேவரீர் எல்லாவற்றையும் சிருஷ்டித்தீர்; உம்முடைய சித்தத்தினால் அவைகள் உண்டாகிச் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறதென்று இருபத்து நாலு மூப்பர் சொன்னார்கள் (அறி. 4, 11). பராபரன் தங்களைச் சிருஷ்டித்த நல்ல நோக்கத்தை மனிதர் மறந்து பாவத்திலே விழுந்தாலும், அவர்களை அவர் விட்டுவிடாமல் தம்முடைய குமாரனைக்கொண்டு அவர்களை இரட்சித்தாரல்லவா. நம்முடைய அருமை இரட்சகர் கெட்டுப்போய் சபிக்கப்பட்ட நம்மைப் பொன்னினாலும் அல்ல, வெள்ளியினாலும் அல்ல, விலைமதிக்கக் கூடாத தமது பரிசுத்த இரத்தத்தினாலும் குற்றமில்லாமல் பட்ட பாடுகள் மரணத்தினாலும் நம்மை மீட்டு இரட்சித்துத் தமக்குச் சம்பாதித்துக்கொண்டார். நாம் பராபரனுடைய பிள்ளைகள் என்பதற்குப் பரிசுத்த ஆவியானவர் நம்முடைய இருதயங்களில் சாட்சிகொடுக்கிறார். ஆகையினால் அவர் நம்மில் ஒவ்வொருவனையும் பார்த்து: என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா என்று கூப்பிடுகிறார். விசுவாசமுள்ளவன் மாத்திரமே இந்தச் சத்தத்துக்குச் செவிகொடுத்து, தன் இருதயத்

தைப் பராபரனுக்கு ஒப்புவிக்கிறான். சகோதரரே, நம்முடைய இருதயங்களை நாம் பராபரனுக்கு ஒப்புக்கொடுப்போமாக. அது அவருக்குச் சொந்தமேயல்லாமல் வேறொருவனுக்கும் சொந்தமல்ல. இராயனுடையதை இராயனுக்குச் செலுத்துவதுபோல பராபரனுடையதைப் பராபரனுக்குச் செலுத்தவேண்டும். உன் பராபரனாகிய கர்த்தரை உன் முழு இருதயத்தாலும், உன் முழு ஆத்துமத்தாலும், உன் முழு விருப்பினாலும் சிநேகிப்பாயாக. இது முதலாம் பெரிய கற்பனை (மத். 22, 37. 38).

பராபரன் நம்முடைய வணக்கத்துக்குப் பாத்திரர். கர்த்தருக்கு அவர் நாமத்தின் மகிமையைச் செலுத்துங்கள்; பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைப் பணிந்துகொள்ளுங்கள் (சங். 29, 2). கிறிஸ்தவன் தன் பராபரனாகிய கர்த்தரைத் தன் வீட்டிலும், வெளியிலும், தேவாலயத்திலும் பணிந்து ஆராதிக்கிறான். குடும்ப ஆராதனையும் கோயில் ஆராதனையும் யாருக்கு இல்லையோ, அவர்கள் பராபரனுடையதைப் பராபரனுக்குச் செலுத்துகிறவர்கள் அல்ல. மேலும், பராபரனுடைய வசனத்தின்படி போதிக்காதவர்களும், அதற்கு விரோதமான கள்ளப் போதகத்தைப் போதிக்கிறவர்களும், பராபரனுடையதைப் பராபரனுக்குச் செலுத்தாதே போகிறார்கள்.

நம்முடைய முழுச் சீவியமும் பராபரனுக்குச் செய்யும் ஊழியமாயிருக்கவேண்டும். நாம் முழுவதும் அவருடையவர்கள். நம்முடைய சத்துவமும் நம்முடைய ஊழியமும் அவருடையதாயிருக்கவேண்டும். சகோதரரே, நீங்கள் புத்தியுள்ள ஆராதனை பண்ணுகிறவர்களாய் உங்கள் சரீரங்களைச் சீவனும் பரிசுத்தமும் பராபரனுக்கு நற்பிரியமுமான பலியாக விடுக்க, பராபரனுடைய இரக்கங்களுக்காக உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன் (ரோம. 12, 1) என்று அப்போஸ்தலன் சொல்லுகிறார்.

இப்படியிருக்க, நாம் நம்மையும் நம்முடைய முழு இருதயத்தையும் நம்முடைய முழுச் சீவியத்தையும் பராபரனுக்கு ஒப்புவிக்கிறோமா. அவருக்கேற்ற பரிசுத்த வழியில் நடக்கிறோமா. நம்முடைய இருதயத்தில் யாருடைய சுரூபமும் மேலெழுத்தும் இருக்கிறது. பராபரன் தம்முடைய ஆவியினால் நம்மை முத்திரைபோட்டும் நாம் அதை மறந்து திரிகிறதில்லையா. நாம் பராபரனுடையதைப் பராபரனுக்குச் செலுத்தும்படி நமக்குச் சுத்த இருதயமும் நல்மனச்சாட்சியும் மாயமற்ற விசுவாசமும் தேவை. இதைக் கொடுக்கிறவர் பரிசுத்த ஆவி. அவருக்காக நாம் தினந்தோறும் பிதாவை நோக்கிக் கெஞ்சுவோமாக. பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருந்தால், எத்தனை அதிகமாய்ப் பரம பிதாவானவர் தம்மைக் கேட்கிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்



பார் என்றார் (மத். 11, 13). பரிசுத்த ஆவி நம்முடைய இருதயங்களில் வாசம்பண்ணினால், நாம் பராபரனுடையதைப் பராபரனுக்கு உற்சாகமாய்ச் செலுத்துவோம்.

எத்தனை கிறிஸ்தவர்கள் தாங்கள் பராபரனைச் சிநேகிக்கிறோம் என்று சொல்லியும், தங்கள் சபைக் கடமைகளைச் சரியாய் நிறைவேற்றாதிருக்கிறார்கள். அவர்களுக்குப் பராபரன் ஆகாரத்தையும் வஸ்திரத்தையும் கொடுத்தும், அவர்கள் கோயிலுக்கு அறுப்பின் காணிக்கையாவது மற்றக் காணிக்கைகளாவது கொடுக்கிறதில்லை. கடைக்குப் போகும்பொழுது காசுகொண்டு போவார்கள், கோயிலுக்கு வரும்பொழுதோ வெறுங்கையோடே வருவார்கள். பராபரனுடைய மகிமைக்கென்றும் ஏழைகளுடைய நன்மைக்கென்றும் கொடுக்கவேண்டியதைக் கொடுக்காதவர்கள் நல்ல கிறிஸ்தவர்கள் அல்ல. யோக்கியமான கிறிஸ்தவர்கள் தேசத்து அதிகாரிகளுக்குச் செலுத்தவேண்டியதைச் செலுத்துவதுபோல, பராபரனுக்குச் செலுத்தவேண்டியதையும் செலுத்தி, தங்கள் சபைகடமைகளை நிறைவேற்றுகிறார்கள். கர்த்தர் இன்று சுவிசேஷவாக்கியத்தில் நமக்குச் சொன்ன புத்திமதி முழுவதையும் நாம் கைக்கொள்ளவேண்டியது. நாம் இராயனுக்குச் செய்யவேண்டிய கடமை நாம் பராபரனுக்குச் செய்யவேண்டியதைத் தடுக்கக்கூடாது; நாம் பராபரனுக்குச் செய்யவேண்டிய கடமை இராயனுக்குச் செய்யவேண்டியதைத் தடுக்கவும் மாட்டாது. நாம் எங்கேயிருந்தாலும், இந்த இரண்டு கடமைகளையும் கவனித்து, இராயனுடையதை இராயனுக்கும் பராபரனுடையதைப் பராபரனுக்கும் செலுத்துவோமாக.

இராசாதி இராசாவும் கர்த்தாதி கர்த்தாவுமாகிய இயேசு கிறிஸ்துவே, நாங்கள் உலக இராச்சியத்தின் யோக்கியமான குடிகளாக நடந்து, உம்மை எல்லாவற்றிலும் மகிமைப்படுத்த எங்களுக்கு உம்முடைய ஆவியைக்கொண்டு ஒத்தாசை செய்தருளும், சுவாமி. ஆமேன்.

## திரித்துவப் பண்டிகைக்குப் பிந்தின ௨௪-ம் ஞாயிறு.

மத். 9, 18—26.

பிரியமானவர்களே,

நாம் திருச்சபை வருஷத்தின் கடைசியில் வந்திருக்கிறோம். இந்தக் கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் கடைசிக் காரியங்களைக் குறித்துத் தியானிப்போம். மரணம், உயிர்த்தெழுதல், உலக முடிவு, நியாயத்தீர்ப்பு, மோட்சம் நரகம், இவைக

ளுக்குக் கடைசிக் காரியங்கள் என்று பெயர். நம்முடைய சுவிசேஷ வாக்கியத்தில் மரணத்தையும், மரணத்துக்கு ஏதுவான வியாதியையும், மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்திருப்பதையும் குறித்துப் பேசியிருக்கிறது. வியாதியிலும் மரணத்திலும் அஞ்ஞானிகள் நடந்துகொள்ளுகிற விதத்திற்கும், கிறிஸ்தவர்கள் நடந்துகொள்ளுகிற விதத்திற்கும் பெரிய வித்தியாசமுண்டு. அஞ்ஞானிகள் நம்பிக்கையற்று, அலறிப் புலம்புவார்கள். கிறிஸ்தவர்களாகிய நாமோ ஒருவிதமாய்த் துக்கப்பட்டாலும், ஆறுதலடைந்து கொள்ளுகிறோம். இதற்குக் காரணம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பேரில் நமக்கு இருக்கிற நம்பிக்கைதான். கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசிகள் மரணத்துக்குப் பயப்படுகிறதில்லை. இன்று சுவிசேஷ வாக்கியம் இதற்கு நம்மை ஏவுகிறது.

விசுவாசிகள் மரணத்திற்கு ஏன் பயப்படுகிறதில்லை. ஏனெனில்,

1. கிறிஸ்து மரணவழியில் அவர்களைக் காப்பாற்றும் இரட்சகர்.
2. அவர்கள் மரித்தபின்னும் கிறிஸ்து அவர்களை எழுப்பும் இரட்சகர்.

## 1.

*கிறிஸ்து மரணவழியில் விசுவாசிகளைக் காப்பாற்றும் இரட்சகராயிருக்கிறார்.*

நம்முடைய ஆயுசு காலமெல்லாம் மரணவழி என்று சொல்லலாம். நாம் எவ்வளவு காலம் இந்த உலகத்தில் இருந்தாலும் கடைசியிலே மரிப்போம். நமக்கு இந்த உலகத்தில் நடக்கிற ஒவ்வொரு பாடும் ஒவ்வொரு துன்பமும் நம்மை மரணத்துக்கு நடத்துகிறது. முக்கியமாய் வியாதி மரணத்துக்கு முன்தூதன். சிலருடைய வியாதி மரணத்தோடே முடிகிறது, சிலருடைய வியாதி சுகமாய்ப்போனாலும் மனிதனைப் பலவீனமாக்கிவிடுகிறது. பலவீனமும் மரணத்துக்கு உதவிதான். நம்முடைய சுவிசேஷ வாக்கியத்திலும் ஒரு வியாதிக்காரியைக் குறித்து வாசிக்கிறோம்.

இதோ, பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ஒரு இஸ்திரி பிறகே சேர்ந்து வந்து, அவர் வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள். ஏனெனில், தன் உள்ளத்திலே: அவருடைய வஸ்திரத்தை மாத்திரம் தொட்டேனாகில் சொஸ்தமாவேன் என்றாள். இயேசுவோவென்றால் திரும்பி அவளைக் கண்டு: மகளே, திடன்கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். அந்நேரம் முதல் ஸ்திரீ சொஸ்தமானாள்.

இந்தப் பெண்பிள்ளைக்கு இருந்தது ஒரு பரிதாபமான வியாதி. பெரும்பாட்டு வியாதியுள்ளவள் வெகுசீக்கிரம் பலவீனமாவாள். இந்த ஸ்திரீ பன்னிரண்டு வருஷமாய் இந்த வியாதி



யினாலே சங்கடப்பட்டாள். மாற்கு சுவிசேஷத்தில் சொல்லியிருக்கிறபடி (5, 26) அவள் அநேகம் பரிகாரிகளால் வெகுபாடுபட்டாள். தன்னிடத்திலிருந்த பணத்தை எல்லாம் பரிகாரிகளுக்குக் கொடுத்தும், அவர்கள் கொடுத்த மருந்தை எல்லாம் அவள் வாங்கிச் சாப்பிட்டும், எல்லாம் அவளுக்குப் பாடாய் முடிந்ததேயல்லாமல், யாதொரு பலனும் வரவில்லை. அவளுடைய வியாதி வரவரக் கேடாயிற்று. இப்பொழுது அவள் ஒரு மகாப் பெரிய வைத்தியரைக் குறித்துக் கேள்விப்பட்டாள். அவள் கேள்விப்பட்ட வைத்தியர் இயேசுநாதர்தான். அவர் இரக்கமுள்ளவர் என்றும், தீராத நோயெல்லாம் தீர்க்க வல்லவரென்றும் அவள் கேள்வியானாள். அவர் சமீபத்தில் வந்திருக்கிறதை அவள் அறிந்து, தன் வியாதியை அவரால் சுகமாக்கிக் கொள்ளத் துரிதப்பட்டாள். இயேசுநாதரால் எப்படியும் தன் வியாதி சுகப்படுமென்று நம்பினாள். அவள் விசுவாசம் மெய் விசுவாசமாயிருந்தும், அதனோடு ஒரு அவபத்தி கலந்திருந்தது. நியாயப்பிரமாணத்தின்படி (௩ மோசே 15, 25) அவள் தீட்டுள்ளவளாயிருந்தபடியால், ஒருவருக்கும் தெரியாமல் இயேசுவின் வஸ்திரத்தைத் தொட்டுச் சுகமடையப் பார்த்தாள். அவள் தன் மனதிலே இயேசுவை நோக்கி உண்மையாய்ச் செபம்பண்ணினாள். அவளுடைய அந்தரங்க செபத்தைக் கர்த்தர் கேட்டார். அவள் விரும்பினபடி அவளுக்குச் சுகம் கிடைத்தது. அவளுடைய பெரும்பாடு நின்றுபோயிற்று. அவளுடைய உடம்பிலே பலம் உண்டாகத் தொடங்கிற்று. அவள் இயேசுவின் வஸ்திரத்தைத் தொட்டதினால் அல்ல, அவர் தன்னைச் சுகமாக்குவாரென்று நம்பினதினாலேதான் சுகமானாள். அவரை அநேக சனங்கள் நெருக்கிக்கொண்டு நின்றாலும், அவர்களிடத்தில் ஒரு அற்புதம் நடந்ததில்லை. அவளிடத்தில் மாத்திரம் அற்புதம் நடந்தது. ஒரு ஸ்திரீ தம்மைத் தொட்டதினால் சுகமானாள் என்று இயேசு உடனே அறிந்துகொண்டு: என் வஸ்திரத்தைத் தொட்டது யாரென்று கேட்டார். தம்மைத் தொட்டது ஆரென்று அவருக்குத் தெரியாதா. தெரிந்திருந்தும், அவள் திருட்டு வழியாய்த் தம்முடைய சகாயத்தைப் பெற்றுக்கொள்ளாமல், தான் சுகமான வயணத்தை எல்லாருக்கு முன்னும் அறிக்கையிடவேணுமென்று அவர் விரும்பினார். அதனிமித்தமே: என்னைத் தொட்டது ஆரென்று கேட்டார். அவள் பயந்து நடுங்கி வந்து அவர் முன்பாக விழுந்து உண்மையையெல்லாம் அவருக்குச் சொன்னாள் (மாற். 5, 33). அப்பொழுது இயேசு அவள் பயத்தை நீக்கி, அவளை ஆறுதல்படுத்தி: மகளே, திடன்கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். இப்படியே மரணவழியிலிருந்த அந்த ஏழை ஸ்திரீக்குச் சரீர சுகமும் ஆத்தும சுகமும்

கர்த்தரால் கிடைத்தது. இயேசுநாதர் அவனுக்குச் சரீர சுகமருளும் வைத்தியரும், ஆத்தும சுகம் அருளும் இரட்சகரும் ஆனார்.

நாமெல்லாரும் மரண வழியில் இருக்கிறோம். நமக்குச் சரீர நோவுமுண்டு, ஆத்தும நோவுமுண்டு. இவ்விரண்டும் நம்மை மரணத்துக்கே கொண்டுபோகும். பாவமே இதற்கெல்லாம் காரணம். பாவமே இவ்வுலகத்தில் மரணத்தைக் கொண்டு வந்தது. மரணத்துக்கு முன்னால வரும் சகல வியாதிகளும் பாவத்தின் பலனேயன்றி வேறல்ல. அது தொலைந்தால் வியாதியுமில்லை, மரணமுமில்லை. அதற்குத் தொலைவு காலம் இப்பொழுதல்ல. இன்னம் பாவம் உலகத்தில் இருக்கிறது. ஆகையால், நாம் மரிக்கவும் மரணத்துக்குப் பின் நியாயத்தீர்ப்புக்குள்ளாகவும் வேண்டியது. புது வானத்திலும் புதுப் பூமியிலும் மாத்திரம் பாவமிராது, மரணம் இராது; இந்த உலகத்தில் பாவத்தினாலே நடக்கு வெகுவான பாடுகளும் மரணமும் இருந்தாலும், நாம் கலங்கமாட்டோம். ஏனென்றால், சகல வியாதியின்மேலும் மரணத்தின்மேலும் வல்லமையுடையவர் நம்மோடிருக்கிறார். நாம் மரணவழியில் இருந்தாலும், பரம வைத்தியர் நம்மோடு இருக்கையில் நமக்கென்ன பயம்.

இப்படி நாம் சொல்லுவதினால் இப்பொழுதும் இயேசுநாதர் விசுவாசிகளுக்கு அவர்கள் வியாதிகளை யெல்லாம் நீக்கி, அற்புத சுகமருளவேண்டும் என்று சொல்லுவோமோ, மருந்தை அசட்டை பண்ணுவோமோ. அப்படிச் செய்யக்கூடாது. கர்த்தர் எல்லாக் காலத்திலும் அற்புதம் செய்யக் கூடியவரென்று நாம் விசுவாசித்தும், நமக்கு வியாதி வந்தால் வைத்தியனை அழைப்போம், அவன் கொடுக்கும் மருந்தைத் தின்போம். இதுவே நியாயம். நம்முடைய சுகத்துக்காகவே கர்த்தர் பலவித மருந்துகளை உண்டுபண்ணியிருக்கிறார். அவைகளைச் சரியாய் உபயோகிக்கும் வைத்தியர்களை ஏற்படுத்தியிருக்கிறார். ஆகிலும், வியாதியஸ்தருக்கு உண்டாகும் சுகம் வைத்தியராலும் வைத்தியத்தாலுமே ஆவதல்ல. சரியான மருந்தைக் கண்டுபிடித்து, அதைச் சரியான விதமாய்க் கையாடும்படி வைத்தியனுக்குப் புத்தி கொடுக்கிறவர் கர்த்தர். அவன் கொடுத்த மருந்தால் சுகம் வரச் செய்கிறவர் கர்த்தர். வைத்தியராலேயே காரியமாகும் என்று நினைக்கிறவர்களுடைய எண்ணம் பிசகு. எவ்வளவோ சாமர்த்தியமான வைத்தியர்களிடத்தில் மருந்து சாப்பிட்ட இராசாக்கள் செத்துப்போனதில்லையா. மருந்தின் வழியே சுகம் வந்தாலும், அது கர்த்தர் கொடுக்கும் சுகமென்றே விசுவாசிகள் ஒப்புக்கொள்ளுவார்கள். ஆகையால் நமக்குச் சரீர வியாதியுண்டாகும்பொழுது நம்முடைய பரம வைத்தியரிடம் முந்தப் போக வேண்டும். இரட்சகரே, என் தலையை வலிக்கிறது, என் வயிற்



றை நோகிறது, என் பிள்ளைக்கு ஜன்னியால் கண்ணைச் சொருகுகிறது, நீரே எனக்குச் சகாயம் செய்யவேண்டும் என்று அவரை நோக்கிக் கெஞ்சினால், அவர் நமக்குச் சரியான வைத்தியனையும், அந்த வைத்தியனுக்குச் சரியான மருந்தையும் காட்டுவார். அதனால் சுகம் கொடுப்பார். வைத்தியமில்லாமலும் சுகம் கொடுக்க அவராலாகும். இது அவருடைய சித்தம். எப்படி அவர் நமக்குச் சுகம் கொடுப்பாரென்று நமக்குத் தெரியாது.

சிலவேளை வியாதி சுகமாகாது. மரணம் வந்து நேரிடும். அதுவும் அவருடைய சித்தந்தான். அவர் தம்முடைய விசுவாசிகளுக்கு நல்ல மரணத்தைக் கொடுத்து, வியாதியும் துன்பமுமில்லாத மோட்ச லோகத்தில் அவர்களைச் சேர்த்துக்கொள்ளுவார். சரீர சுகம் அவர் தம்முடையவர்களுக்குக் கொடுக்கும் நன்மைகளில் ஒன்றாயிருந்தாலும், அதுவே முக்கியமான நன்மையல்ல. மரண வழியிலே நடக்கும் விசுவாசிகளுக்கு அவர் கொடுக்கும் நன்மைகளில் எல்லாம் பெரிய நன்மை ஆத்தும இரட்சிப்பு. பெரும்பாடுள்ள ஸ்திரீக்குச் சரீர நன்மையோடு ஆத்தும நன்மையாகிய இரட்சிப்பையும் கொடுத்தருளினார். ஆத்தும சுகமே நமக்கு வேண்டிய முக்கிய சுகம். அதை நமக்குச் சம்பாதித்த நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசத்தோடே தொடுவோம், வாருங்கள். இன்றைக்கும் அந்த மகாப் பெரிய வைத்தியர் இங்கே நம்முடைய நடுவில் நிற்கிறார். அவருடைய வசனமும் ஞான திரவியங்களும் நம்மிடத்தில் இருக்கிறது. அவைகளை நாம் விசுவாசமாய்க் கையாடினால், கர்த்தர் அந்த எத்தனங்களைக் கொண்டு நமக்கு இரட்சிப்பைக் கொடுப்பார். நாம் அவருக்குள் சுகமடைந்து: என் ஆத்துமமே, கர்த்தரை இஸ்தோத்திரி, அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே. அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோக்காட்டையெல்லாம் குணமாக்கி, உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, உன்னைக் கிருபையாலும் இரக்கங்களாலும் முடி சூட்டினார் (சங். 103, 2, 3. 4) என்று பாடுவோம்.

2.

விசுவாசிகள் மரித்த பின்னும் கிறிஸ்து அவர்களை எழுப்பும் இரட்சகராயிருப்பதினால் அவர்கள் மரணத்துக்குப் பயப்படுவதில்லை.

இதோ, ஒரு தலைவன் சேர்ந்து அவரைப் பணிந்து: என் மகள் இந்நேரத்திலே சென்றுபோனாள். ஆகிலும், நீர் வந்து அவள் பேரிலே உமது கையை வையும், அப்போது பிழைப்பாள் என்றான்.

இங்கே சொல்லியிருக்கும் ஆலயத் தலைவன் பெயர் யவீரு. அவனுக்குப் பிரியமாயிருந்த அவனுடைய குமாரத்தி மிகுந்த

வியாதிப்பட்டு, மரண அவஸ்தைக்குள்ளானாள். அவளிடத்தில் வைத்தியர்கள் பட்ட பிரயாசையெல்லாம் வீணாயிற்று. அதனால் அந்தத் தலைவன் மிகுந்த விசனப்பட்டு, இரட்சகரிடத்தில் சகாயம் தேடினான். அவனுடைய விசுவாசம் பலமானது என்று சொல்லக் கூடாது. மாற்கு சுவிசேஷத்தில் சொல்லியிருக்கிறபடி அவன்: என் குமாரத்தி மரண அவஸ்தைப்படுகிறாள், அவள் ஆரோக்கியம் அடையும்படி நீர் வந்து, அவள்மேல் கைகளை வைத்தருளும்; அப்போது பிழைப்பாளென்று அவரை மிகவும் வேண்டிக்கொண்டான் (மாற். 5, 23). இதனால் இயேசுநாதர் தன் வீட்டுக்கு வந்து தன் வியாதிக்காரப் பிள்ளையைத் தொடுவது அவசியமென்று நினைத்தான். இரட்சகரோ அவன் நினைத்தபடிமாத்திரம் அல்ல, அதற்கு மேலாகவும் வல்லமையுடையவரென்று காண்பிக்கச் சித்தமானார். அவர் பெரும்பாடுள்ள ஸ்திரீயோடு பேசி, தாமதப்பட்டுக்கொண்டிருக்கிற சமயத்தில் யவீருவின் மகள் செத்துப்போனாள். அவன் வீட்டிலிருந்து சிலர் வந்து: உம்முடைய குமாரத்தி மரித்தாள், இனியேன் போதகரைப் பிரயாசப்படுத்துகிறீர் என்றார்கள். இதனால் அவனுடைய விசுவாசம் அநேகமாய் அவிந்து போயிற்று. இயேசு வியாதிகளை நீக்க வல்லவராயிருந்தும், மரித்தோரை எழுப்ப வல்லவரென்று அவனும் அவனைச் சேர்ந்தவர்களும் அறிந்ததில்லை. இயேசுநாதர் அதுவரையில் மரித்த ஒருவரையும் எழுப்பினதில்லையென்று தோன்றுகிறது. யவீருவின் விசுவாசம் அவிந்துபோகிறதை இரட்சகர் அறிந்து: பயப்படாதே, விசுவாசித்தே இரு என்று அவனுக்குச் சொன்னார் (மாற். 5, 36). அதின்படியே யவீரு விசுவாசித்திருந்தான். இரட்சகர் அவன் வீட்டுக்கு வந்து, இழவு வீட்டில் காணப்படும் சகல அடையாளங்களையும் அங்கே கண்டார். அங்கே வெகு சந்தடியாயிருந்தது. கூவிக்கு மார்படித்து, ஒப்பாரி சொல்லும் பெண்டுகள் அங்கே கூடியிருந்தார்கள். தாரைக்காரர் தாரை ஊதினார்கள். பிள்ளை மரித்துப்போனதற்கு இதெல்லாம் சாட்சி. இந்த உலகத்திலுள்ள எந்த வைத்தியனும் வியாதியஸ்தனுக்கு உயிரிருக்கும் மட்டும் வைத்தியம் பார்ப்பான். தாது விழுந்து, அசைவு நின்று, தேகம் குளிர்ந்த பின் ஒரு வைத்தியனும் உதவிசெய்ய முடியாது. நம்முடைய பரம வைத்தியராகிய இயேசுவோ செத்த பின்னும் உயிர் கொடுக்க வல்லவர். ஆகையால் அவர் தலைவன் வீட்டிலே வந்து, தாரைக்காரரையும் இரைகிற சந்தடியையுங் கண்டு, அவர்களுடனே: அகலப் போங்கள், ஏனெனில் சிறு பெண் மரித்திராமல் நித்திரை பண்ணுகிறது என்றார். ஆனால் அவரை நகைத்தார்கள். உயிர் நீங்கிச் செத்துக்கிடந்த பெண் செத்துப்போகவில்லையென்றும், அது நித்திரை பண்ணுகிறதென்றும் இயேசுநாதர் சொன்னது அந்தச் சனங்களுக்கு நகைப்பாயிருந்தது. கர்த்தர் மரணத்தின் பேரிலும் அதிகாரமுடையவராயிருந்ததால், அவருக்கு மரணம் நித்திரை போல் இருக்கிறது. தூங்குகிறவர்களைத் தட்டி எழுப்புவது போல் செத்துப்போனவர்களை அவர் தம்முடைய வார்த்தையால் எழுப்ப வல்லவர். வாலிபா எழுந்திரு என்று சொல்லி, நாயீன் ஊர் வாலிபனை எழுப்பினார். லாசருவே வெளியே வா என்று சொல்லி, கல்லறையில் இருந்த லாசருவை எழுப்பிவிட்டார். மரித்த எல்லாரையும் அவர் தூங்குகிறவர்களாகவே எண்ணுகிறார். உலக மக்களுக்கு இந்த எண்ணம் நகைப்பாயிருந்தும், இயேசுவை விசுவாசிக்கிறவர்களுக்கு அது நகைப்புக்கானதல்ல. தாம் சொன்ன வார்த்தை சரியானதென்று ரூபிக்கும்படி அவர் யவீருவின் வீட்டுக்குள் பிரவேசித்தார். அவர் தம்மோடு பேதுரு, யாக்கோபு, யோவான் என்ற மூன்று சீஷரை அழைத்துக்கொண்டுபோனார். சந்தடி செய்தவர்களையும் தம்மை நகைத்தவர்களையும் அவர் வெளியே துரத்தினார். அவர் செய்கிற அற்புதத்தைப் பார்ப்பதற்கு அவர்கள் பாத்திரராயிருந்ததில்லை.



மரித்திருந்த பெண்ணை அவர் உயிரோடே எழுப்பினார். அவளுக்கு மருந்து கொடுத்ததல்ல, மந்திரம் செய்ததல்ல, தம்முடைய ஒரே வார்த்தையினாலே அவளுக்கு உயிர் கொடுத்தார். சிறு பெண்ணே எழுந்திரு என்று சொல்லி, அந்தப் பெண்ணின் கையைப் பிடித்ததும், அவளுக்கு உயிர் வந்தது. அப்போது சிறு பெண் எழுந்திருந்தாள்.

மரித்த நம்முடையவர்களையும் இயேசுநாதர் எழுப்புவார். இங்கே வந்திருக்கிற நமக்குள், யாதொருவரையும் சாகக் கொடுக்காதவர்கள் யார். சிலருடைய பெற்றார் இறந்ததுண்டு, மைந்தர் இறந்ததுண்டு, நமக்கு அருமையும் உரிமையுமானவர்கள் இறந்ததுண்டு. நாம் எத்தனை குழிகளருகே நின்றோம். எவ்வளவு பேருக்கு மண் போட்டிருக்கிறோம். அந்நேரங்களில் நம்முடைய மனம் பதைத்ததுண்டு, நம்முடைய கண்களில் கண்ணீர் பெருகி வந்தது. யவீருவின் குமாரத்தியை எழுப்பினவர் இவளை எழுப்பமாட்டாரா, நாயீன் ஊர் வாலிபனை எழுப்பினவர் இவனை எழுப்பமாட்டாரா என்று பிரேதங்களண்டை நினைத்திருப்போம். அவர் எழுப்ப வல்லவர்தான். இன்னமும் அவருக்கு அந்த வல்லமை உண்டு. ஆகிலும், இவர் தம்முடைய வேளை வரும்பொழுதுதான் எழுப்புவார். மரித்த நம்முடையவர்கள் இப்பொழுது நித்திரை செய்யவேண்டுமென்பது அவருடைய சித்தம். அவர்கள் நித்திரை செய்யுங்காலம் நீண்ட காலமாக நமக்குத் தோற்றலாம். ஆகிலும், கர்த்தர் அவர்களை எழுப்பும் வேளை வருமட்டும் நாம் பொறுத்திருக்க வேண்டும். எப்படியும் அவர் எழுப்புவார். நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்;

என்பேரில் விசுவாசிக்கிறவன் மரித்தும் பிழைப்பான் (யோ. 11, 25) என்று சொன்னவருடைய வார்த்தை பொய்யாய்ப் போகாது. மாமிச உயிர்த்தெழுதல் உண்டென்று விசுவாசிக்கிறேன் என்று நாம் அறிக்கையிடுவது வெறும் பேச்சல்ல என்று சகலரும் பார்ப்பார்கள். மண்ணோடு மண்ணும், தூளோடு தூளும், சாம்பலோடு சாம்பலுமாய்ப்போன சரீரங்கள் எல்லாம் நிச்சயமாகவே எழுந்திருக்கும்.

ஆகையால், நாம் மரணத்துக்குப் பயப்படமாட்டோம். நம்முடையவர்களின் மரணத்தினால் அவநம்பிக்கைக்கு உள்ளாக மாட்டோம். அவிசுவாசமும் அவநம்பிக்கையும் அஞ்ஞானிகளுக்குச் சொந்தமாயிருக்கட்டும். இதன் நிமித்தம் அப்போஸ்தலன்: நித்திரை அடைந்தவர்களின் நிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்ற மற்றவர்களைப்போலே துக்கித்து அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை (௧ தெச. 4, 13) என்று சொல்லுகிறார். ஆகையால் நம்முடையவர்கள் இறந்து போகையில், நாம் அஞ்ஞானிகளைப் போலே கூக்குரல் பண்ணி, ஒப்பாரி சொல்லி, ஓலமிடுவது நியாயமல்ல. அப்படிச் செய்கிறவர்களைக் கர்த்தர் துரத்துகிறார். அப்படிச் செய்கிறது விசுவாசமல்ல. நம்முடையவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து போகிறது நமக்குத் துக்கமாயிருந்தாலும், நாம் அவர்களைச் சிலகாலம் பார்க்காதிருப்போம் என்கிறதற்காகக் கொஞ்சம் துக்கப்படுவோமேயல்லாமல், அவர்களை என்றென்றைக்கும் இழந்துவிட்டவர்கள் போல் துக்கப்படமாட்டோம். கிறிஸ்தவர்களுடைய துக்கம் நம்பிக்கை சேர்ந்த துக்கம். அது கிறிஸ்துவினால் தீரும் துக்கம். ஆகையால் நாம் மரணத்தை நினைக்கும் பொழுது பயப்படாமல், கிறிஸ்துவை விசுவாசிக்கும் விசுவாசத்தினால் அதற்கு எப்பொழுதும் ஆயத்தமாயிருப்போமாக.

மரணத்தை ஜெயித்த எங்கள் அருமை இரட்சகரே, எங்களுக்கு மெய் விசுவாசம் தந்து, எங்களை மரண பயத்துக்கு நீங்கலாக்கி, உமக்குச் சித்தமாகும்பொழுது எங்களுக்குப் பாக்கியமான மரணத்தைக் கட்டளையிட்டு, உம்முடைய பாதாரவிந்தத்தில் எங்களைச் சேர்த்துக்கொள்ளும், சுவாமி. ஆமென்.

---

## திரித்துவப் பண்டிகைக்குப் பிந்தின ௨௫-ம் ஞாயிறு.

மத். 24, 15—28.

பிரியமானவர்களே,

**நா**ம் போன ஞாயிற்றுக்கிழமையிலே மரணத்தைக் குறித்துக் கேட்டோம். இந்த உலகத்தில் நடமாடித் திரியும் மனிதனுடைய முடிவு மரணம். அவனுக்கு முடிவு வருவதுபோல்



அவன் குடியிருப்பதற்குப் பராபரன் கட்டின வீடாகிய இந்த உலகத்திற்கும் முடிவு வரும். இந்த உலகம் ஒருநாளில் அழிந்து போம். இதன் அழிவுக்கு எருசலேம பட்டணத்தின் அழிவு முன்னடையாளமாயிருந்தது. எருசலேமின் அழிவைக்குறித்து இயேசுநாதர் தம்முடைய சீஷருக்குச் சொன்ன எச்சரிப்பும் புத்திமதியும் நம்முடைய சுவிசேஷ வாக்கியத்தில் அடங்கியிருக்கிறது. அந்த எச்சரிப்பும் புத்திமதியும், உலகத்தின் முடிவை எதிர்பார்க்கிற நமக்கும் தேவை. அவைகளை நாம் கவனித்து நடந்தாலொழிய உலக முடிவில் நாம் ஆறுதல் உள்ளவர்களாயிருக்கமாட்டோம். ஆகையால் நாம் இன்றைக்கு

உலக முடிவைக்குறித்துச் சிந்தித்து,

1. அது எப்படி நடக்கும் என்றும்,
2. அதற்கு எப்படி நம்மை ஆயத்தம்பண்ணுகிறது

என்றும் பார்ப்போம்.

### 1.

உலக முடிவு எப்படி நடக்கும் என்று பார்ப்போமாக.

தானியேல் தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்ட பாழாக்குதலின் அருவருப்பைப் பரிசுத்த ஸ்தலத்திலே நிற்கக் காண்பீர்களானால், அப்போது யூதேயாவிலுள்ளோர் பர்வதங்களின்மேல் ஓடிப் போகக்கடவர்கள் என்று இயேசுநாதர் சொன்னார்.

எருசலேமின் அழிவு சமீபிக்கிறதைக் காண்பிக்கும் அடையாளங்களில் ஒன்று பாழாக்குதலின் அருவருப்பு. இது தானியேல் தீர்க்கதரிசியினால் ஏற்கனவே முன்னறிவிக்கப்பட்டது. அருவருப்பான செட்டைகளோடே பாழாக்குகிறவன் வந்து இறங்குவான்; நிர்ணயிக்கப்பட்டிருக்கிற நிர்மூலம் தீருமட்டும் பாழாக்கடிக்கிற சனத்தின்மேல் சொரியும் (தானி. 9, 27) என்பது அந்தத் தீர்க்கதரிசனம். மெய்யான பராபரனுக்கு ஆராதனை செய்யும் தேவாலயம் எருசலேம் பட்டணத்தில் இருந்தது. அதின் உள்ளுக்குள்ளான ஸ்தலத்துக்கு மகா பரிசுத்த ஸ்தலம் என்று பெயர். அதிலே பிரதான ஆசாரியனையல்லாமல் வேறொருவரும் போகக்கூடாது. அப்படிப்பட்ட பரிசுத்த ஸ்தலத்தில் கலகக்கார யூதர் பிரவேசித்து, ஒருவரையொருவர் கொன்று, இரத்தஞ் சிந்தி, அதைத் தீட்டுப்படுத்தினார்கள். இதுவே பாழாக்குதலின் அருவருப்பு என்று நினைக்க ஏதுவுண்டு. தேவாலயமும் எருசலேம பட்டணமும் அஞ்ஞானிகளால் தீட்டாகி அழியப்போகிறதற்கு இது அருவருப்பான அடையாளமாயிருந்தது.

ஜெபத்தின் வீடாயிருந்த எருசலேம் தெய்வாலயம் யூதர்களால் முந்த வியாபார வீடாயிற்று, பிறகு கள்ளர் கெபியாயிற்று, கடைசியாக அருவருப்பான கொலைக்களமாயிற்று. ஒவ்வொரு கிறிஸ்தவனும் பராபரனுடைய தெய்வாலயம். ஒவ்வொரு குடும்பமும் அவருடைய ஆலயந்தான். எல்லாவற்றிலும் முக்கியமாய்த் திருச்சபை கர்த்தருடைய ஆலயம். ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன் சரீர ஆலயத்தைத் தீட்டுப்படுத்தினால், தன்னைப் பராபரனுக்கு அருவருப்பாக்குகிறான். அவனுடைய அழிவு சமீபிக்கிறது. ஒவ்வொரு குடும்பமும் பராபரனுக்கு விரோதமாகப் பாவத்தைச் சிநேகித்து அதற்குத் தன்னை ஒப்புவிப்பதினால், தன்னைப் பராபரனுக்கு அருவருப்பாக்குகிறது. இதினால் அது தன்னை அழிவுக்குப் பக்குவப்படுத்துகிறது. முக்கியமாய்த் திருச்சபையிலே பயங்கரமான கள்ளப்போதகங்கள் புகுந்து, அந்திக் கிறிஸ்துவின் ஆளுகை அதைத் தீட்டாக்கும்பொழுது உலகம் அழிவுக்கு நெருங்கிவிட்டது என்பதை அறிந்துகொள்ளலாம். இதைக்குறித்து பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறதைக் கேட்போமாக: ஒருவனும் உங்களை எந்தவிதத்தினாலாகிலும் மோசம்போக்கவேண்டாம்; ஏனெனில் மருளவிழுகுதல் முந்திவந்து, கேட்டினுடைய மகனாகிய பாவத்தின் மனுஷன் வெளியானாலொழிய, அந்த நாள் வராது. அவன் எதிர்த்து நிற்கிறவனும், தேவன் அல்லது மகத்துவம் என்னப்பட்டதெல்லாவற்றிற்கும் மேலாய் உயர்ந்து, பராபரனுடைய தெய்வாலயத்தில் தேவனைப்போல்தானே உட்காருகிறவனுமாயிருந்து தன்னைத்தான் தேவனென்று காண்பிப்பவன் (௨ தெச. 2, 3-4) அப்போஸ்தலனுடைய இந்த வார்த்தைகள் இப்பொழுது நிறைவேறி வருகிறது. திருச்சபையில் பராபரனுடைய வசனத்துக்கு மேலாகத் தன்னுடைய வார்த்தைக்கு அதிகாரமும் வல்லமையும் உண்டென்று சாதிக்கிற கள்ளப்போதகன் ரோமாபுரியில் வீற்றிருக்கிறான். இவனை அந்திக்கிறிஸ்து என்று சொல்லப் பல நியாயங்களுண்டு. ஆகிலும், வேறொரு விசேஷித்த எதிராளி எழும்புவான் என்று சிலர் நினைக்கிறார்கள். இதுமாத்திரமோ, திருச்சபையின் பல பங்குகளிலும் கிறிஸ்தவ குடும்பங்களிலும் கர்த்தருக்கு அருவருப்பான அவிசுவாசமும் அநேக பாவங்களும் ஆளத்துவக்கியிருக்கிறது. கிறிஸ்தவர்களைப் பராபரனுடைய வசனம் ஆளுவதற்குப் பதிலாய்ச் சுய புத்தியும் அகங்காரமும் ஆளத்துவக்கியிருக்கிறது. கிறிஸ்தவர்களில் தெய்வ பயமுள்ளவர்கள் வெகு சிலர். நம்முடைய சபையாரிலும் எவ்வளவு கொஞ்சம் பேர் ஒழுங்காய்ச் செபம் செய்கிறார்கள், ஒழுங்காய்க் கோயிலுக்கு வருகிறார்கள், ஒழுங்காய்ப் பராபரனுடைய வசனத்தைப் படிக்கிறார்கள். சன்மார்க்கமாய் நடக்கிறவர்கள் எத்தனை சிலர். ஐயோ -



பாழாக்குதலின் அருவருப்பு பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கிறதை நாம இப்பொழுதே காண்கிறோம். ஆகையால் உலகத்தின் முடிவும அழிவும் வெகு சமீபம் என்று சொல்லலாம்.

மேலும், எருசலேமின் அழிவுக்குமுன் மகா பெரிய துன்பமும் இடுக்கமும் உண்டாகுமென்பதைக் காட்டும்படிக் கர்த்தர் சொல்லுகிறதாவது: அந்த நாட்களில் கர்ப்பவதிகளுக்கும் பால்கொடுக்கிறவர்களுக்கும் ஐயோ, ஆனால் நீங்கள் ஓடிப்போவது மாரிகாலத்திலும ஓய்வுநாளிலும் சம்பவியாதபடிக்கு வேண்டிக்கொள்ளுங்கள். அதேனென்றால் மகா உபத்திரவம் அப்போது உண்டாயிருக்கும். அப்படிப்பட்டது உலகத்தின் ஆதிகாலந்துவக்கி இந்நாள்வரைக்கும் சம்பவித்ததுமில்லை, இனி சம்பவிப்பதுமில்லை. அந்த நாட்கள் குறுக்கப்படாதேபோனால், ஒரு மாமிசமாகிலும தப்பிப்போவதில்லை. தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் நிமித்தமோ அந்த நாட்கள் குறுக்கப்படும் என்கிறார். — இது சரியாய் நிறைவேறிற்று. எருசலேமுடைய அழிவுக்குமுன் பஞ்சமும் கொள்ளை நோயும் சண்டைகளும் அதிகரித்ததால மகா உபத்திரவம் உண்டாயிற்று. விசேஷமாய்த் தங்கள் கைகளின் பாலகரை ஏந்தியிருந்த தாய்மார் மிகுந்த சங்கடத்துக்கு உள்ளானார்கள். கடைசியாய் எருசலேம் பட்டணத்தை ரோமர் பிடித்து அழித்துப்போட்டார்கள்.

இந்தக் காலத்திலும் நாம உலகத்தின் நாலுபக்கங்களிலும் யுத்தம் நடக்கிறதாக அறிகிறோம். வெகு ஜனங்கள் சேதம அடைகிறார்கள். சில வருஷகாலமாய் நம்முடைய தேசத்திலும் வேறு பல தேசங்களிலும் பஞ்சம் அதிகரித்துவருகிறது. விஷபேதி, கட்டி சுரம், முதலிய கொள்ளை நோய்கள் எங்கும பரம்பி வருகிறது. இதனால் உண்டாயிருக்கும் உபத்திரவம் கொஞ்சமல்ல. இவைகளினால் உலகத்தின் முடிவும அழிவும சமீபித்து வருகிறது என்று அறியலாம். அல்லாமலும்: கள்ளக் கிறிஸ்துக்களும கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை முதலாய் மோசம்போக்கத்தக்கதாய்ப் பெரிய அடையாளங்களையும் அதிசயங்களையும செய்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர் சொன்னபடிக்கே எருசலேம் அழிவுக்கு முன்னே நடந்தது. அப்போஸ்தலர் நடபடிகளில் நாம் வாசிக்கிறபடி சீமோன் என்று பேர்கொண்ட ஒரு மனுஷன் ஸ்தம்பன வித்தைக்காரனாயிருந்து தன்னைப் பெரியவனென்று சொல்லி, சமாரிய சாதியைப் பிரமிக்கப்பண்ணிக்கொண்டிருந்தான். அவனைப்போல சனங்களை மோசம் பண்ணின வேறு பலரும் உண்டு. தேயுதா என்கிற ஒருவன், யோசுவாவின் காலத்திலே யோர்தான் நதி இரண்டாய்ப் பிரிந்ததுபோல இப்பொழுது பிரியும்படி தான் செய்யப்போகிறதாகச் சொல்லி, அநேக சனங்களை ஆஸ்தி

பாஸ்திகளோடு தன்னைப் பின்பற்றப்பண்ணினான். இவனைப்போல் அநேக மோசக்காரர் எழும்பினதாகச் சரித்திரக்காரர் எழுதியிருக்கிறார்கள்.

இந்தக் காலத்திலும் பொய்யான அற்புதங்களையும் அடையாளங்களையும் அங்கும் இங்கும் காண்பித்து, நம்முடைய இரட்சகராகிய கிறிஸ்துவை விட்டு மனிதரை வணங்கவும் ஆராதிக்கவும் ஏவுகிற அநேகர் இருக்கிறார்கள். இவர்களும் உலக முடிவு சமீபிக்கிறதென்று நமக்குக் காட்டுகிற அடையாளங்கள் என்று சொல்லலாம்.

உலக முடிவில் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வருவார். மின்னல் கிழக்கில் எழும்பி, மேற்கு மட்டும் பிரகாசிக்கிற வண்ணமாய் மனுஷனுடைய குமாரன் வருகையிருக்கும் என்று வாசிக்கிறோம். உலக மனிதரெல்லாரும் கவலையற்றவர்களாய் உண்பதிலும் உடுப்பதிலும் கொள்வதிலும் கொடுப்பதிலும், ஆடலிலும் பாடலிலும், தங்கள் நேரத்தைப் போக்கிக்கொண்டிருக்கையில், கர்த்தர் மகிமையோடே வருவார். யூதர்கள் வேண்டாமென்று தள்ளின அந்த மனிதனுடைய குமாரனே வானத்திலிருந்து இறங்கிவருவார். அதை எல்லாக் கண்களும் பார்க்கும். அவரைக் குத்தினவர்களும் அவரை நோக்கிப் பார்ப்பார்கள். அவர் வருகையோடே இந்த உலகத்துக்கு முடிவுவரும். வெகு உறுதியாய் நிற்கிறதாகத் தோன்றுகிற இந்தப் பூமி நிலைமாறி அழிந்துபோம். கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் அவரோடு கூடப் புதுப் பூமியில் வாழ்ந்திருப்பார்கள். மற்றவர்களோ நரகத்தில் தள்ளப்படுவார்கள்.

## 2.

உலக முடிவுக்கு நம்மை எப்படி ஆயத்தம்பண்ணுகிறதென்று இப்பொழுது பார்ப்போம்.

அப்போது யூதேயாவிலுள்ளோர் பர்வதங்களின் மேல் ஓடிப்போகக்கடவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தருடைய கட்டளையின்படி எருசலேம் பட்டணத்திலிருந்த பல யூதர்களும், முக்கியமாய்க் கிறிஸ்தவர்களும் எருசலேம் பட்டணத்தையும் யூதேயா தேசத்தையும் விட்டுப் புறப்பட்டு, பர்வதங்கள்மேல் ஓடிப் பெல்லா என்கிற ஒரு சிற்றூருக்கு வந்ததினால் அழிவுக்குத் தப்பினார்கள். உலகம் ஜலப்பிரளயத்தால் அழிக்கப்பட்டபொழுது அந்த அழிவுக்குத் தப்ப நோவாவுக்கும் அவன் குடும்பத்திற்கும் கர்த்தர் ஒரு பேழையைக் கொடுத்தார். சோதோம் கொமோராப்பட்டணங்கள் அக்கினியினாலும் கந்தகத்தினாலும் அழிந்தபொழுது லோத்தும் அவன் வீட்டாரும் தப்பிப்பிழைக்கக் கர்த்தர் அவர்களுக்குச் சோவார் என்ற ஒரு



சிற்றூரைக் காண்பித்தார். எருசலேமின் அழிவுக்குத் தப்பக் கிறிஸ்தவர்களுக்குப் பெல்லா என்ற ஊர் அகப்பட்டது. உலகத்தின் முடிவில் நாம் தேவ கோபத்துக்குத் தப்பிப் பிழைக்க எங்கே போவோம். எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன், வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசைவரும் (சங். 121, 1. 2) என்று சங்கீதக்காரன் சொன்னபடி நாம் நமக்கு ஒத்தாசைவரும் பர்வதங்களுக்கு நேராக நம்முடைய கண்களை ஏறெடுப்போம். கொல்கதாமலையில் நமக்காக உயிர்விட்ட நம்முடைய இரட்சகரின் ஐந்து காயங்களே நாம் தப்பிப்பிழைப்பதற்கான இடம். இப்பொழுதே விசுவாச செட்டைகளினால் அவரண்டை ஓடி, அவரிடத்திலே தங்குவோமாக. அப்பொழுது நமக்கு உலகமுடிவில் பயமில்லை. அவர் நம்மைச் சகல பயமும் நீங்கத் தமயிடத்தில் வைத்துக் காப்பாற்றுவார்.

உலக முடிவில் நாம் உலகத்தாரோடு கெட்டழிந்துபோகாமல் தப்பிப்பிழைக்கும்படி கர்த்தர் சொன்ன மற்றொரு புத்திமதியையும் கவனிப்போமாக. வீட்டின்மேலிருப்பவன் தன் வீட்டில் எதையாகிலும் எடுப்பதற்கு இறங்கவேண்டாம்; வயலில் இருப்பவன் தன் வஸ்திரங்களை எடுத்துக்கொள்ளப் பின்னிட்டுத் திரும்பவும்வேண்டாம் என்கிறார். எருசலேம் பட்டணத்தில் பாழாக்குதலின் அருவருப்பைக் கண்டவர்கள் அதையும் இதையும் தேடிக்கொண்டு காலதாமதம் பண்ணாமல், இருந்த இடத்திலிருந்தே ஓட்டம்பிடிக்க வேண்டியவர்களாயிருந்தார்கள். சோதோம் கொமோரா அழிவிலும் இதைப்போலொத்த எச்சரிப்பைக் கர்த்தர் லோத்துக்கும் அவன் குடும்பத்தாருக்கும் சொன்னார். உன் ஜீவன் தப்ப ஓடிப்போ, பின்னிட்டுப்பாராதே என்பது அவர் சொன்ன எச்சரிப்பு. இந்த எச்சரிப்பின் வார்த்தைக்கு லோத்தின் பெண்சாதி கீழ்ப்படியாமல், பின்னிட்டுப்பார்த்து உப்புத்தூண் ஆனாள். இந்தச் சரித்திரத்தினால் நாம் எச்சரிப்படைவோமாக. நிலை நிற்கிற வீடும் நிலைவரமான ஆஸ்தியும் நமக்கு இங்கே இல்லை. காணப்படுகிறவைகளெல்லாம் அநித்தியம்; காணப்படாதவைகளோ நித்தியம். ஆகையால், உலகத்தையும் உலகத்திலுள்ளவைகளையும் விசேஷித்தவைகளாக நாம் எண்ணாமல், பரத்துக்கடுத்தவைகளைத் தேடுவோமாக. உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம். நாம் வீண்கவலையை ஒழிக்கவேண்டும். என்னத்தை உண்போம் என்னத்தை உடுப்போம் என்கிற சரீரக்கவலைக்கே தங்களை ஒப்புவிக்கிறவர்கள் தங்கள் ஆத்துமாவை இழந்துபோவார்கள். இந்த மோசத்துக்கு உள்ளாகாதபடி: முந்தப் பராபரனுடைய இராச்சியத்தையும் அவருடைய நீதியையுந் தேடுங்கள் (மத். 6, 33). நாம் கீழானதுகளை மறந்து

மேலானதுகளை நாடித் தேடுவோமானால், உலகமுடிவில் கிறிஸ்து வரும்போது நாம் அவரிடத்தில் நிலைவரமான பொக்கிஷங்களைப் பெற்றுக் குறைவில்லாமல் வாழ்ந்திருப்போம்.

அதை வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவான் என்று இரட்சகர் சொல்லுகிற வார்த்தையும் நாம் கவனிக்கத்தக்கது. யூதர்கள் தானியேல் தீர்க்கதரிசனத்தையும் மற்ற வேதாகமங்களையும் வாசித்தாலும் அவைகளைச் சிந்திப்பில்லாமல் வாசித்தார்கள். ஆகையால், இரட்சகரை அறிந்து ஏற்றுக்கொள்ளக் கூடாதவர்களாய்ப் போனார்கள். இதினிமித்தம் இயேசுநாதர்: நீங்கள் வேத எழுத்துகளை ஆராய்ந்துபாருங்கள்; அதேனென்றால் அதுகளில் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, எனக்குச் சாட்சிகொடுக்கிறதுகள் அதுகள்தானே (யோவா. 5, 39) என்று அவர்களுக்குப் புத்திசொன்னார். அவர் சொன்னதின்படி அவர்கள் வேதத்தை ஆராய்ந்து சிந்தித்து வாசித்திருப்பார்களானால், இயேசுவே தங்கள் மேசியா வென்று கண்டிருப்பார்கள், அவரை விசுவாசித்திருப்பார்கள், அழிவுக்குத் தப்பியிருப்பார்கள். வரப்போகிற பெரிய அழிவுக்கு நாம் தப்பிப்போகும்படி இப்பொழுதே பராபரனுடைய வசனத்தைக் கவனமாய் வாசிக்கவேண்டும்; வாசித்ததைச் சிந்திக்கவேண்டும்; நாம் சிந்தித்ததை விசுவாசித்து, அதின்படி நடக்கவேண்டும். பராபரனுடைய வசனம் நம்முடைய இருதயத்தில் ஆளுமானால் கள்ளத்தீர்க்கதரிசிகளும் கள்ளக் கிறிஸ்துக்களும் எவ்வளவு அற்புதங்களையும் எவ்வளவு அடையாளங்களையும் செய்தாலும் நாம் மோசம்போகமாட்டோம். கிறிஸ்தவர்களே, நாம் வேதவசனத்தைக் கருத்தும் கவனமுமாக வாசிக்கிறோமா, கேட்கிறோமா, சிந்திக்கிறோமா. பின்னை எப்படி நாம் வரும் கோபத்துக்குத் தப்புவித்துக்கொள்ளலாம். வேத வசனத்தைக் கற்றறிந்தவர்கள் மனுஷ போதகத்துக்கு லேசாய் இடம் கொடுக்கமாட்டார்கள். இதோ வனாந்தரத்தில் இருக்கிறாரென்று உங்களுக்குச் சொன்னார்களானால் வெளிப்புறப்படாதேயுங்கள்; இதோ, அறை வீடுகளில் இருக்கிறார் என்றால் நம்பாதேயுங்கள் என்று கர்த்தர் சொல்லுகிற புத்திமதியைக் கைக்கொள்ளுவதற்கு வேதவசன அறிவு முக்கியம். நம்முடைய கிறிஸ்தவர்களில் அநேகர் கர்த்தருடைய வசனத்தைச் சரியாய்ப் படித்திராமையால் வெகுலேசாய் மோசம்போகிறார்கள். இன்றைக்குச் சுவிசேஷ லுத்தரன் சபையில் இருக்கிறார்கள். நாளைக்கு அவர்களை ரோமான் கோயிலில் பார்க்கலாம். அங்கே அற்புதங்களும் அடையாளங்களும் நடக்கிறது, அங்கே கிறிஸ்து என்று சொல்லி, அங்கே ஓடிப்போவார்கள். இன்னம் சில மாதங்களுக்குப்பின் அவர்களை இங்கிலீஷ் சபையில் பார்க்கலாம். அங்கே பெரிய மனுஷர்களும் பெரிய உத்தியோகஸ்தர்களும் இருக்கிறார்கள், அங்கே தான்



கிறிஸ்து என்று சொல்லி, மோசம்போவார்கள். சகோதரரே, நம்முடைய முடிவுக்கும் உலகமுடிவுக்கும் ஆயத்தமாவதற்கு இது வழியல்ல. திருவசனத்தின் சுத்த விசுவாசத்தில் நிலைத்திருப்பவனே பாக்கியவான்.

மேலும், நம்முடைய இரட்சகர்: நீங்கள் ஓடிப்போவது மாரிகாலத்திலும் ஓய்வுநாளிலும் சம்பவியாதபடிக்கு வேண்டிக்கொள்ளுங்கள் என்று தம்முடைய சீஷருக்குச் சொன்னார். அவர்கள் வேண்டுதலைக் கேட்டுக் கர்த்தர் அவர்களுக்கு எருசலேமின் அழிவில் பெரிய சகாயம் செய்தார். வரப்போகிற உலகத்தின் அழிவில் நாம் சகாயம் பெறும்படி உட்கருத்தான ஜெபம் நமக்கு அவசியம். ஜெபம் செய்யாத கிறிஸ்தவர்களின் முடிவு மகா பரிதாபம். பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் சொல்லியிருக்கிற பரிசுத்தவான்களெல்லாம் விசுவாசமுள்ள ஜெபத்தினாலே அநேக மோசங்களுக்குத் தப்பி, அநேக ஆசீர்வாதங்கள் பெற்றுக்கொண்டார்கள். நாமும் உலகமுடிவில் ஆசீர்வாதமடைய உக்கிரஜெபங்கள் நமக்கு அவசியம்.

அன்புள்ள இயேசுவே, தேவரீர் இன்றைக்கு எங்களை எச்சரித்து, எங்களுக்குப் போதிவித்த போதனைக்காக உமக்கு ஸ்தோத்திரம். நாங்கள் உலகமுடிவில் உலக மக்களோடு கெட்டுப்போகாமல், உம்மோடு நித்திய மோட்சத்தில் பிரவேசிக்கும்படி எங்களுக்குக் கிருபை செய்தருளும், சுவாமி, ஆமென்.

---

## கிறிஸ்துவப் பண்டிகைக்குப் பிந்தின ௨௬-ம் ஞாயிறு.

மத். 25, 31—46.

பிரியமானவர்களே,

இயேசுகிறிஸ்து ஜீவனுள்ளோரையும் மரித்தோரையும் நடுத்தீர்க்கவருவாரென்று விசுவாசப்பிரமாணத்தில் நாம் படித்திருக்கிறோம். இதை நாம் தினந்தோறும் நம்முடைய வீடுகளிலும், திருநாள்தோறும் நம்முடைய கோயில்களிலும் அறிக்கையிடுகிறோம். அறிக்கையிட்டும், அதைக் குறித்துச் சரியாய் யோசிக்கிறதில்லை. கர்த்தர் உலகத்தை நியாயந் தீர்க்க வருகிற பெரிதும் பயங்கரமுமான நாளுக்கு ஆயத்தமாயிருக்கிறவர்கள் வெகு சிலர். பேதுரு அப்போஸ்தலனே நம்முடைய நிருப வாக்கியத்தின் முடிவில்: பிரியமானவர்களே, இவைகளுக்குக் காத்திருக்கிற நீங்கள் அவரால் கறையும் குற்றமுமற்றவர்களாய்ச் சமாதானத்தில் கண்டுபிடிக்கப்படச் ஜாக்கிரதையாயிருங்கள் (௨ பேது.

3, 14 ) என்று நமக்குப் புத்தி சொல்லுகிறார். இந்தப் புத்திமதிப்படி நாம் சாக்கிரதையுள்ளவர்களாவதற்கு

கடைசி நியாயத்தீர்ப்பு நாளைக் குறித்து இப்பொழுது சிந்திப்போம்.

1. நியாயந்தீர்க்கப் போகிற நியாயாதிபதியையும்,
2. நியாயாசனத்துக்கு முன்பாக நிற்கப்போகிற சனங்களையும்,
3. சனங்கள் கேட்கப் போகிற தீர்ப்பையும் கவனிப்போமாக.

## 1.

நியாயந்தீர்க்கப்போகிற நியாயாதிபதியைக் குறித்துச் சிந்திப்போம்.

மனுஷனுடைய குமாரன் தமது மகிமையிலே தம்முடைய சகல பரிசுத்த தூதரோடுங் கூட வரும்போது, அவர் தமது மகிமையினுடைய ஆசனத்தின்மேல் உட்கார்ந்திருப்பார் என்று நம்முடைய இரட்சகர் சொல்லுகிறார். ஆகையால் உலகத்தை நியாயந்தீர்க்கப் போகிற நியாயாதிபதி மனுஷனுடைய குமாரனே. பராபரனுடைய குமாரனாகிய அவர் நம்மை இரட்சிக்கும்படி ஒரு ஸ்திரீயின் வயிற்றில் பிறந்ததால், அவருக்கு மனுஷ குமாரனென்று பெயர் வந்தது. நியாயந்தீர்க்கப்போகிற பராபரனுடைய குமாரனாகிய அவர் இன்னம் மனுஷனுடைய குமாரனாகவே யிருக்கிறார். இனிமேலும் அப்படியே யிருப்பார். உலகத்தை இரட்சிக்கும்படி வந்த மனுஷனுடைய குமாரனை அவரை உலகத்தார் இகழ்ந்தார்கள். அவரை வேண்டாமென்று தள்ளினார்கள். தள்ளப்பட்ட அவரே நியாயாதிபதியாக வருகிறார். பிதா ஆரையும் நியாயந்தீராமல் நியாயத்தீர்ப்பையெல்லாம் குமாரனுக்கு ஒப்புவித்தார். அவர் மனிதனுடைய குமாரனாயிருக்கிறபடியினாலே நியாயத்தீர்ப்பையும் செய்ய அவருக்கு அதிகாரம் கொடுத்தார் (யோவா. 5, 22. 27 ). பராபரன் அவரை மேலுக்கு மேலாகவும் உயர்த்தி, இயேசு என்கிற நாமத்துக்கு வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், நாவு யாவும் இயேசுகிறிஸ்து கர்த்தரென்று பிதாவாகிய பராபரனுக்கு மகிமையாக அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்துக்கும் மேலான நாமத்தை அருளிச்செய்தார் (பிலி. 2, 9. 10. 11). முன்னமே ஏழை ஊழியக்காரன்போல் திரிந்து, தலை சாய்க்க இடமற்றிருந்த அவர் இப்பொழுது வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் பெற்றிருக்கிறார். அவருக்குக் கீழாகாத அதிகாரம் ஒன்றுமில்லை. அவர் சகலத்துக்கும் இராசா. அவருடைய இராசரீகம் இப்பொழுது மறைந்திருக்கிறது. அது இப்படியே எப்பொழுதும் மறைந்தி-



ராது. எல்லாருடைய கண்களும் காண அவருடைய இராச மகிமை வெளிப்படும். அவர் இராசா என்று எல்லாரும் ஒப்புக்கொண்டு அறிக்கையிடும் வேளை வருகிறது. ஈனமான மரணமடைந்து, அமைதியாகப் பரத்துக்கு ஏறினவர், மகிமையாக வருவார். வேதாகமங்கள் எல்லாம் இப்படிச் சொல்லுகிறது, அறிக்கைகளெல்லாம் இப்படி அறிக்கையிடுகிறது. எல்லாக் கிறிஸ்தவர்களும் இப்படி விசுவாசிக்கிறார்கள். இன்னம் அவர் வரவில்லையேயென்று அங்கலாய்த்திருப்போர் உண்டு. அவர்களுடைய அங்கலாய்ப்பைத் தீர்க்க மனுஷனுடைய குமாரன் வருகிறார். அவருடைய வருகை அம்மட்டும் உலகம் கண்டிராத மாட்சிமையாயிருக்கும்.

அவர் தமது மகிமையிலே வருவார். இந்த மகிமை உலகம் உண்டாகாததற்கு முன்னே அவருக்குப் பிதாவோடிருந்த மகிமை. அவர் பாடுபட்டு மரித்து உயிர்த்தெழுந்தபொழுது பிதா அவருக்குத் திரும்பக் கொடுத்த மகிமை. பரிசுத்த மலையில் அவர் மறுரூபமாகி, அவருடைய முகம் சூரியனைப்போல் பிரகாசித்து, அவருடைய வஸ்திரங்கள் வெளிச்சத்தைப்போல் வெண்மையாயிற்றே, அப்பொழுது அவருடைய சீஷர்கள் கண்ட மகிமையிலே அவர் வருவார். ஒப்பில்லாத மகிமையோடே அவர் நடுத்தீர்க்க வருவார்.

சகல பரிசுத்த தூதரும் அவரோடு வருவார்கள். பராபரன் இந்தப் பூமிக்கு அஸ்திபாரமபோட்டு, அதன் கோடிக்கல்லை வைத்தபோது ஆர்ப்பரித்துப் பாடின அந்தப் பராபரனுடைய பிள்ளைகள் வருவார்கள். இரட்சகர் பெத்லகேமில் பிறந்து மாட்டு முன்னணையில் படுத்திருந்தபொழுது அவருக்கு மகிமையாகக் கீர்த்தனம் முழங்கி அவருக்கு எப்பொழுதும் பணிவிடை செய்து வந்த அவருடைய ஊழியக்காரர்களாகிய தேவதூதர்கள் அவரைச் சூழ்ந்து வருவார்கள். இந்தத் தேவதூதர் மனுஷசாதியின் இரட்சிப்பை முழுமனதினாலும் கோரிக்கொண்டிருந்தவர்களாதலால், விசுவாசிகள் எல்லாரும் பூரண இரட்சிப்பை அடையப்போகிற இந்தச் சமயத்தில் திரண்டு வருவார்கள்.

அவர் தமது மகிமையின் ஆசனத்தில் உட்கார்ந்திருப்பார். மகா சுத்தமுள்ள வெண்மையான ஆசனம். சருவ வல்லமை பொருந்திய ஒரு பெரிய சிங்காசனம், அவர் வீற்றிருக்கும் இடமாம். தானியேல் தீர்க்கதரிசி அவரை அந்த ஆசனத்தில் கண்டார். அப்பொழுது அந்தத் தீர்க்கதரிசியின் ஆவி ஒடுங்கிப்போயிற்று. அவருடைய தலையின் தரிசனங்கள் அவரைக் கலங்கப்பண்ணிற்று (தானி. 7, 9. 15). எசாயா தீர்க்கதரிசியும் இந்த ஆசனத்தைப் பார்த்திருக்கிறார் (எசா. 6). அது உயர்ந்தும் உன்னதமுமான ஆசனம். அந்த ஆசனத்தைச் சூழ-

சேராபீன்கள் பறந்து, சேனைகளுடைய கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தரென்று பாடினார்கள். அதைக் கண்டபோது தீர்க்கதரிசி பயந்தார். முன்னே சிலுவைமரத்தில் அலங்கோலமாய்த் தொங்கின அந்த மனுஷகுமாரன் மகிமையின் ஆசனத்தில் வீற்றிருப்பதை இந்த உலகத்தார் பார்க்கும்பொழுது அவர்களுக்கு என்னமாயிருக்கும். அவர்கள் அவரைப் பார்ப்பதோடே காரியம் முடியாது. அவர்கள் எல்லாரும் அவருக்கு முன் நிறுத்தப்படுவார்கள்.

2.

நியாயாசனத்துக்கு முன் நிற்கப்போகிற சனங்களைக் குறித்து இப்பொழுது கேட்போம்.

அப்போது அவருக்கு முன்பாக எல்லாச் சாதிகளும் கூட்டப்படுவார்கள்; அவர்களை அவர், ஒரு மேய்ப்பன் ஆடுகளையும் கடாக்களையும் பிரிக்கிறதுபோலே வெவ்வேறாகப் பிரித்து, ஆடுகளைத் தம்முடைய வலது பக்கத்திலும் கடாக்களை இடது பக்கத்திலும் நிறுத்துவார். — எல்லாச் சாதிகளும் மனுஷகுமாரனின் நியாயாசனத்துக்கு முன் கூட்டப்படுவார்கள். வெள்ளை மனுஷர் கறுப்பு மனுஷர், சீமை மனுஷர் நாட்டு மனுஷர், உயர்ந்த சாதியார் தாழ்ந்த சாதியார், பணக்காரர் ஏழைகள், ஆண் பிள்ளைகள் பெண் பிள்ளைகள், பெரியவர்கள் சின்னவர்கள், எல்லாரும் அவருக்கு முன் வருவார்கள். எல்லா மனிதரும் அவருக்குக் கணக்குக் கொடுக்கவேண்டும். இதற்கு ஒருவரும் தப்பிப்போகமுடியாது. முழங்கால் யாவும் நமக்கு முன்பாக முடங்கும் என்றும், நாவு யாவும் பராபரனை அறிக்கைபண்ணும் என்றும், நம்முடைய சீவனைக்கொண்டு விளம்புகிறோமென்கிறதைக் கர்த்தர் சொல்லுகிறாரென்று எழுதியிருக்கிறது. ஆகையால், நம்மில் ஒவ்வொருவனும் கிறிஸ்துவை அறிக்கையிட்டு, தனக்காகப் பராபரனுக்குக் கணக்கு ஒப்புவிப்பான் (ரோம 14, 11. 12). அவனவன் தன் சரீரத்தினால் நடப்பித்த நன்மைக்காரிலும் தீமைக்காரிலும் தக்கதுகளை அடையும்படிக்கு, நாம் எல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்துக்கு முன்பாக வெளிப்படவேண்டியது (உ கொரி. 5, 10) என்று அப்போஸ்தலன் சொல்லுகிறார். இப்பொழுதும் அவர் தம்முடைய மகிமையின் ஆசனத்தில் உட்கார்ந்து சகலரையும் பார்க்கிறார். அவருடைய பார்வைக்கு மறைவானவர்கள் ஒருவருமில்லை. ஆகிலும், உலகத்தில் உள்ள மனிதர்களில் மிச்சமானவர்கள் இதை அறியாதிருக்கிறார்கள். அவர் தங்களைப் பாராதிருப்பதுபோலும், அவர் இல்லாதிருப்பதுபோலும், இந்த உலகத்தில் காலந் தள்ளுகிறார்கள். அவர் நடுத்தீர்க்கவருகிற அந்த நாளிலோ சகல கண்ணும் அவரைப் பார்க்கும். இதோ மேகங்களுடனே வருகிறார்; அப்போது



கண் யாவும், அவரைக் குத்தினவர்களும் அவரைக் கண்டு, பூமியின் கோத்திரங்களெல்லாம் அவர்மேல் புலம்புவார்கள் என்று எழுதியிருக்கிறது (அபி. 1, 7). ஆசாரியரின் வஸ்திரங்களும், இராசாக்களின் உடைகளும், ஐசுவரியவான்களின் ஆஸ்தியும், ஏழைகளின் தரித்திரமும், பலவான்களின் வல்லபமும், வீரவான்களின் தைரியமும், எவனையும் அவருடைய கண்ணுக்கு மறைக்காது.

இந்தப் பெரிய இராசாவின் சத்தம் கேட்டவுடனே ஆதாம் காலமுதல் கடைசி நாள் மட்டும் உள்ள சகல மனிதர்களும் அவருக்கு முன் ஓடிவரவேண்டியது. அவருடைய வல்லமையான சத்தம் செத்தவர்களையும் எழுப்பிவிடும். யோவான் அப்போஸ்தலன் தரிசனை கண்டு எழுதியிருக்கிறதைக் கேட்போமாக. நான் பெரிய வெள்ளை ஆசனத்தையும் அதின்மேல் உட்கார்ந்தவரையும் கண்டேன்; அவருடைய முகப்பார்வையால் பூமியும் வானமும் விலகி ஓடி, அதுகளுக்கு இடங்காணாதே போயிற்று. மரித்தோராகிய சிறியோர் பெரியோரைப் பராபரனுக்கு முன்பாக நிற்கக் கண்டேன். சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரைத் தந்தது; மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரைத் தந்தது என்கிறார் (அபி. 20, 11-13). மனுஷனுடைய குமாரன் வருகிற அந்தக்காலத்தில் உயிரோடிருக்கிறவர்கள் மறுரூபமாவார்கள். இதைக்குறித்து அப்போஸ்தலன்: இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்குச் சொல்லுகிறேன்; நாம் எல்லாரும் நித்திரை அடைவதில்லை; என்றாலும், எல்லாரும் கடைசி எக்காளந் தொனிக்கும்பொழுது ஒரு கண்ணிமையான கணப்பொழுதிலே மறுரூபமாக்கப்படுவோம் என்கிறார் (க கொரி. 15, 51).

அவர் தமக்குமுன் நிற்கும் எல்லா மனிதரையும் இரண்டு பிரிவாகப் பிரிப்பார். இப்பொழுது உலகத்தில் மனிதர்கள் பல அந்தஸ்துக்காரரும், பல பாஷைக்காரரும், பல சாதிக்காரருமாய்ப் பிரிந்திருக்கிறார்கள். நம்முடைய தேசத்திலே சாதிப்பிரிவினைக்குக் குறைவில்லை. இந்தப்பிரிவினைகளோ அந்த நியாயாதிபதிக்கு முன் செல்லவே செல்லாது. அவர் செய்யப்போகிற பிரிவு இரண்டே இரண்டு. ஆடுகள் வேறே கடாக்கள் வேறே, கோதுமை வேறே களைகள் வேறே, விசுவாசிகள் வேறே அவிசுவாசிகள் வேறே. இப்பொழுது இரு வகுப்பாரும் கலந்திருக்கிறார்கள். அப்பொழுது கலந்திருக்க முடியாது. இப்பொழுது கடாக்கள் ஆடுகளைப்போலவும், ஆடுகள் கடாக்களைப்போலவும் காணப்படுவதுண்டு. அப்பொழுதோ அப்படியிராது. இப்பொழுது அவிசுவாசிகள் மாயத்தினாலும் வேஷத்தினாலும் விசுவாசிகளைப்போல் தோன்றுகிறார்கள். அப்பொழுதோ இந்தத் தோற்

றம் இருக்காது. மாயமுக்காட்டையெல்லாம் கர்த்தர் வாங்கிப்போடுவார். இங்கே மனிதரை மனிதர் ஏமாற்றுவார்கள். அங்கே கர்த்தரை மனிதர் ஏமாற்ற முடியாது. அவனவன் உள்ளத்தில் இருக்கிறபடி அங்கே வெளிப்படுவான். இது ஏற்கனவே கர்த்தர் தம்முடைய பிரசங்கங்களில் அடிக்கடி சொன்னது. அவர் சொன்னது கடைசி நாளில் நிறைவேறும். தெய்வதூதர் புறப்பட்டுப் பொல்லாதவர்களை நீதிமான்களின் நடுவிலிருந்து பிரிப்பார்கள் (மத். 13, 49).

இங்கே கூடிவந்திருக்கிற நாமும் இதை முக்கியமாய்க் கவனிக்கவேண்டும். இந்தக் கோயிலில் ஒன்றாய் உளுக்கார்ந்து, ஒன்றாய்ப் பிரசங்கம் கேட்டு, ஒன்றாய்க் கர்த்தருடைய பந்திக்குச் சேர்ந்து, ஒரேவகை நன்மைகளை அனுபவித்த நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்துக்கு முன்பாக ஒன்றாயிருப்போமோ. நாமெல்லாரும் மெய் விசுவாசிகளாயிருந்தால், ஒன்றாயிருக்கலாம். அப்படி நாம் இருக்கிறதில்லையே. அவனவன் தன் மனசைச் சோதித்துப்பார்த்தால் அவனவன் அறிந்துகொள்ளுவான். சில சமயங்களில் நம்முடைய மனசு நம்மை மோசம்பண்ணி, நம்மை மகா நல்லவர்களென்று சொல்லும். ஒருவராலும் மோசம்போகக்கூடாத கர்த்தரும் அவருடைய தூதர்களும் நம்மைச் சரியாய் அறிந்து, சரியாய்ப் பிரிப்பார்கள். நாம் ஆடுகளாயிருப்போமா, கடாக்களாயிருப்போமா. நாம் கோதுமையாயிருப்போமா, களைகளாயிருப்போமா. நாம் கிறிஸ்துவின் வலது பக்கத்தில் இருப்போமா, அவருடைய இடது பக்கத்தில் இருப்போமா. நம்முடைய விசுவாசம் அவிசுவாசம் என்றவைகளுக்கு ஏற்றபடி நம்முடைய உத்தரவும் இருக்கும்.

3.

கடைசிநாளில் கர்த்தர் நமக்குக் கூறப்போகிற தீர்ப்பைக்குறித்து இப்பொழுது கேட்போம்.

அவர் வலது பக்கத்தில் உள்ளவர்களைப் பார்த்து: வாருங்கள் என்று சொல்லுவார். அவர் முன்னே தாழ்ந்த நிலைமையில் இருக்கும்பொழுது பலமுறையும் உபயோகித்த மதுரமான வார்த்தை இது. பிரயாசப்பட்டுப் பாரஞ்சுமந்தவர்களாகிய நீங்கள் எல்லாரும் என்னண்டைக்கு வாருங்கள் என்று அவர் சொன்னவர். அவர் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து, அவரிடம்போய் அவரிடத்தில் தரித்திருக்கிறவர்களுக்கே, வாருங்கள் என்று இப்பொழுது சொல்லுகிறார். இயேசுவை விசுவாசித்த இந்த மனிதர்களை உலகத்தார் எல்லாரும் பகைத்து: போங்கள் போங்கள் என்று துரத்தினார்கள். நம்முடைய சபைகளில் அதற்குத் திருஷ்டாந்தரங்கள் உண்டு. இயேசுநாதரை விசுவாசித்து, ஞானஸ்-



நானம் பெற்று, கிறிஸ்தவர்களாய்ப் போனதினிமித்தம் அவர்களை வீட்டுக்குள் பிரவேசிக்க ஒட்டாமல் துரத்தின உறமுறையார் உண்டு. குடியிருப்புத்தலத்தில் இருக்கப்படாது என்றும் வேலைக்கு வரப்படாதென்று சொல்லித்துரத்தின மிராசுதார்கள் வெகு பெயர் உண்டு. இப்படித் துரத்தப்பட்ட கிறிஸ்தவர்கள் மெய்க் கிறிஸ்தவர்களாயிருப்பார்களாகில், கர்த்தர் அவர்களை வாருங்கள் என்று சொல்லிச் சேர்த்துக்கொள்ளுவார்.

அவர்களை நம்முடைய இரட்சகர்: பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே என்று கூப்பிடுவார். அவர்களை ஊரார் சபித்திருக்கலாம், உறமுறையார் சபித்திருக்கலாம், பஞ்சாயத்தார் சபித்திருக்கலாம், பாப்புக்களும் இராசாக்களும் சபித்திருக்கலாம். யார் சபித்திருந்தாலும் என்ன. பிதா அவர்களை ஆசீர்வதிப்பது போதுமல்லவா, இவர்கள் பிதாவின் ஆசீர்வாதம் பெற்றவர்கள். இவர்களுக்கு அவர் மோட்சராச்சியத்தை லோகத்தோற்ற முதல் ஆயத்தம்பண்ணிவைத்து, அதை இப்பொழுது சுதந்தரமாகக் கொடுக்கிறார். அவர்கள் பிறக்கும் முன்னமே அவர்களை அறிந்திருக்கிற கர்த்தர் அதை அவர்களுக்கு ஆயத்தம்பண்ணினார். அதை அவர்களுக்குச் சுதந்தரமாக்கும்படி தம்முடைய குமாரனை இந்த உலகத்திற்கு அனுப்பினார். பாவிகளான மனிதர் பராபரனுடைய ராச்சியத்திற்கு முற்றிலும் தூரமானவர்களாயிருந்தும், கிறிஸ்து அவர்களுக்காகப் பாடுபட்டு, இரத்தஞ் சிந்தினார். அவருடைய இரத்தம் பாவிகளைச் சுத்தம்பண்ணி, அவர்களைப் பராபரனுடைய பிள்ளைகளாக்கிற்று. விசுவாசத்தினால் அவர்கள் அந்த ராச்சியத்திற்குச் சுதந்தரவாளிகளானார்கள். அவர்கள் விசுவாசிகளானதினாலே இவ்வுலகத்தில் சொத்து சுதந்தரங்களையும், வேறு சில சிலாக்கியங்களையும் அவர்கள் இழந்திருக்கலாம். அவர்கள் இழந்துபோன சுதந்தரங்கள் மோட்சசுதந்தரத்துக்கு முன் எம்மாத்திரம். அவர்கள் மோட்ச சுதந்தரத்தை விசுவாசத்தினால் பெற்றுக்கொண்டார்கள். ஏனெனில் குமாரனை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய சீவன் உண்டு என்று எழுதியிருக்கிறது. இப்படியிருந்தும், தீர்ப்புக்கூறுகிற இராசாவானவர் விசுவாசத்தைக்குறித்து ஒன்றும் சொல்லுகிறதில்லை. அவர்கள் தமக்குச் செய்த பல சிநேக கிரியைகளை அவர் எடுத்துச் சொல்லுகிறார். இதற்குக் காரணம் என்ன. நம்முடைய புண்ணியமும் நம்முடைய தர்மமும் நம்மை இரட்சிக்குமா. இரட்சிக்காது. இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசமே இரட்சிக்கும். ஆகிலும், இரட்சகர் வலதுபக்கத்தில் உள்ளவர்களுடைய விசுவாசத்தைக்குறித்துப் பேசியிருப்பாராகில், அது அவர் மாத்திரம் அறிந்த சங்கதியாகும். விசுவாசத்தின் பலனாகிய நற்கிரியைகளோ மற்றவர்களும் அறிந்த சங்கதி. விசுவாசம் இல்லாத இடத்

தில் நற்கிரியைகள் இராது. நற்கிரியைகள் எல்லாம் மெய் விசுவாசத்திற்குச் சாட்சி. இந்த நற்கிரியைகளும் குறைவில்லாதவைகளென்று சொல்லக்கூடாது. இயேசு இரட்சகரே தம்முடைய புண்ணியத்தால் விசுவாசிகளின் சகல குறைவையும் நிறைவாக்குகிறவர். அவர்கள் இந்த நற்கிரியைகளை மோட்சந்தரும் புண்ணியங்களாக நினைக்கிறதில்லை. ஆகையால் அவர்கள் ஆண்டவரே, உம்மை நாங்கள் எப்போது போஷித்தோம், உமக்கு எப்போது தாகந்தீர்த்தோம், உம்மை எப்போது சேர்த்துக்கொண்டோம், உமக்கு எப்போது வஸ்திரம் கொடுத்தோம் என்று சொல்லுவார்கள். அவர்கள் தங்கள் கணக்கில் வைக்காமல், உற்சாகமாய்ச் சகோதரருக்குச் செய்த நன்மைகளை எல்லாம் கர்த்தர் தமக்குச் செய்த நன்மையாக அங்கிகரித்து, அவைகளை யெல்லாருக்கும் முன்னும் மெய் விசுவாசத்துக்குச் சாட்சியாகச் சொல்லிக் காட்டுகிறார். எவனாகிலும் சீஷன் என்ற நாமத்துக்காக இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் குளிர்ந்த தண்ணீர் மாத்திரம் குடிக்கக்கொடுத்தால், தன் பலனை இழந்துபோகான் என்ற வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுகிறார் (மத். 10, 42).

நாம் எல்லாரும் கிறிஸ்துவின் வலது பாரிசத்தினின்று அவருடைய ஆசீர்வாதமுள்ள தீர்ப்பைக் கேட்கவேண்டுமேயானால், நாம் மெய் விசுவாசிகளாயிருக்கவேண்டும். கிறிஸ்துவை விசுவாசிக்கிற விசுவாசத்தைச் சகோதர சிநேகத்தினால் காண்பிக்கவேண்டும். விசுவாசிக்கிறேனென்று சொல்லியும், சகோதரரைச் சிநேகியாதவன் விசுவாசமுள்ளவன் அல்ல.

இப்படிப்பட்டவர்கள் கிறிஸ்துவின் இடப்பக்கத்தில் நிற்பார்கள். வலது பக்கத்திலுள்ளவர்களை, வாருங்கள் என்று சொன்ன இராசா, இடது பக்கத்திலுள்ளவர்களைப் போங்கள் என்று சொல்லுவார். அவரண்டை வரமாட்டோமென்று முரட்டாட்டமாய் எதிர்த்து நிற்கிறவர்கள் அவரை விட்டு அகன்று போவது நியாயம். அவர்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொள்ள அழைக்கப்பட்டிருந்தும், அதை அவர்கள் ஏற்றுக்கொள்ளாதபடியினால் சபிக்கப்பட்டவர்களாய்ப் போனார்கள். அவர்கள் பிதாவினால் சபிக்கப்பட்டவர்களல்ல. ஏனெனில் பிதா ஆசீர்வதிக்கிறவர். இவர்கள் தங்கள் பாவத்தால்தானே சபிக்கப்பட்டவர்கள். அவர்கள் கெட்டுப்போகிறதற்கு அவர்களே காரணர். அவர்கள் பங்கு நித்திய அக்கினியாகிய நரகத்திலே. நரகமோ மனிதருக்காக அல்ல, பிசாசுக்கும் அதன் தூதருக்கும் ஆயத்தமானது. எந்த மனிதர் பிசாசைத் தங்களுக்குச் சிநேகிதனாகத் தெரிந்துகொண்டார்களோ, அவர்கள் பிசாசோடு ஆக்கினைபெறுவது நியாயம். இடது பக்கத்திலுள்ளவர்களுக்கு நரகத்தீர்ப்புச் சொல்லுகிற இரட்சகர் அதற்குக் காரணத்தையும் சொல்லுகிறார். அவர்



அந்த மனிதர் நடப்பித்த கொலை விபசாரம் முதலிய பெரும்படியான அக்கிரமங்களை எடுத்துச் சொல்லுகிறதில்லை. அவர்கள் செய்யாமல் விட்ட நற்கிரியைகளையே சொல்லிக் காண்பிக்கிறார். ஏனெனில், பொதுவாய் மனிதரெல்லாரும் கர்த்தர் விலக்கின காரியங்களைச் செய்வதுதான் பாவமென்று சொல்லுவார்கள். அவர் கற்பித்தவைகளைச் செய்யாதிருப்பது அவ்வளவு பெரிய குற்றமல்ல என்று நினைப்பார்கள். இப்படி நாம் நினைக்கக்கூடாது. பாவத்தை விலக்கச் சொன்னவரே நன்மையைச் செய்யவும் சொல்லியிருக்கிறார். மெய்விசுவாசிகள் நற்கிரியைகளுக்குக் கனபத்தியான சனங்கள். அவிசுவாசிகளோ கர்த்தரைச் சிநேகிக்காதது போலவே, தங்கள் சகோதரரையும் சிநேகிக்காதவர்கள். அவர்களுடைய இருதயம் இயேசுவை விசுவாசிக்கிற விசுவாசத்தினாலே சுத்தமடையாதபடியால், அதிலே சிநேகம் உண்டானதில்லை. இந்தப் பெரிய குறைவை அறியாமல் பேசுகிற அவர்களைக் கர்த்தர் பார்த்து: நீங்கள் எல்லாரிலும் சிறியரான இவர்களில் ஒருவனுக்கு என்னசெய்யாதிருந்தீர்களோ, அதை எனக்குஞ் செய்யாதிருந்தீர்கள் என்பார். இயேசுநாதர் தாமே நேர்நேரே வந்து, அவர்களிடத்திலே ஏதாகிலும் உதவிதேடியிருந்தால், அவர்கள் அதைச் சந்தோஷமாகச் செய்திருப்பார்கள். ஆகிலும், அவருடைய கண்களில் அற்பமாகக் காணப்பட்ட ஏழை விசுவாசிகளுக்கு அவர்கள் யாதொரு நன்மையும் செய்ததில்லை. ஏழைச் சகோதரருக்கு நாம் நன்மைசெய்யாத குற்றம் கடைசிநாளில் நம்முடைய மேலே சுமராதபடிக்கு எச்சரிக்கையாயிருந்து, காலம் இருக்கக்கொள்ள யாவருக்கும் விசேஷமாய் விசுவாசத்தின் வீட்டாருக்கும் நன்மை செய்யக்கடவோம்.

இயேசு இராசா செய்யும் தீர்ப்பின்படியே விசுவாசிகள் நித்திய சீவனிலும் அவிசுவாசிகள் நித்திய வேதனையிலும் போவார்கள். நித்திய சீவனாகிய மோட்சம் எப்படி முடிவில்லாதிருக்குமோ அப்படியே நித்திய வேதனையாகிய நரகமும் முடிவில்லாதிருக்கும்.

இயேசுவே, மகத்துவமுள்ள இராசாவே, நீர் கடைசி நியாயத்தீர்ப்புக்கு வரும்பொழுது நாங்கள் உம்முடைய வலது பக்கத்தில் நின்றிருந்து, உம்முடைய ஆசீர்வாதமுள்ள வார்த்தையைக் கேட்பதற்கு எங்களை இப்பொழுதே பக்குவப்படுத்தும்படி உம்மைக் கெஞ்சிக்கேட்கிறோம். சுவாமி, ஆமென்.

# திரித்துவப் பண்டிகைக்குப் பிந்தின உஎ-ம் ஞாயிறு.

மத். 25, 1—13.

பிரியமானவர்களே,

இந்தக் கிழமையோடு திருச்சபை வருஷம் முடிகிறது. வருஷத்துக்கு முடிவு வருகிறதுபோல் நமக்கும் ஒரு நாளில் முடிவு வரும். இந்த உலகத்திற்கும் ஒரு நாளில் முடிவு வரும். நம்முடைய முடிவிலும் சரியே, உலக முடிவிலும் சரியே, கிறிஸ்து நம்மண்டைக்கு வருவார். அவர் உலக முடிவில் வருவதைக் குறித்து நம்முடைய சுவிசேஷ வாக்கியத்தில் சொல்லியிருக்கிறது. உலக முடிவு நாளே கிறிஸ்துவுக்கும் அவர் மணவாட்டியாகிய திருச்சபைக்கும் கலியாணம் முடியப்போகிற நாள். அப்பொழுது: இதோ மணவாளன் வருகிறார் என்கிற சத்தம் தொனிக்கும். நாம் ஆயத்தப்பட்ட மெய்விசுவாசிகளாயிருந்தால், அவரோடு நித்திய சந்தோஷத்திற்குள் பிரவேசிப்போம். அப்படிக்கில்லாவிட்டால், அவருடைய சந்தோஷத்திற்குப் புறம்பாயிருப்போம். அவருடைய சந்தோஷத்திற்குப் புறம்பாவதோ மகா பயங்கரம். இதை நம்முடைய இரட்சகர் பத்துக் கன்னியாஸ்திரிகளைப் பற்றிய உவமையால் நமக்கு நினைப்பூட்டுகிறார்.

இதோ, மணவாளன் வருகிறார் என்கிற சத்தத்தைக் குறித்துச் சிந்திப்போம்.

1. ஆயத்தப்பட்டவர்களுக்கு இது சந்தோஷ சத்தம்.
2. ஆயத்தப்படாதவர்களுக்கு இது பயங்கர சத்தம்.

## 1.

இதோ மணவாளன் வருகிறார் என்கிற சத்தம் ஆயத்தப்பட்டவர்களுக்குச் சந்தோஷ சத்தமாயிருக்கும்.

அப்போது வானராச்சியம் தங்கள் தீவட்டிகளைப் பிடித்து, மணவாளனுக்கு எதிர்கொண்டுபோகப் புறப்படுகிற பத்துக் கன்னியாஸ்திரிகளுக்கு ஒப்பாயிருக்கும். அவர்களில் ஐந்துபேர் புத்தியுற்றோரும் ஐந்துபேர் புத்தியற்றோருமாயிருந்தார்கள்.

யூதருக்குள் இரா நேரத்தில் கலியாணம் நடக்கும். மணவாளன் கலியாண வீட்டுக்கு வருவான். அவன் வருகிற நேரத்திலே ஆயத்தமாயிருக்கிற சில கன்னியாஸ்திரிகள் அவனோடேகூடக் கலியாண வீட்டுக்குப் போவார்கள். கலியாண வீட்டில் அவர்கள் மணவாளனுக்கும் மணவாளிக்கும் தோழிகளாயிருப்பார்கள். அவர்களுக்கு மிகுந்த மரியாதையும், நல்ல விருந்தும், மற்றச் சந்தோஷங்களும் அங்கே கிடைக்கும். இந்த வழக்கத்தை



அனுசரித்து, இயேசுநாதர் நம்முடைய வாக்கியத்தில் உள்ள உவமையைச் சொன்னார். இது கடைசிநாளில் கிறிஸ்தவர்கள் இருக்கும் நிலைமையைக் காண்பிக்கும் ஒரு கண்ணாடி.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே மணவாளன், அவருடைய அழகு சொல்லிமுடியாது. அவருடைய அன்பு மனதுக்கும் வாக்குக்கும் எட்டாது. அவர் மனுஷசாதியை இரட்சிக்கிறதற்காகத் தம்மையே ஒப்புக்கொடுத்தார். அவருடைய மணவாட்டி திருச்சபை. இந்தப் பெண்ணுக்கு அவர் போட்ட பரிசம் தம்முடைய பாடுகள் மரணத்தினால் சம்பாதித்த புண்ணியம். அவருக்கும் திருச்சபைக்கும் மோட்சலோகத்தில் கலியாணம் நிறைவேறும். அங்கே திருச்சபை தொல்லையில்லாமல் கிறிஸ்துவோடே என்றென்றைக்கும் வாழ்ந்திருக்கும். இந்தக் கலியாண சந்தோஷத்தால் மெய் விசுவாசிகள் பங்குபெறுவார்கள். இவர்களை நம்முடைய இரட்சகர் புத்தியுள்ள ஐந்து கன்னியாஸ்திரிகளுக்கு ஒப்பிடுகிறார். அந்தக் கன்னியாஸ்திரிகள் மணவாளனோடே கலியாண வீட்டுக்குள் போகிறதற்குத் தடைப்படாதபடிக்குச் செய்யவேண்டியதெல்லாம் செய்திருந்தபடியால், அவர்கள் புத்தியுள்ளவர்களே. அவர்களுடைய புத்தி பல சங்கதிகளிலும் வெளிப்பட்டது. அவர்கள் தங்கள் கைகளில் தீவட்டி வைத்திருந்தார்கள். தீவட்டிகள் இராவிலே வெளிச்சம் காண்பிக்கும். இந்த இருண்ட உலகத்திலே நம்மைச் சுற்றிலும் இருக்கிற அஞ்ஞானிகளுக்கு வெளிச்சம் காண்பிப்பது கிறிஸ்தவர்களுடைய கடமை. விசுவாசமில்லாமல் வெளிச்சம் காட்டமுடியாது. இந்த விசுவாசம் எண்ணெய்க்கு ஒப்பிடப்படுகிறது. புத்தியுள்ள கன்னியாஸ்திரிகள் தீவட்டியோடு எண்ணெயையும் கொண்டுபோனதால், அவர்கள் மெய் விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களுக்கு ஒப்பனையாயிருக்கிறார்கள். மெய் விசுவாசமுள்ளவர்களே புத்தியான்கள். புத்தியுள்ள கன்னியாஸ்திரிகளின் தீவட்டிகள் அணைந்துபோகாமல் எரிந்துகொண்டேயிருந்தது. இப்படியே மெய்க்கிறிஸ்தவர்கள் விசுவாசத்தில் நிலைத்திருந்து, தங்கள் நற்கிரியைகளினால் தங்களைக் கிறிஸ்தவர்களென்று எப்பொழுதும் ரூபித்துக்கொண்டிருக்கிறார்கள். மனுஷர் உங்கள் நற்கிரியையைக் கண்டு, பரமண்டலங்களிலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்துகிறதற்காக உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது (மத். 5, 16) என்று இரட்சகர் தம்முடைய சீஷப்பிள்ளைகளுக்குப் புத்தி சொன்னார். புத்தியுள்ள கன்னியாஸ்திரிகள் நித்திரை மயக்கமாகித் தூங்கிவிட்டார்களென்று வாசிக்கிறோம். இது அவர்களிடத்தில் காணப்பட்ட ஒரு குறைவுதான். மெய் விசுவாசிகளுக்கும் சோதனை வருவதுண்டு. அவர்கள் சோதனை காலத்தில் சற்றே

சோர்ந்துபோய், விசுவாசத்தில் தளர்ச்சி அடைவார்கள். ஆகிலும், அவர்கள் விசுவாசத்தை விட்டு விழுந்துபோகமாட்டார்கள். இந்தப் புத்தியுள்ள கன்னியாஸ்திரிகளின் தீவட்டிகள் அணைந்து போகவில்லை. துன்பத்திலும் துக்கத்திலும் கிறிஸ்துவை விட்டு விடாமல், கிறிஸ்துவினிடத்தில் தரித்திருக்கிறவனே மெய் விசுவாசி. ஆண்டவரே, யாரண்டைக்குப் போவோம்; உம்மிடம் நித்திய ஜீவனுடைய வசனங்கள் உண்டாயிருக்கிறது. நீர் ஜீவனுள்ள பராபரனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்கிறதை நாங்கள் விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறோம் என்று மெய்விசுவாசி சொல்லுகிறான் (யோவா. 6, 68. 69).

பாதி இராத்திரியிலே: இதோ மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டுபோகப் புறப்படுங்கள் என்கிற கூக்குரல் உண்டாயிற்று என்று வாசிக்கிறோம். கிறிஸ்து வருகிறதற்கு நாள் செல்லும் இப்போது அவர் வரமாட்டார் என்று சொல்லி, மனிதர் கவலையற்றிருக்கும்போது அவர் திடீரென்று வருவார். இதோ மணவாளன் வருகிறார் என்ற சத்தம், ஆயத்தமாயிருந்தவர்களுக்கு எவ்வளவு சந்தோஷமாயிருக்கும். இப்படியே கிறிஸ்து வருகிறாரென்று கர்த்தருடைய தூதர்களும் அவருடைய ஊழியக்காரர்களும் கூறும் பொழுது விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களுக்கு எவ்வளவு சந்தோஷம். அவர்களுக்குக் கிறிஸ்துவின்பேரிலேயே நாட்டம். அவர்கள் விழித்திருந்தாலும், நித்திரை செய்தாலும், அவர் பேரிலேயே ஆசை வைத்திருக்கிறார்கள். அவர்கள் அயர்ந்துபோனாலும், சுவிசேஷ பிரசங்கத்தைக் கேட்கும்பொழுது விழித்துக்கொள்ளுகிறார்கள். அவர்களுக்கு உலக சந்தோஷத்தின் மேல் பிரியமில்லை. கிறிஸ்துவோடு அனுபவிக்கும் சந்தோஷமே அவர்கள் காத்திருக்கும் சந்தோஷம். இரட்சகருக்குக் காத்திருக்கிறவர்களே புத்திமான்கள். ஏனென்றால் அவர்களை மணவாளன் ஏற்றுக்கொள்ளுகிறார். அவர்கள் மணவாளனோடே கலியாண வீட்டுக்குள் பிரவேசித்து, அங்கே சகல சந்தோஷங்களையும் அனுபவிக்கிறார்கள். இதுவே அவர்கள் காத்திருந்த முடிவு. எல்லாம் நன்றாயிருந்தும் முடிவு கெட்டுப்போனால் என்ன பிரயோசனம். நல்ல முடிவு கிடைப்பதே ஒவ்வொருவனுக்கும் முக்கிய காரியம்.

பிரியமானவர்களே, நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய வருகைக்கு ஆயத்தமாயிருப்போமாக. அவர் வருகிற வேளை நமக்குத் தெரியாது. ஆகையால் ஒவ்வொரு நாளும் அவர் வரக்கூடிய நாளென்று நாம் நினைக்கவேண்டும். பாவ நித்திரையில் நாம் தூங்கிவிடக்கூடாது. பிசாசு உலகம் மாமிசம் என்ற சத்துருக்களால் நமக்கு அசதிவந்தாலும், கர்த்தர் நம்மைத் தம்முடைய வசனத்தினால் தட்டி எழுப்புகிறார். அவருடைய வசனத்தைக் கருத்தாய்க் கேட்டு விழித்துக்கொள்ளவேண்டும். நாம் கிறிஸ்துவை



விசுவாசிக்கவும் விசுவாசத்திலே நிலைத்திருக்கவும் நமக்குத்தானே பெலனில்லை. அதற்கு வேண்டிய பெலன் பரிசுத்த ஆவியினால் வரவேண்டியது. பரிசுத்த ஆவிதான் நமக்கு விசுவாசத்தைக் கொடுக்கிறவர்.

உம்மை அண்டினேன், அது அவியாப்படிக்கு
என்னைத் தேற்றுமேன், எண்ணெய் வாருமேன்,
விசுவாசத்தின் திரிக்கு உண்மை அண்டினேன்

என்று நாம் கருத்தோடே ஜெபம்செய்யவேண்டும். நம்முடைய இருதயங்களில் பரிசுத்த ஆவியானவர் தங்கி, நம்மை விசுவாசத்தில் காப்பாற்றுவாரானால், நாம் திடீரென்று மரிக்கவேண்டியதாயிருந்தாலும், அல்லது திடீரென்று கிறிஸ்து இந்த உலகத்துக்கு வந்தாலும், நமக்குப் பயமில்லை. அவர் நமக்கு ஆயத்தம்பண்ணியிருக்கும் சந்தோஷத்துக்குள் நாம் பிரவேசிப்பதற்குத் தடையிராது. இதோ மணவாளன் வருகிறார் என்கிற சத்தம் நமக்குச் சந்தோஷமான சத்தமாகவேயிருக்கும்.

## 2.

இதோ மணவாளன் வருகிறார் என்கிற சத்தம் ஆயத்தப்படாதவர்களுக்குப் பயங்கர சத்தமாயிருக்கும்.

ஆயத்தமில்லாத பொய்க் கிறிஸ்தவர்கள் புத்தியற்ற ஐந்து கன்னியாஸ்திரிகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். அவர்கள் தீவட்டிகளைப் பிடித்தும், கையோடே எண்ணெய் கொண்டுபோனதில்லை. இந்தப் புத்தியற்ற கன்னியாஸ்திரிகள் புத்தியுள்ளவர்களைப்போலவே கைகளில் தீவட்டிகளைப் பிடித்திருந்தார்கள். மெய்க் கிறிஸ்தவர்களுக்கும் பொய்க் கிறிஸ்தவர்களுக்கும் அடிக்கடி வித்தியாசம் தெரிகிறதில்லை. எல்லாரும் ஒரே கோயிலுக்கு வந்து, ஒரே ஆராதனை செய்து, ஒரே விசுவாசத்தை அறிக்கையிடுகிறதினாலே, எல்லாரும் மெய்க் கிறிஸ்தவர்கள் போலவே தோன்றுவார்கள். அவர்களுக்குள் இருக்கிற வித்தியாசம் கர்த்தருக்குத் தெரியும். அது ஒருநாளில் வெளிக்கு வரும். பொய்க் கிறிஸ்தவர்களின் மாயமும் வேஷமும் வெகு நாளைக்கு நிற்காது. மாயமும் வேஷமும் புத்தியான காரியங்கள் அல்ல. இந்தப் புத்தியற்ற கன்னியாஸ்திரிகளைப் பாருங்கள் அவர்கள் தீவட்டியைப் பிடித்திருந்தும், கைகளில் எண்ணெய் கொண்டுபோகாதிருந்தார்கள். மனுஷ பார்வைக்குக் கிறிஸ்தவர்களாகக் காணப்பட்டும், இயேசுநாதரை விசுவாசியாத பொய்க் கிறிஸ்தவர்கள் இவர்களைப் போலிருக்கிறார்கள். மோட்சம் கிடைக்கும் என்கிற நம்பிக்கை அவர்களுக்கு இருக்கமுடியாது. எங்கே விசுவாசமில்லையோ அங்கே நம்பிக்கையில்லை. நம்பிக்கையில்லாத கிறிஸ்தவர்

கள் இருந்தென்ன, இறந்தென்ன. இந்தப் புத்தியற்ற கன்னியாஸ்திரிகளுக்கு எண்ணெயில்லாமல் போனது எதினால். அவர்கள் எண்ணெய் வாங்கக்கூடிய நேரத்திலே அதை வாங்கவில்லை. கடை திறந்திருக்கிறபோது கடைக்குப் போய் எண்ணெய் வாங்கியிருக்கவேண்டும். அப்படியே விசுவாசமாகிய எண்ணெயை நாம் ஏற்கனவே சேகரித்துக்கொள்ளவேண்டும். பரிசுத்த ஆவியானவர் நமக்கு விசுவாசத்தைக் கொடுக்கிறவர். அவருடைய வசனமும் ஞானதிரவியங்களும் பராபரனுடைய கிருபையையும் பரிசுத்த ஆவியையும் அளிக்கும் எத்தனங்கள். பராபரனுடைய வசனத்தைக் கருத்தும் கவனமுமாகக் கேட்டு, ஞானதிரவியங்களைச் சரியாய்க் கையாடுகிறவர்களுக்குள் பரிசுத்த ஆவி விசுவாசத்தை உண்டாக்குகிறார். இப்படியிருந்தும், எங்களுக்கிருக்கிற விசுவாசம் போதும் என்று சொல்லி, வேத வசனத்தையும் ஞானதிரவியங்களையும் அசட்டைபண்ணுகிறவர்கள் தங்கள் விசுவாசத்தை இழந்து கெட்டுப்போவார்கள். நாம் காலமிருக்கும்பொழுது நம்முடைய இரட்சிப்புக்கானவைகளைத் தேடிக்கொள்ளவேண்டும். இதுவே இரட்சிப்பின் காலம். இந்தக் காலத்தைத் தப்பவிட்டால், நாம் விசுவாசமற்று இரட்சிப்பை இழந்துபோவோம்.

இதோ மணவாளன் வருகிறார் என்கிற சத்தம் கேட்டபொழுது புத்தியற்றோர் நித்திரை மயக்கத்திலிருந்து எழுந்து கலங்கினார்கள். அவர்கள் தீவட்டிகள் அணைகிறதாயிருந்தன. வார்க்கிறதற்கோ அவர்களிடத்தில் எண்ணெயில்லை. இப்படித்தான் பேர்க்கிறிஸ்தவர்கள் கிறிஸ்து வருகையில் கலங்குவார்கள். அவர்களுக்கு விசுவாசம் இல்லாதபடியால், கிறிஸ்துவுக்கு எதிர்கொண்டுபோகப் பயப்படுவார்கள்.

அந்தப் புத்தியற்ற கன்னியாஸ்திரிகள் புத்தியுள்ளவர்களிடத்தில் போய்: உங்கள் எண்ணெயிலே எங்களுக்குக் கொஞ்சம் தாருங்கள்; ஏனெனில் எங்கள் தீவட்டிகள் அணைந்துபோகிறது என்றார்கள். ஆனால் புத்தியுள்ளோர் பிரத்தியுத்தரமாக: அப்படிவேண்டாம்; எங்களுக்கும் உங்களுக்கும் போதாமல் போகாதபடிக்கு, நீங்கள் விற்கிறவர்களிடத்திலே போய், உங்களுக்குக் கொள்ளுங்கள் என்றார்கள். இது பரிதாபம். அவனவன் இரட்சிக்கப்படுவதற்கு அவனவனுக்கு விசுவாசம் தேவை. ஒருவனுடைய விசுவாசம் மற்றொருவனுக்கு ஆத்தும இரட்சிப்பைக் கொடுக்காது. தன் விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பானென்று எழுதியிருக்கிறது.

புத்தியற்ற கன்னியாஸ்திரிகள் எண்ணெய் வாங்கும்படி கடைத்தெருவிற்குப் போகிறபோது மணவாளன் வந்துவிட்டார். அப்பொழுது ஆயத்தமாயிருந்தவர்கள் கலியாண வீட்



டுக்குள் பிரவேசித்தார்கள்: கதவும் பூட்டப்பட்டது. சமயமிருக்கும்பொழுதே விசுவாசத்தைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் சமயம் தப்பினபின் அதைத் தேடுவது வீண், நடு இராத்திரியிலே கடை சாத்தியிருக்கும். ஆகையினாலே நம்முடைய இரட்சகர்: வேலைசெய்யக்கூடாத இராக்காலம் வருமென்று தம்முடைய சீஷர்களை எச்சரித்தார். விசுவாசமில்லாமல் கலங்கித் தவிக்கும் நேரத்திலே கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வந்துவிடுவார். ஆயத்தப்பட்டவர்களாய்த் தமக்குக் காத்திருந்தவர்களை மோட்சத்தில் சேர்த்துக்கொள்வதுபோலே தமக்கு ஆயத்தப்படாதவர்களைப் புறம்பாக்கிப் போடுவார். அவர் ஆரும் திறக்கக்கூடாமல் பூட்டுகிறவர். அவர் பூட்டின கதவைத் திறந்து, அவர் தள்ளின மனுஷர்களை மோட்சத்துக்குள் எவன் கொண்டு போகக்கூடும்.

மணவாளன் கலியாணத்துக்குள் பிரவேசித்துக் கதவு பூட்டின பின், மற்றக் கன்னியாஸ்திரிகளும் வந்து: ஆண்டவரே, ஆண்டவரே, எங்களுக்குத் திறவும் என்றார்கள். ஆனால் அவர் பிரத்தியுத்தரமாக: உங்களை அறியேனென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். கர்த்தர் விசுவாசிகளை மோட்சத்தில் ஏற்றுக்கொண்டு அவிசுவாசிகளை அதற்குப் புறம்பாக்கி விடுவார். அப்படி அவர் செய்தபின் ஒரு மாறுதலும் உண்டாகாது. ஐசுவரியவான் வேதனையுள்ள ஸ்தலத்துக்கும், லாசரு ஆபிரகாமின் மடிக்கும் போன செய்தி நமக்குத் தெரியும். லாசரு ஐசுவரியவானிடத்தில் போகவும், ஐசுவரியவான் லாசருவிடத்தில் போகவும் கூடாதபடிக்கு மோட்சத்துக்கும் நரகத்துக்கும் நடுவே பெரும் பிளப்பு இருப்பதாக ஆபிரகாம் சொன்னார். மேலும், ஒரு காலத்திலே இயேசுநாதரை ஆண்டவரென்று அறிந்து அவரை அறிக்கையிட்டு அவருடைய சபையிலேயிருந்தபடியினாலே, பின்னால் விசுவாசம் தப்பிப்போயும், எப்படியாவது மோட்சத்தில் சேரலாமென்று நம்பிக்கொண்டிருக்கிறது வீண். நாம் எவ்வளவுநாள் கிறிஸ்தவர்களாயிருந்தாலும், முடிவு பரியந்தம் நாம் விசுவாசத்தில் நிலைத்திராவிட்டால், கிறிஸ்து நம்மை ஏற்றுக்கொள்ளமாட்டார். அவர் அறியேனென்று சொல்வார். அவருக்கு ஒவ்வொருவனையும் தெரியாதா. அவர் எல்லாரையும் அறிந்தவரல்லவா. அப்படியிருக்க, அவர் அறியேனென்று சொல்வதெப்படி. அவர் பொய்க்கிறிஸ்தவர்களைத் தம்முடையவர்களென்று அறிந்திருக்கிறதில்லை. நீங்கள் என்னுடையவர்கள் என்று எனக்குத் தெரியாது, உங்கள் பெயர் ஜீவ புஸ்தகத்தில் இல்லையென்று அவர் சொல்லி, அவர்களைத் தள்ளிப்போடுவார். இப்படியே பேர்க்கிறிஸ்தவர்களுக்கு, இதோ மணவாளன் வருகிறாரென்ற சத்தம் சந்தோஷமான சத்தமல்ல. அது பயங்கரமான சத்தம்.

பிரியமானவர்களே, நம்முடைய சங்கதி எப்படி. நாமும் புத்தியற்ற கன்னியாஸ்திரிகளா. ஐயோ, அது பயங்கரம். நாம் விசுவாசமற்றவர்களாயிருந்தால், நாம் ஞானஸ்நானம் பெற்றுப் பிரயோசனம் என்ன, கோயிலுக்கு வந்து காரியம் என்ன. இரட்சகர் வரும்போது நம்மை ஆயத்தமற்றவர்களாகக் கண்டு, மோட்ச ராச்சியத்திற்குப் புறம்பாக்கிவிடுவாரானால், நம்முடைய நிலைமை எப்படியிருக்கும். ஆகையால், இப்பொழுதே நாம் சாக்கிரதைப்பட்டு, கர்த்தர் சொல்லுகிற எச்சரிப்பு வார்த்தைகளைக் கேட்போமாக. ஆனபடியினால், விழித்திருங்கள்; ஏனெனில் மனுஷனுடைய குமாரன் வரும் நாளையாகிலும் நாழிகையை யென்கிலும் அறியீர்கள் என்றார்.

எங்கள் கர்த்தாவாகிய இயேசுகிறிஸ்துவே, நீர் வரும் நாளும் நாழிகையும் எங்களுக்குத் தெரியாதிருப்பதால், நாங்கள் எந்நேரமும் விழித்திருக்கவும், எங்கள் இரட்சிப்பைப் பயத்தோடும் நடுக்கத்தோடும் நடப்பிக்கவும் கூடும்படிக்கு எங்களுக்கு உம்முடைய பரிசுத்த ஆவியைக்கொண்டு மெய் விசுவாசம் தந்தருளும், சுவாமி. ஆமேன்.

---

## மிசியோன் ஸ்தோத்திரப் பண்டிகை.

மத். 28, 18—20.

பிரியமானவர்களே,

அஞ்ஞான தேசத்தாராகிய நமக்குப் பராபரனாகிய கர்த்தர் சுவிசேஷத்தைக்கொண்டு செய்திருக்கும் சொல்லிமுடியாத நன்மைகளை நினைத்து, அவரை ஸ்தோத்திரிக்கும்படி இப்பொழுது இங்கே கூடிவந்திருக்கிறோம். அஞ்ஞானிகளுக்குச் சுவிசேஷம் பிரசங்கித்து, ஞானஸ்நானம் கொடுத்து, அவர்களைத் திருச்சபையில் சேர்க்கும் வேலை மிசியோன் வேலை என்னப்படும். இத்தேசத்திற்கு முதல் முதல் வந்த சுவிசேஷ போதகருக்கு சீகன்பால்க் சிரேஷ்டர் என்று பெயர். இவர் 1706-ம் (வரு) ஜூலை மீ, 9-ம் உ தரங்கன்பாடியில் கரையிறங்கினதினால் இந்தத் தேதியில் வருஷந்தோறும் மிசியோன் ஸ்தோத்திரப் பண்டிகை கொண்டாட நமது பெரியோர் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். நாம் பராபரனிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளுகிற எல்லா நன்மைக்காகவும் ஸ்தோத்திரம் செலுத்துவது நியாயம். அப்படியானால், நம்முடைய ஆத்துமாவுக்கு இரட்சிப்பைக் கொடுக்கும் சுவிசேஷத்தை நாம் பெற்றுக்கொண்டதற்காகவும், அதினால் உண்டாகும் பெரிய நன்மைகளை அநுபவிக்கிறதற்காகவும் நாம் பராபரனை ஸ்தோத்திரிக்கிறது நியாயமல்லவா. ஆகையினால் நம்மில் ஒவ்வொருவனும் இன்றைக்கு: என் ஆத்துமாவே கர்த்தரையும், என் முழு உள்ளமே அவருடைய பரிசுத்த நாமத்தையும ஸ்தோத்திரி, என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி, அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதிரு என்று சொல்லி, கர்த்தரை மகிமைப்படுத்த வேண்டியது. இப்படி நாம் கர்த்தரை ஸ்தோத்திரிக்க நம்முடைய சுவிசேஷ வாக்கியம் நமக்கு நல்ல உதவிசெய்யும். இதை ஆதாரமாக வைத்து,



**மிசியோன் ஸ்தோத்திரப் பண்டிகையைப் பற்றி மூன்று காரியங்களைக் கேட்போம்.**

1. நாம் யாரை ஸ்தோத்திரிக்க வேண்டும்.
2. ஏன் ஸ்தோத்திரிக்க வேண்டும்.
3. எப்படி ஸ்தோத்திரிக்க வேண்டும்.

நாம் இன்றைக்கு யாரை ஸ்தோத்திரிக்க வேண்டும்.

மிசியோன் கிரியையை ஏற்படுத்தி அதை நடத்திவருகிற கர்த்தரை ஸ்தோத்திரிக்க வேண்டும். மிசியோன் கிரியையை ஏற்படுத்தினவர் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து. அவர் பாவிகளாகிய நமக்காகப் பரிதபித்து, நம்மைப் பிசாசின் ராச்சியத்திலிருந்து விடுதலைப்பண்ண இந்தப் பூலோகத்துக்கு வந்தார். நம்மைப்போல் ஏழை மனுஷ ரூபமெடுத்தார். நம்முடைய பாவத்தைச் சுமந்து, சொல்லி முடியாத பாடுகளைப் பட்டார். தம்முடைய பரிசுத்த இரத்தத்தைச் சிந்தி மரணமடைந்தார். அவர் நமக்காக மரணத்தை ஜெயித்துப் பிசாசின் தலையை நசுக்கினார். அவர் நம்முடைய சத்துருக்களை மேற்கொண்ட வெற்றிவேந்தராய்ப் பரத்துக்கு ஏறினார். அவருக்குப் பரலோகம், பூலோகம், பாதாளலோகம் எல்லாம் கீழ்ப்படிகிறது. ஆகையினாலே அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் எனக்குச் சகல அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று திருவுளம்பற்றினார். அவருக்கு வானத்தில் சகல அதிகாரமும் உண்டு. வானத்தின் திறவுகோல் அவருடைய கையிலிருக்கிறது. ஒருவனுக்கு வானத்தைத் திறக்கவும் மற்றொருவனுக்கு அதைப் பூட்டவும் அவருக்கு மாத்திரம் அதிகாரம உண்டு. வானலோகத்தில் பிரவேசித்திருக்கிற பரிசுத்தவான்கள் அவரை மகிமைப்படுத்தி: அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பலத்தையும் கனத்தையும், மகிமையையும் இஸ்தோத்திரத்தையும் ஏற்றுக்கொள்ளப் பாத்திரமாயிருக்கிறது என்று பாடுகிறார்கள் (அறி. 5, 12). பரலோகவா

சிகளாகிய தேவதூதர்கள் எல்லாரும் அவரைத் தங்கள் இராசா என்று சொல்லி, மகிமைப்படுத்துகிறார்கள். அப்படியே பூமியிலும் அவருக்கு அதிகாரம் உண்டு. சகல சிருஷ்டிகளும், அவருடைய சொல்லுக்கு அடங்கி நடக்கும். சகல மனிதரும் அவருடைய அதிகாரத்துக்குத் தங்களை மனதாரக் கீழ்ப்படுத்தி, அவரைத் தங்கள் இரட்சகரும் இராசாவுமாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது அவருடைய சித்தம். அவருடைய அதிகாரத்துக்கு விசுவாசத்தினால் தங்களைக் கீழ்ப்படுத்துகிறவர்கள் ஆரோ, அவர்களுக்கு அவர் மோட்சலோகத்தைத் திறந்துவிடுகிறார். மோட்சலோகத்தில் இந்த உலகத்தார் யாவரும் போய்ச் சேர வேண்டுமென்கிற ஆசை அவருக்கு மிகுதி. ஆகையினால், நீங்கள் உலகமெங்கும் போய் சகல சாதிகளையும் சீஷராக்குங்கள் என்கிற கற்பனையைத் தம்முடைய சீஷருக்குக் கொடுத்தார். இப்படியே மிசியோன் கிரியையை ஏற்படுத்தின கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை நாம் நம்முடைய முழு இருதயத்தினாலும் ஸ்தோத்திரிக்கவேண்டும்.

நம்முடைய இரட்சகர் மிசியோன் கிரியையை ஏற்படுத்தினவராகமாத்திரம் அல்ல, அதை நடத்திவருகிறவராயும் இருக்கிறார். மிசியோன் கிரியையை நடத்த இயேசுவை அல்லாமல் அப்போஸ்தலருக்குப் பலம் ஏது. அவர் தாமே அவர்கள் பேரில் பரிசுத்த ஆவியை ஊற்றினார். இதோ, நான் உலக முடிவுமட்டாக சகல நாட்களிலும் உங்களுடனே கூட இருக்கிறேனென்று தாம் சொன்னதின்படியே அவர்களோடிருந்தார். அவர்களைப் பலப்படுத்தினார். அவர்களுடைய பிரசங்கத்தையும் வேலையையும் ஆசீர்வதித்தார். அவர்களைக்கொண்டு ஆயிரக் கணக்கான பேர்களைச் சபையில் சேர்த்தார் (அப். 2, 47).

அப்போஸ்தலமாரோடிருந்தவர் மிசியோன் கிரியையைச் செய்கிற ஊழியர் எல்லாரோடும் இருக்கிறார். உலக முடிவுமட்டும் மிசியோன் கிரியையை நடத்துகிறவர் அவரே. தரங்கன்பாடிக்குச் சுவிசேஷ போதகர்களை அனுப்பவேண்டுமென்கிற நல்ல எண்ணத்தை நாலாம் பிரதிரிக்கென்ற தென்மார்க்கு இராசாவின் மனதில் உண்டாக்கினவர் கர்த்தரே. சீகன்பால்க் சிரேஷ்டரையும் அவருக்குப் பின் வந்த குருமாரையும் மிசியோன் ஊழியத்துக்குப் பக்குவப்படுத்தி, அவர்களுடைய வேலைகளை ஆசீர்வதித்து வாய்க்கப்பண்ணினவர் அவரே. சீகன்பால்கு சிரேஷ்டர் தரங்கன்பாடியிலே காலடிவைத்த நாளில் அவரை ஒருவரும் ஏற்றுக்கொள்ளாமல், நாள் முழுவதும் அவரை வெயிலிலே நிற்கவிட்டார்கள். அதற்குப் பின்னும் அவருக்கு உண்டான சங்கடங்களும் துன்பங்களும் அநேகம். இதனாலெல்லாம் அவர் இளைத்துப் போகாமல் வேலைசெய்யும்படிக்கு அவரைப் பலப்



படுத்தினவர் கர்த்தர் அல்லவா. நாளதுவரையில் இந்தத் தேசத்தில் பல திக்குகளிலும் தைரியமாய்ச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துச் சபைகளைச் சேர்க்கிறதற்கு உதவி செய்கிறவர் கர்த்தரே அல்லாமல் வேறொருவரல்ல. மிசியோன் வேலை கர்த்தர் நடப்பிக்கிற வேலையாயிராவிட்டால் இத்தனை காலம் இந்தத் தேசத்திலே ஒரு போதகராவது இருக்க முடியாது, ஒருவனாவது கிறிஸ்தவனாயிருக்கமாட்டான். நமது நடுவே சபையும், கோயிலும், குருமாரும் இருக்கும்படி கிருபை செய்தவர் கர்த்தர் என்பதை அறிந்து அவரை ஸ்தோத்திரிப்பது தகுதி.

## 2.

மிசியோன் ஸ்தோத்திரப் பண்டிகையைக் கொண்டாடுகிறவர்கள் நாம் ஏன் கர்த்தரை ஸ்தோத்திரிக்க வேண்டுமென்பதை அறிந்திருப்பது நியாயம்.

நாம் மிசியோன் கிரியையைக்கொண்டு இதுவரையில் பெற்றிருக்கிற நன்மைகள் சொல்லி முடியாது. நம்மைச் சூழ இருக்கிற ஏழை அஞ்ஞானிகள் இருக்கிற நிர்ப்பந்த நிலைமையைக் கவனிப்போமாக. அஞ்ஞானிகளெல்லாரும் இஸ்ரவேலருடைய காணியாட்சிக்கும் புறம்பான அந்நியர், வாக்குத்தத்த உடன்படிக்கைக்குப் பரதேசிகள், நம்பிக்கையில்லாதவர்கள், இந்த உலகத்தில் பராபரனற்றவர்கள் (எபே. 2, 11. 12). நம்முடைய தேசத்திலுள்ள அஞ்ஞானிகள் பசாசுக்கு அடிமைகள், பிராமணருக்கு அடிமைகள், பிரமா விஷ்ணு சிவன் என்ற பாவமுள்ள மும்மூர்த்திகளுக்கு அடிமைகள், முப்பத்துமுக்கோடி பொய்த் தேவர்களுக்கு அடிமைகள், காளி, காட்டேரி முதலிய துஷ்ட தேவதைகளுக்கு அடிமைகள். அவர்களுக்குப் பராபரன் இல்லை. நம்பிக்கை இல்லை. பொய், திருட்டு, விபசாரம் முதலிய அக்கிரமங்களை நடப்பித்த அந்தத் தேவர்களுக்கு என்ன கதியோ, அதுவே அவர்களை நம்பினவர்களுக்கும் கதி. நாமோ சுவிசேஷத்தினால் மெய்யான பராபரனை அறிந்திருக்கிறோம். இயேசு என்கிற நம்முடைய அருமை இரட்சகர் நம்மை மீட்டு இரட்சித்தார். அவர் நம்மைச் சுவிசேஷத்தைக்கொண்டு வரவழைத்தார். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே நாம் பெற்ற ஞானஸ்நானத்தினால் நம்மைத் தம்முடைய சீஷராக்கினார். முன்னே பசாசுக்கும் பிராமணர்களுக்கும் அடிமைகளாயிருந்த நாம், இப்பொழுது கிறிஸ்துவின் சீஷர், பராபரனுடைய பிள்ளைகள், மோட்ச சுதந்தரவாளிகள்.

நான் உங்களுக்குக் கற்பித்ததெல்லாவற்றையும் கைக்கொள்ள அவர்களைப் போதியுங்கள் என்று கர்த்தர் சொன்னார். அவர் சொன்னபடியே நமக்குப் போதனை நடக்கிறது. பராபர

னுடைய திருவசனமாகிய வேத புஸ்தகம் நம்முடைய சொந்தப் பாஷையிலே நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எங்கே பார்த்தாலும், சத்தியவேதமாயிருக்கிறது. நாம் விசுவாசிக்க வேண்டிய சத்தியங்களையும் கைக்கொள்ள வேண்டிய பிரமாணங்களையும் வேத புஸ்தகத்தினால் தெளிவாய் அறிந்துகொள்ளலாம். நம்முடைய தேசத்திலுள்ள எல்லாப் பொக்கிஷங்களிலும் பெரிய பொக்கிஷம் சத்திய வேதம். அது பொன்னிலும் அபரஞ்சியிலும் மேலானது. இதற்காக நாம் பராபரனை ஸ்தோத்திரிக்கிறது நியாயமல்லவா.

நாம் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டதினாலே பராபரனுடைய பிள்ளைகளானோம். இப்பொழுது நாம் அவரை நோக்கி: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே என்று கூப்பிடுகிறோம். அவர் நம்முடைய தகப்பனும் நாம் அவருடைய பிள்ளைகளுமாயிருக்கையில், நமக்கு என்ன குறைவுண்டு. நாம் எல்லாக் காலத்திலும் அவருடைய நாமத்தை வணங்கி வேண்டிக்கொண்டு புகழ்ந்து ஸ்தோத்திரிப்போம்.

நமக்குக் கிடைத்திருக்கிற நன்மைகளையெல்லாம் திரட்டி, ஒரே வார்த்தையில் சொன்னால் அது இரட்சிப்புத்தான். கிறிஸ்துமார்க்கத்தில் நாம் சேர்ந்ததினாலே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டது. நம்முடைய இருதயம் சந்தோஷத்தினால் நிறைந்திருக்கிறது. இப்பொழுது நமக்கு மரணம் வந்தாலும், நமக்குப் பயமில்லை. நமக்கு மோட்சம் காத்துக்கொண்டிருக்கிறது. அங்கே நமக்குப் பராபரன் ஆயத்தம்பண்ணியிருக்கிறவைகளைக் கண் கண்டதுமில்லை, காது கேட்டதுமில்லை, ஒருவனுடைய இருதயத்துக்குள் நுழைந்ததுமில்லையென்று வேதம் சொல்லுகிறது.

இவைகளினால் நாம் கர்த்தரை ஸ்தோத்திரிக்கவேண்டுமென்று அறிவோம்.

3.

நாம் எப்படி கர்த்தரை ஸ்தோத்திரிப்போம். உதடுகளின் கனியாகிய துதியின் பலியைச் செலுத்தக்கடவோம் என்று அப்போஸ்தலன் சொல்லுகிறார். ஆகையால் நாம் இன்றைக்குக் கீர்த்தனங்களாலும் ஞானப்பாட்டுகளாலும் பராபரனை மகிமைப்படுத்துவது நியாயம். ஆகிலும், நம்முடைய நாவோடு இருதயம் சேராவிட்டால், அந்த ஸ்தோத்திரம் கர்த்தருக்கு அருவருப்பு. மனமும் வாக்கும் ஒத்துக் கர்த்தரை ஸ்தோத்திரிக்கவேண்டும். கர்த்தரால் சுத்தமாக்கப்பட்ட பத்துக் குஷ்டரோகிகளில் ஒன்பதுபேர் கர்த்தருடைய தேவாலயத்துக்குப் போய் மோசேயின் பிரமாணப்படி காணிக்கைகளைச் செலுத்தியும், அவைகள் அவருக்குப் பிரியமாயிருந்ததில்லை. நன்



றியுள்ள ஒருவன்பேரில் மாத்திரம் அவர் சந்தோஷமானார். அவன் ஒருவனே அவரால் இரட்சிப்பை அடைந்தான். ஆகையால் மிசியோனைக்கொண்டு நமக்குச் சொல்லிமுடியாத உபகாரங்களைச் செய்த பராபரனுக்கு நம்முடைய இருதயத்தை ஒப்புக்கொடுப்போமாக.

நாம் வாயினாலே கர்த்தரை ஸ்தோத்திரித்தும், கிறிஸ்துமார்க்கத்துக்கு ஏற்காத நடக்கை நமக்கு இருக்குமானால், அது பரிகாசம். சன்மார்க்க நடக்கை பராபரனுக்கு ஏற்ற ஸ்தோத்திரம். நாம் அஞ்ஞான மார்க்கத்தைத் தள்ளினோம். இனி நாம் அதற்கு எந்த விதத்திலும் உடந்தையாயிருக்கக் கூடாது. நல்ல நாள் நாழிகை பார்க்கிறவர்கள், பல வித அஞ்ஞான சடங்குகளைச் செய்கிறவர்கள் கிறிஸ்தவர்கள் அல்ல. நாமும் அஞ்ஞானிகளைப்போல், பொய் விபசாரம் திருட்டு குடிவெறி முதலிய பாவங்களை நடப்பித்தால், நாம் கிறிஸ்துவின் மார்க்கத்துக்கு நிந்தையை உண்டுபண்ணுவோம். அஞ்ஞானிகள் அப்படி நடப்பது ஆச்சரியமல்ல; ஏனெனில் அவர்கள் தேவர்கள் அப்படிப்பட்டவர்கள். நம்முடைய இரட்சகரோ பரிசுத்தர். அவரை விசுவாசிக்கிற நாமும் பரிசுத்தமாய் நடக்கவேண்டும். பரிசுத்த நடக்கை பராபரனுக்கு மகிமை. இப்படியே மனுஷர் உங்கள் நற்கிரியையைக் கண்டு, பரமண்டலங்களில் இருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்துகிறதற்காக உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது என்று இயேசுநாதர் சொன்னார் (மத். 5, 16).

மேலும், மிசியோன் கிரியையை நடப்பிக்கக் கர்த்தர் தமது சீஷருக்குக் கொடுத்த கட்டளை நமக்குக் கொடுக்கப்பட்டதென்று அறிந்து, நாமும் அதை நிறைவேற்றப் பிரயாசப்படவேண்டும். ஏனெனில், நாமும் அவருடைய சீஷர்கள். நாம் நம்மை அந்தகாரத்தை விட்டுத் தம்முடைய ஆச்சரியமான வெளிச்சத்துக்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்கு, தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியும் இராசரீகமான ஆசாரியக் கூட்டமும் பரிசுத்த சாதியும் அவருக்குச் சொந்தமான சனமுமாக இருக்கிறோம் (௧ பேது. 2, 9). நமக்குள் சுவிசேஷத்தை அறிவிக்க வரமுள்ளவர்கள் அதை அஞ்ஞானிகளுக்கு அறிவிக்கலாம். நமக்குள் திறமையுள்ள பிள்ளைகளிருந்தால், அவர்களை மிசியோன் ஊழியத்துக்கு ஒப்புவிக்கலாம். இது கர்த்தரை ஸ்தோத்திரிக்கும் ஒரு வழி.

மிசியோன் கிரியைக்கு வேண்டிய பொருள் உதவியை நம்மாலியன்றமட்டும் செய்கிறது கர்த்தரை ஸ்தோத்திரிக்கிற மற்றொரு வழி. நம்முடைய தேசத்துக்குக் கிறிஸ்துமார்க்கம் வந்து இருநூறு வருஷமாகிறது. ஆகியும், இன்னம் சீர்மையி

விருந்து வருகிற பொருளால் நம்மிடத்தில் வேலை நடக்கிறது. அஞ்ஞானிகள் தங்கள் கோயில்களுக்கும், விக்கிரகங்களுக்கும், குருக்களுக்கும், எவ்வளவு பணம் செலவழிக்கிறார்கள். அவர்கள் வெறுங்கையோடு கோயிலுக்குப் போகமாட்டார்கள். கிறிஸ்தவர்கள் கையிறுகலாயிருப்பது சரியா. நாம் நம்முடைய சக்திக்கு ஏற்றபடி கொஞ்சம் கொஞ்சமாய்க் கொடுத்தாலும், அதைக் கர்த்தர் ஆசீர்வதிப்பார். பல துள்ளி பெரும் வெள்ளமாம்.

பிரியமானவர்களே, மிஷியோன் கிரியைக்கென்று உழைக்க எல்லாராலும் முடியாது. அதற்கென்று பொருள் கொடுக்கக் கூடியவர்களும் அநேகர் அல்ல. ஆகிலும், மிஷியோன் கிரியைக்கென்று செபம் செய்வது எல்லாக் கிறிஸ்தவர்களும் செய்யக் கூடிய காரியம். உம்முடைய ராச்சியம் வருவதாக என்று செபம் பண்ணக் கர்த்தர் நமக்குச் சொல்லிக்கொடுத்தார். நம்முடைய செபங்களிலே நம்முடைய தேசத்திலும் மற்றத் தேசங்களிலுமுள்ள அஞ்ஞானிகளை நினைக்கவேண்டும். அவர்களுக்காகப் பரிதபிக்கவேண்டும். அங்கே வேலை செய்கிற கர்த்தருடைய ஊழியருக்குக் கர்த்தர் சுகத்தையும் பலத்தையும் ஆவியின் வரத்தையுங்கொடுக்கும்படிப் பிரார்த்திக்கவேண்டும். அஞ்ஞானிகள் மனந்திரும்பும்படி முழு மனதினாலும் விரும்பவேண்டும். நம்முடைய மிஷியோனுக்கும் மற்ற மிஷியோன்களுக்கும் பொருள் உதவி, செப உதவி செய்கிற உபகாரிகளை நாம் மறக்கக்கூடாது. அவர்களையும் கர்த்தர் ஆசீர்வதிக்கும்படிக்குக் கருத்தோடு மன்றாடவேண்டும். இவைகளெல்லாம் மிஷியோன் ஸ்தோத்திரப் பண்டிகை கொண்டாடும் நல்ல வழிகளாம்.

எங்கள் அருமை இரட்சகரே, தேவரீர் மிஷியோன் வேலையை ஏற்படுத்தி நடத்தி ஆசீர்வதித்துவருகிறதற்காக உமக்கு ஸ்தோத்திரம். நாங்களும் எங்கள் தேசத்தார் எல்லாரும் ஏகோபித்து உம்முடைய நாமத்தை மகிமைப்படுத்தும்படிக்கு இத்தேசத்தில் நடக்கும் மிஷியோன் கிரியையை ஆசீர்வதிக்க உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம், சுவாமி. ஆமென்.

---

## திருச்சபை சீர்திருத்தப்பட்டதை நினைவுகூருந் திருநாள்.

சுவி. மத். 11, 25—30.

பிரியமானவர்களே,

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் ஒரு திருச்சபையை ஏற்படுத்தினார். அது விசுவாசிகளின் கூட்டம். அதன் அவயவங்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்று பெயர். கிறிஸ்



தவர்கள் கர்த்தருடைய வசனத்தில் நிலைத்திருந்து, அதற்கொத்தபடியே ஞான திரவியங்களைக் கையாடுமளவும் அவர்கள் மெய்யான சபையாயிருக்கிறார்கள். அவருடைய வசனத்தைப் புரட்டி, தங்கள் மனம்போல பொய்ப்போதனைகளை உண்டுபண்ணி, அவைகளை நம்புகிறவர்கள் மெய்யான சபையைச் சேர்ந்தவர்கள் அல்ல. அப்போஸ்தலர்கள் ஸ்தாபித்த சபை ஆரம்பத்திலே சுத்த போதகத்தைப் போதித்த மெய்ச் சபையாயிருந்தது. ஆகிலும் பிசாசின் ஏவுதலால் பல துர்ப்போதகர் சபையில் எழும்பி, கர்த்தருடைய வசனத்துக்கு விரோதமான அநேக கள்ளப்போதகங்களைப் போதித்தார்கள். கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்று கர்த்தர் ஏற்கனவே எச்சரித்திருந்தும், அநேக கிறிஸ்தவர்கள் அதன்படி செய்யாமல் பராபரனுடைய வசனத்துக்கு விரோதமான போதகங்களுக்கு இடங்கொடுத்ததால், சபையில் அதிகத் தாறுமாறும் சீர்கேடும் உண்டாயிற்று. ரோமாபுரி என்ற பெரிய பட்டணத்தில் பெரிய குருவாயிருந்த பாப்பு தன்னைத் திருச்சபைக்குத் தலைவனென்றும், கிறிஸ்துவுக்குப் பதிலாளியென்றும் சொன்னான். இயேசுநாதரோடு கூட அவருடைய மாதாவையும், அர்ச்சயிஷ்டர்களையும் வணங்கி வேண்டிக்கொள்ள உத்தரவு கொடுத்தான். ரோமாபுரிக்கும் பல முக்கிய ஸ்தலங்களுக்கும் திரு யாத்திரை செய்வதால் புண்ணியமுண்டாகுமென்றும் இரட்சிப்படையலாமென்றும் போதித்தான். சனங்கள் வேதபுஸ்தகத்தை வாசிக்கப்படாதென்றும் பரிசுத்த இராப்போசனத்தில் சபையாருக்கு இரசங்கொடுக்கப்படாதென்றும் தடுத்தான். தான் கொடுக்கும் மன்னிப்புச் சீட்டுகளை விலைகொடுத்து வாங்குகிறவர்களுக்கு விடுதலை கூறினான். அவனுடைய கள்ளப்போதகங்களையும் முக்கியமாய் மன்னிப்புச் சீட்டு வியாபாரத்தையும் லுத்தர் சாஸ்திரியார் சகிக்கமாட்டாமல், 95 தர்க்க வாக்கியங்களை எழுதி, வித்தன்பர்க் பட்டணத்துக் கோயில் கதவிலே ஒட்டினார். அவர் ஒட்டின நாள் 1517 (வரு) அக்டோபர் மீ 31 தேதிதான். அந்தத் தேதிமுதல் அவர் சத்திய வேதத்திலுள்ள சுத்த போதகங்களை வெளியரங்கமாய்ப் போதித்து, பாப்புவின் பொய்ப்போதகங்களுக்கு எதிர்பேசினதால், பாப்புவும் அவனைச் சேர்ந்தவர்களும் அவரைப் பகைத்து, சபைக்குப் புறம்பாக்கினார்கள். அவர்கள் அவரைத் தள்ளியும், கர்த்தர் அவரைத் தள்ளாமல், அவருடைய வேலைகளை ஆசீர்வதித்ததால் அநேகருடைய கண் திறந்தது. அநேகர் சுத்த சுவிசேஷ போதகத்தை ஏற்றுக்கொண்டு, ஆறுதல் அடைந்தார்கள். நாமும் இந்த ஆறுதலைப் பெற்றிருக்கிறோம். சுவிசேஷ சபையாகிய நம்முடைய சபை மெய்யான சபையாயிருக்கிறது. இதைக் குறித்தே இன்றைக்குத் தியானிப்போம்.

சுவிசேஷ சபை மெய்யான சபை. ஏனெனில்,

1. கர்த்தருடைய வேதம் அதன் சட்டம்.
2. கர்த்தருடைய முசிப்பாற்றி அதன் நம்பிக்கை.
3. கர்த்தருடைய நுகத்தடி அதன் சந்தோஷம்.

## 1.

சுவிசேஷ சபையாகிய நம்முடைய சபை மெய்யான சபை. ஏனெனில் கர்த்தருடைய வேதம் அதன் சட்டம்.

அந்த வேளையில் இயேசு மறுமொழியாகச் சொன்னதாவது: பிதாவே வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே, இதுகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினீர் என்கிறதுக்காக உம்மை மகிமைப்படுத்துகிறேன். ஆம், பிதாவே, அப்படியே உமக்கு முன்பாகப் பிரியமாயிருந்தது என்று இயேசுநாதர் சொல்லுகிறார்.

இந்த உலகத்தில் அநேகர் தேவ சத்தியத்தைத் தேடினாலும், அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் வெகு சிலர். அநேகர் தங்கள் சுய புத்தியினாலே தேவ சத்தியத்தைக் கண்டுபிடிக்கப் பார்ப்பதால், அவர்களுக்கு அது அகப்படாமல்போகிறது. ரோமருடைய பெரிய துரையாகிய பொந்தியுப்பிலாத்து நம்முடைய இரட்சகரைப் பார்த்து: சத்தியம் என்ன என்று சொன்னான். சத்தியம் என்கிற ஒரு காரியம் இந்த உலகத்தில் உண்டோ, அப்படிக்கு இல்லை என்பதுதான் அவன் அபிப்பிராயம். பாபேலின் ஞானிகளெல்லாரும் வானராச்சியத்தின் சங்கதியை அறியாதே போனார்கள். யூத ஞானிகள் எல்லாரும் கிறிஸ்துவை அறியாதே போனார்கள். தங்களை மகா பெரிய ஞானிகளென்றும் பெரிய படிப்பாளிகளென்றும் நினைத்துப் பரிசுத்த ஆவிக்கு இடங்கொடாமலிருக்கிறவர்கள் யாரோ, அவர்கள் எல்லாரும் தேவ ஞானத்தைக் கண்டுபிடிக்கமாட்டார்கள். அப்படிப்பட்ட ஞானிகளையும் கல்விமான்களையும் கர்த்தர் குருடரும் மூடருமாக்குகிறார். அவர்கள் சுவிசேஷத்தின் இன்பத்தையும் மதுரத்தையும் உணராமல், தங்களுடைய சுய புத்தியின் குருட்டாட்டத்தில் அமிழ்ந்துபோவார்கள். இரட்சகர் யூத சனத்தின் நடுவே வந்திருந்தும், அவரை மேசியாவென்று அறிந்துகொண்டவர்கள் வெகு சிலர். தங்களை மகா பெரிய ஞானிகளென்று நினைத்துக்கொண்ட வேதபாரகருக்கும் பரிசேயருக்கும் பிரதான ஆசாரியருக்கும், மூப்பருக்கும், அன்னாவுக்கும், காய்பாவுக்கும், அவரைப் பார்க்கக் கண்ணிராதபடிக்குக் கர்த்தர் அவர்களைக் குருடாக்கினார். ஏனெனில், பராபரன் அகந்தையுள்ளவர்களோடே எதிர்த்து நிற்கிறார்.

ஆகிலும், சிறு பிள்ளைகளைப்போல் தங்களைத் தாழ்த்தித் தங்கள் புத்தியையும் சித்தத்தையும் கர்த்தருடைய வசனத்துக்குக் கீழ்ப்படுத்துகிறவர்கள் ஆரோ, அப்படிப்பட்டவர்களுக்குக்



கர்த்தர் இரங்கி, அவர்கள் புத்தியைத் தெளிவாக்கி, அவர்கள் சித்தத்தைச் சீர்ப்படுத்தி, தம்மை அறிந்துகொள்ளப்பண்ணுகிறார். பாபேலின் ஞானிகளுக்குக் கர்த்தர் மறைத்ததைத் தானியேல் தீர்க்கதரிசிக்கு வெளிப்படுத்தினார். எகிப்தின் ஞானிகளுக்கு மறைத்ததைக் கர்த்தர் யோசேப்புக்கு வெளிப்படுத்தினார். பிரதான ஆசாரியர்களுக்கும் மூப்பர்களுக்கும் மறைத்ததை அவர் பன்னிரண்டு அப்போஸ்தலருக்கு வெளிப்படுத்தினார். பெரிய பெரிய பாப்புகளுக்கும் கண்காணிகளுக்கும் மறைத்ததைக் கர்த்தர் தம்முடைய ஊழியக்காரனாகிய லுத்தருக்கு வெளிப்படுத்தினார். இப்படிச் செய்வதே அவருக்குப் பிரியம். இன்னமும் அப்படித்தான் செய்துவருகிறார். பராபரன் நம்முடைய இரட்சிப்புக்குவேண்டிய தேவ சத்தியங்களை மனிதருக்கு வெளிப்படுத்துகிற ஒரே வழி அவருடைய வசனமே. தேவவசனத்தால் மாத்திரம் நாம் பராபரனுடைய சித்தத்தை அறிந்துகொள்ளலாம். அதுவே நம்முடைய கால்களுக்குத் தீபமும் நம்முடைய பாதைக்கு வெளிச்சமுமானது. நம்முடைய விசுவாசத்துக்கும் நடக்கைக்கும் ஒன்றான சட்டம் பராபரனுடைய வசனமே. இந்த வசனத்தைப் பாப்பும் அவனைச் சேர்ந்தவர்களும் மறைத்துப்போட்டார்கள். ஒரு போதகத்தை ஸ்தாபிக்கிறதற்கு வேதபுஸ்தகத்தை ஆதாரமாக்காமல், தங்கள் சொந்தப்புத்தியை ஆதாரமாக்கினார்கள். ஆகையால் ரோமான் சபையாருடைய விசுவாசம் பராபரனுடைய வசனத்தின்மேல் அல்ல, பாப்புவினுடைய அதிகாரத்தின்மேல் ஆதாரப்பட்டிருக்கிறது. நீங்கள் ஏன் இப்படிச் செய்கிறீர்களென்று ஒரு சங்கதியைக்குறித்து அவர்களைக்கேட்டால், அது பாப்பானவருடைய கட்டளை என்பார்கள். ஆகையால் சனங்கள் எல்லாரும் தன் சொல்லுக்குக் கட்டுப்படும்படி அவர்களுடைய கையிலே வேத புஸ்தகத்தைக் கொடுக்காமல் மறைத்து வைக்கிறான். லுத்தர் சாஸ்திரியார் தன் சிறு பிராயத்தில் அதைப் பார்த்ததேயில்லை. வாலிப வயதில் அவர் அதை முதல் முதல் பார்க்கிறபொழுது அதைச் சங்கிலியில் கட்டியிருக்கிறதாகக் கண்டார். அவர் வேதபுஸ்தகத்தை அதிகமதிகமாகப் படித்து, ஆராய்ந்ததினாலே சத்தியத்தை அறியவும் மற்றவர்களுக்குச் சொல்லவும் கூடியவரானார். சனங்கள் பேசும் பாஷையிலே அதை மொழிபெயர்த்தார். எல்லாரும் அதை வாசிக்கும்படி செய்தார்.

லுத்தர் செய்த சீர்திருத்தல் என்ற விசேஷித்த வேலையினாலே நமக்குக்கிடைத்த பெரிய பொக்கிஷம் சத்திய வேத புஸ்தகம். இது நமது கோயில்களிலும், பள்ளிக்கூடங்களிலும் வீடுகளிலும் தாராளமாய் நுழைந்து, இரட்சணிய போதகங்களை நமக்குத் தெரியக்கொடுக்கிறது. அதன் சத்தியங்களை நாம் அறிந்து விசுவாசிக்கவேண்டுமானால், நம்மை ஞானிகளென்

னும் கல்விமான்களென்றும் நினைக்காமல், சிறு பாலகரைப்போல் நம்மைத் தாழ்த்தவேண்டும். கர்த்தாவே: உமமுடைய வசனத்திலுள்ள சத்தியத்தை நான் அறிந்துகொள்ளும்படிக்கு என் கண்களைத்திறந்தருளும் என்று செபம் செய்யவேண்டும். எங்களுக்கு எல்லாம தெரியும என்று நினைக்கிறவர்களுடைய கண்களை அவர் குருடாக்குவார்; எனக்கு ஒன்றும் தெரியாது என்று நினைக்கிறவர்கள் கண்களை அவர் திறப்பார். வேதத்தை வாசித்தாலும் ஒரு பிரசங்கத்தைக்கேட்டாலும், நாம் அதைச்சரியாய் அறிந்துகொள்ளும்படிக்குப் பரிசுத்த ஆவியின் ஒத்தாசை நமக்குத் தேவையென்பதை நாம் ஒருபோதும மறவாதிருப்போமாக. சுவிசேஷ சபை இதை மறவாமல் கர்த்தருடைய வேதத்தைத் தனக்குச் சட்டமாக்கி பரிசுத்த ஆவியின் வெளிச்சத்துக்காக எப்பொழுதும் செபம் செய்து வருகிறபடியால் அது மெய்யான சபையாயிருக்கிறது.

2.

சுவிசேஷ சபை மெய்யான சபை; ஏனென்றால், கர்த்தருடைய முசிப்பாற்றி அதன் நம்பிக்கையாயிருக்கிறது.

என் பிதாவினால் எனக்குச் சகலமும ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. பிதாவைத்தவிர ஒருவன் குமாரனை அறியான்; குமாரனும் குமாரன் எவனுக்கு வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனும் தவிர ஒருவனும் பிதாவை அறியான். பிரயாசப்பட்டுப் பாரஞ்சுமந்தவர்களாகிய நீங்கள் எல்லாரும் என்னண்டைக்கு வாருங்கள்; நான் உங்களை முசிப்பாற்றுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பிதா எல்லாவற்றையும் குமாரனுக்கு ஒப்புவித்திருக்கிறார். குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்கு வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. பிதாவை அறிந்துகொள்ள ஒருவனுக்கு மனதானால், அவன் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கவேண்டும். அப்பொழுது அவர் அன்புள்ள பரமபிதாவை அவனுக்கு வெளிப்படுத்துவார். கிறிஸ்துவினாலே மாத்திரம் பராபரனுடைய சிநேகம் அவனுக்குத் தெரியவரும்; கிறிஸ்துவினாலே மாத்திரம் அவன் பராபரனுக்குப் பிள்ளையாகி, அவரைப் பிதா என்று அறிந்துகொள்ளுவான். கிறிஸ்து பராபரனுடைய ஒன்றான குமாரனும் மெய்யான தேவனுமாயிருப்பதால், அவர் பிதாவுடைய சித்தப்படி நடந்து, பாடுபட்டு மரித்துச் சம்பாதித்த அவருடைய புண்ணியம் நம்மெல்லாரையும் இரட்சிக்கப்போதுமானதாயிருக்கிறது. அவருடைய புண்ணியத்தோடு வேறெந்தப் புண்ணியமும் சேரவேண்டியதில்லை. இப்படியிருக்கப் பாப்புவும் அவனைச் சேர்ந்தவர்களும கிறிஸ்துவின் புண்ணியம் போதாதென்றும், அர்ச்சியசிஷ்டவான்களின் புண்ணியமும் நம்முடைய சுயபுண்ணியமும் நம்முடைய இரட்சிப்புக்குத்



தேவையென்றும் சாதிக்கிறார்கள். இந்தச் சாதனையை நாம் ஒருபோதும் ஒப்புக்கொள்வதில்லை, நம்முடைய இரட்சகர் ஒருவரே மெய்யான மத்தியஸ்தர் அவர் ஒருவரே பராபரனையும் மனிதரையும சேர்க்கக்கூடியவர். அவர் ஒருவரே வானத்திலுள்ள சகல பரிசுத்தவான்களையும் இரட்சித்தவர், நம்மையும இரட்சிக்கிறவர். அவர் ஒருவரே நம்மைப்பார்த்து: பிரயாசப்பட்டுப் பாரஞ்சுமந்தவர்களாகிய நீங்கள் எல்லாரும் என்னண்டைக்கு வாருங்கள், நான் உங்களை முசிப்பாற்றுவேனென்று சொல்லுகிறார். இந்த அருமையான வாக்குத்தத்தமே சுவிசேஷ சபையின் ஒன்றான நம்பிக்கை

நம்முடைய இரட்சகர் இந்த வாக்கியத்திலே, பிரயாசப்பட்டுப் பாரஞ்சுமந்தவர்களையெல்லாம் கூப்பிடுகிறார். நரக ஆக்கினைக்குத் தப்பி, நித்திய சீவனை அடைய விரும்புகிற ஒவ்வொருவனும் அதற்காகப் பிரயாசைப்பட்டுக் களைத்துப்போகிறான். பிதாவாகிய மார்த்தின் லுத்தர் சாஸ்திரியார் ஆத்தும இரட்சிப்பைக் கண்டடையும்படிக்குப் பலவிதமாய்ப் பிரயாசப்பட்டார். அவர் சந்நியாசியானார், பிச்சையெடுத்தார், ஸ்தலயாத்திரை செய்தார், உபவாசம்பண்ணினார்; அவர் எவ்வளவு பாடுபட்டும, தம்முடைய சுய பிரயாசையால் அவர் இரட்சிப்பைக் கண்டடையவில்லை. பாவப்பாரம் அவருக்கு வரவரப் பெரிதாயிற்று. அவர் பெருமூச்சுவிட்டு அழுதார்.

நான் செய்த புண்ணியங்களைப்
பார்த்தால் அது செல்லாது;
என் சுயமாய்த் துர்க்கிரியை
ஒழிய நன்றிராது,
மகா திகில் எடுத்தது;
நான் செத்து நரகத்துக்குத்
தள்ளுண்பேனென்று நினைத்தேன்

என்று புலம்பினார். விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான் என்ற வேதவாக்கியம் அவருக்கு ஆறுதலைக்கொடுத்தது. பாவப்பாரத்தால் நசுங்குண்ட அவர் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்தார். கிறிஸ்துவின் புண்ணியத்தையே பிடித்துக்கொண்டார். அவருடைய முசிப்பாற்றியை நம்பினார். அந்த நம்பிக்கையினாலே பிழைத்தார்.

நாமும் நம்முடைய பாவப்பாரத்தை உணர்ந்து மெய்மனஸ்தாபப்படுவோமாக. தெய்வாலயத்துக்குப் போயேறின அந்த ஆயக்காரனைப்போல் நம்முடைய மார்பிலே அடித்துக்கொண்டு: பராபரனே, பாவியாகிய என் பேரிலே கிருபையுள்ளவராகும் என்று கெஞ்சுவோமாக. அப்பொழுது கர்த்தர் நம்மை முசிப்பாற்றுவார், நம்முடைய பாவங்களை யெல்லாம் கிருபையாய் மன்னிப்

பார். நம்முடைய மனஸ்தாபக் கண்ணீரையெல்லாம் துடைப்பார். தம்முடைய பரிசுத்த ஆவியை நமக்குக் கொடுப்பார். இவர் நமது இருதயத்திலே தங்கி, நம்மைப் பராபரனுடைய பிள்ளைகளென்று சொல்லி, நம்மைத் தேற்றரவுபண்ணுவார். பாவம் நிறைந்த இந்த உலகத்திலே நம்முடைய இரட்சகருடைய வாக்குத்தத்தமே நம்முடைய ஒன்றான நம்பிக்கை: நாம் உயிரோடிருக்கும்போதும் நாம் சாகும்போதும் அதுவே நம்முடைய நம்பிக்கை. ஆகையால், நமக்கு உள்ளான வேதனைவந்தாலும் புறம்பான வேதனைவந்தாலும், முசிப்பாற்றியைத் தேடவேண்டிய இடம் எதுவென்று நமக்குத்தெரியும். நாம் தேவமாதாவினிடத்தில் போகமாட்டோம். அர்ச்சியஷ்டவரிடத்தில் ஒத்தாசையைத் தேடமாட்டோம். நீங்கள் என்னண்டைக்கு வாருங்கள் என்றும் நான் உங்களை, முசிப்பாற்றுவேனென்றும் இயேசுநாதர் சொல்லியிருக்க, நாம் மற்றவர்களிடத்தில் போவதில் என்ன பிரயோசனம். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஒருவரையே நாம் நம்முடைய முழு இருதயத்தாலும் நம்பி, அவரை விசுவாசிக்கிற விசுவாசத்தில் மரணபரியந்தம் நிலைத்திருப்போமாக.

3.

சுவிசேஷ சபையே மெய்யான சபை; ஏனென்றால், கர்த்தருடைய நுகத்தடி அதன் சந்தோஷம்.

என் நுகத்தடியை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்திலே கற்றுக்கொள்ளுங்கள். அதேனென்றால் மெத்தனவும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன். அப்படியே உங்கள் ஆத்துமங்களுக்கு முசிப்பாறுதல் கிடைக்கும். ஏனெனில் என் நுகத்தடி மெதுவும் என் சுமை லேசுமாயிருக்கிறதென்றார்.

தன்சுய இச்சையை வெறுத்துப் பராபரனுக்குக் கீழ்ப்படிகிறதும், அவர் அனுப்புகிற துன்பங்களைப் பொறுமையாய்ச் சகிப்பதுமே கர்த்தருடைய நுகத்தடியை ஏற்றுக்கொள்வதாயிருக்கிறது. பாப்புவுக்கு இது பிரியமல்ல. உலக இராசாக்களைப் போல தானும் இராசாவாயிருந்து ஆளுகைசெலுத்த விரும்புகிறான். உலக ஆளுகையைத் தன்னை விட்டு எடுத்துப்போட்டது தனக்குச் செய்த ஒரு பெரிய அநியாயம் என்கிறான். ஆகையால் அவன் கர்த்தருடைய நுகத்தடியை ஏற்றுக்கொள்ளவில்லை. யாதொருவன் என் பிறகே வரவேண்டுமென்றால், தன்னைத்தான் வெறுத்துத் தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்செல்லக்கடவான் என்று கர்த்தர் சொல்லுகிறார். மெய்க்கிறிஸ்தவன் இப்படிச்செய்கிறான். கிறிஸ்துவின் நுகத்தடியை ஏற்றுக்கொள்ளாத பாப்பு சனங்கள் பேரில் தன் இஷ்டம்போல் பலவித நுகத்தடிகளைச் சுமத்துகிறான். ரோமான் சபையார் அவைகளை ஏற்



றுக்கொள்ளுகிறார்கள். உபவாசம் இருப்பதும், ஸ்தலயாத்திரை செய்வதும், வாரால் அடித்துக்கொள்ளுகிறதும், பலவிதமாய் வதைத்துக்கொள்ளுகிறதும், அவர்களுக்குப் பிரியம். இவைகளெல்லாம் கர்த்தர் வைக்கிற நுகத்தடியல்ல. கர்த்தர் கற்றுக்கொடுக்கிற பாடங்கள் இவைகளினால் நமக்குவராது. கர்த்தர் தம்மிடத்திலே மெத்தனத்தையும் மனத்தாழ்மையையும் கற்றுக்கொள்ளச் சொல்லுகிறார். கிறிஸ்து தம்முடைய சித்தத்தின்படியே யாருக்குத் துன்பத்தை அனுப்புகிறாரோ, அவனிடத்திலே மெத்தனவும் மனத்தாழ்மையும் உண்டாகும். தாங்களாய்த் தங்களை வதைத்துக்கொண்டு புண்ணியம் சம்பாதிக்கிறோமென்று நினைக்கிறவர்கள் அகந்தையும் பெருமையுமுள்ளவர்கள ஆவார்கள்.

பிரியமானவர்களே, நாம் உலகத்திலுள்ள எந்த மனிதரிடத்திலும் கற்றுக்கொள்ளாத பாடத்தைக் கிறிஸ்து ஒருவரிடத்தில் கற்றுக்கொள்ளக்கூடியதாயிருப்பதால், அவரண்டைக்கே நாம் போவோமாக. அவர் நமக்கு அனுப்பும் எவ்விதத்துன்பத்தையும் பொறுமையாய்ச் சகித்துக்கொள்ளுவோமாக. அவர் பாடுகளின் வழியாய் மகிமைக்குள் பிரவேசித்தார். அவருடைய சீஷர்களும் அதேவழியாய் மகிமைக்குள் பிரவேசிக்கவேண்டும். ஆகையால் சுவிசேஷ சபை இந்த உலகத்திலே சத்தியத்தின் நிமித்தம் வெருவாய்த் துன்பப்பட்டும், கர்த்தருடைய நுகத்தடியைத் தன் சந்தோஷமென்று சொல்லி, அதற்குக் கீழமைந்திருக்கிறது.

பிதாவே, தேவரீர் உம்முடைய சத்தியத்தை எங்களுக்கு வெளிப்படுத்தினதற்காக உமக்கு ஸ்தோத்திரம். நாங்கள் அதை விட்டு ஒருபோதும் பிசகிப்போகாமல், அதில் மரணநாள்மட்டும் நிலைத்திருக்க எங்களுக்கு ஒத்தாசைசெய்து, எங்களை ஆசீர்வதித்தருளும், சுவாமி. ஆமேன்.

128734